# நூல் தேட்டம் 17

என். செல்வராஜா

அயோத்தி நூலக சேவைகள் &
குமரன் புத்தக இல்லம்

# நூல் தேட்டம்

## [தொகுதி 17]

தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பெற்ற
ஈழத்துத் தமிழ் நூல்கள்

குறிப்புரையுடனான
**நூல் விபரப்பட்டியல்**

**என். செல்வராஜா**

வெளியீடு
அயோத்தி நூலக சேவைகள்
&
குமரன் புத்தக இல்லம்
பெப்ரவரி 2024

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | - | நூல் தேட்டம் (தொகுதி 17) |
| ஆசிரியர் | - | என்.செல்வராஜா |
| மின்னஞ்சல் | - | Noolthettam.ns@gmail.com |
| தொலைபேசி | - | (0044) 07817402704 |
| பதிப்பு | - | முதற்பதிப்பு, பெப்ரவரி 2024 |
| வெளியீடு | - | அயோத்தி நூலக சேவைகள், ஐக்கிய இராச்சியம் & குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை |
| அச்சுப்பதிப்பு | - | குமரன் புத்தக இல்லம், 39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 0112 364550, மி.அஞ்சல்: books@kumarangroup.net |
| அட்டை வடிவமைப்பு | - | கௌதமன் செல்வராஜா |
| சர்வதேச தராதர நூல் பதிவெண் | - | 978-624-6164-70-6 |
| பக்கங்கள் | - | xviii - 600 |
| பதிப்புரிமை | - | © என்.செல்வராஜா 2024 |
| குமரன் வெ.எண் | - | #1034 |

| | | |
|---|---|---|
| Title | - | Nool Thettam (Volume 17)<br>An annotated bibliography of 1000 published writings in Tamil language, by Sri Lankan Tamils, home and abroad. |
| Compiler | - | N.Selvarajah |
| e-mail | - | Noolthettam.ns@gmail.com |
| Mobile | - | (0044) 07817402704 |
| Edition | - | First Edition, February 2024 |
| Publishers | - | Ayothy Library Services, United Kingdom and<br>Kumaran Book House, Colombo - Chennai |
| Printers | - | Kumaran Book House, 39, 36th Lane, Colombo 6, Sri Lanka<br>E-Mail: books@kumarangroup.net |
| Cover Design | - | Gauthaman Selvarajah |
| ISBN | - | 978-624-6164-70-6 |
| Published No | - | #1034 |
| Pages | - | xviii - 600 |
| Price | - | £ 30.00, Euro 40.00, SLRs 6000.00 |

© by N.Selvarajah

All Rights Reserved. No part of this publication may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.

# நன்றி

நூல்தேட்டத்தின் பதினேழாவது தொகுதியை உங்கள் கரங்களில் இன்று கையளிப்பதற்குத் தோன்றாத் துணையாக இருந்த அனைவருக்கும் முதலில் நன்றிகூறுவது என் தலையாய பணியாகும்.

பதினாறாவது தொகுதியை உரிய காலத்தில் அழகுற அச்சிட்டுத் தந்ததுடன், அத்தொகுதியை இலங்கையில் பரவலாக அறிமுகம் செய்யும் பொறுப்பினையும் கொழும்பு, குமரன் புத்தக இல்ல அதிபர் கணேசலிங்கம் குமரன் ஏற்றிருந்தார். வழமை போலவே பதினேழாவது தொகுதியையும் அச்சேற்றி விநியோகித்துத் தரும் பொறுப்பினையும் அவரே ஏற்றிருக்கிறார். அவருக்கு முதலில் என் நன்றி.

பதினேழாவது தொகுதிக்கான நூல்தேடலுக்கான எனது இலங்கைப் பயணம் கோவிட் 19 பெருந்தொற்றுக் காரணமாக முற்றாகத் தடைப்பட்டுவிட்ட நிலையில், "எங்கட புத்தகங்கள்" குலசிங்கம் வசீகரன், சுன்னாகம் பொது நூலகர் ஜெயலட்சுமி, கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகர் சித்தார்த்தினி, குமரன் புத்தக இல்ல நிர்வாக இயக்குநர் நிகிலா ஆகியோர் தமது மேலதிக உழைப்பை பிரதிபலன் கருதாது எனக்கு வழங்கினர். அவர்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றிகள். தமது பிரசுரங்களை ஆவணப்படுத்தும் நோக்குடன் என்னிடம் அவ்வப்போது தபால் மூலமும், நேரிலும் வழங்கிவைத்த படைப்பாளிகளுக்கும் எனது உளமார்ந்த நன்றி.

தாயகத்திலும், புகலிடத்திலும் காலத்துக்குக் காலம் எனது நூல்தேட்டம் தொகுப்பு முயற்சிகளுக்கு ஆதரவான செய்திகளைப் பிரசுரித்தும், விமர்சனக் கட்டுரைகளை வெளியிட்டும் எனக்கு ஆதரவை வழங்கிவரும் சிறுசஞ்சிகை ஆசிரியர்களுக்கும், தேசிய, பிராந்தியப் பத்திரிகையாளர்களுக்கும் எனது நன்றி.

எனது வாழ்வின் பெரும்பகுதி நேரத்தை விழுங்கிவிடும் நூல்தேட்டம் தொகுப்புக் கடமைகளின்போது எமது குடும்பச்சுமைகளை முழுமையாகத் தாங்கி என்னைச் சுதந்திரமாக இயங்கவிட்டதுடன் எனக்குத் துணையாகவிருந்து நூலாக்கக் கடமைகளிலும் முடிந்தவரை உதவிவரும் என் அன்புத் துணைவி விஜிக்கு நன்றி செலுத்தத் தவறினால் மிக முக்கியமான பதிவொன்றினை இங்கு மேற்கொள்ளத் தவறியவனாவேன். குடும்பத்தின் நிதி நிலைமையை மிகச் சிக்கனமாகக் கையாண்டு ஒவ்வொரு நூல்தேட்டம் தொகுதிக்கும் தேவையான மேலதிக நிதியை சேமித்து வழங்கும் இமாலயப் பணியும் இவருடையதாகும்.

எமது ஈழத்துத் தமிழினத்தின் வரலாறு பேணல் என்பது தனிப்பட்ட நலன் விரும்பிகளின் தோள்களில் சுமத்தப்பட்டு விட்டது. எமது முன்னைய சந்ததியினரால் எமக்குப் பாதுகாத்து வழங்கப்பட்ட ஈழத்தமிழரின் பண்பாட்டுப் பாரம்பரியம், கலாச்சாரம், மற்றும் எமது முதுசொங்களை அடுத்த தலைமுறையினரிடம் பாதுகாத்துக் கையளிக்கும் பெரும் பொறுப்பும் இந்தத் தனிப்பட்ட நலன்விரும்பிகளினாலும், அவர்களால் ஆங்காங்கே உருவாக்கப்பட்டு சுய நிதியுடனோ

புலம்பெயர்ந்த எம்மவர்களின் நிதிப் பங்களிப்புகளுடனோ முன்னெடுத்துச் செல்லும் நிலையே இன்று காணப்படுகின்றது. நூல்தேட்டத்தின் பயணமும் இருபதாண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் வழமைபோலவே தனிமனித முயற்சியாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

நூல்தேட்டத்தின் **பதினெட்டாவது** தொகுதியுடன் 18000 நூல்களைப் பார்வையிட்டுப் பதிவுசெய்த மனத்திருப்தியுடன் விரைவில் உங்களை மீண்டும் சந்திப்பேன் என்ற உறுதியுடன் விடைபெறுகிறேன்.

**என்.செல்வராஜா**
*01.08.2023*

# முன்னுரை

# நூல்தேட்டம்

# (ஓர் அறிமுகம்)

ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான நூல்விபரப்பட்டியலான நூல்தேட்டத்தின் முதலாவது தொகுதி 2002இலும், இரண்டாவது தொகுதி 2004இலும், மூன்றாவது தொகுதி 2005இலும், நான்காவது தொகுதி 2006இலும், ஐந்தாவது தொகுதி 2008 இலும், ஆறாவது ஏழாவது தொகுதிகள் 2011இலும், எட்டாவது தொகுதி 2012இலும் ஒன்பதாவது தொகுதி 2014இலும், பத்தாவது தொகுதி 2015இலும், பதினொராவது தொகுதி 2017இலும், பன்னிரண்டாவது தொகுதி 2018இலும், பதின்மூன்றாவது தொகுதி 2019இலும், 14ஆவது தொகுதி 2020இலும், 15ஆவது தொகுதி 2021இலும், 16ஆவது தொகுதி 2022இலும், வெளியிடப்பட்டன. அதன் தொடர்ச்சியான பதினேழாவது தொகுதியே இதுவாகும்.

இதில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களினதும், வெளியீட்டாளர்களினதும் ஆயிரம் நூல்கள் பற்றிய அடிப்படை நூலியல் குறிப்புகளும் அதனையடுத்து நூல் பற்றிய சிறு அறிமுகக் குறிப்பும் இடம்பெற்றுள்ளன. தொடர் இலக்கங்கள் முதலாவது தொகுதியிலிருந்து தொடர்ச்சியாக வழங்கப்பட்டுள்ளன. அவ்வகையில் இத் தொகுதியில் இடம்பெறும் நூல்பதிவுகளுக்கு 16001இலிருந்து 17000வரை தொடரிலக்கமிடப்பட்டுள்ளன. 17000 ஈழத்துத் தமிழ் நூல்களை நேரில் பார்த்துக் குறிப்பெடுத்து, ஒழுங்கமைத்து, பதிவேற்றம் செய்து நூலுருவாக்குவதென்பது இலேசான காரியமல்ல. இதன் முக்கியத்துவத்தை புரிந்துகொண்டு எனக்கு உதவ முன்வரும் தொண்டுள்ளங்களை வாழ்த்தித் தொடர்கின்றேன்.

## தொகுப்பும் தவிர்ப்பும்

இது ஒரு தேர்ந்த நூற்பட்டியலன்று. இங்கு பட்டியலாக்கப்பட்டுள்ள தனி நூல்கள் (Monographs) எவையும் எவ்வித தரக்கட்டுப்பாட்டுக்கும் உட்படவில்லை. இன்று பார்வையிடக்கூடிய ஈழத்துத் தமிழ் நுல்கள் அனைத்தையும், ஒரு தொகுதிக்கு 1000 நூல்கள் என்ற எண்ணிக்கையில் பட்டியலிடுவதே நூல்தேட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். வெளியீட்டின் பௌதிகத் தன்மை கருதி சில பிரசுரங்கள் நூல்தேட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. துண்டுப்பிரசுரங்கள், வரை படங்கள், அச்சிடப்படாத கையெழுத்துப் பிரதிகள், ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள், இறுவெட்டுகள் என்பன இத்தொகுப்பில் சேர்க்கப்படவில்லை.

பெரும்பான்மையான கல்வெட்டுகள், ஞாபகார்த்த மலர்கள், சஞ்சிகைகள், என்பனவும் இத்தொகுதியில் தவிர்க்கப்பட்டுள்ளன. ஆயினும், தனி ஆவணமாகக் கருதும்வகையில் வெளியிடப்பட்டிருக்கும் சஞ்சிகைகளின் சிறப்புமலர்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. மேலும், சில கல்வெட்டுக்களும், ஞாபகார்த்த

மலர்களும் தனிநூலின் வகைக்குள் அடங்கக்கூடியதான கனதியான அம்சங்களுடன் வெளிவந்திருப்பதால் அவற்றையும் இத்தொகுதியில் சேர்த்துக்கொண்டுள்ளோம். 15ஆவது தொகுதியிலிருந்து சில மின்நூல்களையும் சேர்த்துக்கொண்டுள்ளேன். இனிவருங்காலத்தில் அச்சுருவில் வெளிவராமல், நேராக மின்நூலாகவே எம்மவரின் ஈழத்துத் தமிழ் நூல்கள் வெளிவருவதற்கான சாத்தியக்கூறுகளை நலிவடைந்து செல்லும் எம்மவரின் பதிப்புத்துறை ஏற்படுத்தி வருகின்றமையையும் என்னால் அண்மைக் காலத்தில் அவதானிக்க முடிகின்றது.

நூல்தேட்டத் தொகுதிகளில் தொகுக்கப்பட்டுள்ள நூல்கள் எவ்வித கால எல்லைகளுக்கும் வரையறுக்கப்படவில்லை. ஒரு நூலின் பின்னைய பதிப்புகள் வெளிவரும்போது அவை புதுக்கியோ, சுருக்கியோ, வெளிவரும் வாய்ப்பிருப்பதாலும், முற்றிலும் வேறான நூலியல் தகவல்களை அவை கொண்டிருப்பதாலும் குறித்தவொரு நூலின் பல்வேறு பதிப்புகளும் இங்கு ஒரே பதிவிலக்கத்தின் கீழ் இடம் பெறுகின்றன. முன்னைய பதிவிலக்கத்தைப் பெற்ற மீள்பதிப்புக்கள் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

## பதிவுகளின் ஒழுங்கமைப்பு

நூல்தேட்டம் ஒரு உசாத்துணை நூலாகும். ஒரு நூலைப் பற்றிய நூலியல் தகவல்களைக் குறுகிய நேரத்தில் வாசகர் கண்டறிய வகைசெய்யும் வண்ணம் இத்தொகுதி மூன்று பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

முதற்பிரிவில், நூல் பற்றிய பிரதான பதிவுகள் பாடஒழுங்கில் வகைப் படுத்தப்பட்டு தொடரெண்கள் மூலம் அடையாளமிடப்பட்டுள்ளன. பாடவாரியாக ஒரு நூலைத்தேடும் வாசகர் இப்பிரிவின் மூலம் பயனடைவர். இரண்டாவது பிரிவு, தலைப்பு வழிகாட்டியாகும்.

முதற்பகுதியில் நூல்கள் பாடவாரியாக முதலில் ஒழுங்குபடுத்தப்பட்டு, பின்னர் அகரவரிசையில் காணப்படுவதால் ஒரு நூலின் தலைப்பைக் கொண்டு நூலைத் தேடவிழையும் வாசகர் இரண்டாவது பிரிவில் அகரவரிசையில் காணப்படும் தலைப்பு வழிகாட்டியின் வாயிலாக நூலின் தொடர் இலக்கத்தைக் கண்டறிந்து முதற்பகுதியில் உள்ள பிரதான பதிவைப் பார்வையிட முடியும். இங்கு தலைப்புக்கள் அகரவரிசை எழுத்தொழுங்கில் அல்லாது சொல்லொழுங்கிலேயே அகரவரிசைப் படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

ஆசிரியர், பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், மூல ஆசிரியர் ஆகியோரின் விபரங்களைக் கொண்டு ஒரு நூலைத்தேடும் வாசகர் மூன்றாவது பிரிவின் மூலம் பயனடைவர். இங்கு ஆசிரியர் அகர வரிசையில் நூல்களின் தொடர் எண்களைக் கண்டறிந்து அதன் மூலம் தான் தேடும் நூலைச் சென்றடைய முடியும். ஆசிரியர் அகரவரிசையில் புனைபெயர்களும் இடம்பெறுகின்றன. ஒரு நூலாசிரியர் இயற்பெயரிலும் புனைபெயரிலும் நூல்களை எழுதுவதால் புனைபெயரின் கீழ் நூலைத்தேடும் வாசகர் ஆசிரியரின் இயற்பெயரிலும் அவற்றைத் தேட உதவும் வகையில், **பார்க்க, மேலும் பார்க்க** போன்ற வழிகாட்டி அம்சங்கள் தேவை

கருதிச் சேர்க்கப்பட்டுள்ளன. இரு ஆசிரியர்கள் ஒரே புனைபெயரில் வலம் வருவதையும் இங்கு காணமுடிவதால் புனைபெயரில் நூலைத்தேடும் வாசகர்கள் அவதானமாக இருக்க வேண்டும். வாசகரின் தேடுகை நேரத்தை குறைக்கும் வகையில் புனைபெயரிலும் இயற்பெயரிலும் எழுதும் ஆசிரியரின் பிரபல்யமான ஒரு பெயரின்கீழ் மட்டும் இயன்றவரை அவரது நூல்களின் தொடர்எண்களைக் குறித்துள்ளோம்.

## நூலியல் பதிவுகள்

பிரதான பகுதியில் நூல் பற்றிய தகவல் மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. முதற்பகுதியில் நூலின் தலைப்பு, உப தலைப்பு, அந்நூலின் ஆக்கத்துக்கு அதிகாரபூர்வ உரித்துடைய ஆசிரியர், தொகுப்பாசிரியர், பதிப்பாசிரியர் விபரங்கள், வெளியீட்டு விபரம், பதிப்பு விபரம், ஆகியனவும் அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்ட நூலின் குறித்த பதிப்பிற்கான அச்சகத்தின் விபரமும் தரப்பட்டுள்ளன. கிடைக்கப் பெறுமிடத்து சர்வதேச தராதர நூல் எண்களும் இப்பகுதியில் இடம்பெறுகின்றன. ஆசிரியர் பற்றிய தகவலில் ஆசிரியரின் இயற்பெயர், புனை பெயர் பற்றிய குறிப்புகளும் அறியமுடிந்தால் தரப்பட்டுள்ளன. பதிவுக்குள்ளாகும் நூலின் உரித்தாளர் மூலநூலாசிரியராக இல்லாதவிடத்து, அவரின் பங்களிப்புப் பற்றிய தகவல் அவரது பெயரையடுத்து அடைப்புக்குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது.

நூலின் வெளியீட்டாளர் பற்றிய தகவல் குறிப்பில் வெளியீட்டாளரின் இயங்குதளம், வெளியீட்டகத்தின் பெயர், முகவரி என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு வெளியீட்டகம் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் தனது கிளைகளைப் பரப்பியிருக்கும் வேளை, பதிவுக்குள்ளாகும் நூலில், குறிப்பாக ஒரு இயங்குதளத்தை மட்டும் வெளிப்படுத்தியிருந்தாலன்றி, பதிவுத்தேவை கருதி, நூல் அச்சிடப்பட்ட நாட்டில் உள்ள வெளியீட்டகத்தின் கிளை அமைந்த ஊரே அதன் இயங்குதளமாகப் பதியப்பட்டுள்ளது. ஆசிரியரே வெளியீட்டாளராகவும் இருக்கும்போது, நூலில் காணும் ஆசிரியரின் முகவரி வெளியீட்டக முகவரியாகக் கொள்ளப்பட்டுள்ளது.

நூலின் பதிப்பு விபரத்தில், பதிவுக்குப் பெறப்பட்ட நூலின் பதிப்பு விபரமும், அப்பதிப்பு வெளியிடப்பட்ட திகதியும் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பிட்ட நூல் முதற்பதிப்பு அல்லாதவிடத்து முன்னைய பதிப்புகள் பற்றிய திகதி விபரங் களும் நூலில் தரப்பட்டவாறாகப் பதியப்பட்டுள்ளன. சில வெளியீட்டாளர்கள், மறுபதிப்பு நூல்களையும் முதற்பதிப்பாகக் குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. குறிப்பிட்ட வெளியீட்டாளரின் முதற் பதிப்பாகவே அது கொள்ளப்பட வேண்டியுள்ளது. இவ்விபரங்கள் நூலியல் நேர்மை கருதி, பதிப்பு நூலில் குறிப்பிடப்படவேண்டியது அவர்களது கடமையாகும் என்பதை இங்கு வலியுறுத்துதல் அவசியமாகின்றது. பெரும்பான்மையான தமிழக மீள்பதிப்புக்களில் இத்தவறுகள் காணப்படுகின்றன.

நூலின் அச்சக விபரம் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது. இந்த விபரம் பதிவுக்குரிய நூலின் குறித்த பதிப்புக்கு மட்டும் உரியதாகும் என்பதும் கவனத்துக்குரியது.

நூலியல் பதிவின் இரண்டாவது பகுதியாக அமைவது நூலின் பௌதீகத் தகவல்களாகும். இதில் நூலின் பக்கங்கள், சிறப்பம்சங்கள், விலை, அளவு, தராதர எண் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.

நூலின் பக்கங்கள் மூன்று வகையில் குறிப்பிடப்படுகின்றன. அவை ரோமன் இலக்கமிடப்பட்ட பக்கங்கள், இலக்கமிடப்படாத பக்கங்கள், அரேபிய இலக்க மிடப்பட்ட பக்கங்கள் என்பனவாகும். ரோமன் இலக்கமும், அரேபிய இலக்கமும் இடப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை அவ்வவ்விலக்கங்களாலேயே சுட்டப் பட்டுள்ளன. இலக்கமிடப்படாத பக்கங்கள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன. (உதாரணம்: VII, (12), 243 பக்கம்). பெரும்பான்மையான தமிழ் நூல்களில் முகவுரைப் பக்கங்கள் இலக்கமிடப்படாவிடினும் அவை பின்னர் அரேபிய இலக்கங்களாகத் தொடர்கின்றன. அத்தருணங்களில் அவை அரேபிய இலக்க மிடப்பட்ட பக்கங்களாகவே கருதப்பட்டுள்ளன.

பக்கங்கள் பற்றிய குறிப்பை அடுத்து அமைவது சிறப்பம்சங்களாகும். இங்கு வரைபடங்கள், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், தகடுகள் பற்றிய குறிப்புகள் காணப்படும். விலை விபரம் காலவரையறைக்குட்பட்டதாக அமைவதாயினும் வரலாற்றுத்தேவை கருதி மட்டுமே நூல்தேட்டத்தில் அவை சேர்க்கப்பட்டுள்ளது. நூலில் குறிப்பிடப்படும் விலை அந்நாட்டு நாணய அலகின் மூலம் குறிப்பிடப் பட்டுள்ளது. இலங்கை ரூபாவுக்கு மாத்திரம் நாடு குறிப்பிடப்படவில்லை. இது ஒரு வர்த்தக நூற்பட்டியல் இல்லையென்பதால் தேவைப்படுமிடத்து நூலின் தற்போதைய விலை பற்றிய தகவலை அதன் விற்பனையாளர்களிடமே வாசகர் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

நூலின் பௌதீக விபரங்களில் அடுத்ததாக வருவது, நூலின் அளவாகும். இது சதம மீற்றரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரிவில் இறுதியாக அமைவது நூலுக்கான சர்வதேச தராதர நூல் எண் (International Standard Book Number) பற்றிய தகவலாகும். ஈழத்துத் தமிழ் நூல்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய நூல்களே இவ்விலக்கத்தைத் தாங்கி வெளிவந்திருப் பினும் அதிகரித்து வரும் அதன் முக்கியத்துவம் கருதி இவ்விலக்கம் இப்பிரிவில் இடம்பெறுகின்றது. எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்களின் பயன்பாடு கருதி ISBN பற்றிய விரிவான கட்டுரையொன்று **முதலாவது** தொகுதியில் xiv-xviii பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதன் இற்றைப்படுத்தப்பட்ட மீள்பதிப்பு, "எங்கட புத்தகங்கள்" என்ற எமது காலாண்டுச் சஞ்சிகையின் (ஒக்டோபர் 2020) முதலாவது இதழிலும் இடம்பெற்றுள்ளது.

நூலியல் தகவலின் மூன்றாவது, இறுதிப்பிரிவு நூல்பற்றிய சுருக்கக் குறிப்பாகும். இது ஒரு திறனாய்வுக் குறிப்பாகவோ, விளம்பரமாகவோ அல்லாது நூலினதும் நூலாசிரியரினதும் சிறு அறிமுகமாக மாத்திரம் அமைவது குறிப்பிடத் தக்கது. அரியநூல்களின் வைப்பிடம் பற்றிய குறிப்பு 3வது தொகுதியிலிருந்து வழங்கப்படுகின்றது. உதாரணமாக பெறுதற்கரிய சில ஈழத்து நூல்கள் பிரித்தானிய நூலகங்களிலும், மலேயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல்துறையிலும்

காணமுடிந்தது. அவை பற்றிய இருப்பு விபரம் இப்பகுதியில் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

## பகுப்பாக்கம்

இந்நூலின் பிரதான பகுதியில் நூல்கள் பாட ஒழுங்கில் தொகுக்கப்பட்டுள்ளன. இதற்கென நாம் தேர்ந்தெடுத்துள்ள பாட ஒழுங்கு வரிசை, டூவியின் தசாம்சப்பகுப்பு முறையாகும். (Dewey Decimal Classification Scheme) தென்னாசியாவிலும் ஐரோப்பா விலும் நூலகங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படும் இப்பகுப்பு முறை தமிழ் வாசகர்களுக்குப் பரிச்சயமானதொன்றென்ற வகையில் இப்பகுப்பாக்கத்தைப் பின்பற்றத் தீர்மானித்தோம். இப்பகுப்பாக்கத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று பிராந்தியத் தேவைகருதி இப்பகுப்பு முறையில் தேவைப்படும் மாற்றத்தைப் புகுத்தமுடியும் என்பதாகும். ஈழத்துத் தமிழ்நூல்களின் பகுப்புத்தேவை கருதி இப்பகுப்பு முறை சில மாற்றங்களுடன் பயன்படுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பகுப்பாக்கம் அறிவுத்தேட்டத்தை முதலில் பத்துப் பெரும்பிரிவுக்குள் அடக்குகின்றது. பின்னர் ஒவ்வொரு பெரும்பிரிவும் பத்து உபபிரிவுகளாகின்றன. அந்த உப பிரிவுகள் மேலும் பத்து உபபிரிவுகளாகின்றன. இத்தகைய ஒரு தசாம்சப் பகுப்பு முறை பற்றிய விரிவான விளக்கத்தை இங்கே தரமுடியாவிடினும் வாசகரின் தேவை கருதி இந்நூலில் பயன்படுத்தும் பகுப்புத் திட்டம் சுருக்கமாக இந்த அறிமுகப் பகுதியையடுத்துத் தரப்பட்டுள்ளது.

## வாழ்க்கை வரலாறு

பகுப்பாக்க ஒழுங்கில் இறுதிப்பிரிவாக அமைவது வரலாறாகும். இதில் பிரதேச வரலாற்றுடன், வாழ்க்கை வரலாற்று நூல்களும் ஞாபகார்த்த மலர்களும் இடம் பெறுகின்றன. பகுப்பாக்கத்தின் போது பன்முகத்தோற்றம் பெற்ற பெரியார்களின் வரலாற்று நூல்களைத் தரம்பிரிக்கும்போது பிரதான பதிவை ஏதாவது ஒரு பிரிவுக்குள் பதிய வேண்டிய கட்டாயத்தேவை ஏற்பட்டது. ஒருவரது ஆளுமை எத்துறையில் பிரகாசித்தது என்பதை விட குறிப்பிட்ட நூலில் அவரது பன்முகப் பட்ட ஆளுமையின் எப்பகுதி ஆய்வுக்கெடுக்கப்பட்டது என்ற அடிப்படையிலேயே அவரது நூலுக்கான பகுப்புப் பிரிவு தேர்ந்தெடுக்கப்பட்டது. அதனால் இப்பிரிவைப் பார்வையிடும் வாசகர்கள் தயவு செய்து பல்வேறு வாழ்க்கை வரலாற்றுப் பிரிவுகளிலும் கண்ணோட்டம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப் படைப்புக்கள்

இரண்டாம் தொகுதியிலிருந்து மேலதிக அம்சமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் பகுதி இதுவாகும். இன்றைய ஈழத்து இனப்பிரச்சினையின் சர்வதேசமயப்படுத்தல் காரணமாக ஈழத் தமிழரல்லாத பன்நாட்டவர்களிடையே உருவாகிவரும் ஈழத்தமிழர்சிக்கல் பற்றிய தேடலின் விளைவாக, தமிழகத்திலும் மலேசியாவிலும் ஐரோப்பாவிலும் ஈழத்தமிழர் பற்றிய நூல்களின் வரவு அதிகரித்திருப்பதைக்

காணமுடிகின்றது. இவற்றில் பல தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதன்விளைவாக, நூல்தேட்டத்தில் இவ்வாக்கங்களுக்கான ஆவணமாக்கலும் அவசியம் என்று கருதியதால், தனியானதொரு பிரிவாக அவை இடம்பெறுகின்றன.

## முன்னைய பதிவுகளுக்கான மேலதிக தகவல்கள்

நூல்தேட்டம், ஈழத்தமிழரின் நூலியல் முயற்சிகளில், இயன்றவரை நிறைவான ஆவணமாக்கலையே மேற்கொள்ள விழைகின்றது. முன்னைய தொகுதியில் இடம்பெற்ற ஒரு நூல் திருத்திய மறுபதிப்பாக வெளியிடப்பட்டால், அதுபற்றிய தகவலையும் இத்தொகுதியில் தந்திருக்கின்றோம். தொகுப்பு முயற்சியில் குழப்பங்களைத் தவிர்க்கும் பொருட்டு இவை கொள்கையளவில் புதிய பதிவாகக் கருதப்பட மாட்டாது. இதனால் அப்பதிவிற்குத் தனியான தொடர் இலக்கத்தை வழங்காது, அதை பின்னிணைப்பாகச் சேர்த்துள்ளோம். வாசகர்களின் பயன்கருதி குறிப்பிட்ட இந்நூற்பதிவின் மூலப்பதிப்பின் தொடர் இலக்கத்தையும் குறிப்புப் பகுதியில் தந்துள்ளோம். தொகுப்பு முயற்சியின்போது முன்னைய பதிவுகளில் தவறுகள் நேர்ந்தால், அப்பதிவுகளின் திருத்திய வடிவமும் இப்பகுதியிலேயே இடம்பெறுகின்றன. நூல்தேட்டம் தொகுதிகளை இணைத்துப் பெருந்தொகுப்பாக்கி வெளியிடும் நோக்கமும் உள்ளதால், திருத்திய பதிப்பின்போது இப்பகுதியில் இடம்பெறும் பதிவுகள் பிரதான பதிவுகளுக்குள் உள்வாங்கப்படும்.

## நிறைவுக் குறிப்பு

நூல்தேட்டத்தின் முன்னைய தொகுதிகளை எமது சக்திக்கெட்டியவரை சர்வதேச நூற்பட்டியல்களின் சிறப்பம்சங்களைக் கூர்ந்து கவனத்துக்கெடுத்துத் தொகுத்திருந்தோம். இத்தொகுதிகளில் காணப்படும் தவறுகளைச் சுட்டிக்காட்டி, காத்திரமான ஆலோசனைகளைப் பலர் வழங்கியிருந்தனர். அவற்றில் நாம் ஏற்றுக்கொண்ட பல விடயங்களை இத்தொகுதியிலும் சேர்த்திருக்கின்றோம். அடுத்து வரவுள்ள எட்டாவது தொகுதி மேலும் சிறந்ததாக அமைய உங்கள் மேலான ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

இத்தொகுதி வர்த்தக நோக்கமற்றதொரு தனிமனித முயற்சியாகும். நிறுவனரீதியில் மேற்கொள்ளப்படவேண்டிய இத்தகைய உசாத்துணை வெளியீட்டு நடவடிக்கைகள் தனிமனித முயற்சியாக மலரும்போது நிதி, காலம், நிபுணத்துவ உதவி என்பன எப்பொழுதும் வரையறைக்குட்பட்டதாகவே அமைகின்றன. இதை மனதில் கொண்டு, இத்தொகுதியின் பரந்துபட்ட அறிமுகத்திற்கும் விநியோகத்திற்கும், விற்பனைக்கும் உங்களாலான பங்களிப்பை வழங்குவீர்கள் என்று நம்புகின்றோம். இதன் விற்பனை மூலம் பெறப்படும் நிதி எமது அடுத்த தொகுதியின் துரித உருவாக்கத்துக்கு உறுதுணையாக அமையும் என்று எதிர்பார்க்கின்றோம். உலகெங்கும் பரந்துவாழும் ஈழத்தமிழர்கள் தாம் புலம்பெயர்ந்துவாழும் நாடுகளிலுள்ள நூலகங்களையும் நூல்தேட்டத்தின் அனைத்துத் தொகுதிகளும் சென்றடைவதற்குத் தங்களாலான பங்களிப்பினை நல்குவதைத் தார்மீகக் கடமையாகக் கொள்வீர்கள் என்றும் எதிர்பார்க்கின்றேன்.

# நூல்தேட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வகுப்புப் பிரிவு

**(டுவி தசாம்சப் பகுப்பை அடிப்படையாகக் கொண்டது)**

## பிரதான பிரிவுகள்

| | |
|---|---|
| *000-099* | பொதுப்பிரிவு |
| *100-199* | மெய்யியல்துறை |
| *200-299* | சமயங்கள் |
| *300-399* | சமூக விஞ்ஞானங்கள் |
| *400-499* | மொழியியல் |
| *500-599* | தூய விஞ்ஞானங்கள் |
| *600-699* | பிரயோக விஞ்ஞானம், தொழில்நுட்பம் |
| *700-799* | கலைகள், நுண்கலைகள் |
| *800-899* | இலக்கியம் |
| *900-999* | புவியியல், வரலாறுகள் |

## விரிவான பிரிவுகள்

### 000 பொதுப்பிரிவு

| | |
|---|---|
| *000* | பொது அறிவு *16001-16002* |
| *001.4* | ஆய்வியல் முறைமைகள் *16003-16004* |
| *010* | நூலியல், நூல்விபரப்பட்டியல் *16005* |
| *020* | நூலகவியல், தகவல் விஞ்ஞானம் *16006-16012* |
| *025* | ஆவணமாக்கல் *16013* |
| *050* | பொதுப் பருவஇதழ்கள், வழிகாட்டிகள் *16014-16018* |
| *051* | பொதுப் பருவஇதழ் சிறப்பிதழ்கள் *16019-16027* |
| *069.5* | அரும்பொருட் சேகரிப்பு *16028* |
| *070* | ஊடகவியல், வெளியீட்டுத்துறை *16029-16031* |
| *070.01* | ஆசிரியத் தலையங்கங்கள்/பத்தி எழுத்துக்கள் *16032-16036* |

## 100 மெய்யியல்துறை

| | |
|---|---|
| *100* | *மெய்யியல் (தத்துவவியல்) 16037* |
| *150* | *உளவியல் 16038-16040* |
| *152.47* | *கோபம்* (Anger) *16041* |
| *154.63* | *கனவுகள் 16042* |
| *155.4* | *குழந்தை உளவியல் 16043* |
| *158.1* | *மானிட மேம்பாடு 16044-16049* |
| *158.12* | *தியானம் 16050-16051* |
| *158.3* | *உளவளத்துணை* (counseling) *16052* |
| *170* | *ஒழுக்கவியல் 16053-16058* |
| *180* | *இந்து தத்துவம் (சைவ சித்தாந்தம்) 16059-16065* |
| *190* | *சோதிடம், வானசாஸ்திரம் 16066-16069* |

## 200 சமயங்கள்

| | |
|---|---|
| *220* | *கிறிஸ்தவம் 16070-16071* |
| *220.(2)* | *கிறிஸ்தவ பக்தி இலக்கியங்கள், கீர்த்தனைகள், பக்திப்பாடல்கள் 16072-16073* |
| *294.3* | *பௌத்தம் 16074* |
| *294.5* | *இந்து சமயம் 16075-16078* |
| *294.5(1)* | *இந்து சமய பாடநூல்கள் 16079-16080* |
| *294.5(2)* | *இந்து நிறுவனங்கள், ஆலய வரலாறுகள் 16081-16091* |
| *294.5(21)* | *இந்து சமய ஆண்டிதழ்கள் 16092-16108* |
| *294.5(3)* | *ஆலயங்கள், சமய நிறுவனங்களின் சிறப்பு மலர்கள் 16109-16124* |
| *294.5(4)* | *பக்தி இலக்கியங்கள் 16125-16164* |
| *297* | *இஸ்லாம் 16165-16177* |

## 300 சமூக விஞ்ஞானங்கள்

| | |
|---|---|
| *301* | *சமூகவியல் 16178-16182* |
| *301.01* | *சமூகவியல்சார்ந்த பாடநூல்கள் 16183-16185* |
| *301.05* | *சமூகவியல் சார்ந்த ஆய்விதழ்கள்/சிறப்பு மலர்கள் 16186-16190* |
| *301.1* | *பண்பாடு 16191-16192* |
| *303.66* | *சமாதானம் 16193* |
| *305.4* | *பெண்கள், பெண்ணியம், பெண்ணிலைவாதம் 16194-16198* |

| | |
|---|---|
| 305.4(5) | பெண்ணியம் சார்ந்த ஆய்விதழ்கள்/சிறப்பிதழ்கள் 16199-16201 |
| 305.489 | மூன்றாம் பாலினம் 16202-16203 |
| 305.5 | சாதியம் 16204 |
| 320 | அரசறிவியல் (குடியியல்) 16205 |
| 320.1 | சமகால அரசியல் கட்டுரைகள், ஆய்வுகள் 16206-16213 |
| 323 | மனித உரிமை 16214 |
| 323.352 | சிறுவர் உரிமை 16215-16217 |
| 325 | சர்வதேச/உள்ளக புலப்பெயர்வுகள், காலனித்துவம் 16218-16219 |
| 325.21 | அகதிகள் 16220 |
| 330 | பொருளியல் 16221 |
| 331.88 | தொழிற் சங்கங்கள் 16222 |
| 333.7 | சுற்றுச்சூழல் பாதுகாப்பு 16223-16228 |
| 335 | சோசலிசம், அது தொடர்பான பிரிவுகள் 16229 |
| 335.4 | கம்யூனிசம் 16230 |
| 338 | பொருளாதார வளங்கள், மீன்வளம் 16231 |
| 338.9 | பொருளாதார அபிவிருத்தி 16232-16235 |
| 342 | அரசியலமைப்புச் சட்டம் 16236 |
| 360 | சமூக சேவை நிறுவனங்கள் 16237 |
| 362.4 | மாற்றுத்திறனாளிகளும் சேவைகளும் 16238-16239 |
| 362.7 | சிறுவர் பராமரிப்பு 16240 |
| 363 | சுற்றாடல், சூழல் மாசுபடுதல் அமைப்புகள் 16241 |
| 370 | கல்வியியல் 16242-16250 |
| 370.05 | கல்விநிறுவனங்களின் ஆய்விதழ்கள்,<br>ஆண்டு மலர்கள் 16251-16256 |
| 370.1 | கல்வி நிறுவனங்கள், மாணவர் சங்கங்கள்,<br>சிறப்பிதழ்கள் 16257-16265 |
| 370.15 | கல்வி உளவியல் 16266 |
| 372 | பாலர் கல்வி 16267 |
| 375 | பாடத்திட்டங்கள்/பாடவிதானங்கள் 16268 |
| 380 | வர்த்தகம், வணிகத் தொடர்புகள், போக்குவரத்து 16269 |
| 90 | நாட்டாரியலும் பழக்க வழக்கங்களும் 16270 |
| 390.1 | இடப்பெயர் ஆய்வு 16271 |

*392* வாழ்வியல் வழக்குகள், வாழ்க்கை முறைமைகள் *16272*
*392.5* சடங்கு முறைமைகள், திருமணங்கள் *16273-16274*
*395* நாட்டார் வழக்காற்றியல் *16275*
*398* கிராமிய இலக்கியங்கள், நாட்டுக்கூத்துக்கள் *16276-16286*
*398.1* பழமொழிகளும் விடுகதைகளும் *16287*
*398.8* தாலாட்டுப்பாடல்கள் *16288*

**400 மொழியியல்**

*411* பிறெயில் முறையியல் *16289*
*491.2* சமஸ்கிருத மொழி *16290*
*494.8* தமிழ் மொழி *16291-16297*
*494.8(01)* தமிழ் மொழி ஆய்வுச் சிறப்பிதழ்கள் *16298*
*494.8(1)* தமிழ் இலக்கணம் *16299-16300*
*494.8(2)* தமிழ்ப் பாடநூல்கள் *16301-16308*

**500 தூய விஞ்ஞானங்கள்**

*516.24* திரிகோண கணிதம் *16309*
*540* இரசாயனம் *16310*
*551.47* சுனாமி *16311*
*551.6* காலநிலையியல் *16312*
*551.63* வானிலை அவதானிப்பு *16313*
*570* உயிரியல் *16314*
*580* தாவரவியல் *16315-16316*

**600 தொழில்நுட்பம், பிரயோக விஞ்ஞானம்**

*613* பொது உடல்நலவியல் *16317-16318*
*613.7* யோகக்கலை *16319*
*613.907* பாலியல் கல்வி *16320*
*614* பொதுச் சுகாதாரம் *16321-16322*
*615* மருந்தியலும் சிகிச்சைகளும் *16323-16324*
*616* நோய்கள் *16325-16327*
*618* பெண்நோயியல், மகப்பேற்று மருத்துவம் *16328-16329*
*618.97* மூப்பியல் மருத்துவம் *16330*

| | |
|---|---|
| *619* | *கீழைத்தேய மருத்துவம் 16331-16332* |
| *619.1* | *சித்த மருத்துவம் 16333-16337* |
| *630* | *விவசாயமும் அது சார்ந்த துறைகளும் 16338-16340* |
| *641.86* | *கேக் தயாரிப்புக் கலை 16341* |
| *642* | *உணவும் பரிமாறலும் 16342-16344* |
| *650* | *முகாமைத்துவம், அலுவலக நிர்வாகம் 16345* |
| *658.15* | *நிதி முகாமைத்துவம் 16346* |

## 700 கலைகள், நுண்கலைகள்

| | |
|---|---|
| *701* | *பொதுக்கலைகள், நுண்கலைகள் 16347-16349* |
| *722* | *புராதன கட்டிடக்கலை 16350-16351* |
| *770* | *ஒளிப்படக்கலை 16352* |
| *780* | *இசைக்கலை 16353-16364* |
| *790* | *நிகழ்கலைகளும் பொழுதுபோக்குக் கலைகளும் 16365-16366* |
| *791* | *நாட்டியக் கலை 16367-16368* |
| *791.1* | *நாட்டிய நாடகங்கள் 16369* |
| *792* | *அரங்கியல், நாடகக்கலை 16370-16386* |
| *793* | *திரைப்படக்கலை 16387-16391* |
| *796* | *உடற்பயிற்சி, விளையாட்டுகள் 16392-16394* |

## 800 இலக்கியம்

| | |
|---|---|
| *801* | *சிறுவர் இலக்கியங்கள் 16395* |
| *801.(1)* | *சிறுவர் பாடல்கள், கவிதைகள் 16396-16406* |
| *801.(2)* | *சிறுவர் நாடகங்கள் 16407* |
| *801.(3)* | *சிறுவர் கவிதா நாடகங்கள், காவியங்கள் 16408* |
| *801.(4)* | *சிறுவர் சிறுகதைகள் 16409-16428* |
| *801.(41)* | *சிறுவர் மொழிபெயர்ப்பு சிறுகதைகள் 16429-16430* |
| *801.(5)* | *சிறுவர் கதைகள்/நாவல்கள் 16431-16434* |
| *801.(51)* | *சிறுவர் மொழிபெயர்ப்பு நாவல்கள் 16435-16439* |
| *801.(6)* | *சிறுவர்க்கான கட்டுரைகள் 16440* |
| *801.(7)* | *சிறுவர்க்கான பலவின நூல்கள் 16441* |
| *894.8(01)* | *தமிழ் இலக்கியப் பாடநூல்கள் 16442-16446* |
| *894.8(05)* | *இலக்கிய அமைப்புகளின்/சஞ்சிகைகளின் சிறப்பிதழ்கள் 16447-16452* |

| | |
|---|---|
| *894.8(1)* | *தமிழ்க் கவிதைகள் 16453-16587* |
| *894.8(11)* | *மொழிபெயர்ப்புக் கவிதைகள் 16588-16591* |
| *894.8(2)* | *தமிழ் நாடகங்கள் 16592-16602* |
| *894.8(21)* | *மொழிபெயர்ப்பு நாடகங்கள் 16603* |
| *894.8(3)* | *தமிழ்க்கவிதை/இசை நாடகங்கள்-காவியங்கள் 16604-16612* |
| *894.8(4)* | *தமிழ்ச் சிறுகதைகள் 16613-16716* |
| *894.8(41)* | *மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் 16717-16721* |
| *894.8(5)* | *தமிழ் நாவல்கள், குறுநாவல்கள் 16722-16785* |
| *894.8(51)* | *மொழிபெயர்ப்பு நாவல்கள், குறுநாவல்கள் 16786* |
| *894.8(6)* | *பொது இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வு 16787-16813* |
| *894.8(61)* | *மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 16814-16815* |
| *894.8(62)* | *இலக்கிய வரலாறுகள் 16816* |
| *894.8(621)* | *இஸ்லாமியத் தமிழ், அரபுத்தமிழ் இலக்கியம் 16817-16822* |
| *894.8(63)* | *சங்க இலக்கியங்கள் தொடர்பானவை 16823-16831* |
| *894.8(64)* | *சமகால இலக்கிய ஆய்வுகள், கட்டுரைகள் 16832-16840* |
| *894.8(7)* | *பலவினத் தொகுப்பு 16841-16847* |
| *894.8(87)* | *அங்கதம்/நகைச்சுவை தொகுப்பு 16848* |

## 900 புவியியல், வரலாறுகள்

| | |
|---|---|
| *910.01* | *புவியியல் பாடநூல்கள் 16849* |
| *911* | *பிரயாண நூல்கள், வழிகாட்டிகள் 16850-16852* |
| *920.01* | *துறைசாரா வாழ்க்கை வரலாறுகள் 16853-16860* |
| *920.1* | *ஊடகவியலாளர், நூலகர்கள், ஒலிபரப்புத்துறையினர் 16861-16867* |
| *922* | *சமயத் தலைவர், சிந்தனையாளர் 16868-16879* |
| *923* | *சமூகவியல்துறை சார்ந்தோர் 16880-16886* |
| *923.2* | *அரசியல் துறையினர் 16887-16891* |
| *923.4* | *சட்ட அறிஞர்கள் 16892* |
| *923.6* | *சமூக சேவகர்கள் 16893* |
| *923.61* | *விடுதலைப் போராளிகள்/இராணுவ வீரர்கள் 16894-16897* |
| *923.7* | *கல்வியியலாளர்கள் 16898-16903* |
| *923.8* | *வர்த்தகர்கள் 16904-16905* |
| *923.9* | *நாட்டாரியல் அறிஞர்கள் 16906* |
| *924* | *மொழியியலாளர்கள் 16907-16910* |

*925* விஞ்ஞானிகள் *16911*

*926* பிரயோக விஞ்ஞானிகள், மருத்துவர்கள் *16912*

*927* கலைஞர்கள் *16913-16916*

*927.8* இசைக்கலைஞர்கள் *16917-16918*

*927.91* நாட்டியக் கலைஞர்கள் *16919*

*927.92* நாடகக் கலைஞர்கள் *16920-16922*

*927.94* விளையாட்டு வீரர்கள், பிரமுகர்கள் *16923*

*928* இலக்கிய அறிஞர்கள், புலவர்கள் *16924-16945*

*940* ஐரோப்பிய வரலாறு *16946*

*944* பிரான்ஸ் தேச வரலாறு *16947*

*954* இந்திய வரலாறு *16948-16949*

*954.93(2)* இலங்கை இனப்பிரச்சினை வரலாறு *16950-16956*

*954.93(3)* இனங்கள், மக்கள் குழுமங்கள், இன உறவுகள் *16957-16962*

*954.93(4)* பிரதேச வரலாறு *16963-16975*

*954.93(41)* ஊர்ச் சங்கங்களின் சிறப்பு மலர்கள்/ஆண்டு மலர்கள் *16976*


## 999 இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள்


*999* பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள் *16977-17000*

# நூல்தேட்டம் தொகுதி 17
# வகுப்புப் பிரிவு

## 000 பொதுப்பிரிவு

### 000 பொது அறிவு

**16001**

**சகல போட்டிப் பரீட்சைகளுக்குமான பொது நுண்ணறிவும் உளச்சார்பும்.** P.உமாசங்கர். கொழும்பு: P.உமாசங்கர், ஜீ.கே. வெளியீடு, 1ஆவது பதிப்பு, ஜுன் 2021. (அச்சக விபரம் தரப்படவில்லை).

iv, 302 பக்கம், விலை: ரூபா 850., அளவு: 24x18 சமீ.

இதில் 25 மாதிரி வினாத்தாள்கள், 1250 வினாக்கள் அடங்கியுள்ளன. மிக இலகுவான நுட்பமுறையில் விடைகள் மற்றும் கற்றல் துணை சாதனங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27303).

**16002**

**புதிய அறிவுச் சாகரம்: புலமைப் பரிசில் வழிகாட்டி.** ஏ.எஸ்.ஜெளபர். கொழும்பு 10: Student Guide Publication, 108/14, மாளிகாகந்தை வீதி, மருதானை, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2017. (கண்டி: Student Publication, 225, Dawlagala, Handassa).

viii, 266 பக்கம், விலை: ரூபா 320., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-3990-14-3.

தமிழ் குறிப்புகள், கணிதக் குறிப்புகள், சுற்றாடல் குறிப்புகள், நிறுவனங்களின் இலச்சினைகள், இலங்கை பற்றிய தகவல்கள், பொது அறிவு, தையல் குறிப்புகள், ஆக்கம், அழகியல், இசைக் கருவிகள், முகபாவனைகள், உடல் ஆரோக்கியச் செயற்பாடுகள், வினோத விளையாட்டுகள், விளையாட்டுகள், விஞ்ஞானக் குறிப்புகள் ஆகிய தலைப்புகளின் கீழ் ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சைகளுக்குரிய பல்வேறு தகவல்கள் வகுத்துத் தரப்பட்டுள்ளன.

மேலும் பார்க்க:
பசுமை அமைதி விருதுகள்: சூழல் பொது அறிவுப் பரீட்சை. 16241

## 001.4 ஆய்வியல் முறைமைகள்

### 16003

**ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் முறை.** ஆ.சதாசிவம் (மூலம்), திருஞானேஸ்வரி சதாசிவம் (பதிப்பாசிரியர்). ஐக்கிய அமெரிக்கா: சதாசிவம் பதிப்பகம், பேதெஸ்டா, மேரிலாண்ட், 2ஆவது பதிப்பு, 2020, 1ஆவது பதிப்பு, 1963. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டேர்ஸ், இல. 10, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

x, (2), 69 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x19.5 சமீ.

இந்நூல் தமிழில் ஆராய்ச்சித்துறையில் ஈடுபடுவோர்க்குப் பயன்தரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுபவர்கள் இக்காலத்திற் கவனிக்க வேண்டிய முக்கியமான முறைகள் இந்நூலில் விளக்கப் பட்டுள்ளன. ஆங்கிலம் முதலிய மேற்றிசை மொழிகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல துறைகளில் வெளிவருகின்றன. அவற்றில் கையாளப்படும் முறைகள் படிப்ப வர்களுக்குத் தெளிவை உண்டாக்கத்தக்கன. அவற்றைத் தமிழுக்கு இயைந்தவாறு பொருத்தி அமைத்து இந்நூல் விளக்குகின்றது. தமிழிலக்கண நூல்களில் தொல்லாசிரியர்கள் காட்டிய உத்தி வகைகளும் இந்நூலில் இடம்பெறுகின்றன. இவ்வுத்திகள் எக்காலத்திலும் நூலாசிரியர்கள் மேற்கொள்ள வேண்டியன என்பதையும் இந்நூல் வலியுறுத்துகின்றது. இந்நூல் ஆராய்ச்சிக் கட்டுரை, ஆராய்ச்சிக் கட்டுரையின் அமைப்பு, மேற்கோள், அடிக்குறிப்பு, மேற்கோள் நூற்பட்டியல், உத்திகள், மொழிநடை ஆகியவற்றுடன் மேற்கோள் நூற்பட்டியல், பிற்சேர்க்கை என பல்வேறு பாடத் தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளது.

### 16004

**ஆற்றுகைக் கலைகளுக்கான ஆய்வு முறையியல்.** சுகன்யா அரவிந்தன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1ஆவது பதிப்பு, 2022. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

viii, 124 பக்கம், விலை: ரூபா 700., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-685-167-0.

ஆய்வு முறையியலுக்கான இந்நூல் ஆய்வு அறிமுகம், ஆய்வுச் சிக்கலை இனம்காணல், கருதுகோள், இலக்கிய மீளாய்வு, தரவு சேகரிக்கும் நுட்பங்கள், நேர்காணல், வினாக்கொத்து, கள ஆய்வு, தகவல் ஒழுங்குபடுத்தலும் பகுப்பாய்வு செய்தலும், ஆய்வேடு எழுதுதல், அடிக்குறிப்பு, மேற்கோள்கள் ஆகிய பதினொரு இயல்களில் விரிவாக எழுதப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இசைத்துறையில் முதுநிலை விரிவுரையாளராகக் கடமையாற்றும் கலாநிதி சுகன்யா அரவிந்தன் சமூகவியல், கர்நாடக இசை ஆகிய இரு துறைகளிலும் யாழ்.பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பட்டம் பெற்றவர்.

## 010 நூலியல், நூல்விபரப்பட்டியல்

### 16005

**நூல்தேட்டம் தொகுதி 16.** என்.செல்வராஜா. ஐக்கிய இராச்சியம்: அயோத்தி நூலக சேவைகள், இணை வெளியீட்டாளர், கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2022. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xviii, 596 பக்கம், விலை: ரூபா 6000., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-624-6164-13-3.

தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பட்ட ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான குறிப்புரையுடன் வெளிவந்துள்ள நூல்விபரப்பட்டியலின் பதினாறாவது தொகுதி இதுவாகும். இத்தொகுதியில் மேலும் 1000 நூல்களுக்கான பதிவுகள் தொகுக்கப் பட்டுள்ளன. பிரதான பதிவு தூவி தசாம்சப் பகுப்புமுறையைத் தழுவிப் பகுப்பாக்கம் செய்யப்பட்டு, பாடவாரியாகப் பதியப்பட்டுள்ளது. பதிவுகள் 15001-16000 வரை தொடர் இலக்கமிடப்பட்டுள்ளன. நூல் தலைப்பு வழிகாட்டி, ஆசிரியர் வழிகாட்டி என்பவற்றுடன் இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் படைப்புக்களும் பட்டியலிட்டுத் தரப்பட்டுள்ளமை இந்நூலின் சிறப்பம்சமாகும்.

மேலும் பார்க்க:
செங்கை ஆழியானின் படைப்புலகம். 16936

## 020 நூலகவியல், தகவல் விஞ்ஞானம்

### 16006

**கொழும்புத் தமிழ்ச் சங்கம் புதிய உசாத்துணை (சட்ட) நூலகப் பிரிவின் திறப்பு விழாவின் நிகழ்ச்சித் தொகுப்பு.** கமுதர் (இயற்பெயர்: க.மு.தர்மராசா). கொழும்பு 6: தமிழ்ச் சங்கம், இல.7, 57ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, மார்ச் 2008. (கொழும்பு: யுனைட்டெட் பிரின்ட் அச்சகம்).

93 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21.5 சமீ.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் 2008ஆம் ஆண்டு பங்குனி மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற புதிய உசாத்துணை நூலகப் (சட்டப் பிரிவும் உட்பட) பிரிவின் திறப்பு விழாவின் நிகழ்ச்சித் தொகுப்பு. க.மு.தர்மராசா அவர்கள் இந்நிகழ்வினைத் தொகுத்து புகைப்படங்களின் உதவியுடன் பதிவுசெய்துள்ளார். இந்நிகழ்வில் ஆற்றப்பட்ட பேரறிஞர்களின் உரைகளின் சாராம்சங்களையும், இந்நிகழ்வு தொடர்பாக பத்திரிகைகளில் வெளிவந்த ஆக்கங்கள், செய்திகள், அறிக்கைகள் ஆகியவற்றையும் பதிவுசெய்துள்ளார்.

## 16007

**தகவல் ஒழுங்கமைப்பில் சுட்டியாக்கம்**. கோமதி முருகதாஸ். யாழ்ப்பாணம்: நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு, 2022. (யாழ்ப்பாணம்: மிக்கி பிரின்டிங் ஸ்பெஷலிஸ்ட், தபாற்பெட்டிச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி).

(9), 70 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-624-6150-09-9.

சுட்டியாக்கத்திற்கு ஒரு அறிமுகம், பாடச் சுட்டிகள் (Subject Indexing) தயாரித்தல், சுட்டியாக்க மொழி (Indexing Language), சுட்டியாக்க அமைப்பு (Indexing system), தலைப்புச் சொற்களின் சுட்டியாக்கம் (Title Word indexing), மூலச் சுட்டியாக்கம் (Keyword Indexing), மேற்கோள் சுட்டியாக்கம் (Citation Indexing), சுட்டிகளை மதிப்பீடு செய்யும் அளவீடுகள் ஆகிய எட்டு இயல்களில் இந்நூல் நூலகவியல்துறை மாணவர்களின் பாடத் தேவைகளுக்கேற்ற வகையில் எழுதப்பட்டுள்ளது. கோமதி முருகதாஸ், பேராதனைப் பல்கலைக்கழக விவசாயத்துறைப் பட்டதாரி. இவர் 1997ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உதவி நூலகராக இணைந்து தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட உதவி நூலகராக பணயாற்றுகின்றார்.

## 16008

**நமக்கென்றொரு பெட்டகம்- நூல் அறிமுகமும் 'கிராமிய நூலகங்களும் அவற்றின் சமகாலத் தேவைகளும்" உரையாடலும்**. என்.செல்வராஜா (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: விதை குழுமம், மெய்கண்டான் ஒழுங்கை, சரசாலை தெற்கு, சாவகச்சேரி, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2022. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

vi, 53 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

நூலகவியலாளர் என்.செல்வராஜா அவர்கள் எழுதிய "நமக்கென்றொரு பெட்டகம்" என்ற நூலின் அறிமுக நிகழ்வும் உரையாடலும் 12.9.2021அன்று ZOOM தொழில் நுட்பத்தின் உதவியுடன் இணையத்தளத்தில் அரங்கேற்றம் கண்டது. யாழ் பல்கலைக்கழக நூலகர் கலாநிதி திருமதி கல்பனா சந்திரசேகர், விதை குழுமச் செயற்பாட்டாளர் அருண்மொழிவர்மன் ஆகியோர் இந்நூல் பற்றிய தமது கருத்துக்களை பகிர்ந்துகொண்டனர். தொடர்ந்து "கிராமிய நூலகங்களும் அவற்றின் சமகாலத் தேவைகளும்" என்ற தலைப்பில் உரையும் உரையாடலும் இடம் பெற்றிருந்தன. மூல உரையை என்.செல்வராஜா நிகழ்த்தினார். தொடர்ந்தும் பங்கேற்பாளர்களினால் கருத்துரைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இணையவழி ஒழுங்குசெய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வின் ஒலி/ஒளிப்பதிவு இந்நூல்வழியாக என் செல்வராஜா அவர்களால் எழுத்துருவாக்கம் தொகுக்கப்பெற்று ஆவணப் பதிவாகியுள்ளது.

### 16009

**நூலக முகாமைத்துவம்**. ச.சண்முகதாசன். வவுனியா: ச.சண்முகதாசன், சிரேஷ்ட உதவி நூலகர், வவுனியா வளாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1ஆவது பதிப்பு, 2021. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 672 B, காங்கேசன்துறை வீதி).

x, 129 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21x14 சமீ., ISBN: 978-624-5786-05-3.

இந்நூலில் பொது முகாமைத்துவம் பற்றிய சுருக்கமான விளக்கத்துடன் நூலகங்கள் பற்றியும், நூலகமொன்றில் செயற்படுத்தப்படக் கூடிய முகாமைத்துவ செயற்பாடுகள் என்பன பற்றியும் தனித்தனிப் பகுதிகளாக விபரிக்கப்பட்டுள்ளன. நூலக முகாமைத்துவத்திற்கோர் அறிமுகம், முகாமைத்துவம்: ஓர் அறிமுகம், நூலகங்கள், நூலக முகாமைத்துவ செயற்பாடுகள், அலுவலக முகாமைத்துவம், வள முகாமைத்துவம், அறிவு முகாமைத்துவம், முரண்பாட்டு முகாமைத்துவம், அனர்த்த முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், தொடர்பாடல், நிகழ்வு முகாமைத்துவம் ஆகிய பன்னிரு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. திரு. சண்முகரெத்தினம் சண்முகதாசன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்கிலும் நிதியியலும் இளமாணி, மற்றும் கலைத்துறையில் இளமாணிப் பட்டங்களைப் பெற்றவர். ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டத்தையும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்துறையில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றவராவார். நூலகவியல் துறையில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட சேவை அனுபவத்தைக் கொண்ட இவர் தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் சிரேஷ்ட உதவி நூலகராகப் பணியாற்றுகிறார்.

### 16010

**நூலகப் பகுப்பாக்கத் திட்டங்களும் எண்கட்டுமானப் படிமுறைகளும்**. கல்பனா சந்திரசேகர், தயாநந்தி ஸ்ரீதரன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, இணை வெளியீடு, ஐக்கிய இராச்சியம்: அயோத்தி நூலக சேவைகள், லூட்டன், 1ஆவது பதிப்பு, 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

x, 254 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 950., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-624-6164-04-1.

நூலகங்களில் தகவல் சாதனங்களை ஒழுங்குமுறையில் பேணி, வாசகர்களின் தேவையறிந்து பொருத்தமான ஆவணங்களை உரிய நேரத்தில் வழங்கும் சேவைக்கு அடிப்படையாக அமையும் செயற்பாடுகளுள் பகுப்பாக்கமும் ஒன்றாகும். மேலும், நூலகப் பகுப்பாக்க செயற்பாட்டில் காத்திரமானதொரு பணியாக எண் கட்டுமானம் காணப்படுகிறது. பகுப்பாக்கம், எண் கட்டுமானம் என்பவை தொடர்பில் சகலரும் இலகுவாகப் புரிந்துகொள்ளும் வகையில் பல விளக்கங்களுடன் இந்நூல் தயாரிக்கப் பட்டுள்ளது. இந்நூலின் அத்தியாயங்கள், தகவலும் தகவல் ஒழுங்கமைப்பும், நூலகப் பகுப்பாக்கத்தின் அடிப்படைகள், தூயி தசாம்சப் பகுப்பாக்கத் திட்டம்,

அனைத்துலகத் தசாம்ச பகுப்பாக்கத் திட்டம், கோலன் பகுப்பாக்கத் திட்டம், ஏனைய நூலகப் பகுப்பாக்கத் திட்டங்கள், இணையவழி நூலகப் பகுப்பாக்கத் திட்டங்கள், விடயச் சுட்டி ஆக்கமும் சங்கிலிச் சுட்டியாக்கமும், சிறுவர் நூல்களுக்கான பகுப்பாக்கமும் ஒழுங்கமைத்தலும் ஆகிய தலைப்புகளின் கீழ் ஒழுங்குபடுத்தித் தரப்பட்டுள்ளன.

## 16011

**நூலகப் பட்டியலாக்கம்: மரபும் மாற்றமும்.** மைதிலி விசாகரூபன். யாழ்ப்பாணம்: மலர் பதிப்பகம், 44/5, மணல்தரை ஒழுங்கை, கந்தர்மடம், 1ஆவது பதிப்பு, சித்திரை 2020. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

x, 180 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-53349-1-4.

நூலகப் பட்டியலாக்கத்தின் அடிப்படைகள்-1, நூல் விவரணம், பட்டியல் தலையங்கத் தெரிவு, தொடர் வெளியீடுகளின் பட்டியலாக்கம், பட்டியல் பதிவுகளை ஒழுங்கமைத்தல், பட்டியலாக்க மரபு மாற்றம் ஆகிய ஆறு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலின் முதல் ஐந்து இயல்களும் மரபு வழியான பட்டியலாக்கத்தின் அவசியமான பகுதிகளை விரிவாக விளக்கியுள்ளன. நூலகவியலைத் தமது துறையாக வரித்துக் கொள்கின்ற ஒவ்வொருவரும் கழித்தொதுக்க முடியாத அங்கமாகவுள்ள "பட்டியலாக்கம்" சார்ந்த ஒரு தெளிவான பார்வையைத் தமிழில் தரும் வகையில் இவ்வியல்கள் அமைந்துள்ளன. மரபு நிலையான பட்டியலாக்கத்திலிருந்து மாற்றம் கொண்டுள்ள சில அடிப்படையான கூறுகளை ஆறாவது இயல் விளக்குகின்றது. தற்போது பட்டியலாக்கத்தில் பயன்படுகின்ற புதிய நியமங்கள் சில அறிமுகஞ் செய்யப்படுகின்றன. இவற்றின் மூலம் இன்றைய பட்டியலாளரும், நூலகவியல் மாணவரும் தெளிவைப் பெற்றுக் கொள்ள இந்நூல் உதவியளிப்பதாயுள்ளது. நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவி நூலகராவார். 1992இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழைச் சிறப்பாகப் பயின்று இலங்கை நூலகச் சங்கத்தினால் நடத்தப்படும் நூலகவியல் டிப்ளோமாவை 1994இல் நிறைவு செய்தவர். நூலகத்துறையில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக கற்றல் மற்றும் கற்பித்தல் அனுபவம் கொண்டவர். நூலகமும் சமூகமும் (2004), இலங்கையில் நூலகச் சட்டங்கள் (2005), நூலக முகாமைத்துவ நுட்பங்கள் (2011) ஆகிய நூல்களையும் பல நூலகவியல்சார் கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார்.

## 16012

**நூலகவியல் பெருந்தொகுப்பு: தொகுதி 1-7: செப்டெம்பர் 1985-ஏப்ரல் 2007.** என்.செல்வராஜா (ஆசிரியர்). ஐக்கிய இராச்சியம்: அயோத்தி நூலக சேவைகள், இணை வெளியீட்டாளர், கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2022. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xxviii, *798 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 7500., அளவு: 22x14.5 சமீ.,* ISBN: *978-955-659-393-8.*

*இலங்கையில் தமிழில் நூலகவியல்துறை சார்ந்த சஞ்சிகைகளின் முன்னோடியாக அமைந்த நூலகவியல் ஒரு காலாண்டுச் சஞ்சிகையாக செப்டெம்பர் 1985இலிருந்து வெளிவர ஆரம்பித்தது. நூலகவியல் துறைசார் ஆக்கங்கள் தமிழ்மொழியில் இல்லாத குறையை நிவர்த்திசெய்யும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சஞ்சிகை கல்லச்சுப் பிரதியாக 500 பிரதிகள் வரையில் அச்சிடப்பட்டு இலங்கையின் பிரதான நூலகங்களுக்கும் நூலகவியல் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது. 1991இல் இவ்விதழின் ஆசிரியரான என்.செல்வராஜா புலம் பெயர்ந்து லண்டனில் குடியேறும் வரையில் தடையின்றி இயங்கிய நூலகவியல் சஞ்சிகையின் வெளியீட்டின் பின்னணியில் அயோத்தி நூலக சேவை அமைப்பு உதவியாக இருந்தது. அவர் லண்டன் வந்த பின்னரும் இலங்கையிலிருந்து பல நூலகவியல் மாணவர்களின் வேண்டுகோளின்பேரில் ஜனவரி 2006, ஏப்ரல் 2006, ஏப்ரல் 2007 ஆகிய காலங்களில் ஏழாவது தொகுதியின் மூன்று இதழ்கள் அச்சுருவில் வெளியாகி இலங்கையில் விநியோகிக்கப்பட்டன. இப்பெருந்தொகுப்பு நூலகவியல் சஞ்சிகையின் முழுமையான ஏழு தொகுதிகளினதும் கட்டுரைகளை நுழைவாயில், நூலக வரலாறு, நூலகக்கல்வி, நூற்பகுப்பாக்கம், பட்டியலாக்கம், நூலகமும் கணினியும், நூலகமும் சமூகமும், நூலகமும் இளையோரும், நூலகமும் கல்வியும், நூலக முகாமைத்துவம், நூலகக் கூட்டுறவு, நூலீட்டலும் நூற்பாதுகாப்பும், தேசிய நூலகமும் ஆவணக் காப்பகமும், நமது நூலகங்கள், நமது நூலகர்கள், எழுத்தும் அச்சுக்கலையும், நூலியல்-நூல்கள்-பதிப்புத்துறை, நூல்விபரப்பட்டியலும் சுட்டிகளும், கருத்தரங்குகளும் ஒன்றுகூடல்களும், செய்திகள் ஆகிய 20 பிரிவுகளில் பாடவாரியாகப் பகுத்துத் தொகுத்து ஆவணப்படுத்துகின்றது.*

மேலும் பார்க்க:

1981மே 31-ஜூன் 1 யாழ்ப்பாணத்தில் நடந்தவை 16243

## 025 ஆவணமாக்கல்

### 16013

**ஆவணமாக்கலும் அதன் சமூகப்பெறுமானமும்: யாழ்ப்பாணத்து சமய இதழ்களினூடாக ஒரு தரிசனம்.** *தி.செல்வமனோகரன். யாழ்ப்பாணம்: நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2022. (சாவகச்சேரி: மிக்கி பிரிண்டிங் ஸ்பெஷலிஸ்ட் A9 வீதி, சங்கத்தானை).*

*(4), 38 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் நூலகர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் சிவநேசன் அவர்களின் மூன்றாம் ஆண்டு ஞாபகார்த்த நினைவுப் பேருரை 27.12.2022 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றவேளை வெளியிடப்பட்ட பிரசுரம் இதுவாகும்.*

தி.செல்வமனோகரன், யாழ்.பல்கலைக்கழகத்தின் இந்து மெய்யியல் பட்டதாரி யாவார். அத்துறையில் தனது முது தத்துவமாணிப் பட்டத்தையும் நிறைவு செய்துள்ளார். இப்பல்கலைக்கழகத்தின் இந்து கற்கைகள் பீட, சைவசித்தாந்தத் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமைபுரிந்து வருகின்றார். நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஏடுகள், புழங்கு பொருட்கள் போன்றவற்றின் சேகரத்திலும் அதிக ஈடுபாடு காட்டிவருகின்றார். ஆவணமாக்கல் செயற்பாட்டா ளராக பல்வேறு முயற்சிகளைச் செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## 050 பொதுப் பருவஇதழ்கள், வழிகாட்டிகள், சுட்டிகள்

### 16014

**கலங்கரை-2020**. கவிதாமலர் சுதேஸ்வரன் (இதழாசிரியர்). சுன்னாகம்: சிவன் சிறுவர் கழகம், 1ஆவது பதிப்பு, 2020. (சுன்னாகம்: கிருஷ்ணா பிரிண்டர்ஸ், டாக்டர் சுப்பிரமணியம் வீதி).

24 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 270., அளவு: 21x14.5 சமீ.

15.02.2019 அன்று ஆரம்பிக்கப்பட்ட சுன்னாகம் சிவன் சிறுவர் கழகத்தின் ஆண்டு இதழ் இதுவாகும். தமது திறமைகளைப் பற்றி அறிந்துகொள்ளாது படிப்புச் சுமையுடன் மட்டும் வாழும் இன்றைய இளந்தலைமுறையினரை ஒன்றிணைத்து அவர்களின் ஆளுமையை மேலும் விருத்திசெய்து அவர்களை வெளியுலகிற்கு அறிமுகம் செய்யும் வகையில் அவர்களது படைப்பாக்கங்களைத் தொகுத்து இவ்விதழ் வெளிவந்துள்ளது. இவ்விதழின் சிறப்பம்சமாக சுன்னாகம் பிரதேசத்தில் தமது சேவைகளால் மக்களின் மனம் கவர்ந்த சில அலுவலர்களையும், சமூக சேவகர்களையும் சிறு கட்டுரைகளின் வடிவில் ஆவணப்படுத்தியிருக்கிறார்கள். சிவன் சிறுவர் கழக செய்திப் படங்களும், அங்கத்தவர்களினதும், பரிசகளை வென்றோரினதும், கட்டுரையாளர்களினதும் வண்ணப் புகைப்படங்களும் இடம்பெற்றுள்ளன.

### 16015

**கலங்கரை-2021**. கவிதாமலர் சுதேஸ்வரன் (இதழாசிரியர்). சுன்னாகம்: சிவன் சிறுவர் கழகம், 1ஆவது பதிப்பு, 2021. (சுன்னாகம்: கிருஷ்ணா பிரிண்டர்ஸ், டாக்டர் சுப்பிரமணியம் வீதி).

62 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 21x14.5 சமீ.

15.02.2019 அன்று ஆரம்பிக்கப்பட்ட சுன்னாகம் சிவன் சிறுவர் கழகத்தின் நோக்கம் ஆன்மீகம், ஒழுக்கம், மூத்தோரைக் கனம் பண்ணுதல், நேரத்தை கடைப் பிடித்தல், பிறரிடம் நல்ல விடயங்களைக் காணும் இடத்துத் தட்டிக் கொடுத்தல், கடவுளுக்கும் ஆபத்தில் கைகொடுப்போருக்கும் தயங்காமல் நன்றி தெரிவித்தல், தேவையான நேரத்தில் யாருக்கும் உதவிசெய்தல் ஆகிய நற்பண்புகளை சிறுவர் களிடத்தே வளர்த்தெடுத்தலாகும். அதனை செயற்படுத்தும் ஒரு வழிமுறையாக கலங்கரை ஆண்டிதழ் சிறுவர்களின் ஆக்கங்களுடன் வெளிவருகின்றது.

இவ்விதழின் மற்றொரு அம்சமாக சுன்னாகம் பிரதேசத்தில் தமது சேவைகளால் மக்களின் மனம் கவர்ந்த சில அரச அலுவலர்களையும், சமூக சேவகர்களையும் சிறு கட்டுரைகளின் வடிவில் ஆவணப்படுத்தியிருக்கிறார்கள். சிவன் சிறுவர் கழக செய்திப் படங்களும், அங்கத்தவர்களினதும், பரிசுகளை வென்றோரினதும், கட்டுரையாளர்களினதும் வண்ணப் புகைப்படங்களும் இடம்பெற்றுள்ளன.

**16016**

**லிற்றில் பேர்ட்ஸ் (இதழ் 1-2022).** ஆசிரியர் குழு. கிளிநொச்சி: லிட்டில் எயிட் திறன் விருத்தி மையம், கனகராசா வீதி, திருநகர், இணை வெளியீடு, லண்டன், தேசம் பதிப்பகம், 1வது பதிப்பு, 2022. (யாழ்ப்பாணம்: ஜே.ஆர். இன்டஸ்ட்ரீஸ், இல. 7, உடுவில் மகளிர் கல்லூரி மேற்குத் தெரு, உடுவில்).

*48 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 95.00, அளவு: 21x14.5 சமீ.*

*இளம் தலைமுறையினரின் படைப்புத் திறனை வெளிக்கொண்டுவரும் நோக்கில் வெளியிடப்படும் இளையோர் சஞ்சிகையின் முதலாவது இதழ். இவ்விதழில் சமூகம்-அது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் (கி.துவாரகன், யாழ். யூனியன் கல்லூரி), முயற்சி திருவினையாக்கும் - சிறுகதை (வி.றம்மியா), இது தொழில் (நுட்ப) மயக்கமா?-கவிதை (டிலக்ஷன் கிருஷ்ணானந்தா, கிளிநொச்சி மகா வித்தியாலயம்), உருள் பந்து விளையாட்டு (துலக்ஷனா-சோபிகா, கிளிநொச்சி), பாகுபாடற்ற கல்வியே சமூகத்தின் தேவை (மேரி ஆன் பிறித்திகா பார்த்தீபன், SOS சிறுவர் கிராமம், யாழ்ப்பாணம்), தொழில்நுட்பம் ஆக்கமும் அழிவும் (ய.சாஹித்யா, வவுனியா விநாயகர் வித்தியாலயம்), கல்வியின் அவசியம் (க.டோஜிகா, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரு முகங்கள் கொண்ட தொழில்நுட்ப வளர்ச்சி (எம்.ஆர்.பாதில் அஹமட், புத்தளம் சாஹிரா தேசியக் கல்லூரி), எனது பாடசாலை கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயம் (ம.சிவராம், கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயம்), சுவாமி விபுலானந்தர் (நா.தர்மினி, கிளிநொச்சி), கல்வி (மாத்தளை ஜெ.குகனேஸ்வரி), தொழில்நுட்பம் (க.பாருத்தியா), கல்வியின் சிறப்பு (ச.சங்கவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி), நட்பு (கி.ஜென்சிகா), நுளம்பும் சிங்கமும் (கிளிநொச்சி ம.மதுரியா), கிளைக்குத் திரும்பிய மலர் (சிந்தியா, தஞ்சாவூர்), கல்வியே செல்வம் (சி.தனுஷிகா), மூத்த நாடகக் கலைஞரும் பாடகியுமான திருமதி சிவபாதம் பார்வதி அவர்களுடனான நேர்காணல் (செல்வி சி.சிவலோஜி), லிற்றில் நூலகத் திறப்பு விழா (தேசம் நெற்), நூல் விமர்சனம்-மூன்று துப்பாக்கி வீரர்கள் (சாகித்தியன்), ஆசானின் பிரிவு (ர.றேனுசன்), குயவனின் படைப்பு (கி.இவாஞ்சலின்), அகாலத்துக்காய் அஞ்சுதல் (அனுதகி, கிளிநொச்சி) ஆகிய இளையோரின் படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்விதழின் ஆசிரியர் குழுவில் எஸ். எஸ்.டர்சன், எஸ்.சுகிர்தன், ப.நவீசன், தி.கன்சிகா, ஜெ.கலைநிலா ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.*

## 16017

**வட மாகாண சஞ்சிகைகள் ஓர் அறிமுகம்.** க.பரணீதரன். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, மார்கழி 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

iv, 64 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x14 சமீ., ISBN: 978-624-5881-35-2.

இலங்கையின் வட மாகாணத்தில் வெளிவந்த சிறுசஞ்சிகைகள் பற்றிய விபரத் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இவை ஆன்மீக இதழ்கள், கல்வி இதழ்கள், மருத்துவ இதழ்கள், அரங்க இதழ்கள், சிறுவர் இதழ்கள், உளவியல் இதழ்கள், பெண்ணிய இதழ்கள், பல்சுவை இதழ்கள், அறிவியல் இதழ்கள், விளையாட்டு இதழ்கள், தொழில்சார் இதழ்கள், ஓவிய இதழ்கள், விழிப்புணர்வு இதழ்கள், சமூக அரசியல் இதழ்கள், வணிக இதழ்கள், ஆய்வு இதழ்கள், சினிமா இதழ்கள், இயக்க இதழ்கள், கலை இலக்கிய இதழ்கள், பல்கலைக்கழக இதழ்கள், பிரதேச இதழ்கள், ஏனைய இதழ்கள் என 22 வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. ஏனைய இதழ்கள் என்ற பிரிவில் காலாண்டுச் சஞ்சிகை உருவில் மூன்று இதழ்கள் மட்டும் வெளிவந்த "நூல்தேட்டம்" பற்றிய குறிப்பு பதியப்பட்டுள்ளது. 2002முதல் நூல்தேட்டம் தொகுதியொன்றில் 1000 நூல்கள் பற்றிய குறிப்புடன் பல்தொகுதி நூலாக வெளியிடத் தலைப்பட்டது. இன்று உங்கள் கைகளில் உள்ளது அதன் 17ஆவது தொகுதியாகும்.

## 16018

**வழித்தடம்-1.** சிராஜ் மஷ்ஹூர் (பிரதம ஆசிரியர்), கருணாகரன், மல்லியப்பூ சந்தி திலகர், அம்ரிதா ஏயெம் (இணை ஆசிரியர்கள்). அக்கரைப்பற்று -2: வழித்தடம்-புத்தாக்க சிந்தனைக் கூடம், 117, நகர பள்ளிவாசல் வீதி, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (அக்கரைப்பற்று: நியூ செலெக்ஷன் ஒப்செட் பிரின்டர்ஸ், C.E.B. மின்சார நிலைய வீதி).

112 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ.

புத்தாக்க சிந்தனைக் கூடம் என்ற அமைப்பினர் வெளியிட்டுள்ள இவ்விதழில் "வாசிய" யாருக்கு (மல்லியப்பூ சந்தி திலகர் - ஆசிரியர் தலையங்கம்), வழித்தடம் எங்கள் வழிப்படம் (சிராஜ் மஷ்ஹூர்), ஒன்லைன் கல்விப் பிரச்சினைகள் (அ.மார்க்ஸ்), எமிலி டிகின்ஸனின் கவிதை, நேர்காணல்- எம்.ஏ.நுஃமான், மீள்வாசிப்பு - நந்தினி சேவியர், களிமண்ணின் கிளர்ச்சி (அஹ்மத் மதர்), மூளைக்குமுண்டோ சிலிக்கா சிப் (ரும்மான்), ஜனநியமு: கமல் பெரேரா, அஞ்சலி: சுனில் பெரேரா, காலநிலை மாற்றம் (அஸ்லம் சஜா), வாழ்வியல் கோலங்கள்: ஒளிப்படங்கள் (அப்துல் ஹமீத்), ஆளுமை: கே.எஸ்.சிவகுமாரன் (மு.நித்தியானந்தன்), புலனாகாவெளி: அனார் கவிதைகள், சிறுகதை: அம்மா (எஸ்.பாயிஸா அலி), நிறமிழக்கும் வானம் (மின்ஹா), வாசிப்பதும் ஒருவகை தியானம் தான் (றியாஸ் குரானா), நாஸ்தென்காவின் கண்களில் பனி பொழிகிறது (டணிஸ்கரன்), இலங்கையில் ஜனநாயகம் (மல்லியப்புசந்தி திலகர்), சிங்களத்தில்

முஸ்லிம் சிறுகதைகள் (திக்குவல்லை கமால்), பண்பாட்டு வெளியில் மிதவை சந்தை (முஹம்மத் ரியாஸ்), பறவையின் உடையா நிழல் (ஜமீல்), எஸ்.நளீமின் ஓவியங்கள், விதைப் பந்துகள் பசுமைப் பந்துகளாக மாறிய கதை (அம்ரிதா ஏயெம்), பன்மைத்துவத்தை நோக்கிய வழித்தடத்தில் (கருணாகரன்), இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே (சி.வி.வேலுப்பிள்ளை) ஆகிய ஆக்கங்கள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.

## 051 பொதுப் பருவ இதழ் சிறப்பிதழ்கள்

### 16019

**அகிலம்: வருடாந்தச் சிறப்பு மலர் (தெளிவத்தை ஜோசப் சிறப்பிதழ்): 2015**. கே.வி. இராமசாமி (ஆசிரியர்). கண்டி: அகிலம் பப்ளிக்கேஷன்ஸ், 308, டி.எஸ்.சேன நாயக்க வீதி, 1ஆவது பதிப்பு, 2015. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

xvi, 196 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 24.5x17.5 சமீ.

மலையகத்தில், கண்டியிலிருந்து வெளிவரும் அகிலம்: அறிவியல் சஞ்சிகையின் வருடாந்தச் சிறப்பு மலராக 24.10.2015 அன்று மலையகத் தலைநகர் கண்டியில் "அகிலம்" வெளியிடப்பட்டுள்ளது. அறிவியல், கலை, இலக்கியம் சார்ந்த 51 கட்டுரைகளை இவ்விதழ் உள்ளடக்கியுள்ளது. இலங்கைத் தமிழ் அறிஞர்கள் பலரின் துறைசார் ஆக்கங்களாக இவை அமைந்துள்ளன. பெரும்பாலும் கலை, நுண்கலை தொடர்பான படைப்புகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. "தெளிவத்தை ஜோசப்" பற்றி மயில்வாகனம் திலகராஜ், மு.சிவலிங்கம், சபா ஜெயராசா, பதுளை சேனாதிராஜா, இரா.சடகோபன், மா.செ.மூக்கையா ஆகியோர் தத்தம் மனப் பதிவுகளை வழங்கியுள்ளனர். மேலும் இவ்விதழில் பெண்ணியம் பேசுவோம் (மலர் சின்னையா), மறக்க முடியாத மனிதர்கள்: இர.சிவலிங்கம், திருச்செந்தூரன் (தெளிவத்தை ஜோசப்), இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றைக் கட்டமைப்பதில் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பங்களிப்பு (துரை. மனோகரன்), தேடல்களை அடியொற்றிய அனுபூதி உளவியல் (சபா.ஜெயராசா), மலையகப் பல்கலைக்கழகம் (சோ.சந்திரசேகரன்), மலையகப் பல்கலைக்கழகம் தேவையும் நியாயப்பாடுகளும் (சிவம் பிரபாகரன்), மலையகத் தமிழ் மக்களுக்கென தனியானதொரு பல்கலைக்கழகமும் அம்மக்களின் சமூக மேம்பாடும் (மு.சின்னத்தம்பி), தமிழ் இலக்கியத் திறனாய்வில் ஒரு பார்வை (க.நாகேஸ்வரன்), ஈழத்து முன்னோடிக் கவிஞைகள் (செ.யோகராஜா), மார்ட்டின் விக்கிரமசிங்க (கே.எஸ்.சிவகுமாரன்), எல்லாம் குருமயம் (பொன் பூபாலன்), கலையாத கல்வி (தெ.ஈஸ்வரன்), இலக்கை நோக்கிய படிப்பும் பரீட்சைகளும் (உடுவை எஸ். தில்லை நடராஜா), மலையகத் தமிழரும் உள்ளூராட்சி தேர்தல் முறை மாற்றங்களும் (பி.பி.தேவராஜ்), இந்திய வம்சாவளித் தமிழர் (யசோதரா கதிர்காமத்தம்பி), 21ஆம் நூற்றாண்டு கல்வி கற்றலும் கற்பித்தலும் (தை.தனராஜ்), அரச பொது நிர்வாகமும் பெருந்தோட்ட மக்களும் (மு.சிவலிங்கம்), சாரல்நாடன்-நம் காலத்து மலையக சுடர்மணி (சு.முரளிதரன்), தமிழ் இலக்கிய உலகில் பேரா.

க. கணபதிப்பிள்ளை (எஸ். தேவகுமாரி), உடப்பும் சித்திரைச் செவ்வாய் ஆற்றுகைச் சடங்கும் (யாழ். தர்மினி பத்மநாதன்), பெருந்தோட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகள் (ஏ.எஸ்.சந்திரபோஸ்), திருடர்களின் தேசம் (இரா. சடகோபன்), மலையக சமூகத்தின் தற்போதைய எதிர்பார்க்கைகள் (எம்.வாமதேவன்), திருக்குறள்: சுடச்சுட ஒளிரும் தங்கம் (மொழிவரதன்), முற்போக்கு இலக்கிய முன்னோடி கே.கணேஷ் (லெனின் மதிவானம்), புதிதாய் பயில்வோம் ஆத்திசூடி (பிரேம்ராஜ்), பரீட்சைகளை எதிர்கொள்ளலில் அறிகைமுறைமைகள் (கோகிலா மகேந்திரன்), இரத்ததானம் உன்னத யாகம் (கே.ஜெயகுணசீலன்), சர்க்கரை வியாதி (க.பரநிருபசிங்கம்), ஈழத்து நவீன தமிழ்க் கவிதை வளர்ச்சியில் மஹாகவி (இரா.லோஹிதா), தொடர்ந்து வாழும் மூட நம்பிக்கைகள் (எஸ்.பத்மநாதன்), மனித வள அபிவிருத்தியும் மானிட அபிவிருத்தி குறிகாட்டியும் (மா.செ.மூக்கையா), மலையக தொழிற்சங்க அரசியல் முன்னோடிகள் (மங்களேஸ்வரி வேலுசாமி), பெருந்தோட்டத் துறைசார் இந்திய வம்சாவளியினரின் கல்வி வரலாற்றுடன் தொடர்பான சமூக அரசியல் சட்டப் பின்னணி (ப.ஆறுமுகம்), இலக்கியக் காவலர் துரை விஸ்வநாதன் (துரைவி), மலையகத் தமிழ் இலக்கிய ஆய்வு முயற்சிகளில் பேராசிரியர் க.அருணாசலம் (சர்மிளாதேவி துரைசிங்கம்), நினைவில் நிற்கும் நிகழாட்டங்கள் (பசறையூர் க.வேலாயுதம்), விடியலே வா (கந்தையா கணேஷமூர்த்தி), கல்விச் சமூகவியலும் மாணவர்களைச் சமூக இயல்பினர்க ளாக்குதலில் அதன் முக்கியத்துவம் (சி.மனோகரன்), மூங்கில் காடு (ந.பார்த்திபன்), தமிழா நீ தலைநிமிர்ந்து வாழ் (கே.குலசேகரன்), பிள்ளைகள் சமூகத்தின் பிரதிபலிப்புகள் (துரைசாமி நடராஜா), மலையக மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த தமிழ்த் திரைப்படங்கள் (பாலா சங்குப்பிள்ளை) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

**16020**

**அளவை அலம்-3: தேசிய வாசிப்பு மாத சிறப்பு மலர் 2022**. தனேஸ்வரி போல் சுரேஸ் (மலர்க் குழு). அளவெட்டி: பொது நூலகம், வலி வடக்கு பிரதேச சபை, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2022. (யாழ்ப்பாணம்: துர்க்கா மல்ட்டி சென்டர், மல்லாகம் சந்தி, மல்லாகம்).

vi, 52 பக்கம், ஒளிப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x17.5 சமீ., ISSN: 2659-2134.

2022 தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு அளவெட்டி பொது நூலகத்தினரால் வெளியிடப்பட்ட சிறப்பு மலர். இம்மலர்க் குழுவில் பொது நூலக நூலகர் திருமதி தனேஸ்வரி போல் சுரேஸ், வாசகர் வட்டம், ஆலோசனை சபை, மற்றும் நூலக உத்தியோகத்தர்கள் இடம்பெற்றுள்ளனர். முன்னுரை, ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள் ஆகிய சிறப்பு மலர்களுக்குரிய வழமையான அம்சங்களுடன் அளவையின் ஆலயங்கள்: அழகொல்லை முத்து விநாயகர் கோவில் தல வரலாறு (ச.சஜீலன்), அளவையின் ஆலயங்கள்: அளவெட்டி புனித சூசையப்பர் ஆலய வரலாறு (பி.எவ்.நவரட்ணம்), அளவெட்டி பொது நூலகத்தின் தாபகர் (வல்லிபுரம் பொன்னம்பலம்), அறிவார்ந்த சமூகத்திற்கான வாசிப்பு (ம.தசிதரன்), அந்நியச்

செலாவணி ஈட்டித் தரும் மூலிகைகள் (மாதங்கி கௌரீசன்), போதையினை ஒழித்து எமது எதிர்கால சந்ததியினைக் காப்போம் (சரளா மதியழகன்), அளவையில் வாழ்ந்த சிரஞ்சீவி அலுக்கையில் ஒரு சஞ்சீவி (கே.எஸ்.சிவஞானராஜா), நேர்காணல்- பாரம்பரிய வேளாண் வித்தகர் முத்தையா சேனாதிராசா (நேர்கண்டவர்-வ.நல்லதம்பி), இலக்கியா-சிறுகதை (மு.பகீரதன்), வாசிப்பு மாதம் (மா.தணிகாசலபதி), மல்லாகம்-அளவெட்டியின் படைப்புலகம்: ஒரு தேர்ந்த ஆய்வடங்கல் (க.சௌந்தரராஜ சர்மா) ஆகிய ஆக்கங்களும், மாணவர்களினதும், வாசகர்களினதும் பல்வேறு படைப்பாக்கங்களும் இம்மலரில் இடம் பெற்றுள்ளன.

## 16021

**தமிழர் தகவல் 2022. 30ஆவது ஆண்டு மலர்: இளமகிழ் சுவடு.** எஸ்.திருச்செல்வம் *(பிரதம ஆசிரியர்),* Canada: Tamil's Information, Ahilan Associates, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4, *1ஆவது பதிப்பு, ஒகஸ்ட் 2022.* (Canada: Ahilan Associates, Printers and Publishers, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4).

*216 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21.5 சமீ.,* ISSN:*1206-0585.*

*பெப்ரவரி 1991 முதல் கனடாவிலிருந்து வெளிவரும் தமிழர் தகவல் மாத சஞ்சிகையின் 30ஆவது ஆண்டு நிறைவு மலர். அமெரிக்க, கனடியத் தமிழ் மக்களினதும், ஐரோப்பியத் தமிழர்களினதும் 100க்கும் மேற்பட்ட அறிவியல் ஆக்கங்களைத் தாங்கி இது வெளிவந்துள்ளது. தமிழர் தகவல் ஆண்டுதோறும் வழங்கும் விருதுகளைப் பெறுவோர் பற்றிய விபரங்களும் இம்மலரில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளன. 30 ஜுலை 2022 அன்று கனடாவின் ரொரன்ரோ நகரசபையின் அங்கத்தவர் சபா மண்டபத்தில் இடம்பெற்ற 30ஆவதுஆண்டு விழாவின்போது இம்மலர் வெளியிடப்பட்டது.*

## 16022

**தெல்லித் தென்றல்-2: தேசிய வாசிப்பு மாதம் சிறப்பு மலர்.** இ.விஜயலட்சுமி *(தொகுப்பாசிரியர்). தெல்லிப்பழை: பொது நூலகம், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2019. (யாழ்ப்பாணம்:* Zonal Printers, *கலட்டிச் சந்தி).*

x, 108+10+14 *பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25*x*18 சமீ.*

*தெல்லிப்பழை பொது நூலகத்தின் வெளியீடாக, தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி வெளிவந்துள்ள இரண்டாவது சிறப்பு மலர் (2019) இதுவாகும். ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றுடன் பிரதேச எழுத்தாளர்களான கோகிலா மகேந்திரன், சைவப்புலவர் சு.செல்லத்துரை ஆகியோரின் வாசிப்பு தொடர்பான ஆக்கங்கள் இரண்டும், நூலகம் சார்ந்த ஆக்கங்கள் ஒன்பதும், சமயக் கட்டுரை ஒன்றும் தேசிய வாசிப்பு மாதப் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவர்களின் ஆக்கங்கள் இரண்டும், கலைஞர்களும் கலைகளும் என்ற தலைப்பில்*

தெல்லிப்பழைக் கிராமக் கலைஞர்களும் கலைகளும் பற்றிய கட்டுரையும், அறிஞர்களும் ஆளுமைகளும் என்ற பிரிவில் பார்வதிநாதசிவம், பேராசிரியர் சு.வித்தியானந்தன் ஆகியோர் பற்றிய மனப்பதிவுகளும், தெல்லிப்பழை பிரதேச சைவாலயங்கள் பற்றிய தொகுப்பும், மாவையழகனின் தேரழகு, புத்தகத்தின் பயனறிந்து நித்தம் பேணுவோம் ஆகிய இரு கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

## 16023

**புதுவை நாதம் (இதழ் 1).** காஞ்சனமாலா உதயகுமாரன் (இதழாசிரியர்). புத்தூர்: நூலக அபிவிருத்திக் குழு, பொது நூலகம், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2019. (யாழ்ப்பாணம்: சுடர்நிலவு கிராப்பிக்ஸ், இணுவில் கிழக்கு, இணுவில்).

xx, 140 பக்கம், புகைப்படத் தகடுகள், விளக்கப்படங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ., ISSN: 2714-1578.

வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தி மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்த முன்னெடுக்கப்படுகின்ற வாசிப்பு மாதச் செயற்பாடுகளில் இந்த சஞ்சிகை வெளியீடானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாணவர்களின் ஆக்கங்களுடன் அதிகளவான மக்களை நிர்வகிக்கும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை (மா.ஞானலிங்கம்), மீட்சி-சிறுகதை (திருமதி ஜெ.நவலோகநாதன்), குழந்தைகளூடாக வாசிப்பை வளர்ப்போம் (காஞ்சனமாலா உதயகுமாரன்), அதிகாரம் 40 (பி.குபீந்தினி), கனவு மெய்ப்பட வேண்டும்- சிறுகதை (சிவகுருநாதன் ஸ்ரீரங்கன்), பெண்ணியம் கூறும் யோகா (சி.செந்தில்குகன்), மத்தியஸ்த சபைகள் (க.நா.சண்முகரத்தினம்), ஒரு பதவியிலுள்ளவர் தீர்மானமெடுக்கும் திறமையும் பாங்கும் (க.தியாகராஜா), காலனித்துவத்திலிருந்து இன்றுவரையான நிர்வாகக் கட்டமைப்பு மாற்றம்: வலிகாமம் கிழக்குப் பகுதி (இரத்தினசிங்கம் கோகுலன்), கற்றலும் கல்வியும் காலத்தின் இரு கண்களே (புதுவை ஆனந்தன்), இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் சமயங்களின் பங்களிப்பு (திருமதி சிந்துபிரியா நிஷாந்தன்), நிலாவரை வற்றா நீர்நிலையும் நவசைலேஸ்வரமும் (ஞான ஆதவன்), பொது நூலகம் குறைபாடுகளும் தீர்வுகளும் (திருமதி இராஜேஸ்வரி கருணானந்தராஜா), வீட்டுக்கொரு நூலகம் விருத்திபெறச் சிலவிதந்துரைகள் (ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம்), நல்லூர் இராசதானியின் நினைவுச் சின்னமாக கோப்பாயில் அமைந்திருந்த சங்கிலியன் கோட்டை (செல்வி சசிதா குமாரதேவன்), வலி கிழக்கின் சூத்திரக் கிணறுகள் (கு.எழிலன்) ஆகிய ஆக்கங்களும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.

## 16024

**புதுவை நாதம் (இதழ் 2).** காஞ்சனமாலா உதயகுமாரன் (இதழாசிரியர்). புத்தூர்: நூலக அபிவிருத்திக் குழு, பொது நூலகம், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2020. (யாழ்ப்பாணம்: சுடர்நிலவு கிராப்பிக்ஸ், இணுவில் கிழக்கு, இணுவில்).

xx, 132 பக்கம், புகைப்படத் தகடுகள், விளக்கப்படங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ., ISSN: 2714-1578.

வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தி மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்த முன்னெடுக்கப்படுகின்ற வாசிப்பு மாதச் செயற்பாடுகளில் இந்த சஞ்சிகை வெளியீடானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாணவர்களின் ஆக்கங்களுடன் வலி கிழக்கு பிரதேச செயலகமும் வழங்கப்படுகின்ற சேவைகளும் (திருமதி காஞ்சனமாலா உதயகுமாரன், நூலகர்), சித்த சுதேச மருத்துவத்தில் தனித்துவம் கண்ட புத்தூர் செல்லத்துரை (திருமதி காஞ்சனமாலா உதயகுமாரன், நூலகர்), பேண்தகு விவசாயமும் எதிர்கொள்ளும் சவால்களும் (செல்வி சரணிகா சிவசுப்பிரமணியம்), தமிழர் பண்பாடு (புதுவை ஆனந்தன்), தற்கொலை செய்வதற்கான காரணங்களும் அவற்றை குறைப்பதற்கான வழிவகைகளும் (நாகநாதன் சந்திரகுமாரன்), ஆதிசங்கரர் போற்றிய சம்பு நாதேஸ்வரர் (வே. அம்பிகைபாகன்), வரலாற்றுச் சிறப்புமிக்க நெடுந்தீவில் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர்களது சுவடுகள் (பரமு புஷ்பரட்ணம்), யாழ்ப்பாணத்தில் பூர்வீக மக்கள் பயன்படுத்திய சுடுமண் கிணறுகள் (செல்வி ரேணுகா), மந்திரிமனை-யாழ்ப்பாண அரசின் ஒரு நினைவுச் சின்னம் (சசிதா குமாரதேவன்), பின்லாந்தின் கல்விமுறை (இ.கோகுலன்), தாயுள்ளம்-சிறுகதை (சி.சிறிரங்கன்), வாசிப்போம் வாழ்வோம் (கிருஷ்ணசுவாமி அனிதா) ஆகிய ஆக்கங்களும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.

## 16025

**வாஞ்சை 2018: தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வெளியிடப்படும் சஞ்சிகை.** ரமணி ஜெயபாலன் (தொகுப்பாசிரியர்). களுவாஞ்சிக்குடி: வள்ளுவர் வாசகர் வட்டம், பொது நூலகம், மண்முனை தெற்கு எருவில் பற்று (ம.தெ.எ.ப.) பிரதேச சபை, 1ஆவது பதிப்பு, 2018. (காத்தான்குடி-2: கபீர் பப்ளிக்கேஷனஸ், இல. 26/2, எஸ்.பி. ஒழுங்கை).

xii, 13-148 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x16 சமீ.

ஒக்டோபர் 2018இல் இலங்கையில் இடம்பெறும் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாக களுவாஞ்சிக்குடி பொது நூலகம் இச்சஞ்சிகையின் முதலாவது பிரசுரத்தினை வெளியிட்டுள்ளது. களுவாஞ்சிக்குடி பொது நூலக வரலாறு, தமிழ்த்தாய் வாழ்த்தும் தமிழ்மொழி வாழ்த்தும், களுவாஞ்சிக்குடி பொது நூலகமும் நூலகப் பொறுப்பாளரும் ஓர் அனுபவ பதிவு, களுவாஞ்சிக்குடி பொது நூலக தன்னியக்கமாக்கலும் அதன் இலத்திரனியல் சேவைகளும், காணி யுடன் தொடர்புடைய சில பிரச்சினைகள், நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும், மக்களின் கழிவு முகாமைத்துவ சீர்கேட்டின் கசப்பான உண்மைகள், வாசிப்பு, மனிதன் மனிதனாக வாழவேண்டும், ஆசிரியர் வாண்மையை வளமாக்குவதில் முக்கிய பங்குவகிப்பது நூலகம், நூலகம்மா (குறுங்கதை), வாசகன் திலீபன், நிம்மதி, நதி என்னும் முதியவர், அன்று எரிந்து சிதைந்து அழிந்து காட்சி தந்த நூலகம் இன்று புகழ்பெற்று நற்சேவை ஆற்றி வருகிறது, களுவாஞ்சிக்குடியில்

கமழும் மண்வாசனை, தாய் மண்ணே என் வணக்கம், அம்மா, இனங்களுக்கிடையில் புரிந்துணர்வு, நாட்டார் பாடல்களின் பேச்சு வழக்கு மண்வளச் சொற்களின் இனிமை, சத்தியவான்-சாவித்திரி கூத்து, அவசர சேவை தொலைபேசி இலக்கங்கள், திருக்குறள், விளையாட்டு, தமிழர் எவ்வளவு அறிவாளிகள் தெரியுமா?, தூயி தசாம்சப் பகுப்புத் திட்டம், பல நோய் தீர்க்கும் ஒரு மருந்து ஆகிய ஆக்கங்கள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.

### 16026

**வெள்ளி மலை இதழ் 16 (2021).** சுதர்சன் ஜெயலக்சுமி (தொகுப்பாசிரியர்). சுன்னாகம்: சுன்னாகம் பொது நூலகம், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, 1ஆவது பதிப்பு, மார்ச் 2022. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், 360, பிரதான வீதி).

iv, 40 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

சுன்னாகம் பொது நூலகத்தின் சஞ்சிகையாக சித்திரை-ஆடி 2007இல் தனது முதலாவது இதழை ஆண்டுக்கு மூன்று இதழ்கள் என்ற ரீதியில் வெளிக்கொணரும் நோக்கில் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுவந்த “வெள்ளிமலை” சஞ்சிகை இடையில் வருகை தடைப்பட்டிருந்து மீண்டும் 2017 முதல் ஆண்டு சஞ்சிகையாக வெளிவரத் தொடங்கியது. 2021ஆம் ஆண்டிற்குரிய இவ்விதழில் தொலைதூர வாசிப்பு (ஆ.கர்ணிகா), மரபுரிமைகளைப் பாதுகாப்போம் (இ.மயூரநாதன்), வலைபந்தாட்ட வீராங்கனை செல்வி தர்ஜினி சிவலிங்கம் (திருமதி க.உமாலினி), கொரோனாவே உனக்கொரு தாலாட்டு-கவிதை (உடுவிலூர் கலா), சுன்னாகம் சிவன் சிறுவர் கழகம் (திருமதி கவிதாமலர் சுதேஸ்வரன்), நாவலரதும் சி.வை.தா அவர்களதும் கற்றல் கற்பித்தல் திறன்களின் வரலாற்று வழி (கௌ.சித்தாந்தன்), புத்தசாசனம் மத அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் உடுவில் பிரதேச கலாசார மத்திய நிலையத்தின் செயற்பாடுகள் (திருமதி பத்மதேவமலர் மரியதாஸ்), புற்றுநோய் (Dr. Mrs C.Sharly Vijinad), வாசிப்பை நேசிப்போம் (அ.தேனுஜன்), எது துணிவு (சுன்னாகவூர் பா.திவாகரன்), ஆரோக்கியம் தரும் இலைக்கஞ்சி (வைத்திய கலாநிதி ரட்ணாலகி ஜெகநாதன்), நீ எதை நினைக்கின்றாயோ அதுவாகவே ஆகிறாய் (க.பிரசாத்) ஆகிய 12 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

### 16027

**ஜீவநதி ஈழத்து இலக்கியச் சிற்றிதழ்கள் சிறப்பிதழ்.** க.பரணீதரன் (தொகுப்பாசிரியர்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, ஆடி 2022. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டேர்ஸ், 10, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தியடி, நல்லூர்).

436 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 1500., அளவு: 29x21 சமீ.

ஜீவநதி கலை இலக்கிய மாத சஞ்சிகை வெளியீட்டாளர்கள் தமது 175ஆவது இதழை (ஆடி 2022) ஈழத்து இலக்கியச் சிற்றிதழ்களின் சிறப்பிதழாக வெளியிட்டுள்ளனர். ஏற்கனவே கவிதைச் சிறப்பிதழ், பெண் படைப்பாளிகள் சிறப்பிதழ், நாவல் சிறப்பிதழ் எனப் பல்வேறு சிறப்பிதழ்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தொகுப்பில் 130 ஈழத்துச் சிற்றிதழ்கள் பற்றிய தகவல், அறிமுகம், வரலாறு என்பன மதிப்பீடுகளாகப் பலரும் எழுதியுள்ளனர். ஈழத்துச் சஞ்சிகை வரலாறு பற்றிய சிறப்புக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. ஈழத்து இலக்கிய சிற்றிதழ்கள் அறிமுகக் குறிப்பு (சி.ரமேஷ்), புலம்பெயர்ந்த ஈழத் தமிழரின் இதழியற் செயற்பாடுகள் (சு.குணேஸ்வரன்), ஈழத்துப் பெண்நிலைவாத சஞ்சிகைகள் (தி.செல்வமனோகரன்), புத்தளப் பிராந்திய சஞ்சிகைகள் (உடப்பூர் வீரசொக்கன்), மூதூர் பிரதேசத்தில் சிற்றிதழ்கள் ஒரு பார்வை (ஏ.எஸ். உபைத்துல்லா), அனுராதபுர பிரதேசச் சிற்றிதழ்கள் ஒரு பார்வை (எல்.வஸீம் அக்ரம்), எழுபதுகளில் சிறுசஞ்சிகைகள் (திக்குவல்லை கமால்), சாகாவரம் பெற்ற ஈழத்துத் தமிழ்ச் சஞ்சிகைகளின் பெருந் தொகுப்புகள்: ஒரு விரிவான ஆய்வுக்கான சில குறிப்புகள் (என்.செல்வராஜா), தமிழ் தேசிய விடுதலைப் பயணிப்பில் போர்க்கால இதழ்கள் (க.ஜெபபி) ஆகிய சிறப்புக் கட்டுரைகளுடன் பாரதி, ஞாயிறு, தேன்மொழி, வசந்தம், கலைச்செல்வி, இனிமை, மாதர் மதிமாலிகை, கலாநிதி, மல்லிகை, அக்னி, விவேகி, பாரதி (மண்டூர்), களனி, குமரன், சுடர், அலை, மணிக்கொடி, கலைப்பூங்கா, மலர், கீற்று, நோக்கு, பூரணி, மக்கள் இலக்கியம், மாவலி, எழில், சேமமடு நூலகம், சமர், புதுமை இலக்கியம், உள்ளம், புதுமை, தூது, கொழுந்து, நந்தலாலா, முனைப்பு, பூவரசு, சக்தி, தடாகம், வசந்தம், இதயம், களம், கவிஞன், மேகம், மூன்றாவது மனிதன், தாகம், கவித்தேசம், இருப்பு, பெருவெளி, இளங்கதிர், தீர்த்தக்கரை, கலைமதி, இளம்பிறை, படி, சரிநிகர், தேன்கூடு, இலக்கு, ப்ரவாகம், மறுமலர்ச்சி, தெரிதல், குருதிமலர், புள்ளி, கலைமகள், பூங்குன்றம், சூரியன், கவிதை, அஞ்சலி, திரள், மலைமுரசு, புதுசு, கிறிஸ்தோபகாரி, நாற்று, மாற்றம், இலக்கியச் சிந்தனை, அரும்பு, நூலகவியல், கலை ஓசை, அம்பலம், ஏகலைவன், பூரணி, காற்புள்ளி, நயனம், புலரி, புதிய தரிசனம், உதயம், தளவாசல், தமிழருவி, தூண்டி, வெளிச்சம், யாத்ரா, தவிர, கீறல், தீ, அக்கினிக் குஞ்சு, நடுகை, தாயகம், ஞானம், மாருதம், நாவேந்தன், வசந்தம், மறுகா, காலவெளி, படிகள், வியூகம், தென்றல், மறுபாதி, காகித மலர், தாரகை, வடம், பயில்நிலம், திசை புதிது, ஆகவே, செங்கதிர், சிரித்திரன், கலைமுகம், ஜீவநதி, மகுடம், அமுதநதி, பூங்காவனம், எங்கட புத்தகங்கள், எங்கள் முற்றம், நீங்களும் எழுதலாம், சுட்டும் விழி, கலைமதி, புதிய சொல், விளக்கு, சிறகுகள், சுவர், பகுத்தறிவு, நினைவு, வயல், சுந்தரன் ஆகிய 130 சிறு சஞ்சிகைகள் பற்றிய கட்டுரைகள் இச்சிறப்பிதழில் இடம்பெற்றுள்ளன.

## 069.5 அரும்பொருட் சேகரிப்பு

### 16028

**நினைவுக் காப்பகம்: எழுபது வருடகால சுதந்திரத்தை மீள்பார்வையிடல்.** மாலதி டி அல்விஸ், ஹசினி ஹப்புத்தந்திரி (தொகுப்பும் பதிப்பும்), ஷானி ஜயவர்த்தன (புகைப்படங்கள்). கொழும்பு: Historical Dialogue.lk, 1ஆவது பதிப்பு, 2019. (கொழும்பு: Leaf D (Private) Limited).

(7), 8-155 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x28.5 சமீ.

அறிமுகம், சேகரிப்புகள் தொடர்பான குறிப்பு, வெள்ளிக் காப்பு, கயிறு, பாரம் குறைந்த விமானம், பேப்பர் கோன், வெள்ளை கடிலக், வசம்பு, துட்டகைமுனு சிலை, ரிப்போர்ட் காட், சிலேட் பென்சில், "அப்பி சிங்கள" பலகை, பின் தாழிய, வொயில் சாரி, ஐஸ் சொக், பிரம்புக் கதிரை, சுண்ணாம்புக் குப்பி, திருமண நெக்லஸ், மாட்டிறைச்சி லம்பிறைஸ், குதிரைப் பந்தய தாள்கள், லைசென்ஸ் பிளேட், ஆஸ்மி, பாண், இறப்பர் விதைகள், ஜுஜுப்ஸ், மூக்குக் கண்ணாடி, நோட்டுப் புத்தகம், பிலிங் மரம், கைக்கடிகாரம், காளான், பொட்டு, பாண் சான்ட்விச், தண்ணி ஜொக், தேங்காய் சிரட்டை, பவன கேசட், துவக்கு, சாரி முந்தானை, வால்வ் ரேடியோ, T-56, மண் சட்டி, தொங், அம்மி, ஆங்கில அகராதியும் பைபிளும், சட்டி, சங்கிலியும் காப்புகளும், பியானோ, மீன் பணிஸ், சுழியோடிகளுக்கான கையேடு, பொலிஸ் பதிவு, சின்னஞ்சிறிய சப்பாத்து, மாசிச் சம்பல், கிளாஸ் கப், கிறிஸ்மஸ் மரம், சாப்பாட்டுத் தட்டு, ஊஞ்சல், சில்வர் புரோச், ஹான்ட் பாக், ஸ்கூல் பாக், ஸ்டெதஸ்கோப், வெள்ளைவான், நோ லிமிட் பாக், ட்ரக்டர், போர்ட் எஞ்சின், பறை மேளம், தேத்தண்ணி கப், அரச மரம், சாவிக்கொத்து, சப்பாத்து, தேயிலைச் சாயப் பைகள், தங்க மயில், தேர்தல் போஸ்டர், சூட்கேஸ் ஆகிய தலைப்புகளுடன் கூடிய புகைப்படங்களும், அப்பொருட்கள் தொடர்பான தனிப்பட்ட எழுத்தாளர்களின் நினைவு மீட்டல்களும் எம்மை சுதந்திரத்திற்குப் பின்னரான கடந்த எழுபதாண்டு வாழ்க்கைப் பயணத்தை மீள நினைந்துருக இந்நூல் வழிசெய்துள்ளது. உதாரணத்திற்கு, "அப்பி சிங்கள" பலகை - ஒரு வீட்டின் கேற்றில் கறுப்பு மையினால் எழுதப்பட்டு தொங்க விடப்பட்டுள்ள புகைப்படத்துடன் கூடிய விவரணத்தின்படி அது 1983 ஜுலை கலவர காலத்தில், ஒரு இஸ்லாமிய குடும்பத்தவரின் வீட்டு கேற்றில் தொங்க விடப்பட்டிருந்துள்ளது. இவ்விவரணம் எமக்கு ஜுலை 1983 இன அழிப்பின் சமூகவியலை மீள்நினைவூட்டுகின்றது.

## 070 ஊடகவியல், வெளியீட்டுத்துறை

### 16029

**கனலி 2020.** ஆசிரிய பீடம். யாழ்ப்பாணம்: ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு, 2020. (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

xiv, 136 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக கற்கைகள் துறையின் இரண்டாம் வருட மாணவர்களின் "அறிக்கையிடல் நுட்பங்களும் திறன்களும்", "செம்மையாக்கல் எண்ணக்கருக்களும் முறைமையும்" ஆகிய பாடப்பரப்புகளின் வெளிக்கொணர்தலாக மாணவர்களின் தேர்ந்த சுவைமிகு ஆக்கங்களின் தொகுப்பாக இவ்விதழ் வெளிவந்துள்ளது. ஏற்கெனவே இம்மாணவர்கள் பல்கலையன், பதிவு, அடையாளம், விசைச் சிறகுகள், மைத்தூறல், கனலி-2018, கனலி-2019 என்ற நூல்வரிசையில் இம்மலரும் தரமான ஆக்கங்களுடன் மணம் பரப்பியிருக்கின்றது. இம்மலரில், பண்டாரவன்னியன் ஓட்டுத் தொழிற்சாலை: மீண்டெழுமா வன்னியின் அடையாளம்? (நா.சாருமதி), இயற்கை முறையில் விஷக்கடி வைத்தியம்: மண்டூர் வைத்தியர் பூ செல்வராசாவுடன் ஓர் சந்திப்பு (பூ.ஜெயச்சந்திரன்), சிவபூமி அரும்பொருட் காட்சியகம் யாழ்ப்பாணத்தின் பொக்கிஷம் (பி.ஸ்ரீவித்யா), வடக்கில் அதிகரித்து வரும் சிறுவர் குற்றச் செயல்கள் (சு.கிசோபனா), வட்டுவாகல் கிராமியப் பாரம்பரியத்தின் விளைநிலம்: கரகமும் கும்மியும் ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடப்படும் விந்தை (இ.தனுஷியா), மலையகத்தில் ஓர் ஆணழகன்: மாதவன் ராஜகுமாரன் நேர்காணல் (மை.டிலான்), காலத்தால் மறக்கப்பட்டு வரும் மந்திரிமனை (ம.லர்ஷிக்கா), யாழ்ப்பாணத்தில் இஞ்சி உற்பத்தி (ந.ரிலக்ஷனா), நெல்லைச் சேமிக்கும் "குதிர்" அல்லது "கொம்பறை": அருகிப்போன வன்னியின் வளம் (ஜெ.கல்கி), இன்றைய இளைய சமூகம் "சே" மீது கொண்டிருக்கும் புரிதல் (க.அரவிந்தன்), யாழ்ப்பாணத்தில் பாய் பின்னலின் மீளெழுகை: ஓர்மத்திற்கு றொபின்சன் ஒரு முன்னுதாரணம் (நி.கஜேந்தினி), கழுதைகளுக்கான சிகிச்சை இல்லம்: மன்னாரில் உருவாகும் மனித நேயம் (செ.மேரி ரெபெக்கா), தமிழ்ப் பெண்களின் காதுகளை அலங்கரித்த பாம்படம்: தமிழர் பாரம்பரியத்தின் மற்றுமொரு அடையாளம் (ப.துசியந்தி), அர்ச்சுனன் தபசு: மலையகத்தின் அடையாளம் (யே.பிரதீபன்), யாழ்ப்பாணத்தில் மாட்டுவண்டில் சவாரி: சோபை இழந்துவிடாத மரபின் தொடர்ச்சி (பி.துலக்ஷா), எமது உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள்: சமூக செயற்பாட்டாளரும் துயககயெ வுசயளெபநனெநச நேவறழசம இன் தாபகருமான ஏஞ்சல் குயின்ரஸ் உடனான நேர்காணல் (ப.துசியந்தி), என்ன தவம் செய்தனை? புறந்தள்ளப்படும் யாழ். கிராமியப் பாடசாலைகள் (பி.ஸ்ரீவித்தியா), மீளவும் கிடைக்குமா சிறார்களுக்குச் சுதந்திரம்? (த.றெஜினா), யாழ். மண்ணில் இயற்கை விவசாயம்: நம்பிக்கை தரும் முயற்சிகள் ஆரம்பம் (தே.கவிநயா), இயற்கையின் பொக்கிஷமான கண்டல் தாவரங்கள்: மிருசுவில் கண்டல் காடுகள் நோக்கி ஒரு பயணம் (பா.நிர்மலா), யாழ்பபாணத்தில் அதிகரித்து வரும் விவாகரத்துக்கள் (அ.ரோகிணி), பளபள கத்தரிக்காயும் சூத்தைக் கத்தரிக்காயும்: ஓர் மார்க்கெட் சந்திப்பு (இ.அனுஷி), தற்கொலைகள் தீர்வல்ல: தவறான முடிவுக்குப் போவதும் தவறே (அ.றுக்சி வினோதா), சவால்கள் நிறைந்த இரவுநேரப் பேருந்துப் பயணம்: பெண்களுக்குப் பாதுகாப்பு உள்ளதா? (கி.செல்வி), சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.ராதேயன் அவர்களின் ஊடகத்துறைசார் அனுபவப் பகிர்வு (செ.நிரஞ்சனா, பா.நிர்மலா),

*கட்டுக்கரைக்குளம்: தொன்மைக்கு ஒரு சான்று (த.சஞ்சீப்), கல்வீட்டின் காவலாளியோ?: மனப்பகிர்வு (இ.அனுஷி), போதையால் மாறும் பாதை: தடுக்கத் திருவுளம் கொள்வோம் (உ.நிந்தனா), மலையகம் மாறி வருகிறதா?: தங்குநிலை அகலும் அதிசயம் (பா.கனகேஸ்வரி), தமிழர் வாழ்வில் விருந்தோம்பல் (பி.துலக்ஷா), சமூக வலைத்தளங்கள் வரமா? சாபமா? (எஸ்.எம்.நிப்லான்), பத்திரிகைகள் எப்போதும் நிலைத்திருக்கும் பதிவுகளைத் தருபவை (கி.தீபாணி), தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் ஒரு வரம் (வி.டதுர்சினி), சிதைவுகள் கதை சொல்லும் அல்லிராணிக் கோட்டை (அ.ஷர்மி), மறைந்து போகும் தமிழர் வாழ்வியல் மரபுகள் (ச.சதங்கனி), உச்சமாகும் மணல் அகழ்வு (ப.சுஜீவன்), முப்பது நாட்களில் ஒரு நாளா? (இ.அனுஷி) ஆகிய படைப்பாக்கங்கள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.*

## 16030

**சுதேசிய சமூக உருவாக்கம்: பத்திரிகைகளின் பங்களிப்பு குறித்த ஓர் உசாவல்.** *எம்.ஏ.எம்.ரமீஸ். யாழ்ப்பாணம்: சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுக் குழு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2022. (யாழ்ப்பாணம்: குரு பிரிண்டர்ஸ், திருநெல்வேலி).*

*42 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15.5 சமீ.*

*10.10.2022 அன்று கைலாசபதி கலையரங்கில் ஆற்றப்பட்ட சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை இதுவாகும். றமீஸ் அப்துல்லா (1969) அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்பு இளங்கலைமாணிப் பட்டத்தைப் பெற்று அப்பல்கலைக்கழகத்திலேயே முதுதத்துவமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். மேலும், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் பொதுசனத் தொடர்பாடல் துறையில் கலாநிதிப் பட்ட ஆய்வினை மேற்கொண்டார். இலங்கை, தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறையின் தலைவராக நீண்டகாலம் பணியாற்றிய இவர், தற்போது தமிழ்ப் பேராசிரியராகி, மொழித்துறை தவிசுப் பேராசிரியராகவும் கடமையாற்றி வருகிறார்.*

## 16031

**வீரகேசரியின் பதிப்புலகம்: எழுபதுகளில் ஈழத்தின் தமிழ்நூல் வெளியீட்டின் எழுச்சி.** *என்.செல்வராஜா. பிரித்தானியா: அயோத்தி நூலக சேவைகள்-பிரித்தானிய கிளை, இணை வெளியீடு, கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2023. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).*

viii, *126 பக்கம், விலை: ரூபா 1250., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-624-6164-37-9.*

*ஈழத்தின் பிரசுரகளத்தில் வீறுநடைபோட்ட வீரகேசரி வெளியீடுகள், வீரகேசரி பிரசுரங்கள், வீரகேசரியின் ஜனமித்திரன் பிரசுரங்கள் 1973-1977, வீரகேசரி பிரசுரங்களுக்கான வகைப்படுத்தப்பட்ட வழிகாட்டி, வீரகேசரி பிரசுரங்களுக்கான*

*தலைப்பு வழிகாட்டி, வீரகேசரி பிரசுரங்களுக்கான ஆசிரியர் வழிகாட்டி, வீரகேசரி பிரசுரங்கள் வெளிவந்த கால ஒழுங்கு, நூலுருவில் வெளிவராத வீரகேசரி தொடர் கதைகள் சில, நூலுருவில் வெளிவந்த பிற வீரகேசரி வெளியீடுகள் 1934-2014, இன்று வீரகேசரிக்கு அகவை 89 கலை இலக்கியத்தில் வீரகேசரி வகிபாகம் (லெ.முருகபூபதி), வாசகர் கருத்துகள், பின்னிணைப்பு-கேசரி மித்திரன் விநியோகஸ்தர்கள் ஆகிய 12 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

மேலும் பார்க்க:

புதினம்: இளமை இருபது 1996-2016. 16866

வானலைகளில் ஒரு வழிப்போக்கன். 16867

## 070.01 ஆசிரியத் தலையங்கங்கள்/பத்தி எழுத்துக்கள்

### 16032

**அங்குமிங்குமாய்**. *அ.யேசுராசா. யாழ்ப்பாணம்: அலை வெளியீடு, இல. 1, ஓடைக்கரை வீதி, குருநகர், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).*

x, *402 பக்கம், விலை: ரூபா 1000., அளவு: 21.5*x*14 சமீ.,* ISBN: *978-624-98514-0-5.*

*திரு.அ.யேசுராசாவின் 75ஆவது அகவை நிறைவினை நினைவுகூரும் வகையில் வெளியிடப்பட்ட நூல். கலை-இலக்கியம், மொழி, பயணக்குறிப்பு, ஊடகம் பற்றிய கட்டுரைகளும் பத்தி எழுத்துகளுமாக 75 ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. சென் ஜோன்ஸ் கல்லூரி நூலக தினம், புத்தகத் திருவிழாவும் தமிழகப் பயணமும், மொழிபெயர்ப்பும் கவிதையும், ஒரு கவிதை தான், நானும் எனது படைப்புலகமும், வெளிவராது போய்விட்ட ஒரு நூலுக்கான முன்னுரை, எழுத்துக் கலைஞன் எம். எல்.எம்.மன்சூரின் சிறுகதைகள், அங்குமிங்குமாய் இணையுங் கதைகள், போலி யதார்த்தக் கதைகள், ஒரே குடிசைகளைச் சேர்ந்தவர்கள், அ.செ.முருகானந்தனின் "மனித மாடு" சிறுகதை விமர்சனம், தமிழைப் பேணுவது யாரின் கடமை, எங்கள் மண்- எங்கள் எழுத்தாளர்- எங்கள் நூல்கள், ஈழத்து நூல்களை ஆதரித்தல், பயனுள்ள பொழுதுபோக்காயும் அறிவைத் திரட்டுவதாயும், பல்கலைக்கழகத்தில் இரு நாடகங்கள், மக்கள் களரி நாடக விழா யாழ்ப்பாணத்தில், ஹிரு நோநகே, இன்னொரு முகம், ஓவியர் மு.கனகசபை, மூன்று கண்காட்சிகள், பயணம், சு.ரா.: உலகத் தமிழர் உறவு, நன்றியுடன் நினைவுகூர்தல், நுஃமான்: சில மனப்பதிவுகள், எஸ்.வி.ஆர். என்னும் ஆளுமை, முரண்பட்டும் உடன்பட்டும் மு.பொ. தொடர்பாக, இழப்புணர்வும் நன்றியிடலும், சு.ரா.: சில நினைவுகள், நினைவுக் குறிப்புகள், என் நினைவில் கி.பி. பெர்மினஸ், கொழும்பில் முத்தமிழ் விழா, தேசிய ஒருமைப்பாடு மாநாடு ஒரு கண்ணோட்டம், பாரதியின் சிரிப்பு பயத்தைத் தருகிறது, ஒரே கேள்வி, தினக்குரலின் கேள்விக்குப் பதில், புஷ்பராஜனைப் பற்றி, சந்திரா தனபாலசிங்கம், "உதிரிகளும்" பின்னுரை, கவனத்தை ஈர்க்கும் முயற்சி, பிழை பிழையாய்-பிழை சரியாய், செவ்விதாக்கம் பற்றி, தட்டச்சுப் பிரதியில் படித்த நாராயணபுரம் நாவல், நினைவழியா வடுக்கள்,*

தமிழ் ஊடகங்கள் பற்றிச் சில அவதானங்கள், யாழ் இலக்கியச் சூழல் தொட்டு, கண்டுங் காணாமல், தளம், ஜொலிக்கும் விருதுகள்: குளறுபடிகளும் இருட்டடிப்புகளும், ஜனரஞ்சகம் சக வியாபார மனப்பாங்கு சமன் செங்கை ஆழியான், பயணியின் குறிப்புகள் (6 தொடர்), உள்வெளி (8 தொடர்), சடங்கு, சிங்களத்திலும் தமிழிலும் மொழியாக்க நூல்கள், புத்தகச் சுத்திகரிப்பு, புலவர் வேல்மாறன், புனைவும் உண்மையும், யதார்த்தமும் பொய்யான காலப் பதிவும், யாழ். இசை விழா, ஜேர்மன் கலாசார நிலையம் - சர்வதேச கத்தோலிக்க/சிங்கப்பூரில் சந்திப்பு, கி.ராஜநாராயணனுக்கு அஞ்சலி ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

## 16033

**அன்பின் திசைகள்: காலத்தின் ஒளியும் நிழலும் படிந்த பதிவுகள்.** கருணாகரன். கிளிநொச்சி: மகிழ் பதிப்பகம், 754, கனகராசா வீதி, திருநகர் வடக்கு, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2018. (தெகிவளை: T.G. அச்சகம்).

xi, 148 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 23x15 சமீ., ISBN: 978-955-43287-1-6.

இயக்கச்சியில் பிறந்த சிவராசா கருணாகரன் தற்போது கிளிநொச்சியில் வசித்து வருகிறார். இதுவரை இவரது ஏழு கவிதை நூல்கள் (ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல், ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள், பலியாடு, எதுவுமல்ல எதுவும், ஒரு பயணியின் போர்க்காலக் குறிப்புகள், நெருப்பின் உதிரம், இரத்தமாகிய இரவும் பகலுமுடைய நாள், படுவான்கரைக் குறிப்புகள்) வெளியாகியுள்ளன. வேட்டைத் தோப்பு என்ற சிறுகதைத் தொகுதியும், இப்படி ஒரு காலம் என்ற கட்டுரை நூலும், புகைப்படக்காரன் பொய்சொல்ல முடியாது என்ற நேர்காணல்களின் தொகுப்பொன்றும் பிரசுரமாகியிருக்கின்றன. இது இவருடைய பதினொராவது நூலாகும். பத்தி எழுத்துக்களைக் கொண்ட இந்நூலில் உள்ள ஆக்கங்கள் தமிழ் மிரர், புது விதி, எதிரொலி, ஆகிய பத்திரிகைகளிலும், தேனீ உள்ளிட்ட சில இணையத் தளங்களிலும் வெளியானவை. நம் காலத்தின் ஒளியும் நிழலும் படிந்த படித்துறையே இந்தப் பதிவுகள். இவை, நாம் பொதுவாக அறிந்தவற்றினுள்ளே அறியாதிருக்கும் பகுதிகளைக் காட்டி நமது புலன்களைத் திறக்க முற்படுகின்றன. நம்மை அறியாமலே நாம் வெவ்வேறு திசைகளில் யார் யாரோவினால் எல்லாம் வழி நடத்திச் செல்லப்படுகிறோம் என்பதைச் சொல்லி, நம்மை அதிர்ச்சியடைய வைக்கின்றன. பழங்களின் படையெடுப்பு, தமயந்தியின் கண்ணீர், பன்னிரண்டு தோழர்கள், பவுண், பேய்முனை, பாரதியின் பொங்கல், றோ, றஞ்சியின் கதை, நினைத்ததை முடிப்பவன், அன்னமிட்ட கைகள், யானை பார்த்த கதை, பெனிலோப் ஈவா வில்லிஸ், பந்து, கறுப்புக் காட்டில், பன்றிக் கருக்கல், நகர மறுக்கும் நகர், கணக்குகள் தீர்க்கப்படும், கேப்பாப்பிலவு விமான நிலையம், காணாமல் போனவர்கள் ஆகிய தலைப்புகளில் இப்பத்தி எழுத்துக்கள் அவ்வப்போது எழுதப்பட்டவை. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70064).

## 16034

**எனக்குள் நகரும் நதி: பத்திரிகைப் பத்திகள்.** அஷ்ரப் சிஹாப்தீன். வத்தளை: யாத்ரா வெளியீடு, 37, ஸ்ரீ சித்தார்த்த மாவத்தை, தன்கனத்தை வீதி, மாபோல, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2019. (கொழும்பு 13: தேவி பிரின்டர்ஸ், 41, Brass Founder Street).

x, 90 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 18x12.5 சமீ., ISBN: 978-955-8448-14-4.

"தீர்க்க வர்ணம்" நூலைத் தொடர்ந்து வெளிவரும் ஆசிரியரின் இரண்டாவது பத்தி எழுத்துத் தொகுப்பு. "மீள்பார்வை" பத்திரிகையில் இரு வாரங்களுக்கு ஒரு முறை வெளிவந்த 31 பத்திகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 25 பத்திகளும் பத்திரிகையில் வெளிவராத பத்தியொன்றுமாக 26 பத்தி எழுத்துக்களை இந்நூல் கொண்டுள்ளது. 2014 முதல் 2015 வரையில் இவை எழுதப்பட்டுள்ளன. முஸ்லிம் சமூகத்தை மையப்படுத்தியே பெரும்பாலான பத்திகள் எழுதப்பட்டுள்ளன. எழுத்துச் சேவை, மொழியாள்கை, மன்னரே முதல்வர், ஒரு நாடகமன்றோ நடக்குது, கோலத்தைச் சிதைக்கும் கோடுகள், வற்றாத கடலில் ஓயாத அலைகள், தெற்கே உதித்த சூரியன், கண்ணுக்குத் தெரியாத கபட வலை, முகத்திரண்டு புண்ணுடையார், நுணலும் தன் வாயால் கெடும், மூக்குகளால் சிந்திப்பவர்கள், குகைவாசிகள், நடத்தை காட்டும் நல்வழி, நீ சொன்னால் காவியம், அவனன்றி அணுவும் அசையாது, அடைந்துகொள்ளப்படாத ஆயுதம், எல்லைக்குள் எட்டப்படா இடங்கள், மூன்று காட்சிகள், வேர்கள் இறக்கும் விதம், அவளுக்கும் அழுகை என்று பெயர், நோன்புக் குழந்தைகள், அஸ்ஸலாமு அலைக்கும், ஆர்ப்பரிக்கும் ஆசைகள், ஹஜ்-காசாகி நிற்கும் கடமை, உன்புகழ் கூறாத சொல்லறியேன், அனல் ஹக் ஆகிய தலைப்புகளில் இப்பத்தி எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன.

## 16035

**நினைவுகளில் தொங்கும் நீர் ஊஞ்சல்.** ஓட்டமாவடி அறபாத். நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2017. (சென்னை 600077: மணி ஓப்செட் பிரின்டர்ஸ்).

160 பக்கம், விலை: இந்திய ரூபா 180., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-86820-28-0.

1996இல் "எரிநெருப்பிலிருந்து" என்ற கவிதைத் தொகுதி மூலம் அறிமுகமான கிழக்கிலங்கையின் ஓட்டமாவடியைப் பிறப்பிடமாகக் கொண்ட அறபாத் கலைப்பட்டதாரியும் பயிற்றப்பபட்ட மௌலவியுமாவார். அரச பணியாற்றிவரும் இவர் இருபது வருட எழுத்தூழியத்தின் மூலம் தன்னை முழுமையாக அடையாளப் படுத்திக் கொண்டவர். இந்நூல் "எங்கள் தேசம்" பத்திரிகையில் பிரசுரமான இவரது ஐம்பது பத்தி எழுத்துக்களின் தொகுப்பாக வெளிவருகின்றது. "ஐம்பது அத்தியாயங்களில் சுழிவிட்டுக் குதூகலிக்கும் நினைவோடைகளில் சொட்டும் நீர்த்திவலைகளை ஒரு சரமாக வடிவமைத்திருக்கிறார். அவரின் அனுபவங்களை நமது அனுபவங்களாக மாற்றும் வித்தை அவருக்கு கைகூடி வந்திருக்கிறது. அறபாத்தின் ஒவ்வொரு காலடி மண்ணின் ஈரமும், அதன் வாசனையும் ஒவ்வொரு பத்தியிலும் கண்சிமிட்டி களிப்பூட்டுகிறது." (எஸ். எல். எம். ஹனீபா).

### 16036

**யாவரும் கேளிர்: பத்தி எழுத்துகள்.** *தி.ஞானசேகரன். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2022. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

vi, *396 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 1000., அளவு: 22.5*x*15.5 சமீ.*, ISBN: *978-624-6098-01-8.*

மூத்த எழுத்தாளரும் "ஞானம்" சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் பதிப்பாளருமான மருத்துவ கலாநிதி திரு.ஞானசேகரன் அவர்களால் "யாவரும் கேளிர்" என்ற மகுடத்தில் தினகரன் வார மஞ்சரியில் 75 வாரகாலமாக எழுதப்பட்டு வந்த பத்தி எழுத்துக்களின் தொகுப்பு. இப்பத்தியில் இலக்கிய நிகழ்வுகள், எழுத்தாளர் பற்றிய விபரங்கள், நூல் விமர்சனங்கள், உலக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள், சமூக நிகழ்வுகள் எனப் பல்துறை சார்ந்த விடயங்கள் இடம்பெற்றுள்ளன.

# 100 மெய்யியல்துறை

## 100 மெய்யியல் (தத்துவவியல்)

### 16037

**அறிவாராய்ச்சி நோக்கில் இயக்கவியல் மெய்யியல் பகுப்பாய்வு முறை: கிரேக்க காலந்தொட்டு மார்க்ஸ் வரை.** வேலுப்பிள்ளை யுகபாலசிங்கம். *கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2023. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).*

xxii, *212 பக்கம், விலை: ரூபா 2000., அளவு: 22*x*15 சமீ.*, ISBN: *978-624-6164-32-4.*

மெய்யியல் வரலாற்றில் இயக்கவியலானது விஞ்ஞானபூர்வமாகப் பகுப்பாய்வு முறையாக-முறையியல் தத்துவமாக வளர்ச்சியடைந்த வரலாற்றை அறிவாராய்ச்சியியல் நோக்கில் விளக்குவதாக இவ்வாய்வு நூல் அமைகின்றது. இயக்கவியலானது விஞ்ஞான முறையின் இயங்கும் உயிராக, உயிர்நிலையாக என்றும் விளங்கும் என கெகலினாலும் பின்னர் மார்க்ஸினாலும் வலியுறுத்தப்பட்ட இம்மெய்யியல் முறையின் கருத்தின் ஏற்புடைமையை அதன் பல்வேறு பரிமாணங்களை ஆராய்வதனூடாக இம்முறை பற்றி வரிந்து கட்டிக்கொள்ளும் தவறான-மிகையான கற்பிதங்களை இந்நூல் தெளிவுபடுத்துகின்றது. இயக்கவியல் பகுப்பாய்வு முறை (அறிமுகம், முரண்பாடு-மாற்றம்- பூசல்), ஆதி கிரேக்க காலம் (கிரேக்கலிட்டஸுவுக்கு முன், கிரேக்கலிட்டஸுவுக்கு பின்), கிரேக்க காலம் (சோபிஸ்ட்டுகள், சோக்கிரட்டிஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டில்), புலமைக் காலம் (நவீன மெய்யியற் காலம், பிரான்சியப் பொருள்முதல் வாதிகள், காண்ட் (இம்மானுவேல் காண்ட் 1724-1804), மார்க்ஸ்-கெகல் (கெகல், இயக்கவியல், மார்க்ஸின் அணுகுமுறை), தொகுப்புரை ஆகிய ஆறு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 150 உளவியல்

### 16038

**கெடுவாய் மனனே கதிகேள்: உளவியல்சார் கட்டுரைகள்.** நா.நவராஜ். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, மார்கழி 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

*72 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-624-5881-36-9.*

*கெடுவாய் மனனே கதிகேள், நான் என்ன நரியா?, தூக்கம் உன் கண்களைத் தழுவட்டும், கேள்விகளூடு சில கருத்துக்கள், உள்ளத்தனையது உயர்வு, இயந்திரவாழ்வை இலகுவாக்க, ஏடு தூக்கிப் பள்ளியில், வாழ்க்கை என்பது, பிணி தீர்க்கும் பணியில், உள்நோக்கிய தேடல், விழுகையும் எழுகையும், அறிவாளி மூடன் அடிமை, அடக்கப்பட்டதன் விளைவுகள், அந்தரங்கத் துணை ஆகிய 14 உளவியல்சார் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 208ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது. நாகேந்திரம் நவராஜ் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைமாணி மற்றும் தமிழ் முதுகலைமாணிப் பட்டங்களைப் பெற்றவர். 2000ஆம் ஆண்டில் இருந்து யாழ்.உளநல சேவைகள் பிரிவில் உளவளத் துணையாளராக இணைந்து செயற்படுகிறார். இந்நூல் 208ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.*

### 16039

**சிக்மண்ட் பிராய்டின் உளவியல் ஆய்வுகளும் போர் பற்றிய அவதானிப்புகளும்.** ஈழக்கவி (இயற்பெயர்: ஏ.எச்.எம்.நவாஸ்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2022. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

*20 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-624-5881-43-7.*

*ஐரோப்பாவில் பாசிச-நாசிச நாசவேலைகள் பரவியிருந்த சூழலில் வாழ்ந்தவர் சிக்மண்ட் பிராய்ட் (1856-1939). அசாதாரண யுத்தத்தின் விளைவுகளை அனுபவித்த சிக்மண்ட் பிராய்ட், யுத்தம் எதற்காக?, யுத்தத்திலிருந்து மீள்வது எவ்வாறு? என்று தன் காலத்தில் உளவியல் ரீதியாக ஆராய முனைந்தார். இந்த ஆய்வு சிக்மண்ட் பிராய்டுக்கும் அல்பர்ட் ஐன்ஸ்டீனுக்கும் இடையில் நடந்த கடிதப் போக்குவரத்துக் கூடாக, புதிய பரிமாணங்களைக் காணலாயிற்று. இக்கடிதங்கள் 1933இல் வெளியான "போர் ஏன்?" (Why War?) என்ற நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. சிக்மண்ட் பிராய்டின் உளவியல் ஆய்வுகளும் போர் பற்றிய அவரது அவதானிப்புகளும் இந்நூலில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. 223ஆவது ஜீவநதி வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.*

### 16040

**மௌன அலைகள்: நிலம் தொட்டு புகலிடம் வரையான உளவியல் பிரச்சினைகள்.** *நோர்வே விஜேந்திரன். முல்லைத்தீவு: செல்லமுத்து வெளியீட்டகம், வள்ளுவர்புரம், விசுவமடு, 1வது பதிப்பு, ஆனி 2019. (யாழ்ப்பாணம்: பகவான் பிரின்டர்ஸ், சித்தன்கேணி).*

xx, *100 பக்கம், விலை: ரூபா 270., அளவு: 20*x*14 சமீ.*, ISBN: *978-955-4096-23-3.*

*இந்நூலில் குழந்தைப் பருவம், மாணவர் எதிர்நோக்கும் உளவியல் பிரச்சினைகள், இளைஞர் யுவதிகள் எதிர்நோக்கும் உளவியல் பிரச்சினைகள், மாற்றுத் திறனாளிகள் எதிர்நோக்கும் உளவியல் பிரச்சினைகள், புலம்பெயர் தமிழ்ப் பெண்கள் எதிர்நோக்கும் உளவியல் பிரச்சினைகள், பெற்றோர்கள் எதிர்நோக்கும் உளவியல் பிரச்சினைகள், முதியவர்கள் எதிர்நோக்கும் உளவியல் பிரச்சினைகள், மன அழுத்தத்தைப் போக்கப் பின்பற்றவேண்டிய வழிமுறைகள் ஆகிய எட்டு உளவியல்சார்ந்த கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.*

## 152.47 கோபம் (Anger)

### 16041

**வெகுளாமை** (Calm). *அகணி (இயற்பெயர்: சி.அ.சுரேஸ்). கனடா: சி.அ.சுரேஸ், 1ஆவது பதிப்பு, மே 2014. (கனடா: சாமந்தி இல்லம், மல்ரிசிமாட் சொலியூசன்ஸ்).*

*125 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*14 சமீ.*, ISBN: *978-0-9869016-3-8.*

*வெகுளாமை என்றால் என்ன? நியாயமான கோபமும் நியாயமற்ற கோபமும், கோபத்தைக் கையாளும் மூன்று அணுகுமுறைகள், கோபமும் அன்பும், கோபத்தை நெறிப்படுத்தல், முக்கோண கூர்நுனிக் கோபுரப் படம், கவலையைத் தவிர்ப்போம், சுய கௌரவமும், சுய பெறுமதியும், சுய ஆய்வு, கோபத்தின் பின்னணியில் ஒருவரின் தனித்துவமான பழக்கங்கள், நேர்மறையான பழக்கங்கள், கோபத்தின் வடிவங்கள், மனவெழுச்சியின் உணர்ச்சிகள், கோபத்தின் அறிகுறிகள், உணவு ரீதியான வழிமுறைகள், தியானம், யோகப் பயிற்சி மூலம் தீர்வு, நிறைவுக் குறிப்பு, வாசகர் எண்ணங்கள் ஆகிய பிரிவுகளின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

## 154.63 கனவுகள்

### 16042

**சிக்மன் பிராய்டின் கனவுகளின் விளக்கம்.** *செ.கணேசலிங்கன். சென்னை 26: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7ஆவது தெரு, வடபழனி, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2005. (சென்னை: சிவம்ஸ்).*

*126 பக்கம், விலை: இந்திய ரூபா 40.00, அளவு: 18*x*12.5 சமீ.*

*சிக்மண்ட் பிராய்ட்* (Sigmund Freud 06.05.1856-23.09.1939) *ஒரு ஆஸ்திரிய உளநோய் மருத்துவர். இவர் உளவியலின் உளப்பகுப்பாய்வுச் சிந்தனை முறையை நிறுவியவர்.*

*உள்மனம் (unconscious mind) பற்றிய இவரது கோட்பாடுகள் மூலம் பிராய்ட் பெரும் பெயர் பெற்றவர். உள்மன ஆசைகளின் வெளிப்பாடாகக் கனவுகளை விளக்குதல் போன்றவற்றின் தொடர்பிலும் பிராய்ட் பெரிதும் அறியப்பட்டவர். இந்நூல் அவரது கனவுகள் தொடர்பான நூலின் கருத்துக்களை தமிழ் வாசகருக்கு எளிமையாக அறிமுகப்படுத்துகின்றது. சோதிடம் கூறும் கனவின் பலன், சிக்மன் பிராய்டு, கனவின் வரலாறு, விருப்பு - நிறைவேற்றல், கனவுகளின் செயல்கள் பற்றிய கோட்பாடு, கனவுகளை விளக்கும் முறை, கனவுகளின் உருத் திரிபு, கனவுகளின் உட்பொருளும் மூலமும், வகைமாதிரிக் கனவுகள், கனவுத் தொழில், பின்னடைவும் மீட்சியும், முக்கிய கனவுகளும் அவற்றின் விளக்கங்களும், கனவுகள் பற்றிய சில முக்கிய குறிப்புகள் ஆகிய 13 அத்தியாயத் தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

## 155.4 குழந்தை உளவியல்

### 16043

**ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு தீர்வு.** மதிவதனி. தமிழ்நாடு: எதிர் வெளியீடு, *96, நியூ ஸ்கீம் ரோடு, பொள்ளாச்சி 642 002, 1ஆவது பதிப்பு, ஜுலை 2022. (சென்னை: ஜோதி என்டர்பிரைசஸ்).*

*144 பக்கம், ஒளிப்படங்கள், விலை: இந்திய ரூபா 180., அளவு: 24.5x17 சமீ.,* ISBN: *978-93-90811-10-6.*

*திருட்டுப் பட்டம் சூட்டலாமா?, முன்மாதிரிகளாக நீங்கள் இருங்கள், வார்த்தை களின் ஆழம், குற்றம் காணாதீர், இவர்களின் பங்கு என்ன?, இவர்களுக்காகவும் நேரத்தை அர்ப்பணியுங்கள், பிள்ளைகள் சண்டை பிடிக்கட்டுமே, இந்தக் கேள்வியைக் கேட்டால் தப்பான பிள்ளையா?, பிள்ளைகளுக்கு எல்லைக்கோடு அவசியமா?, விளையாட்டை மறுக்காதீர்கள், மொழிக்கு தண்டனை தராதீர்கள், தவறுகளை வரவேற்போம், யார் பேசுவார்?, ஆலோசகர்கள் மட்டுமே, இழிவல்ல என உணர்த்துங்கள், ஒப்பீடு செய்தல் சரியா?, பணத்தைக் கையாளப் பழக்குங்கள், பிள்ளைகளின் சுய மதிப்பீடு, தோல்விகளை ஏற்கப் பழகுங்கள், உணர்வுகளை மதிப்போம், தெளிவுபடுத்த வேண்டும், பகிர்தல் தவறா?, பயத்தை ஏற்படுத்து கிறோமா? குறை கூறுவதால் திருந்த முடியுமா?, உணர்வுகளை மதியுங்கள் முரண்பாடுகளை உணர்த்துங்கள், அவன் போல இவனா?, சேர்ந்து பயணியுங்கள், மாயைக்குள் சிக்க வைக்காதீர்கள், இது பெற்றோர்களுக்கு மட்டும் உரியதா?, இந்த வயதில் டென்ஷனா? ஆகிய தலைப்புகளில் ஆசிரியரால் எழுதப்பட்ட மானிட மேம்பாடு நோக்கியதான குழந்தை உளவியல் பற்றிய முப்பது கட்டுரை களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது.*

## 158.1 மானிட மேம்பாடு

### 16044

**அருள் பொழியும் நிழல் தரும் பாதைகள்.** ஜேம்ஸ் ஆலன் (ஆங்கில மூலம்), சே.அருணாசலம் (தமிழாக்கம்). யாழ்ப்பாணம்: அமரர் சுரேஸ்குமார் பவித்திரன் அவர்களின் 45ஆவது நாள் நினைவு வெளியீடு, துவாளி வீதி, உடுப்பிட்டி, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2021. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

xxix, 115 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x16.5 சமீ., ISBN: 978-624-98857-0-7.

James Allen அவர்கள் எழுதிய By ways of Blessedness என்ற நூலின் தமிழாக்கம் இதுவாகும். சரியான தொடக்கங்கள், சிறிய கடமைகளும் செயல்களும், பிரச்சினை களையும் குழப்பங்களையும் சந்தித்து மீள்வது, மனச்சுமையை இறக்கி வைப்பது, உள்ளத்தில் செய்யப்படும் மறைவான தியாகங்கள், இரக்க குணம், மன்னிக்கும் தன்மை, தீங்கில்லாத உலகைக் காண்பது, நிலையான மகிழ்ச்சி ஆகிய ஒன்பது அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மனிதனின் வாழ்வுப் பயணத்தை மகிழ்ச்சி மிக்கதாக மாற்றும் சக்தி இந்நூலுக்கு உண்டு. இந்நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் தன்னம்பிக்கை ஒளிப்பிரவாகம் பொங்கி வழிகின்றது. உயர் குணாதிசயங்கள் அமுத மொழியில் ஊட்டப்படுகின்றன. தனது 16ஆவது அகவையில் மறைந்த ஹாட்லிக் கல்லூரி மாணவனான அமரர் சுரேஸ்குமார் பவித்திரன் அவர்களின் நினைவாக 21.12.2021அன்று நடந்தேறிய நிகழ்வில் இந்நூல் வெளியிடப்பட்டது.

### 16045

**சிந்தனைப்பூக்கள் பாகம் 4.** எஸ்.பத்மநாதன். Canada: எஸ்.பத்மநாதன், 70, Gas Lamp Lane, Markham, Ontario, L6B, 0H7, 1ஆவது பதிப்பு, 2019. (ஒன்ராரியோ: R.G.பிரின்டர்ஸ், ரொரன்ரோ).

(6), xii, 298+20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இந்நூலில் 50 தலைப்புகளில் ஆசிரியரின் உளவியல் கட்டுரைகள் அடங்கியுள்ளன. "சிந்தனைப் பூக்கள்" என்ற தொடரில் வெளிவந்துள்ள ஆசிரியரின் நான்காவது நூலாகும். எஸ்.பத்மநாதன், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியல் சிறப்புப் பட்டம் பெற்று இரண்டு ஆண்டுகள் துணை விரிவுரையாளராகப் பணியாற்றியவர். 1971-1979 வரை நுவரெலிய, பண்டாரவளை, பதுளை மாவட்டங்களில் சமூகக்கல்வி ஆலோசகராக கடமையாற்றிய இவர், 1983-1985வரை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சமூகக் கல்வி விரிவுரையாளராகப் பணியாற்றியபின், 1985இல் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தவர். ரொரன்ரோ நகரில் வாழ்ந்த வேளை, உளவியல், மருத்துவத் துறைகளில் கட்டுரைகளை எழுதி தமிழருவி, நம்நாடு, ஈழநாடு, உதயன், செந்தாமரை, விளம்பரம் போன்ற கனேடிய தமிழ்ப் பத்திரிகைகளில் வெளியிட்டவர். இவரது பல்துறை ஆக்கங்கள் தமிழர் தகவல்,

தளிர், தூறல், சஞ்சிகைகளில் தொடர்ந்து வெளியாகி வருகின்றன. இவரது ஆக்கங்கள் "சிந்தனைப் பூக்கள்" என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டு பல பாகங்களாக வெளிவந்துள்ளன. இவ்வகையில் இது இவரது தொடரின் நான்காவது பாகமாகும்.

## 16046

**சும்மா இரு.** தம்பிப்பிள்ளை சிவப்பிரகாசம். கொழும்பு 6: த.சிவப்பிரகாசம், 44/4, 4/2, தர்மராம வீதி, வெள்ளவத்தை, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).

40 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20x14.5 சமீ.

அகவாசனை, என்னில் தெளிந்த எண்ணங்கள், கலியுகம், கணப்பொழுதின் மகிமை, தர்ம யுத்தம், வாழ்க்கை வாழ்வதற்கே, வரிசையை முறிக்கலாமா?, சுகவாழ்விற்கு எளிமையான எண்ணங்கள், சிந்தித்து செயற்படத் தூண்டும் திவ்விய வாக்கியங்கள், சிந்திப்போமா ஆகிய மனித மேம்பாட்டு நூல்களை எழுதியுள்ள திரு. த.சிவப்பிரகாசம், அதன் தொடர்ச்சியாக சும்மா இரு என்ற சிவயோக சுவாமிகளின்ஆன்மீக விழிப்புணர்வு மிக்க பல்வேறு கருத்துக்களை விதந்து போற்றும் இந்நூலை எழுதியுள்ளார்.

## 16047

**நாம் எவ்வண்ணம் வாழ்ந்தாக வேண்டும்.** இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு. தெகிவளை: இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு, 24 C, எதிரிவீர அவென்யூ, 1வது பதிப்பு, ஜனவரி 2022. (அச்சக விபரம் தரப்படவில்லை).

60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15.5 சமீ.

மாதா-பிதா-குரு-தெய்வம், தெய்வம், நம்பிக்கை, அடக்கம், விருந்தோம்பல், திட்டமிடல், மன ஒருமைப்பாடு, ஆன்மீகம்-பக்தி, பகுத்தறிவு, பஞ்சமாபாதகங்கள் தவிர்த்தல், கலைகள், விதி, இசையியல் ஆகிய 14 தலைப்புகளில் இவ்வான்மீகம் தழுவிய மானிட மேம்பாட்டு நூல் எழுதப்பட்டுள்ளது. இவ்வண்ணம் வாழ்ந்தால் எவ்வண்ணம் வாழ்வில் மிளிரலாம் என வழி முறைகளைக் கூறுகின்றார். நூலாசிரியர் யாழ் இந்துக்கல்லூரி முன்னாள் ஆசிரியரும், தமிழ்ப் பண்டிதரும், இந்து சாதனம் பத்திரிகையாளரும் முன்னோடி எழுத்தாளருமான மட்டுவிலைச் சேர்ந்த அமரர் ம.வே.திருஞானசம்பந்தபிள்ளை அவர்களின் மூத்த மகளாவார். யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் பிறந்த இராஜேஸ்வரி, யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியாவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. பட்டம் பெற்ற இவர், நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் 16 ஆண்டுகள் ஆசிரியையாகவும் அதிபராகவும் பணியாற்றியவர். இவர் ஒரு வீணைக் கலைஞருமாவார்.

### 16048

**பின் தொடரும் குரல்.** *ஸ்ரீரஞ்சனி விஜேந்திரா. கனடா: வடலி வெளியீடு,* 35, Long meadow Road, Brampton, Ontario, L6P 2B1, *1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2018. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*87 பக்கம், விலை: 12 கனேடிய டொலர், அளவு: 21*x*13.5 சமீ.,* ISBN: *978-1-7752392-1-5.*

*தாயைப் போல பிள்ளை, கோபம்- இது ஆணுக்கு மட்டும் சொந்தமானதா?, ஒற்றைப் பெற்றோரியம், பிள்ளை வளர்ப்பில் வன்முறை, கலாசாரம் அழிந்து போகிறதா?, இது பலமா அல்லது பலவீனமா?, அடாவடித்தனம், எங்கே நாம் நிற்கிறோம்?, சிறு பிள்ளைகளுக்குப் புரியும்படி பேசுவோம், சுயமதிப்பு, புத்தியுள்ள மனிதரெல்லாம் வெற்றி காண்பதில்லை, புலம்பெயர் வாழ்வில் கண்ணகியும் மாதவியும், சுதந்திரமும் நாமும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று, பெண்களும் மனநலமும், பெற்றோருக்கும் இளையோருக்கும் இடையிலிருக்கும் இடைவெளி ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 16 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஸ்ரீரஞ்சனியின் கட்டுரைகள் யாவும் சமகாலச் சமூகத்தின் கரிசனைக்குரிய விடயங்களை அலசுகின்றன. எமது தமிழ்ச் சமூகம் தாயகத்திலும் புலப்பெயர்விலும் எதிர்கொள்ளும் சவால்கள், அனுபவங்கள், காயங்கள் உட்பட அனைத்திற்கும் உளவியல் ரீதியில் தனது தரப்பு சிந்தனையை ஆசிரியர் முன்வைக்கிறார்.*

### 16049

**மக்கள் மேன்மையடைய தினசரி ஒரு நற்சிந்தனை.** *வி.செல்வரத்தினம் (தொகுப்பாசிரியர்). வட்டுக்கோட்டை: திருமதி செல்வரத்தினம் கௌரி, அப்புக்காத்து வளவு, அராலி மத்தி, 1ஆவது பதிப்பு, மார்கழி 2019. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).*

*76 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 15.5*x*11.5 சமீ.,* ISBN: *978-955-38168-4-9.*

*இந்நூல் அளவில் சிறியதாயினும், வாழ்க்கையில் மக்களுக்குத் தேவையான சகல துறைகளையும் எடுத்துக்காட்டி அறிவுறுத்துகின்றது. ஆன்மீகப் பெரியார்களின் பொன்மொழிகள் அவர்கள் ஆய்ந்து அறிந்து மக்களுக்குச் சொல்லும் அருளுரைகள் ஆகியவற்றைப் படிப்பதன் மூலம் ஏற்படுகின்ற மாற்றம் வாழ்வைச் செழுமைப்படுத்த உதவும் என்ற ஆசிரியரின் கருத்திற்கு அமைவாக அவரால் தொகுக்கப்பெற்ற 366 பொன்மொழிகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.*

## 158.12 தியானம்

### 16050

**உளக் குவிப்பும் கற்றலும்.** *திருநாவுக்கரசு கமலநாதன். யாழ்ப்பாணம்: நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல், 331, கோவில் வீதி, நல்லூர், 1ஆவது பதிப்பு, மே 2021. (யாழ்ப்பாணம்: சோலோ பிரின்டர்ஸ், 12/3, முதலியார் ஒழுங்கை, நாவலர் வீதி).*

xv, (4), 95 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 450., அளவு: 21.5x15.5 சமீ.

இந்நூல் உளக்குவிப்பு பற்றிய பல்வேறு விடயங்களை திரட்டித் தருகின்றது. கற்றல் செயற்பாட்டுடன் உளக்குவிப்பைத் தொடர்புறுத்தி ஆசிரியர் நூலைத் தொடங்குகிறார். பின்னர் உளக்குவிப்பை ஊக்குவிப்பதற்கான பல்வேறு வழிகளை விளக்கியிருக்கின்றார். உளக்குவிப்பும் கற்றலும், உளக்குவிப்பு என்பதால் கருதப் படுவது யாது?, உளக்குவிப்பை ஊக்குவிக்கும் வழிமுறைகள், சீரான நித்திரையும் உளக்குவிப்பும், உடற்பயிற்சியும் உளக்குவிப்பும், இயற்கையுடன் நேரத்தைச் செலவிடலும் உளக்குவிப்பும், தியானமும் உளக்குவிப்பும், சென் தியானம், யோகாசனப் பயிற்சியும் உளக்குவிப்பும், மூச்சுப் பயிற்சியும் உளக்குவிப்பும், தமிழர் பாரம்பரிய விளையாட்டுகளும் உளக்குவிப்பும், இடைநிறுத்திக் கரும மாற்றல், உணவில் மாற்றம், இயற்கைச் சத்துணவைத் தெரிதல், உளக்குவிப்பை ஊக்குவிப்பதற்கான மேலும் சில குறிப்புகளும் பயிற்சிகளும் ஆகிய 15 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரித் தாயின் இருபத்தோராவது அகவைச் சுவடாக 02.05.2021 அன்று வெளியிடப்பட்ட நூல்.

**16051**

**சுயநிலைக்கு மீளுதல்: நம்மை நாமே அறிந்து கொள்வதற்கான வழிகாட்டற் குறிப்புகள்.** ஜோசப் கோல்ட்ஸ்ரெயின் (மூலம்), புண்ணியேஸ்வரி நாகலிங்கம் (தமிழாக்கம்). மஹரகம: புண்ணியேஸ்வரி நாகலிங்கம், ஓய்வுநிலைப் பணிப்பாளர், தமிழ் மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம், 1ஆவது பதிப்பு, 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

x, 162 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13 சமீ.

ஜோசப் கோல்ட் ஸ்ரெயின் Joseph Goldstein எழுதிய "சுயநிலைக்கு மீளுதல்: தொடர்பாளரின் வழிகாட்டற் குறிப்புகள்" என்ற நூலின் தமிழாக்கம் இது. இந்நூல் தியானத்தை மேற்கொள்ள விரும்பும் யாவருக்கும் பயனுள்ளதாக எழுதப் பட்டுள்ளது. ஆர்வத்தைத் தூண்டுவதாயும் அமைந்துள்ளது. தியானம் என்றால் என்ன என்பதை அறிந்துகொள்ளவும், இன்றைய கோவிட் தனிமைச் சூழலில் நாம் என்ன செய்யவேண்டும் என்பதை சரியாக உணர்ந்துகொண்டு, அறிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் செயற்பட வேண்டும், எவ்வாறு நாம் எம்மை அறிந்துகொள்வது? எவ்வாறு நாம் நம்மை உணர்ந்துகொள்வது? எவ்வாறு நாம் நம்மைப் பற்றித் தெரிந்துகொள்வது, எவ்வாறு நாம் நமது மன ஆற்றலை அறிந்து கொள்வது? எவ்வாறு நாம் நமது மன ஆற்றலை உச்ச நிலைக்குக் கொண்டு சென்று நாம் நமக்காக வாழ்வது? எமது வாழ்வின் நோக்கம் என்ன? அந்நோக்கத்தை அடையும் வழி எது? போன்ற பல்வேறு வினாக்களுக்கு விடையளிப்பதாக இந்நூல் அமைந்துள்ளது.

## 158.3 உளவளத்துணை (counseling)

### 16052

**சீர்மியத்தில் சிறப்பு முறைகள்: உளவியல் சிகிச்சைகள்.** கோகிலா மகேந்திரன். தெல்லிப்பளை: சோலைக்குயில் அவைக்காற்றுக் கள வெளியீடு, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2020. (யாழ்ப்பாணம்: அம்மா அச்சகம், இணுவில்).

xii, 204 பக்கம், விலை: ரூபா 1000., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-624-5407-01-9.

மனித வாழ்வை மேம்படுத்தும் நோக்குடன் வெளிவரும் மனம் சார்ந்த உளநூல் இது. Advanced Psycho social therapies எனப்படும் சீர்மியத்தில் சிறப்பு முறைகள் பற்றி இந்நூல் பேசுகின்றது. சீர்மியம் என்றால் என்ன?, விசேட சிகிச்சை முறைகள், அறிகைச் சிகிச்சை, ஏற்றுக்கொண்டு பொறுப்புடனிருத்தல் சிகிச்சை, தர்க்கமுறையுடன் கூடிய நடத்தைச் சிகிச்சை, உன்னிப்பாயிருத்தலை அடியொற்றிய அறிகைச் சிகிச்சை ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 170 ஒழுக்கவியல்

### 16053

**ஔவையார் அருளிச்செய்த வாக்குண்டாம்.** ஔவையார் (மூலம்), ஆறுமுக நாவலர் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: எஸ்.எஸ்.சண்முகம்பிள்ளை, மனேச்சர், சண்முகநாதன் புத்தகசாலை, 1வது பதிப்பு, 1914. (யாழ்ப்பாணம்: ஸ்ரீசண்முகநாத யந்திரசாலை, வண்ணார்பண்ணை).

20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12 சமீ.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரது திருத்தப்பட்ட உரையுடன் கூடியதாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 0398).

### 16054

**ஔவையார் அருளிய கொன்றை வேந்தன் உரையுடன்.** சி.குமாரசாமி. கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 340, செட்டியார் தெரு, 1ஆவது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13 : யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.

பூபாலசிங்கம் புத்தகசாலையின் நீதிநூல் வரிசையில் இரண்டாவது நூலாக வெளிவந்துள்ளது. சிறுவர்க்கேற்ற எளிய உரைநடையில் வித்துவான் சி.குமாரசாமி உரை வழங்கியுள்ளார்.

### 16055

**ஔவையார் அருளிய கொன்றை வேந்தன் (மூலம், பதவுரை, கருத்துரை, விளக்கவுரை).** த.துரைசிங்கம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: உமா பதிப்பகம், 521/1B, காலி வீதி, 2ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2022, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2003. (கொழும்பு 12: பேர்பெக்ட் (Perfect) பதிப்பகம், 130, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

22 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-705-108-6.

ஔவையார் அருளிய நூல்களில் ஒன்று கொன்றைவேந்தன். கொன்றை வேந்தனில் இடம்பெற்றுள்ள 91 பாக்களும் மக்கள் மனதில் பதித்துக்கொள்ள வேண்டிய நீதி போதனைகளைத் தெளிவாகக் கூறுகின்றன. ஆத்திசூடியில் சொல்லப்படாத அறநெறிகளில் பலவும் இங்கு சொல்லப்பட்டன சிலவும் கொன்றைவேந்தனில் இடம்பெற்றுள்ளன. இன்றியமையாத அறநெறிகளை, வாழ்க்கை நெறிகளை வலியுறுத்துவதற்காகவே மீளவும் இவை சொல்லப்படுகின்றன. ஆத்திசூடியைப் போலவே இந்நூலும் அகரவரிசைப்படி அமைந்துள்ளது. இந்நூலுக்குப் பழைய உரைகளும் புதிய உரைகளும் பலவுண்டு. சில பாடவேறுபாடுகள் இருந்தாலும், பெரும்பான்மையாகப் பலரும் ஒத்தே சென்றுள்ளனர். பாடபேதங்கள் விளக்க வுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. சங்கநூல்களில் காணப்படும் ஔவையாரின் செய்யுட்களுக்கும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய நூல்களின் பாக்களுக்கும் சொல்லமைதியில், அமைப்பில், வேறுபாடுகள் பல உள்ளன. இதன் காரணமாக இந்நூல் பிற்காலத்தில் வாழ்ந்த ஒரு ஔவையாரால் அருளப்பட்டதாக அறிஞர் பலரும் கருதுகின்றனர்.

### 16056

**குறளில் உணர்ச்சி வளம்: முதற் புத்தகம்.** இரத்தினம் நவரத்தினம். யாழ்ப்பாணம்: சிவதொண்டன் ட்ரஸ்ட், காங்கேசன்துறை வீதி, வண்ணார் பண்ணை, 1ஆவது பதிப்பு, 1958. (மதராஸ் 18: ஜுப்பிட்டர் அச்சகம்).

78 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

இந்நூலில் திருக்குறள் சார்ந்த 20 சிறு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அவை அருளுடைமை, ஒப்புரவறிதல், வினைத்திட்பம், அடக்கமுடைமை, நடுவுநிலைமை, பயனில சொல்லாமை, அறிவுடைமை, நீத்தார் பெருமை, நட்பு, ஊக்கமுடைமை, செய்ந்நன்றியறிதல், பொருள் செயல்வகை, இன்னா செய்யாமை, இடுக்கணழியாமை, இறைமாட்சி, கல்வி, தீவினையச்சம், பொறையுடைமை, வாய்மை, மெய்யுணர்தல் ஆகிய தலைப்புகளின் கீழ் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 0647).

### 16057

**திருக்குறள் டெனிஸ் மொழிபெயர்ப்பு.** மரியன்ன ஸ்டீன் ஈசாக் (மொழிபெயர்ப்பாளர்), நாகலிங்கம் கஜேந்திரன் (தொகுப்பாசிரியர்). டென்மார்க்: நாகலிங்கம் கஜேந்திரன், தமிழ்-டெனிஸ் சமூக இலக்கிய இணைவகம், 1ஆவது பதிப்பு, ஜனவரி 2022. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*310 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x17 சமீ., ISBN: 978-87-973509-0-4.*

ஜி.யு.போப் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பான திருக்குறளை டேனிஷ் மொழியில் மரியன்ன ஸ்டீன் ஈசாக் மொழிபெயர்த்திருக்கிறார். இந்நூலில் தமிழ் -டேனிஸ் - ஆங்கிலம் ஆகிய மும்மொழியிலும் திருக்குறளை தனிநூலாக்கியுள்ளனர். பல்வேறு வாழ்த்துச் செய்திகளுடன் முன்னுரை, இந்நூலைப்பற்றி, திருக்குறள் முதலாம் பகுதி தொடக்கம், திருக்குறள் இரண்டாம் பகுதி தொடக்கம், திருக்குறள் மூன்றாம் பகுதி தொடக்கம், திருக்குறள் குறித்து அறிஞர்களின் கருத்துகள், துணை நின்ற நூல்கள் ஆகிய பிரிவுகளின் கீழ் இந்நூல் ஒழுங்குபடுத்தித் தரப்பட்டுள்ளது.

### 16058

**திருமந்திர விருந்து-1.** *சு.செல்லத்துரை (மலராசிரியர்). கொழும்பு: திருமந்திரப் பணிமன்றம், 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2019. (யாழ்ப்பாணம்: அம்மா அச்சகம், இணுவில்).*

xxx, *134 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ., ISBN: 978-624-5150-00-7.*

இணுவில்-இளவாலை திருமதி சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்களின் ஒன்பதாவது ஆண்டு நினைவாக 11.08.2019 அன்று வெளியிடப்பட்ட சிறப்பு மலர். கொழும்பிலும் இணுவிலிலும் திருமந்திரம் பயில்பவர்களையும் ஏனை யோரையும் ஊக்குவிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட மலர். திருமந்திரம் தொடர்பான பல்வேறு ஆக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. வாழ்த்தும் வருபொருளும், பாயிரப் பகுதி, முதல் தந்திரம், சைவப் புலவர் சு.செல்லத்துரையின் கட்டுரைகளும் கலைப் படைப்புகளும் ஆகிய நான்கு பிரிவுகளில் இந்நூலில் படைப்பாக்கங்கள் வகுக்கப்பட்டுள்ளன. சைவப் புலவர் சு.செல்லத்துரையின் கட்டுரைகளாக, திருமூலர் காட்டும் சிவநெறி, அட்டாங்க யோகம், புலனடக்கம், திருமூலரின் மறைபொருள் கூற்றுக் கவியின்பம், திருமூலர் வில்லிசை, திருமூல நாயனார் கதாப்பிரசங்கம், திருமந்திர வினா-விடை 1, திருமந்திர வினா-விடை 2, திருமந்திரம் பிறந்த கதை- பாடலும் ஆடலும், திருமந்திரப் பொன்மொழிகள் ஆகியன இடம்பெற்றுள்ளன.

## 180 இந்து தத்துவம் (சைவ சித்தாந்தம்)

### 16059

**இந்து நாகரிகம்: பாகம் 2.** *க.சொக்கலிங்கம். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 1ஆவது பதிப்பு, ஜனவரி 1996. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63,* B.A.*தம்பி லேன்).*

viii, *189 பக்கம், விலை: ரூபா 120.00, அளவு: 19.5x16.5 சமீ.*

க.பொ.த.ப. (உயர்தர) பரீட்சைக்குரிய இந்து நாகரிகம் - 1 பாடத்திட்டம் முழுமைக்குமான விரிவான நூல். பாடத்திட்டத்தைக் கருத்திற்கொண்ட ஆக்கம் என்ற வகையில் இந்நூல் ஒரு தொகுப்பு முயற்சியாகும். பல்வேறு ஆய்வறிஞர்கள் கண்டறிந்த முடிவுகளைப் பொருட் பொருத்தமுற இணைத்து விளக்கம் தருவது, அவ்விளக்கத்தினூடாகப் புதிய பார்வைக்கான கருத்துக்களை முன்வைப்பது ஆகியன இவ்வகை முயற்சிகளின் பொதுப்பண்பாகும். சொக்கன் அவர்கள் இவ்வகையிற் சிறப்பாகச் செயற்பட்டுள்ளார். இந்து சமய பத்தி நெறி (தென்னிந்திய சைவ நெறி, சைவ பத்தி இயக்கம், தென்னிந்திய வைணவ நெறி, வைணவ பத்தி இயக்கம்), இலங்கையில் இந்து சமயம் (வரலாற்றுக்கு முற்பட்ட காலம், அநுராதபுரக் காலம், பொலந்நறுவைக் காலம், இடைக் காலம், ஐரோப்பியர் காலம், இக் காலம்), இலங்கையில் இந்துக் கோயிற் கட்டடக் கலை, ஈழத்துச் சிவாலயங்கள் ஆகிய நான்கு அலகுகளில் பாடங்கள் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30161).

### 16060

**இந்து நாகரிகம்: ஓர் அறிமுகம்.** சாந்தி கேசவன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xiv, 137 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-624-6164-05-8.

சிந்துவெளி நாகரிக காலச் சமய நிலை, சிந்துவெளிக் காலச் சமூக நிலை, இந்து நாகரிக வரலாற்றில் புராதன இலக்கியமாகிய வேதங்களின் சிறப்பிடம், வேதகால சமயநிலை, அதர்வ வேதம், வேதகாலச் சமூகநிலை, ஆகமங்களின் முக்கியத்துவம், இந்துமத சிந்தனை வரலாற்றில் உபநிடதங்களின் சிறப்பு, புராண இதிகாசங்களின் சிறப்பு, புராணங்கள் கூறும் சமயக் கருத்துகள், இதிகாசங்கள் கூறும் அறநீதிக் கருத்துக்கள், சங்ககாலச் சமயநிலை, சைவ சமய வரலாற்றிலே பல்லவர் காலத்திற்குரிய முக்கியத்துவம், பல்லவர் கால திராவிட கட்டடக் கலை வளர்ச்சிப் படிநிலைகள், சோழர் காலம், சோழர்காலக் கட்டடக் கலை, நாயக்கர் காலம், நவீனகால இந்துமத சீர்திருத்த இயக்கங்களும் சீர்திருத்தவாதிகளும், இராஜாராம் மோகன்ராய் (பிரம்ம சமாஜம்), தயானந்த சரஸ்வதி (ஆரிய சமாஜம்), பிரார்த்தனை சமாஜம், ஸ்ரீராமகிருஷ்ணர், நடராசர் வடிவம், தட்சணாமூர்த்தி வடிவம், பிராமணங்கள், பன்னிரு திருமுறைகள், பெரியபுராணம், கந்தபுராணம், சௌரநெறி (சூரிய வழிபாடு), சிவலிங்க வடிவம் (வழிபாடு), ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் சைவசமயப் பணி, தென் கிழக்காசிய இந்துப் பண்பாட்டுப் பரம்பல் ஆகிய 32 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. கலாநிதி சாந்தி கேசவன் பட்டதாரி ஆசிரியராகவும் ஆசிரிய ஆலோசகராகவும் சேவையாற்றி 2001முதல் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறையில் விரிவுரையாளராகவும் சிரேஷ்ட விரிவுரையாளராகவும், துறைத்தலைவராகவும் கடமையாற்றியவர்.

## 16061

**இந்துக் கற்கைகளை வளமூட்டிய மேலைத்தேசத்து ஆளுமைகளும் ஆய்வுகளும்.** ச.முகுந்தன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

xvii, 185 பக்கம், விலை: ரூபா 950., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-748-6.

இந்துப் பண்பாட்டுக் கற்கைகள் பற்றிய திரண்ட பரிமாணத்தைப் புரிந்துகொள்வதற்கு அவை குறித்த மேலைநாட்டாய்வாளர்களின் நோக்குநிலையை அறிந்துகொள்வது அவசியமாகும். இந்நூல் இத்தேவையினை முழுமையாகப் பூர்த்திசெய்கின்றது. இந்நூலில் இந்துக் கற்கைகள் குறித்து மேலைத்தேச ஆய்வாளர்களிடையே ஆர்வம் தோன்றியமைக்கான சமூக வரலாற்றுப் பின்னணி, ஆசியக் கழகமும் சேர் வில்லியம்ஸ் ஜோன்ஸும், இந்துக் கற்கைகளும் சாள்ஸ் வில்கின்ஸும், இந்து நாகரிக ஆய்வுப் புலத்தில் H.T.கோல்புறூக்கின் ஆய்வு முனைப்புகள், இந்துக் கற்கைகள் பற்றிய ஆய்வுகளின் மடைமாற்றியாக மக்ஸ்முல்லர், இந்துப் பண்பாட்டுக் கற்கைகள் தொடர்பில் டாக்டர் ஜோர்ஜ் புல்ஹரின் பன்முக ஆளுமை, இந்துக் கற்கைகளை வளமூட்டிய H.H.வில்சன் (1786-1860), இந்து மெய்யியல் ஆய்வுகளும் போல் டொய்சனும், இந்துப் பண்பாட்டுக் கற்கைகளும் மேலைநாட்டுக் கல்வி நிறுவனங்களும், இந்தியத் தாந்திரீகம் பற்றிய புரிதலில் சேர் ஜோன் வூட்றோவ் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட பத்து கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. கலாநிதி சயனொளிபவன் முகுந்தன் நல்லூர் கந்தர்மடத்தைச் சேர்ந்தவர். யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் பழைய மாணவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துநாகரிகத்தில் சிறப்புக் கலை பயின்று முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர். பண்பாட்டியற் கற்கைகளில் முதுகலைமாணிப் பட்டத்தையும் இந்து நாகரிகத்தில் முதுதத்துவமாணிப் பட்டத்தையும் பெற்றவர்.

## 16062

**உமாபதி தேவர் அருளிச்செய்த திருவருட்பயன்.** சு.சிவபாதசுந்தரம் (விளக்கவுரை). பருத்தித்துறை: சு.சிவபாதசுந்தரம், புலோலி, 1ஆவது பதிப்பு, ஆனி 1918. (பருத்தித்துறை: கலாநிதி யந்திரசாலை).

120 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 16.5x12.5 சமீ.

இந்நூல் யாழ்ப்பாணம், சுழிபுரம், விக்டோரியா கலாசாலை ஆசிரியர் புலோலி நகர் சு.சிவபாதசுந்தரம் அவர்களின் விளக்கவுரையுடன் பதிப்பிக்கப்பட்டது. இந்நூல் எளிதில் நினைவுறத்தக்க குறட்பாக்களால் ஆனமையாலும், உரையாசிரியரின் "சைவபோதம்" - இரண்டாம் புத்தகத்தில் விளக்கப்படாத சிறப்பியல்புகள் இந்நூலில் விரித்துரைக்கப் பட்டிருப்பதாலும், சைவசித்தாந்தத்தைத் தமிழில் கற்கத் தொடங்குவோருக்கும் இரண்டாம் புத்தகம் படித்தோருக்கும் பயன்படத் தக்கதென்னுங் கருத்தினால், விரிவான உரையோடு வெளியிடப் பட்டுள்ளது. இதிலுள்ள பதவுரை நிரம்பவழகிய தேசிகரது பொழிப்புரையைத்

தழுவியும், விசேஷவுரை சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய சித்தாந்த சாத்திரங்களையும் அவற்றின் பேருரைகளையும் துணையாகக் கொண்டும் எழுதப் பட்டுள்ளன. இந்நூலின் பத்து அதிகாரங்களும் முறையே பதிமுதுநிலை, உயிரவைநிலை, இருண்மலநிலை, அருளதுநிலை, அருளுருநிலை, அறியுநெறிநிலை, உயிர்விளக்கம், இன்புறுநிலை, ஐந்தெழுத்தருணிலை, அணைந்தோர்தன்மை என்றவாறு பிரிக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 0937).

### 16063

**சிவஞானபோதச் சிற்றுரை: எளிய நடையில் எழுதப்பட்டது.** மட்டுவில் ஆ.நடராசா. கொழும்பு 6: மட்டுவில் ஆ.நடராசா, 25, 1/1 ஈ.எஸ்.பெர்ணாண்டோ மாவத்தை, 1ஆவது பதிப்பு, 2008. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55 டாக்டர் ஈ.ஏ. குரே மாவத்தை).

304 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 23x15.5 சமீ., ISBN: 978-955-99808-1-0.

புறச்சந்தான பரம்பரையின் முதல்வர் மெய்கண்டதேவ நாயனார் அருளியதே சிவஞானபோதமாகும். இது நந்தியெம் பெருமானுக்கு ஆகமங்கள் கூறும் பொருள் வேற்றுமை பற்றி ஐயமுண்டானபோது, அதை நீக்குவதற்குச் சிவபெருமானால் உபதேசிக்கப்பட்டதாகக் கூறுவர். சீகண்ட உருத்திரரிடம் சிவஞான போதத்தைக் கேட்டருளிய நந்திபெருமான், அதனை சனற்குமார முனிவருக்கும் சனற்குமாரர் சத்தியஞான தரிசனிகளுக்கும் சத்தியஞான தரிசனிகள் பரஞ்சோதி முனிவருக்கும் அருளிச்செய்தனர் என்பது ஐதீகம். பரஞ்சோதி முனிவர் சாமுசித்தராய் அவதரித்த திருவெண்ணெய் நல்லூரில், தன் மாமனார் வீட்டில் வீற்றிருந்த மெய்கண்ட தேவரிடம் வந்து சத்தியஞான தரிசனிகளிடம் தாம் கேட்டவாறு இந்நூலை மெய் கண்ட தேவருக்கு உபதேசித்தார் என்பர். மெய்கண்டார் சிவஞானபோதத்திலுள்ள பன்னிரு சூத்திரங்களையும் தமிழில் மொழிபெயர்த்து, அதற்குக் கருத்துரை, ஏது, திருட்டாந்தம் (உதாரணம்) முதலியவற்றோடு கூடிய வார்த்திகப் பொழிப்புரையும் செய்து அருளியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 46155).

### 16064

**மெய்கண்ட சாத்திரம்.** சு.செல்லத்துரை (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம், கொழும்பு-இணுவில், 1ஆவது பதிப்பு, ஜுலை 2020. (யாழ்ப்பாணம்: அம்மா அச்சகம், இணுவில்).

xviii, 495 பக்கம், விலை: ரூபா 1600., அளவு: 24x18 சமீ.

இணுவில்-இளவாலை திருமதி சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்களின் பத்தாவது ஆண்டு நினைவாக 03.07.2020 அன்று வெளியிடப்பட்ட சிறப்பு மலர். உண்மை விளக்கம் (திருவதிகை மனவாசகம் கடந்ததேவர்), திருவருட்பயன் (உமாபதி சிவாசாரியார்), சிவப்பிரகாசம் (உமாபதி சிவாசாரியார்), சிவஞானசித்தியார்

(அருணந்தி சிவாசாரியார்), சிவஞானபோதம் (மெய்கண்ட தேவர்), திருவுந்தியார் (திருவியலூர் உய்யவந்ததேவர்), திருக்களிற்றுப் பாடியார் (திருக்கடவூர் உய்யவந்த தேவர்), இருபா இருபஃது (அருணந்தி சிவாசாரியார்), வினா வெண்பா (உமாபதி சிவாசாரியார்), போற்றிப் பஃறொடை(உமாபதி சிவாசாரியார்), கொடிக்கவி (உமாபதி சிவாசாரியார்), நெஞ்சுவிடு தூது (உமாபதி சிவாசாரியார்), உண்மை நெறி விளக்கம் (உமாபதி சிவாசாரியார்), சங்கற்ப நிராகரணம் (உமாபதி சிவாசாரியார்) ஆகிய சைவ சித்தாந்த நூல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவற்றிற்கான உரையை சைவப்புலவர் இ.செல்லத்துரை, சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனார், கொழும்பு மு.திருவிளங்க தேசிகர், சைவப் புலவர் சு.செல்லத்துரை ஆகியோர் வழங்கியுள்ளனர்.

### 16065

**யோகமும் இயற்கையும்: இந்திய யோக மரபு, இயற்கை வேளாண்மை, சூழலியல் குறித்த சிந்தனைகள்: சித்த வித்தியா விஞ்ஞானம் - தொகுதி 1.** அகஸ்திய குலபதி ஸ்ரீ ஸக்தி சுமனன் (மூலம்),வி.விமலாதித்தன் (தொகுப்பாசிரியர்), மா.ஜெயசீலன் (பதிப்பாசிரியர்). கொழும்பு: வி.விமலாதித்தன், செயலாளர், சித்த வித்யா விஞ்ஞான சங்கம் - இலங்கை, 1ஆவது பதிப்பு, மே 2021. (தமிழ்நாடு 636302: தமிழி பதிப்பகம், 236, அஷ்வா பார்க்-பார்க் பிளாசா இணைப்பு, ஜாஹிர் ரெட்டிப்பட்டி பிரதான சாலை, சேலம்).

347 பக்கம், விலை: ரூபா 330., அளவு: 21.5x14 சமீ.

அகஸ்திய குலபதி ஸ்ரீ ஸக்தி சுமனன் அவர்களால் பல்வேறு தளங்களில் வெளிப் படுத்தப்பட்ட கருத்துக்கள், திரட்டப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டு இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. யோகம், இயற்கை விவசாயம், அரசியல், மருத்துவம், கொள்கை வகுப்பு, சமூகம், உளவியல் என இக்கருத்துக்கள் காவும் விடயப் பரப்புக்கள் பெரிதும் விரிந்திருக்கின்றன. 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரையிலான பதிவுகள் இத்தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. "சித்த வித்தியா விஞ்ஞானம்" என்ற தொடரில் பல்தொகுதிகளாக இந்நூலை வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 190 சோதிடம், வானசாஸ்திரம்

### 16066

**அகஸ்தியர் புஷ்ப ஆரூடம்.** அகஸ்தியர் (மூலம்). கொழும்பு 11: சரஸ்வதி புத்தக சாலை, 175, செட்டியார் தெரு, 1ஆவது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 11: மெய்கண்டான் அச்சியந்திரசாலை, 161, செட்டியார் தெரு).

64 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 18x12 சமீ.

இந்நூலில் அறுபது பூக்கள் பட்டியலிடப்பட்டு இலக்கமிடப்பட்டுள்ளன. தொடர்ந்து பக்கத்துக்கு ஒன்றென்ற ரீதியில் ஒவ்வொரு பூவின் பெயரில் ஆரூடம் சொல்லப்பட்டுள்ளது. 60 பூக்களில் ஒரு பூவை அல்லது 1 முதல் 60க்கு

இடைப்பட்ட ஒரு இலக்கத்தை தெரிவுசெய்து அந்த இலக்கத்துக்குரிய, அல்லது அந்த இலக்கத்துக்குரிய பூவிற்குரியதெனச் சொல்லப்பட்ட நன்மை தீமைகளை (ஆரூடத்தை) வாசித்துத் தெரிந்துகொள்வர். பூக்களின் பட்டியல்: 1. அல்லிப்பூ, 2.அசோகு, 3. அவ்வலரி, 4. அழவனப்பூ, 5. இருவாக்ஷி, 6. எருக்கன்பூ, 7. கஸ்தூரிப்பட்டை, 8. கதிர்ப்பச்சை, 9. கனகாம்பரம், 10. காட்டுரோஜா, 11. குண்டுமல்லி, 12. குருவேர், 13. கொடிமல்லி, 14. கொங்குமல்லி, 15. கொடிசம்பங்கி, 16. கொன்றைமலர், 17. சப்பாத்திப்பூ, 18. சரக்கொண்ணை, 19. சம்பங்கி, 20. சாமந்தி, 21. சூரியகாந்தி, 22. செவ்வலரி, 23. செந்தாமரை, 24. செண்பகம், 25. தவனம், 26. தாழம்பூ, 27. துலக்கும் சாமந்தி, 28. நந்தியாவட்டை, 29. நாகமல்லி, 30. நித்தியமல்லி, 31. நிலாம்பரம், 32. பத்திராக்ஷிப்பூ, 33. பன்னீர்புஷ்பம், 34. பழகமல்லி, 35. பட்டுரோஜா, 36. பாதிரிமலர், 37. பாரிஜாதம், 38. புன்னைமலர், 39. மல்லிகை, 40. மனோரஞ்சிதம், 41. மருவு, 42. மரிக்கொழுந்து, 43.மயில்கொண்ணை, 44. மஞ்சள்ரோஜா, 45. மரமல்லி, 46. மஞ்சாம்பரம், 47. மகுடம்பூ, 48. மன்மதபாணம், 49. மந்தாரை, 50. முல்லை மலர், 51. லேடிகனகாம்பரம், 52. வளைஞ்சாம்பரம், 53. வாடாமல்லி, 54. வெண்சாமந்தி, 55. வெண்தாமரை, 56. வெட்டிவேர், 57. வெள்ளைரோஜா, 58. ரோஜமலர், 59. ஜாதிமல்லி, 60. டிசம்பர் புஷ்பம்.

## 16067

**சோதிடக் களஞ்சியம்: முதலாம் பாகம்.** பரமசாமி பஞ்சாட்சரம். அவுஸ்திரேலியா: பரமசாமி பஞ்சாட்சரம், 186A, Harrow Road, Auburn 2144, NSW, 1ஆவது பதிப்பு நவம்பர் 2020. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).

600 பக்கம், ஒளிப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5x18.5 சமீ., ISBN: 978-0-9944910-0-9.

ஓய்வுபெற்ற மின் பொறியியலாளரான நூலாசிரியர் அவுஸ்திரேலியாவில் நியு சவுத்வேல்ஸ் மாநிலத்தில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகிறார். இந்நூலில் சோதிடவியற் கோட்பாடுகள், நவக்கிரகங்கள், ராசிகள், வானசாத்திரமும் அயனாம்சமும், பஞ்சாங்க விபரங்கள், ஜாதகக் குறிப்பு தயாரித்தல், தசவர்க்கம், யோகாதி யோகங்கள், மகா திசை, கோசாரம், அட்டவர்க்கம், சட்பலம், காலச்சக்கர திசை, முகூர்த்தங்கள் பற்றிய விபரங்கள் என்பன இடம்பெற்றுள்ளன.

## 16068

**சோதிடக் களஞ்சியம்: இரண்டாம் பாகம்.** பரமசாமி பஞ்சாட்சரம். அவுஸ்திரேலியா: பரமசாமி பஞ்சாட்சரம், 186A, Harrow Road, Auburn 2144, NSW, 1ஆவது பதிப்பு நவம்பர் 2020. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).

600 பக்கம், ஒளிப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5x18.5 சமீ., ISBN: 978-0-9944910-0-x.

நீண்ட ஆயுளும் கர்ம வினைகளும், இறை அருளும் தத்துக்களும், சோதிட சித்தி அடைவதற்குத் தேவையான காரியங்கள், மேடம் முதல் மீனம் வரையுள்ள லக்கின ரீதியாகக் கிரகங்களின் பலாபலன்கள், திருமணப் பொருத்தங்கள், கைரேகை சாஸ்திரம், நவீன எண் சோதிடம், கர்மவினைத் தோஷங்களும் நிவர்த்திப் பரிகாரங்களும், சோதிட நூல்களிலே பாவிக்கும் கிரந்தச் சொற்களும் விளக்கங்களும் ஆகிய விடயப் பரப்புகளை உள்ளடக்கியதாக ஆசிரியர் இந்நூலை எழுதியுள்ளார்.

**16069**

**மனையடி சாஸ்திரமும் வாஸ்து நிலையும்.** செ.லோகராஜா. மட்டக்களப்பு: திருமதி பரமேஸ்வரி லோகராஜா, 14/3, A-4, கணக்குப்பிள்ளை வீதி, நாவற்குடா, 1ஆவது பதிப்பு, மாசி 2017. (திருக்கோணமலை: அஸ்ரா கிராபிக்ஸ்).

xxviii, 79 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 17x12 சமீ., ISBN: 978-955-43127-3-9.

இந்நூலில் மனையடி சாஸ்திரம் பற்றிய விளக்கத்தினையும் அனுசரிக்கவேண்டிய வாஸ்து நிலைமைகளையும், மனைகோல கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறை களையும் ஆசிரியர் விளக்கமாகத் தந்துள்ளார். வீடு கட்டும் மனையின் தன்மை, மண்ணின் தன்மை, வீடு கட்டுவதற்கு ஆகாத மனைகள், மனைக்குரிய திசைகள், மனையில் எதை எங்கே அமைக்க வேண்டும், சகுனங்கள் பார்த்தல், மனை அமைப்புக்கான வாரம், திதி, நட்சத்திரம், இராசி, மாதப் பலன்கள், வீடுகளின் அளவு முறைகள், வீட்டின் அறைகள், கூடங்கள் ஆகியவற்றுக்கு உகந்த அளவுகள், வீட்டின் அறை, கூடங்களின் அடி, அளவின் பலன்கள், வாஸ்து தேவன் ஓர் அறிமுகம், வாஸ்து தேவனின் நிலையறிந்து மனை கோலுதல், வாஸ்து நிலைப்படி மனை கோலுவதற்கு உகந்த நேரங்கள், வாஸ்து தேவனை வழிபாடு செய்தல், வாஸ்து விளைவுகள், வாஸ்து தேவன் நிலையறிந்து வாசல் வைத்தல், கிரக நிலை அறிந்து வாசல் அமைத்தல், கதவுகள் அமைத்தல், ஜன்னல்கள் அமைத்தல், படிக்கட்டுகள் அமைத்தல், நீர்த் தொட்டில்கள் அமைத்தல், சயன அறை, சமையல் அறை, பூசை அறை, கருவூல அறை, படிக்கும் அறை, குளியல் அறை மற்றும் கழிவறை, அறைகளின் உள்ளமைப்பு, மாடிக் கட்டடங்கள், மனைகோல அனுசரிக்க வேண்டிய விதிமுறைகள் ஆகிய முப்பது தலைப்புகளில் மனையடி சாஸ்திரமும் வாஸ்து நிலையும் விரிவாகவும் தெளிவாகவும் விளக்கப்பட்டுள்ளது. முன்னம்பொடி வெட்டையைச் சேர்ந்த கலைமாறன் என்ற புனைபெயருடன் அழைக்கப்பட்டு வரும் லோகராஜா, மூதூர் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும், ஈச்சிலம்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றவர்.

# 200 சமயங்கள்

## 220 கிறிஸ்தவம்

### 16070

**திருமறையின் வரலாற்றில் இடம்பிடித்த பெண்கள்.** *சிபில் தேவகி ஞானப்பிரகாசம் (ஆசிரியர்). சுன்னாகம்: அருட்பணி ஜோசப் ஞானப்பிரகாசம், உவெல்ச் இல்லம், கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, மருதனார்மடம், 1ஆவது பதிப்பு, 2022. (ஆனைக்கோட்டை: றூபன் பிரிண்டர்ஸ்).*

xxiii, *150 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 1000., அளவு: 22*x*14 சமீ.*, ISBN: *978-624-99715-0-9.*

இது கிறிஸ்தவ சமூகத்தினருக்குப் பயனுள்ள வரலாற்று நூல். இரண்டு அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. முதலாவது அத்தியாயத்தில் பழைய ஏற்பாட்டின் வரலாற்றில் இடம்பிடித்த பெண்கள் என்ற வரையறைக்குள் ஏவாள், நோவாவின் மனைவி, சாராள், ஆகார், ரெபேக்காள், லேயாள், மில்க்காள், லோத்தின் மனைவி, போத்திப்பாரின் மனைவி, மிரியாம், சிப்பீராள் பூவாள், சிப்போராள், யோகெபேத், செலோபியாத்தின் குமாரத்திகள், அக்சாள், ராகாப், யாகேல், சிம்சோனன் தாய், யெப்தாவின் மகள், தெபோராள், ரூத்-நகோமி, ஓர்பாள், பெனின்னாள், அபிகாயில், மீகாள், அன்னாள், ரிஸ்பாள், சேபா நாட்டு அரசி, சாறிபாத் ஊர் விதவை, யெசபேல், உல்தாள், தீர்க்கதரிசியின் மனைவி, சிறைபிடிக்கப்பட்ட சிறுபெண், சூனேமியாள், யோசேபாள், எப்சிபாள், ஜெரூசா, சிபியாள், அசுபாள், நொவதியாள், எஸ்தர், சிரேஸ், வஸ்தி, யோபுவின் மனைவி, குணசாலியான பெண், சூசன்னாள் ஆகிய 46 பெண்கள் பற்றிய விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இரண்டாவது அத்தியாயத்தில் புதிய ஏற்பாட்டின் வரலாற்றில் இடம்பிடித்த பெண்கள் என்ற வரையறைக்குள் இயேசுவின் தாய் மரியாள், மகதலேனா மரியாள், பேதுருவின் மாமி, ஏரோதியாள், சாலோமி, கானானியப் பெண், பொந்தியு பிலாத்துவின் மனைவி, யவீருவின் மகள், சலோமே, பெரும்பாடுள்ள பெண், அன்னாள், கூனியான பெண், பாவியான பெண், யோவன்னாள், ஏழைக் கைம்பெண், சூசன்னாள், எலிசபெத், கிலேயோப்பா மரியாள், மார்த்தாள் மரியாள், விபச்சாரப் பெண், சமாரியப்பெண், மாற்குவின் தாய் மரியாள், லீதியாள், தபீத்தாள், சப்பீராள், ரோதை, குறி சொல்லுகிற பெண், பிரிஸ்கில்லாள், பெபேயாள், ஜனிக்கேயாள், லோவிசாள் ஆகிய 29 பெண்கள் பற்றிய விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பெண்கள் கல்லூரியில் கற்று, திருநெல்வேலி விவசாயப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றபின் சிறப்புப் பயிற்சியினை பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் பெற்றுக்கொண்டவர் "போதகரம்மா" என அன்பாக அழைக்கப்படும் சிபில் தேவகி ஞானப்பிரகாசம் அவர்கள்.

## 16071

**மகிழ்ச்சியை நோக்கி: சர்வதேச தமிழ் புதிய ஏற்பாட்டு விளக்கவுரைகள்: பிலிப்பியர் விளக்கவுரை.** *எம்.மார்க் அல்ரோய் (மூலம்), நெப்போலியன் பத்மநாதன் (பதிப்பாசிரியர்). பிரான்ஸ்: வண. கிங்ஸ்லி பாலேந்திரா ஜோசப், பிலடெல்பியா மிஷனரி, 1ஆவது பதிப்பு, மார்ச் 2022. (நுகேகொடை: தோமஸ் மில்டன் ஊழியங்கள், இம்பிரஷன் பிரின்டர்ஸ், 119, கங்கொடவில, நுகேகொடை).*

xi, *222 பக்கம், ஒளிப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5*x*15.5 சமீ.,* ISBN: *978-955-7772-05-9.*

*வேதத்தை இலகுவாகவும் ஆழமாகவும் கற்கவும் அதை வாழ்க்கைக்கு பயன்படுத்த உதவுவதுமே சர்வதேச தமிழ் புதிய ஏற்பாட்டு விளக்கவுரைகளின் நோக்கமாகும். சாதாரண கிறிஸ்தவர்களும், முழுநேர ஊழியர்களும், போதகர்களும், இறையியல் மாணவர்களும் வாசித்து பயன்பெறக்கூடிய வகையில் எழுதப்பட்டிருக்கும் இந்த விளக்கவுரைகள் பல தசாப்தங்களுக்கு பலருடைய வாழ்வையும் அறிவையும் தேவனை நோக்கித் திருப்பும் என்பதே இவ்வமைப்பினரின் நம்பிக்கை. சிறையிலிருந்து எழுதப்பட்ட பல சிறப்பான சத்தியங்களை உள்ளடக்கிய பிலிப்பியர் நிருபத்தை எளிதாகப் புரிந்து கிறிஸ்துவின் சிந்தையை பற்றிக்கொண்டு பயணிக்க உதவும் நூல். ஆசியாவில் பல கல்லூரிகளில் இறையியல் கற்பிக்கும் முனைவராகப் பணியாற்றியவர் மார்க் அல்ரோய் மஸ்கிறேஞ்ஞ* (Mark Alroy Mascrenghe).

## 220. (2) கிறிஸ்தவ பக்தி இலக்கியங்கள், கீர்த்தனைகள், பக்திப்பாடல்கள்

## 16072

**ஆன்மீகத் தேடல்.** *அ.திருச்செல்வம். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, 1ஆவது பதிப்பு, 2021. (யாழ்ப்பாணம்: ஜெயந்த் சென்டர், 28, மார்ட்டின் வீதி).*

*174 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*13.5 சமீ.*

*"மறை அருவித் துளிகள் என்ற நூலின் கட்டுரைகளை எழுத எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அருட்பணியாளர் பேனாட் ரெக்னோ அவர்களின் எழுச்சியூட்டும் உற்சாகமே எழுத்துத்துறைக்குள் என்னை மீண்டும் இழுத்தது. அவர்கள் ஜேர்மனியில் இருந்த காலத்தே அளித்த உணர்வு கிறிஸ்துவை நன்கு அறிய இந்நூலை எழுத என்னை வைத்துள்ளது. அடிக்கடி "தொடுவானம்" என்னும் ஜேர்மன் ஆன்மீக சஞ்சிகைக்கு கட்டுரைகள் எழுதுவேன். அவற்றில் சிலவற்றையும் இணைத்து நான்கு நற்செய்திகள் ஏன்? அவை அவசியம் தானா? எனக் கேள்வி எழுப்பி கிறிஸ்துவ அனுபவங்களை நூலாக எழுதியுள்ளேன். கேள்வியும் பதிலுமாக வரும் பகுதி ஒரு புதிய பரிமாணம். திருக்குறளும் நாமும் என்னும் அங்கம் நல்ல வரவேற்பைப் பெறும் என எண்ணுகின்றேன். செபமாலை பற்றியும், ஒளியைப் பற்றியும் உப்பைப் பற்றியும், கிறிஸ்தவர்களாக நாங்கள் அறியவேண்டியவை எழுதப்பட்டுள்ளன. நாங்களே ஆண்டவனின் கோவில்கள்*

எனும் எண்ணம் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டு பழமையானது." (நூலாசிரியர், நன்றியுரையில்).

### 16073

**ஒப்புரவின்றி எதிர்காலம் இல்லை (இறையியல் கட்டுரைகள்).** அருட்பணி அ.ஸ்ரீபன் (மூலம்), வி.பி.தனேந்திரா(பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: ராதவல்லி வெளியீடு, அரியாலை மேற்கு, 1ஆவது பதிப்பு, மே 2012. (அச்சக விபரம் தரப்படவில்லை)

76 பக்கம், விலை: ரூபா 100.00, அளவு: 21x14.5 சமீ.

திருமறை கிறிஸ்தவ வாழ்விற்கு முக்கியமான ஓர் ஏடாகக் காணப்படுகின்றது. திருமறையை விளக்க வேதாகம விளக்கவுரைகள் பயன்படுகின்றன. இந்நூலில் உள்ள கட்டுரைகளும் வேதாகமப் பகுதிகளுக்கான ஒரு விளக்கவுரையாக அமைகின்றது. அருள்பணி அ.ஸ்ரீபன் அடிகளார் பிலிமத்தலாவ இறையியல் கல்லூரியில் விரிவுரையாளராக 2010 முதல் பணியாற்றி வருகின்றார். இவர் நல்லூர் புனித யாக்கோபு ஆலயத்தின் பங்குத் தந்தையாக பணியாற்றிய 2004-2009 காலப்பகுதியில் பல்வேறு கிறிஸ்தவ அமைப்புகளிலும் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 51604).

மேலும் பார்க்க:
மீட்பின் சுவடுகள்: கவிதைத் தொகுதி. 16568

## 294.3 பௌத்தம்

### 16074

**பௌத்தம் சிறந்த வினா-சிறந்த விடை.** குரு எஸ்.தம்மிக்க (ஆங்கில மூலம்), தி.சுகுணன் (தமிழாக்கம்). தெகிவளை: பௌத்த கலாச்சார நிலையம் (Buddhist Cultural Centre), 125, அன்டர்சன் வீதி, நெடிமல, 1ஆவது பதிப்பு, 2016. (மஹரகம: Ad Arts, இல.110A, 1/1, பழைய கொட்டாவ வீதி).

ix, 114 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15.5 சமீ., ISBN: 978-955-663-527-0.

அவுஸ்திரேலிய நாட்டு பௌத்த அறவண அடிகளான வணக்கத்துக்குரிய சிராவஸ்தி தம்மிக்க பாந்தே அவர்கள் எழுதிய Good Question Good Answer என்ற ஆங்கில நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு இதுவாகும். பௌத்தம் என்றால் என்ன?, பௌத்த அடிப்படைக் குறிக்கோள்கள், பௌத்தமும் கடவுள் கொள்கையும், ஐந்து நல்லொழுக்கப் போதனைகள், மறு பிறப்பு, தியானம், மெய்யறிவும் இரக்கவுணர்வும், மரக்கறி உணவுமுறை, நல்லதிர்ஷ்டமும் விதியும், ஆண் மற்றும் பெண் துறவிகள், பௌத்த சமய நூல்கள், பௌத்த வரலாறும் வளர்ச்சியும், பௌத்தராக மாறுவது, புத்தரின் பொன்மொழிகள் ஆகிய 14 அத்தியாயத் தலைப்புகளில் இந்நூல் விரிந்துள்ளது.

## 294.5 இந்து சமயம்

### 16075

**இந்து மதத்தின் பரிணாமச் சிந்தனைகள்.** கார்த்திகா கணேசர். சென்னை 600002: காந்தளகம், 68, அண்ணா சாலை, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2022. (சென்னை 600002: காந்தளகம், 68, அண்ணா சாலை).

(3), 135 பக்கம், புகைப்படம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-81-897-0881-8.

நூலாசிரியர் நாட்டியக் கலாநிதி கார்த்திகா கணேசரின் பவளவிழா ஆண்டுச் சிறப்பு வெளியீடாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. சிந்தனை வளர்ச்சி, இருக்கு வேதம், சிவலிங்கம், தைத்திரேய உபநிடதம் கூறும் ஐந்து கோஷங்கள், உடல் மெய், காமசூத்திரம், கஜுராஹோ, யோகம், மௌனம், குரு சிஷ்யப் பாரம்பரியம், இந்து மதச் சிந்தனைகள், இந்தியப் பாரம்பரிய அறிவியல் அறிவு, சூரிய சித்தாந்தம், சித்திரைப் புத்தாண்டு, கௌதமர், பௌத்தம் எவ்வாறு இந்தியாவிலிருந்து வெளியேறியது?, நடராசர் தாண்டவமும் தத்துவார்த்தப் பின்னணியும், இயக்கத்தின் வடிவமே நடராச மூர்த்தி ஆகிய 18 கட்டுரைகள் இந்நூலில் அடங்கியுள்ளன. அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் நாட்டிய கலாநிதி திருமதி கார்த்திகா கணேசர், யாழ்ப்பாணம் இணுவில் மகாவித்துவான் ந.வீரமணி ஐயர் அவர்களிடம் நாட்டியக்கலை பயின்று பின்னர் தமிழ்நாட்டு வழுவூர் இராமையா பிள்ளையிடம் அவரது வீட்டிலேயே குருகுலவாசம் செய்து முறைப்படி நடனத்தைப் பயின்றவர். இவரது நாட்டியத் திறமைக்குப் பரிசாகத் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை விருது, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் விருது, இலங்கை இந்து கலாசார அமைச்சின் "நாட்டிய கலாநிதி" விருது ஆகியவற்றைப் பெற்றவர்.

### 16076

**கணபதி பூஜா மந்த்ர கோஷம்.** கோப்பாய் சிவம் (இயற்பெயர்: பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், ஸ்ரீ நகரம், அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம், மீள் பதிப்பு, ஜுலை 2020, 1ஆவது பதிப்பு, மே 2020. (சுன்னாகம்: ஸ்ரீவித்யா கணனி அச்சகம், இணுவில்).

160 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 26.5x18.5 சமீ.

நூலின் தலைப்பு உள்ளே "விநாயகபூஜா மந்த்ர கோஷம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. விநாயகருடன் தொடர்பான தியானங்கள், தோத்திரங்கள், வேத மந்திரங்கள் முதலியவற்றின் தொகுப்பு. விநாயகர் வழிபாடு-தகவல் தொகுப்பு, யாக மண்டப பூஜை, விநாயகரின் பல்வேறு தியானங்கள், விநாயகரின் பல்வேறு மந்திரங்கள், விநாயகருக்குரிய வேத மந்திரங்கள், விநாயகரின் பல்வேறு ஸ்தோத்திரங்கள், விநாயக சதுராவிர்த்தி தர்ப்பணம் ஆகிய அத்தியாயங்களை இந்நூல் கொண்டுள்ளது. விடயதானங்கள் சம்ஸ்கிருதம்-தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் முதற் பதிப்பு, 18.05.2020 அன்று அமரர் ஸ்ரீமதி கிருஷ்ணமூர்த்தி ஐயர் யோகநந்தினி அம்மா நினைவாக அவரது

குடும்பத்தினரால் அன்பளிப்புப் பிரதியாக வெளியிடப்பட்டது. *(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70029).*

## 16077

**சிவபூசை முறைகளிற் சித்தாந்த விளக்கம்: ஆன்மார்த்தம்.** செ.சொர்ணலிங்கம். *கொழும்பு: சிவத்திரு மன்றம், 32 B, ஸ்ரீ சுமங்கலா வீதி, ரத்மலானை, 1ஆவது பதிப்பு, 2017. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 681, காங்கேசன்துறை வீதி).*

xlv, *485 பக்கம், விலை: ரூபா 1200., அளவு: 22x14 சமீ.,* ISBN: *978-955-4767-01-0.*

*சிவபூசை தொடர்பான வேதாகம புராணக் குறிப்புகள், முன்னுரை (பஞ்சசாதாக்கிய விளக்கத்துடன் நுவலுவது), தீக்கையும் கிரியையும் (தீக்கைப் பெருமை, தீக்கை விபரம், கிரியை அறிமுகம்), தசகாரியம் (சித்தாந்தம், சிவப்பிரகாசம், உண்மைநெறி விளக்கம், துகளறு போதம், சித்தாந்தப் பட ஆதாரம், சித்தாந்தங் கற்போர் தரம், அவத்தைகள் மூன்றாதல், தக்ஷணகைலாய மான்மிய பிரமாவின் சிவபூசை), பூசை (அறிமுகம், சிவபூசைச் சிறப்பு, பூசை வகை, பூசை இடம், பூசைப் பொருட்கள், ஆன்மார்த்த பூசைவகை, சூரிய பூசை), மந்திரங்கள், பூசை (சூரிய பூசை, சிவபூசை, த்வநிச்சண்டர் பூசை முதலியன), அறிமுறை, செய்முறை பற்றிய மேலதிக விளக்கம், முத்திரைகள், ஒழிபுநிலைக் குறிப்புகள், பின்னிணைப்பு (குஞ்சிதபாதம், ஆகம சித்திரம், கற்பூர மகிமை, தத்துவ விளக்கப்படம், பிராமணியம் காத்தல் மேலதிகம், கிரியை என மருவுவன யாவும், பிரணவ யோகம்-திருமந்திரம், காயத்திரி மந்திரம், சிவ விளக்கம்-நாவலர், இந்து பற்றி மேலதிக குறிப்பு, மந்திரமும் வடமொழியும், பல்குறிப்புகள் ஆகிய இயல்களில் இந்நூல் சித்தாந்த செம்மல் சிவத்திரு ஈசான சொர்ணலிங்க தேசிகர் அவர்களால் விரிவாக எழுதப்பட்டுள்ளது.*

## 16078

**தயாளம் தரும் திருவருட் தகவல்கள்: பாகம் 1.** த.திருவருட்செல்வம் (புனைபெயர்: தயாளன்). *யாழ்ப்பாணம்: த.திருவருட்செல்வம், குகபதி, வர்த்தலைவிளான், தெல்லிப்பழை, 1ஆவது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (தெகிவளை: அவனி பிரின்ட்ஸ்).*

*64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.*

*இந்நூல் மனிதப் பிறவியின் நோக்கத்தை அடைவதற்கு வேண்டிய அருட்தகவல் களைத் தந்து வழிப்படுத்தும் ஓர் ஆற்றுப்படை நூலாக விளங்குகின்றது. நீண்டகாலமாக தாயகத்திலும் தமிழகத்திலும் தலயாத்திரை செய்துவரும் இந்நூலாசிரியர் அத்திருத்தலங்கள் பற்றிய வரலாறுகள், வணக்கமுறைகள், ஐதீகங்கள், கர்ணபரம்பரைச் செய்திகள் போன்றவற்றைத் தமது நூலறிவு, அனுபவம், பக்குவம் போன்றவற்றிற்கேற்ப இந்நூலில் ஆவணப்படுத்தியுள்ளார். அத்துடன் பொதுவாக நமது சமய அனுட்டானங்களாகிய விரதங்கள், பூசைகள்,*

பூசைக்கு வேண்டிய மலர்கள், திரவியங்கள் போன்ற விபரங்களையும் தொகுத்தளித்துள்ளார்.

## 294.5(1) இந்து சமய பாடநூல்கள்

### 16079

**சைவப்பிரகாசிகை.** ச.குமாரசுவாமிக் குருக்கள். அச்சுவேலி: ஆசிரியர் சங்கம், சரஸ்வதி வித்தியாசாலை, 1ஆவது பதிப்பு, பங்குனி 1933. (சுன்னாகம்: திருமகள் அச்சியந்திரசாலை).

(4), 127 பக்கம், விலை: 40 சதம், அளவு: 19x14 சமீ.

விநாயகக் கடவுள்-1, விநாயகக் கடவுள்-2, நம்பியாண்டார் நம்பி, சிவபெருமான், விட்டுணு பிரமர் அடிமுடி தேடியது, உமாதேவியார்-1, உமாதேவியார்-2, சுப்பிரமணியக் கடவுள், சிவதூஷணம், வீரபத்திரக் கடவுள் சர்ப்பவடிவங்கொண்டது, வைரவக் கடவுள், தவம், அன்புடைமை-1, அன்புடைமை-2, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் ஞானப்பாலுண்டது, பாண்டியன் சுரந்தீர்த்தது, அப்பூதி அடிகள் நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் முதலை வாய்ப்பட்ட பிள்ளையை மீட்டது, மாணிக்கவாசக சுவாமிகள் புத்தரை வாதில் வென்றது, மெய்கண்டதேவர், உமாபதி சிவாசாரியார், கோச்செங்கட் சோழநாயனார், ஆலய வழிபாடு-1, ஆலய வழிபாடு-2, சிவாலயத் திருத்தொண்டுகள், திருவிளக்கிடுதல், சிவநின்மாலியம், சிவத்திரவியங் கவர்தல், குருசங்கம வழிபாடு, நக்கீரர், சுப்பிரமணியரும் ஔவையாரும், முசுகுந்தச் சக்கரவர்த்தி, கரிக்குருவி உபதேசம் பெற்றது, விட்டுணு, சைவாசாரியரும் வைணவனும், சண்டேசுர நாயனார் ஆகிய 36 பாடங்களை உள்ளடக்கிய சைவ சமய பாடப்புத்தகத்தின் முதலாம் பதிப்பு இதுவாகும்.

### 16080

**சைவப்பிரகாசிகை: 3ம் புத்தகம்.** ச.குமாரசுவாமிக் குருக்கள். அச்சுவேலி: ச.குமாரசுவாமிக் குருக்கள், மனேச்சர், சரஸ்வதி வித்தியாசாலை, 5ஆவது பதிப்பு, மாசி 1956. (பருத்தித்துறை: சிவஸ்ரீ வைத்தீசுவரக் குருக்கள், கலாநிதியந்திரசாலை).

(4), 56 பக்கம், விலை: 60 சதம், அளவு: 19x14 சமீ.

நான்காம் வகுப்புக்குரிய இப்பாடநூலில் வலம்புரி விநாயகர், திருக்கேதீச்சரம், திரிகோணமலை, நடராஜப் பெருமான், மாசிமகம், பிரதோஷம், சிவபெருமான் இயக்க வடிவங் கொண்டது, மகிடாசுர சங்காரம், சுப்பிரமணியக் கடவுள் மரக்கலமேறி வந்தது, சுப்பிரமணியக் கடவுள் ஆட்டுக்கடாவை வாகனமாகக் கொண்டது, உருத்திராக்ஷம், திருநந்தி தேவர், மாணிக்கவாசக சுவாமிகள்-1, மாணிக்கவாசக சுவாமிகள்-2, திருநாளைப்போவார் நாயனார், விட்டுணு சிவபூசை செய்தது, அரதத்தாசாரியர்-1, அரதத்தாசாரியர்-2, பெரியோரைச் சேவித்தல், தருமம், ஆறுமுக நாவலர், தோத்திரத் திரட்டு ஆகிய 22 சைவ சமய பாடங்கள் இடம்பெற்றுள்ளன.

## 294.5(2) இந்து நிறுவனங்கள், ஆலய வரலாறுகள்

### 16081

**இணுவில்அருள்மிகு சிவகாமி அம்பாள் ஆலய வரலாற்றுப் பதிவுகள்.** மூ.சிவலிங்கம். யாழ்ப்பாணம்: கலாபூஷணம் மூ.சிவலிங்கம், இணுவில், 1ஆவது பதிப்பு, பங்குனி 2023. (யாழ்ப்பாணம்: சுடர்நிலவு கிராப்பிக்ஸ், இணுவில் கிழக்கு, இணுவில்).

xxvi, 212 பக்கம், 26 தகடுகள், விலை: ரூபா 1000., அளவு: 25x18.5 சமீ.

கலாபூஷணம் மூ.சிவலிங்கம் அவர்கள் தனது 90ஆவது அகவையில் எழுதி வழங்கியுள்ள இந்நூல் அவரது 33ஆவது நூலாகும். இந்நூலில் நூல்முகம், இணுவில் சிவகாமி அம்பாளின் ஆலய அமைவிடம், சிவகாமி அம்பாளின் இன்றைய ஆலய வளர்ச்சியின் ஆரம்பகாலம், சிவகாமி அம்பாளின் பல்துறை ஆலயப் பணிகளின் மையமான வ.கா.வயிரவப்பிள்ளையின் சுருட்டுக் கொட்டில், சிவகாமி அம்பாளின் திருப்பணியில் சாத்திரம்மா, சாத்திரம்மாவின் காலத்தில் நடைபெற்ற இதர கட்டுமானங்கள், அன்னையின் அருள்பெற்ற அடியார் வரிசையில், சைவத் திருநெறிக் கழகத் தொண்டர்களும் சிவகாமி அம்பாளின் பாடல்களும், இணுவில் சைவத் திருநெறிக் கழகத்தின் பன்முக அறப்பணிகள், சிவகாமி அம்பாளின் அதிசிறந்த விழாக்கள், ஆலய தர்மகர்த்தாக்களின் பரம்பரை, இவ்வாலயத்தின் பூசைகள் விழாக்கள் பெருவிழாக்கள், இவ்வாலயத்தில் பவனி வரும் ஊர்திகள், இவ்வாலயச் சூழலில் வளர்ந்த அறப்பணிகளும் சைவசமய கலை கலாசாரப் பண்பாடும் மண்ணின் எழுகோலமும், சிவகாமி அம்பாளின் பெருமையை உணர்த்தும் சான்றுகள், தொண்டர் தம் பெருமை, இங்கு நடமாடிய சித்தர்களும் அருளாளர்களும் இச்சூழலின் எழுகோலமும், இவ்வாலய ஆரம்பகாலத் தொடரின் தொகுப்பு, சிவகாமி அம்மன் கோயிலின் புனர் நிர்மாண வளர்ச்சி, இவ்வாலயத்தில் அமைந்த திருமண மண்டபம், இவ்வாலயத்தின் பெருஞ்சாந்தி விழாவும் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழாவும் (கும்பாபிஷேகம்) நடைபெறுவதற்கு ஏற்பட்ட காலதாமதம், சிவகாமி அம்மன் கோவில் இன்றைய பரிபாலகரின் பரம்பரையில் நடைபெற்ற கும்பாபிஷேகங்கள், இவ்வாலயத்தின் பருவகாலத் தொண்டர்களின் சிறப்பு, இவ்வாலய வடிவமைப்பில் ஏற்பட்ட சிறப்பான மாற்றங்கள், ஆலயப் பணியாற்றியோரின் பிள்ளைகள் நிறுவிய இன்றைய நினைவுச் சின்னங்கள், கும்பாபிஷேக மகிமை, இவ்வாலயத்தின் ஆறாவது மகா கும்பாபிஷேக ஏற்பாடும் நாலாம் தலைமுறையான ஆலய பரிபாலகரின் பணிச்சிறப்பும், இப்பெருஞ்சாந்தி விழாவைச் சிறப்பிக்க வந்த சிவாச்சாரியார்கள், இவ்வாலயத்தில் 27.03.2022 நடைபெற்ற பெருஞ்சாந்தி நிறைவும் குடமுழுக்கும், 28.03.2022 காலை மண்டலாபிஷேகம் தொடர்ந்து 48 நாட்கள் சிவகாமி அம்பாளின் ஆலயத்தில் நித்திய பூசைகளின் விபரம், கும்பாபிஷேக நிகழ்வில் கலைகளின் காணிக்கையாக இசைப்பேழைகளின் வெளியீடுகள், இவ்வாலயத்தின் மீது பாடப்பெற்ற பாடல்கள், நூலை அணிசெய்த சான்றுகள், நிறைவாக ஆகிய 33 தலைப்புகளில் இவ்வரலாற்று நூல் எழுதப்பட்டுள்ளது.

### 16082

**இணுவில்-கோண்டாவில் காரைக்கால் சிவாலய வரலாற்றுப் பதிவுகள்.** மூ.சிவலிங்கம். யாழ்ப்பாணம்: சைவத் திருநெறிக் கழகம், இணுவில், 1ஆவது பதிப்பு, மார்கழி 2021. (யாழ்ப்பாணம்: சுடர்நிலவு கிராப்பிக்ஸ், இணுவில்).

xxiv, 136 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21.5x15.5 சமீ.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இணுவில், கோண்டாவில், உரும்பிராய் ஆகிய மூன்று ஊர்களின் எல்லையில் அமைந்துள்ள ஊர் காரைக்காலாகும். ஆதிகால சிவன் கோவிலின் இருப்பிடம் இதுவாகும். இந்நூல் இச்சிவாலய வரலாற்றை விரிவாகப் பதிவுசெய்துள்ளது. ஆதி முதல் 1875 வரை, பெரிய சந்நியாசியாரின் அவதாரமும் பணிகளும், தேரோடும் வீதிக்குக் குறுக்கேயுள்ள தடைநீக்கம், இணுவில் கந்தசுவாமி கோவிலிலிருந்து காரைக்காலுக்கு ஏழு தேர்ப் பவனி, பெரிய சந்நியாசியாரின் இறுதிக் காலம், பெரிய சந்நியாசியாரின் பிற்பட்ட காலம், இடைக் காலத்தில் ஏற்பட்ட மாற்றமும் பூசைகளும், அம்பலவாணர் சுவாமிகளின் அறிமுகம், சுவாமி களின் ஆரம்பகால ஆலயப்பணி, சுவாமிகளின் வாழ்வாதாரமும் பணிகளும், சுவாமிகளின் அருட்பணியால் வளர்ந்த ஆலயத் திருப்பணி, காரைக்கால் சிவாலயத்தின் பூசைகள், விழாக்கள், பெருவிழாக்களுக்கான ஏற்பாடுகளும் பெரு விழாக்களும், காரைக்கால் அம்பலவாணர் சுவாமிகளின் காலத்துப் பெருவிழாச் சிறப்புகள், சுவாமிகளின் காலத்துப் பெருவிழாவில் சமய நிகழ்வுகள், அம்பலவாணர் சுவாமிகளின் இணுவில் கந்தசுவாமி கோயிற்பணிகள், சுவாமிகளின் இறுதிக் காலம், பெரிய சந்நியாசியாரும் அம்பலவாணர் சுவாமிகளும் ஒரே நோக்கில், அம்பலவாணர் சுவாமிகளின் காலத்திலிருந்து பூசைகள் விழாக்களை அலங்கரித்த பூசகர்கள், சிவாச்சாரியார்கள், காரைக்கால் சிவாலயத்தின் தொண்டர்கள், நிறைவாக, நாதர்முடி மேலிருக்கும் நல்ல பாம்பு, திருவூஞ்சல் பாடல் ஆகிய 23 தலைப்புகளில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது.

### 16083

**ஈழத்து ஆலயங்கள்: யாழ். மாவட்ட திருத்தலங்கள் (பாகம் 1).** வை.சோமசேகரன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 2: அகில இலங்கை இந்து மாமன்றம், 91/5, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2015. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48 B, புளூமெண்டால் வீதி).

xxxi, 735 பக்கம், 24 தகடுகள், புகைப்படங்கள், விலை: ரூபா 1250., அளவு: 26.5x19 சமீ., ISBN: 978-955-1133-03-0.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அறுபதாவது ஆண்டு வைரவிழாவையொட்டி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இந்து ஆராய்ச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட நூல். வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட வைரமுத்து சோமசேகரன் யாழ் மாவட்ட திருத்தலங்களின் வரலாறுகளை ஈழத்து ஆலயங்கள் என்ற இந்நூலில் தொகுத்திருக்கிறார். இதில் 70 விநாயகர் ஆலயங்களும், 52 சிவன் ஆலயங்களும், 105 அம்மன் ஆலயங்களும், 50 முருகன் ஆலயங்களும், 59 வைரவர் ஆலயங்களும், 28 ஏனைய ஆலயங்களுமாக மொத்தம் 364 சைவ ஆலயங்களின் வரலாறுகள்

தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பபட்டது. சேர்க்கை இலக்கம் 59215).

## 16084

**கிராமிய மண்ணில் முருகன் ஆலயங்கள் மூன்று.** மூ.சிவலிங்கம். யாழ்ப்பாணம்: கலாபூஷணம் மூ.சிவலிங்கம், இணுவில் சைவத் திருநெறிக்கழகம், காரைக்கால் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில், 1ஆவது பதிப்பு, மே 2016. (இணுவில்: வைரஸ் பிரின்டர்ஸ்).

xxx, 254 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 24.5x18 சமீ., ISBN: 978-955-44538-1-4.

ஆசியுரைகள், வாழ்த்துரைகள், முருகன் பாடல்கள், அணிந்துரைகள், முன்னுரை ஆகியவற்றுடன் முருகப் பெருமானின் தோற்றத்தில் சிவதத்துவங்கள், முருகனின் திருவிளையாடல்களும் கந்தபுராண கலாசாரமும் ஆகிய இரண்டு கட்டுரைகளுடன் விரியும் இந்நூலில் இணுவில் கந்தசுவாமி கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் ஆகிய மூன்று முருகன் ஆலயங்கள் பற்றிய விரிவான தலவரலாறுகளுடன் கூடிய பல்வேறு வரலாற்றுத் தகவல்களும் காணப்படுகின்றன. நூலாசிரியர் நீண்டகாலமாக கிராம அலுவலர் பணியை மேற்கொண்டிருந்தமையால், கிராமங்களும், கிராம நிறுவனங்களும், ஆலயங்களும் தொடர்பான நுண்பாகத் தகவல்களுடன் உறவாடியவர். அந்தப் பயிற்சி இந்நூ லாக்கத்திற்குரிய அறிகைப் பின்புலத்தை அவருக்கு வழங்கியுள்ளது.

## 16085

**கோபுர தரிசனம் கோடி புண்ணியம்: ஈழத்துக் கோயில்களின் தரிசனம்.** பொன். குலேந்திரன். கனடா: குவியம் வெளியீடு, 2796, Keyness Crescent, Mississauga, Ontario, L5N3A1, 1ஆவது பதிப்பு, மே 2005. (கனடா: Print Fast, Scarborough).

192 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 400., அளவு: 22.5x15 சமீ.

ஆலயத்தின் அமைப்பு, விநாயகர் வழிபாட்டின் தத்துவம், ஈழத்தில் விநாயகர் கோவில்கள், சிவ வழிபாட்டின் தத்துவம், ஈழத்து ஐந்து ஈஸ்வரங்கள், ஈழத்துச் சிவன் கோயில்கள், முருக வழிபாட்டின் தத்துவம், ஈழத்தில் முருக வழிபாடு, நல்லூர் கந்தசுவாமி கோவில், செல்வச் சந்நிதி, கதிர்காமம், ஈழத்தில் முருகன் கோயில்கள், கிழக்கு ஈழத்து முருகன் கோவில்கள், ஈழத்தில் விஷ்ணு வழிபாடும் அதன் தத்துவமும், ஈழத்து விஷ்ணு கோயில்கள், சக்தியின் தத்துவமும் சக்தி கோயில்களும், காளியின் தத்துவமும் காளி கோயில்களும், கண்ணகி அம்மன் வழிபாடும் கோயில்களும், திரௌபதை அம்மன் வழிபாடும் கோயில்களும், ஈழத்தில் ஐயனார்-வைரவர் வழிபாடு, ஈழத்தில் மற்றைய வழிபாட்டுக் கோயில்கள் ஆகிய 21 தலைப்புகளில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 69969).

## 16086

**திருக்கேதீச்சரம்: ஆவணப் பெட்டகம்.** *ஆறு.திருமுருகன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: இலங்கைத் தமிழியற் கழகம், நல்லூர், 1ஆவது பதிப்பு, 2022. (யாழ்ப்பாணம்: மிக்கி பிரின்டிங் ஸ்பெஷலிஸ்ட், பலாலி வீதி, திருநெல்வேலி).*

viii, *432 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 2500., அளவு: 26*x*18 சமீ.,* ISBN: *978-624-6211-01-1.*

*இலங்கையில் பாடல் பெற்ற தலமான திருக்கேதீச்சரம் ஆலயத்தின் வரலாற்று தகவல்கள் அடங்கிய ஆவணப் பெட்டகமாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. திருக்கேதீச்சரத்தின் தொன்மையினையும் வரலாற்றையும் சைவத்தின் பெருமை களையும் ஒருங்கே வெளிக் கொண்டுவரும் வகையில் இந்த ஆவணத்தினை தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளனர். திருமுறைகள், முதலாம் இராஜராஜ சோழனது திருக்கேதீச்சரம் கோவில் கல்வெட்டு, சான்றோர்களின் பதிவுகள், அறிக்கைகள், சட்ட ஆவணங்கள், பத்திரிகைத் தகவல்கள் என ஆறு பிரிவுகளாக இவ்வாவணங்கள் பகுத்துத் தரப்பட்டுள்ளன.*

## 16087

**திருக்கோணேஸ்வரம்.** *சி.பத்மநாதன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2022. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).*

xxvi, *206 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 950., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-659-758-5.*

*புராணங்களில் இடங்கொண்ட புராதன தலம், திருகோணமலையிற் சோழரின் திருப்பணிகள், குளக்கோட்டனும் ஆலய தருமங்களும், கஜபாகு மன்னனின் திருப்பணிகள், காலிங்கராயன் அமைத்த திருக்காமக்கோட்டம், கோகர்ணத்திற் சோடகங்கன், மானியங்களும் கோயில் நிர்வாகமும், திருகோணமலையின் பகோடா, சுவாமி மலையில் வழிபாடு, சுவாமி மலையில் ஆலய புனருத்தாரணம், திருகோணமலையிற் கிடைத்த வெண்கலப் படிமங்கள் ஆகிய 11 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்புகளாக வன்னிபங்களும் கோயில் நிர்வாகமும், கோட்டைவாசல் தமிழ்க் கல்வெட்டு, திருக்கோணேஸ்வரத்தைக் குறிக்கும் பக்திப் பாடல்கள், தக்ஷிணகைலாச மஹாத்மியத்தில் திருக்கோணேஸ்வரம், பேராசிரியர் சுப்பராயலு படித்து வடிவமைத்த சாசன வாசகம் ஆகியவை தரப்பட்டுள்ளன. பேராசிரியர் சி.பத்மநாதன் இலங்கையின் தலைசிறந்த வரலாற்றறிஞர்களில் ஒருவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளமாணிப் பட்டத்தையும், இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர். இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதித் தலைவராகவும் விளங்கியவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் வரலாற்றுத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிய இவர் இந்து பண்பாட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் இந்துக் கலைக்களஞ்சியத்தின் பிரதம பதிப்பாசிரியருமாவார்.*

**16088**

**பழனி: திருஆவினன்குடி-சித்தன் வாழ்வு-பொதினி-சிவகிரி.** இரத்தினம் நித்தியானந்தன். லண்டன்: இ. நித்தியானந்தன், 179, Norval Road, Wembley, Middlesex, HA0 3SX, 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2018. (லண்டன்: ஜே.ஆர். பிரின்ட், இல. 61, Hoe Street, Walthamstow, London E17 4QR).

16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

நான்காவது அனைத்துலக முருகபக்தி மாநாடு கடந்த 2018இல் கொழும்பில் நடந்தேறியது. அந்த மாநாட்டில் வாசிப்பதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரையின் நூல் வடிவம் இதுவாகும். யாழ்ப்பாணம் சித்தன்கேணியைச் சேர்ந்த கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் (1963-1971) இரசாயன விரிவுரையாளராகவும் பிரித்தானியாவில் செயின்ட் மேரி மருத்துவப் பள்ளி, இலண்டன் பல்கலைக்கழகத்தில் (1972-1993) முதுநிலை அறிவியல் ஆய்வாள ராகவும், மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலையில் (1982-1989) தலைமை ஆசிரியராகவும், பின்னர் இலண்டன் தமிழ் நிலைய தலைமையாசிரியராகவும் (1990-2012), இரத்தினம் அறக்கட்டளையின் தலைவராகவும் (2005 முதல் இன்று வரை) பணியாற்றி கல்விப்பணிகளிலும், சமூகச் செயற்பாடுகளிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திவந்தவர்.

**16089**

**மன்னன் குறிச்சி நெல்லிக் கிணற்றடி தான்தோன்றி கந்தசுவாமி கோவில்.** க.இராசரத்தினம். மிருசுவில்: நெல்லிக்கிணற்றடி தான்தோன்றி கந்தசுவாமி தேவஸ்தான வெளியீடு, மன்னன் குறிச்சி, மிருசுவில் வடக்கு, 1ஆவது பதிப்பு, 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xxii, 204 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15.5 சமீ.

மேற்படி ஆலயத்தைப் பற்றி வெளிவரும் முதலாவது நூல் என்ற வகையிலும், இவ்வாலயத்தின் வரலாற்றை ஆவணப்படுத்தும் முதலாவது நூல் என்ற வகையிலும் இப்பிரசுரம் முக்கியத்துவம் பெறுகின்றது. வாழ்த்துரைகள், முகவுரைகளைத் தொடர்ந்து நூலின் முதற்பகுதியில் ஆலய வரலாறு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இந்து சமயமும் மன்னன் குறிவச்சி மக்களும், கோவிலின் அமைவிடம், கோவிலின் வரலாறு, மூலஸ்தானக் கடவுள், கோயில் அமைப்பு, நித்திய பூசைகளும் மகோற்சவ விழாக்களும், விசேட விழாக்களும் விரதங்களும், கோயிலின் சிறப்புக்கள், முருகப் பெருமானின் சிறப்புக்கள், சைவசமயச் சிறப்புக்கள் ஆகிய 10 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலின் பிற்பகுதியில் திருமுறை சைவசித்தாந்தப் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

### 16090

**மன்னார் சிவபூமி.** மறவன்புலவு க.சச்சிதானந்தன். சாவகச்சேரி: காந்தளகம், மறவன்புலவு, 2ஆவது பதிப்பு, நவம்பர் 2020. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 672 B, காங்கேசன்துறை வீதி).

862 பக்கம், விலை: ரூபா 2500., அளவு: 22x15 சமீ., ISBN: 978-81-897-0880-1.

காலம் காலமாக இலங்கையின் மன்னார் மாவட்டம், சைவப் பாரம்பரியம் மிக்க சிவ பூமியாக விளங்கி வருவதை இலக்கிய, வரலாற்று ஆவணங்களைக் கொண்டு நிறுவும் நூல் இது. மன்னார் மாவட்டத்தில் விளங்கும் திருக்கேதீச்சரம் எனும் பாடல் பெற்ற திருத்தலம் முன்னை கோலோச்சி, பின்னை மண் மூடி, பிறகு பிரம்மாண்ட கோயிலாக அங்கே எழுந்த மெய் சிலிர்க்கும் அருள் வரலாற்றை விரிவாக விவரிக்கும் நூல். இந்நூலில் உள்ள 32 அத்தியாயங்களும் மன்னார் சிவபூமி, இலங்கையைச் சிவபூமியாகக் காத்தோர் (மறவன்புலவு க.சச்சிதானந்தன்), திருக்கேதீச்சரத் தலபுராணம் (க.சி.வைத்தியநாத சாத்திரிகள்), இலங்கை-திருக்கேதீச்சரக் கோவில் வரலாறு (தி.பட்டுச்சாமி ஓதுவார்), Sri Sivapathasundaranar's Interest in Thirukketheecharam (T.Mailvahanam), சைவப் பெரியார் சிவபாதசுந்தரனாரும் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணியும் (ஆ.தம்பையா புலோலி), திருக்கேதீச்சரம் (ஆ.கந்தையா), Thirukketheecharam Papers (Arumuka Navalar), Thirukketheecharam Temple and the Port of Maathoddam (Kandiah Vaithiyanathan), Mr. P.Coomaraswamy's letter dated15th Nov. 1893, Jambukola and Mahatitha(Maathoddam) as Ports of Ancient Ceylon (B.J.Perera), Vanni and the Vannias (C.S.Navaratnam), Excavations at Thirukketheecharam (S.Sanmuganathan), Maathottam in Early History and Literature (Mudaliyar C.Rasanayagam), Maanthai: An important Settlement in North-West Sri Lanka (Vasant Shinde), Describing the Port's Significance (Martha Prickett Fernando), The Pre-modern city in Sri Lanka: The first and second Urbanization(Senaka Bandaranaike), The Excavation of Maanthai (Yang Qinzhang and Zhang Ruibi), Excerpts from: Christianity in Ceylon (James Emerson Tennent), Catholic Action and Thiruketheecharam (Kandiah Vaithiyanathan), Memorandum of Settlement, கத்தோலிக்க மேலாதிக்கமும் திருக்கேதீச்சரமும் (கந்தையா வைத்தியநாதன்), திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை (வி.அல்லிராசா), என்றும் அணையாத அமரசோதி (வி.அல்லிராசா), திருக்கேதீச்சரம் திருமுறைப் பாடல்கள், சைவசமயத்தவரின் வழிபாட்டுப் பாடல்கள், மாதந்தோறும் சிவ நோன்புகள் (க.ஆறுமுகம்), திருக்கோயிலில் நாளாந்தப் பூசை (க.சச்சிதானந்தன்), நினைத்ததை நிறைவேற்றும் பதிகங்கள் (மறவன்புலவு க.சச்சிதானந்தன்), இறப்புநாள் வழிபாட்டுக் கடன் (நா.மகேசன்), வாழ்வியல் வழிகாட்டி (சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள்), மன்னார் மதவாதம் (மறவன்புலவு க.சச்சிதானந்தன்), மன்னார் மாவட்டம், சுட்டி ஆகிய 33 அத்தியாயங்களில் இந்நூல் தொகுக்கப் பெற்றுள்ளது. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27241).

**16091**

**வரலாற்றின் பேசுபொருளாகிய நல்லூரான் செம்மணி வளைவு.** *ஜெயேந்திரா ஹபீசன், பரமலிங்கம் மதுரசன். யாழ்ப்பாணம்: நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல், நல்லூர், 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2021. (யாழ்ப்பாணம்: சோலோ பிரின்டர்ஸ், 520A, கஸ்தூரியார் வீதி).*

*36 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ.*

*நல்லூர் கந்தப் பெருமானின் சிறப்பை உணர்த்தும் வகையில் செம்மணியில் உருவாக்கப்பட்ட வரவேற்பு வாயில் மிகப் பெறுமதியானது. இவ்வரலாற்றுப் பணியை ஆவணப்படுத்தும் நோக்கில் இந்நூல் 29.08.2021 அன்று நல்லைக் கந்தன் பெருந் திருவிழாவின்போது வெளியிடப்பட்டது. இவ்வாயிற் கட்டடம் கந்தபுராணக் கலாசாரத்தைப் பிரதிபலித்து நல்லூர் கந்த சுவாமியாரின் அருட் கடாட்சத்தை வெளிப்படுத்தி பக்தர்களை ஆற்றுப்படுத்தி அமையப்பெற்றுள்ளது. சிறப்பாகக் கொடுங்கை அமைப்புடன் கூடிய நுழைவாயில் அமைக்கப்பட்டு நடுவில் இரண்டு தளங்களைக் கொண்ட இராஜகோபுரம் ஒன்று பண்டிகையில் ஐந்து கலசங்களைக் கொண்ட அமைப்புடன் நிறுவப்பட்டுள்ளது. இவ்வளைவு தொடர்பான விளக்கங்கள் அனைத்தும் வண்ணப் புகைப்பட உதவியுடன் விரிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வளைவு 25.05.2021 வைகாசி விசாகத்தன்று நல்லூர் பிரதேச செயலகத்தினால் நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடலிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.*

## 294.5(21) இந்து சமய ஆண்டிதழ்கள்

**16092**

**நக்கீரம் 2003.** *ஜனகன் தனபாலசிங்கம் (இதழாசிரியர்). கொழும்பு 12: சட்ட மாணவர் இந்து மகாசபை, இலங்கை சட்டக் கல்லூரி, 244, ஹல்ஸ்ரோப் (புதுக்கடை) வீதி, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2004. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).*

*(36), 164 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.*

*இலங்கைச் சட்டக் கல்லூரியின் சட்ட மாணவர் இந்து மகா சபையின் 2003ஆம் ஆண்டுக்கான ஆண்டு மலர் இதுவாகும். பல்வேறு தமிழ் ஆங்கிலக் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது. ஆசிச் செய்திகள், வருடாந்த அறிக்கைகளுடன்,* The Role of Religions in Building a Nation and Creating a Caring Society - From a Hindu Standpoint (C.V.Wigneswaran), Hindu Revival (C.S.Navaratnam), Hindu View of Ethics and Social life (C.S.Navaratnam), Electronic Commerce and the Law (K.Kangesvaran), NON - SUMMARY INQUIRIES ( S.Palitha Fernando), Lessons from the International Criminal Court: Elements of an Agends for TRANSNATIONAL GOVERNANCE (Pubudu Sachithanandan), *யாழ்ப்பாணப் பிரதேசக் கோயில்களின் சமூக நிலை ஒழுங்கமைப்பு - குறிப்புகள் சில - (கார்த்திகேசு சிவத்தம்பி), சட்டமும் சைவமும் (தங்கம்மா அப்பாக்குட்டி),*

மதமாற்றம் வேண்டாம் (க.கணேசலிங்கம்), ஆன்மீகத்தினூடாக ஆளுமையை வெளிப்படுத்திய பெண்கள் (பத்மா சோமகாந்தன்), இந்து மதத்தில் காணப்படும் இராஜநீதிமுறைகள் பற்றிய சிந்தனைகள் (ஆறு.திருமுருகன்), நக்கீரர் (மட்டுவில் ஆ.நடராசா), குற்றம் குற்றமே கவிதை (கம்பவாரிதி இ.ஜெயராஜ்), வணக்கத்திற்குரிய...... ? (1) கவிதை (த.சிவசங்கர்), இயலாமையின் எல்லையில்...... கவிதை (ஆரிகா ஆதம்பாவா), பின் தொடரும் நிழல்கள் கவிதை (அன்பு முகைதீன் றோஷன்), முருக வழிபாடு (க.கணபதிப்பிள்ளை), திருக்கோயில் வழிபாடு (மறைமலையடிகள்), இலங்கையில் இந்து சமயம் (கி.லக்ஷ்மண ஐயர்), திருக்கேதீச்சரமும் திருமுறைகளும் (தி.பட்டுச்சாமி ஓதுவார்), அருந்தமிழ்ப் புலவரின் அஞ்சாப் பெருமை (வ.மு.இரத்தினேசுவர ஐயர்), இந்து மதத்தின் சிறப்பியல்புகள் (கி.வா.ஜகந்நாதன்), சட்டத்தின் தாமதத்தை தவிர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் (கா.கணபதிப்பிள்ளை), ஓய்வு பெற்ற பொலிஸ்மா அதிபருடனான நேர்காணல், வெப்தள ஆபாச படங்களினால் ஏற்பட்டுள்ள நிலைமையும் கட்டுப்படுத்தலும் (செ.செல்வகுணபாலன்), சைவசமயக் கிரியையும் அதன் தத்துவமும் (அனுறஜீ செல்வநாதன்), கடவுள் கொள்கை (ஜெயதேவி சிவானந்தன்), அடிப்படை உரிமை மீறல்களும் அதற்கான பரிகாரங்களும் (T.சரவணராஜா), முதற்றகவலும் இரண்டாம் தகவலும்: பயன்படுத்துதலிலுள்ள வேறுபாடுகள் (சிறீன் இர்பான்), கோல்புறூக் அரசியல் சீர்திருத்தம் (1833) (அ.யோதிலிங்கம்), மனிதாபிமானத்தின் முதல் எதிரி - மரண தண்டனை (தனபாலசிங்கம் ஜனகன்), இலங்கையில் ஊடகவியற் சுதந்திரம் (பா.பார்த்திபன்), சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் (ஜெயதேவி சிவானந்தன்), மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனம், இந்து மகாசபையின் சரித்திரத்தில்.... ஆகிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன.

### 16093

**நக்கீரம் 2006-2007 (கணை 8).** வித்யா அம்பிகைபாகன், நிருஷ்யா செல்வநாதன் (இதழாசிரியர்). கொழும்பு 12: சட்ட மாணவர் இந்து மகாசபை, இலங்கை சட்டக் கல்லூரி, 244, ஹல்ஸ்ரோப் (புதுக்கடை) வீதி, 1ஆவது பதிப்பு, 2007. (கொழும்பு 12: வக்மீ அச்சகம், 258/3, டாம் வீதி).

(28), 189பக்கம், ஒளிப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

இலங்கைச் சட்டக் கல்லூரியின் சட்ட மாணவர் இந்து மகா சபையின் 2006-07ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டு மலர் இதுவாகும். பல்வேறு தமிழ் ஆங்கிலக் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது. ஆசிச் செய்திகள், வருடாந்த அறிக்கைகளுடன் சமயமும் சமூகமும், சட்டமும் அரசியலும் ஆகிய இரு பிரிவுகளின் கீழ் படைப் பாக்கங்கள் ஒழுங்குபடுத்தித் தரப்பட்டுள்ளன. "சமயமும் சமூகமும்" என்ற பிரிவில் அறமும் ஆண்டவனும் (கம்பவாரிதி இ.ஜெயராஜ்), குறிக்கோள் (வசந்தா வைத்தியநாதன்), நம்பிக்கை தான் வாழ்க்கை (எஸ்.என்.உதயநாயகன்), கும்பாபிஷே கமும் கிரியைகளும் (ஸ்ரீலஸ்ரீ வைத்தியநாத பாலசுந்தரசிவாச்சாரியார்), பேரின்பத்திற்கு வழி (A.கங்காதரன்), சமய நெறியில் பண்பாடு (த.கனகரத்தினம்),

Peace is Possible (Nalini Kaneshayogan), சட்டத்தின் அடிப்படை சமயமே (V.S.மகாலிங்கம்), சைவ வாழ்வும் ஆன்மீகமும் தற்காலச் சமுதாயத்திற்கு அவற்றின் பொருத்தப்பாடு (குமாரசாமி சோமசுந்தரம்), இலங்கையின் சமயரீதியான குடித் தொகையின் பிரதேசப் பரம்பல் (ஆர். ஸ்ரீகாந்தன்), Of Religious Identities and Nationalists Fervour (MinnaThaheer), பின் நவீனத்துவத்தின் பின்னால் (பவானி முகுந்தன்), சமயம் காட்டும் வாழ்வு நெறி (ம.பத்மநாதன்), Hurdles and Problems of Cultural Coexistence (S.M.N.S.A.Marsoom), நீதி நெறிமுறி தரும் சமயவாழ்வு (மேனகா கேசவன்), ஆறுபத்து நான்கினுள் ஓர் உன்னதமாம் இசைக்கலை: வரலாற்று நோக்கு (ஷர்மிளதர்ஷினி சிவஞானம்), சட்டத்தின் அடிப்படை சமயமே (இ.பிரியதர்ஷினி) ஆகிய கட்டுரைகளும், "சட்டமும் அரசியலும்" என்ற பிரிவின் கீழ் பயங்கரவாதம் என்றால் என்ன? (க.வி.விக்னேஸ்வரன்), பிரிவிடல் சட்டம் (எஸ்.இளங்கோவன்), Categories of Bodily Injury Specified in The Penal Code (Palitha Fernando), அடிப்படை உரிமைகளும் மீறல்களும் (செ.செல்வகுணபாலன்), Expressions of Folklore: Protection Under the Intellectual Property Law (D.M.Karunaratna), Public Service And Fundamental Rights: Have we Overlooked The Fundamentals? (Viveka Sriwardena de Silva), குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தின் சில அம்சங்கள் (A.சர்வேஸ்வரன்), காலக்கிரமத்தில் உண்டியலொன்றை வைத்திருப்பவன் காலத்தை வென்றவனா? (சாந்தி செகராஜசிங்கம்), உரிமைகள் (சி.அ.யோதிலிங்கம்), இலங்கையில், ஆயுத மோதலினாலான உள்நாட்டு இடப்பெயர்வு (சாமினி சந்திரன்), Demarcation of High Security Zones and the Resultant Mass Displacement of Civilians in Conflict Affected Areas (Swarnarajah Nilakshan), Anticipatory Bail (Aravinda R.I.Athurapane), Bio Genetic Piracy and Patending (Hamsakanambiha Vamadeva), நிர்வாக நடவடிக்கைகளில் நீதிமுறை மீளாய்விற்குக் காரணங்களை வழங்குதல் உறுதியான தளமாகக் காணப்படுகின்றன (ஷர்மினி விக்னேஸ்வரன்), பித்து நிலை எதிர் வாதமாக (ஷோபனா அசோகதாசன்), சுயநிர்ணய உரிமை (நிருஸ்யா செல்வநாதன்), குற்றத்தின் பகுதியொன்றாக குற்ற மனம் (F.Madeeha Mawoon), அடிப்படை உரிமை மீறல்கள்: அகதிமுகாம் வாசியின் குரல் (மேனகா கேசவன்), Europen Union (Vithya Anbigaibagan) ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

**16094**

**நக்கீரம் 2010 (பொறி 11).** சுபாஜினி தேவராஜா (இதழாசிரியர்). கொழும்பு 12: சட்ட மாணவர் இந்து மகாசபை, இலங்கை சட்டக் கல்லூரி, 244, ஹல்ஸ்ரோப் (புதுக்கடை) வீதி, 1ஆவது பதிப்பு, 2010. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 424, காங்கேசன்துறை வீதி).

xxiii, (20), 186 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

இலங்கைச் சட்டக் கல்லூரியின் சட்ட மாணவர் இந்து மகா சபையின் 2010ஆம் ஆண்டுக்கான ஆண்டு மலர் இதுவாகும். பல்வேறு தமிழ் ஆங்கிலக் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது. ஆசிச் செய்திகள், வருடாந்த அறிக்கைகளுடன் IS GOD TRUE, GOOD AND BEAUTIFUL? ( L. M. K. Arulanandam), AN ANALYSIS OF THE FAIR USE PROVISIONS IN THE COPYRIGHT LEGISLATION IN SRI LANKA (W. D. Rodrigo),

சட்டத்தரணியமும் ஆசாரசீலங்களும் (அன்னலிங்கம் பிரேமசங்கர்), CUSTODY DISPUTES BETWEEN PARENTS (Kandaiah Ariyanayakam), TAX AVOIDANCE AND TAX EVASION (S. Selvakunapalan), IMPORTANCE OF PUBLIC TRUST DOCTRINE IN THE CONTEXT OF FUNDAMENTAL RIGHTS JURISDICTION (M. Jude Dinesh), SEEKING REMEDIES FOR TORTURE VICTIMS (T. Subajini), இலங்கையில் ஊடகத்துறையும் மனித உரிமைகளும் (கந்தசாமி மேனகா), விவாகரத்து என்ற சட்ட நிவாரணம் மதக் கோட்பாடுகளை முறியடிக்கிறதா? (இரா. எழில்மொழி), THE IMPOSITION OF STRICT LIABILITY UNDER THE CRIMINAL LAW OF SRI LANKA AND ENGLAND (Thulasika Kesavan), AN INTRODUCDTION TO POLITICAL VIOLENCE ; WITH SPECIAL REFERENCE TO SRI LANKA (N. Sivakumar), இலங்கை இன மோதலின் அரசியற் பொருளாதாரம் (ராஜரட்ணம் ருக்ஷான்), கவிதை: கவிதைப்பூங்கா (மு. திருநாவுக்கரசு), வாழ்வு வளம்பெற உங்கள் சிந்தனைக்கு (அனுசியா சண்முகநாதன்), VEDIC WISDOM (Mahakarta Das), திருவருட்பயனில் முப்பொருட்கள் பற்றிய பார்வை (என். சிறிகாந்தன்), புராணங்கள், திருமுறைகள் வாழ்வியல் திசைகாட்டும் ஒளிவிளக்குகள் (கோ.சி. வேலாயுதன்), வெற்றியல்லாம் தருவான் வேழமுகத்தான் (ந.சத்தியரூபன்), இந்துக்கள் பகவானுக்குரிய பக்தித் தொண்டில் தவிர்க்கப்பட வேண்டிய குற்றங்கள் (த.சியாளினி), இந்து மகா சபையின் சரித்திரத்தில்... ஆகிய படைப்பாக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

### 16095

**நல்லைக்குமரன் மலர் 1993.** தெல்லியூர் செ.நடராசா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1ஆவது பதிப்பு, 1993. (யாழ்ப்பாணம்: அருண் பிரின்டர்ஸ் அன்ட் பப்ளிஷர்ஸ், 15/2, இரண்டாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி).

114 + (6) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18.5 சமீ.

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் இம்மலர், 1996ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின்போது வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றுடன் திருக்கோயில் திருவிழாக்களும் தத்துவங்களும் (ஹஜரதன்), முருகன் புஜங்கப் பூமாலை (உமாபதி), திருமுழுக்காட்டுதல், நல்லைக் கந்தன் ஆலயபரம்பரையினரும் அவர்தம் நிர்வாகங்களும் (க.சி.குலரத்தினம்), தமிழும் தலைவனும் (க.சொக்கலிங்கம்), யாழ். தந்த சித்தர்கள் (ஆத்மஜோதி நா.முத்தையா), அருட்சித்தர் சடையம்மா (தெல்லியூர் அம்பி), ஆறுமுகனுக்குகந்த ஆறுபடைவீடுகள் (முல்லை முருகன்), அழகனைக் காண நாலாயிரம் கண்: வேல் உண்டு வினை இல்லை, நல்லைக்கந்தனின் அற்புதங்கள் (க.சி.குலரத்தினம்), ஒரு திருமுருகன், தமிழின் தலைவன் (நா.க.சண்முகநாதபிள்ளை), பசுவைப் போற்றி வாழ்வோம் (நானா), கோழியைப் பாடிய வாயால் குஞ்சைப் பாடுவேனா? (காரை செ.சுந்தரம்பிள்ளை), ஆறுமுகநாவலர் ஒரு பல்துறை ஆசிரியர் (புஷ்பா செல்வநாயகம்), முருகநாமம்,

பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் அருளிய சண்முக கவசம், அந்நியராட்சியில் நல்லூர் (சி.க.சிற்றம்பலம்), கந்தபுராணம் காட்டும் சைவசித்தாந்தம் (கலைவாணி இராமநாதன்), நான் யார்?, குமரக் கடவுள் (அ.சண்முகதாஸ்), ஈழத்தில் இந்து மதம் (கார்த்திகேசு குகபாலன்), முருகு அல்லது அழகு (சி.வேலாயுதம்), முருகன் வழிபாடுகள் விரதங்கள் (ப.கோபாலகிருஷ்ணன்), நல்லூர்ப் பெரிய கோயில் (கந்தையா குணராசா), வேட்டைத் திருவிழா (வி.சிவசாமி), ஆறுமுகம் ஆன பொருள் (சோ.பத்மநாதன்) ஆகிய படைப்பாக்கங்கள் இம்மலரில் இடம் பெற்றுள்ளன.

### 16096

**நல்லைக்குமரன் மலர் 1994.** தெல்லியூர் செ.நடராசா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1ஆவது பதிப்பு, 1994. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

140 + (14) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18.5 சமீ.

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் இம்மலரின் இரண்டாவது இதழ் இது. 1994ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின்போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றுடன் எமது நோக்கு, ஓம் ஸ்ரீ மகா கணபதியே போற்றி, ஓம் ஸ்ரீ வித்தகனே போற்றி, துள்ளி வருகுது வேல் (தங்கம்மா அப்பாக்குட்டி), நாவலரும் நல்லூரும் (க.சிவராமலிங்கம்), தந்தைக்குக் குரு (சி.வேலாயுதம்), முருகன் பெருமை (நா.க.சண்முகநாதபிள்ளை), பஞ்சதீர்த்த தருப்பணம், புனித நகரமாக்கப்படவேண்டிய நல்லூர் (பொ.பாலசுந்தரம்பிள்ளை), எல்லாம் அற என்னை இழந்த நலம் (கார்த்திகேசு சிவத்தம்பி), கழல் பணிய வினை நீங்கும் (அ.சண்முகதாஸ்), தீக்கூர்ந்த திருமேனியன் (வி.சிவசாமி), திருவிழாக்களின் நியமங்கள் (ப.கோபாலகிருஷ்ணன்), "நல்லூரும் நாவலரும்" சில வரலாற்று நிவைவலைகள் (சி.க.சிற்றம்பலம்), திருமந்திரம் காட்டும் மனித நேயம் (கலைவாணி இராமநாதன்), ஆறுமுக தத்துவம் (நாச்சியார் செல்வநாயகம்), எழிலான் ஒளி வேலான் (சொக்கன்), ஆணவம் போக்கி அருளுவோர் அவதாரம் (காரை செ.சுந்தரம்பிள்ளை), ஓடக்காரன் (சோ.பத்மநாதன்), "நல்லைக் குருமணி" மணி ஐயர் (பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா), சூரன் பெற்ற பெருமை (த.சிவகுமாரன்), நம்பி கை தொழுவோம் (ஆறு.திருமுருகன்), ஞானவழி நின்ற நல்ல குருநாதன் (நல்லையா விஜயசுந்தரம்), வீசாயோ வேலை நீ (மானிப்பாயூர் வே.த.இரத்தினசிங்கம்), மகா கும்பாபிஷேகம்-சில விளக்கங்கள் (ஆடியபாதன்), திருமுருகன் திருவருள் (சி.சி.வரதராசா), பல்கலை புலவர் க.சி.குலரத்தினம் (யாழ்ப்பாடி), ஏற்றிடுவோம் வாரீர் (வே.த.இரத்தினசிங்கம்) ஆகிய தலைப்புக்களில் எழுதப்பட்ட ஆக்கங்கள் இம்மலரில் அடங்கியுள்ளன.

### 16097

**நல்லைக்குமரன் மலர் 1995.** தெல்லியூர் செ.நடராசா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1ஆவது பதிப்பு, 1995. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

152 + (20) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18.5 சமீ.

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் இம்மலர், 1995ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின்போது வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றுடன் வாழ்வில் சைவம் (இ.தெய்வேந்திரன்), தும்பிக்கை நாதன் துணை (தமிழரசன்), திருமுருகாற்றுப் படை (வை.அநவரதவிநாயகமூர்த்தி), அறியாயோ? (சோ.பத்மநாதன்), நல்லூர் கந்தசுவாமி நான்மணிமாலை (சொக்கன்), அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும் (கோ.சி.வேலாயுதம்), நாவலர் சற்குருமணிமாலை பாடிய அம்பலவாண நாவலர் (அ.ஆறுமுகம்), இந்து மதத்தில் கன்மம் ஒரு நோக்கு (நயினை கி. கிருபானந்தர்), நல்லூர் வீதியில் உலாவிய மூவர் (ஆத்மஜோதி நா.முத்தையா), சரணகமலாலயம் (பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா), யாழ்ப்பாண நகரத்திற்கு ஒரு சதுக்கம் (பொ.பாலசுந்தரம்பிள்ளை), சமஸ்கிருதத்திலுள்ள முருகன் துதிமாலைகள் (வி.சிவசாமி), அந்த ஒரு வாசகம் எது? ஒரு சிந்தனை (க.சிவராமலிங்கம்), முருகனும் தமிழும் (அ.சண்முகதாஸ்), இருபத்தோராம் நூற்றாண்டுக்கான கல்வியும் தெய்வீகப் பொலிவு வழங்குதலும் (சபா. ஜெயராசா), உலகளாவிய இந்துமதம் ஒரு சிந்தனை (கா.குகபாலன்), கரும மார்க்கமும் தருமமார்க்கமும் போதிப்பதென்ன? (கலைவாணி இராமநாதன்), மாலோன் மருகன் (எஸ்.சிவலிங்கராஜா), கச்சியப்பரின் கவிதா சாமர்த்தியம் (தமிழருவி த.சிவகுமாரன்), ஈழ நல்லூர் குறவஞ்சி (நா.க.சண்முகநாதபிள்ளை), நல்லூர் கந்தசுவாமி கோயில் தல இலக்கியங்கள் (பரரசசிங்கம் கணேசலிங்கம்), பிறவாமைப் பெரும் பேறு (நல்லையா விஜயசுந்தரம்), நல்லூரும் நாவலர் சிலையும்: சில வரலாற்று நினைவலைகள் (சி.க.சிற்றம்பலம்), கந்தன் வழிபாட்டில் காவடியாட்டம் ஓர் அறிமுகம் (எம்.வேதநாதன்), அறிவும் அறமும் ஆறுமுகம் (நாச்சியார் செல்வநாயகம்) ஆகிய ஆக்கங்கள் இம்மலரை அலங்கரித்துள்ளன.

### 16098

**நல்லைக்குமரன் மலர் 1996.** தெல்லியூர் செ.நடராசா (கௌரவ பதிப்பாசிரியர்), நல்லையா விஜயசுந்தரம் (உதவிப் பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1ஆவது பதிப்பு, 1996. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

114 + (6) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18.5 சமீ.

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் இம்மலர், 1996ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின்போது

வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றுடன் மனத்தூய்மை வேண்டும், உதவிப் பதிப்பாசிரியரின் உள்ளத்திலிருந்து...., செய்நன்றியாகச் சிறியோம் செய்யத்தக்கது உண்டோ (க.கனகராசா), நல்லூரான் தந்ததும் கொண்டதும் (நா.க.சண்முகநாதபிள்ளை), கந்தபுராண படனம் (பொ. சிவப்பிரகாசம்), கந்தனின் கருணைத் தூது (ஆறு. திருமுருகன்), நல்லைக் குகவேள் (ச.தங்கமாமயிலோன்), நல்லைக் குமரன் - எங்கள் குலதெய்வம் (மானிப்பாயூர் வே.க.இரத்தினசிங்கம்), உதித்தனன் உலகம் உய்ய (கோ.சி.வேலாயுதம்), கும்பாபிஷேக மகத்துவம் (சிவஸ்ரீ பால வைத்தியநாத சிவாசாரியார்), செவ்வேள் அருளும் திருப்பரங்குன்றம் (காரை. செ.சுந்தரம்பிள்ளை), இந்துமதம் காட்டும் இறைவழிபாடு (நல்லையா விஜயசுந்தரம்), சிந்தனைக்கு (க.சிவராமலிங்கம்), இரத்தினமும் முத்தும் (க.சொக்கலிங்கம்), ஞானமே உருவாகிய முருகன் (ப.கோபாலகிருஷ்ணன்), முருகனின் ஆறுமுகங்கள் (அ.சண்முகதாஸ்), நல்லைக்கு ஓர் புனித நகர் (செ.பாலச்சந்திரன்), யாழ்ப்பாணக் குடா நாடும் முருக வழிபாடும் (வி.சிவசாமி), இறையியலும் இளைஞரும் (சி.மகேசன்) ஆகிய ஆக்கங்கள் இம்மலரை அலங்கரித்துள்ளன.

### 16099

**நல்லைக்குமரன் மலர் 2000**. நல்லையா விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1ஆவது பதிப்பு, 2000. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

157 + (18) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18.5 சமீ.

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் மலர். 2000ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின்போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றுடன் ஆலயங்கள் சமூகப் பணியாற்ற வேண்டும் (இ.தெய்வேந்திரன்), இந்து இளைஞர்களுக்கு ஓர் பகிரங்க அறைகூவல் (இரா. இரத்தினசிங்கம்), பிரார்த்தனை (சு.து.ஷண்முகநாதக் குருக்கள்), நல்லூரில் ஒரு மருந்து நலமெல்லாம் தரும் விருந்து (நா.க.சண்முகநாதபிள்ளை), நல்லூரே தஞ்சம் (த.ஜெயசீலன்), நல்லூரான் சரணம் (பு.திலீப்காந்த்), நல்லூர் கந்தனின் கொடியேற்ற வைபவச் சிறப்பு, நல்லூர் முருகனின் திருபுகழ் (நவாலியூர் சோமசுந்தரப் புலவர்), நல்லைக் கந்தப்பனின் சிறப்பு (சேவகப் பெருமாள் 1923ஆம் ஆண்டு), நல்லூர் சிந்தனைக் காப்பு (புத்தூர் பெரியதம்பு சின்னப்பு ஆச்சாரி 1930ஆம் ஆண்டு), ஞானத் தலைவன் நீயிருக்க ... (நெடுந்தீவு லக்ஸ்மன்), தேன் மொழியின் தெய்வம் (நல்லை அமிழ்தன்), தங்கமயில் ஏறிவந்து தமிழ் மக்களை காப்பாயே (காரை சி.சிவபாதம்), காத்தருளும் கருணை வள்ளல் (மீசாலையூர் கமலா), வழிகாட்டும் துணையாக வரவேண்டும் (செ.பரமநாதன்), கந்தன் என்ற நாமம் கலியுக வெப்பைத் தணிக்கும் (சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி), தஞ்சாவூர் (பொ.சிவப்பிரகாசம்), மனம் மொழி மெய் (சிவ. வை.நித்தியானந்த சர்மா), இலங்கையில் முருக வழிபாடு

(கண. ஜீவகாருண்யம்), இறையுணர்வு - சைவ வழிபாடு (செ.மதுசூதனன்), பக்திப் பாடல்களில் ஆடல் (புத்தொளி ந.சிவபாதம்), வடமொழிச் சொல்லிலுள்ள நாமாவளிகள் ஒரு வரலாற்று நோக்கு (வி.சிவசாமி), மயில்வாகனன் (செ.தேவதாசன்), இந்துமதம் கூறும் வாழ்வியல் (பா.சர்வேஸ்வர சர்மா), கந்தனை விட்டால் கதி யார்? (இராசையா ஸ்ரீதரன்), இறைவழிபாட்டின் அவசியம் (சிவஸ்ரீ சிவகடாக்ஷ கணேசலிங்கக் குருக்கள்), திருமந்திரத்தில் சைவசித்தாந்தம் (சிவ. மகாலிங்கம்), நல்லூரானை நாடி மனதை வெல்வோம் (சகுந்தலாதேவி கனகராசா), ஊரினிலே நாம் போய் இருந்திட வேண்டும் (தர்சிகா சந்திரதாஸ்), அருணகிரிநாதரின் அருள் அனுபவம் (மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம்), செல்வச்சந்நிதி முருகன் ஆலய வரலாறு ஒரு நோக்கு (பிரம்மஸ்ரீ காரை.கு.சிவராஜ சர்மா), நீலமயில் மீது வரவேண்டும் (சாருஜா ரங்கராஜா), வாழ நினைத்தால் வாழலாம் (கா.கணேச தாசன்), கலியுக வரதனின் கருணை (இராசையா ஸ்ரீதரன்), நித்தமும் நினைப்பின் (கீழ்கரவை - செல்லையா வல்லிபுரம்), காயத்ரீ மந்திர மகிமை (ஸ்ரீபதி சர்மா கிருஷ்ணானந்த சர்மா), அழகே ஆறுமுகவடிவேலா (சா.அஜிந்தன்), காலையும் மாலையும் கைதொழுவார் (மனோன்மணி சண்முகதாஸ்), கீதை கூறும் வாழ்க்கை நெறி (விக்னேஸ்வரி சிவசம்பு), சயங்கொண்டார் வழியில் அருணகிரியார் (சோ.பத்மநாதன்), இல்லையினித் துயர் என்றுரைக்க அருள் தாருமையா (இராம ஜெயபாலன்), யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும் (சொக்கன்), சிவாகம மரபில் திருக்கோயிற் பண்பாடு (ப.கோபாலகிருஷ்ண ஐயர்), ஈழத்தில் முருக வழிபாட்டின் தொன்மை ஒரு வரலாற்று நோக்கு (சி.க.சிற்றம்பலம்), சாமுசித்தராய் அவதரித்த சம்பந்தன் (மட்டுவில் ஆ.நடராசா), திருவிசைப்பாவில் சேந்தன் தந்த திரு அமுது (தெல்லியூர் செ.நடராசா), புராணங்கள் உணர்த்தும் வேதசிரப்பொருள் (கலைவாணி இராமநாதன்), நல்லைக் கந்தன் பில்ளைத் தமிழ் (ச.தங்கமாமயிலோன்), நல்லூர் கந்தசுவாமி கோயில் பற்றிய நூல்கள் ஆகிய தலைப்புக்களில் எழுதப்பட்ட ஆக்கங்கள் அடங்கியுள்ளன.

### 16100

**நல்லைக்குமரன் மலர் 2001.** நல்லையா விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1ஆவது பதிப்பு, 2001. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

130 + (46) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18.5 சமீ.

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் மலர். 2001ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின்போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றுடன் தெய்வீகம் பரவட்டும் (இ. இராமலிங்கம்), இறைபணியே எம்பணி (இ. இரத்தினசிங்கம்), நல்லூர்க் கந்தன் அர்ச்சனை மாலை (நா.க.சண்முகநாதபிள்ளை), நல்லூரா சொல்லு நலம் (த.ஜெயசீலன்), பக்கம் இருந்தெமைக் காப்பவன் (வ.யோகானந்தசிவம்), நல்லைக் கந்தன் பிள்ளைத்தமிழ்

*(ச.தங்கமாமயிலோன்), நல்லூரரான் திருக்கோலம் காணுவோமடா! (சி.சா. சுதந்திரன்), தமிழர் வாழ்வில் பூமாலை (மனோன்மணி சண்முகதாஸ்), பெரிய புராணத்தில் சைவசித்தாந்தம் (சந்திரிகா நவரத்தினம்), மஹோற்சவங்களில் நவசந்திகளின் முக்கியத்துவம் (கே.எஸ்.சிவஞானராஜா), தெய்வம் இருப்பது எங்கே? (கா.கணேசதாசன்), நல்லை நகர் வீதியிலே நல்லதொரு தேரோட்டம் (ர.சாருஜா), திருவண்ணாமலை (பொ.சிவப்பிரகாசம்), ஈழத்து முருக வழிபாட்டு மரபில் வன்னிப் பிரதேசம் (நடேசப்பிள்ளை ஞானவேல்), முருகவழிபாடு - ஒரு நோக்கு (வீ. சிவசாமி), காத்திடுவாய் நல்லைக் குமரா! (நாகமணி மகேந்திரலிங்கம்), அன்பு நெறி (ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்தசர்மா), குமாரதந்திரம் கூறும் சுப்ரம்மண்யரின் மூர்த்திபேதங்கள் (பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்), தீயவை புரிந்தாரேனும்.....! (மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்), தமிழர் திருமண முறைகள் ஓர் நோக்கு (சுமதி கனகரெட்னம்), நல்லைப் பதியுறையும் நாயகரே இராசையா ஸ்ரீதரன்), சைவமும் தமிழும் இரு கண்கள் திருமுறைகளை ஓதி உய்யுங்கள் (செ.மதுசூதனன்), அடியேன் உன் அடைக்கலமே (நயினை கி.கிருபானந்தா), ஊழ்வினையினை ஒழித்து நம் வாழ்வில் ஒளியேற்று (காரை.சி.சிவபாதம்), சைவசித்தாந்தம் (சோ.ந.கந்தசாமி), தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தன் (இராசையா ஸ்ரீதரன்), தினந்தினம் உன்புகழ் எந்நாவில் ஊறுமே! (கவிஞர் துரையர்), இறைவனின் குழந்தைகள் நாம் (க.சிவசங்கரநாதன்), ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம் (இ.அன்னலிங்கம், வ.கணேசமூர்த்தி) ஆகிய ஆக்கங்களும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.*

**16101**

**நல்லைக்குமரன் மலர் 2010**. *நல்லையா விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1ஆவது பதிப்பு, 2010. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).*

*218 + (82) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18.5 சமீ.*

*நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளி யிடப்படும் மலர். 18ஆவது மலராக 2010ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின் போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகளுடன் திருநல்லைத் தெய்வ வடிவேல் (ச.தங்கமாமயிலோன்), நல்லூரடி நீழல் (த.ஜெயசீலன்), ஆறுமுகனும் அறுபடை வீடுகளும் (வ.யோகானந்தசிவம்), எங்கு நாம் போகின்றோம்? (மு.திருநாவுக்கரசு), நல்லைக்கந்தன் நற்றமிழ்ப் பாமாலை (இராசையா ஸ்ரீதரன்), இதயத்தில் ஈரமென்றும் இல்லையோ? (வதிரி கண.எதிர்வீரசிங்கம்), அருவியாகட்டும் உன் அருட்கடாட்சம் (கண. கிருஷ்ணராஜன்), நல்லைக்குமரன் திருப்புகழ் (வ.சின்னப்பா), நல்லைக்குமரன் காவடிச் சிந்து (கு.துரைராஜன்), உயர்கொள்ளும் நல்லையூர் திருவேல் (அல்வாயூர் சி.சிவநேசன்), நல்லைக்குமரன் கீர்த்தனை (செ.பஞ்சநாதன்), நல்லை முருகன் மலரில் ஒரு நொண்டிச் சிந்து (வை.க.சிற்றம்பலம்), சென்று சேவிக்க (பா.அருண்),*

குகையில் வளருங் கனலே (மனோன்மணி சண்முகதாஸ்), கலியுக வரதன் குருவடிவிலே திருவருள் பாலித்து வருகிறான் (வி.சிவசாமி), அகரவுயிர் போல் (மட்டுவில் ஆ.நடராசா), உதித்தனன் உலகம் உய்ய (கே.எஸ்.ஆனந்தன்), அருணகிரிநாதர் திருப்புகழில் வேண்டுகை (அ.சண்முகதாஸ்), கந்தபுராணம் -ஒரு தோற்றுவாய் (வ.கோவிந்தபிள்ளை), யாழ்ப்பாணத்து முருகப் பிரபந்த இலக்கியங்கள் (கனகசபாபதி நாகேஸ்வரன்), திருவாசகத்தில் இலக்கிய வடிவங்கள் (செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்), தாயுமானவர் காட்டும் சமயநெறி (சிவ. மகாலிங்கம்), தமிழர் வாழ்வில் விருந்தோம்பல் (விக்னேஸ்வரி பவநேசன்), திருக்குறளில் அறிவியல் சிந்தனை (அம்பாலிகா தம்பாபிள்ளை), பக்தி இலக்கியங்களில் தூது (எஸ்.ஜெகநாதன்), இந்து சமயம் ஒரு கலைக்களஞ்சியம் (பா.பிரசாந்தனன்), தமிழ்மறையும் திருமுறையும் (செ.மதுசூதனன்), ஆலய வழிபாடு-கேள்வியும் விளக்கங்களும் (ஜி.பற்குணராஜா), ஊழிக் கனலும் அணுகாது (செல்வ அம்பிகை நடராஜா), ஊன் படைத்த உத்தமர் (பொ.சிவப்பிரகாசம்), குரு வடிவாம் தென்முகக் கடவுள் தெட்சணாமூர்த்தி (வை.சி.சிவசுப்பிரமணியம்), வண்ணார்பண்ணை பெயர் விளக்கம் (பரராஜசிங்கம் கணேசலிங்கம்), பிடியரிசியினால் உயர்ந்த அறப்பணிகள் (மூ.சிவலிங்கம்), உளப்பாதிப்பிலிருந்து விடுதலை பெற ஆலய தரிசனம் உதவுகிறது (க.ஶ்ரீதரன், ஶ்ரீ.அன்புச்செல்வி), ஈழத்து இந்து சமயத்தின் வளர்ச்சிக்கு நாகர் இனம் வழங்கிய பங்களிப்புகள் (செல்லையா கிருஷ்ணராசா), சைவ ஆலயங்களில் மௌன விரதத்தை அனுட்டிப்போம் (கா.சிவபாலன்), கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதன் மூலம் இறையின்பம் பெறுவோம் (கா.யோகநாதன்), கிரகதோஷ பரிகாரம் (தி. பொன்னம்பலவாணர்), நல்லூர் செல்லப்ப சுவாமிகள் (ம.சிவயோகசுந்தரம்), தமிழ் வாழ தமிழ் இனம் வாழ (கணபதி மகேசன்), நல்லூரைப் புனித நகராக்குவோம் (ஜெ.தயாபரன்), இந்து சமயம் கண்ட விஞ்ஞானம் (செ.பரமநாதன்), முதியோர் பார்வையில் வாழ்க்கை பற்றிய நோக்கு (க.சிவலிங்கம்), தேகாந்த நிலையில் சிவத்தமிழ் அன்னைக்கு யாழ் விருது (இ.இரத்தினசிங்கம்) ஆகிய படைப்பாக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

### 16102

**நல்லைக்குமரன் மலர் 2012**. நல்லையா விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1ஆவது பதிப்பு, 2012. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

148 + (80) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18.5 சமீ.

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் மலரின் 20ஆவது இதழ் இதுவாகும். 2012ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின்போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றுடன் பாமாலைகளாக நல்லைநகர்ச் சண்முகரை நாம் பணிவோம் நாளுமே (ச.தங்கமாமயிலோன்), ஆறு தன்மைகள் கொண்ட

ஆறுமுகன் (வ.யோகானந்தசிவம்), என்னைச் சுகப்படுத்து (த.ஜெயசீலன்), வேழமுகன் தம்பியே வேல்முருகா (வதிரி கண. எதிர்வீரசிங்கம்), அடியருளத் தாமரையிற் குடிகொண்ட ஆதி நல்லூரில் கந்தா (பொன். பாக்கியம்), நல்லைக்குமரா நிதமருள் தருவாய் (கே.ஆர்.திருத்துவராஜா), சுந்தரனே நல்லூரின் நாயகனே (கண. கிருஷ்ணராஜா), முருகனை துதி மனமே (சி.சிவநேசன்), நல்லூரில் வளர் சேவற் கொடியானே (பாமாலை) (இராசையா ஸ்ரீதரன்), முருகன் திருவருளே முதல் (க.அருமைநாயகம்), நல்லைக்குமரா (மீசாலையூர் கமலா), ஓடி வந்து எமைக்காத்து அருள்புரிவாய் (சந்திரவதனி தவராசா), ஆகிய கவிமாலைகளும், பன்னிருகையன் (மனோன்மணி சண்முகதாஸ்), குருவாய் வருவாய் அருள்வாய் குகனே (வி.சிவசாமி), நல்லைக் கந்தனும் ஞானச் செல்வரும் (சிவ. மகாலிங்கம்), மாமனும் மருமகனும் (அ.சண்முகதாஸ்), அகங்காரம் அழிக்கும் ஓங்காரப் பிரணவம் (நா.சிவசங்கரசர்மா), முருகனும் தமிழும் (புஸ்பா செல்வநாயகம்), ஐங்கரனேர் நல்லூரே (யோகேஸ்வரி சிவப்பிரகாசம்), பரிபாடலும் முருக வழிபாடும் (வை.நவதரன்), கந்தபுராணம்: ஒரு நீதிநூற் கருவூலம்-3 (வ.கோவிந்தபிள்ளை), மகோற்சவ விசேட தினங்கள்- 2012, கன்மக் கொள்கையும் அறநெறிக் கொள்கையும்: சைவசித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டது (கலைவாணி இராமநாதன்), சூரியபகவான் பிரதிஷ்டை, ஆலயங்களிலே சிவாகம மரபில் நடைபெறும் உற்சவங்களின் வரிசையில் பவித்ரோற்சவம் பெறும் முக்கியத்துவம்: ஓர் சிறப்புப் பார்வை (பாலகைலாசநாதசர்மா மகேஸ்வரக் குருக்கள்), மகோற்சவ விளக்கம் (தி.பொன்னம்பலவாணர்), கடம்பமாலை (க.சி. சதாசிவம்), நவவீரர்கள் தோற்றமும் தத்துவமும் (கிருஷ்ணானந்த சர்மா ஸ்ரீபதி சர்மா), நலன்பல நல்கும் நயமிகு திருப்புகழ் (வை.சி.சிவசுப்பிரமணியம்), முருகப் பெருமானிடம் அட்டமா சித்திகளையும் பெற்ற அருணகிரிநாதர் (மு.சிவலிங்கம்), தேரேறி வருகின்றான் திருமுருகன் (கி.குலசேகரன்), பெரியாழ்வாரும் பகழிக் கூத்தரும் (செல்வஅம்பிகை நந்தகுமாரன்), எல்லையில்லாதருள் தருவாய் (ஸ்ரீ திவ்வியன்), தம்பிரான் தோழர் (பொ.சிவப்பிரகாசம்), திருக்குறள் காட்டும் அரச தர்மம் (சாந்தகுமார்), உயிர் நீப்பர் மானம் வரின் (ஆ.வடிவேலு), நல்லைக் குமரா நற்கதி நல்குவாய் (சி.தயாபரன்), சுவாமி விவேகானந்தரின் வாழ்வும் வழிகாட்டலும் (க.சிவலிங்கம்), பண்டைத் தமிழரின் வானியல் அறிவு (விக்னேஸ்வரி பவநேசன்), சைவசமய விவகாரக் குழுவின் முன்னாள் தலைவர்கள், இந்து விஞ்ஞானம் (அஜித் யோகேஸ்வரன்), விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானத்தின் பாற்பட்டதே (ச.ரூபசிங்கம்), கந்தா (வசுகி சதாசிவம்), நல்லூருக்கு ஒரு பாத யாத்திரை: சில சிந்தனைகள் (வை.இரகுநாத முதலியார்), சமய சீர்திருத்தங்கள் (செ.பரமநாதன்), நல்லூர் ஷண்முகர் வாசல் இராஜகோபுரம், சைவாலயங்கள் தோறும் திருநந்தவனம் அமைத்தல் (கா.சிவபாலன்), விருட்சமாக வளர்ந்துவரும் சைவசமய விவகாரக்குழு (ப.ஆறுமுகதாசன்), 2012இல் யாழ் விருதினைப் பெறும் அமுதசுரபி அன்னதான சபை (ப.ஆறுமுகதாசன்) ஆகிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன.

16103

**நல்லைக்குமரன் மலர் 2013**. நல்லையா விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1ஆவது பதிப்பு, 2013. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

x, 188 + (62) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18.5 சமீ.

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் மலரின் 21ஆவது இதழ் இதுவாகும். 2013ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின்போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றுடன் நல்லைக் கந்தனவன் சேவடியைச் சேவிப்போம் (ச.தங்கமாமயிலோன்), ஒரு திரு முருகன் வந்து உதித்தனன் உலகம் உய்ய (வ.யோகானந்தசிவம்), நீயே பார்த்துக்கொள் (த.ஜெயசீலன்), பங்க மறுத்திட பறந்தோடிவா முருகா (அன்னைதாசன் ஆனந்தராசா), நல்லைத் திருமுருகா (க.அருமைநாயகம்), நல்லைக் கந்தனுக்கு ஒரு நற்றமிழ்ப் பாமாலை (இராசையா ஸ்ரீதரன்), ஒளவையின் தமிழ்மேவ அருள்பவனே (வதிரி கண.எதிர்வீரசிங்கம்), சிந்தையில் சிறை வைத்தேன் கந்தனை (சி.சிவநேசன்), நல்லூர்க் கந்தன் அனுபூதி (தவபாலகோபால்), முருகப் பெருமான் திருக்கரத்தால் தாங்கி எம்மைக் காப்பாராக (வி.சிவசாமி), சித்தர் மரபில் முருக வழிபாடும் வள்ளலாரின் அணுகுமுறையும் (கலைவாணி இராமநாதன்), சங்க இலக்கியங்களில் முருக வழிபாடு ஓர் ஆய்வு (பொ.பூலோகநாதன்), முருக வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் (தயாளினி செந்தில்நாதன்), சுப்பிரமண்ய பரார்த்த பூஜை விதிமுறைகள்: ஒரு நோக்கு (மகேஸ்வரக் குருக்கள் பாலகைலாசநாத சர்மா), முருகன் வள்ளி தேவசேனாதிபதி (து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள்), ஈழநல்லூர் திருப்பதியின் சிறப்பு (மு.சிவலிங்கம்), நல்லூரரான் போதிக்கும் நல்லவை (வை.தவதரன்), நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மகிமை (வா.பரமேஸ்வரன்), திருஞானசம்பந்தர் அருளால் கிடைக்கப்பெற்ற "கற்றவர் விளங்கும் கற்பகக் கனி" (கே.எஸ்.ஆனந்தன்), திருவாசகத்தில் மலர்கள் (மனோன்மணி சண்முகதாஸ்), அருளானந்தத்தின் பால் ஆன்ம ஈடேற்றந் தரும் சிவபுராணம் (ஸ்ரீபத்மராசா திவ்வியன்), திருமந்திரத்தில் அறம் (சிவமகாலிங்கம்), கண்ணப்பநாயனாரின் ஈடு இணையில்லாத பக்தி (வை. சி.சிவசுப்பிரமணியம்), திருமுருகன் அருள்பெற்ற செல்வர்கள் (சிவ.வை.நித்தி யானந்த சர்மா), இந்து அறவியல் எனும் பதம் பற்றிய விளக்கமும் மானவதர்ம சாஸ்திரம் கூறும் அறக் கருத்துகளும் ஒரு நோக்கு (கர்ணிகா பாஸ்கர ஐயர்), ஆலய கிரியைகளிற் சிறப்பிடம் பெறும் பூதசுத்தி (நா.சிவசங்கர சர்மா), இந்து வாழ்வியலில் திருமணச் சடங்கு (ஜீ.பற்குணராஜா), சைவ சமயத்தில் அன்பு தொடர்பான கருத்துக்கள் (க.கணேசதேவா), சமய உணர்வு (தி.செல்வமனோகரன்), ஆரோக்கியத்தில் ஆன்மீகம் (அருள்மொழி சுதர்மன்), ஜோதிலிங்க சிவஸ்தல மகிமை (அருந்ததி சிவசுப்பிரமணியம்), மாநகர் மதுரை (பொ.சிவப்பிரகாசம்), வாழ்வை நெறிப்படுத்தும் சமயம் (ப.நடராஜா), சைவாலயப் பெருவிழாக்கள் (தி.பொன்னம்பலவாணர்), என்னை எனக்குள் தேடினேன் அங்கு உன்னையே

காண்கிறேன் இறவைா (மலர் சின்னையா), சும்மா இரு சொல்லற (செ.பரமநாதன்), நான் ஒரு ஹிந்து என்பதில் ஏன பெருமிதம் கொள்கிறேன் (பி.என். சுதர்ஷன்), 2013இல் யாழ் விருது பெறும் அருட்தந்தை மரியசேவியர் அடிகளார் (ப.ஆறுமுகதாசன்) ஆகிய ஆக்கங்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

### 16104

**நல்லைக்குமரன் மலர் 2014**. நல்லையா விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1ஆவது பதிப்பு, 2014. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

viii, 184 + (68) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18.5 சமீ.

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் மலரின் 22ஆவது இதழ் இதுவாகும். 2014ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின்போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றுடன் நல்லையிற் கந்தன் வெளிப்படில் (ச.தங்கமாமயிலோன்), அகமகிழும் நாள் அண்மித்துவிட்டது (விகடகவி மு.திருநாவுக்கரசு), அம்மையப்பனாய் அருள்வான் அன்பு (த.ஜெயசீலன்), தமிழர் தெய்வம் அழகன் குமரன் (வ.யோகானந்தசிவம்), முருகன் புகழ் மாலை (சிவஸ்ரீ சா.சோமதேவக் குருக்கள்), நல்லைக்குமரன் வெண்பா மாலை (வ.சின்னப்பா), நல்லைக் கந்தன் நனிவெண்பா (நவ.பாலகோபால்), அழகுநிறை ஆலயமோ நல்லூரினிலே (வதிரி கண.எதிர்வீரசிங்கம்), நல்லைக்குமரன் பாமாலை (நயினை க.ச.அரவிந்தன்), நன்நிலை அருளாயோ? (சி.சிவநேசன்), என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே (மனோன்மணி சண்முகதாஸ்), எல்லோரும் முருகப் பெருமானை வழிபட்டு திருவருள் பெறுவோமாக (வி.சிவசாமி), ஓங்காரத்து உள்ஒளிக்கும் உள் ஒளியாய் விளங்கும் முருகன் (வை.சி.சிவசுப்பிரமணியம்), தேடிக் கண்டுகொண்டேன் (நமசிவாயம் கல்யாணி), கந்தன் கருணை (மு.தம்பிப்பிள்ளை), சங்ககாலத்தில் முருக வழிபாடு (செ.பரமநாதன்), சுப்பிரமணிய புஜங்கம் (பி.என்.சுதர்சன்), கௌமார வழிபாட்டு மரபில் சக்த்யஸ்த்ரஸ்தாபனம் (மகேஸ்வரக் குருக்கள் பாலகைலாசநாத சர்மா), வேத இலக்கியங்களில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஓர் அவதானம் (ஸ்ரீகலா ஜெகநாதன்), சைவ சமயப் பண்பாட்டில் வேதமும் வேள்வியும் (வ.கோவிந்தபிள்ளை), திருவாசகத்தில் சைவசித்தாந்தம் (சிவமகாலிங்கம்), திருவாசகத்தின் இருதயம் (நயினை ஆ.தியாகராசா), திருமந்திரம் ஒரு மெய்யியல் பார்வை (த.தவனீசன்), அருணகிரிநாதரின் திருப்புகழில் விஷ்ணுவின் தசாவதாரங்கள் (புவிலோகசிங்கம் அருள்நேசன்), திருமுறைப் பாடல்கள் அணிசெய்யும் சிவநெறி (மு.சிவலிங்கம்), கம்பரின் கும்பகர்ணனும் கச்சியப்பரின் சிங்கமுகாசுரனும் (கு.பாலஷண்முகன்), நல்லூரானைச் சிறப்பித்த நல்ல குருநாதர்கள் (சண்முகயோகினி ரவீந்திரன்), ஈழத்து சைவ சித்தாந்த வரலாற்றில் சுவாமி ஞானப்பிரகாசரது பணிகள் (க.கணேசதேவா), ஈழநாட்டின் சித்தர் மரபு (ப.பத்மநிருபன்), சர்வதேச உலகில் மதம் (ஜெகநாதன் தற்பரன்),

இந்து சமயம்-கல்வி-சமூகவியல் சில சிந்தனைகள் (மா.சின்னத்தம்பி), கடவுள் என்பது யார்? (அ.நளினாசினி), திருக்கேதீச்சரம் (பொ.சிவப்பிரகாசம்), நல்லூர் சட்டநாத ஈஸ்வரர் கோயில் (வசந்தா நடராசன்), முருக வழிபாடுகளும் திருத்தலங்களும் (கீர்த்தனா ஆறுமுகதாசன்), சைவசமயமும் நடைமுறை வாழ்க்கையும் (சு.தேவமனோகரன்), மனமது வசப்பட (அருள்மொழி சுதர்மன்), ஆலய தரிசனமும் ஆரோக்கிய வாழ்வும் (எஸ்.நடராஜா), சைவநெறி போதிக்கும் அன்போடு இயைந்த வாழ்வியல் (சுரேகா பரமானந்தம்), ஆடினார் ஆனந்த நடனம் (சி.கிருஷ்ணமூர்த்தி), அறுகும் வன்னியும் (க.ஜெயராமக் குருக்கள்), 2014இல் யாழ் விருது பெறும் வித்தியாசாகரம் சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள் (பு.ஆறுமுகதாசன்), கர்மயோகி சுவாமி சித்ரூபானந்தா (நா.வி.மு.நவரெத்தினம்) ஆகிய ஆக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

## 16105

**நல்லைக்குமரன் மலர் 2015.** நல்லையா விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1ஆவது பதிப்பு, 2015. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

x, 172 + (70) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18.5 சமீ.

இது நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் மலர். 23ஆவது மலராக 2015ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின் போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகளுடன் நல்லையம் பதிவாசன் நயந்து வந்தான் (ச.தங்கமாமயிலோன்), நானயர்ந்தும் மறவேன் முருகனை (சிவ.சிவநேசன்), விபரீதங்கள் அகல மயில் வருக உயர் ஐஸ்வர்யங்கள் தர மயில் ஏறி வருக (கை.பேரின்பநாயகம்), நல்லைக்குமரன் வெண்பா மாலை (வ.சின்னப்பா), முருகா உனைப் பார்த்தேன் உடல் வேர்த்தேன் (வேலணையூர் சுரேஷ்), நம் நல்லூரரான் (த.ஜெயசீலன்), நல்லைக் குமரா நாசகாரரை அழித்திட எடுத்திடு வேலை (வ.யோகானந்தசிவம்), தேவார திருவாசக திருத்தொண்டர் படிப்போம் (க.அருமைநாயகம்), நாமும் உந்தன் புகழ் பாடுகின்றோம் நல்லூ ரானே (க.கிருஷ்ணராஜன்), அழகு வேல் தனை அனுப்பிடப்பா (வதிரி கண.எதிர்வீரசிங்கம்), வந்தருள் தந்திடுவாய் (கீழ்க்கரவை கி.குலசேகரன்), கதி நீயே எந்தனுக்கு (கே.ஆர்.திருத்துவராஜா), நல்லைக் கந்தன் நனிவிருத்தம் (நவ. பாலகோபால்), திருமுருகாற்றுப்படையில் வழிபாடும் வாழ்வியலும் (மனோன்மணி சண்முகதாஸ்), திருப்புகழும் முருக வழிபாடும் (சிவ.மகாலிங்கம்), தர்க்கச் சிறப்புக் கொண்ட சங்கர வேதாந்தம் (சிவகுமார் நிரோசன்), அன்பும் சித்தாந்த வாழ்வியலும் (க.கணேசதேவா), சிவாகம மரபில் சைவசித்தாந்த நூல்கள் குறிப்பிடும் தசகார்யம் (மகோற்சவம்) பற்றிய சில குறிப்புகள் (மகேஸ்வரக் குருக்கள் பாலகைலாசநாத சர்மா), கந்தர் அலங்காரம் காட்டும் முருகன் திருவுளம் (வ.கோவிந்தப்பிள்ளை), சமய நெறியை வளமாக்கிய நாயன்மார்கள் (சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்), தமிழரின் தொன்மையைக் குறிக்கும்

வேல் வணக்கம் (ச.லலீசன்), ஐக்கியவாத சைவம் (தி.செல்வமனோகரன்), திருவள்ளுவரும் சமயமும் (ஆ.வடிவேலு), திருக்கோணேஸ்வரம் (பொ.சிவப்பிரகாசம்), சித்தர்கள் பரம்பரையில் அவதரித்த ஞானசீலரான தவத்திரு வடிவேற் சுவாமிகள் (இணுவையூர் மூ.சிவலிங்கம்), சிவபிரானை வயப்படுத்திய சுந்தரரின் செந்தமிழ்ப் பாடல்களின் சிறப்பு (வை.சி.சிவசுப்பிரமணியம்), திருவாசகம் தந்த வாழ்வியல் நெறி (பத்மராசா பத்மநிருபன்), நாயே நாயேன் மணி வார்த்தை (சி.யமுனானந்தா), குடும்பமும் துறவும் (அ.சண்முகதாஸ்), சைவனாக வாழ்வோம் சைவநெறியைப் பாதுகாப்போம் (வை.பாலகிருஷ்ணன்), ஆறுவது சினம் (அருள்மொழி சுதர்மன்), சட்டம் கூறும் மதம் (ஜெகநாதன் தற்பரன்), அருணகிரியாரும் பெண்ணுலகும் (சிவஸ்ரீ க.ஜெயராமக் குருக்கள்), தமிழரின் கலையும் பண்பாடும் (இராசையா ஸ்ரீதரன்), இந்துப் பண்பாட்டுக்கு சார்ள்ஸ் வில்கிங்ஸ் அவர்களின் பங்களிப்பு (புவிலோகசிங்கம் அருள்நேசன்), கந்தக் கடவுளும் கந்தபுராணமும் கச்சியப்ப சிவாச்சாரியாரின் பக்தித் திறமும் (சரோஜினிதேவி சிவஞானம்), முருக வழிபாடு (தயாளினி செந்தில்நாதன்), 2015இல் யாழ். விருது பெறும் பேராசிரியர் கந்தையா தேவராஜா (பு.ஆறுமுகதாசன்) ஆகிய ஆக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

### 16106

**நல்லைக்குமரன் மலர் 2019**. நல்லையா விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1ஆவது பதிப்பு, 2019. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

(26), 154 + (64) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18.5 சமீ.

இது நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் மலர். 27ஆவது மலராக 2019ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின் போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகளுடன் நல்லூர் முருகா எம்குறை தீராயோ (சின்னப்பு தனபாலசிங்கம்), வரமெலாம் தரவே வலம் வருக (சுபாஷினி பிரணவன்), உன்னருகில் இருப்பேனே (வதிரி கண.எதிர்வீரசிங்கம்), நல்லையூரானே போற்றி போற்றி (தங்கராசா தமயந்தி), தமிழ் வடிவாய் வந்த தமிழ்த் தலைவா போற்றி (தமிழானந்த பாரதி), நல்லூர்க் குமரனின் அருளாட்சி பாமாலை (இ.சரவணபவன்), தெய்வீக மணம் எங்கும் கமழுது (கீழ்க்கரவை கி.குலசேகரன்), சந்தக் கவியில் நல்லைக் குமரன் (நவ.பாலகோபால்), துன்பத்திலிருந்து மீட்க மயிலேறி வா (சின்னையா சிவபாலன்), முருகனிடம் பொது நலவேண்டுகையும் தன்னல வேண்டுகையும் (அ.சண்முகதாஸ்), வழிபாடு ஒரு வாழ்வியல் (மனோன்மணி சண்முகதாஸ்), சோழர் காலத்தில் சமஸ்கிருத நூல்களில் சைவசித்தாந்தம் (கலைவாணி இராமநாதன்), சிவாகமங்கள் காட்டும் தீட்சை முறைகளும் வகைகளும்-குறிப்புக்கள் (ம.பாலகைலாசநாத சர்மா), சிவாகம மரபில் சுப்ரம்மண்யரது படைக்கலம் வேல்-ஓர் ஆய்வு (ச.பத்மநாபன்), நல்லைக் கந்தனின் வேல்வடிவம் (வைத்தியலிங்கம் பாலகிருஷ்ணன்), நக்கீரர்

அருளிய திருமுருகாற்றுப்படை (வை.சி.சிவசுப்பிரமணியம்), திருமுறைகளால் மீண்டும் துலங்கியது சைவம் (செ.மதுசூதனன்), சைவமும் வாழ்வும் (தேவராசா விஜிதா), யாழ்ப்பாணத்து திருக்கோயிற் செல்நெறியில் கோபுரங்கள்: சமகால அவதானிப்புகள் (சி.ரமணராஜா), யாழ்ப்பாணத்து முருகத் திருத்தலங்கள் மீது பாடப்பெற்ற பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்கள் - ஒரு சிறப்புப் பார்வை (சண்முகலிங்கம் சஜீலன்), திருக்கோவையார் (பொ.சிவப்பிரகாசம்), அபிராமி அந்தாதியில் சக்தியின் பெருமை (ஆறுமுகம் சசிநாத்), தேவாரங்களின் அகப்பொருளியல் மரபு (தி.செல்வமனோகரன்), அருணகிரிநாதரும் திருப்புகழும் (செ.பரமநாதன்), இடுக்கண் நீக்கும் மந்திரத் திருப்புகழ் (கீர்த்தனா ஆறுமுகதாசன்), ஆன்மீக நல்வாழ்வும் சித்தர்களும் (தி.சுதர்மன்), குழந்தைவேல் சுவாமிகள் (ஆரணி விஜயகுமார்), பிடி அரிசித் தொண்டினால் பெருங்கோயில் அமைத்த இணுவில் சாத்திரம்மா (மூ.சிவலிங்கம்), புலனடக்கம் (கு.சிவபாலராஜா), ஆன்மாவின் எதிரியை விரட்ட மனதை ஒருநிலைப்படுத்துவோம் (மலர் சின்னையா), மானிட வாழ்க்கையை அர்த்தமுடையதாக்கும் யோகக் கலை உணர்த்தி நிற்கும் வாழ்வியற் கூறுகள் (ஸ்ரீ நதிபரன்), ஆலய வழிபாட்டில் கிடைக்கும் உளவளத்துணை (சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்), சைவ பரிபாலன சபை - சைவ நூலகம் (வை.இரகுநாத முதலியார்), ஆயிரம் பேரைக் காத்த திருமுருகாற்றுப்படை (காரை எம்.பி.அருளானந்தம்), 2019இல் யாழ். விருது பெறும் வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை (பு.ஆறுமுகதாசன்) ஆகிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன.

**16107**

**நல்லைக்குமரன் மலர் 2020.** மலர்க் குழு. யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1ஆவது பதிப்பு, 2020. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

xvi, (12), 84 + (42) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18.5 சமீ.

இது நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் மலர். 28ஆவது மலராக 2020ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின் போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகளுடன் இன்றும் நீ காப்பாய் எழுந்து (இ.த.ஜெயசீலன்), தென்றலிலும் வீசி வரும் நல்லூர் வாசம் (சின்னப்பு தனபாலசிங்கம்), அருள் புரிவாய் (கீழ்க்கரை கி.குலசேகரன்), நல்லையின் தொல்புகழைக் காப்பவனே (சின்னையா சிவபாலன்), வள்ளி அறியாமல் ஓடிவந்தீரோ? (யோகேஸ்வரி சிவப்பிரகாசம்), முருக வழிபாட்டில் விரதங்கள் (கீர்த்தனா ஆறுமுகதாசன்), குமார தந்த்ரம்-ஒரு பார்வை (தி.மனோக்ஷன்), ஈழத்துச் சித்தர்கள் வரிசையில் கைதடி (இணுவில்) சச்சிதானந்த சுவாமிகள் சச்சிதானந்த ஆச்சிரமம், கைதடி (மூ.சிவலிங்கம்), இந்து ஆலயங்களும் வழிபாடும் ஒரு சமூக நோக்கு (கணபதிப்பிள்ளை ஈஸ்வரன்), இந்துக்களின் ஒழுக்கவியல் (ஆரணி விஜயகுமார்), சமய சமூக ஒருமைப்பாடு: திருமந்திரத்தினூடான ஒரு வாசிப்பு (தி.செல்வமனோகரன்), முருகும் முருகனும் (இரத்தினம் நித்தியானந்தன்),

*"மிண்டிய மாயாவாதம் என்னும் சண்டமாருதம்" என்ற மணிவாசகரின் திருவாசக அடியினை முன்னிறுத்திய உரையாடல் (எஸ்.முகுந்தன்), சிலப்பதிகாரத்தில் சிகிவாகனன் (த.அபிநாத்), நால்வகை வாழ்க்கை நிலை -ஆச்சிரம தர்மம் (சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்), இந்து மதத்தின் மகிமையை உலகிற்கு உணர்த்தி நிற்கும் யோகக் கலையின் சிறப்புகள் (ஸ்ரீ நதிபரன்), சமயங்களே சட்டங்களின் விளைநிலங்கள் (பா.பிரசாந்தனன்), உணவு உட்கொள்ளும் முறை-சித்த மருத்துவம் (தி.சுதர்மன்), தவத்திரு நல்லூர் சடையம்மா சுவாமிகள், 2020இல் யாழ் விருதினைப் பெறும் கவிஞர் சோமசுந்தரம்பிள்ளை பத்மநாதன் அவர்கள் (பு.ஆறுமுகதாசன்) ஆகிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன.*

## 16108

**நல்லைக்குமரன் மலர் 2022**. *மலர்க் குழு. யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1ஆவது பதிப்பு, 2022. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், 15/2*B, *முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).*

vi, *(12), 74 + (56) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5*x*18.5 சமீ.*

*இது நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் மலர். 30ஆவது மலராக 2022ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின் போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகளுடன் சிவன் நெற்றிக்கண் உதித்த அழகு வேலவா (சின்னப்பு தனபாலசிங்கம்), நெஞ்ச மனையில் நின்று உறை நீ (த.ஜெயசீலன்), நல்லூரரான் மணியோசை நாளும் துயிலெழுப்பும் (கே.ஆர்.திருத்துவராஜா), கீர்த்தனை (இராசையா ஸ்ரீதரன்), நல்லைப்பதி நாயகன் (ஸ்ரீமதி சுபாஷினி), குறைகளைத் தீருமையா (கீழ்கரவை கி.குலசேகரன்), காடு மலை விட்டு நீயும் மயிலேறி வந்திடப்பா (வதிரி கண.எதிர்வீரசிங்கம்), நின்னடி சரணடைந்தோம் சண்முகா (தங்கராசா தமயந்தி), நல்லூரரின் நற்றமிழே (தமிழமுதன் அபிநாத்), மயிலேறி எங்கும் வரும் நல்லூரா (சின்னையா சிவபாலன்), தமிழுக்கு இனியவன் (புலோலியூர் த.உமாசுதன்), அர்த்தமுள்ள இந்துமதம் (பா.பிரசாந்தனன்), பாலாவியின் கரைமேல் தேவன் எனை ஆள்வான் (கே.எஸ். சிவஞானராஜா), ஆறுமுக நாவலரின் மகத்துவம் (சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்), பல்வேறு பெயர்களில் அறியப்படும் யாழ்ப்பாணத்து முருகன் ஆலயங்கள் (சண்முகலிங்கம் சஜீலன்), தமிழிசையின் மீட்டுருவாக்கத்தில் விபுலாநந்த ஆளுமை (என்.சண்முகலிங்கன்), பிரபஞ்சப் பிளவும் உளப் பிளவும் இட அமைவியலாக கந்தபுராணக் காட்சியளவையியல் (சி.யமுனானந்தா), மானுடனும் ஒளி வழிபாடும் (ஆரணி விஜயகுமார்), ஆன்மீகத்தை அகம் நிறைத்தார் பாரதி (மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா), மனித வாழ்க்கையில் ஆன்மீகம் கலந்த அறிவியல் (வைத்தியலிங்கம் பாலகிருஷ்ணன்), மானிட வாழ்க்கையை அர்த்தமுடையதாக்கும் யோகக் கலை உணர்த்தி நிற்கும் வாழ்வியற் கூறுகள் (ஸ்ரீ நதிபரன்), திருக்கேதீச்சரத்தின் மகிமை (ஆ.கீர்த்தனா), சைவ மரபு சிவாகமங்களை அடிப்படையாகக் கொண்டது (ச.பத்மநாபன்), 2021இல் யாழ்*

விருதினைப் பெறும் திருக்கேதீச்சரம் ஆலயமும் கருங்கல் சிற்பக் கோயில் திருப்பணியும் (ப.ஆறுமுகதாசன்) ஆகிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன.

## 294.5(3) ஆலயங்கள், சமய நிறுவனங்களின் சிறப்பு மலர்கள்

### 16109

**அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்: திருக்கோபுர மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்-10.09.2021.** மலர்க் குழு. யாழ்ப்பாணம்: அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோவில் பரிபாலன சபை, 99/1, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2021. (யாழ்ப்பாணம்: அன்றா பிறிண்டேர்ஸ், இல. 356A, கஸ்தூரியார் வீதி).

128 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17 சமீ.

அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோவிலில் நிர்மாணிக்கப்பட்ட மூன்று தள திருக்கோபுரத்தின் மகா கும்பாபிஷேகம் 10.09.2021 அன்று நடைபெற்ற வேளையில் வெளியிடப்பெற்ற சிறப்பு மலர் இதுவாகும். வாழ்த்துரைகளுடன் கோவிலின் வரலாறும், வளர்ச்சியும் பற்றிய கட்டுரைகளும், வைரவர் வழிபாடு பற்றிய விளக்கங்களும், திருக்குறளில் ஒழுக்கவியல் (தி.செல்வமனோகரன்), ஈழத்தில் வைரவர் வழிபாட்டின் தொன்மையும் அதன் முக்கியத்துவமும் (விஜயரத்தினம் கனகராசா), வைரவர் துதிகள் (புவனராணி இரகுநாதன்), திருக்கோபுர தரிசனம் (தர்மலிங்கம் பிரதீபன்), கும்பாபிஷேகம் பற்றிய சிறு விளக்கம் (துரைச்சாமி சரத்சந்திரன்), துன்பங்களையும் துயரங்களையும் துரத்தியடிக்கும் ஸ்ரீ ஞானவைரவர் வழிபாடு (இராமுப்பிள்ளை கமலவேணி), சைவசமய வழிபாடு (தில்லைநாயகி பரமநாதன்), அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் பெருமான் (உதயகலா சந்திமோகன்), இந்துமத வழிபாட்டில் காணப்படும் மருத்துவ குணங்கள் (ஜெயந்தி சீவரத்தினம்), ஞானவைரவா எமை நாடி வருவாய் (கவிதை-டர்சிகா சிவம்), எமது மூதாதையர் போற்றி வளர்த்த வைரவப் பெருமான் (குணரத்தினம் கஜேந்திரா), இந்து சமயத்தவர் தெரிந்துகொள்ள வேண்டிய விடயங்கள் (விமலராணி சிவம்), சைவ சமயமும் சிவசின்னங்களும் (குணரத்தினம் பிரதீபன்), ஆலய வழிபாடும் அனுட்டானங்களும் (தர்மலிங்கம் நவரூபன்), இராஜகோபுரம் (பஞ்சாட்சரம் கணேசமூர்த்தி), அபிஷேகத்தின் மகிமை (துளசிகா தனபாலசிங்கம்) ஆகிய படைப்பாக்கங்களும் இடம்பெற்றுள்ளன.

### 16110

**அன்புநெறி சிறப்பு இதழ்: சற்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி நினைவு மலர்.** வ.விசுவலிங்கம், தி.விசுவலிங்கம். கனடா: சைவ சித்தாந்த மன்றம், 1008-50 Elm Drive East, Mississauga, Ontario, L5A 3X2, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2002. (கனடா: பாரதி பதிப்பகம்).

52 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

*கனடா சைவ சித்தாந்த மன்றத்தின் வெளியீடான "அன்பு நெறி" சஞ்சிகையின் நவம்பர் 2002 இற்குரிய இதழ் சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி நினைவு மலராக வெளிவந்துள்ளது. இவ்விதழில் முன்னுரை, பன்னிரு திருமுறை, நற்சிந்தனைப் பாடல்கள், குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் அஷ்டோத்ர சதநாமாவளி, ஓம் குருநாத தேவர் ஆகிய ஆக்கங்களுடன் சிறப்புக் கட்டுரைகளாக சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி மகாசமாதி அடைந்தார், யாழ்ப்பாணம் தந்த அமெரிக்க ஞானி, குருதேவா, குருதேவரின் சிவபதப்பேறு, வேதாகமங்களைப் போதித்து அவற்றின் பிரகாரம் வாழ்ந்து மரணத்திலும் சாதனை புரிந்தவர், ஐரோப்பிய இந்து மறுமலர்ச்சி விஜயம் குருதேவரின் அருளுரை, குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள், சன்மார்க்க இறைவன் கோவில், வையம் மறவாது, தியானவழி, ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் நீங்காத நினைவுகள், குருதேவர் சிறீ சுப்பிரமுனிய சுவாமிகள், சன்மார்க்க இறைவன் கோவில், அமெரிக்க சுவாமி சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி அவர்களின் வாழ்க்கை வரலாறு,* Help Manifest Iraivan Temple *ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.*

### 16111

**ஆதி மயிலிட்டி திருவருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம் மஹா கும்பாபிஷேகமலர்- 2022.** *இரா. கேதீசன், ஜெ.கிரிலோஜன், சு.இந்திரை (மலர்க் குழுவினர்). காங்கேசன்துறை: பரிபாலன சபை, அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம், ஆதி மயிலிட்டி, மயிலிட்டி வடக்கு, 1ஆவது பதிப்பு, மே 2022. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).*

vi, *(22), 120பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5*x*18.5 சமீ.*

*ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள், ஆலய வரலாறு, கட்டுரைகள், ஆலய பரிபாலன விபரம், கணக்கு விபரமும் பொருட்களின் விபரமும் (06.04.2022), மலர்க் குழுவின் உள்ளத்திலிருந்து, பின்னிணைப்பு ஆகிய பிரிவுகளின் கீழ் இம்மலரின் ஆக்கங்கள் வகுக்கப்பட்டுள்ளன. கட்டுரைகள் என்ற பிரிவில், ஆதி மயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம் பற்றிய என் நினைவலைகள், ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம், கும்பாபிஷேக மகிமை, எனது குலதெய்வம், பெரும்பரப்பு விநாயகரும் நானும், பரிவாரமூர்த்தி சண்டேஸ்வரப் பெருமான் பிரதிஷ்டை, எங்கள் குலதெய்வம் பெரும்பரப்பு பிள்ளையார், பிள்ளையாரின் பஞ்சாமிர்தமும் நானும், கோயில் கருவறையும் அதன் இரகசியங்களும், விநாயகப் பெருமானை வழிபட்டு நாம் எல்லோரும் இன்பம் அடைவோம், இந்து சமயிகள் வாழ்வில் அறச் சிந்தனைகள், ஆலயங்களின் அவசியம், ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம், விநாயகர் வழிபாட்டின் முதன்மையும் பழமையும், விநாயகரும் அறுகம்புல்லும், விநாயக வழிபாடும் விநாயக விரதங்களும், "மேன்மை கொள் சைவநீதி", என் பார்வையில் ஆன்மீகம் 2022, அபிஷேக பலன், கண்கண்ட தெய்வம் பெரும்பரப்புப் பிள்ளையார், ஐங்கரன் அடிபணிந்தெழுந்திடுவீர், கண்ணிற் பணிமின் கனிந்து, 21ஆம் நூற்றாண்டில் ஆதிமயிலிட்டி அருள்மிகு*

பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயத்தின் தோற்றப் பொலிவு, கோயில்களில் மணி அடிப்பதும் சங்கு ஊதுவதும் ஏன்?, வைரவர் வழிபாடு, யாழ்ப்பாண இந்துசமய செல்நெறியில் இளைஞர்களின் பங்கும் பணியும் ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

### 16112

**இந்து ஒளி: நல்லைக் கந்தன் மகோற்சவச் சிறப்பிதழ் 2010.** ஆசிரியர் குழு. கொழும்பு 2: அகில இலங்கை இந்து மாமன்றம், A.C.H.C. கட்டிடம், 91/5, சேர். சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை, 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2010. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).

48 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 30.00, அளவு: 29.5x22 சமீ.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்து ஒளி"யின் 14ஆவது தொகுதியின் 4அவது இதழ் நல்லைக்கந்தன் மகோற்சவ சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. இவ்விதழின் ஆசிரியர் குழுவில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம், சிவஸ்ரீ ம.பாலகைலாசநாத சர்மா, திரு கந்தையா நீலகண்டன், திரு. த.மனோகரன் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். இவ்விதழில் பஞ்ச புராணங்கள், நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி, நல்லைக் கந்தன் மகோற்சவச் சிறப்பு (கு.சோமசுந்தரம்), கந்தன் அருட்புகழ், நல்லூர் இராசதானியின் வரலாறு (க.நாகேஸ்வரன்), நல்லூரான் திருப்பாதம் பிடிப்போமே, நல்லைக் கந்தா சரணம் சரணம் (தங்கம்மா அப்பாகுட்டி), நல்லருள் புரியும் நல்லைக் கந்தன் (சுப்பிரமணியம் கனகரெத்தினம்), நல்லூர்த் தேரடி, நல்லூரின் பெருமை, நல்லூர்க் கந்தனின் மகோற்சவப் பெருவிழா, அருள்தரும் நல்லூர்/நல்லூரான் குறள், தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தன் (இராசையா ஸ்ரீதரன்), நல்லை நகர்க் கந்தன் திருவூஞ்சல், சிறுவர் ஒளி-சிந்தனைக் கதைகள், மாணவர் ஒளி-பெரியபுராணக் கதைகள், மங்கையர் ஒளி- மகளிர் திருத்தொண்டில் சந்தனத் தாதியாரின் கடமையுணர்வு (திலகவதி சண்முகசுந்தரம்). தவத்திரு யோகர் சுவாமிகள், சுவாமி விபுலானந்தர், நல்லை திருானசம்பந்தர் ஆதீனம், மாமன்றத்தின் யாழ். பிராந்திய பணிமனை, பதினான்கு ஆண்டுகளை நிறைவுசெய்யும் இந்து ஒளி (அ.கனகசூரியர்) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

### 16113

**இலண்டன் சைவ மாநாடு (பதினைந்தாவது) சிறப்புமலர்.** மலர் வெளியீட்டுக் குழு. இலண்டன் N 6 5BA: பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம், 200A, Archway Road, London, 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2014. (இலண்டன்: ஜே.ஆர். பிரின்ட், 59-61, Hoe Street, London E17 4QR).

(6), 184 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ.

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தின் 15ஆவது சைவமாநாடு "சைவத்தில் சித்தாந்தம்" என்ற கருப்பொருளில் 2014 ஏப்ரல் 19-20ஆம் திகதிகளில் இலண்டனில் இடம்பெற்றது. அதன்போது வெளியிடப்பட்ட இந்தச் சிறப்புமலரில்

தலைவருரை, ஆசியுரைகள், வாழ்த்துரைகள் என்பனவற்றுடன், கணக்கும் கடவுளும் (கம்பவாரிதி இ.ஜெயராஜ்), நமது செம்மொழியும் பிறமொழிகளோடு அதன் சிறப்பும் (புதுவை வயி.நாராயணசாமி), சைவ அடியவர்கள் உணர்த்திய வாழும் நெறி (தி.சிவகாமி), இந்தியா சென்று இந்துமதச் சான்றோர் அவையிற் புகழ் நிறுவிய ஈழத்தமிழர் (ஆறு.திருமுருகன்), சைவமும் அறிவியலும் (மூ.தமிழரசி), சிவஞானபோதம் (படித்தறிய வார்த்திகப் பொழிப்பு-பொருள் விளங்க சூர்ணிக் கொத்து (சூ.யோ.பற்றிமாகரன்), சைவத்தின் பெருமையினை நிலைநாட்டிய திருநாவுக்கரசர் (வெ.திருவேணி), சைவம் தமிழுக்கு ஆற்றிய தொண்டு (இரா.சந்திரசேகரன்), சைவத்தில் சமஸ்கிருதம் (பா.வசந்தக் குருக்கள்), சித்த மருத்துவத்தில் சைவ சித்தாந்தக் கோட்பாடுகள் (சே.சிவசண்முகராஜா), சைவ நாற்பாதங்களும் ஓர் ஆன்மீகப் பார்வையும் (பராசக்தி சந்திரசேகரி), இந்து சமய நோக்கில் சித்த மருத்துவம், இராஜயோகம் - ஒரு புதிய கண்ணோட்டம் (பிரேம்குமார் சங்கர்), பௌர்ணமியும் அம்பாள் வழிபாடும் (சண்முகநாத சிவாச்சாரியார்), திருமுறைகளில் அகப்பொருள் மரபு மாற்றங்கள் (மா.சிதம்பரம்), தமிழ்நாட்டிலுள்ள முக்கிய விநாயகர் ஸ்தலங்கள் (ந.நகுலேஸ்வரன்), சிவநெறியும் சிவ வழிபாட்டு மரபுகளும் வளர்ந்து சிறக்கச் சைவ ஆதீனத்திற்கு இணையாகச் செயற்பட்ட யாழ்ப்பாணம் சிவயோக சுவாமிகள், கொடித்தம்ப விளக்கம், சுந்தரர் திருப்பாட்டில் இலக்கியச் செழுமை (வசந்தா வைத்தியநாதன்), தமிழ்க் கல்வியின் சிறப்புக்குச் சைவசித்தாந்த அறிவின் அவசியம் (றீற்றா பற்றிமாகரன்), மாதங்களில் நான் மார்கழி (சபா மகேசன்), சிவஞானபோதம்: பதி, பசு, பாசம் என்னும் முன்பொருளின் உண்மையைக் காட்டும் விதம் (சிவாஜினி ஜெகநாதன்), Meditation-How to remain still (Sabapathy Sivayogan), Mystery of Numbers in the Verse 2 of Kolaru Pathigam by Saint Thiru Gnana Sampanthar (Mee. Rajagopalan) ஆகிய இந்து சமயக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. இம்மாநாடு, 19.4.2014 அன்று ஹைகேட் ஹில் ஆர்ச்வே முருகன் கோவிலிலும் (Highgate Hill Murugan Temple, 200A, Archway Road, London N6 5BA) 20.4.2014 அன்று லண்டன் ஸ்ரீ செல்வவிநாயகர் கோவிலிலும் (299-303, Ley Street, Ilford, Essex IG1 4BN) இடம்பெற்றது.

## 16114

**இலண்டன் சைவ மாநாடு (பதினாறாவது) சிறப்புமலர்.** மலர் வெளியீட்டுக் குழு. இலண்டன் N 6 5BA: பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம், 200A, Archway Road, London, 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2015. (இலண்டன்: ஜே.ஆர். பிரின்ட், 59-61, Hoe Street, London E17 4QR).

134 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x20.5 சமீ.

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தின் 16ஆவது சைவமாநாடு "பெரியபுராணமும் சைவ வாழ்வியலும்" என்ற கருப்பொருளில் 2015 ஏப்ரல் 18-19ம் திகதிகளில் இலண்டனில் இடம்பெற்றது. அதன்போது வெளியிடப்பட்ட இந்தச் சிறப்புமலரில் தலைவருரை, ஆசியுரைகள், வாழ்த்துரைகள் என்பனவற்றுடன், பெரியபுராணமும் வாழ்வியலும் (குன்றக்குடி பொன்னம்பல அடிகள்),

பெரியபுராணமும் வாழ்வியலும் (மருதாசல அடிகள்), பெரியபுராணத்தில் வைதிக நெறி (பா.வசந்தக் குருக்கள்), பெரியபுராணம் காட்டும் வாழ்க்கை நெறி (இரகு. கமலநாதக் குருக்கள்), பெரியபுராணம் வரலாற்றின் தேவை சைவ வாழ்வு மனிதாய மீட்சியின் தேவை (சூ.யோ.பற்றிமாகரன்), பெரியபுராணத்தில் சைவநீதி (வி.கந்தவனம்), பெரியபுராணத்தில் பக்தி (தி.விசுவலிங்கம்), சைவசமய வாழ் வியலில் பெரியபுராணத்தின் பங்கு (சீனித்தம்பி யோகேஸ்வரன்), பெரியபுராணச் சமுதாய வாழ்க்கை பெரியபுராணத்தால் அறியலாகும் சமுதாயம் (சுந்தரமூர்த்தித் தம்பிரான் சுவாமிகள்), பெரியபுராணமும் சைவ வாழ்வும் (க.கதிர்காமநாதன்), சேக்கிழார் தமிழ் (த.சிவகுமாரன்), பெரியபுராணமும் சைவ சித்தாந்தமும் (மா. வேதநாதன்) ஆகிய பெரியபுராணம் சார்ந்த இந்து சமயக் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. இம்மாநாடு, 18.4.2015 அன்று வுட்பிரிட்ஜ் உயர் கல்லூரியிலும் (Woodbridge High School, St Barnabas Road, Woodford Green, IG8 7DQ), 19.4.2015 அன்று லண்டன் அல்பேர்ட்டன் சமூகப் பாடசாலையிலும் (Alperton Community School, Ealing Road, Wembley, Middlesex HA0 4JE) இடம்பெற்றது.

## 16115

**இலண்டன் திருவருள்மிகு ஸ்ரீ சிவன் திருக்கோயில் குடமுழுக்குப் பெருவிழா சிறப்பு மலர் 2011.** மலர்க்குழு. லண்டன்: லண்டன் சிவன் கோயில் அறக்கட்டளை, 4A> Clarendon Rise, Off Lee High Road, Lewisham SE13 5ES, 1ஆவது பதிப்பு, ஜுன் 2011. (லண்டன்: வாசன் அச்சகம்).

240 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5x20 சமீ.

12.06.2011 அன்று இடம்பெற்ற குடமுழுக்குப் பெருவிழாவையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலர். வாழ்த்துரைகள், ஆசியுரைகள், அறிக்கைகளுடன் தமிழ்மொழி வளர்ச்சியில் திருமுறை (தவத்திரு மருதாசல அடிகள்), சைவ சமயத்தில் பிரதோஷ மகிமை (ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்), சிவபுராணமும் அதன் பொருளும் (சக்தி ஸ்ரீஸ்கந்தராஜா), அகர ஒலி முழங்க குடமுழுக்கு காணும் லூசியம் சிவன் அருளால் நலம் பெருகுக (றீற்றா பற்றிமாகரன்), சைவசமயத்தின் மகிமை (குமார ஆரூரக் குருக்கள்), தமிழரும் பக்தியும் (ச.சுப்புரெத்தினம்), மஹா கும்பாபிஷேக கிரியா விளக்கம் (சபா. மகேஸ்வரக் குருக்கள்), மனிதப் பிறவியும் வேண்டுவதே (வரத.நகுலேஸ்வரக் குருக்கள்), திருமுறையும் அதன் மகிமையும் (சபாபதி மகேஸ்வரன்), பண்ணார் இன் தமிழ் (சாமி தண்டபாணி ஓதுவார்), கோபுர தரிசனம் (பா.வசந்தக் குருக்கள்), திருமுருகாற்றுப்படையில் சைவசித்தாந்த கூறுகள் (மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள்), சம்பந்தர் போற்றும் சுந்தரர் (க.சேகர்), அன்பே சிவம் (சிவ ஆதிரை), திரு நாரையூர் விநாயகர் திருஇரட்டை மணிமாலை உணர்த்தும் மேன்மைகள் (க.கிருத்திகா), பிரதோஷ விரத சிறப்பும் வழிபாட்டு முறையும் (தம்பு சிவபாலசுப்பிரமணியம்), தர்ப்பைக்கு ஓர் விளக்கம் (ஸ்ரீலஸ்ரீ சிவாக் குருக்கள்), குரு வழிபாடு (மா.திருநாவுக்கரசு), பதியின் இலக்கணமும் வழிபடும் முறைகளும் (ம.நவமணி), திருமுருகாற்றுப்படையில்

*இயற்கை நலன் (வி.முருகன்), நாயன்மார் வரலாறு (அ.திருநாவுக்கரசு), குட்டித் திருவாசகம் (சாமி கிருஷ்ணமூர்த்தி), உலக சைவப் பேரவை (எச்.மனோகரன்),* The Great Guru-Kannappa navalar (Kumaran Sriskantharajah), An Outline of Saiva Siddhanta (T.N.Ramachandran), The Contemporary relevance of the Tiruvaachakam (T.N.Ramachandran), Pancha Iswarangal: The five ancient Holy Abodes of Lord Siva in Sri Lanka(Kandiah Sivakumar), Fifth Philosopher's Song *ஆகிய ஆக்கங்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.*

### 16116

**இளஞ்சைவ மாணவ மன்றம்: பொன்விழா மலர் 2018.** *மலர்க் குழு. மட்டக்களப்பு: இளஞ்சைவ மாணவ மன்றம், சித்தாண்டி, 1ஆவது பதிப்பு, 2018. (மட்டக்களப்பு: துர்க்கா அச்சகம், கொக்குவில்).*

xv, *186 பக்கம், ஒளிப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 31.5*x*22.5 சமீ.*

*மட்டக்களப்புப் பிரதேசத்தில் சிகண்டி முனிவரால் நிறுவப்பட்டதாகக் கருதப் படுவது சித்தாண்டி சித்திரவேலாயுதர் ஆலயமாகும். 1968இல் இவ்வாலயச் சூழலில் வாழ்ந்திருந்த சிவலிங்கம் ஆசிரியரின் ஆலோசனைப்படி நிறுவப்பட்டதே இளஞ் சைவ மாணவ மன்றமாகும். கூட்டு வழிபாடு, ஆனந்தக் காவடி, கோலாட்டம், கும்மி என்பன இப்பிரதேசத்தில் இவ்விளைஞர்களால் புதுப்பொலிவுடன் பயிலப்பட்டன. சைவத்திருமுறைப் போட்டிகள், வழிபாட்டுக் கலை வடிவங்களுக்கான போட்டி, திருமுறை உலாவுக்கான ஏற்பாடு, புராண படனம், சமயகுரவர் பூசை, சமய தீட்சை, நூல் வெளியீடு, சமயத் தேர்வுகள், உயர்தரத் தேர்வுக்கான சிறப்பு முறைத் தயார்ப் படுத்தல்கள் என இன்னோரன்ன செயற்பாடுகளை கடந்த ஐம்பதாண்டுகளாக இவ்வமைப்பினர் முன்னெடுத் துள்ளனர். இளஞ் சைவ மாணவர் மன்றத்தின் ஐம்பதாண்டுப் பணியின் நினைவுகூரலாக இந்தப் பொன்விழா மலர் 2018இல் வெளியிடப்பட்டுள்ளது. பல்வேறு பிரமுகர்களின் ஆசிச் செய்திகள், வாழ்த்துரைகளுடன் கூடிய இம்மலரில், சித்தாண்டி ஒரு திருநாம மந்திரம், சிவஞானியர் உகக்கும் சித்தாண்டி, சித்தாண்டித் தலத்து சிவனடியார் சித்திரங்கள், சித்தாண்டி சிறப்புக்கள், கதிரை யாத்திரையின் கேந்திர நிலையம், சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோவில் வரலாறும் ஐதீகங்களும், பரம்பொருள், இலங்கையில் சைவமும் கிழக்கிலங்கையில் முருக வழிபாடும், இன்றைய இளைஞர்களும் இந்துசமய சமூக நெறிமுறைகளும், சித்தாண்டி திருமணச் சடங்குகள் பற்றிய ஓர் ஆய்வு, சித்தாண்டி கல்வி வரலாறு - ஒரு நோக்கு, சித்தாண்டி ஆலய அனுட்டானம், பிரணவ தீர்த்தம், சித்தாண்டிச் சீர், முருக வழிபாட்டின் பெருமை, சம்பிரதாயங்களும் அறிவியலும், கர்ணபரம்பரைக் கதைகளும் காலச்சுவடுகளும், இறைபணியில் இணைவோம் இறை அன்பைப் பெறுவோம், பொன்விழாப் பொலிவுகாணும் இளம் சைவ மாணவர் மன்றம், மானுட யாத்திரையில் மறக்கமுடியாத பகிர்வுகள், என் பார்வையில் சிவலிங்கம் ஐயா, சித்தாண்டிக் கீர்த்தனைகள், மன்றத் தாபகர் ஆகிய ஆக்கங்களும் இம்மலரைச் சிறப்பிக்கும் வகையில் இடம்பெற்றுள்ளன.*

## 16117

**காரை ஒளி: ஈழத்துச் சிதம்பர குடமுழுக்கு விழா மலர்: 10.07.1970.** மலர்க் குழு. தெகிவளை: கொழும்பு-காரை அபிவிருத்தி சபை, 48, அல்பேட் இடம், 1ஆவது பதிப்பு, ஜுலை 1970. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).

(24), 48 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17 சமீ.

"காரை ஒளி" சஞ்சிகையின் ஜுலை 1970இற்குரிய (ஒளி 2, சுடர் 5) இதழ், ஈழத்துச் சிதம்பர குடமுழுக்கு விழா மலராக 22.8.1970 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இம்மலரில் ஈழத்துச் சிதம்பரம், வாழ்த்துச் செய்தி (சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக் குருக்கள்), வாழ்த்துச் செய்தி (ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான கர்த்தர்கள்), சைவம் காத்த பூமி, ஈழத்துச் சிதம்பரமும் காரை அபிவிருத்திச் சபையும், கும்பாபிஷேகம் (கா.கைலாசநாதக் குருக்கள்), சாதியினும் சமயமே அதிகம் (பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை), ஈழத்துச் சிதம்பரம்- செய்யுள் (பண்டிதர் சங்கர. வைத்தியலிங்கனார்), யான் அறிந்த காரைநகர்ச் சிவன்கோயில் (வே. சிவகுரு), ஈழத்துச் சிதம்பரம் எனப் பெயர் பெறும் காரைநகர்ச் சிவன்கோவில் குடமுழுக்கு விழா (தங்கம்மா அப்பாக்குட்டி), வனப்புறு திருநாள் (புலவர் சொ. சிங்காரவேலன்), மஹா கும்பாபிஷேகம் (எஸ்.சுவாமிநாத சிவாசாரியார்), கண்டறியாதன கண்டனர் (சிற்பி), சிதம்பரநாதன் தோத்திரம் -பாடல் (சீ.வினாசித்தம்பி), காரைநகரில் ஒட்டிப்பிறவா இரட்டையர்கள் (F. X. C. நடராசா), ஆபத்து வேளையில் அபயமளிக்கும் திண்ணபுரத்தான் (இ.வை.பொன்னம்பலம்), ஈழத்துச் சிதம்பரத்து குடமுழுக்கு விழா (வை.சச்சிதானந்தன்), பெருஞ்சாந்திக்குச் சாந்தியாயமையும் மண்டலாபிஷேகம் (சிவஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள்), மணி ஓசை நாடகத்திலிருந்து ஒரு பாடல், 365 நாட்களில் ஒரு நாளாவது (ஆ.அரசரத்தினம்), ஈழத்துச் சிதம்பரத்தின் ஆனந்தக் கூத்தன் (சர்மா), திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

## 16118

**கேதீச்சர தேனமுதம்: திருக்கேதீச்சர ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா மலர்.** த.முத்துக்குமாரசுவாமி (மலராசிரியர்). திருக்கேதீச்சரம்: திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபை, திருக்கேதீச்சர ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை, 1ஆவது பதிப்பு, ஜுலை 2022. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).

xxxiv, (33), 263 பக்கம், ஒளிப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 32.5x23 சமீ.

இவ்விழா மலர்க் குழுவில் மலராசிரியராக த.முத்துக்குமாரசுவாமி அவர்களும், நூலாக்கக் குழுவினராக வே.கந்தசாமி, செ.இராகவன், செ.சி.இராமகிருஷ்ணன், அ.கயிலாசபிள்ளை, ஐ.தயானந்தராசா ஆகியோரும் பணியாற்றியுள்ளனர். ஆசிச் செய்திகளும் வாழ்த்துச் செய்திகளும், நிழற்படத் தொகுப்பு, ஆலயங்கள், திருக்கேதீச்சர ஆலய வரலாறு, தேவார காலமும் திருக்கேதீச்சரமும், அன்னியர்

ஆட்சி, நாவலரும் அவருக்குப் பின்னரும், திருப்பணிச் சபையும் அதன் பின்னரும், கருங்கற் திருப்பணி வேலைகள், திருக்கேதீச்சரம் தொடர்பான கட்டுரைகள், திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபை ஆகிய பதினொரு பிரிவுகளில் இம்மலர் விரிவாக எழுதித் தொகுக்கப்பட்டுள்ளது.

## 16119

**சிவயோக சுவாமிகளின் அவதார 150ஆவது ஆண்டு மலர் (சிவதொண்டன் மலர் 86, இதழ் 5-8).** *எஸ்.வினாசித்தம்பி (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சிவதொண்டன் சபை, 434, கே.கே.எஸ். வீதி, 1ஆவது பதிப்பு, மே 2022. (யாழ்ப்பாணம்: அரிசோனா அச்சகம், 93, பலாலி வீதி, திருநெல்வேலி).*

*(2), 110 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x22 சமீ.*

சிந்தை தெளிந்தேனே, வாழ்த்துப்பா, யோக சுவாமிகளும் கீதை உபநிஷதக் கருத்துகளும், யோக சுவாமிகளின் மகிமை, தவத்திரு யோக சுவாமிகள் அருளிச்செய்த கடவுள் வாழ்த்து, யோக சுவாமிகளின் ஓர் அருள்மொழி, ஒரு பொல்லாப்பும் இல்லை, ஈழத்துச் சித்தர்களும் குரு மரபும், கண்டபத்திற் கண்ட சற்குரு தரிசனம், திருவாசக நற்சிந்தனை, நான் யோக சுவாமிகள் மடத்தில் இருக்கிறேன், பாதகா பஞ்சகம், சந்த சுவாமியின் உண்மையைத் தேடிய பயணமும் பாதை காட்டிய சற்குருவின் மொழிகளும், சிவதொண்டன் நிலையத்தை நோக்கிய பாதயாத்திரை, ஆன்மீகப் பயணங்களில் நான் பெற்ற இறையனுபவங்கள், கீதையில் மலர்ந்த எண்ணங்கள்-1, நன்றுடையான், சொல்லுநா நமச்சிவாயவே, மூன்று உடம்புகளும் ஐந்து கோசங்களும், நாஸதீய சூக்தம் ஒரு விளக்கம், யோகசுவாமிகளது சிவ தொண்டில் குருசந்தானம் உண்டா?, ஐயா காட்டிவைத்த யோக சுவாமிகள், சிவயோக குருமணிப் பத்து, அகண்ட வெளியில் இருக்கும் அற்புத யோககுருபரன் (ஆசிரியர்), நற்சிந்தனை, Natchinthanai, On Yoga Swami, The Holy Awakening: The Pada Yatrai, Suffering is due to wrong perception, Nasadiya Hymn (நாஸதீய சூக்தம்), Tiruppandikkodumudi (திருப்பாண்டிக்கொடுமுடி), Purification of the Mind ஆகிய தலைப்புகளிலான ஆக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

## 16120

**ஞானவேல்.** *சி.நர்மதா (இதழாசிரியர்). வத்தளை: ஸ்ரீ முத்துக்குமரன் ஆலய அறநெறி பாடசாலை, 614, புகையிரத நிலைய வீதி, உணுப்பிட்டிய, 1ஆவது பதிப்பு, ஜூலை 2005. (வத்தளை: கே.சிவலிங்கம், கலா பிரின்டர்ஸ்).*

*(17), 86 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x22 சமீ.*

வத்தளை உணுப்பிட்டி ஸ்ரீ கஜவல்லி, மகவல்லி சமேத ஸ்ரீ முத்துக்குமர சுவாமியின் பேரில் 03.07.2005 அன்று நடைபெற்ற "பார்த்தீப வருட அலங்கார உற்சவத்தை" முன்னிட்டு வெளியிடப்பட்ட சிறப்பு மலர். வத்தளை ஸ்ரீ முத்துக்குமரன் ஆலய அறநெறி பாடசாலை மாணவர்களின் வெளியீடாக இது மலர்ந்துள்ளது. மேற்படி பாடசாலையின் ஆசிரியர் திருமதி சி.நர்மதா இம்மலரின் ஆசிரியருமாவார்.

16121
**துர்க்காபுரம் மகளிர் இல்லம்: சைவ ஆன்மீக மகளிர் விடுதிச்சாலை: 40ஆவது ஆண்டு விழா சிறப்பு மலர் 2022.** மலர்க் குழு. யாழ்ப்பாணம்: நிர்வாகசபை, துர்க்காபுரம் மகளிர் இல்லம், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை, 1ஆவது பதிப்பு, 2022. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம், காங்கேசன்துறை வீதி).

xv, 84 பக்கம், 46 புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5x18.5 சமீ.

இச்சிறப்பிதழில், துர்க்காபுரம் மகளிர் இல்ல 39ஆவது ஆண்டறிக்கை, ஆன்மீக ஒளிபரப்பி மனித நேயம் போற்றிய அன்னை, இதய அஞ்சலி, சமூக சேவைக்கும் சமூகப் பணிக்குமுள்ள வேறுபாடுகளும், சமூகப்பணியினூடாக சமுதாய விருத்தியை ஏற்படுத்தலும், ஆற்றுப்படுத்தும் ஆற்றுகைகள், நாற்பது ஆண்டுகள் நற்பணி, மாண்புமிகு மகளிர் இல்லம், இல்லத்தின் வளர்ச்சிப்பாதை-ஒரு நோக்கு, இல்லத்தின் வளர்ச்சியில் ஒரு நோக்கு, ஆகிய கட்டுரைகளுடன் இல்லப் பிள்ளைகளின் ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. இம்மலரின் மலர்க்குழுவில் செல்விகள் சுபாசினி துரைசிங்கம், றஜிதா செல்வநாதன், ஹரிசாளினி கருணாகரன், ஐஸ்வர்யா இராஜஇராஜேஸ்வரன், நிருத்திகா ஜீவராசா ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.

16122
**நால்வர் நெறியில் நாற்பது ஆண்டுகள்: சைவ முன்னேற்றச் சங்கம் 40ஆவது ஆண்டு நிறைவு விழா மலர் 2017.** மலர் வெளியீட்டுக் குழு. லண்டன்: சைவ முன்னேற்றச் சங்கம், 2, Salisbury Road, Manor Park, London E12 6AB, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2017. (இலண்டன்: ஜே.ஆர். பிரின்ட், 59-61, Hoe Street, London E17 4QR).

118 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ.

28.10.2017 அன்று லண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் நாற்பதாவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்ட வேளை வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இதுவாகும். பல்வேறு பிரமுகர்களின் வாழ்த்துரைகள், ஆசியுரைகளுடன் வெளிவந்துள்ள இம்மலரில் சைவ மரபு சிவாகமங்களை அடிப்படையாகக் கொண்டது (ச.பத்மநாதன்), இங்கிலாந்துப் புலம்பெயர் தமிழ்மொழி தமிழிலக்கிய வளர்ச்சியில் சைவமுன்னேற்றச் சங்கத்தின் பங்களிப்பு (நீற்றா பற்றிமாகரன்), கறை கண்டன் உறை திருக்கோவில் திருக்கோணேஸ்வரம் (சாவித்திரி ஆனந்தன்), சிவயோக சுவாமிகள் (அருளாம்பிகை குணராசா), ஈசன் பாதத்தை நேசமுடன் தொழுவோம் (பாலன் சுதாகரன்), பஞ்சபுராணம்: அன்றைய மரபும் இன்றைய நிலையும் (செல்லத்தம்பி சிறீக்கந்தராஜா) ஆகிய சிறப்புக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

## 16123

**நெட்டிலைப்பாயான் எழில்: கோண்டாவில் திருவருள்மிகு நெட்டிலைப்பாய் பிள்ளையார் திருக்கோயில் புனராவர்த்தன மஹாகும்பாபிஷேக மலர்.** செல்லப்பா நடராசா (மலர் ஆசிரியர்). கோண்டாவில்: பரிபாலன சபை, திருவருள்மிகு நெட்டிலைப்பாய் பிள்ளையார் திருக்கோயில், 1ஆவது பதிப்பு, ஜுன் 2011. (யாழ்ப்பாணம்: அன்றா பிறிண்டேர்ஸ், இல. 356A, கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதிச் சந்தி).

xviii, 53 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18 சமீ.

5.6.2011 அன்று இடம்பெற்ற புனராவர்த்தன கும்பாபிஷேகத்தின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். 1976ஆம் ஆண்டு நெட்டிலைப்பாய் பிள்ளையார் திருக்கோயிலுக்கு புதிய மகா சபையும் பரிபாலன சபையும் தெரிவுசெய்யப்பட்டன. அதன் பின்னர் 1980, 2006 ஆகிய இரு ஆண்டுகளில் இரண்டு மகா கும்பாபிஷேக மலர்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்ந்து மூன்றாவதாக 2011இல் வெளியிடப்படும் கும்பாபிஷேக மலர் இதுவாகும். திருக்கோயிலின் தொன்மை களையும் பழைமைகளையும் மகிமைகளையும் எடுத்தியம்பும் மலர்கள் இவை. ஆசியுரை, வாழ்த்துரைகளுடன், நெட்டிலைப்பாய்த் திருத்தலமும் அதன் வளர்ச்சியும் (செல்லப்பா நடராசா), சமய வாழ்வியல் (சிவமகாலிங்கம்), எடுத்த மானிடப் பிறவியின் பயனை எய்துவர் அவர்க்கு மறுமையும் இனிமே-கவிதை (மகாலிங்கசிவம் பார்வதிநாதசிவம்), நெட்டிலைப்பாய் நின்மலரே போற்றி போற்றி-பதிகம் (இ.முருகையன்), திருமணங்களில் அறுகரிசி இடல் (ச.லலீசன்), நெட்டிலைப்பாய்ப் பிள்ளையாரும் ஐயர் பாடசாலையும் (வை.க.சிற்றம்பலம்), சைவத் திருத்தலங்கள் அன்றும் இன்றும் (மு.திருநாவுக்கரசு), தெய்வ நம்பிக்கை (பொ.இலங்கநாதபிள்ளை), திருமுருகாற்றுப்படைக்கு நாவலர் எழுதிய உரை (எஸ்.சிவலிங்கராஜா), நெட்டிலைப்பாய்த் திருத்தலத்திற்கு சிறப்பான இரண்டாவது பாதை அமைந்த வரலாறு (சுப்பிரமணியம் விசுவநாதன்), இராஜகோபுரமும் மணிமண்டபமும் (சு.பரம்சோதி), என்கடன் பணி செய்து கிடப்பதே (இளைஞர் அணி), நெட்டிலைப்பாய் ஸ்ரீ கணேஷா பாலர் பாடசாலையும் அதன் வளர்ச்சியும் (திருமதி நாகேஸ்வரி சண்முகரத்தினம்), திருஊஞ்சற் பாக்கள் ஆகிய ஆக்கங்களையும் உள்ளடக்குகின்றது.

## 16124

**யாழ்ப்பாணம் நல்லூர் நாயன்மார்கட்டு அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்மன் திருக்கோவில் பஞ்சதள இராஜகோபுரம் திருக்குடமுழுக்கு சிறப்பு மலர் 2020.** மலர்க் குழு. யாழ்ப்பாணம்: ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலயப் பரிபாலன சபை, திருப்பணிச் சபை, நாயன்மார்கட்டு, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2020. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 672B, காங்கேசன்துறை வீதி).

vi, 157 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5x19.5 சமீ.

30.01.2020 அன்று இடம்பெற்ற மேற்படி ஆலயத்தின் பஞ்சதள இராஜகோபுரத் திருக்குடமுழுக்கு விழாவையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலர். இம்மலர்க் குழுவில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் ச.மனோன்மணி, முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன், முனைவர் சுகந்தினி முரளிதரன், திரு. இ.அரசகுல சூரியர், திரு. பரநிருபசிங்கம் இறையனார் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். இம்மலரில் மஹா கும்பாபிஷேக கிரியை விளக்கம் (சிவஸ்ரீ சதா மகாலிங்க சிவக்குருக்கள்), சுவாமி விவேகானந்தர் கால் பதித்த மண் (ஆறு திருமுருகன்), யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் திருக்கோயில் உருவத் திருமேனிகள் (பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர்), யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலய அமைப்பு (சி.ரமணராஜ்), யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு அருள்மிகு ஸ்ரீ பிச்சாடன மூர்த்தி ஆலய வரலாறும் வளர்ச்சியும் (ப.மகேந்திரதாசன்), பேய்ச்சியம்மன் அருளாட்சியின் அற்புதங்கள் (க.இராஜாம்பிகை), அம்பிகையும் மானசீக உருவமும் (இராசா அரசகுலசூரியர்), அற்புதம் (மு.மனோகர்), வழிபாட்டில் பக்தி (இறையனார் பரநிருபசிங்கம்), திருக்கோயிற் கலைகள் (சுகந்தினி சிறிமுரளிதரன்), நாயன்மார் கட்டில் திண்ணைப் பள்ளிக்கூடம் (கே.மனோநாயகம்), நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகம் (தி.கமலநாதன்), வரலாற்றுப் புகழ் பேசும் நாயன்மார் கட்டு (இ.பாலசுந்தரம்), பண்பாட்டுக் கிராமங்களின் வரிசையில் நாயன்மார்கட்டு (செ.கிருஷ்ணராஜா), பேய்ச்சி அம்மன் வழிபாடும் நாயன்மார்கட்டும் (ச.மனோன்மணி), ஈழத்தில் பெரியாச்சி-தொன்மையும் தொடர்ச்சியும் (நா.சண்முகலிங்கன்), புள்ளிச் சட்டிக்காரி அம்மன் (அ.கா.பெருமாள்), பேய்ச்சி அம்மன் அந்தாதி (நாயன்மார்கட்டு இ.குகதாசன்), தாயின் கழலிணைக்கோர் தமிழிசைமாலை (நாயன்மார்கட்டு இ.குகதாசன்), ஆலயத் திருப்பணிச்சபையின் பொருளாளரின் வாழ்த்தும் நன்றியும் (இ.ஸ்ரீகந்தபாலன்) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

## 294.5(4) பக்தி இலக்கியங்கள்

### 16125

**அகத்திய மூலம் திருமந்திரம்.** மு.திருஷி. தெல்லிப்பழை: திருமதி அ.சீதாலட்சுமி, திருஷி ஈச்சுரம், பன்னாலை, 1ஆவது பதிப்பு, 1970. (சுன்னாகம்: முத்தையா சபாரத்தினம், திருமகள் அழுத்தகம்).

(4), 40 பக்கம், விலை: ரூபா 10.00, அளவு: 18x12 சமீ.

225 செய்யுள்களை உள்ளடக்கிய திருமந்திரப் பாடல்கள். சொற்றிறம்பாமை, பதி வலியில் வீரட்ட மெட்டு, இலிங்கப் புராணம், தக்கன் வேள்வி, பிரளயம், சக்கரப் பேறு, எலும்புங் கபாலமும், அடிமுடி தேடல், சர்வ சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபாவம், அநுக்கிரகம், கெற்பைக் கிரியை, மூவகை யாருயிர் வர்க்கம், பாத்திரம், அபாத்திரம், தீர்த்தம், திருக்கோயிலிழிவு, அதோமுக தெரிசனம், சிவநிந்தை, குருநிந்தை, மயேசுர நிந்தை, பொறையுடைமை, பெரியோரைத் துணைக்கோடல், அட்டாங்க யோகப்பேறு, வாழ்த்து, ரேப்தி செந்தமிட்டொகுதி,

*சரஸ்வதி துதி ஆகிய செய்யுட் தலைப்புகளில் இந்நூலிலுள்ள செய்யுட்கள் தொகுக்கப்பட்டுள்ளன. பன்னாலை திருஷீச்சரம் ஆலயத்தின் திருப்பணிக்கு உதவும் வகையில் இந்நூலின் மூலம் பெறப்படும் நிதி தம்ப மண்டபம், வசந்த மண்டபம், யாகசாலை ஆகியவற்றின் புனருத்தாரணத்திற்குப் பயன்படுத்தப்படும் என்ற குறிப்பும் காணப்படுகின்றது.*

## 16126

**அருணகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த கந்தர்அநுபூதி மூலமும் உரையும்.** *செல்லையா சிவபாதம். யாழ்ப்பாணம்: செல்லையா சிவபாதம், பணிப்புலம், பண்டத்தரிப்பு, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2020. (யாழ்ப்பாணம்: வானவில் பிரின்டர்ஸ், மாதகல் வீதி, பண்டத்தரிப்பு).*

*96 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x15 சமீ.,* ISBN: *978-624-5881-46-8.*

*அருணகிரிநாதர் அருளிய கந்தர் அநுபூதிக்கு பதவுரை, பொழிப்புரை, ஆய்வுரை, மற்றும் கந்தபுராணக் கதைகள் அடங்கியதாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலின் ஆசிரியர் கலாபூஷணம், சைவசித்தாந்த பண்டிதர், பௌராணிக வித்தகர் செல்லையா சிவபாதம் அவர்கள், 25.06.2019 இல் இறையடி சேர்ந்த சமூகத் தொண்டரும் கூட்டுறவுத் துறையின் பற்றாளரும் தனது உறவினருமான கு.வி.கந்தசாமி அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம் செய்துள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70054).*

## 16127

**அருளின் ஆழியான்: பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா.** *சாயி சசி. கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 202, செட்டியார் தெரு, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2020. (கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 202, செட்டியார் தெரு).*

vii, *118 பக்கம், விலை: ரூபா 275., அளவு: 21.5x15 சமீ.,* ISBN: *978-624-55820-1-3.*

*ஓர் அறிமுகம், பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா யார்?, பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா காட்டும் பக்தி நெறி, பிரசாந்தி நிலைய ஒரு நாள் நிகழ்வுகள், பகவான் ஸ்ரீ சத்ய சாயி சுப்ரபாதம், பகவான் ஸ்ரீ சத்ய சாயி அஷ்டோத்ர சத நாமாவளி, பகவான் ஸ்ரீ சத்ய சாயி பஜனாவளிகள், பிரசாந்தி நிலையம்-ஒரு பார்வை, பிரசாந்தி நிலையத்தில் கொண்டாடப்படும் முக்கிய விழாக்கள், பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா நமக்களித்த அருஞ்செல்வங்கள், தியானம் நாமஸ்மரணம், பகவான் நமக்கருளும் விபூதியின் ஆற்றல்கள், பகவத் கீதை ஓர் அறிமுகம், காயத்ரி மந்திரத்தின் மகிமை, நால் வேத சாரம் -ஸ்ரீருத்ரம், திருவாசகம் என்னும் தேன், சிறுவர் சிந்தனைக் கதைகள்-1, சிறுவர் சிந்தனைக் கதைகள்-2 ஆகிய 18 தலைப்புகளில் இந்நூல் வகுத்துத் தொகுக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70046).*

### 16128

**அன்பே சிவம்: திருமந்திரமும் திருவாசகமும் கூறும் குறுங்கதைகள்.** தியாகராஜா சுதர்மன். யாழ்ப்பாணம்: அகில இலங்கை சைவ மகாசபை, பழைய தபாற்கந்தோர் வீதி, தலையாழி, கொக்குவில், 1ஆவது பதிப்பு, மார்ச் 2022. (யாழ்ப்பாணம்: நாவலர் அச்சகம்).

iv, 44 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22x15 சமீ., ISBN: 978-624-97544-1-6.

திருமந்திரம், திருவாசகம் ஆகியன கூறும் தத்துவங்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட 10 குறுங்கதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு ஏற்றது. நூலாசிரியர், யாழ். மாநகர சபையின் சித்த மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றுகின்றார்.

### 16129

**ஆளுடைய அடிகள் அருளிய திருவெம்பாவை: பாட்டும் பொருளும் பயனும் திருப்பள்ளியெழுச்சியுடன்.** எம்.எஸ்.ஸ்ரீதயாளன் (உரையாசிரியர்). கொழும்பு: எம்.எஸ்.ஸ்ரீதயாளன், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2009. (தெகிவளை: காயத்ரி பப்ளிக்கேஷன், த.பெ. இல. 64).

24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.

திருவெம்பாவை, மாணிக்கவாசக சுவாமிகளால் திருவண்ணாமலைத் திருத்தலத்திலே அருளிச்செய்யப்பட்டது. இருபது பாடல்களைக் கொண்ட திருவெம்பாவை மார்கழித் திருவாதிரைக் காலத்தில் ஓதப்படுவதாகும். பாவை என்பது பெண்-சக்தி: உமா தேவி எனப் பொருள்படும். அப்பாவையானவள் எம்மை ஈடேற்றும் விருப்புடையவள், தன்னிலைமையை மண்ணுயிர்களும் அடைந்து இன்புறவேண்டும் என்றும் அவாவுடையவள். "தன்நிலைமை மண்ணுயிர்கள் சார-தரும் சக்தி பின்ன மிலான் எங்கள் பிரான்" என்ற உமாபதி சிவாச்சாரியார் திருவருட்பயன் பாடல் சக்தியின் தன்மையைக் கூறுகின்றது. எனவே தான் அந்தப் பேரருட் சக்தியை எம்முடன் உண்டான உரிமை பற்றி "எம்பாவை" என்று மணிவாசகர் விளிக்கிறார். "திரு" என்ற சொல் அப்பாவையின் பெருமையை விளக்கும் அடைமொழியாக வந்தது. சக்தியின் அருட்சிறப்பை விதந்து போற்றும் பாடல்களே "திருஎம்பாவை" என்ற அருட்கனிகளாகும்.

### 16130

**இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் பிள்ளைத் தமிழ்.** வைகுந்தம் கணேசபிள்ளை. யாழ்ப்பாணம்: திருநெறிய தமிழ் மறைக் கழகம், ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில், இணுவில், 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2022. (யாழ்ப்பாணம்: சுடர்நிலவு கிராப்பிக்ஸ், இணுவில் கிழக்கு, இணுவில்).

xxii, 112 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x15 சமீ.

பிள்ளைத்தமிழ் என்பது தமிழ் இலக்கியத்தில் வழங்கும் பிரபந்த நூல் வகைகளுள் ஒன்று. புலவர்கள் தாம் விரும்பிய தெய்வங்கள், சமயாசாரியர்கள், புலவர் பெருமக்கள், ஆதீனகர்த்தர், அரசர், உபகாரிகள், அவர் அவர்கட்கு உகந்தவர்கள்,

ஆகியோரைக் குழந்தையாக உருவகித்துக் கற்பனை பல அமையப் பாடப்படுவது பிள்ளைத் தமிழாகும். இணுவில் கிராமத்தில் எழுந்த பிள்ளைத் தமிழ் பிரபந்தங் களில் மூன்றாவது இடத்தினை இந்நூல் வகிப்பதாக வெளியீட்டுரையில் குறிப்பிடப் பட்டுள்ளது. முதலாவது சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பெற்ற சிவகாமி அம்மன் பிள்ளைத் தமிழ், இரண்டாவது கவிஞர் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்களால் எழுதப்பட்ட இணுவை செகராசசேகரப் பிள்ளையார், இணுவை முருகன் பிள்ளைத் தமிழ்களைத் தொடர்ந்து பண்டிதை வைகுந்தம் கணேசபிள்ளை அவர்களால் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் மேல் எழுதப்பட்ட பிள்ளைத் தமிழ் நூல் வெளி வருகின்றது. இந்நூலில் இணுவை ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் மீது பாடப்பெற்ற பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தம் காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம், சிற்றில் பருவம், சிறுபறைப் பருவம், சிறுதேர்ப் பருவம் ஆகிய பத்துப் பருவங்களில் பாடப்பட்டுள்ளது. இதில் ஆலயத் தொண்டர்களின் பணிகள், பிடியரிசித் தொண்டு, பிள்ளையார் மேல் பாடிய பிற பிரபந்தங்கள், இணுவில் கிராமத்தை அலங்கரித்த புலவர் பெருமக்கள், இணுவில் விநாயகர் ஆலயங்கள் ஆகியன சுட்டிக் காட்டப்படுகின்றன.

## 16131

**ஈழநாட்டிற் புராணபடனச் செல்வாக்கு: ஓர் ஆய்வு.** இரா. வை.கனகரத்தினம். *யாழ்ப்பாணம்: ஏழாலை-அத்தியடி புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான வெளியீடு, 1ஆவது பதிப்பு, வைகாசி 1985. (யாழ்ப்பாணம்: மஹாத்மா அச்சகம், ஏழாலை மேற்கு, ஏழாலை).*

*32 பக்கம், விலை: ரூபா 15.00, அளவு: 26.5x18.5 சமீ.*

துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழாச் சபை வெளியிட்ட "சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்" என்னும் தொகுதியில் "ஈழத்திற் புராண படனச் செல்வாக்கு-ஓர் ஆய்வு" என்னும் தலைப்பில் ஆசிரியரின் புராண படனம் பற்றிய இந்த ஆய்வும் இடம்பெற்றிருந்தது. இவ்வாய்வே தனி நூலாக இங்கு வெளியிடப்பட்டுள்ளது. பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. இரா.வை.கனகரத்தினம் அவர்கள் ஆலயந் தோறும் நடைபெற்று வந்த புராணப் படிப்பு உள்ளிட்ட படிப்புகளைப் பற்றி விரிவானதொரு ஆராய்ச்சியை இங்கு மேற்கொண்டுள்ளார். குறித்த ஆய்வுக் கட்டுரையை எழுதியுள்ள ஆசிரியர், புராண படனங்களில் கையாளப்பட்டு வரும் பழைய, புதிய நடைமுறைகளை சம்பந்தப்பட்ட நூல்கள் பலவற்றில் இருந்தும் ஆதாரங்க ளுடன் எடுத்துக்காட்டி அகராதி முறையில் விளக்கியிருக்கிறார். ஈழநாட்டிற் புராண படனச் செல்வாக்கு எவ்வாறு வளர்ந்து வந்தது என்பது பற்றி ஆய்வு மேற்கொள்வோருக்கு இவ்வாய்வுக் கட்டுரை நல்லதொரு திறவுகோலாய் அமையும் என்று பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள்ஆசியுரையிற் குறிப்பிடுகின்றார்.

## 16132

**கண்ணகி வழிபாடும் இராஜராஜேஸ்வரி வழிபாடும்.** கனகசபாபதி நாகேஸ்வரன். பெலிகுல்லோயா: க.நாகேஸ்வரன், சிரேஷ்ட விரிவுரையாளர், மொழித்துறை, சப்ரகமுவ பல்கலைக்கழகம், 1ஆவது பதிப்பு, 2007. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).

(20), 88 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x13.5 சமீ., ISBN: 978-955-98962-5-8.

சக்தி வழிபாட்டின் பரிணாமங்கள் குறித்த தமிழ் இலக்கிய வரலாற்று ஆய்வு. நூலாசிரியர் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மொழித்துறை சிரேஷ்ட விரிவு ரையாளராகப் பணியாற்றுபவர். இவரது 5ஆவது நூல் இதுவாகும். இலக்கியப் பண்பாட்டியலில் நிலவும் கருத்துநிலைக்கும், வழிபாட்டுக்குமுள்ள தொடர்பு, அகமுகமாகக் கண்ணகி வழிபாட்டு அம்சங்கள், வரலாற்றடிப்படையில் சோழப் பேரரசர்களது இராஜராஜேஸ்வரி அம்மன் வழிபாடாக மலர்ச்சியுற்ற பாங்கு, இயற்கையின் வெஞ்சினமும், சீற்றமும் அதனடியாக நிகழ்ந்த பயன்களும் அவை குறித்த சிந்தனைகளும் என்ற மூன்று பரிமாணங்களில் இந்நூல் ஆய்வுசெய்கின்றது. விக்கிரகவியல், ஆகமவியல் அடிப்படையிலன்றி, இலக்கியப் பண்புகளின் அடிப்படையிலும், மானுட மேன்மைகளின் அடிப்படையிலும் இந்நூலிலே கருத்துகள் இடம்பெறுகின்றன. பண்பாட்டு ஆய்வுக்கான மூலங்கள், கற்பின் சீற்றமும் கடலின் சீற்றமும் (சுனாமிப் பேரலைகள்), மட்டக்களப்பில் கண்ணகை அம்மன் வழிபாடு, அம்மன் படிமங்களும் பிரதிமாலக்ஷணங்களும் ஆகிய இயல்களின் கீழ் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நூலின் இறுதியில் நிறைவுரை, அடிக்குறிப்புகள் என்பனவும் காணப்படுகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 172726).

## 16133

**கதிர் ஒளி: சோ.க.ஐயம்பிள்ளை கதிர்காமு அவர்களின் ஞாபகார்த்த வெளியீடு.** மலர்க் குழு. கனடா: சோ.க.ஐயம்பிள்ளை கதிர்காமு குடும்பத்தினர், 1வது பதிப்பு, மே 2008. (அச்சக விபரம் தரப்படவில்லை).

152 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

புங்குடுதீவு, 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவில் வசித்து வந்தவரும் இலங்கையில் முன்னாள் தபால் அதிபராகப் பணியாற்றியவருமான அமரர் சோ.க.ஐயம்பிள்ளை கதிர்காமு (21.07.1944-09.04.2008) அவர்களின் ஞாபகார்த்த வெளியீடாக 09.05.2008 அன்று வெளியிடப்பட்டது. விநாயகர் வழிபாடு, திருமுறைகள், சிவன் வழிபாடு, முருகன் வழிபாடு, தேவி வழிபாடு, ஆகிய பிரிவுகளின் கீழ் பக்திப் பாவகைகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70336).

### 16134

**கந்தர் அநுபூதி (எளிய நடையிலான உரையுடன் கூடியது).** *நா.இரத்தினசபாபதி (தொகுப்பாசிரியர்). கொழும்பு 11: மெய்கண்டான் அச்சகம், 161, செட்டியார் தெரு, 1ஆவது பதிப்பு, வைகாசி 1975. (யாழ்ப்பாணம்: மெய்கண்டான் அச்சகம், ஸ்ரான்லி வீதி).*

*(8), 52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x12.5 சமீ.*

*1950 முதல் ஆண்டுதோறும் நல்லூர்த் திருவிழாவில் மெய்கண்டான் அச்சகத்தினர் முருகன் புகழ்பாடும் பிரபந்தங்களை அச்சிட்டு அன்பளிப்பாக வெளியிடும் பாரம்பரியத்தைக் கடைப்பிடித்து வந்துள்ளனர். 1975இலும் இப்பணியின் வரிசையில் இலகுவான எளிய நடையுடன் கூடிய "கந்தர் அநுபூதி" என்னும் பக்தி இலக்கிய நூல் வெளிவந்துள்ளது. இந்நூல் 1975 வைகாசி விசாகத் தினத்தில் சுழிபுரம் பறாளாய்த் தேர்த் திருவிழாவின்போது மெய்கண்டான் அதிபர் அமரர் நா.இரத்தினசபாபதி அவர்களால் தொகுக்கப்பெற்று வெளியிடப்பட்டுள்ளது.*

### 16135

**குருநாக்கற்பதி ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானார் மீது தோத்திரப் பதிகம்.** *கா.கதிரவேல் (மூலம்), க.வைத்தியலிங்க பிள்ளை (பரிசோதித்தவர்). குருநாகல்: சி.க.ஆறுமுகம், 1வது பதிப்பு, 1927. (கொழும்பு: சி.க.ஆறுமுகம், சிவகுக அச்சியந்திரசாலை, இல. 9, குவாரி ரோட்).*

*9 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x10 சமீ.*

*குருநாக்கற்பதியில் அடியார்களின் மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவான் பொருட்டுத் திருக்கோயில் கொண்டருளிய ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானார் மீது பாடப்பெற்ற தோத்திரப் பதிகம். குருநாக்கற்பதியில் தெளியாக்கொண்ணை வாழ் கா.கதிரவேல் அவர்கள் இயற்றிய இப்பக்தி இலக்கியம், யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வித்துவான் ஸ்ரீமான் க.வைத்தியலிங்க பிள்ளை அவர்களால் நன்கு பரிசோதிக்கப்பெற்று, குருநாக்கல் திரு. சி.க.ஆறுமுகம் அவர்களால் பதிப்பிக்கப் பெற்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 0035).*

### 16136

**கைலைப் புராணம்.** *சிவசத்தர். (இயற்பெயர்: சி.க.சற்குணசிங்கம்). அளவெட்டி: திரு. ப. இலங்கநாயகம், திருவடி நிழல் தொண்டர் சபை, 4ஆவது பதிப்பு, 2005. (மானிப்பாய்: ஸ்ரீ சாயி அச்சகம், தாவடி).*

*112 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 19.5x13.5 சமீ.*

*தற்கால சிவபக்தர் ஒருவரின் உள்ளக் கிளர்ச்சியை உணரச்செய்யும் நல்லதொரு நூல். அளவெட்டி திருவடி நிழல் மடாலயத்தை நிறுவிய சிவதத்தர் எழுதிய இந்நூலில், சுத்தாத்துவித சைவசித்தாந்தத்தின் பிழிவாகிய ஒரு கட்டுரையும், ஆசிரியர் இயற்றிய திருவடி நீழற் பதிகம், வெற்றிவேலாயுதம், திருக்கோணேஸ்வரப் பதிகம், திருக்கோயிற் பதிகம், முன்னேசுரப் பதிகம், கோயில், திருக்கேதீச்சரம்,*

நமசிவாயப் பதிகம், ஆனைக்குட்டிச் சுவாமிகள் பற்றிய பாடல்கள் என்பனவும் இடம் பெற்றுள்ளன. இந்நூல் முதலில் 1933இல் "திருக்கைலாச பரம்பரைச் சந்தானாசிரியர் புராணம்" என 1933ஆம் ஆண்டில் முதல் பதிப்பாகவும், "கைலைப் புராணம்" என 1950ஆம் ஆண்டில் இரண்டாம் பதிப்பாகவும் வெளிவந்திருந்தது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 172738).

## 16137

**சங்கடங்களை அகற்றி மனச்சாந்தியளிக்கும் துதிப்பாடல்களும் மந்திரங்களும்.** வி.செல்வரத்தினம். வட்டுக்கோட்டை: வி.செல்வரத்தினம், அப்புக்காத்து வளவு, அராலி மத்தி, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2013. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).

xii, 142 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 20.5x14.5 சமீ.

கலியுகத்தில் இறைவனை வழிபடும் எளிய வழி அவன் திருநாமத்தைப் புகழ்ந்து பாடுவதே என ஞானிகளும் இறைநெறியாளர்களும் கூறியுள்ளனர். அந்த வகையில் மக்கள் இறையருள்பெற்று அமைதி, ஆனந்தம் நிறைந்த அருள்வாழ்வு வாழ வேண்டும் என்ற நன்நோக்கத்துடன் மேற்படி நூலை ஆன்மீக எழுத்தாளரும் பிரபல கணித-விஞ்ஞான நூலாசிரியருமான வி.செல்வரத்தினம் எழுதியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 201800).

## 16138

**சபரிக் காட்டின் சந்தன வரிகள்.** க.பிரேம்சங்கர். யாழ்ப்பாணம்: க.பிரேம்சங்கர், சுன்னாகம், 1ஆவது பதிப்பு, ஆவணி 2022. (யாழ்ப்பாணம்: ஜெயஸ்ரீ பிறின்டர்ஸ், இல. 34, பிறவுன் வீதி).

vi, 34 பக்கம், ஒளிப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x16 சமீ.

ஐயப்ப பக்தரான கவிக்கூத்தனின் ஆன்மீகக் கவிதைத் தொகுப்பு. "ஏத்திவிடப்பா தூக்கி விடப்பா" என்ற கவிதையில் தொடங்கி "எதார்த்த தூதர்" என்ற கவிதை ஈறாக இதிலுள்ள 58 கவிதைகளும் ஐயன் அனுகூலம், ஐயா ஐயப்பா, ஐயன் பக்தி பரவட்டும், சுவாமி மலைக்கே எல்லாம், அப்பனே ஐயப்பா, உய்த்தெழ, ஐயனே என் அழகனே, ஆகாதது எதுவோ, காப்பாய் ஐயனே, சுவாமியே சரணம் என இன்னோரன்ன தலைப்புகளில் இடம்பெற்றுள்ளன.

## 16139

**சனி பகவான் தோத்திரம்.** க.சி.குலரத்தினம் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: க.கனகராசா, மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், த.பெ.எண் 77, 1ஆவது பதிப்பு, 1975. (யாழ்ப்பாணம்: சாந்தி அச்சகம்).

28 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 18x12 சமீ.

*ஒன்பது கிரகங்களுள் சனி பகவானும் ஒருவர். நவக்கிரகங்கள் வரிசையில் அவரும் வழிபாட்டுக்குரியவர். சூரியனைப் போல அவரும் தனி வழிபாட்டுக்கும் உரியவர். ஆலயங்களில் நவக்கிரகக் கூட்டத்திலும், தனியாகவும் சனிபகவானுக்கு வழிபாடுகள் நடக்கின்றன. சைவாகமங்கள் சனி பகவானைப் பற்றி அதிகமாகக் கூறுகின்றன. அவர் கருநிறத்தவர், கரிய ஆடையினர், குறுகிய உருவத்தவர், ஒரு கால் ஊனமுற்றவர், கருமலரையும் நீல மலர் மாலையையுஞ் சூடுபவர், வில்லைப் போன்ற ஆசனத்தில் வீற்றிருப்பவர். சூலமும் வில்லும் தரித்த திருக்கரங்களோடு அபயம் வரதம் ஆகிய திருக்கரங்களையும் உடையவர். கழுகை வாகனமாக உடையவர். தமிழ்நாட்டவர் பலர் சனி பகவானுக்குப் பலவித தோத்திரங்கள், கவசங்கள், துதிகள் பாடியிருக்கிறார்கள். அவர்கள் பொதுவாகச் சனி பகவானுக்குரிய வாகனம் காகம் எனவே கூறுவர்.*

### 16140

**சித்திராபுத்திர நாயனார் கதை.** *ஆறுமுகம் கந்தையா (பதிப்பாசிரியர்). கொழும்பு 11: அஷ்டலக்ஷ்மி பதிப்பகம், 320, செட்டியார் தெரு, 1ஆவது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13:* ComPrint, 40, Shoe Road*).*

*(8), 106 பக்கம், விலை: ரூபா 80.00, அளவு: 20x14.5 சமீ.*

*சித்ரா பௌர்ணமியும் சித்ரகுப்த பூஜையும், சித்திராபுத்திர நாயனார் கதை (செய்யுளும் உரைநடையும்), அமராவதி கதை (செய்யுள்) ஆகிய மூன்று கதைகள் இந்நூலில் தொகுக்கப்பெற்றுள்ளன. சைவாலயங்கள் தோறும் சித்திரை மாத பூரண திதியில் சித்திரபுத்திர நாயனாரினுடைய கதையை படித்து பயன்சொல்லி சித்திரைக் கஞ்சி வார்ப்பது வழமை. இறைவனுடைய திருவுள்ளப் பாங்கின் வண்ணம் மக்கள் செய்கின்ற பாவ புண்ணியங்களை ஆவணப்படுத்துவது சித்திரபுத்திர நாயனாரினது பணி என்பது ஐதீகம். அவரது கதையை படித்துப் பயன் சொல்லப் போதிய நூல்கள் கையிருப்பில் இல்லாத நிலையில் கைதடி, அஷ்டலக்ஷ்மி பதிப்பகம், தமது சமூகப் பணிகளுள் ஒன்றாக இப்பதிப்பு முயற்சியை மேற்கொண்டுள்ளது.*

### 16141

**சிவபெருமானலங்காரம் (மூலம்).** *ம.முத்துக்குமாரசாமிக் குருக்கள். யாழ்ப்பாணம்: ச.சோமசுந்தர ஐயர், புலோலி பசுபதீசுர சுவாமி கோவில், புலோலி, 3ஆவது பதிப்பு, பங்குனி 1940, 1ஆவது பதிப்பு 1879, 2ஆவது பதிப்பு, ஆங்கீரச வருடம் 1932, (யாழ்ப்பாணம்: இலங்கைநேச முத்திராக்ஷரசாலை).*

*(13) பக்கம், விலை: 10 சதம், அளவு: 19.5x11.5 சமீ.*

*யாழ்ப்பாணம் புலோலி ஆரிய திராவிட மஹாபண்டிதர் பிரமஸ்ரீ ம.முத்துக் குமாரசாமிக் குருக்கள் மகாதேவ ஐயர் (1853 - 1936) யாழ்ப்பாணம், புலோலியைச் சேர்ந்த புலவர். இவரது தந்தை மகாதேவ ஐயர். இவர் வண்ணார்பண்ணை ஐயாத்துரை ஐயரிடம் சமஸ்கிருதத்தையும் காவிய வியாகரணங்களையும் கற்றதுடன் உயர்தரத் தமிழ் இலக்கணங்களை உடுப்பிட்டி சிவசம்புப் புலவரிடம் கற்றார்.*

இவர் சிவபெருமான் அலங்காரம், பசுபதிசூரர் அந்தாதி போன்ற நூல்களை இயற்றினார். புலோலி பசுபதீசுரசுவாமி கோவிலின் அர்ச்சகராக இருந்தவர். 53 ஆண்டுகளுக்கு முன்னர் புலோலி பசுபதீசுரசுவாமி கோவிலில் பாடியரங்கேற்றிய இந்நூல் இலங்கைநேசன் முத்திராட்சரசாலையிற் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப் பட்டிருந்தது. அந்நூலின் பிரதிகள் கைவசமற்றநிலையில் இரண்டாம் பதிப்பு 1932இல் வெளிவந்தது. இப்பிரதி முன்னைய இரண்டாம் பதிப்பின் மீள்பதிப்பாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் P 5363).

## 16142

**சைவத் திருநெறித்தோத்திரத் திரட்டு**. ம.வே.திருஞானசம்பந்தபிள்ளை (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவ பரிபாலன சபை, 8ஆவது பதிப்பு, புரட்டாதி 1954. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).

(4), 128 பக்கம், சித்திரங்கள், விலை: 12 அணா, அளவு: 18x12 சமீ.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரின் 11ஆவது பிரசுரமாக வெளிவந்துள்ள நூல். அகத்திய மாமுனிவர் திரட்டியருளிய தேவாரத் திரட்டு, திருவாசகம், திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம், கோயின்மூத்த திருப்பதிகம், கோயிற்றிருப்பதிகம், செத்திலாப்பத்து, அடைக்கலப் பத்து, திருக்கழுக்குன்றப் பதிகம், குழைத்தபத்து, அச்சப்பத்து, திருவேசறவு, திருப்புலம்பல், திருப்படையெழுச்சி, திருப்படையாட்சி, அச்சோப்பதிகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், பட்டினத்தடிகள் திருப்பாடல், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருப்புகழ், திருப்போரூர்ச் சந்நிதிமுறை, திருமுருகாற்றுப்படை வெண்பா, தாயுமான சுவாமிகள் திருப்பாடல், நால்வர் செய்த அற்புதங்கள் ஆகிய திருப்பாடல்களின் தேர்ந்த திரட்டாக இந்நூல் வெளிவந்துள்ளது.

## 16143

**திருநல்லூர்த் திருப்புகழ்**. தவ.தஜேந்திரன். யாழ்ப்பாணம்: தவ.தஜேந்திரன், இருபாலை, 1ஆவது பதிப்பு, ஆடி 2022. (யாழ்ப்பாணம்: மதி அச்சியந்திரசாலை, இல. 10, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

(4), 24 பக்கம், ஒளிப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17x12.5 சமீ., ISBN: 978-624-96508-1-9.

"பூர்வகாலத்தில் தாழிடப்பட்ட கதவமொன்று மெல்லத்திறந்து கொண்டது. நல்லூர் என்னும் சிதாகாசப் பெருவெளியில் உயர்ந்து விரிந்தது உந்திக் கமலம். மௌனத் தவத்தினால் மனதை எரித்தேன். உயிரின் மூலத்துள்ளொளிரும் முருகப் பிரபையின் முன் கரங்குவித்துச் சிரம் பணிந்தேன். நல்லைக் குமரனின் பாடலாய் அவிழ்ந்தேன். கனவுகளிலும் காதோடு பேசும் காற்றின் மெல்லிய பரிசங்களிலும் ஆறுமுக ஆசான் தன் செய்திகளை வழங்கினார். அவற்றைக் கவிதை செய்தேன். அதன் பொருட்டுத் திருப்புகழ் என்னும் இலக்கிய வடிவத்தை இரவல் தந்த அருணகிரி முனிவருக்கு வணக்கங்கள். சண்முக யாத்திரையில் சிறியேன்

கண்டடைந்த இப்பன்னிரு புகட்பாக்களையும் தீராக் காதலுடன் நல்லூரானின் திருவடியிற் சமர்ப்பிக்கிறேன்." (தவ.தஜேந்திரன், முகவுரையில்). நூலுடன் இணைந்ததாக இப்பக்திப் பாடல்கள் பன்னிரெண்டும், வசாவிளான் தவமைந்தன், நல்லூர் சிவஸ்ரீ விஸ்வப்பிரசன்ன குருக்கள், முல்லையூர் க.வர்ஜிகன், இணுவையூர் அ.அமிர்தசிந்துஜன் ஆகியோரால் பாடப்பெற்று இறுவட்டாகவும் நூலுடன் இணைக்கப்பட்டுள்ளது. பாடல்களுக்கான வயலின் இசையை இணுவையூர் சு.கோபிதாஸ், மிருதங்க இசையை இணுவையூர் க.கஜன் ஆகியோர் வழங்கி யுள்ளனர். பிரியன் தம்பிராஜா ஒலிப்பதிவினையும் ஒலித்தொகுப்பினையும் மேற்கொண்டுள்ளார்.

## 16144

**துன்பத்தின் வித்து விடுதலை.** கொக்குவில் செ.ஞானசேகரம். யாழ்ப்பாணம்: அகில இலங்கை பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா சங்க இணைப்புக் குழு, 1ஆவது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).

(4), 20 பக்கம், விலை: ரூபா 5.00, அளவு: 18x12 சமீ.

துன்பம் விடுதலைக்கு வித்து, விடுதலை என்றால் என்ன?, இன்பம் நிலையானதல்ல, துன்பம் வந்த மார்க்கம், சாந்திக்கு வழி, துன்பத்தைத் தவிர்க்க விழிப்புடன் இருத்தல் வேண்டும், மகான்களின் உறுதி வாக்கு, துன்பத்தை மகான்கள் ஏன் ஏற்கிறார்கள்?, தர்மேந்திரனின் உதாரண வாழ்க்கை, மூன்றாவது புட்டபர்த்தி பயணம்: பாபாவிடம் அவரது பயணம், புட்டபர்த்தி விளம்பரப் பலகையில் இருந்தது, இவருடைய நோய் பாவத்தினால் வந்தது என்று கூறமுடியாததாயிருக்கிறது, முடிவுரை ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் அனுபவப் பிழிவாக எழுதப்பட்டுள்ளது.

## 16145

**தெய்வத் தமிழ் தோத்திரத் திரட்டு: பன்னிரு மாத பஞ்சபுராண பாராயணத் தொகுப்பு.** அகில இலங்கை சைவ மகாசபை. யாழ்ப்பாணம்: அகில இலங்கை சைவ மகாசபை, பழைய தபாற்கந்தோர் வீதி, தலையாழி, கொக்குவில், 1ஆவது பதிப்பு, மார்ச் 2022. (யாழ்ப்பாணம்: நாவலர் அச்சகம்).

32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கொக்குவிலில் இயங்கும் அகில இலங்கை சைவ மகாசபை, தனது பணிகளுள் ஒன்றாக சிவநெறி வழிபாடுகள், வாழ்வியல் சடங்குகள் மேற்கொள்ளப் பயிற்சி அளித்தலும் பரப்புரை செய்தலும் என்ற அறநெறிப் பணியை மேற்கொள்ள உதவும் வகையில் பன்னிரு மாதங்களுக்குமுரிய பஞ்சபுராண பாராயணத் தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது.

**16146**

**நடராஜப் பத்து-சிவ நாமாவழியுடன்.** சிறுமணவூர் முனுசாமி (மூலம்), சோதிடவிலாச புத்தகசாலை (பதிப்பு). யாழ்ப்பாணம்: சோதிட விலாச பத்தகசாலை, கொக்குவில், 1ஆவது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: சோதிட விலாச அச்சியந்திரசாலை, கொக்குவில்).

(4), 24 பக்கம், விலை: ரூபா 5.00, அளவு: 15.5x12.5 சமீ.

திருச்சிற்றம்பலம் போற்றி, நடராஜப் பத்து, சிவநாமாவழி (அம்பலத்தரசே) ஆகிய மூன்று செய்யுள்களுடன் இந்நூல் கையடக்கப் பிரசுரமாகத் தொகுத்து வழங்கப் பட்டுள்ளது. நடராசப் பத்து, சிதம்பரம் நடராசர் மீது சிறுமணவூர் முனுசாமி என்பவரால் பாடப்பட்டது. விருத்த வகையைச் சேர்ந்த பத்துப் பாடல்களைக் கொண்டதாக இது அமைந்துள்ளது. இப்பாடல்கள், "ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே" என முடிவதாக அமைந்துள்ளன. இப்பாடல்களை இயற்றிய முனுசாமி முதலியார், திருவள்ளூர் தாலுக்காவில் தற்போது சிறுமணைவை என வழங்கப்படும் ஊரிலே சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஒரு நடராசர் அடியவராவார்.

**16147**

**நல்லூர் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்.** சுதந்தரி சஷாந்தன். யாழ்ப்பாணம்: T.சஷாந்தன், நல்லூர், 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2022. (யாழ்ப்பாணம்: திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்).

viii, 76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15.5 சமீ.

நல்லூர் முத்துக்குமாரசுவாமி பேரிற் பாடப்பெற்ற பிள்ளைத் தமிழ். காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலாட்டுப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம், சிற்றில் சிதைத்தல், சிறுபறைப் பருவம், சிறு தேர்ப் பருவம் ஆகிய தலைப்புகளின் வழியாக இப் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தம் 108 பாடல்களாக இயற்றப்பட்டுள்ளது. நூலாசிரியர் வித்துவான் க.சொக்கலிங்கத்தின் (சொக்கன்) மகனின் வழிவந்த பேர்த்தியாவார்.

**16148**

**பக்திப் பாசுரங்கள்.** ரஜிதா அரிச்சந்திரன். யாழ்ப்பாணம்: ரஜிதா அரிச்சந்திரன், 110, புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2022. (யாழ்ப்பாணம்: மெகா பதிப்பகம், 41, றக்கா வீதி, கச்சேரியடி).

vii, 40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ., ISBN: 978-624-98909-3-0.

வெள்ளைப் பிள்ளையார், நாகபூசணி அம்மன், நல்லூர் முருகன், முருகா, நல்லூர்க் கந்தன், அலங்காரக் கந்தன், நல்லூர்க் கந்தன்-2, நல்லூர் முருகா, அழகுக் கந்தா, சட்டநாத சிவன், கொன்றலடி ஞானவைரவர், திருநெல்வேலி வாலையம்மன், துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி, திருமால், ஆஞ்சநேயர், வேளாதோப்பு முத்துமாரி அம்மன், காவடியாட்டம், செங்குந்த குளநகர், ஞானக் குழந்தை, மயில்மீதேறி

வந்த, முத்தமிழ் வடிவனே, சந்நிதிக் கந்தன், வெற்றி முருகன், சந்நிதியாண்டவர், வீரபத்திரர் ஆகிய தலைப்புகளில் ஆசிரியர் யாத்த பக்திப் பாசுரங்களின் தொகுப்பாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

### 16149

**பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி அண்ணாமலையார் மீது பொழிந்த அருட்பாடல்கள்.** *ஸ்ரீ ரமண மகரிஷி (மூலம்), பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி பீடம் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 6: பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி பீடம், தலைமையகம், இல. 49, பிரட்றிகா வீதி, 3ஆவது பதிப்பு, ஜனவரி 2015, 1ஆவது பதிப்பு, 2012, 2ஆவது பதிப்பு, 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*106 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x13.5 சமீ.*

*கொழும்பு பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷி பீடம் 03.01.2015 அன்று பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியின் 135ஆவது ஜெயந்தி தினத்தைக் கொண்டாடிய வேளையில் இந்நூலும் வெளியிடப்பட்டது. வாழ்த்துரை, அணிந்துரை ஆகியவற்றுடன், அருணாசல தல மகிமை, பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி சரிதம், குருவணக்கம், விநாயக துதி, பகவான் ஸ்ரீ ரமண ஸத்குரு, பிரதோஷ விரதப் பாடல்கள், ஸ்ரீ அருணாசல பஞ்சரத்தினம், அண்ணாமலையார் திருநாமங்கள், மஹா பைரவர் வழிபாடு, ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை பற்றி, ஸ்ரீ அருணாசல அக்ஷரமண மாலை, தியானப் பாட்டு, ஆன்மீக வழிபாட்டு ஒழுங்கு, நான் யார்? (ஸ்ரீ ரமண பகவான் அருள்மொழி வினா-விடை வடிவம்), கிரிவலத்தின் 108 அற்புத தரிசனங்களும் அதற்கான பலன்களும், கிரிவலப் பலன்கள், பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியின் உபதேசம் - நீதான் யாரோ?, பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியின் பிரம்மாஸ்திரம், மகாலிங்க சுவாமிகள்- திருவிடைமருதூர் தோச பரிகாரங்கள் ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

### 16150

**பஞ்சபுராணத் திரட்டு.** *மாணிக்கவாசகர் சுவாமிகள். வேலணை 7: திருமதி பரமேஸ்வரி குணரெத்தினம் நினைவு மலர்க் குழு, வேலணை மேற்கு, 1வது பதிப்பு, டிசம்பர் 2021. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).*

*(6), 7-172 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15 சமீ.*

*திருவாசகத்தின் சிறப்புடன் தொடங்கும் இந்நூலில் மாணிக்கவாசகர் அருளிய சிவபுராணம், கீர்த்தித் திரு அகவல், திருவண்டப் பகுதி, போற்றித் திரு அகவல், திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை, திரு அம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருஉந்தியார், திருத்தேள் நோக்கம், திருப்பொன்னூசல், அன்னைப் பத்து, குயிற்பத்து, திருத்தசாங்கம், திருப்பள்ளியெழுச்சி, கோயில் மூத்த திருப்பதிகம், கோயில் திருப்பதிகம், செத்திலாப்பத்து சிவானந்தம், அடைக்கலப்பத்து, ஆசைப்பத்து, அதிசயப்பத்து, புணர்ச்சிப்பத்து, வாழாப்பத்து,*

அருட்பத்து, திருக்கழுக்குன்றப் பதிகம், கண்டபத்து, பிரார்த்தனைப்பத்து, குழைத்தப் பத்து, உயிருண்ணிப் பத்து, அச்சப்பத்து, திருப்பாண்டிப் பதிகம், பிடித்தபத்து, திருஏசறவு, திருப்புலம்பல், குலாப்பத்து, அற்புதப்பத்து, சென்னிப்பத்து, திருவார்த்தை, எண்ணப் பதிகம், யாத்திரைப்பத்து, திருப்படை எழுச்சி, திருவெண்பா, பண்டாய நான்மறை, திருப்படை ஆட்சி, ஆனந்தமாலை, அச்சோப் பதிகம் ஆகிய பக்தி இலக்கியங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 16151

**படைவீட்டுப் பதிகங்கள்**. சுதந்தரி சஷாந்தன். யாழ்ப்பாணம்: T.சஷாந்தன், நல்லூர், 1ஆவது பதிப்பு, ஒகஸ்ட் 2022. (யாழ்ப்பாணம்: திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்).

(2), iv, 14 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

நூலாசிரியர் வித்துவான் க.சொக்கலிங்கத்தின் (சொக்கன்) மகனின் வழிவந்த பேர்த்தியாவார். இவ்வாண்டு (2022) நல்லூர் திருவிழாவில் சுதந்தரி ஆறுபடை வீடுகளையும் அவற்றின் தெய்வீக ஊற்றுக்களையும் பக்திப் பரவசத்துடன் ஓசை ஒழுங்கு சிதையாமல் செய்யுள்களாகச் செதுக்கியுள்ளார். 11.08.2022 நல்லூர் கோவிலின் மஞ்சத் திருவிழாவன்று வெளியிடப்பட்ட சிறு நூல்.

## 16152

**பன்னிரு திருமுறை: வரலாறும் விபரமும்**. அ.கணேசலிங்கம். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2021. (அச்சக விபரம் தரப்படவில்லை).

iv, 112 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x15.5 சமீ., ISBN: 978-955-8354-77-3.

அறிமுகம், திருமுறை கிடைத்த வரலாறு, திருமுறை தொகுப்பு, முதலாம் திருமுறை, இரண்டாம் திருமுறை, மூன்றாம் திருமுறை, சம்பந்தரின் திருமுறைகள், நான்காம் திருமுறை, ஐந்தாம் திருமுறை, ஆறாம் திருமுறை, அப்பர் திருமுறைகள், ஏழாம் திருமுறை, சுந்தரர் திருமுறை, ஏழு திருமுறைகள், எட்டாம் திருமுறை, மணிவாசகர் திருமுறை, ஒன்பதாம் திருமுறை, ஒன்பது அருளாளர்களின் திருமுறை, பத்தாம் திருமுறை, திருமூலர் திருமந்திரம், பதினொராம் திருமுறை, பன்னிரு அருளாளர்களின் திருமுறை, திருத்தொண்டர் புராண வரலாறு, பன்னிரெண்டாம் திருமுறை, சேக்கிழார் திருத்தொண்டர் புராணம், பன்னிரு திருமுறை அமைப்பு, பன்னிரு திருமுறை பெருமைகள் ஆகிய 27 இயல்களுடன் பஞ்ச புராணம், பன்னிரு திருமுறை, துணைநூற் பட்டியல் ஆகிய மூன்று இணைப்புகளையும் இந்நூல் கொண்டுள்ளது.

## 16153

**பன்னிரு திருமுறைத் திரட்டு**. நா.முத்தையா (தொகுப்பாசிரியர்). நாவலப்பிட்டி: ஆத்மஜோதி நிலையம், 1ஆவது பதிப்பு, 1978. (நாவலப்பிட்டி: ஆத்மஜோதி அச்சகம்).

*(4), 96 பக்கம், விலை: ரூபா 5.00, அளவு: 18.5x12 சமீ.*

*அருளாளர்கள் இறைவனைத் தாம் அனுபவித்த வண்ணம் எம்மையும் அநுபவிக்கச் செய்வதற்காக தோன்றியவையே திருமுறைகள். அருளோடு கூடிய சிவபரம் பொருளுக்குத் "திரு" என்று பெயர். பெறத்தக்க அருட்செல்வத்தை நாடி அடைந்ததன் பயனாய் இறை அடியார்கள் பெற்ற இன்பம் அவர்கள் உள்ளத்தினின்றும் தோத்திரப் பாடல்களாய் வெளிவந்தன. தாம் பெற்ற இன்பத்தினை யாவரும் பெற அருளினார்கள். "முறை" என்ற சொல் நூல் என்ற பொருளில் வந்தது. சிவபரம்பொருளைப் பற்றிக் கூறும் நூல் "திருமுறை" ஆயிற்று. திருமுறைகள் பன்னிரண்டு ஆகும். பன்னிரு திருமுறைகளிலும் திருஞானசம்பந்தர் முதல் சேக்கிழார் பெருமான் ஈறாக 27 அருளாளர்கள் பாடி உள்ளார்கள். அந்த 27 அருளாசிரியர்களினது தெய்வீக வாழ்க்கையைச் சந்திப்பதே இத்திருமுறைகளின் பெரும்பயனாகும்.*

## 16154

**புலோலி பர்வதவர்த்தனிசமேத பசுபதீஸ்வரர் இலக்கியத் தொகுப்பு மற்றும் சமயம் சார்ந்த சில பொருள்களின் சுருக்கமான திரட்டு.** *வி.வேல்முருகு, பார்வதி சுரேஷ்குமார், தி.நாகராசா. யாழ்ப்பாணம்: புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் ஆலயம், 1ஆவது பதிப்பு, 2017. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(8), 487 பக்கம், ஒளிப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x22.5 சமீ.*

*1870இற்கும் 1985இற்கும் இடையேயுள்ள காலகட்டத்தில் புலோலிப் பதீஸ்வரர் மேற் பாடப்பெற்ற எட்டு இலக்கிய வடிவங்கள் இந்நூலில் முதன்மைபெறுகின்றன. இரண்டு பிரிவுகளாகத் தொகுக்கப்பட்டுள்ள இந்நூலின் முதற் பிரிவு பக்திப் பாடல்களும் அந்தாதிக் கீர்த்தனைகளும் அடங்கியதாகும். இரண்டாவது பிரிவில் சமயம் சார்ந்த திருநந்தவனத்தில் வளர்க்கக்கூடிய தாவரப் பூச்செடிகளின் பட்டியல்களை திரு. முத்துக்குமாரசாமி சர்மா அவர்கள் வழங்கியுள்ளார். மேலும் பேராசிரியர்கள் அ.சண்முகதாஸ், ஆ.வேலுப்பிள்ளை ஆகியோரின் அறிவுத் திறன் மிக்க முகவுரைகள், பசுபதி ஈசனைப் பற்றி வியக்கத் தக்க பக்திப்பாடல்களைப் பற்றியும் அறியமுடிகின்றது.*

## 16155

**ம.க.வேற்பிள்ளைப் புலவர் இயற்றிய சந்திரமௌலீசர் சதகம் என்னும் ஈழமண்டல சதகம்.** *ம.க.வேற்பிள்ளை (மூலம்), ந.சபாபதிப்பிள்ளை (உரையாசிரியர்), சி.சிவலிங்கராஜா (பதிப்பாசிரியர்). சாவகச்சேரி: மட்டுவில் சாந்தநாயகி சமேத சிவச்சந்திரமௌலீசர் தேவஸ்தானம், 1ஆவது பதிப்பு, மார்ச் 2022. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).*

xxii, *183 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.*, ISBN: *978-624-5901-14-2.*

*ஆசிரியர் ம.க.வே.பிள்ளைப் புலவர் இயற்றிய சந்திரமௌலீசர் சதகம் என்னும் ஈழமண்டல சதகமும், மேற்படி ஆசிரியரின் மகனார் மகாலிங்கசிவம் முன்னிலையில் யாழ்ப்பாணம் உரும்பிராய் ந.சபாபதிப்பிள்ளை இயற்றிய உரையும் சென்னபட்டணம் வித்தியாநுபாலன யந்திரசாலையில் ருத்ரோற்காரி வருஷம் (1923) ஆவணி மாதம் முதலில் வெளியிடப்பட்டிருந்தது. நூற்றாண்டுப் பழமையான இந்நூல் அதன் மீள்பதிப்பாகும். ஆறுமுகநாவலர் மரபில் வந்த ஈழத்துத் தமிழ்ப் புலமையாளர்களில் ஆசிரியர் ம.க.வே.பிள்ளைப் புலவரும் ஒருவர். மரபுவழி இலக்கண இலக்கியங்களில் துறைதேர்ந்த இவரது உரைகளின் சிறப்பினால் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை இவருக்கு "உரையாசிரியர்"எனும் பட்டத்தைச் சூட்டியிருந்தார். திருவாதவூரடிகள் புராணம், புலியூரந்தாதி, அபிராமியந்தாதி, கெவுளிநூல் என்பவற்றுக்கு இவர் எழுதிய உரைகள் பிரசித்தமானவை. இவை தவிர ஈழமண்டல சதகம், ஆருயிர்க் கண்மணி மாலை, புலோலி வைரவக் கடவுள் தோத்திரம் என்பன இவரது ஆக்க இலக்கியங்கள். வேதாரணிய புராணம் சிவகாமியம்மை சதகம் என்பனவற்றை பரிசோதித்துப் பதிப்பித்துள்ளார். ஈழத்தின் மரபுவழிப் புலமையின் முக்கிய அடையாளங்களில் இவருமொருவராவர்.*

## 16156

**மணிவாசகர் அருளிய சிவபுராணம்.** *மாணிக்கவாசகர் (மூலம்), சு.அருளம்பலவனார் (ஆராய்ச்சியுரை). காரைநகர்: சம்பந்தர்கண்டி நாகலிங்கம் சுந்தரராஜன் நினைவு வெளியீடு, 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2022. (யாழ்ப்பாணம்: அச்சக விபரம் தரப்படவில்லை).*

*40 பக்கம், ஒளிப்படத் தகடு, ஒளிப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.*

*சங்கநூற்செல்வர் பண்டிதமணி சு.அருளம்பலவனார் (1910-1966) அவர்களின் ஆராய்ச்சி உரையுடன் கூடியதாக யாழ்ப்பாணத்துக் காரைநகர் அ.சிவானந்தன் அவர்களால் 1967இல் வெளியிடப்பட்ட திருவாசக ஆராய்ச்சியுரையின் முதற்பாகத்தில் இடம்பெற்ற சிவபுராணப் பகுதியின் மீள்பிரசுரமாக இந்நூல் வெளிவந்துள்ளது. இது காரைநகர் சம்பந்தர்கண்டி நாகலிங்கம் சுந்தரராஜன் (15.07.1939-31.07.2022) அவர்களின் நினைவு வெளியீடாக அன்பளிப்பாக வழங்கப்பட்டது.*

## 16157

**மாணிக்கவாசகர் புராணம் (வசனம்).** *வ.கணபதிப்பிள்ளை. சென்னை: சே.வெ. ஜம்புலிங்கம்பிள்ளை, திருமயிலை (மயிலாப்பூர்), 2ஆவது பதிப்பு, கார்த்திகை 1933, 1ஆவது பதிப்பு, 1895. (சென்னை: சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை).*

*xi, 154 பக்கம், விலை: 10 அணா, அளவு: 18.5x13 சமீ.*

*சைவசமயாசாரியராகிய மாணிக்கவாசக சுவாமிகள் புராண வசனமாகிய இச்சிறுநூல் வடமொழி அலாசிய மான்மியத்தைத் தழுவியும் ஒரு சிறிய தமிழ்த்*

*திருவிளையாடற் புராணம், திருவாதவூரர் புராணம் முதலியவற்றை ஆதரவாகக் கொண்டும் 1875இல் எழுதி அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. அந்நூலின் மீள் பதிப்பே இதுவாகும். பாயிரம், மந்திரிச் சருக்கம், திருப்பெருந்துறைச் சருக்கம், குதிரையிட்ட சருக்கம், திருவம்பலச் சருக்கம், புத்தரை வாதில் வென்ற சருக்கம், திருவடி பெற்ற சருக்கம், அரும்பத விளக்க அகராதி, சுவாமிகள் துதி ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்துப் புலோலியைச் சேர்ந்த வல்லிபுரநாதபிள்ளை கணபதிப்பிள்ளையவர்கள், உடுப்பிட்டி சிவசம்புப் புலவரிடம் தமிழ் இலக்கிய இலக்கணம் நன்கு கற்றுத் தேர்ந்தவர். தமிழில் பாண்டித்தியம் பெற்ற பின்னர் சென்னைக்குச் சென்று அங்கு ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகியவற்றில் கற்றுத்தேறிய பின்னர் காஞ்சிபுரம் பச்சையப்பா வித்தியாசாலைத் தமிழ்ப் பண்டிதராகப் பணியாற்றியிருந்தார். பின்னர் திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரிப் பிரதம தமிழாசிரியராக நியமிக்கப்பட்டார். 1895இல் அங்கேயே இறைபதமடைந்தார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 0991).*

### 16158

**மாதாவின் மந்திரம்**. எஸ்.ஆறுமுகம். *கொழும்பு 5: எஸ்.ஆறுமுகம், 4/71, பொல்ஹெங்கொட வீதி, தலக்கொட்டுவ, 1ஆவது பதிப்பு, 1982. (கொழும்பு 11: மெய்கண்டான் அச்சியந்திரசாலை, 161, செட்டியார் தெரு).*

*64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.*

*இச்சிறுநூலை ஆசிரியர் வெளிநாடுகளில் வளரும் தமிழ்ச் சைவச் சிறார்களுக்கென தமிழ் ஆங்கில மொழிகளில் தயாரித்து வெளியிட்டுள்ளார். சைவ சமய பக்தி இலக்கியங்களையும் அதன் ஆசிரியர்களையும் அறிமுகப்படுத்துவதுடன் சைவ சமயம் பற்றிய பல்வேறு சிறு கட்டுரைகளை ஆங்கில மொழியில் சிறுவர்களுக் கேற்றவகையில் எழுதித் தொகுத்துள்ளார். முதலாவது பிரிவில் விநாயகமூர்த்தி, சரஸ்வதி அம்பாள், சிவபெருமான், தேவாரம், நடராசப் பெருமான், அம்பாள், இராமபகவான், முருகமூர்த்தி, முருகமூர்த்தி பாடல், தீபாராதனை ஆகிய தலைப்புகளில் தமிழ் ஆங்கில மொழிகளில் ஆக்கங்கள் தரப்பட்டுள்ளன. இரண்டாம் பிரிவில் விநாயகர் பாடல்கள், ஔவையார் பாடல்கள், நவராத்திரி பிரார்த்தனை, சிவ வழிபாடு-திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம், மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம், திருமுறைகள், திருநடனப்பாடல், அம்பாள் பாடல்கள், வைஷ்ணவ பாடல்கள், கந்தபுராணம், திருப்புகழ் ஆகிய தலைப்புகளில் அமைந்த பாடல்களும் கட்டுரைகளும் இரு மொழிகளிலும் இடம்பெற்றுள்ளன.*

## 16159

**மாவைக் கந்தன் பாமலர்த் திரட்டு.** *பாகீரதி கணேசதுரை (தொகுப்பாசிரியர்). பளை: ஞானேஸ்வரி இராஜ்குமார் குடும்பத்தினர், இராஜகுமார கோட்டம், தம்பகதம்பி சாலை, பளை, வீமன்காமம், 1ஆவது பதிப்பு, 2020. (யாழ்ப்பாணம்: த.கஜேந்திரன், பிரின்ட் மாஸ்டர், கொக்குவில்).*

iv, *92 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.*

*மாவைக் கந்தன் புகழ்பாடும் கவிமலர்த் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. வரலாற்றுப் புகழ்மிக்க மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் குடியிருக்கும் மாவைக் கந்தனைப் புகழ்ந்து பல்வேறு புலவர்கள், வித்துவான்கள், கவிஞர்கள் பாடியருளிய பல்வகைப் பாக்களின் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது.*

## 16160

**முருகன் துணை.** *செந்தமிழ்ச் செல்வி ராஜசேகரம். யாழ்ப்பாணம்: செந்தமிழ்ச் செல்வி ராஜசேகரம், 1ஆவது பதிப்பு, மார்ச் 2023. (யாழ்ப்பாணம்: சிறீலட்சுமி பிரின்டர்ஸ், பலாலி வீதி, ஊரெழு).*

*48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.*

*சிறந்த முருக பக்தையான நூலாசிரியர் தன் வாழ்வனுபவங்களினூடாக தான் கொண்ட முருக நம்பிக்கையின் மூலம் பெற்றுக்கொண்ட நன்மைகளையும், வாழ்வின் கடினமான காலத்தில் முருகன் துணையுடன் தான் மீண்டுவந்த பக்தி வரலாற்றையும் ஒரு சுயசரிதைப் பாங்கில் எழுதிவைத்துள்ளார்.*

## 16161

**முருகும் முருகனும்.** *இரத்தினம் நித்தியானந்தன். லண்டன்: இ. நித்தியானந்தன், 179,* Norval Road, Wembley, Middlesex, HA0 3SX, *1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2012. (லண்டன்: ஆர்.எஸ்.பிரின்டர்ஸ், 88,* Horsenden Lane North, Greenford, Middlesex UB6 7QH*).*

*14 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

*2012இல் மலாயாப் பல்கலைக்கழகத்தில் ஓகஸ்ட் 9-12 திகதிகளில் நடந்தேறிய அனைத்துலக முருகபக்தி மாநாட்டில் வாசிப்பதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரையின் நூல் வடிவம் இதுவாகும். யாழ்ப்பாணம் சித்தன்கேணியைச் சேர்ந்த கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் (1963-1971) இரசாயன விரிவுரையாளராகவும் பிரித்தானியாவில் செயின்ட் மேரி மருத்துவப் பள்ளி, இலண்டன் பல்கலைக்கழகத்தில் (1972-1993) முதுநிலை அறிவியல் ஆய்வாளராகவும், மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலையில் (1982-1989) தலைமை ஆசிரியராகவும், பின்னர் இலண்டன் தமிழ் நிலைய தலைமையாசிரிய ராகவும் (1990-2012), இரத்தினம் அறக்கட்டளையின் தலைவராகவும் (2005 முதல் இன்று வரை) பணியாற்றி கல்விப்பணிகளிலும், சமூகச் செயற்பாடுகளிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திவந்தவர்.*

### 16162

**மூல விருட்சம்**. சு.செல்லத்துரை. சுன்னாகம்: சைவப் புலவர் சு.செல்லத்துரை அவர்களின் அந்தியேட்டி தின வெளியீடு, வேலவளவு, ஏழாலை மேற்கு, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (யாழ்ப்பாணம்: அம்மா அச்சகம், இணுவில்).

vi, 292 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

சைவப் புலவர் செல்லத்துரை அவர்கள் வானொலிக்கு வழங்கிய மற்றும் அவரது நூல்களில் வெளிவராத நற்சிந்தனைகள், சமயச் சொற்பொழிவுகள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் முற்றுப்பெறாத சில ஆக்கங்களையும் அவரே தயாரித்து வைத்திருந்த அவரின் வாழ்க்கைக் குறிப்புகளையும் எடுத்துத் தொகுத்து அவரது அந்தியேட்டி தின வெளியீடாக இந்நூலில் வழங்கியிருக்கின்றனர். அமரர் சு.செல்லத்துரை அவர்கள் ஆண்டுதோறும், தன் துணைவியாரின் நினைவாக நூல்களை வெளியிடுவது வழமை. இவ்வாண்டும் தன் துணைவியாரின் 11ஆம் ஆண்டு நிறைவினையொட்டி "கொறொனா" பெருந்தொற்றின் அவலத்தில் எல்லோரும் அல்லலுறும் வேளை துன்ப நீக்கம் பெற ஓதுதற்காய் வெளியிடவென தயாரித்து வைத்திருந்த "துயர் துடைக்கும் சைவத் திருமுறைப் பதிகங்கள்" என்ற தொகுப்பும் இங்கு ஆரம்பத்திலேயே சேர்க்கப்பட்டுள்ளது. இறுதியாக, அறிஞர்கள், நண்பர்களின் பார்வையில் சைவப்புலவர் பற்றிய நினைவுகளின் தொகுப்பாக இவர்களது நினைவுப் பகிர்வுகளையும் இணைத்து அன்னாரின் குடும்பத்தினர் இந்நூலை முழுமைப்படுத்தியிருக்கின்றனர்.

### 16163

**யாழ்ப்பாணம்-நல்லூர் நாயன்மார்கட்டு அருள்மிகு இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் அந்தாதிக் கீர்த்தனைகள்**. மா.த.ந.வீரமணி ஐயர். யாழ்ப்பாணம்: க.இரஞ்சிதநாயகி, க.இராஜாம்பிகை, இணுவில், 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2020. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 672 B, காங்கேசன்துறை வீதி).

(2), 12 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x16 சமீ.

பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் யாழ்ப்பாணம் இணுவிலில் 15.10.1931இல் பிறந்தவர். இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் பயின்றவர். தமிழகத்தில் இசை, நடனம், நாடகம் என்பவற்றில் ஈடுபாடு கொண்டு திருமதி ருக்மணிதேவி அருண்டேலிடம் பரத நாட்டியமும், என்.டி. இராமநாதனிடம் இசையும், தனது சாஹித்திய குருவான திரு பாபநாசம் அவர்களிடம் மேலதிக இசையும் கற்றுத் தேர்ந்தவர். இவர் இந்தியாவில் கற்கும்போது "கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்" என்று ஆரம்பிக்கும் ஆனந்த பைரவி இராகத்தைப் பல்லவியில் கொண்டமைந்து நான்கு இராகங்கள் முத்திரை அமைக்கப்பெற்ற அவரது இராக மாலிகைக் கீர்த்தனை உலகப் பகழ்பெற்றது. யாழ்ப்பாணம் நல்லூர் நாயன்மார்கட்டு அருள்மிகு இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் பெயரில் அவர் பாடியருளிய அந்தாதிக் கீர்த்தனை இந்நூலில்

*இடம்பெற்றுள்ளது. ஏற்கெனவே இவ்வாலயத்திற்காக ஊஞ்சல் பாட்டும், கீர்த்தனைப் பாடல்களும் எழுதி வழங்கியுள்ளார்.*

### 16164

**ஸ்ரீலலிதாஸஹஸ்ரநாமஸ் தோத்திரம் (தமிழ்விளக்கத்துடன்).** *மலர்க் குழு. தெல்லிப்பழை: சிவத்தமிழ்ச் செல்வி, பண்டிதை, துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்தநாள் அறநிதியம், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், 1ஆவது பதிப்பு, ஜனவரி 1990. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).*

vi, *(4), 78 பக்கம், விலை: ரூபா 20.00, அளவு: 19.5x13.5 சமீ.*

*வியாச முனிவரால் எழுதப்பட்ட பதினெண்புராணங்களில் ஒன்று பிரம்மாண்ட புராணமாகும். இதில் அமைந்துள்ள "லலிதோபாக்கியானம்" ஏழு கண்டங்களை உடையது. ஏழாவது கண்டம் ஸ்தோத்திர வடிவில் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமமாக அமைகின்றது. இது அமைதிப் பிரார்த்தனைக்கும் கூட்டு வழிபாட்டுக்கும் உரியது. "நாம பாராயண பிரீதா" என்பது லலிதா ஸஹஸ்ரநாமத்தில் ஒரு நாமமாகும். அதாவது "நாமபாராயணத்தால் மகிழ்பவள்" என்பது பொருள் ஆகும். அன்னைக்கு அமைந்துள்ள கோடிக் கணக்கான நாமங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டதே இதிலுள்ள ஆயிரம் நாமங்களாகும். இதனைத் தொகுத்துத் தந்தவர்கள் அன்னையின் அருள் பெற்ற வாக்தேவிகளாவர். இதுவே "லலிதா ஸஹஸ்ர நாமம்" என்று போற்றப்படுகின்றது. லலிதா ஸஹஸ்ரநாமத்திற்கு ஸ்ரீ பாஸ்கரராஜர் வடமொழியில் சிறந்த உரை விளக்கம் தந்திருக்கிறார். இவ்வுரையை 1979இல் தமிழாக்கம் செய்த வர்கள் பத்மபூஷணம் என். இராமசாமி ஐயர் அறக்கட்டளை நிதியத்தினராவர். சிறந்த விரிவான தமிழ் விளக்கத்துடன் கூடிய இந்த உரை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தினரால் ஈழத்து வாசகரின் பயன்பாட்டுக்கென மீள்பதிப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்நூல் 07.01.1990 அன்று தெல்லிப்பழையில் வெளியிடப் பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10210).*

மேலும் பார்க்க:

சிவயோக சுவாமிகள் காட்டிய வழி. 16873

வாணர் படைப்புக்கள். 16847

## 297 இஸ்லாம்

### 16165

**அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா-தேசத்திற்கான பணியில் ஒன்பது தசாப்தங்கள்.** *அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா. கொழும்பு 10: அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா, 281, ஜயந்த வீரசேகர மாவத்தை, 1ஆவது பதிப்பு, 2015. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*32 பக்கம், ஒளிப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.*

எம்.ஐ.எம்.றிழ்வி அவர்களைத் தற்போதைய தலைவராகக் கொண்டியங்கும் அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா இஸ்லாமிய அறிஞர்களைக் கொண்ட ஓர் அமைப்பாகும். புனித மக்கா நகரை அடிப்படையாகக் கொண்டு இயங்கிவரும் இஸ்லாமிய உலக ஒன்றியம் (Muslim World League) ஆரம்பிக்கப்படுவதற்கு மூன்று தசாப்தங்களுக்கு முன்னரே அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா ஆரம்பிக்கப் பட்டுவிட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிறுவனம் 1924ஆம் ஆண்டு உருவாக்கப் பட்டது. அக்காலகட்டத்தில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்ந்த நாடுகளில் அவர்களுக்குத் தேவையான சரியான வழிகாட்டல்களை உரிய நேரத்தில் வழங்குவதற்காக இஸ்லாமிய அறிஞர்கள் சபையின் அத்தியாவசியத் தேவை உணரப்பட்டிருந்தது. இலங்கையில் அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் 1919ஆம்ஆண்டு இந்தியாவிலும், 1923ஆம் ஆண்டு தென் ஆபிரிக்காவிலும் இதுபோன்ற மார்க்க அறிஞர்களின் சபைகள் உருவாக்கப்பட்டிருந்தன. அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபையின் 90ஆண்டுக்காலச் சேவையை நினைவுகூரும் வகையில் இக்கையேடு வெளியிடப் பட்டுள்ளது. அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா பற்றிய அறிமுகத்தையும் அதன் நடவடிக்கைகள் பற்றிய தெளிவையும் வழங்குவதுடன், தவறான பரிதல்களை நீக்கி சமூகத்திற்கும் தேசத்திற்கும் சரியான விளக்கமளிக்கும் கையேடாக இது அமைந்துள்ளது.

### 16166

**அண்ணல் நபிகள் அற்புத அகிலநாதர்.** J.S.K.A.A.H. மௌலானா. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1ஆவது பதிப்பு, 2013. (சென்னை 600 094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

112 பக்கம், விலை: இந்திய ரூபா 150.00, அளவு: 18x12 சமீ.

அண்ணலார் நிகழ்த்திய அற்புதங்கள் அனைத்தும் இந்நூலில் அணி அணியாக சந்தக் கவிகளாக உலா வருகின்றன. தூய தமிழ் நடை, ஒரு வரிக்குள் பல் பொருள்களை அடக்கித்தரும் கவித் திறன், அறபு இலக்கியத்தில் அமைந்த அண்ணலார் புகழை செந்தமிழ்ச் சீர்களுக்குள் வடித்துவிட்ட வல்லமை- இவை அனைத்தையும் இக்கவிதைகளுக்குள் நாம் காண்கிறோம்.

### 16167

**இறை வலிய் ஸெய்யித் முஹம்மத் மௌலானா.** J.S.K.A.A.H. மௌலானா. இலங்கை: ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை, 2வது பதிப்பு, ஜூலை 2017, 1ஆவது பதிப்பு, ஜனவரி 1977. (திண்டுக்கல் 624 001: ரிப்தா கம்ப்யூட்டர் ஆப்செட், 229/4, மேற்குரத வீதி).

26 பக்கம், விலை: இந்திய ரூபா 100.00, அளவு: 18x12 சமீ., ISBN: 978-955-4986-01-5.

"எம் தந்தை நாயகம் ஜமாலிய்யா ஸெய்யித் யாஸீன் மௌலானா அல்ஹாஷிமிய் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் தாயார் உம்மு ஹபீபாக் கண்ணே அவர்களாவார். உம்மு ஹபீபாக் கண்ணே அவர்களின் தகப்பனார்

ஸெய்யித் முஹம்மத் மௌலானா அவர்களாவார். இவர்கள் ஆட்டுக்குக் காதில்லாம லாக்கிய முஹம்மது மௌலானா எனப் பிரபலமானவர்கள். இவர்களுக்குப் பல கராமத்துக்கள் சிறுவயது முதலே நடந்து வந்தன. அவற்றில் ஆதாரபூர்வமான சிலவற்றைப் பாக்கள் மூலம் எடுத்துரைப்பதில் பேராவல் கொண்டு இப்பாமாலை யைத் தொடுத்தோம். இக்கோவை பிரார்த்தனையுடன் முடிகின்றது."

## 16168

**இஸ்லாமிய நாகரிகத்தின் மூலங்கள்.** M.Z.M.நபீல். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xx, 181 பக்கம், விலை: ரூபா 700., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-624-6164-03-4.

இஸ்லாம் தனக்கான தனி அடையாளத்தைக் கொண்டதாகவும், நெகிழ்ச்சித் தன்மை உடையதாகவும் விளங்குகின்றது என்பதை ஒப்பீட்டாய்வு ரீதியாக விளக்குவதே இந்நூலின் மைய நோக்கமாக இருக்கிறது. இஸ்லாமிய நாகரிகம்: ஓர் அறிமுகம் (நாகரிகம் என்றால் என்ன?, அத்-தௌஹீத் - ஏகத்துவம், ரிஸ ாலத் - தூதுத்துவம், ரிஸாலத் ஏன் அவசியம்?, மஆத் -மறுமை வாழ்வு), இஸ்லாமிய நாகரிகத்தின் தூய்மையைப் பாதிக்கும் இரு முக்கிய அம்சங்கள் (அஷ்-ஷிர்க், பித்அத்), முஸ்லிம்களின் கலாசாரத்தில் பிற கலாசாரங்களின் தாக்கங்கள் (கிரேக்க நாகரிகத்தின் செல்வாக்கு, பாரசீக நாகரிகத்தின் செல்வாக்கு, உரோம நாகரிகத்தின் செல்வாக்கு, இந்து நாகரிகத்தின் செல்வாக்கு), இஸ்லாமிய புத்துயிர்ப்புப் பணியும் பங்களிப்பும் (தஜ்தீத், இமாம் கஸ்ஸாலி, ஷாஹ் வலியுல்லாஹ் திஹ்லவி, சேர் செய்யித் அஹமத் கான்) ஆகிய நான்கு இயல்களில் இவ்வாய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இஸ்லாமிய நாகரிகத்தின் இலட்சியத்தையும் அதன் சென்நெறிகளையும் புரிந்து கொள்வதற்கான களத்தை அமைத்து அதுபற்றிப் பொது வெளியில் கலந்துரையாடப்படவேண்டியதன் அவசியத்தை அறிவிப்பதையும் பட்டதாரி மாணவர்களுக்கான பாடநூலாக விதந்துரைப்பதையும் இலக்காகக் கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. M.Z.M. நபீல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

## 16169

**ஔன் நாயகரின் அருள்மொழிக் கோவை (தமிழ்-ஆங்கிலம்).** J.S.K.A.A.H. மௌலானா (மூலம்), எஸ்.காஜா நஜ்முத்தீன் (தொகுப்பாசிரியர்), எம்.ஐ.லியாகத் அலி (ஆங்கில மொழிபெயர்ப்பாளர்). திருச்சி 620 009: அவ்னிய்யா பிரிண்டர்ஸ் அன்ட் பப்ளிஷர்ஸ் ட்ரஸ்ட், ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி வளாகம், மணப்பாறை ரோடு, 3ஆவது பதிப்பு, 2015, 1ஆவது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை, 2ஆவது பதிப்பு, 1995. (திருச்சி 620 009: அவ்னிய்யா பிரிண்டர்ஸ் அன்ட் பப்ளிஷர்ஸ் ட்ரஸ்ட், ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி வளாகம், மணப்பாறை ரோடு).

128 பக்கம், விலை: ரூபா 80.00, அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-4986-06-0.

மூல ஆசிரியர் அறிமுகம், பதிப்புரை, முன்னுரை, ஆங்கில மொழியாக்கம் எதற்காக?, பொன்மொழிகள், பேருரைகள் (1986, 1987, 1988), வானொலி உரைகள் (1976, 1978), ஐயமும் தெளிவும், சில அருஞ்சொற்கள் ஆகிய அம்சங்களுடன் இந்த அருள்மொழிக் கோவை வெளியிடப்பட்டுள்ளது. ஏகத்துவ ஞானத்தின் ஆரம்பக் கட்டத்தில் உள்ளவர்களுக்கு முதற் பாடமாகவும், முதிர்ந்த தத்துவ ஞானிகளுக்கு உயர்நிலை போதமாகவும் இந்நூல் அமைகின்றது.

### 16170

**கண்கவரும் சொர்க்கம்.** மௌலவி இஹ்ஸான் (ரஷாதி). கொழும்பு 12: தாருல் ஹம்தான், இல. 192/296, பண்டாரநாயக்க மாவத்தை, 3ஆவது பதிப்பு, மார்ச் 2018, 1ஆவது பதிப்பு, ஜுலை 2007, 2ஆவது பதிப்பு, நவம்பர் 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை).

116 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-1656-09-3.

சுவனத்தின் வர்ணனை, சுவன இன்பங்கள் ஆகிய இரு பிரிவுகளில் சொர்க்கம் தொடர்பான இஸ்லாமிய நம்பிக்கைகளை விளக்கும் வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. "இவ்வுலக வாழ்வின் இறுதி நோக்கம் சுவர்க்கத்தை அடைவதே. ஓர் உண்மை முஃமின் சுவனபதியை நோக்கமாகக் கொண்டே இறுதி மூச்சு வரை பாடுபடுவான். சுவர்க்கத்தில் தனது அனைத்துவிதமான ஆசை களையும் பூர்த்திசெய்துகொள்ளலாம் என்ற உறுதியான நம்பிக்கையின் பேரில் உலகின் ஹறாமான அனைத்து சிற்றின்பங்களை விட்டும் தன்னைத் தடுத்துக் கொள்வான். சுவர்க்கத்தின் ஆவலிலே எல்லாவித நன்மைகளையும் செய்வான். இஸ்லாத்துக்காக, அனைத்துவிதமான சிரமங்களையும் சகித்துக்கொள்வான். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு வழிப்படுவதும், நம்பியவர்களின் வாழ்வைப் பின்பற்றுவதும் தான் இஸ்லாத்தின் உயிர்நாடி. அவ்வாறு வழிபட்டு நடப்பவன் தான் உண்மை முஸ்லீம். அந்த உண்மை முஸ்லீமுக்கு பிரதி கூலியாக வாக்களிக்கப் பட்ட இடம் தான் "சுவனம்".

### 16171

**தர்ஜுமதுல் குர்ஆன் மஅத் தஃப்ஸீரி வத் தப்ஸீர் (முதல் ஜுஸ்வு).** J.S.K.A.A.H. மௌலானா. (இயற்பெயர்: ஜமாலிய்யா அஸ்ஸயித் கலீல் அவ்ன் அல்ஹாஷிமிய் மௌலானா). திருச்சி 620 009: அவ்னிய்யா பதிப்பகம், மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி வளாகம், சீத்தப்பட்டி பிரிவு, பூலாங்குளத்துப்பட்டி அஞ்சல், ஜே.ஜே.பொறியியல் கல்லூரி அருகில், மணப்பாறை ரோடு, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2015. (தமிழ்நாடு: ரிப்தா கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்டர்ஸ், 229/4, மீரா காம்ப்ளெக்ஸ், ஃபயர் சர்வீஸ் எதிரில், மேற்கு ரத வீதி, திண்டுக்கல் 624 001).

101 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22x14.5 சமீ.

"முதலாம் ஜுஸ்உக்கு விரிவுரை எழுதியுள்ளோம். திருக்குர் ஆனுக்கு பல்லாயிரக் கணக்கான விரிவுரைகள் பல மொழிகளிலும் வெளிவந்துள்ளன. இன்னும் சிலர்

பல புது முறைகளையும் கையாளத் தொடுத்துள்ளார்கள். கருத்து மறைந்துள்ள சில குர்ஆன் வாக்கியங்களுக்கு அப்படி அப்படியே பொருள் கூறப்பட்டுள்ளமையால் உண்மை விளக்கம் மறைந்து போகிறது. பொருத்தமற்ற கருத்து வெளியாகின்றது. இதனால் இஸ்லாத்தில் குளறுபடி உண்டாகிறது. இவையெல்லாம் நீக்கப்படடே விரிவுரை எழுதப்படுதல் வேண்டும். பல தப்ஸீர்கள் இதில் பிரயோகிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஆங்கிலம், தமிழ், அறபு ஆகிய தப்ஸீர்களிலிருந்து முக்கியமான விளக்கங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இடைக்கிடை விளக்கங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. ஆயினும் முடிவில் தப்ஸீர் செய்குல் அக்பரிலிருந்து மிக முக்கியமான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அனைத்துச் சொற்களுக்கும் பொருள்கள் கொடுக்கப்பட்டுள்ளன. குர் ஆன் வாக்கியங்களுக்குப் பொருத்தமான மொழி பெயர்ப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன" (J.S.K.A.A.H. மௌலானா, முன்னுரையில்).

### 16172

**தாகி பிரபம்.** J.S.K.A.A.H. மௌலானா. சென்னை 600 095: ஜமாலிய்யா முஹம்மது பதிப்பகம், ருக்மணி நகர், வளசரவாக்கம், 2ஆவது பதிப்பு, நவம்பர் 2017, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2000. (தமிழ்நாடு: ரிப்தா கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்டர்ஸ், 229/4, மீரா காம்ப்ளெக்ஸ், ஃபயர் சர்வீஸ் எதிரில், மேற்கு ரத வீதி, திண்டுக்கல் 624 001).

ix, 32 பக்கம், ஓவியங்கள், விலை: ரூபா 350., அளவு: 21.5x15 சமீ.

"தாகி பிரபம்" என்பதன் கருத்து தாகமுடையோருக்கான தண்ணீர்ப் பந்தல் என்பதாகும். எவருக்கு ஞானத்தில் அளவற்ற தாகம் (பிரியம்) உள்ளதோ அவருக்கு இந்நூல் ஒரு நீர்ப்பந்தலாகும். ஒரு நீர்ப்பந்தல் எவ்வாறு அதனை நாடி வருபவரின் தாகத்தை நீக்குகின்றதோ அவ்வாறே இந்தத் "தாகி பிரபம்" தன்னை நாடி வரும் கர்த்தாக்களின் ஞான வேட்கையை நீக்கிவிடும். இந்நூல் இறைஞான உதிப்பாகும். கர்த்தா வினாவைத் தொடுக்க, அவரது சிருஷ்டியாகிய ஆசிரியர் விடைபகர்வதாக இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது.

### 16173

**நோன்பு தெளிவுகளும் வழிகாட்டல்களும் (இஸ்லாமிய பத்வாக்கள் தொகுதி -2).** எம்.எஸ்.எம்.ஸியாப் (நளீமி). வெலிகாமம்: உரையாடல் தொடர்கிறது, 11, கொஹுணுகமுவ வீதி, புதிய தெரு, 1ஆவது பதிப்பு, மே 2017. (மஹரகம: மில்லெனியம் பிரின்டர்ஸ்).

62 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-43973-1-6.

இந்நூலில் நோன்பும் குறிக்கப்பட்ட நேரங்களும், நோன்பில் பொதுவான சில கேள்விகள், நோன்பும் பெண்களும், நோன்பும் தாம்பத்திய வாழ்வும், நோன்பும் மருத்துவ சிகிச்சைகளும், நோன்பை விடுதலும் கழாவும், ரமழானும் விஷேட இபாதத்துக்களும், ஸுன்னத்தான நோன்புகள் ஆகிய எட்டு அத்தியாயங்களில் நோன்பு பற்றிய தெளிவும் வழிகாட்டலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நோன்போடு தொடர்புபட்டதாக அன்றாடம் எழும் பல்வேறு மயக்கங்கள், சந்தேகங்களுக்கான

போதிய வழிகாட்டல்கள் நவீனகால அறிஞர்கள் பலரினால் மேற்கொள்ளப்பட்ட இந்த பத்வாக்கள் தெளிவுபடுத்துகின்றன. மிகவும் இலகுவான மொழிநடையில் சமகால அறிஞர்கள் மேற்கொண்ட நோன்போடு தொடர்பான சட்ட ரீதியான விளக்கங்களை தமிழ்மொழியில் கொணர்ந்த ஷெய்க் ஸியாப் (நளீமி) மிகவும் பாராட்டத்தக்கவர். (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27071).

### 16174

**பக்திப் பாமாலை.** ஜமாலிய்யா ஸய்யித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் (ரலி). இலங்கை: ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை, 2ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2012, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 1988. (திண்டுக்கல் 624 001: ரிப்தா கம்ப்யூட்டர் ஆப்செட், 229/4, மேற்குரத வீதி).

52 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 150.00, அளவு: 21.5x14 சமீ.

நபிகள் நாயகம் புகழ்ப்பா, பாத்திமா நாயகி புகழ்ப்பா, ஸய்யிதா ஸாலிஹா உம்மாக்கண்ணே புகழ்ப்பா, முஹிய்யுத்தீன் ஆண்டவர்கள் புகழ்ப்பா, குணங்குடி மஸ்தான் ஸாஹிப் வலிய்யுல்லாஹ் (ரலி) புகழ்ப்பா, அகிலம் புகழ, நபியே நபியே, வாழும் ஜோதியே, பதூரின்கள் முனாஜாத் மாலை, அறபுப்பத விளக்கம் ஆகிய தலைப்புகளில் இஸ்லாமிய பக்திப் பாடல்கள் இந்நூலில் அடங்கியுள்ளன.

### 16175

**பாத்திமா நாயகியார் மாலை.** J.S.K.A.A.H. மௌலானா. (இயற்பெயர்: ஜமாலிய்யா அஸ்ஸயித் கலீல் அவ்ன் அல்ஹாஷிமிய் மௌலானா). திருச்சி 620 009: அவ்னிய்யா பிரிண்டர்ஸ் அன்ட் பப்ளிஷர்ஸ் ட்ரஸ்ட், மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி வளாகம், சீத்தப்பட்டி பிரிவு, ஜே.ஜே.பொறியியல் கல்லூரி அருகில், மணப்பாறை ரோடு, 1ஆவது பதிப்பு, 2015. (தமிழ்நாடு: ரிப்தா கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்டர்ஸ், 229/4, மீரா காம்ப்ளெக்ஸ், ஃபயர் சர்வீஸ் எதிரில், மேற்கு ரத வீதி, திண்டுக்கல் 624 001).

44 பக்கம், விலை: ரூபா 30.00, அளவு: 18x12 சமீ.

காத்தம் நபிகளார்-கதீஜா பிராட்டியாரின் மகளார் பாத்திமா நாயகி அவர்களாவார். அலிப்புலியாரின் அருமை மனைவியும், இமாம் ஹஸன் ஹுஸைனாரின் அன்பு அன்னையுமாவார். பாத்திமா நாயகியின் பேரில் பாடப்பெற்ற அவரது திருச்சரிதம் கூறும் அழகிய தமிழ் மாலையே இதுவாகும். ரஸூல் மாலை, முஹிய்யுத்தீன் மாலை போன்று அன்றாடம் வீடுகளில் ஓதவும், மௌலிது மஜ்லிஸ்களில் பாடிப் பயன்பெறவும் வாய்ப்பாக இம்மாலை அமைகின்றது.

## 16176

**பேரின்பப் பாதை.** J.S.K.A.A.H. மௌலானா. இலங்கை: ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை-இலங்கைக் கிளை, 63/A, புஹாரி மஸ்ஜித் வீதி, கல்பொக்க, வெலிகம, 3ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2019, 2ஆவது பதிப்பு, டிசம்பர் 2015, 1ஆவது பதிப்பு, மே 1976. (தமிழ்நாடு: ரிப்தா கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்டர்ஸ், 229/4, மீரா காம்ப்ளெக்ஸ், ஃபயர் சர்வீஸ் எதிரில், மேற்கு ரத வீதி, திண்டுக்கல்).

xxxii, 120 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

இந்நூலில் வஹ்தத்துல் வுஜூது (அறபுக் கவிதை), ஏக காட்சி, ஏக சின்மயப் புகழ்ப்பா, நூலாசிரியர், முன்னுரை, மதிப்புரைகள், நன்றி, ஆகிய ஆரம்பப் பக்கங்களைத் தொடர்ந்து, உயிரும் மெய்யும், நபிமார், குத்புமார், வலீமார், நபீமாரின் வாரிசுகள், ஷெய்கு அல்லது ஞான குரு, வணக்கம், அறிவு-ஞானம், தன்னிலை அறிதலும் மெய்ப்பாடுகளும், தரீக்காக்கள் அல்லது ஞானப் பாதைகள், ஞானப் பாதைகளும் அவற்றின் குருமார்களும், காதிரிய்யா தரீக்கும் தீட்ஷதர் வழிமுறையும், ஷபதுலிய்யாத் தரீக்கும் தீட்ஷதர் வழிமுறையும், நக்ஷபந்திய்யா தரீக்கும் தீட்ஷதர் வழிமுறையும், முஹிய்யுத்தீன் ஆண்டவர்களின் வமிச பாரம்பரியம், பஹாஉத்தீன் ஆண்டவர்களின் வமிச பாரம்பரியம், இப்றாஹீமுத் தஸூகிய் ஆண்டவர்களின் வமிச பாரம்பரியம், அஹ்மதுல் பதவிய் ஆண்டவர்களின் வமிச பாரம்பரியம், தரீகத்துல் ஹக்கிய்யா, தீட்ஷதர் வழிமுறை, வமிச பாரம்பரியம் (ஆதம் அலை முதல்), தந்தை நாயகத்தின் தகப்பனார் வழிமுறை, தந்தை நாயகத்தின் தாயார் வழிமுறை, நாகூர் ஆண்டவர்களின் வமிச பாரம்பரியம், முஹிய்யுத்தீன் ஆண்டவர்களின் தாயார் வழிமுறை, பிரயோகிக்கப்பட்ட அறபுச் சொற்களும் தமிழ்க் கருத்துக்களும், ஏகத்துவ மெய்ஞ்ஞானம் (வானொலி சொற் பொழிவு), மெய்ஞ்ஞான விளக்கம் (வானொலி சொற்பொழிவு) ஆகிய ஆன்மீகக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

## 16177

**மனிதா!** J.S.K.A.A.H. மௌலானா. (இயற்பெயர்: ஜமாலிய்யா அஸ்ஸயித் கலீல் அவ்ன் அல்ஹாஷிமிய் மௌலானா). திருச்சி 620009: அவ்னிய்யா பதிப்பகம், மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ, யாஸீன் அறபுக் கல்லூரி வளாகம், 2ஆவது பதிப்பு, 2016, 1ஆவது பதிப்பு, 2010. (தமிழ்நாடு: ரிப்தா கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்டர்ஸ், 229/4, மீரா காம்ப்ளெக்ஸ், ஃபயர் சர்வீஸ் எதிரில், மேற்கு ரத வீதி, திண்டுக்கல்).

164 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜூது, ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் மௌலானா நாயகம் அவர்களின் அமுதமொழிகள்.

மேலும் பார்க்க:

இறையருள் மாலை. 16818

காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் சாகிப் 16889

குதுபுகள் திலகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி). 16871

குதுபுகள் திலகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) (மூன்றாம் பாகம்). 16872

நாயகர் பன்னிரு பாடல். 16820

பிலால்: ஒரு கறுப்பின அடிமையின் விடுதலை வரலாறு 16874

ஹிஜாமா எனப்படும் இரத்தம் குத்தியெடுக்கும் மருத்துவம் 16324

# 300 சமூக விஞ்ஞானங்கள்

## 301 சமூகவியல்

### 16178

**அதிர்வுகள்-3.** செ.அன்புராசா. மன்னார்: முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2020. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).

xii, 119 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-4609-12-9.

இந்நூலாசிரியர் சமூக நலன் பற்றிய அக்கறையோடும் சொந்த மண் பற்றிய நேசிப்போடும் அதிர்வுகள் என்ற தலைப்பில் வெற்றிகரமாக வெளியிட்ட முதல் இரு பாகங்களைத் தொடர்ந்து இப்பாகம் மூன்றாவதாக வெளிவந்துள்ளது. தனிமனித ஆளுமை சார்ந்த நான்கு ஆக்கங்களும் (உயிரை மாய்க்க எவருக்கும் உரிமையில்லை/ குப்பைகளை நீக்க வழி அவற்றை அகற்றுவது தான்/ நம் தமிழ் வாழவும் வேண்டும் நாம் அதனை வளர்க்கவும் வேண்டும்/ உணவுக்கு உப்புப் போல உறவுக்கு நட்பு), சமூகம் சார்ந்த ஐந்து ஆக்கங்களும் (மரணமும் மறை பொருளே/ நாய்களும் நாங்களும்/ இயற்கையை மதிக்காவிட்டால் அது நம்மை மிதிக்கும்/ தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு/ கல்வி அடைவு மட்டத்தினை அதிகரிக்க), அரசியல் சார்ந்த மேலும் நான்கு ஆக்கங்களுமாக (வாக்களிப்பிலிருந்து விலகி வாக்காளர் தவறிழைக்கக் கூடாது/ புலிக்கதை தொடரப்போகின்றது/ உயிர்த்த ஞாயிறு மானிடம் மரித்த ஞாயிறா?/உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புப் பின்னணியில் நடப்பதென்ன?) மொத்தம் 13 ஆக்கங்களை இத்தொகுப்பில் வழங்கியுள்ளார்.

### 16179

**எம் முன்னோரின் வாழ்வாதாரமும் மருத்துவமும்.** மூ.சிவலிங்கம். யாழ்ப்பாணம்: சைவத் திருநெறிக் கழகம், இணுவில், 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2020. (யாழ்ப்பாணம்: சுடர்நிலவு கிராப்பிக்ஸ், இணுவில்).

xviii, 96 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x15.5 சமீ.

இணுவில் பெரிய சந்நியாசியார் சமாதியடைந்த 103ஆவது ஆண்டு நிறைவு விழாவில் அவரால் போற்றி வளர்க்கப்பட்ட வாழ்வாதாரப் பணியையும் சித்த மருத்துவத்தையும் கருப்பொருளாகக் கொண்ட இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. நூல்முகம், இணையிலி என்னும் இணுவில் திருவூர், மஞ்சத்தடியின் சிறப்பு, வாழ்வாதாரப் பணிகள், விவசாயியின் குடியிருப்பு, எம்மவரின் முற்கால வளவு வருமானம், பட்டிப் பசுக்களும் கால்நடைகளும், நாளாந்தப் பாவனைக்கான சத்துணவுப் பொருட்கள், விவசாயம், காலபோகப் பயிர்கள், சிறுதானியப் பயிர்கள், கிழங்குப் பயிர், காய்கறி கீரையினப் பயிர்கள், பிற்கால இணைப்பு விவசாயம், அக்கால நீர்ப்பாசன முறை, விவசாயம் தவிர்ந்த ஏனைய பணிகள், பனைவளம், முற்காலத்து எம்மவரின் பொது விழாக்களில் சமூக ஒற்றுமை, எம் முன்னோரின் மரண வீட்டிற்கான ஒத்துழைப்பு, (மருத்துவம்) எம்முன்னோர் காலத்து மருத்துவ முறை, இணுவில் பெரிய சந்நியாசியார், காரைக்கால் அம்பலவாண சுவாமிகள், சித்த மருத்துவர் முருகேசு அப்பாக்குட்டி, சித்த மருத்துவர் முத்து நாகலிங்கம், தேசப்புகழ் பெற்ற மருத்துவர் செல்லப்பா, சிறுபிள்ளை விசேட மருத்துவர் செ.கந்தையா, சித்த மருத்துவர் சு.இராமலிங்கம், (விஷக்கடி வைத்தியர்கள்) புலவர் நடராசையர், பொ.அப்புத்துரை, சித்த மருத்துவர் தாமோதரம்பிள்ளை, இதர சமூக சேவையான மருத்துவத் துறைகள், பாட்டி வைத்தியம், இணுவில் அமெரிக்கன் மிஷன் மருத்துவமனை ஆகிய 33 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 16180

**கொரோனா ஊரடங்கு: நானும் என்னூர் நாய்களும்.** செ.அன்புராசா. மன்னார்: முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2020. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).

xx, 162 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-4609-11-2.

ஆசிரியர் முகநூலில் தான் எழுதிய 80 பதிவுகளை முதல் 140 பக்கங்களிலும், அவற்றுக்குக் கிடைக்கப்பெற்ற வாசகர் பின்னூட்டங்களை பின்னைய 22 பக்கங்களிலுமாக பதிவுசெய்துள்ளார். கொரோனாப் பெருந்தொற்றின் காரணமாக ஏற்பட்ட உள்ளிருப்பு (லொக் டௌன் Lock Down) முடக்கநிலைக் காலத்தில் அவரது நாய் ரெமி (Remy) கதைக்கத் தொடங்குகின்றது. தொடக்கமே கேள்விதான். "அடிக்கடி வெளியே போய் வருவாய். இரண்டு மூன்று நாட்களாக வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்கிறாய்? இத்தனை தொழில்நுட்பத்தையும் அறிவையும் வைத்துக்கொண்டு உலக இயக்கத்தையே விரல் நுனியில் கொண்டு வந்த உங்களுக்கு இதைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதோ?"என்று கேள்விக்கணைகளைத் தொடுக்கும் ரெமியின் பார்வைகள் அவருக்குள் பல கேள்விகளை எழுப்புகின்றன. அதற்கான பதில்கள் வாசகருக்கு நல்ல விருந்தாகவும் அமைந்துவிடுகின்றது. அத்தனை கேள்விகளும் மனித சமூகத்தின் வாழ்வையும் சூழலையும் கேள்விக் குள்ளாக்கி ஒரு புதிய அறிவுசார் ஜனநாயகப் பண்பாட்டு அலையை உருவாக்க முயற்சிக்கின்றன.

16181

**சமூகவியல்.** ஜெனிதா பிரதீபன். கல்முனை: றோயல் பப்ளிக்கேஷன்ஸ், பிரதான வீதி, சாய்ந்தமருது, 1ஆவது பதிப்பு, 2016. (கல்முனை: றோயல் பிரின்டர்ஸ், பிரதான வீதி, சாய்ந்தமருது).

ix, 106 பக்கம், விலை: ரூபா 340., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-41847-0-1.

பெண்ணியம், சிறுவர் உரிமைகள், பெண்களின் உரிமைகள் என இன்னோரன்ன கருத்துக்களை உள்வாங்கி எழுதப்பட்ட சமூகவியல் கட்டுரைகளைக் கொண்டுள்ள நூல். மத்திய முகாம்-2ஐப் பிறப்பிடமாகவும், நற்பிட்டிமுனையை வாழ்விடமாகவும் கொண்ட இந்நூலாசிரியை கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலையின் பழைய மாணவி. கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் விஷேட துறையில் முதல் தரத்தில் பட்டப்படிப்பை பூர்த்திசெய்தவர். நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றுகின்றார். இத்தொகுப்பில் கார்ள்மார்க்ஸ், ஊடகங்களில் பெண்களின் பிரதிபலிப்பு, மரபுகளும் பால்நிலையும், பெண்கள் வீட்டின் கண்கள், சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சமூக சமத்துவமின்மை-ஓர் சமூகவியல் நோக்கு, பெண்கள் தெரிந்துகொள்ள வேண்டிய உரிமைகள், பெண்கள் அபிவிருத்தியின் ஒரு அங்கம், கல்விக்கான வழி திறக்கப்பட்டால் சிறுவர் உரிமைகள் தாமாகவே கிடைக்கப்பெறும், பால்நிலைப் பாகுபாடுகள் களையப்பட வேண்டும், தற்கொலை தரும் கவன ஈர்ப்பு, கொடிது கொடிது இளமையில் வறுமை, இலங்கையின் வேலையில்லாப் பிரச்சினைகள் பற்றிய சமூகவியல் பார்வை ஆகிய 13 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

16182

**மனச் சோலை.** பவானி சற்குணசெல்வம். கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 202, செட்டியார் தெரு, 1ஆவது பதிப்பு, 2021. (கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 202, செட்டியார் தெரு).

vii, 225 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-624-5582-00-6.

பவானி சற்குணசெல்வம் அவ்வப்போது எழுதிய சமூகவியல், அறிவியல் கட்டுரைகளின் தொகுப்பு. குழந்தைகள் வளர்ப்பு, கல்வியின் மகிமை, தாய் மொழிக் கல்வியின் அவசியம், இளைஞனே தடுமாற்றம் இல்லாது போராடு-வெற்றி நிச்சயம், இளைய தலைமுறையினரின் மனநலம் காப்பது அவசியம், மனவெழுச்சி நிறைந்த குமரப் பருவம், குறைந்த மன அழுத்தமும் சிறந்த வாழ்வும், பாடசாலை செல்லும் மாணவருக்கான பாலியற் கல்வி, மீ டூ (Me Too Movement), மனநோயும் அதன் அறிகுறிகளும், பெண்ணியம் பற்றி ஆண்களும் பேசவேண்டும், நெருக்கீட்டிற்கு பிற்பட்ட மனவடு நோய் (PTSS), மனநலம், அவதானக் குறை மிகையியக்கம் குறைபாடு (ADHD), இன்றைய இளம் சந்ததியினரும் மது மற்றும் போதைப்பொருள் பாவனையும், ஆளுமைக் கோளாறு, தற்கொலை, அதிகம் தற்கொலை செய்துகொள்வது ஆண்களே ஏன்?, காமத்துப்பால், அது வன்முறை என்று அவளுக்குத் தெரியாது, மாதவிடாய் நிற்றல் (Menopause), பெண்களில்

*மனச்சோர்வு, பாலியல் வன்முறைகள் அதிகரிக்கக் காரணமென்ன?, கொரோணா நமக்குக் கற்றுத்தந்த பாடம், மாற்றுப் பாலினத்தவர் தொடர்பான சமூகப் புரிதல், மறதி நோய்* (Dementia) *ஆகிய 26 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

மேலும் பார்க்க:
சுதேசிய சமூக உருவாக்கம்: பத்திரிகைகளின் பங்களிப்பு குறித்த ஓர் உசாவல். 16030

## 301.01 சமூகவியல்சார்ந்த பாடநூல்கள்

### 16183

**சமூகக் கல்வியும் வரலாறும்: ஆண்டு 6.** *பாடநூல் தயாரிப்புக் குழு. கிளிநொச்சி: சமூகக் கல்வி மன்றம்-வன்னி, 1ஆவது பதிப்பு, 1998. (அச்சக விபரம் தரப்பட வில்லை).*

*(4), 20 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x20.5 சமீ.*

*சிறிலங்கா அரசின் பாடத்திட்டத்தின் கீழ் பள்ளிகளில் கற்பிக்கப்பட்டு வரும் வரலாற்றுப்பாட நூல்கள் உண்மையான வரலாறாக அமையாமல் சிங்கள இனத்தை மேன்மைப்படுத்தக்கூடிய வகையில் மிகைப்படுத்தியும், தமிழ் மக்களின் பெருமைகளை மறைத்தும் தமிழ்மக்களை இழிவுபடுத்தும் வகையிலே திரித்தும் எழுதப்பட்டுள்ளன. இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரிய நாடென்றும் அவர்களது வரலாறே ஈழத்து வரலாறென்றும் சிங்களவரால் சிங்கள வருக்காகச் சிங்கள மொழியில் எழுதப்பட்ட ஆக்கங்களின் தமிழ்மொழிபெயர்ப்பே தமிழ் மாணவர்களுக்கு ஈழத்து வரலாறெனக் கற்பிக்கப்பட்டு வருகின்றது. சிறப்பும் மேன்மையும் மிக்க வரலாற்றைக் கொண்ட இனம் அந்த வரலாற்றால் பெருமை யடைகின்றது. அத்தகைய வரலாறு அந்த இனத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டுகின்றது. பெருமைமிக்க பண்டைய வரலாற்றைக் கொண்ட ஈழத்தமிழினத்தின் இன்றைய மாணவர்கள் தமது வரலாற்றைக் கற்பதும் தெரிந்துகொள்வதும் அதனூடாக அவர்கள் வளர்ச்சியைப் பெறுவதும் சிங்கள ஆட்சியாளர்களால் திட்டமிட்டு மறுக்கப்படுகின்றது. தமிழ் மாணவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டக்கூடியதாகவும் சமூக வாழ்வை நெறிப்படுத்தக் கூடியதாகவும் பொதுத் தேர்வுகளுக்கு ஊறு நேராத வகையிலும் 6, 7, 8ஆம் ஆண்டு மாணவர்களுக்கு "சமூகக் கல்வியும் வரலாறும்" என்ற பாடநூலினூடாகச் சில பாட அலகுகளைச் சமூகக் கல்வி மன்றம் ஆக்கித் தந்திருக்கிறது. ஆண்டு 6இற்குரிய இந்நூலில் தேசியப் பண், தேசியக் கொடி, தேசியக் கோட்குறி, தமிழீழ நாடும் விடுதலைப் போராட்டமும், இலங்கையின் முதற்குடிகள், எல்லாள மாமன்னன், இலங்கை தென்னிந்திய அரசியல் உறவு ஆகிய அத்தியாயங்களை இந்நூல் கொண்டிருக்கிறது.*

## 16184

**சமூகக் கல்வியும் வரலாறும்: ஆண்டு 7**. பாடநூல் தயாரிப்புக் குழு. கிளிநொச்சி: சமூகக் கல்வி மன்றம்-வன்னி, 1ஆவது பதிப்பு, 1999. (வவுனிக்குளம்: கன்னி நிலம் பதிப்பகம், பாலி நகர்).

(4), 34 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x20 சமீ.

சிறிலங்கா அரசின் பாடத்திட்டத்தின் கீழ் பள்ளிகளில் கற்பிக்கப்பட்டு வரும் வரலாற்றுப் பாட நூல்கள் சிங்கள இனத்தை மேன்மைப்படுத்தக்கூடிய வகையில் மிகைப்படுத்தியும், தமிழ் மக்கள் பெருமைகளை மறைத்தும் தமிழ்மக்களை இழிவுபடுத்தும் வகையிலே திரித்தும் எழுதப்பட்டுள்ளன. இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரிய நாடென்றும் அவர்களது வரலாறே ஈழத்து வரலாறென்றும் சிங்களவரால் சிங்களவருக்காகச் சிங்கள மொழியில் எழுதப்பட்ட ஆக்கங்களின் தமிழ்மொழிபெயர்ப்பே தமிழ் மாணவர்களுக்கு ஈழத்து வரலாறெனக் கற்பிக்கப்பட்டு வருகின்றது. "உனது இனம் இந்த மண்ணை ஆக்கிரமிக்க வந்த இனம். இந்த மண்ணில் அக்கிரமம் புரிந்த இனம். கள்ளத்தோணியில் வந்த இனம். அடிமை இனம்" எனத் தமிழினத்தை இழிவுபடுத்துகின்றது. போர்க்காலத்தில் வட கிழக்குப் பிரதேசங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரால் அறிமுகப்படுத்தப்பட்ட பாடத்திட்ட அலகுகளில் தமிழ் மாணவர்களின் வாழ்க் கைக்கு வழிகாட்டக்கூடியதாகவும் சமூக வாழ்வை நெறிப்படுத்தக் கூடியதானவும் பொதுத் தேர்வுகளுக்கு ஊறு நேராத வகையிலும் 6, 7,8 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு "சமூகக் கல்வியும் வரலாறும்" என்ற பாடநூலினூடாகச் சில பாட அலகுகளைச் சமூகக் கல்வி மன்றம் ஆக்கித் தந்திருக்கிறது. ஆண்டு 7இற்குரிய இந்நூலில் தமிழீழ மண் தொகுதிகளும் அவற்றின் பயன்பாடுகளும், தமிழீழ நீர்வளங்களும் அவற்றின் பயன்பாடுகளும், இலங்கைத் தீவிலே தமிழராட்சியும் மாட்சியும் -1, இலங்கைத் தீவிலே தமிழராட்சியும் மாட்சியும் -2, யாழ்ப்பாணத் தமிழரசு ஆகிய அத்தியாயங்களை இந்நூல் கொண்டிருக்கிறது.

## 16185

**சமூகக் கல்வியும் வரலாறும்: ஆண்டு 8**. பாடநூல் தயாரிப்புக் குழு. கிளிநொச்சி: சமூகக் கல்வி மன்றம்-வன்னி, 1ஆவது பதிப்பு, 2000. (கிளிநொச்சி: கன்னி நிலம் பதிப்பகம், 101, முருகேச கோவில் முன்வீதி, ஸ்கந்தபுரம்).

(4), 34 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

சிறிலங்கா அரசின் பாடத்திட்டத்தின் கீழ் பள்ளிகளில் கற்பிக்கப்பட்டு வரும் வரலாற்றுப்பாட நூல்கள் சிங்கள இனத்தை மேன்மைப்படுத்தக்கூடிய வகையில் மிகைப்படுத்தியும், தமிழ் மக்கள் பெருமைகளை மறைத்தும் தமிழ்மக்களை இழிவுபடுத்தும் வகையிலே திரித்தும் எழுதப்பட்டுள்ளன. பொய்யான வரலாறு தமிழ்மாணவர்களுக்குப் புகட்டப்படுகிறது. இத்தகைய கல்வியினால் தமிழ் மாணவர்கள் தன்னம்பிக்கையோ நாட்டுப்பற்றோ அற்றவர்களாக வாழும் நிலை

இருந்து வருகின்றது. இனத்துக்கு வழிகாட்டும் வரலாற்றுக் கல்விக்கு இந்த நிலை என்றால் சமூக வாழ்க்கையை நெறிப்படுத்தும் நோக்கோடு சிறீ லங்கா அரசால் கற்பிக்கப்படும் சமூகக் கல்வியினூடாக தமிழ் மாணவர்கள் தமது நாட்டின் நீர் வள நில வளங்களையோ சமூக அறிவையோ வாழ்க்கையை நெறிப்படுத்தக்கூடிய அறிவையோ பெற முடியவில்லை. தமிழினத்தை சிங்களவர்களுக்கு அடங்கி அடிமையாக வாழவைப்பதற்கேற்ற வகையிலேயே சமூகக் கல்விப் பாடத்திட்டத்தின் பாடப்பரப்புகள் திட்டமிடப்பட்டு ஆக்கப்பட்டுள்ளன. எனவே தான் இன்றைய வரலாறு சமூகக் கல்வி பாடங்களில் தமிழ மாணவர்களுக்கு நாட்டமோ ஆர்வமோ ஏற்படவில்லை. தேர்வுகளில் புள்ளிகளைப் பெறுவதற்கென்ற ஒரே நோக்கிலேயே இப்பாடங்களைத் தமிழ் மாணவர்கள் படிக்கின்றார்கள். தமிழ் மாணவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டக்கூடியதாகவும் சமூக வாழ்வை நெறிப்படுத்தக் கூடிய தாகவும் பொதுத் தேர்வுகளுக்கு ஊறு நேராத வகையிலும் 6, 7, 8ஆம் ஆண்டு மாணவர்களுக்கு "சமூகக் கல்வியும் வரலாறும்" என்ற பாடநூலினூடாகச் சில பாட அலகுகளைச் சமூகக் கல்வி மன்றம் ஆக்கித் தந்திருக்கிறது. நான்கு இயல் களைக் கொண்ட இந்நூலில் ஆண்டு 8இற் கல்வி கற்கும் மாணவர்களுக்கென நான்கு இயல்களை இந்நூல் கொண்டுள்ளது. இயல் 1இல் ஈழத் தமிழர் தாயகம், இயல் 2இல் மகாவம்சம் வரலாற்று நூலல்ல, இயல் 3இல் போர்த்துக்கேயர் இலங்கையில் வேரூன்றிய வரலாறு, இயல் 4இல் வீரம் செறிந்த வன்னியும் தமிழரசுகளும் ஆகிய பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

## 301.05 சமூகவியல் சார்ந்த ஆய்விதழ்கள்/சிறப்பு மலர்கள்

### 16186

**இலங்கைச் சமூகத்தையும் பண்பாட்டையும் வாசித்தல்: தெரிவுசெய்யப்பட்ட கட்டுரைகள்: 3ஆவது தொகுதி 2000-2005**. சசங்க பெரேரா, தா.சனாதனன், பா.அகிலன் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 8: சமூக பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவனம், 199 A, கிங்ஸ் வீதி, 1ஆவது பதிப்பு, 2005. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 424 A, காங்கேசன்துறை வீதி).

(6), 313 பக்கம், விலை: ரூபா 950., அளவு: 22x15 சமீ., ISBN: 955-1493-09-5.

இத்தொகுப்பின் வழியாக வந்து சேரும் ஆய்வுக் கட்டுரைகள் 2000இற்கும் 2005இற்கும் இடையிலான காலகட்டத்தில் பெரும்பாலும் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் வெளிவந்த கட்டுரைகளின் தமிழ்மொழிபெயர்ப்பாகும். இலங்கையில் அடையாளம் தொடர்பான அரசியல் என்ற பிரிவில் "எல்லா வேடர்களும் எங்கு சென்று விட்டனர்? இலங்கையில் பௌத்தமும் முதுகுடித் தன்மையும்" (கணநாத் ஒபேசேகரா) என்ற கட்டுரை இடம்பெற்றுள்ளது. இலங்கையில் அரசியல் வன்முறை தொடர்பான அரசியல் என்ற பிரிவில் "ஆவி பீடித்தல்களும் பழி தீர்க்கும் பிசாசுகளும்" (சசங்க பெரேரா) என்ற கட்டுரையும், இலங்கையில் மதமும் சடங்குகளும் தொடர்பான அரசியல் என்ற பிரிவில் "மாறாத வகையில் திரும்பத் திரும்பச் செய்தலின் அசாத்தியம் பற்றி" (பொப் சிம்சன்), "ஆறுமுக நாவலர்: 1850 அளவில் சைவப் பிரசங்க மரபும் சமயத்தின்

நிர்ணயமும்" (பேனாட் பேற்) ஆகிய இரு கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. இலங்கையில் காண்பியங்கள் தொடர்பான அரசியல் என்ற பிரிவில் "இலங்கைச் சமகாலக் காண்பியக் கலை நடைமுறைகளும் தொன்னூறுகளின் போக்கும்" (ஜகத் வீரசிங்க), "ஈஸ்ட்மன் கலர் பூசிய யாழ்ப்பாணத்துக் கடவுளர்கள்" (தா.சனாதனன்), "தூ தருவோ, சோப் ஒபெறா, தொலைக்காட்சி, சனரஞ்சகக் கலாச்சாரம் மற்றும் சனரஞ்சகக் கலாசாரத்தின் மூலதனம்" (இரஞ்சித் பெரேரா) ஆகிய மூன்று கட்டுரைகளும், இலங்கையில் பண்பாடும் உயிரியல் ஒழுக்க நெறி தொடர்பான அரசியலும் என்ற பிரிவில், "சாத்தியமற்ற நன்கொடை: சமகால இலங்கையில் உடல்கள், புத்தமதம் மற்றும் உயிரியல் ஒழுக்கம்" (பொப் சிம்சன்) என்ற கட்டுரையும் இடம்பெற்றுள்ளன.

### 16187

**மூன்றாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு: சிறப்பு மலர்1985.** மலர் வெளியீட்டுக் குழு. தமிழ்நாடு: உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், 1ஆவது பதிப்பு, 1985. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(98) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x22.5 சமீ.

உலகளாவிய தமிழ்ப் பண்பாட்டு இயக்கமான உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் 08.01.1974 இல் இதன் மூலவர் குரும்பசிட்டி இரா.கனகரத்தினம் அவர்களின் முயற்சியில் ஐந்து நாட்டுப் பேராளர்களால் அமைக்கப்பட்டது. இதன் தலைவராக சாலை இளந்திரையன் முதலிரு ஆண்டுகளும், பின்னர் தொடர்ந்து இர.ந.வீரப்பனும் பணியாற்றினர். குரும்பசிட்டி இரா.கனகரத்தினம் இவ்வமைப்பின் செயலாளராகப் பணியாற்றி உலகத் தமிழர்களை ஒன்றுசேர்க்கும் பணியில் ஈடுபட்டார். அதன் பணிகளில் ஒன்றாக, தமிழகத்தின் சேலம் நகரில் 1985ஆம் ஆண்டு டிசம்பர் 13,14,15ஆம் திகதிகளில் மூன்றாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டினையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இது. இச்சிறப்பிதழில் மதுரை ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றமும் (மாநாட்டுப் பேராளர்-1981), 21ஆம் நூற்றாண்டில் தமிழர் (காசிதாசன்), நாடு ஒன்று ஆகவேண்டும் (ஐ.இளவழகு), மொறிஷியஸ் தமிழர் (தாசன் செட்டி), ஈழம் எரிகிறது (புதுவை இரத்தினதுரை), பர்மா முன்மாநிலத் தமிழர்கள் (டி.எஸ்.மணி), தமிழ்ப் பண்பாடு உலகளாவியது (நா.மகாலிங்கம்), சுமாத்திராவில் தமிழர் (சோலை-இருசன்), மர்த்தினிக் தமிழர் வேலையா பேசுகிறார், முதலாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தொடக்கவிழா (ஐ.இளவழகு, முரசு நெடுமாறன்), 2ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டு முடிவுகள், மதுரைத் தீர்மானங்கள், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், Procedural Regulations, Movement International de la culture Tamoule, Resolution of the International Movement for Tamil Culture, தமிழீழ விடுதலை ஏன்? (முகுந்தன்), ஈழத் தமிழரின் பொருளியல்: சமூகம்-இலக்கியம் பின்னணி (வே.இளங்கோ), புதுச்சேரிக் கிளையின் ஐந்தாம் ஆண்டு சாதனைகள் (வீ.மதுரகவி), பண்பாடு காக்கும் தமிழ் மகளிர் (பவானி மதுரகவி), மலேசியா

வாழ் ஈழத் தமிழர்கள் (நா.வி.சிங்கம்), சிங்கப்பூரில் தமிழ் இலக்கியத் தோற்றம் (முல்லைவாணன்), உலகெங்கும் தமிழ் மணக்க (ச.மதனகல்யாணி) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

## 16188

**மொழிதல்:ஆய்விதழ் 8: எண் 1**. சி.சந்திரசேகரம் (பிரதம ஆசிரியர்). மட்டக்களப்பு: சுதந்திர ஆய்வு வட்டம், 110/3, கண்ணகி அம்மன் கோவில் வீதி, 10ஆவது குறுக்கு, 1ஆவது பதிப்பு, ஆனி 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

(4), 110 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 25.5x18.5 சமீ., ISSN: 2386-1630.

தமிழியல் சமூகவியல் துறைகளில் எழுதப்பெற்ற ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவரும் இப் பல்கலை ஆய்விதழ் தனது எட்டாவது ஆண்டின் முதலாவது இதழில் (தை-ஆனி 2021), காரணியை நிகழ்த்துதல்: தொல்காப்பியரின் நிகழ்த்துகைக் கோட்பாடு (இ.முத்தையா), தமிழ்மொழிப் பாடத்துக்கான கலைத்திட்டம்: நிகழ்காலச் சவால்கள்-ஒரு நோக்கு (ஸ்ரீபிரசாந்தன்), பிரடரிக் ஜெமிசனின் பின்நவீனத்துவம் தொடர்பான விமர்சனம்: ஒரு மெய்யியல் பகுப்பாய்வு (இ.பிறேம்குமார்), தமிழின் சிறப்பெழுத்துக்கள்: ஒரு தெளிவாக்க முயற்சி (சி.சிவசேகரம்), ஊர்கள் உயிர்ப்படைய வழிசமைக்கும் தெருவெளி அரங்கு (க.சிதம்பரநாதன்), இலங்கையில் தமிழ், சிங்கள சமூகங்களின் அடையாள மீள்வடிவமைப்பு: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரையும் அநாகரிக தர்மபாலவையும் முன்வைத்து (வடிவேல் இன்பமோகன்) ஆகிய ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இவ்வாய்விதழின் ஆசிரியர் குழுவில் கலாநிதி க.இராஜேந்திரம், முனைவர் ந. முத்துமோகன் (தமிழ்நாடு), பேராசிரியர் கி. விசாகரூபன், பேராசிரியர் வ.மகேஸ்வரன் ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.

## 16189

**வடந்தை 2021**. சி.சிவலிங்கராஜா, என்.சண்முகலிங்கன் (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், 1ஆவது பதிப்பு, 2021. (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

viii, 156 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x18.5 சமீ., ISBN: 978-624-5911-13-4.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் பண்பாட்டு பெருவிழாவும் 2021ஆம் ஆண்டிற்கான கலைஞர்களை கௌரவித்து விருது வழங்கும் நிகழ்வும், கந்தபுராண படன ஒலிப்பேழை வெளியீடும் யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் 18.12.2021ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர்

திரு. இ.இளங்கோவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வடமாகாணத்தில் கலைத்துறைக்கு சிறப்புத் தொண்டாற்றி தெரிவு செய்யப்பட்ட மூத்த கலைஞர் களுக்கு "கலைக்குரிசில்" விருதும், இளம் கலைஞர்களுக்கு "இளம் கலைஞர்" விருதும் வழங்கி வைக்கப்பட்டதுடன், 2020 இல் வெளியிடப்பட்டு தெரிவு செய்யப்பட்ட நூல்களுக்கு "சிறந்த நூற்பரிசு" விருதும் விருந்தினர்களால் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வினையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இதுவாகும். இம்மலரில் இலங்கையின் இசைவேளாளர்கள், இராவணீயம், மல்லிகைத்தீவுக் கிராமியப் பாடல்களில் மறந்தவையும் மறைந்தவையும், பண்பாட்டைச் சித்திரிக்கும் யாழ்ப்பாணத்துக் கிராமிய நடனங்கள், கிராமிய தெய்வ வழிபாட்டில் வைரவர் வழிபாடு, மரபுரிமைச் சின்னங்களைப் பேணிக் காத்தல் பெருங்கடன், புதுக்குடியிருப்புப் பண்பாட்டில் பாரம்பரிய பண்பாட்டுப் பொருட்கள், மொழிபெயர்ப்பின் முக்கியத்துவம், போதைப்பொருள் பாவனையும் பண்பாட்டு வீழ்ச்சியும், மின்சாரம் மற்றும் வெகுசனத் தொடர்புச் சாதனங்களின் வருகைக்குப் பின்னதான வடக்கு மாகாணத்தின் கலைகள், நிறத்தால் உடன்பாடு குணத்தால் முரண்பாடு, பண்பாட்டுக் கோலங்கள் ஆகிய கட்டுரைகளும், கலாசாரச் செயற்றிட்டம்-2021, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட நூல்கள் விபரம், பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட இறுவெட்டுக்கள் விபரம், பண்பாட்டு ஆலோசனைக் குழு, கலைக்குரிசில் விருது, இளங்கலைஞர் விருது, சிறந்த நூற் பரிசு, புகைப்படத் தொகுப்பு ஆகிய தலைப்புகளில் ஆவணப் பதிவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 16190

**வடந்தை 2022**. அ.சண்முகதாஸ், திருமதி சி.சாந்தினி, ஜோன்சன் ராஜ்குமார் (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், 1ஆவது பதிப்பு, 2022. (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

ix, 79 + 40 பக்கம், ஒளிப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x18.5 சமீ., ISBN: 978-624-5911-20-2.

வடமாகாணத்தின் பண்பாட்டை ஆய்வுரீதியாக அடையாளப்படுத்துகின்ற பணியைச் செய்கின்ற நோக்கில் வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் ஆண்டு மலரின் 2022ஆம் ஆண்டுக்கான இதழ் இது. இவ்விதழில், வரலாற்று வழித்தடத்தில் பண்பாட்ட லுவல்கள் திணைக்களத்தின் சுவடுகள் (ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா), நவாலியூர் சோமசுந்தரப் புலவர் மரபும் நவீனமும் (சி.குருபரநாத்), கலையோடு இயைந்த வாழ்வு (கதிர்காமு ரட்ணேஸ்வரன்), மறைந்த கலைஞரின் வாழ்வியல் பற்றிய அனுபவப் பகிர்வு (ஸ்ரீ காயத்ரி இராசையா), பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கங்கள் (சி.கீதநந்தினி), நாகர் இன ஆட்சியும் (நாக) தீவகத்தில் அவர்களது பண்பாட்டுக் கூறுகளின் நீட்சியும் (காசிநாதன் நிருபா), வரலாற்றில் தொல்புரம் முத்துமாரி

அம்மன் கலைத்தேர் (வேலுப்பிள்ளை அம்பிகைபாகன்), எங்கே செல்கின்றோம்: அனுபவங்களும் அவதானிப்புகளும் (தக்ஷாயினி செல்வகுமார்), இலங்கையின் வடமாகாணத்தில் உள்ள சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தல் (ஞானப்பிரகாசம் யூட் அல்போன்ஸஸ்), யாழ்ப்பாணம் பாசையூர் பிரதேசமும் அதனுடன் இணைந்த கலைகளும் கலைஞர்களும் (யூ. மேவிஸ் ஜீன்சியா), மானிட வாழ்க்கையை அர்த்தமுடையதாக்கும் யோகக் கலை உணர்த்தி நிற்கும் வாழ்வியற் கூறுகள் (ஸ்ரீ நதிபரன்), இந்து நிர்வாகவியல் கட்டமைப்பு (கு.றஜீபன்), உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டு கழித்திருக்காது சிந்தனை செய்வோம் (அ.சிவஞானசீலன்) ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட பதின்மூன்று கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பின்னிணைப்பாக 2022ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது, இளங்கலைஞர் விருது, சிறந்த நூற்பரிசு பெறுவோர் விபரம் என்பன தரப்பட்டுள்ளன.

## 301.1 பண்பாடு

### 16191

**ஈழத்தமிழர் பண்பாட்டு ஆய்வுகள்**. சண்முகராஜா சிறிகாந்தன். யாழ்ப்பாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், 1வது பதிப்பு, 2022. (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

xvi, 239 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ., ISBN: 978-624-5911-19-6.

இந்நூலில் "நூன்முகம்" (ஈழத்தமிழர் பண்பாட்டு ஆய்வுகள்-ச.சிறிகாந்தன்), "பண்பாட்டின் வரலாற்றுத் தொன்மை" (யாழ்ப்பாணத்துக் கல்வெட்டுக்கள்: ஈழநாட்டுத் தமிழ் சாசனங்கள் - கா.இந்திரபாலா, யாழ்ப்பாணக் குடாநாட்டில் கிடைத்த நாணயங்கள் - செ.கிருஷ்ணராஜா, பூநகரி பிராந்திய தொல்லியல் மேலாய்வில் கிடைத்த தொல்பொருட் சின்னங்கள்-ஒரு வரலாற்று ஆய்வு-ப.புஷ்பரட்ணம்), "சமூகக் கட்டமைப்பின் தனித்துவங்கள்" (தமிழ்ச் சைவப் பண்பாட்டிற் செல்வச் சந்நிதியின் முக்கியத்துவம்-கா.சிவத்தம்பி, யாழ்ப்பாணத்து கிணற்றுப் பண்பாடு-அ.சண்முகதாஸ், யாழ்ப்பாணத்து மரபுவழிப் பெண்கல்வி -சபா.ஜெயராசா, நமது பண்பாட்டில் தாய்மாமனின் வகிபாகம் அல்லது அம்மானும் மாமாவும்-எஸ்.சிவலிங்கராஜா, யாழ்ப்பாணத்தில் தமிழர் உணவுப் பழக்க வழக்கங்கள்-ச.மனோன்மணி), "சமய வாழ்வியல் கோலங்கள்" (ஈழத்துத் தமிழர் கிராமியத் தெய்வ வழிபாடு- க.கணபதிப்பிள்ளை, பண்டை ஈழத்து யக்ஷ நாக வழிபாடு-க.சிற்றம்பலம், யாழ்ப்பாணத்தில் அண்ணமார் வழிபாடு-என். சண்முகலிங்கன், வல்லியக்கனும் வல்லிபுரநாதரும்-பொ.இரகுபதி), "மொழி வழக்காறுகள்" (யாழ்ப்பாணத் பேச்சுத் தமிழில் ஆக்க பெயர்கள்-சு.சுசீந்திரராஜா), "மரபுசார் நம்பிக்கைப் பயில்வுகள்" (வடமராட்சி வடக்கு கடற்கரையோர மக்களிடையே நிலவும் பிறப்புச் சடங்குகள் (மு.அம்மன்கிளி), யாழ்ப்பாணத்

தமிழரிடையே வழங்கும் சத்தியம் செய்தல் குறித்த நம்பிக்கை வழக்கங்கள்-கி. விசாகரூபன், யாழ்ப்பாணத்து அடிநிலைச் சாதிய உப பண்பாடாக பணச்சடங்கு -இ.இராஜேஸ்கண்ணன், யாழ்ப்பாணத்தின் மரணச் சடங்கில் பாடுதல் மரபும் இசையும்-தி.சதீஸ்குமார், கற்கோவள மீனவர்களின் தொழில்சார் நம்பிக்கைகள்-ச. சிறீகாந்தன்), "வெளிப்பாட்டு பண்பாட்டு கலைகள்" (ஈழத்து நாட்டுக்கூத்து மரபு-சு.வித்தியானந்தன், யாழ்ப்பாணத்தில் மூவலகு வீடு-பா.அகிலன்) ஆகிய பிரிவுகளின் கீழ் இருபது தமிழர் பண்பாடுசார் கட்டுரைகள் வகைப்படுத்தித் தரப்பட்டுள்ளன.

## 16192

**பண்பட்ட எண்ணங்கள்: பண்பாடுசார் கட்டுரைகள்.** சு.குணேஸ்வரன், க.அனுசன் (தொகுப்பாசிரியர்கள்). அல்வாய்: பாமாலயம், கவிஞர் செல்லையா வீதி, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2022. (யாழ்ப்பாணம்: ஆகாயம் பதிப்பகம், இமையாணன், உடுப்பிட்டி).

42 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

தமிழ்ச் சமூகத்தின் உணர்வையும் உயிர்ப்பையும் தக்கவைப்பனவற்றுள் பண்பாட்டுச் செயற்பாடுகளுக்கு முக்கியமானதோர் இடமுண்டு. மக்களின் மரபுவழிச் செயற்பாடுகளிலும் பண்பாட்டுக் கூறுகளிலும் புழங்கு பொருட்களிலும் அவை உயிர்ப்புடன் வாழ்கின்றன. இன்றைய இளைய தலைமுறையினர் அவற்றை அறிந்துகொள்வதற்கும் முன்னெடுத்துச் செல்வதற்கும் இக்கட்டுரைகள் ஒரு தூண்டுதலாக அமைகின்றன. இந்நூலில் தண்ணீர் (தொ.பரமசிவன்), குலதெய்வம்: இது எங்க சாமி (தொ.பரமசிவன்), தமிழர் உணவு (தொ.பரமசிவன்), பனை உணவுகள் (எஸ்.சிவலிங்கராஜா), கிழங்கு உணவுகள் (எஸ்.சிவலிங்கராஜா), சோறு விற்றல் (தொ.பரமசிவன்), உணர்வும் உப்பும் (தொ.பரமசிவன்), மகனறி தந்தை அறிவு (மனோன்மணி சண்முகதாஸ்), பேரக் குழந்தைகள் (தொ.பரமசிவன்), இறப்புச் சடங்கும் விருந்தோம்பலும் (தொ.பரமசிவன்), ஈனர்க்கு உரைத்திடில் இடரதாகுமே (மனோன்மணி சண்முகதாஸ்), கோதுபோற் போகுமுடம்பு (மனோன்மணி சண்முகதாஸ்) ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. அமரர் திருமதி துரைராசா மகேந்திரராணி (10.11.1955-05.08.2022) அவர்களின் 31ஆம் நாள் நினைவு வெளியீடாக 04.09.2022 அன்று வெளியிடப்பட்ட நூல்.

## 303.66 சமாதானம்

## 16193

**யுத்தத்தின் விலை.** இலங்கை தேசிய சமாதானப் பேரவை. கொழும்பு 6: இலங்கை தேசிய சமாதானப் பேரவை, 291/50, ஹவ்லொக் கார்டன்ஸ், 1ஆவது பதிப்பு, ஜனவரி 1998. (அச்சக விபரம் தரப்படவில்லை).

32 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

இக்கையேடு சமாதானப் பேரவையினால் "மார்க" (Marga) நிறுவனத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின் மூலமான ஆரம்பக் கண்டுபிடிப்பு களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும். பரவலான ஆய்வின் அடிப்படையில் அமைந்த முழு விபரங்களுடனான அறிக்கையொன்று 1998இன் முதற் பகுதியில் வெளியிடத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்நூலின் புகைப்படங்கள் அநுருத்த லொக்குஹப்பு ஆரச்சி அவர்களினால் எடுக்கப்பட்டவையாகும். 1998 ஜனவரி 4ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் தேசிய பேராளர் மாநாட்டில் வெளியிடப்பட்டது. 1986-96 காலகட்டத்தின் போது அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் ஏற்பட்ட நேரடிச் செலவீனங்கள் 1996 விலைகளின் பிரகாரம் 228 பில்லியன் ரூபாவாகும். யுத்தத்தில் ஈடுபட்டுள்ளோர் ஒருவர் மீதொருவர் மரணத்தையும் அழிவையும் கொண்டுவருவதற்கான ஆற்றல்களை நிலைபெறச் செய்வதற்காக சகல இலங்கை மக்களும் தாங்கள் சுமக்கவேண்டிய கடன்சுமையை இது தெளிவாகக் காட்டுகின்றது.

## 305.4 பெண்கள், பெண்ணியம், பெண்ணிலைவாதம்

### 16194

**21ஆம் நூற்றாண்டில் மலையகப் பெண்கள்: சவால்களும் சந்தர்ப்பங்களும்.** *புளொரிடா சிமியோன் (மூலம்), தை.தனராஜ் (பதிப்பாசிரியர்). கொழும்பு 5: எம்.வாமதேவன், அமரர் இர.சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு, மனிங் டவுன், மங்கள வீதி, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2018. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).*

*42 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15 சமீ.*

*08.09.2018 அன்று நிகழ்த்தப்பட்ட அமரர் இர.சிவலிங்கம் ஞாபகார்த்த பத்தொன்பதாவது நினைவுப் பேருரை. இவ்வுரையை நிகழ்த்திய செல்வி புளொரிடா சிமியோன் பதுளை மாவட்டத்தின் மடுல்சீமை பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது ஆரம்பக் கல்வியை மடுல்சீமை தமிழ் மகா வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை பூண்டுலோயா கந்தசாமி மத்திய கல்லூரியிலும் பெற்றுக் கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியலை சிறப்புப் பாடமாகக் கற்று முதல் வகுப்பில் சித்தியடைந்து தற்போது அதே பல்கலைக் கழகத்தில் அரசறிவியல் துறையில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார். தமிழ்ப் பெண்களின் குறிப்பாக பெருந்தோட்டப் பெண்களின் அரசியல் சமூக பொருளாதாரப் பிரச்சினை தொடர்பான ஆய்வுகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டுவருகிறார்.*

## 16195

**உறுதிகொண்ட நெஞ்சினாள்.** *ஹம்சகௌரி சிவஜோதி. லண்டன்* IG5 0RB: *தேசம் பதிப்பகம்,* 225, Fullwell Avenue, Clayhall, Illford, *1ஆவது பதிப்பு, நவம்பர் 2022. (யாழ்ப்பாணம்: ஜே.ஆர். இன்டஸ்ட்ரீஸ், இல. 7, உடுவில் மகளிர் கல்லூரி மேற்குத் தெரு, உடுவில்).*

*(12), 114 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21*x*14.5 சமீ.*

*கிளிநொச்சி லிற்றில் எயிட்* (Little Aid) *திறன் விருத்தி மையத்தின் இயக்குநராகப் பணியாற்றும் ஹம்சகௌரி இலங்கையின் சமகால தமிழ்ப் பெண் ஆளுமைகளைப் பற்றிய நேர்காணல்களையும், கட்டுரைகளையும் இந்நூலில் தொகுத்துத் தந்துள்ளார். செல்வி திருச்சந்திரன் (பெண்ணியவாதி), ஜெயா மாணிக்கவாசகன் (கல்வித்துறை), தாமரைச்செல்வி (இலக்கியவாதி), பிரேமளா சிவசேகரம் (இலங்கையின் முதலாவது பெண் பொறியியலாளர்), சசிகலா குகமூர்த்தி (கல்வியியலாளர்), பார்வதி சிவபாதம் (கலைஞர்), கலாலக்ஷ்மி தேவராஜா (அரங்கச் செயற்பாட்டாளர்), அகிலத்திருநாயகி சிறிசெயானந்தபவன் (விளையாட்டுத்துறை வீராங்கனை), வலன்ரீனா இளங்கோவன் (கல்வித்துறை), நாகம்மா செல்லமுத்து (அரசியல்வாதி) ஆகிய ஆளுமைகள் பற்றிய தனது பார்வையை இந்நூலில் ஹம்சகௌரி பதிவுசெய்திருக்கிறார்.*

## 16196

**நிலைமாறுகின்ற வாழ்க்கை.** *சேபாலி கோட்டேகொட, ரமணி ஜயசுந்தர, சுமிக்கா பெரேரா, பத்மா அத்தபத்து (ஆங்கில மூலம்), றொபேர்ட் வேதநாயகம், குகநிதி குகநேசன் (தமிழாக்கம்). கொழும்பு 8: பெண்கள் ஊடகக் கூட்டமைப்பு, 56/1, சரசவி ஒழுங்கை, காசல் வீதி, 1ஆவது பதிப்பு, மார்கழி 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

vi, *7-100 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5*x*15.5 சமீ.,* ISBN: *978-955-1170-13-6.*

*நாடு திரும்பிய இலங்கைப் புலம்பெயர் பெண் தொழிலாளருக்குச் செவிமடுத்தல் என்ற கருப்பொருளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு இதுவாகும். இவ்வாய்வு, நாடு திரும்பிய முப்பது புலம்பெயர் பெண்களில் கவனஞ்செலுத்துகின்றது. திரும்பிவரும் பெண் தொழிலாளர் மீண்டும் நிலையான வாழ்க்கையை மேற் கொள்வதிலும் சமூகத்துடன் ஒருங்கிணைவதிலும் உள்ள பிரச்சினைகளையும் வாய்ப்புக்களையும் இந்த ஆய்வு இனங்காண முயற்சிசெய்கிறது. திரும்பி வருதலும் மீள் ஒருங்கிணைப்பும் அவர்களின் சொந்தப் பண்புகளையும் அவர்களின் குடும்பங்களினதும் சன சமூகங்களினதும் சமூக-பொருளாதாரச் சூழ்நிலைகளையும் பொறுத்துத் திரும்பி வருபவர்களின் வெவ்வேறு குழுக்களுக்கிடையே பரந்தளவில் வேறுபடுகின்றதென்ற முடிபை இந்த ஆய்வு கண்டடைந்துள்ளது. திரும்பிவரும் புலம்பெயர் தொழிலாளர்களின் மீள் ஒருங்கிணைப்புப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை இந்த ஆய்வு முனைப்படுத்திக் காட்டு கின்றது. அறிமுகம்-இலங்கையிலிருந்து கடல் கடந்த தொழிலுக்கான புலப்பெயர்வு/*

நாடு திரும்பிய 30 புலம்பெயர் பெண் தொழிலாளர்/ பிரதம வருமானம் ஈட்டுநராக ஒருவர் தம்மையே இனம்காணுதல்/ குடும்பங்களில் பால்நிலைத் தொடர்புகளை மீளத் தீர்மானித்தல்/ முடிபுகள் ஆகிய பிரதானமான ஐந்து பிரிவுகளின்கீழ் எழுதப்பட்டுள்ள இவ்வாய்வறிக்கையின் இறுதியில் கதைகள், கேள்விக்கொத்து, வரைபடங்கள், அட்டவணைகள், விளக்கப்படங்கள் என்பனவும் இடம் பெற்றுள்ளன.

## 16197

**மாற்றங்களின் முகப்புகள்: இலங்கையில் பெண்கள் 1986-1995.** சிவா சுப்பிரமணியம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 5: பெண்கள் ஆராய்ச்சி நிலையம், CENWOR, 225/4, கிருள வீதி, 1ஆவது பதிப்பு, ஜுலை 1995. (கொழும்பு 6: வின்னர்ஸ் அச்சகம், 30, நிஹால் சில்வா மாவத்தை, கிரிலப்பனை).

(6), 579 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23x15 சமீ., ISBN: 955-9052-49-7.

இலங்கையில் பெண்கள் பற்றிய 15 ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு. அறிமுகம் (சுவர்ணா ஜெயவீர), சட்டத்தின் மூலம் பாலியல் நியாயத்தை நிலைநாட்டுதல்: நைரோபி தசாப்தத்தையடுத்த காலப்பகுதியில் இலங்கையின் அனுபவம் (சாவித்திரி குணசேகர), பெண்களின் சுகாதாரமும் போஷாக்கு நிலையும் (பிறியானி ஈ.சொய்சா), பெண்களும் கல்வியும் (சுவர்ணா ஜெயவீர), விஞ்ஞான தொழில்நுட்ப துறைகளில் பெண்கள் (நிமலா ஆர். அமரசூரிய), பெண்களும் தொழிலும் (சுவர்ணா ஜெயவீர), இலங்கையிலிருந்து குடிபெயர்ந்த வீட்டுப் பணிப்பெண்கள்: போக்கும் பிரச்சினைகளும் (மல்சிறி டயஸ், நேத்திரா வீரக்கோன்), இலங்கையில் பெண்களின் அரசியல் பங்களிப்பு 1985-1995 (விமலா டீ சில்வா), சமூகச் செயற் பாட்டில் பெண்களின் சேவையாற்றுகை (கமலா பீரிஸ்), பெண்களுக்கெதிரான வன்முறைகள்: ஒரு தசாப்தத்தின் மீளாய்வு (சுவர்ணா ஜயவீர), பெண்களும் சூழலும் - நைரோபிக்குப் பிற்பட்ட ஆண்டுகள் (காமினி மீதெனிய விதாரண), ஆய்வும் தகவல்களும் (லீலாங்கி வணசுந்தர), பெண்களும் வெகுஜனத் தொடர்பு சாதனங்களும்- ஸ்ரீலங்கா: நைரோபியிலிருந்து பெய்ஜிங் வரை (சுனிலா அபயசேகர), இலங்கையில் பெண்கள் இயக்கம்: பத்தாண்டுக் காலம் பின்நோக்கிய பார்வை (குமாரி ஜயவர்தன), பொருளாதார ரீதியில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களின் உணர்வுகள் (சுவர்ணா ஜெயவீர) ஆகிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இவற்றை அ.சிவராஜா, ரி.சபாரத்தினம், எஸ்.மாணிக்கராஜா, பீ.குலசிங்கம், பத்மா சபாரத்தினம், தவமணி சிவரத்தினம், என்.சிதம்பரநாதன், பி.சிவகுருநாதன் ஆகியோர் தமிழாக்கம் செய்துள்ளனர்.

## 16198

**மின்னும் தாரகைகள்: இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய ஆய்வு.** நூருல் அயின் நஜ்முல் ஹுசைன். பத்தரமுல்லை: சல்மா பதிப்பகம், "சிமாக் மஹால்", இல. 3, ரிச்சார்ட் டீ சொய்சா ஊடகவியலாளர் வீடமைப்புத் திட்டம், 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2018. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*(4), 456 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 1000., அளவு: 22.5x15.5 சமீ.,* ISBN: *978-955-3694-01-0.*

*கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் கடந்த 40 ஆண்டுகளாக இலங்கையின் ஊடகத்துறையில் உலாவருபவர். வானொலியில் அறிமுகமாகி, பத்திரிகைத்துறையில் காலூன்றியவர். அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடந்த 20 ஆண்டுகளாகப் பணியாற்றி வருபவர். தமிழ், ஆங்கிலம், சிங்களம் என மும்மொழிகளிலும் படைப்பாற்றல் பெற்றிருந்த முஸ்லிம் பெண்களை, சிறுகதை-கவிதை-புதினம்-கட்டுரை எனப் பல்வேறு தளங்களிலும் சுவடுகள் பதித்துள்ள ஆளுமை பெற்றிருந்தும் பெரும்பாலும் இலை மறை காய்களாகவிருந்த ஏராளமான முஸ்லிம் பெண்களை இந்நூலில் பெருஞ் சிரத்தையுடன் ஆவணப்படுத்தியிருக்கிறார்.*

மேலும் பார்க்க:
திருமறையின் வரலாற்றில் இடம்பிடித்த பெண்கள். 16070

## 305.4(5) பெண்ணியம் சார்ந்த ஆய்விதழ்கள்/சிறப்பிதழ்கள்

### 16199

**நிவேதினி: பால்நிலைக் கற்கை நெறிச் சஞ்சிகை: இதழ் 17 (2017).** செல்வி திருச்சந்திரன் (இதழாசிரியர்). கொழும்பு 6: பெண்கள் கல்வி, ஆய்வு நிறுவனம், *58 தர்மராம வீதி, 1ஆவது பதிப்பு, 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

x, *84 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15.5 சமீ.,* ISSN: *1391-0027.*

*இதழாசிரியரின் முன்னுரையுடன் தொடங்கும் இவ்விதழில் இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம்-சட்ட மறுமொழி (கோசலை மதன்), தீவிரவாதப் பெண்ணிலைவாதமும் நடைமுறை சாத்தியப்பாடும் (நிரஞ்சினி திரவியராசா), பெண் கலைஞர்களின் கலை வெளிப்பாடுகளில் அகவன் மகளுக்கான இடம்: சங்க இலக்கியங்களை மையப்படுத்திய ஆய்வு (வானதி பகீரதன்), பெண்நிலை நோக்கில் ஒரு கட்டவிழ்ப்பு முயற்சி (சந்திரசேகரன் சசிதரன்), அப்போதைய சமூக மையத்தில் பௌத்த-இந்து-முஸ்லிம் பெண் சமயக் குரவர்களின் சமூகநிலையும் எதிர்நிலை நோக்கும் (லறீனா அப்துல் ஹக்), கருகிய கவிதை (சுகுமாரன்), பெண்களின் சுயம் அறிதல் (எம்.எஸ்.தேவகௌரி), வீட்டிலிருந்து விரியும் வெளிகள்- ஈழத்துப் பெண்களின் தமிழ்க் கவிதைகளை முன்வைத்து (எஸ்.ஆன் யாழினி) ஆகிய எட்டு ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. செல்வி திருச்சந்திரனை பிரதம ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இவ்விதழின் உதவி ஆசிரியராக ஜெயமாலா சிவச்செல்வம் இயங்கியுள்ளார். ஆசிரியர் குழுவில், தேவகௌரி சுரேந்திரன், மகேஸ்வரி வைரமுத்து, நீலா தயாபரன், ஆனந்தி சண்முகசுந்தரம், வசந்தி தயாபரன், லறீனா ஹக், வ.மகேஸ்வரன், எஸ்.யோகராஜா, நதீரா மரியசந்தனம் ஆகியோர் இயங்குகின்றனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 67873).*

## 16200

**நிவேதினி: பால்நிலைக் கற்கை நெறிச் சஞ்சிகை: இதழ் 18 (2018-2019).** செல்வி திருச்சந்திரன் (இதழாசிரியர்). கொழும்பு 6: பெண்கள் கல்வி, ஆய்வு நிறுவனம், 58 தர்மராம வீதி, 1ஆவது பதிப்பு, 2019. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

v, (3), 113 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15.5 சமீ., ISSN: 1391-0027.

இதழாசிரியரின் முகவுரையுடன் தொடங்கும் இவ்விதழில் எட்டு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. மொழிக் கட்டமைப்பில் பெண்-அன்றும் இன்றும் (விஜிதா திவாகரன்), பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் (பகீரதி மோசேஸ்), பறை-நீதிக்கான பறை: பெண்நிலைவாதிகளாகப் பறையறை வோரின் ஓர் அனுபவம் (க.நிரோஷினிதேவி, த.கார்த்திகா), பாலியல்சார் வீட்டு வன்முறைகளின் பாதிப்பு-இலங்கை, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏறாவூர்ப் பற்று பிரதேச சபையினை குறித்த கள ஆய்வு (கென்னடி ஜி.டெசீனா, சு. சுஜேந்திரன்), வீட்டு வன்முறைக்குள்ளான பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சி னைகள்: ஒரு சமூகவியல் ஆய்வு-கருவப்பங்கேணி கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு (சந்திரசேகரன் சசிதரன்), பெண்ணிலைவாத அரங்கச் செயற்பாடு களும் அதனுடன் இணைந்த கலைகளின் வகிபாகமும்-ஓர் ஆய்வு (து.கௌரீசன்), பால்நிலை பகுப்பாய்வு-1: கொக்கிளாய் கடனீரேரி பிராந்தியம் (பகீரதி ஜுவேஸ்வரா ராசனன்), கிரேக்க சிந்தனையில் பெண்மை-ஒரு மெய்யியல் நோக்கு (இ.பிரேம் குமார்) ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. நிவேதினி இதழின் உதவி ஆசிரியராக ஜெயமாலா சிவச்செல்வம் பணியாற்றியுள்ளார். ஆசிரியர் குழுவில் தேவகௌரி சுரேந்திரன், மகேஸ்வரி வைரமுத்து, நீலா தயாபரன், ஆனந்தி சண்முகசுந்தரம், வசந்தி தயா பரன், லறீனா ஹக், வ. மகேஸ்வரன், எஸ்.யோகராஜா, நதீரா மரியசந்தனம்ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.

## 16201

**நிவேதினி: பால்நிலைக் கற்கை நெறிச் சஞ்சிகை: இதழ் 19 (2020-2021).** செல்வி திருச்சந்திரன் (இதழாசிரியர்). கொழும்பு 6: பெண்கள் கல்வி, ஆய்வு நிறுவனம், 58 தர்மராம வீதி, 1ஆவது பதிப்பு, 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

(6), 88 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15.5 சமீ., ISSN: 1391-0027.

இதழாசிரியரின் முன்னுரையுடன் தொடங்கும் இவ்விதழில் ஆறு கட்டுரைகளும் ஒரு கவிதையும், நிவேதினி பற்றிய மதிப்புரையும் இடம்பெற்றுள்ளன. கல்வி, சட்டம், திரைப்படம், ஒரு மாற்றுப் பெண் குரல் ஆகிய கருப்பொருள்களை இவ்வாக்கங்கள் கொண்டுள்ளன. ஆண்மைய தாழ்வு மனப்பான்மை/சிக்கல் (செல்வி திருச்சந்திரன்), தேசவழமைச் சட்டத்தின் கீழான "கணவனது திருமண அதிகாரம்" தமிழர்களின் உள்ளார்ந்த வழக்காற்று முறையாகக் கொள்ளப்பட

வேண்டியதா? (புராதனி மதனரஞ்சன்), பெண் சிறுவரது கல்வியில் பொருளாதாரம் ஏற்படுத்தும் தாக்கங்கள்: மட்டக்களப்பு மாவட்ட படுவான்கரை கிராமிய சமூகங் களை மையமாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு (பகீரதி மோசேஸ்), அரவாணிகள் (நடராஜா பார்த்தீபன்), ஒரு கைம்பெண் கவிதை, சபிகா சுமர்: சமூக அசைவாக்கமே எனது திரைப்படத்தின் நோக்கம் (ஜி.டி.கேதாரநாதன்), அஸ்மா பர்லாஸ்: ஒரு மாற்றுப் பெண் குரல் (லறீனா ஹக்), நிவேதினி: பால்நிலைக் கற்கை நெறிச் சஞ்சிகை- ஒரு மதிப்புரை (சோ.சந்திரசேகரன்) ஆகிய தலைப்புகளில் இவ் வாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. செல்வி திருச்சந்திரனை பிரதம ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இவ்விதழின் உதவி ஆசிரியராக ஜெயமாலா சிவச்செல்வம் இயங்கியுள்ளார். ஆசிரியர் குழுவில், தேவகௌரி சுரேந்திரன், வசந்தி தயாபரன், லறீனா ஹக், வ.மகேஸ்வரன், எஸ்.யோகராஜா ஆகியோர் இயங்கியுள்ளனர்.

## 305.489 மூன்றாம் பாலினம்

### 16202

**அரிக்கன் லாம்பு: ஒரு திருநங்கையின் வாழ்க்கைப் பயணம்.** *ஈழநிலா. கனடா: படைப்பாளிகள் உலகம், இணை வெளியீடு, யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 672*B*, காங்கேசன்துறை வீதி, 1ஆவது பதிப்பு, 2021. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 672*B*, காங்கேசன்துறை வீதி).*

xii, *163 பக்கம், விலை: ரூபா 780., அளவு: 21*x*15 சமீ.,* ISBN: *978-624-5786-08-4.*

*மூன்றாம் பாலினம் என விஞ்ஞான பூர்வ அர்த்தமற்ற ஒரு வகைக்குள் நம்மால் சுருக்கப்படும் சகோதரர்களின் வலியை, வனப்பை, அழுகையை, அவலத்தை, அறச் சீற்றத்தை, அரிக்கன்லாம்பு எமக்குத் தன் அரைகுறை வெளிச்சத்தில் முழுமையிட எத்தனிக்கின்றது. அரிக்கன் லாம்பு இலங்கையில் தமிழ் பேசும் ஒரு திருநங்கையின் தன்வரலாறு கூறும் நூல். சமூகத்தின் ஒடுக்கு முறைகள், பாலியல் சுரண்டல்கள் தன்னை பெண்ணாக பரிணமித்துக் கொள்ளலில் உண்டான வலிகள், மதங்களின் சீண்டல்கள், தன் குறியினை அறுத்து பெண்ணாக புதுப் பிறப்படைதலில் உண்டான புதுமையான சடங்குகள் என்று ஒரு மாறுபட்ட உலகை காண்பிக்கும் இந்நூல் ஒரு திருநங்கையின் உண்மை முகத்தை கண்டு கொள்ள உதவும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஒரு வலியின் சத்திய வாக்குமூலமாகவுள்ள அரிக்கன் லாம்பின் வெளிச்சமும் அது களைய எத்தனிக்கும் இருளும் ஒன்றும் புதிதல்ல. இருந்தும் அதிகம் கூர்ந்து பார்க்காத, நினைக்காத புதிய உலகமொன்றின் தரிசிப்பை ஈழநிலாவின் அரிக்கன்லாம்பு வாசகருக்கு வழங்குகின்றது.*

### 16203

**தனுஜா: ஈழத் திருநங்கையின் பயணமும் போராட்டமும்.** *தனுஜா சிங்கம் (மூலம்), ஷோபாசக்தி (பதிப்பாசிரியர்). சென்னை 600 005: கருப்புப் பிரதிகள், பி 55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2020. (சென்னை 600005: ஜோதி என்டர்பிரைசஸ்).*

*352 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 330.00, அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *978-81-943310-6-3.*

*ஈழத்தில் பிறந்த திருநங்கைகளிலே முதன்முதலாக தன் வரலாற்றை வெளிப்படையாக எழுதும் வாய்ப்பும் சூழலும் அமையப்பெற்றவர் தனுஜா. இந்நூலில் யுத்த காலம், ஆயிரம் மின்மினிகள், மாமதுரை போற்றுதும், அப்பாவின் வருகை, முதற் பலி, சிங்காரச் சென்னை, முதற்காதல், கொழும்பு, அம்மாவின் வருகை, பாலியல் வன்புணர்வு, யாழ்ப்பாணம்,* Willkommen, *இணைய வலை, காட்டுவாசியும் ஹிப்ஹொப்பும், முப்பது மாத்திரைகள், பாலினத் தேடல், மாயப்பொறி, புதிய பாடசாலை, கார்ஸ்டனும் முராட்டும், கள்வனின் காதலி, ஹோர்மோன் மாயம், இரு சகோதரர்கள், திருநங்கைகள் சந்திப்பு, புதிய அம்மா, இணையச் சர்ச்சை, தேர்த்திருவிழா, ஹொலண்ட், தாலி பாக்கியம், முதலாவது கோப்பை, காதல் சமர், தட்டினேன் திறக்கப்பட்டது, புனித நிர்வாணம், காமினி சித்தி, மஞ்சள் நீராட்டு, ஓரிரவுக் காமம், ஓயாத போராட்டம், ஜீவன், சூரிச்சை நோக்கி, மோனா குரு, தமிழ் டிஸ்கோ, என்னை அறிதல், நட்சத்திர நாயகிகள், தனிக்குடித்தனம், மரணவாசல், பட்டகால், ரபீக், யாழ் நங்கைகள், சினிமாக்காதலர், தாய்லாந்து, கனடா, நவரச நாயகன், கனவு மனிதன், பாரிஸ் நாட்கள், மாமியார் வீடு, துன்பத்துப் பால், கூறைச்சேலை, சட்டப்படியும் பெண், ஆதித்தொழில், ஐயர் என்ற சாவித்திரி, காணிவேல், நேர்முகத்தேர்வு, மறுபடியும் சுவிஸ், மகாராணி, அழுகளம், மீண்டும் தமிழகம், வழிகாட்டிகள், தாய்மண்ணில், மாதவம் ஆகிய 37 அத்தியாயங்களில் தனுஜாவின் தன்வரலாறு எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 68884).*

## 305.5 சாதியம்

### 16204

**எழுவோம் நிமிர்வோம் திரள்வோம் (சமூக ஆய்வு).** ஏ.ஜீ.யோகராஜா. சென்னை *600 086: சிந்தனை புக்ஸ், 132/251, அவ்வை சண்முகம் சாலை, கோபாலபுரம், 1ஆவது பதிப்பு, ஜனவரி 2020. (சென்னை: ஜெம் கிராப்பிக்ஸ்).*

*104 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x13 சமீ.*

*மொழியதிகாரத்துவத்தின் பிடியிலிருந்து விடுபடல், யாழ்ப்பாணத்துப் பின்நிலைச் சமூகம்: தோற்றத்துக்கான ஊற்றுவாய்-சாதியமைப்பும் பின்நிலைச் சமூகமும், சமூக சமத்துவம்: அடுத்தகட்ட நகர்வு குறித்த முன்வரைவு, முந்தைய முயற்சிகளின் இன்றைய தொடர்ச்சியாக, விளிம்புநிலைச் சமூகங்கள், சிறந்த படிப்பினைகளாக, உன்னையே நீ அறிவாய், யாழ்ப்பாண மண் கற்பாறைகளால் ஆனபோதும் நிலத்தடி நீர் இன்னும் ஓடிக்கொண்டுதானிருக்கிறது, சமூக சக்திகளுக்கான அறம்சார் கடமைகள், முன்னிலைச் சமூக சக்திகளை நோக்கி: விளிம்புநிலைச் சமூகங்களின் உளவியலைப் புரிந்துகொள்ளல், சமூக சமத்துவத்தை நோக்கிய பயணத்திற் சாதியத்தின் குறுக்கீடு, மூன்று முக்கிய சொல்லாடல்கள், விளிம்புநிலைச்*

*சமூகங்கள் புரிந்திருக்கவேண்டிய சமூக நுண்ணரசியல், சமூக சமத்துவத்தை நோக்கிய பயணத்தில் விளிம்புநிலைச் சமூகங்களின் நடைமுறைச் செயற்பாடுகள் மற்றும் எதிர்கால வேலைத்திட்டங்கள் குறித்து, சமூக சமத்துவத்தை நோக்கிய பயணத்தில் வெளியார்த்த புறவயச் செயற்பாடு: தீர்வை நோக்கித் திரள்தல் ஆகிய 15 அத்தியாயங்களின் வாயிலாக சமூக சமத்துவம் பற்றி விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது.*

மேலும் பார்க்க:

இலங்கைத் திணை அரசியலில் வர்க்கப் போராட்டம். 16207

## 306.85 குடும்பம்

மேலும் பார்க்க:

இல்லற நொண்டி. 16478

## 320 அரசறிவியல் (குடியியல்)

### 16205

**இலங்கையின் அரசியல் முறைமை.** *முகுசீன் றயீசுத்தீன்* (Muhuseen Raisudeen). *சிலாவத்துறை: முசலி இளைஞர் ஒன்றியம், முசலி, 1ஆவது பதிப்பு, ஜுலை 2014. (கஹடோவிட்ட: எம்.எஸ்.எம்.சினான்).*

x, *197 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5*x*15 சமீ.*, ISBN: *978-955-7555-00-3.*

*இந்நூல் இலங்கையின் அரசியல் வரலாற்றுப் படிமுறையை ஒரு சீரான முறையில் விளக்குவதுடன் தற்கால அரசியல் விவகாரங்களை அதிகளவு விமர்சனரீதியாக ஆராய்கின்றது. அரசியல் சூழ்நிலைகளை தெளிவாக வெளிக்காட்டுவதுடன் அரசியல் விஞ்ஞானக் கற்கையில் ஈடுபடுபவர்களுக்கும் குறிப்பாக க.பொ.த. (உயர்தர) அரசியல் விஞ்ஞான பாடத்திட்டத்தின் பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கும் உதவும் நோக்கை மையமாகக் கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இதில் அரசியல் விஞ்ஞானக் கற்றல்-கற்பித்தல், பரீட்சை மதிப்பீடு, பத்திரிகைத்துறை என்பவற்றின் மூலம் ஆசிரியர் பெற்றுக்கொண்ட அறிவும் அனுபவங்களும் பகிர்ந்துகொள்ளப்பட்டுள்ளன. இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சி, டொனமூர் அரசியல் திட்டம்-1931, சோல்பரி அரசியல் திட்டம்-1947, முதலாம் குடியரசு அரசியலமைப்பு-1972, இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு-1978 ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60695).*

## 320.1 சமகால அரசியல் கட்டுரைகள், ஆய்வுகள்

### 16206

**அரபு வசந்தம்.** சி.பிரசாத். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1ஆவது பதிப்பு, 2015. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

xii, 96 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-685-031-4.

"அரபு வசந்தம்" என்னும் அரபுப் புரட்சி பற்றிய மக்கள் திரள் அரசியலை தெளிவு படுத்தும் நோக்கில் இந்நூல் வெளிவந்துள்ளது. சர்வதேச அரசியல் விவகாரங்களில் மாணவர்கள் அதிகம் நாட்டம் கொள்ளத் தூண்டும் வகையில் இந்நூல் வெளியிடப் பட்டுள்ளது. அரபு வசந்தம் பற்றிய ஓர் அறிமுகம் முதலாவது இயலில் தரப் பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து புரட்சி இடம்பெற்ற அரபு நாடுகள் பற்றி தனித்தனி இயல்களிலும் விளக்கப்பட்டுள்ளது. துனீசியா, எகிப்து, லிபியா, சிரியா, பஹ்ரைன், ஏமன், மொராக்கோ, ஜோர்டான், அல்ஜீரியா, சூடான், ஓமான், சவுதி அரேபியா, ஈராக், சோமாலியா ஆகிய நாடுகளில் அரபு வசந்தம் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டதென்பதை விளக்கியிருக்கிறார். தொடர்ந்து புரட்சியின் தாக்கத்துக்கு உள்ளாகிய பிற நாடுகளாக சீனா, அமெரிக்கா, மாலைதீவு ஆகிய நாடுகளின் நிலை பற்றி விளக்கமளிக்கின்றார். தொடர்ந்து புரட்சியின் பின்புலம் பற்றி விளக்குகையில் நேரடியான காரணிகளையும் மறைமுகக் காரணிகளையும் தெளிவுபடுத்துகின்றார். புரட்சியின் விளைவு பற்றிய இயலில் அரசியல் விளைவு, சமூக விளைவு, பொருளாதார விளைவு, சமய நிலை, ஏகாதிபத்திய நலன், ஜனநாயக விழுமியங்கள் என்பவற்றினையும் விளக்குகின்றார். இந்த வகையில், இந்நூல் அரபு வசந்தம் மற்றும் அதன் எழுச்சிக்கு காரணமான அரபு மக்களின் பிரச்சினைகள் என்பவற்றை தெளிவுபடுத்துவதோடு, புரட்சி ஏற்பட்ட நாடுகளில் அரசியல், சமூக பொருளாதார ரீதியாக ஏற்பட்ட விளைவுகளையும் மதிப்பீடு செய்கின்றது. இம்மதிப்பீடு புரட்சியின் விளைவுகள் குறித்த ஒரு பொதுவான கற்கைக்கு எம்மை இட்டுச் செல்கின்றது. சிறீரங்கன் பிரசாத் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறையில் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றவர். யாழ்.பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் உதவி விரிவுரை யாளராகவும், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70224).

### 16207

**இலங்கைத் திணை அரசியலில் வர்க்கப் போராட்டம்.** ந.இரவீந்திரன். கொழும்பு: சமூக விழிப்புணர்வுக்கான அமைப்பு, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2019. (வவுனியா: அகரம் பிரின்டர்ஸ், 54, கந்தசாமி கோயில் வீதி, வவுனியா).

xiii, 87 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-41109-4-6.

கலாநிதி ந.இரவீந்திரனின் இந்நூல் சாதியத் தகர்ப்பு, தேசிய இன விடுதலை, மத அடிப்படைவாதங்களை முறியடித்தல் என்பனவற்றைப் பற்றிப் பேசுகின்றது.

இலங்கைத் திணை அரசியலில் வர்க்கப் போராட்டம், இன்றைய உலக நிலவரமும் இலங்கை அரசியலும், தேசிய இன முரண்பாடுகள், மத அடிப்படை வாதங்கள், சாதியம், அடையாள அரசியல், திணை அரசியல்: சமூக சக்திகளும் வர்க்கப் போராட்டமும், உலகப் புரட்சி: செய்தக்க அல்ல செய்தலின் கேடுகள், தக்கன பிழைக்கும்: பொருளியலில் தீர்க்க தரிசனமும் மானுடம் பேணுதலில் கரிசனமும் ஆகிய அத்தியாயங்களின் கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 16208

**ஈழத் தமிழ் மக்கள் போராட்டங்கள்: மார்க்சியப் பார்வை.** சிறிதுங்க ஜயசூரிய (தொகுப்பாசிரியர்). கொழும்பு 5: செந்தாரகை பதிப்பு, ஐக்கிய சோசலிச கட்சி, இல. 53/6, E.D. Dhabare Mawathe, நாரஹேன்பிட்டிய, 1ஆவது பதிப்பு, மே 2019. (பத்தரமுல்ல: நெப்டியூன் அச்சகம், இல. 302, பஹலவெல வீதி, பெலவத்த).

220 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-52663-1-4.

முள்ளிவாய்க்கால் படுகொலை நிகழ்ந்து பத்து வருடங்கள் முடிந்துவிட்ட நிலையில் வெளிவந்துள்ள இந்நூலில் கடந்த பத்து வருடங்களில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட நெருக்கடிகளுக்கு எதிராக ஐக்கிய சோசலிசக் கட்சியால் நடத்தப்பட்ட பல்வேறு போராட்ட நடவடிக்கைகளை முன்நிறுத்தி கட்சியின் அதிகாரபூர்வ பத்திரிகையான "செந்தாரகை"யில் வெளியான தேர்ந்த ஐம்பத்தி இரண்டு கட்டுரைளின் தொகுப்பு. மார்க்சியத்தை வெற்றுக் கோட்பாடாகப் பார்க்காமல் செயன்முறையில் எவ்வாறு அதனை அமுல்படுத்துவது என்பதை ஒரு அமைப்பு முன்வைக்கும் கருத்துக்கள் மற்றும் திட்டமிடல்களில் பார்க்கலாம். ஒரு புரட்சிகர அமைப்பு ஒவ்வொரு காலகட்டத்திலும் தேசியப் பிரச்சினை சார்ந்த விடயங்களை எவ்வாறு அணுகியுள்ளது என்பதை இந்த நூலில் பார்க்கலாம். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டங்கள் வழங்கும் படிப்பினைகள் என்ன- நடந்தவை என்ன- நாம் செய்யவேண்டியவை என்ன என்பவை பற்றிய சிறந்த உரையாடலைத் தொடங்கி வைக்க இந்த நூல் உதவுகின்றது.

## 16209

**எதிர்ப்பரசியல்.** ரூபன் சிவராஜா. சென்னை 600 042: யாவரும் பப்ளிஷர்ஸ், 24, Shop No B, S.G.P. Naidu Complex, தண்டீஸ்வரம் பஸ் தரிப்பு, பாரதியார் பூங்காவுக்கு எதிராக, வேளச்சேரி பிரதான சாலை, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2023. (சென்னை 600 042: யாவரும் பதிப்பகம்).

362 பக்கம், ஒளிப்படங்கள், விலை: இந்திய ரூபா 450., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-92876-45-5.

1993இல் தனது 14ஆவது வயதில் நோர்வேக்குப் புலம்பெயர்ந்தவர் ரூபன் சிவராஜா. கட்டுரைகள், கவிதைகள், மொழிபெயர்ப்பு முயற்சிகள், நாடகம் மற்றும் ஊடகத் தளங்களில் இயங்கிவருபவர். அரசியல், சமூகம், கலை, இலக்கியம் சார்ந்து தொடர்ச்சியாக இயங்கிவருகின்றார். "எதிர்ப்பரசியல்" கட்டுரைத் தொகுதி இவரது நான்காவது நூலாகும். இவரது கட்டுரைகளில் தன்னை ஒரு பத்திரிகையாளராக நிலைநிறுத்தி உலக அரசியல் நிகழ்வுகளைத் தரவுகளால் அடுக்கி, சொல்லவேண்டிய

*கருத்துக்களை நேரடியாகவும் வலிந்து எதனையும் சேர்க்காமலும் அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவைக்கின்றார். உலகம்-ஐரோப்பா-அகதிகளின் கடல் வழிப் பயணம், விக்கிலீக்ஸ்-ஜுலியன் அசாஞ்-அம்பலப்படுத்தல்கள், உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பு, கியூபா, பொருள்முதல்வாத உலகும் சூழலியற் பேரழிவும், சீனா, நோர்வே, கொரோனாப் பெருந்தொற்றும் பேரிடரும், மியான்மார், முகநூல் மற்றும் கூகிள், ஆப்கானிஸ்தான்-ஈரான்-சிரியா-துருக்கி-குர்திஸ்தான், பலஸ்தீனம், இலங்கைத்தீவு ஆகிய பிரிவுகளின் கீழ் தனது கட்டுரைகளை வகைப்படுத்தித் தந்துள்ளார்.*

### 16210

**தமிழீழப் புரட்டு.** *எம்.ஆர்.ஸ்ராலின். பிரான்ஸ்: எக்சில் வெளியீடு, 5,* Rue Arthur Rimbaud, 77680, Roissy-en-Brie, *1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2011. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*152 பக்கம், விலை: இந்திய ரூபா 100.00, அளவு: 20.5*x*13.5 சமீ.*

*எக்சில் சஞ்சிகையில் வெளிவந்த ஆசிரியரின் கட்டுரைகளின் தொகுப்பு. எம்.ஆர்.ஸ்ராலின், கிழக்கு மாகாணத்தின் தனித்துவத்திற்காகவும், தமிழ்-முஸ்லிம் மக்களின் நல்லுறவுக்காகவும் குரல் எழுப்பி வருபவர். தமிழ் சமூகத்தின் விடுதலை என்பதை தேசிய இனப் பார்வைக்குள் மட்டும் அணுகுவதை கடுமையாக மறுத்துவரும் இவரது கட்டுரைகள் ஆழமான மாற்றுக் கருத்தியலைப் பேசுபவை. இதில் வருணாச்சிரமத்திலிருந்து வட்டுக்கோட்டை வரை, முஸ்லீம்கள் மீதான ஒடுக்குமுறை, முஸ்லிம் தேசம்* x *தமிழ் பாஸிஸ்டுகளின் கருத்தியல் தளம், கேடுகெட்ட தேசியத்திற்கு முன்னுதாரணமான தமிழீழம், முஸ்லீம் தேசம்: ஒரு பிறப்புரிமை: நேர்கண்டவர்: பாலைநகர் ஜிப்ரி, மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள்: கவிதைத் தொகுப்பு விமர்சனம், இலங்கை கிழக்கு பிளவு ஓர் தலித்திய அணுகுமுறை, வாங்கோசைகளற்ற வடக்கு காற்றால் வரண்டுபோனது தமிழ்த் தேசியமே, தோழமையுடன்: கண்களை விற்று ஓவியம் வாங்கும் திருமாவளவனை நோக்கி ஒரு திறந்த காகிதம், யாழ்ப்பாணத்தின் மானம் காக்கும் கோவணமல்ல கிழக்கு மாகாணம், கிழக்கின் சுயநிர்ணயம், கிழக்கை கிழக்காக இருக்க விடுங்கள்: நேர்காணல்-த.ஜெயபாலன், இனப்பிரச்சினைக்கான தீர்வு நோக்கிய அதிகார பகிர்வு விடயத்தில் தலித் மக்களின் நலன்கள் உத்தரவாதப்படுத்தப்படவேண்டும், யாழ்ப்பாண மேலாதிக்கமே தமிழ்-முஸ்லிம் விரிசலை ஏற்படுத்தியது: நேர்காணல்-எம்.நவாஸ் சௌபி ஆகிய தலைப்புகளில் ஆக்கங்களும் நேர்காணல்களும் இடம்பெற்றுள்ளன.*

### 16211

**நினைவுச் சாரலில் எட்வேர்ட் செய்த்.** *சிராஜ் மஷ்ஹூர். அக்கரைப்பற்று-2: பேஜஸ் புத்தக இல்லம், 117, பட்டினப்பள்ளி வீதி, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (மஹரகம: மில்லெனியம் கிராப்பிக்ஸ், 30/7, 5ஆவது ஒழுங்கை, அம்பகஹபுர).*

*58 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 21*x*15 சமீ.,* ISBN: *978-624-6047-04-7.*

*நினைவுச் சாரலில் பேராசிரியர் எட்வேர்ட் செய்த், இருளென்பது குறைந்த ஒளி, பல்கலைக்கழகச் சூழலின் போதாமைகள், இலங்கை: இது ஒரு பகைமறப்புக் காலம் (நேர்காணல்) ஆகிய மூன்று ஆக்கங்களின் தொகுப்பாக இந்நூல் வெளி வந்துள்ளது. இதிலுள்ள மூன்று கட்டுரைகளும் மூன்று விதமானவை. ஒன்றுடன் ஒன்று நேரடித் தொடர்பற்றவை. நான்காவதாக உள்ளநேர்காணல் முற்றிலும் வேறுபட்ட இன்னொரு வடிவம். சிராஜ் மஷ்ஹூரின் நான்காவது நூல் இது. எதிர்ப்பிலக்கியம் ஒரு கலாசார ஆயுதம் (ஆசிரியரின் கலைமாணிப் பட்ட ஆய்வு), இலங்கை: இது பகை மறப்புக்காலம் (நேர்காணல்), பேரன்பின் ஈரமொழி (கவிதைத் தொகுதி) ஆகிய மூன்று நூல்களை முன்னதாக வெளியிட்டுள்ளார்.*

**16212**

**13ஆம் திருத்தச் சட்டம் தீர்வல்ல: தமிழ் சொலிடாரிட்டியின் அரசியல் நிலைப்பாடு.** *தமிழ் சொலிடாரிட்டி. பிரித்தானியா: கட்டுமரம் பதிப்பகம், இல.05, ஹமில்டன் அவென்யூ, எஸெக்ஸ்* IG6 1AE, *1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2022.* (United Kingdom: Instant Print, Unit A, Brookfields Park, Manver's Way, Rotherham S63 5DR).

*67 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN: *978-0-9933704-2-7.*

*பொருளாதார நெருக்கடியும் பூகோள அரசியலும், இந்தியா-மேற்குலகு-ஈழத்தமிழர், சீனத் தலையீட்டின் பண்பு, அரசியற் கட்சிகளின் நிலைப்பாடு, குறை தீமை, முற்போக்கு அரசியல் பேசும் சக்திகள், சர்வதேசமயப்படுத்தல் என்றால் என்ன?, புலம்பெயர் அமைப்புகளின் நிலைப்பாடு என்ன?, தமிழ் தலைமைகளின் நிலைப்பாடு, இலங்கை- இந்திய ஒப்பந்தமும் 13ஆவது திருத்தச் சட்டமும், இலங்கை-இந்திய ஒப்பந்தம் தொடர்பில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு, முடிவில்லா ஆரம்பம், அப்புக்காத்து அரசியலின் தொடர்ச்சி, தமிழ் ஈழக் கோரிக்கை, தமிழ் சொலிடாரிட்டி முன்வைக்கும் திட்டமிடல் என்ன? ஆகிய விடயங்கள் தொடர்பான விளக்கங்களை இந்நூல் வழங்குகின்றது.*

**16213**

**மலையகத் தமிழ் மக்களும் நிலத் தொடர்பற்ற-பிரதேசம் சாராத அதிகாரப் பகிர்வும்.** *அ.லோறன்ஸ். கொட்டகலை: மலையகம் ஆய்வகம், இல. 21, அமைதிபுரம், 1ஆவது பதிப்பு, 2022. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

xxiv, *109 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-624-99623-0-9.*

*இந்நூல் அறிமுகம், பிரதேசம் சாராத நிலத் தொடர்பற்ற அதிகாரப் பகிர்வு முறை, பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம்: வரலாற்றுப் பின்னணியும் அதிகாரப் பகிர்வும் (இணைப்பு-1: மலையக மக்கள் முன்னணி அரசியல் தீர்வக்காக 1994ஆம் ஆண்டு பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்குச் சமர்ப்பித்த முன்மொழிபு, இணைப்பு-2: பாண்டிச்சேரி கைமாற்று ஒப்பந்தம், இணைப்பு-3: இந்திய அரசியல் யாப்பு பகுதி, இணைப்பு-4: இந்திய அரசியல் அமைப்பு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள்,*

*மத்திய ஆட்சிப் பகுதிகள் தொடர்பான பட்டியல், இணைப்பு-5: இந்திய மாநிலங்கள், மத்திய ஆட்சிப் பகுதிகள், யூனியன் பிரதேசங்கள்), பெல்ஜியம்: பிரதேசம் சாராத அதிகாரப் பகிர்வு, இலங்கை இனப்பிரச்சினை தீர்வில் மலையகத் தமிழ் மக்களின் நிலைப்பாடும் எதிர்காலத் தீர்வுகளும்(பின்னிணைப்பு-1: இலங்கையில் நான்கு பிரதான தேசிய இனங்கள் வாழும் மாகாண, மாவட்ட, பிரதேச அடிப்படையில் பாராளுமன்ற, மாகாண, உள்ளூராட்சி நிறுவனங்களின் அடிப்படையில் அரசியல் பிரதிநிதித்துவத்தின் பரம்பல்: 2014 ஆம் ஆண்டு வாக்குப் பதிவு அடிப்படையில், பின்னிணைப்பு-2: மலையக மக்களின் பாராளுமன்ற மாகாணசபை, உள்ளூராட்சி நிறுவனங்களின் பரம்பல்), முடிவுரை ஆகிய ஐந்து இயல்களில் எழுதப்பட்டுள்ளது.*

## 323 மனித உரிமை

### 16214

**மனித உரிமைகள் கோட்பாடும் நடைமுறையும்.** ந.புஸ்பராசா. கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

xiv, *236 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 21.5*x*14.5 சமீ.*, ISBN: *978-955-659-751-6.*

*மனித உரிமைகள் தொடர்பாகப் பரந்தளவான விடயங்களை தமிழ்மொழிமூல மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கும், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கும் எடுத்துரைக்கும் ஒரு வழிகாட்டியாக இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நூலில் மனித உரிமைகள்: பொருள், இயல்பு, கோட்பாடுகள் மற்றும் வகைகள், மனித உரிமைகளின் வரலாற்று அபிவிருத்தி, சர்வதேச மனித உரிமை ஆவணங்கள், ஐ.நா.சாசனத்தை அடிப்படையாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பு பொறிமுறைகள் மற்றும் அமைப்புகள், ஐ.நா.வின் ஒப்பந்தங்களை அடிப்படையாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்புப் பொறிமுறைகள் மற்றும் அமைப்புகள், பிராந்திய மனித உரிமைகள் முறைமைகள், சர்வதேச மனிதாபிமான சட்டம் ஆகிய ஏழு இயல்களில் இவை விளக்கப்பட்டுள்ளன. கலாநிதி ந.புஸ்பராசா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.*

மேலும் பார்க்க:
பன்னாட்டுக் குற்றங்கள். 16955

## 323.352 சிறுவர் உரிமை

### 16215

**கிராமிய சிறுவர் அபிவிருத்தி குழுக்களுக்கான தேசிய வழிகாட்டல்கள் மற்றும் சிறுவர் உரிமைகளை மேம்படுத்துதல்.** *நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம். பத்தரமுல்ல: நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, 2வது பதிப்பு, ஒக்டோபர் 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*53 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5*x*15 சமீ.,* ISBN: *978-955-7627-03-8.*

*இந்தக் கையேடானது, நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்,* The Institute for Participatory Interaction in Development, Terre des hommes (Tdh), Save the Children International (SCI), United Nations International Children's Fund (UNICEF), World Vision International and Plan International *ஆகியோருடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது. அறிமுகம், கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுக்களை தாபித்தலும் அதனை பேணி வருதலும்,* VCDC *இன் (கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுக்கள்) வழிகாட்டல் கோட்பாடுகள், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைகளை அடையாளம் காணலும் அவற்றை மேம்படுத்தலும் ஆகிய நான்கு அத்தியாயங்களில் இக்கையேடு எழுதப்பட்டுள்ளது.*

### 16216

**கிராமிய சிறுவர் அபிவிருத்தி குழுக்களுக்கான வழிகாட்டி: வடமாகாணம்.** *நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம். பத்தரமுல்ல: நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, 1ஆவது பதிப்பு, பதிப்பு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

iii, *66 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5*x*17.5 சமீ.,* ISBN: *978-955-4033-00-9.*

*இக்கைந்நூலானது, தேசிய சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட கிராமிய மட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக்களுக்கான வழிகாட்டலை வடமாகாணத்தில் நடைமுறைப்படுத்துவதனை அடிப்படை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. தேசிய மட்டத்தில் சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தினூடாக வெளிவந்த வழிகாட்டி கோவையின் அடிப்படையில் மாகாண மட்டத்தில், நடத்தப்பட்டிருந்த பயிற்சிப் பட்டறை மூலமாக கலந்துரையாடப் பட்டிருந்த விடயங்களையும் அனுபவப் பகிர்வின் அடிப்படையிலும்* War Child Holland *நிறுவனத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதி அனுசரணையில் வெளியிடப்பட்டுள்ளது.*

### 16217

**சிறுவர் உரிமைகள்.** *தா.தேச இலங்கை மன்னன். யாழ்ப்பாணம்: பூவரசி வெளியீடு, இராமகிருஷ்ணா பாடசாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில், 1ஆவது பதிப்பு, நவம்பர் 2022. (சென்னை 600093: பூவரசி வெளியீடு, புஷ்பா காலனி, சாலிகிராமம்).*

*120 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 1500., அளவு: 24x18 சமீ.,* ISBN: *978-624-5020-05-9.*

*சர்வதேசங்களும், மக்களும் மதித்து நடைமுறைப் படுத்த வேண்டிய பிள்ளையின் மனித உரிமைகள், 1989 பிள்ளையின் உரிமைகளைப் பற்றிய ஐக்கிய நாடுகளின் மாநாடு, சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்,* Convention on the Rights of the Child *ஆகிய இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 69952).*

## 325 சர்வதேச/உள்ளக புலப்பெயர்வுகள், காலனித்துவம்

### 16218

**இலங்கைத் தமிழர்களின் புலம்பெயர்வும் வாழ்வியலும்.** *தம்பையா அரியரத்தினம். கொழும்பு: க.அரியரத்தினம், ஓய்வு நிலை அதிகாரி, ஸ்ரீலங்கா திட்டமிடல் சேவை, 1ஆவது பதிப்பு, 2022. (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).*

*110 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21x15 சமீ.*

*யாழ். அனலைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கோண்டாவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமான சமூக, சமய சேவையாளர் தம்பையா அரியரத்தினம் பத்து வெளி நாடுகளுக்குச் சென்று வந்த நிலையில் தான் பெற்ற அனுபவங்களைப் பயன்படுத்தி எழுதியுள்ள இந்நூல் 17.4.2022 அன்று இணுவில் அறிவாலய மண்டபத்தில் வெளியிடப்பட்டது. நூலில் வெளியிட்ட ஆண்டு விபரம் தரப்படவில்லை. இந்நூலில் சமர்ப்பணம், அணிந்துரை, வாழ்த்துரை, என்னுரை ஆகிய ஆரம்பப் பதிவுகளைத் தொடர்ந்து, தாயக புலம்பெயர்வு, புலம்பெயர் தமிழர் வாழ்வியல், சமூக சமய பண்பாடு, கல்வி, தொழில் வாய்ப்புக்கள், புலம்பெயர் மக்களும் பொருளாதாரமும், தமிழ் மொழிப் பற்றும் உள்நாட்டு வெளிநாட்டு அரசியலும், புலம்பெயர்வு முதியோரின் வாழ்வியல், புலம்பெயர்வால் ஏற்பட்ட தாயகத்திற்கான நன்மை, தீமைகள் ஆகிய அத்தியாயங்களின் வழியாக இலங்கைத் தமிழர்களின் புலப்பெயர்வும் வாழ்வியலும் பற்றிய தனது பார்வையை பதிவுசெய்திருக்கிறார்.*

### 16219

**புலச்சிதறல் நெஞ்சம்.** *கோகிலா மகேந்திரன். தெல்லிப்பழை: கலை இலக்கியக் கள வெளியீடு, 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (கொழும்பு 6: குளோபல் கிராப்பிக்ஸ், 14, 57ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை).*

xx, *232 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 17.5*x*12.5 சமீ.*

*நூலாசிரியர் தான் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்த காலத்து அனுபவங்களைப் புதுமையான ஆக்க இலக்கியமாகத் தந்துள்ளார். பல்வேறு பாத்திரங்களைப் பேச வைத்திருப்பதன் மூலம் அவுஸ்திரேலியாவின் வரலாறு, அரசியல், நிர்வாகக் கட்டமைப்பு, பொருளாதாரம், கலாச்சாரம், வாழ்வியல் முதலான பல்வேறு அம்சங்களையும் அறியத்தந்துள்ளார். அவுஸ்திரேலிய தினம், ஒரு சீனியர் சிட்டிசனின் ஏக்கம், வெளிநாட்டு மாப்பிள்ளை, வேலை தேடும் படலம், பல்லுக்கு நேர்ந்த கதி, பதின்ம வயதின் பதற்றம், மலர் போன்ற ஆசிரியர், வாடகைக்கு ஒரு வீடு, மனக்காயம், நக்குத் தண்ணீர், வங்கியும் வட்டியும், குடைமரம், உள்ளே ஒரு வாதம், மனிதக் குட்டி, அனொறெக்சியா, பூசணிக்காய், செல்லுபடியற்ற வாக்கு, சமதளம், ரமிலன், புகை, கருக்கப்படுதல், ஊஞ்சல், நஞ்சூட்டல், மந்தி பிறந்தது முந்தி, வாழ்க்கையின் நடுக்கம், சமன் என்பது சமமின்மை, சொர்க்கத்தின் சக்தி, குடிபெயர முடியாத பறவை, தொலைந்தது எது?, நூறு டொலர் நாடகம், அழகுச் சிகிச்சை, இசைவாக்கம் ஆகிய 32 கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.*

## 325.21 அகதிகள்

### 16220

**தகிப்பின் வாழ்வு: போரும் இடப்பெயர்வும்.** *தொ.பத்தினாதன். நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2019. (சென்னை 600 077: மணி ஓப்செட்).*

*104 பக்கம், விலை: இந்திய ரூபா 120., அளவு: 22*x*14.5 சமீ.*, ISBN: *978-93-88631-18-1.*

*அகதிகளின் வெளியேற்றம், நவீன அடிமை முறை, ஆட்சி மாற்றம், வீடுகள், மதங்கள், சாதிகள், முகாம்கள், பலிகள், ஆயுத உற்பத்தி, புலம்பெயர் சமூகங்களுக் கிடையே நிலவும் தராதரம், சட்டமும் நடைமுறைச் சிக்கல்களும், என சமகால அகதி அரசியல் பற்றிய 13 கட்டுரைகளும், முகாம் வாழ் பெண் ஒருவரின் வாக்கு மூலமும், மூத்த புலி உறுப்பினர் ஒருவரின் நேர்காணலும் கொண்டது இத்தொகுப்பு. அகதி வாழ்க்கை, போரும் வாழ்வும், ரேசன் கார்டு, மௌனம், செயற்கையாக வெளியேற்றப்பட்டவர்கள், ஈழ அகதிகளின் வீடுகள், அகதிகள் அடிமைமுறையின் நவீன வடிவம், போரும் அகதிகளும், அகதி அரசியல்-அரசியல் அகதிகள், அகதி முஸ்லீம்கள், ஆட்சி மாற்றம்: சில அவதானிப்புகள், அகதி முகாம்களை மூடுவது எப்போது?, அதிகாரத்தின் பலி, 2016 சட்டமன்றத் தேர்தலும் ஈழத் தமிழரும், புலம்பெயர்ந்தவர்களின் அவமானம், பேசாப் பொருள், அகதிகளும் நடைமுறைச் சிக்கல்களும், ஜனநாயக சக்திகள் முன்னெடுப்பார்கள் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 18 ஆக்கங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. மன்னார் மாவட்டம், வட்டக்கண்டலைப் பிறப்பிடமாகக் கொண்ட பத்தினாதன் 1990இல் தனது 16ஆவது வயதில் தமிழகத்திற்கு அகதியாகச் சென்றவர். எட்டு ஆண்டுகள் மதுரை*

மாவட்டம் உச்சப்பட்டி அகதிகள் முகாமில் வாழ்ந்தவர். பின்னர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பொது நிர்வாகத்தில் உயர்கல்வி பயின்றவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70288).

## 330 பொருளியல்

### 16221

**சிற்றினப் பொருளியல்: நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர் நடத்தை.** நவரத்தினம் ரவீந்திரகுமாரன், கலைச்செல்வி ரவீந்திரகுமாரன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு 2013. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

vii, 192 பக்கம், அட்டவணைகள், வரைபடங்கள், விலை: ரூபா 375., அளவு: 21.5x13.5 சமீ., ISBN: 978-955-659-394-5.

கொழும்புப் பல்கலைக்கழக பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ந.ரவீந்திரகுமாரன் மற்றும் வியாபாரப் பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலைச்செல்வி ரவீந்திரகுமாரன் ஆகியோரால் இணைந்து எழுதப்பட்ட இந்நூல் க.பொ.த. உயர்தர மாணவர்கள், பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு மற்றும் பட்டப் பின் படிப்பு மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பொருளியல் துறை மாணவர்கள் எனச் சகல தரப்பினருக்கும் பயன்படும் வகையில் படைக்கப் பட்ட நூல். இந்நூல் சிற்றினப் பொருளியலின் இரு பிரதான அலகுகளான நுகர்வோர் நடத்தைக் கோட்பாடு (Theory of Consumer Behavior) மற்றும் உற்பத்தியாளர் நடத்தைக் கோட்பாடு (Producer Behavior) ஆகியவற்றை விளக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது. பொருளியல் மாணவர்கள் எளிதில் விளங்கிக்கொள்ளும் வகையில் சிற்றினப் பொருளாதாரக் கோட்பாடுகள், மாதிரிகள், அட்டவணைகள், வரைபடங்கள் மற்றும் கணித ரீதியான சமன்பாடுகள் ஆகிய நுட்பங்களைப் பயன்படுத்தி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நுகர்வோர் நடத்தைக் கோட்பாடு, உற்பத்தியாளர் நடத்தை-உற்பத்திக் கோட்பாடு மற்றும் உற்பத்தியாளர் நடத்தை-செலவுக் கோட்பாடு ஆகிய பிரதான மூன்று இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நுகர்வோர் நடத்தை, அளவுசார் பயன் அணுகுமுறை, வரிசைசார் பயன் அணுகு முறை, நுகர்வோன் சமநிலை, உற்பத்தியாளர் நடத்தை, உற்பத்திச் சார்பு, உற்பத்தி யாளர் சமநிலை, மற்றும் செலவுக் கோட்பாடு என பல்வேறுபட்ட விடயங்கள் 192 பக்கங்களில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. ஒவ்வொரு இயலின் முடிவிலும் பிரதான எண்ணக் கருக்களுக்கான விளக்கங்கள் தெளிவாக வழங்கப்பட்டுள்ளன. பின்னிணைப்பாக வினாக்களும் உசாத்துணைப் பட்டியலும் சேர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 242288).

## 331.88 தொழிற் சங்கங்கள்

### 16222

**தோட்டத் தொழிலாளர் வீரப் போராட்டம்.** பி.ஆர்.பெரியசாமி. கொழும்பு 12: நல்வழிப் பதிப்பகம், 22, டயஸ் பிளேஸ், 1ஆவது பதிப்பு, 1957. (கொழும்பு 12: என்.எஸ்.ஆர்.அச்சகம், 127, புதிய சோனகத் தெரு).

112 பக்கம், விலை: 50 சதம், அளவு: 22x15 சமீ.

**தோட்டத் தொழிலாளர் வீரப் போராட்டம்.** பி.ஆர்.பெரியசாமி (மூலம்), எச்.எச். விக்கிரமசிங்க (பதிப்பாசிரியர்). கொழும்பு 13: எச்.எச்.விக்கிரமசிங்க, 39/21, அல்விஸ் பிளேஸ், கொட்டாஞ்சேனை, 2ஆவது பதிப்பு, ஜுலை 2021, 1ஆவது பதிப்பு, 1957. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

112 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15.5 சமீ., ISBN: 978-624-98019-0-5.

"தோட்டத்துரைமாரின் அராஜகப் போக்குகளை கவிஞர் பி.ஆர். பெரியசாமி (1914-1966) நேருக்கு நேராய்ச் சந்தித்த அனுபவத் தழும்புகளின் வெளிப்பாடு இந்நூல். அந்தக் கொடிய காலத்தை, தொழிலாளர்கள் எதிர்கொண்ட கொடூர சூழலை நெஞ்சிலே தணல் எடுத்து வார்த்தைகளிலே வார்த்திருக்கிறார் கவிஞர் பெரியசாமி. பல போராட்டங்களில் பங்கெடுத்து உழைத்த அனுபவத்தை நெஞ்சுயர்த்தி, ஆத்மார்த்தமாகப் பிரகடனம் செய்யும் வலிமை கொண்ட ஒரு பாணனின் முரசொலி இது. கோ.நடேசையரின் புரட்சிகரத் தொழிற்சங்கப் பட்டறையில் தீட்டப்பட்ட போர்வாள் அவர். கவிதையில், பாடலில், பிரசங்கத்தில், தொழிற்சங்கச் செயற்பாட்டில், போராட்டத்தில் அவர் உயிர் ஜீவன் கொண்டிருக்கிறது." (மு.நித்தியானந்தன், பின்னட்டைக் குறிப்பு).

## 333.7 சுற்றுச்சூழல் பாதுகாப்பு

### 16223

**ஓசோன்: உயிர்க் கோளத்தைக் காக்கும் வளிமண்டலப் படை.** சாரதாஞ்சலி மனோகரன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு: வளிவளங்கள் முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் அலகு, சுற்றாடல் அமைச்சு, "சோபாதம்பியச", இல. 416/c/1, றொபேர்ட் குணவர்த்தன மாவத்தை, பத்தரமுல்லை, 5ஆவது பதிப்பு, 2020, 1வது பதிப்பு, 2010. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(6), 96 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

இந்நூலானது உயிர்க்கோளத்தின் பாதுகாப்பில் ஓசோன் படையின் முக்கியத்துவத்தையும் ஓசோன் படை, ஓசோன் படையைப் பாதுகாப்பதற்கான சர்வதேச, தேசிய கடப்பாடுகளையும் எடுத்துக்கூறுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது. வியன்னா உடன்படிக்கை, மொன்ட்றியல் உடன்படிக்கை ஆகியவற்றை ஓர்

அங்கத்துவ நாடாக இலங்கையில் நடைமுறைப்படுத்தல் மற்றும் ஓசோன் படையைப் பாதுகாப்பதற்கு இலங்கையால் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப் பட்டு வரும் சட்டபூர்வமான நடவடிக்கைகள் பற்றியும் விளக்குவதாக அமை கின்றது. இவை வளிமண்டலமும் நாமும், ஓசோன் படை, ஓசோன் படையைப் பாதுகாக்கும் சர்வதேச அர்ப்பணிப்புகள், ஓசோன் படையை நலிவடையச் செய்யும் பதார்த்தங்கள், இலங்கையும் மொன்ட்றியல் உடன்படிக்கையும், பசுமைத் தொழில்நுட்பமும் குளிரூட்டி வளிப்பதனாக்குதல் துறையும் ஆகிய ஆறு இயல்களில் எழுதப்பட்டுள்ளன.

## 16224

**பொருளாதார-சூழலியல் சிக்கல்கள்.** ஏ.எம்.றியாஸ் அஹமட். மருதமுனை 05: பசுமைப் பந்துகள், 224, காரியப்பர் வீதி, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2021 (அச்சக விபரம் தரப்படவில்லை).

44 பக்கம், விலை: ரூபா 75.00, அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-624-98297-5-6.

இந்நூலில் முதலாளித்துவ சூழலியல், முதலாளித்துவ சூழலியல் சிக்கல், சோசலிச அல்லது மார்க்சிய சூழலியல், சோசலிச அல்லது மார்க்சிய சூழலியல் சிக்கல், சூழலியல் ஏகாதிபத்தியம், பொருளாதார சூழலியல்-கலாச்சார சிக்கல் (ஓமானிய நவதாராளவாத கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறையும், தன்னிறைவு பாரம்பரிய இயற்கை விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தின் சிதைவும்), பொருளாதார சூழலியல்-கலாச்சார சிக்கல் (ஓமானிய இருமைவாத சூழலியல் கலாச்சாரத்தின் மெய்மையிலான ஒன்றுக்கொன்று உதவியான சூழலியல் கலாசாரமும், இருமைவாத சூழலியல் கலாச்சாரமும், இருமைவாத சூழலியல் கலாச்சாரமும், மற்றும் பூகோளமையவாத இருமை பயனெறிமுறை மன அமைப்பும்) ஆகிய விடயங்கள் உள்ளடக்கப் பட்டுள்ளன.

## 16225

**யானைகள்.** ஏ.எம்.றியாஸ் அஹமட். மருதமுனை 05: பசுமைப் பந்துகள், 224, காரியப்பர் வீதி, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2021 (அச்சக விபரம் தரப்படவில்லை).

43 பக்கம், விலை: ரூபா 75.00, அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-624-98297-1-8.

ஏ.எம்.றியாஸ் அஹமட் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். இலங்கையின் முக்கிய சூழலியல் பிரச்சினையாக மாறிவரும் வன விலங்குகள்- கிராமவாசிகள் மோதல் பற்றிய சூழலியல் காரணிகளை இச்சிறுநூலில் ஆராய்ந்துள்ளதுடன், யானைகள் எவ்வாறு இயற்கையின் வனச் சமநிலை-பரிபாலனத்திற்கு உதவுகின்றன என்றும் விளக்கியுள்ளார். "உயரக் கிளைகள் முறிந்து கிடக்கும். உரிமையாய் விலங்குகள் அரைத்து உண்ணும். பதைத்த உயிர்கள் பசி போக்கும், பாதங்கள் பதித்து பள்ளங்கள் உருவாக்கும், குட்டையாக மாறும் பின்னர் குளங்களாகும், நீர் கொடுக்கும். தகித்த உயிர்கள் தாகம் போக்கும் கோடையின் கொடுமையோ

மெல்லக் குறையும். மலையாய் விட்டை எங்கும் விரவிப் போடும். காடு சீராட்டி கானுயிர் வளர்க்கும். ஊட்டுவதால் தாயாகி உதவுவதால் நண்பனாகி காப்பதனால் காவலனாகி யானைகள் நம் சூழலின் தோழனாகும்" என்ற அம்ரிதா ஏயெம் அவர்களின் பின்னட்டைக் கவி வரிகள் இந்நூலின் உள்ளடக்கத்தை மேலும் தெளிவாக்குகின்றன.

## 16226

**வாயு மாசடையாத எமது உலகம்.** வாயு வளங்கள் மற்றும் முகாமைத்துவ மற்றும் தேசிய ஓசோன் அலகு (AirMAC). பத்தரமுல்லை: வாயு வள முகாமைத்துவ மத்திய நிலையம், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, "சொபாதஹம் பியஸ்", 416/C/1, ரொபட் குணவர்த்தன மாவத்தை, 5ஆவது பதிப்பு, 2017, 1ஆவது பதிப்பு, 2005, 2ஆவது பதிப்பு, 2008, 3ஆவது பதிப்பு, 2009, 4ஆவது பதிப்பு, 2014. (நுகேகொட: தெவணி அச்சகம் மற்றும் வெளியீடுகள், இல. 9, மீகஹவத்த வீதி, கங்கொடவில).

(4), 23 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

சிறுவர்களிடையே வாயு மாசடைதல் பற்றிய அறிவை ஊட்டும் வகையில் விளக்கப்படங்கள் சகிதம், உரையாடல் வடிவில் அன்றாடம் நாம் நம்மைச் சுற்றிக் காணும் சம்பவங்களை முன்வைத்து விளக்கமளிக்கப்பட்டுள்ளது. சாகர சந்திரகுமார, துசார பிரியங்க, ரவன் வீரசூரிய ஆகியோர் இணைந்து மூல எழுத்தாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்துள்ளனர். தமிழாக்கம் செய்தவர் பற்றிய தகவல் இல்லை.

## 16227

**விதைப் பந்துகள்.** ஏ.எம்.றியாஸ் அஹமட். மருதமுனை 05: பசுமைப் பந்துகள், 224, காரியப்பர் வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2021 (அச்சக விபரம் தரப்படவில்லை).

36 பக்கம், விலை: ரூபா 75.00, அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-624-98297-2-5.

விதைப் பந்து என்பது களிமண் மற்றும் மக்கிய உரம் அல்லது பசுஞ்சாணம் போன்றவற்றில் விதைகளை வைத்து உருண்டை வடிவில் செய்யப்படுகிறது. விதை பந்துகள், பூமி பந்துகள், விதைக் குண்டுகள் என்றும் அழைக்கப்படும், களிமண் பந்து ஆகும். இந்த விதைப்பந்துக் கலவையில் பல்வேறு சேர்க்கைகள் மட்கிய மண் அல்லது உரம் போன்றன சேர்க்கப்படலாம். இவை விதைக்கு நுண்ணுயிர் எதிர்ப்பொருட்களை வழங்கிறது. இப்பந்து மையத்தில் உள்ள விதையை சுற்றி வைக்கப்படுகின்றன. இந்த பந்தை பலப்படுத்த பருத்தி நார்களை அல்லது கூழாக்கப்பட்ட தாள் சில நேரங்களில் களிமண்ணில் கலக்கப்படுகிறது. களிமண் பந்தைப் பாதுகாக்க, விதைப்பந்தின் வெளிபுறத்தில் காகித கூழால் ஆன உரை மேற்பூசப்படுகிறது. இது கடுமையான வாழ்விடங்களில் விதையைப் பாதுகாக்கிறது. இச்சிறுநூல் விதைப்பந்து பற்றிய விளக்கத்தை வாசகர்களுக்கும், சூழலியலாளர்களுக்கும் வழங்குகின்றது.

### 16228

**வீதிப் பசுமையாக்கமும் பசுமையாக்கம் எதிர்கொள்ளும் சவால்களும்.** ஏ.எம்.றியாஸ் அஹமட். மருதமுனை 05: பசுமைப் பந்துகள், 224, காரியப்பர் வீதி, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2021 (அச்சக விபரம் தரப்படவில்லை).

32 பக்கம், விலை: ரூபா 75.00, அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-624-98297-3-2.

வீதிப் பசுமையாக்கம் என்பது ஒருவகையில் மனதின் எண்ணங்களை கிளறச் செய்துகொண்டே இருக்கும். கரையோரத்தை ஆக்கிரமிக்கும் பசுமரங்களின் பொலிவில் ஒரு முறை பசுமையாக்கல் தெரியும். இன்னொரு முறை கலாச்சார அடையாளம் தெரியும். இன்னொரு முறை உயிரினப் பல்வகைமைக் காப்புக்கான கூறுகள் தெரியும். இன்னொரு முறை இனக் காப்புக்கான கூறுகள் ஏதோவொரு வகையில் நிராகரிக்கமுடியாதபடி தெரியும். சூழலியலாளனுக்கும், உயிர்க் காப்பாளனுக்கும், பசுமையாளனுக்கும், நகரஅபிவிருத்தி திட்டமிடலாளனுக்கும், நிலத்தோற்றவுருவவியலாளனுக்கும், கவிஞனுக்கும், அரசியல்வாதிக்கும், சமூகவியலாளனுக்கும் மேலும் இவற்றை ஆய்வு செய்யும் ஆய்வாளனுக்கும் இங்கு வேலையிருக்கிறது. இந்தத் தருக்கள் இவர்களுக்காக ஏதாவது ஒன்றை எப்போதும் வைத்துக் கொண்டிருக்கும். இந்நூலில் பசுமையாக்கம் அதன் இயல்புகளும் அனுகூலங்களும், பசுமையாக்கல் எதிர்கொள்ளும் சவால்கள், உயிரியல் பல்வகைக் காப்பின் கூறுகள், இனக் காப்புக்கான கூறுகள், போன்ற வைகளை சுருக்கமாக விளக்கியிருக்கிறார்.

மேலும் பார்க்க:

அனர்த்தங்களும் மனித விலங்கு நடத்தைகளும். 16314

கடல் அட்டை வளர்ப்பும் யாழ்ப்பாண தீவக கடல்களின் அரசியலும் சூழலியலும். 16231

## 335 சோசலிசம், அது தொடர்பான பிரிவுகள்

### 16229

**மான்விழிக்குக் கடிதங்கள்.** செ.கணேசலிங்கன். சென்னை 600001: பரதன் பதிப்பகம், 63, தையப்பன் தெரு, 1ஆவது பதிப்பு, ஜனவரி 1985. (சென்னை 17: அகத்தியர் அச்சுக்கூடம்).

(5), 6-77 பக்கம், விலை: இந்திய ரூபா 5.50, அளவு: 18x12.5 சமீ.

இன்று நாம் வர்க்க சமுதாயத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். வர்க்க சமுதாயம் மக்களைப் பல்வேறு பெரிய குழுக்களாகப் பிரித்து வைத்துள்ளது. உற்பத்திச் சாதனங்களைக் கொண்டவர் பல தரம். இரு கரங்களை மட்டும் கொண்டு உழைப்பவர் பலதரம். இச்சிறு நூல் இத்தகையவர்களை விஞ்ஞான அடிப்படையில் சமூக வர்க்கங்களாகத் தரம் பிரித்துப் பார்க்கின்றது. சமூக வர்க்கங்களை (Social Class) எவ்வாறு பகுப்பது என்பதைப் பள்ளிகளில், கல்லூரிகளில் தானும் கற்பிப்பதில்லை. சமூக வர்க்கங்கள் பற்றித் தமிழில் வெளிவரும் முதலாவது நூல் இதுவெனக் கருதப்படுகின்றது. பல்வேறு சமூக வர்க்கங்கள், அவற்றின்

புரட்சிகர, எதிர்ப் புரட்சிகர குணாம்சங்களையும் இந்நூல் ஆராய்கின்றது. எளிதில் இவற்றைக் கற்கக்கூடியவாறு சிறு சிறு கடிதமுறையில் எழுதப்பட்டுள்ளது. இதில் சமூக வர்க்கங்கள், நவ காலனித்துவம் பற்றிய சில குறிப்புரைகள் என்ற முன்னுரையை அடுத்து, வகுப்பும் வர்க்கமும், பாட்டாளிகள், கூலி விவசாயி, ஏழை விவசாயி, நடுத்தர விவசாயி, பணக்கார விவசாயி, நிலப்பிரபுக்கள், பாட்டாளிகள், தேசிய முதலாளிகள், தரகு முதலாளிகள், சிறுபண்ட உற்பத்தியாளர், வேலையற்றவர்கள், மாணவர்கள், உதிரிப் பாட்டாளிகள், அறிவு ஜீவிகள், காலனி-அரைக்காலனி-நவகாலனி, புதிய ஜனநாயகப் புரட்சிஆகிய 17 பிரிவுகளில் கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 9398).

## 335.4 கம்யூனிசம்

### 16230

**மார்க்சும் ஏங்கல்சும் 1848இல் வெளியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை.** செ.கணேசலிங்கன். சென்னை 26: குமரன் பதிப்பகம், 12/3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7ஆவது தெரு, வடபழனி, 1ஆவது பதிப்பு, மே 2014. (சென்னை: சிவம்ஸ்).

48 பக்கம், விலை: இந்திய ரூபா 30.00, அளவு: 22.5x15 சமீ.

மார்க்சும் ஏங்கல்சும் வெளியிட்ட கம்யுனிஸ்ட் கட்சி அறிக்கை, உலக வரலாற்றில் அரசியல், பொருளாதார, புதிய பண்பாட்டுக்குத் தூண்டிய நூல். கட்சி அறிக்கையாக 23 பக்கங்களில் 1848இல் ஜெர்மன் மொழியில் இது வெளிவந்தது. உலகைக் குலுக்கிய மானிட விடுதலை வரலாற்றையும் கூறும் புரட்சிகரமான படைப்பு. 1888இல் அன்றைய ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. அது இன்றைய தமிழில் இங்கு எளிமையான வகையில் மொழிபெயர்த்துத் தரப்பட்டுள்ளது. இன்றுவரையான வரலாறு யாவும் வர்க்கப் போராட்டங்களின் வரலாறு என அறிக்கை ஆரம்பிக்கும். அனைத்து நாட்டுப் பாட்டாளிகளே ஒன்று சேருங்கள் என்ற அறைகூவலுடன் அறிக்கை நிறைவுபெறும். நீங்கள் இழப்பதற்கு அடிமை விலங்கு தவிர ஒன்றும் இல்லை. வெல்வதற்கு ஓர் உலகம் உள்ளது என்று அறிவுறுத்தும். உலகக்கு விளக்கம் கூறுவதல்ல, உலகை மாற்றியமைக்க வழிகாட்டும் ஆவணம்.

## 338 பொருளாதார வளங்கள், மீன்வளம்

### 16231

**கடல் அட்டை வளர்ப்பும் யாழ்ப்பாண தீவக கடல்களின் அரசியலும் சூழலியலும்.** ஏ.எம். றியாஸ் அகமட். நோர்வே: உயிர்மெய் பதிப்பகம், Kaptein Linkesvei 9A, 6006 Aalesund, 1ஆவது பதிப்பு, 2022. (அக்கரைப்பற்று: நியூ செலெக்ஷன் ஓப்செட் பிரின்டர்ஸ், C.E.B. மின்சார நிலைய வீதி).

xii, 70 பக்கம், விலை: ரூபா 560., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-624-98297-7.0.

இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞானக் கற்கைகள் சிரேஷ்ட விரிவுரையாளரான அம்ரிதா ஏயெம் என அறியப்பட்ட ஏ.எம். றியாஸ் அகமட் ஒரு சூழலியல் அறிஞராகவும் செயற்பாட்டாளராகவும் இனம்காணப் பட்டவர். யாழ்ப்பாணத் தீவகப் பிரதேசத்துக்கு கள ஆய்வு நோக்கில் பயணம் செய்து தீவகம் தொடர்பாகவும், அங்கு அமைக்கப்படும் கடலட்டைப் பண்ணை களின் அரசியல் தொடர்பாகவும் இந்நூலை எழுதியுள்ளார். மெலிஞ்சிமுனை நோக்கிய பயணம், உள்ளூர் அறிவு, இலங்கை மீன்பிடிக் கைத்தொழிலும் வளங்களும், நீருயிரின வளர்ப்பு, சூழற் தாக்க மதிப்பீடுகள், ஆரம்ப சுற்றாடற் பரிசீலனையும் B-வகைத் திட்டங்களும், நரையான்பிட்டி-வண்ணமயமான வலசைப் பறவைகளின் தேசம், கண்ணாத் தீவு-உயிரினப் பல்வகைமையின் உறைவிடமும் உயிர் வளர்க்கும் தொட்டியும், உயிரினப் பல்வகைமை-1, தீவுகளின் உயிரினப் பல்வகைமை, கடலட்டை (Sea Cucumber), பால் அல்லது ராஜ அட்டை (Sandfish), கடலட்டை (பால் அட்டை) வளர்ப்பு, கடலட்டை பண்ணைகளுக்கான மீனவர்களின் எதிர்ப்பு-1, கடலட்டை பண்ணைகளுக்கான மீனவர்களின் எதிர்ப்பு-2, மற்றைய நாடுகளில் கடலட்டை பண்ணைகளால் மீனவ சமூகங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள், தீவக கடல்களில் கடல் அட்டை வளர்ப்பின் அரசியல், பூகோள முக்கியத்துவம் ஆகிய 17 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 338.9 பொருளாதார அபிவிருத்தி

### 16232

**இலங்கையின் பொருளாதார நெருக்கடி: 2021/2022 வெளிப்பாடுகள், மூலங்கள் மற்றும் மீட்சி.** செ.சந்திரசேகரம். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2022. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

xiii, 226 பக்கம், வரைபடங்கள், விலை ரூபா: 1500., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-6164-20-1.

இந்நூல் இலங்கையின் சமகாலப் பொருளாதார நெருக்கடி பற்றி, பரந்துபட்ட சமூக மற்றும் அரசியல் பார்வையோடு விரிந்து நோக்குகின்றது. தமிழில் இலங்கையின் சமகாலப் பொருளாதாரம் பற்றிப் பேசும் ஆய்வுகளுக்கு அருமை நிலவும் நிலையில் இந்நூலின் வருகை இலங்கைப் பொருளாதாரத்தை விமர்சன ரீதியில் வாசிக்க விரும்பும் எவருக்கும் அருந்துணையாய் அமையும். இந்நூலி லுள்ள ஒவ்வொரு அத்தியாயமும் நடுவில் விடுபட்டுப்போன அல்லது ஆய்வாளர்களால் வேண்டுமென்றே தவிர்க்கப்பட்ட இலங்கையின் இன முரண்பாட்டின் பொருளாதாரத் தாக்கம் பற்றிய ஆய்வினைச் செய்கின்றன. எனவே தான் இந்நூல் ஏனையவற்றிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றது. மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூலின் முதற்பகுதி ஒன்பது அத்தியாயங்களில் இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் வெளிப்பாடுகள் குறித்த ஆய்வினை

மேற்கொள்கின்றது. ஒன்பது அத்தியாயங்கள் கொண்ட இரண்டாம் பகுதி இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கான மூலகாரணங்கள் குறித்து அலசு கின்றது. மூன்றாவது பகுதி பொருளாதார நெருக்கடியின் மீட்சிக்கான வழிமுறைகள் பற்றி ஆராய்கின்றது. ஒவ்வொரு அத்தியாயமும் தனித்து நிலைத்திருக்கக்கூடிய விதமாக அறிமுகம் தொடக்கம் முடிவுரைகளோடு உசாத்துணைகளையும் கொண்டிருக்கின்றது. செல்வரத்தினம் சந்திரசேகரம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பொருளியல்துறையில் இளமாணிப் பட்டத்தினையும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தினையும் பெற்று அங்கு சிறிது காலம் சேவையாற்றிய பின் 2002இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இணைந்து, பின்னர் புலமைப்பரிசில் மூலம் சீனாவின் Huazhog பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் பணிபுரிகின்றார்.

### 16233

**உலகமயமாதல்: சில அவதானிப்புகள்.** தி.உதயசூரியன். வவுனியா: கல்வி மற்றும் அறிவாராய்ச்சியியல்செயலாடல்களுக்கான மேகலா நிலையம், 51/5, கூமாங்குளம், 1ஆவது பதிப்பு, மே 2014. (யாழ்ப்பாணம்: ஈஸ்வா எண்ணிம அச்சகம், திருநெல்வேலி).

67 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 24.5x18 சமீ., ISBN: 978-955-98302-6-9.

பொது வாசகனின் அறிவுத் தேவையைக் கருத்திற்கொண்டு ஆசிரியரின் பன்முகப் பார்வை சமூகவியல், அரசியல், உளவியல், பண்பாட்டியல் போன்ற பல்வேறு கோணங்களில் அணுகுகின்றது. பொதுமக்களின் அறிகைப் புலத்தில் உலகமயமாதல் பற்றியதோர் அருட்டுணர்வினை ஏற்படுத்தும் பாங்கினை இந்நூல் கொண்டுள்ளது. உலகமயமாதல், உலகமயமாக்கல், நவீனத்துவம், பின்நவீனத்துவம் போன்ற சொல்லாடல்களுக்கான விளக்கங்களும், விபரிப்புகளும், அவரவர் சார்ந்த சித்தாந்தப் பின்னணிகளோடு வெளியிடப்பட்டு வருகின்ற ஓர் நிலையில் இவற்றி லிருந்து சற்றே வேறுபட்ட வகையில் இவை பற்றிய விளக்கங்களை மனிதத்துவ நோக்கில் இலகுவாகத் தர இந்நூல் முயல்கின்றது. இந்நூலில் நான்கு அறிவியல் சார்ந்த கட்டுரைகளும் மற்றும் சான்றோர் பலர் பற்றிய விபரங்களும் அடங்கியுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 58086).

### 16234

**எழுந்து முன்னேற முடியாமல் இறுகிப் போயிருக்கும் இலங்கையின் பொருளாதாரம்.** அ.வரதராஜா பெருமாள். லண்டன்: சமூகம் இயல் பதிப்பகம், 317, பெருந்தெரு வடக்கு, ஈஸ்ட்ஹாம், 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2022. (சென்னை 600077: மணி ஆப்செட்).

302 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா: 1500, இந்திய ரூபா 350., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-624-99441-0-7.

அண்ணாமலை வரதராஜா பெருமாள் 1953ஆம் ஆண்டு யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையில் பிறந்தவர். 1973இல் மறைந்த பத்மநாபா, புஷ்பராஜா ஆகியோருடன் இணைந்து "தமிழ் இளையோர் பேரவை"யில் 1973-1975 கால கட்டத்தில் பொதுச் செயலாளராகப் பணியாற்றியவர். வடக்கு கிழக்கு இணைந்த மாகாண அரசின் முதலமைச்சராக இந்திய இராணுவ காலத்தில் சேவையாற்றியவர். இந்நூலில் இவர் எழுதிய 23 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. திக்குத் திசை அறியாது திணறி நிற்கும் சுதந்திர இலங்கையின் பொருளாதாரம், மக்களின் வாழ்வுரிமைகள் உறுதிபட சுயசார்பு நிலையை அடையவேண்டும், மண்பரப்பின் எல்லைகளால் நாடு அமையும்-ஆனால் மக்களின் சமூக பொருளாதாரப் பரப்பே தேசமாகும், எட்டு மணி நேரம் கடுமையாக உழைத்தும் வறுமைக் கோட்டுக்குள் ளேயே சுழலும் வாழ்க்கை, சர்வதேச சமநிலையின் கணக்கில் இலங்கையின் வறுமைக்கோடு, இலங்கையின் பொருளாதாரமோ வீழ்ச்சிப் பாதையில் இளை யோர்களோ உரிய வேலை வாய்ப்புக்காக வீதிகளில், ஆதாரங்களை இழந்து சேடமிழுக்கும் ஆபத்தில் அந்தரிக்கும் இலங்கையின் அரசியற் பொருளாதாரம், வரப்புயர நீருயர நெல்லுயர குடியுயர கோனுயரும், வரவு-செலவுகளின் சரியான சமன்பாட்டில் பயணிக்கும் பொருளாதாரமே சரியாது முன்னேறும், அரச நிர்வாக துறைகளில் அளவுக்கு மீறி ஆட்கள் ஆண்டு தோறும் ஏறுகிறதே! இறங்குவதாக இல்லை!, நாட்டைத் திறந்தது இறக்குமதிகளுக்கே வாய்த்தது-ஏற்றுமதிகளுக்கான தகுதிகளில் முன்னேறவில்லை!, இருக்கும் ஆற்றல்களுக்கும் வளங்களுக்கும் ஏற்பவே தேட்டங்களுக்கான நாட்டங்களில் முயலவேண்டும், கடன் மற்றும் அந்நியச் செலாவணி வழியாக இலங்கைக்கு ஏற்பட்ட கெட்ட காலம், இக்கட்டான குணாம்சங்கள் கொண்ட இலங்கையின் தேயிலைத் தோட்டங்கள், தேயிலையோடு வாழும் மக்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்பட தீவிர மாற்றங்கள் வேண்டும், போதிய உணவுக்கான வளங்கள் இருந்தும் இறக்குமதிகளை நம்பி வாழும் இலங்கை, ஏற்ற பொருளாதார நிலையை எட்டாத கட்டத்தில் சேதன விவசாய முயற்சிகள் சேதங்களையே ஏற்படுத்தும், அரசாங்கத்தின் ஆசைகளை அழகாக காட்டிய 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம், கனவுகள் வாக்குறுதிகளா னால் நடைமுறைகள் கானல்நீரே, கொள்ளையே ஆள்பவர்களின் குறிக்கோளானால் கஜானாக்கள் காலியாகும்-கடனிலே நாடு மூழ்கும், அரசியல் ஜனநாயகமும் அடிப்படை சுதந்திரங்களும் அதிகாரப் பகிர்வும் அபிவிருத்திக்கான அத்திவாரங்கள், சிறியனவாயும் சிதறுண்டும் பரவிக் கிடக்கின்ற வறுமையான கிராமங்களின் நாடே இலங்கை, இன்றைக்கு உரியதான முன்னேற்றங்களுக்கு ஏற்ற அரசியற் பொருளாதார அமைப்பு மாற்றம் வேண்டும் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

### 16235

**நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளும் சவால்களும்.** ஏ.எம்.அஸ்லம் சஜா. அக்கரைப்பற்று-2: பேஜஸ் புத்தக இல்லம், 117, பட்டினப்பள்ளி வீதி, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2021. (அக்கரைப்பற்று: நியூ செலெக்ஷன் ஓப்செட் பிரின்டர்ஸ், C.E.B. மின்சார நிலைய வீதி).

100 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 390., அளவு: 22x15.5 சமீ., ISBN: 978-624-6047-02-3.

24 மே 2019 முதல் 27 செப்டெம்பர் 2019 வரையான காலப்பகுதியில் விடிவெள்ளியின் வெள்ளிக்கிழமை இதழில் தொடர்ச்சியாக எழுதப்பட்ட 17 கட்டுரைகளின் விரிவாக்கப்பட்ட தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையினால் 2015ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த 2030ஆம் ஆண்டிற்கான 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை மையமாகக் கொண்டு இலங்கைச் சூழலை மையப்படுத்திய சில வழிகாட்டல் குறிப்புகளை இவ்வாக்கங்கள் உள்ளடக்குகின்றன. வறுமையில்லா வாழ்வு, பட்டினியற்ற வாழ்வு, சுகதேகியாக வாழ்தல், தரமான கல்வியும் சமூக முன்னேற்றமும், சமூக முன்னேற்றத்தில் பெண்களின் பங்களிப்பு, தூய்மையான நீரும் ஆரோக்கிய வாழ்வும், நவீன வினைத்திறன் மிக்க சக்தியும் நமது எதிர்காலமும், ஆக்கத்திறனுடைய வேலை வாய்ப்பும் பொருளாதார வளர்ச்சியும், உட்கட்டமைப்பிலும் தொழில் மையங்களிலும் புத்தாக்கத்தின் அவசியம், சமத்துவமின்மை: சமூக அபிவிருத்திக்குப் பாரிய சவால், உறுதியும் பாதுகாப்பும் கொண்ட நகரங்கள், குடியிருப்புகளின் உருவாக்கம், நுகர்வு மற்றும் உற்பத்தி வழிமுறைகளும் பொறுப்புடைமையும், காலநிலை மாற்றங்களையும் அதன் விளைவுகளையும் சிறப்பாக எதிர்கொள்ளல், கடல் மற்றும் கடல்சார் வனப்பாதுகாப்பு, சுற்றுச்சூழல் வளங்களையும் பல்லுயிர்களையும் பாதுகாத்தல், சமாதானச் சுழலும் சமூக நீதியும், நிலைபேறான அபிவிருத்தியில் நமது வகிபாகம் ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. கலாநிதி அஸ்லம் சஜா சமூக அபிவிருத்தி, மனிதாபிமான உதவி, திட்ட முகாமைத்துவம், மற்றும் காலநிலை மாற்றம் போன்ற துறைசார் விடயங்களில் பத்து வருடங்களுக்கு மேல் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவம் பெற்றவர்.

மேலும் பார்க்க:
நிலைமாறுகின்ற வாழ்க்கை. 16196

## 340.05 சட்டவியல் ஆய்விதழ்கள், ஆண்டுமலர்கள்

மேலும் பார்க்க:
கௌரி நீதிக்கான குரல். 16892

## 342 அரசியலமைப்புச் சட்டம்

### 16236

**இலங்கை அரசியல் திட்ட வரலாறு.** கருப்பையா பிரபாகரன். கண்டி: ஈஸ்வரன் புத்தகாலயம், 126/1, கொழும்பு வீதி, 1ஆவது பதிப்பு, 2013. (கண்டி: குறிஞ்சி பதிப்பகம், 280 A, நேத்ரா ஓப்செட் பிரின்டர்ஸ், டீ.எஸ். சேனநாயக்க வீதி).

xii, 308 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 22x15.5 சமீ., ISBN: 978-955-0660-08-7.

தேசியவாதம், சுதந்திரத்திற்கு முன்னரான இலங்கையின் அரசியல் வரலாற்றுப் பின்னணி, சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் அரசியல் வரலாறு, இரண்டாம் குடியரசு அரசியல் அமைப்பு, பிரதிநிதித்துவ முறைகள், அரசியல் அமைப்பின் 17ஆம் சீர்திருத்தம், அரசியல் அமைப்பின் 18ஆம் சீர்திருத்தம், இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை, பின்னிணைப்பு: குறு வினா-விடைகள் 300 ஆகிய தலைப்புகளின் கீழ் இலங்கையின் அரசியல் திட்ட வரலாறு இந்நூலில் விளக்கப்படுத்தப்பட்டுள்ளது. ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரிய பயிற்சியை மேற்கொண்ட திரு. க.பிரபாகரன், பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கலைமாணிப் பட்டத்தினையும் அரசறிவியல் துறையில் முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றுள்ளார். 2005ஆம் ஆண்டில் நல்லாசிரியருக்கான ஜனாதிபதி விருதினையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61321).

## 360 சமூக சேவை நிறுவனங்கள்

### 16237

**எண்ணம் போல் வாழ்க்கை: மனிதத்துடன் சமூகத்துக்கான ஒரு பயணம்.** நிவேதா சிவராஜா. யாழ்ப்பாணம்: மனிதம் வெளியீடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு, 2021. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 672 B, காங்கேசன்துறை வீதி).

xv, 106 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ., ISBN: 978-624-98018-0-6.

மனிதம் அமைப்பானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் 2016இல் உருவாக்கப்பட்ட ஒரு சமூக சேவை அமைப்பு. கல்வி, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, தொழில் வழிகாட்டல் மற்றும் பெண்கள் நலன் ஆகிய துறைகளில் சமூக உணர்வுடன் மனிதம் பயணித்து வருகின்றது. தமது சமூக மாற்றத்திற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் மனித மணித்தியாலங்களை முதலீடாக்கிக் கொண்டிருக்கின்ற ஒவ்வொரு இளம் சமூக செயற்பாட்டாளர்களின் களப் பயணத்தின் அழகிய தருணங்களும் பொக்கிஷமானவை. அப்படியாக மனிதத்தில் இணைந்து செயற்பட ஆரம்பித்திருந்த இந்நூலாசிரியர் சமூக செயற்பாடுகளின்போது தான் சந்தித்த சவால்களையும் கற்றுக்கொண்ட பாடங்களையும் பெற்றுக்கொண்ட அனுபவங்களையும் இந்நூலில் தொகுத்தளித்துள்ளார். மனிதத்தில் ஒருத்தியாய் என்னுடைய முதல் நாள், காட்டுப்புலத்தில் மனிதம், காட்டுப் புலத்தில் தொடர்ந்தும் மனிதம், தொடர்ச்சியான கண்காணிப்பு, காட்டுப்புலத்தில் ஒரு நூலகம், மனிதமும் பல்கலைக்கழக நாட்களும், மனிதத்தால் ஆசீர்வதிக்கப்பட்ட பிறந்தநாள், மழலைகளுடன் எனது 24ஆவது பிறந்தநாள், சிறுவர்களாகவே மாறிய சிறுவர்தினக் கொண்டாட்டம், மாற்றுத் திறனாளிகளுடன் மனநிறைவான பொழுதுகள், யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவும் மனிதமும், பரீட்சை நாட்களும் மனிதத்தின் நிதி சேகரிப்பும், கொரோனாவால் கலைந்துபோன

நிதி சேகரிப்பு, யாழின் வெள்ளமும் மனிதத்தின் இடர்கால பணிகளும், வெள்ள இடர் காலத்தில் நிதி சேகரிப்பும் கள நடவடிக்கையும், இணையம் வாயிலாகவும் இயங்கிய மனிதத்தின் நாட்கள் ஆகிய 16 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 362.4 மாற்றுத்திறனாளிகளும் சேவைகளும்

### 16238

**மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள்.** பி.மாணிக்கவாசகம். வவுனியா: தனேத்ரா வெளியீட்டகம், 7/3, 10ஆவது ஒழுங்கை, வைரவ புளியங்குளம், 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (வவுனியா: பொய்கை பதிப்பகம், கந்தசாமி கோவில் வீதி).

xxii, 536 பக்கம், விலை: ரூபா 1200., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-624-98500-0-2.

ஊடகவியலாளர் பி.மாணிக்கவாசகம் எழுதிய மாற்றுத்திறனாளிகள் தொடர்பான கட்டுரைகள் இவை. மாற்றுத்திறனாளிகளுக்கான மாற்றத்தை மட்டுமே வேண்டுவது இக்கட்டுரைகளின் நோக்கமல்ல. நீதி தேடும் ஒரு சமூகத்தின் வாழ்வியல் சூழலையும் சமூக நிலைப்பாடுகளையும் உளவியல்ரீதியாக சமூக அறிவியல் ஆய்வு நோக்குடன் இவை எழுதப்பட்டுள்ளன. வாழ்க்கையை என்னவென்று சொல்வது, இயலாமைக்குள்ளே இயலுமை, இயல்பூக்கம் நிறைந்த சூழமைவு தேவை, முடிந்தும் முடியாத போராட்டம், உறுதிப்படுத்த வேண்டிய விசேட உரிமைகள், குடும்பச் சுமை உள்ளவர்கள் சிகிச்சைபெறச் செல்வதில்லை, ஒரு பிடி தசைய அள்ளிக்கொண்டு போனது, நினைத்துக்கூட பார்க்க முடியாத திருமண பந்தம், வைகறையின் வாழ்வியல் உதவி, ஆவணத் திரட்டலின் அவசியம், சுய வலிமையும் இல்லை சுமைதாங்கியும் இல்லை, கலகலப்பாகப் பழகி சிரித்துப் பேசினால் காயம் ஆறுமோ?, திறமைகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், நம்பிக்கை அளித்த நவம் அறிவுக்கூடம், கையேந்தும் நிலையை மாற்ற வேண்டும், மாற்றுத் திறனாளி சிறுவர்களின் மனத்துயரங்கள் நீங்குமா?, வெள்ளைக்கொடி ஏந்திய ஒரு பயணம், யாரைப் பிடித்து புத்தகங்களை வாசிக்கச்சொல்லி பதிவு செய்வது?, எல்லையற்ற திறமைகள் ஒளிவீச வேண்டும், உரிமைகளுக்காக தகுதிக்கு மீறி போராட வேண்டியுள்ளது, திறமை இருந்தும் தொழில் வாய்ப்பின்றி வாடும் நிலை, கண்ணும் கைகளும் இயலாத போதும் கலைப்பீடம் தெரிவான விஜயலட்சுமி, யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் விடுதியே மாற்றுத்திறனாளிகளின் வீடு, கண்கள் பாதிக்கப்பட்டன கைகளையும் இழந்தேன், "நாக்கால நம்பர அடையாளப்படுத்தி பல்லால டயல் செய்வேன்", அந்தப் பிள்ளை இரவு முழுவதும் கதறிக்கொண்டே இருந்தது, தொடர்ச்சியான கவனிப்பும் அரவணைப்பும் அவசியம், வென்றவர் தோற்றவர் என்ற அணுகுமுறை மாறவேண்டும், அரசும் சமூகமும் ஊக்குவிக்க வேண்டும், விசேட சட்டங்கள் அவசியம், அக்கறை கொள் ளாத அரசியல்வாதிகள், அடிப்படை உரிமை, உயர்கல்வி வசதிகள் செய்யப்பட வேண்டும், மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான முன்பள்ளிகள், சைகை மொழியின் தேவை, "புகை மண்டலம் சூழ்ந்தது கீழே விழுந்து மூச்சுத் திணறி மயங்கினேன்", கல்வி ஊக்குவிப்பு உதவிகளைப் பெற முடியாதுள்ளது,

அணுகுமுறைகள் அந்நியப்படுத்துகின்றன, கை இல்லாதவர்களைக் கல்யாணம் முடிக்க யார் முன்வருவார்கள்?, என்னை நம்பி ஒரு வேலை தர ஒருத்தரும் இல்லையே, கைகள் இல்லாமல் போனதும் செத்துப் போனதாகவே நினைத்தேன், தலவரைப் பற்றி என்ன நினைக்கிறோம் என அறியப் பார்த்தார்கள், அன்பும் அரவணைப்பும் அவசியம், பிச்சை எடுக்கும் நிலை உருவாகிவிடக் கூடாது, நவம் அறிவுக் கூடத்தைச் செயற்படுத்த வேண்டும், இதமான உளவியல் சூழல் அவசியம், மாற்றுத் திறனாளி சிறுவர்களுக்கு நிறுவன ரீதியான செயற்பாடு தேவை, எருமை சோளம் தின்னும் காட்சி, பொருத்தமற்ற சக்கர நாற்காலி பாதிப்பை ஏற்படுத்தும், மூளை முடக்குவாதத்தினால் சக்கர நாற்காலியில் தஞ்சம், சிறுவர்களுக்குப் படுக்கைப் புண் வராமல் தடுக்க முடியுமா?, தாம்பத்திய வாழ்க்கை சாத்திமா?, விசேட தகைமைகளும் பயிற்சிகளும் ஆசிரியர்களுக்கு அவசியம், மனிக்பாம் அகதி முகாமில் விசேட தேவையுடையோருக்கும் வகுப்புகள், பிரதேசரீதியில் பிள்ளைகளின் முரண்பாடான நிலைமைகள், விசேட தேவைக்குரிய மாணவர்கள் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டிருப்பர், வடக்கில் 45 ஆயிரம் மாற்றுத்திறனாளிகள், மாற்றுத்திறனாளி பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும், அங்கக் குறைபாடு ஆற்றல் குறைபாடல்ல ஆகிய 58 தலைப்புகளில் எழுதப்பட்ட கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது.

## 16239

**வலுவிழந்தோரின் வாழ்வை வளமாக்குவோம்.** ந.சிவராஜா (மூலம்), மலையரசி சிவராஜா (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: திருமதி மலையரசி சிவராஜா, 47/3, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2023. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

ix, 72 பக்கம், ஒளிப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

இது வைத்திய கலாநிதி அமரர் நடராஜா சிவராஜா அவர்களின் ஞாபகார்த்த வெளியீடு. 20.02.2023 அன்று இடம்பெற்ற அன்னாரின் நான்காம் ஆண்டு நினைவுதின நிகழ்வின்போது வெளியிடப்பெற்றது. மாற்று வலுவுள்ளோர் மனங்களை வென்றவர்-வைத்திய கலாநிதி நடராஜா சிவராஜா என்ற தலைப்பில் சுன்னாகம் வாழ்வகம் அமைப்பின் தலைவர் ஆ.இரவீந்திரன் அவர்களின் அறிமுக உரையுடன் இந்நூலில் வைத்திய கலாநிதி என்.சிவராஜா அவர்கள் எழுதி அவ்வப்போது ஊடகங்களிலும் ஆய்வரங்குகளிலும் வெளியிடப்பெற்ற ஒன்பது கட்டுரைகள் அவரது துணைவியார் வழியாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. ஊனமுற்றவர்களுக்கு பண உதவியல்ல-சமூக உறவே தேவை, ஊனமுற்றோர் புனர்வாழ்வு, வலுவிழந்தோரின் வாழ்வை வளமாக்குவோம், Let's enrich the lives of people with disabilities, Disability and Health, வலுவிழந்தோருக்கு வலுவூட்டும் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம், வலுக்குன்றுதலும் அதன் சவால்களும், Disability and it's Challenges, வலுக்குன்றியவர்களும் சமூகத்தின் வகிபாகமும் ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

## 362.7 சிறுவர் பராமரிப்பு

### 16240

**சந்தோஷ ராகங்கள்.** *கமலினி கதிர். திருச்சி 620 003: இனிய நந்தவனம் பதிப்பகம், எண் 17, பாய்க்காரத் தெரு, உறையூர், 1ஆவது பதிப்பு, ஜுன் 2022. (சென்னை: ஏ.கே. பிரிண்டர்ஸ்).*

xiii, *14-104 பக்கம், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், விலை: இந்திய ரூபா 100.00, அளவு: 21*x*14 சமீ.,* ISBN: *978-93-93735-03-4.*

*நூலாசிரியர், குழந்தைகளின் வளர்ச்சியில் பெற்றோர்களின் பங்கு என்ன என்பதை விளக்கும் கருத்துக்களை இந்நூலில் படிமுறையாக வழங்கியிருக்கிறார். குழந்தை களிடம் நற்பண்புகள் ஓங்கிட, இரண்டு மாதத்திலிருந்து ஆறு மாதம், ஆறு மாதத்திலிருந்து இரண்டு வயது வரை, இரண்டு வயது-நான்கு வயது, நான்கு ஐந்து வயதுப் பராயம், ஆறு வயதுக்கும் பதினொரு வயதுக்கும் உட்பட்டோர், பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்டோர் என ஏழு பகுதிகளாக வகுத்து தனது ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்.*

மேலும் பார்க்க:
என் உடல் என்னுடையதே. 16432
நீர்வேலி பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும்: 16267

## 363 சுற்றாடல், சூழல் மாசுபடுதல் அமைப்புகள்

### 16241

**பசுமை அமைதி விருதுகள்: சூழல் பொது அறிவுப் பரீட்சை.** *தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம். யாழ்ப்பாணம்: கிருபா லேணர்ஸ், இல. 226, கஸ்தூரியார் வீதி, 1ஆவது பதிப்பு, 2021. (சாவகச்சேரி: மிக்கி பிரிண்டிங் ஸ்பெஷலிஸ்ட் A9 வீதி, சங்கத்தானை).*

*20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5*x*21 சமீ.*

*தரம் 9 முதல் 13 வரை பயிலும் மாணவர்களிடையே பசுமை அமைதி விருதுக் குரியவர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு சூழல் பொது அறிவுப் பரீட்சை கடந்த 03.10.2021 அன்று இணையவழியூடாக தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெற்றது. இணையவழிப் பரீட்சையில் இடம்பெற்ற 100 பல்தேர்வு வினாக்களினதும் அச்சுவடிவம் இதுவாகும்.*

மேலும் பார்க்க:
யோகமும் இயற்கையும் 16065

## 370 கல்வியியல்

### 16242

**அறிவுலக நிர்மாணிகள்: ஆசிரியரும் சமூகமும்.** ந. பார்த்திபன். வவுனியா: நடராஜா பார்த்திபன், இல. 455/9, எச்.பி.வீதி, இறம்பைக்குளம், 1ஆவது பதிப்பு, 2020. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

xv, 85 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-43350-1-1.

ஆசிரிய செயற்பாட்டில் காணப்படும் பகுப்புகள், பொருளாதார காரணிகள், பொருளாதார காரணிகளின் தாக்கங்கள், சமூகத்தின் கணிப்பு, செயற்பாடுகளின் மதிப்பு, முடிவுரை ஆகிய ஆறு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்பாக "எத்திசையிலும் விழுமிய சிந்தனைகள் எமக்குக் கிடைக்கட்டும்", "ஆசிரியர்கள் ஆண்டவனால் உருவாக்கப்படுகிறார்கள்" ஆகிய இரு ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலாசிரியர் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ்மொழிப்பாட ஆசிரியராகப் பணியாற்றுபவர்.

### 16243

**ஆரம்பக் கல்வியில் பல்மட்டக் கற்பித்தல் பரிகாரக் கற்பித்தல் செயல்நிலை ஆய்வு.** பாலசுப்பிரமணியம் தனபாலன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

xii, 208 பக்கம், விலை: ரூபா 700., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-606-9.

அறிமுகம்/ மாணவர் மையக் கல்வியில் பல்மட்டக் கற்பித்தல், பரிகாரக் கற்பித்தல், செயல்நிலை ஆய்வு/ மத்திய மாகாணத்தில் பல்மட்டக் கற்பித்தல் கற்றல் செயன்முறை/ ஆரம்பக் கல்வி வகுப்பறையில் பரிகாரக் கல்விப் பிரயோகங்கள்/ பரிகாரக் கற்பித்தலில் தமிழ்மொழி இடர்ப்பாடுகளை இனங்காணல்/ பிரதிபலிப்பும் செயல்நிலை ஆய்வும்/ ஆசிரிய வாண்மையை உயர்த்தி மாணவர் கற்றல் இடர்ப்பாடுகளை நீக்க உதவும் செயல்நிலை ஆய்வுகள்/ "கொண்டுசெல்லலுடன் ஈரிலக்க, மூவிலக்க எண்களின் கூட்டல் திறனைப் பெறுவோம்" இலங்கைப் பாடசாலை ஒன்றில் தரம் 03 வகுப்பறையில் கணித பாடத்தில் மேற்கொள்ளப்பட்ட செயல்நிலை ஆய்வு அறிக்கை/ யாழ்ப்பாண மாவட்ட ஆரம்பக் கல்விப் பாடசாலைகளில் 2003ஆம் ஆண்டிலிருந்து சிறுவர் நட்புறவுப் பாடசாலைச் செயற்றிட்டத்தை அமுலாக்கலும் அது தொடர்பான பிரச்சினைகளும்/ யாழ்ப்பாண மாவட்ட ஆரம்பப் பாடசாலைகளில் 2003ஆம் ஆண்டின் கல்விச் சீர்திருத்தங்களை அமுலாக்குகையில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் ஆகிய 10 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பா.தனபாலன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தினைப் பெற்றவர். ஆலோசனை வழிகாட்டல் பாடத்தைக் கல்விமாணி, கல்வி முதுமாணி கற்கும் மாணவர்களுக்குக் கற்பிப்பதுடன் இத்துறைசார் கலாநிதிப் பட்ட ஆய்வை மேற்கொள்ளும் வாண்மையாளர்களுக்கு மேற்பார்வையாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

### 16244

**உயர்கல்விச் சிந்தனையை வெகுஜனமயமாக்கல்.** சோ.சந்திரசேகரம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 2வது பதிப்பு, 2017, 1ஆவது பதிப்பு, 2013. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

vi, 102 பக்கம், விலை: ரூபா 340., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-685-025-3.

சோமசுந்தரம் சந்திரசேகரம் ஆசிரியராகப் பணியை ஆரம்பித்து, பின்னர் கல்விப்புல விரிவுரையாளராகவும், கல்வியியல் பேராசிரியராகவும் உயர்ந்து கல்விப்பீடப் பீடாதிபதியாகவும் தனது பணிகளை விரிவாக்கிக்கொண்டவர். இந்நூலில் இவர் இலங்கையில் உயர் கல்வியில் புதிய போக்குகள், இலங்கையின் உயர் கல்வியின் எதிர்காலம், இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வி: சில புதிய போக்கு, இலங்கைப் பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு மாணவர்கள், உயர்கல்வியின் உலகமயமாக்கம், தனியார் உயர்கல்வி உலகளாவிய செல்நெறிகள், உயர்கல்வியின் வெகுசனமயமாக்கம், சீனப்பல்கலைக்கழகங்கள் நாடும் வெளிநாட்டுப் பேராசிரியர்கள், உலகளாவியரீதியில் பல்கலைக்கழக அசிரியர் பெறும் சம்பளங்கள், புதிய தென்னாசிய பல்கலைக்கழகம், உலகளாவிய பல்கலைக்கழகங்களை வரிசைப்படுத்தும் செயற்பாடு, மெய்நிகர் பல்கலைக்கழகம், உலகின் அதிசிறந்த பல்கலைக்கழகங்கள், மேற்கு நாடுகளில் மாறிவரும் பாடசாலைகள், சர்வதேச கல்விச் செல்நெறிகள் ஆகிய தலைப்புகளில் எழுதிய 15 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27247).

### 16245

**கல்வி மீதான நம்பிக்கைகளும் புதிய இலக்குகளும்.** எஸ்.எல்.மன்சூர். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1வது பதிப்பு, 2015. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

vi, 114 பக்கம், விலை: ரூபா 360., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-685-034-5.

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் நீண்டகால அனுபவம் கொண்ட எஸ்.எல். மன்சூர் கல்வித் திணைக்களத்தில் ஆசிரிய ஆலோசகராகப் பணிபுரிகின்றார். பாடசாலைக் கல்வியில் மாணவர் ஆசிரியர் வகிபங்கு, பாடசாலைகளில் முகாமைத்துவ சீரின்மை, மாணவர் இடைவிலகல் பிரச்சினைகள், பாடசாலைக் கல்வி மீதான நம்பிக்கை, சமூகம் எதிர்பார்க்கின்ற மாணவர்கள், கற்றலில் மொழியின் பங்களிப்பு, எமது கல்வி வளமும், மாணவச் செல்வங்களும், வீடுகளும் கற்றலுக்கான தளங்களே, பாடசாலைக் கல்வியில் பண்புசார் விருத்திக்கான காரணிகள், செயல்வழி ஆய்வில் ஆசிரியர்கள், வறுமையும் கல்வியும், ஆரம்பக் கல்வியில் சுற்றாடல்சார் செயற்பாடுகள், அறிஞர்களது பார்வையில் கல்வியின் முக்கியத்துவம், கல்வி மீதான நம்பிக்கைகளும் புதிய இலக்குகளும், மனித மேம்பாட்டுக்கு உதவும் கல்வி, மாணவர்களும் பரிகாரக் கற்பித்தலும் ஆகிய 16 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. மாணவர்கள் தங்கள் கற்றல் செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாக விளங்கும் வாண்மைத்துவ போக்குகள்

உள்ளிட்ட பல்வேறு விடயங்களை இந்நூல் தெளிவாக வெளிக்கொணர்கின்றது. அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில்ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசக ராகக் கடமையாற்றும் நூலாசிரியர் எஸ்.எல்.மன்சூர் சிறந்த விமர்சகராகவும், எழுத்தாளராகவும் அறியப்பட்டவர். இது ஆசிரியரின் ஆறாவது நூலாகும். (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27244).

## 16246

**கோவிட் -19: பேரிடர் காலத்தில் இளையோரின் கல்வி-சவால்களும் சாத்தியங்களும்.** இ.இராஜேஸ்கண்ணன். யாழ்ப்பாணம்: ஆறுதல் நிறுவனம், 51, வைமன் வீதி, நல்லூர், 1ஆவது பதிப்பு, புரட்டாதி 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

xii, 40 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-624-98325-0-3.

சமூக இடைவெளி மற்றும் எண்ணிம இடைவெளி ஆகிய இரண்டும் சமூகம் சார்ந்த பிரச்சினைகளை எவ்வாறு உருவாக்கியுள்ளன என்ற கருப்பொருளை சமூகவியல் நோக்கில் இந்நூல் ஆராய்கின்றது. சமூக இடைவெளி சக எண்ணிம இடைவெளி சமன் கல்வியில் ஏற்றத்தாழ்வு, கோவிட் -19 பேரிடரும் பிள்ளைகளின் சமூகமயமாக்கலிலான தேக்கநிலையும்: மாற்றுகளைத் தேடுதல் குறித்த கருத்தாடலுக்கான அவசியம், கோவிட் -19 பேரிடர் காலத்து இளைஞர்கள்: கரிசனை கொள்ளவேண்டிய பாதிப்புகளும் பரிகாரங்களும், நிலைமாறும் கல்வி ஒழுங்கில் பரீட்சை மையக் கல்வி: அசாத்தியங்களைக் களைவித்தலும் சாத்தியங் களை விளைவித்தலும், செயலிகள், சாதனங்களை மையப்படுத்திய பேரிடர்கால உயர்கல்வி: கல்வியில் சுயசிந்தனையை காவுகொள்ளும் புதிய ஆதிக்கவாத பொறிமுறை ஆகிய ஐந்து இயல்களை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. இராஜேஸ்வரன் இராஜேஸ்கண்ணன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தின் சமூகவியல் துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார்.

## 16247

**நவீன சர்வதேசக் கல்விச் சிந்தனைகள்.** சோ.சந்திரசேகரம். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2022. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

viii, (22), 118 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-659-725-7.

நவீன சர்வதேசக் கல்விச் சிந்தனைகளைப் பற்றிப் பேசும் இந்நூல், நவீனத்துவமும் பின்நவீனத்துவமும் பின்பின் நவீனத்தவமும், கல்வியின் வங்கிக் கோட்பாடு-மறு வாசிப்பு, பின் நவீனயுகமும் கல்வியும், அவசர நிலைக் கல்வி என்னும் கருத்தாக்கம், சர்வதேச கல்விச் செல்நெறிகள், மனிதவள விருத்தியும் கல்வியும், இரு மடங்காகப் பெருகும் அறிவு: புதிய நூற்றாண்டின் அற்புதம், கல்வித் துறையில் நியாயத்தன்மை, 21ஆம் நூற்றாண்டிற்கான கல்வி: சில அண்மைக்கால ஆலோசனைகள், 21ஆம்

நூற்றாண்டுக்கான கல்வியின் பண்புகள், வளர்ந்தோர் கல்விக் கோட்பாடுகள், வலைத் தொகுதிப் பொருளாதாரமும் எண்மப் பொருளாதாரமும், மானிடப் பொருளாதாரச் சிந்தனைகள், மார்க்ஸியத் தத்துவமும் கல்வியும், அல்பர்ட் ஐன்ஸ்டைனின் கல்வி பற்றிய மாற்றுச் சிந்தனைகள், அறிவுப் பொருளாதாரம் சில வரையறைகள், பாடசாலைக் கல்வியில் அழகியல், செயற்கை விவேகமும் கல்விச் செயற்பாடும் ஆகிய 18 கட்டுரைகளைக் கொண்டுள்ளது. பேராசிரியர் சோ.சந்திரசேகரம் கல்வித்துறையில் நான்கு தசாம்சங்களுக்கு மேலாகப் பணியாற்றியவர். (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27271).

## 16248

**பட்டதாரி ஆசிரியர் மற்றும் கல்வித்துறை சார் போட்டிப் பரீட்சைகளுக்கான வழிகாட்டி நூல்.** P.உமாசங்கர். கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L. 1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2023. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L. 1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

iv, 242 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

இலங்கையில் கல்வித்துறைசார் போட்டிப் பரீட்சைகளுக்கென வெளியிடப்படும் தமிழ்மொழிமூல நூல் இதுவாகும். "கல்வி பொது அறிவு" என்ற பிரிவின்கீழ் 28 தலைப்புகளின் கீழ் முழுமையான கல்விசார் தொது அறிவு விடயங்கள் தரப்பட்டுள்ளன. 5 பொது அறிவு மாதிரி வினாத்தாள்கள் விடையுடன் உள்ளடக்கப்பட்டுள்ளன. "நுண்ணறிவும் உளச்சார்பும்" என்ற பிரிவில் 60 தலைப்புகளில் நுண்ணறிவு உளச்சார்பின் அறிமுக விளக்கம் மற்றும் 10 நுண்ணறிவு உளச்சார்பு மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் உள்ளடக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70221).

## 16249

**பாடசாலை நிதி முகாமைத்துவம்.** ஏ.எம்.மாஹிர். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

x, 282 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 750., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-768-4.

பாடசாலை நிதி முகாமைத்துவத்திற்கான அறிமுகம், அரச பாடசாலை ஒன்றின் நிதி மூலங்கள், பாடசாலைகளின் வரவு-செலவு திட்ட முகாமைத்துவம், பாடசாலைகளில் அதிகாரக் கையளிப்பும் நிதிக் கட்டுப்பாடும், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு, பாடசாலைப் பெறுகை முறைமை, பாடசாலைகளில் கொடுப்பனவுகள் தொடர்பான ஏற்பாடுகள், பாடசாலை ஒன்றில் காசுகள், காசோலைகள் ஊடான கொடுப்பனவுகள், வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகள், பாடசாலையொன்றில் வசதிகள் சேவைகள் கட்டணங்கள், தரமான கல்வி உள்ளீடுகள், பாடசாலை மாணவர் விடுதி முகாமைத்துவம், பாடசாலை உணவகம்,

பாடசாலையொன்றின் பழைய மாணவர் மாணவிகள் சங்கம், பாடசாலைகளால் மேற்கொள்ளப்படும் கல்விச் சுற்றுலா, பாடசாலையொன்றில் பொருட்கள் சுற்றாய்வுச் சபை, பாடசாலையில் ஏற்படும் இழப்புகளும் அதைப் பதிவழித்தலும், பாடசாலையினால் பேணப்படவேண்டிய புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள், பாடசாலை மட்ட கணக்காய்வும் உள்ளகக் கணக்காய்வும் ஆகிய 19 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்புகளாக அதிபர்கள், ஆசிரியர்களின் கடமைப்பட்டியல், வலயக் கல்வி அலுவலகம் மற்றும் பாடசாலைகள் தொடர்பாக பேணப்படும் நிதி முகாமைத்துவம் தொடர்பான நியதிகளும் சுட்டிகளும், பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட பண்பு ரீதியிலான அளவுரீதியிலான கட்டமைப்பு ரீதியிலான அபிவிருத்திக்கான திட்டமிடல் மற்றும் பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பான சுற்றுநிருப மாற்றங்கள் ஆகிய மூன்று ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன. காத்தான்குடியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஏ.எம்.மாஹிர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது இளமாணிப் பட்டத்தையும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அபிவிருத்திப் பொருளியலில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றவர். இது இவரது நான்காவது நூல்.

### 16250

**மலையக சமூக மேம்பாட்டில் ஆங்கில மொழி மற்றும் மூன்றாம் நிலை கல்வியின் முக்கியத்துவம்.** எஸ்.இராஜதுரை. கொழும்பு 8: அமரர் இர. சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு, மங்கள வீதி, மனிங் டவுன், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2022. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

iv, 44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

12.12.2022 அன்று அமரர் இர. சிவலிங்கம் ஞாபகார்த்த குழுவின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இருபத்தி மூன்றாவது நினைவுப் பேருரை இதுவாகும். பதுளையைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாநிதி எஸ்.இராஜதுரை, கொழும்புப் பல்கலைக் கழகத்தின் ஆங்கில மொழித்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராவார்.

மேலும் பார்க்க:
இசையும் ஆசிரியத்துவமும். 16356
காலத்தை வென்ற கமலம்: 16900

## 370.05 கல்விநிறுவனங்களின் ஆய்விதழ்கள், ஆண்டு மலர்கள்

### 16251

**அறிவியல்கதிர் 1985-1986.** தி.சப்தகரன், கா.சந்திரகுமாரி (இதழாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: விஞ்ஞான மன்றம், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், 1ஆவது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: ஸ்ரீதேவி அச்சகம், நல்லூர்).

58 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

விஞ்ஞான அறிவு நூல்களை தமிழில் எழுதும் ஆர்வத்தை பாடசாலைப் பருவத்திலேயே வளர்க்கும் நோக்கில் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மாணவர்களால் இம்மலர் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்விதழில் நோ உடலின் முன்னறிவிப்பு, இலத்திரனியல் பற்றிய ஒரு கண்ணோட்டம், சில வெப்ப வலய நோய்களும் தடுப்பு ஆராய்ச்சிகளும், நுண்ணுயிருலகம், விஞ்ஞான விற்பன்னர் சிலர், வால் வெள்ளி, வானிலை, நிற ஒளிக் கதிர்களின் தன்மைகள், இலங்கையின் பனம் தொழில் வளம், இப்படியும் நடக்கிறது, எண் கோலங்கள், சில உண்மைகள் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 281745).

### 16252

**இந்துவின் தமிழ்த்தீபம் 1999**. ஞா.கணாதீபன், எஸ்.உமாசுதன், ம.ஜனன், ஆர்.திருச்செந்தூரன் (ஆசிரியர் குழு). கொழும்பு 4: பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 1999. (கொழும்பு 13: அடிக்ஷன் வெளியீட்டகம், 21, ஏ.ஜீ.ஹினிஅப்புஹாமி மாவத்தை).

121 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி வருடாந்தம் நடத்தும் "முத்தமிழ் விழா" வின்போது வெளியிடப்பட்டுள்ள 1999ஆம் ஆண்டுக்கான ஆண்டு மலர் இது. பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மாணவர்களின் மாதாந்த சஞ்சிகையான "தமிழ்ச்சுடர்" ஆண்டுச் சிறப்பிதழாக இம்மலர் மாணவர்களின் தேர்ந்த ஆக்கங்களுடன் வெளிவந்துள்ளது.

இவ்விதழில் கவிதைத் துளிகளாக தமிழே... உயிரே (M.மோஹான்), எனது தாய் நாடே (S.செந்தூரன்), என் நண்பன் (த.சாரங்கன்), தந்தை (A.கோபிநாத், ஆண்டு 5) ஆகிய ஆக்கங்களும் கீழ்க்கண்ட பிற மாணவ ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. ஆறு- முகில்கள் (செங்கிரணன்), நான் விரும்பும் பெரியார் (J.கிருஷாந்தன்), வரலாற்றுத் தொடர்கதை: திங்களேர் தரு ராஜாதி ராஜன் (ச.வித்யாசங்கர்), விஞ்ஞான விளக்கங்கள் (செ.யோகேஸ்வரன்), ஒருவருக்கு தேவையான ஏழு குணங்கள் (ப.கமலரூபன்), இதுவும் வினா விடை தான் (க.மயூரன், ஆண்டு 8), தெரிந்தவற்றை உங்களுக்குத் தெரிவிக்கின்றோம் (N. கிஷாந்தன், ஆண்டு 7), தாய் (G.மகிபன், ஆண்டு 5), நியாயமாக சிந்திப்போம் (மா.தர்மரட்ணம், ஆண்டு 11), ஒரு நிமிடத்தில் இவ்வளவும் (பி.அனுராஜன், ஆண்டு 7), உலகில் புகழ்பெற்ற நூல்கள், சுதந்திர மாதங்களில் சில நாடுகள் (ஆ.அஜந்தன், ஆண்டு 10), பங்குள்ள உறவு (மா.தர்மரட்ணம், ஆண்டு 11), சிந்தனைத் துளிகள் (S.சதீஸ், ஆண்டு 9), எம்மவர் கற்க வேண்டியது இன்னும் பல, எங்கள் தமிழ் மொழி உலகில் இனிய மொழி (ஆர். துஷ்காந்தன், ஆண்டு 6), விடையை சிந்தியுங்கள் (ஜெ.ஜெயந்தா, ஆண்டு 8), கலைகள் கற்போம் கவலை மறப்போம் (வி.மயூரன், ஆண்டு 13), அன்னையின் அருள் (த.ரிசாங்கன்), கடிப்புதிர் - முயற்சித்துப் பாருங்களேன் (ஆ.இ.தவமயூரன், ஆண்டு 9), அனைவருக்கும் கல்வி (சி.அகிலன், ஆண்டு 10), அன்றாட வாழ்வில் சாந்தி நிலவுவதற்கு வீட்டில், சமுதாயத்தில் கையாள

வேண்டியவை (S. K. ஸ்ரீராம்), செய்வன திருந்தச் செய் (T. ஜெயந்தன்), நவீன யுகத்தில் பிள்ளைகள் படும்பாடு (R. சுரேசன், ஆண்டு 6), இதுவரை இவ்வுலகில் செய்யப்பட்ட வியக்கத்தகு சாதனைகள் சில, மூன்று தட்டுக்களில் நால்வருக்கு விருந்து : புதிர் (ஜெ.ஜெயந்தா, ஆண்டு 8), கொழும்பு இந்துக்கல்லூரி ஆசிரியரும் மேல்மாகாண ஆசிரிய ஆலோசகருமான திரு. த. அம்பிகைபாகன் அவர்களுடன் நேர்காணல் (மயூரன்), மாணவர் நாம் (ஹயானந்தன், ஆண்டு 1), மழைக் காட்சி (சஞ்சுதன், ஆண்டு 1), தோட்டம் (துஷான், ஆண்டு 1), பாடசாலை முதல் நாள் (S. கிரிசாந்த சர்மா, ஆண்டு 1), நான் கண்ட காலைக் காட்சி (பி.சிந்துஜன், ஆண்டு 3), உண்மையே பேசு (ச.திலக்ஷன், ஆண்டு 4), எனது பொழுது போக்கு (R. கௌசேக், ஆண்டு 4), நற்பழக்க வழக்கங்களைப் பேணுவோம்: விபுலானந்த அடிகளார் (ப.ஆரணன், ஆண்டு 3), மகாகவி பாரதியார் வாழ்வில்... (ச.விஜயபிரவீன், ஆண்டு 9), நற்சிந்தனைகள் சில... (கி.நிசாந்தன், ஆண்டு 5), எனது பாடசாலை - இந்து அன்னையே (த. பாலமுரளி),எனது கடவுள் (தே. தனுஜன், ஆண்டு 2), தாய் (அ.பிரியதர்சன், ஆண்டு 11), அழகு நிலா (B.ஸ்ரீசபரீசன், ஆண்டு 2), தாய் தந்தை பேண: சிறு கட்டுரை (திலிப் பாரத், ஆண்டு 7), புத்தம் புது பூமி வேண்டும் (சு.உமாசுதன்), தமிழர் கலைகள் (ஞாலகீர்த்தி மீநிலங்கோ), சிறுகதை: அச்சமில்லை அச்சமில்லை (A.R. திருச்செந்தூரன்), நான் விரும்பும் தொழில் (வி.செந்தூரன், ஆண்டு 6), உறங்காத இரவுகள் (வ.கேதீஸ்வரன், ஆண்டு 10), சமாதானமும் சுபீட்சமும் (சு.மனோஜ்குமார், ஆண்டு 9), சிறுகதை: இவர்களும் மனிதர்கள் (தெ.சிந்துஷன், ஆண்டு 11), உலக சமாதானமும் உயிர்க்கொலைத் தவிர்ப்பும் (கு.விபுலாசன், ஆண்டு 11), சமாதானமும் சுபீட்சமும் (சு.உமாசுதன், ஆண்டு 13), தியாகி (T. ஜெனீவன், ஆண்டு 13), என்ன வளம் இல்லை (ஆ.ஜெகன், ஆண்டு 13), புலமைப்பரிசில் பரீட்சை (சி. மயூரன், ஆண்டு 4), ஜடபரதர் (வி. ரவீந்தர், ஆண்டு 7), அன்பு செலுத்து (வாமதேவன் வசந்தன், ஆண்டு 11), வித்தக விநாயகர் (தி. சுதன், ஆண்டு 12), சங்கக் காதல் (எஸ்.தி. சுதாகரன், ஆண்டு 13), காலை நேரம் (ஆ.இ.தவமயூரன், ஆண்டு 10), தேடலுள்ள வரை வாழ்க்கை... (ஆ.இ.தவமயூரன், ஆண்டு 10), முத்தமிழ் அன்றும் இன்றும் (ச.சந்திரகாசன், ஆண்டு 13), பாடசாலை களுக்கிடையில் முத்தமிழ் விழாவையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள், பாடசாலைக்குள் முத்தமிழ் விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள்.

### 16253

**இந்துவின் தமிழ்த்தீபம் 2001**. ஆ.கோகுலன், இ.கிருஷன், கு.வேணுகோபன் (ஆசிரியர் குழு). கொழும்பு 4: பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, 1ஆவது பதிப்பு, மார்ச் 2001. (கொழும்பு: எஸ்.சற்குணராஜா, எஸ்.பிரின்ட்).

xii, 84 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி வருடாந்தம் நடத்தும் "முத்தமிழ் விழா" வின்போது வெளியிடப்பட்டுள்ள 2001ஆம் ஆண்டுக்கான ஆண்டு மலர் இது. பம்பலப்பிட்டி

இந்துக்கல்லூரி மாணவர்களின் மாதாந்த சஞ்சிகையான "தமிழ்ச்சுடர்" ஆண்டுச் சிறப்பிதழாக இம்மலர் மாணவர்களின் தேர்ந்த ஆக்கங்களுடன் வெளிவந்துள்ளது. கவிதைப் பகுதியில் அறத்தால் வரும் இன்பம் (கு. மாலன், தரம் 11), அன்பு வழி (வரவேஸ்வரன் கேதீஸ்வரன்), கனவுகள் நனவாகுமா? (வாமதேவன் வசந்தன், ஆண்டு 12), முரண்பாடுகானும் மரபுகள் (விமலாதித்தன்), பொறுத்திடும் பூமித்தாயே உன் சீற்றத்தின் காரணம்? (செ.சுஜாதா) ஆகிய ஆககங்களும், சிறுகதைப் பகுதியில் இனி அவளின் நிலை? (ச.வசந்த்), (சிறைச்சாலை (சி.கேசவன், ஆண்டு 11) ஆகிய கதைகளும், கட்டுரைப் பகுதியில், அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் (சி.ஜனார்த்தன், ஆண்டு 4), நான் விரும்பும் ஈழத்துப் பெரியார் விபுலானந்த அடிகள் (செ.மிருணாளன்), நான் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தால்... (ஞா.சரத் சங்கீத், ஆண்டு 5), நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் (எஸ்.ரீ.இ.பாலமுரளி), இலக்கிய மரபில் தமிழர் வாழ்வு (ப.பிரியா), கூடி வாழ் (ஜெ.டினேஸ், ஆண்டு 7), இருமுது குரவர்கள் (பா.சஞ்சீவன், ஆண்டு 7), அறம் போதிக்கும் குறள் (க.ஹரன்பிரசாந், ஆண்டு 11), தனிமனித வாழ்வில் தாய்மொழி பெறும் இடம் (பி.ஆரஞ்சா), பண்புப் பரிவர்த்தனை (இ.கிருஷன், ஆண்டு 12), இயற்கை இன்பம் (ரவிராஜ் நிர்மலன், ஆண்டு 8), காலம் பொன் போன்றது (த.ராகுலன்) ஆகிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. வெளிமாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டி முடிவுகள் இறுதியில் தரப்பட்டுள்ளன.

## 16254

**இராமகிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் 125ஆவது ஆண்டுவிழா மலர் (1897-2022).** சண்.பாரதிநாதன் (பதிப்பாசிரியர்). திருக்கோணமலை: பழைய மாணவர் சங்கம், இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, 1ஆவது பதிப்பு, 2022. (திருக்கோணமலை: எஸ்.எஸ். டிஜிட்டல்ஸ், திருஞானசம்பந்தர் வீதி).

xxxii, 316 பக்கம், ஒளிப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

சில சைவப் பெரியார்களால் சிறிய திண்ணைப் பள்ளிக்கூடமாக 1897இல் ஸ்தாபிக்கப்பட்டதே இப்பாடசாலையாகும். இந்த 125ஆவது ஆண்டு விழா மலரானது பல தசாப்த காலங்களாக இந்துக் கல்லூரியின் கல்வி வளர்ச்சிக்கும் பௌதிக வளர்ச்சிக்கும் அடியாதாரமாக இருந்த அனைத்து விடயதானங்களையும் ஆவணமாக வெளிக்கொணர்ந்து பதிவாக்குவதையும் கல்லூரியின் வளர்ச்சிக்கு இதய சுத்தியோடும் அர்ப்பணிப்போடும் செயலாற்றிய திறன்மிக்க நல்லாசான்களை நினைவுகூர்வதையும் கருவாகக் கொண்டுள்ளது.

## 16255

**தமிழ்ச் சோலை: ஊரி தமிழ் வித்தியாலய ஆண்டு விழா மலர்.** கனகரவி (இயற்பெயர்: கனகரட்ணம் ரவீந்திரன்). சுவிட்சர்லாந்து: ஊரி தமிழ் வித்தியாலயம், 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2015. (வவுனியா: லேற்றஸ் பிறின்டர்ஸ், வைரவபுளியங்குளம்).

46 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ.

22.09.2010 அன்று தொடக்கம் சுவிட்சர்லாந்தின் ஊரி பிரதேசத்தில் தாய்மொழிக் கல்வியை பயிற்றும் நோக்கில் ஊரி தமிழ் வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. அப்பாடசாலையின் ஐந்தாவது ஆண்டு விழாவினையொட்டி இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. இம்மலரில் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

**16256**

**துலங்கல் 1: 1989-1990.** மா.மகேஸ்வரன் (இதழாசிரியர்). யாழ்ப்பாணம்: தொழிலாளர் கல்விக் கழகம், கல்வியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1991. (யாழ்ப்பாணம்: தாசன் அச்சகம், மகேந்திரா வீதி).

(35), 83 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x19 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் அ.துரைராசா துணைவேந்தராக விருந்த காலத்தில் தொழிலாளர் கல்வி 1991 மே மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அத்துறையினரின் வெளியீடாக இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. இவ்விதழின் உதவி ஆசிரியர்களாக ச.மகிந்தராஜ், சி.கலாராஜ், ஐ.ஆனந்தராஜ், ந.பழனிவேல் ஆகியோர் இயங்கியுள்ளனர். இவ்விதழில் பொருளாதாரத்தில் அரசாங்கத் தலையீடு அவசியமா?, பொருளியல் ஒரு விஞ்ஞானமாகும், இலங்கையில் கூட்டுறவு இயக்கம், நாட்டின் அபிவிருத்தியில் தொழிலாளர் பங்கு, யாழ். பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் கற்கைநெறி சில இலக்குகள், தொழிலாளர் கல்வி-ஒரு கண்ணோட்டம், நடத்தையியலும் ஸ்கின்னரும், தொழிலாளர் கல்வி, Basic English for Workers: A curriculum for Domination, Mathematics: Some other Issues, பல் பகுதியங்கள் (Palymers), தொழில்சார் நெருக்கீடுகளும் சமகால உளத்தாக்கமும், நிர்வாகத்தில் தொழிலாளர் பங்குவகித்தல், சேவைக்காலப் பயிற்சியும் நன்மைகளும், அழகியற் கலையும் ரசக் கொள்கையும், சங்ககால மக்களின் தொழில்களும் தொழில் முறைமைகளும், தருமம், தொழிலாளி, தொழிலாளர் கல்விநெறி வாழி, தொழிலாளர் கல்வி, மனித வாழ்க்கையும் விஞ்ஞானமும், நெய்தல் வாழ்க்கை, நில-நீர் குறிகாட்டிகள், தலைமை வகித்தல், அனைத்துலகத் தொழிலாளர் அமையம், தொழிலாளர் கல்வியின் ஆரம்பமும் எதிர்காலமும் ஆகிய 26 ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

## 370.1 கல்வி நிறுவனங்கள், மாணவர் சங்கங்கள், சிறப்பிதழ்கள்

**16257**

**இராம ஒளி: இதழ் 7: 2022.** பிருந்தா சத்தியசீலன் (இதழாசிரியர்). சுன்னாகம்: நூலக அபிவிருத்திக் குழு, யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம், 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2022. (யாழ்ப்பாணம்: சுடர்நிலவு கிராப்பிக்ஸ், இணுவில்).

xvi, 62 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

2022ஆம் ஆண்டின் வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு கல்லூரியின் நூலக அபிவிருத்திக் குழுவினர், ஆசிரியர், மாணவர்கள் ஆகியோரின் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையில் வெளியிடப்பட்ட ஆண்டிதழ். இளம் சமுதாயத்தின் துடிப்பான எண்ணங்கள், புதிய சிந்தனைகள், பரந்துபட்ட அறிவாற்றல், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி, இணையவழிக் கல்வி, சூழல் பாதுகாப்பு, கழிவுப்பொருள் முகாமைத்துவம், நேர முகாமைத்துவம் போன்றவை தொடர்பான நவீன கருத்துக்கள் இம்மலரின் ஊடாக மாணவர்களினூடாகவும் ஆசிரியர்களினூடாகவும் வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளன. பாடசாலையின் மாணவர்கள் ஆசிரியர்கள் மாத்திரமன்றி, சமூக நலன்விரும்பிகளினதும் கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

### 16258

**இராமகிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி திருக்கோணமலை: வரலாறும் வளர்ச்சியும் (1897-2022).** சிங்காரவேலு தண்டாயுதபாணி. திருக்கோணமலை: பழைய மாணவர் சங்கம், இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை), 1ஆவது பதிப்பு, மார்கழி 2022. (யாழ்ப்பாணம்: மெகா பதிப்பகம், 41, றக்கா வீதி, கச்சேரியடி).

xii, 428 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 1950., அளவு: 25x18.5 சமீ., ISBN: 978-624-97879-9-5.

தொடக்க காலம் (1897-1924), இராமகிருஷ்ண மிஷனின் முகாமைத்துவ காலம் (இ.கி.ச. இந்துக் கல்லூரி 1925-1961), இராமகிருஷ்ண மிஷனின் முகாமைத்துவ காலம் (இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வர வித்தியாலயம், 1925-1961), அரசாங்க பாடசாலைக் காலம் (இ.கி.ச. இந்துக் கல்லூரி, 1962-1992), அரசாங்க பாடசாலைக் காலம் (இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வர வித்தியாலயம், 1962-1992), தேசிய பாடசாலைக் காலம்-1 (1993-1997), தேசிய பாடசாலைக் காலம்-2 (1998-2002), தேசிய பாடசாலைக் காலம்-3 (2003-2007), தேசிய பாடசாலைக் காலம்-4 (2008-2012), தேசிய பாடசாலைக் காலம்-5 (2013-2017), தேசிய பாடசாலைக் காலம்-6 (2018-2022) ஆகிய அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டு அவ்வக் காலகட்டத்துக்குரிய பாடசாலையின் வரலாறும் வளர்ச்சிப்படிகளும் இந்நூலில் ஆவணப்படுத்தப் பட்டுள்ளது.

### 16259

**சிந்தனை-சொல்-செயல்.** திருநாவுக்கரசு கமலநாதன். யாழ்ப்பாணம்: நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல், 331, கோவில் வீதி, நல்லூர், 1ஆவது பதிப்பு, ஜுலை 2022. (யாழ்ப்பாணம்: சோலோ பிரின்டர்ஸ், 520 A, கஸ்தூரியார் வீதி).

xxviii, 240 பக்கம், தகடுகள், விலை: ரூபா 1500., அளவு: 22x15.5 சமீ., ISBN: 978-955-43376-5-6.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் 22ஆவது அகவைச் சுவடாக 02.05.2022 அன்று வெளியிடப்பட்ட நூல். இக்கல்லூரியின் கதையை சுவாரஸ்யமாக

பத்து இயல்களில் கூறி முடித்துள்ளார். கல்லூரி வாழ்க்கை வேறு, தன் சொந்த வாழ்க்கை வேறு என்றில்லாமல், கல்லூரியின் கதையின் ஊடாக எம்மால் தமிழாசான் திருநாவுக்கரசு கமலநாதனின் வாழ்வும் பணியும் பற்றியும் இந்நூல் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. கால்கோள், பணி ஏற்றல், பதவி நிகழ்த்தல், பணி இயக்கல், பணிமனை புகல், ஈட்டலும் உறுத்தலும், இடப்பெறுகை ஈட்டம், சிந்தனை சொல் செயல், நிறைகொளல், எழுகோலச் சிற்பிகள் என பத்து இயல்களும் விரிவாக எழுதப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் நிமிர்ந்து நிற்கும் தேசிய கல்வியியற் கல்லூரியைத் தோற்றம் பெறவைக்க இவர் எதிர்கொண்ட இன்னல்கள் இடர்கள் அளவிலாதவை. சிந்தனை-சொல்-செயல் ஒரே இலக்கில் பயணித்தால் கொண்ட இலக்கை அடைய முடியும் என்பதை இவரது மகத்தான வெற்றி எமக்குக் கற்றுத்தந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70036).

### 16260

**சுவடுகள் 95**. அ.சிவஞானசீலன் (மலர்ஆசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம் (3ஆம் வருடம்), யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு, 1995. (யாழ்ப்பாணம்: தாசன் அச்சகம், மகேந்திரா வீதி).

94 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூன்றாம் ஆண்டு மாணவர்களால் வெளியிடப்படும் மாணவர்களின் முகவரி மலர் (மாணவர்களின் முகவரி, எண்ணங்கள் அடங்கிய சுவடுகள்) இதுவாகும். 1991/92-ஆம் கல்வி ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் ஒரு தொகுதியினர் பொதுக் கலைமாணிப் பட்டப் படிப்பினை முடித்து வெளியேறவுள்ளனர். நான்கு வருட கற்கைநெறி கற்கும் மாணவர்கள் இன்னொரு வருட காலம் இங்கு கல்வி பயில உள்ளனர். இம்மாணவர்கள் தங்களுடைய கல்வியாண்டு அணியினர் அனைவரதும் முகவரி கொண்ட கைநூலாக இந்நூலை வெளியிடுகின்றனர். இம்மலர் மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது. முதற் பிரிவு (1-65) சக மாணவர்கள் பற்றிப் பரஸ்பரம் எழுதப்பட்ட சுவையான குறிப்புகளையும், இரண்டாம் பிரிவு (66-92) 1991/1992 கல்வி ஆண்டு மாணவர்களின் முகவரிகளையும், மூன்றாம் பிரிவு (93-94) மாணவர்களின் கவிதை ஆக்கங்களையும் கொண்டுள்ளது.

### 16261

**பரமேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு விழா மலர்**. ஆறுதிருமுருகன் (மலர்க்குழுத் தலைவர்), இளஞ்சேய் வேந்தனார் (மலர்க்குழு ஒருங்கிணைப்பாளர்). கொழும்பு: பழைய மாணவர் சங்கம் - கொழும்புக் கிளை, பரமேஸ்வராக் கல்லூரி, 1ஆவது பதிப்பு, 2022. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

xii, 249 பக்கம், ஒளிப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ., ISBN: 978-624-6289-00-3.

சேர் பொன். இராமநாதனால் யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் உருவாக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி 1974இல் அரசினால் கையகப்படுத்தப்பட்டு யாழ்.

பல்கலைக்கழகமாக உருமாற்றம் செய்யப்பட்டது. இழந்த பரமேஸ்வரா கல்லூரியின் பெயரில் ஒரு பாடசாலையும் நிறுவப்படாத நிலையில் அப்பாடசாலையின் வரலாற்றை நினைவுறுத்தும் வகையில் 2006இல் பரமேஸ்வரா கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஒன்று தாபிக்கப்பட்டது. திருநெல்வேலியில் இயங்கிவந்த இந்து தமிழ் கலவன் ஆரம்ப பாடசாலையை "பரமேசுவரா வித்தியாலயம்" எனப் பெயர்மாற்றம் செய்து இராமநாதன் நினைவு தினமான 19.11.2011 அன்று பெரு விழாவாகக் கொண்டாடினர். இந்நிலையில் பரமேஸ்வரா கல்லூரியின் நூற்றாண்டு நினைவு ஆண்டில், அக்கல்லூரியின் வரலாற்றை ஆவணப்படுத்தும் நோக்கில் இந்நூற்றாண்டு விழா மலர் வெளியிடப்பட்டுள்ளது. ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள், கல்லூரி வரலாறு பற்றிய கட்டுரைகள் (ஆறு திருமுருகன், க.சி.குலரத்தினம், மைதிலி விசாகரூபன், பொன். பாலசுந்தரம்பிள்ளை, சேர். பொன் இராமநாதன், ரீ.பேரின்பநாயகம், ச.சிவலோகநாதன்), தாபகர் பொன் இராமநாதன் பற்றிய கட்டுரைகள் (சி.க.சிற்றம்பலம், செல்வநாயகி ஸ்ரீதாஸ், செ.திருநாவுக்கரசு, கிருஷ்ணானந்தசிவம், ப.சந்திரசேகரன், வித்துவான் வேந்தனார், ச.சிவலோகநாதன், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை) கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்களின் அனுபவங்கள் (க.சி.குலரத்தினம், வி.சிவசாமி, செ.சண்முகலிங்கம், கலையரசி சின்னையா, பரமேஸ்வரா ஐயர் அம்பிகாபதி, ச.சிவலோகநாதன், ச.சர்வானந்தன், கே.மகேந்திரன், இரத்தினசிங்கம் ஆசிரியர், லோகநாயகி பத்மநாதன், லண்டன் அம்பி, மு.சி.சிவபாதசுந்தரம்), கல்லூரி பல்கலைக்கழகமாகுதல் (ரி.பேரின்பநாயகம்), பரமேஸ்வரா வித்தியாலயம்-பெயர் மாற்றம் (ப.மா.ச. கொழும்பு, கனக நமநாதன், நல்லையா விஜயசுந்தரம், யோகராசா தயாளன்) ஆகிய பிரிவுகளின் கீழ் பிரமுகர்களால் எழுதப்பட்ட ஆக்கங்கள் என நிறைந்த நினைவுப் பதிகைகளுடன் இம்மலர் வெளியிடப் பட்டுள்ளது.

### 16262

**பரி.யோவான் பொழுதுகள்.** ஜூட் பிரகாஷ். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2023. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

xxii, 318 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 3500., அளவு: 22x15 சமீ., ISBN: 978-624-6164-35-5.

ஜூட் பிரகாஷ் பாலர் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு வரை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி பயின்றவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பீடத்தில் கல்வி கற்ற வேளையில் அவுஸ்திரேலியாவுக்கு புலம் பெயர்ந்து தற்போது மெல்பர்னில் வாழ்ந்து வருகின்றார். மெல்பேர்ன் சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர்களுள் ஒருவரான இவர் கல்லூரியின் கல்வி மற்றும் விளையாட்டு அபிவிருத்திச் செயற்பாடுகளில் நேரடியாகப் பங்காற்றி வருகின்றார். "கல்லூரி நினைவுகள்" (யாரென்றால், அந்தக் காலத்தில், மொக்கு கொமர்ஸ்காரன், பரி.யோவானின் மைதானம், பரி. யோவானில் ஈபிக்காரன்கள், ஒரு நாள் ஜொனியன்ஸ், 1986இல்

ஒரு நாள், சதீசன், ஆர்ட் ரூம் கொடுமைகள், விடைபெறும் வரலாறு), "கிரிக்கெட் நினைவுகள்" (கனவான கனவு, இலங்கை கிரிக்கெட் அணியும் ஜொனியன்ஸும், பண்டிதர் கோப்பை 1986), "ஆசிரியர்களின் நினைவுகள்" (பரி.யோவானில் தமிழ், ஜீவானந்தம் மாஸ்டர், மகாலிங்கம் மாஸ்டர், ஆறாவடு, துரைச்சாமி மாஸ்டரோடு ஒரு பின்னேரம், சரா மாஸ்டரும் அலெக்ஸ் மாஸ்டரும்), "நினைவில் நிலைத்தவர்கள்" (மைக்கல், பொப்பிசைச் சக்கரவர்த்தி, அகிலன், நேசா அண்ணா, சூரி, அறிவாளி), "SJC92 நினைவுகள்" (தர்மேந்திரா, ஓமென்றா மட்டும், SJC92 கோலாலம்பூர் குதூகலம், பம்பல் @ Phuket, மாவீரர் யாரோ என்றால்) ஆகிய ஐந்து பகுதிகளில் இந்நினைவலைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

## 16263

**முத்தமிழ் விழா 2012: சிறப்பு மலர்.** த.சாந்தகுமார் (இதழாசிரியர்). வவுனியா: தமிழ் மன்றம், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, 1ஆவது பதிப்பு, 2012. (வவுனியா: வாணி கொம்பியூட்டர் பிரிண்டிங் சென்டர்).

(4), 40 பக்கம், ஒளிப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

இம்மலரில் தமிழ்ச் சொல்லிலக்கணத் திணைப் பகுப்பின் அடிப்படை (க.இரகுபரன்), நற்பண்புகள் (பாடல் போட்டியில் முதலாமிடம் பெற்ற சிறுவர் பாடல் - மு.சுலோசனா), துளிர்விடும் நம்பிக்கைகள் (சிறுகதைப் போட்டியில் முதலாமிடம் பெற்ற கதை-செ.ரூபிகா), நிலைபேண் அபிவிருத்தியினை பேணுவதில் கல்விசார் ஆளணியினரின் பங்களிப்பு (கட்டுரைப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற கட்டுரை-ம.அஜிதா மயூரினா), யார் அறிவார்?(கவிதைப் போட்டியில் முதலாம் இடம்பெற்ற கவிதை-ஜெ.ஸ்ரீபன்), மனமாற்றம் (குறுநாடகப் பிரதியாக்கப் போட்டியில் முதலாமிடம் பெற்ற படைப்பாக்கம்- நி.ரஞ்சித் கண்ணா) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. ஓவியப் போட்டியொன்றினையும் நடாத்தி அதில் முதலாவதாகத் தெரிவுசெய்திருந்த ஓவியத்தையே இம்மலரின் அட்டைப்பட ஓவியமாக்கியுள்ளனர்.

## 16264

**யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்: நூற்றாண்டு நிறைவு மலர் 1908-2008.** ம.லினாஷ்குமார் (இதழாசிரியர்). சாவகச்சேரி: சரஸ்வதி வித்தியாலயம், மட்டுவில் தெற்கு, 1ஆவது பதிப்பு, 2008. (யாழ்ப்பாணம்: கங்கை பிரின்டர்ஸ், 781, காங்கேசன்துறை வீதி, சிவலிங்கப் புளியடி).

(18), 143 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x20 சமீ.

ஆசிச் செய்திகள், பள்ளியின் பார்வை, விஷேட ஆக்கங்கள், ஆசிரியர் பக்கம், மாணவர் பக்கம் ஆகிய ஐந்து பிரிவுகளில் இம்மலர் தொகுக்கப்பட்டுள்ளது. "ஆசிச் செய்திகள்" பிரிவில் 19 சமூகப் பிரமுகர்களின் ஆசிச் செய்திகளும் வாழ்த்துக்களும் இடம்பெற்றுள்ளன. "பள்ளியின் பார்வை" என்ற பிரிவில் பாடசாலையின் வரலாறும், மறக்கமுடியாத ஆசிரியர் பெருந்தகைகள் பற்றியும்,

பாடசாலையின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கைகளும் இடம்பெற்றுள்ளன. "விசேட ஆக்கங்கள்" என்ற பிரிவில் இடைநிலை வகுப்புகளில் கணித விஞ்ஞானக் கல்வி (க.கந்தசாமி), சிறுநீரிழிவு (வசந்தி அரசரட்ணம்), பாரதியும் பாரம்பரிய தமிழ்க் கல்வியும் (எஸ்.சிவலிங்கராஜா), கிராமியப் பாடசாலை சமூகத் தொடர்பும் முன்னேற்றமும்: நுண்பாக அணுகுமுறை (மா.சின்னத்தம்பி), Teaching of English in Search of a Method (எஸ்.சுந்தரேஸ்வரன்), இந்து சமயக் கல்வியின் வாழ்வியல் விழுமியங்கள் (திருமதி ஜெ.இராஜநாயகம்), பாடசாலைகளின் பயிற்றுமொழியாக ஆங்கிலத்தின் மீள் அறிமுகம்-சில பிரச்சினைகள் (திருமதி அ.சத்தியசீலன்), பயன்தரு பள்ளிச் செயலுருவாக்கத்தில் முதல்வர்களின் செயற்பங்கு (வ.நடராசா), பற்களின் மகத்துவம் (சா.கஜேந்திரன்), சிறுவர்களும் படைப்புலகமும் (கொ.கைலாசநாதன்), வினைத்திறன் ஆசிரியர்களுக்கான கல்வித் தொழில்நுட்பம் (லலிதாமலர் முகுந்தன்) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. ஆசிரியர் பக்கம் என்ற பிரிவில் பாடசாலையின் ஆசிரியர்களான திருமதி ஜே.எல்.கே.கிரிஸ்ரி ரஞ்சன், திருமதி இ.நித்தியானந்தன், திருமதி பு.நகுலேஸ்வரன், செல்வி சி.தங்கராசா ஆகியோரின் கல்விசார் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. மாணவர் பக்கம் என்ற இறுதிப் பிரிவில் மேற்படி பாடசாலையின் 28 மாணவமணிகளின் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

### 16265

**ஹாட்லியின் சுவடுகள்: 175ஆவது ஆண்டு நிறைவு மலர் 1838-2013.** கே.அருளானந்தம், எஸ்.சிற்பரன் (மலர் ஆசிரியர்கள்). பருத்தித்துறை: ஹாட்லிக் கல்லூரி, 1ஆவது பதிப்பு, ஜுலை 2013. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் பிரிண்டர்ஸ், 681, காங்கேசன்துறை வீதி).

lxiv, 105 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

1838 இல் வணக்கத்திற்குரிய பீட்டர் பேர்சிவல் அவர்களால் தாபிக்கப்பட்ட வெஸ்லியன் மிஷன் மத்திய பாடசாலை 1916இல் வண. மார்ஷல் ஹாட்லி அவர்களின் வருகையையொட்டி ஹாட்லி கல்லூரி எனப் பெயர்மாற்றம் பெற்றது. 175 ஆண்டுகள் நிறைவடைந்தமையை ஒட்டி இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன் கல்லூரி தொடர்பான தகவல்களையும், மாணவர்களின் ஆக்கங்களையும் உள்ளடக்கி இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது.

## 370.15 கல்வி உளவியல்

### 16266

**உளவியற் பாங்குகள்.** க.சின்னத்தம்பி (மூலம்), சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன் (தொகுப்பாசிரியர்). வவுனியா: ஜெபவி வெளியீடு, 1ஆவது பதிப்பு, 2020. (வவுனியா: கலைமகள் அச்சகம், இல. 50, சந்தை சுற்றுவட்ட வீதி).

viii, 274 பக்கம், விலை: ரூபா 750., அளவு: 21.5x15.5 சமீ., ISBN: 978-624-96829-0-0.

இந்நூலில் பேராசிரியர் க.சின்னத்தம்பி அவர்கள் எழுதிய 25 கல்வி உளவியல் கட்டுரைகள் தேடித் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. உளவியல் அடிப்படைகள், தற்காலப் பிரயோகத்திற்கேற்ப உளவியல் எண்ணக்கருக்கள், எண்ணக்கருவாக்கம், புறூணர் என்பாரின் கருத்துகளும் அவற்றின் கல்விசார் முக்கியத்துவமும், கற்போனின் பல்வகைமையும் வகுப்பறைக் கல்வி அனுட்டானங்களும், கற்போனின் பல்வகைமையும் கல்வி அனுட்டானங்களில் அதன் பிரதிபலிப்புகளும், கட்டிளமைப் பருவம், பதின்ம வயதுப் பருவம் வரையிலான பிள்ளைகளின் உள-சமூக விருத்தி பற்றிய எரிக்சன் என்பாரின் கருத்துகள், உள-சமூக விருத்தி பற்றிய எரிக்சனின் கருத்துகள், பிள்ளைகளின் கற்றலில் நுண்மதியும் கற்றற் பாங்கும், கார்டினர் என்பாரின் பல்வகை நுண்மதிகள், ஸ்ரேன்பேர்க் என்பாரின் மும்முக நுண்மதிக் கொள்கை, நான்கு வகைச் சிந்தனையாளர்கள், தன்னியல் கௌரவம்-வகுப்பறைப் பிரயோகங்கள், கற்றற் பாங்குகளும் கல்விசார் பயன்பாடு களும், பாடசாலைக் கற்றலும் ஊக்கலும், ஆசிரியரும் கற்றல் தொழிற்பாடும், தொடர்பாடலும் கற்றல் கற்பித்தலும், வகுப்பறை முகாமையும் ஆசிரியரும், சிறப்புத் தேவைகளை வேண்டிநிற்கும் பிள்ளைகளுக்கான கற்பித்தல், சுய ஊக்கலூ டாக ஆசிரியர் வாண்மை விருத்தி, கணிதம் கற்பிப்பதில் ஸ்கெம்ப் என்பாரின் கருத்துக்கள், விஞ்ஞானக் கல்வி விருத்திக்கு உதவும் பள்ளிப் புறச்செயல்கள், இசையினூடே முன்பள்ளிக் கல்வியில் விருந்தாரம், பாடசாலைகளில் உடலியற் கல்வி ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

மேலும் பார்க்க:
உளக் குவிப்பும் கற்றலும். 16050

## 372 பாலர் கல்வி

### 16267

**நீர்வேலி பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும்: வைரவிழா மலர் 1956-2016.** மலர்க் குழு. யாழ்ப்பாணம்: பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும், 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2016. (யாழ்ப்பாணம்: ஷாம்பவி பதிப்பகம், கஸ்தூரியார் வீதி).

xlvi, 72 பக்கம், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

நீர்வேலி பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் (Creche and Pre School) கடந்த 17.09.2016 அன்று தனது வைர விழாவைக் கொண்டாடியிருந்தது. அவ்வேளை வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இதுவாகும். சமூகத்திற்கு பொருத்தப்பாடுடைய அறிவுசார்ந்த ஆற்றலுள்ள நற்பிரஜைகளை உருவாக்கும் நோக்குடன் அமரர்களான சேர். கந்தையா வைத்தியநாதன், இ.க.சண்முகநாதன் ஆகியோர் வித்திட்டு நீரூற்றி வளர்த்த இந்த சமூக அமைப்பு தனது வளர்ச்சிப் பாதையை இம்மலரின் மூலம் ஆவணப்படுத்தும் முயற்சியை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது. அம்முயற்சியுடன் கூடவே பயனுள்ள சில கட்டுரைகளையும் இடம்பெறச் செய்துள்ளனர். அவை சமுதாய வளர்ச்சியில் பாலர் பகல் விடுதியின் பங்களிப்பு

(திருமதி ஞா.தெய்வேந்திரராசா), முன்பள்ளிப் பிள்ளைகளிடையே கணித எண்ணக் கருக்களை விருத்தி செய்தல் (த.கலாமணி), முன்பள்ளிகளில் சுற்றாடல் கல்வியின் முக்கியத்துவம் (செல்வி ஜெயா தம்பையா), முன்பள்ளிகளில் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு விளையாட்டுகள் (செல்வி நிர்மலா கந்தையா), முன்பள்ளிப் பராயக் கல்வியும் நவீன ஒன்றிணைந்த அணுகுமுறைப் பிரயோகங்களும் (பா.தனபாலன்), முன்பள்ளிகளின் வினைத்திறனுள்ள செயற்பாட்டிற்கான பொதுமைப்படுத்தப்பட்ட குழந்தைக் கலைத்திட்டத்தின் தேவை (பொ.சற்குணநாதன்), மழலைகளின் வளர்ச்சியில் கணனியின் செல்வாக்கு (பா.சசிகுமார்) ஆகிய தலைப்புகளில் இடம்பெற்றுள்ளன.

## 375 பாடத்திட்டங்கள்/பாடவிதானங்கள்

### 16268

**அகல்விழி-தரம் 1: முதலாம் தவணை.** காயத்ரி வெளியீட்டாளர்கள். தெகிவளை: காயத்ரி பப்ளிக்கேஷன்ஸ், தபால் பெட்டிஎண்-64, 1ஆவது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (தெகிவளை: காயத்ரி பப்ளிக்கேஷன்ஸ்).

60 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 24x18 சமீ.

தரம் ஒன்று மாணவர்களுக்கான முதலாம் தவணைக்குரிய 12 பரீட்சை மாதிரி வினாத்தாள்கள், விடைகளுடன் உள்ளடக்கப்பட்டுள்ளன. தமிழ், சுற்றாடல், ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களை இவ்வினாப் பத்திரங்கள் உள்ளடக்குகின்றன.

## 380 வர்த்தகம், வணிகத் தொடர்புகள், போக்குவரத்து

### 16269

**வணிகத்துளிர் 2006.** இ.குமாரவேல் (பொறுப்பாசிரியர்), க.சியாமளா, சி.சுகன்யா (இதழாசிரியர்கள்). கொழும்பு 4: வர்த்தக மாணவர் மன்றம், இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, 1ஆவது பதிப்பு, 2006. (கொழும்பு 6: R.கிருஷ்ணமூர்த்தி, கிரிப்ஸ், வெள்ளவத்தை).

(12), 88 பக்கம், ஒளிப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

சுருங்கிவரும் உலக உருண்டையில் உலகமனைத்தும் ஒரு பொதுச்சந்தை என உலகமயமாக்கலை நோக்கி நடைபோடும் வணிகத்துறையின் சிறப்பினை பாடசாலை மாணவர் மட்டத்தில் விரிவுபடுத்தும் அல்லது தெளிவுபடுத்தும் நோக்கில் கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் வணிக மாணவர் மன்றத்தினர் வெளியிட்டுள்ள ஆண்டு மலர் இதுவாகும். பாடத்திட்டத்துடன் தொடர்பான அத்துறை சார்ந்த கட்டுரைகளும் ஆசிரிய/மாணவர்களின் படைப்பாக்கங்களும் இடம்பெற்றுள்ளன.

## 390 நாட்டாரியலும் பழக்க வழக்கங்களும்

### 16270

**கிராமத்து மனிதர்கள்: கிராமத்து வாழ்வின் கதைகள்.** இ.இராஜேஸ்கண்ணன். உடுப்பிட்டி: மீளுகை 2, இமையாணன், 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (யாழ்ப்பாணம்: ஆகாயம் பதிப்பகம், இமையாணன், உடுப்பிட்டி).

xii, *124 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 22*x*14 சமீ.,* ISBN: *978-624-98471-2-5.*

ஆசிரியர் சமூகவியலைக் கல்விசார் துறையாகக் கொண்டவர் என்பதாலும். கதை சொல்வதில் ஆர்வமுடையவர் என்பதாலும், கதைகளின் வழியாகக் கிராமிய மக்களது சமூகவியலை பதிவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். கிராமத்து மனிதர்களை அவரவர்க்கான வாழ்வியல் பின்னணிகளோடு தரிசிப்பதில் மிகுந்த திருப்தி உண்டாகின்றது. கிராமிய மக்களை அவர்களது தொழில்கள், கலைகள், சமயாசாரங்கள், கைவினைகள், விளையாட்டுக்கள், புழங்குபொருள்கள், வைத்திய முறைகள், தொழினுட்பங்கள், தொழில்சார் உறவுகள், சேமிப்பு மற்றும் பொருளீட்டல் வழிமுறைகள் சமூக அதிகாரங்கள் என்பவற்றுடன் சேர்த்து வெளிக்கொண்டுவருவதற்கு கதைகளை இங்க ஒரு ஊடகமாகப் பயன்படுத்தியி ருக்கிறார். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் சஞ்சீவி வார இதழில் “இராகன்” என்ற புனைபெயரில் ஆசிரியர் “கிராமத்து மனிதர்கள்” என்ற தலைப்பில் எழுதிய 20 கதைகளையும், தீம்புனல் வார இதழில் “ஊருக்கை ஒரு கதை” என்ற தலைப்பில் வெளியான 10 கதைகளையும், இணைத்து 30 கதைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

## 390.1 இடப்பெயர் ஆய்வு

### 16271

**தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு.** த.ஜீவராஜ். தம்பலகாமம்: தம்பலகாமம் திருமதி ஜீவரத்தினம் தங்கராசா, சின்னவர்ணமேடு, 1ஆவது பதிப்பு, ஜூலை 2022. (திருக்கோணமலை: ஸ்ரீராம் பிரிண்டர்ஸ், 159A, கடல்முக வீதி).

*301 பக்கம், விலை: ரூபா 900., அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN: *978-955-44132-2-1.*

வரலாற்று எழுத்தியலின் பண்புகளுக்கு அமைவாக ஆவணங்கள், சாசன ஆதாரங்கள், இலக்கிய சான்றுகள் என்பவற்றோடு, பல முதன்நிலைத் தரவு களையும், தனது தேடல் அனுபவக் குறிப்புகளையும், விமர்சனங்களையும் உள்ளடக்கி எழுதப்பட்டுள்ளது. முதலாம் இயல் ஊர்ப்பெயர் ஆய்வோடு ஒரு பயணம் என்ற அறிமுகத்தையும், 2ம் இயல் தம்பலகாமம் பிரதேசம், தம்பலகாமம் ஊர் ஆகியவற்றின் இரு அறிமுகங்களையும், 3ம் இயல் தம்பலகாமம் கல்வெட்டின் கதையாகவும் விரிகின்றது. 4ஆம் இயல் ஊர்ப்பெயர் திரிபு பற்றிப் பேசுகின்றது. 5ஆம் இயல் தம்பலகாமப்பற்று, தம்பலகாம தேசம், தம்பை நகர், தமனதோட்ட, Tamblegam, தம்பலகமம், தாயூர் தம்பலகாமம், தம்பலகமுவ ஆகிய எட்டு ஊர்ப்பெயர் வரலாறுகள் பற்றித் தனித்தனியாகப் பேசுகின்றது. 6ஆம் இயல்

தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வாக அமைகின்றது. 7ஆம் இயல் கல்வெட்டுகள், செப்பேடுகளில் "காமம்" எனும் ஈற்றுப்பெயர் கொண்ட இடப்பெயர்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது. இறுதியான 8ஆம் இயல் முடிவுரையாக அமைகின்றது. இந்நூலின் பின்னிணைப்புகளாக தம்பலகாமத்தின் ஒரு கல்வெட்டு-பொலநறுவைக் காலத்துப் படைப்பற்று (மறைந்துபோன சிலாசனம்) பற்றிய பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களின் கட்டுரையும், தம்பலகாமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அரிய தமிழ்க் கல்வெட்டு பற்றிய பேராசிரியர் பரமு புஷ்பரத்தினம் அவர்களின் கட்டுரையும் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் "ரங்கநாயகியின் காதலன்" என்ற நூலை 2005இல் எமக்களித்த தம்பலகாமம் க.வேலாயுதம் அவர்களின் மகன் (கலாபூஷணம் வே.தங்கராசா) வழிப் பேரனாவார்.

## 392 வாழ்வியல் வழக்குகள், வாழ்க்கை முறைமைகள்

### 16272

**ஈழத்தில் மாட்டுவண்டிச் சவாரியும் தமிழர் மரபும்.** பாலசுகுமார். மட்டக்களப்பு: அனாமிகா வெளியீட்டகம், இல. 48, பெய்லி முதலாம் குறுக்குத் தெரு, 1ஆவது பதிப்பு, 2022. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496A, திருமலை வீதி).

49 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

சுன்னாகம் வைத்தியர் பரமநாதன் விக்கினேஸ்வரா (13.11.1930-22.02.2022) அவர்களின் நினைவாக வெளியிடப்பட்டுள்ள இந்நூலில் ஈழத்தில் மாட்டுவண்டிச் சவாரியும் தமிழர் மரபும் பற்றி பால.சுகுமார் அவர்கள் எழுதிய விரிவான கட்டுரையும், வைத்திய கலாநிதி பரமநாதன் விக்கினேஸ்வரா அவர்கள் பற்றிய மலரும் நினைவுகளின் பதிவுகளும் புகைப்பட ஆவணங்களுடன் இடம்பெற்றுள்ளன.

## 392.5 சடங்கு முறைமைகள், திருமணங்கள், மரணச் சடங்குகள்

### 16273

**இலண்டனில் தமிழர் திருமணங்கள்.** பொன் பாலசுந்தரம். லண்டன் E7 8PQ: சுடரொளி வெளியீட்டுக் கழகம், 15, Rutland Road, 1ஆவது பதிப்பு, 2018. (சென்னை 600 005: ஸ்ரீ ராகவேந்திரா லேசர் பிரிண்டர்ஸ், 15, தானப்ப தெரு, திருவல்லிக்கேணி).

336 பக்கம், சித்திரங்கள், விலை: ஸ்டேர்லின் பவுண் 15.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-1-998673-1-7.

லண்டன் திருமணங்களில் இன்று இடம்பெற்றுவரும் உண்மைச் சம்பவங்களை அடிப்படையாக வைத்து தனது அனுபவங்களையும் அறிவையும் சமூகப்பொறுப்பையும் கலந்து இதிலுள்ள 53 கட்டுரைகளையும் ஆசிரியர் எழுதியிருக்கிறார். இனவம்ச விருத்திக்கு திருமணம் ஒரு திறவுகோல், புலம்பெயர் நாடுகளிலும் நமது இனப்பெருக்கம் அவசியம், வந்தாரை வாழவைத்தவர்கள் நொந்தாரை.., இனம் தாவும் தமிழ் இளைஞர்கள்-யுவதிகள், உறவுகள் கலங்க மாற்றான் வீட்டில்

வாழ்க்கை, ஆசை அறுபது நாள் மோகம் 30 நாள்-பின்னர்?, அதிர்ச்சி தந்த அழைப்புக்கள் ஐந்துக்கு மூன்று இனம் மாறிகள், குஜராத்திப் பெண்களுக்கு தமிழ் இளைஞர் மீது மோகம், மதம் ஒன்றுபடுத்தும் குஜராத்தித் திருமணங்கள், சுகசீவிய வாய்ப்பும் இலண்டன் வாழ்க்கையும், பணக் கைதிகளாகும் பெற்றோர்கள், பெற்றோர்களுக்கு வாய்ப்பூட்டு-வீட்டுக்குள் விரும்பாத பெண், தமிழர் பாரம்பரியம் பேணும் இலண்டன் திருமணங்கள், அந்தநாள் ஞாபகங்களும் இன்றைய திருமணங்களும், ஊர்வலம் வரும் வரையில் ஊர் விழித்திருக்கும், பாரம்பரிய பலகாரச்சூட்டில் இலண்டன் குடும்பங்கள், வரவேற்கிறார் பிள்ளையார்-வீடுகளுக்கும் எழுந்தருளல், ஹோட்டல்களில் ஆடம்பரம் குடும்பங்கள் போட்டி என இன்னோரன்ன சுவையான தலைப்புகளில் இக்கட்டுரைகள் அமைகின்றன.

### 16274

**வைதீக மற்றும் தமிழர் திருமண முறைகள்.** தங்கராசா சிவபாலு. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1ஆவது பதிப்பு, 2010. (சென்னை 600094: பி.வி.ஆர். ஆஃப்செட்).

xvi, 100 பக்கம், விலை: இந்திய ரூபா 50.00, அளவு: 19x13.5 சமீ.

திருமணம், திருமண வகைகள், திருமணத்திற்கு முன் இடம்பெற வேண்டியவை, பொருத்தம் பார்த்தல், கலியாணம் முற்றாக்குதல் (நிச்சயதார்த்தம்), திருமண நாள் பார்த்தல் அல்லது நாள் வைத்தல், தாலிக்குப் பொன்னுருக்குதல், கன்னிக்கால் நடுதல், மாப்பிள்ளை அழைப்பு, பவித்திரம் அணிதல், மாலை மாற்றுதல், ஏழடி நடத்தல், அம்மி மிதித்தல், குற்றம் நீக்குதல், அருந்ததி பார்த்தல், மோதிரம் போட்டு எடுத்தல், அரசாணி, வாழ்த்துதல் - ஆராத்தி எடுத்தல், தமிழர் திருமண முறை, புதுமணத் தம்பதிகளை வாழ்த்துதல் ஆகிய 20 தலைப்புகளின்கீழ் வைதீக மற்றும் தமிழர் திருமண முறைகள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழரான தங்கராசா சிவபாலு பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியாவார்.

## 395 நாட்டார் வழக்காற்றியல்

### 16275

**தமிழர் நாட்டுப்புற இயல் களஞ்சியம்.** இளையதம்பி பாலசுந்தரம். கனடா: சுவாமி விபுலாநந்தர் தமிழியல் ஆய்வு மையம், ரொறன்ரோ, இணை வெளியீடு, சென்னை: மணிமேகலைப் பிரசுரம், 1ஆவது பதிப்பு, 2019. (சென்னை 94: ஆதிலட்சுமி ஆஃப்செட்).

xxx, 410 பக்கம், விலை: இந்திய ரூபா 300., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-0-9731932-4-4.

நாட்டுப்புற இயல் ஓர் அறிமுகம், நாட்டுப்புற இலக்கியங்கள் (நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புறக் கதைகள், பழமொழிகள், விடுகதைகள்), தமிழர் கூத்துக்கலைகள் (பண்டைத் தமிழரின் கூத்துக்கலைகள், வடமோடி-தென்மோடிக்

*கூத்துக்கள், வசந்தன் கூத்து, விலாசக் கூத்து, சிந்துநடைக் கூத்து, இசை நாடகங்கள்), பெண்தெய்வ வழிபாடு, நாட்டுப்புற இசை-இசைக் கருவிகள்-பயன்பாடுகள், இடப்பெயர் ஆய்வும் அதன் முக்கியத்துவமும் (இடப்பெயர் ஆய்வு, தமிழர் பரம்பல், தென்னிந்தியத் தமிழர் வரலாற்றியல் இடப்பெயர்கள், இலங்கைத் தமிழர் வரலாற்றில் இடப்பெயர்கள், அந்தமான்-நிக்கோபார் தீவுகளின் இடப் பெயர்கள், தூரக்கிழக்கு நாடுகளிலே தமிழ் இடப்பெயர்கள், மலேசியா-சிங்கப்பூர் இடப்பெயர்கள், ஜப்பானியத் தொடர்புகள்), மரபுவழி விளையாட்டுக்கள் (பண்டைத் தமிழரின் விளையாட்டுக்கள், காளை அடக்குதல், கிளித்தட்டு, கிட்டிப்புள், எட்டுக்கோடு, சடுகுடுஆட்டம், மட்டைப்பந்து, பட்டம் விடுதல், நீர்விளையாட்டு, வட்டாடல், கண்ணாமூச்சி, மாட்டுவண்டி ஓட்டப்போட்டி, ஆடு-புலி ஆட்டம், தாயம், கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல், சாக்கு ஓட்டம்), நாட்டுப்புறக் கலைகள், மரபுவழிக் கொண்டாட்டங்கள், பருவகாலங்கள் பற்றிய உலகப் பழமொழிகள்-ஓர் ஒப்புநோக்கு, கூரைமுடிப் பாரம்பரியம் உணர்த்தும் சமூகக் கட்டமைப்பு ஆகிய 11 இயல்களில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது.*

மேலும் பார்க்க:
களிகம்பு: இலங்கை முஸ்லிம்களின் பாரம்பரிய ஆடற்கலை. 16365

## 398 கிராமிய இலக்கியங்கள், நாட்டுக்கூத்துக்கள்

### 16276

**அற்றைத் திங்கள்: கூத்துருவ நாடகம்.** யோ.யோண்சன் ராஜ்குமார். யாழ்ப்பாணம்: *திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, 1ஆவது பதிப்பு, ஜுன் 2016. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டேர்ஸ், முத்திரைச் சந்தியடி, நல்லூர்).*

xv, *104 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ.,* ISBN: *978-955-7530-02-4.*

*"அளிக்கை" என்ற முதற் பகுதியில் "அற்றைத் திங்கள்" - நாடக பாடம் முதல் 56 பக்கங்களிலும் விரிகின்றது. "அளிக்கைப் பதிவுகள்" என்ற இரண்டாம் பகுதியில், பயன்படுத்தப்பட்ட கூத்து மெட்டுக்கள், அரங்காடியோர், அரங்கேறிய திகதிகள் ஆகிய மூன்று விடயங்கள் இடம்பெற்றுள்ளன. "விளைவுகள்" என்ற மூன்றாவது பகுதியில் கண்டு கலந்தோர் உரைத்தவை, ஊடக விமர்சனங்கள் என்பன இடம்பெற்றுள்ளன. இந்நூல் யோ.யோண்சன் ராஜ்குமார் அவர்களின் ஆக்கத்தில் அச்சில் வெளிவரும் நான்காவது நூலாகும். முன்னதாக "கம்பன் மகன்" என்ற தென்மோடி நாட்டுக்கூத்து நூல், "கொல் ஈனும் கொற்றம்" என்ற கூத்துருவ நாடகநூல், "அமைதிப் பூங்கா" என்ற சிறுவர் நாடக நூல் என்பன வெளிவந்துள்ளன. பறம்பு மலைச் சிற்றரசன் பாரி பற்றிய கதை இது. முல்லைக் கொடிக்குத் தன் தேரையே ஈந்தவன் என்ற பெயரைப் பெற்றவன். மூவேந்தர்கள் தமிழகத்தை ஆண்ட காலத்தில் சிற்றரசன் பாரியின் பெயர் ஓங்குவதைக் கண்டு சினந்த அவர்கள் பாரியின் மீது போர் தொடுத்தனர். பாரியும் தன் பலத்தை எடைபோடாது மூவேந்தருடன் போரிடத் தீர்மானித்தான். மூவேந்தரின் சதிவாளுக்கு இரையானான்.*

### 16277

**1675இல் மட்டக்களப்பு டச்சுக்காரரை எதிர்த்த இளஞ்சிங்கன்: தென்மோடிக் கூத்து இலக்கணமும் இலக்கியமும்.** ஈழத்துப் பூராடனார் (க.தா.செல்வராஜகோபால்), எட்வேட் சந்திரா (பதிப்பாசிரியர்). கனடா: க.தா.செல்வராஜகோபால், இல. 3, 1292, Sherwood Mills Bloved, Mississauga L5V, 1S6, Ontario, 1ஆவது பதிப்பு, 2005. (கனடா: ஜீவா பதிப்பகம், ரொரன்டோ).

142 பக்கம், விலை: கனேடியன் டொலர் 10.00, அளவு: 22x15 சமீ.,

1675இல் மட்டக்களப்பில் ஏறாவூரை ஆண்டுவந்த இளஞ்சிங்கன் என்ற வன்னிச் சிற்றரசனைப் பற்றிய வரலாறு தென்மோடிக் கூத்தாக 58 காட்சிகளில் எழுதப் பட்டுள்ளது. இளஞ்சிங்கனைப் பிடிப்பதற்கு நியமிக்கப்பட்ட படைத்தலைவன் பீற்றர் டி குரோவ் பற்றியும் இக்கூத்தில் குறிப்பிடப்படுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38518).

### 16278

**கிராமிய நடனப் பாடல்கள்.** வை.கணேசபிள்ளை. யாழ்ப்பாணம்: இணுவில் பொது நூலக இலக்கியத்துறை, 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2021. (யாழ்ப்பாணம்: சுடர்நிலவு கிராப்பிக்ஸ், இணுவில்).

xvi, 54 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

நூலாசிரியர் பண்டிதை கலாபூஷணம் திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை யாழ் மாவட்டத்தின் பாடசாலைத் தமிழ்த் திறன் கலைப்போட்டிகளுக்கு வேண்டிய நாட்டிய நாடகங்களை ஏற்கெனவே தாராளமாக எழுதிக் கொடுத்துள்ளார். இவற்றின் தொகுதியாக ஏற்கெனவே நாட்டிய நாடகங்கள் என்ற நூல் 2012இல் வெளிவந்திருக்கின்றது. வாழ்த்துப் பாக்கள், ஊஞ்சற் பாடல்கள், வரவேற்புப் பாடல்கள் என இவரது படைப்பாக்கங்கள் பல்வகைப்பட்டன. அவற்றில் இருபது கிராமிய நடனப் பாடல்களைத் தேர்வு செய்து இத்தொகுதியில் வழங்கியிருக்கிறார். இணுவில் பொது நூலகம்-சனசமூக நிலையத்தின் இலக்கியத் துறைப் பொறுப்பாள ராகப் பணியாற்றும் பண்டிதை கலாபூஷணம் திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை, இலக்கியத்துறையின் வாயிலாகப் பல நூல்களை ஏற்கெனவே வெளியிட்டுள்ளார். இவரால் எழுதி வெளியிடப்பட்ட "கிராமிய நடனப் பாடல்கள்" என்ற இந்நூலில் விநாயகர் கும்மிப் பாடல், மயில் நடனம், நோய் பிணி தீருமம்மா (கும்மி), வேப்பிலைச் சுந்தரியே (வேப்பிலை நடனம்), செம்பு நடனம், சுளகு நடனம், சங்கத் தமிழ் பாடி (கும்மிப் பாடல்), பழந்தமிழர் பண்பு பாடி (பந்து நடனம்), மங்கையர் பந்தடித்தனரே (பந்து நடனம்), ஈழவள நாடு பாடி ஆடுவோம் (கோலாட்டம்), கோல்கள் ஆடுவோம் (கோலாட்டம்), தூரத்து இறக்குமதி (அரிவு வெட்டு நடனம்), பசுமைப் புரட்சி (அரிவு வெட்டு நடனம்), அரிவு வெட்டு நடனம், தைத்திருநாள், வாள் நடனம், தேயிலைக் கொழுந்து நடனம், ஏலேலோ ஐலஸா (கப்பல் பாட்டு), குறவர் வாழ்வு, குறவஞ்சி நடனம், மங்கல வாழ்வளிக்கும் பனைமரம், நூலகமென்பது பூஞ்சோலை ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 22 பாடல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

### 16279

**சந்தொம்மையார் வாசாப்பு: தென்மோடி நாட்டுக் கூத்து.** புலவர் மரிசால் மிறால் (குப்பையப் புலவர்). யாழ்ப்பாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், 2ஆவது பதிப்பு, 2021, 1ஆவது பதிப்பு, 1994. (யாழ்ப்பாணம்: அன்ரா பிரின்டர்ஸ், 379 கஸ்தூரியார் வீதி).

xviii, 122 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-624-5911-00-4.

முன்னர் 1994இல் நானாட்டான் பிரதேச கலாசாரப் பேரவை வெளியீடாக வெளிவந்த சந்தொம்மையர் வாசாப்பு இப்பொழுது மீள்பதிப்பாக வெளிவந்துள்ளது. குப்பையப் புலவர் என்று அறியப்பெற்ற மரிசால் மிறால் புலவரால் இது முன்னர் எழுதப்பட்டது. மன்னார், மாதோட்ட மக்களினால் சுப நிகழ்வுகளில் பெரும்பாலும் பாடப்படுவது இவ்வாசாப்பின் பாடல்களேயாகும். இக்கூத்தின் மேல் மக்கள் கொண்ட அபிமானத்தின் வெளிப்பாடாகவே இது நோக்கப்படுகின்றது. இப்பதிப்பில் இவ்வாசாப்புப் பாடல்கள் சீர்வரிசை முறையுடன் தென்பாங்கு மெட்டிற்கு அமைவாக அமைக்கப்பட்டுள்ளது. இம்மறுபதிப்பிற்கான மூல ஏடாக பாலைக்குழி, நானாட்டான் என்ற முகவரியைச் சேர்ந்த அமரர் அந்தோனிப்பிள்ளை அவர்களின் ஏட்டைப் பயன்படுத்தியுள்ளனர்.

### 16280

**தென் யாழ்ப்பாணம்: இம்மண்ணில் ஆடப்பெற்ற கூத்துக்களும் செயற்பட்ட கலைஞர்களும்-ஆய்வு நூல்.** சிவநாமம் சிவதாசன். யாழ்ப்பாணம்: பண்பாட்டலு வல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், 1ஆவது பதிப்பு, நவம்பர் 2022. (யாழ்ப்பாணம்: அன்றா பிறிண்டேர்ஸ், இல. 356A, கஸ்தூரியார் வீதி).

xi, 111 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17 சமீ., ISBN: 978-624-5911-17-2.

தென் யாழ்ப்பாணம், நாட்டுக் கூத்துக்களின் வருகை, கதைவழிக் கூத்து என அழைக்கப்பட்ட சிந்துநடைக் கூத்து, இசை நாடக வருகை, பபூன் எனப்படும் நகைச்சுவை வடிவம், ஒப்பனைக் கலை வடிவமும் பின்னணி இசைக் கலையும், அரியாலைக் கிராமத்தில் ஆடப்பெற்ற கூத்துக்களும் கலைஞர்களும், கொழும்புத் துறைக் கிராமத்தில் நாட்டுக் கூத்துக்களும் கலைஞர்களும், பாஷையூர்க் கிராமத்தில் நாட்டுக்கூத்தும் இசை நாடகம் ஆடிய கலைஞர்களும், ஈச்சமோட்டை, கொய்யாத் தோட்டம், சுண்டுக்குளி கிராமங்களில் கூத்துக் கலை வளர்ச்சியும் கலைஞர்களும், குருநகர் பிரிவில் நாட்டுக் கூத்தும் கலைஞர்களும், நாவாந்துறைக் கிராமத்தில் நாட்டுக்கூத்தின் வளர்ச்சியும் கலைஞர்களின் பங்களிப்பும் ஆகிய பன்னிரண்டு இயல்களில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரியாலைக் கிராமத்தில் தன் தனித்துவமான கலை ஆளுமைத் திறத்தின் வழியாகப் பிரகாசித்துக்

கொண்டிருப்பவர் கலாபூஷணம், கலைக்குரிசில், தேச அபிமானி ஆகிய பட்டங் களைப் பெற்ற சிவநாமம் சிவதாசன். சிறு வயது முதல் நாடக இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர். 1967 முதல் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் தன் படைப்பாக்கங்களை வெளியிட்டு வருபவர்.

### 16281

**நொண்டி நாடகம்: தென்மோடிக் கூத்து.** யோ.யோண்சன் ராஜ்குமார் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், 1ஆவது பதிப்பு, 2021, (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

xxviii, 111 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ., ISBN: 978-624-5911-06-6.

இந்நொண்டி நாடகமானது யாழ்ப்பாணத்தில் பல கிராமங்களிலும் மன்னார், மட்டக்களப்பு போன்ற இடங்களிலும் பாரம்பரியமாக ஆடப்பட்டுவந்த தென் மோடிக் கூத்தாகும். இதுவரை நூலுருப்பெறாமல் கையெழுத்துப் பிரதிகளாக வலம்வந்த இக்கூத்துப்பிரதி இப்பொழுது முதன்முதலில் நூலுருப்பெற்றுள்ளது. இணுவில் சின்னத்தம்பிப் புலவர், மன்னார் கீத்தாம்பிள்ளைப் புலவர், குருநகர் அவுறாம்பிள்ளைப் புலவர் போன்றவர்கள் நொண்டி நாடகங்களை எழுதினார்கள் என்ற தகவல்கள் இருந்தாலும் அவை எங்கே என்பதோ, கிடைக்கப்பெற்ற பிரதிகள் யாருடையவை என்பதோ இன்று அறியமுடியாதுள்ளது. நெடுந்தீவில் வழங்கிவந்த, அண்ணாவியார் அமிர்தநாயகம் அவர்களால் பேணப்பட்டு வந்த ஓரளவு முழுமையானதாகக் காணப்பட்ட இந்த நொண்டி நாடகத்தினை இனங்கண்டு ஆழமான ஆய்வுரை ஒன்றுடன் கூடியதாக பதிப்புச் செய்துள்ளார்கள்.

### 16282

**பாட்டி சொன்ன இலங்கையின் மரபுக் கதைகள்.** பொன்.குலேந்திரன். கனடா: குவியம் வெளியீடு, 2796, Keyness Crescent, Mississauga, Ontario, L5N3A1, 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2016. (மின்நூல் வடிவம்).

112 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

இந்நூலில் காணப்படும் 23 மரபுக் கதைகளும் இந்துக்கள், பௌத்தர்கள், கத்தோலிக்கர்கள், இஸ்லாமியர்கள் வழிவந்த மரபுக் கதைகளாகும். வேலணைப் பள்ளிவாசல், பூசாரியைக் காப்பாற்றிய வீரமாகாளி அம்மன், வைரவர் மலை இரகசியம், புத்தளம் வால் மரைக்காயர், உடப்பூரில் பெண்ணுக்காக யுத்தம், பூதத் தம்பி கதை, முன்னேஸ்வரம் பத்ரகாளியம்மன், தேவதை மர அதிசயம், சிகிரியா, சரதியல்: இலங்கையின் ரொபின் ஹுட், விகாரமகாதேவி, வற்றாப்பளை அம்மன் அற்புதம், தலவில்லு தேவாலயம், அசோகமாலா, கண்ணுச்சாமி கண்டி மன்னனான கதை, இலங்கையும் இராவணனும், நாகதீபம்: மணிபல்லவம், மாருதப் புரவீகவல்லி, செண்பகப் பெருமாள், சீனிகம கோவில், கலாவெவ

களத்தின் கதை, நோனாகம, ரொடியா அழகி லொனாவியாவின் காதல் ஆகிய தலைப்புகளில் இம்மரபுக் கதைகள் எழுதப்பட்டுள்ளன.

### 16283

**மகிடிக்கூத்து.** சு.சிவரெத்தினம். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2022. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

116 பக்கம், விலை: ரூபா 700., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-624-6164-30-0.

மகிடிக்கூத்து மட்டக்களப்பில் பல இடங்களில் நிகழ்த்தப்பட்டு வந்த ஒரு கொண்டாட்ட அரங்காகும். கலாநிதி சு.சிவரெத்தினம் தற்போது மகிடிக் கூத்தை பதிப்பிக்கின்றார். குடும்பம் ஒன்று வாய்மொழியாகக் காத்துவந்த வரலாற்றுப் பொக்கிஷமொன்றை இன்னொரு தலைமுறை-அதுவும் அச்சமூகம் சாராத ஒரு தலைமுறை மீட்டெடுத்து நமது நாடக உலகுக்கு அளிப்பது இதன்மூலம் சாத்திய மாகியுள்ளது. செழுமையான ஓர் ஆற்றுகை முறையையும் பாரம்பரியத்தையும் இது கொண்டிருப்பது இதன் ஓர் முக்கிய அம்சமாகும். அரசரையும் கடவுளரையும் முனிவரையும் போற்றிப்பாடும் கூத்துமரபுக்கு மறுதலையாக உயர்ந்த நிலையில் இருப்போரையும் பிராமணரையும் முனிவரையும் கேள்விக்கும் கேலிக்கும் உள்ளாக்கும் தன்மையை இது கொண்டிருப்பது இன்னொரு முக்கிய அம்சமாகும். இந்த மகிடி ஏடு மட்டக்களப்புப் பண்பாட்டின் ஒரு பகுதி. மட்டக்களப்பின் அடையாளமும் கலைப்பொக்கிஷமுமான கூத்துக்களையும் கூத்து ஏடுகளையும் புரிந்துகொள்ள உதவும் திறவுகோல் எனலாம். (பின்னட்டைக் குறிப்பு, பேராசிரியர் சி.மௌனகுரு).

### 16284

**மண்டைதீவு கலைவாரிதி வில்லியம் கஸ்பார் அவர்களின் தர்மசீலி தென்மோடி நாட்டுக்கூத்து.** வில்லியம் கஸ்பார். வேலணை: கலாசாரப் பேரவை, வேலணைப் பிரதேச சபை, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2018. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

x, 137 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20x14.5 சமீ.

பாண்டியநாட்டு மாவிலாபுரியை ஆண்ட மன்னனின் மகனான முன்கோபக்கார இளவரசனிடம் சபதம் பூண்ட ஒரு வணிகப் பெண்ணின் சபதத்தை எவ்வாறு அவள் நிறைவேற்றுகிறாள் என்பதே கதையாகும். மண்டைதீவைச் சேர்ந்த வில்லியம் கஸ்பார் 1950ஆம் ஆண்டு பிறந்தவர். தனது பன்னிரண்டாவது வயதிலேயே அண்ணாவியார் செ.பவுலீனப்புவின் உதவியுடன் நாட்டுக்கூத்தில் ஈடுபாடு கொண்டு யூதகுமாரன் நாடகத்தில் யூதகுமாரன் பாத்திரத்தில் நடிக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். தொடர்ந்து ஆட்டுவணிகன் நாடகம், எஸ்தாக்கியார் நாடகம், கற்புக்கரசி இரண்டாம் பாகம் போன்ற நாடகங்களில் மேடையேறினார். 1974இல் இவர் எழுதிய நாட்டுக்கூத்து கற்புக்கரசி நாடகமாகும். 1974இல் இந்நாடகம் மேடையேற்றப்பட்டது. 1982இல் இவரது இளவரசன் நாடகம் மேடையேற்றம் கண்டது.

### 16285

**மன்னார் மாதோட்ட வாசகப்பா, நாடக மெட்டுக்கள் (பாகம் 1).** அருள்தந்தை செ.அன்புராசா, அருள்தந்தை தமிழ்நேசன் (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2019. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).

xxiv, 71 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-7331-22-5.

மன்னார் மாதோட்டத்தில் மரபுவழியாகப் பேணப்பட்டு வரும் தென்மோடி மெட்டுக்களைக் கொண்ட சந்தொம்மையார் வாசகப் பாவிலிருந்தும், வடமோடி மெட்டுக்களைக் கொண்ட என்டிறிக்கு எம்பரதோர் நாடகத்திலிருந்தும் தொகுக்கப்பட்ட வாசகப் பா நாடக மெட்டுக்கள் இவை. இந்நூலுடன் மன்னார் மாதோட்ட வாசகப்பா, நாடகப் பாரம்பரியக் கூத்து மரபின் 138 பாடல்களின் மெட்டுக்களின் இறுவட்டும் (MP3) இணைக்கப்பட்டுள்ளன.

### 16286

**வளையாபதி: தென்மோடி நாட்டுக்கூத்து.** செ.அ.அழகராஜா. யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2012. (யாழ்ப்பாணம்: ஜெயந்த் சென்டர், 28, மார்ட்டின் வீதி).

xii, 48 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ.

கவிஞர் செ.அழகராஜா இயற்கையிலேயே கவி புனையும் ஆற்றல் மிக்கவர். தன் சிறு வயதில் இருந்தே அண்ணாவியார் பூந்தான் ஜோசேப்புவின் கூத்துக்களில் நடித்ததுடன் அவரது நவரச நாட்டுக்கூத்து கலைமன்றத்தின் நிர்வாக உறுப்பின ராகவும் இருந்தவர். "யாழூர் அழகன்" என்ற புனைபெயரிலும் பல்வேறு சிறுகதை களை எழுதிவந்தவர் இவர். திருமறைக் கலாமன்றத்தின் அங்கத்தவராக இணைந்து நடிகராகவும் எழுத்தாளராகவும் அறிவிப்பாளராகவும் பல்வேறு தளங்களிலும் பணியாற்றி வருபவர். தமிழில் ஐம்பெருங் காப்பியங்கள் என அழைக்கப்படும் ஐந்து நூல்களுள் ஒன்றாக விளங்குவது வளையாபதி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் இது சமண சமயம் சார்ந்த ஒரு நூல். வளையாபதியின் கதையை தென்மோடி நாட்டுக்கூத்தாக செ.அ.அழகராஜா அவர்கள் வழங்கி யிருக்கின்றார். பூம்புகாரில் வாழ்ந்த பிரபல வைர வணிகன் நவகோடி நாராயணன், அவன் காந்தர்வ மணம் புரிந்த ஆடல்மகளான பூங்கொடி, அவர்களது மகன் மாறன் ஆகியோரைச் சுற்றிப் பின்னப்பட்ட கதை இது.

மேலும் பார்க்க:

முதுசொம்: இரு கூத்தும் நாநாடகமும். 16601

## 398.1 பழமொழிகளும் விடுகதைகளும்

### 16287

**விடுகதைகள் ஆயிரம்.** ஒமேகா. கொழும்பு 15: ஒமேகா வெளியீடு, ஒமேகா கணித விஞ்ஞான வளநிலையம், 478/31 B, அளுத்மாவத்தை வீதி, 1ஆவது பதிப்பு, 2022. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(2), 157 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-955-20142-4-7.

நாட்டார் இலக்கியத்தின் ஒரு பகுதியாகத் திகழ்வன பழமொழிகளும் விடுகதைகளு மாகும். பழமொழிகள் நம் மக்களின் அனுபவத் திரட்டாகத் திகழ்வன. விடுகதைகள் அறிவு வளர்ச்சிக்கும் சிந்தனை ஆற்றலுக்கும் பெரிதும் உதவுகின்றன. வழக்கொழிந்து வரும் விடுகதைகளை மீள்வரவாக்கும் வகையில் ஆயிரம் விடுகதைகளைத் தொகுத்து இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

## 398.8 தாலாட்டுப்பாடல்கள்

### 16288

**செவ்வானச் சித்திரம்: தாலாட்டுப் பாடல்கள்-சிறுவர் இலக்கியம்.** பீ.ரீ.அஸீஸ். கிண்ணியா 07: பாத்திமா றுஸ்தா பதிப்பகம், பெரியாற்று முனை, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2017. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

viii, 9-48 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 240., அளவு: 24x17 சமீ., ISBN: 978-955-0715-22-0.

தாய்-சேய் இருவருக்குமான உறவு, பாசப் பிணைப்பு, என்பவற்றை இந்நூலிலுள்ள அனைத்துப் பாடல்களும் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. இங்கு கையாளப்பட்டிருக்கின்ற உவமான உவமேயங்கள் மனதில் பல்வேறு இன்ப அதிர்வுகளை ஏற்படுத்தி குழந்தைகளைக் குதூகலத்தில் ஆழ்த்துவதிலும் வெற்றிகண்டுள்ளது. மாட்டு வண்டி மணியோசை, பூங்கொத்து, அம்மா அம்மா என்று, உன் நினைவே மகிழ்வெனக்கு, சின்னவனே சின்னவனே, காலைப் பொழுதின்பம், கண்மணியே நீ உறங்கு, பூ மழைகள் திரளாக, குரல் கெட்டு புன்னகைக்கும், யாருக்குத் தெரியும், ஊர் உறங்கும் நேரத்திலும், காட்டு மல்லி, துன்பங்கள் விலகிடும், பஞ்சு மெத்தை தேடும், பிஞ்சு முகம் பார்க்க வந்தேன், மூங்கில் கம்பு வெட்டி, தேனமுது, சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு, முத்துப் பல்லழகா, கண்ணே கனியமுதே, தலையாட்டி மகிழ்வாயா? ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 21 தாலாட்டுப் பாடல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

# 400 மொழியியல்

## 411 பிறெயில் முறையியல்

### 16289

**பிறெயில் முறையியல்: பாகம்-1.** வி.விஷ்ணுகரன். ஏழாலை: லோட்டஸ் வெளியீட்டகம், குப்பிளான் தெற்கு, 1ஆவது பதிப்பு, மார்ச் 2015. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 681, காங்கேசன்துறை வீதி).

xii, 69 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-42025-0-4.

இலகுவாக பிறெயில் (Braille) கற்பதற்கான வழிகாட்டி நூல் இது. பார்வையுள்ளவர்கள் இதன்மூலம் பிறெயில் மொழியை இலகுலாகக் கற்றுக்கொள்ளவும் பார்வையற்ற வர்கள், பார்வையுள்ள ஒருவரின் வழிகாட்டுதலுடன் இந்நூலைப் பன்படுத்திக் கொள்ளவும் முடியும். பிறெயில் எழுத்து முறைமையுடன் நினைவுகூரப்பட வேண்டியவர்கள், பிறெயில்-ஓர் அறிமுகம், பிறெயில் கற்கும் நுட்பங்கள், பிறெயில் ஸ்லைடில் (Braille Slide) எழுதுவதற்கான பயிற்சி பெறல், உயிர் எழுத்துகளுக்குரிய பிறெயில் வடிவங்கள், உயிர் எழுத்தில் ஆரம்பிக்கும் சொற்களை Braille Slide இல் எழுதும்-வாசிக்கும் முறை, அகரவரிசை உயிர்மெய் எழுத்துகளுக்குரிய பிறெயில் வடிவங்கள், மெய் எழுத்துகளுக்குரிய பிறெயில் வடிவங்கள், அனைத்து உயிர்மெய் எழுத்துகளுக்குமுரிய பிறெயில் வடிவங்கள், கிரந்த எழுத்துகளுக்குரிய பிறெயில் வடிவங்கள், நிறுத்தற் குறியீடுகளுக்கான பிறெயில் வடிவங்கள், ஆங்கில எழுத்துகளுக்கான பிறெயில் வடிவங்கள், இலக்கங்களுக்கான பிறெயில் வடிவங்கள், கணிதக் குறியீடுகளுக்கான பிறெயில் வடிவங்கள், கணக்குகளை பிறெயிலில் எழுதும் முறை, பின்னிணைப்பு ஆகிய 16 பாடங்களாக வகுத்து பிறெயில் கற்பிக்க வழிசெய்யப்பட்டுள்ளது.

## 491.2 சமஸ்கிருத மொழி

### 16290

**ப்ரயோக சம்ஸ்கிருதம் அல்லது பேச்சு சம்ஸ்கிருதம்.** ப.சிவானந்த சர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், ஸ்ரீ நகரம், அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம், 1ஆவது பதிப்பு, ஜனவரி 2019. (சுன்னாகம்: கஜானந்த பிரின்டர்ஸ், மானிப்பாய் வீதி, இணுவில்).

118 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 26x18.5 சமீ., ISBN: 978-955-4078-07-9.

வடமொழி அல்லது சம்ஸ்கிருதத்தில் கிரந்தம், தேவநாகரி (நாகரம்) என இரு எழுத்துருக்கள் (லிபிகள்) பயன்பாட்டில் உண்டு. நாகர லிபியிலேயே அதிகமாக சம்ஸ்கிருத இலக்கண இலக்கியங்களைக் கற்று வருகிறார்கள். சிவாசாரியார்கள் பலர் கிரந்த லிபி மட்டுமே தெரிந்தவர்களாகவும் இருக்கிறார்கள். இந்நிலையில் இந்நூல் ஒரே சமயத்தில் கிரந்தம், நாகரம் ஆகிய இரு லிபிகளிலுமே

வெளியிடப்பட்டுள்ளது. "ராஜேந்திரராம் நிவாஸ் பதிவு" என்ற பெயரில் வாட்ஸ் அப் குழுமத்தில் பதிவு செய்யப்பட்ட சம்ஸ்கிருத பாடத்தைப் பெரிதும் பின்பற்றி சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்ட சில ஒலி-ஒளி வடிவங்களைத் துணைக்கொண்டும் இந்நூலை ஆசிரியர் தயார் செய்திருக்கிறார். வித்யாசாகர் கே.எல்.வி. சாஸ்திரி அவர்களின் வெளியீடுகள் முதலிய பழைய சம்ஸ்கிருத பாடநூல்களையும் ஆதாரமாகக் கொண்டு பழமையும் புதுமையும் இணைய இந்நூல் உருவாகியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70026).

## 494.8 தமிழ் மொழி

### 16291

**அருஞ்சொற் களஞ்சியம்.** எஸ்.எம்.ஜீவா (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: அன்னை புத்தகசாலை, இல. 7, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, 1ஆவது பதிப்பு, 2022. (யாழ்ப்பாணம்: சத்தியா பிரின்டர்ஸ், 153/11, நாவலர் வீதி).

iv, 68 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 20.5x15 சமீ.

புதிய பாடத்திட்டத்திற்கு அமைவான அருஞ்சொற் களஞ்சியம். மொழித்திறன் விருத்திக்கான வழிகாட்டி. 1500 தொடர்களுக்கான விளக்கங்களைக் கொண்டுள்ளது. ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு உகந்தது. இந்நூலின் தொகுப்பாசிரியர் கொழும்பு, கொள்ளுப்பிட்டி பரி.தோமா கனிஷ்ட பாடசாலையின் ஆசிரியராவார்.

### 16292

**ஈழத்துத் தமிழ் வழக்கு அகராதி (தமிழ்-தமிழ்ஆங்கிலம்).** ஆ.சதாசிவம் (மூலம்), நவரட்ணம் குகபரன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: திருமதி திருஞானேஸ்வரி சதாசிவம், 11, சின்சப்பா வீதி, 1ஆவது பதிப்பு, 2022. (சாவகச்சேரி: மிக்கி பிரிண்டிங் ஸ்பெஷலிஸ்ட் A9 வீதி, சங்கத்தானை).

xvi, 366 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x17.5 சமீ., ISBN: 978-624-99037-1-5.

பேராசிரியர் ஆறுமுகம் சதாசிவம் தான் வாழ்ந்த காலம் முழுதும் மொழி ஆய்வில் ஈடுபட்டவர். ஈழத்தமிழர்களின் மொழி வழக்குகளை வெளிப்படுத்த அவர் முன்னெடுத்த முயற்சிகள் முக்கியமானவை. அப்பெரியாரால் 1960களில் ஆரம்பிக்கப்பட்டு, 1973இல் அவற்றின் பெரும்பகுதி தட்டச்சுச் செய்யப்பட்ட நிலையில் சுகவீனம் காரணமாக 1988இல் நிகழ்ந்த அவரது பெரும் பிரிவால் முடிவுறாதிருந்த இவ்வகராதித் தொகுப்பு, அவரது மறைவின் பின் குடும்பத்த வர்களால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. அந்தக் கையெழுத்து-தட்டச்சு சுவடியின் நூலாக்கம் இதுவாகும்.

### 16293

**சொற்பொருள் விளக்கம் எனும் தமிழகராதி.** ச.சுப்பிரமணிய சாஸ்திரிகள் (மூலம்), தி.செல்வமனோகரன், சி.ரமணராஜா (பதிப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், 3ஆவது பதிப்பு, மார்கழி 2022, 1ஆவது பதிப்பு, 1925, 2ஆவது பதிப்பு, 1960. (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

xvi, 288 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ., ISBN: 978-624-5911-18-9.

சொற்பொருள் விளக்கம் எனும் தமிழகராதி யாழ்ப்பாணம் பருத்தித்துறை வித்தியாவிருத்தித் தருமாலய கர்த்தரும் பிரபல சோதிட கணித சித்தாந்தியுமாகிய பிரமஸ்ரீ ச.சுப்பிரமணிய சாஸ்திரிகளால் புதிதாய் எழுதி அச்சிடப்பட்ட பிரதிக்கிணங்க, இக்காலத்துக்கியைந்தனவாகக் கூட்டியும் மாற்றியும் அவர்கள் எழுதிவைத்த சில சொற்களையுஞ் சேர்த்து, அவர் சகோதரர் பிரமஸ்ரீ ச.சோமசுந்தர ஐயரால் வித்தியாவிருத்தித் தருமாலய வெளியீடாக இரண்டாவது பதிப்பு, 1960இல் பருத்தித்துறை கலாநிதி யந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. அப்பதிப்பை அடிப்படையாகக் கொண்டு இம் மீள்பதிப்பு உருவாக்கப்பட்டுள்ளது. பிரமஸ்ரீ ச.சுப்பிரமணிய சாஸ்திரிகளின் சமயம், சோதிடம், சமஸ்கிருதம், பதிப்புப் பணிகளுடன் இணைந்து முதன்மைப்படுத்தத் தக்க பணியாக சொற்பொருள் விளக்கம் எனும் அகராதிப்பணி அமைந்துள்ளது. இரு மொழிப் புலமைமிக்க இவர் தமிழ்ச் சொற்கள், தமிழில் வழங்கும் வடமொழிச் சொற்கள் என்பவற்றுக்கு பொருள் விளக்கம் தரத்தக்க, ஒத்த பொருட்களை, ஒரு சொல் பல பொருள்களைக் கொண்டதாக இக்கையடக்க அகராதியை உருவாக்கியுள்ளார். உரிய வகையில் எழுத்தின் அளவைப் பயன்படுத்தியுள்ளார். அகராதி என்பதை "அகரமுதலாக (எழுத்துமுறையே) நிரைக்கப்படுஞ் சொற்கோவை" எனப் பொருண்நிலைப்படுத்து கின்றார். ஈழத்தமிழரின் அகராதியாக்க வரலாற்றில் இவ்வகராதிக்குத் தனி இடமுண்டு.

### 16294

**தமிழ்-ஓர் அறிமுகம்** (Tamil-An Introduction). ஸ்ரீரஞ்சனி விஜேந்திரா. கனடா: ஸ்ரீரஞ்சனி விஜேந்திரா, 1வது பதிப்பு, 2018. (கனடா: அச்சக விபரம் தரப்படவில்லை).

56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ., ISBN: 978-0-9738750-3-4.

இலங்கையில் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்நூலாசிரியர் ஓர் எழுத்தாளருமாவார். இவர் தற்போது டொறன்ரோ கல்விச் சபையின் தமிழ் மொழி ஆசிரியராகவும், மொழி மதிப்பீட்டாளராகவும், பாடவிதான அபிவிருத்திக் குழுவின் ஓர் அங்கத்தவராகவும் சேவைபுரிகின்றார். ஸ்ரீரஞ்சனியின் தமிழ்-ஓர் அறிமுகம் என்னும் இந்நூல் தமிழ் மொழியினையும் இலக்கியத்தையும் கற்க

விரும்பும் மாணவர்களுக்கு எளிமையானதும் சுருக்கமானதுமான ஓர் அறிமுகத்தினை வழங்குகின்றது. செம்மொழியான தமிழ்மொழி பற்றிப் புலம்பெயர் நாடுகளில் வளரும் தமிழ்ச் சிறார்களுக்கு தனது தாய்மொழியின் பெருமைகளை அறிந்துகொள்ளும் வாய்ப்பினை இந்நூல் வழங்குகின்றது.

## 16295

**தமிழ்ச் சொற்களின் பிறப்பு நெறி.** *ஆ.சதாசிவம். தஞ்சாவூர் 613005: தமிழ்ப் பல்கலைக்கழகம், 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2006. (தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம்).*

*(12), 224 பக்கம், விலை: இந்திய ரூபா 90.00, அளவு: 20.5x14.5 சமீ.,* ISBN: *81-7090-372-6.*

உலக மொழிகளுள் தொன்மைமிக்க மொழி தமிழ் மொழியே என்பதைப் பல ஆராய்ச்சியாளர்களும் நிறுவி வருகின்றனர். தமிழ்ச் சொற்களின் தோற்றம் பற்றிய ஆய்வுகள் இம்மொழியின் தனித்தன்மையை எடுத்துரைக்கக் காண்கின்றோம். தமிழ்ச் சொற்களின் பிறப்பு நெறி என்னும் தலைப்பில் வெளிவரும் இந்நூல் இவ்வகையில் உருவாக்கப்பட்ட ஓர் அரிய படைப்பாகும். மனிதன் தமிழிற் பேச ஆரம்பித்த காலத்திலிருந்து சொற்களின் பிறப்பு, அவற்றின் ஒலி வடிவம், பொருள் என்பன பற்றி இந்நூல் விளக்குகின்றது. முன்னுரை, தமிழில் தனிநிலை அடிச்சொற்கள், தமிழில் இணைநிலை அடிச்சொற்கள், தமிழில் குறைநிலை அடிச்சொற்கள், தமிழில் உயிர் முதற் சொற்களின் பிறப்பு நெறி, தொல்காப்பியம் காட்டும் பழந்தமிழ்ச் சொற்பிறப்பு நெறி, முடிவுரை ஆகிய ஏழு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 16296

**திராவிடப் பிரகாசிகை.** *வடகோவை சபாபதி நாவலர் (மூலம்), என்.சண்முகலிங்கன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், மீள் பதிப்பு, 2021, (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).*

xlii, *328 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.,* ISBN: *978-624-5911-10-3.*

தமிழ் இலக்கண இலக்கிய சாத்திர மெய்வரலாறுகளை, அன்றெழுந்த தமிழ் நூல்கள் பற்றிய செய்திகளை இனிதுபடக்கூறும் நூல் திராவிடப் பிரகாசிகையாகும். தமிழில் வெளியான முதல் தமிழ் வரலாற்று நூல் என்ற பெருமைக்குரியது. இந்நூல் தமிழின் தெய்வப்பழமை மரபியல், இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், சாத்திர மரபியல், ஒழிபியல் என ஐவகைப் பிரிவுகளில் எழுதப்பட்டுள்ளது. திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் யாழ்ப்பாணத்து வடகோவை சபாபதி நாவலர் அவர்களால் இயற்றப்பட்டு சித்தாந்த வித்தியாநுபாலன அச்சியந்திர சாலையில் கார்த்திகை 1889இல் பதிப்பிக்கப்பட்ட இந்நூலை அவரது

மருமகனாரான அ.சிவகுருநாதபிள்ளையவர்கள் 1927இல் மீள்பதிப்பாகப் பிரசுரித்துள்ளார். இந்நூல் அதன் பின்னைய பதிப்பாகும். இந்நூலில் முதற்பதிப்பு 1899 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இந்நூலின் வைகாசி 1927ஆம் ஆண்டுக்குரிய இரண்டாம் பதிப்பு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உள்ளது. சேர்க்கை இலக்கம் 27276).

## 16297

**மொழியியலும் தமிழ் மொழி வரலாறும்.** ஆ.சதாசிவம் (மூலம்), இளையதம்பி பாலசுந்தரம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: திருஞானேஸ்வரி சதாசிவம், இல. 11, சின்சபா வீதி, 1ஆவது பதிப்பு, 2021. (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

xxv, 262 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x17 சமீ., ISBN: 978-624-97668-1-5.

கலாநிதி ஆ.சதாசிவம் அவர்கள் மொழியியல்/ தமிழ்மொழி வரலாறு பற்றி எழுதியுள்ள முக்கியமான நூல். மொழியியல் (இறைவனாலே தோற்றுவிக்கப்பட்டது மொழி, மனித மூளையின் தொழிற்பாட்டறிகுறி மொழி, கருத்தை உணர்த்த உதவும் கருவி மொழி, நிரல்பட்ட சொற்றொடரறிகுறி மொழி, வாழும் உயிர்ப் பொருள் மொழி, மொழி என்பது ஓர் எந்திரம், மொழி என்பது ஒரு சமூகப் பழக்கம், இலக்கியத்தின் கருவி மொழி, மொழி என்பது ஒரு கலை, மொழி என்பது சமுதாயத்து மரபுகளின் ஒழுங்குமுறை, மொழியியல் விளக்கம்), மொழி வரலாறு (வரலாற்று மூலங்கள், மொழி விளக்கவியல், புத்தாக்கவியல், மொழியிலே நிகழும் மாற்றங்கள், பிறமொழிக் கலப்பு, மொழியின் வளர்வும் தேய்வும்), குறிப்பு மொழிக்காலம் (குறிப்பு மொழியினது தொடக்கம், குறிப்பு மொழியின் வகை, குறிப்பு மொழியும் உணர்ச்சியும், குறிப்பு மொழியும் பேச்சு மொழியும்), ஒலிக்குறிப்பு மொழிக்காலம் (ஒலிக்குறிப்பு, ஒலிக்குறிப்பின் வகை, ஒலிக்குறிப்பும் மொழியினது தோற்றமும், சங்க நூல்களில் ஒலிக்குறிப்பு Onomatopoeia), அசை மொழிக் காலத் தமிழ்: கி.மு.3000 (அசைமொழிக் காலம், அசைமொழிக் காலத் தமிழ்நாடு, அசைமொழியும் குழந்தை மொழியும், அசைமொழிச் சொற்கள், அசைமொழிச் சொற்களின் பண்பு, அசைச் சொல் உயிரொலிகள் நெட்டுயிரின் பான்மையன, அசைச் சொற்களின் பொருள்வளம்), உயிரின மெய்களின் தோற்றமும் தொழிற்சொற் பிறப்பும்: கி.மு.2500 (உயிரின மெய்களின் தோற்றம், தொழிற்சொற் பிறப்பு), மூக்கின மெய்களின் தோற்றமும் பெயர்ச்சொற் பிறப்பும்: கி.மு.2000 (மூக்கின மெய்களின் தோற்றம், பெயர் சொற்பிறப்பு), மூலவுயிர்க் குறுக்கமும் வினைச்சொற் பிறப்பும்: கி.மு.2000-கி.மு.1500 (மூலவுயிர்க் குறுக்கம், வினைச்சொற் பிறப்பு, குறிப்பும் வினையும்), ஒலியழுத்தமும் ஒலிப்பிளவும் (றகர மெய்யொலியின் தோற்றம்) ஆகிய ஒன்பது இயல்களில் இந்நூலை அவர் விரிவாக எழுதியுள்ளார்.

## 494.8(01) தமிழ் மொழி ஆய்வுச் சிறப்பிதழ்கள்

### 16298

**வன்னிப் பிராந்தியத் தமிழாராய்ச்சி மகாநாட்டு ஆய்வுத் தொகுதி (முல்லைத்தீவு, வைகாசி 1983).** *சி.பத்மநாதன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம்-இலங்கைக் கிளை, 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2022. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

xxvi, *366 பக்கம், விலை: ரூபா 2000., அளவு: 24*x*18.5 சமீ.,* ISBN: *978-624-6314-00-2.*

*1983ஆம் ஆண்டு மே மாதம் 27,28, 29ஆம் திகதிகளில்முல்லைத்தீவில் நடைபெற்ற வன்னிப் பிராந்தியத் தமிழாராய்ச்சி மகாநாட்டு நிகழ்வுகளின்போது சமர்ப்பிக்கப் பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு. பதிப்பாசிரியர் குழுவில் பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் சி. தில்லைநாதன், கலாநிதி க. இரகுபரன், வண ஆயர் சு.ஜெபநேசன், திரு. மா.மோகனகிருஷ்ணன், திரு. விருபா குமரேசன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இதிலுள்ள ஆய்வுகள் ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதலாவது "இலக்கியப்" பகுதியில் கதிரைமலைப் பள்ளு (பொ.பூலோகசிங்கம்), வையா பாடல் (பொ.பூலோகசிங்கம்), சிலப்பதிகாரமும் சிலம்பு கூறலும்-ஒப்பீடு (வை.கா.சிவப்பிரகாசம்), வன்னியூர்க் கவிராயரின் கவிதைப் பண்புகள் (க.நவசோதி), வன்னி நாச்சிமார் மான்மியம்-ஓர் ஆய்வு (த.சண்முகசுந்தரம்), வன்னிப் பிரதேசத்தில் நவீன தமிழிலக்கியம் (நா.சுப்பிரமணியம்), வன்னிப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியும் இலக்கிய வளர்ச்சியும் (இ.விசாகலிங்கம்) ஆகிய ஆய்வுக் கட்டுரைகளும், இரண்டாவது "சமூகவியல்" பகுதியில் ஈழத்து வன்னி மக்களின் விவசாயச் சடங்கு முறைகள் (இரா.வை.கனகரத்தினம்), வன்னிவள நாட்டில் நாச்சிமார் வழிபாடு (இரா. வை.கனகரத்தினம்), வன்னிப் பிரதேச இந்துக் கிராமிய வழிபாடு-வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களைக் கருத்திற்கொண்ட ஆய்வு (தமிழரசி சந்திரசேகரி), வன்னியின் பண்டைய சிவ வழிபாட்டுத் தலங்கள் சில- ஓர் ஆய்வு (சி.த.மார்க்கண்டு), வன்னிப் பிரதேசத்தில் பெருந்தெய்வ வழிபாடு (முல்லைமணி வே.சுப்பிரமணியம்), வன்னிப் பிரதேசத்தில் சிறுதெய்வ வழிபாடு (முல்லைமணி வே.சுப்பிரமணியம்), வன்னிப் பிரதேச ஐதீகங்களும் கரணங்களும் (குணலட்சுமி சிவசுந்தரம்), மரபுவழி முல்லை மண்ணில் முதுமைப் பருவம் (நா.சண்முகலிங்கன்), வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களில் அறுபதுக்கு முன் கல்வி நிலை (செ.மெற்றாஸ்மயில்), வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களில் அறுபதுக்குப் பின் கல்வி நிலை (செ.மெற்றாஸ்மயில்), வன்னியில் முல்லைத்தீவு (நா.செல்வரத்தினம்) ஆகிய ஆய்வுக் கட்டுரைகளும், மூன்றாவது "தொல்லியலும் வரலாறும்" என்ற பகுதியில் கயிலை வன்னியனார் தர்மசாதனப் பட்டயம்-சில வரலாற்றுக் குறிப்புகள் (சி.பத்மநாதன்), அடங்காப்பற்று வன்னிமைகள் (சி.பத்மநாதன்), வரலாற்றுக் காலத்திற்கு முந்திய வன்னிநாட்டின் தொல்லியற் சான்றுகள் (சி.கா.சிற்றம்பலம்), வன்னிப் பிரதேசத்துச் சிற்பங்கள் (வி.சிவசாமி), வன்னியிற் பிராமிச் சாசனங்கள் (ஆ.வேலுப்பிள்ளை), இலங்கையின் வன்னிப் பிரதேசத்துத் தமிழ்ச் சாசனங்கள்*

*(கா.இந்திரபாலா),* Archaeological evidences of two major routes that linked Vanni with Jaffna *(பொ.இரகுபதி) ஆகிய ஆய்வுக் கட்டுரைகளும், நான்காவது "நாட்டார் வழக்கியல்" பகுதியில் மன்னார் முல்லைத்தீவு நாட்டுப் பாடல்கள்-ஓர் ஒப்பியல் நோக்கு (சு.வித்தியானந்தன்), மன்னார் முஸ்லிம்கள் மத்தியில் நிலவும் நாட்டார் பாடல்கள் (க.நவசோதி), ஈழத்திற் கண்ணகி வழிபாடு பற்றிய ஆய்வில் வன்னிப் பிரதேச நாட்டார் பாடல்கள் பெறும் முக்கியத்துவம் (இ.பாலசுந்தரம்), வன்னி நாட்டுப் பழமொழிகளும் மரபு வழக்குகளும் காட்டும் பண்பாடு (பார்வதி கந்தசாமி), வன்னிப் பிரதேசத்தின் பொருளாதார முயற்சிகளும் அவை பற்றிய நாட்டார் வழக்காறுகளும் (குணலட்சுமி சிவசுந்தரம்), முல்லைத்தீவுக் கூத்து மரபு (நா.செல்வரத்தினம்) ஆகிய ஆய்வுக் கட்டுரைகளும், ஐந்தாவது "புவியியல்" பகுதியில் வன்னிப் பிரதேசத்தின் குடிசனத்தொகை வளர்ச்சியும் பரம்பல் மாற்றங்களும் (பொ.பாலசுந்தரம்பிள்ளை), வன்னிப் பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சியில் மத்திய இடங்களின் பங்கு (பொ.பாலசுந்தரம்பிள்ளை), முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்ப்பாசனம் (இ.அருமைநாயகம்), கரைதுறைப்பற்று பிரதேசத்தின் நீர்ப்பயன்பாடும் பயிர்ச்செய்கையில் அதன் பிரச்சினைகளும் (நா.தேவரஞ்சிதம்), வன்னிப் பிரதேச நிலவுடமை (க.தர்மலிங்கம்), முல்லைத்தீவின் பட்டினவாக்கம் (பொ.சிங்கரத்தினம்),* Agriculture in the Vanni District (Sri Lanka) during the Early period of the 19th century *(பே.பஸ்தியாம்பிள்ளை) ஆகிய ஆய்வுக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.*

## 494.8(1) தமிழ் இலக்கணம்

### 16299

**தமிழ் இலக்கண விளக்கம்.** *பி.எட்வின். கொழும்பு 4: பி.எட்வின், ஆசிரியர், புனித பேதுரு கல்லூரி, 1ஆவது பதிப்பு, 2017. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை,* F.L. *1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).*

*307 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 25*x*19.5 சமீ.,* ISBN: *978-955-705-008-9.*

*இந்நூலில் தமிழ் இலக்கணம் எழுத்தியல், பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள், இடைச் செற்கள், உரிச்சொற்கள், குற்றியலுகரம், பகுபதமும் பகாப்பதமும், இயற்சொல்-திரிசொல்- திசைச்சொல்-வடசொல், பிறமொழிச் சொற்கள், திணை-பால்-எண்-இடம்-காலம், வேற்றுமைகள், வாக்கியங்கள், நிறுத்தக் குறிகள், தொடர்மொழிக்கு ஒரு மொழி, ஒரு பொருட் பன்மொழிகள், பலபொருள் ஒரு மொழி, அருஞ்சொற்றொடர்க் கோவை, தொகைப் பெயர்கள், அணியியல், இலக்கண வழுக்கள், தொகைநிலைத் தொடர்கள், தொகாநிலைத் தொடர்கள், இலக்கண வழக்கு, மரபுத் தொடர்கள், சொற்புணர்ச்சி, அடுக்கு மொழிகள், அடுக்கிடுக்குத் தொடர்கள், இணைமொழிகள், இரட்டைக் கிளவி, பெயராகவும் வினையாகவும் வரும் சொற்கள், பொதுப்பாற் சொற்கள், எதிர்ப்பாற் சொற்கள், ஒத்த கருத்துச் சொற்கள், எதிர்க் கருத்துச் சொற்கள், கலைச் சொற்கள், இலக்கணக் கலைச் சொற்கள், லகர ளகர ழகர வேறுபாடுகள், ரகர றகர வேறுபாடுகள், னகர ணகர வேறுபாடுகள், னகர நகர வேறுபாடுகள், உவமைத் தொடர்கள், உவமைகள்,*

*பழமொழிகள், மரபுப் பெயர்கள், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், தமிழ் இலக்கண நூல்களின் அட்டவணை, பந்தியமைத்தல், விளக்கமெழுதுதல், துண்டுப் பிரசுரம், அழைப்பிதழ்கள், அறிக்கை எழுதுதல், படிவம் நிரப்புதல், சுருக்க மெழுதுதல், கட்டுரை எழுதுதல், கடிதம் எழுதுதல், கதை எழுதுதல், முக்கிய ஆண்டு விழாக்கள், அன்றாடம் பயன்படுத்தும் ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ், சுருக்கக் குறியீடுகள், விளம்பரம் செய்தல், உரையாடல், நேர்முக வருணனை, சிறுகதை எழுதுதல், விவாதம், அறிவித்தல், சம்பவ விவரிப்பு, விவரணம் எழுதுதல், அறிவுறுத்தல், நேர்காணல், விரித்தெழுதல், நாடகம் நயத்தல், விமரிசனம், உரைச்சித்திரம், பத்திரிகைச் செய்தி, அபிப்பிராயம் எழுதுதல், நயம் எழுதுதல், மாணவர்களுக்கான பயிற்சி வினாக்கள், க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான கடந்தகால இலக்கண வினாக்கள் பகுதி 1, க.பொ.த. சாதாரண தர மாணவர் களுக்கான கடந்தகால இலக்கண வினாக்கள் பகுதி 2 ஆகிய எண்பது பாடத் தலைப்புகளின்கீழ் தமிழ்மொழிப் பாடம் தொடர்பாக விரிவாக விளக்கப்பட்டுள்ளது.*

### 16300

**தமிழிலக்கணச் சாரம்: பரீட்சை நோக்கிய இலக்கு, தரம்10-11 (தமிழ்மொழியும் இலக்கியமும் பகுதி 1,2, செயல்நூல்).** *என்.எஸ்.நஸ்ரா. கொழும்பு 9: ரீட் மோர் பப்ளிக்கேஷன்ஸ், 77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2020. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

viii, *104 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22*x*16 சமீ.,* ISBN: *978-955-7060-33-0.*

*தமிழ் மொழியும் இலக்கியமும் பகுதி 1,2 பாடத்திட்டத்திற்குரிய இச் செயல் நூலில், பரீட்சை எதிர்பார்ப்பு சுருக்க வினாக்கள், மாதிரி பல்தேர்வு வினாக்கள், மீட்டல் பரீட்சை சுருக்க வினாக்களின் தொகுப்பு, மீட்டல் பரீட்சை பல்தேர்வு வினாக்களின் தொகுப்பு, சுருக்க வினா-விடை ஆகிய ஐந்து இயல்களில் பரீட்சைக்குரிய வினாக்களும், நூலின் இறுதியில் அவற்றுக்கான விடைகளும் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் திருமதி என்.எஸ்.நஸ்ரா, புத்தளம் தெற்கு கோட்டக் கல்விப் பிரிவின் கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலய ஆசிரியையாவார்.*

## 494.8(2) தமிழ்ப் பாடநூல்கள்

### 16301

**இரண்டாம் மொழி தமிழ்: தரம் 6.** *எழுத்தாளர் குழு. கொழும்பு: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இசுறுபாய, பத்தரமுல்லை, 2ஆவது பதிப்பு, 2015, 1ஆவது பதிப்பு, 2014. (மஹரகம: தரஞ்ஜீ பிரின்டர்ஸ், 506, ஹைலெவல் வீதி, நாவின்ன).*

xiv, *177 பக்கம், விலை: ரூபா 290., அளவு: 25*x*19.5 சமீ.*

*கல்வித் திணைக்களப் பாடத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பாடத்தினூடாகவும் அறிவு மேம்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு பாடத்தினதும் பாடத்திட்டம் எட்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சீர்திருத்தப்படுவது மாணவர்களளுக்கு அப்புதிய அறிவை வழங்குவதற்காகவே. திருத்தப்பட்ட பாடத்திட்டத்திற்கு ஏற்ப பாட*

நூல்களை ஆக்கும் பொறுப்பு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தைச் சாரும். அவ்வகையில் புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்ப புதிதாக ஆக்கப்பட்ட தமிழ் மொழிக்கான ஆறாம் தரத்திற்குரிய பாடநூல் இதுவாகும்.

### 16302

**இரண்டாம் மொழி தமிழ்: தரம் 9.** எழுத்தாளர் குழு. கொழும்பு: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இசுறுபாய, பத்தரமுல்லை, 1ஆவது பதிப்பு, 2009. (ஹோமகம: கருணாரத்தின அன்ட் சன்ஸ், இல. 67, A+.B.V (U.D.A.) கைத்தொழிற்பேட்டை, கட்டுவான வீதி).

xii, (4), 135 பக்கம், விலை: ரூபா 290., அளவு: 25x19.5 சமீ.

கல்வித் திணைக்களப் பாடத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பாடத்தினூடாகவும் அறிவு மேம்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு பாடத்தினதும் பாடத்திட்டம் எட்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சீர்திருத்தப்படுவது மாணவர்களளுக்கு அப்புதிய அறிவை வழங்குவதற்காகவே. திருத்தப்பட்ட பாடத்திட்டத்திற்கு ஏற்ப பாட நூல்களை ஆக்கும் பொறுப்பு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தைச் சாரும். அவ்வகையில் புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்ப புதிதாக ஆக்கப்பட்ட தமிழ் மொழிக்கான ஒன்பதாம் தரத்திற்குரிய பாடநூல் இதுவாகும். இதில் தேனியாரே சொல்லுங்கள், விந்தையான ஒன்று, எல்லோரும் கொண்டாடுவோம், ஏமாற்றம், புத்தகம் பேசுகிறது, தொலைக்காட்சி, திருவள்ளுவர், பொழுதுபோக்கு, வீட்டுக் கொரு மரம் வளர்ப்போம், தங்கத்தேர், மூன்று கேள்விகள், இனிமைத் தமிழ் மொழி, வானிலொரு பவனி, மூட ஆமை, செல்வி எழுதிய கடிதம், உண்மையின் உயர்வு ஆகிய பதினாறு பாடங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

### 16303

**தமிழ் ஆண்டு 5.** ஜெயா புக் சென்டர். கொழும்பு 11: ஜெயா புக் சென்டர், இல. 91-99, Upper Ground Floor, Peoples Park Complex, 1ஆவது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 11: ஜெயா புக் சென்டர், இல. 91-99, Upper Ground Floor, Peoples Park Complex).

56 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x29.5 சமீ., ISBN: 978-955-3749-21-5.

இப்பாடநூல் இலங்கையில் இயங்கும் சர்வதேச பாடசாலைகளில் தமிழ் மொழிப்பாடத்தின்போது பயன்படுத்துவதற்கென உருவாக்கப்பட்ட நூலாகும். தமிழ் எழுத்துகளின் வகை, படங்களுடன் கூடிய விளக்கம் தரப்பட்டுள்ள பகுதியினை வாசித்து அவை தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளித்தல், பெயர்ச்சொல் (Noun), வினைச்சொல் (Verbs), பெயரடை (Adjective), மொழிபெயர்ப்புப் பயிற்சிகள் என்பன இந்நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

### 16304

**பயிலுந்தமிழ்: உயர்தர வகுப்புகளுக்குஉரியது: முதலாம் பாகம்.** மு.வி.ஆசீர்வாதம். யாழ்ப்பாணம்: எம்.வி.ஆசீர்வாதம், ஆசீர்வாதம் பதிப்பகம், 29, கண்டி வீதி, 2ஆவது பதிப்பு, 2021, 1ஆவது பதிப்பு, மே 1965. (கரவெட்டி: தமிழ்ப் பூங்கா அச்சகம், பிரதான வீதி, நெல்லியடி).

(14), 171 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x16 சமீ.

எழுத்துப் பயிற்சி, சொற் பயிற்சி, சொற்றொடர்ப் பயிற்சி ஆகிய மூன்று பிரிவுகளின கீழ் இந்நூலில் தமிழ் மொழிப் பாடங்கள் உயர்தர வகுப்பு மாணவர்களுக்காக விரிவாக விளக்கப்பட்டுள்ளன. எழுத்துப் பயிற்சி என்ற பிரிவின்கீழ் எழுத்துறுப்பு கள், ழகர, ளகர, லகரங்களின் வேறுபாடு, ரகர, றகர வேறுபாடு, ணகர, னகர வேறுபாடு, வடமொழி எழுத்துப் பிரயோகம், வழூஉச் சொற்கள், எழுத்திலக்கணம், மாதிரிகை வினாக்கள் ஆகிய பாடங்கள் இடம்பெற்றுள்ளன. சொற் பயிற்சி என்ற பிரிவின்கீழ் எதிர்ப்பாற் சொற்கள், எதிர்ப்பொருட் சொற்கள், ஒரு பொருட் பல சொற்கள், பலபொருள் ஒரு சொல், பெயர்ச் சொல்லாகவும் வினைச் சொல்லாகவும் வழங்கும் சில சொற்கள், மரூஉச் சொற்கள், தொகைப் பெயர்கள், பல சொற்களுக்கு ஒரு சொற் பிரயோகம், சில அருஞ்சொற்கள், வழக்கிலுள்ள சில மரபுச் சொற்கள், சொல்லிலக்கணம், மாதிரிகை வினாக்கள்ஆகிய பாடங்கள் இடம்பெற்றுள்ளன. சொற்றொடர்ப் பயிற்சி என்ற பிரிவின்கீழ் இணை மொழிகள், இரட்டைக் கிளவி, சில அருஞ்சொற்றொடர்கள், உவமைச் சொற்றொடர், மரபுச் சொற்றொடர், முதுமொழிகள், சிலேடை மொழிகள், சொற்றொடரிலக்கணம் மாதிரிகை வினாக்கள் ஆகிய பாடங்கள் இடம்பெற்றுள்ளன.

### 16305

**பாலபாடம்: முதலாம் புத்தகம், இரண்டாம் புத்தகம், மூன்றாம் புத்தகம், நான்காம் புத்தகம்.** ஆறுமுக நாவலர் (மூலம்), இ.க.சிவஞானசுந்தரம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: தென்றல் பப்ளிக்கேஷன், 135, கனல் பாங்க் வீதி, வெள்ளவத்தை, 1ஆவது பதிப்பு, ஆவணி 2006. (கொழும்பு 6: எஸ்.டி.எஸ். கம்பியூட்டர் சேர்விசஸ், 43, பஸல்ஸ் ஒழுங்கை).

viii, 350 பக்கம், விலை: ரூபா 325., அளவு: 22.5x15 சமீ.

ஆறுமுக நாவலர் இயற்றிய பாடபாடம் பாடநூலின் முதல் நான்கு நூல்களையும் ஒன்று சேர்த்து இத்தொகுப்பினை இ.க.சிவஞானசுந்தரம் அவர்கள் பதிப்பித்துள்ளார். முதற் புத்தகத்தில் நெடுங்கணக்கு, சொற்கள், சொற்றொடர்கள் ஆகிய பாடங்களும், இரண்டாம் புத்தகத்தின் முதற்பிரிவில் நீதி வாக்கியங்கள், கதைகள், பூமி, மிருகம், காற்று, தேசங்கள், மாடு, பட்சி, தாவரம், வஸ்திரம், யானை, உலோகங்கள், வேளாண்மை, வியாபாரம், மெய்ம்மை, இராசி முதலியன, தாய் செய்த நன்றி, பெரியாரை வழிபடல், நித்திய கரும விதி ஆகிய பாடங்களும், இரண்டாம் புத்தகத்தின் இரண்டாம் பிரிவில் ஆத்திசூடி-மூலமும் உரையும், அநுபந்தமாக கடிதம் எழுதுகின்ற முறையும் இடம்பெற்றுள்ளன. மூன்றாம் புத்தகத்தில் நன்மாணாக்கன், நித்திரை, நித்திய கருமம், பெரியோரை வழிபடல், சற்புத்திரர்களே

ஆபரணம், சகோதர சகோதரிகள், துர்வார்த்தை, உயிர்களுக்கு இதஞ்செய்தல், பெற்றாரைப் பேணல், கடவுளுதவி, புத்தியுள்ள தீர்ப்பு, கல்வி, செல்வம், கேள்வி, முயற்சி, பெண்கல்வி, காலம், உண்மையின் பயன், பரிகாசம், இந்தியா, மிருகம், புறங்கூறல், வித்தியாசாலை, புத்தகம், வேளாண்மை, நாணயம், சிநேகம், ஈகை, இலங்கை, பேராசை பெருந்துயர், வீடு, தாவரம், சிங்கம், பொய்வேடம், தென்னை, சரீர சௌக்கியம், யாக்கை நிலையாமை, சற்புத்திரர், ஒட்டகம், செய்நன்றி கொன்றவர் கெடுவர், கல்வியின் பயன், காகிதம், மழை, குதிரை, உலோகங்கள், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய பாடங்களும், நான்காம் புத்தகத்தின் முதற் பிரிவில், கடவுள், ஆன்மா, கடவுள் வழிபாடு, ஈசுரத் துரோகம், அருள், கொலை, புலாலுண்ணல், கள்ளுண்ணல், களவு, வியபிசாரம், பொய், அழுக்காறு, கோபம், சூது, செய்நன்றியறிதல், பெரியோரைப் பேணல், பசு காத்தல், தானம், கல்வி, செல்வம், தருமம், கடன்படல், இரசவாதம், வருணம், ஆச்சிரமம், நல்லொழுக்கம், கற்பு, வீட்டுவேலை, வீட்டுக்கொல்லை, ஆரோக்கியம், வியாதி தீர்த்தல், தேவாலயம், மடம், சத்திரம், தேவாலய தரிசனம், சிராத்தம், காலப் பிரமாணம், தமிழ்ப்புலமை ஆகிய பாடங்களும், இரண்டாம் பிரிவில் குறிப்புரையும் அப்பியாச வினாக்களும் இடம்பெற்றுள்ளன.

## 16306

**பாலபாடம்: மூன்றாம் புத்தகம்.** பொன்னம்பலபிள்ளை. கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, இணை வெளியீடு, கொழும்பு 4: நாவலர் நற்பணி மன்றம், இல. 36, நந்தன கார்டின்ஸ், 1ஆவது பதிப்பு 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

129 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 23x16 சமீ., ISBN: 978-955-659-536-9.

பாலபாடம் மூன்றாம் புத்தகத்தின் 11ஆம் பதிப்பினை இங்கு மீள்பதிப்புச் செய்துள்ளனர். மூலநூல் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரவர்கள் சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலகராயிருந்த பொன்னம்பல பிள்ளையால் செய்து, சென்னபட்டணம் வித்தியாநுபாலன யந்திரசாலையில் 1892இல் அச்சிற்பதிப்பிக்கப்பட்டது. நாவலர் நற்பணி மன்றத்தினால் 2016இல் மேற்கொண்ட மீள்பதிப்பு முயற்சியின் பயனாக மீளவும் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் நன்மாணாக்கன், நித்திரை, நித்திய கருமம், பெரியோரை வழிபடல், சற்புத்திரர்களே ஆபரணம், சகோதர சகோதரிகள், துர்வார்த்தை, உயிர்களுக்கு இதஞ்செய்தல், பெற்றாரைப் பேணல், கடவுளுதவி, யுத்தியுள்ள தீர்ப்பு, கல்வி, செல்வம், கேள்வி, முயற்சி, பெண் கல்வி, காலம், உண்மையின் பயன், பரிகாசம், இந்தியா, நம்மை ஆளும் அரசர், மிருகம், புறங்கூறல், வித்தியாசாலை, புத்தகம், வேளாண்மை, நாணகம், சிநேகம், ஈகை, இலங்கை, பேராசை பெருந்துயர், வீடு, தாவரம், சிங்கம், பொய்வேடம், தென்னை, சரீர சௌக்கியம், யாக்கை நிலையாமை, சற்புத்திரர், ஒட்டகம், செய்ந்நன்றி கொன்றவர் கெடுவர், கல்வியின் பயன், காகிதம், மழை, குதிரை, உலோகங்கள் ஆகிய 46 பாடங்கள் முதலாம் பிரிவிலும், மாணிக்கவாசக சுவாமிகள் பற்றிய நீண்ட கட்டுரையொன்று இரண்டாம் பிரிவிலும்

*நீதி வெண்பா என்ற நீதிநூலின் மூலமும் உரையும் மூன்றாம் பிரிவிலும் இடம்பெற்றுள்ளன.*

### 16307

**மொழி மணிகள்.** *எஸ்.எம்.ஜீவா (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: அன்னை புத்தகசாலை, இல. 7, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, 1ஆவது பதிப்பு, 2022. (யாழ்ப்பாணம்: சத்தியா பிரின்டர்ஸ், 153/11, நாவலர் வீதி).*

iv, *76 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 20.5*x*14.5 சமீ.*

*புதிய பாடத்திட்டத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட நூல். மொழித்திறன் விருத்திக்கான இவ்வழிகாட்டியில் 3000 சொற்களும் அவற்றுக்கான கருத்துக்களும் உள்ளன. ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு உகந்தது. இந்நூலில் ஒத்த கருத்துச் சொற்கள், எதிர்க் கருத்துச் சொற்கள், எதிர்ப் பாற் சொற்கள், வேறுபாட்டுச் சொற்கள், ஒரு பொருட் பன்மொழிகள், பல்பொருள் ஒரு மொழி, பெயராகவும் வினையாகவும் வரும் சொற்கள், ஆண்-பெண் இருபாற்கும் பொதுவாய் வருவன, தொடர் மொழிக்கு ஒரு மொழி, வடசொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொல், வழூஉச் சொற்களும் திருத்தங்களும், திசைச் சொற்களும் தமிழ்க் கருத்துகளும், கலைச்சொற்கள் ஆகிய 13 பிரிவுகளின்கீழ் இந்நூல் விரிகின்றது.*

### 16308

**மொழிக்கலசம்-பாகம் 1.** *பிறைஷினி அருள்சந்திரன். யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பெட்டகம்-நிழலுருக் கலைக்கூடம், 1ஆவது பதிப்பு, நவம்பர் 2014. (யாழ்ப்பாணம்: அன்றா பிறிண்டேர்ஸ், இல. 356*A*, கஸ்தூரியார் வீதி).*

*118 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20*x*14 சமீ.,* ISBN: *978-955-41940-0-7.*

*தமிழ், சிங்களம், ஆங்கிலம், சுற்றாடல்சார் தகவல்கள் ஆகிய பாடங்களுக்குத் தயாராகி புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கும், தரம் 6, 7 ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கும் உரிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. புலமைப்பரிசில் பரீட்சையை மாத்திரம் மையப்படுத்தாமல் மொழிகளின் முக்கியத்துவம் தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் என்னும் ஆர்வத்தினைத் தூண்டுவதற்காகவும் தரம் 06, 07 இற்கு பயன்படக்கூடிய வகையிலும் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கல்வியின் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலின் உதவியுடன் தேவையான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. மும்மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்வதற்கு இந்நூல் ஓர் அத்திவாரமாக அமைகின்றது.*

மேலும் பார்க்க:

தமிழ் மொழியும் இலக்கியமும்-தரம் 9. 16443

# 500 தூய விஞ்ஞானங்கள்

## 516.24 திரிகோண கணிதம்

### 16309

**தளத் திரிகோண கணித உயர்நூல்.** E.W.ஹொப்சன். கொழும்பு 5: அரசாங்க பாஷைப் பகுதி, அரச கரும மொழித் திணைக்களம், வெளியீட்டுப் பிரிவு, 5 பொன்சேக்கா வீதி, 1ஆவது பதிப்பு, 1966. (இலங்கை: அரசாங்க அச்சகம்).

xviii, 469 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

E.W.ஹொப்சன் எழுதிய பிரித்தானியா, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக வெளியீடான 'A Treatise on Plane and Advanced Trigonometry" என்ற நூலின் திருத்திய பதிப்பின் மொழிபெயர்ப்பு இதுவாகும். பல்கலைக்கழக முதலாண்டில் தூய கணிதம் படிக்கும் மாணவர்களுடைய திரிகோண கணிதம் பற்றிய தேவைகளை இது பூர்த்தி செய்கின்றது. தள, உயர் திரிகோண கணிதங்களில் வரும் கொள்கைகள், குறிப்பாக "வட்டச் சார்பு" பற்றிய கொள்கை, நன்கு எடுத்தாளப்பட்டுள்ளமையால், இந்நூல் பட்டக் கல்வி பயிலும் மாணவர்க்கு மிக உயர்ந்தது. கோணப் பருமனின் அளவீடு, கோடுகளின் அளவீடு, எறியங்கள், வட்டச் சார்புகள், இரண்டு அல்லது இரண்டின் மேற்பட்ட கோணங்களின் வட்டச் சார்புகள், கீழ் மடங்குக் கோணங்களின் வட்டச் சார்புகள், வேறு வேறு தேற்றங்கள், மடங்குக் கோணச் சார்புகளின் விரி, வட்டச் சார்புகளுக்கும் கோண வட்ட அளவைகளுக்கும் உள்ள தொடர்புகள், திரிகோண கணித அட்டவணைகள், ஒரு முக்கோணியின் பக்கங்களுக்கும் கோணங்களுக்கும் உள்ள தொடர்புகள், முக்கோணிகளின் தீர்வுகள், முக்கோண நாற்பக்கல்களின் உடைமைகள், சிக்கலெண்கள், முடிவில்லாத் தொடர்க் கொள்கை, அடுக்குக் குறிச் சார்பு மடக்கைகள், அதிபரவளைவுச் சார்புகள், முடிவில் பெருக்கங்கள், தொடர் பின்னங்கள் ஆகிய பதினெட்டு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70647).

## 540 இரசாயனம்

### 16310

**இரசாயனவியல்1001 பல்தேர்வு வினாக்கள் விடைகளுடன்.** எஸ்.தில்லைநாதன். கொழும்பு 6: SASCO வெளியீடு, 6/1, டொக்டர் ஈ.ஏ.குரே மாவத்தை, வெள்ளவத்தை, 2ஆவது பதிப்பு, ஜுன் 2006, 1ஆவது பதிப்பு, 2002. (கொழும்பு 6: சு.கிருஷ்ணமூர்த்தி, கிரிப்ஸ்).

213 பக்கம், விலை: ரூபா 275., அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-1019-05-9.

க.பொ.த. உயர்தரம்-இரசாயனத் துணைநூலாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் 1001 பல்தேர்வு வினாக்கள் விடைகளுடன் தரப்பட்டுள்ளன. இவற்றிற்கு மேலதிகமாக இரண்டாம் பதிப்பில் மேலும் 21 வினாக்கள் இணைக்கப்பட்டு விடைகளும் தேவைப்படுமிடத்து விளக்கக்குறிப்புகளுடன் தரப்பட்டுள்ளன.

## 551.47 சுனாமி

### 16311

**நம்பிக்கையின் பாதையில்: ஒளிப்படங்களில் சுநாமி.** எட்வின் சவுந்தரா, செபமாலை அன்புராசா. யாழ்ப்பாணம்: செ.அன்புராசா, அ.ம.தி., 1ஆவது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: யுனைட்டெட் பிரின்டெக்).

iv, 50 பக்கம், ஒளிப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ., ISBN: 955-1390-00-8.

2004, மார்கழித் திங்கள் 26ஆம் நாள் மறக்க முடியாத நாள். தென்னாசிய நாடுகளை சுநாமி தாக்கிய நாள். இதனால் 2,00,000 இற்கும் அதிகமானவர்கள் இறந்து போனார்கள். பல்லாயிரம் கோடி சொத்துக்கள் அழிந்து போயின. இப்பேரழிவுக்கு நம் நாடும் விதிவிலக்கல்ல. மிகக் கூடுதலான அழிவைச் சந்தித்த இந்தோனேசி யாவுக்கு அடுத்த இடத்தை இலங்கை வகிக்கின்றது. இந்நூல் சுநாமி அழிவுகளையும் அதன் பின்னர் மக்கள் மீண்டெழுந்தமையையும் வண்ணப் புகைப்படங்களாக சேகரித்து ஆவணப்படுத்தியுள்ளார்கள். கலாநிதி எட்வின் சவுந்தரா அமெரிக்காவில் வாழ்கின்றார். அவருடன் இணைந்து அருள்திரு செபமாலை அன்புராசா அவர்கள் இப்பணியை செவ்வனே ஆற்றியுள்ளார்.

## 551.6 காலநிலையியல்

### 16312

**இலங்கையின் கிழக்குப் பிரதேச காலநிலை நீர்ச்சமநிலை.** க.இராஜேந்திரம். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

xii, 197 பக்கம், அட்டவணைகள், வரைபடங்கள், விலை: ரூபா 950., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-737-0.

இந்நூல் பல்கலைக்கழகங்களில் புவியியல் பாடத்தினை பொதுக் கலை, சிறப்புக் கலை பட்டப்படிப்புகளில் ஒரு பாடமாக தமிழ் மொழிமூலம் கற்கின்ற மாணவர்களும் இத்துறை சார்ந்த ஆய்வாளர்களும் பயன்பெறும் நோக்கில் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் ஐந்து அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. அத்தியாயம் ஒன்று ஆய்வு அறிமுகமாகும். இதில் ஆய்வுப் பின்னணி பற்றியும் நீர்ச்சமநிலை ஆய்வுகள் தொடர்பாகவும் முறையியல் பற்றியும் நீர்வளம் தொடர்பாகவும் விளக்கப்பட்டுள்ளது. அத்தியாயம் இரண்டு நீர்ச்சமநிலைக் கணிப்பீட்டு முறைகள் தொடர்பாக விளக்குகின்றது. இதில் பல்வேறு நீர்ச்சமநிலைக்

*கணிப்பீட்டு முறைகள் தொடர்பாக விளக்கப்பட்டுள்ளதுடன் கணக்குப் பதிவீட்டு நுட்பமுறையில் உள்ள கூறுகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தியாயம் மூன்று காலநிலை நீர்ச்சமநிலை கணிப்பீட்டு முடிபுகளை விளக்குகின்றது. இங்கு நீர்ச்சமநிலை முடிபுகள் ஆண்டு மற்றும் பருவகால அடிப்படையிலும், இடம் சார்பு ரீதியிலும் விளக்கப்பட்டுள்ளது. அத்தியாயத்தின் இறுதிப்பகுதியில் நிர்ச்சமநிலை வகைகள் அடையாளம் காட்டப்பட்டுள்ளன. அத்தியாயம் நான்கு நீர்ச்சமநிலை முடிபுகளின் அடிப்படையிலான காலநிலைப் பாகுபாட்டினை எடுத்து விளக்குகின்றது. கிழக்குப் பிரதேசத்துக்கான காலநிலை பாகுபாடு தோன்த்வைற்றின்* (Thornthwaite) *இரண்டாவது காலநிலைப் பாகுபாட்டு முறை மையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி இங்கு ஐந்து பிரதான காலநிலை வகைகளும் ஒன்பது காலநிலைப் பிரதேசங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. கலாநிதி க.இராஜேந்திரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புவியியலை சிறப்புக் கற்கை நெறியாகப் பயின்று அதே பல்கலைக்கழகத்தில் புவியியல்துறை விரிவரையாளராகப் பணியாற்றியவர். தனது முதுமெய்யியல்மாணிப் பட்டத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கலாநிதிப் பட்டத்தினை புதுடில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்திலும் பெற்றவர். 2008முதல் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார்.*

## 551.63 வானிலை அவதானிப்பு

### 16313

**வானிலை அவதானிப்பும் காலநிலையும்: இலங்கையின் கிழக்குப் பிரதேசம்.** *க. இராஜேந்திரம். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).*

xii, *151 பக்கம், அட்டவணைகள், வரைபடங்கள், விலை: ரூபா 900., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-659-740-0.*

*இன்று உலகநாடுகளின் முக்கிய பேசுபொருள்களில் ஒன்று உலக காலநிலை மாற்றம் தொடர்பானதாகும். இந்நிலையில் நாடுகளினதும் பிரதேசங்களினதும் காலநிலை தொடர்பாகவும் அதில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்கள் தொடர்பாகவும் உலக நாடுகள் பல்வேறு ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில் வானிலை, காலநிலை ஆகியவற்றின் முக்கியத்துவம் கருதி இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தினை மையமாகக் கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் பின்வரும் ஆறு அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. வானிலை அவதான நிலையங்களும், வானிலை அவதானிப்பும், ஞாயிற்றொளியும் வெப்பநிலையும், வளிமண்டல அமுக்கமும் காற்றுக்களும், ஆவியாக்கமும் ஆவியாக்க ஆவியுயிர்ப்பும், சாரீரப்பதன், மழைவீழ்ச்சி. இந்நூல் பல்கலைக்கழகங்களில் சிறப்பு மற்றும் பொதுக்கலை பட்டப்படிப்பில் புவியியலை ஒரு பாடமாகத் தமிழ்மொழிமூலம் கற்கும் மாணவர்களுக்கும் இத்துறைசார்ந்த ஆய்வாளர்களுக்கும்*

பொதுவாக காலநிலை தொடர்பாகவும் பிரதேச காலநிலை தொடர்பாகவும் அறிய விரும்பும் ஆர்வலர்களுக்கும் பயன்தரும். கலாநிதி க.இராஜேந்திரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புவியியலை சிறப்புக் கற்கை நெறியாகப் பயின்று அதே பல்கலைக்கழகத்தில் புவியியல்துறை விரிவுரையாளராகப் பணியாற்றியவர். தனது முதுமெய்யியல்மாணிப் பட்டத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கலாநிதிப் பட்டத்தினை புதுடில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்திலும் பெற்றவர். 2008முதல் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார்.

## 570 உயிரியல்

### 16314

**அனர்த்தங்களும் மனித விலங்கு நடத்தைகளும்.** ஏ.எம்.றியாஸ் அஹமட். மருதமுனை 05: பசுமைப் பந்துகள், 224, காரியப்பர் வீதி, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2021 (அச்சக விபரம் தரப்படவில்லை).

52 பக்கம், படங்கள், விலை: ரூபா 75.00, அளவு: 21.5x15.5 சமீ., ISBN: 978-624-98297-6-3.

மட்டக்களப்பு-கல்லடியில் கண்டதுவும் காண்பதுவும் கடற்பாம்புகளா அல்லது விலாங்கு மீன்களா?, காத்தான்குடியில் கடல் உயிரினங்கள் இறந்து கரையொதுங்குவதும் அல்லது கரையொதுங்கி இறப்பதும், அசாதாரண விலங்கு நடத்தைகள் அனர்த்த முன்னெச்சரிக்கைக்கு ஒரு கருவியாகப் பயன்படுத்தல், இலங்கையில் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதிலுள்ள சவால்கள், வெள்ள அனர்த்தங்கள்: கற்றுக்கொள்ள வேண்டியவைகளிலிருந்து கற்கத் தவறிய பாடங்கள், இஸ்ரவேல் எரிகின்றது ஏன்? அந்நிய ஆக்கிரமிக்கும் தாவரங்களை (Invasive Alien Species Plants) முன்வைத்து ஒரு பார்வை, சிவப்பு மற்றும் மஞ்சள், பச்சை, கறுப்பு நிற மழைகள், சமீப காலமாக இலங்கையிலும் மற்றும் சில நாடுகளிலும் இடம் பெறும் அனர்த்தங்கள் மனிதனால் தூண்டப்பட்டவையாக இருக்குமா? ஆகிய எட்டு விடயங்கள் தொடர்பான தகவல்களை இந்நூல் கொண்டுள்ளது. நூலாசிரியர் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராவார்.

## 580 தாவரவியல்

### 16315

**அந்நியத் தாவரங்களும் ஆக்கிரமிப்புத் தாவரங்களும்.** ஏ.எம்.றியாஸ் அஹமட் (புனைபெயர்: அம்ரிதா ஏயெம்). அக்கரைப்பற்று-2: பேஜஸ் புத்தக இல்லம், 117, பட்டினப்பள்ளி வீதி, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (அக்கரைப்பற்று: நியூ செலெக்ஷன் ஒப்செட் பிரின்டர்ஸ், C.E.B. மின்சார நிலைய வீதி).

70 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 22.5x15.5 சமீ., ISBN: 978-624-6047-09-2.

இலங்கைக்கு பூர்வீகமில்லாத வெளிநாட்டு விலங்குகள், தாவரங்கள் என்பவை அறிமுகப் படுத்தப்படும்போது அவற்றைப் பல்வேறு ஆய்வுகளுக்கு உட்படுத்திய பின்னர் அறிமுகம் செய்வதே சிறந்ததாகும். இவ்வாறின்றேல் இலங்கையின் தற்போதைய பாதகமான நிலையையே நாடுகள் சந்திக்கவேண்டி நேரிடும். இதனை இந்நூலின் கட்டுரைகள் அனைத்தும் வலியுறுத்துகின்றன. இலங்கையில் அந்நிய ஆக்கிரமிப்புத் தாவரங்கள், மரங்களின் "புறொய்லர் கோழி" காயா மரம்-ஒரு அந்நிய ஆக்கிரமிப்பு இனமா?, இராட்சத தொட்டாச் சுருங்கி, எங்கள் காலடிக்கு வந்துவிட்ட ஆக்கிரமிக்கத் துடிக்கும் அபாயம், சீமைக் கருவேலம்-பெரு வரவேற்புடன் விருந்தாளியாக வந்த அந்நிய ஆக்கிரமிப்பு ஆபத்து, யூகலிப்ரஸ் மரங்கள், இப்பில் இப்பில் இங்கிதமாகக் குடியேறிய ஆக்கிரமிப்பு இராட்சசன் ஆகிய தலைப்புகளில் எம்மண்ணுக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்ட அத்தகைய சில அந்நிய தாவரங்கள் பற்றிய சுவையான பல அறிவியல் தகவல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

**16316**

**இலங்கையின் கண்டல் காடுகள்: பிரயோசனங்களும் பிரச்சினைகளும்.** ஏ.எம். றியாஸ் அஹமட். மருதமுனை 05: பசுமைப் பந்துகள், 224, காரியப்பர் வீதி, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2021 (அச்சக விபரம் தரப்படவில்லை).

*36 பக்கம், படங்கள், விலை: ரூபா 75.00, அளவு: 21x15.5 சமீ., ISBN: 978-624-98297-4-9.*

கண்டல் என்ற சொல் களப்புகளின் கரையில் வளரும் விசேட இசைவாக்கங்களைக் கொண்ட தாவர இனங்களைக் குறிக்கின்றது. பொதுவாக கண்டல் தாவரங்கள் வளரும் சூழல் "மங்கல்" என அழைக்கப்படும். கண்டல் தாவரங்களின் அடிப்பகுதி கடற்பெருக்கின்போது அமிழ்ந்தும், கடல் வற்றின்போது வெளிப்படுத்தப்பட்டும் காணப்படும். இலங்கையில் ஏறத்தாள நாற்பதுக்கும் மேற்பட்ட இனங்கள் கண்டலாகவும் கண்டல்சார் மரங்களாகவும் பற்றைகளாகவும் பூண்டுகளாகவும் காணப்படுகின்றன. இந்த சூழற் தொகுதி உயர்ந்த உற்பத்தித் திறனையும் மிகுந்த வளத்தையும் கொண்டதாகும். இச்சிறுநூலில் ஆசிரியர் இலங்கையின் கண்டல் காடுகளை அடையாளப்படுத்துவதுடன் அவற்றின் பிரயோசனங்களையும், இக்காடுகளால் எழும் பிரச்சினைகளையும் விரிவாக விளக்குகின்றார். நூலாசிரியர் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராவார்.

# 600 தொழில்நுட்பம், பிரயோக விஞ்ஞானம்

## 613 பொது உடல்நலவியல்

### 16317

**டாக்குத்தரின் தொணதொணப்பு (கட்டுரைகள்).** எம்.கே.முருகானந்தன். *பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).*

viii, *104 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5*x*14.5 சமீ.*, ISBN: *978-624-5881-21-5.*

*டாக்டர் எம்.கே.முருகானந்தன் அவர்கள் தனது மருத்துவ சேவையின்போது சந்தித்த பாத்திரங்களை முன்னிறுத்தி தனது அனுபவப் பகிர்வாக சுவையானதொரு மருத்து ஆலோசனை நூலை எழுதியுள்ளார். இவை வீரகேசரியிலும், தினக்குரலிலும், ஜீவநதியிலும் அவ்வப்போது வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு. "கொழும்பு அலட்டல்" என்ற 2000-2015 காலகட்டத்துப் பதிவுகளாக சின்ன வயதில் சந்தித்தது, மூச்சுத் திணறலுக்கு மருந்தில்லாத சிகிச்சை, டொக்டரின் மருந்துச் சிட்டை மகத்துவம், ஆஸ்த்மாவும் மதுவும், கடவுளிலும் மேலானவர்கள், மஹாத்மா தனது வார்த்தைகளுக்காக மீண்டும் சத்தியாக்கிரகம் செய்திருப்பார், தலைமுடி தப்பியது உயிர் பிரிந்தது, மலத்தோடு அட்டை போகும் அதிசய வியாதி, சுடாத துப்பாக்கி, வெளிநாட்டு மாப்பிள்ளையின் ஊர்ப் பொம்புளை, இரவிரவாகப் படித்தும் சோதனையில் கோட்டை, காணாமல் போன வேட்பாளர், நிறம் மாறும் போஸ்டர்களாக அவள் முகம், காது கேளாதவரின் மரண சாசனம், எனக்குச் சாக ஏதும் மருந்து தாங்கோ-பின் கதவில் கேட்கும் துயரக் குரல் என்பன இடம்பெற்றுள்ளன. 2020-2021 காலகட்டத்தில் எழுதப்பட்ட "பருத்தித்துறை தொணதொணப்புகளாக" மருந்தால் வருத்தம், தனியே மருந்தெடுக்க வராதீர்கள், நோயாளிகளைத் திட்டாதீர்கள் காரணியை விரட்டுங்கள், கண்ணீரோடு விடைபெறும் சவப்பெட்டிகள், நான் அப்படியான பொம்பிளை எண்டால், தேவார மழை, பாசக் கயிற்றில் தலையை ஒட்டியவர், தலைக்கு வந்தது தலைப்பாகையுடன், டொக்டர் பிழை விடுறார், எலி எலியைக் கடித்துவிட்டது, கண்டதும் தின்று குண்டு கையானாள், படுக்கையாய்க் கிடந்த அம்மா, அம்மா வந்தாள் புதினமான கதையோடு ஆகிய ஆக்கங்கள்இடம்பெற்றுள்ளன. நூலட்டையில் "டாக்டரின் தொணதொணப்பு" என்று அச்சிடப்பட்டுள்ளது. இந்நூல் 202ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.*

### 16318

**நலமுடன் வாழ்வோம்.** வே.கமலநாதன். *பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, வைகாசி 2017. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).*

xiv, *15-78 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-4676-59-6.*

வைத்திய கலாநிதி வே.கமலநாதன் எழுதிய மருத்துவக் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அறிமுகம், ஆரோக்கியமான வாழ்க்கை, நலமுடன் வாழ்வோம், கர்ப்பகால பராமரிப்பு, புதிதாகப் பிறந்த குழந்தையின் அன்றாட பராமரிப்பு, குழந்தைகளில் தொற்று, குழந்தைகளில் காய்ச்சல், டெங்கிலிருந்து எம்மை பாதுகாப்போம், வெல்ல நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், மாரடைப்பு, வயிற்றிலே புளிப்பு, முதுமை ஆகிய 13 அத்தியாயங்களில் இந்நூல் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. இந்நூல் 74ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

## 613.7 யோகக்கலை

### 16319

**யோக வாழ்வு (ஆத்மா 1, வாழ்வு 3).** *நவரத்தினம் முரளீதரன், கந்தப்பு இறைவன் (இதழாசிரியர் குழு). கனடா: கிரியா பாபாஜி அன்பகம், 1ஆவது பதிப்பு, ஜூன் 2019. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).*

*112 பக்கம், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்பட வில்லை, அளவு: 22*x*14.5 சமீ.*

யோக வழி நிற்றலால் ஏற்படும் விழிப்புணர்வின் மூலம், இன நல்லுணர்வை அறநெறி நின்று வளர்த்தெடுக்கும் அகப் பயணத்திற்கு பாதையமைக்கும் இதழ். சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு யோகா பற்றிய விழிப்புணர்வை ஊட்டக் கூடிய, யோகியர் பலரின் ஆக்கங்கள் அடங்கியதாக 21.06.2019 அன்று வெளி வந்துள்ள இவ்விதழில் சர்வதேச யோகா தினத்தில் மலரும் இவ்விதழ், திருமந்திரத்தில் அட்டாங்க யோகத்தின் வகிபாகம், எண்ணத்தின் ஆற்றல், சூரிய வணக்கம் அல்லது சூரிய நமஸ்காரம், பிரணாயாமம் ஓர் அறிமுகம், பிரணவச் சொல்லும் வாழ்வியலும், உணர்வின் நான்கு நிலைகள், யார் இந்த சித்தர்கள், திருமந்திரத்தில் கரு உருவாக்கம், திரு ஜெயராஜின் சிவலிங்கம்-நேர்காணல், ஓம் கிரியா பாபாஜி யோக ஆரண்யம், திருமூலர் யோக அறச்சாலை, பாபாஜியின் கிரியாயோகம், ஒரு யோகியின் சயசரிதம், பாபாஜியின் கிரியா யோகாவின் எளிய விளக்கம், ஆத்மீகத் துறையில் வெற்றி காண ஆகிய தலைப்புகளிலான தமிழ் ஆக்கங்களும், The Concept of Babaji's Kriya Yoga, Thirumular as Guru, Interview with Marshall Govindan ஆகிய மூன்று ஆங்கில ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன.

## 613.907 பாலியல் கல்வி

### 16320

**பாலியலும் பாலியல் பிறழ்வுகளும்.** க.கஜவிந்தன். கொழும்பு 13: அகரம் புத்தகசாலை, இல. 66, கொட்டாஞ்சேனை வீதி, 1ஆவது பதிப்பு, 2022. (அச்சக விபரம் தரப்படவில்லை).

v, 200 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 1200., அளவு: 22.5x16 சமீ., ISBN: 978-955-45680-7-5.

பாலியல் ஓர் அறிமுகம், பால்நிலையும் பால்நிலை அடையாளக் குழப்பங்களும், பாலியல் உறுப்புக்கள், கருத்தரித்தலும் பாலின வேறுபாடும், மனித வளர்ச்சிப் பருவமும் பாலியல் பிரச்சினைகளும், இளமைப் பருவமும் பாலுணர்வும், பால்வினை நோய்கள், பாலியல் குறைபாடுகள், பாலியல் விலகல் நடத்தைகள், சிறுவர்களும் பாலியல் துஷ்பிரயோகங்களும், பால்வினைத் தொழிலும் அதன் பிரச்சினைகளும் ஆகிய பதினொரு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பாலியல் சார்ந்த கலைச்சொற்களும் அவற்றுக்கான விளக்கங்களும் பின்னிணைப்பாக இடம்பெற்றுள்ளன. கலாநிதி க.கஜவிந்தன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மெய்யியல் துறையின் சிரேஷ்ட உளவியல் விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 70035).

## 614 பொதுச் சுகாதாரம்

### 16321

**என் சுவாசமே: சுகாதார மேம்பாட்டு ஏடு.** ஆ.ஜென்சன் றொனால்ட். மிருசுவில்: ஆ.ஜென்சன் றொனால்ட், பொதுச் சுகாதார பரிசோதகர், உசன், 1ஆவது பதிப்பு, தை 2022. (மிருசுவில்: மாதுளன் பிரின்டர்ஸ், உசன் சந்தி).

iv, 56 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-624-98956-0-7.

பொதுச் சுகாதார பரிசோதகராக தனது பயிற்சிக் காலத்திலும் சேவைக் காலத்திலும் பெற்றுக்கொண்ட சுகாதார விஞ்ஞான விடயங்களும், தனது தனிப்பட்ட தேடல் மற்றும் சுகாதார முகாமைத்துவ விஞ்ஞான முதுமாணிப் பட்டப்படிப்பில் (MSc in Health Management) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினூடாக பெற்றுக்கொண்ட கல்வியும் இந்நூலின் உருவாக்கத்திற்கு உறுதுணையாக இருந்துள்ளன. சுவாசம், வாயுப் பரிமாற்றம், நுண்ணங்கிகளால் ஏற்படும் பாதிப்பு, நுரையீரல் அழற்சி, மூச்சுக்குழல் அழற்சி, காசம், கோவிட்-19, கொரோனா நுண்மியின் திரிபுகள், தனிமைப்படுத்தல், அறிகுறிகளற்ற கொரொனா நோயாளரை வீட்டிலே பராமரித்தல், கொரொனாத் தொற்றை இனங்காணல், முகக்கவசம் அணிதல், கைகளைத் தூய்மையாக்கல், சுவாசத் தொகுதியின் ஆரோக்கியத்தில் உயிரற்ற கூறுகளால் ஏற்படும் பாதிப்புகள், புகைப்பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புகள், வாய்ச் சுகாதாரம், ஆரோக்கியத்துக்கான சுவாசப் பயிற்சிகள் ஆகிய 17 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 16322

**சுகவிழி-பொது சுகாதார மேம்பாட்டு ஏடு.** ஆ.ஜென்சன் றொனால்ட். பருத்தித்துறை: கல்வி வெளியீட்டுப் பிரிவு, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2019. (பருத்தித்துறை: எஸ்.பி.எம். பிரின்டர்ஸ்).

viii, 137 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x16 சமீ., ISBN: 978-624-5054-00-8.

சுகவிழி பொது சுகாதார மேம்பாட்டு ஏடானது பொது மக்களுக்கும் சுகாதார சேவை ஊழியர்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கும் தொற்று நோயின் தாக்கம் பற்றியும் அவற்றின் கட்டுப்பாடு பற்றியும் விழிப்புணர்வூட்டும் வகையில் மிக எளிய நடையில் வெளிவந்துள்ளது. இந்த நூலானது இலங்கையில் அறிவிக்கப்பட வேண்டிய (Notifiable Communicable Diseases) தொற்று நோய்கள் குறித்தும் தொற்றா நோய்களின் கட்டுப்பாடு, நுளம்புக் கட்டுப்பாடு, வாய்ச் சுகாதாரம், தாய்-சேய் நலன், உணவுப் பாதுகாப்பு, புதைபொருள் கட்டுப்பாடு, தடுப்பு மருந்தேற்றல், தனிநபர் சுகநலம் மற்றும் நஞ்சற்ற பழங்களின் உற்பத்தி எனப் பல்வேறுபட்ட விழிப்புணர்வுக் கட்டுரைகளையும் தாங்கி வெளிவந்துள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சுகாதார முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணிப் பட்டத்தை (MSc in Health Management) பெற்ற இந்நூலாசிரியர் பொதுச் சுகாதார பரிசோதகராக பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடமையாற்றுகின்றார்.

## 615 மருந்தியலும் சிகிச்சைகளும்

### 16323

**மருந்தென வேண்டாவாம்: நோயற்ற வாழ்வுக்கு உணவே மருந்தாக, மருந்தே உணவாக.** K.T.சுந்தரேசன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

vi, 66 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 600., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-764-6.

எமது பாரம்பரியமான சித்த ஆயுர்வேத மருத்துவமானது நவீன மருத்துவத்தினால் தீர்க்கமுடியாத பல நோய்களுக்கு விடையாக உள்ளது. இம்மருத்துவத்தின் தேவை பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் இந்நூல் விபரிக்கின்றது. நவீன மருத்து வத்தால் விடைகாண முடியாத பல முக்கிய பிரச்சினைகளுக்கு விடையாக இந்நூல் அமைந்துள்ளது. உணவே மருந்தாக எனும் கருத்துடன் இந்நூல் அமைந்தி ருந்தாலும் உண்ணாதிருத்தல் என்பதையும் நோய்தீர்க்கும் மருந்தாக எடுத்துரைக்கிறது. வைத்திய கலாநிதி K.T.சுந்தரேசன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மருத்துவ நிபுணராகவும், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுகாதார பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடத்தின் மருத்துவ அறிவியல் துறையில் முதுநிலை விரிவுரையாளராகவும் பணியாற்றுகின்றார். உணவே மருந்தாக, நீரிழிவு நோயும் உணவும், மாரடைப்பும் உணவும், உயர் குருதியமுக்கமும் உணவும், புற்றுநோய்களும் உணவும், தினந்தோறும் உண்ணும் உணவில் விஷமா?, தூக்கமும் ஆரோக்கியமும், குடல்வாழ் நுண்ணுயிர்களின் முக்கியத்துவம், கொழுப்புகளும் எண்ணெய்களும் பற்றி அறியவேண்டியவை, கேள்விக்குறியாகும்

விஞ்ஞான ஆராய்ச்சிகள், உண்ணாதிருப்பதே மருந்தாக, உள்ளார்ந்த குணப்படுத்தும் சக்தி, எண்ணத்தின் வலிமை ஆகிய 13 அத்தியாயங்களில் போதிய விளக்கப்படங்கள் சகிதம் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 16324

**ஹிஜாமா எனப்படும் இரத்தம் குத்தியெடுக்கும் மருத்துவம் (அத்திப் புன்நபவீ-நபி வழி மருத்துவம்).** முஹம்மது ரஸீன்-மழாஹிரி. குருணாகலை: தாருல் குர்ஆன் வெளியீட்டுப் பணியகம், இல. 100, கண்டி வீதி, மல்லவப்பிட்டிய, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2020. (குருணாகலை: அனுர பிரின்டர்ஸ், கண்டி வீதி).

xii, 13-56 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 20x14 சமீ., ISBN: 978-624-95307-9-9.

எழுத்துப் பணியில் ஈடுபட்டுள்ள மௌலவி முஹம்மத் ரஸீன் அவர்கள் இதுவரை தமிழில் 72 நூல்களும், சிங்கள மொழியில் 20 நூல்களும், ஆங்கிலத்தில் 3 நூலும் ஆக மொத்தத்தில் 95 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். உள்ளூர் வெளியூர் பத்திரிகைகளிலும் மாத இதழ்களிலும் கட்டுரைகளை எழுதி வருகிறார். தற்போது அறபுக் கல்லூரி ஒன்றில் பணிபுரியும் இவர் மாவட்டம் மற்றும் நாடளாவிய ரீதியில் மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் நலன்புரி நிலையம், இஸ்லாமிய விவாக விவாகரத்து சமாதான நிலையம், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா ஆகிய அமைப்புகளில் தொண்டராகப் பணியாற்றுகின்றார். இந்நூலில் ஹிஜாமா எனப்படும் இரத்தம் குத்தியெடுக்கும் மருத்துவம் பற்றி விளக்கியிருக்கிறார். ஹிஜாமா என்றால் இரத்தம் குத்தி எடுக்கும் சுன்னத்தான வைத்திய முறையாகும். "ஹிஜாமா" என்ற அரபி வார்த்தை "உறுஞ்சுதல்" என்று அர்த்தப்படுகின்றது. கப் (cup) அல்லது கோப்பையில் ஒரு வெற்றிடத்தை உருவாக்கி, பின்னர் நமது தோல் மேற்பரப்பில் வைத்து தூய்மையற்ற அல்லது கெட்ட இரத்தக் கழிவுகளை உடலின் பல்வேறு இடங்களில் இருந்து வெளியேற்றும் மருத்துவ முறை தான் ஹிஜாமா (Hijama) எனப்படுகின்றது. ஹிஜாமா செய்தால் ஏற்படும் முதன்மையான பயனும், நன்மையும் என்னவென்றால் இது நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறை (சுன்னத்), அதற்கான நன்மைகள் இவ்வுலகத்திலும், மறுமை நாளிலும் கிடைக்கும். இந்த ஹிஜாமா இரத்த உறுஞ்சுதல் மூலம் இரத்த ஓட்டத்தை சமச்சீர் செய்து Kinetic energy என்ற ஆற்றலை அதிகப்படுத்துகிறது. இது இரத்தத்தில் இருந்து நச்சுகள் மற்றும் பிற கழிவுப் பொருட்களை அகற்றுகிறது. இதனால் சில வகையான நோய்கள் துரிதமாக குணமடைய உதவுகிறது எனக் குறிப்பிடுகிறார்.

## 616 நோய்கள்

### 16325

**டெங்கு காய்ச்சல்: டெங்கு காய்ச்சல் மற்றும் டெங்கு நோய் காவியும் அதனைக் கட்டுப்படுத்தும் முறைகளும்.** ந.சுகந்தன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 2ஆவது பதிப்பு, 2022, 1ஆவது பதிப்பு, 2020. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

*60 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-955-659-698-4.*

ஆசிரியர் இந்நூலில் டெங்கு நோயின் தாக்கத்தினையும், அதனை எவ்வாறு குணப்படுத்தலாம் என்பதையும் பொதுமக்கள் வாசித்து அறிந்துகொள்ளக்கூடிய வகையில் எளிய நடையில் எடுத்துரைத்துள்ளார். இலங்கையில் டெங்கு காய்ச்சலின் தாக்கம், டெங்கு காய்ச்சலின் வகைகள், நோயாளிகளுக்கான அறிவுரைகள், காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் முறைகள், டாக்டரின் அறிவுரைகளைப் பெற்று என்ன செய்ய வேண்டும், நீராகாரம் எடுக்கும் முறைகள், வெளியேறும் சிறுநீறின் அளவெடுக்கும் முறைகள், குருதிப் பரிசோதனை எப்போது செய்யவேண்டும், உடனடியாக வைத்தியரை நாடவேண்டிய சந்தர்ப்பங்கள் மற்றும் மக்கள் உரிய நடவடிக்கைகள் எடுக்காவிடில் ஏற்படும் டெங்கு நோயின் சிக்கல் நிலைமைகள் என்பனவற்றை மக்கள் தெளிவாக விளங்கிக்கொள்ளும் வகையில் எழுதியுள்ளார். நூலாசிரியர் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் பொது வைத்திய நிபுணராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் மருத்துவத் துறையின் தலைவராகவும், முதுநிலை விரிவுரையாளராகவும் விளங்குகின்றார்.

### 16326

**தொல்லை தரும் தொற்றுநோய்கள்.** *ச.முருகானந்தன். கண்டி: ஈஸ்வரன் பதிப்பகம், 126/1, கொழும்பு வீதி, 1ஆவது பதிப்பு, 2018. (கண்டி:* D.H.*பிரின்ட் ஹவுஸ்).*

vii, *120 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 22.5x16 சமீ.,* ISBN: *978-955-63041-6-0.*

தொற்று நோய்கள், நுளம்பினால் பரவும் நோய்கள், தாய்ப்பாலூட்டல் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும், காய்ச்சலும் அதன் சவால்களும், டெங்கை முற்று முழுதாக அழிக்க முடியாதா?, வயிற்றோட்டம், தொண்டை-காது-மூக்கு தொற்றுகள், தொண்டையில் ஏற்படும் அழற்சி, நிமோனியா, நீர் வெறுப்பு நோய், கொப்பிளிப்பான் நோய்க்கு மருந்து அவசியமா?, செங்கண்மாரி நோய், சிறுநீரக தொற்று, சிகாவைரஸ் பாலுறவால் தொற்றுமா?, காதுத் தொற்று, மூளைக்காய்ச்சல், எபொலோ வைரஸ் தொற்று, கட்டுப்பாட்டுக்குள் வருகின்ற குக்கல், தொழுநோய், நெருப்புக் காய்ச்சல், கட்டுக்கள், கிருமிகள் எல்லாமே ஆபத்தானவையா?, பால் வினை நோய்கள், எயிட்ஸ் நோயின் பரிமாணங்கள், எயிட்ஸ் அபாயம் இன்னும் நீங்கவில்லை, எயிட்ஸ் நோயாளர்களின் பிரசவம், ஆபத்தான தொற்றுநோய் காசநோய், அன்ரிபயாக்ரிஸ் மருந்துகளுக்கு எதிராக கிளர்ந்தெழும் நுண்ணுயிர்க் கிருமிகள் ஆகிய 28 தலைப்புகளில் தொற்றுநோய்கள் பற்றி எழுதப்பட்ட

விழிப்புணர்வுக் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. மனிதநேய மருத்துவராக கஸ்டப் பிரதேசங்களிலிருந்து நீண்டகாலம் பணியாற்றிய அனுபவங்களிலிருந்தும் தனது மருத்துவ அறிவு மற்றும் தேடல் மூலமும் மருத்துவர் ச. முருகானந்தன் இலகுவாக நோய்கள் பற்றிய விழிப்புணர்வினை எம்மிடையே ஊட்டிவருகிறார். முழுநேர மருத்துவராக பொது வெளியில் அவர் எழுதிவரும் அறிவுசார்ந்த மருத்துவக் கட்டுரைகள் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70053).

### 16327

**நீரிழிவு கைநூல்.** செ.நாகநாதர். சங்கானை: மகப்பெறுவும் பிணிதீர் மனையும், 2ஆவது பதிப்பு, 2002, 1ஆவது பதிப்பு, 1984. (பெங்களூர் 560 053: எஸ்.வி. எண்டர்பிரைசஸ், 59, 1ஆவது மாடி, எஸ்.எம்.ரோடு, காட்டன்பேட்).

(8), 24 பக்கம், விளக்கப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

இந்நூலின் முதற்பதிப்பு 1984இல் சுழிபுரம் விக்ரோரியா கல்லூரியில் யாழ். லயன்ஸ் கழகத் தலைவர் பேராசிரியர் சரவணபவனால் வெளியிட்டுவைக்கப்பட்டது. இந்நூலின் வெளியீடும், அன்றைய தினம் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த நீரிழிவு பற்றிய கருத்தரங்கும் பரவலாக மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தி யிருந்ததுடன் சர்வதேச நீரிழிவு விழிப்புணர்வுக்கான பிராந்திய விருதினை வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்திற்குப் பெற்றுத் தந்திருந்தது. சலரோகம், இன்சுலினின் முக்கிய செயற்பாடுகள், அபாய அறிகுறிகள், தீய விளைவுகள், சலரோகத்துடன் வாழ்வது, நீரிழிவு நோயாளர்களின் எதிர்காலத்தைத் திட்டமிடல், நீரிழிவுக்காரர் செய்யக்கூடாதவை, பாதங்களின் பாதுகாப்பு, நீரிழிவு வியாதியைக் கண்டுபிடிக்கச் சில சோதனைகள், சிறுநீர் சோதனைகள், குருதியில் சோதனை, சலரோகத்தில் உபயோகிக்கப்படும் வைத்திய முறைகள், இன்சுலின், குறைவான நேரம் இயங்கும் இன்சுலின், கூடுதலான நேரம் இயங்கும் இன்சுலின், சலரோகக் குளிசைகள், சல்பனையில் யூரியாக்கள் ஆகிய சிறு பிரிவுகளின்கீழ் நீரிழிவு நோய் பற்றி இந்நூல் விளக்குகின்றது.

## 618 பெண்நோயியல், மகப்பேற்று மருத்துவம்

### 16328

**குழந்தையின்மை: விளக்கங்களும் தீர்வுகளும்.** சி.ரகுராமன், பா.பாலகோபி. கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு 2022. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

vii, (3), 76 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 750., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-6164-33-1.

குழந்தையின்மை பற்றிய தெளிவான மருத்துவரீதியிலான விளக்கத்தை அளித்து அதற்குரிய நவீன சிகிச்சை முறைகளை விளக்கிக் கொள்வதன் மூலம் குடும்பங்களில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைக் குறைப்பதும், எவ்வித தயக்கமுமின்றி மருத்துவ ஆலோசனையை நாட தம்பதியினரை உற்சாகப்படுத்துவதும் அதன் மூலம் நாளடைவில் குழந்தைப்பேற்றை அடைவதற்கு உதவுவதும் இந்நூலின் நோக்க மாகும். அறிமுகம், கருத்தரித்தல் தாமதமடைவதற்கான காரணிகள்-பெண்கள், கருத்தரித்தல் தாமதமடைவதற்கான காரணிகள்-ஆண்கள், கருத்தரித்தல் தாமதமடைவதை இனங்காணும் பரிசோதனைகள், கருத்தரித்தலில் செல்வாக்குச் செலுத்தும் வாழ்க்கைமுறை மாற்றங்களும் நிகழ்வுகளும், கருத்தரித்தல் தாமத மடைவதற்கான காரணிகளுக்கான சிகிச்சைமுறைகள்-பெண்கள், கருத்தரித்தல் தாமதமடைவதற்கான காரணிகளுக்கான சிகிச்சைமுறைகள்-ஆண்கள், செயற்கைமுறைக் கருக்கட்டலும் அதற்கான ஆயத்தப்படுத்தலும், செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சையின் படிமுறைகள், முட்டை விந்து, கருத் தானமும், செயற்கை முறைக் கருக்கட்டலும் ஆகிய 10 இயல்களில் இந்நூல் ஒளிப்பட உதவியுடன் தெளிவுபடுத்தி எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 69981).

## 16329

**தாயாகிய தனித்தவம்: பெண் நோயியல் மற்றும் மகப்பேற்றியல்சார் மருத்துவக் கட்டுரைகள்.** கந்தையா குருபரன் (மூலம்), நாகேந்திரம் நவராஜ் (பதிப்பாசிரியர்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2022. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

viii, 128 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 600., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-624-5881-53-6.

ஆரம்பக் கர்ப்பகாலம், கர்ப்பகாலச் சிகிச்சை நிலையத் தரிசிப்புகள், கர்ப்பகால உணவுப் பழக்கம், கருச்சிதைவு, கர்ப்பகாலக் குருதிச்சோகை, கர்ப்பகாலக் குருதி அமுக்கம், கர்ப்பகால நீரிழிவு, உடற்பயிற்சியும் கர்ப்பகாலமும், கர்ப்பகாலக் குருதிப்போக்கு, சுகப்பிரசவம், சத்திரசிகிச்சைப் பிரசவம், பிரசவத்தின் பின்னான தாயின் கவனிப்பு, குடும்பத் திட்டமிடல், மலரும் யௌவனம், மாத சுகவீனமும் மருத்துவ விளக்கங்களும், குடும்ப வன்முறை, மாதவிடாய் நிறுத்தம், மாதவிடாய் நிறுத்தத்தின் பின்னரான இனப்பெருக்க சுகாதாரம், மாதவிடாய் நிறுத்தத்தின் பின்னரான இரத்தப் போக்கு, கர்ப்பப்பைப் புற்றுநோய், கருப்பைக் கழுத்துப் புற்றுநோய், சூலகப் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய், பெண்களில் ஏற்படும் குடலிறக்கம், முட்டைப்பை நீர்க் கட்டி நோய், வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை ஆகிய 27 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஒரு பெண் நோயியல் மற்றும் மகப்பேற்றியல் மருத்துவ நிபுணராக வைத்திய கலாநிதி கந்தையா குருபரன் சந்தித்த தனது நோயாளர்கள் எழுப்பியிருந்த கேள்விகளே அவரது அறிவுத்தேட்டத்தின் மூலங்களாகியுள்ளன. தாய்மை, பெண்கள் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பான பல சந்தேகங்களுக்கும் பிரச்சினைகளுக்கும்

தற்போதுள்ள மருத்துவ விஞ்ஞான அறிவின்மூலம் விளக்கங்களையும் தீர்வு களையும் கொடுக்கும் முயற்சியாக இந்நூல் அமைந்துள்ளது. 233ஆவது ஜீவநதி வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.

## 618.97 மூப்பியல் மருத்துவம்

### 16330

**முதுமை என்னும் பொக்கிஷம்.** சு.குமரன், யாழினி சண்முகநாதன், பௌசிகா உருத்திரகுமார், க.கிருஷாந்தன். யாழ்ப்பாணம்: சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறை, மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1ஆவது பதிப்பு, 2021. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

*76 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-624-98709-0-1.*

முதுமை தவிர்க்கமுடியாதது. இது உடலுக்கு தேய்வு, நோய்கள் ஆகியவற்றையும் உள்ளத்துக்கு தனிமை, துக்கம், உளநலப் பிரச்சினைகள் ஆகியவற்றையும் கொண்டுள்ளது. இவற்றை எவ்வாறு பின்போடலாம், தடுக்கலாம், எதிர்கொள்ளலாம் என்பதைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் இந்நூலில் அடக்கியுள்ளார்கள். இந்நூ லானது முதியவர்களையும் அவர்சார் உறவினர்களையும் சுகாதார பணியாளர்க ளுடன் சம பங்காளர்களாக தொழிற்பட வழிசமைக்கின்றது.

## 619 கீழைத்தேய மருத்துவம்

### 16331

**அகஸ்தியர் இரண வைத்தியம்.** அகஸ்தியர் (மூலம்), வீ.ஏ.ரி.ராஜன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 11: சரஸ்வதி புத்தகசாலை, 175, செட்டியார் தெரு, 1ஆவது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 11: சரஸ்வதி புத்தகசாலை, 175, செட்டியார் தெரு).

*92 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12 சமீ.*

இதில் பல்வேறு வீட்டுவைத்திய முறைகள் சொல்லப்பட்டுள்ளன. கை வைத்தியத்துக்கு தேவைப்படும் மூலப்பொருட்களும், அவற்றை தயாரிக்கும் வழிமுறைகளும் தரப்பட்டுள்ளன. கொருக்கு முதலிய இரணங்களுக்கு களிம்பு, ஆறாத புண்களுக்கு மூலாம், கிரந்திக்கு மூலாம், மொலாம், கரப்பான் வியாதிக்கும், ரணத்திற்கும் உள்ளுக்கும் மேலுக்கும் எண்ணெய், சர்வ ரணங்களுக்கும் மூலாம், சதை கரைக்கவும் கிரந்திக்கும் மூலாம், கண்டமாலைக்கு மேற்பூசுத் தைலம், சிங்கரணத்திற்குப் பச்சை சேர்வை சீலை, வெட்டு காயத்திற்கு, பச்சை சேர்வை, வேறு பச்சை களிம்பு, சிங்கி ரணத்திற்கு சேர்வை சீலை, வேறுவித பச்சை சேர்வை சீலை, வேறுவித பச்சை சேர்வை சீலை, அரையாப்புக்கு களிம்பு, இன்னுமோர் களிம்பு, அரையாப்பு கட்டிக்கு வேறுவித் களிம்பு, கிரந்திக்கும் யோனிப்புத்துக்கும்

காரசீலை, வேறுவிதக் காரசீலை, சகல ரணங்களுக்கு தைலம், சகல ரணங்களுக்கு உள்ளுக்கு சாப்பிடும் தைலம், வேறுவித வெள்ளைகார சீலை, மூளை விழுத்த கறுப்பு காரசீலை, வேறுவிதக் காரசீலை, வேறுவித பொன்சிகப்பு காரசீலை, மஞ்சள் வர்ண பிளவைக்கு பொன்சிகப்பு காரசீலை, மூலத்திற்கு குளிர்ந்த பச்சைக் காரசீலை, வேறுவித வெள்ளைக்காரம், வேறுவித பச்சைக்காரம், வேறுவித நீலக்காரம், இரணங்களுக்கு மஞ்சட் காரம், வேறுவித மஞ்சட் காரம், ரத்த சிங்கிற்குக் கருத்த காரம், மஞ்சட் காரசீலை, விரண சஞ்சீவித் தைலம், ஆறாத வீரணங்களுக்குக் களிம்பு, வீரணங்களுக்குச் சிகிச்சை, கலங்கின கண்ணுக்கு, காதுப் புழு விழ, கல்லடைபுக்கு, வேறு, சுகபேதிக்கு, மஞ்சட் காமாலைக்கு, வெள்ளெழுத்துக்கு, லிங்கச் சோர்வுக்கு, தேன்கொட்டுக்கு எனத் தனித்தனியாக கைவைத்தியங்கள் தரப்பட்டுள்ளன.

## 16332

**சம்ஸ்கிருதத்தில் புராதன இந்திய அறுவைச் சிகிச்சை மருத்துவம்: சுஸ்ருத சம்ஹிதையை அடிப்படையாகக் கொண்டது.** *சுவஸ்திகா ரவிச்சந்திரன். யாழ்ப்பாணம்: தூண்டி இலக்கிய வட்டம், 141, கேணியடி, திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு, 2019. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டேர்ஸ், இல. 10, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).*

xvii, *121 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 20.5x14.5 சமீ.,* ISBN: *978-624-95610-0-7.*

*“சுஸ்ருத சம்ஹிதை” பண்டைய இந்தியாவில் கிமு 800-இல் வாழ்ந்த ஆயுர்வேத மருத்துவ அறுவை சிகிச்சை முனிவரான சுஸ்ருதர் என்பவர் இயற்றிய அறுவை சிகிச்சைக்கான சமஸ்கிருத மொழி மருத்துவ நூல் ஆகும். சுஸ்ருத சம்ஹிதை நூலில் வேத கால மருத்துவ முறையின்படி, பல்வேறு மருத்துவ துறைகளுக்கான விளக்கங்கள் உள்ளன. மூலநூலில் காணப்படும் பல்வேறு அத்தியாயங்கள் அறுவை சிகிச்சைக்கான பயிற்சிகள், கருவிகள் மற்றும் செயல்முறைகளை விளக்குகின்றன. “சுஸ்ருத சம்ஹிதை” நூலின் தற்போதைய வெளியீடு 186 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் 1,120 நோய்கள், 700 மூலிகைச் செடிகள், கனிமங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட 64 மருந்துகள், விலங்குகளிடமிருந்து தயாரிக்கப்பட்ட 57 மருந்துகள், ஆழமான உடற்கூற்றியல் பாடங்கள் முதலிய விவரங்களை உள்ளடக்கியுள்ளது. சுஸ்ருதசம்ஹிதையின் மூலமாக 600 க்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சை இயந்திரங்களையும், பாரம்பரிய அறுவை சிகிச்சையாளர்களின் அனுபவங்களையும், வேத இலக்கியங்களில் காணப்படும் மருத்துவ தகவல்களின் ஒருங்கிணைப்பை இந்நூலில் பெற முடிகின்றது. சுவஸ்திகா ரவிச்சந்திரன் எழுதியுள்ள இந்நூல் வழியாக புராதன இந்திய அறுவை சிகிச்சை பற்றிய பல்வேறு தகவல்களை அறியமுடிகின்றது. இந்திய மருத்துவப் பாரம்பரியம், புராதன இந்திய மருத்துவம், சுஸ்ருதசம்ஹிதையின் அமைப்பும் உள்ளடக்கமும், சிறப்பும் தனித்துவமும் ஆகிய அத்தியாயங்களின் வழியாக சம்ஸ்கிருதத்தில் புராதன இந்திய அறுவைச் சிகிச்சை மருத்துவம் பற்றி இந்நூல் பற்றி விரிவான விளக்கமளிக்கப்பட்டுள்ளது.*

மேலும் பார்க்க:
எம் முன்னோரின் வாழ்வாதாரமும் மருத்துவமும். 16179

## 619.1 சித்த மருத்துவம்

### 16333

**ஆகாரமே ஆதாரம்: உணவில் சித்த மருத்துவமும் நவீன அறிவியலும்: அறிமுகம்.** *தியாகராஜா சுதர்மன். யாழ்ப்பாணம்: தி.சுதர்மன், கோகுலம், 23/2, மெமோரியல் வீதி, மானிப்பாய், 1ஆவது பதிப்பு, 2021. (யாழ்ப்பாணம்: அன்றா பிறிண்டேர்ஸ், இல. 356*A*, கஸ்தூரியார் வீதி).*

xviii, *296 பக்கம், விலை: ரூபா 1000., அளவு: 20.5*x*14.5 சமீ.,* ISBN: *978-626-97544-0-9.*

*பொன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட வைத்தியர் தியாகராஜா சுதர்மன் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையிலும், உயர் கல்வியை சுழிபுரம் யா/விக்டோரியா கல்லூரியிலும், சித்த மருத்துவப் பட்டப்படிப்பை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறை (கைதடி-2003)யிலும், உளவளத்துணை டிப்ளோமா கற்கை நெறியினை இலங்கை தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திலும் (2005), உணவும் போசாக்கும் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறியினை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பட்டப்பின் கற்கைகள் நிறுவனத்திலும் (2009) பூர்த்தி செய்துள்ளார். 2005இல் திருக்கோணமலை மாவட்டத்தில் முதல் நியமனத்தைப் பெற்று 2012 வரையான காலப்பகுதியில் மருத்துவ சேவையை ஆற்றியதுடன் 2012-2017 வரை இலவச சித்த மருந்தகம் ஆனைக்கோட்டையிலும், 2017முதல் இன்றுவரை இலவச சித்த மருந்தகம் யாழ். மாநகர சபையின் நகரக் கிளையிலும் பணியாற்றி வருகிறார். இந்நூல் எம்மவரின் ஆரோக்கியமான பாரம்பரிய உணவுப் பழக்கம் பற்றிய பல தகவல்களுடன் வெளிவந்துள்ளது. உணவு-அறிமுகம், உணவும் ஐம்பூதங்களும், உணவும் ஆரோக்கியமும், உணவுப்பாதுகாப்பு, உணவு உட்கொள்ளல், பத்தியாபத்தியம், பெண்களின் நலனில் உணவின் பங்கு, தாவர இரசாயனங்கள், தாம்பூலம் தரித்தல், உணவில் சில விஷேட பகுதிகள், குழந்தைகள், சிறுவர்கள், முதியோர்களுக்கான உணவுகள், பாரம்பரிய உணவுகள் ஆகிய பன்னிரு அத்தியாயத் தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

### 16334

**ஆரோக்கிய ஆரம்: சித்த ஆயுள்வேத கட்டுரைகள்.** துரைராசா இராஜவேல் *(தொகுப்பாசிரியர்). பருத்தித்துறை: டாக்டர் த.துரைராசா நினைவு வெளியீடு, பாமாலயம், கவிஞர் செல்லையா வீதி, அல்வாய், 1வது பதிப்பு, டிசம்பர் 2017. (யாழ்ப்பாணம்: ஆகாயம் பதிப்பகம், இமையாணன், உடுப்பிட்டி).*

x, *68 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5*x*14.5 சமீ.*

*அமரர் டாக்டர் தம்பு துரைராசா அவர்களின் நினைவு வெளியீடாக வெளிவந்துள்ள இந்நூல் சித்த ஆயுர்வேத கட்டுரைகளை கொண்டுள்ளது. சுதேச மருத்துவத்தில்*

வாத பித்த கபம்-ஓர் அறிமுகம் (டாக்டர் பொன் இராமநாதன்), சித்த மருத்துவம் (டாக்டர் சே.சிவசண்முகராஜா), இதய நோய்க்கான காரணங்களும் அதற்கான தீர்வுகளும் (டாக்டர் அன்புச்செல்வி சிறீதரன்), மூலிகைகளிலிருந்து மருந்து உற்பத்தி (டாக்டர் ரோகினி பூபாலசிங்கம்), உணவும் ஆரோக்கியமும் (செல்வி மதுராங்கி சுந்தரேஸ்வரன்), சித்த மருத்துவமும் உளநலனில் அதன் பங்கும் (டாக்டர் N.J.Q. தர்ஷனோதயன்), பஞ்சகர்ம சிகிச்சை ஓர் அறிமுகம் (டாக்டர் கலைச்செல்வி சௌந்தரராஜன்) ஆகிய கட்டுரைகள் இந்நினைவிதழில் தொகுக்கப்பட்டுள்ளன.

## 16335

**சித்த மருத்துவத்தில் சரீர அமைப்பு: நூலாய்வு.** தயாளினி, நிருஷ்ணி, கபாலினி, கோகுலவாசினி (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: சித்த மருத்துவ வெளியீடு-1, சித்த மருத்துவ அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு, 2020. (யாழ்ப்பாணம்: மெகா பிரின்டர்ஸ், 101 கண்டி வீதி, கச்சேரியடி).

viii, 40 பக்கம், அட்டவணை, விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-0585-35-9.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகின் தலைவர் தி.தயாளினி, செய்முறை காட்டுநர்களான க.நிருஷ்ணி, தி.கபாலினி, வே.கோகுலவாசினி ஆகியோர் இணைந்து தயாரித்துள்ள இந்நூலில் சரீர அமைப்பு ஓர் அறிமுகம் (சரீரம்-மறுபெயர்கள், சரீரம்-வரைவிலக்கணங்கள்), சரீர அமைப்பின் வகைகள், சரீர அமைப்பு வகைகளின் இலட்சணங்கள் (வாத தேகியின் இலட்சணங்கள், பித்த தேகியின் இலட்சணங்கள், கப தேகியின் இலட்சணங்கள், வாத-பித்த பிரகிருதியின் இலட்சணங்கள், வாதஐய பிரகிருதியின் இலட்சணங்கள், பித்த வாத பிரகிருதியின் இலட்சணங்கள், பித்த ஐய பிரகிருதியின் இலட்சணங்கள், ஐய பித்த பிரகிருதியின் இலட்சணங்கள், ஐய வாத பிரகிருதியின் இலட்சணங்கள், தொந்த பிரகிருதியின் இலட்சணங்கள், சன்னிபாத பிரகிருதியின் இலட்சணங்கள்), அஷ்டவித பரீட்சைக்கும் சரீர இலட்சணத்திற்கும் இடையிலான தொடர்பு, தொகுப்புரை ஆகிய அத்தியாயங்களில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

## 16336

**சித்த வைத்தியம்: பகுதி 1.** திலகேஸ்வரி குமுதரஞ்சன். யாழ்ப்பாணம்: திருமதி திலகேஸ்வரி குமுதரஞ்சன், சிரேஷ்ட விரிவுரையாளர், மருத்துவப் பிரிவு, சித்த மருத்துவத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, சித்திரை 2010. (கரவெட்டி: லெட்சுமி ஓப்செட் அச்சகம், நாவலர்மடம், நெல்லியடி).

vii, 206 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 19.5x14 சமீ.

உச்சி முதல் உள்ளங்கால்வரை ஏற்படக்கூடிய நோய்கள் பற்றியும் அவற்றிற்கான சிகிச்சைமுறைகள் பற்றியும் மிகச்சிறப்பாக இந்நூலில் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு நோய்க்கான காரணத்தையும் கைவைத்திய முறைகள், சிகிச்சை முறைகள் என்பவற்றை உள்ளடக்கியதாகவும் வருமுன் காப்போம் என்ற

தத்துவத்துக்கு ஏற்பவும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. உணவுப் பழக்கவழக்கங்கள், நாளாந்த செயற்பாடுகள் என்பன பற்றியும் இந்நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அளவைகள், குடிநீர் செய்முறை, துணை மருந்து, பத்தியம், சுரம், குரற்கம்மல், மூக்கடைப்பு, குருதியழல், இருமல் நோய், இரைப்பு, இளைப்பு, தமரகநோய், சுவையின்மை, நீர்வேட்கை, செரியாமை, விக்கல், வாந்தி, மாந்தநோய், குன்மம், சூலை, காமாலை, வெளுப்பு நோய், ஊதல் நோய், குடற்புண் ஆகிய இருபத்திநான்கு நோய்களுக்கான நிவாரணங்களை இந்நூல் வழங்குகின்றது. மேலும் ஏனைய கைமுறை வைத்தியங்களாக, தலைமுடி கருக்க, தலையில் பேன், தலையில் புழுவெட்டு, கண் சம்பந்தமான நோய்கள், பல் சம்பந்தமான நோய்கள், தேகச் சூடு, ஆண்மைக் குறைவு, பெரும்பாடு, மாதவிடாய் உண்டாக, குடற்புழுக்கள் தீர, தோலைப் பற்றிய பிணிகள், வாத நோய், வெள்ளை சாய்தல், நீரெரிச்சல், மூலநோய், நீரிழிவு, சீதக் கரிச்சல், வயிற்றுப்போக்கு அதிசாரம், மலச்சிக்கல், உடல் எடை குறைக்க, மலடு, உடல் வலிமைபெற, சீரான உணவு, கீரை வகை ஆகிய 24 விடயங்கள் தொடர்பான விளக்கமும் தீர்வும் தரப்பட்டுள்ளன. சித்த மருத்துவ கலாநிதி திலகேஸ்வரி குமுதரஞ்சன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றுபவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 177815).

### 16337

**நோய்கட்கு சித்தப்பரிகாரம்.** திலகேஸ்வரி குமுதரஞ்சன். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2017. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

x, 166 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-4676-69-5.

சித்த மருத்துவ கலாநிதி திருமதி திலகேஸ்வரி குமுதரஞ்சன் அவர்கள் வீரகேசரி வார வெளியீட்டில் எழுதி வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு. இந்நூல் ஆசிரியரின் ஆறாவது நூலாகும். இதில் ரோக நிலைமைகள் பற்றிய சிறு விளக்கமும் அதற்குரிய எளிய பரிகார முறைகளும், எவ்வகையான பத்தியம் கணிக்கப்பட வேண்டும் என்பது பற்றி இதில் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் 89ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70020).

## 630 விவசாயமும் அது சார்ந்த துறைகளும்

### 16338

**இயற்கை வழி.** செல்வி அ.ஆர்த்திகா (தொகுப்பாளர்). யாழ்ப்பாணம்: இயற்கை வழிச் செயற்பாட்டாளர்கள், எழுதிரள், 209, பலாலி வீதி, கோண்டாவில், 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (அச்சக விபரம் தரப்படவில்லை).

52 பக்கம், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

ஜேர்மன் தூதராலயத்தின் அனுசரணையுடன் Schock-Familien-Stiftung கூட்டுறவில் தயாரித்து விநியோகிக்கப்பட்ட வண்ண விளக்கப்படங்களுடனான கைந்நூல் இது. இதில் இயற்கைவழி விவசாயத்தின் அடிப்படை விடயங்கள், விதைச் சிகிச்சை, பாதுகாக்கப்பட்ட நாற்றுமேடை, சிறுதுண்ட நாற்றுமேடை, நடுகைக்குழி தயார் செய்தல், பூச்சாடிகளில் நடல், விதை/நாற்றுக்களை நடல், நீர்ப்பாசனம், மூடுபடை, சேதனப் பசளைகள், களைகளைக் கட்டுப்படுத்தல், உயிர்க் கரி, நோய்கள், பீடைகள் கட்டுப்பாடு (முக்கியமான மரக்கறிப் பயிர்கள்), மண் தொற்று நீக்கல், விதை/நாற்றுக்களை நேர்த்தி செய்தல், கட்டுப்பாட்டு முறைகள் ஆகிய தலைப்புகளின் கீழ் இயற்கை வழி விவசாய முறைகள் இங்கு விளக்கப்பட்டுள்ளன.

### 16339

**ஏர்முனை: ஏரோவியம்: 2022ம் ஆண்டு விவசாயச் சஞ்சிகை.** மாவடியார் சூ. சிவதாஸ் (மலராசிரியர்), எஸ்.சங்கர் (ஓவியர்). நெடுங்கேணி: நெடுங்கேணி பண்ணையாளர் சங்கம், இணைவெளியீடு, வவுனியா: இயற்கை வழி இயக்கம், 1ஆவது பதிப்பு, 2022. (வவுனியா: பொய்கை பதிப்பகம், கந்தசாமி கோயில் வீதி).

95 பக்கம், கருத்தோவியங்கள், விலை: ரூபா 100., அளவு: 26.5x18 சமீ.

வரையறுக்கப்பட்ட வவுனியா வடக்கு ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையாளர்கள் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தினரின் பதிப்புரிமையுடன் வெளிவந்துள்ள இச்சிறப்பிதழில் விவசாய நூல்களிலும் தமிழ் இலக்கியங்களிலும் கண்ட காட்சிகளிலும் இருந்து எடுத்த விவசாய மேம்பாட்டிற்கான இரத்தினச் செய்திகளை கருத்தோவியக் கலைஞர் எஸ்.சங்கர் அவர்களின் கைவண்ணத்தில் செதுக்கிய அழகான காட்சிகளாக இந்நூலின் பக்கங்கள் தோறும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" முதலாக "இலமென்று அசைஇ இருப்பாரை" ஈறாக 91 தலைப்புகளில் இக்கருத்தோவியங்கள் பக்கம் தோறும் விவசாயச் சமூகச் செய்திகளை அள்ளி வழங்குகின்றது. இடையே இயந்திரமயமாதல், சிறந்த விவசாய நடைமுறை, விதைமுளை திறன், பாரம்பரிய பயிர்க்காப்பு, நாற்றுமேடை தொற்று நீக்கம், தீமை செய்யும் பூச்சிகள், வாழை நடுகை முறைகள், பண்ணைக் குட்டை, பாடசாலைத் தோட்டம், உள்ளீட்டு உற்பத்தியில் உயிர்வேலி, ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம் போன்ற விவசாயச் செய்திகளையும் கருத்தோவியங்களின் வழியாக எளிய முறையில் விவசாயிகளுக்கு விளக்கமளித்துள்ளார்.

### 16340

**சேதன முறையில் வீட்டுத்தோட்டம் செய்திடுவோம்: தொற்றா நோய்களிலிருந்து எம்மை பாதுகாப்போம்.** சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறை. யாழ்ப்பாணம்: சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இணை வெளியீடு, யாழ்ப்பாணம்: வடமாகாண சுகாதார அமைச்சு, 1ஆவது பதிப்பு, மாசி 2016. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

65 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

வடமாகாண அரசு, யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து 2016இல் நடத்திய மாகாண ஆரோக்கிய விழாவின்போது வெளியிடப்பட்ட சமூக மருத்துவ அறிவு நூல். தொற்றா நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாப்போம், வீட்டுத் தோட்டம் செய்திடுவோம், விவசாயத்தில் அசேதன இரசாயனத்தின் பாவனையும் மனித வாழ்வில் அதன் தாக்கமும், வீட்டுக் கழிவுகளைப் பயன்படுத்தி சேதனப் பசளை தயாரித்தல், ஆரோக்கிய வாழ்வுக்கு இயற்கை பீடைநாசினிகளைப் பாவிப்போம், வீட்டுத் தோட்டத்தில் வளர்க்கப்படும் தாவரங்களின் நன்மையும் தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதில் அவற்றின் பங்களிப்பும், பாரம்பரிய பயிர்களும் மருத்துவக் குணங்களும், வீட்டில் கீரைகளைப் பயிரிடுவோம்-குருதிச்சோகை ஏற்படாது தவிர்ப்போம், மாறுபட்ட காலநிலைகளுக்கேற்ப பயிர்செய்வோம், ஒட்டுதலும் அரும்பொட்டுதலும், ஒயிஸ்டர் காளான் வளர்ப்பு, சேதன பசளை தயாரித்தல் ஆகிய தலைப்புகளில் பல்வேறு சுருக்கக் குறிப்புகள் விளக்கப் படங்களுடன் தரப்பட்டுள்ளன.

மேலும் பார்க்க:
யோகமும் இயற்கையும்: 16065

## 641.86 கேக் தயாரிப்புக் கலை

### 16341

**கேக் கலையின் நுட்பங்கள்.** அருந்ததி துரைராஜா. கொழும்பு 6: திவ்யா கலைக்கூடம், 351-7யு, 1/1 காலி வீதி, வெள்ளவத்தை, 1ஆவது பதிப்பு, ஆடி 2010. (கொழும்பு 6: கனவு நிலையம், வெள்ளவத்தை).

ix, 86 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 375., அளவு: 23x16 சமீ., ISBN: 978-955-50249-1-2.

அருந்ததி துரைராஜா, அச்சுவேலி தொழிற்பேட்டையில் பழவகை பதனிடும் தொழிற்சாலையின் இரசாயன நிபுணராகவும், முகாமையாளராகவும் பணியாற்றியவர். கொழும்பில் திவ்யா கலைக்கூடம் என்ற நிறுவனத்தை நிறுவி இயக்கிவருகிறார். நூலின் ஆரம்பத்திலேயே கேக்கிற்குத் தேவையான செய்முறைப் பொருட்கள், முக்கிய அளவுகள், கேக் செய்யும்போது கவனிக்கவேண்டிய விடயங்கள் என்பன விளக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து 34 வகையான கேக்

வகைகள் அவற்றின் வர்ணப்படங்களுடன் தரப்பட்டுள்ளன. ஐசிங் முறைகளும் 13 வகையான பூக்களை செய்யும் முறையும் படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. இக்கலையை வகுப்புகளுக்குச் சென்று கற்க முடியாதவர்கள் வீட்டிலிருந்தபடியே தாமாகக் கற்றுக்கொள்ளும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50938).

## 642 உணவும் பரிமாறலும்

### 16342

**கிராமப்புறச் சமையல் கலையின் நுட்பங்கள்: பகுதி 1.** அருந்ததி துரைராஜா. கொழும்பு 6: திவ்யா கலைக்கூடம், 351-7A, 1/1 காலி வீதி, வெள்ளவத்தை, 2ஆவது பதிப்பு, 2014, 1ஆவது பதிப்பு, ஆடி 2012. (அச்சக விபரம் தரப்படவில்லை).

ix, 70 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 300., அளவு: 23x16 சமீ., ISBN: 978-955-50249-1-2.

பாரம்பரிய உணவுமுறைகளில் 94 வகையானவற்றைத் தேர்ந்து, அவற்றைச் சமைக்கும் முறையினை தெளிவாகப் பதிவுசெய்துள்ளார். செய்முறை, அளவுப் பிரமாணங்கள், படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. புளி, தயிர், சக்கரைச்சாதங்கள், பிட்டு வகைகள், மற்றும் ஆரோக்கிய உணவுவகைகளான களிவகைகள் என்பனவும், கறி, குழம்பு, பிரட்டல், வறுவல் எனப் பல்வேறு சைவ, அசைவ உணவு வகைகள் சமைக்கும் வழிமுறைகள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. நூலாசிரியரின் திவ்வியா கலைக்கூடம் கொழும்பில் 1996இலிருந்து இயங்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 62710).

### 16343

**பயன் அறிந்து உண்க.** பால. சிவகடாட்சம். திருக்கோணமலை: வானவில் வெளியீடு, 1வது பதிப்பு, 2016. (திருக்கோணமலை: ரெயின்போ கிராப்பிக்ஸ்).

114 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

இந்நூலில் எமது பாரம்பரிய உணவுப் பயிர்களின் பயன்பாடு, அவற்றில் பொதிந்துள்ள சத்துக்கள் என்பன பற்றி எடுத்துரைக்கப்படுகின்றது. குரக்கன், தினை, வரகு, கம்பு, சாமை, முளைக்கீரை, செடிப்பசளி, கொடிப்பசளி, பருப்புக் கீரை, பொன்னாங்காணி, வல்லாரை, முடக்கொத்தான், தூதுவளை, அகத்தி, கறி வேப்பிலை, முசுமுசுக்கை, குறிஞ்சா, முருங்கை, வாழை, கத்தரிக்காய், வெண்டிக் காய், சுரைக்காய், பாகற்காய், பீர்கங்காய், புடொலங்காய், நீற்றுப்பூசணி, பூசணிக் காய், வெள்ளரிக்காய், கெக்கரிக்காய், தார்ப்பூசணி, கியுகம்பர், கொவ்வைக்காய், மிளகாய், இஞ்சி, சுக்கு, மிளகு, கடுகு, சீரகம், வெந்தயம், உள்ளி, கொத்தமல்லி, பெருங்காயம், சாதிக்காய், இலவங்கப்பட்டை, சதகுப்பை, குங்குமப்பூ, பலாப்பழம்,

விளாம்பழம், மாம்பழம், மாதுளம்பழம் ஆகிய உணவுப் பொருள்களின் பதார்த்த குணம் பற்றி இந்நூல் விரிவாக விளக்குகின்றது. இந்நூல் அமரர் இராசையா பழனியப்பா அவர்களின் நினைவாக 19.04.2023அன்று மீள்விநியோகம் செய்யப் பட்டுள்ளது. கலாநிதி பால. சிவகடாட்சம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் உயிரியற்துறைத் தலைவராகப் பணியாற்றியவர்.

## 16344

**பாரம்பரிய உணவுக் கலாச்சாரம்.** ரஜிதா அரிச்சந்திரன். யாழ்ப்பாணம்: ரஜிதா அரிச்சந்திரன், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், இணை வெளியீடு, பத்தரமுல்ல: கலாசார அலுவல்கள் திணைக்களம், 1ஆவது பதிப்பு, 2022. (யாழ்ப்பாணம்: மெகா பதிப்பகம், 41, றக்கா வீதி, கச்சேரியடி).

32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x15 சமீ.

யாழ்ப்பாண பிரதேச கலாசார உத்தியோகத்தராகப் பணியாற்றும் இந்நூலாசிரியர் யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவில் வழக்கிலிருந்த உணவுப் பண்டங்களைப் பற்றிய விபரங்களை குறிப்பாக அவற்றிலுள்ள போசணைச் சத்து, அவை எவ்விதம் எமது உடலை உறுதியாக்குகின்றது என்பன போன்ற விபரங்களைத் தந்துள்ளார். இந்நூலில் நெல்லரிசிச் சோறு, பொங்கல், இடியப்பம், புட்டு, அப்பம், தோசை, இட்டலி, வடை, முறுக்கு, பால்ரொட்டி, சீனி அரியதரம், பயித்தம் பணியாரம், கொழுக்கட்டை/மோதகம், பால்க் கஞ்சி, களி, பனங்காய்ப் பணியாரம், கூழ், புளிக்கஞ்சி, மீன் குழம்பு, இறைச்சிக் கறி, திருக்கைக் கறி, சுறாக்கறி, சொதி, சம்பல், சத்துமா, தானியவகை உணவுகள், பொரி உருண்டை, எள்ளுருண்டை, கச்சான் அலுவா, லட்டு, பனாட்டு, பழஞ்சோறு ஆகிய உணவுப் பண்டங்கள் பற்றிய தகவல்களைத் தொகுத்துத் தந்துள்ளார்.

# 650 முகாமைத்துவம், அலுவலக நிர்வாகம்

## 16345

**நிறுவனங்களில் தலைமைத்துவம்.** தனேஸ்வரி ரவீந்திரன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

x, 131 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-6164-00-3.

முகாமைத்துவத்தில் பல மூலங்கள் காணப்பட்டாலும், தலைமைத்துவம் என்ற அம்சம் இன்று அதிமுக்கியம் பெறும் ஒன்றாக உள்ளது. எந்தவொரு நிறுவனத் தினதும் வெற்றிக்கு சிறந்த தலைமைத்துவம் அவசியமாகும். தலைமைத்துவத்தின் வெற்றி என்பது நிறுவனத்தின் வெற்றியினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. அதே வேளை நிறுவனத்தின் வெற்றிக்கான அத்திவாரமானது தலைமைத்துவத்தினால் இடப்படுகின்றது. இந்த வகையில் நிறுவனங்களைத் திறம்பட இயக்குவதற்கு ஏற்ற பொருத்தமான தலைமைத்துவப் பாங்குகளை அறிந்து கொள்ளவும், எதிர்கால முகாமையாளர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சிநெறிகளை

வடிவமைத்துக் கொள்ளவும் இந்நூல் வழிகாட்டுகின்றது. தலைமைத்துவம் பற்றிய அறிமுகம், தலைமைத்துவ கோட்பாடுகள், பங்குபற்றும் தலைமைத்துவம், கையளிப்பு மற்றும் அதிகாரமளித்தல், தலைமைத்துவ வெற்றிக்கு அவசியமான ஆளுமை மற்றும் திறன்கள், தலைமைத்துவ ஆற்றல்களை அபிவிருத்தி செய்தல், நிறைவேற்று உத்தியோகத்தர்களது தந்திரோபாய தலைமைத்துவம் ஆகிய ஆறு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. கலாநிதி தனேஸ்வரி ரவீந்திரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தொழில்நிர்வாகமாணிப் பட்டத்தைப் பெற்று பின்பு முகாமைத்துவத்துறையிலேயே விரிவுரையாளராக இணைந்து கொண்டார். 25 வருடங்களுக்கு மேலாக மனிதவள முகாமைத்துவத்தினைக் கற்பித்து வருகிறார்.

## 658.15 நிதி முகாமைத்துவம்

### 16346

**கலைச்சொற் களஞ்சியம்: வணிகம், முகாமைத்துவம், கணக்கீடு, நிதி (ஆங்கிலம்-தமிழ்).** வடிவேல் முருகன் தர்மதாசன், மகாதேவன் கருணாநிதி. கொழும்பு 9: இஸ்லாமிக் புக் ஹவுஸ் வெளியீடு (IBH Publications), 1ஆவது பதிப்பு, 2015. (அச்சக விபரம் தரப்படவில்லை).

iv, 381 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 22x15 சமீ.

இக்கலைச்சொற் களஞ்சியம், வணிகம், முகாமைத்துவம், கணக்கீடு, நிதி என்னும் துறைகளின் ஆங்கிலக் கலைச்சொற்களின் தமிழாக்கத்தைத் தரும் வகையில் வெளிவந்துள்ளது. வடிவேல் முருகன் தர்மதாசன், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தின் முதுநிலை விரிவுரையாளராகப் பல ஆண்டுக் காலமாக சேவை அனுபவம் கொண்டவராக விளங்குபவர். மகாதேவன் கருணாநிதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் முதுநிலை விரிவுரையாளராகச் செயற்பட்டு வருகின்றார். இருவரும் 20 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட துறைசார் கல்விப்புல அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு இக்கலைச்சொற்றொகுதியை தயாரித்துள்ளனர். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 209928).

# 700 கலைகள், நுண்கலைகள்

## 701 பொதுக்கலைகள், நுண்கலைகள்

### 16347

**கலை வரலாறு: முதலாவது இதழ் (தை-ஆனி 2020).** யோகலிங்கம் நிசாந்தன், ஸ்ரீபன் கிருபாலினி, தாமோதரம்பிள்ளை சனாதனன் (இதழாசிரியர்கள்). *யாழ்ப்பாணம்: கலை வட்டம், நுண்கலைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 2020. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(8), 96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ., ISSN: 2792-1433.*

காண்பியக் கலை, காண்பியப் பண்பாடு, மரபுரிமை என்பவற்றுக்கான ஆய்வேடு. இவ்விதழில் யாழ்ப்பாணத்து மணவறை அலங்காரங்களின் போக்கு மாற்றம் (திவானி கந்தசாமி), யாழ்ப்பாணத்தில் மரியாள் வழிபாடும் வடிவங்களும் (ஆதித்தன் ஜேஸ்மின் கார்மேலா, ஸ்ரீபன் கிருபாலினி), புத்தளத்தின் மரபுரிமை (கே.ஆர்.எப்.ஹிப்ரத்), மீயதார்த்தவாத முன்னோடிகள் (புவனேஸ்வரன் பிரசாந்), எச்.ஏ.கருணாரத்ன (இலங்கையின் நவீன அரூப ஓவிய முன்னோடியுடனான நேர்காணல்-ஹனுசா சோமசுந்தரம்) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இப்படைப்பாக்கங்கள் அனைத்தும் காண்பியக் கலை, காண்பியப் பண்பாடு, மரபுரிமை சார்ந்து புதிய வாசிப்புகளுக்கான தொடக்கப்புள்ளியாக அமைகின்றன.

### 16348

**கலை வரலாறு: இரண்டாவது இதழ் (ஆடி-மார்கழி 2020).** யோகலிங்கம் நிசாந்தன், ஸ்ரீபன் கிருபாலினி, தாமோதரம்பிள்ளை சனாதனன் (இதழாசிரியர்கள்). *யாழ்ப்பாணம்: கலை வட்டம், நுண்கலைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு, 2020. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(8), 98 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ., ISSN: 2792-1433.*

காண்பியக் கலை, காண்பியப் பண்பாடு, மரபுரிமை என்பவற்றுக்கான ஆய்வேடு. இவ்விதழில் அரசியல் முரண்பாட்டுக்குள்ளாகும் திருவள்ளுவர் உருவவியலைக் கட்டவிழ்த்தல் (பிரிந்தா குலசிங்கம்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பண்பாட்டு நுழைவாயிலும் தமிழ் அடையாளமும் (ருக்ஷனா வேலாயுதம்), பறாளைத் தேரினைக் கதைகளின் ஊடாகக் கட்டமைத்தல் (யோகலிங்கம் நிசாந்தன்), யாழ்ப்பாண சேமக்காலை சிற்ப வேலைப்பாடுகள் (யுகேந்திரன் சயந்தன்), மருதமுனை நெசவாளர்கள் (நேர்காணல் பிரவாகினி தர்மலிங்கம்) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

### 16349

**பண்பாட்டு மேம்பாட்டிற்கான கலைகள்: இருப்பும் எதிர்பார்ப்பும்: ஆய்வரங்கு கட்டுரைகளின் தொகுப்பு நூல்-2019**. தொகுப்பாசிரியர் குழு. யாழ்ப்பாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், 1ஆவது பதிப்பு, 2020. (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

xii, 88 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

2019ஆம் ஆண்டிற்கான வடமாகாணத்தின் பண்பாட்டுப் பெருவிழாவும் அதனோடிணைந்த ஆய்வரங்கமும் வவுனியா மாவட்டத்தில் வெகு சிறப்பாக நடந்தேறியது. இவ்விழாவின் முதல்நாள் காலை அமர்வாக இடம்பெற்ற "பண்பாட்டு மேம்பாட்டிற்கான கலைகள்: இருப்பும் எதிர்பார்ப்பும்" என்ற பிரதான ஆய்வுப் பொருளில் சமர்ப்பிக்கப்பட்ட ஒன்பது ஆய்வுக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. பண்பாட்டு மேம்பாட்டுக்கான கலைகள்: இருப்பும் எதிர்பார்ப்பும்- ஆக்கச் செயன்முறையும் சவால்களும் (வேல் ஆனந்தன்), கிராமிய வாழ்வில் நிலைபேற்றுக்கான நாட்டார் கலைகள்: மரபும் மாற்றமும்-மன்னார் மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு (மன்னார் அமுதன்), வவுனியா பிரதேச மாவட்ட கலாசாரப் பேரவைகளும் கலை இலக்கிய வளர்ச்சியும் (அகளங்கன்), கைவினைக் கலைகள்: வாழ்வியல் அடையாளமும் வணிக அழகியல் நோக்கும் (இராஜேஸ்வரன் இராஜேஸ்கண்ணன்), அடையாள உருவாக்கத்தில் கலை: அடங்காப்பற்று வன்னி-தொல்லியல் வழியான வெளிப்பாடுகள் (அருணா செல்லத்துரை), நவீன நாடகங்களில் மரபின் நீட்சியும் எதிர்கொள்ளப்படும் சவால்களும் (க.ரதிதரன்), தமிழர் வாழ்வில் தொல்கலை வடிவங்களின் மீட்டுருவாக்கத்தில் "பறை வாத்திய" மைய ஆய்வு (றஜீபன் தர்மினி), சமயச் சடங்குகளோடு இசைந்த கலைகள்: முல்லை மாவட்ட அம்மன் ஆலயங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு (சிவ.முகுந்தன்), கலைகளின் வளர்ச்சிக்கான தேவையும் மட்டுப்பாடுகளும் (கனகரத்தினம் மனோரஞ்சன்) ஆகிய தலைப்புகளில் இவ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 722 புராதன கட்டிடக்கலை

### 16350

**இந்து திருக்கோவிற் கலை.** சபா. உமாபதி சர்மா. யாழ்ப்பாணம்: ஞானரத்தினம், சிவன் கோவில், சித்தன்கேணி, 2ஆவது பதிப்பு, பெப்ரவரி 2009, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2008. (யாழ்ப்பாணம்: சரணியா ஓப்செட் பிரின்டர்ஸ், காசிப்பிள்ளை கட்டிடம், சங்கானை).

x, 100 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

இந்துக்கள் கலையைப் பேரின்ப சாதனமாகக் கொள்கின்றார்கள். இதனை இறையின்பம் தரும் மோட்ச சாதனமாக இறைமார்க்க ஊடகமாகப் போற்று கின்றனர். அத்தகைய கலைகளில் திருக்கோவில்களோடு இணைந்து காணப்படும் கட்டிட, சிற்ப, விக்கிரக, இசை, நடனக் கலைகள் பற்றியும் அவற்றின் சிறப்பியல்பு களும் மற்றும்அவை ஆலயங்களோடு கொண்டுள்ள தொடர்புகள் பற்றியும் அவை காலந்தோறும் பெற்ற வளர்ச்சி பற்றியும் இந்நூலில் 14 கட்டுரைகளாகத் தரப்பட்டுள்ளன. கலை பற்றிய அறிஞர்களது கருத்தும் இந்துக் கலையின் சிறப்பியல்புகளும், குப்தர் கால கட்டிடக் கலையின் சிறப்பம்சங்கள், தென்னாட்டில் இந்துக் கோயில்கள் தோற்றமும் வளர்ச்சியும், பல்லவர் கால கட்டிடக்கலை புலப்படுத்தும் திராவிடக் கட்டிடக் கலையின் ஆரம்ப நிலை, கட்டிடக் கலையின் உன்னத நிலையை வெளிப்படுத்தி நிற்கும் சோழர்கால ஆலயங்கள், நாயக்கர்கால கட்டிடப் பாணி, இந்து விக்கிரகவியலின் மூலகங்கள் பற்றிய சான்றாதாரங்கள், இந்துப் பண்பாட்டு மரபில் திருவுருவ வழிபாடும் வளர்ச்சியும், தென்னிந்திய திருக்கோயில்களை மையமாகக்கொண்டு இந்துப் பண்பாட்டை வளம்படுத்திய விக்கிரகக் கலை, காலம்தோறும் எழுச்சிபெற்ற சிற்ப வகைகளும் அதன் சிறப்பியல் புகளும், இறைவனை அடைவதற்குரிய சிறந்த சாதனம் இசை, இந்துக்கோயில்களில் நடனக் கலையின் வளர்ச்சி, இந்துப் பண்பாட்டை வளர்த்தெடுத்த ரிஷி குலத்தினர், ஈழத்தில் நாக வழிபாடு ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

### 16351

**காலனிய ஊர்காவற்றுறையின் கட்டடக் கலை.** பிரிந்தா குலசிங்கம். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

190 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-624-5881-18-5.

ஒரு துறைமுக நகருக்கான சிறப்பியல்புகளுடன் இலங்கையின் மிக முக்கிய துறைமுகமாக வரலாற்றில் பார்க்கப்படத்தக்க முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கும் ஊர்காவற்றுறை, காலனித்துவ காலப் பகுதியிலேயே ஒரு பிரதான நகரமாக்கப்பட்டது. கீழைத்தேய நாடுகளின் வளங்களைச் சுரண்டவும் வர்த்தக வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளவும் தமது மத, மொழி, கலை மற்றும் பல கூறுகளைத் தமக்கான அடையாளங்களாக முன்வைத்தனர். வட இலங்கையைக் கைப்பற்றலும், அதனைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருத்தலும் இத்தகைய தேவைப்பாடுகளின் அடிப்படையிலேயே நிகழ்ந்தது. யாழ்ப்பாண இராஜதானியும் அதன் வளப் பெறுபேறுகளும் சைவசமய உறுதிப்பாடும் காலனியவாதிகளை உறுத்தவே செய்திருந்தது. அவ்வாறு யாழ்ப்பாணத்தினைக் காவல் செய்யும் துறைமுக நகரமாக இருந்ததே ஊர்காவற்றுறை. யாழ்ப்பாணம் என்னும் ஊரையும் அதன் இராஜதானியையும் காவல் செய்யும் தந்திரோபாயமான அமைவிடத்தில் இத் தீவு அமைந்திருக்கின்றமை யாழ் குடாநாட்டினதும் இலங்கையினதும் வரலாற்றில் பல திருப்பங்களைக் கொண்டுவரக்கூடிய சாத்தியத்தையும் காட்டுகின்றது. இவ்வாய்வில் காலனித்துவக் காலத்தில் ஊர்காவற்றுறை நகரத்தின்

*கட்டிடக்கலை வளர்ச்சி எப்படி இருந்ததென்பதை இந்நூலாசிரியர் காலனிய நிர்வாக அமைப்புக் கட்டடங்கள் உற்பத்தி செய்யப்பட்ட முறை, கிறிஸ்தவ மத வருகை கட்டட வெளியை மாற்றியமைத்தல், காலனியாட்சியால் ஏற்படுத்தப்பட்ட சமூக மாற்றங்கள் கட்டட வெளியினை மாற்றுதல் ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் விளக்கியிருக்கிறார். பிரிந்தா குலசிங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையில் கலை வரலாற்றுப் பாடத்தில் 2018இல் இளங்கலைமாணிப் பட்டத்தைப் பெற்றவர். அதே பல்கலைக் கழகத்தின் நுண்கலைத் துறையில் கலை வரலாற்றியல் பிரிவில் தற்காலிக உதவி விரிவுரையாளராகவும் வருகைதரு விரிவுரையாளராகவும் 2019இலிருந்து பணியாற்றி வருகிறார்.*

## 730 சிற்பக்கலை

மேலும் பார்க்க:

வரலாற்றின் பேசுபொருளாகிய நல்லூரான் செம்மணி வளைவு. 16091

## 741.5 கருத்தோவியங்கள் (கார்ட்டூன்)

மேலும் பார்க்க:

ஏர்முனை: ஏரோவியம்: 2022ம் ஆண்டு விவசாயச் சஞ்சிகை. 16339

## 770 ஒளிப்படக்கலை

### 16352

**Through the Fire Zones: Photographs of Amarathaas in Sri Lanka's War Zones.** *அமரதாஸ். சுவிட்சர்லாந்து: வைட் விஷன் ஸ்ரூடியோ* (Wide Vision Studio), *1ஆவது பதிப்பு, மே 2022. (தமிழ்நாடு: அச்சக விபரம் தரப்படவில்லை).*

*400 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ஸ்டேர்லிங் பவுண்ட் 50.00, அளவு: 22*x*30.5 சமீ.,* ISBN: *978-3-033-08396-7.*

*முன்னாள் போராளியான அமரதாஸ், இலங்கையின் இறுதிப் போர்க்காலத்திலே, கிளிநொச்சியில் இயங்கிய ஊடக அறிவியற் கல்லூரியில் ஒளிப்பட ஊடகவியல் விரிவுரையாளராகப் பணயாற்றியவர். ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு 2009இல் அது முடிவடையும் வேளையில் பாதிப்புக்குள்ளான வன்னி மண்ணில் சுயாதீன ஊடகராகச் செயற்பட்ட இவர் செய்தி மதிப்பும் தொழில்நுட்பத் தரமும் கொண்டதும் போர்சார்ந்ததுமான பல நூற்றுக்கணக்கான ஒளிப்படங்களை உருவாக்கியிருந்தார். அவற்றில் நானூறுக்கும் மேற்பட்ட ஒளிப்படங்களை உள்ளடக்கியதாக இவ்வொளிப்படத் தொகுப்பு வெளிவந்துள்ளது. அனைத்தும் கறுப்பு-வெள்ளைப் படங்களாக இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே 1999 இல் "இயல்பினை அவாவுதல்: அமரதாஸ் கவிதைகள்" என்ற கவிதைத் தொகுதியையும், 2006இல் "வாழும் கணங்கள்: அமரதாஸ் ஒளிப்படங்கள்* (Living Moments: Photographs of Amarathaas)" *என்ற ஒளிப்படத் தொகுப்பினையும் வெளியிட்டுள்ள இவரது மூன்றாவது நூல் இதுவாகும்.*

## 780 இசைக்கலை

### 16353

**இசைப்பேழை (பாகம் 01): நாதம்-சுருதி-தாளம்.** கௌரி சந்திரன் ஐங்கரன். *யாழ்ப்பாணம்: திருமதி கௌரி சந்திரன் ஐங்கரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு, 2023. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*520 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ., ISBN: 978-1-7389808-2-6.*

*இசை பற்றிய ஒரு கவிதை, கல்வி-கலை, ஆயகலைகள், கலைகளின் தோற்றம், இசைக்கலை, புராதன காலத்தில் இசை (சிந்துவெளி, வேதகாலம், மௌரியர், சங்ககாலம், பல்லவர் காலம், பாண்டியர் காலம், சோழர் காலம், விஜயநாயக்கர் காலம்), பழந்தமிழ் இசை இலக்கண நூல்கள், இப்போதுள்ள இசைத்தமிழ் இலக்கியங்கள், வடமொழி இசை நூல்கள், இசை சம்பந்தமான முதுமொழிகள்-வைர வரிகள், இசை பற்றி பெரியோர்கள் கூறிய கருத்துகள், இசைப் பயிற்சியில் ஈடுபடுபவர்களின் மூளை மற்றும் இசையால் வளரும் அறிவுத்திறன் பற்றிய தகவல், சங்கீதம், சங்கீதம் பயில்வதன் நோக்கம், சுருதி, நாதம், ஸ்தாயி, ஸ்வரம், ஏழு ஸ்வரங்கள் தோன்றிய வரலாறு, ஏழு ஸ்வரங்களின் பெயர்க் காரணம், விவாதி ஸ்வரங்கள், கோமள-தீவிர பேதங்கள், வட்டப்பாலையில் 12 இராசிகளும் 12 நரம்புகளும், பிரக்ருதி ஸ்வரம், விக்ருதி ஸ்வரம், தாளதஷ பிராணன், 35 தாளங்களின் பெயர்களும் அவைகளின் நடைபேதங்களும், அப்பியாச வரிசைகள், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், கீதங்களும் அதன் பொருள்களும், அரும்பத விளக்கம், ஒரு ராகத்தின் பத்து லட்சணங்கள், இராக லட்சண விபரம், மனோதர்ம சங்கீதம், இசை வடிவங்களை மதிப்பீடு செய்தல், உருப்படி மதிப்புக் கட்டுரை, பாடகர்கள் தவிர்க்கவேண்டிய குணங்கள், இசை மண்டபங்களின் இலக்கணம் என இசைத்துறை சார்ந்த இன்னோரன்ன தகவல்களை 138 தலைப்புகளின் கீழ் இந்நூலில் ஆசிரியர் பதிவுசெய்திருக்கிறார்.*

### 16354

**இசைப்பேழை (பாகம் 02): நாதம்-சுருதி-தாளம்.** கௌரி சந்திரன் ஐங்கரன். *யாழ்ப்பாணம்: திருமதி கௌரி சந்திரன் ஐங்கரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு, 2023. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(4), 515 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ., ISBN: 978-1-7389808-3-3.*

*ஹிந்துஸ்தானி இசை, ஹிந்துஸ்தானி சங்கீத லிபி முறை, ஹிந்துஸ்தானி இசையில் இராகங்கள், ஹிந்துஸ்தானி இசைத் தாளங்கள், ஹிந்துஸ்தானியில் இசை உருப்படிகள், கர்நாடக சங்கீதத்தில் ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் செல்வாக்கு, ஐரோப்பிய இசை முறை நமது இசைமுறைக்கு வழங்கியுள்ள அம்சங்கள், சென்றவால்யூ (சதமதிப்பு), உருப்படி வகை, மேல்நாட்டு சங்கீதத்தில் இசைக் குறியீடுகள், ஸ்வரங்களின் காலப்பிரமாணம், கால அளவைக் காட்டும் குறியீடு,*

மேலைத்தேய இசைக்கும் கர்நாடக இசைக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகள், நாட்டார் பாடல்களின் கலாசாரப் பின்னணி, தொழிற் பாடல்கள், கிராமிய இசைப் பாடல்கள், கதாகாலட்சேபம், கூட்டு நிகழ்ச்சி, வரலாற்றில் புவியியலுக்கும் சங்கீதத்திற்கும் இடையே உள்ள தொடர்பு, இந்தியாவில் சங்கீதத்தின் வளர்ச்சி வரலாறு, நரம்புக் கருவி, யாழ் வகை, பண்டைக்கால நூல்களில் காணப்படும் யாழ் வகை, இசைத்துறை சார்ந்தோரின் வாழ்க்கை வரலாறுகள் என இசைத்துறை சார்ந்த இன்னோரன்ன தகவல்களை 97 தலைப்புகளின் கீழ் இந்நூலில் ஆசிரியர் பதிவுசெய்திருக்கிறார்.

## 16355

**இசையின் சமூகவியல்: ஆய்வுக்கட்டுரைகள்.** சுகன்யா அரவிந்தன். யாழ்ப்பாணம்: சுகன்யா அரவிந்தன், 1ஆவது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 672 B, காங்கேசன்துறை வீதி).

vii, 154 பக்கம், விலை: ரூபா 495., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-624-96308-0-2.

உலகின் அனைத்து சமூகங்களும் பல சமூகக் கூறுகளால் ஆக்கம் பெற்றவை. இந்த சமூகக் கூறுகள் பண்பாட்டுக்குப் பண்பாடு அவர்களது மரபுகளுக்கேற்ப மாற்றங்களைப் பெற்றிருப்பினும், அடிப்படையிலே சில தவிர்க்க முடியாதவாறு ஒவ்வொரு பண்பாட்டிலும் பொதுவானவையாக வரையறை செய்யப்படுகின்றன. சமயம், மொழி, நம்பிக்கை, பழக்கவழக்கம், சடங்குகள் என இந்த சமூகப் பண்பாட்டுக் கூறுகள் தொடரும். இவ்வாறுதான் இசையும் தவிர்க்கமுடியாத ஒரு பண்பாட்டுக் கூறாகவே ஒவ்வொரு பண்பாட்டிலும் கலந்திருக்கின்றது. இந்த இசை, தான் வழக்கிலிருக்கின்ற பண்பாட்டு ஏற்புடைமைக்கேற்ப சமூகத்திற்கு சமூகம் வடிவங்களிலும் அளிக்கை முறைகளிலும் மாற்றங்களைப் பெறுகின்றது. இந்த வகையில் சமூகவியல் தளத்திலே நின்று எழுதப்பட்ட 11 ஆய்வுக் கட்டுரைகள் இங்கு தொகுக்கப்பட்டிருக்கின்றன. இவை இசை எனும் பண்பாட்டுக் கூறு, இசையும் ஆளுமையும், சமகால உலகில் இசையின் சமூக இருப்பு, இசையினூடான பண்பாட்டு அடையாளம்: ஒரு பண்பாட்டு இசையியலாய்வு, இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டில் வில்லிசை-ஓர் சமூக இசையியல் பார்வை, ஆற்றுப்படை நூல்களில் இசைக் கருவிகள், திருமுறைகள் சுட்டும் இசைக் குறிப்புகள், சமூக மாற்றத்துக்கான இசை (மாயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்களது சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் இசையியலாய்வு, ஆலயங்களில் ஓதுவார் மரபு, தமிழ்ச் சமூக இயங்குநிலையில் பாணர்கள், கலையிலிருந்து தொழில் வடிவமாக இசைக் கலை ஆகிய பதினொரு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பல்வேறு சர்வதேச மாநாடுகளுக்காக வழங்கப்பட்ட ஆய்வுச் சுருக்கங்களை விரிவாக்கி இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

**16356**

**இசையும் ஆசிரியத்துவமும்.** சுகன்யா அரவிந்தன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1ஆவது பதிப்பு, 2020. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

xii, 112 பக்கம், ஒளிப்படம், விலை: ரூபா 460., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-685-165-6.

சங்கீதத்தின் மேன்மை, சங்கீத ஆசிரியர், இசை கற்பித்தல் பொறிமுறை, சங்கீதம் கற்பிப்பதன் நோக்கங்களும் முறைகளும், கற்பித்தல் துணைச் சாதனங்கள், பின்னிணைப்பு, சங்கீதக் கலை வளர்த்த வாக்கேயகாரர்கள் ஆகிய ஏழு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இசைத்துறையில் முதுநிலை விரிவுரையாளராகக் கடமையாற்றும் கலாநிதி சுகன்யா அரவிந்தன் சமூகவியல், கர்நாடக இசை ஆகிய இரு துறைகளிலும் யாழ்.பல்கலைக் கழகத்தில் சிறப்புப் பட்டம் பெற்றவர். (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 27258).

**16357**

**இலங்கைத் தமிழர் இசை வரலாறு: ஓர் அறிமுகம்.** சுகன்யா அரவிந்தன். யாழ்ப்பாணம்: கீதாஞ்சலி வெளியீடு, 1ஆவது பதிப்பு, 2022. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

viii, 87 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-624-5901-18-0.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இசைத் துறையில் முதுநிலை விரிவுரை யாளராகப் பணியாற்றுகின்ற கலாநிதி சுகன்யா அரவிந்தன், சமூகவியல், கர்நாடக இசை ஆகிய இரு துறைகளிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பட்டத்தைப் பெற்றவர். கர்நாடக இசையில் முனைவர் பட்டத்தை சென்னைப் பல்கலைக்கழகத்திலும், பரத நாட்டியத்துக்கான முது தத்துவமாணிக் கற்கை நெறியினை திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலும் பூர்த்திசெய்தவர். இந்நூ லில் இலங்கைத் தமிழரின் இசை வரலாற்றினை தமிழ்ப் பண்பாடும் இசையும், இலங்கைத் தமிழர் இசை வரலாறு, தேவரடியார் மரபு, இசை வேளாளர் மரபு, இசை வளர்த்த நாடக மரபு, புராணபடன மரபு, கதாகாலேட்சப மரபு, ஓதுவார் மரபு, நிறைவு ஆகிய இயல்களின் வழியாக விளக்கியிருக்கிறார்.

**16358**

**இறையும் இசையும்.** ஆறுமுகம் முருகேசு. கொழும்பு 6: திருமதி சிவசோதி அம்மா முருகேசு, 19, 6/1, ஈ.எஸ்.பெர்ணான்டோ மாவத்தை, வெள்ளவத்தை, 1ஆவது பதிப்பு, ஜுலை 2021. (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

xvi, 72 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ., ISBN: 978-624-98138-0-9.

இந்நூலில் அமரர் ஆறுமுகம் முருகேசு தான் வாழ்ந்த காலத்தில் (90களின் நடுப்பகுதிகளிலிருந்து) ஈழத்தில் தான் தரிசித்த, தன்னை ஈர்த்த ஈழத்துச் சிதம்பரம், நகுலேஸ்வரம், நயினை நாகபூசணி, தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி, மட்டுவில் பன்றித் தலைச்சி அம்பாள், பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள், நல்லூர்க் கந்தன், சந்நிதி முருகன், மாவைக் கந்தன் ஆகிய சைவாலயங்கள் பற்றியும், கலாநிதி மு.பஞ்சாபிகேசன், கலாநிதி என்.கே.பத்மநாதன், கலைமாமணி எஸ்.எஸ். சிதம்பரநாதன், லயஞான குபேரபூபதி வி.தட்சணாமூர்த்தி, லயஞான கலாநிதி என்.குமரகுரு, அளவையூர் கணேசரத்தினம், மிருதங்கபூபதி ஆ.சந்தானகிருஷ்ணன், டாக்டர் நித்தியஸ்ரீ மகாதேவன் ஆகிய சங்கீதக் கலைஞர்கள் மற்றும் தவில், நாதஸ்வரக் கலைஞர்களின் வித்துவச் சிறப்புகள், ஆடிவேல் விழா நாதஸ்வரம், கம்பன் கழக இசைவேள்வி, சிட்னியில் இசை நிகழ்வு, ஈழத்துச் சிதம்பரத்தில் கௌரவிப்பு, தவில் நாதஸ்வர வாத்தியங்கள், இதம் தரும் இசை ஆகிய தன்னைக் கவர்ந்த சங்கீத இசை நிகழ்வுகள் என்பன பற்றியும், தான் கல்வி கற்ற காரைநகர் இந்துக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு விழா குறித்தும் இவர் எழுதிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. கலைமாமணி ஆறுமுகம் முருகேசு (06.06.1937-04.05.2021) இலங்கை தபால் சேவையில் இணைந்து முதலாம் தர அஞ்சல் அதிபராக பணியாற்றி ஓய்வுபெற்றவர்.

## 16359

**ஏழிசை கீதமே: தமிழ்த் திரையிசைப் பாடல்கள் குறித்த பதிவுகள்.** *சி.விமலன். யாழ்ப்பாணம்: சின்னராஜா விமலன், உயில் வெளியீடு, திரவிய பவனம், மனோகரா, அல்வாய், 1ஆவது பதிப்பு, ஜனவரி 2015. (கரவெட்டி: தமிழ்ப் பூங்கா அச்சகம், பிரதான வீதி, நெல்லியடி).*

*128 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14.5 சமீ.,* ISBN: *978-955-44157-2-0.*

இது தமிழ்த்திரை இசைப்பாடல்கள் குறித்த பதிவுகளைக் கொண்ட கட்டுரை நூல். நூலாசிரியர் விமலன் வடமராட்சி அல்வாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கிளை நதியின் பிரவாகம் (2013), விசையுறு பந்தினைப் போல் (2014) ஆகியவற்றைத் தொடர்ந்து இவரது மூன்றாவது படைப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. ஈழத்துக் கலை இலக்கிய வெளியீடுகளில் இசை பற்றிய நுண்பார்வையுடன் நூல்கள் வெளிவருவது அரிது. அதிலும் சினிமாப் பாடல்களை, ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் இரசித்தாலும், அவை தீண்டத் தகாதவை, அவை இசை வகையே அல்ல என்று முழங்கும் சில படைப்பாளிகள் மத்தியில் சினிமாப் பாடல்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இந்நூல் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இது ஈழத்தில் தமிழ்த் திரை இசைப்பாடல்கள் குறித்த ஆய்வுகளுக்கான ஒரு முன்வரைவு எனலாம்.

16360
**ஏழு ஸ்வரங்கள்: பாகம் 1.** வாசஸ்பதி ரஜீந்திரன். யாழ்ப்பாணம்: சாரங்கம் இசை மன்றம், நல்லூர், 1ஆவது பதிப்பு, ஜுன் 2020. (யாழ்ப்பாணம்: சீ.கே.ஜே. பிரின்ட் கிராப்பிக்ஸ்).

(10), 141 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x14.5 சமீ.

இசைப் பாரம்பரியப் பின்புலம் கொண்டவரான திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையில் கற்றுத் தேர்ந்தவர். மேடைக் கச்சேரிகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் வாயிலாகத் தன் திறமையை வெளிக்காட்டி வருபவர். யாழ். நல்லூரில் "சாரங்கம் இசை மன்றம்" என்ற பெயரில் இசை வகுப்புகளை நடத்திவருபவர். செயன்முறை, அறிமுறை விடயங்களில் நிறைந்த அறிவைப்பெற்ற இவர் தனது அனுபவ ஞானத்தை மாணவர்களிடம் பகிர்ந்துகொள்ளும் வகையில் இரண்டு பாகங்களில் "ஏழு ஸ்வரங்கள்" என்ற நூலை வெளியிட்டுள்ளார். இந்நூல் முதலாவது பாகமாகும். இதில் சிறு குறிப்புகள், பிரக்ருதி விக்ருதி ஸ்வரங்கள், சப்தஸ்வரங்களின் விபரம், பன்னிரெண்டு ஸ்வரதான அட்டவணை, ஜனக இராகம், ஜன்னிய இராகப் பிரிவுகள், வர்ஜ இராகங்கள், வர்ஜ இராகங்களின் பிரிவுகள், வக்ர இராகங்கள், இராகங்கள் பற்றிய சுருக்க விளக்கம், நாட்டார் பாடலின் விளக்கம், லகுவின் ஜாதி பேதம், அப்பியாச வரிசைகளைக் கற்பதன் நோக்கமும் பயன்பாடும், உருப்படி இலட்சணம்-1, இசைக் குறியீடுகள், இராக லட்சணம், பன்னிரெண்டு ஸ்வரஸ்தானம், பதினாறு ஸ்வரப் பெயர்கள், சப்த தாளங்கள் 35 தாளங்களாகிய விபரம், உருப்படி இலட்சணம்-2, அரும்பத விளக்கம், வாக்கேயக்காரர் வரலாறு, ஈழத்து இசைக்கலைஞர், சாபு தாள வகைகள், 72 மேளகர்த்தா இராகங்களும் அவற்றின் அமைப்பும் ஆகிய பாடத் தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

16361
**ஏழு ஸ்வரங்கள்: பாகம் 2.** வாசஸ்பதி ரஜீந்திரன். யாழ்ப்பாணம்: சாரங்கம் இசை மன்றம், நல்லூர், 1ஆவது பதிப்பு, 2021. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டேர்ஸ், இல. 10, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

(12), 212 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 22x15 சமீ.

101 இராகங்களின் இலட்சணங்களை உள்ளடக்கிய இவ்விரண்டாம் பாகம், ஜனக இராகங்களின் இலட்சணம், உபாங்க இராகங்களின் இலட்சணம், பாஷாங்க இராகங்களின் இலட்சணம் ஆகிய மூன்று பாடத்தலைப்புகளின் கீழ் எழுதப்பட்டுள்ளது.

16362
**கலையிலிருந்து வாண்மை வடிவமாக இசைக் கலை: இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டினடியான பார்வை.** சுகன்யா அரவிந்தன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1ஆவது பதிப்பு, 2022. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

xii, 124 பக்கம், விலை: ரூபா 760., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-685-168-7.

இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டில் இசைக்கலை மரபுக் கூறுகள், இலங்கைக் கல்விப் புலத்தில் இசை: அறிமுகம், கி.பி. 19ஆம் நூற்றாண்டின் முற்பரப்பின் இலங்கைத் தமிழ்ச் சமூகமும் இசைக் கலையும், கர்நாடக இசை மேம்பாட்டுக்கு இலங்கை ஊடகத்துறை ஆற்றிய தொண்டு, இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டுப் பரம்பலில் இசை, நிறுவனப்படுத்தப்பட்ட கர்நாடக இசைக் கலை மரபும் வளர்ச்சியும், பாடசாலைப் பாரம்பரியமும் இசைக் கலை மரபுப் பரம்பலும், இலங்கை உயர் கல்விப் புலத்திலே கர்நாடக இசைக்கலை மரபு, ஆசிரியத்து வத்துக்கான இசைக் கல்வி, இசைக் கலைக்கான அரசின் அங்கீகாரமும் ஆதரவும், இலங்கை இந்திய கலையுறவுப் பாலம்- மீள்சுற்று ஆகிய 11 கட்டுரைகள் இந்நூ லில் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இசைத் துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுகின்ற கலாநிதி சுகன்யா அரவிந்தன், சமூகவியல், கர்நாடக இசை ஆகிய இரு துறைகளிலும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சிறப்புப் பட்டத்தைப் பெற்றவர். கர்நாடக இசையில் முனைவர் பட்டத்தை சென்னைப் பல்கலைக்கழகத்திலும், பரத நாட்டியத்துக்கான முது தத்துவமாணிக் கற்கைநெறியினை திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலும் பூர்த்திசெய்தவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 70226).

### 16363

**தமிழர் செவ்வியல் இசைப்பா வடிவங்கள்.** சுபா ஷாமினி கந்தசாமி, ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி (தொகுப்பாசிரியர்கள்). நீர்கொழும்பு: ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி, 1வது பதிப்பு, 2023. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

xiv, 293 பக்கம், விலை: ரூபா 2000., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-99393-0-1.

இந்நூலில் தமிழக, இலங்கை வாக்கேயக்காரர்கள் பற்றிய சிறு அறிமுக விளக்கங்களுடன் அவர்தம் செவ்வியல் இசைப்பா வடிவங்கள் தொகுக்கப் பட்டுள்ளன. இந்திய வாக்கேயக்காரர் வரிசையில் முத்துத் தாண்டவர் (1560-1640), ஊத்துக்காடு வெங்கட சுப்பையர் (1700-1765), அருணாசலக் கவிராயர் (1711-1779), கோபாலகிருஷ்ண பாரதியார் (1811-1881), ராஜாஜி (1878-1972), சுப்பிரமணிய பாரதியார் (1878-1972), பாபநாசம் சிவன் (1890-1973), சுத்தானந்த பாரதியார் (1897-1990), தண்டபாணி தேசிகர் (1908-1972), பெரியசாமித் தூரன் (1908-1987) ஆகியோர் பற்றிய குறிப்புகளுடன் அவர்களது பாடல்களும் தொகுக்கப் பட்டுள்ளன. அவ்வாறே இலங்கை வாக்கேயக்காரர் வரிசையில், யோகர் சுவாமிகள் (1872-1964), எப்.எக்ஸ்.சி.நடராசா (1911-1997), பண்டிதர் வி.சி.கந்தையா (1920-), பிரம்மஸ்ரீ ம.த.ந. வீரமணி ஐயர் (1931-2003), சில்லையூர் செல்வராசன் (1933-1995), சங்கீதபூஷணம் எல்.திலகநாயகம் போல் (1941-2009), சங்கீதபூஷணம் சி.முருகப்பா, சங்கீதபூஷணம் அ.இ.ஏரம்பமூர்த்தி, சங்கீதபூஷணம் தா.இராசலிங்கம்,

அருட்கவி சீ விநாசித்தம்பி ஆகியோர் பற்றிய குறிப்புகளுடன் அவர்களது பாடல்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

### 16364

**வெற்றிமுரசு பாடல்கள் (தமிழீழ எழுச்சிப் பாடல்கள்).** புதுவை அன்பன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: கொள்கை முன்னெடுப்புப் பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள், 1ஆவது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (முல்லைத்தீவு: அறிவு அமுது பொத்தகசாலை, புதுக்குடியிருப்பு).

16 பக்கம், விலை: ரூபா 15.00, அளவு: 18x12 சமீ.

புதுவை அன்பன் (இயற்பெயர் நா.செல்வம்) தொகுத்துள்ள தமிழீழ எழுச்சிப் பாடல்களின் தொகுப்பு. தமிழீழ இசைக்குழுவின் இசையமைப்பில் வெளியாகிப் பிரபல்யமான பாடல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இரத்தினம், தவபாலன், இன்பநாயகி, தவமலர், தேவன், விஜயன், நவம், கந்தையா, புதுவை அன்பன், தயாளன், குட்டிக்கண்ணன், பிரதீபன் ஆகியோர் பாடிய 11 பாடல்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

மேலும் பார்க்க:
இசையுடன் பாட அழகான தமிழ்ப் பாடல்கள். 16473
யாழ்ப்பாணம் இணுவில் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயரின் ஆக்கங்கள்-தொகுதி 1 16369

## 790 நிகழ்கலைகளும் பொழுதுபோக்குக் கலைகளும்

### 16365

**களிகம்பு: இலங்கை முஸ்லிம்களின் பாரம்பரிய ஆடற்கலை.** சிராஜ் மஷ்ஹூர், எம்.ஐ.நைஸார். திருக்கோணமலை: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம், மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (அக்கரைப்பற்று: மல்டி ஒப்செட் அச்சகம்).

200 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ., ISBN: 978-624-6135-02-7.

கிழக்கு மாகணத்திலுள்ள முஸ்லீம்களின் தனித்துவமான கலைகளாக பக்கீர் பைத், சீனடி, சிலம்படி, ஷைபுல்லாஹ் விளையாட்டு, ரபான் பைத், களிகம்பு ஆட்டம் போன்ற பல்வேறு விளையாட்டுக்கள் காணப்படுகின்றன. முஸ்லிம்களின் அருகிவரும் பாரம்பரிய கலை வடிவங்களில் ஒன்றான களிகம்பு பொல்லடி காணப்படுகின்றது. குறிப்பாக இறக்காமத்தின் பூர்வீக கலையம்சமாக களிகம்பு பொல்லடி ஆட்டம் காணப்படுகிறது. இந்நூல் களிகம்பு பற்றிய விரிவானதொரு ஆய்வாக அமைகின்றது. இதில் சிராஜ் மஷ்ஹூர் அவர்களின் முன்னுரையுடன், களிகம்பு: இலங்கை முஸ்லிம்களின் பாரம்பரிய ஆடற்கலை, களிகம்பாட்டத்தின் அக்கால நிலையும் தற்போதைய மாற்றங்களும், கிழக்கு மாகாண களிகம்பாட்டப் பாடல்கள், இறக்காமத்தூர் பண்பாட்டுப் பாடல்கள் ஆகிய தலைப்புகளின் கீழ் களிகம்பாட்டம் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

## 16366

**நாம்: முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம்: பொன்விழா சிறப்பு மலர் 1964-2014.** *செ.அன்புராசா அடிகள், தமிழ்நேசன் அடிகள் (தொகுப்பாசிரியர்கள்). மன்னார்: முத்தமிழ்க் கலா மன்றம், முரங்கன், 1ஆவது பதிப்பு, 2014. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).*

*98 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.*

*ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன் கூடிய இம்மலரின் ஆரம்பப் பக்கங்களைத் தொடர்ந்து, சமூக இயக்கமாக மாதோட்டத்து முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம் (கந்தையா ஸ்ரீகணேசன்), முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம் ஒரு வரலாற்று சமூகப் பார்வை (செ.அன்புராசா அடிகள், அ.ம.தி.), கலைக்கடலில் மூழ்கி முத்தெடுத்த முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் அரை நூற்றாண்டுக் கலைப்பயணத்தின் சில தடங்கள் (தமிழ்நேசன் அடிகள்), கலைப்பயணத்தில் வழிநடந்த கலைஞர்கள் (செ.றோஸ்மேரி), கலைப் புரட்சியால் புத்துலகம் படைக்கும் கலை மன்றம் (செ.எலிசபெத்), எங்கள் கலாமன்ற நிறுவனர் (ம.ஒஸ்மன் சாள்ஸ்), முத்தமிழ்க் கலாமன்றத்தில் எனது ஆரம்பகால நிகழ்வுப் பதிவுகள் சில (செ.மாசிலாமணி), எங்கள் பல்கலைக்கழகம் (செ.ஆனந்தன்), உடன் பயணித்த வருடன் ஒரு நேர்காணல் (நிக்சன் கயல்விழி), எமது கலையுலக வாழ்வுக்கு களம் அமைத்த முருங்கள் முத்தமிழ்க் மன்றம் (பிலோமினம்மா சகாயதாசன், சோதிமலர் மகேஸ்வரன்), என் பார்வையில் முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் (அ.ஜூட் புனிதராஜா), எதிர்காலத்தில் முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் (செல்வி பி.றோசலின்), நாடகக் கலையின் வளர்ச்சியில் நிறுவனங்களின் பங்களிப்பு: முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றத்தினூடாக ஒரு பார்வை (யோ.யோண்சன் ராஜ்குமார்), புலம்பெயர் பிரான்ஸ் மண்ணில் ஒரு நேர்காணல் (செ.ஆனந்தன்) ஆகிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன.*

மேலும் பார்க்க:
ஆற்றுகைக் கலைகளுக்கான ஆய்வு முறையியல். 16004

## 791 நாட்டியக் கலை

## 16367

**அழகியற் கல்வி அறிமுகம்: கனவாகிப்போன இசைத் தமிழ்-ஆடல் தமிழ் இலக்கு.** *வேல் ஆனந்தன். கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச்சங்க அமுத விழா வெளியீடு, கொழும்புத் தமிழ்ச் சங்கம், இல. 7, சங்கம் ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2022. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*90 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x16 சமீ.*

*கொழும்புத் தமிழ்ச் சங்கம் தனது 80ஆவது ஆண்டு நிறைவில் அமுதவிழாவை யொட்டி ஈழத்தின் மூத்த ஆடல் ஆசான் கலைஞர் வேல் ஆனந்தன் ஆக்கித் தந்த "கனவாகிப்போன இசைத் தமிழ்-ஆடல் தமிழ் இலக்கு" என்னும் நூலை வெளியிட்டுள்ளனர். ஆடற்கலைஞர் வேல் ஆனந்தன் 12.02.1941 அன்று*

*நெடுந்தீவில் பிறந்தவர். "ஈழத்து ஆடல்" என்ற எண்ணக்கருவுடனான செயலமர்வு களையும் பயிற்சிப் பட்டறைகளையும் முன்நின்று வழிநடத்திய ஒருவர்.*

## 16368

**பரத நாட்டியம்.** *பாரதி சிவயோகநாதன். மொரட்டுவை: திருமதி பாரதி சிவயோக நாதன், எஸ். 2/6, சொய்சாபுர தொடர்மாடி, 3ஆவது பதிப்பு, ஜனவரி 2020, 1ஆவது பதிப்பு, மே 2017, 2வது பதிப்பு, ஜுலை 2018. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).*

*100 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 25.5x16.5 சமீ.*

*தரம்-1 முதல் தரம்-3 வரை வட இலங்கைச் சங்கீத சபைப் பாடத்திட்டத்திற்கு அமைவாக பந்தனை நல்லூர் பாணியில் எழுதப்பட்ட நூல். நூலாசிரியை கொழும்பு கல்வி வலயத்தில் ஆசிரிய ஆலோசகராகப் பணிபுரிகிறார். மூன்று தரங்களுக்குமான பாடநெறிகள் செய்முறை, அறிமுறை ஆகிய இரு பிரிவுகளின் கீழ் தனித்தனியாக விளக்கப்பட்டுள்ளன.*

# 791.1 நாட்டிய நாடகங்கள்

## 16369

**யாழ்ப்பாணம் இணுவில் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயரின் ஆக்கங்கள்-தொகுதி 1.** *மா.த.ந. வீரமணி ஐயர் (மூலம்), ப.சிவானந்த சர்மா, சுசிலாதேவி வீரமணி ஐயர், சு.ஸ்ரீகுமரன் -இயல்வாணன், துஷ்யந்தி சுகுணன், ரஜனி நரேந்திரா (பதிப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், 1ஆவது பதிப்பு, 2021. (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).*

xxii, *1086 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x19 சமீ.,* ISBN: *978-624-5911-07-3.*

*பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயரவர்கள் சென்னை அடையாறு கலாஷேத்ரா நாட்டியக் கல்லூரியில் நடனக் கலையைப் பயின்றவர். ஸ்ரீமதி ருக்மணிதேவி அருண்டேலைக் குருவாகக் கொண்டு வித்துவான் பட்டத்தை நாட்டியத்துறையிலும் பெற்றவர். 300இற்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்களை இயற்றியவர். இவர் இயற்றிய கீர்த்தனைகள், ஊஞ்சற் பாடல்கள், நாட்டிய நாடகங்கள், கட்டுரைகள், வில்லிசைகள், பாடசாலைக் கீதங்கள், கலை மன்றக் கீதங்கள், திருப்பள்ளியெழுச்சி பிரபந்தங்கள், குறவஞ்சி என்று மிக நீண்ட பட்டிலாகக் கொண்டது. இவரது படைப்புக்களில் இன்று காணக்கிடைக்கும் ஆக்கங்களைத் தொகுக்கும் முயற்சியின் முதற்கட்டமாக இத்தொகுப்பில் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயரின் 51 நாட்டிய நாடகங்களும், 61 திருவூஞ்சற் பாக்களும் இடம்பெற்றுள்ளன.*

## 792 அரங்கியல், நாடகக்கலை

### 16370

**ஆற்றுகை 8-நாடக அரங்கியலுக்கான இதழ்: ஏப்ரல்-செப்டெம்பர் 1997**. ஆசிரியர் குழு. யாழ்ப்பாணம்: நாடகப் பயிலகம், திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 1997. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*70 பக்கம், விலை: ரூபா 30.00, அளவு: 21.5x14.5 சமீ.*

திருமறைக் கலாமன்றத்தினரின் நாடக அரங்கவியல் காலாண்டு இதழ். இவ்விதழில், இனி வரும் காலங்களில் நாம் (ஆசிரியர் குழு), அரங்க நடவடிக்கையில் புதிய பரிமாணத்தை நோக்கி-மணல்வெளி அரங்கு (தே.தேவானந்), மைக்கல் செக்கோவ் (இ.ஜெயரஞ்சினி), உயிரினங்களின் நிகழ்த்துக் கலையை கனவு காண்கின்றோம் (வேலு சரவணன்), யாழ்ப்பாண கத்தோலிக்க நாட்டுக்கூத்து மரபு (யோ.ஜோன்சன் ராஜ்குமார்), நூல் நுகர்வு (சந்திரன் நிலவன்), பாறையும் கசிவும்-சிறுவர் நாடகம் (ஜீ.கெனத்), நாராய் நாராய் நாடகப் பயணம்-அனுபவக் குறிப்பு (வை.சிவஜோதி), நிகழ்வும் பதிவும் (கி.செல்மர் எமில்), "ஈடியஸ் மன்னன்"-நாடகம் (ஜீ.வதனன்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

### 16371

**ஆற்றுகை 8-நாடக அரங்கியலுக்கான இதழ்: களம் 7, காட்சி 8, ஆனி 1999-பங்குனி 2000**. ஆசிரியர் குழு. யாழ்ப்பாணம்: நாடகப் பயிலகம், திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, 1ஆவது பதிப்பு, மார்ச் 2000. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).

*66 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.*

திருமறைக் கலாமன்றத்தினரின் நாடக அரங்கவியல் காலாண்டு இதழ், நாட்டுக் கூத்து சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. இவ்விதழில், மகாபாரதத்துக்கான தெருக்கூத்து அரங்கு (வெங்கட் சுவாமிநாதன்), மன்னார் மாதோட்டக் கூத்து பயில்முறை ஓர் அறிமுகம் (எஸ்.ஏ.உதயன்), நொண்டி நாடகம் (காரை சுந்தரம் பிள்ளை), வட்டுக்கோட்டை கூத்து மரபும் அதன் தோற்றுவாய்க்கான சமூக பின்புலமும் (ச.தில்லை நடேசன்), கடவுளுக்கு கூத்தாடுகிறோம்- நேர்காணல் (பா.இரகுவரன்), நிகழ்வும் பதிவும் (T.கண்ணன்), ஒரு திகிலூட்டும் அரங்கியல் அனுபவம் (அல்லி), விமர்சனம்-வேள்வித் தீ (அரங்கநேசன்) ஆகிய படைப் பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

### 16372

**ஆற்றுகை 9-நாடக அரங்கியலுக்கான இதழ்: களம் 7, காட்சி 9, ஜுலை-செப்டெம்பர் 2001**. ஆசிரியர் குழு. யாழ்ப்பாணம்: நாடகப் பயிலகம், திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2001. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).

*66 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.*

திருமறைக் கலாமன்றத்தினரின் நாடக அரங்கவியல் காலாண்டு இதழ். ஆசிரியர் குழுவில் யோ.யோண்சன் ராஜ்குமார், கி.செல்மர் எமில், தை.கண்ணன் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். இவ்விதழில், தன்னைத் தன்னால் அறியும் அரங்கு (க.ரதீதரன்), யாழ்ப்பாணக் கத்தோலிக்க நாட்டுக்கூத்து மரபு -4 (யோ.ஜோன்சன் ராஜ்குமார்), நினைவுகளாகிப் போன கரவெட்டி நற்குணம் (பா.ரகுவரன்), சர்வதேச அரங்கை எதிர்கொள்ளும் சுதேசிய அரங்குகள் (சி.ஜெய்சங்கர்), சுமைத் தணிவுப் பணியில் மரத்தடி அரங்கு (தே.தேவானந்), Theatre and Community in the UK (James Thompson), நவீன அரங்கில் பீற்றர் ப்றூக் (நீ.மரியசேவியர் அடிகள்), நூல் நுகர்வு (அரங்கநேசன்), முகில்களின் நடுவே-நாடகம் (சி.ஜெய்சங்கர்) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

## 16373

**ஆற்றுகை 10-நாடக அரங்கியலுக்கான இதழ்: களம் 8, காட்சி 10, டிசம்பர் 2002.** ஆசிரியர் குழு. யாழ்ப்பாணம்: நாடகப் பயிலகம், திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2002. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், பிரதான வீதி).

72 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

திருமறைக் கலாமன்றத்தினரின் நாடக அரங்கவியல் காலாண்டு இதழ். ஆசிரியர் குழுவில் யோ.யோண்சன் ராஜ்குமார், கி.செல்மர் எமில், வை.வைதேகி ஆகியோர் பணியாற்றியுள்ளனர். இவ்விதழில், மட்டக்களப்பில் நாடக அரங்கு (சி.மௌனகுரு), நாடகக் கலை ஒரு தனிக்கலை வடிவம் (கந்தையா ஸ்ரீகந்தவேள்), கலைத்தூது கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாருடன் ஓர் நேர்காணல் (கி.செல்மர் எமில்), ஈழத்தின் வடமோடி-தென்மோடி பிரிப்பும் கருத்துகளும்: ஒரு மறுபரிசீலனை (ச.தில்லை நடேசன்), மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆங்கில நாடகத்துறையின் அண்மைக்கால வளர்ச்சி (தி.லலினி, அ.ர.பிரான்சீஸ்), வாழ்வனுபவமூடாக ஒரு கலைப்பார்வை (ஜி.பி.பேர்மினஸ்), ஈழத்து அரங்கப்போக்குகள் ஓர் அகஞ்சார் நோக்கு (அரங்கக் கூத்தன்), புதிய நூல் வரவுகள், பட்டங்களுக்கு ஏங்காத பண்பாளன் (சி.மௌனகுரு), 2002இல் ஈழத்து அரங்கில் ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

## 16374

**ஆற்றுகை 11-நாடக அரங்கியலுக்கான இதழ்: களம் 9, காட்சி 11, செப்டெம்பர் 2003.** ஆசிரியர் குழு. யாழ்ப்பாணம்: நாடகப் பயிலகம், திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2003. (யாழ்ப்பாணம்: ஹரிஹணன் பிரிண்டர்ஸ், 424, காங்கேசன்துறை வீதி).

72 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 40.00, அளவு: 20.5x14.5 சமீ.

திருமறைக் கலாமன்றத்தினரின் நாடக அரங்கவியல் காலாண்டு இதழ். ஆசிரியர் குழுவில் யோ.யோண்சன் ராஜ்குமார், கி.செல்மர் எமில், வை.வைதேகி ஆகியோர் பணியாற்றியுள்ளனர். இவ்விதழில், மலையகத்தின் நிகழ்கலைகள் (அந்தனி

ஜீவா), சடங்கு, நடனம், நாடகம் (கந்தையா ஸ்ரீகணேசன்), எம்.வி.கிருஷ்ணாழ்வாரின் நாடகப் புலமைசார் பார்வை (பா.இரகுவரன்), சிங்கள நாடகக் கலைஞர் ஜெரோம் டி சில்வாவுடன் ஒரு நேர்காணல் (ஆசிரியர் குழு), ஆற்றுகையும் திருப்தியும் (பூமிகா), யாழ்ப்பாணக் கத்தோலிக்க நாட்டுக்கூத்து மரபு -5 (யோ.ஜோன்சன் ராஜ்குமார்), காவலூரரின் அரங்கியல் தளத்தில் செயற்பட்ட சில அனுபவக் குறிப்புகள் (வளநாடன் கிருஸ்ரி கனகரட்டினம்), புதிய நூல் வரவுகள், கூத்து-அமைப்பும், அழகியலும், அதன் அரசியலும் (சி.ஜெயசங்கர்), ஈழத்து தமிழ் அரங்க வரலாற்றில் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை ஒரு நோக்கு (கந்தையா ஸ்ரீகந்தவேள்), நாட்டுக் கூத்தின் எதிர்காலமும், தேசிய அரங்கை நோக்கிய தேடலும் (யோ.ஜோன்சன் ராஜ்குமார்) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

## 16375

**ஆற்றுகை 12-நாடக அரங்கியலுக்கான இதழ்: களம் 10, காட்சி 12, டிசம்பர் 2004.** ஆசிரியர் குழு. யாழ்ப்பாணம்: நாடகப் பயிலகம், திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2004. (யாழ்ப்பாணம்: ஜெயந்த் சென்டர், 28, மாட்டின் வீதி).

80 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 40.00, அளவு: 20.5x14.5 சமீ.

திருமறைக் கலாமன்றத்தினரின் நாடக அரங்கவியல் காலாண்டு இதழ். ஆசிரியர் குழுவில் யோ.யோண்சன் ராஜ்குமார், கி.செல்மர் எமில், வை.வைதேகி ஆகியோர் பணியாற்றியுள்ளனர். இவ்விதழில், கூத்தரங்கின் புத்துருவாக்கம்: சுதேச நவீன வாதத்தின் திறவுகோல் (சி.ஜெயசங்கர்), நாட்டுக்கூத்து மறுமலர்ச்சி: சில அவதானிப்புகள் (முல்லைமணி), யாழ்ப்பாணக் கத்தோலிக்க நாட்டுக்கூத்து மரபு-06, மலையகத் தமிழ்ப் பண்பாட்டில் அர்ச்சுனன் தபசு (அ.ஜெகன்தாசன்), அண்ணாவியார் செபமாலை குழந்தையுடன் ஒரு நேர்காணல் (ஆசிரியர் குழு), கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை: அஞ்சலியாக ஒரு குறிப்பு, (ஜீ.பீ.பேர்மினஸ்), நூல் நுகர்வு (அரங்கநேசன்), அரங்கியலில் புதிய நூல் வரவுகள்), புரிசை கண்ணப்ப தம்பிரானிடம் பெற்ற கற்கை நெறிமுறைகள் (கே.ஏ.குணசேகரன்), கால மாற்றமும் அரங்கத் தேவையும் (பிரான்சீஸ் அமல்ராஜ்), திருமறைக் கலாமன்றம் நடத்திய ஈழத்துக் கூத்து விழா: ஒரு பார்வை (தார்மீகி), நாட்டுக்கூத்தின் எதிர்காலமும் தேசிய அரங்கை நோக்கிய தேடலும் (யோ.யோண்சன் ராஜ்குமார்), அண்மைக்கால அரங்கப் பதிவுகள் (கி.செல்மர் எமில்) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

## 16376

**ஆற்றுகை 13-நாடக அரங்கியலுக்கான இதழ்: களம் 11, காட்சி 13, டிசம்பர் 2005.** ஆசிரியர் குழு. யாழ்ப்பாணம்: நாடகப் பயிலகம், திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2005. (யாழ்ப்பாணம்: ஜெயந்த் சென்டர், 28, மாட்டின் வீதி).

92 பக்கம், விலை: ரூபா 100.00, அளவு: 20.5x14.5 சமீ.

திருமறைக் கலாமன்றத்தினரின் நாடக அரங்கவியல் காலாண்டு இதழ். ஆசிரியர் குழுவில் யோ.யோண்சன் ராஜ்குமார், கி.செல்மர் எமில், வை.வைதேகி ஆகியோர்

பணியாற்றியுள்ளனர். இவ்விதழில், இசை நாடகங்கள் எதிர்கொள்கின்ற சவால்கள் (த.சிவகுமாரன்), நெறியாழ்கையும் பாணியும் (சே.இராமானுஜம்), ஒளியமைப்புக் கலை (தி.பாலசரவணன்), யாழ்ப்பாணக் கத்தோலிக்க நாட்டுக்கூத்து மரபு-07 (யோ.ஜோன்சன் ராஜ்குமார்), நாட்டுப்புறக் கலையில் நிகழ்த்துமுறை உருவாக்கம் (வ.ஆறுமுகம்), நாடகக் கலையை அறிவோம் (எஸ்.பி.ஸ்ரீனிவாசன்), நூல் நுகர்வு: நாடக வழக்கு (இ.ஜெயகாந்தன்), அரங்கியலில் புதிய நூல் வரவுகள், விமர்சனம்-கொல் ஈனுங் கொற்றம் (யூ.பி.அ.றஞ்ஜித்குமார்), இரண்டு அஞ்சலிக் குறிப்புகள் (பாக்கியநாதன் அகிலன்), கூத்தின் புத்தாக்கத்திற்கான தேவையும் கொல் ஈனுங் கொற்றம் தயாரிப்பு அனுபவமும் (யோ.ஜோன்சன் ராஜ்குமார்), ஈழத்துத் தமிழ் நாடக அரங்கில் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை (அரங்கநேசன்), திருமறைக் கலாமன்றம் நடத்திய இசை நாடக விழா- 89 (தார்மீகி), அண்மைக்கால அரங்கப் பதிவுகள் (கி.செல்மர் எமில்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

## 16377

**ஆற்றுகை 14-நாடக அரங்கியலுக்கான இதழ்: களம் 11, காட்சி 14, ஜுன் 2006.** *ஆசிரியர் குழு. யாழ்ப்பாணம்: நாடகப் பயிலகம், திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, 1ஆவது பதிப்பு, ஜுன் 2006. (யாழ்ப்பாணம்: ஜெயந்த் சென்டர், 28, மாட்டின் வீதி).*

*92 பக்கம், விலை: ரூபா 60.00, அளவு: 20x14.5 சமீ.*

*திருமறைக் கலாமன்றத்தினரின் நாடக அரங்கவியல் காலாண்டு இதழ். ஆசிரியர் குழுவில் யோ.யோண்சன் ராஜ்குமார், கி.செல்மர் எமில், வை.வைதேகி ஆகியோர் பணியாற்றியுள்ளனர். இவ்விதழில், இந்தியத்தனம் நிரம்பிய நவீன நாடகங்கள் (அ.ராமசாமி), அரங்க விமர்சனக் கலை: ஒரு நோக்கு (கந்தையா ஸ்ரீகந்தவேள்), மெய்மை நாடகங்கள் பண்பும் பயனும் (நா.சுந்தரலிங்கம்), பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களில் நாடகம் (ம.ந.கடம்பேஸ்வரன்), யாழ்ப்பாணக் கத்தோலிக்க நாட்டுக்கூத்து மரபு-08 (யோ.ஜோன்சன் ராஜ்குமார்), விமர்சனம்-ஜீவப் பிரயத்தனம் (வெளி ரங்கராஜன்), விமர்சனம்-நீ செய்த நாடகமே (கந்தையா ஸ்ரீகணேசன்), மாற்று ஆற்றலுள்ளோரை அரங்கினூடாக ஆற்றுப்படுத்தும் சுனேரா பவுண்டேஷன் (இ.மோகனராஜ்), அஞ்சலிக் குறிப்பு: அண்ணாவியார் செல்லப்பா நடராசா (காப்பியதாசன்), நூல் நுகர்வு: பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம் (ஜே.ஜெயகாந்தன்), அரங்கியலில் புதிய நூல் வரவுகள், கலைவேந்தன் ம.தைரிய நாதனுடன் ஒரு நேர்காணல் (ஆசிரியர் குழு), இசை நாடகக் கலைஞர் பாலாமணி அம்மையார் (மு.அம்பிகாபதி), ஸ்பெஷல் நாடக மரபில் நடிப்பு (யோ. றுஜந்தா), அண்மைக்கால அரங்கப் பதிவுகள் (கி.செல்மர் எமில்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன.*

## 16378

**ஆற்றுகை 17-நாடக அரங்கியலுக்கான இதழ்: காட்சி 17, டிசம்பர் 2009.** ஆசிரியர் குழு. யாழ்ப்பாணம்: நாடகப் பயிலகம், திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2009. (யாழ்ப்பாணம்: ஜெயந்த் சென்டர், 28, மாட்டின் வீதி).

*112 பக்கம், விலை: ரூபா 100.00, அளவு: 21x15 சமீ., ISSN: 1800-2730.*

திருமறைக் கலாமன்றத்தினரின் நாடக அரங்கவியல் காலாண்டு இதழ். ஆசிரியர் குழுவில் யோ.யோண்சன் ராஜ்குமார், கி.செல்மர் எமில், வை.வைதேகி ஆகியோர் பணியாற்றியுள்ளனர். இவ்விதழில், அபிஞ்ஞான சாகுந்தலம்: நாடக பாடம் ஒரு பார்வை (வைதேகி செல்மர் எமில்), யாழ்ப்பாணக் கத்தோலிக்க நாட்டுக்கூத்து மரபு-11 (யோ.ஜோன்சன் ராஜ்குமார்), "நாம் அனைவரும் அரங்கே"-ஔகுஸ்தோ போல் நினைவாக (நீ.மரிய சேவியர் அடிகள்), விமர்சனம்: யாழ்.பல்கலைக்கழகத்தின் ஏழு நாடகங்களின் ஆற்றுகைகள்-சில கருத்துக்கள் (பா.இரகுபரன்), விமர்சனம்: காலத்தின் சோகத்திற்கு ஒத்தடம் கொடுத்த கல்வாரி யாகம் (அ.விமலேந்திரகுமார்), முருகையனின் நாடகவாக்க முயற்சிகள் (சத்திரிகா தர்மரட்ணம்), அரங்கியலில் புதிய நூல் வரவுகள், "நாடகத்துறையில் இன்னும் நான் மாணவனே" -நாடகக் கலைஞர் ஜீ.பீ.பேர்மினஸ் உடன் ஒரு நேர்காணல் (ஆசிரியர் குழுவினர்), அரங்கப் பதிவுகள் (கி.செல்மர் எமில்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

## 16379

**ஆற்றுகை 18-நாடக அரங்கியலுக்கான இதழ்: காட்சி 18, டிசம்பர் 2010.** ஆசிரியர் குழு. யாழ்ப்பாணம்: நாடகப் பயிலகம், திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2010. (யாழ்ப்பாணம்: ஜெயந்த் சென்டர், 28, மாட்டின் வீதி).

*108 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 100.00, அளவு: 20.5x14.5 சமீ., ISSN: 1800-2730.*

திருமறைக் கலாமன்றத்தினரின் நாடக அரங்கவியல் காலாண்டு இதழ். ஆசிரியர் குழுவில் யோ.யோண்சன் ராஜ்குமார், கி.செல்மர் எமில், செ.எ.வைதேகி ஆகியோர் பணியாற்றியுள்ளனர். இவ்விதழில், உளவளத் துணையாக நிற்கும் தமிழ் பாரம்பரிய ஆற்றுகை முறைமைகள் (இரா.ஜெகநாதன்), பரீட்சார்த்த அரங்கு-ஓர் அறிமுகம் (எஸ்.ரி.அருள்குமரன்), கிறிஸ்தவ நாட்டார் வழக்காறுகளில் "உடக்குப்பாஸ்" (கலையார்வன்), குழந்தை ம.சண்முகலிங்கத்தின் மொழிபெயர்ப்பு நாடக பாடங்கள்-ஒரு பார்வை (எஸ்.ரி.குமரன்), வட இலங்கை நாட்டார் அரங்கின் காண்பிய அம்சங்கள் (ஐ.கதிர்காமினி), பாடிப்பறந்த குயில் (மாதனையூர் ந.சிவசுப்பிரமணியம் அவர்களின் இசை நாடக மற்றும் கலைத்துறை பங்களிப்பு-ஒரு நோக்கு (பா.இரகுவரன்), அபிஞ்ஞான சாகுந்தலம்: நாடக பாடம் ஒரு பார்வை (வைதேகி செல்மர் எமில்), நாட்டார் கலைகளும் வடிவங்களும் (காப்பியதாசன்), அரங்கியலில் புதிய நூல் வரவுகள், ஈழத்துக் கத்தோலிக்க நாடக

மரபு-ஓர் அறிமுகம் (யோ.யோண்சன் ராஜ்குமார்), அரங்கப் பதிவுகள் (கி.செல்மர் எமில்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

### 16380

**ஈழத்துத் தமிழ் நாடக நிறுவனங்கள்.** பா.நிரோஷன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2022. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xii, 96 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 700., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-659-656-4.

நாடகத்தை இயங்கு நிலையில் பேணி வருவதில் நாடக நிறுவனங்களின் பங்கு இன்றியமையாதது. அதுவும் துரிதமாகப் பெருகிவரும் தொழில்நுட்ப சாதனங்களின் வளர்ச்சியும் சினிமாவும் சின்னத்திரையும் மேடை நாடகங்களின் இயங்கியலில் தளம்பலை ஏற்படுத்தியுள்ள சூழலில், மேடை நாடகங்களின் இருப்பியலை உயிர்ப்புடன் முன்னெடுத்துச் செல்வதில் நாடக நிறுவனங்களின் பங்கும் பணியும் இன்றியமையாதது. இந்நிலையில் ஈழத்து நாடக நிறுவனங்கள் பற்றிய தகவல்கள் ஒரே நூலில் வெளிவருவது பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், நாடகத்துறைசார் ஆய்வாளர்கள் அனைவருக்கும் பயனுள்ளதாய் அமையும். இந்நூலில் திருமறைக் கலாமன்றம், நடிகர் ஒன்றியம், நாடக அரங்கக் கல்லூரி, அவைக்காற்றுக்கழகம், அரங்க செயற்பாட்டுக் குழு, மக்கள் கலை பண்பாட்டு அரங்கு, சரணி கலைக்கழகம், புதிய பண்பாட்டு அமைப்பு, செயற்திறன் அரங்க இயக்கம், மக்கள் களரி, வவுனியா அரங்காலயா மற்றும் சுதந்திர அரங்கு, ஆடுகளம் ஆற்றுகைக் குழு, விருட்சம் அரங்க படைப்பாளிகள், செம்முகம் ஆற்றுகைக் குழு, கட்டியம் ஆற்றுகைக் குழு, களரி அரங்கக் கலை நிதியம், அரங்க ஆய்வுகூடம், புத்தாக்க அரங்க இயக்கம், கலாலயம் குழு, யாழ் களரி, சங்கு கலைக் கழகம், யாழ்ப்பாணம் அரங்கக் கலைக்கழகம், ஆரோகணா அரங்கக் கல்லூரி, நாடகப் பள்ளி, ஏனைய சிறு குழுக்கள் ஆகிய 25 இயல்களில் ஈழத்துத் தமிழ் நாடக நிறுவனங்கள் பற்றிய தகவல்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட பாக்கியநாதன் நிரோஷன் மட்டக்களப்புத் தேசிய கல்விக் கல்லூரியில் நாடகத் துறையில் சிறப்பு சித்தியோடு பட்டம் பெற்றவர். கொழும்பில் நாடகப் பள்ளியொன்றினை நிறுவி பாரம்பரிய, நவீன கலைவடிவங்களைத் தொடர்ச்சியாக மேடையேற்றிவருகின்றார். கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் நாடகத்துறை ஆசிரியராகவும் பணிபுரிந்து வருகிறார்.

### 16381

**உள்ளக வெளியில் அரங்கு: நாடக அரங்கக் கட்டுரைகள்.** கதிரேசு ரதிதரன் (மூலம்), நாகேந்திரம் நவராஜ் (பதிப்பாசிரியர்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2022. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

xii, 184 பக்கம், விலை: ரூபா 1000., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-5881-52-9.

உள்ளக வெளியில் ஒரு நாடக விழா, ஒரு புத்தகத்திலிருந்து பல புத்தகங்களை நோக்கி, கலைஞர் யோகேந்திரநாதனின் கலை ஆளுமைகள், கலைகளால் புரிந்துணர்ந்து அனுபவித்தல்: கலைஞர் பரக்கிரமநிரியெல்ல பற்றிய குறிப்புக்கள், சண்முகலிங்கம்: ஒரு சமூகத்தின் சாட்சி, ஆற்றுகையில் மெய்ப்பாடுகளின் வெளிப்பாடுகள்: பம்மல் சம்பந்த முதலியாரின் அரங்கியலை அடிப்படையாகக் கொண்ட புலனுசாவல், தமிழ்ப் பாரம்பரிய அரங்கில் புதிய முயற்சி: கண்டனன் சீதையை, காட்சியைச் சொல்லாகவும் சொல்லைக் காட்சியாகவும் ஆக்குதல், நிறம் மாறும் உயிருள்ள சிற்பம், மக்கள் களரியின் நாடகங்கள், கூட்டுமே அரங்கின் அனுபவங்கள், நாடகவழி உள ஆற்றுப்படுத்தல், உருவத்திற்கு உணர்வு கொடுத்தல்- இசை நாடகக் கலைஞன் செல்வம் மீதான ஒரு பார்வை, சிறுவர் அரங்கை அணுகுதல், ஒரு நடிகனின் பெருங்குழப்பம் ஆற்றுகையில் தெளிவாகிறது, தன்னைத் தன்னால் அறியும் அரங்கு, ஒரு பயங்கரமே அழகியல் நுகர்வாக - வேள்வித் தீ: ஆற்றுகை விமர்சனம், பேட்டோல்ட் பிரெச்ட்டின் உணர்ச்சி விரோத அரங்கு, குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடகங்களில் ஈழத்து தமிழ் அரங்கின் தோற்றம், அரங்கப் பிரமையை உடைத்த இடுக்கண் வருங்கால், ஒரு பாவையின் வீடு-1879ம் ஆண்டு 1998ம் ஆண்டில் ஓர் அபிப்பிராயம், அரங்க விமர்சனம் பற்றி ஓர் அரங்கியல் விமர்சனம், கலையின் எதிர்நிலைக் கருத்தியல் பிரச்சினைகளின் தோற்றுவாய்களில் கலைகளது இருப்பளவு ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 23 கட்டுரைகளின் தொகுப்பு. கலாநிதி கதிரேசு ரதிதரன் யாழ். பல்கலைக்கழகத்தில் நுண்கலைத்துறையில் "நாடகமும் அரங்கியலும்" பாடநெறி சார்ந்த மூத்த விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார். இந்நூல் 230ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

## 16382

**நஞ்சு மனிதர்: பனுவலும் ஆற்றுகையும்.** சு.சந்திரகுமார். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

xiv, 90 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 600., அளவு: 22.5x15.5 சமீ., ISBN: 978-624-6164-02-7.

இப்பனுவல் மனிதர்கள் இயற்கை நேயத்துடனும் நற்பண்புடனும் வாழ்வதன் அவசியத்தை மையப்படுத்தியது. இரசாயன வளமாக்கியைப் பயன்படுத்தி செய்யப்படும் விவசாயம் மனிதரையும் சுற்றுச் சூழலையும் நாளுக்கு நாள் பாதிக்கிறது. இரசாயன பசளைகளையும் கிருமி நாசினிகளையும் தயாரிப்போர், விவசாயிகளை ஆசைகாட்டி அதற்குள் இழுத்து அடிமையாக்கும் நிலையும், அதற்கு அடிமையாகிய விவசாயி ஒரு கட்டத்தில் தனது மகளின் உயிரையே இழக்க நேரிடுவதும், பின்னர் விவசாயியே சுயமாக இயற்கை விவசாயத்தில் ஈடுபடுவதும் சுட்டப்படுகிறது. "உணவே மருந்தாக" என்பதன் தத்துவம்

உணர்த்தப்படுகிறது. அத்துடன் இந்நாடகப் பனுவல் உருவான முறை, ஆற்றுகை நிலையில் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் பயிற்சியளிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட முறை, அதற்கான காட்சியமைப்பு, இசையின் இணைவு, வேட உடை ஒப்பனை செய்யப்பட்ட விதம், வீதி நாடக நுட்பங்கள் ஆகியனவும் இந்நூலில் வெளிப்படு கின்றது. மேலும் இதில் எழுத்துப் பனுவலாக்க முறைமையும், வீதிநாடக ஆற்றுகையும், உருவாக்க முறைமையும் தரப்பட்டுள்ளது. பன்னூலாசிரியரான சுந்தரலிங்கம் சந்திரகுமார், நாடகமும் அரங்கியலும் சிறப்புக் கலைமாணி, முதுகலைமாணி, முதுதத்துவமாணி பட்டங்களைக் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பெற்றவர். அங்கு நுண்கலைத்துறையின் தலைவராகப் பணியாற்றுகின்றார்.

## 16383

**நாடகப் பள்ளியின் அரங்கியல்: உரையாடல்.** பாக்கியநாதன் நிரோஷன். கொழும்பு: நாடகப் பள்ளி வெளியீடு, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

xii, *128 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5*x*14.5 சமீ.*, ISBN: *978-955-624-5881-12-3.*

நாடகப் பள்ளி வெளியிடுகின்ற ஈழத்தின் மூத்த அரங்கியல் கலைஞர்களின் அனுபவங்களைப் பதிவு செய்கின்ற நூலாக்கம் இது. இந்நூலின் மேலட்டையில் "அரங்க ஆளுமைகள் நால்வர்: நாடகப் பள்ளி நடத்திய மெய்நிகர் கருத்தரங்க அனுபவப் பகிர்வு" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் நால்வராக க.பாலேந்திரா, மாவை. மு.நித்தியானந்தன், இளைய பத்மநாதன், அருட்கலாநிதி நீ.மரியசேவியர் ஆகியோரை அடையாளப்படுத்தியுள்ளார். மேலும் அ.தாசீசியஸ், க.பாலேந்திரா, மாவை. மு.நித்தியானந்தன், இளைய பத்மநாதன், சி.மௌனகுரு உள்ளிட்ட பல ஆளுமைகள் இக்கருத்தரங்கில் பங்கேற்றிருந்தனர். காத்திரமான தமிழ் நாடகங்களை மேடையேற்றுவதற்காகவும் அரங்கியல் செயற்பாடுகள் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் அனைத்து அரங்கியலாளர்களுக்கும் சென்றடைய வேண்டும், அரங்கியல் ஆவணங்கள் பேணப்படவேண்டும் போன்ற உயர்ந்த நோக்கங்களின் அடிப்படையில், "கல்வியுடன் கலைப்பணி" எனும் மகுட வாக்கியத்துடன் "நாடகப்பள்ளி" (School of theatre) கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் பாக்கியநாதன் நிரோஷனால் 18.10.2016 அன்று கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. நாடகப் பணியாற்றிய தமிழ் நாடக ஆளுமை களை ஆவணப்படுத்தி, "ஈழத்து தமிழ் நாடக ஆளுமைகள்" எனும் நூலும், நாடகப்பள்ளி நடத்திய சர்வதேச அரங்கியல் கருத்தரங்க உரையாடலும் தொகுக்கப்பட்டு இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

## 16384

**பாலேந்திராவின் அரங்கக் கட்டுரைகள்.** க.பாலேந்திரா. கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு 2023. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xxii, 87 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 650., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-6164-40-9.

"மேடைப் பிரச்சினைகள்" (ஆரோக்கியமான திசையில் நாடகம் வளர, நாடகமும் பார்வையாளர்களும், நிகழ்த்திக் காட்டுதல் தான் நாடகம், நாடகத்தில் வார்த்தைகள், வானொலி நாடகங்களும் மேடை நாடகங்களும், திரைப்படமும் மேடை நாடகமும், தொடர்ச்சியான நாடக இயக்கம் தேவை, நாடகப் பயிற்சிக் கூடங்கள் தேவை, தமிழ் நாடகத் துறையில் இருட்டடிப்பு முயற்சிகள்), "நாடகச் சர்ச்சைகள்" (மொழிபெயர்ப்பு நாடகங்கள், புதிய தலைமுறை பூச்சியம் தானா?), "பாலேந்திரா தமிழுக்கு அறிமுகப்படுத்திய சில பிறமொழி இந்திய நாடகாசிரியர்கள்" (ஹிந்தி நாடகாசிரியர் மோகன் ராகேஷ், வங்க நாடகாசிரியர் பாதல் சர்க்கார்-ஓர் அறிமுகம், இந்திய நாடக வரலாற்றில் பாதல் சர்க்கார், கன்னட நாடகாசிரியர் கிரீஸ் கர்னாட்), "புலம்பெயர் நாடக அரங்கு: வளர்ச்சியும் பிரச்சினைகளும்" (தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழக அனுபவங்களின் பின்னணியில் ஒரு பரிசீலனை, லண்டனில் தமிழ் கலாசாரச் சூழல், லண்டனில் தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகத்தின் முதலாவது நிகழ்ச்சி) ஆகிய நான்கு பிரிவுகளுக்குள் 18 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

## 16385

**மக்கள் களரி.** ரங்க மனுப்பிரிய (சிங்கள மூலம்), விண்மணி (தமிழாக்கம்). கோட்டே: ஜனகர்லிய வெளியீட்டகம், 238 A, ஸ்ரீஜயவர்த்தனபுர, 1ஆவது பதிப்பு, 2021. (பத்தரமுல்ல: நெப்டியூன் பப்ளிக்கேஷன்ஸ், 302, பஹலவெல வீதி, பெலவத்தை).

xxvii, 242 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ., ISBN: 978-624-5991-02-0.

மக்கள் களரி செயலாற்றுகை தரக்கணிப்பீடு தொடர்பான பகுப்பாய்வு ரீதியான கற்கை இது. மேம்போக்காக இந்நூல் மக்கள் களரி என்ற நாடக அமைப்பு ஆற்றிய பணிகளின் வரலாறு என்று தோன்றினாலும் ஆழமாக நோக்குமிடத்து இது மக்கள் களரி என்னும் சமூக இயக்கத்தின் வரலாற்றினூடாக இலங்கையின் கலை, இலக்கியம், அரசியல், பொருளாதாரம், சமூகம், வரலாறு, நாடகம், நடிப்பு போன்ற இன்னோரன்ன துறைகள் குறித்து ஆய்வுக்குட்படுத்தியுள்ள ஒரு வரலாற்றாவணமாகும். மக்கள் களரியின் அகநிலை நோக்கான இனங்களுக்கிடையிலேயான சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டினை இந்நூல் உரத்து ஒலிக்கின்றது. இலங்கை நாடக மற்றும் நடிப்புக் கலை, நடைமுறை நாடகக் கலை, மக்கள் களரி நடிப்புக் களம், மக்கள் களரியும் இனக்குழுமப் பிரச்சினைகளும், மக்கள் களரி அன்று முதல் இன்று வரை, மக்கள் களரி நாடகத் தயாரிப்பு, மக்கள் களரி மக்கள் சங்கமமாக, மக்கள் களரி உறுப்பினர்கள்ஆகிய எட்டு அத்தியாயங்களில்

இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பிற்சேர்க்கைகளாக உசாத்துணை நூல்கள், மக்கள் களரி ஒரு சாத்தியமான இருப்பாக: மக்கள் களரி தொடர்பான நிகழ்வியல் கற்கை, வெண்கட்டி வட்டம்: மேடை நிகழ்வியல் மற்றும் இனக்குழுமம் பிரச்சினை, மக்கள் களரி பயணங்கள் பற்றிய வரவு செலவு அறிக்கை, உருவப் படங்கள் பட்டியல் ஆகியன இடம்பெற்றுள்ளன.

## 16386

**மெய்ப்பாடு: அரங்கச் சஞ்சிகை 2008/2009.** த.சந்திரா (இதழாசிரியர்). யாழ்ப்பாணம்: வெறுவெளி அரங்கக் குழு, நாடகமும் அரங்கக் கலைகளும், நுண்கலைத்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு, மார்கழி 2009. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 424, காங்கேசன்துறை வீதி).

125 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 24.5x18 சமீ.

"மெய்ப்பாடு" அரங்கவியல்துறைக்கான சஞ்சிகையின் முதலாவது இதழ் 28.12.2009 அன்று யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறையினரால் வெளியிடப்பட்டது. இவ்விதழில் மெய்யும் பொய்யாகி விடுகின்றபோது (குழந்தை ம.சண்முகலிங்கம்), யாழ்ப்பாண நாடக மேடை (எம்.எஸ்.திருவிளங்கம்), பருத்தித்துறையின் நாட்டைக் கூத்து (உருத்திரன் சுமலதா), அபத்த நாடகமும் ஈழத்து அரங்கும் (பொ.கீதா), பாலேந்திராவின் அரங்கச் செயற்பாடுகள் (ச.நிதர்சன்), ஆற்றுகைக் கலைகள் தொடர்பாக அறிந்துகொள்ள வேண்டிய சட்டங்கள் (த.சந்திரா), ஈழத்து நவீன அரங்கும் ஏ.சீ.தாசீசியஸின் நெறியாள்கை முறையும் (தி.தர்மலிங்கம்), கூட்டும அரங்கின் அனுபவங்கள் (க.ரதிதரன்), சாகுந்தலம்-நெறியாளரின் அனுபவங்கள் (நி.கரன்), பாதல் சர்காரின் மூன்றாவது அரங்கு (ப.ரவிசங்கர், க.ரமணன்), நவீன தமிழ் அரங்கும் பம்மல் சம்மந்த முதலியாரும் (பொ.சிவராஜசிவம்), செக்கோவ் என்ற நாடகாசிரியர் (த.சந்திரா), மேற்கத்தேய அரங்கவியலாளர் பேட்டோல் பிரெச்ட்டும் அவரது அரங்க நுட்பங்களும் (சு.தமயந்தி), நவீன நாடக நெறியாளர் அன்ரனின் ஆட்டுவாட் (க.ரமணன்), குறட்டோவ்ஸ்பியின் எளிமை அரங்கில் நடிகன் (த.திரேஜா, பொ.சிவராஜசிவம்), ஒகஸ்தாபோலின் ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கு (எஸ்.ரி.குமரன்), செவ்விளக்கு ஆற்றுகை நடிகரது அனுபவங்கள் (தி.தர்மலிங்கம், எஸ்.ரி.அருள்குமரன், எஸ்.ரி.குமரன்), பதிவுகள் (உருத்திரன் சுமலதா) ஆகிய அரங்கியல் சார்ந்த ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும் பார்க்க:

ஆற்றுகைக் கலைகளுக்கான ஆய்வு முறையியல். 16004

ஈழத்தின் அரங்க அரசியல்: பேராசிரியர் சி.மௌனகுருவை முன்வைத்து. 16978

ஈழம் அரங்கு-மௌனகுரு (கட்டுரைகளும் நேர்காணல்களும்). 16980

## 793 திரைப்படக்கலை

### 16387

**கதை நேரம் கதைகள்: திரைக் கதைகள் (பாகம் 2).** பாலு மகேந்திரா. தமிழ்நாடு: வம்சி புக்ஸ், 19, D.M.சாரோன், திருவண்ணாமலை-1, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2010. (சென்னை: மணி ஆப்செட்).

232 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-80545-34-9.

தமிழகத்தில் தமிழ்த் திரைப்படத்துறையில் நன்கறியப்பட்ட ஈழத்தவரான பாலு மகேந்திரா, தமிழ்ச் சிறுகதைகளை சினிமாவுக்குள் கொண்டுவரும் நோக்கில் "கதைநேரம்" தொலைக்காட்சித் தொடரில் 20-25 நிமிடங்களுக்குள் நச்சென்று அழுத்தமான குறும்படங்களாகச் செய்யக்கூடிய 52 சிறுகதைகளைத் தேர்ந்தெடுத்து, வாரம் ஒரு கதையாக தொலைக்காட்சித் தொடராக ஒளிபரப்பி வந்தார். அத்தொடரில் இருந்து தேர்ந்த சில கதைகளை 2008 ஜனவரியில் "கதை நேரம் கதைகள்" என்ற தலைப்பில் முதற் பாகமாக வெளியிட்டிருந்தார். இதன் இரண்டாம் பாகமே இந்நூலாகும். இதில் சுஜாதாவின் "தாய்", மாலனின் "தப்புக்கணக்கு", சிவசங்கரியின் "கடைசியில்", வாஸந்தியின் "நம்பிக்கை", எஸ்.ஷங்கரநாராயணனின் "நிர்மலமான வானில் நட்சத்திரங்கள்", சூரியனின் "கன்னத்தில் அறைந்தாலும்" ஆகிய ஆறு சிறுகதைகளும், அவற்றுக்கான திரைக்கதை பிரதிகளும் தரப்பட்டுள்ளன.

### 16388

**தமிழ்த் திரையுலகு: பிரதான போக்குகளும் மாற்று முயற்சிகளும்.** அத்தனாஸ் யேசுராசா. யாழ்ப்பாணம்: தனிநாயகம் தமிழ் மன்றம், புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி, கொழும்புத்துறை, 1ஆவது பதிப்பு, மே 2003. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).

18+(10) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை,அளவு: 21x15 சமீ.

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நினைவுப்பேருரையின் ஏழாவது தொடர் 08.05.2003 அன்று கொழும்புத்துறை, புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரியில் நிகழ்த்தப்பட்டது. அவ்வுரையின் எழுத்துப் பிரதி இது. நுழைவாயில், தமிழ்த் திரையுலகு: பிரதான போக்குகளும் மாற்று முயற்சிகளும், Tamil Cinema: Main Trends and Efforts to Reform, தவத்திரு சேவியர் தனிநாயகம் அடிகள் (எ.செ.கி. மரியதாஸ்), இதுவரை இடம்பெற்ற நினைவுப் பேருரைகள் (ச.யேசுதாசன்), நன்றி நவிலல் (சகோ.ச.யேசுதாசன்), பேருரை சிறப்புற வாழ்த்துகிறோம் உங்களுக்கு அரியதோர் அழைப்பு, ஏழாவது நினைவுப் பேருரை, திரு.அத்தனாஸ் யேசுராசா அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் சில ஆகிய விடயங்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

## 16389

**திரைக்கண்: சில படங்கள் சில பார்வைகள்.** எஸ்.கிருஷ்ணமூர்த்தி. கிளிநொச்சி: மகிழ் பதிப்பகம், 754, கனகராசா வீதி, திருநகர் வடக்கு, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2022. (அச்சக விபரம் தரப்படவில்லை).

76 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x14 சமீ.

அவுஸ்திரேலியா விக்ரோரியா மாநிலத்தில் மெல்பன் நகரில் வதியும் எஸ். கிருஷ்ணமூர்த்தி, யாழ்ப்பாணம், இடைக்காடு கிராமத்தில் பிறந்தவர். சிறுகதை, கட்டுரை, சினிமா விமர்சனம், பத்தி எழுத்துக்கள் என அவ்வப்போது எழுதிவருபவர். "உதயம்" (ஆங்கில-தமிழ் ) இருமொழிப் பத்திரிகையில் கிருஷ்ணமூர்த்தி தான் பார்த்த சினிமாக்கள் பற்றிய விமர்சனங்களை எழுதிவந்தார். அவுஸ்திரேலியாவி லிருந்து நொயல் நடேசன், லெ.முருகபூபதி ஆகியோரால் "உதயம்" பத்திரிகை சிலகாலம் வெளியிடப்பட்டுவந்தது. 2009 வரை அப்பத்திரிகையில் எழுதப்பட்ட திரைப்பட விமர்சனங்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. பள்ளிக்கூடம், வீராப்பு, வெயில், பொக்கிஷம், வெள்ளித்திரை, உன்னாலே உன்னாலே, கற்றது தமிழ், ராமேஸ்வரம், சிவாஜி, நான் அவனில்லை-நான் அவன் இல்லை, அம்மு வாகிய நான், உளியின் ஓசை, மொழி, ஆனந்த தாண்டவம், யாவரும் நலம், நாடோடிகள், கன்னத்தில் முத்தமிட்டால், அலை பாயுதே, காஞ்சிவரம் ஆகிய திரைப்படங்கள் தொடர்பான விமர்சனக் கட்டுரைகள் இவை. ஏற்கெனவே "மறுவளம்", "நோ பால்" ஆகிய இரு நூல்களை வெளியிட்டுள்ளார்.

## 16390

**நடிகர் திலகம் சிவாஜியும் தமிழ் சினிமாவும்.** வீணைமைந்தன் (இயற்பெயர்: கே.ரி.சண்முகராஜா). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1ஆவது பதிப்பு, 2022. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

388 பக்கம், ஒளிப்படங்கள், விலை: இந்திய ரூபா 300.00, அளவு: 18.5x12.5 சமீ.

1987 முதல் கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் வீணைமைந்தன் தாயகத்தில் வாழ்ந்தபோதே எழுத்துப் பணியில் ஈடுபட்டவர். கனடாவிலும் தொடர்ந்து தன் எழுத்துக்களால் தனக்கென ஒரு வாசகர் வட்டத்தை கொண்டிருக்கிறார். கனடாவில் "உதயன்" வார இதழில் தொடராக எழுதிவந்த "சிவாஜி கணேசனும் தமிழ் சினிமாவும்" என்ற கட்டுரைத்தொடர் இங்கு நூலுருவாகியுள்ளது.

## 16391

**மற்றும் பலர் நடித்த.** இ.சு.முரளிதரன். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, மாசி 2022. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

iv, 64 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-624-5881-39-0.

தன்னைக் கவர்ந்த பன்மொழித் திரைப்படங்கள் குறித்து எழுதப்பட்ட குறுங் கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூலை ஆக்கியிருக்கிறார். தீம்புனல், ஜீவநதி, சஞ்சீவி, தினகரன், தெரிதல் ஆகிய இதழ்களில் இவை அவ்வப்போது

வெளிவந்திருந்தன. ஜல்லிக்கட்டு, Blind, Driving Licence, Montage, Hotel Rwanda, Old Boy, Ikiru, In the fade, Perfume, Miracle in cell No Seven, Cold Eyes, களை, பிரியாணி, இருபத்திநான்கு, புத்திகெட்ட மனிதரெல்லாம், அன்ரொய்ட் குஞ்சப்பன் வேர்ஷன் 5.25, மண்டேலா, பாங்கு, வெடி மணியமும் இடியன் துவக்கும், த கிரேட் இன்டியன் கிச்சன், சார்பட்டா பரம்பரை, தொன்னூற்றாறு ஆகிய திரைப்படங்கள் பற்றிய பார்வைகளுடன், "என் பார்வையில் மலையாள சினிமா", "ஃபஹத் பாசிலின் அற்புதமான அளிக்கையால் மிளிரும் திரைப்படங்கள் ஐந்து" ஆகிய சற்றே விரிவான இரண்டு கட்டுரைகளையும் உள்ளடக்கியதாக இந்நூல் வெளிவந்துள்ளது. முரளிதரனின் ஒவ்வொரு ஆக்கமும் இன்னும் கொஞ்சம் விரிவாக எழுதியிருக்கலாமே என்ற உணர்வினையே வாசகரிடம் தோற்றுவிக்கின்றது. 219 ஆவது ஜீவநதி வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.

மேலும் பார்க்க:
சொல்லப்படாத சினிமா. 16984

## 796 உடற்பயிற்சி, விளையாட்டுகள்

### 16392

**உதைபந்தாட்டப் பிரச்சினைகள்.** சி.மே.மாட்டீன். யாழ்ப்பாணம்: தமிழ்த் தாய் வெளியீடு, 664, மருத்துவமனை வீதி, 1ஆவது பதிப்பு, மாசி 1994. (யாழ்ப்பாணம்: மாறன் பதிப்பகம், 664, மருத்துவமனை வீதி).

vi, 124 பக்கம், விலை: ரூபா 60.00, அளவு: 21.5x15 சமீ.

இந்நூலில் உதைபந்தாட்ட வரலாறு, உதைபந்தாட்டச் சட்டங்களின் நோக்கம், பிரச்சினை ஒன்று, பிரச்சினை இரண்டு, பிரச்சினை மூன்று, பிரச்சினை நான்கு, ஆட்டக்காரருக்கு அறிவுரை, பார்வையாளருக்கு அறிவுரை, உலகப் புகழ்பெற்ற ஆட்டக்காரர் சிலர், உலகக் கிண்ணப் போட்டி, உங்களுக்குத் தெரியுமா? ஆகிய 11 அத்தியாயங்கள் இடம்பெற்றுள்ளன. நூலின் இறுதிப் பகுதியில் பிற்சேர்க்கை, உசாத்துணை நூல்கள், கலைச்சொற்கள் ஆகியன இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்தவர். பயிற்றப்பட்ட தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். 1940இல் ஜுபிலி கழகத்திற்காக உதைபந்தாட்டத்தை ஆடத் தொடங்கியதிலிருந்து 1992வரை யாழ்ப்பாணம், கம்பளை, நுவரெலியா ஆகிய பிரதேசங்களின் முன்னணிக் கழகங்களில் இணைந்து ஆடியுள்ளார். பயிற்சியாளராக 45 ஆண்டுகள் பணியாற்றியதால் பெற்றிருந்த அனுபவங்களின் பயனாக இந்நூலை இவர் எழுதியிருக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27087).

### 16393

**கிராமிய விளையாட்டுக்கள்.** ரஜிதா அரிச்சந்திரன். யாழ்ப்பாணம்: ரஜிதா அரிச்சந்திரன், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).

28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x15 சமீ.

யாழ்ப்பாண பிரதேச கலாசார உத்தியோகத்தராகப் பணியாற்றும் இந்நூலாசிரியர் கிராமிய மட்டத்தில் விளையாடப்படும் 25 விளையாட்டுக்களைப் பற்றிய சுருக்கமான தகவல்களை தொகுத்துத் தந்துள்ளார். கிட்டிப்புள், ஆடு-புலி ஆட்டம், எவடம் எவடம், கண்ணாமூச்சி, தாயம், பாண்டியாட்டம், கபடி, ஒப்பு, குலைகுலையாய் முந்திரிக்காய், எலியும் பூனையும், போர்த்தேங்காய், தாச்சி, முட்டி உடைத்தல், தலையணை சண்டை, பேணிப்பந்து, பட்டம் ஏற்றல், கயிறு இழுத்தல், அடிச்சு பிடித்தல், யானைக்கு கண் வைத்தல், எட்டுக்கோடு, படகுப் போட்டி, போளை எறிதல், எல்லே, பலம் பார்த்தல், கரப்பந்து ஆகிய விளையாட்டுக்கள் பற்றி இந்நூல் விளக்கமளிக்கின்றது.

## 16394

**வலைப்பந்தாட்டம்.** பவானி அகிலன். யாழ்ப்பாணம்: திடல் வெளியீடு, 71/2, கச்சேரி நல்லூர் வீதி, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2008. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 424, காங்கேசன்துறை வீதி).

x, 84 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 24x18 சமீ., ISBN: 978-955-51422-1-21.

வலைப்பந்து ஏழு பேர்கள் அடங்கிய இரு அணிகளுக்கிடையே ஆடப்படும் ஒரு பந்து விளையாட்டு ஆகும். இது பெண்கள் கூடைப்பந்து விளையாட்டின் தொடக்கநிலை பதிப்புகளிலிருந்து உருவானதால் கூடைப்பந்து விளையாட்டுடன் பல ஒற்றுமைகளைக் கொண்டுள்ளது. இங்கிலாந்தில் 1890களில் இது ஒரு முறையான விளையாட்டாக மேம்படுத்தப்பட்டது. அங்கிருந்து பல நாடுகளுக்குப் பரவியது. பொதுநலவாய நாடுகளில் பரவலாக விளையாடப்படும் இந்த விளையாட்டினை பெரும்பாலும் பெண்களே விளையாடுகின்றனர். இந்நூலில் வலைப்பந்தாட்ட வரலாறு, வலைப்பந்தாட்டத்தை விளையாடுதல், ஆட்டங்களும் ஆட்டத்திறன் விருத்தியும், பந்தை அனுப்புதல் அல்லது கைமாற்றுதல், பாத அசைவு, பேற்றுக்கெய்தல், தாக்கி ஆடுதல், தடுத்து ஆடுதல், வெளியை உருவாக்கு தலும் தந்திரோபாயங்களும் ஆகிய ஒன்பது அத்தியாயங்களில் வலைபந்தாட்டம் பற்றிய விளக்கமளிக்கப்பட்டுள்ளது. பின்னிணைப்பாக மத்தியஸ்தர்களுக்கான சைகைகள், கலைச் சொற்கள் என்பன தரப்பட்டுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 26866).

# 800 இலக்கியம்

## 801 சிறுவர் இலக்கியங்கள்

### 16395

**இளம் வளர்ந்தோர் இலக்கியம்.** *சபா ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை,* U.G.50, People's Park, *1ஆவது பதிப்பு, 2016. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48இ* Gaswork Street*).*

vi, *106 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22*x*15 சமீ.,* ISBN: *978-955-685-043-7.*

*சமகால கலை இலக்கியத் துறையில் "இளம் வளர்ந்தோர் இலக்கியம்" அதிக முக்கியத்துவம் வாய்ந்த துறையாகும். ஆனால் இந்தத் துறை குறித்து தமிழில் அடிப்படையான நூல்கள் வெளிவரவில்லை. இந்தப் பின்புலத்தில் இந்நூலின் வருகை முக்கியமாக அமைகின்றது. இளம் வளர்ந்தோர் இலக்கியம், இளைஞர் பண்பாடு, இளைஞரும் ஆக்க மலர்ச்சியும், நாட்குறிப்புகளை அடிப்படையாகக் கொண்ட நாவல்கள், மாற்றங்களும் சிறுகதைக் கோலங்களும், இளம் வளர்ந்தோர் நாவல் இலக்கியம், இளம் வளர்ந்தோரும் ஹரிபொட்டரும், ஜப்பானிய மொழியில் இளம் வளர்ந்தோருக்கான இலகு நாவல்கள், மங்கல் வெளிச்சம்-நெடுந்தொடர் நாவல், இளம் வளர்ந்தோர் வாசிப்பில் பசி விளையாட்டுக்கள், இளம் வளர்ந்தோரின் கவிதையாக்கங்கள், இளைஞர் நகைச்சுவை, நாடகத் தளத்தில் இளம் வளர்ந்தோர், இளைஞர் இசையும் ஆடலும், இளைஞரும் மீஅறிகையும், இளைஞரும் உற்றிணைந்தோர் கற்றலும், இளைஞர் வேலையின்மைப் பிரச்சினை, பயங்கரத்தை முகாமை செய்தல், இளைஞர் செயற்பாட்டாளராய் மாற்றம் பெறுதல், இணைப்பியலும் இ-கற்றலும், இளம் வளர்ந்தோரும் வெகுசன ஊடகங்களும் ஆகிய 21 இயல்களில் இளம் வளர்ந்தோருக்கான இலக்கியம் பற்றி இந்நூல் விரிவாகப் பேசுகின்றது. பேராசிரியர் சபா ஜெயராசா தமிழில் கல்வியியல் துறைசார்ந்த நூல்கள் பலவற்றை எழுதி அத்துறைசார்ந்த விருத்தியில் முதன்மை யான பங்கு வகித்து வருபவர். கலை, இலக்கியம், உளவியல், தத்துவம் எனப் பல்வேறு துறைசார் புலங்களுடன் ஊடாடி வருபவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70227).*

## 801. (1) சிறுவர் பாடல்கள், கவிதைகள்

### 16396

**அழகிய உலகம்.** எஸ்.பஞ்சகல்யாணி. பருத்தித்துறை: *ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, பங்குனி 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).*

*56 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN: *978-624-5881-70-8.*

வைத்தியர் எஸ்.பஞ்சகல்யாணி, புலோலி, பிலாவடித் தெருவைச் சேர்ந்தவர். இச்சிறுவர் பாடல்களினூடாகத் தான் அன்றாடம் காணும் உயிரினங்களை ரசித்து பாடலாக அந்த ரசனையை வடித்துத் தந்துள்ளார். அம்மா, பசு, ஆட்டுக் குட்டி, பூனைக் குட்டி, நாய்க் குட்டி, முயல், நாட்டுக்குள் வந்த நரி, கற்பகதரு, கோழிக் குஞ்சு, சிட்டுக் குருவி, காகம், கூண்டுக்கிளி, வண்ணத்துப் பூச்சி, கரப்பான் பூச்சிக்குக் கல்யாணம், தாலாட்டு, பிறந்தநாள் வாழ்த்து, விளையாட்டு, நொடிப் பாட்டு, நிலா, குளம், கடலும் கரையும், பொங்கல், சைக்கிள் வண்டி, ஆகாய விமானம், தங்கமே தங்கம், தமிழ், நம்நாடு ஆகிய தலப்புகளில் சின்னஞ்சிறு பாடல்கள் 27 இடம்பெற்றுள்ளன. இந்நூலுக்கான அட்டைப்படத்தை ஆசிரியரின் ஆறு வயதேயான மகள் புராதனி வரைந்துள்ளார். இது 184ஆவது ஜீவநதி வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது.

## 16397

**கனகரவியின் சிறார் பாடல்கள்.** கனகரவி (இயற்பெயர்: கனகரட்ணம் ரவீந்திரன்). சுவிட்சர்லாந்து: ரவீந்திரன் சுபத்திரை, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2015. (வவுனியா: லேற்றஸ் பிறின்டர்ஸ், வைரவபுளியங்குளம்).

16 பக்கம், வண்ணச் சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ.

ஈழத்தில் வவுனியா வடக்கில் உள்ள பூந்தோட்டம் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கனகரவி, 1993 முதல் ஊடகத்துறையில் பணியாற்றி வருகிறார். 2007 இறுதிப் பகுதியில் புலம்பெயர்ந்து, சுவிட்சர்லாந்தில் ஊரி மாநிலத்தில் வாழ்ந்து வருகின்றார். கனகரவியின் ஆறாவது படைப்பாக இந்தச் சிறுவர் பாடல் தொகுப்பு தற்போது வெளிவந்துள்ளது. இளைய தலைமுறையினரிடையே தமிழார்வத்தை வளர்த்தெடுக்கும் நோக்கத்தில் இப்பாடல் தொகுப்பினை தாயகத்தில் தனது ஊரான பூந்தோட்டம் கிராமத்தில் வெளியிட்டுள்ளார்.

## 16398

**சிறுவர் கவிச் சோலை: சிறுவர்களுக்கான கவிதைகள்.** அருளானந்தம் சுதர்சன். திருக்கோணமலை: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம், 1ஆவது பதிப்பு, 2020. (திருக்கோணமலை: சிறீராம் அச்சகம் (ரிங்கோ பிரிண்டர்ஸ்), 158, தபால் நிலைய வீதி).

106 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-4628-71-7.

கிழக்கிலங்கையில் வீரமுனையில் பிறந்த சுதர்சன், தனது ஆரம்ப, உயர்நிலைக் கல்வியை வீரமுனை இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் கற்று பேராதனை பல்கலைக்கழகத்தில் மெய்யியல் விசேட துறை இளங்கலைமாணிப் பட்டப் டிப்பைப் பூர்த்திசெய்தவர். சிறந்த கவிஞராகவும், கலைஞராகவும், உளவளத் துணையாளராகவும் பல பரிமாணங்களில் அறியப்பெற்றவர். இவரது முன்னைய கவிதைத் தொகுப்பு “சிறுவர் கவிப்பாக்கள்” என்ற தலைப்பில் 2018இல்

வெளியிடப்பெற்றிருந்தது. இது அவ்வாண்டுக்குரிய அரச உத்தியோகத்தருக்கான ஆக்கத்திறன் போட்டியில் சமர்ப்பிக்கப்பட்டு முதலாம் இடத்தையும் வென்றிருந்தது. சிறுவர்களின் எதிர்கால நலன் கருதி அவர்களது வாழ்வின் பாதுகாப்பு, முன்னேற்றம், கல்வி எனப் பலதரப்பட்ட விடயங்களைக் கருவாகக் கொண்டு இக்கவிதை நூலை உருவாக்கியுள்ளார். இதில் பாதுகாப்பாய் பள்ளி செல்வோம், காகம், புத்திசாலிச் சிறுவன், புதிய அத்திசூடி, என இன்னோரன்ன 38 சிறுவர் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

### 16399

**சிறுவர் பா ஏடு.** க.சத்தியபாமா. கொழும்பு 6: திருமதி கணபதிப்பிள்ளை சத்தியபாமா, 1ஆவது பதிப்பு, 2023. (கொழும்பு 6: குளோபல் கிராப்பிக்ஸ், சங்கம் ஒழுங்கை, வெள்ளவத்தை).

xiv, 38 பக்கம், புகைப்படம், சித்திரம், விலை: ரூபா 860., அளவு: 24x18 சமீ.

கணபதிப்பிள்ளை சத்தியபாமா முரசுமோட்டையைச் சேர்ந்த நெடுந்தீவு முருகேசு-மீனாட்சி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியாவார். 34 வருடகாலம் ஆசிரிய சேவையில் பணியாற்றி ஓய்வுபெற்றவர். மாணவர்களது மொழி விருத்தி, கற்பனை விருத்தி, படைப்பாக்கத் திறன் விருத்தி, அழகியல் விருத்தி மற்றும் உடல், உள, ஆன்மீக மனவெழுச்சிசார் விருத்திக் கோலங்கள் அனைத்தையும் மேம்படுத்தும் உயரிய நோக்கில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. நாமும் பாடசாலையும், எமது வீடு, தோட்டத்திற்கு வரும் பிராணிகள், நீருடன் விளையாட்டு, புத்தாண்டு பண்டிகைக்காலம், நாம் காணும் வானம், நாம் உண்பவையும் குடிப்பவையும், தகவல் கிடைக்கும் வழிகள், சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்கள், எமது நல்வாழ்வு, எமக்கு தேவையானவை கிடைக்கும் வழிகள், பிரயாணம், ஒளியுடன்/வெளிச்சத்துடன் விளையாட்டு, மனிதர்கள் வேலை செய்யும் இடங்கள், சுற்றுப்புறத்தில் வெவ்வேறுபட்ட இடங்கள், எமது உதவி தேவைப்படுவோர் ஆகிய பதினாறு அத்தியாயத் தலைப்புகளின் கீழ் பல்வேறு சிறுவர் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

### 16400

**சிறுவர் பாடல் மலர்.** வாசுகி பி.வாசு (இயற்பெயர்: குகராஜசெல்வம் வாசுகிதேவி). கொழும்பு: பூங்காவனம் இலக்கிய வட்டம், 21 E, தர்மபால வீதி, மவுண்ட் லவீனியா, 1ஆவது பதிப்பு, 2022. (கொழும்பு 6: சன்ஷைன் பிரின்டர்ஸ், வெள்ளவத்தை).

(4), 30 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 360., அளவு: 28x19 சமீ., ISBN: 978-955-7775-06-7.

முகநூலில் பல குழுமங்களில் நடுவராகவும், கவிஞராகவும் பயணிக்கும் இவர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவர். தனியார் துறைத் தமிழாசிரியராகவும் பெண்களுக்கான ஆடை வடிவமைப்பாள ராகவும் பணியாற்றுகின்றார். "சிறுவர் பாடல் மலர்" இவரது கன்னிப் படைப்பாகும். இதிலுள்ள பாடல்கள் எளிமையான சொல்லாடல்களுடனும் ஓசை நயத்துடனும்

சிறுவர் உள்ளங்களை வசீகரிக்கும் வகையிலும் அமைந்துள்ளன. வண்ணத்துப்பூச்சி, பறவைக்கூடு, பாப்பா பாட்டு, பாயும் அருவி, ஆழ்கடல் கப்பல், மழையின் ஆட்டம், காலைக்காட்சி, சின்னப்பூ பேசுது, அம்மாவின் பாசம், நண்டாரே, காலைச் சூரியன், பனைமரக் கிளி, அம்மாவின் பாச முத்தம், குருவியின் பேச்சு, புகையிரதம் ஆகிய 15 பாடல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 16401

**தமிழ் பாட்டு: சிறுவர் பாடல் தொகுப்பு.** கனகரவி (இயற்பெயர்: கனகரட்ணம் ரவீந்திரன்). சுவிட்சர்லாந்து: ரவீந்திரன் சுபத்திரை, 1ஆவது பதிப்பு, ஜுன் 2012. (சென்னை: மகி தமிழ் அச்சகம், டிசைன் பார்க்).

48 பக்கம், வண்ணச் சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

ஈழத்தில் வவுனியா வடக்கில் உள்ள பூந்தோட்டம் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கனகரவி, 1993 முதல் ஊடகத்துறையில் பணியாற்றி வருகிறார். கலை இலக்கியத் துறையிலும் ஈடுபாடு கொண்ட இவரது முதலாவது நூல் 1998இல் வெளிவந்த "விடுதலைக்காய்" என்ற கவிதைத் தொகுதியாகும். தொடர்ந்தும் இந்த மழை ஓயாதோ (2001), பொங்குதமிழ் (2005), ஆழிப்பேரலையும் ஈழத் தமிழரும் (2006)ஆகிய நூல்களையும் வெளியிட்டவர். 2007 இறுதிப் பகுதியில் புலம்பெயர்ந்து, சுவிட்சர்லாந்தில் ஊரி மாநிலத்தில் வாழ்ந்து வருகின்றார். கனகரவியின் ஐந்தாவது படைப்பாக தமிழ் பாட்டு- சிறுவர் பாடல் தொகுப்பு ஐம்பது சிறுவர் பாடல்களுடன் தற்போது வெளிவந்துள்ளது. புலம்பெயர்ந்து வாழும் இளைய தலைமுறையினரிடையே தமிழார்வத்தை வளர்த்தெடுக்கும் நோக்கத்தில் இப்பாடல் தொகுப்பினை வெளியிட்டுள்ளார்.

## 16402

**பாலர் பாட்டு தொகுதி 1.** த.துரைசிங்கம். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 2ஆவது பதிப்பு, ஆவணி 1984, 1ஆவது பதிப்பு, சித்திரை 1983. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63 B A தம்பி ஒழுங்கை).

32 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 7.00, அளவு: 25x19 சமீ.

ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்குரிய இசையும் அசைவும் என்னும் பாடத் திட்டத்திற்கு அமைவாக, இயற்கை வனப்பையும் சூழலையும் தழுவி எழுதப்பட்ட பாடல்கள். இவை பிள்ளைகள் கண்டும் கேட்டும் பழகும் தலைப்புகளில் அமைந்ததாக எங்களுடைய வீடு, நல்வரவு, கோழி, புள்ளிப் புள்ளி மயிலே, அப்பா தந்த குதிரை, மிட்டாய், மாம்பழம், பட்டுப் பட்டுப் பாவாடை, அம்மா உடுப்பாள் பட்டு, மாட்டு வண்டி, புகைவண்டி, மழை, பூந்தோட்டம், பாட்டில் நிலைக்கச் செய்திடுவேன், புகைக் கப்பல், வெளிச்ச வீடு, ஆகாய விமானம், பட்டம் ஏற்றுதல், வெண்ணிலா, டும் டும் மேளம், புதுமை அம்மன் கோவிலிலே, மீன்கள், வங்கம் தந்த சிங்கம், மானும் நாயும், மோர், உபகாரம், ஆபத்தில் உதவா

நண்பன், உயிர் கொடுத்த உத்தமி ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன. ஆசிரியராகவும் அதிபராகவும் பல்லாண்டு காலம் பணியாற்றிய அனுபவத்தின் பயனாகப் பாலர்களின் உளவியல்புகளுக்கேற்ற பாடல்களை இந்நூலாசிரியர் வெகு அற்புதமாக இயற்றியுள்ளார்.

## 16403

**பாலர் பாட்டு தொகுதி 2**. த.துரைசிங்கம். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 1ஆவது பதிப்பு, ஆவணி 1984. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63 B A தம்பி ஒழுங்கை).

32 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 7.30, அளவு: 24.5x18 சமீ.

பிள்ளைகளின் சூழலில் உள்ள போக்குவரத்துச் சாதனங்கள் பற்றிய பாடல்கள் இத்தொகுப்பில் முக்கியமாக இடம்பெற்றுள்ளன. இனிமையும் எளிமையும் இன்பமும் பொருந்த ஆசிரியர் த.துரைசிங்கம் அவர்கள் இயற்றிய சிறுவர்களுக்கான பாடல்களின் மற்றொரு தொகுதி இது. எங்கள் குடும்பம், பள்ளி செல்வோம், பறவைகள், தேனீ, மலர்கள், தோட்டம் செய்வோம், நிறங்கள், தைப் பொங்கல், புத்தாண்டு, வண்ணத்துப் பூச்சி, பயணம் செய்வோம், மாட்டு வண்டி, குதிரை வண்டி, றிச்சோ வண்டி, சயிக்கிள் வண்டி, மோட்டார் வண்டி, பஸ் வண்டி, புகைவண்டி, கட்டுமரம், கப்பல், வானவூர்தி, தோசையும் ஆசையும், வல்லவனுக்கு வல்லவன், சங்கிலி மன்னன் ஆகிய தலைப்புகளில் இச்சிறுவர் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன.

## 16404

**பிள்ளைப் பா-பூக்கள்**. நீர்கொழும்பு தர்மலிங்கம் (இயற்பெயர்: ந.தருமலிங்கம்). நீர்கொழும்பு: நடராசா தர்மலிங்கம், 195, கடற்கரை வீதி, 1ஆவது பதிப்பு டிசம்பர் 1996. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).

67 பக்கம், விலை: ரூபா 46.00, அளவு: 22.5x15 சமீ.

சமூகச் சீர்மை, மனிதகுல மேம்பாடுகளுக்காகத் தனது கவிதைகள், கட்டுரைகள் மூலம் ஊடகங்களில் ஓங்கிக் குரல்கொடுத்துவந்த நீர்கொழும்பூர் முத்துலிங்கத்தினால் பல்லினமான 35 தலைப்புக்களில் புனையப்பட்ட சிறுவர் பாடல்கள் இவை. ஆறு பிரிவுகளில் இவை வகைப்படுத்தப்பட்டுள்ளன. கலைமகள் வாழ்த்து, பாரதிக்கு ஒரு மடல் ஆகிய பாடல்களைத் தொடர்ந்து சரம் ஒன்றில், கண்ணில் ஒரு கவிதை, கடவுளை மறக்காதே, "அ"கர முதல் ஃவரை, ஒரு தாயின் தாலாட்டு, ஓடிவிளை யாடிமுடி பாப்பா, காலத்தில் கற்றுக்கொள் ஆகிய பாடல்களையும், சரம் இரண்டில், எங்கள் தாய்நாடு, அன்புவழி தேடி ஆடுவோம், பள்ளிக்கூடம் ஒரு கோயில், கல்வி ஒரு தெய்வம், மூத்தோர் சொற் கேட்போம், அருளை உணர்ந்து ஆண்டவனை வணங்கு, சிந்தித்துச் செயலாற்று, உனக்குள் இறைவன், உன்னைத் தேடு, முயற்சிசெய் முடியும், காலம் உந்தன் காலடியில், நம்பிக்கை அது இறைவன் கை, நல்லதைச் செய்யுங்கள்-நன்மையே சேரும் ஆகிய பாடல்களையும், சரம் மூன்றில், வையம் உன்னை வாழ்த்த, விழிப்பிலிருந்து

உறக்கம் வரை ஆகிய பாடல்களையும், சரம் நான்கில் காக்கையும் நாயும், சிறுவர்களும் எறும்பும், கிளிக்குஞ்சு புலம்பல், பசுமாமி ஏன் அழுதாள்?, மனிதர்களும் கடவுளும் ஆகிய ஐந்து நாடகப் பாடல்களையும், சரம் ஐந்தில், அழகிசைச் சிந்துகளாக இயற்கையும் இசையும், காலைப் பொழுது மலர்ந்தது, வெண்ணிலாவே விளையாட வா, சின்னச் சின்ன கனவுகள் ஆகிய பாடல்களையும், சரம் ஆறில் இனிக்கும் நினைவுகள், மணக்கும் மனத்திரை, பின்வரியாய் என் வரிகள் ஆகிய பாடல்களையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது.

## 16405

**மான்குட்டி: சிறுவர் பாடல்.** தியத்தலாவ H.F.ரிஸ்னா. கல்கிசை: பூங்காவனம் இலக்கிய வட்டம், 21-E, ஸ்ரீ தர்மபால வீதி, மவுண்ட் லவீனியா, 1ஆவது பதிப்பு, 2021. (மஹரகம: மிலெனியம் கிரபிக்ஸ்).

28 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 300., அளவு: 24x17 சமீ., ISBN: 978-955-7775-01-2.

7-12 வயதெல்லையினருக்குப் பொரத்தமான சிறுவர் பாடல் நூல். வர்ணப் படங்களையும் உள்ளடக்கியதாக இந்நூல் கவர்ச்சிகரமான முறையில் அச்சிடப்பட்டுள்ளது. தியத்தலாவையை பிறப்பிடமாகக் கொண்ட இவரது தந்தை கே.எம். ஹலால்தீன் அவர்கள். தாயார் பீ.யூ. நஸீஹா அவர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்). H.F.ரிஸ்னா கஹகொல்லை அல் பத்ரியா முஸ்லிம் மகா வித்தியாலயம், வெலிமடை முஸ்லிம் மகா வித்தியாலயம், பண்டாரவளை சேர் ராசிக் பரீட் முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் தனது கற்றல் செயற்பாடுகளைத் தொடர்ந்தவர். தனியார் நிறுவனங்களில் கணினிப் பயிற்சிப் பாடநெறிகளை நிறைவுசெய்து, பின்னர் கொழும்பு பல்கலைக் கழகத்தில் இதழியல்துறை பாடநெறியைப் பயின்ற பின்னர் தற்போது கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பணி புரிகின்றார்.

## 16406

**வெருளி மாமா: சிறுவர் பாடல்.** உ.நிசார் (இயற்பெயர்: எச்.எல்.எம்.நிசார்). மாவனல்லை: பானு பதிப்பகம். 70/3, புதிய கண்டி வீதி, 1ஆவது பதிப்பு, 2020. (மாவனல்லை: எம்.ஜே.எம்.அச்சகம், 119, பிரதான வீதி).

v, 32 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 260.00, அளவு: 30x22 சமீ., ISBN: 978-955-0503-20-9.

சிறுவர் இலக்கியத்துக்கு அதிக பங்களிப்பைச் செய்துள்ள உதுமாலெப்பை நிசாரின் 10ஆவது சிறுவர் பாடல் தொகுப்பான "சின்ன ரயில்" தொகுப்பைத் தொடர்ந்து வெளிவரும் பதினொராவது சிறுவர் பாடல் தொகுப்பு இது. இயற்கை, இயற்கையின் எழில், இயற்கையை அவதானித்தல், இயற்கைக்கு மனிதன் செய்யும் தீங்கு, இயற்கையைப் பாதுகாத்தல் போன்ற பல்வேறு விடயங்களுடன் குடும்பம், செல்லப் பிராணிகள், பொழுதுபோக்குகள், சிறுவர்களுக்கான அறிவுரைகள், நற்பழக்க வழக்கங்கள் என்பவற்றையும் நிசார் இப்பாடல் தொகுப்பில்

முன்வைத்துள்ளார். அவை நிலா நான், வீட்டுத் தோட்டம், தம்பிப் பாப்பா, பறந்துவா அக்கா, பூவும் வண்டும், பார் சிறக்க, குரங்குக் குணம், தலை வணக்கம், எங்களூர் ஓடை, மீன் மாமா, வெருளி மாமா, பண மழை, இவர் யார்?, பட்டம் பறக்குது, கொடுக்கல் வாங்கல், ஆட்டுக்குட்டி, தூய்மை காப்போம், அந்தி மயங்குது, மரம் சொல்லும் கதை, கோழிக் குஞ்சாரே, ஆசான் வாழ்க ஆகிய 21 தலைப்புகளில் இவை இயற்றப்பட்டுள்ளன.

## 801. (2) சிறுவர் நாடகங்கள்

### 16407

**பஞ்சநதிகள்: சிறுவர் நாடகங்கள் ஐந்து.** *புனிதா துஷ்யந்தன். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, மார்கழி 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).*

x, *62 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5*x*14.5 சமீ.*, ISBN: *978-624-5881-33-8.*

*சிறுவர்களின் மனங்களைக் கவர்ந்து கொள்ளும் ஐந்து நாடகங்களை பஞ்சநதி உள்ளடக்குகின்றது. இவை 2012இற்குப் பின்னர் எழுதப்பட்டவை. புத்தகப்பை, ஒற்றுமையே பலம், இயற்கை உணவு, இலவம்பழம், விழித்தெழு ஆகிய தலைப்புகளில் இந்நாடகங்கள் எழுதப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர் கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலையில் "நாடகமும் அரங்கியலும்" எனும் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர். இந்நூல் 211ஆவது ஜீவநதி வெளியீடாக வெளி வந்துள்ளது.*

மேலும் பார்க்க:
குணம் மாறும் எலிகள்: சமூக,அரசியல்,பொருளாதார நாடகம். 16593

## 801. (3) சிறுவர் கவிதா நாடகங்கள், காவியங்கள்

### 16408

**பாட்டுக்கூத்து.** P. *சத்தியசீலன். யாழ்ப்பாணம்: திருமதி கலாதேவி, கலைவண்ணம், சின்னப்பா வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய், 1ஆவது பதிப்பு, ஜுன் 1976. (யாழ்ப்பாணம்: கவின் அச்சகம், நாவலர் வீதி).*

*56 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5*x*14 சமீ.*

*தனித்துவமானதோர் எழுத்துப் பாணியின் மூலமும், நேர்த்தியான நூலாக்கங்களின் மூலமும் ஈழத்துச் சிறுவர் இலக்கியத்தில் தனியிடம் பெற்றவர் பாவலவன் பா.சத்தியசீலன். பாட்டுக்கூத்து என்ற இந்நூலில் பள்ளிச் சிறுவர் பாடி ஆடி மகிழக்கூடிய வண்ணம் யாத்த சிறுவர் பாநாடகங்களை தொகுத்திருக்கிறார். சிறுவர் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் தமிழ்ப் பரிசு (1967), பாட்டு (1970) ஆகிய இவரது இரண்டு நூல்களைத் தொடர்ந்து மூன்றாவதாக இந்நூல் வெளி வந்துள்ளது. "கண்மணி" என்ற பாப்பாப் பாமலர் இந்நூலின் முன்னீடாக*

அமைகின்றது. இதில் விடுகதைப் பாணியில் அமைந்த விலங்குத் தோழன், நம்பியும் அணிலும், வண்ணத்துப் பூச்சி, நிலவே, பூக்குட்டி, பந்து, தவளை ஆகிய தலைப்புகளில் அமைந்த சிறுவர் பாடல்கள் இடம்பெறுகின்றன. தொடர்ந்து, பஞ்சதந்திரக் கதையை கருமையப்படுத்தி புனைந்த பா இசை நாடகமாக "புத்திமான் பலவான்" முதலாவதாக இடம்பெற்றுள்ளது. ரஷ்ய இதழ்த் துணுக்கொன்றின் பாதிப்பில் முகிழ்ந்த "உயிர் காத்த ஓவியம்" பா இசை நாடகம் இரண்டாவதாக இடம்பெற்றுள்ளது. தொடர்ந்து வரும் "கொடை" என்ற பா இசை நாடகத்தில் தேரில் வந்து கொடுத்த பாரியையும் காரில் வந்து கொடுத்த கண்ணனையும் இணைத்துத் தருகிறார். தொடர்ந்து, "நல்ல கணக்கு", "பிழை திருத்தம்" ஆகிய பா நாடகங்கள் இடம்பெற்றுள்ளன. "பிழை திருத்தம்" கத்தோலிக்கரின் பரிசுத்த நற்செய்தியிலே வரும் ஊதாரிப்பிள்ளை (கெட்ட குமாரன்) கதையைக் கருவாகக் கொண்டமைக்கப்பட்ட பா நாடகமாகும்.

## 801. (4) சிறுவர் சிறுகதைகள்

### 16409

**அவந்திக்காவின் பள்ளிநாள்: சிறுவர் கதைகள்.** கஸ்வினி கணேசன், யோகராணி கணேசன். வவுனியா: கணேசன் பதிப்பகம், 221/2, நேரியகுளம் வீதி, புதையல்பிட்டி, நெளுக்குளம், 1ஆவது பதிப்பு, பங்குனி 2021. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).

40 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-97692-0-5.

அவந்திக்காவின் பள்ளிநாள், வானிலாவின் மீட்புப்பணி, உதவி ஆகிய மூன்று சிறுவர் கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இம்மூன்றுகதைகளுமே நோர்வே நாட்டின் சூழலுக்கேற்ப எழுதப்பட்டுள்ளன. இக்கதைகளில் பொருத்தமான இடங்களில் எமது தனித்துவமான தமிழர் பண்பாட்டு விழுமியங்கள் பற்றியும் பேசப்படுகின்றன. இக்கதைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் அன்றாட வாழ்வில் நோர்வேஜிய மொழியில் (நொஸ்க்) மாணவர்கள் பயன்படுத்தும் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களாக அமைந்திருப்பது மாணவர்கள் தமது தாய்மொழியில் சொல்வளத்தைப் பெருக்க வழிவகுப்பதாயுள்ளது. அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் சிறப்பான அறுவடையாக அமையும் இந்நூல் மேற்படி கலைக்கூட மாணவி செல்வி. கஸ்வினி கணேசன் (தொய்யன் வளாகம், ஏழாம் வகுப்பு) அவர்களின் கைவண்ணத்தில், அவரது அன்னையின் மேற்பார்வையில் உருவாகியுள்ளது.

### 16410

**அறிவியல் கதைகள்**. கோகிலா மகேந்திரன். தெல்லிப்பளை: சோலைக்குயில் அவைக்காற்றுக் கள வெளியீடு, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2020. (யாழ்ப்பாணம்: அம்மா அச்சகம், இணுவில்).

vi, 26 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 19x21.5 சமீ., ISBN: 978-624-5407-02-6.

ஐந்தாம் ஆறாம் ஏழாம் தர மாணவர்களுக்கு ஏற்றவகையில் எழுதப்பட்ட இக்கதைகளில் நிறைய விஞ்ஞானத் தகவல்களும் அறிவியல் உண்மைகளும் கதையோடு கதையாகப் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. இது சிறுவர்களின் அறிவு விருத்தியை கவனத்துக்கெடுத்துப் பின்பற்றப்பட்டுள்ள உத்தியாகும். நான் யார்?, நரிமடல், சொண்டுப் பயணம், மாசற்றார் கேண்மை, முருகைக் கல்லாருடன் ஒரு பேட்டி, கிள்ளை மொழி ஆகிய ஆறு சிறுவர் கதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

### 16411

**கதை மரம்: சிறுவர் கதைகள்**. எஸ்.பஞ்சகல்யாணி. பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2022. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

44 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-5881-56-7.

வைத்தியர் எஸ்.பஞ்சகல்யாணி, புலோலி தெற்கு, பிலாவடித் தெருவைச் சேர்ந்தவர். சிறுவர்களை முன்நிறுத்தி இவர் எழுதும் மூன்றாவது நூல் இதுவாகும். சிறுவர்களுக்கு அவர்களது இளம் வயதிலேயே ஒழுக்கவியலை போதிப்பதாக இவரது படைப்புகள் எழுதப்பட்டுள்ளன. இந்நூலில் தவளையின் குதூகலம், வண்ணத்துப் பூச்சியின் அம்மா, அம்மா யானை, பறவைகளின் அழகுராணிப் போட்டி, கரிக்குருவியின் ஆலோசனை, நிலாக்கதை, வகுப்பறை, ஏகாம்பரம் தாத்தா, தாத்தா கட்டிய பட்டம், குரங்குகளும் முதலையும், குரங்கும் குடிலும், மரங்களின் நண்பன், பூச்சிகளின் ஆசை, விடுகதைக் காடு, நண்டுகளின் திருவிழா, வாழையின் தலைக்கனம் ஆகிய 16 கதைகள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 236ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

### 16412

**காலத்தைக் கடந்துவந்த கதைகள்**. அரச. ஐயாத்துரை. கொழும்பு 6: அருட்திரு அரச. ஐயாத்துரை, 24/2, ரோகினி வீதி, 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 1997. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

vi, 37 பக்கம், விலை: ரூபா 50.00, அளவு: 18x12 சமீ., ISBN: 955-96225-1-X.

சிறுவர்களுக்கேற்ற 24 நீதிநெறிக் கதைகள். விறகு வெட்டி, சான்ட குளோஸ், சூரியனும் குகையும், இரக்கம் கொண்ட செட்டி, சிறிய சிவப்புக் கோழி, இளமையைப் பெற்றுத் தரும் நீர் ஊற்று, இறை மகிமை-அனுபவத்தின் ஊடாக இறைவன், பழைமையை நினை புதுமையைப் பெறுவாய், தியாகத்தின் பரிசு,

ஏட்டுக்கல்வி கறிக்கு உதவாது: படித்தறிந்த மேதை, இயேசுவின் பின்னே போகத்துணிந்தேன், மன்னிப்பு, செல்வத்தைப் பதுக்கி வைத்த பாட்டி, கைகூப்பும் கரங்கள், யார் பெரியவர், ஒற்றுமையே பெலன், யானையும் குருடர்களும், கண்ணால் காண்பதும் பொய்யே காதால், கேட்பதும் பொய்யே..., கொரிய தேசத்து உவமை, தோள்களில் தூக்கிச் செல்லும் கடவுள், பொறுத்தார் அரசாள்வார், தாழ்வு உயர்ச்சி தரும், மன்னிப்பில் மனநிறைவு-மனம் போன்ற வாழ்வு, ஆமென், அப்படியே ஆகட்டும் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

## 16413

**சிந்தனை செய்: சிறுவர் கதைகள்.** எஸ்.பஞ்சகல்யாணி. பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, மார்கழி 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

*52 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-624-5881-23-9.*

பறவைகளின் கூட்டம், வீமாவும் ஜிம்மியும், ஆடும் தேனியும், மானும் முயற் குட்டியும், வானத்தில் நடந்த அதிசயம், வேடனும் மானும், கொக்கும் காகமும், காட்டில் ஒரு வரிப்புலி, சிங்கராசாவின் பெருந்தன்மை, கிளியும் விளாம்பழமும், காகமும் குயிலும், மாம்பழக் குருவியின் நட்பு, வண்ணத்துப் பூச்சியும் தம்பியும், முதலையும் ஆமைகளும், குறும்புக்கார கோழிக்குஞ்சு, கடற்கன்னி, பூவரசும் தேக்கும், சர்ப்பத்தின் செருக்கு ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 18 சிறுவர் கதைகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. கதைகளின் பாத்திரங்கள் நமது சூழலில் வாழும் விலங்குகளாக அமைவதுடன் அவை மானிட வாழ்வுக்கான போதனைகளை எளிமையாக வழங்குவதாகவும் கதைகள் வடிவமைக்கப்பட்டு உள்ளன. பெரியோரைக் கனம் பண்ணுதல், நன்றியுணர்வு, விருந்தோம்பல், நட்பு போன்ற நற்பண்புகளை இக்கதைகள் சிறுவர்களுக்கு அறிமுகப்படுத்துகின்றன. மனிதனால் மாசுறும் பூமி பற்றியும் அவதானத்தை சில கதைகள் ஏற்படுத்துகின்றன. இந்நூல் 205ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

## 16414

**சிறகை விரித்துப் பறப்போம்: சிறுவர் கதைகளினூடாகச் சிந்தனை விரிவு.** ஸ்ரீரஞ்சனி விஜேந்திரா. கொழும்பு 6: இலக்கியன் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, ஜூன் 2022. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

*xiv, 63 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 500., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-6165-01-7.*

இந்நூலிலுள்ள ஒவ்வொரு கதையும் மூன்று பிரிவுகளாக அமைகின்றது. முதலில் நாம் சிறுவயதில் பெற்றோர் வழியாகக் கேட்டும், அறிந்தும் மனதின் ஒரு மூலையில் ஒழுக்கவியலாகப் பொத்திப் பாதுகாத்துவைத்துள்ள 14 சிறுவர் கதைகளை படிமுறையாக ஒழுங்குபடுத்தித் தந்துள்ளார் ஸ்ரீரஞ்சனி. அத்துடன் பாரதியார்

பாடல், குருவிக்கூடு, குரங்கும் முதலையும் ஆகிய மூன்று பாடல்களையும், பேச்சு மொழி உரைநடையிலமைந்த சிறு நாடகம் ஒன்றையும் "ஒரு பயணம்" என்ற தலைப்பில் உள்ளடக்கியதாக மொத்தம் 18 ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு ஆக்கத்துக்கும் பொருத்தமாக தமிழக ஓவியர் ஜீவாவின் சித்திரங்களும் இடம்பெற்றுள்ளன. மூன்றாவது பிரிவு இந்நூலின் முக்கியமானது. ஒவ்வொரு படைப்பாக்கத்தையும் வெறுமனே வாசித்துக் கடந்துவிட முடியாதவாறு அக்கதையில் அல்லது பாடலில் உள்ள கருத்தையிட்டு வாசகரை மேலும் சிந்திக்கும் வழியொன்றை ஒவ்வொரு கதையினதும் இறுதியில் கேள்விக்கணை களாகத் தொடுத்துத் தந்துள்ளார். கதையின் முடிவை எவ்வாறு மாற்றி அமைக்கலாம்? கதையில் உள்ள சில சொற்களுக்கு எத்தகைய பிரதியீட்டுச் சொற்களைப் பயன்படுத்தலாம்? கதையின் விளக்கத்தை வேறு எவ்வகையில் வெளிப்படுத்தலாம்? என்றவாறாக கேள்விகளையும் வழங்கி இளம் வாசகர்களை மாற்றி யோசிக்கவும் வைக்கிறார். நரியும் திராட்சைப் பழங்களும், ஒற்றுமையே பலம், குரங்கும் அப்பமும், நரியும் கொக்கும், பொன் முட்டை, நாயும் எலும்புத் துண்டும், ஏமாற்றாதே ஏமாறாதே, புத்திசாலிக் காகம், ஓநாயும் சிறுவனும், புறாவும் எறும்பும், ஆமையும் முயலும், கீரியும் பாம்பும், இரு நண்பர்கள், காகமும் முத்துமாலையும், ஒரு பயணம், பாரதியார் பாடல், குருவிக்கூடு, குரங்கும் முதலையும் ஆகிய தலைப்புகளில் 18 கதைகளும் இடம்பெற்றுள்ளன.

## 16415

**சிறுவர் எழுதிய சிறுவர் கதைகள்.** மு.மேதினிகா, மு.கோகனன் (தொகுப்பாசிரியர்கள்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

iv, 48 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-5881-20-8.

இவ்விளம் கதைசொல்லிகளும், தொகுப்பாளர்களும் தமது வகுப்பறைகளிலும், மாலை நேர உரையாடல்களிலும் சொல்லப்பட்டுவந்த தமது கதைகளை எழுதித் தொகுத்திருக்கிறார்கள். இவற்றில் சில கதைகள் "தீம்புனல்" சிற்றிதழில் வெளி யாகியுள்ளன. ஆபத்து உதவியும் உறவின் ஆபத்தும், அழகான விலங்கு, அணிலும் நரியும், தாய் சொல்லைத் தட்டாதே, பிறந்தநாள் பரிசு, திருடனின் நேர்மை, வாத்தின் நட்பு, நரியின் தந்திரம், ஆமையும் கோழியும் முயலும், அண்ணனும் தங்கையும், ரோபோ வாசகன், அதிகேசரிம் மதிகேசரியும், தாத்தாவின் அறிவுரை, தூக்கணாங் குருவியின் கூடு, புத்திசாலி எலி, தும்பியும் கமலனும், அமைதி, நண்பிகளின் பகிர்வு, மஞ்சள் பலூன், காகமும் மயிலும், வண்டின் முயற்சி, மேகங்கள், வீண்பெருமை, தேவதையின் பரிசு, பேராசை பெருநட்டம், வேட்டைக் காரர்களின் ஓவியம், மந்திரியின் மதிநுட்பம், புத்திசாலை ஆடு, போலிச்சாமியார், ஒட்டகத்தின் கெட்ட அகம், பஞ்சாமிர்தக் கனி, இரத்தினக்கல், ஏமாற்றுவோர் ஏமாறுவார், யானையும் குருவியும், கூண்டுக் கிளியும் சோலைக்கிளியும், பெறுமதி, வெள்ளைக்காகம், விக்கிரமாதித்தனும் ரோபோவும், அச்சம் தவிர், மின்குமிழ்

சொன்ன கதை ஆகிய 40 கதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. கதைகளுக்கான ஓவியங்களை த.அக்ஷிதா வரைந்துள்ளார். 201ஆவது ஜீவநதி வெளியீடாக இந்நூல் வெளிவந்திருக்கிறது.

## 16416

**சிறுவர் கதை மலர்: இதழ்2.** மாசில் பிரான்சிஸ். யாழ்ப்பாணம்: மாசில் பதிப்பகம், 2/1, கோவில் வீதி, 1ஆவது பதிப்பு, 2017. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48 B, புளூமெண்டால் வீதி).

viii, 120 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 240., அளவு: 23x15.5 சமீ., ISBN: 978-955-0210-08-4.

இந்நூலில் துயிலும் அழகி, உடன் பிறவா சகோதரர், ஊரார் சொல் கேட்ட தந்தையும் மகனும், அண்ணனை வென்ற தம்பி, பூனை தந்த செல்வம், குளம் சொல்லும் கதை, குறள் கதை, படித்தால் மட்டும் போதுமா?, பிரித்து ஆளுதல், மகாராஜாவின் புத்தாடை, வாய்ப்புக்களைத் தவறவிடலாமா?, சுட்டியின் குறும்பு, அல்பிறெட் நோபல், ஜக்கனும் அற்புத அவரை மரமும், சிந்தரெல்லா, இளைஞனும் இடையப் பையனும், தாத்தாவின் அறிவுப் பாடம், கடவுளைக் கண்டவன், அறிவும் நுண்ணறிவும், அம்மாவின் அழகிய கைகள், நன்றிக்கு நன்றி, தையற்கார சலீம் வீரனாகினான், அழகிலி வாத்துக் குஞ்சு, விகடகவியின் தந்திரம், பயனுள்ள அறிவுரை ஆகிய இருபத்தைந்து கதைகள் இடம்பெற்றுள்ளன. கதைகளுக்குப் பொருத்தமாக செல்வி எஸ். மாயாவின் சித்திரங்களும் காணப்படுகின்றன. யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரி, இந்துக் கல்லூரி இரண்டிலும் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றிய நூலாசிரியர் கனடாவில் வாட்டர்லூ பிரதேசத்தில் புலம்பெயர்ந்து வாழ்கின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70129).

## 16417

**சிறுவர் கதைகள்.** ம.ஜெகநாதன் (புனைபெயர்: ஜெக்கி). கொழும்பு 6: ம.ஜெகநாதன், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(3), 29 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

வைசிகாவின் காருணியம், சயுந்தன் ஒரு இஞ்சினியர், டாக்டர் அபிசேக், ஜதுனின் முயற்சி வெற்றிக்கானது, உழைத்து முன்னேறு, உன்னையே நீ அறிவாய், அந்த பெரியவர்தான் என் முதலாளி, தங்கத் தூண்டில், றொட்டித் துண்டு, நான் கத்தவே இல்லை, உழைப்பே உயர்வு தரும், பேயால் வந்த வாழ்வு ஆகிய தலைப்புகளில் இந்நூலில் சிறுவர்களுக்கான கதைகள் இடம்பெற்றுள்ளன. நூலில் போதிய நூல்விபரத் தகவல்கள் காணப்படவில்லை.

### 16418

**சிறுவர் கதைகள்: தொகுதி 4.** தம்பிராசா துரைசிங்கம். கொழும்பு 6: உமா பதிப்பகம், *521/1* B, காலி வீதி, *1*ஆவது பதிப்பு, செப்டெம்பர் *2005. (*கொழும்பு *12:* லங்கா புத்தகசாலை, F.L. *1/14,* டயஸ் பிளேஸ், குணசிங்கபுர*).*

*40 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 50.00, அளவு: 18*x*12 சமீ.,* ISBN: *955-1162-05-6.*

சிறுவரது சிந்தனையைத் தூண்டவல்ல 12 கதைகள் இதில் இடம்பெற்றுள்ளன. மனிதர்களே உயர்ந்தவர்கள், குரங்கும் யானையும், நரியும் சேவலும், ஆனையும் பானையும், ஒற்றுமை தான் நமது பலம், உணவே உபதேசம், குயிலும் சேவலும், பசுமை மலர்ந்தது, உண்மை உயர்வு தரும், வாத்துக்குஞ்சும் கோழிக்குஞ்சும், அற்ப ஆசை ஆபத்தையே தரும், உழைத்து உண்ணத் தெரிந்து கொள் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

### 16419

**சிறுவர்களுக்கான சின்னஞ்சிறு கதைகள்.** கமலினி கதிர். சென்னை *600017:* மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் *1447,* இல.*7,* தணிகாசலம் சாலை, தியாகராய நகர், *1*ஆவது பதிப்பு, *2020. (*சென்னை *600094:* ஸ்கிரிப்ட் ஆஃப்செட்*).*

*40 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 60.00, அளவு: 24*x*18 சமீ.*

யாழ்ப்பாண மாவட்டம், மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர் திருமதி கமலினி கதிர்காமநாதன். மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியான இவர் தாயகத்தில் தட்டெழுத்தாளராகவும், எழுதுவினைஞராகவும், ஆசிரியை யாகவும் பணியாற்றியவர். திருமணத்தின் பின்னர் கொழும்பில் சிலகாலம் வாழ்ந்த இவர் 2002இல் சுவிட்சர்லாந்துக்கு புலம்பெயர்ந்து சென்றிருந்தார். அங்கு 2006 முதல் சூரிச்-டிட்டிக்கோன் தமிழ்ப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகின்றார். இந்நூலில் சிறுவர்களுக்கேற்றவாறு பத்து சிறுகதைகளை அவர் எழுதி வழங்கியுள்ளார். மந்திரக் கிழவியும் மாதவனும், சுட்டிச் சிறுமி, பெருவிரல் பெருமான், குங்பூவும் ஜலனும், எலிக்கும் எலிக்கும் கல்யாணம், அக்கக்கா குருவி, நட்பு, ஒற்றுமை, குமரனும் பாட்டியும், டிங்கிலிக்கான் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

### 16420

**சிறுவரின் சிந்தனைக்கு: இருபத்தியேழு சிறுகதைகள்.** பொன்.குலேந்திரன். கனடா: குவியம் வெளியீடு, *2796,* Keyness Crescent, Mississauga, Ontario, L5N3A1, *1*ஆவது பதிப்பு, செப்டெம்பர் *2020. (*மின்நூல் வடிவம்*).*

*126 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5*x*14.5 சமீ.*

இந்நூலில் கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் பௌதிகவியல் சிறப்புப் பட்டதாரியும், தொலைத் தொடர்பு பொறியியலாளருமான ஆசிரியர் எழுதிய சிறுவர்களின் சிந்தனையைத் தூண்டும் 27 கதைகள் இடம்பெற்றுள்ளன. என் அம்மா, வௌவால் மனிதன், யால ஜங்கில் கல்யாணம், நத்தார் பரிசு, அப்பா

செய்த கணக்கு, சோம்பேறியின் சாதனை, மெலடியும் ரொபினும், மூன்று குட்டிச் சாத்தான்கள், தொலைந்த புத்தகம், துவண்டு விடும் அனிச்சா, அன்புள்ள ஆட்டுக் குட்டி, பூஜாவின் பூனைக்குட்டி, கரும்பலகையும் கணினியும், மௌனி டீச்சர், நடராஜாவுக்கு நல்ல மனசு, தெரு நாய், எனக்கு நேரமில்லை, குக்கூ கடிகாரம், அப்பாவின் பரிசோதனை, பொம்மை, கஸ்தூரியின் காலணி, நத்தார் தாத்தாவுக்கு ஒரு கடிதம், எனது பார்க்கர் 51 பேனா, கழுதையும் ராஜாவும், அணில் பிள்ளை, என் தம்பி, கழுகு மனிதன் ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன.

## 16421

**சூரியனுக்குக் கலியாணம்: சிறுவர்களுக்கான சின்னஞ்சிறு கதைகள்.** மாவை நித்தியானந்தன். கொழும்பு 6: இலக்கியன் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, ஆண்டு விபரம்தரப்படவில்லை. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

12 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 30x21 சமீ., ISBN: 978-955-1997-86-1.

இச்சிறுவர் கதை நூலில் ஓநாயும் கொக்கும், சேவலும் தங்க நகையும், மரம்வெட்டி, சூரியனுக்குக் கலியாணம், பழ மரம், இரு எதிரிகள் ஆகிய ஆறு குட்டிக் கதைகள் பக்கத்துக்கொன்றாக பெரிய எழுத்தில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு கதைக்கும் பொருத்தமாக முழுப்பக்க வண்ணப்படங்கள் சிறுவர் நூலுக்கு அணி சேர்க்கின்றன. ஓவியங்களை ஆர்.கௌசிகன் வரைந்துள்ளார்.

## 16422

**செயா உலக நீதிக் கதைகள்: முதலாம் பாகம்.** வ.செல்லையா. யாழ்ப்பாணம்: கீரிமலை யோகர் சுவாமிகள் மகளிர் தவநிலைய வெளியீடு, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 1996. (கொழும்பு 12: ஸ்ரீசக்தி பிரிண்டிங் இன்டஸ்றீஸ்).

40 பக்கம், விலை: ரூபா 25.00, அளவு: 19x12.5 சமீ.

ஞானசிரோன்மணி வித்துவான் வ.செல்லையா எழுதிய சிறுவர் போதனைக் கதைகள். மூத்தோர் சொல் வார்த்தை அமுதம், நாட்டைக் காத்த சிறுவன், அனுபவமே நல்லாசிரியன், என்னாலே தான் எல்லாம் நடக்கும், அடாது செய்தவர் படாது படுவர், வேடம் தந்த பரிசு, உச்சித நற்கிரியை, ஏழை விதவையின் காணிக்கை, ஆலயம் தொழுவது சாலவும் நன்று, குற்றவாளிக்கு உதயமான ஞானம் ஆகிய தலைப்புகளில் பத்து கதைகள் இடம்பெற்றுள்ளன. கிழப்புறாவினதும் அரேபிய கடற் பிரயாணியினதும் அனுபவ முதிர்ச்சியும், ஒல்லாந்தச் சிறுவனின் நாட்டுப் பற்றும், ஆற்றங்கரைக் குடிசையில் வசித்த கிழவியின் கடவுள் பக்தியும் எமது சிறார்களின் உள்ளங்களில் பசுமரத்தாணிபோல் பதியும் வகையில் ஆசிரியர் கதைகளை எழுதியுள்ளார்.

## 16423

**நம்பினோர் கெடுவதில்லை: சிறுவர் சிறுகதைகள்.** முகில்வண்ணன். (இயற்பெயர்: வேலுப்பிள்ளை சண்முகநாதன்). திருக்கோணமலை: கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 1ஆவது பதிப்பு, 2016. (திருக்கோணமலை: A.R.T. பிரின்ரர்ஸ், 82, திருஞானசம்பந்தர் வீதி).

xii, 62 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4628-40-3.

இந்நூலில் சிறுவர்களுக்கேற்ற வகையில் எழுதப்பட்ட உண்மையே பேசு, நம்பினோர் கெடுவதில்லை, இளம் சாதனையாளர், சிங்கராஜா, உயிர்களிடத்தில் அன்பு வேண்டும், அவனுக்குப் புரிந்தது, மாட்டிக்கொண்ட நரியார், நேர்மையின் பரிசு, அமைச்சரின் சாமர்த்தியம், குலப்பெருமை ஆகிய பத்துச் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

## 16424

**நரி சொன்ன 'யுரேகா": சிறுவர் எழுதிய சிறுவர் கதைகள்.** இ.சு.முரளிதரன், க.பரணிதரன் (தொகுப்பாசிரியர்கள்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, மார்ச் 2022. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

iv, 36 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-5881-41-3.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த 25 மாணவர்களின் கதைகள் தொகுப்பாக வெளிவருகின்றன. நிறம் மாறிய எலி (ஜெ.லிவியானா-தரம் 5), முதலில் உணவு (ஜெ.யஸ்மிகா-தரம் 8, நேர்மை (பி.தாரணி-தரம் 9), நிலா (ர.கஜதாரணி-தரம் 10), மூங்கிலைப் போல் வாழ் (பி.ஜனனி-தரம் 6), நம்பிக்கை (தே.பவீந்திரன்-தரம் 9), பூமியின் எதிர்காலம் (த.தேனுகன்-தரம் 8), பெண் சிங்கம் (மு.மேதினிகா- தரம் 10), கடவுளும் டைனோசரும் (க.கைலாஷ்-தரம் 7), முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் (பி. பிரகாஷினி-தரம் 7), தர்மம் (வி.நிவிந்தன்-தரம் 9), பொறுமை (த.அக்ஷிகா-தரம் 7), நன்மையே செய்க (மு.திபிஜா-தரம் 7), நரி சொன்ன யூரேகா (பி.சுபாங்கி-தரம் 8), அனுபவமே வாழ்க்கை (வி.அபிஷா-தரம் 10), பாதுகாப்பு (சு.திவ்வியன்-தரம் 8), நட்பின் பரிசு (மு.கோகனன்-தரம் 7), தீக்குச்சிகளின் உரையாடல் (ஜெ.ஜெயசுவேதா-தரம் 7), சேரும் இடம் (நா.டுகிந்தன்-தரம் 9), வண்ணத்துப்பூச்சியும் வெட்டுக்கிளியும் (அ.அஜிதன்-தரம் 5), பொன் வண்டு (ச.சாகித்தியானந்-தரம் 8), விளக்குமாற்றின் விளக்கம் (ச.சௌமியா-தரம் 9), உண்மையே வெல்லும் (த.நிருபனா-தரம் 10), அரை உயிர்கள் (க.கவிந்தியா-தரம்10), இரண்டு மைனாக்கள் (அ.கவிஷ்-தரம் 9) ஆகிய கதைகள் இந்நூலில் இடம்பெற்றிருக்கின்றன. 221 ஆவது ஜீவநதி வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.

**16425**

**நல்லதொரு பயணம்: சிறுவர் கதைகள்.** இக்பால் அலி. கண்டி: மக்கள் கலை இலக்கிய ஒன்றியம், 18/13, பூரணவத்தை, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2002. (கண்டி: பிரின்ட் எக்ஸ் கிராப்பிக்ஸ்).

28 பக்கம், விலை: ரூபா 35.00, அளவு: 18x12 சமீ., ISBN: 955-8335-02-9.

கவிஞர் இக்பால் அலியின் இந்நூல் சிறுவர்க்கான 5 கதைகளை உள்ளடக்குகின்றது. கதைகள் ஒவ்வொன்றும் ஏதொவொரு நற்சிந்தனையை சிறுவர் மனதில் விதைக் கின்றன. விடுதியில் அகதி மாணவர்கள் (ஒன்றுபட்டால் உலகை அறியலாம்), நல்ல மனிதர்கள் (பிறர் நலத்தால் ஒற்றுமை ஓங்கும்), விளையாட்டால் படித்த பாடம் (விளையாட்டாயினும் சீர்மை கொள்), உழைப்பாளி கியான் (சுட்ட புண் தடத்தை மற), வயலில் புல் பிடுங்கும் பெண்டுகள் (கூலியை சுரண்டி விடின் அழிவது பயிர்) ஆகிய ஐந்து தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன.

**16426**

**மீராவின் தம்பி & வேறு சில கதைகள்.** ஸ்ரீரஞ்சனி விஜேந்திரா. கனடா: ஸ்ரீரஞ்சனி விஜேந்திரா, 1ஆவது பதிப்பு, 2022. (அச்சக விபரம் தரப்படவில்லை).

64 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 15.5x21 சமீ., ISBN: 978-1-7775369-1-6.

மது (Madhu), விளையாட்டு (Playing), தாத்தாவின் அப்பம் (Grandpa's Hoppers), பனி நாள் (Snowy Day), நாய்க்குட்டி (Puppy), கனடா (Canada), மீராவின் தம்பி (Meera's Little Brother), மாமரம் (Mango Tree), சூரியன் (The Sun), தேனீ (The Bee) ஆகிய சிறுவர் கதைகள் ஆங்கில மொழிபெயர்ப்புடன் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நூலுக்கான ஓவியங்களை வே.ஜீவானந்தன் வரைந்துள்ளார்.

**16427**

**முனிராஜன் கதைகள்: சிறுவர் கதைகள்.** கேணிப்பித்தன் ச.அருளானந்தம். திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7, மத்திய வீதி, உவர் மலை, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2019. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L. 1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

v, 86 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 22x16 சமீ., ISBN: 978-955-54005-1-0.

இந்நூலில் பூக்குடிச்சான் குருவியின் செயல், யானைக்குட்டியின் நண்பர்கள், முனிராஜனின் கனவு, முனிராஜனின் கடற்பயணம், சிலந்தியும் தும்பியும், அணிலும் காகமும், தூக்கணாங்குருவியின் ஏக்கம், புறாமலையில் முனிராஜன், சுந்தரவல்லியின் குதிரை, உயிர்களிடத்தில் அன்பு வேண்டும், சந்திரமதியின் பலூன், சுந்தரிக்கு ஏற்ற சுந்தரன், மாவீர எலிராஜா, காட்டில் களியாட்டம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட பதினான்கு சிறுவர் கதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70128).

### 16428

**யாழ்ப்பாண அரசர் காலத்தில் வாழ்ந்த விகடப் புலவர் கதைகள்.** சபா ஜெயராசா. கொழும்பு: அரக்கற் (Arakkatu) வெளியீடு, 1ஆவது பதிப்பு, 2021. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*23 பக்கம், சித்திரம், விலை: ரூபா 400., அளவு: 30x22 சமீ.,* ISBN: *978-624-5781-18-6.*

வாய்மொழி மரபுகளுடன் கற்பனை நீட்சியையும் உள்ளடக்கிய இலக்கிய வகைமைக்கு "இணைப் புனைவியல்" (Cofiction) என்று பெயரிடப்படுகின்றது. சிறுவர் இலக்கியப் பெரும்பரப்பின் வளர்ச்சிக்கு இந்த வகைமை விசையூட்டி வருகின்றது. புலவரும் ஒட்டைப்பானையும், அரசர் முன்னர் அறிந்திடாத உணவு, அமைச்சரும் மண்வெட்டியும், குதிரையுடன் மோதிய சேவகர், முதலமைச்சரும் அழுகிய தேங்காயும், மருந்துப் பொருளை அறியாத அமைச்சர், காட்டின் நடுவில் ஒரு கல்விக்கூடம், கள்வனும் பணமுடிச்சும், குதிரைக்கு வந்த சோம்பல், நல்லூ ரில் ஒரு சுவடிக்கூடம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட அத்தகைய பத்து சிறுவர் கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. வாசிப்பு மலர்ச்சியை சிறுவயதிலிருந்து வளர்த்தெடுக்கும் செயற்பாடு, வளர்ச்சியடைந்த நாடுகளின் கல்வி முறைமையின் உட்கூறாகப் பொதியப்பட்டுள்ளது. கல்வியின் தர முன்னேற்றம் பற்றிய சமகாலக் கருத்தாடல்களில் வாசிப்பின் இருப்பு ஒரு முக்கிய எழுபொருளாக முன்வைக்கப்படுதல் குறிப்பிடத்தக்கது. அத்தகைய வாசிப்பின் தொடர் இருப்புக்கு இத்தகைய சிறுவர் இலக்கியங்களின் வருகை இன்றியமையாதன.

## 801. (41) சிறுவர் மொழிபெயர்ப்பு சிறுகதைகள்

### 16429

**புதிய ஈசாப் கதைகள்-1.** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 3(12), மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7ஆவது தெரு, வடபழநி, 1ஆவது பதிப்பு, 2008. (சென்னை: சிவம்ஸ்).

*47 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 30.00, அளவு: 22x15 சமீ.*

உலக உயிரினங்களில் மானிட இனமே உயர்ந்தது. விழிப்பு நிலை பெற்றது. சிறுவர்களுக்கு இன்றும் மிருகங்கள், பறவைகள் மூலம் ஒழுக்க நெறிகளைப் போதிக்க முயல்வது பிற்போக்கானது-உளவியல் சார்ந்ததல்ல என்று கூறும் ஆசிரியர், இரு தொகுதிகளாக வெளியிட்டுள்ள இந்நூலின் கதைகளில் மனிதர் மூலமே நீதிகளைக் கூறுகின்றார். முதலாவது தொகுதியில் 17 கதைகள் இடம் பெற்றுள்ளன. சுறுசுறுப்பானவன், பாம்பு பாம்பு, நாயும் எலும்புத் துண்டும், வாலை ஆட்டி வாழ்தல்?, நட்பு, ஆற்றில் கோடரி, வலை வீசாமல் மீன் கிடையாது, ஊர் வம்பு, மூளை இல்லாதவன், வாய்மை, கோவில் மணி, அழகான கால்கள், சுயபுத்தி இல்லாதவன், திருட்டும் தண்டனையும், தங்கக் கட்டியும் செங்கல்லும்,

பலசாலி யார்?, பணக்காரர் நட்பை நம்பாதே ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன.

### 16430

**புதிய ஈசாப் கதைகள்-2.** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 3(12), மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7ஆவது தெரு, வடபழநி, 1ஆவது பதிப்பு, 2008. (சென்னை: சிவம்ஸ்).

45 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 30.00, அளவு: 22x15 சமீ.

ஈசாப் கதைகள் புகழ்பெற்றவை. கிரேக்க அடிமையான ஈசாப் என்பவரால் கி.மு.ஆறாம் நூற்றாண்டில் கூறப்பட்டவை. இரு தொகுதிகளாக வெளியிடப் பட்டுள்ள இந்நூலின் இரண்டாவது தொகுதியில் 17 கதைகள் இடம்பெற்றுள்ளன. பகுத்தறிவு, மதில் மேல் மாலதி, குரங்காட்டி மனிதன், குற்றம் குற்றம் தான், பறவையும் மிருகமும், புறங்கூறல் கூடாது, நாணயமும் தொழிலும், வாய்ச்சொல்லில் வீரன், கலங்கிய தண்ணீரும் கண்ணீரும், அடிமை நாய், முதுமைக் காலம், பலவான் பலராமன், எட்டாத பழம் புளிக்கும், உழைப்பும் பயனும், திருட்டுத் திருட்டுத் தான், பசுமைப் பாதுகாப்பு, ஏமாற்றாதே ஏமாறாதே ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

## 801. (5) சிறுவர் கதைகள்/நாவல்கள்

### 16431

**அண்ணன் ஆமையும் தம்பி முயலும்.** செ.அன்புராசா. மன்னார்: முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம், முருங்கன், 1ஆவது பதிப்பு, மார்கழி 2020. (அச்சக விபரம் தரப்படவில்லை).

16 பக்கம், ஓவியங்கள், விலை: ரூபா 350., அளவு: 14.5x21 சமீ., ISBN: 978-955-4609-13-6.

சிறுவர்கள் காலம் காலமாக வாசித்துவந்த ஆமையும் முயலும் கதையை மறுவாசிப்புக்கு உட்படுத்தி இக்கதை எழுதப்பட்டுள்ளது. ஆமையை விட முயல் கெட்டித்தனமானது அல்லது ஆமையிடம் முயல் தோற்றுப்போனது போன்ற பார்வையில், மாற்றம் வேண்டும் என்பதை உணர்ந்து ஆமையும் முயலும் தனித்துவமான ஆற்றல்களை உடையன என்பதை நமது சிறார்கள் கண்டுகொள்ள வேண்டும் என்ற கருத்தை ஆசிரியர் இக்கதை வழியாக புரியவைக்கின்றார். ஓவியர் டொமினிக் ஜீவாவின் வண்ண ஓவியங்கள் பக்கங்கள் தோறும் சிறுவர்களை மகிழ்விக்கின்றன.

### 16432

**என் உடல் என்னுடையதே.** நுவன் தொட்டவத்த (சிங்கள மூலம்), அனுஷா சிவலிங்கம் (தமிழாக்கம்). கொழும்பு 10: சமயவர்தன புத்தகசாலை, இல.61, ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர் வீதி (மாளிகாகந்த வீதி), மருதானை, 1ஆவது

*பதிப்பு, 2022. (கொழும்பு 10: சமயவர்தன அச்சுப் பதிப்பாளர், இல. 53, ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர் வீதி, மாளிகாகந்த வீதி, மருதானை).*

*20 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 670., அளவு: 28x22 சமீ.,* ISBN: *978-624-5713-21-9.*

*சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வரும் இன்றைய சூழலில் அவற்றிலிருந்து எமது குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான சிறந்த வழிமுறையாக சிறுவர்களுக்கு இது தொடர்பாக அறிவுறுத்தும் வழிமுறை முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இவ்வாறான ஆபத்துகள் குறித்தும் அவற்றிலிருந்து சிறுவர்கள் எவ்வாறு தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்பது குறித்தும் சிறுவயதிலேயே அவர்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு இச்சிறுவர் கதை நூல் பயன்படுகின்றது. வைத்தியர் நுவன் தொட்டவத்த எழுதிய இந்நூலுக்கான விளக்கச் சித்திரங்களை கட்புல, ஆற்றுகைக் கலைகளுக்கான பல்கலைக்கழகத்தின் மாணவியான சிந்துபமா சந்திரசேன வரைந்துள்ளார். தமிழ் மொழிபெயர்ப்பாளரான அனுஷா சிவலிங்கம் கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஊடக கற்கைத் துறையில் விரிவுரையாளராகக் கடமையாற்றிவருகின்றார்.*

## 16433

**சிந்துவின் தைப்பொங்கல்** (Sinthu's Thai Pongal). *சிவகாமி, ஸ்ரீரஞ்சனி விஜேந்திரா. கனடா: ஸ்ரீரஞ்சனி விஜேந்திரா, 1ஆவது பதிப்பு, 2019. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(40) பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x20.5 சமீ.,* ISBN: *978-0-9738750-5-8.*

*இச்சிறுவர் இலக்கியம் கனடாவில் வாழும் ஒரு புலம்பெயர்ந்த தமிழ்க் குடும்பத்தின் பார்வையில் தமிழரின் கொண்டாட்டங்களில் ஒன்றான தைப்பொங்கல் பற்றிக் கூறுகின்றது. தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளில் ஒவ்வொரு பக்கமும் வண்ணச் சித்திரங்களுடன் கூறப்படுகின்றது. கனடாவில் பிறந்து வளர்ந்த சிந்து, யாழ்ப்பாணத்தில் தாத்தா, பாட்டியுடன் தைப்பொங்கலைக் கொண்டாடுகிறாள். சித்திரங்களை வே.ஜீவானந்தன் வரைந்துள்ளார். புலம்பெயர் வாழ்க்கை, குடும்பம், பாரம்பரியம் என்பவற்றின் யதார்த்தத்தை இது தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது. எம்மை நிலை நிறுத்தும் இருமுகத் தன்மை, வருடாந்த அறுவடை மற்றும் குடும்பத்தவரிடையே காணப்படும் அன்பு ஆகியவற்றை இந்தக் கதை கொண்டாடுகின்றது. ஒக்டோபர் மாதத்தில் வரும் நன்றி நவிலல்* (Thanks Giving) *நாளைப்போல ஜனவரி மாதத்தின் நடுப்பகுதியில் தமிழ் மாதங்களின் முதலாம் மாதமான தை மாதத்தின் முதலாம் நாளில் தைப்பொங்கல் கொண்டாடப்படுவதை இந்நூல் கதையினூடாக விளக்குகின்றது.*

### 16434

**மகாபாரதக் கதைகள்: கண்ணன் விடு தூது.** ஒமேகா. கொழும்பு 15: ஒமேகா வெளியீடு, ஒமேகா கணித விஞ்ஞான வளநிலையம், 478/31 B, அளுத்மாவத்தை வீதி, 1ஆவது பதிப்பு, 2022. (அச்சக விபரம் தரப்படவில்லை).

76 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-20142-7-9.

முன்னோட்டம், கண்ணனும் தர்மபுத்திரர்களும், துரியோதனன் சபைக்கு கண்ணன் எழுந்தருளல், துரியோதனனின் சபையிலே கண்ணனின் சொற்போர், துரியோதன னுக்கு ரிஷிகள் உபதேசம், கிருஷ்ணன் கையேந்தி நின்ற காட்சி ஆகிய ஆறு அத்தியாயங்களின் கீழ் மகாபாரதத்தில் இடம்பெறும் கண்ணன் விடு தூது என்ற பகுதி இளையோருக்கு ஏற்ற வகையில் இந்நூலில் தரப்பட்டுள்ளது.

## 801. (51) சிறுவர் மொழிபெயர்ப்பு நாவல்கள்

### 16435

**அக்காவும் தங்கையும்.** யொரிகோ சுட்சுய் (ஜப்பானிய மூலம்), ஷியாமா அமரசிரி (தமிழாக்கம்). நாவலை: சுராங்கனி வொலன்டரி சேர்விஸஸ், 198/15, நாவல வீதி, 2ஆவது பதிப்பு, ஜுலை 2017, 1ஆவது பதிப்பு, மார்ச் 2011. (மஹரகம: தரஞ்ஜி பிரின்டர்ஸ், இல. 506, ஹைலெவல் வீதி, நாவின்ன).

32 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x27 சமீ., ISBN: 978-955-1123-13-0.

அகிகோ ஹய்சியின் (Akiko Hayashi) சித்திரங்களுடன் வெளிவந்துள்ள இச்சிறுவர் கதை நூல், ஜப்பானிய மொழியில் யொரிகோ சுட்சுய் (Yariko Tsutsui) அவர்களால் 1979இல் வெளியிடப்பட்ட Asae To Chiisai Imoto (Asae and her Little sister) என்ற சிறுவர் இலக்கியத்தின் தமிழாக்கமாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70285).

### 16436

**கங்கைக்கரைக் காடு: சிறுவர் நாவல்.** சோமவீர சேனாநாயக்க (சிங்கள மூலம்), திக்குவல்லை கமால் (தமிழாக்கம்). கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1ஆவது பதிப்பு, 2014. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

(5), 6-72 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-955-30-4896-7.

சோமவீர சேனாநாயக்க எழுதிய இச்சிறுவர் நாவலின் ஒரு பகுதி தரம் ஐந்து சிங்கள மொழிப் பாடநூலில் இடம்பெற்றும் உள்ளது. அதனால் உந்தப்பெற்ற மாணவர்கள் முழுநாவலையும் வாசித்துவிட ஆர்வம் கொண்டதன் விளைவாக இந்நூல் பல பதிப்புகளை குறுகிய காலத்தில் கண்டிருந்தது. அந்த மூலப்பிரதியின் தமிழாக்கமே இதுவாகும். வளரிளம் பருவத்தினருக்குரிய விறுவிறுப்பான போக்கில் எழுதப்பட்ட இளையோர் நாவல் இது.

## 16437

**தங்கக்குடம்.** *முஹம்மத் சித்தீக் (மூலம்), மௌலவி முஹம்மத் ரஸீன் (மொழிபெயர்ப்பு). குருநாகல்: தாருல் குர்ஆன் பப்ளிஷர்ஸ், இல. 100, கண்டி வீதி, மல்லவபிட்டிய, 1ஆவது பதிப்பு, 2016. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).*

iv, *20 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 180., அளவு: 24*x*17 சமீ.*, ISBN: *978-955-43511-0-3.*

*6-12 வயதுக்கிடைப்பட்டோருக்கான சிறுவர் நூல். அரபு மொழியிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது. இஸ்லாமிய வரலாற்று நிகழ்வொன்றினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நூல். சாபிர் என்பவர் ஓர் ஏழை. தன் குடும்பம் வசிக்கவென வீடொன்றை விலைக்குப்பெற அலீ என்பவரைச் சந்திக்கிறார். வீட்டை வாங்கிய பின்னர் அங்கிருந்து பழைய தங்கக் குடமொன்றினைக் கண்டெடுக்கிறார். அதன் உரிமையாளர் முன்னைய வீட்டு உரிமையாளரே எனக்கருதி அவரிடம் அதனை ஒப்படைக்கச் செல்கிறார். அலி அதனை ஏற்க மறுத்ததால் உள்ளூர் தலைவரிடம் நீதி கேட்கச் செல்கின்றனர். தலைவரின் தீர்ப்பு வித்தியாசமாக அமைந்திருப்பதுதான் கதையின் கரு. நிதியும் நேர்மையும் தான் இறுதியில் வெல்லும் என்ற கருத்தை சிறுவர்களிடையே வலியுறுத்தும் நூல் இது. குருணாகல் மாவட்டத்தில் மல்லவபிட்டிய என்ற ஊரில் பிறந்த மௌலவி முஹம்மத் ரஸீன் தன் ஆரம்பக் கல்வியை குருணாகல ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல வித்தியாலயத்தில் பெற்றுக்கொண்டார். தாருல் உலூம் ஹாஷிமிய்யஹ் அரபுக் கல்லூரியில் மார்க்கக் கல்வியைக் கற்று, இந்தியாவில் தமிழ்நாடு ஜாமிஆஅல் உஸ்வதுல் ஹஸனா அரபுக் கல்லூரியில் மௌலவி பட்டத்தைப் பெற்றுக் கொண்டவர். இதுவரை தமிழில் 57 நூல்களையும் சிங்கள மொழியில் 12 நூல்களையும் ஆங்கிலத்தில் ஒரு நூலையும் எழுதியுள்ளார். (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27075).*

## 16438

**நிலுக்கின் நண்பர்கள்.** *ரோசி பெர்ணாண்டோ (சிங்கள மூலம்), ஆர்.கௌசிகன் (தமிழாக்கம்). தெகிவளை: ஜிஹான் புத்தகசாலை, 144 C, சேர். டீ.பீ.ஜயசிங்க மாவத்தை, 1ஆவது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (தெகிவளை: சஞ்சனா ஓப்செட் பிரின்டர்ஸ், 21/21*B, *பர்ணாந்து வீதி).*

*32 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 23*x*16 சமீ.*, ISBN: *978-955-593-565-4.*

*நீங்கள் எப்போதாவது ஏதோவொன்றைப் பெற வேண்டி கனவு கண்டிருக்கிறீர்களா? அல்லது நீங்கள் கண்ட கனவு நிஜமாக மாற விரும்பியிருக்கிறீர்களா? உங்கள் பதில் "ஆம்" என்றால், இவ்வலகத்தில் நீங்கள் அதிர்ஷ்டமான சிறுவர்கள் ஆவீர்கள் நிலுக்கும் கூட அவ்வாறான அதிர்ஷ்டம் மிக்க ஒரு சிறுவனாவான். அவனது வீர தீரச் செயல்களை மேலும் தெரிந்துகொள்ள இக்கதையை வாசியுங்கள். "வாசிக்கும் எனது இளஞ்சிறார்" என்ற தொடரில் வெளிவந்துள்ள முதலாவது நூல் இதுவாகும்.*

16439

**யாழ்ப்பாணப் பள்ளிக்கூடம் (இளையோர் நாவல்).** சந்தரசி சுதுசிங்ஹ (சிங்கள மூலம்), கண்ணம்மா (தமிழாக்கம்). கொழும்பு 6: இலக்கியன் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

(8), 62 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 390., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-624-6165-00-0.

சிறுவர்களிடையே இன வேறுபாட்டினைக் களைந்து இன ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் மும்மொழிகளிலும் எழுதப்பட்ட யாழ்ப்பாணப் பள்ளிக் கூடம் சிறுவர் கதையின் தமிழ் வடிவம் இதுவாகும். மாத்தறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு, யாழ்ப்பாணப் பாடசாலை, நல்லூர் ஐஸ்கிரீம், யாழ்ப்பாண அயலவர்கள், ஒரே பெயர், அற்புதப் பரிசு, நெடுந்தீவுப் பயணம், பண்பான ஆசிரியர், யாழ்ப்பாண நூலகம் ஆகிய அத்தியாயங்களில் இக்கதை விரிகின்றது. ஆசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், யாழ்ப்பாணக் கிராமங்களிலும் தான் தங்கியிருந்த காலத்தில் கண்டுணர்ந்த தமிழர்களின் கலாச்சாரத்தினை அவதானித்து அதனை தன் கதாபாத்திரங்களினூடாக இந்நூலில் பதிவுசெய்தி ருக்கிறார். யாழ்ப்பாண மக்களின் தனித்துவமான கலாச்சாரம், பண்பாடு பற்றிய புரிதலை இதன்மூலம் சிங்கள மக்களிடையே கொண்டு செல்ல முயன்றிருக்கிறார்.

## 801. (6) சிறுவர்க்கான கட்டுரைகள்

### 16440

**கண்ணனும் தாத்தாவும்.** முத்து (இயற்பெயர்: திருமதி தவமணி மனோகரன்). லண்டன்: திருமதி தவமணி மனோகரன், 1ஆவது பதிப்பு, ஜுலை 2022. (யாழ்ப்பாணம்: சுடர்நிலவு கிராப்பிக்ஸ், இணுவில் கிழக்கு, இணுவில்).

viii, 157 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x18 சமீ.

"கண்ணனும் தாத்தாவும்" என்ற தலைப்பில் தாத்தா பேரனுக்குச் சமயக் கருத்துகள், தேவார திருமுறைகள், தமிழர் தம் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டியவை மற்றும் நீதி நெறிகள் யாவையும் கூறி மகிழ்ந்து பேரனையும் மகிழ வைப்பதாக எழுதப்பட்ட உரையாடல்கள் இவை. லண்டனில் வெளிவரும் "கலசம்" ஆன்மீக இதழில் இத்தொடர் முன்னர் பிரசுரமாகியிருந்தது. அதன் நூல்வடிவம் இதுவாகும். திருமதி தவமணி மனோகரன் இணுவில் தெற்கை பிறப்பிடமாகக் கொண்டவர். பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப் பட்டதாரியான இவர், திருக்கோணமலை, யாழ்ப்பாணக் கச்சேரிகளில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றி திருமணத்தின் பின்னர் லண்டனுக்குப் புலம்பெயர்ந்தவர். அங்கு திருவள்ளுவர் தமிழ்ப் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

## 801. (7) சிறுவர்க்கான பலவின நூல்கள்

### 16441

**மேடையிலே பேசுவோம்: சிறுவர்களுக்கான மேடைப்பேச்சுகள்.** எஸ்.சிவலிங்கராஜா. யாழ்ப்பாணம்: எஸ்.சிவலிங்கராஜா, "ஸ்ரீவித்யா", பிள்ளையார் வீதி, திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு, 2017. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 681, காங்கேசன்துறை வீதி).

viii, 68 பக்கம், விலை: ரூபா 480., அளவு: 24.5x19 சமீ., ISBN: 978-955-38439-0-6.

ஆண்டு ஒன்றில் இருந்து ஆண்டு நான்கு வரையில் பயிலும் மாணவர்களின் பாடசாலை மேடைகளில் பயன்படுத்துவதற்கென எழுதப்பட்ட மேடைப் பேச்சுக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. சிறுவர்களுக்கான கட்டுரைக்கும், மேடைப் பேச்சுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை உணர்ந்து பேசுபவர்களின் வயது, சொற்களஞ்சியம், சூழல், உளவியல் முதலானவற்றை மனங்கொண்டு இப்பேச்சுக்கள் பெரும்பாலும் 15-20 வசனங்கள் கொண்டதாகத் தயாரிக்கப் பட்டுள்ளன. என் அம்மா, தாய் அன்பு, என் ஆசிரியர், எனது பாடசாலை, எங்கள் வீடு, காலைக்காட்சி, மாலைக்காட்சி, கடற்கரைக்காட்சி, மழைக்காட்சி, சுப்பிரமணிய பாரதியார், ஆறுமுக நாவலர், சோமசுந்தரப் புலவர், ஔவையார், விபுலாநந்தர், தனிநாயகம் அடிகளார், சுவாமி ஞானப்பிரகாசர், திருவள்ளுவர், தைப்பொங்கல், தீபாவளி, நவராத்திரி, ஆடிப்பிறப்பு, தேர்த்திருவிழா, நாட்டார் பாடல்கள், சுற்றாடலைப் பாதுகாப்போம், சுத்தம் சுகம் தரும், உழவுத் தொழில், கல்விச் செல்வம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 30 பேச்சுக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

## 894.8(01) தமிழ் இலக்கியப் பாடநூல்கள்

### 16442

**தமிழ் இலக்கியம் 10-11ஆம் ஆண்டு.** கல்வி வெளியீட்டுத் திணைக்களம். கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இசுறுபாய, பத்தரமுல்ல, 13ஆவது பதிப்பு, 1998, 1ஆவது பதிப்பு, 1986. (இரத்மலானை: சர்வோதய விஸ்வலேகா அச்சகம், இல.41, லும்பினி அவெனியூ).

vii, 171 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

10ஆம் 11ஆம் ஆண்டு மாணவர்களுக்கான இந்நூலில் ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் வினாக்கள் சேர்க்கப்பட்டு மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளது. புகழ் பெற்ற புலவர்களும் எழுத்தாளர்களும் ஆக்கியுள்ள செய்யுள்களிலும் உரை நடைகளிலுமிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட சில பகுதிகள் இத்தொகுப்பில் இடம் பெறுகின்றன. கம்பராமாயணக் காட்சிகள் (அவையடக்கம், சிறப்புப் பாயிரம், கம்பன் அபர பிரமன், ஆறு, குலஞ் சுரக்கும் ஒழுக்கம்), நளவெண்பா (சுயம்வர காண்டம்), இஸ்லாமியக் கலையும் பண்பும், நாலடியார், மாதரும் மலர்ப் பொய்கையும், ஆசாரக் கோவை, சிரிக்கத் தெரிந்த பாரசீகர், பெரிய புராணம்,

கர்ணனும் கும்பகர்ணனும், இலங்கை வளம், கலையின் விளக்கம், சீறாப்புராணம்-நபி அவதாரப் படலம், நீதிக்கும் பின் பாசம், கங்கையில் விடுத்த ஓலை, ஒன்றுக்கு ஆயிரம் ஆயிரம், செய்னம்பு நாச்சியார் மான்மியம், நன்றிப் பெருக்கு ஆகிய 17 பாடங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

## 16443

**தமிழ் மொழியும் இலக்கியமும்-தரம் 9**. கீதா கணேஷ். யாழ்ப்பாணம்: திருமதி கணேஷ் லோககீதா, சிற்பனை, வேலணை மேற்கு, 1ஆவது பதிப்பு, தை 2018. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L. 1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

vi, 272 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 20x14.5 சமீ., ISBN: 955-705-141-4.

இந்நூலில் தரம் ஒன்பதிற்குரிய புதிய பாடத்திட்டம்-2018 இற்கு அமைவாக பாட அலகு விளக்கங்களுடனும் பயிற்சிகள் விடைகளுடனும் ஆக்கத்திறன் செயற் பாடுகள் மொழிவளம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து 21 அலகுகளில் இடம்பெற்றுள்ளன. நல்லெண்ணங்களைத் தேர்ந்தெடுப்போம், உண்மைக்குப் பரிசு, ஒரு சின்னஞ்சிறு பூச்சி, இதயம் அழுகிறது, மருமகனுக்கு விருந்து, யார் சிறந்தவர், மலைநாட்டுப் பிரயாணம், இனியவை கூறல், வியக்கும் மனம் வேண்டும், செய்யும் தொழிலே தெய்வம், செய்யுளை மனனஞ் செய்யும் வழி, எறும்புக் குடும்பம், தந்தை மகளுக்கு எழுதிய புகழ்பெற்ற கடிதம், வான்குருவியின் கூடு, நளவெண்பா, சகுந்தலை நாடகம், தோற்றுப்பார், நகரத்தின் நிழல், காட்டுவழி, சகுந்தலை நாடகம்-2, பிசிராந்தையார் கண்ட சமுதாயக் காட்சி ஆகிய 21 அலகுகளும் அவற்றைத் தொடர்ந்து மொழி வளம், விடைகள் ஆகிய இரு பகுதிகளும் இடம்பெற்றுள்ளன. திருமதி லோககீதா கணேஷ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று இளங்கலைமாணிப் பட்டத்தையும், பேராதனைப் பல்கலைக் கழகத்தில் முதுமாணிப் பட்டத்தையும், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வியையும் பயின்றவர். தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ்மொழித்துறை விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

## 16444

**மகாபாரதம் ஆரணிய பருவம்: அருச்சுனன் றவநிலைச்சருக்கம் (உரையுடன்)**. ஸ்ரீ வில்லிபுத்தூராழ்வார். சுன்னாகம்: வட இலங்கை தமிழ்நூற் பதிப்பகம், 1ஆவது பதிப்பு, 1942. (அச்சக விபரம் தரப்படவில்லை).

v, (3), 135 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13 சமீ.

1943 ஆங்கில எஸ்.எஸ்.சி. பரீட்சைக்குரியது. நூலாசிரியர் வரலாறு, மகா பாரதச் சுருக்கம், முன் சரித்திரச் சுருக்கம், அருச்சுனன் றவநிலைச் சருக்கச் சுருக்கம், அருச்சுனன் றவநிலைச் சருக்கம் (செய்யுள்), மேற்படி உரை ஆகிய ஆறு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. வைஷ்ணவ சமயத்தைச் சார்ந்த ஸ்ரீ வில்லிபுத்தூராழ்வார், திருமுனைப்பாடி நாட்டிலுள்ள சனியூர் என்ற கிராமத்தில் கி.பி. 1450-1471 காலகட்டத்தில் அவதரித்தவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 0324).

## 16445

**வில்லி பாரதம்: வாரணாவதச் சருக்கம்.** வில்லிபுத்தூராழ்வார் (மூலம்), ம.வே.திருஞானசம்பந்தபிள்ளை (பரிசோதித்தவர்). யாழ்ப்பாணம்: தா.க.சு., மேலைப் புலோலி, 1ஆவது பதிப்பு, ஜனவரி 1930. (பருத்தித்துறை: ஸ்ரீ. திருஞானசம்பந்தபிள்ளை, கலாநிதி யந்திரசாலை).

64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

வில்லிபாரதம் ஆதிபருவத்துள்ள இவ்வாரணாவதச் சருக்கம் 1930ஆம் ஆண்டு கேம்பிரிட்ஜ் சீனியர் சேர்ட்டிவிக்கற் வகுப்புத் தமிழ்ப் பாடங்களுள் ஒன்றாக நியமிக்கப்பெற்றுள்ளது. வில்லிபாரதத்தின் வாரணாவதச் சருக்கம் பீமன் பாதாளஞ்சென்று மீண்டது, துரோணன் குருவானது, அரசகுமாரர்கள் துரோணரிடம் பயின்று சிறப்புறுதல், கர்ணன் அங்க நாட்டிற்கு அரசனானது, துரோணனின் சபதம் நிறைவேறுதல், திட்டத்துய்ம்நன், திரௌபதி ஆகியோரின் பிறப்பு, யுதிஷ்டிரனுக்கு இளவரசுப் பட்டம் கட்டியது, பாண்டவர்கள் வாரணாவதத்தில் அரசு வீற்றிருத்தல், அரக்கு மாளிகை எரிய அதனின்றும் பாண்டவர்கள் தப்பியது எனப் பாடங்களை உள்ளடக்கியது. இச் சருக்கத்திற்கு வித்துவசிரோன்மணி ஸ்ரீமத் ந.ச.பொன்னம்பல பிள்ளையவர்கள் செய்த அரிய உரையை ஆதாரமாகக் கொண்டு பள்ளி மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் சந்திகளைப் பிரித்தும் கடினமான பதங்களுக்குப் பதிலாக இலகுவான சொற்களைப் பிரதியீடு செய்தும் ஒரு உரை எழுதி, அதனை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ்ப் போதகாசிரியரும் இந்து சாதனப் பத்திரிகையாசிரியருமாகிய ஸ்ரீ.ம.வே. திருஞானசம்பந்த பிள்ளையைக் கொண்டு பரிசோதிப்பித்து வெளியிட்டுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 0316).

## 16446

**ஸ்ரீ வில்லி பாரதம்: புட்ப யாத்திரைச் சருக்கம்- மூலமும் உரைக்குறிப்புகளும்.** கா.தம்பையா. சாவகச்சேரி: பண்டிதர் கா.தம்பையா, ஸ்ரீபாரதி புத்தகசாலை, 1ஆவது பதிப்பு, 1948. (யாழ்ப்பாணம்: அர்ச். பிலோமினா அச்சியந்திரசாலை, 102, பெரிய தெரு).

viii, 99 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

மகா பாரதக் கதையில் ஒரு பகுதி இது. ஒரு நாள் திரௌபதியின் முன்னால் வானிலிருந்து ஒரு மலர் விழுகின்றது. அவள் அம்மலரைக் கண்டு அதனை விரும்பி, அது போலொரு மலர் தனக்கு வேண்டுமென்றும் அதனைத் தேடிச்சென்று பெற்றுத் தரும்படியும் வீமனிடம் கேட்கிறாள். வீமன் முனிவரிடம் அம்மலர் பற்றி வினவி, அவர் சொற்படி குபேரபுரிக்கு இந்த புட்பத்தைத் தேடிப்பெற யாத்திரை போகின்றான். "புட்ப யாத்திரை" சென்ற வீமன் தான் போகும் வழியிற் கதலி வனத்துக் காவலரை அழித்து, அப்பால் தன் அண்ணனான அநுமானைக் கண்டு, பின் நிகழும் போரில் அனுமக் கொடி பார்த்தற்பொருட்டு விஸ்வரூபம் கண்டு அவனருள் பெற்று, இயக்கனூர்ச் சோலையை அடைகின்றான். அங்கே காவல் செய்தோர் பலரையும், குபேரனால் அனுப்பப் பட்டோர் பலரையும் அதம்

செய்து, குபேரனுடைய மகனாற் சமாதானப்படுத்தப்பட்டு தான் தேடி வந்த மலரைத் தருவுடன் பெற்று, தன்னைத் தேடி வந்த தருமனுடனும், கடோற்கஜனுடனும் மீண்டும் தன் இருப்பிடம் வந்து பாஞ்சாலி மகிழ மலர் நல்கி இருந்தான். இந்நூலில் இக்கதைப் பகுதிக்குரிய செய்யுட்பகுதியும் அதன் உரைக் குறிப்பும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 0318).

## 894.8 (05) இலக்கிய அமைப்புகளின்/சஞ்சிகைகளின் சிறப்பிதழ்கள்

### 16447

**இலக்கியம்: விசேட மலர் 2022.** ஸ்ரீ பிரசாந்தன், சு.முரளிதரன், எஸ்.தனுசாந்த், எஸ்.சிவநேசன் (ஆசிரியர் குழு). கொழும்பு: அரச இலக்கிய ஆலோசனைக் குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம், உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, 1ஆவது பதிப்பு, 2022. (கொழும்பு 10: பாஸ்ட் பிரின்டரி லிமிட்டெட், இல.165, தேவானம்பியதிஸ்ஸ மாவத்தை).

208 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-5726-49-3.

2022ஆம் ஆண்டின் இலங்கை தேசிய சாகித்திய தின விழாவையொட்டி வெளியிடப்பட்ட விசேட மலர். இதில் உள்ள 18 இலக்கிய ஆய்வுக் கட்டுரைகளில் 13 சிங்களக் கட்டுரைகளும், மூன்று தமிழ்க் கட்டுரைகளும், இரு ஆங்கிலக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. ஆறுமுக நாவலரது பெரியபுராண வசனம் (ஸ்ரீ.பிரசாந்தன்), கடந்த பத்து ஆண்டுகளில் இலங்கை தமிழ் நாவல்களின் வருகையும் அங்கீகாரமும் (சு.முரளிதரன்), ஈழத்தில் நாட்டார் பாடல் தொகுப்பின் முன்னோடி முயற்சிகள் (க.இரகுபரன்) ஆகிய மூன்று கட்டுரைகள் தமிழ்மொழியில் இடம்பெற்றுள்ளன.

### 16448

**உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாடு சிங்கப்பூர் அக்டோபர் 2011: மாநாட்டு மலர்.** நா.ஆண்டியப்பன் (மலராசிரியர்). சிங்கப்பூர் 969547: சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம், இல.182, Cecil Street , 04-10, TAPAC, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2011. (சிங்கப்பூர்: Percetakan Halus Sdn.Bhd).

xiv, 266 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம், 2011ஆம் ஆண்டில் ஒக்டோபர் 28-30ஆம் திகதிகளில் நடாத்தி முடித்த உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டு மலர் இது. "முனைவர் கா.சிவத்தம்பியின் ஈழத்தில் தமிழ் இலக்கியம்" என்ற தலைப்பில் இராம கண்ணபிரான் (சிங்கப்பூர்) அவர்களின் கட்டுரையும், "கெட்ட போரிடும் உலகத்தை வேரொடும் சாய்ப்போம்" என்ற தலைப்பில் கம்பவாரிதி ஜெயராஜ் (இலங்கை) அவர்களின் கட்டுரையும், ஈழத்தவர்கள் தொடர்பான ஆக்கங்களாக

இடம்பெற்றுள்ளன. மலர்க்குழுவில் சுப.அருணாசலம், சித்ரா ரமேஷ், பொன் சுந்தரராசு, செ.ப.பன்னீர்செல்வம் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். நிரல் குழுவில் (Conference Content Committee) அருண் மகிழ்நன், முனைவர் சேரன் உருத்திரமூர்த்தி, நாகலட்சுமி சிவசம்பு, மாலன், முனைவர் ரெ.கார்த்திகேசு, இராம கண்ணபிரான், நாராயணன் ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.

## 16449

**கலை நிலம் 2016-2017**. *றஜனி நரேந்திரா (மலராசிரியர்). உடுவில்: வலிதெற்கு பிரதேச கலாசாரப் பேரவை, பிரதேசச் செயலகம், 1ஆவது பதிப்பு, 2018. (யாழ்ப்பாணம்: முத்து பிரின்டர்ஸ், 122, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்).*

xiv, *130 பக்கம், ஒளிப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25*x*18 சமீ.*

*உடுவில் பிரதேசத்தின் தொன்மையான விடயங்களை இம்மலரிலே ஆவணப் படுத்துவதுடன், பல்வேறு அறிவியல்சார் பெரியோர்களின் கருத்துக்களை தொகுப்பதாகவும், வளர்ந்துவரும் எழுத்தாளருக்கு களம் அமைத்துத் தருவதாகவும் இம்மலர் அமைந்துள்ளது. மலராக்கக் குழுவில் மதுமதி வசந்தகுமார், றஜனி நரேந்திரா, எஸ்.தர்ப்பணா, ஐ.ஐ.அகல்யா, ம.ஜெயகாந்தன், செ.திருஞானகௌரி ஆகியோர் பணியாற்றியுள்ளனர். இதில் "கட்டுரைகள்" (கற்றல் கற்பித்தல் செயற் பாட்டில் இலக்கியவாதத்தின் போக்கு, உடல் உள ஆரோக்கியத்தைப் பேண உதவும் இந்து சமய நடைமுறைகள், பண்டைய தமிழர்களின் பண்பாடு, மறைந்து போகும் மரபுவழி மரணச்சடங்கு, திருவாசகம் சுட்டும் இறை-ஆடல் சிறப்பு, பிடல் காஸ்ரோ எனும் மாமனிதன் வரலாறு பற்றிய பார்வை, சைவ சமய வழிபாட்டுடன் இணைந்து கைக்கொள்ளப்படும் சம்பிரதாயங்களில் பிரதேச ரீதியாக மாறுபடும் சில நடைமுறைகள் ஓர் அவதானிப்பு, வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள இடப்பெயர்கள், நற்றமிழ் நண்ணிய நயத்தகு நக்கீரன், இணுவில் பொது நூலகம், இணுவிலின் கல்வி அபிவிருத்திக்கான அடித்தளம், மேலைத்தேய அறிஞர்களின் தமிழ்ப்பணி, ஓம் விழித்திடு-செயற்பாடு-வழிபாடு, தரைக்கீழ் நீரும் நீர் மாசாக்கமும், இணுவில் கிராமத்தின் நாடக வளர்ச்சி, பெண் விடுதலை நோக்கி, இந்துக்களது வாழ்வில் புருடார்த்தங்கள் செலுத்திய செல்வாக்கு, பாரம்பரியத்தில் சில பதிவு, கனிகொடுக்கும் தேசத்தை உருவாக்குவோம், உயிருக்கு ஆக்கம் அளிப்பது சமயம், ஆரோக்கிய ஆயுளுடன் வாழுவோம் வாரீர், வாழ்வின் வெற்றிப்படி, திருமணப் பொருத்தத்தில் செவ்வாய் தோஷம், கோபுர தரிசனம் கோடி புண்ணியம்), "சிறுகதைகள் (வித்தை விதைத்தவன், பொழுதொன்று புலராதோ?), கவிதைகள் (எங்கே செல்கிறோம், களைகள் களைக, நுளம்பால் குழம்பும் வாழ்வு, கனவொரு பாடம்) ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் ஆக்கங்கள் வகுத்துத் தரப்பட்டுள்ளன.*

### 16450

**காற்றுவெளி-கவிதைச் சிறப்பிதழ்.** ஷோபா (ஆசிரியர்). லண்டன் E13 0JX: முல்லை அமுதன், 34, Redriffe Road, Plaistow, 1ஆவது பதிப்பு, ஜுலை 2006. (லண்டன்: ஜே.ஆர். பிரின்ட், இல. 61, Hoe Street, Walthamstow, London E17 4QR).

24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

"கவிதைக் கலை" என்ற தலைப்பில் திருமதி விக்னா பாக்கியநாதன் அவர்களின் கட்டுரையுடன் தொடங்கும் இக்கவிதைச் சிறப்பிதழில் முனைப்பு (சிவரமணி), முகம் மறுக்கப்பட்டவர்கள் (மைத்திரேயி), இது காதல் பற்றிய குறிப்பு-2 (பைசால்), நியாயத்தின் நிசப்தம் (மோகனா), புதிய பரிமாணம் (அம்பலவாணன் புவனேந்திரன்), சவால் (பசுவய்யா), புதிய உணர்வுகள் (தங்கராஜா குமுதினி), சிந்தனை செய் (த.சு.மணியம்), திட்டவா (தாமரைத்தீவான்), வரம் வேண்டும் தாயே (சாந்தினி வரதராஜன்), அடையாளங்கள்-சில குறிப்புகள் (மாரி மகேந்திரன்), நாளைய நாள் எப்படியோ? (வண்ணை தெய்வம்), இப்போது தூங்கட்டும் (கூடலூர் ஆனந்தி), இலக்கிய தமிழ் வளவு (வேதா இலங்காதிலகம்) ஆகிய கவிதைகளும், கவிஞர் முல்லையூரான் பற்றிய நினைவுக் குறிப்பொன்றும், ஈழத்துப் பெண்கள் கவிதைகள் பற்றி சி.ரமேஷ் "தெரிதல்" சிற்றிதழுக்கு எழுதிய கட்டுரையொன்றும் இடம்பெற்றுள்ளன.

### 16451

**மருத முகில் 2022 (இதழ்10).** வீரசிங்கம் பிரதீபன் (மலராசிரியர்). வவுனியா: பிரதேச செயலகம், வவுனியா வடக்கு, 1ஆவது பதிப்பு, 2022. (வவுனியா: வாணி கணனிப் பதிப்பகம், இல. 85, கந்தசுவாமி கோவில் வீதி).

x, 248 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x16.5 சமீ., ISSN: 2345-9077.

வவுனியா வடக்கில் தமிழர்களின் இருப்பு, கல்வியில் மீண்டெழும் நெடுங்கேணிப் பிரதேசம், மாவட்டப் பொது நிர்வாகத்தின் கீழ் வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி ஐயனாரும் நொச்சியடிக் கேணியும் ஒரு வரலாற்று ஆய்வு, வவுனியா வடக்கு பிரதேசத்தில் ஐயனார் வழிபாடு, வவுனியாவில் இன மத நல்லிணக்கத்தை நாடி ஒரு நீண்ட பயணம், நிலைபெறுதகு வழக்கு முறைகளைச் செப்பும் வவுனியா வடக்கு, வவுனியா வடக்கில் இன்றும் நிலைத்திருக்கும் பாரம்பரியம், வவுனியா வடக்கின் வயற் பண்பாடு, வவுனியா வடக்கு பிரதேசத்தின் பாரம்பரிய உணவு முறைகள், வவுனியா வடக்கு பிரதேச நீரியல் வளம், வவுனியா வடக்கின் வாழ்வியல் சடங்குகள், வவுனியா வடக்கு பிரதேச வாழ் மக்களின் வாழ்வியலும் சுற்றுலாத் துறையும், வவுனியா வடக்குப் பிரதேசத்தின் கிராமியக் கலை வரலாறு, வவுனியா வடக்கு பிரதேசத்தில் வழங்கிவரும் நாட்டார் இலக்கியங்கள், பண்டாரவன்னியன் நடனம், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பட்டிக்குடியிருப்பு, தொலைந்து போகும் வவுனியா வடக்கின் பூர்வீக கிராமங்கள், வவுனியா வடக்கின் அபிவிருத்தியில் தமிழ், சிங்கள உறவுகள், வன்னிவள நாட்டார் பாடல்களில் புலப்படும் வாழ்க்கைக் கோலங்கள், தமிழர்

அழகியல் தத்துவ மரபு: தமிழர் சடங்குகளை முன்வைத்து, பறை இசைக் கலையும் அதன் இன்றைய நிலையும், நாம் மறந்தவையும் எம்மை விட்டு மறைந்தவையும், தமிழர் பண்பாட்டில் வாழை, நீங்கள் இன்றே தலைவராகுங்கள், புதுக் கவிதை, அலறிய கோவில் மணி: ஒரு சரித்திரம் கூறும் சிறுகதை, மதிமயக்கம் (சிறுகதை), தமிழில் வருடங்கள், ஊழிற் பெருவலி யாவுள (சிலப்பதிகாரத்தில் ஒரு காட்சி-நாடகம்), ஐயனார் சிந்து ஆகிய 31 படைப்பாக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

### 16452

**மேருபுரம் ஸ்ரீமஹா பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம் கம்பன் விழா 2008 ஸ்ரீவித்யாபூஷன் விருது.** பிரம்மஸ்ரீ லிங்கசுரேஷ் குருக்கள், பிரம்மஸ்ரீ லிங்கரமேஷ் குருக்கள் (தொகுப்பாசிரியர்கள்). கனடா: மேருபுரம் ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் தேவஸ்தானம், ரொறன்ரோ, 1ஆவது பதிப்பு, 2008. (கனடா: கிரப்பிக் லாண்ட், Graphic Land Design and Print, 285, Progress Avenue, Unit No. 05, Scarborough).

(12), 86 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x17 சமீ.

இச்சிறப்பு மலரில் அமராவதி-கவிதை (சா.வே.பஞ்சாட்சரம்), ஆயிரம் கம்பர் வேண்டும்-கவிதை (நயினைக் கவிமணி சண்முகநாதபிள்ளை), கம்பரைப் போற்றுவோம்-கவிதை (துறையூரான் சின்னையா சிவநேசன்), மிடுக்குமிகு கம்பநாடன்-கவிதை (த.சிவபாலு), சுந்தரக் கவிஞன் தன் பைந்தமிழ்க் காவியம்-கவிதை (இராஜ்மீரா இராசையா), திருநாலாயிரத்தில் இராமகாதை (முருக வே.பரமநாதன்), தமிழரின் இசை மரபும் கம்பரும் (கௌசல்யா சுப்பிரமணியன்), அதர்மம் அழிய மானுடம் வெல்லும்-விபீஷணன் சான்று (இ.பாலசுந்தரம்), கம்பரின் நாடகக் கவிதைகள் (வி.கந்தவனம்), கம்பன் காட்டும் தோழமை (த.சிவபாலு), மஹாகவி கம்பனின் தத்துவமும் தனித்துவமும்-ஒரு திறனாய்வு நோக்கு (நா.சுப்பிரமணியன்), தமிழ் இலக்கிய வரலாற்றிலே கவிச்சக்கரவர்த்தியாக விளங்கும் கம்பன் (எஸ்.சிவநாயகமூர்த்தி), கம்பன் காட்டும் வாழ்வியல் நெறிகள் (புதுவை இராமன்), கவியரசு கவிகளில் புவியரச பணிகள் (கனக மனோகரன்), கம்பன் தரும் படிப்பினை (ஈழத்துச் சிவானந்தன்), இலக்கியத்தில் கருவும் கவிநயமும் (சாமி அப்பாத்துரை) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. பின்னிணைப்பாக 2008இற்கான வித்யாபூஷன் விருதுகள் பற்றிய அறிவிப்பும் விருதாளர்கள் பற்றிய குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன.

## 894.8(1) தமிழ்க் கவிதைகள்

### 16453

**அக்கரைப் பச்சை.** ஏ.சீ.அப்துல் றகுமான். ஏறாவூர்: ஹனிமூன் பதிப்பகம், 1ஆவது பதிப்பு, 2021. (ஏறாவூர்: ஹிரா அச்சகம்).

viii, 134 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 300., அளவு: 22x16 சமீ., ISBN: 978-624-97405-0-1.

1965 முதல் "புதுக்கடை றகுமான்" என்ற புனைபெயரிலும், இயற்பெயரிலும் எழுதிவரும் கலாபூஷணம் ஏ.சீ.அப்துல் றகுமான் அவர்களின் மூன்றாவது நூலாக இக்கவிதைத் தொகுதி வெளிவந்துள்ளது. முன்னர் 2019இல் "கூடிழந்த குருவிகள்" என்ற சிறுகதைத் தொகுதியையும், "மாறாத் துயரம்" என்ற குறுங்காவியத்தையும் வழங்கியிருந்தவர். இக்கவிதைகளின் உள்ளடக்கங்கள் விழிப்புணர்வூட்டுவதாயும், சமூக அவலங்களை வெளிக்காட்டும் கண்ணாடியாகவும் அமைந்துள்ளன. இதில் அடங்கியுள்ள பல கவிதைகள் பிரதேச, மாவட்ட கலை இலக்கியப் போட்டிகளில் முதலிடம் பெற்றவையாகும்.

## 16454

**அக்கினிக் குஞ்சுகள்.** சோ.அருளானந்தம். மட்டக்களப்பு: மகுடம் பதிப்பகம், இல. 90, பார் வீதி, 1ஆவது பதிப்பு, நொவெம்பர் 2021. (மட்டக்களப்பு: எவகிறீன் அச்சகம், 185A, திருமலை வீதி).

xii, 76 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x16 சமீ., ISBN: 978-624-5849-01-7.

ஓய்வுநிலை அதிபரான "மன்னனூர் மதுரா" என்னும் புனைபெயரிலும் எழுதிவரும் கவிஞர் சோ.அருளானந்தம் கிழக்கிலங்கையின் மன்னம்பிட்டியைச் சேர்ந்தவர். தனது 18ஆவது வயதிலிருந்தே இலக்கிய உலகில் உலாவிவருகிறார். ஆயினும் இதுவே இவரது முதலாவது கவிதைத் தொகுதியாக வெளிவருகின்றது. ஆரம்பக் கவிதைகள் பல தொலைந்த நிலையில் அண்மைக்கால கவிதைகளே பெரும்பாலும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மரபுக்கவிதைகள் இவரது எழுதுகோலில் துள்ளி விளையாடுவது போலவே புதிய சிந்தனைகளும் இவரது பேனாவில் பிறப்பெடுத்துள்ளன. இந்நூல் 34ஆவது மகுடம் பதிப்பக வெளியீடாக மலர்ந்துள்ளது.

## 16455

**அக்கினிச் சிறகாய்.** ரஜிதா அரிச்சந்திரன். யாழ்ப்பாணம்: ரஜிதா அரிச்சந்திரன், இல. 110, புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, 1ஆவது பதிப்பு, மார்கழி 2021. (யாழ்ப்பாணம்: மெகா பதிப்பகம், 41, றக்கா வீதி, கச்சேரியடி).

xii, 104 பக்கம், விலை: ரூபா 300.00, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-624-98909-0-9.

கவிஞர் ரஜிதாவின் முதலாவது கவிதைத் தொகுப்பு. "இயற்கை, சமூகம், காதல், மனிதப் போராட்டங்கள், பண்பாடு, ஏக்கங்கள் என்பவற்றை பிரதிபலிக்கும் வகையில் பாரதியின் சிந்தனைக்கமைவாக "சொல்புதிது சுவைபுதிது சோதிமிக்க நவகவிதை" என்றதற்கிணங்க கவிபடைத்துத் தங்கள் முன் வைக்கின்றேன்" என்று அவர் முன்னுரையில் குறிப்பிடுகிறார். ரஜிதா தனது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம்- நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்திலும் உயர் கல்வியை யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் கற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தினையும் முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்டவர். இவரால் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் போட்டிகளில் சமர்ப்பித்து வெற்றியீட்டிய கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது.

## 16456

**அகத்தி.** சௌந்தரி கணேசன். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, ஆவணி 2017. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

vi, 7-126 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-4676-64-0.

ஜீவநதியின் 83ஆவது வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது. கரவெட்டிப் பண்டிதர் பொன் கணேசனின் புதல்வியான சௌந்தரி புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகிறார். அவுஸ்திரேலியாவின் தமிழ்ப் பாடசாலை ஆசிரியராகவும், தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளராகவும் பணியாற்றி வருகின்றார். நீர்த்திரை என்ற கவிதைத் தொகுதியைத் தொடர்ந்து அவரது இரண்டாவது வெளியீடாக இக்கவிதைத் தொகுதி வெளிவருகின்றது. எனக்காக, உங்களுக்காக, காதலுக்காக ஆகிய மூன்று பிரிவுகளில் இவரது கவிதைகள் இங்கே தொகுக்கப்பட்டுள்ளன.

## 16457

**அகம் புறம்.** த.லிங்கரெட்ணம் (இயற்பெயர்: தம்பிஐயா லிங்கரெட்ணம்). மட்டக்களப்பு: வேம்பு சிந்தனைக்கூடம், மகுடம் பதிப்பகம், இல. 90, பார் வீதி, 1ஆவது பதிப்பு, மே 2021. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496A, திருமலை வீதி).

xviii, 254 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-624-97620-3-9.

திருக்கோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த இந்நூலாசிரியர் சென். பிரான்சிஸ் சவேரியார் வித்தியாலயம் மற்றும் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றவர். நம் முன்னோர் பழந்தமிழ் இலக்கியங்களை வாழ்வியல் அடிப்படையில் அகம்-புறம் என வகுத்துள்ளனர். அதை அடியொற்றி இத் தொகுப்பில் கவிஞர் தனது ஆக்கங்களையும் இங்கு அகம்-புறம் என்று வகுத்துப் பாடியுள்ளார். "அகம்" உள்ளத்தோடு தொடர்புடைய உணர்ச்சிகளை உள்ளடக் கியது. "புறம்" வீரம், தியாகம், போராட்டங்கள் எனப் பல்பரிமாணம் கொண்டது. திருக்கோணேசர் மீது தீராத பக்தி கொண்ட நூலாசிரியர் கோணேசரையும், ஸ்ரீ பத்ரகாளி அம்மனையும் நினைந்துருகியும் பாடியுள்ளார். மானிடத்தை, அதன் இயல்புகளை, இயற்கையை, இனிய காதலை, இளமையின் துடிப்புகளை, மாத்திரமின்றி, தன் இளமைக்கால சிவன் கோயிலடி விளையாட்டு நண்பர்களை, தனக்கும் தன் இனத்துக்கும் நேர்ந்த இழப்புகளை, துரோகங்களை என பல்வேறு நினைவுகளையும் அனுபவங்களையும் தனது கவிதைகளில் இங்கு காட்சிப்படுத்தி யுள்ளார்.

## 16458

**அகரம் எனது சிகரம்.** வள்ளியம்மை சுப்பிரமணியம். ஜேர்மனி: வளர்பிறை வெளியீட்டுக்குழு, திரு.திருமதி சின்னத்தம்பி பரமலிங்கம் குடும்பம், 1ஆவது பதிப்பு, 2021. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

xxxiv, 145 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x15.5 சமீ.

யாழ்ப்பாண மாவட்டம், தென்மராட்சி, சாவகச்சேரி நகரில் வசிக்கும் முன்னைநாள் முன்பள்ளி முதன்மை ஆசிரியை திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை அவர்களின் கவிதைகளின் தொகுப்பு. இது கவிதை இலக்கணம் கடந்து தனது உள்ளத்தில் எழுந்த சொற்களால் இப்பாவடிவங்களைப் புனைந்துள்ளார். இதில் தமது குலதெய்வங்களையும், உற்றார் உறவினரையும், ஊர்ப் பெரியவர்களையும் நீளநினைத்து கவிதைகளைப் புனைந்துள்ளார். விநாயகப் பெருமானைப் பணிந்து தொழுதேத்தி நல்லூர்க் கந்தனுக்குரிய கவிதைகளோடு செல்வச்சந்நிதி முருகன், நயினை நாகபூஷணி அம்பாள், ஸ்கந்தபுரம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆகிய தலங்களுக்குரிய பாடல்களையும் பதிவுசெய்கிறார். கொரோனா நோயினை மையமாக வைத்து ஒரு பக்திப் பாடலையும் இணைத்திருக்கிறார். இறைவனுக்கு அடுத்ததாகத் தன் பெற்றோரை நினைந்து கவிதை படைத்துள்ளார். வன்னிப் பேரவலத்தையும், பெற்றோரை இழந்த சிறுவர்களையும் நினைவுகூர்கிறார். மேலும் மக்களின் வாழ்க்கைத் தத்துவம், பத்திரிகைத்துறையின் முக்கியத்துவம் எனப் பல விடயங்களைத் தன் கவிதைகளுக்குள் கொண்டுவந்துள்ளார். உயிரெழுத்துக் கவிதை நயங்களில் அனைத்துக் கவிதைகளையும் உயிரெழுத்து அகரவரிசைப்படி அழகாகக் கோர்த்துள்ளார்.

## 16459

**அகவைப் பா.** தீவகம் வே.இராசலிங்கம்.கனடா: பாரதி வயல் பதிப்பகம், 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2013. (கனடா: ஜே.ஜே.பிரின்டர்ஸ், ஸ்கார்பரோ).

106 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

தீவகம் வேலாயுதர் இராசலிங்கம் (பிறந்த தினம் 21.02.1947) தீவகத்தின் சரவணை கிழக்கு, வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது இக்கவிதை நூல் வித்தியாசமான ஒன்றாகும். ஈழத்தமிழரின் விடுதலை வரலாற்று நிகழ்வுகளுடன் ஆண்டுதோறும் வரும் தனது அகவையையும் இணைத்து 1947 முதல் 2015 வரையிலான ஒவ்வொரு பிறந்தநாளையொட்டியும் அவ்வாண்டுக்குரிய அரசியல் குறிப்புகளையும் தேடிச் சேர்த்து ஒரு கவிதை மாலையாகப் படைத் துள்ளார். அகவை 01-ஆயிரத்துத் தொழாயிரத்து நாற்பத்தேழு, மாசி -21 என்ற தலைப்பில் முதல் கவிதை வெண்செந்துறை பாவடிவில் எழுதப்படுகின்றது. அகவைப்பா 02- சுதந்திரம் செப்பிய நாற்பத்தெட்டு மாசி 4, நிலைமண்டில ஆசிரியப்பா வகையில் எழுதப்படுகின்றது. அகவைப்பா 03- வாக்குப் பறித்த நாற்பத்தொன்பதாம் ஆண்டு, அகவைப் பா 04-1950: தேசியக் கொடியும் தேசிய கீதமும், அகவைப்பா 05-1951: ஜீ.ஜீ அவர்களும் தேசியக் கொடியும், அகவைப்பா

06- 1952: பிதா சேனநாயக்கா மறைவு என்றவாறாக தொடர்கின்றது இவரது அகவைப் பா மாலை. இறுதிப் பாவாக "அகவைப்பா 69- கடன் கேட்ட மூன்றாம் வருடம் 2015: அன்பு வேலவா இன்பம் தாராய்" என்ற தலைப்பில் வண்ணப்பா-திருப்புகழ் பாவடிவில் எழுதப்பட்டுள்ளது.

## 16460

**அகாலத்தின் நித்தியக் கடல்.** தமிழ் உதயா (இயற்பெயர்: திருமதி பசுபதி உதயகுமாரி விவேகானந்தராஜா). சென்னை 600083: சந்தியா பதிப்பகம், புதிய எண் 77, 53ஆவது தெரு, 9ஆவது அவென்யூ, அசோக் நகர், 1ஆவது பதிப்பு, 2018. (சென்னை 600083: விக்னேஷ் பிரிண்டர்ஸ்).

96 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21x14 சமீ., ISBN: 978-93-87499-51-5.

"பேரிழப்பின் பிடியில் சிக்கித் தவிக்கும் உள்ளத்தின் தனி மொழிதல்களாக பல்வேறு குறுங்கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ஆற்றாமையின் ஆழத்துள்ளிருந்து வெளிப்படுகின்றன தமிழ் உதயாவின் கவிதைப் பிரதிகள். தனக்கான கவிதையாடல்களைக் கட்டமைத்துக் கொள்ளும் போக்கில் உணர்வெழுச்சியின் உச்சத்தில் உதிரும் சொற்கள் வாசகனுக்குள் எழுப்பும் சொல்லொணா கிளர்ச்சியே இவ்வகையான கவிதைகளின் தனித்த அடையாளம். கவிதையின் இறுதி வரிகள் ஒரு நிலை மாற்றத்திற்கான பறத்தலில் முடிகிறது." (கவிஞர் எஸ்.சண்முகம், அணிந்துரையில்).

## 16461

**அந்த இசையை மட்டும் நிறுத்தாதே.** க.வாசுதேவன். பிரான்ஸ்: செய்ன் நதி வெளியீடு, Edition La Seine, 7, rue cail, 75010 Paris, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2013 (அச்சக விபரம் தரப்படவில்லை).

72 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x11.5 சமீ.

"அனுபவத்தின் அக மர்மங்களை சாயம் பூசாத வார்த்தைகளால் கிளறி, வாசகர் முன்னர் கொண்டிருந்த விதிகளைச் சுக்குநூறாக்கி புதிய விதிகளுக்கான வெளி களைத் திறக்க, புலன்களின் தீவிரம் தணிந்து அறிவின் அகக் கண்கள் அகலவிரிய துணைநிற்கின்றன வாசுதேவனின் கவிதைகள். சர்வதேச இலக்கியங்களுடனான பரிச்சயம், பிரெஞ்சு மொழியின் ஆளுமை, காத்திரமான படிமங்கள், பலதரப்பட்ட மக்களுடனான அனுபவங்கள், வரலாறுகள் பற்றிய ஆழ்ந்த புலமை என்பவை கவிஞர் வாசுதேவனின் கவிதைகளை தமிழ்க் கவிதைகளின் தளத்திலிருந்து இன்னுமொரு தளத்திற்கு எடுத்துச் செல்கின்றன. வாழ்வின் மையங்களை உடைத் தெறிந்து அல்லது அவற்றிலிருந்து விலகி நின்று, எந்தக் கட்டமைப்புகளுக்குள்ளும் சிக்கிவிடாத சூறாவளியாய் சுற்றிச் சுழன்றடிக்கும் வாழ்வியக்கத்தை கவிஞர் காலத்தின் மைகொண்டு கவிதைகளாய் தீட்டியுள்ளார்" (முன்னுரையில் ஏ.ஜோய்). வாசுதேவன் இலங்கையின் வட பகுதியில் வேலணைக் கிராமத்தில் 1962இல் பிறந்தவர். 1984இலிருந்து பிரான்சில் வசித்துவரும் இவர் அங்கு கணனித்துறையில் பட்டப்படிப்பை நிறைவுசெய்தார். தற்போது நிதித்துறையில் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றுகின்றார். இது இவரது இரண்டாவது கவிதைத் தொகுப்பு.

**16462**

**அந்நியத்தின் விலாசம்.** சிவசேகரன். குடத்தனை: உயிலடி வெளியீடு, உயிலடி இலக்கியக் கூடாரம், குடத்தனை வடக்கு, 1ஆவது பதிப்பு, மார்ச் 2023. (நெல்லியடி: பரணி அச்சகம்).

136 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-624-98799-2-8.

ஈழத்து நவீன கவிதை மரபில் தொடர்ச்சியாக இயங்கிவரும் புதிய தலைமுறைக் கவிஞர்களில் ஒருவரான சிவசேகரன், யாழ்ப்பாணம், வடமராட்சிக் கிழக்கு நாகர்கோவில் கிராமத்தில் 17.05.1992இல் பிறந்தவர். 2004 ஆம் ஆண்டு முதல் குடத்தனை வடக்கில் வாழ்ந்துவருகிறார். 2012 முதல் தொடர்ச்சியாக இலக்கியத்துறையில் இயங்கி வருவதுடன் "உயிலடி" என்ற இலக்கிய அமைப்பை உருவாக்கி அதனூடாக நூல் வெளியீடு மற்றும் புத்தகக் கண்காட்சியையும் மேற்கொண்டு வருகிறார். 2017இல் "மட்டைவேலிக்குத் தாவும் மனசு", 2022இல் "ஒரு கூடைக் குறும்பூ" ஆகிய நூல்களைத் தொடர்ந்து இது இவருடைய மூன்றாவது நூலாக வெளிவந்துள்ளது. இந்நூலில் உள்ள கவிதகைள் அந்நியமாக்கப்படுதலின் குரூர கணங்களையும், தனிமையின் பன்முக விகாரங்களையும் கண்முன் நிறுத்தி வைப்பதோடு ஈழத்தவர் கடந்து வந்த இருண்ட காலங்களின் பகுதிகளையும் சில கவிதைகள் அழுத்தமாக பதிவுசெய்துள்ளன. 2018 தொடக்கம் 2022 வரை எழுதிய கவிதைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள் இத்தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**16463**

**அம்மா காத்திருக்கக்கூடும்: க(வி)தை தொகுதி.** ஆ.முல்லைதிவ்வியன். வல்வெட்டித்துறை: வர்ணா வெளியீடு, கொற்றன்தறை, பொலிகண்டி கிழக்கு, 1ஆவது பதிப்பு, 2013. (அல்வாய்: மதுரன் கிராப்பிக்ஸ் அன்ட் ஓப்செட் பிரின்டர்ஸ்).

vi, 56 பக்கம், விலை: ரூபா 100.00, அளவு: 18x12 சமீ.

ஆனந்தமயில் முல்லை திவ்வியனின் மூன்றாவது நூல். யாழ்ப்பாணக் குடாநாட்டின் வல்வெட்டித்துறையில் பொலிகண்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது தந்தையார் த.ஆனந்தமயில்- "ஓர் எழுதுவினைஞனின் டயறி" என்ற சிறுகதைத் தொகுப்பை 2008இல் தந்தவர். தந்தையின் வழியில் தனயனும் ஒரு எழுத்தாளராகப் பரிணமித்துள்ளார். திறந்த பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ கற்கையைத் தொடரும் மாணவரான இவரது முன்னைய இரு நூல்களும் நல்லதோர் கனவும் அந்தரிப்போரும், கவியின் ஏக்கம் ஆகிய தலைப்புகளில் வெளிவந்துள்ளன. இக்கவிதை/கதைத் தொகுதியில் "கல்லூரி நிலா" முதல் "அன்புத் தோழியே" ஈறாக 23 கவிதைகளும் மூன்று குறுங் கதைகளும் அடங்கியுள்ளன. இக்கவிதைத் தொகுதியில் அடங்கியுள்ள சில கவிதைகள் காதல் கவிதைகள். சில போரின் முடிவுறாத் துயரங்களைப் பிரதிபலிப்பன. கவிஞனின் மண்மீதான நேசிப்பும், இயற்கையோடு இயைந்த வாழ்வியல் நோக்கும் பல கவிதைகளில் பளிச்சிடுகின்றன. காதல், ஆத்மா, மரம், சினேகிதி, டயறி, குருவி, அகதி, நினைவுகள், உறவு, துயர்கள், முள்ளிவாய்க்கால் வண்ணாத்திப் பூச்சி என்று இவரது பாடுபொருள்கள்

நீண்டு பரந்தவை. பள்ளிக்குப் போக ஆசை, நாட்குறிப்பே, அம்மா காத்திருக்கக் கூடும் ஆகிய மூன்று கடுகுக் கதைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 196966).

## 16464

**அரசியல் அறம்** A.R.M. எஸ்.நளீமுதீன். கல்முனை: ஏ.ஆர்.மன்சூர் பவுண்டேஷன், 115 A, மதரசா வீதி, 1ஆவது பதிப்பு, 2022. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

x, 97 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23x15.5 சமீ., ISBN: 978-624-6257-00-2.

இக்கவிதைகள் சமகாலத்தில் எம்மிடையே வாழ்ந்த ஒரு முஸ்லிம் அரசியல் ஆளுமையான ஏ.ஆர்.மன்சூர் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டவையாகும். கல்முனைப் பட்டினம், பிறப்பு, ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, சட்டக் கல்லூரி, அரசியல் ஆர்வம், திருமணம், அரசியல் பிரவேசம், சட்டத்தரணி, பாராளுமன்றத் தேர்தல் 1970, தேர்தல் வெற்றி 1977, தேர்தல் வெற்றி, கன்னி உரை, வடக்கின் பச்சை, ஐ.நா. சபையில், 1982 தேர்தல், 1983 கறுப்பு ஜூலை, பயங்கரவாதம், முஸ்லிம் அரசியல், 1988 ஜனாதிபதி தேர்தல், அமைச்சர் மன்சூர், இறுதித் தேர்தல் 1994, அழிந்தது அரசியல் கலாசாரம், 94க்குப் பின், இன்றைய அரசியல், 25-07-2017, முடிவல்ல ஆரம்பம் ஆகிய 27 தலைப்புகளில் ஏ.ஆர்.மன்சூர் அவர்களின் அரசியல் வாழ்வின் சில பக்கங்கள் கவிதைவடிவில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

## 16465

**அரிமா நோக்கு: புதுக்கவிதை.** ஐயாத்துரை பிரபு. யாழ்ப்பாணம்: பிரதேச கலாசாரப் பேரவை, வடமராட்சி கிழக்கு, 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2021. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

x, 65 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20x12.5 சமீ., ISBN: 978-624-97770-0-2.

ஈழத்து இலக்கிய உலகில் ஒரு படைப்பாளியாகத் தன் முதல் தடத்தைப் பதிக்கும் ஐயாத்துரை பிரபு தனது எழுத்துக்களில் உத்வேகமும், ஞானமும், தான் வாழும் சமூகத்தின் மீதான கரிசனையும் கொண்டவர். இயற்கை, கல்வி, நட்பு, நன்றிக்கடன், ஏமாற்றம், அமைதி, பெற்றோர் பாசம் போன்ற கருப்பொருள்களில் தனது கவிதை களை யாத்திருக்கிறார். சமூகம் சார்ந்த இவரது விரிந்த பார்வையை இத்தொகுப்பி லுள்ள கவிதைகள் வெளிப்படுத்தியுள்ளன. வடமராட்சி கிழக்கு, ஆழியவளை, உடுத்துறை வடக்கில் வேம்படியைச் சேர்ந்த இக்கவிஞர் தாயகத்தின்மீது கொண்ட பற்றாலும் தமிழ்ச் சமூகத்தின் மீது கொண்ட பாசத்தாலும் தான் வாழ்கின்ற சூழலின் தான் அனுபவித்த அனுபவ வெளிப்பாட்டை கவிதைகளாக வடித்துள்ள தாகக் குறிப்பிடுகிறார்.

### 16466

**அருளப்பட்ட மீன்: கவிதைத் தொகுப்பு.** கருணாகரன். சென்னை 600106: பரிசல் புத்தக நிலையம், 235, P-Block, எம்.எம்.டீ.ஏ.காலனி, அரும்பாக்கம், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2022. (சென்னை 600 005: ஏ.எஸ்.எக்ஸ் பிரின்டர்ஸ்).

96 பக்கம், விலை: இந்திய ரூபா 120., அளவு: 22x14 சமீ., ISBN: 978-93-91949-93-8.

தத்தளிப்பு, அமைதியின்மை, நினைவுகளின் அலைமோதல், சவால், போதாமைகளின் முன்னே நிற்கும் வாழ்க்கையை வெவ்வேறு விதமாக அணுகவும் ஆக்கவும் முயற்சிக்கின்றன இந்தக் கவிதைகள். கடினமாகிக் கொண்டே செல்லும் வாழ்க்கையை எப்படி எளிமைப்படுத்துவது என்ற மாபெரும் கேள்வியின் எதிரில் நிறுத்தப்பட்டுள்ளோம். இந்தக் கேள்வியை பதில்களால் நிரப்ப முடியாதபோது கடந்து சென்றுவிட முயற்சிக்கிறோம். அதற்கான எத்தனங்களாக இவற்றைக் கொள்ளலாம். நீங்களும் இந்தக் கவிதைகளும் ஆடும் வித்தைக் களமாக இவை உண்டு. இவற்றில் நீங்களும் உள்ளீர்கள் என்பது இன்னொரு சுவாரசியம் (நூலின் பின்னட்டை வாசகங்கள்). கடந்த காலத்தை நிகழ்காலத்துக்கு இழுத்துவரும் வேலையைச் செய்பவராக இருப்பதே கருணாகரனின் தனித்த அடையாளமாக இருக்கின்றது என்று பேராசிரியர் அ.இராமசாமி நூலுக்கான நயப்புரையில் குறிப்பிடுகின்றார்.

### 16467

**அரூப நிழல்கள்.** சங்கரி சிவகணேசன். யாழ்ப்பாணம்: சிவசங்கரி சிவகணேசன், ஈஸ்வரிபுரி, புத்தூர் கிழக்கு, புத்தூர், 1ஆவது பதிப்பு, ஜுலை 2022. (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

120 பக்கம், விலை: ரூபா 750., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-624-99475-0-4.

"ஒட்டுமொத்தமாகப் பெண்ணின் வாழ்வை உள்ளங் கையில் குவித்து வைத்துக் கொண்டு எங்கெங்கு எதையெதைத் தட்டிச் சீராக்கவேண்டும், உளிகொண்டு செதுக்கி நேராக்க வேண்டும் என்கின்ற வாழ்வியல் கடமையை இவரது கவிதைகள் செய்கின்றன" என்கிறார் இந்நூலுக்கான வாழ்த்துரை வழங்கிய கலைமாமணி ஆண்டாள் பிரியதர்ஷினி. பெண் சார்ந்த சமூகத்தை மேம்படுத்தவும், பெண்மை பற்றிய புரிதல்களை சமூகம் சரியாக உள்வாங்கிக்கொள்ளவும் வாசகரின் மனங் களை இக்கவிதைகள் பண்படுத்துமெனவும், மாற்றங்களையும் மறுமலர்ச்சிகளையும் தெளிவுகளையும் புரிதல்களையும் அவை ஏற்படுத்துமெனவும் இக்கவிஞர் நம்புகின்றார்.

### 16468

**அல்வாய் மனோகராக் கவிஞர்கள் கவிதைகள்.** க.பரணீதரன், வெற்றி துஷ்யந்தன், செ.கணேசன் (தொகுப்பாசிரியர்கள்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, பெப்ரவரி 2022. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

viii, 60 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-624-5881-38-3.

*பருத்தித்துறையில், அல்வாய் கிராமத்தில் வாழ்ந்த, வாழ்கின்ற 44 கவிஞர்களின் கவிதைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. மு.செல்லையா, வே.த.தணிகாசலம், த.கலாமணி, மு.செ.விவேகானந்தன், செல்லக்குட்டி கணேசன், சி.விமலன், வெற்றி துஷ்யந்தன், க.சயானந்தன், சு.நிருத்திகன், கந்தையா பரமானந்தன், சி.செல்வநாதன், சிவ.சிவநேசன், க.பரணீதரன், மா.அனந்தராசன், க.தர்மதேவன், சு.குணேஸ்வரன், தணி உமா, த.யோகேஸ்வரன், கனகசபாபதி செல்வநேசன், த.மோகன்ராஜ், கணேசன் மதுஷன், கனக செந்தில்நேசன், க.முரளீதரன், சி.நிமலன், வி.எழில்நிலா, து.இராஜவேல், செல்வரத்தினம் அனுஷா, வே.ஐயாத்துரை, பவானி பிரபானந்தன், ந.செல்வரத்தினம், வே.த.சண்முகவேல், வெற்றி சிந்துஜன், ஜெ.உமாசுதன், வி.கிருஷிகேசன், சாந்தமூர்த்தி கோகுலன், சு.சுபாங்கன், செல்வரூபி இரத்தினசிங்கம், ச.தம்பிஐயா, செ.சோதீஸ்வரா, வே.ஐ.குமாரதாசன், இ.கௌரி பாலா, சின்னத்தம்பி பத்மராஜன், செல்லத்தம்பி சுரேந்திரா, வே.ஐ.வரதராஜன் ஆகியோர் இயற்றிய கவிதைகள் இங்கு இடம்பெற்றுள்ளன. 218ஆவது ஜீவநதி வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.*

## 16469

**அன்பின் விலாசம்.** *சஞ்ஜீவன். திருக்கோணமலை: தனபாலசிங்கம் சஞ்ஜீவன், 23/10, சிவன் வீதி, 1ஆவது பதிப்பு, 2022. (திருக்கோணமலை: எஸ்.எஸ். டிஜிட்டல்ஸ், திருஞானசம்பந்தர் வீதி).*

*(4), 58 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.*

*காலப் பெருவெளியில் உதிர்ந்து கிடக்கும் நினைவுப் பூக்களை பொறுக்கி விளை யாடும் சிறுவனாகத் தன்னை இனம்காணும் சஞ்ஜீவன், தன் வாழ்க்கைப் பயணத்தில் கரைசேர்ந்த கவிதைகளை நினைவுகளாகப் பத்திரப்படுத்தும் முயற்சியாக வாழ்க்கை, தேவதை உலவும் தெரு, தனிமை, வானம் செய்தல், இரவு, நட்பு, ஒரு தேடலின் கதை, பள்ளிக்கூடம், இசை, கச்சான் பூ, தமிழ்க் கிராமம், ஆசிரியர் தினம், உரிமைக்காக, மரம் எனும் உறவு, புன்னகை, முடிவிலாக் கணங்கள், தீராத கானம், அன்பின் தேசம், கவிதை, காதல், தெரு யாத்திரை, நியதி, கண்ணீர், கணம், பிரியாவிடை, நினைவழியா விலாசங்கள், மனதோடு ஒரு நிழற்குடை, அடக்கம், வாழ்ந்து பார், வசந்தத்தின் வாசஸ்தலங்கள் ஆகிய முப்பது கவிதைகளை இங்கு பதிவுசெய்துள்ளார்.*

## 16470

**அன்புடைய நெஞ்சம் (கவிதை நெஞ்சங்கள்).** *செ.லோகராஜா. மட்டக்களப்பு: திருமதி பரமேஸ்வரி லோகராஜா, 14/3,* A-4, *கணக்குப்பிள்ளை வீதி, நாவற்குடா, 1ஆவது பதிப்பு, கார்த்திகை 2021. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496* A, *திருமலை வீதி).*

xxviii, *54 பக்கம், ஓவியங்கள், விலை: ரூபா 325., அளவு: 20.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-43127-9-1.*

*திருக்கோணமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேசத்தில் பாலத்தடிச்சேனை கிராமத்தில் பிறந்தவர், செல்லத்துரை லோகராஜா. முன்னதாக மூன்று கவிதைத்*

தொகுப்புகளையும், ஒரு கட்டுரைத் தொகுப்பையும், இரு சோதிட நூல்களையும் வெளியிட்ட இவரது ஏழாவது நூல் இது. அன்புடைய நெஞ்சம், அன்பினில் உறவாகி, அழகிய ஓவியம் இங்கே, ஆகாய வெண்ணிலா, ஆசை நெஞ்சில் நீயிருந்தாய், ஆளப் பிறந்தவனே, இயற்கை வரைந்த ஓவியமே, உயிரினில் உறவானவளே, உன்னைச் சந்தித்தேன், உனக்கெனவே நான் பிறந்தேன், ஏற்றி வைத்த தீபமே, ஓருயிராய் ஒன்றானாய், கண்ணனிடம் கீதை கேட்டேன், கற்பகமாய் ஒளிர்ந்தேன், கனவினில் வந்தாய் நீ, கார்கால மேகமே, காற்றினிலே வரும் கீதமே, சொர்க்கமென நினைத்தாயோ?, திருமணமென்ற பந்தமே, நிலவைப் பிடித்தேன், நெஞ்ச நினைப்பில் நிறைந்தவளே, நெஞ்சில் நின்றது உன் மயக்கம், நெஞ்சோடு நெஞ்சாக நின்றாயே, பல்லோரும் போற்றும் பகலவனே, பேரழகான பெண்ணவளே, பொன்வண்டு மனத்திலா?, மஞ்சம் வந்த தென்றலே, மனதில் இடம் தாராயோ?, மேகத்தை விட்டிட்டு வா, வெண்ணிலா முகமெடுத்து ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 30 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 16471

**ஆச்சியின் கொண்டையூசிகள்.** சி.சிவசேகரம். யாழ்ப்பாணம்: கலா லயம் பதிப்பகம், இல.68, நீதிமன்ற வீதி, மல்லாகம். 1ஆவது பதிப்பு, ஜுன் 2022. (பண்டத்தரிப்பு: ஜே.எஸ். பிறின்டேர்ஸ், சில்லாலை வீதி).

viii, 48 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-624-5760-02-2.

கவிஞர் சி.சிவசேகரத்தின் 11ஆவது கவிதை நூலாகும். மலைப்பாதை, சிறு பொறி, வட வியற்நாமிற் குண்டுவீச்சு, போராட்டம், மக்களைச் சாராத புத்திஜீவிகள், காஸாவின் அபிமன்யு, ஆச்சியின் கொண்டையூசிகள், மதிநுட்பர், ஒரு முழுநிலா இரவில், சர்வாதிகாரியின் சிலை, பழியும் பழமரமும், சிறு பிழைகள், குருவிச்சை, நிமிர்வு, எல்லா மதங்களும் ஒன்றையே சொல்வன, சதுரங்கப் பலகை, ஆட்டமும் விதிகளும், பெட்டியிலை முடங்காதை பெத்த திரு நாடே, பள்ளிக்குச் செல்லல், அந்தோனியார், றாங்கி பிடித்த தெரு, கலாவின் நினைவாக, சுதந்திரம் வந்தது, நுகர்வுப் பொருளாதாரச் சிந்தனை, கைப்பைகள் பற்றி ஒரு சிந்தனை, நேரத்தைச் சேமித்தல், வாழ்வின் பெறுமதி-1, சிறுத்தை, ஊரடங்கு, வாழ்வின் பெறுமதி -2 ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட முப்பது கவிதைகள் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

## 16472

**ஆண் நிற வெயில்.** தமிழ் உதயா (இயற்பெயர்: திருமதி பசுபதி உதயகுமாரி விவேகானந்தராஜா). சென்னை 600083: சந்தியா பதிப்பகம், புதிய எண் 77, 53ஆவது தெரு, 9ஆவது அவென்யூ, அசோக் நகர், 1ஆவது பதிப்பு, 2018. (சென்னை 600083: விக்னேஷ் பிரிண்டர்ஸ்).

96 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-87499-53-9.

காதல் அற்புதமானது, அழகானது, அது ஒரு மாய உலகம். பெரும் பசிகொண்டவன், உணவைக் கண்டவுடன் உலகை வென்றது போல் மகிழும் மனநிலை தான்

காதல் என்று கூறும் தமிழ் உதயா, உலகத்தின் தத்துவமான காதலின் தீரா பேருன்னதத்தை மட்டுமே இத்தொகுதிக் கவிதைகள் பேசுகின்றார். கவிஞனை கவிதைகளோடு பொருத்திப் பார்க்காமல் எந்தவித முன்முடிவுகளும் எடுத்து விடாமல் வாசித்துப் பார்க்கும்படியும் ஒரு வேண்டுகோளை முன்வைக்கிறார். இந்தக் கவிதைகளில் எங்குமே தான் இல்லை என்றும் உறுதியளிக்கிறார்.

## 16473

**இசையுடன் பாட அழகான தமிழ்ப் பாடல்கள்.** கீர்த்தி. (இயற்பெயர்: குமரேஸ்வரன் கீர்த்திசிங்கம்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1ஆவது பதிப்பு, 2017. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

x, 166 பக்கம், விலை: இந்திய ரூபா 90.00, அளவு: 18x12.5 சமீ.

இசையுடன் பாடக்கூடிய அழகான தமிழ்ப் பாடல்கள் 49உடன் "செம்புலக் காதலி" என்ற திரை நாடகமும், கதைச் சுருக்கத்துடன் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைப் பெற்று சென்னைப் பல்கலைக்கழகம், வடக்கு லண்டன் பல்கலைக்கழகம், கிரினிச் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உயர்கல்வி கற்று தற்போது லண்டனில் புலம்பெயர்ந்து வாழ்பவர் கீர்த்தி.

## 16474

**இப் பிறவிச் சாலை.** அனுராதா. கொழும்பு 6: ஸ்ரீநிதி பதிப்பகம், 42/11, முதல் மாடி, சுவி சுத்தாராம வீதி, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2017. (சென்னை 14: சீனிவாசா ஆப்செட்).

96 பக்கம், சித்திரம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 23x15 சமீ.

திருமதி அனுராதா ஒரு தமிழ் இலக்கிய ஆர்வலர். இல்பான உந்துதல் காரணமாக தமிழில் தனது உணர்வுகளை எழுத்துருவாக்கி வருபவர். சிவஸ்ரீ கி.சோமசுந்தரக் குருக்கள்-இராஜேஸ்வரி அம்மாள் தம்பதிகளின் இரண்டாவது புதல்வியான அனுராதா தனது முதலாவது கவிதைத் தொகுதியை "எல்லையற்ற வான்வெளியில்" என்ற தலைப்பில் 2016இல் வெளியிட்டவர். இது இவரது 2ஆவது கவிதைத் தொகுப்பாகும். இதில் இப்பிறவிச் சாலை, எழுநிலை வாழ்வு, ஈசனின் தியானம், சகியடைய வருக, மௌனம், அகப்பை, எண்ணப்பறவை, கனவே நல்லது, தேடல், ஞான நதி, சிறுத்தை வேதம், சொந்த நூல், முப்பருவம், பச்சைப் பாடம், காடு, தீக்குருத்து, நாளை, காளான்கள், நீலோற்பலம், பொது நலம், அன்பின் அலைகள், சூரியன், தண்மதி, ஒளி, சுற்றம், என்ன மாயம், பொழுதுகள், இயற்கைப் பயணம், அந்த மாங்காய், நினைவு, அறுவடை, நீளம், காதல் தெரியாக் காலம், நீயெனும் இவளே, சருகு, செக்கு மாடு, மனங்களின் கோரிக்கை, திரி, புலன்(ம்) பெயர்வு, படிக்கல், திருச்சிலை, முதுமை, அருள் விற்பனை, நம்பிக்கை, தணியவைப்பாய் தணணீர்த் தோழி, வேண்டுகோள், அட்சய திருதியை, நான் உலகம், நான் ஒரு மேசைக் கணனி, அம்மா ஆகிய 50 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

## 16475

**இப்போது சொல் எப்போது வந்த கவிதை நீ.** க.ஜெயவாணி. ஏழாலை: சித்தி விநாயகர் நூல் நிலையம், 1ஆவது பதிப்பு, கார்த்திகை 2011. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டேர்ஸ், முத்திரைச் சந்தியடி, நல்லூர்).

(4), 58 பக்கம், விலை: ரூபா 150., அளவு: அளவு: 19x13 சமீ.

"ஏழாலை வாணி" என்ற பெயரிலும் இலக்கிய உலகில் அறியப்பெற்றவர் க.ஜெயவாணி. வானொலியில் தவழ்ந்தவையும், சிற்றிலக்கியச் சஞ்சிகைகளில் அச்சேறியவையுமான கவிதைகளின் தேர்ந்த தொகுப்பாக இக்கவிதைகள் அமைகின்றன. இவரது பல கவிதைகள் சமகாலத்தையும் மனிதர்களையும் பச்சையாகத் தோலுரித்துக் காட்டுபவையாக அமைகின்றன. சில சமூக நடப்புகளை எள்ளிநகையாடுகின்றன. சோகம், கோபம், ஏக்கம், எதிர்பார்ப்பு எனப் பல்வேறு உணர்வுகளின் வெளிப்பாடுகளாக இவை மலர்ந்துள்ளன. உயிர்போன பிறகு, சொல்லம்மா, குடியுரிமை, மனிதநேயம், தந்தை, ஓர் ஆண்டு நினை(றை)வில், நீ நடக்கலாம், தெய்வ சபைக்கு, பயணித்த பாதையில், மழலை, கடன்காரி, உன் நினைவில், உனக்காய், அன்னையர் தினம், வரம் வேண்டும், இன்னும் எத்தனை பொழுதுகள், எழுது, விளங்கமுடியாதவள், உனக்காகவும், யுத்தம் ஏற்படுத்திய சமூகத் தாக்கம், மனசு, மனமெனும் நூலகம், கற்பனைக் காகிதம், வேறு வழியின்றி, எஞ்சி நிற்கிறது, என் சொல்ல, இதயம், கல்வெட்டு, கடவுளுக்கு ஒரு கடிதம், ஆறுதல், அள்ளிய மழையில் தெளித்தவை சாரல், உள்ளம் சொன்னது ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 32 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65039).

## 16476

**இரவின் மழையில்: ஈழக்கவி கவிதைகள்.** ஈழக்கவி (இயற்பெயர்: ஏ.எச்.எம்.நவாஸ்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2013. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டேர்ஸ், முத்திரைச் சந்தியடி, நல்லூர்).

xxii, 98 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-4676-12-1.

கவிதையை ஆத்மாவின் குழந்தையென்றும் உணர்வுகளின் மொழியென்றும் வர்ணிக்கும் ஈழக்கவி ஏ.எச்.எம்.நவாஸ் படைத்த 52 கவிதைகளின் தொகுப்பாக இரவின் மழையில் வெளிவந்துள்ளது. சங்ககாலக் கவிதைகள் போல, இவரது கவிதைகளும் காட்சிகளையும் நேரடிப் பண்புகளையும் முதன்மைப்படுத்துகின்றன. அவர் பயன்படுத்துகின்ற உவமைகள் தனித்துவமானவை. புதிய உணர்வுகளைத் தோற்றுவிப்பவை. இவரது கவிதைகளில் படிமங்களின் ஆட்சி அதீதமானது. இவரது காதல் கவிதைகளில் இதனை அதிகமகவே அனுபவிக்க முடிகின்றது. மேலும், யுத்தம் பற்றிய கவிதைகள் அனைத்திலும் யுத்தத்தின் கொடுமைகள் வெளிப்படுகின்றன. இவரது கவிதைகளின் இன்னொரு சிறப்பம்சம், பழந்தமிழ்க் கவிதைகளின் வரிகளைத் தன்னுடைய கவிதைகளில் பிரக்ஞைபூர்வமாகக்

*கையாண்டிருப்பதாகும். வெலிமடையைச் சேர்ந்த ஏ.எச்.எம்.நவாஸ் ஈழக்கவி, நவாஷ் ஏ.ஹமீட், ந.ஸ்ரீதாசன் ஆகிய புனைபெயர்களில் எண்பதுகளிலிருந்து தொடர்ச்சியாகக் கவிதைகளை எழுதி வருகின்றார். பேராதனைப் பல்கலைக்கழ கத்தில் மெய்யியல் துறையில் சிறப்புப் பட்டம் பெற்ற இவர், அப்பல்கலைக்கழகத்தின் மெய்யியல்-உளவியல் துறையில் சிலகாலம் (1995-2000) விரிவுரையாளராகக் கடமையாற்றியவர். தற்போது பாடசாலை அதிபராகப் பணியாற்றுகின்றார். இந்நூல் 32ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.*

## 16477

**இராமலிங்கம் கவிதைகள்.** *தா.இராமலிங்கம் (மூலம்), ச.மார்க்கண்டு (தொகுப்பாசிரியர்). கொடிகாமம்: இராமலிங்கம் அருட்செல்வம், மீசாலை வடக்கு, 1ஆவது பதிப்பு, தை 2022. (சாவகச்சேரி: மிக்கி பிரிண்டிங் ஸ்பெஷலிஸ்ட்* A9 *வீதி, சங்கத்தானை).*

xxii, *(2), 176 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 500., அளவு: 21*x*14 சமீ.*

*கவிஞர் தா.இராமலிங்கம் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தின் முன்னைநாள் அதிபராவார். இவரது முன்னைய நூல்களான "புதுமெய்க் கவிதைகள்", "காணிக்கை", ஆகிய இரு சிறு நூல்களில் இடம்பெற்ற கவிதைகளுடன் அவ்வப்போது ஊடகங்களில் பிரசுரமான மேலும் பல கவிதைகளையும் சேர்த்து இத்தொகுப்பு நூல் வெளிவந்துள்ளது. கவிதைகள் அனைத்தும் மனமுகை, சமூக அரும்பு, அரசியல் முகிழம், ஆன்மிக மலர் ஆகிய நான்கு இயல்களில் வகுத்துத் தரப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் கவிஞர் முருகையன் அவர்களின் ஆய்வுரை, எஸ்.பொன்னுத்துரை முன்னீடு, மு.தளையசிங்கம் ஆய்வுரை என்பன இடம் பெற்றுள்ளன. தா.இராமலிங்கத்தின் கவிதைகளிலே முழுக்க முழுக்க அவரிட மிருக்கும் தன்காலம், சூழல் பற்றிய உணர்வும், அந்த உணர்வு பிறப்பிக்கும் திருப்தியின்மையும், அந்தத் திருப்தியின்மை கோரும் மாற்றமும் தான் முத்திரை பதித்து நிற்கின்றன.*

## 16478

**இல்லற நொண்டி (The Husband and Wife).** *அ.சதாசிவம்பிள்ளை* (J.R.Arnold). *மானிப்பாய்: ஜே.ஆர்.ஆர்னோல்ட் புத்தக ட்ரஸ்ட், 1ஆவது பதிப்பு, 1887. (யாழ்ப்பாணம்: ஏ.சீ.எம்.பிரஸ், 464, ஆஸ்பத்திரி வீதி).*

*80 பக்கம், விலை: ரூபா 30.00, அளவு: 21.5*x*14.5 சமீ.*

*இது உதயதாரகைப் பத்திராதிபரும் யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழ் ஆசிரியருமாகிய ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை* (J.R.Arnold) *அவர்களால் இயற்றிப்பட்டு, இராசாங்க லிகிதர் சாலையிலே பதிவுபெற்று, மானிப்பாய் ஸ்திறோங் அஸ்பரி இயந்திர சாலையில்* (Strong & Asbury Printers, Manipay) *1887இல் வெளியிடப்பட்ட மூலநூலின் பின்னைய மீள் பதிப்பு இதுவாகும். செய்யுள் உருவில் எழுதப்பெற்றுள்ள இந்நூலில் தெய்வஸ்துதி, இல்லறம் புரிதற்கேற்ற உத்தம ஆடவர் இலக்கணம், உத்தம ஆடவர், அகோ! வாரும் பிள்ளாய் நொண்டி! இல்லறத்துக்காகாத அதம*

ஆடவர் இலக்கணம், அகோ! வாரும் பிள்ளாய் நொண்டி! நற்குணப் பெண்டிர் இலக்கணம், அகோ வாரும் பிள்ளாய் நொண்டி துற்குணப் பெண்டிர் இலக்கணம், வாழி ஆகிய தலைப்புகளில் செய்யுள்களும் உரைகளும் இடம்பெற்றுள்ளன.

## 16479

**இலை மறை காய்கள்: கவிதைத் தொகுப்பு.** ஏ.ஈ.பீரிஸ். யாழ்ப்பாணம்: திருமதி விஜயா பீரிஸ், அன்பகம், புனித அந்தோனியார் வீதி, பண்டத்தரிப்பு, இணை வெளியீடு பண்டத்தரிப்பு: கதிரொளி நாடக மன்றம், 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2020. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).

84 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ., ISBN: 978-624-96026-0-1.

கவிஞர் ஏ.ஈ.பீரிஸ் அவர்களின் கவிதைகள் முப்பத்தைந்து தலைப்புகளில் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. அரச உத்தியோகத்தராகப் பணியாற்றியதன் காரணமாக அரச இயந்திரம் எவ்வாறு இயங்குகின்றது-அதன் சமூகப் பணிகளின் நன்மை தீமை என்பவற்றை நன்கு உய்த்துணர்ந்துள்ளார். ஒரு சமூக சேவகராக உழைத்து வருவதனால் சமூகத்தின்பாற்பட்ட பல்வேறு செயற்பாடுகள், உயர்வு தாழ்வுகள், சமூகக் கொடுமைகள் என்பவற்றையும் தனது கவிதைகளில் அடிநாத மாகக் கொள்ள முடிகின்றது. கிராமிய மணம் கமழும் பல கவிதைகள் வறுமைக் கோட்டில் வாழும் குடிமக்களின் அவலங்களைச் சுட்டி நிற்கும் காட்சிகளைக் கொண்டன.

## 16480

**இவனைச் சிலுவையில் அறையுங்கள்.** வி.மைக்கல் கொலின். மட்டக்களப்பு: மகுடம் பதிப்பகம், இல. 90, பார் வீதி, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496A, திருமலை வீதி).

xiv,(2), 56 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-5849-00-0.

கத்தோலிக்கர்களின் பாஸ்கா காலத்தின் ஆரம்ப நாள் விபூதிப் புதன தொடங்கி, பாஸ்கா காலத்தின் 47 நாட்களின் ஒவ்வொரு நாளையும் பாடுகளின் பாதையை தியானித்துக் கவிதைகளாக்கும் முயற்சி இது. ஒவ்வொன்றும் புனித வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டின் நாயகன் இயேசு கிறிஸ்துவுடன் தொடர்பான சம்பவங்கள் அவரது போதனைகள், அவர் மக்களுக்கு சொன்ன உவமைகள் என ஒவ்வொன் றையும் மறுவாசிப்புக்கு உட்படுத்திய கவிதைகள் இவை. புதிய ஏற்பாட்டின் சம்பவங்கள், குறிப்பாக இயேசுவுடன் தொடர்புபட்ட ஒவ்வொரு நிகழ்வும் எம் மண்ணின் நிகழ்வோடு எம் மக்களின் வாழ்வோடு இணைந்து நிற்பதை இக்கவிதைகளின் மூலம் புரிந்துகொள்ளலாம். இந்நூல் 41ஆவது மகுடம் பிரசுரமாக வெளிவந்துள்ளது.

### 16481

**இனி வரும் நாட்களெல்லாம்.** என்.நஜ்முல் ஹுசைன். கொழும்பு 7: ஸ்ரீலங்கா இஸ்லாமிய கலை இலக்கிய மன்றம், 93, ராஜகீய மாவத்தை, 1ஆவது பதிப்பு, 2017. (கொழும்பு 13: தேவி பிரின்டர்ஸ்).

136 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 22.5x16 சமீ., ISBN: 978-955-3696-00-7.

கவிமணி நஜ்முல் ஹுசைன் அவர்கள் இயற்றிய கவிதைகளின் தொகுப்பு. என் அன்னையர்க்கான பாடல், கருப்பொருளானாள், அண்ணல் நபிகளாரின் அழகிய பண்பு-எளிமை, அப்துல் கலாம், சௌந்தரராஜனே, தொலைபேசி குழந்தை, கொடுக்காதீர்கள் பெண்களுக்கு சம உரிமை, கைபேசியாய், ஈமானிய கவசத்தோடு, படையெடுப்பை முறியடிப்போம், கழுதைகளிடம் ஏன் கற்பூரம், இனி வரும் நாட்களெல்லாம், நாம் ஒன்று, மழைநாளும் நொண்டிக் காலும், கள்ள வாக்குகளால் வந்தவன் ஒபாமா, கைதவறிப் போகும் டயரி, இரண்டு போதாது, உரிமைப் பேயாட்டம், இஸ்லாம் எங்கள் வழி இன்பத் தமிழ் எங்கள் மொழி, எங்கள் புது வருடம், அடிக்கிற கை தான் அணைக்கும், வெற்றிக் கிண்ணம், டையானா(ள்), பிரிந்திருக்கும் மூளைகளுக்கு, தீயினாற் சுட்ட புண், எழுத்துப் பிழைகள், இந்து சமுத்திரத்தின் கண்ணீர் சொட்டு, சாவு மணி அடிக்கும் சாரதிகள், மகளிருக்கு மகுடம், மானுடப் பிரகடனம், மொழியே மொழி, உன்னைச் சுற்றி, பாரதி யார்?, உள்ளத்தை வைத்துக்கொண்டு ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட கவிதைகள் இவை.

### 16482

**ஈழவள நாட்டிற் பயிர் பெருக்க வாரீர்.** J.S.K.A.A.H. மௌலானா. கொழும்பு 2: ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை-இலங்கைக் கிளை, 9/A, பராக் ஒழுங்கை, 2ஆவது பதிப்பு, 2014, 1ஆவது பதிப்பு, 1967. (அச்சக விபரம் தரப்படவில்லை).

24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12 சமீ., ISBN: 978-955-4986-00-8.

இலங்கை சாகித்திய மண்டலத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைக் கோவை. 28.10.1967 அன்று கொழும்பு ரோயல் கல்லூரி மண்டபத்தில் இலங்கை சாகித்திய மண்டலக் கவிதைக்குழு நடாத்திய கவியரங்கு நிகழ்ச்சியில் நவாலியூர் சோ.நடராசா அவர்களின் தலைமையில் அரங்கேற்றப்பட்டது. காவடிச் சிந்து, வழிநடைச் சிந்து, என்னும் கிராமியப் பாடல் வகையில் அமையப்பெற்ற இப்பாக்கள் பாடி மகிழ மிக்க சுவை தருவதாகும். கவிஞர் இந்நூலில் தேசியப்பற்று, நாட்டுவளம், சமூக ஒற்றுமை என்ற பொருளினைப் பெரிதும் கையாள்கின்றார்.

### 16483

**உதிரிப் பூக்கள்: கவிதைத் தொகுப்பு.** இந்திராணி புஷ்பராஜா. மட்டக்களப்பு: இந்திராணி புஷ்பராஜா, இல. 6, திருமகள் வீதி கிழக்கு, கல்லடி, உப்போடை, 1ஆவது பதிப்பு, 2019. (அச்சக விபரம் தரப்படவில்லை).

iv, (5), 65 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x15.5 சமீ., ISBN: 978-955-71285-1-1.

*மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்லடி-உப்போடையில் பிறந்து விஞ்ஞான ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, பிரதி அதிபராக, அதிபராக எனப் பல தளங்களில் பணியாற்றியவர் திருமதி இந்திராணி புஷ்பராஜா. இவர் "குயில் குஞ்சுகள்" என்ற சிறுகதைத் தொகுதியையும், "சிறுவர் பூங்கா", "விண் தொட எழுவோம்", "மொட்டுக்களின் மொட்டுக்கள்" ஆகிய சிறுவர் இலக்கியங்களையும் முன்னதாக வெளியிட்டுள்ளவர். இவரது தேர்ந்த கவிதைகளின் தொகுப்பு இது. தான் பார்த்த, நுகர்ந்த, அனுபவித்த பல உணர்வுகளில் இருந்து பிறந்த கவிதைகளை இங்கு உதிரிப்பூக்களாகச் சேகரித்து வழங்கியுள்ளார். காலச் சுழற்சியிலே சமுதாயக் கொடியில் இருந்து அனுபவ முத்துக்களாய் சிதறுகின்ற ஆயிரமாயிரம் எண்ணப் பூக்களில் ஐம்பது பூக்களைத் தேர்ந்து இங்கு வாசகரோடு பகிர்ந்துகொண்டுள்ளார்.*

## 16484

**உயிர் சுமந்த சுமை.** *கிருஷ்ணவேணி (இயற்பெயர்: சாந்தி விக்ரர் மான்ன்). பரந்தன்: திருமதி சாந்தி விக்ரர் மான்ன், 1/4 ஏக்கர், குமரபுரம், 1ஆவது பதிப்பு, பங்குனி 2015. (கிளிநொச்சி: வேழன் பதிப்பகம், கனகபுரம் வீதி).*

*96 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x13.5 சமீ.*

*சாந்தி விக்டர் (1966.02.18) கிளிநொச்சி, பரந்தனில் பிறந்த எழுத்தாளர். இவரது தந்தை பொன்னையா தாய் இந்திராணி. கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் உயர்தரம் வரை கற்ற இவர், 1980ஆம் ஆண்டு எழுத்துத்துறைக்குள் பிரவேசித்துள்ளார். கவிதை, சிறுகதை, கட்டுரை எழுதும் பன்முகத் திறமைகளைக் கொண்ட இப்படைப்பாளியின் ஆக்கங்கள் வீரகேசரி, ஈழநாதம் ஆகிய நாளிதழ்களில் வெளிவந்துள்ளன. "உயிர் சுமந்த சுமை" என்னும் இவரின் கவிதைத் தொகுதியின் முதலாம் பாகம் 2015ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. ஆயிரம் கவிஞர்களின் கவிதை நூலிலும் இவரது இரு கவிதைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. 2018ஆம் ஆண்டு பரந்தன் வட்டாரம் கரைச்சி பிரதேச தேர்தலில் பெண் வேட்பாளராக தமிழ் தேசியக் கூட்டமைப்பில் கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிட்டு அதிக வாக்குகளைப் பெற்று பிரதேச சபை உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டு அரசியல் ரீதியாக மக்களுக்கு சேவை செய்து வருகிறார். பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பில் பெண்களை அணிதிரட்டி இவர் போராடி வருகிறார். கிளிநொச்சி இரணைமடு விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பில் தனியொரு பெண்ணாக குரல் கொடுத்து வருகிறார். இக்கவிதைத் தொகுப்பில் இவரது 54 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. சமூகம் தொடர்பான பல கூட்டல் கழித்தல்களைத் தன் அறிவுக்கெட்டியவரை வகுத்துத் தொகுத்துத் தந்துள்ளார்.*

### 16485

**உளறல்கள்.** S.T. திஸ்னுகன். யாழ்ப்பாணம்: S.T.திஸ்னுகன், விழிசுட்டி, சங்கானை, 1ஆவது பதிப்பு, மார்ச் 2018. (யாழ்ப்பாணம்: சாய்ராம் பிரின்டர்ஸ், பிரதான வீதி, சங்கானை).

iv, 99 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-38909-0-0.

"வாசிப்பும் தேடலும் படைப்பாக்க சிந்தனைக்கான திறவுகோல். இத்திறவுகோல் கற்பனாபூர்வமான சமூக நேசிப்புள்ள மனிதர்களை உருவாக்குகின்றது. இப்பின்னணியில் நடிகன், இயக்குநர், எழுத்தாளர் என பல துறைகளில் சாதனை படைத்து வருகின்ற இளம் படைப்பாளியாக தி.திஸ்னுகன் விளங்குகின்றார். தேடல், தலைமைத்துவம், பலரையும் இணைத்து குறித்த விடயத்தை ஆற்றி முடிக்கின்ற பண்பு என்பன இவரது திறன்கள். உயிரியல் பிரிவில் கல்வி பயிலும் இவர் முதன்மையான ஆற்றுகையாளனாக புத்தாக்க அரங்க இயக்கம் மேற்கொண்ட தெருவெளி ஆற்றுகைகளில் பங்குபற்றி பலரதும் பாராட்டுக்களைப் பெற்றவர். வாசிப்பில் பற்றுக்கொண்ட இவர் எழுத்து முயற்சியில் தனது உணர்வு வேட்கையினை வெளிப்படுத்திக் கொள்வதற்காக கையாண்ட ஊடகமான கவிதைத் துறையின் ஊடாக உளறல்கள் என்னும் தொகுப்பினை வெளியிட்டுள்ளார்" (எஸ்.ரி.அருள்குமரன், பின்னட்டைக் குறிப்பு). (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 26853).

### 16486

**உன் மொழியில் தழைக்கிறேன்.** மருதமுனை ஹரீஷா (இயற்பெயர்: எம்.ஏ.சி.ஹரீஷா). கல்முனை: தென்கிழக்கு அஷ்ரப் சமூக சேவைகள் நிறுவனம், SEASS Organisation, 1ஆவது பதிப்பு, ஜூலை 2016. (சாய்ந்தமருது: எக்செலன்ட் பிரின்ட்).

(16), 64 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x16 சமீ., ISBN: 978-955-43104-0-7.

மருதமுனை ஹரீஷாவின் கவிதைகளின் தொகுப்பு. கவிதைகளில் தான் வாழும் சமூகக் கண்ணோட்டம், பெண்ணியப் பார்வைகள் யதார்த்தமாகத் தொட்டுச் செல்கின்றன. கவிதைகள் தென்கிழக்கு இஸ்லாமியத் தமிழ்ப் பேச்சு வழக்கில் அமைந்துள்ளமை இத்தொகுப்பிற்குச் சிறப்பாகும். 1999இல் எழுத்துத்துறையில் பிரவேசித்த ஹரீஷாவின் கவிதை, சிறுகதை, இலக்கியக் கட்டுரைகள் என தேர்ந்த பல பிரதிகளும் இலங்கையில் வெளியாகும் பிரதான பத்திரிகைகளான தினகரன், வீரகேசரி, சுடர் ஒளி, தினக்கதிர், இடி, நவமணி, முஸ்லிம் குரல் என்பனவற்றின் ஊடாகப் பிரசுரமாகியிருக்கின்றன. மருதமுனை ஹரீஷா, நவஹரீஷா, மருதாணி ஆகிய புனைபெயர்களிலும் இவர் எழுதிவருபவர். ஒரு நூலகராகப் பணியாற்றும் ஹரீஷாவுக்கு நாளாந்த வாழ்க்கை நூல்களோடு உறவாடும் பெறுமதியான ஒரு பொழுதாகக் கழிந்துள்ளது. இவரது பெற்றோர் பி.எம்.எம்.ஏ.காதர்- எம்.எல்.ஹவ்லத் தம்பதியினராவர். இவரது தந்தையும் மூத்த ஊடகவியலாளராகவும், கவிஞராகவும் அறியப்பட்டவர். இவரது துணைவர் கல்முனை சமீம் ஒரு ஊடகவியலாளராகவும் இலக்கிய ஆர்வலராகவும் அறியப்பட்டவர்.

## 16487

**ஊசல்: ஒரு தேடல்.** செல்வக்குமார். யாழ்ப்பாணம்: வாமதேவா தியாகேந்திரன், பிறை வெளியீடு, 1ஆவது பதிப்பு, 2014. (யாழ்ப்பாணம்: நோபிள் பிரின்டர்ஸ், 817, ஆஸ்பத்திரி வீதி).

138 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-41299-0-0.

செல்வம் என்ற பெயரில் ஊடகத்துறையில் அறியப்பட்ட செல்வக்குமார் ஒரு கவிஞராகவும் "நமது ஈழநாடு" பத்திரிகையில் பத்தி எழுத்தாளராகவும் செயற் பட்டவர். தமிழகத்தில் வாழ்ந்த சில காலம் கவிஞர் அறிவுமதியின் செயலாளராகப் பணியாற்றிய காலகட்டத்தில் கவிதை எழுதப் பழகியவர் இவர். தனது உணர்வு களையும் அவதானிப்புகளையும் இரத்தினச் சுருக்கமாகப் பதிவிடும் ஆர்வமும் அர்ப்பணிப்பும் இந்த ஆக்கங்களில் தெளிவுறத் தெரிகின்றன. வாழ்வின் காலவோட்டத்தில் பார்த்த, அறிந்த, தொட்டுணர்ந்த நிகழ்வுகளை இயல்பான நதியின் சலசலப்பில்லா ஓட்டத்தைப் போல இத்தொகுப்பில் ஓடவிட்டிருக்கிறார். ஊசி முனையான, மின்னல் வெட்டான கவிதைகள் இத்தொகுப்பில் நிறையவே உள்ளன.

## 16488

**ஊற்றெடுத்த உணர்வுகள்: கவிதைகள்.** எம்.ரி. செல்வராஜா. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1ஆவது பதிப்பு, 2014. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

xxii, 186 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 18x12 சமீ., ISBN: 978-81-927041-3-5.

"கடவுள் வாழ்த்துக்கள்" என்ற முதலாவது பிரிவில் உரும்பிராய் ஓடையம்பதி விநாயகர் பாடல், விம்பிள்டன் விநாயகர் பாடல்கள், ஈலிங் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் பாடல்கள், உயர்வாசற் குன்று முருகன் பாடல், ஈஸ்ட்ஹாம் முருகன் பாடல், டூட்டிங் முத்துமாரி அம்மன் பாடல் ஆகிய கோவில்கள் மீது பாடப்பெற்ற பதினாறு பக்திப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. தொடர்ந்து வரும் தமிழும் தவழ்ந்த மண்ணும், தமிழ்த்தாய் பாடல்கள், காதல் பாடல்கள், பலதும் பத்தும், தைப்பொங்கல் வாழ்த்துக்கள் சில, சிறுவர் தாளலய நாடகம் (ஈழத்துச் செல்வங்கள், நல்லதோர் உலகம் செய்வோம், தொண்டர் தம் பெருமை, தீதும் நன்றும் பிறர் தர வாரா, புலம்பெயர் வாழ்வின் அவலம், இம்மண்ணில் எம்மவர்கள்), புதுவருட வாழ்த்துக்கள் சில, வாழ்த்துப் பாடல்கள் ஆகிய பிரிவுகளின் கீழ் 89 பாடல்களும் இடம்பெற்றுள்ளன. துரையப்பா செல்வராஜா, உரும்பிராயில் துரையப்பா-சரஸ்வதி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர். 1973இல் லண்டனுக்கு வந்து தனது B.Sc Civil Engineering பட்டப்படிப்பினை முடித்து பொறியியலாளராகப் பணியாற்றி வந்தவர். லண்டனில் 1978இல் ஆரம்பிக்கப்பட்ட மேற்கு லண்டன் தமிழ்ப் பாடசாலையின் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றும் இவர் கவிஞராகவும், நாடக ஆசிரியராகவும் சமூகத்தொண்டராகவும் அறியப்பட்டவர். பன்னூலா சிரியரான இவர் இலண்டனில் நாரதர் என்ற நாடகத்தொகுதி, நினைவில் ஒரு

நிலா, வாடகை வீடு, உண்மை தெரியாமல் வைத்த நட்பு ஆகிய சிறுகதைத் தொகுதிகள், தமிழறிவு என்ற தலைப்பில் எட்டு தமிழ்ப் பாட நூல்கள், கருணைத் தெய்வமே என்ற பக்திப்பாடல்களின் இறுவெட்டு, ரஸ்புட்டீன் என்ற சரித்திர மொழிபெயர்ப்பு நாவல் ஆகியவற்றினை வழங்கியுள்ளார்.

### 16489

**எங்கள் மண்ணும் இந்த நாட்களும்: ஒரு கவிதா நிகழ்வு.** பா.அகிலன் (பதிப்பாசிரியர்). நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2019. (சென்னை 600086: Compu Print Premier Design House).

72 பக்கம், விலை: இந்திய ரூபா 90.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-89820-39-3.

பாரம்பரியமான கவியரங்குகள் மலினப்பட்டுப்போன சூழலில் அதற்கு ஒரு மாற்றாகவும் ஒரு பரிசோதனை முயற்சியாகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கவிதா நிகழ்வை நான் அறிமுகப்படுத்தினேன். "அரசியல் கவிதைகள் - ஒரு கவிதா நிகழ்வு" என்ற தலைப்பில் முதலாவது கவிதா நிகழ்வு 1981இல் சுமார் 30 பேர் கொண்ட ஒரு சபையில் அரங்கேறியது. எனது நண்பர்கள் என். சண்முகலிங்கம், மௌனகுரு, சேரன், ஆதவன் முதலியோர் நிகழ்வில் பங்கேற்றனர். என் வேண்டுகோளுக்கு இணங்க அரசியல் கவிதைகள் பற்றி கைலாசபதி ஓர் அறிமுக உரையாற்றினார். ஒற்றைக் குரலில் அன்றி பல குரலில் கூட்டாகவும் தனியாகவும் சற்று நாடகப் பாணியில் கவிதைகளை அவைக்கு ஆற்றிய அந்நிகழ்ச்சி மிகுந்த தாக்கவலு உடையதாக அமைந்தது. அதைத் தொடர்ந்து "பாரதி கவிதைகள் - ஒரு கவிதா நிகழ்வு", "பலஸ்தீனக் கவிதைகள்-ஒரு கவிதா நிகழ்வு" ஆகிய இரு நிகழ்வுகளை நான் தயாரித்து அரங்கேற்றினேன். இவற்றில் நான் முன்குறிப்பிட்ட வர்களோடு வேறு சில மாணவர்களும் பங்கேற்றனர். இம் மூன்று நிகழ்வுகளினதும் வெற்றி "கவிதா நிகழ்வு" ஒரு புதிய கலாசார இயக்கமாக பல்வேறு இயக்கங்களால் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்தது. அதில் இசை போன்ற பல புதிய ஜனரஞ்சகமான அம்சங்களையும் அவர்கள் சேர்த்தனர். பல்வேறு கவிதா நிகழ்வுகள் அரங்கேறின. அவ்வகையில் உருவான மிகப் பிரபல மான வடக்கில் கிராமங்கள் தோறும் அறுபது தடவைகளுக்கு மேல் அரங்கேற்றப் பட்ட "எங்கள் மண்ணும் இந்த நாட்களும்" என்ற கவிதா நிகழ்வின் எழுத்துப் பிரதி சுமார் 35 ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போது அச்சுருவில் வெளிவருகின்றது. மிகக் கரிசனையுடன் இப்பிரதியைத் தேடி எடுத்து அருமையான விரிவான ஒரு முன்னுரையுடன் பா.அகிலன் இதைப் பதிப்பித்துள்ளார். கவிதா நிகழ்வு என்றால் என்ன என்பதை அறியாத பலருக்கும் அது பற்றி இந்நூல் அறிமுகப்படுத்துகின்றது. கவிதையை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு ஒரு சிறந்த சாதனமாகக் கவிதா நிகழ்வைப் பயன்படுத்துவதற்கு இந்நூல் ஆதர்சமாக அமையும் என்று நம்புகிறேன் (எம்.ஏ.நுஃமான், பின்னட்டைக் குறிப்பு). இக்கவிதா நிகழ்வின் எழுத்துருவை சேரனும், இசையமைப்பினை எம்.கண்ணனும், இசை எழுத்துருவினை முரளியும் மேற்கொண்டனர். நினைவிலிருந்து பிரதிக்கு மாற்றும் பணியினை கார்த்தியாயினி நடராசா கதிர்காமநாதன் ஆற்றியிருந்தார்.

## 16490

**எஞ்சியிருக்கும் சிறகுகளால் பறத்தல்.** முல்லை முஸ்ரிபா. கொழும்பு 10: வெள்ளாப்பு வெளி, ஏ 6, 2/1 என்.எச்.எஸ்., கலைமகள் வீதி, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2015. (கொழும்பு 10: எஸ். அன்ட் எஸ். பிரின்டர்ஸ், 49, ஜயந்த வீரசேகர மாவத்தை).

xviii, 154 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-955-0280-04-9.

முல்லை முஸ்ரிபா இலங்கையின் முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணீரூற்றில் பிறந்தவர். மர்கூம்களான முஹம்மது முஸ்தபா, ஸரிபா உம்மா தம்பதியின் இளைய புத்திரர். 2002 இல் இளம் படைப்பாளிக்கான கௌரவ விருது, 2004 இல் தேசிய சாகித்திய விருது, 2004 இல் வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விருது, 2006 இல் வன்னிச் சான்றோர் விருது, 2010 இல் கொடகே தேசிய விருது, தேசிய சாகித்திய சான்றிதழ், வடமாகாண இலக்கிய விருது ஆகியவற்றையும், 2011 இல் யாழ் முஸ்லிம் இணையத் தளத்தின் மூத்த படைப்பாளிக்கான சிறப்பு விருது ஆகியவற்றையும் கவிஞர் முல்லை முஸ்ரிபா பெற்றுள்ளார். இவரது முதல் கவிதை நூல் "இருத்தலுக்கான அழைப்பு" என்பதாகும். இந்த நூல் 2003 இல் வெளிவந்தது. மொழித்துறை விரிவுரையாளராக, முதன்மை ஆசிரியராக, இலங்கை வானொலியின் ஒலிபரப்பாளராக, பத்தி எழுத்தாளராக, கவிதைத் திறனாய்வாளராக தனது பன்முக ஆற்றலை வெளிப்படுத்தும் இக்கவிஞரின் முதல் தொகுதியிலுள்ள "மீதம்" என்ற கவிதை க.பொ.த. சாதாரணதர தமிழ்ப் பாடப் புத்தகத்தில் உள்ளடக் கப்பட்டிருப்பது இவரது ஆளுமையை வெளிக்காட்டுவதாய் அமைந்திருக்கின்றது. இந்நூல் பற்றி அவர் விபரிக்கும்போது, "மனசு மௌனத்துள் உறைந்து சொற்கள் விறைத்துப் போகும்போது சிலபோது மனசு பூவின் இதழொன்றால் வருடப்படும் போது அல்லது குளிர்நீரின் ஒரு துளியால் தழுவப்படும்போது என் சொற்களுக்குச் சிறகு முளைக்கிறது. சிறகு முளைக்கும் சொற்களை அவ்வப்போது பறக்கவிட்டு வந்திருக்கிறேன். எனது பறத்தல் என்பது மானுட நேயத்தைத் தேடியலைதலும் விட்டு விடுதலையாகி நிற்கும் துடிப்பும் தான். வரண்ட வெளிகளிலெல்லாம் நீள்கிற எனது பறத்தலில் மனிதம் வற்றிப்போகாத ஒரு சிறு நீர்க் குழியில் என் குருவி சிறகுகளை ஒடுக்கி கீழ் அமர்ந்து நீரருந்த அவாவுகிறது. அந்த அவாவுதல் தீரா விடாயாய் மேலும் நீள்கிறது. ஆதலால் எஞ்சியிருக்கும் சிறகுகளால் பறத்தல் தொடர்ந்தும் நிகழ்கிறது" என்கிறார் ஆசிரியர்.

## 16491

**எதுவாயிருப்பினும்.** அக்கரையூர் அப்துல் குத்தூஸ். அக்கரைப்பற்று-2: H.L.அப்துல் குத்தூஸ், 215, மத்திய சாலை, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2020. (அக்கரைப்பற்று: நியூ செலெக்ஷன் ஒப்செட் பிரின்டர்ஸ், C.E.B. மின்சார நிலைய வீதி).

ix, 123 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-96942-9-8.

இக்கவிதைத் தொகுதியில் அக்கரையூர் அப்துல் குத்தூஸ் எழுதிய 50 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. வந்தவளோடு வாழ்க்கை, ஆலம்பழம், மாறிப்போன மாரி, ஆர் தீ மூட்டினாள்?, காலமெலாம் காதலி, சூழலைச் சுரண்டாதீர், பசுமை, கறை

போகக் கழுவுங்கள், வெற்றிச் சிசு, முற்றத்து நாய், நீயும் ஒரு தாயா?, தேடல், சந்தர்ப்பவாதி, தவறான தீர்ப்பு, நம்பிக்கை மாறிலியல்ல, நம்பிக்கைத் துரோகம், சுவர், கலப்படம், காணாமல் போன காதலி, வரம், பத்தியம் காத்திடுவீர், உள்ளொன்றும் புறமொன்றும், இருமுக ஆளுமை, சந்திப்போம், காலத்தைக் காதலி, எங்கே தொலைந்தான்?, உன்னை மட்டும் நீ கவனி, குறைகுடம், சில்லறைப் பிரச்சினை, தொலைபேசித் தொல்லை, அலைக்கப் பிறந்தவர்கள், உயிருள்ள இயந்திரம், பூஜ்யம், தோல்வி, விநயமுடன் வியாபாரிகளுக்கு, பேசப்பழகு, தார்மீகமில்லாத தகவல் தொடர்பாடல், பதின்மரைப் பாதுகாப்போம், மகன் போல் ஒருத்தனுக்கு, ஓயா மழை, மழைக் கவிதை, தெருவிழா, சட்டம் வந்தாச்சு, காதலர் வேதநாள், பேயறைந்த பிள்ளை, எதற்காகப் படிப்பு, யார்வரி உன் முகவரி?, விதவையாய்ப் போன வானம், பைத்தியங்கள் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

## 16492

**எழுதிக் கடக்கின்ற தூரம்**. ரூபன் சிவராஜா. சென்னை 600 078: டிஸ்கவரி புக் பலஸ், இல. 6, மஹாவீர் கொம்ப்ளெக்ஸ், முனுசாமி சாலை, கே.கே.நகர், 1ஆவது பதிப்பு, மார்ச் 2021. (சென்னை 600 078: டிஸ்கவரி புக் பலஸ், இல. 6, மஹாவீர் கொம்ப்ளெக்ஸ், முனுசாமி சாலை, கே.கே.நகர்).

*176 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-89857-63-4.*

"இது எனது முதலாவது கவிதைத் தொகுப்பு. உள்ளத்தில் இருந்து சில வார்த்தைகளை உங்களோடு பகிர்வதில் மகிழ்கிறேன். அக உணர்வுகளின் உந்துதலிலிருந்தும் சமூகச் சூழல்களின் தாக்கத்திலிருந்தும் வெவ்வேறு தருணங்களில் கருக்கொண்டவையே இத்தொகுப்பிலுள்ள கவிதைகள். கவிதை தோன்றுகின்ற அக மற்றும் புறத் தூண்டுதல்கள் எல்லா நேரமும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை அவை அந்தந்தத் தருணங்களின் மனநிலைகளுக்கேற்ப மாறுபடக்கூடியவை. இதைத்தான் எழுதவேண்டும் என்று திட்டமிட்டு இக்கவிதைகள் எழுதப்படவில்லை. அப்படி எழுதும் கவிதைகள் உயிர்ப்புடையனவாக வந்துவிடுவதுமில்லை. மனநிலை, மனிதர்கள், அனுபவங்கள், சம்பவங்கள், தாக்கங்கள், சமூகம், அரசியல், இயற்கை, ஆழ்மனதைத் துழாவும் நினைவுகள், அலைக்கழிக்கின்றதும் உந்துதலுமான கனவுகள், காலம், தூரம் கவிதைகளின் பேசுபொருளைத் தீர்மானித்திருக்கின்றன" (ஆசிரியர் என்னுரையில்).

## 16493

**எழுதித் தீராப் பிரியங்கள்: புதுக்கவிதை**. வி.மைக்கல் கொலின். மட்டக்களப்பு: மகுடம் பதிப்பகம், இல. 90, பார் வீதி, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496A, திருமலை வீதி).

*viii, 32 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 17.5x12.5 சமீ., ISBN: 978-624-5849-09-3.*

காதலும் அரசியலும் கலந்ததுதான் மனித வாழ்க்கை என்பதில் அசையாத நம்பிக்கை கொண்ட மைக்கல் கொலினின் நான்காவது கவிதை நூல் இது. ஆறு வருடங்கள் காதலியாயும், 22 வருடங்கள் காதல் மனைவியாயும் வாழும் தன் வாழ்க்கைத் துணைவியை இக்கவிதைகளுக்குள் இலக்கியமாக வாழவைத்திருக்கிறார். தலைப்பற்ற புதுக் கவிதைகளின் தொகுப்பாக காதல் மனைவியின் அழகிய படங்களை ஆங்காங்கே சேர்த்து தன் கவிதைகளுக்குக் கோலம் போட்டிருக்கிறார். வாழ்வின் பக்கங்களில் காதலின் பயணம் எப்போதும் நம்மோடு கைகோர்த்துக் கொண்டிருக்கும். அதை எழுதித் தீராப் பிரியங்களாக இலக்கியமாக்கியிருக்கிறார். ஆசிரியரின் 22 வருட திருமண வாழ்வின் நினைவாக வெளிவரும் இந்நூல் 42ஆவது மகுடம் பிரசுரமாக வெளிவந்துள்ளது.

## 16494

**என் இனிய பட்டாம்பூச்சிக்கு.** வி.மைக்கல் கொலின். மட்டக்களப்பு: மகுடம் பதிப்பகம், இல. 90, பார் வீதி, 1ஆவது பதிப்பு, மே 2022. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496A, திருமலை வீதி).

xxviii, 108 பக்கம், விலை: ரூபா 750., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-624-5849-04-8.

மைக்கல் கொலினின் தலைப்பிடப்படாத 44 கவிதைகளைக் கொண்டுள்ள நூல். முன்னர் முகநூலில் இவை 44 தொடர்களில் வெளிவந்து வாசகர்களின் பாராட்டைப் பெற்றவை. இது வெறும் காதல் கவிதைகளின் தொகுப்பு மட்டுமல்ல. இவரது காதல் மனைவியின் பிறந்த தினத்தை முன்னிட்டு தொடங்கப்பட்ட கவிதைத் தொடரின் நூல் வடிவம் இதுவாகும். காதல் கவிதைகளுக்கூடாக எமது தொன்மங்களையும், தமிழர்தம் வாழ்க்கை முறைமையினையும், எமது மண்ணின் சரித்திரத்தையும் தேடும் முயற்சியாக காதலைச் சுமந்த ஒரு தொன்ம யாத்திரையாக இது அமைக்கப்பட்டுள்ளது. திருக்கோணேஸ்வரம், மாமாங்கேஸ்வரம், கல்லடி பாடும் மீன், சீகிரியா, சிவனொளிபாதமலை, கீழடி, அகஸ்தியர் ஸ்தாபனம், தாஜ் மஹால், தஞ்சைப் பெரியகோவில், சோழப் பேரரசு, தென்னவன் மரவடி, ஏதேன் தோட்டம், செவ்வாய்க் கிரகம், கன்னியா வெந்நீரூற்று, கம்போடியா ஹங்கோவாட், அம்பிகாபதி-அமராவதி, காதல்காவியம், ஆண்டாள், கிளியோபாட்ரா, சதுரங்கம், பரமபதம் என வரலாற்றையும் இணைத்து எழுதி, நவீன காதல் கவிதைகளில் ஒரு புதிய மாற்றத்தைக் கொண்டுவர ஆசிரியர் முனைந்துள்ளார். மகுடம் பதிப்பகத்தின் 60ஆவது வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.

## 16495

**என் எல்லா நரம்புகளிலும்.** ஜே.பிரோஸ்கான். கிண்ணியா 3: ஜே.பிரோஸ்கான், பேனா பப்ளிக்கேஷனஸ், 92/4, உமர் ரழி வீதி, மஹ்ரூப் நகர், 1ஆவது பதிப்பு, 2013. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

xii, 48 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-0932-04-7.

ஆசிரியரின் நான்காவது கவிதைத் தொகுப்பாக வெளிவரும் இந்நூலில் மொத்தம் 39 கவிதைகள் உள்ளன. உலகு எதிர்நோக்கும் சவால்களை உடைத்தெறியத்

தலைப்படும் ஒரு கவிஞனின் பாடல்கள் இவை. இயற்கையின் ஆதங்கம், எதிர்பார்ப்பு, போன்றவற்றை கடல்நீர், காற்று, மரங்கள், நதிகள், கோடை வெய்யில், என்பன எம்முன் வந்து புலம்புவதைப் போல இவரின் உலகத்தை அளக்கும் நிமிஷங்கள் (கடலின் ஆதங்கம்), காகங்களின் மாநாடு போன்ற கவிதைகள் இயற்கையாய் அமைந்திருக்கின்றன. சமூகத்தில் ஏற்பட்டுவிட்ட துயரங்களையும் இயற்கையின் நெருக்குதல்களையும் வித்தியாசமான கோணத்தில் நின்று வெளிப்படுத்தும் கவிதைகளாக இவை அமைகின்றன.

### 16496

**என் சுவாசக் காற்று: தன்முனைக் கவிதைகள்.** உடுவிலூர் கலா (இயற்பெயர்: ரவீந்திரகலா ஸ்ரீபாஸ்கரன்). யாழ்ப்பாணம்: திருமதி ரவீந்திரகலா ஸ்ரீபாஸ்கரன், 2ஆவது லவ் லேன், உடுவில், மானிப்பாய், 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2022. (யாழ்ப்பாணம்: மெகா பதிப்பகம், 41, றக்கா வீதி, கச்சேரியடி).

x, 80 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 20x14 சமீ., ISBN: 978-624-97879-7-1.

பெண்ணிய எழுத்தாளரும், ஆய்வாளருமான உடுவிலூர் கலாவின் தன்முனைக் கவிதைகள் இவை. இது இவரது ஆறாவது நூலாக வெளிவந்துள்ளது. வேலூர் மாவட்டம் காவனூர் கிராமத்தில் பிறந்த கா.ந.கல்யாணசுந்தரம் அவர்களின் புதிய கவிதை வடிவக் கண்டுபிடிப்பான "தன்முனைக் கவிதைகள்" தெலுங்கு நானிலு வடிவத்தை தழுவியது. உடுவிலூர் கலாவும் இவ்வடிவத்தைப் பரீட்சார்த்தமாக பின்பற்றியுள்ளார். தெலுங்கு வடிவ "நானிலு" என்னும் ஆறடிக் கவிதை வகையைத் தழுவிய தமிழ் வடிவமாக இத் தன்முனைக் கவிதைகள் அமைந்துள்ளன. இவ்வடிவமானது தன் முனையில் நின்று மற்றையோரைச் சிந்திக்க வைக்கும் ஒன்றாகும். நான்கு அடிக்குக் குறையாமலும் சராசரியாக எட்டு சொற்களையும், ஆகக்கூடியது பன்னிரண்டு சொற்களையும் கொண்டு கட்டப்படும் சொல்லடுக்கை இக்கவிதைகள் பொதுவாகக் கொண்டிருக்கும். சமூகத்தில் தான் காணும் காட்சிகளை, அவலங்களை பல்வேறு கோணங்களில் தன்முனையில் நின்று தரிசித்து, உள்வாங்கி இந்நூலில் கவிவரிகளாக்கியுள்ளார். "யாழிசை கவித் தடாகம்" என்ற இணையவழிக் கவிஞர் குழுமத்தின் அமைப்பாளரான ரவீந்திரகலா ஸ்ரீபாஸ்கரன் வலி தெற்கு பிரதேச எழுத்தாளர் சங்கத்தின் உருவாக்கத்தில் பெரும்பங்கு வகித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### 16497

**என் புழுதி ரசம்.** வாசுதேவன். மட்டக்களப்பு: வாசுதேவன், 1ஆவது பதிப்பு நவம்பர் 2021. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496 A, திருமலை வீதி).

xvi, (4), 96 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 20.5x13 சமீ., ISBN: 978-624-5739-02-8.

"முற்றிலும் புதிய பேசுபொருள்சார் 90 கவிதைகள் இக்கவிஞரால் தரப்பட்டுள்ளன என்பது வற்புறுத்தப்பட வேண்டியதொன்றாகின்றது. இயற்கை சார்ந்த மரம், புல், பூ, மழை, காற்று, நிலவு, மின்னல் முதலியன தரும் வெவ்வேறான புதிதான

அனுபவ வெளிப்பாட்டுக் கவிதைகளையே கருதுகிறேன். பிறிதொரு மிக முக்கிய மான சிறப்பியல்பு இன்றைய ஈழத்துக் கவிஞர்கள் பலரும் ஈடுபாடு காட்டாத பேசுபொருள் சார்ந்தது. வாழ்வியல் தரிசன வெளிப்பாடுகள் பற்றியது அது. இத்தியாதி கவிதைகள் இத்தொகுப்பில் ஆங்காங்கே பல காணப்படுவது விதந்துரைக்கத் தக்கது. தவிர, ஆச்சரியமும் அதிர்ச்சியும் கொண்ட கேள்விகளை எழுப்பும் கவிதைகள் சிலவும் இத்தொகுப்பில் உள்ளன. சுருங்கக் கூறின், பொருள் புதிது, சொல் புதிது, படிமம் புதிது, சுவை புதிது ஆன கவிதைகள் கொண்ட இத்தொகுப்பு நிச்சயம் "புழுதி ரசம்" அன்று நாட்டு வைத்தியம் கூறும் முறையில் வைக்கப்பட்ட குணமும் மணமும் மிக்க ரசமேயாகும்."(பேராசிரியர் செ.யோகராசா, பின்னட்டை வாசகங்கள்).

## 16498

**எனக்குப் பறவை நிழல்.** தமிழ் உதயா (இயற்பெயர்: திருமதி பசுபதி உதயகுமாரி விவேகானந்தராஜா). சென்னை 600083: சந்தியா பதிப்பகம், புதிய எண் 77, 53ஆவது தெரு, 9ஆவது அவென்யூ, அசோக் நகர், 1ஆவது பதிப்பு, 2018. (சென்னை 600083: விக்னேஷ் பிரிண்டர்ஸ்).

96 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21x14 சமீ., ISBN: 978-93-87499-55-3.

"தமிழ் உதயாவின் கவிதைமொழி நமக்கு நெருக்கமாகவும் நமக்குள் நிகழ்வதுமாகவே உணர முடிகின்றது. பேரன்பைக் குறிவைத்து, அதன் பாதையிலேயே நகர்பவராக இருக்கிறார் தமிழ் உதயா. அன்புக்குத் தவித்து, அன்பில் தழைத்து, அன்பில் கரையவே விரும்புகிறார்" (பூமா ஈஸ்வரமூர்த்தி, அணிந்துரையில்). பள்ளிக்கூட விடுதியின் அறையில் இருந்து 12ஆவது வயதில் உணர்வும் தவிப்பும் தனிமையும் வழிந்த மனநிலையில் தனது முதல் கவிதையை இவர் எழுதியுள்ளார். பேசித்தீரா மௌனங்களையே கவிதைகளாக மொழிபெயர்த்திருக்கிறார். மல்லாவியின் மிக நீண்ட வயல்வெளிகளும் பாலியாற்றின் பதநீர் சுவை ஊற்றுகளும் ஆடிக்களித்த ஓடைகளும் நினைவில் நீங்காமல் சப்தமிட்டபடியே இருக்கின்றன எப்போதும். தனது வாழ்க்கை தேம்ஸ் நதிக்கரையோரம் கரை ஒதுங்கினாலும் நினைவுகள் என்னவோ வன்னியின் சாலைப் பூக்களை மேய்ந்தபடியேதான் இருக்கின்றது என்கிறார்.

## 16499

**எனக்கென்றிருந்த இடங்களில் (கவிதைத் தொகுதி).** துரைச்செல்வி. சென்னை 600 024: காவ்யா, 14, முதல் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2003. (சென்னை 600 005: மணி ஆப்செட்).

xiv, 98 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21.5x14 சமீ.

துரைச்செல்வி, இலங்கை தந்த இன்னொரு தமிழ்க் கவி. சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழ் இலக்கியத்தில் முதுகலையும், ஆய்வு நிறைஞர் பட்டமும் பெற்றவர். தாயகத்தில் தான் இழந்த மண்ணை நாளும் தேடும் கண்ணீர்த் துளிகள் இவருடையவை. தற்போது லண்டனில் பணிபுரிகிறார். இது இவரது முதலாவது

*கவிதைத் தொகுதி. தடுக்காதே, நீ வராத நாளை, கலையாத நினைவுகள், மழை, சந்தர்ப்பம் தேடி, காத்திருக்கின்றேன், மழையின் நாட்குறிப்பு, உறங்காத உனக்கு, எனக்கென்று எதுவும், ஏன், உங்களிடம், வெற்றுக்கோடுகள், ஐ ரியலி மிஸ் யூ, கனவு சிதைந்த இமையில், கல்லறையில் பூங்காவனம், நல்லூர்க் கந்தா, நெருப்பின் கிளையில் நான் எனத் தொடரும் துரைச்செல்வியின் 43 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

## 16500

**ஏர்: கவிதைத் தொகுப்பு.** வே.புவிராஜ். யாழ்ப்பாணம்: கலை, இலக்கிய பண்பாட்டுப் பேரவை, கைதடி மேற்கு, கைதடி, 1ஆவது பதிப்பு, 2022. (சென்னை 600117: ஸ்ரீ துர்க்கா பிறின்டர்ஸ்).

*248 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.*

*“ஏர் என்னும் என் கவிதைத் தொகுப்பு அறிவியல் சொல்லவில்லை, அறிவுரை சொல்லவில்லை, புதுவித புத்துணர்வு என்னும் புரட்சிகள் மூட்டவில்லை, வலிகளை சார்ந்து நிற்கும் எளியவர் எம் கனவின் நெருடலின் ஓரிரு துளிகளின் வலிகள் வரிகளாக பதிவாகி நிற்கும் “ஏர்” ஓரிரு பேர்களது மனங்களை உழுது புரட்டும் என்ற நம்பிக்கையே என் எழுத்தால் எனக்கு நான் சூடிக்கொள்ளும் மகுடம். புரட்டுவதும் புறந்தள்ளுவதும் உங்கள் விருப்பம். விளம்பரம் இல்லாமல் விற்றுத் தீர்க்கும் துளசி நீர்த் தீர்த்தம் மருந்தென இட்டாலும், மடையெனத் திறந்தாலும் மனதுக்குள் இனிக்கும் என் கவிதைகள் ஒவ்வொன்றும் உங்கள் நினைவுகளை மீட்டுவரும் என்பது உறுதி” (ஆசிரியர் உரை).*

## 16501

**ஒரு கூடை குறும்பூ (குறும்பாக்கள்).** *சிவசேகரன் (இயற்பெயர்: சிவலிங்கம் சிவசேகரன்). மருதங்கேணி: சிவலிங்கம் சிவசேகரன், உயிலடி, குடத்தனை வடக்கு, குடத்தனை, 1ஆவது பதிப்பு, மார்கழி 2021. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).*

*72 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14 சமீ.,* ISBN: *978-624-98868-0-3.*

*“சிவசேகரன் அண்மைக் காலத்தில் புதுக்கவிதை-நவீன கவிதைகளை யாத்து வருபவர்களில் கவனத்தை ஈர்த்து வருபவர். அதன் அடையாளமாக கொடகே விருதையும் வென்றவர். அதிகம் பேர் தொடாத மரபின் வழிவந்த குறும்பா, இவருக்கும் கைவந்திருக்கிறது என்பது இளையவர்களையும் தன்பால் ஈர்ப்பது தமிழ் மரபின் சிறப்பு என்பதை புலனாக்குகின்றது. குறும்பாவிற்கு இருக்கவேண்டிய ஓசை ஒழுங்கு, எதுகை, இயைபுத் தொடை, எனும் இலட்சணங்களை இவற்றில் காணமுடிவது ஆரோக்கியமான நிறைவு. ஈழத்தில் குறும்பா முயற்சிகள் போத வில்லை எனும் கருத்தியலை அண்மைய குறும்பா முயற்சிகளும் இப்போது வெளிவரும் இவரது இக்குறும்பா வெளியீடும் குறைக்கும் என்பது திண்ணம்”. (கவிஞர் வ.வடிவழகையன், அறிமுக உரையில்).*

### 16502

**ஒரு திராட்சைக் கொடி தேம்பி அழுகிறது.** ஏ.எம்.எம்.அலி. திருக்கோணமலை: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம், 1ஆவது பதிப்பு, 2016. (திருக்கோணமலை: A.R.T. பிரின்ரர்ஸ், 82, T.G. சம்பந்தர் வீதி).

xvii, 104 பக்கம், விலை: ரூபா 375., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-4628-36-6.

கவிஞர் கிண்ணியா ஏ.எம்.எம். அலியின் தேர்ந்த கவிதைகளின் தொகுப்பு இது. இக்கவிதைத் தொகுதியில் இவரது மரபுக் கவிதைகளும், அவ்வப்போது எழுதிய புதுக் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. கண்ணி சிந்து, வெண்பா, அகவல், அறுசீர் மற்றும் எண்சீர் என்று மரபுசார்ந்த கவிதைகளாக இத்தொகுப்பின் பல கவிதைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் அலியின் சொந்த அனுபவங்களும், வாழ்வின் மறுத்துரைக்க முடியாத எதார்த்தங்களும் மௌனமொழியில் பேசிக்கொண்டிருக்கின்றன. தினபதி குழுமத்தின் சிந்தாமணி வார இதழின் ஆஸ்தான கவிஞர்களுள் ஒருவராக வலம்வந்தவர் அலி. 1974களில் ஆக்க இலக்கியத்துறையில் எழுதத் தொடங்கிய இவரது முதலாவது மரபுக் கவிதைத் தொகுதி "குடையும் அடைமழையும்" 2005இலேயே வெளிவந்திருந்தது. இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி "ஒரு தென்னைமரம்" 2011இல் வெளிவந்துள்ளது.

### 16503

**ஒரு துண்டு வானம் நிறைய நிலா: வடிவழகையன் கவிதைகள்.** வ.வடிவழகையன். யாழ்ப்பாணம்: சுகர்யா வெளியீடு, அளவெட்டி, இணை வெளியீடு, சுவிட்சர்லாந்து: திரு.திருமதி சிவபாலன்-தேவகுமாரி இணையர், 1ஆவது பதிப்பு, தை 2022. (யாழ்ப்பாணம்: ஜே.ஆர். இன்டஸ்ட்ரீஸ், இல. 7, உடுவில் மகளிர் கல்லூரி மேற்குத் தெரு, உடுவில்).

xii, 117 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 23.5x16.5 சமீ., ISBN: 978-624-98799-0-4.

வடிவழகையன் கவிதைகளின் இண்டாவது தொகுப்பு இது. "பாடுங்கள் கவிஞர்காள்" என்ற கவிதை தொடங்கி "நம்பிக்கை வளரட்டும்" என்ற கவிதை ஈறாக சந்தம் ததும்ப கருத்தாழம் மிக்க 102 கவிதைகளை அழகு தமிழில் எள்ளல் கொஞ்சத் தரும் பாங்கு அவரது தனித்துவமாகின்றது. ஏற்கெனவே கவிஞர் வடிவழகையனின் "முகில் எனக்கு துகிலாகும்" என்ற கவிதை நூல் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தினரால் வெளியிடப்பட்டிருந்தது என்பதுவும் அந்நூல் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றிருந்தது என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

### 16504

**ஒரு நானும் இன்னும் ஒரு நானும்.** வெலிமடை ரபீக். கொழும்பு 10: வெள்ளாப்பு வெளி, ஏ 6, 2/1 என்.எச்.எஸ்., கலைமகள் வீதி, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2020. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xvii, 82 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-0280-14-8.

வெள்ளாப்பு வெளியின் ஒன்பதாவது நூலாகவும், வெலிமடை ரபீக்கின் மூன்றாவது கவிதை நூலாகவும் வெளிவந்துள்ளது. எண்பதுகளிலிருந்து ஈழத்துக் கவிதைத்

துறையில் அறியப்பட்டவரான வெலிமடை ரபீக்கின் கவிதைகள் ரமழானே, என் மரண வாக்குமூலம், கொறோனா, நாளை விடியும், கொல்லுகின்ற சேதிகள், மிலேச்சம், இனவாதியம், கோடை, ஆச்சி, கைவிலங்குலகம், ஊரடங்கு, மஜ்னுவின் புலம்பல், வெப்பப் பிரார்த்தனைகள், கயிறறுதல், பொம்மைகள், நிகழ்காலம், இன ஒற்றுமை, சுயநலமிகள், ஞானோதயம், நான் நானே தான், பொய், கறுப்பு மே, பொய் முடிச்சுகள், தொப்பி கதை, அவசர காலம், நிறங்கள், கோணல் பார்வைகள், நம்பிக்கை, தொடர் கதைகள், வலி, இட்லர் வார்த்தைகள், கற்காயங்கள், புலம்பல்கள் ஆகிய தலைப்புகளில் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. புணர்ச்சியற்றதும், இறுக்கமற்றதும், சிறியதுமான தனிச் சொற்கள் இவருக்கேயான தனித்துவமான கவிதை மொழியைப் பயன்படுத்துவதனால், இவரது கவிதைகள் வாசகரினால் எளிதில் உள்வாங்கப்படுகின்றன.

## 16505

**ஒரு பிடி சாம்பல்.** ந.பாக்கியநாதன். உடுப்பிட்டி: நிகி வெளியீடு, ஆனந்தகானம், இமையாணன் கிழக்கு, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2016. (யாழ்ப்பாணம்: ஆகாயம் பதிப்பகம், இமையாணன், உடுப்பிட்டி).

72 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18.5x13 சமீ., ISBN: 978-955-3982-00-1.

பாக்கியநாதனின் படைப்புகள் அப்பட்டமான தன்மையுடன் வெளிவருவதால் வெளிப்படையாகத் தன் அனுபவங்களைச் சமர்ப்பிக்கும் பண்புகொண்டமையாக அமைந்துள்ளன. உறவின் பரிவுகள், உறவின் தியாகங்கள், போரின் கொடுந் தடங்கள், ஒழுக்க வாழ்வின் உன்னதங்கள்,காதல் உணர்வுகள், நட்பின் வசீகரங்கள், குழந்தைகளின் ஏக்கங்கள், கல்வியின் சிறப்பு, ஆசிரியத்தின் மேன்மை என்று பல்வேறு விடயங்களை இந்நுலில் உள்ள 43 கவிதைகளின் வழியாக முன்வைக்கிறார்.

## 16506

**ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாள்கள்.** இரா.முரளீஸ்வரன். மட்டக்களப்பு: இரா.முரளீஸ்வரன், எண் 47, நல்லையா வீதி, 1வது பதிப்பு, 2020. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xxii, 82 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 22x15 சமீ., ISBN: 978-624-966-290-2.

டாக்டர் முரளீஸ்வரன், கல்முனை அரசு மருத்துவமனையின் இயக்குநராக உள்ளார். அவரது கவிதைத் தொகுதி மருத்துவர்களின் உணர்வுகளின் வெளிப் பாட்டை அனுபவம் மிக்க கூர்மையான பார்வையினூடாக பதிவுசெய்கின்றது. அவை மனிதம் பேசுகின்றன. வருத்தம் தெரிவிக்கின்றன. ஆறுதல் அளிக்கின்றன. உளவியல் பார்வையை வீசுகின்றன. இத்தொகுதி சுண்டு என்கின்ற சிறுவன், இறப்பு உறுதியான மருத்துவமனைக் கணங்களில், மரண வீடுகளில் கொல்லப்படும் மருத்துவமனைகள், கூடுவிட்டுக் கூடுபாய்தல், அந்த அறையை எட்டிப் பார்க்காதே, வார்த்தைகளும் நேரங்களும் போதாமல், மீள்பிறப்பின் ஆனந்தம், அம்புலன்ஸ் வண்டிகளும் சில தாமதங்களும், அன்பும் சூழ்ந்தது உலகு, வாழ்க்கையை படித்து, மரணங்கள் பழகிய மருத்துவம், அவசரமாய்ப் பயணம் போனவனின் தந்தை,

பார்வையாளர் நேரங்கள், சத்திர சிகிச்சைத் தழும்பு, விடுதி நாள்கள் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, மரண அறிவித்தலில் வந்தவர்கள், ஸ்டெதஸ்கோப், ஓர் அதிகாலை மரணம் சொன்ன பாடம், உள்ளகப் பயிற்சிக் காலம், கட்டில் எண் 11, ஒரு நோயுற்றவரின் கடிதம், மந்திரக்கோல் தேடும் மருத்துவம், மருத்துவரின் தொலைபேசி அழைப்புகள், கடவுளாய் மாறுதல், நோயுற்ற செய்தி, காத்திருப்போர் கதைகள், நோயும் நோய்சார்ந்த இடமும், இறுதி ஆறு மாதங்கள், மருத்துவமனை யுத்தங்கள், யாரோடும் பகை கொள்ளாது, புதிதாய்ப் பிறந்த குழந்தை, குண்டுகள் பூத்த காலம், கடல்-நிலா-மலர்-கல்லறைத் தோட்டம், இங்கே தீ எரிகிறது, வெள்ளம் வேண்டாம் துளிகள் போதும், ஒரு நுண்ணுயிரின் திக்விஜயம் ஆகிய 36 தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன.

## 16507

**கடலோர கவிதைகள்.** கிருஷ்ணமூர்த்தி கௌசிதீசன். கொழும்பு 13: கிருஷ்ணமூர்த்தி கௌசிதீசன், இல. 42, கொட்டாஞ்சேனை, 1ஆவது பதிப்பு, 2020. (கொழும்பு: மெரிட் பதிப்பகம்).

xi, 47 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 22x15.5 சமீ., ISBN: 978-624-96702-0-4.

வாழ்க்கை ஓர் புத்தகசாலை, கடினமான பாதைகள், திரிபுரா கருத்துகள், சிற்பி நான், சமத்துவம் காண்போம், பாவம் பாராயோ, நெடுஞ்சாலை பயணங்கள், வழி செய்வோம், பட்டினத்தார் வாரீர், ஆணவம் கொள்ளாதே, தேடல், யார் வறியவர், பிரிவினை பாராய், இன்னும் தயங்குவதேன், மங்குல் மயக்கம், கல்லூரித் தாயே, விழுமியம் மறவேல், சித்திரம் பேசுதடி, மௌனம் மொழியானால், அடி வைத்தேன், காகிதம் பேசுதடா, இராணுவவீரன் நினைவலையில், மாற்றமே மாறாதது, எழுந்து வா, தேவை மாயை, பூக்களுடன் ஓர் பயணம், காத்திருக்கிறாள், ஒற்றுமையே பலம், கற்கை நன்றே, வாய்ப்பு, பற்றிடம் பதி, நிழலே, சுவாரசியம், கற்பனை காதலியே, உணர்ச்சிகளை மதிப்போம், அன்புள்ள ராட்சசியே, போதை தவறா?, வஞ்சகி, நன்றி மறவாதே, மலையக மண் ஆகிய நாற்பது கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 69958).

## 16508

**கடவுள் என்பது துரோகியாயிருத்தல்.** கருணாகரன். சென்னை 600 042: யாவரும் பப்ளிஷர்ஸ், 24, Shop No B, S.G.P. Naidu Complex, தண்டீஸ்வரம் பஸ் தரிப்பு, பாரதியார் பூங்காவுக்கு எதிராக, வேளச்சேரி பிரதான சாலை, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2021. (சென்னை 600 042: யாவரும் பதிப்பகம்)

90 பக்கம், விலை: இந்திய ரூபா 120., அளவு: 21.5x14.5 சமீ.

"எதெல்லாம் நடக்கக்கூடாது என்றாலும் அதெல்லாம் நடந்து விடுகிறது. அப்படித்தான் ஈழப்போராட்டமும். அதனுடைய கனவும், விடுதலை பற்றிய கனவை விதைத்து விட்டுப் பார்த்தால் புதர்களும் முட்புதர்களுமாகவே விளைந்தது நிலம். விளைந்த நிலமோ கொலைக்களமானது. ஒடுக்குமுறைக்கு எதிரான

பயணம் அப்படியே நேரெதிராகத் திரும்பி ஒடுக்குமுறையாகியது. விடுதலைக்கான நடையும் அப்படித்தான். எதிர்நிலையானது. எல்லாமே நேர்-எதிர், எதிர்-நேர் என மாறிமாறிக் குழப்பமாகியது. இன்னும் இந்தக் குழப்பம் தீரவில்லை. அப்படித்தான் நானும் நீங்களும் நம் காலமுமானது. இது மத்தியூவின் காலம். சரியாகச் சொன்னால், மத்தியூவை உருவாக்கியதே இந்தக் காலம் தான். இந்தக் காலத்தில் நிகழ்ந்தவை, நிகழ்த்தப்பட்டவை நிகழ மறுத்தவை எல்லாம் தான் இந்தக் கவிதைகள்" (கருணாகரன், பின்னட்டைக் குறிப்பு)

## 16509

**கடையில் பூத்த கவிதைகள்.** ஆதம்பாவா அஸீஸ். சம்மாந்துறை: தேசிய கலை இலக்கிய தேனகம், 47 B, அமீர் அலி வீதி, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2016. (சாய்ந்தமருது: எக்செலன்ட் பிரின்ட்).

(4), 5-172 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-43028-0-8.

"சம்மாந்துறை அஸீஸ் காக்கா" என்று பரவலாக அறியப்பட்டவர் கவிஞர் அஸீஸ். இவர் சிறுவயதிலிருந்தே கவிதை புனைவதிலும் நகைச்சுவையாகக் கதைகள் புனைவதிலும் சக கிராமத்தவரிடையே பிரபல்யமாகியிருந்தவர். தனது இளமைக்காலத்திலேயே இலங்கை வானொலியில் தனது கவிதைகளை ஒலிபரப்ப வைத்தவர். சிறந்த கலைஞராகவும் சில்லறை வியாபாரியாகவும் வலம்வந்தவர். தான் சார்ந்த சமூகத்தில் காணப்பட்ட குறை நிறைகளை வைத்து இவர் அவ்வப் போது தனது கடையில் வைத்து எழுதிய கவிதைகளின் தொகுப்பாக "கடையில் பூத்த கவிதைகள்" என்ற சுவையான இக்கவிதைத் தொகுதி வெளிவந்துள்ளது.

## 16510

**கண்ணீர் பூக்கள்: வேரற்கேணியன் கவிதைகள்.** எஸ்.பி.கிருஷ்ணன் (புனைபெயர்: வேரற்கேணியன்). யாழ்ப்பாணம்: எஸ்.பி.கிருஷ்ணன், 244/4, கண்டி வீதி, அரியாலை, 1ஆவது பதிப்பு, மார்ச் 2022. (யாழ்ப்பாணம்: யாழ்ப்பாண மாநகர கூட்டுறவுச் சங்கம், காங்கேசன்துறை வீதி).

(2), 52 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 16.5x12 சமீ.

இந்நூலில் ஒரு ஏதிலியின் வீடு (ஜீவநதி-சித்திரை 2012), வளமான எங்களூர் (புதுப்புனல்- ஒக்டோபர் 2013), பணிப்பெண் (ஜீவநதி-புரட்டாதி 2013), கைபேசிக்கு நேரே (புதுப்புனல்-ஒக்டோபர் 2013), வட்டமிடும் நுளம்பு (வலம்புரி-2013), தியாகம், பொய்யாமொழி, அதிட்டசாலிகள், அழிவு, மழை, பணி, ஒட்டுண்ணி (ஞானம்-மார்ச் 2014), பற்றைசூழ் குடிசை, பாவி மனிதன், ஒளிரும் கண்கள், தலைவிரி கோலம், குருடர், மோசடி, நாடு (ஞானம்-ஒகஸ்ட் 2014), அர்த்தம் புரிகிறது (ஞானம்-ஏப்ரல் 2014), எல்லோரும் செல்வர் என்று சொல்லவேண்டும் (ஜீவநதி-மார்கழி 2014), காளையர் கடன் (ஜீவநதி- வைகாசி 2014), அதர்மத்தை அழிக்க (ஞானம்-ஒக்டோபர் 2014), தாகம் மேலிட, என்ன நீதி, அந்நியர் உள்ளே, யாதுமூரே (ஞானம்-ஒகஸ்ட் 2015), பேருந்து (வலம்புரி- தை 2015), அம்மா

போய்வருகிறேன் (ஞானம்-ஒகஸ்ட் 2018), விடுதலை வேள்வி (ஞானம் -நவம்பர் 2018), பாடும் பறவைகள் இல்லை (ஞானம்-பெப்ரவரி 2020), வைரத் தேக்கு (வலம்புரி- 16.02.2020), பரமஞானி நீ போதித்ததெல்லாம் (ஞானம்-மே 2020), சர்வதேசத்தில் கொரானா (ஞானம்-ஜுன் 2020), கண்ணீர் பூக்கள் (வலம்புரி 09.08.2020), உன் மழலைத் தமிழ் (ஞானம்-ஒக்டோபர் 2020), புதைகுழிகள் (ஞானம்-ஒக்டோபர் 2020), புட்பக விமானம் (ஞானம்-ஜுன் 2021), ஏன் போலிகளானோம் (ஞானம்-மே 2021) ஆகிய வேரற்கேணியனின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. எச்சில் இலை என்ற முதல் சிறுகதைப் படைப்பினை இலங்கையில், சுதந்திரன் பத்திரிகையில் 1958ம் ஆண்டு வெளியிட்டதுடன் ஈழத்துத் தமிழ் இலக்கியத்துறையில் கால் பதித்த S.P.கிருஷ்ணன் அவர்களின் முதலாவது நூல் 1970இல் அன்பு வெளியீடாக வெளிவந்த "ஒன்றே தெய்வம்"என்ற சிறுகதைத் தொகுப்பாகும். "கண்ணீர் பூக்கள்" அவரது 11ஆவது நூலாகவும் முதலாவது கவிதைத் தொகுதியாகவும் வெளிவந்துள்ளது.

## 16511

**கண்ணீரில் கரைகிறது காலம்.** கா.தவபாலன் (இயற்பெயர்: காசிப்பிள்ளை தவபாலச்சந்திரன்). முள்ளியவளை: காசிப்பிள்ளை நற்பணி மன்ற வெளியீடு, கணுக்கேணி கிழக்கு, 1ஆவது பதிப்பு, வைகாசி 2019. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xx, 104 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x15.5 சமீ., ISBN: 978-955-43867-4-7.

இந்நூலில் கலாபூஷணம் கவிஞர் கா.தவபாலனின் சுவையான கவிதைகள் இடம்பெற்றுள்ளன. சமூகத்தில் நாம் சந்தித்த துயரங்களை, அவலங்களை உருவகமாகத் தனது கவிதைகள் மூலம் இங்கு இலகு நடையில் சாதாரண மக்களும் விளங்கி இரசிக்கும் வகையில் வெளிப்படுத்தியுள்ளார். இத்தொகுப்பில், மக்களின் ஏக்கம் தீரவில்லை என்ற முதலாவது கவிதையில் தொடங்கி ஓய்வின்றி உழைப்பவள் பெண் என்ற இறுதிக் கவிதை வரை எழுபத்தியொரு கவிதைகளை பதிவுசெய்துள்ளார்.

## 16512

**கரைக்கு வராத அலைகள்.** சி.இராசலிங்கம். சென்னை 600 017: கலைவாணி புத்தகாலயம், பாண்டி பஜார் அஞ்சலகத் தெரு, 3, சிவஞானம் சாலை, தியாகராய நகர், 1ஆவது பதிப்பு, நவம்பர் 2003. (சென்னை 94: ஸ்கிரிப்ட் பிரிண்டர்ஸ்).

96 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

கவிஞர் இரா. திலீபனின் தந்தையாரான சி.இராசலிங்கம் அவர்கள் அவ்வப்போது எழுதிச் சேகரித்த கவிதைகள் நூலுருவாகியுள்ளன. தமிழ்க்கலை, கலாசாரம், பண்பாடு என்பவற்றைப் பேணிக்காக்கவேண்டும் என்பதில் இக்கவிஞரின் அக்கறை கவிதைகளில் புலப்படுகின்றது. "தமிழ்த் தாய்க்கு வணக்கம்" என்பதில் தொடங்கி, "கரைக்கு வராத அலைகள்" என்பது ஈறாக 59 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. 60ஆவது கவிதையாக "எது கவிதை?" என்ற தலைப்பில்

கவிஞர் சீனி திருநாவுக்கரசு அவர்களின் கவிதையொன்றும் இடம்பெற்றுள்ளது. இந்நூலின் பதிப்பாசிரியராக கவிஞர் சீனி திருநாவுக்கரசு அவர்களே இயங்கி பதிப்புரை ஒன்றும் வழங்கியுள்ளார். க.மு.அரங்கன் (அணிந்துரை), இரா.திலீபன் (மதிப்புரை), இரா.கோகிலன் (வாழ்த்துரை), செந்தமிழ்ச் செழியன் (சிறப்புரை), எஸ்.செந்தாமரை சிவன் (பாராட்டுரை) ஆகிய கவிஞர்களும் தமது உரைகளின் வழியே இக்கவிதைகளைப் பற்றித் தத்தமது கருத்துக்களைப் பதிவுசெய்துள்ளனர். 1996இல் இவரது முதல் கவிதை ஈழநாடு வாரமலரில் "எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும்" என்ற தலைப்பில் பிரசுரமாகி இவரை இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தியது.

## 16513

**கலைந்த தேனீக்கள்: கவிதைத் தொகுப்பு.** சு.வரதன் (இயற்பெயர்: சுப்பிரமணியம் வரதகுமார்). வவுனியா: தமிழ்ச் சங்கம், 1ஆவது பதிப்பு, மார்ச் 2009. (வவுனியா: ஒன்லைன் அச்சகம்).

xvi, 84 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 200., அளவு: 17.5x11.5 சமீ.

சு.வரதகுமார் பருத்தித்துறையில் புலோலி வடக்கைச் சேர்ந்தவர். ஆற்றலும் இலக்கியத் துடிப்பும் கொண்ட பட்டதாரியான இவர் உளவியல், சமூகவியல் துறைகளில் கற்றுத் தேறியவர். நாடகமும் அரங்கியலும் துறையை விசேட தகைமையாகக் கொண்டவர். புதுக்கவிதை, மரபுக் கவிதை இரண்டினதும் அடியொற்றி எழுதப்பட்ட 42 கவிதைகளை இத்தொகுப்பில் இடம்பெறச் செய்துள்ளார். இவள் காற்றே..., பிஞ்சிலே, எனக்குள்ளே, பருவவிதி, புதியன புகுதல், அதிகாரக் கதிரை, தூரத்து மாப்பிள்ளை என இன்னோரன்ன தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

## 16514

**கலைப்பாரதி க.சின்னராஜன் கவிதைகள்.** க.சின்னராஜன். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, மார்கழி 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

x, 86 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-624-5881-27-7.

புதுவை க.சின்னராஜன், வட அல்வை க.சின்னராஜன், சித்திரா சின்னராஜன் என்னும் பெயர்களில் இலக்கிய உலகில் உலாவிவரும் இக் கவிஞரின் மூன்றாவது நூல் இது. மரபுக்கவிதை-புதுக்கவிதை என இரு தளங்களிலும் பயணிக்கும் சின்னராஜனின் ஐம்பது ஆண்டுகளின் எழுத்தூழியத்தில் இன்னுமோர் அறுவடையாக இந்நூல் வெளிவந்துள்ளது. இத்தொகுதியில் அடங்கியுள்ள 40 கவிதைகளும் தமிழ்க் கவிதை வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்திலும் தோற்றம்பெற்ற வடிவங்களை அவற்றின் செல்நெறியாகக் கொண்டுள்ளமையை அவதானிக்கலாம். பழந்தமிழ் இலக்கியத்தில் கவிஞருக்குள்ள ஈடுபாட்டையும் அறிவையும் இந்நூலில் உள்ள சில கவிதைகளின் வாயிலாக அறியமுடிகின்றது.

வங்கி முகாமையாளராகப் பணியாற்றிய இவர் இளமைக் காலம் முதல் தீண்டாமைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய முக்கியமானதொரு படைப்பாளியாக இனம்காணப்பட்டவர். இவரது முதலாவது நூலாக "வல்லை வெளி" என்ற கவிதைத் தொகுதி வெளிவந்தபோது, அது வட மாகாண கலை பண்பாட்டு அமைச்சின் சிறந்த கவிதை நூலுக்கான விருதினைப் பெற்றிருந்தது. இந்நூல் 212ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

### 16515

**கவி மலர்**. சுஜாதா இந்திரன். யாழ்ப்பாணம்: திருமதி சுஜாதா இந்திரன், 1ஆவது பதிப்பு, 2016. (யாழ்ப்பாணம்: Focus Printers, கோண்டாவில்).

76 பக்கம், விலை: ரூபா 50.00, அளவு: 14.5x10 சமீ.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தன் கன்னி முயற்சியாக "மழலைப் பாடல்கள்" என்ற நூலை வழங்கியிருந்த ஆசிரியரின் 77 குறுங் கவிதைகள் கொண்ட தொகுதி இதுவாகும்.

### 16516

**கழுதை சுமந்த கவிதைகள்**. கவிகூத்தன் (இயற்பெயர்: க.பிரேம்சங்கர்). லண்டன்: க.பிரேம்சங்கர், 1ஆவது பதிப்பு, கார்த்திகை 2021. (யாழ்ப்பாணம்: ஜெயஸ்ரீ பிறின்டர்ஸ், பிரவுண் வீதி).

(2), 83 பக்கம், வண்ண ஓவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-624-6029-01-2.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை, யாழ். இந்துக் கல்லூரி, ஆகியவற்றின் பழைய மாணவரான பிரேம்சங்கர், தனது நீண்ட நாள் கவிதைச் சேகரத்தை தன் முதலாவது தொகுப்பாக வெளியிட்டுள்ளார். கழுதை சுமந்த கவிதைகள், புவி மீது புனிதமாக, கருத்தைக் கருத்தால் அடிப்போம், சுடலை ஞானம், இடிந்து விழுந்தாலும் இது என் கோட்டை, கடமை அடிமையல்ல, ஏணிப்படிகள், ஏந்திய துமுக்கி, காப்பியின் முத்தங்கள், ஆடு ஆண்டவா, இதழோ இனிமை, இலிங்கமும் இன்பமும், இன்று என் அழகு, மலையக மக்கள், தமிழர்களின் தலைகீழ் மாட்டுப் பொங்கல், முகமூடிகள், மகளிர் தினம், எம்மவர் கைங்கரியம், கையாலாகாதவன் காதலர் தினம், நினைத்துப் பார்க்கிறேன், என் வாள் வீசும், வீர நிலவு விரகாய் எரியும், மனதிலே ஒரு பாட்டு, காதல் சொன்னாள், நன்றி(ப்) பொங்கலே, இதம், நல்லதோர் வீணை செய்தே, புத்தனின் நீதி, மாட்டுப் பொங்கல், முண்டு கொடுத்தல், அன்னையரே வாழ்க, நத்தார் பண்டிகை, விளையாடு காதலே, இனி எப்போ வரும் அக்காலம், விழுதை அறுத்த வீரர், தேக சுகம், இரவு அணைக்கிறது, மழைக்கால நினைவு, அன்பு மாறாது, போர்க்கால ஊரடங்கு, காதலும் கூடலும், முல்லைப் பறவைகளே பாடுங்கள், வேததாசி, வயோதிபக் காதல், எதுவும் தவறில்லை, தீபாவளி, தீண்டாமையா சுயபாதுகாப்பா, விடிவது என்பது விசித்திரமே, தென்றல் தொட்டுப்போகும் தேகம், தொட்டுச் செல்லாதே, துணிந்துவிடு, உடன்கட்டை, வாள்களே வீழ்க, நல்வாழ்வுக்காய்,

*வரலாறே நீ தொலைந்தாலும், வயோதிப வாலிபம், மகளே பத்திரம், அன்பே ஆண்மை, எதைத் தருவாய், நான் கண்ட பாரதி, நேற்றைய குடி, நான் பசு, நித்தம் நின் பாதம் வணங்கவேண்டும், நோன்பு, ஓ கவிஞர்களே, படி தாண்டாப் பத்தினி, பறவைகள் நம் உறவுகள், பற்றற்ற பயணம், பொழிந்த மழை காற்றாய் மாற, என் மரண ஊர்வலம், இரவில் எத்தனை நட்சத்திரங்கள், மூடு மேகமே, திருந்தாரோ?, கொஞ்சவா விடவா? ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட கவிதைகள் இவை.*

## 16517

**கறுத்த பெண்: நான் தவறுகள் செய்ய மறுக்கப்பட்டவள்.** *கவிதா. சென்னை 600 005: புதுப்புனல், பாத்திமா டவர்-முதல் மாடி, 117, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை (ரத்னா கபே எதிரில்), 1ஆவது பதிப்பு, 2012. (சென்னை 2: ஜே.எம். பிராசஸ்).*

*80 பக்கம், விலை: இந்திய ரூபா 60.00, அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *978-81-924508-0-3.*

*நோர்வேயில் வாழ்ந்துவரும் இளைய தலைமுறையைச் சேர்ந்த கவிதா (கவிதா லட்சுமி) ஆளுமை மிக்க ஒரு நடன ஆசிரியராகவும் கவிஞராகவும் அறியப்பட்டவர். ஏற்கனவே "பனிபடலத் தாமரை", "என் ஏதேன் தோட்டம்", "தொட்டிப்பூ" ஆகிய கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். "கறுத்த பெண்" இவரது நான்காவது கவிதைத் தொகுதி. கறுத்த பெண் தொகுப்பில் 55 கவிதைகள் பதிவாகியுள்ளன. தமிழ்ச் சூழலின், குறிப்பாக புலம்பெயர் தமிழ்ச் சூழலில் பெண்களின் நிலை பற்றிய கேள்விகளை இந்நூல் எழுப்புகின்றது. பெண்களின் சமூக இருப்பு பற்றிய கூர்மையான கருத்துகள், விமர்சனங்கள், தேடல்கள் கவிதைகளில் விரவிக்கிடக் கின்றன. கவிதாவினுடைய கவிதைகள் சொந்த உணர்வுகள், வாழ்வனுபவங்களின் பிரதிபலிப்பு என்பதற்கும் அப்பால், சக மனிதர்களின், சமூகத்தின் வாழ்வனுபவங்க ளையும் உள்வாங்கி, சமூக நிலைப்பட்ட பொதுத்தன்மைக்குரிய பரிமாணத்தினைக் கொண்டுள்ளது. இவரது கவிதைகள் பெண்கள் மீது கலாச்சாரம், பண்பாடு, சடங்குகள், விழுமியங்கள் போன்ற போர்வையில் திருமணம், குடும்பம், சமூகம் ஆகிய நிறுவனமயப்பட்ட தளங்களில் மேற்கொள்ளப்படும் அழுத்தங்கள் பற்றிய கேள்விகளை முன்வைக்கின்றன. அத்தோடு தம்மீதான சமூக அழுத்தங்களைக் களைந்து, சுதந்திரமாக சிந்திக்க, பேச, விவாதிக்க முனைகின்ற பெண்களின் வேணவாக் குரலாகவும் பல கவிதைகளை நோக்க முடிகின்றது.*

## 16518

**காகிதங்கள் பேசுதடி: கவிதைத் தொகுப்பு.** *அரியாலையூர் மிஷாந்தி செல்வராஜா. யாழ்ப்பாணம்: மிஷாந்தி செல்வராஜா, கோபால் வெளியீட்டகம், இல. 40/1, நொத்தாரிஸ் வீதி, அரியாலை, 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2017. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).*

xv, *56 பக்கம், விலை: ரூபா 220., அளவு: 18.5x12.5 சமீ.,* ISBN: *978-955-78990-3-9.*

*யாழ்ப்பாணம், அரியாலையைப் பூர்வீகமாகக் கொண்டவர் மிஷாந்தி. ஏற்கெனவே "மூன்றாம் முத்தம்" என்ற குறுநாவலை 2015இல் வெளியிட்டவர். "கருவில்*

சுமந்து கவிதைகள் பேசி கலையாய் வடித்தெடுத்து" என தாய்மை பற்றிய உணர்வாய் நீளும் "அம்மா" என்னும் தலைப்பில் தொடங்கி "இத்தனையும் கிடைத்திடுமோ?" என்ற தலைப்பு வரை 55 கவிதைகள் இத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கவிஞரின் மனம் குழந்தைத்தனமானது எனக் கூறும் வகையில் மழலை ஏக்கமாகப் பல கவிதைகளில் உணர்வு வரிகளைக் காண முடிகின்றது. இவ்விளம் கவிஞரின் வயதுக்கேற்ற பக்குவமான கவிதைகள் இவை. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 260965).

### 16519

**காலநதி: கவிதைத் தொகுப்பு.** வட்டக்கச்சி வினோத். வட்டக்கச்சி: தொலைநோக்கி வெளியீடு, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2017. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

xiv, 65 பக்கம், விலை: ரூபா 220., அளவு: 18.5x13 சமீ., ISBN: 978-955-43466-0-4.

"வடஇலங்கையின் நீரேந்துப் பிரதேசமான இரணைமடுக் குளக்கரையில் அமைந்திருக்கும் வட்டக்கச்சியில் பிறந்தவர் வினோத். சமூகப் பிடியின் பரப்புகளில் காணுகின்றவற்றை தனது அடிமனசின் ஆழத்திலிருந்து அடிக்கடி உந்திவிடப்படும் வரிகளால் தொகுத்து முதலாவது கன்னிக் கவிதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார். காலம் என்பது நதியைப் போல நகர்ந்துகொண்டே இருக்கும். எப்பொழுதும் அது திரும்பி வருவதில்லை. அதில் பல நெளிவு சுழிவுகளும் தடைகளும் இருந்தாலும் இடர்களைத் தாண்டிக் கடலை அடையும் என்பது நியதி. ஆகையினால் தனது வாழ்வின் ஓரத்து எண்ணவோட்டத்தை "காலநதி" யாக எமது கைகளில் தந்திருக்கிறார். முகநூல் கவிஞராக இலக்கிய இளவல்களோடு கைகோர்த்துக் கொண்டவர். உணர்ச்சிவசப்படாத நிதானக் கவிஞராக என்னால் இனங்காணப் பட்டவர்." (வே.முல்லைத்தீபன்).

### 16520

**காலாறப் போனவள் (கவிதைகள்).** லலிதகோபன் (இயற்பெயர்: திருஞானசம்பந்தன் லலிதகோபன்). யாழ்ப்பாணம்: தாயதி வெளியீடு, சமூக செயலூக்கத்துக்கான முன்னோடி, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2022. (சென்னை 600018: பாரதி பதிப்பகம், இல.7, இளங்கோ சாலை, தேனாம்பேட்டை).

110 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 20x12 சமீ., ISBN: 978-624-99778-0-8.

ஆசிரியரின் முதலாவது கவிதைத் தொகுப்பாக வெளிவந்துள்ள இந்நூலில் வெளி, காட்டினை வரைதல், மலைகள், அந்தரிப்பு, சடலம், பாதுகாக்கப்பட்ட மரம், அவளும் அவர்களும், எறிகை, டாவின்சியின் பிரதியை வரைபவன், வெண் துவீபம், புரட்சி, பாசிக்குளம், காதல் முடியுமிடம், மழைக்கஞ்சி, தேநீர் விருந்து, குட்டிப் பகல்கள், மரபுக் கவிதை, செல்லாக் காசு, மூன்று பிரதிகள், பல்தேர்வு வினாக்கள், இரவும் நிலவும், மியாவ் மியாவ், தொன்மைமிகு துயரங்கள், புனைவற்ற பிரதி, கானகன், காதலாகி கசிந்து, மீரா என்றோர் சாயல், சாட்டையில்லாத

இரவு, புத்தனும் காமனும், அக்கினிக் குஞ்சு, உள்ளே எள வெளியே, பீச்சுக்குப் போதல், பதக்கடை, கோவிட் 19, கண்மணி அன்போடு நான், சிலுவைப் பாடுகள், பிரதியின் அரசியல், ஆறிப்போன தேநீர், இறுதி மரியாதை, கனவும் நனவும், வெற்று வனாந்தரம், திடீர் மழை, இரவுக்குள் நுழைதல், உதிரிப் பூக்கள், அச்சச்சோ, கால்களின் கவிதை, பறவை தேர்ந்த திசை, தீராத விளையாட்டு, மழையும் அவளும், நள்ளிரவு 12:01, நிலவில் சந்திப்போர், உனது நான், இரு சுவர்கள், ரெஸ்ட் இன் பீஸ், ஓடி விளையாட வரட்டுமாம், உறுமீன்கள், காத்திராம் பூச்சிக் கனவுகள், மழைக் காலத்துக் காதல்கள், மின் தடை நேரம், பறத்தலை இயல்பாக்காத பறவை, நான் எனும் காமம், நான் பார்வையற்றவனாகிய கதை, சலனம், பாலை ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட இவரது கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 16521

**காலிமுகம் 22 (கவிதைகள்).** செல்லத்துரை சுதர்சன். யாழ்ப்பாணம்: எஸ்.பவித்திரன் ஞாபகார்த்த நிறுவகம், 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2022. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

*(10), 68 பக்கம், விலை: ரூபா 550., அளவு: 18x13 சமீ.,* ISBN: *978-624-5709-30-4.*

சுவாலை என்னவாகும், சிறு குடிலின் பசி, சிவப்புகள் கரைவதில்லை, ஒரு பொழுதும் இப்பொழுதும், விழுங்கிய சுதந்திரம், இரு மொழியில் ஒரு கீதம், ஒரு மாலையும் பின்னிருளும், கேலிப் பட்டாசும் கோவணக் கட்டியும், நீல அல்லியும் செங்காந்தளும், இரு நெருப்பு, தாயுரைக் கஞ்சி, ஆவிகளின் தலைநகர், பொடி மெனிக்கா மகனோடு பேசல், வரலாற்றின் பள்ளத்தாக்கு, யானை நரி ஆகிய தலைப்புகளில் இக்கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. இந்நூலுக்கான சேரனின் அணிந்துரையில் "காலிமுகத்திடல் போராட்டமும் எழுச்சியும், வாழ்விலும் வரலாற்றிலும் அரசியலிலும் இருந்து ஒழிக்கப்படுவதற்கும் ஒளிக்கப்படுவதற்கும் நிறைய வாய்ப்புகள் உள்ளன. எனவே அவை இலக்கியமாவது அவசியம். இக்கவித்தொகை தமிழின், தமிழ்பேசும் மக்களின் உணர்வுத் தோழமையைக் கவித்துவமாகவும் கிளர்ச்சியுடனும் வெளிப்படுத்துகின்ற குரலாக அமைகின்றது. அரசியல் நுண்ணுணர்வும் கூர்மையான விமர்சன உணர்வும் கூடிய தாக்கம் மிக்க எதிர்ப்பு அரசியல் கவிதைகளின் தொகை இது. இக்கவிதைகள் நிகழ்காலத்துடன் முடிந்துவிடுகின்ற செயற்கையான தற்காலிகக் கவிதைகள் அல்ல. காலந்தோறும் எதிர்ப்பையும் அதன் வரலாற்றையும் தேவையையும் எம்மவரோடும் அயலவரோடும் வீச்சுடனும் புரிந்துணர்வோடும் விமர்சனங்களோடும் பாடுகிற கவிதைகள் இவை" என்று குறிப்பிடுகிறார்.

## 16522

**காற்றின் மொழி: கவிதைகள்.** பொலிகையூர்க் கோகிலா. பிரான்ஸ்: தமிழ் நெஞ்சம், 59, rue des Entrechats, 95800 Cergy, 1ஆவது பதிப்பு, நொவெம்பர் 2021. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*128 பக்கம், விலை: இந்திய ரூபா 120., அளவு: 21.5x14 சமீ.*

"காற்றின் மொழியாகி உங்கள் கைகளில் தவழும் இத்தொகுப்பு எனது முதலாவது கவிதைத் தொகுப்பாகும். என் உணர்வை மொழிபெயர்த்துப் பாடிய இக்கவிதைகள், எழுத்துகளின் வரிவடிவம் மூலம் பல உணர்வு மொழிகளை உங்களிடம் கொண்டு சேர்க்கும் என்பது என் மன நம்பிக்கையாகும். இந்த இருபது வருட காலத்தில் எழுதிச் சேர்த்து வைத்த கவிதைகளான இவை, காதல் மொழி, கருணை மொழி, நம்பிக்கை மொழி, புரட்சி மொழி, பெண்ணிய மொழி என எல்லா மொழிகளையும் உங்கள் கைகளில் கொண்டுவந்திருக்கின்றன. வாசிக்கும்போதே என் ஆரம்பகாலக் கவிக் குழந்தைகளின் தள்ளாட்டத்தையும், அண்மைக்காலத்து கவிக் குமரிகளின் அழகையும் உங்களால் உணர முடியும்" (ஆசிரியர்).

## 16523

**கிராமத்துக் குதூகலம்.** சாய்ந்தமருது M.I.M. அஷ்ரப். சாய்ந்தமருது-7: M.I.M. அஷ்ரப், கலாசார உத்தியோகத்தர், 489, ஆஸ்பத்திரி வீதி, 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2019. (மருதமுனை: அப்பெக்ஸ் பிரின்டர்ஸ்).

140 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x15.5 சமீ., ISBN: 978-955-44371-1-1.

"இன்னும் உயிரோடு" என்ற கவிதைத் தொகுதியைத் தொடர்ந்து வெளிவரும் ஆசிரியரின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு இது. ஏற்கெனவே இவரது சிறுகதைத் தொகுப்பொன்று "உறங்காத உண்மைகள்" என்ற தலைப்பில் வெளி வந்துள்ளது. இக்கவிதைத் தொகுதியில் மொத்தம் 61 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கவிதைகள் பல்வேறு கோணங்களில் இருந்து வெவ்வேறு விடயங்களைச் சொல்கின்ற போதிலும் கிராமத்துச் சாயலில் வந்துள்ள கவிதைகள் தூக்கலாகக் காணப்படுகின்றன. இன்று எம்மால் காணமுடியாது காணாமல் போய்விட்ட அன்றைய கிராமத்தின் மலரும் நினைவுகளை இரைமீட்கும் வகையில் இடம்பெற்ற "கிராமத்துக் குதூகலம்" என்ற கவிதையின் தலைப்பே இந்நூலின் தலைப்பாகியு முள்ளது.

## 16524

**கிறுக்கிப் போட்ட காகிதங்கள்.** கண்ணன் கண்ணராசன். ஜேர்மனி: கண்ணன் கண்ணராசன், தொலைநோக்கி வெளியீடு, 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2016. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

xvi, 80 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-43463-0-7.

சந்தக் கவிதைகளாலும், அடுக்கிடுக்குக் கவிதைகளாலும் தன்னுணர்வுக் கவிதைகளை சரளமாக தனக்கேயுரிய தனித்துவமான பாணியில் சரமாரியாகக் கொட்டித் தீர்த்திருக்கிறார் இக்கவிஞர். 80 பக்கங்களில் 147 தலைப்புகளில் குறுங் கவிதைகளைச் சேர்த்து இடையிடையே வண்ணப்படங்களால் அழகேற்றித் தன் மரபு கடந்த புதுக்கவிதைப் படைப்பை வாசகரின் ரசிப்பிற்கு விட்டிருக்கிறார். "கிறுக்கிப் போட்ட காகிதங்கள்" கவிதை நூல் வெளியீட்டு விழா இடம்பெற்றது. புலம்பெயர்ந்து ஜேர்மன் தேசத்தில் வசிக்கும் கவிஞர் கண்ணன் கண்ணராசன்

எழுதிய கவிதை நூலின் வார்த்தைகளில் சமூக நலன் பற்றிய சிந்தனைகளும், கோபங்களும், அதன் தாக்கங்களுமென்று பலவற்றைச் சுமந்து நிற்கின்றன.

### 16525

**குறளின் குரல்.** பா.சிவபாலன். யாழ்ப்பாணம்: பா.சிவபாலன், 214/4 C, இராம நாதன் வீதி, 1ஆவது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (திருக்கோணமலை: ரெயின்போ மினிலாப், 361, நீதிமன்ற வீதி).

140 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 18.5x13.5 சமீ., ISBN: 955-98590-2-1.

திருக்குறளை எளிமைப்படுத்தி இலகுவான கவிதைகளாக்கித் தரும் முயற்சியில் கவிஞர் சிவபாலன் ஈடுபட்டுள்ளார். இக்கால வாசகர்களை மனங்கொண்டு அவர்களின் உளவியலை உணர்ந்து இக்கவிதைகளை எழுதியிருக்கிறார். கல்வித் திணைக்களத்தில் பணியாற்றும் ஆசிரியர் கல்வியுலகை நன்கு அறிந்தவர் என்பதை அவரது படைப்புக்கள் மூலம் பூடகமாகக் காணமுடிகின்றது. திருக்குறளைப் பயிலுபவர்களுக்கு இக்கவிதைகள் ஒவ்வொன்றையும் படிக்கும்போது அக்கவிதைக் குரிய அதிகாரத்துள் அடக்கப்பட்டுள்ள பத்துக் குறள்களில் மூன்று நான்கு குறள்களாவது நினைவில் எழும் வகையில் இக்கவிதைகள் எழுதப்பட்டுள்ளன.

### 16526

**குறும்பா கொஞ்சம் குறும்பா: வடிவழகையன் கவிதைகள்.** வ.வடிவழகையன். யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், 1ஆவது பதிப்பு, தை 2022. (யாழ்ப்பாணம்: ஜே.ஆர். இன்டஸ்ட்ரீஸ், இல. 7, உடுவில் மகளிர் கல்லூரி மேற்குத் தெரு, உடுவில்).

xviii, 50 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-624-98799-1-1.

"அன்பர் வடிவழகையனுடைய குறும்பாக்களை வாசிக்கிறபோது மிகத் தெளிவாக, 1960களிலிருந்து எழுந்த மஹாகவியின் குரலின் எதிரொலியை நான் கேட்கிறேன். வடிவழகனுக்கு சொற்செட்டும் அங்கதச் சுவையும், கைவருகிறது. கூடவே குறும்பாக்களைச் சமகால அனுபவங்களுக்கும் நிகழ்வுகளுக்கும் நம்மை இழுத்துக்கொண்டு வருகிற ஒரு முக்கியமான பணியையும் வடிவழகையன் செய்கிறார்" (கவிஞர் சேரன், முன்னுரையில்).

### 16527

**கொல்லப்பட்ட எங்களது வாக்குமூலம்.** மேரா. மட்டக்களப்பு: பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம், 1ஆவது பதிப்பு, தை 2020. (மட்டக்களப்பு: காந்தள் அச்சகம், புதுக்குடியிருப்பு).

100 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-624-96103-2-3.

இது மேராவின் நான்காவது கவிதைத் தொகுப்பு. சமகால அரசியல்சார்ந்த விடயங்கள் பெரும்பாலும் குறியீட்டுப் பாங்கில் பன்முகப் பரிமாணங்களோடு இக்கவிதைகளில் வெளிப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. இத்தொகுப்பில்

படுவான்கரை மக்கள் அனுபவிக்கும் சமூகப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசப் படுவதும் கவனிக்கத்தக்கது. இத்தொகுப்பில் ஏறத்தாழ முப்பதாண்டுக் காலம் நடைபெற்று முடிந்த போரின் விளைவுகள் பொதுவாகப் பேசப்படுகின்றன. இந்நூலாசிரியர், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி (சிறப்பு), முது தத்துவமாணிப் பட்டங்களை நிறைவுசெய்து, அங்கு கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வினை தமிழ் இலக்கியத்துறையில் மேற்கொண்டு வருகிறார். மட்டக்களப்பு மாவட்டத்தின் வளம்மிக்க படுவான்கரைப் பிரதேசத்திலுள்ள அரசடித் தீவுக் கிராமத்தில் பிறந்து தற்போது கல்லடியில் வசித்து வருபவர். பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவராகவும் பணியாற்றி வருகிறார்.

### 16528

**சாயப்பட்ட விரல்கள்.** நல்லையா சந்திரசேகரன். கொழும்பு 14: புரவலர் புத்தகப் பூங்கா, இல.25, அவ்வல் சாவியா வீதி, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2020. (அச்சக விபரம் தரப்படவில்லை).

96 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x15.5 சமீ., ISBN: 978-955-3914-019-9.

மாத்தளை, இறத்தோட்டையைச் சேர்ந்தவர் செல்லையா சந்திரசேகரன். 2015ஆம் ஆண்டு மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவில் சாகித்திய விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட இவர் 2019இலும் இந்து சமய கலாசாரத் திணைக்களத்தினால் கலைச்சுடர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தொகுப்பில் இவர் எழுதிய தண்ணீரும் கண்ணீரும், விந்தையான வேடிக்கைக் கூட்டம், புதிய படைகள், கூட்டொப்பந்தம் கூட வருமா?, தேசமே ஒரு தடவை, நினைவிலிருக்கட்டும், நியாயம் தேடும் மனசு, சுய தணிக்கை, வியர்வை ஓவியம், புதிய சிறகுகள், சிந்தித்துப் பார், வரலாறு வாழ்த்தும், ஏன், மகளிர் தினம், பந்திக்கு வர மறுக்கும் பரிமாறல் (படையல்), எழுத்து தாகம், தாயின் தாற்பரியம், குருவின் பார்வை, ஓர் இரவு துயில் கொண்டால், சரித்திரத்தில் சாகித்திய விழா, அடிபட்டுப் போகும் அவலங்கள், வார்த்தை தேடும் வாழ்த்துக்கள், விடிவும் விடியலும், தொண்டுக்காய் தொடர்ந்து, விடுதலை எப்போ?, வரலாறு வாழ்த்தும், சுதந்திரப் பொன் விழா, ஆலமரமும் நீயும், இனியொரு பித்தன், இப்படிக்கு குப்பைமேடு ஆகிய கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

### 16529

**சிதையும் வேர்கள்: கவிதை நூல்.** திருச்செல்வி புவனேஸ்வரன். மன்னார்: மாந்தை கிழக்கு-பிரதேச செயலகம், மாந்தை கிழக்கு, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2016. (யாழ்ப்பாணம்: மெகா பதிப்பகம், கச்சேரியடி).

vi, 60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

இக்கவிதைத் தொகுப்பில் ஈழத்தமிழரின் வீரம்செறிந்த வரலாற்றுப்பக்கங்களைத் தன்னுள் புதைத்து வைத்துள்ள வன்னிப் பெருநிலப்பகுதியில், பாண்டியன்குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருச்செல்வியின் 59 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

காதல், நட்பு என்பவற்றை மாத்திரமல்லாது தன் சமூகம், தேசம் சார்ந்த பல செய்திகளையும் பாடுபொருட்களாகக் கொண்டு உணர்வும் கருத்துச் செறிவும் கொண்ட கவிதைகளை படைத்திருக்கிறார்.

**16530**

**சிவசேகரம் கவிதைகள் 1973-2020**. சி.சிவசேகரம். ஐக்கிய இராச்சியம்: சமூகம் இயல் பதிப்பகம், 317, பெருந் தெரு வடக்கு, ஈஸ்ட்ஹாம், லண்டன், 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2022. (சென்னை 600017: மணி ஓப்செட்).

xxxii, 488 பக்கம், விலை: ரூபா 1500., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-93-94189-00-3.

1942இல் திருக்கோணமலையில் பிறந்தவர் கவிஞர் சி.சிவசேகரம். பாடசாலைக் காலத்திலேயே இலக்கிய, அரசியல் துறைகளில் ஆர்வம் காட்டத் தொடங்கிய இவர் தமிழ்த் தேசிய அரசியற் பின்புலத்தைக் கொண்டவர். இடதுசாரிக் கருத்து நிலையை அடித்தளமாகக் கொண்டு அரைநூற்றாண்டுக்கும் மேலாக எழுத்து, சிந்தனை, செயற்பாட்டுத் தளங்களில் தொடர்ச்சியாகப் பங்களித்து வருகிறார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இயந்திரப் பொறியியல் துறைத் தலைவராக 2000 முதல் 2005 வரை பணியாற்றியவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினராக 2015 முதல் 2019வரை பணியாற்றியவர். 1973இல் வெளிவந்த இவரது "மலைப் பாதை" என்ற கவிதை தொடங்கி, 2020இல் எழுதிய "ஊரடங்கு" என்ற கவிதை ஈறாக 272 கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இறுதிப் பகுதியில் நதிக்கரை மூங்கில், செப்பனிட்ட படிமங்கள், தேவி எழுந்தாள், ஏகலைவ பூமி, போரின் முகங்கள், வடலி, இன்னொன்றைப் பற்றி, கல்லெறி தூரம், முட்கம்பித் தீவு, ஆச்சியின் கொண்டையூசிகள் ஆகிய இவரது நூல்களுக்கு எழுதப்பட்ட முன்னுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 68828).

**16531**

**சிறகு முளைத்து எழு**. கீர்த்தி (இயற்பெயர்: கீர்த்தனா தமிழ்மாறன்). யாழ்ப்பாணம்: கீர்த்தனா தமிழ்மாறன், 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2019. (யாழ்ப்பாணம்: சாய்ராம் பிரின்டர்ஸ், பிரதான வீதி, சங்கானை).

iv, 81 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-624-95253-0-3.

ஆசிரியரின் முதலாவது நூலாக இக்கவிதைத் தொகுதி வெளிவந்துள்ளது. "ஒரு புத்தகத்தின் பிரவேசம் என்பது ஒரு பிரசவத்திற்கு சமம் என்பார்கள். என் முதல் புத்தகப் பிரசவம் "சிறகு முளைத்து எழு". இந்நூல் என் கவிப் பயணத்தின் முதல் முயற்சி. கவி மீது நான் கொண்ட ஆர்வமும் கவிக் காதலும் சமூகம் மீது நான் கொண்ட பார்வையும் என்னை ஒரு சமூகவியல் கவிநூலை வெளியிடத் தூண்டியது." (ஆசிரியர், என்னுரையில்).

### 16532

**சுட்ட பொன்: கவிதைத் தொகுப்பு.** வாகரைவாணன் (இயற்பெயர்: ச.அரியரெத்தினம்). மட்டக்களப்பு: ச.அரியரெத்தினம், வாகரை, 1ஆவது பதிப்பு, நவம்பர் 1971. (சென்னை 7: எக்செல் அச்சகம்).

(18), 46 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18x12 சமீ.

யாழ்ப்பாணம், புனித பத்திரிசியார் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியரான வாகரைவாணனின் இளவயதில் அவரது கல்வித் திறமை காரணமாக முன்னாள் ஆயர் அமரர் இக்னேஷியஸ் கிளெனி யே.ச.ஆண்டகை அவர்களால் சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக தமிழ்மொழியைத் துறைபோகக் கற்று வித்துவான் பட்டத்தை பெற்றுக்கொண்டு நாடு திரும்பினார். அதன் நன்றிக்கடனாகவும், தவத்திரு இக்னேஷியஸ் கிளெனி ஆண்டகையின் இருபத்தைந்தாவது மேற்றிராணித்துவ நிறைவுவிழாவை முன்னிட்டும், ஆயர் அவர்களைப் பற்றிய இக்கவிதைத் தொகுப்பு வாகரைவாணனின் முதலாவது நூலாக வெளியிடப்பட்டுள்ளது. வேண்டுதல், வழங்குக வாழ்வே, பாராட்டுப் பலிக்கும், துறவி, காதலி, சேவகன், தாய், சான்றோன், தலைவன், நண்பன், நல்லாயன் ஆகிய தலைப்புகளில் இக்கவிமாலை புனையப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் P 2718).

### 16533

**சுதந்திரக் காற்று: கவிதைகள்.** கா.தவபாலன் (இயற்பெயர்: காசிப்பிள்ளை தவபாலச்சந்திரன்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, ஜுலை 2017. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

xvi, 17-84 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-43867-2-3.

கவிஞர் கா.தவபாலனின் கவிதைகளில் அவரது மனப்பதிவு, மன அவசம், சமூக உறவுநிலை, அரசியற் சிந்தனைகள், பிரதேச வாழ்வியல், சமகாலச் செய்திகள் என்பன பேசப்படுகின்றன. பல கவிதைகள் யுத்தகால அவலங்களைப் பாடு பொருளாகக் கொண்டுள்ளன. சுதந்திரக் காற்று, அகதியின் கையறுநிலை, ஏங்குகின்றார் எம் மக்கள், காணவில்லை, அகதியின் உள்ளக் குமுறல், தென்றலும் புயலும், எங்குதான் போவோம்?, கறையான்கள், பருந்தும் கோழிக்குஞ்சுகளும், அகதியின் டயறி, காணாமற் போனோர், யுத்தமே உனக்கு நன்றி, மக்களின் ஏக்கம் தீரவில்லை, பீனிக்ஸ் பறவைகள், ஆக்கிரமிப்பு, குரலற்ற மனிதர்கள், வீதிகளில் விசர் நாய்கள், அரங்கேறும் அநியாயம், நூறு வருடங்களின் பின், வேலையற்ற பட்டதாரிகள், பாவமும் புண்ணியமும், பரம இரகசியம், சங்கிலி, எண்ணப்பறவை, சோஷலிசம், பின்தங்கிய மக்களின் பிரச்சினைகள், நான் இலங்கையின் ஜனாதிபதியானால், குடியிருந்த வீடு, இடப்பெயர்வு, மக்களின் குரல், நாம் ஊருக்குப் போகிறோம், பயங்கரப் பயணம், மண்ணை நேசிப்போம்,

மக்களாட்சி மலரட்டும், பரிதவிப்பு, மறுபக்கம், கிராமமும் நகரமும், றோட்டு, பாம்பு, சாதியம், நாம் யார் தெரியுமா?, அரசியல் தீர்வு ஆகிய 42 கவிதைகளும், "தாய்" தொடங்கி "யார் இவள்" ஈறாக 77 கவிதைத் துளிகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 79ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

## 16534

**சுவடுகள்: புதுக்கவிதைத் தொகுதி.** சரவணையூர் சுகந்தன் (தொகுப்பாசிரியர்). வேலணை: தமிழமுது வெளியீடு, சரவணை, 1ஆவது பதிப்பு, 1975. (வேலணை: தாரணி அச்சகம், சுருவில் வீதி, சரவணை).

24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

புதுக்கவிதை ஈழத்தில் அறிமுகமான காலகட்டத்தில் அவை பெரும்பாலும் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலுமே அரங்கேறின. அக்காலகட்டத்தில் மரபுக் கவிஞர்களிடையே புதுக்கவிதை பற்றிய மாறுபட்ட கருத்துகள் ஊடாட்டம் கண்டிருந்தன. இச்சந்தர்ப்பத்தில் சரவணையூர் சுகந்தன் அவர்கள் அன்றைய காலகட்டத்தில் எழுதப்பட்ட பல்வேறு புதுக்கவிதைகளையும் தொகுத்து புதுக்கவிதை மாண்பினை நிலைநிறுத்தும் வகையில் இந்நூலை வெளியிட்டிருந்தார். இதில் அன்பு ஜவகர்ஷா, அன்புடீன், ஆகசி கந்தசாமி, ஆதவன், இரா.நாகராசன், கல்முனைப் பூபால், கனக பாலதேவி, கோ.லோகநேசன், கோப்பாய் சிவம், சபா சபேசன், சரவணைப்பொய்கை பிரபா, சரவணையூர் சுகந்தன், சேரன், சௌமினி, த.புஷ்பராணி, தாரணி, திருமலை சுந்தா, தேவி பரமலிங்கம், நா.லோகேந்திரலிங்கம், நியாஸ் ஏ.கரீம், நிருத்தன், பாண்டியூர் க.ஐ.யோகராசா, பாலமுனை பாறூக், பூநகரி மரியதாஸ், பொன் பொன்ராசா, மாவை நித்தியானந்தன், மு.பாக்கியநாதன், முல்லை வீரக்குட்டி, ராஜ ஸ்ரீகாந்தன், வ.ஐ.ச. ஜெயபாலன், வதிரி சி.ரவீந்திரன், வன்னி வளவன், வானா வாவன்னா ஆகியோரது புதுக்கவிதைகள் இடம்பிடித்திருக்கின்றன.

## 16535

**சுவாசித்துக் கொண்டிருக்கிறேன்.** அப்துல் றஊப் பாத்திமா ஸுபா. மருதமுனை: அலிஸ் ஊடக கலை, இலக்கிய சமூக சேவை வலையமைப்பு, 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2020. (மருதமுனை: பெஸ்ட் கிராப்பிக்ஸ் டிசைன் அன்ட் கொம்பியூட்டர்ஸ் சேர்விஸஸ்).

xxx, 103 பக்கம், விலை: ரூபா 480., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-35602-0-9.

"மரியாள் மகி" என்ற புனைபெயரிலும் இலக்கிய உலகில் அறியப்பட்டவர் அப்துல் றஊப் பாத்திமா ஸுபா. சமூகம் சமகால களநிலைமை, காதல், பிரிவு, ஏக்கம் என இன்னோரன்ன விடயங்களைக் கருவாகக்கொண்டு சின்னச் சின்ன பாடுபொருள்களை அமைத்து இங்கு கவிதை படைத்திருக்கிறார். இறக்கை விரிக்கிறது, கற்காலம் போவோம், குறிஞ்சி, கற்சிலைகள், சின்னதாயொரு புன்னகை, தொடரும் சவால்கள், மௌனத்தின் மொழிதலில், கண்ணீர் தேசமிது, அடையாளம், புதிய காலடிகள், பகலில் ஒரு வெண்ணிலா, மின்மினிகளில்லை,

*அலைகின்ற ஆன்மாக்கள், கந்தலாகிப்போன போர்வை என விரியும் இவரது 57 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

## 16536

**சூரியனைத் தின்றவர்கள்.** *தமயந்தி. நோர்வே: உயிர்மெய் பதிப்பகம்,* Kaptein Linkesvei 9A, 6006 Aalesund, *1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2022. (அக்கரைப்பற்று: நியூ செலெக்ஷன் ஒப்செட் பிரின்டர்ஸ்,* C.E.B. *மின்சார நிலைய வீதி).*

*76 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21.5*x*15 சமீ.,* ISBN: *978-624-6047-09-2.*

*"சாம்பல் பூத்த மேட்டில்" (1985), "உரத்த இரவுகள்" (1986) ஆகிய இரு தொகுப்புகளின் பின் 36 ஆண்டு கால இடைவெளியில் வெளிவரும் கவிஞர் தமயந்தியின் மூன்றாவது கவிதைத் தொகுப்பு இதுவாகும். இவரது கவிதைகள் நாடோடி, தனஞ்செயன், கனவான், கௌசல்யன், ஜெயக்கொடி, கொய்யன், விமல் என வெவ்வேறு புனைபெயர்களில் எழுதப்பட்டு தாயக, புகலிட சிற்றிதழ்களில் வெளிவந்துள்ளன. இத்தொகுப்பில் உள்ள கவிதைகள் பெரும்பாலும் கடலைப் பற்றியே பேசுகின்றன.* Wellcome Drink !, *இறுதியாக பேசவிடுங்கள், முண்டஞ்சுறா, அவ்ரோடித், சமாதிகளை சுமப்போர், மவுனத்தோடவள் காத்திருத்தல், அவளும் நானும் ஆனியும் வடகரையும், வண்ணத்துப் பூச்சிகளை வேட்டையாடுதல், ஆண்டவர் உங்களோடு மட்டும் இருப்பாராக, பரிசுத்த ஆவி பசியோடு தப்பிப் போன வழி, காற்று நடமாடும் தெருக்கள், முற்றமில்லாத ஒரு படுக்கையறை, சுடலைக் குருவிகள், திருக்காயங்கள், இடைத்தங்கல் மரம், கோணல் முகங்கள், கைவிடப்பட்ட பாடல், எனது கிராமம், பூச்சிக்குப் பயந்த கவிஞன், மீட்பர்களும் மேய்ப்பர்களும், மீளவேண்டும், இலைகளில் எழுதிய பாடல், இறுதியாக ஒரேயொரு கவிதை ஆகிய 23 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. தமயந்தி எழுத்தாளராக மட்டுமன்றி அசையாப்படக் கலைஞர், கவிஞர், கூத்துக் கலைஞர், கடல்சார்ந்த சுற்றுச்சூழல் செயற்பாட்டாளர் எனப் பல்பரிமாணங்களிலும் அறியப்பட்டவர்.*

## 16537

**செந்தமிழாய் வந்தவளே: கவிதைகள்.** *செ.லோகராஜா. மட்டக்களப்பு: திருமதி பரமேஸ்வரி லோகராஜா, 14/3,* A-4, *கணக்குப்பிள்ளை வீதி, நாவற்குடா, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2019. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496* A, *திருமலை வீதி).*

*68 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20*x*14 சமீ.*

*மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ்மாமணி, கலைமாறன், செ.லோகராஜா அவர்களின் 25 கவிதைகளின் தொகுப்பு. அன்னைத் தமிழே, அன்னை மடி வாசம், அன்னையைப் போலொரு தெய்வம் உண்டோ?, ஆருயிராய் நின்றவளே, இதயத்தில் இருப்பவளே, உன்னைத் தேடிஅலைந்தேன், என்னை விட்டுப் பிரிவதில்லை, எனக்காகப் பிறந்தாயே, கண்கள் சொல்கின்ற கவிதை, கலை வண்ணத் தாரகையே, கவிதை பிறந்தது எதற்காக, சித்திரை நிலவே நலந்தானா?, செந்தமிழாய் வந்தவளே,*

தாலாட்ட வருவாயோ, தேமதுரத் தமிழ் பாயும், தேரென அசையும் அழகினிலே, நாற்றிசையும் புகழவைத்தாய், நான் கம்பனும் அல்ல, நிலவுக்கு என் மேல், நெஞ்சத்தில் நீ இருந்தாய், பாலருக்கு என்ன வேலை, மயிலாடும் பாறையிலே, மழையாக நீ இருந்தால், மாநிலம் போற்றிட வந்தவளே, வண்ண நிலவுக்கு என்னாச்சி ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27086).

## 16538

**சேனையூர் கலம்பகம்.** பால.சுகுமார். மட்டக்களப்பு: அனாமிகா வெளியீட்டகம், இல. 48, பெய்லி முதலாம் குறுக்குத் தெரு, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2021. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496 A, திருமலை வீதி).

xxiii, 78 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-955-7326-02-3.

சேனையூர் இந்நூலாசிரியரின் தாய் நிலம். உலகில் நாம் எவ்வளவுதான் வசதிகளோடு வாழ்ந்தாலும் நம் தாய்நிலம் தரும் சுகம் வேறொன்றிலும் இல்லை. சேனையூர் ஈழத் தமிழர்களின் தொல் நிலங்களில் ஒன்று. ஆறோடி வளைந்து அழகுறச் சூழ்ந்த குன்றுகள் தொடர்நிலத்து குளங்களும் குளங்களை அண்டிய வயல்களும், வயல்களைச் சார்ந்து சோலையாய் காடுகளும், அவைகளின் வழி புதைந்து கிடக்கும் வரலாற்றுச் சுவடுகளும் சேனையூரின் தொன்மையையும் வளம் மிக்க வாழ்வையும் நமக்குச் சொல்லும் சாட்சிகளாய் கண் முன் விரிந்து கிடக்கின்றன. மருதமும் முல்லையும் குன்றுகள் சொல்லும் குறிஞ்சியும் ஆற்றிடை நீளும் நெய்தலும், அது கடந்து செல்ல கரச்சை வழியாக செல்கின்ற பாலை நிலத்துப் பரவலும், தமிழ் நிலத்தின் எல்லா முகங்களும் கொண்டவளாய் தன் தாய் பண்டைத் தமிழ் பண்பாட்டின் திருமுகமாய் செந்தமிழ் நிலமாய் சிலிர்த்துக் கிடப்பதை இக்கவியுள்ளம் பாடவிளைந்துள்ளது. அவள் அழகை வரலாற்றை வாழ்வை கலைகளை பண்பாட்டை இங்கு கவிதையாக்கி இருக்கிறார். இந்நூலின் முதற் பகுதியில் எட்டுக் கவிதைகளும், இரண்டாம் பகுதியில் 52 கவிதைகளுமாக 60 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

## 16539

**சொற்காடு: கவிதைகள்.** ப.தியான் (இயற்பெயர்: பழனிவேல் தியாகராசா). திருச்சி 620 003: இனிய நந்தவனம் பதிப்பகம், எண் 17, பாய்க்காரத் தெரு, உறையூர், 1ஆவது பதிப்பு, ஜுன் 2021. (சென்னை: சாய் தென்றல் பிரிண்டர்ஸ்).

(30), 31-160 பக்கம், விலை: இந்திய ரூபா 150.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-953066-3-3.

தன் எண்ணங்களின் மொழிகளையே இங்கே விதைத்திருப்பதாகக் கூறும் கவிஞர் ப.தியான், சமூக வலைத்தளங்களில் தான் எழுதிப் பகிர்ந்த நாற்பத்தியொரு கவிதைகளை நூலுருவில் தொகுத்துத் தந்திருக்கிறார். இயலாள் தாலாட்டு, மனதின் தின்னா, பொதுப் புலம்பல் ஆகிய மூன்று பிரிவுகளில் இக்கவிதைகள் வகுத்துத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் தான் பகிர்ந்த கவிதைகளின்

வகைப்படுத்தல் பற்றி அவரே குறிப்பிடும் வாசகங்கள் இவை. "காலையை அலங்கரித்து விடியல்களை தொகுத்து எங்கள் நடைமுறைகளை நகர்த்தும் இயலின் தொடுகைகளை "இயலாள் தாலாட்டாய்" தந்திருக்கிறேன். மனங்களின் மகுடியில் ஆடும் எண்ணங்களின் இருப்புகளில் கீறல்களையும் கோரல்களையும் "மனதின் தின்னா" என்ற சந்தம் புதைத்து விதைத்திருக்கிறேன். காதல் என்ற மருத்துவம் பொய்க்கினும் மெய்க்கினும் காதல் மொழிதல் மனதின் மகுடம். அது ஆளும் அழகு, வலியில் பெருக்கும் நெகிழ்வு, நினைவின் தாலாட்டு அது அழுத்தம் குறைத்து வீரியம் குறைத்து மெலிதாய் தொட்டுச் செல்ல இந்தச் சொற்காட்டுக்குள் தூவியிருக்கின்றேன். மனிதம் புலன்கெட்டுப் புலம்பும் பொழுதுகள் அதிகம். ஆற்றாமை தூக்கி அறியாமை புகுந்து பொறுமை கெட்டு பொறாமை உற்று வாய்மை வரும் சுயமொழி ஆடலை "பொதுப் புலம்பலாய்" இந்தச் சொற்கட்டுக்குள் அலையவிட்டிருக்கிறேன்."

## 16540

**தண்ணீருக்குள் எத்தனை கண்கள்.** சோலைக்கிளி. திருக்கோணமலை: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம், 1ஆவது பதிப்பு, ஜுலை 2021. (மட்டக்களப்பு: எவகிறீன் அச்சகம், 185A, திருமலை வீதி).

349 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-624-613-513-3.

சோலைக்கிளி எழுதிய "அச்சத்தின் ருசி" என்ற கவிதையில் தொடங்கி "பிள்ளை ஒரு பொம்மை செய்துவைத்திருக்கிறது" என்ற கவிதை ஈறாக 178 கவிதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இது சோலைக்குயிலின் 13ஆவது கவிதைத் தொகுப்பாகும்.

## 16541

**தீந்தமிழ் வளர்த்த திருமறைக் காவலர்கள் (ஞானக் களஞ்சியம் -2).** க.த.ஞானப்பிரகாசம். யாழ்ப்பாணம்: கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம், 10/2, மத்தியூஸ் வீதி, 1ஆவது பதிப்பு, 2016. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் பிரின்டர்ஸ், 681, காங்கேசன்துறை வீதி).

vi, 30 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-43475-2-6.

கவிமணி க.த.ஞானப்பிரகாசம் (மறைவு: 16.08.2006) யாழ்ப்பாணம், நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர். இவர் நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் அதிபராக பல ஆண்டுகள் சேவையாற்றினார். இவரின் தீந்தமிழ்க் கவிதைகள் தமிழ் மக்களால் என்றும் போற்றப்படத்தக்கன. தமது கவிதைகளுக்கும் கட்டுரைகளுக்கும் பல பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். அவற்றுள் இலங்கையில் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தமையும், இந்தியாவில் பாரதி விருது கிடைத்தமையும் குறிப்பிடத்தக்கன. சுவாமி ஞானப்பிரகாசர், தவத்திரு தனிநாயகம் அடிகள், தாவீது அடிகள் ஆகிய மூன்று தமிழ் அறிஞர்களைப் பற்றிப் பாடிய பாடல்களை இந்நூலில் தொகுத்தளித்திருக்கிறார்.

## 16542

**துளி அல்லது துகள்: கவிதை.** *அலறி (இயற்பெயர்: அப்துல் லத்தீப் முஹம்மட் றிபாஸ்). அக்கரைப்பற்று-2: பேஜஸ் புத்தக இல்லம், 117, பட்டினப்பள்ளி வீதி, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2020. (மஹரகம: மில்லெனியம் கிராப்பிக்ஸ், 30/7, 5ஆவது ஒழுங்கை, அம்பகஹபுர).*

*78 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x14 சமீ.,* ISBN: *978-955-99400-4-3.*

இக்கவிதைத் தொகுதியின் தலைப்பே இருமைப் பண்புடையதாக உள்ளது. நவீன கவிதைகளுக்கும் இருமைகளுக்குமான தொடர்பு பலரும் அறிந்ததே. துளி என்பது திரவமாக இருக்கையில் துகழ் என்பது திடத்தின் ஒடுங்கிய உருவாக, துணிக்கையாக இருக்கின்றது. ஆனால் துளியின் கூறாக இருப்பதுவும் துணிக்கைகள் அல்லது துகள்களே. இவ்வாறு தனித்தும் ஒன்றித்துமான இருமை நிலைகளில் சடப்பொருள்களின் இருப்பினைப் போன்றதே அலறியின் கவிதைகள். அலறி கிழக்கிலங்கையின் மருதமுனையைச் சேர்ந்தவர். சட்டத்தில் இளமாணிப் பட்டமும், மனித உரிமைகள், பொதுச் சுகாதாரம், உளவளத்துணை ஆகியவற்றில் டிப்ளோமா பட்டமும் பெற்றுள்ள சட்டத்தரணியாவார். கவிதைக்காக கிழக்கு மாகாண சபையின் விருதினை 2006இல் பெற்றிருந்த இவர் பூமிக்கடியில் வானம் (2005), பறவை போல சிறகடிக்கும் கடல் (2006), எல்லாப் பூக்களும் உதிர்ந்துவிடும் (2008), மழையை மொழிதல் (2009) ஆகிய கவிதைத் தொகுப்புகளை முன்னதாக வெளியிட்டுள்ளார்.

## 16543

**நாங்கூழ்: கவிதைகள்.** *மின்ஹா. சென்னை 600 005: கருப்புப் பிரதிகள், பி 55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2020. (சென்னை 600005: ஜோதி என்டர்பிரைசஸ்).*

*66 பக்கம், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 21.5x14 சமீ.*

"மொழியின் வழமைப் புள்ளியை போன்றதொரு பொருளாய் கவிதை தேங்கி விடுமோவென்கிற ஆதங்கங்கள் மேலோங்கிக் கொண்டிருக்கும் காலத்தின் சோர்வை போக்குகின்றது மின்ஹாவின் இக்கவிதைத் தொகுப்பு. வகைப்படுத்த வியலாத மௌனங்களை மனச்சலனமேற்படுத்தக்கூடிய சிறு பெருக்குகளைக் கொண்டு உந்தித் தள்ளும் நதியின் மொழியை இயல்பாய், புனைவாய் கொண்டிருக்கின்றன. உறவு விலக்கப்பட்ட, தன் உறவிலிருந்த இயற்கையின் படிமங்களை குறியீடுகளாய் நமது விழிப் படலங்களின் காட்சியாக்கி உள்ளுணர்வை வெளிப்படுத்தும் மின்ஹாவிடம் தொன்மப் பெண்களின் பெரும் மூச்சும் பின் நவீன மனவெளியும் சாரையும் நல்லபாம்புமாய் இழைந்து கொண்டிருக்கின்றன." (நீலகண்டன்-முன்னுரையில்). மாதிரிக்கு ஒரு கவிதை: இருத்தலை ஊதி இடம் நகர்த்தும்/காற்றின் பாதை/மெல்ல நகர்கின்றது. அந்தரமான வாழ்வின் இரேகைகள்/ அடங்கிய இரகசியங்கள்/அறிப்படாமலும்/புரியப்படாமலும்/தரை மோதியே அழிகின்றன.காற்றை விழுங்கிய/வளிக்குமிழிக்குள்/எவ்வளவு காற்று/மூச்சுத் திணறியிருக்கும். மிதத்தலின் நீட்சி/அந்தம் வரை/ இறுகப்பற்றி செல்லும் வாழ்வே (மின்ஹா).

## 16544

**நாளைய நான்**. சரணிகா இராசேந்திரம். யாழ்ப்பாணம்: S.T.T.S.வெளியீடு, சங்கானை, 1ஆவது பதிப்பு, சித்திரை 2021. (யாழ்ப்பாணம்: சாய்ராம் பிரின்டர்ஸ், பிரதான வீதி, சங்கானை).

iv, 61 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 16.5x11.5 சமீ., ISBN: 978-624-97603-0-1.

விஞ்ஞானத்துறையில் கல்வி கற்றுவரும் பாடசாலை மாணவியான சரணிகாவின் கன்னிப்படைப்பு இது. நேற்று நடந்தவற்றில் நன்மை பயக்கக் கூடியவற்றையும் தவறுகளையும் திருத்தப்படவேண்டியவற்றையும், சமுதாய மட்டத்திலிருந்து உன்னிப்பாகக் கவனித்தும் கணித்தும் தனது கவித்துவ ஆளுமைக்குள் அகப்படுத்திக் கொண்டுள்ளார். என்னுடன் நான், தாய், என் மனச் சித்திரம், என் ஆசான், உன்னை உனக்குள் தேடு, அறியா வயது, என்னை வாழவைத்த என் அன்னைக்கு, விடியும் தருணம், சகோதரா, போலி உலகம், என் காதல் பயணம், விழித்திடு, நீ யார்?, நாளைய நான், மங்கையவள் ஏக்கம், வாழ்க்கை, பிரிந்த நட்பின் வலி, வானம் வசப்படும், தொலைத்த நொடிகள், தத்தெடுத்த தாய், தனிமை, பிரிவின் வலி, வறுமையில் கல்வி, என் இறைவா, பள்ளிக் காலங்கள், சரித்திரம், சிரிப்பு, நன்றியுடன் சில வரிகள் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

## 16545

**நான் ஓர் எழுத்தாளன்: கவிதை நூல்**. புயல் (இயற்பெயர்: பெ.ஸ்ரீகந்தநேசன்). யாழ்ப்பாணம்: தாய்மொழி வளர்ச்சி மன்றம், 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2016. (யாழ்ப்பாணம்: மெகா பதிப்பகம், கச்சேரியடி).

72 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-7736-02-0.

அனுபவங்களோடு கூடிய உண்மைச் சம்பவங்களைப் படம்பிடித்துக் காட்டும் 68 கவிதைகளை உள்ளடக்கிய இந்நூல் சமூகத்தின் சகல பக்கங்களையும் புரட்டிப் பார்க்க முயன்றுள்ளது. பட்ட மரங்கள், ஆண்டான் அடிமை, பசுமையான நினைவுகள் எனத் தொடர்ந்து இழிவிழுந்தவள் என்ற கவிதை ஈறாக இடம்பெற்றுள்ள கவிதைகளில் பல சமீபகால நிகழ்வுகளும் அடங்கியுள்ளன. உதாரணமாக "பட்ட மரங்கள்" என்ற கவிதையில் நாடு முழுவதிலுமுள்ள வேலையற்ற பட்டதாரிகள் எதிர்நோக்குகின்ற சவால்கள், முன்னெடுக்கும் போராட்டங்களின் வலிகள் என்பவற்றை வெளிப்படுத்துகின்றது. நடுகல் என்ற கவிதையில் துயிலும் இல்லங்களை இராணுவம் எவ்வாறு சிதைத்து இறந்தவனுக்கு புதைகுழி கூட நிரந்தரமில்லை என்று நிரூபித்ததோ அதன் உண்மைத் தன்மையை இக்கவிதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

## 16546

**நிலவில் நீந்தும் படகு.** *அபு அப்றிட். நாவிதன்வெளி: தேடல் பதிப்பகம், 1ஆவது பதிப்பு, 2021. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

xvi, *80 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 19*x*14 சமீ.,* ISBN: *978-624-97923-3-3.*

*நற்பிட்டிமுனையைப் பிறப்பிடமாகக் கொண்ட அபு அப்றிட் கவித்துவப் புலமை கொண்ட ஒரு பரம்பரையின் வழி வந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கட்டிட நிர்மாணத் தொழில்நுட்பவியல் துறையில் இறுதியாண்டு மாணவராக இருந்த வேளையில் இத்தொகுதியை வெளியிட்டிருந்தார். இத்தொகுதியில் இவரது 50 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் சில சமூகவியல்சார்ந்த கவிதைகளும் உள்ளன. அவை போராடும் காலம், முகமூடிகள், மூழ்கிடும் உலகு, கல்வி வியாபாரம், இயற்கையும் இறக்கிறது, படு குழியில் மனிதம், நச்சு மனிதர்கள், கொடுத்துண்ணு, உச்சம் தொடும் விலைவாசி என பல்வேறு தலைப்புகளில் பிரகாசிக்கின்றன. இயற்கையை நேசிக்கும் கவியுள்ளம் கொண்ட இவரது கவிதைகளில் அந்த உணர்வு தூக்கலாகத் தெரிகின்றது. கவிஞர் இடையிடையே காதலையும் பாடத் தவறவில்லை.*

## 16547

**நிலவே முகம் காட்டு (கவிதைத் தொகுப்பு).** *செ.லோகராஜா. மூதூர்: திருமதி பரமேஸ்வரி லோகராஜா, 64, பாரதி வீதி, முன்னம்போடி வெட்டை, பாலத்தடிச் சேனை, தோப்பூர், 1ஆவது பதிப்பு, மார்ச் 2016. (திருக்கோணமலை: சிறீராம் பிரின்டர்ஸ், இல.159* A, *கடல்முக வீதி).*

xvii, *67 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-43127-0-8.*

*கவிஞர் கலைமாறன் என இலக்கிய உலகில் பவனிவரும் செல்லத்துரை லோகராஜா, மூதூர் வலயக் கல்வி அலுவலகத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றுபவர். கல்வித் துறையோடு, சோதிடக்கலை, சமயப்பணி, சமூகப்பணி முதலான வேலைப் பளுக்களுக்கும் மத்தியில் இக்கவிதை நூலைப் பிரசவித்துள்ளார். இந்நூலில் அழகி அவள் யாரோ?, இளமைக்கால இனிய நினைவுகளே, உன்னை நினைக்கையிலே, உனக்காகக் காத்திருப்பேன், எந்தனுயிர்க் காதலியே, எழிலுருவை என்னென்பேன், என் ஆசை நிலவே, என்ன இந்த மாற்றமோ?, என்னை அழவிடு, ஏன் படைத்தாய் இறைவா?, ஒற்றுமையே உயிர்நாடி, கவிதையின் இயல்பு என்னே?, கவிதைக் காதலியே, கவரிமான் சாதி, கற்பே உன் கதியென்ன?, காதலா சாதலா?, குடும்பம் ஒரு கோவில், சிந்தைக்கு விருந்து வைத்தாய், தென்றலே நீ தீண்டாயோ?, நிலைக்கட்டுமே சமாதானம், நிலவே முகம் காட்டு, நெஞ்சில் நிலைக்கும் இனிய நினைவுகளே, பாரதியைப் பாட்டினிலே பார்த்தேன், பாரதியே மீண்டும் நீ வாராயோ?, புதியதோர் உலகம் செய்வோம், பொன் வண்ணத் தேரினிலே, மயக்குறும் மஞ்சரியாள், முத்தமிழ் பாவெடுத்து, மென்மையுறும் நல்லாட்சி, யாதும் ஊரே யாவரும் கேளீர் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

## 16548

**நிலாச்சோறு.** ரஜிதா அரிச்சந்திரன். யாழ்ப்பாணம்: ரஜிதா அரிச்சந்திரன், 110, புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2023. (யாழ்ப்பாணம்: மெகா பதிப்பகம், 41, றக்கா வீதி, கச்சேரியடி).

vi, 64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-624-98909-2-3.

தான் தினமும் பார்க்கும் கேட்கும் அக, புற வாழ்வின் அம்சங்களைப் பாடு பொருளாக்கி அதனை ஆசிரியப்பா, வெண்பா போன்ற பாக்களாலும், ஆசிரிய ஒத்தாழிசை, விருத்தங்களாலும் தன் கற்பனை கலந்து படைத்துள்ளார். சமூகத்தில் புரையோடிப் போயுள்ள பிரச்சினைகளை பழைய பாவினங்களுக்குள் புதுமைக் கருத்துக்களைப் புகுத்தி இக்கவிதைகளை யாத்துள்ளார். தமிழின் இனிமை, முத்தமிழை வணங்கித் தொழுவோம், பிள்ளைக்கனி அமுதே, கண்களும் கவிதை பேசிடும், அன்பு, அகத்தின் அழகு முகத்தில் தெரியும், அடியிலே பெருக்கெடுத்து ஆடியும், நினைவுகளின் சுகந்தம், சுகம் தருமோ சுதந்திரம், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பிடுவாய், இதயக்கூட்டின் விம்பங்கள், இயற்கையே இன்பம், தந்தை, பேரன்பின் பெருவெளி, அறிவினை விருத்தி செய், வாழ்வெனும் வானவில், காதலி, வாழ்க்கை, நீதானே, வேடதாரிகள், தேடல், நீதி, நெஞ்சு பொறுக்குதில்லை, நேர்மை, ஆசை, துரோகம் துரத்து, தம்பதியர் தினம், மாற்றிடு அப்பனே, சுற்றுச் சூழல் காப்போம், நிலாச்சோறு, வாழும் வரை போராடு, விடியலைத்தேடி, பெண்ணென்ன, பேதைக்கு நீதி, காதல் நினைவு, அற்பர், போதை, காலைக்காட்சி, மாணவர்களுக்கு, புதிதாய்ப் பிறப்போம், பாரதிதாசன், மனித உரிமை போற்று வோம், மழை, விலையேற்றம், நோக்கும் திசையெங்கும் பாரதி, நிலையாமை, பெண்ணெனும் பெருஞ்சுடர், மகளென்னும் தாய், அற்ப நரர் நாம், மலர், அச்சமில்லை அச்சமில்லை, மெத்தப் படித்தவன், கலாசாரம், தடுப்பு ஆகிய தலைப்புகளில் இக்கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

## 16549

**நினைவின் இறுதிநாள்.** கருணாகரன். கிருஷ்ணகிரி மாவட்டம்: புது எழுத்து, 2/203, அண்ணா நகர், காவேரிப் பட்டினம் 635112, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2019. (அச்சக விபரம் தரப்படவில்லை).

128 பக்கம், விலை: இந்திய ரூபா 120., அளவு: 21.5x14 சமீ.

வடக்கிலுள்ள இயக்கச்சி கிராமத்தில் பிறந்து தற்போது கிளிநொச்சியில் வசித்து வரும் கவிஞர் கருணாகரன், முன்னர் ஈழப்போராட்ட இயக்கங்களின் வெளியீடு களான "பொதுமை" (ஈரோஸ்), "வெளிச்சம்" (விடுதலைப் புலிகள்)ஆகியவற்றின் ஆசிரியராகப் பணியாற்றியவர். சமூகச் செயற்பாட்டாளரான கருணாகரன், தற்போது சுயாதீன ஊடகவியலாளராகவும் மகிழ் பதிப்பகத்தின் வெளியீட்டாள ராகவும் செயற்பட்டு வருகிறார். ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல், ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள், பலியாடு, எதுவுமல்ல எதுவும், ஒரு பயணியின் போர்க் காலக் குறிப்புகள், நெருப்பின் உதிரம், படுவான்கரைக் குறிப்புகள், இரத்தமாகிய

இரவும் பகலுமுடைய நாள் ஆகிய கவிதைத் தொகுதிகளைத் தொடர்ந்து வெளிவரும் மற்றுமொரு கவிதைத் தொகுப்பு இதுவாகும்.

## 16550

**நீ விளையாடுவாய் தானே நான் பொம்மையாகின்றேன்.** நெடுந்தீவு முகிலன். சென்னை 600017: கற்பகம் புத்தகாலயம், நடேசன் பூங்கா அருகில், தி.நகர், 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2012. (சென்னை 600 005: சுப்ரா பிரின்டெக்).

88 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 40.00, அளவு: 18x12 சமீ.

பொதுவாக பொம்மைகளை குழந்தைகள் விளையாடுவார்கள். காதலர்களும் ஒரு வகையில் குழந்தைகளே. ஆதலினாலோ என்னவோ பொம்மைகளை காதலர்களும் விளையாடுகிறார்கள். குழந்தைகளின் பொம்மை விளையாட்டுக்கும் காதலர்களின் பொம்மை விளையாட்டுக்கும் இடையே வித்தியாசங்கள் இருக்கின்றன. குழந்தைகள் பொம்மைகளை விளையாடும்போது விளையாட்டாகவே விளையாடுகிறார்கள். காதலர்கள் பொம்மைகளை விளையாடும்போது பொம்மைகளை காதலர்களாக்கி விளையாடுகிறார்கள்.

## 16551

**நீரோவின் இசைக் குறிப்புகள்.** தமிழ் உதயா (இயற்பெயர்: திருமதி பசுபதி உதயகுமாரி விவேகானந்தராஜா). சென்னை 600083: சந்தியா பதிப்பகம், புதிய எண் 77, 53ஆவது தெரு, 9ஆவது அவென்யூ, அசோக் நகர், 1ஆவது பதிப்பு, 2018. (சென்னை 600083: விக்னேஷ் பிரிண்டர்ஸ்).

96 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21x14 சமீ., ISBN: 978-93-87499-52-2.

தமிழ் உதயா மல்லாவியில் பிறந்தவர். வவுனியா மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றியவர். ஈழத்தின் இரத்த வடுக்களையும் புலம்பெயர்தலின் மீளா வலிகளையும் உணர்ந்தவர். புலம்பெயர் மக்களின் மனதை அணுக்கமாகச் சொல்ல, அவர்களது வாழ்வின் அடர்த்தியை ஓவியமாய் வரைந்து காண்பிக்க, இழந்த கனவுகளின் வண்ணத்தை தன் சொற்களுக்கேற்றி அதை மானுட வரைபடத்தில் வரைந்து தந்திருக்கிறார். இலங்கை மற்றும் தமிழகத்திலிருந்து வெளிவரும் முன்னணி இலக்கிய இதழ்களில் இவரது படைப்புகள் வெளிவந்து பரவலான கவனத்தைப் பெற்றுள்ளன. தமிழ் உதயா தற்போது லண்டனில் வசித்து வருகிறார். இவரது படைப்பாக்கம் பற்றிக் குறிப்பிடும்போது, "ஈரம் ததும்பி நிற்கும் சொற்களும், சொற்களில் வரைந்த காட்சிப் படிமங்களும் காட்சிப் படிமங்கள் உணர்த்தும் அனுபவச் சுழல்களும், அனுபவச் சுழலில் உழலும் உணர்வெழுச்சிகளும் தமிழ் உதயாவின் கவிதைகளை வாசிக்கும் யாவரையும் மனங்கொள்ள வைக்கின்றன. கவிதை காலத்தின் வழியே தமிழ் உதயாவைத் தேர்ந்தெடுத்திருக்கிறது" என்கிறார் அணிந்துரை வழங்கிய எழுத்தாளர் உதயசங்கர்.

## 16552

**நெருப்பமாய் இழுத்த பந்தல்.** *சோலைக்கிளி (இயற்பெயர்: உதுமாலெவ்வை முகம்மது அதீக்). கல்முனை: சோலைக்கிளி, வாசல் மழை வெளியீடு, மொஸ்க் வீதி, 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2017. (சாய்ந்தமருது: எக்செலன்ட் பிரின்ட்).*

*xvi, 251 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-38330-0-6.*

*சோலைக்கிளி இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் கல்முனையைச் சேர்ந்தவர். இவர் எழுதியுள்ள 66 கவிதைகளை இத்தொகுப்பு கொண்டுள்ளது.*

## 16553

**படி கட.** *சுவஸ்திகா ராஜ்பிரகாஷ். கொழும்பு: சுவஸ்திகா ராஜ்பிரகாஷ், 1ஆவது பதிப்பு, நவம்பர் 2022. (கொழும்பு: விஜயா கிராப்பிக்ஸ்).*

*48 பக்கம், விலை: ரூபா 375., அளவு: 22x16 சமீ., ISBN: 978-624-99734-0-4.*

*கொழும்பு விபுலானந்த தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியான சுவஸ்திகாவின் முதலாவது கவிதைத் தொகுதி. பிறப்பது பொறுப்பு, முயற்சியே பயிற்சி, இறைவன் இருக்கிறான், எண்ணமே வாழ்க்கை, வாய்ப்புகள், தான தர்மம் ஒரு தவம், ஏடுகள் ஏந்திட, திட்டமிடு, அவமானங்கள், வறுமைப் பாடம், பசிக்கிடு தீனி, எதிர்த்து நில், இடையில் ஒரு பருவம், காதலித்துப் பார்க்கலாம், சற்றே பொறு, ஏமாற்றம் மாறுமோ?, எது வலிமை, திறமைக்கு முதலிடம், தோல்வியிடமிருந்து, உறுதி, கலையாத கனவு, செயலாகும் பெயர், தனிமையிலே, போராடினால், நாடோடியாக, நேரம் பார், படை பலம், பயணத்தில், பாதத் தடங்கள், தேடலின் விடை, விதி மதியறி, மரணத்தில் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட கவிதைகள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 69974).*

## 16554

**பல்லிகள் இல்லா சுவரில் மேயும் வண்ணத்துப் பூச்சிகள்.** *எஸ். நளீம். வாழைச்சேனை-5: மைநா வெளியீடு, இல. 5, மஹ்முத் ஆலிம் வீதி, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2020. (சாய்ந்தமருது: எக்சலன்ட் பிரின்ட்).*

*90 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x15.5 சமீ., ISBN: 978-624-95962-0-7.*

*90களின் நடுப்பகுதியிலிருந்து கவிதைகளை எழுதிவருவோரில் முக்கியமான ஒருவராக நளீம் குறிப்பிடப்படுகிறார். வாழைச்சேனையில் வசித்து வரும் இவர் கவிதை, ஓவியம், சிறுகதை என்பவற்றில் ஈடுபாடு கொண்டவர். ஓடை, மைநா, யாத்ரா போன்ற சஞ்சிகைகளுக்கு ஆசிரியராகவும் உதவி ஆசிரியராகவும் செயற்பட்டவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத்துறையில் பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்துள்ள இவர் கொழும்பு பல்கலைக் கழக ஊடகத்துறைக்கான டிப்ளோமா கற்கைநெறியினையும் பூர்த்தி செய்துள்ளார். யுத்தம் முடிவுக்கு வந்து பத்தாண்டுகளில் எழுதப்பட்ட கவிதைகளுள் தேர்ந்த 36 கவிதைகளை இத்தொகுப்பு உள்ளடக்குகின்றது. கண்ணீர் மட்டுமின்றி*

கோபமும் கருணையும் காதலும் இயற்கையும் இவரது கவிதைகளில் வெளிப்படக் காணமுடிகின்றது. பல்லிகளுக்குப் பயந்த இந்த வண்ணத்துப்பூச்சிகள் பல்லிகளை மாத்திரமல்ல எத்தனையோ முதலைகளையும் பூதங்களையும் கண்டுகொண்டன. இருப்பினும் கதவொன்று திறந்து கிடப்பதைக் கண்டு கொள்ளாமலே கூண்டுக்குள் வாழ்க்கையோட்டும் இந்த வண்ணத்துப் பூச்சிகள் கண்திறந்து பல்லிக்கு இரையா காமல் பாதுகாப்பாக வெளிவரவேண்டும், அவற்றின் மனங்களில் நம்பிக்கை துளிர்க்கவேண்டும், நாடு சிறக்கவேண்டும் என்பதே இக்கவிஞனின் வேண்டுதலா கின்றது.

## 16555

**பறவைகளுக்குத் திசைகள் தெரியாது.** சித்தாந்தன். யாழ்ப்பாணம்: தாயதி வெளியீடு, சமூக செயலூக்கத்துக்கான முன்னோடி, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2021. (சென்னை 600018: பாரதி பதிப்பகம், இல.7, இளங்கோ சாலை, தேனாம்பேட்டை).

96 பக்கம், விலை: ரூபா 280., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-9078-916-5.

"சித்தாந்தன் கவிதைகளில், யதார்த்தமான சூழலும், அதேசமயம் இயல்புநிலைப் படுத்தப்பட்ட விநோதமும் (Normalized Fantasy) சேர்ந்திணையும் மாயாயதார்த்தவாதப் (Magical Realism) பண்பு மிக மேலோங்கிய நிலையில் வெளிப்படுகிறது. புனைவுக்குள் புனைவெனும் பெரும்புனைவு (Metafiction) அவற்றில் நடமாடுகிறது. அவற்றின் பகுதியாகப் புராணிகங்களும் (Myths), புராணிகத்தன்மை ஏற்றப்பட்ட விடயங்களும் பிரதான கூறுகளாகின்றன. அன்றாடத் தன்மையும் (Mundane) சாதாரணத்துவத்தின் தீவிரமான தொனியும் (Serious tone of ordinary) கொண்டுள்ள அவரது கவிதைகள் உத்தியோகபூர்வ நிலைப்படுத்தப்பட்ட அனைத்து மேலாதிக்கங்கள் மீதான அரசியல் விமர்சனங்களுமாகின்றன." (பா.அகிலன், பின்அட்டைக் குறிப்பு).

## 16556

**பனிக்குடம்.** கௌசி (இயற்பெயர்: சந்திரகௌரி சிவபாலன்). தமிழ்நாடு: ஒரு துளிக் கவிதை, புதுச்சேரி, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2022. (தமிழ்நாடு: ஒரு துளிக் கவிதை, புதுச்சேரி).

114 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 200., அளவு: 21.5x14 சமீ.

பெண்கள் கருவுற்ற காலத்தில் இரண்டாவது வாரத்தில் பனிக்குடம் என்னும் பகுதி திரவத்தால் நிறைந்து கருப்பையில் உருவாகிறது. கருவில் வளரும் குழந்தை பாதுகாப்பாய் அந்த நீரில் மிதந்து அதன் பாதுகாப்பில் வளர்கின்றது. உடல் பிரசவத்திற்கு தயாரானதும் இந்தப் பனிக்குடம் உடையத் தொடங்கி திரவம் மற்ற மாசுக்களுடன் வெளியே வந்துவிடும். இந்தக் கவிதைத் தொகுதியிலும் அவ்வாறே சுகமாய்ச் சுமந்து வலியோடு வளர்த்து உயிராய் உரமாய் கனவாய் வெளியுலகில் நடமாட விட்ட உயிர்களில் அன்னையரின் மனஓசை ஒவ்வொன்றாய் வெளிப்படுத்தும் வகையில் இந்நூலின் கவித்துளிகள் அமைந்துள்ளன. அணிந்துரை வழங்கியுள்ள தேவகோட்டை முத்துமணி "இந்த நூலில் சுருங்கச் சொல்லி நம்முள்ளே ஒரு பொறியைப் பற்றவைத்துவிட்டு அறிவு விளக்கை வாசிப்பவரின்

*சிந்தையைத் தூண்டும் வண்ணம் செய்திருக்கிறார். ஒவ்வொரு வரியும் மிக யதார்த்தமாகவும் எளிய நடையுடனும் இருந்தாலும் அரிய எண்ணங்களை இக்கவி வரிகள் நம்முள்ளே விதைத்துச் செல்கின்றன" என்கிறார். தாய்மை, பெண்மை, முதுமை, அம்மா கவிதைகள் என நான்கு பிரிவுகளில் இக்கவிதைகள் விரிந்து கிடக்கின்றன. கௌரி, கௌசி ஆகிய புனைபெயர்களில் தாயகத்திலும், புகலிடத்திலும் இலக்கியத்துறையில் தடம்பதித்தவர் திருமதி சந்திரகௌரி சிவபாலன். மட்டக்களப்பு மாவட்டம்- ஏறாவூரில் பிறந்த இவர், மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியாவார். பேராதனை பல்கலைக் கழகத்தில் கலைமாணி தமிழ் சிறப்புப் பட்டம் பெற்றதுடன், நுகேகொடை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்வி டிப்ளோமா பட்டமும் பெற்று தன் தொழில்துறையாக ஆசிரியத் துறையை தேர்ந்தெடுத்தவர். மட்டக்களப்பு கறுவாக்கேணி தமிழ் வித்தியாலயத்தில் முதல் நியமனம் பெற்ற இவர், பின்னர் ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயம், நீர்கொழும்பு விஜயரத்தினம் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியராகவும், நீர்கொழும்பு கல்வித் திணைக்களத்தில் ஆசிரிய ஆலோசகராகவும் பணியாற்றியவர்.*

## 16557

**பாஷோவின் அறையில்.** *தமிழ் உதயா (இயற்பெயர்: திருமதி பசுபதி உதயகுமாரி விவேகானந்தராஜா). சென்னை 600083: சந்தியா பதிப்பகம், புதிய எண் 77, 53ஆவது தெரு, 9ஆவது அவென்யூ, அசோக் நகர், 1ஆவது பதிப்பு, 2018. (சென்னை 600083: விக்னேஷ் பிரிண்டர்ஸ்).*

*96 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5*x*14 சமீ.,* ISBN: *978-93-87499-54-6.*

*தன் சமூகம் சார்ந்த அக்கறையோடும் போர்வெறிக்கு எதிரான குரலோடும் கவிதைத் தளத்தில் இயங்கி வருபவர் கவிஞர் தமிழ் உதயா. பரந்து விரிந்த பூமி, நில்லாது ஓடும் நதி, பறவையின் வானம், தகிக்கும் நெருப்பு, உணர்வைத் தொடும் காற்று என்று ஐம்பூதங்களையும் மட்டுமல்லாது நேற்றைய இன்றைய பொழுதின் வலிமிகுந்த சமூகத்தை, முகவரி தொலைத்த மனிதர்களை என்று அனைத்தையும் தன் கவிதைகளுக்குள் உள்ளீர்த்துக் கொள்கின்றார். உலகக் குறுங்கவிதைகளின் பிதாமகராக இவர் கருதும் "பாஷோ" வையே இக்குறுங்கவிதைத் தொகுப்பின் தலைப்பாகவும் வரித்துக்கொண்டுள்ளார். இக்கவிதை நூல் தமிழ் உதயாவின் பதினொராவது கவிதைத் தொகுப்பாகும்.*

## 16558

**பூக்காலம்.** *வெலிமடை ரபீக். கொழும்பு 10: வெள்ளாப்பு வெளி, ஏ 6, 2/1 என். எச்.எஸ்., கலைமகள் வீதி, 1ஆவது பதிப்பு, 2016. (கொழும்பு 10: எஸ். அன்ட் எஸ். பிரின்டர்ஸ், 49, ஜயந்த வீரசேகர மாவத்தை).*

xxiv, *85 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22*x*15.5 சமீ.,* ISBN: *978-955-0280-06-3.*

*எண்பதுகளில் கவிதை இலக்கியத்திற்குள் பிரவேசித்திருந்த கவிஞர்களுள் ஒருவரான ரபீக்கின் இரண்டாவது கவிதைத் தொகுதி இது. மேக வாழ்வுக்குப்*

பின் வெளிவரும் பூக்காலம் அவரது இதயராகங்களை மீண்டும் மீட்டியுள்ளன. தினகரன் கவிதைச் சோலை, கவிதாசாகரம் ஆகிய களங்களினூடாகக் கவிதை களைப் படைத்து வந்தவர் பின்னாளில் கூர்மையடைந்த பேனா முதிர்ச்சியுடன் தொடர்ந்தும் வீரியத்துடன் தன் எழுத்தாக்கங்களைப் படைத்து வருகிறார். "மேகத்தைப் போலவே வாழவிரும்பும் சகல மனிதர்களின் ஒட்டுமொத்த உணர்வுகளை மீட்டுவதாக மேகவாழ்வைப் பொழிந்த வெலிமடை ரபீக், சமூகத்தின் உயிர் அடிபடும் போதெல்லாம் வெடித்து விழும் வேதனைகளிலும் துடித்தெழும் உணர்ச்சிப் பிரவாகத்திலும் தன் கவிதைகளைப் பூவில் தோய்த்து வருடச் செய்கிறார். இந்த வருடல்களில் சுகத்துக்கும் அப்பால் வாசக மனசைப் பிராண்டிச் சுடும் கவிதைக் கனல் கொதிக்கின்றது" (முல்லை முஸ்ரிபாஅணிந்துரையில்). அகதி வாழ்வில் தொடங்கி யாசக ஒப்பாரி ஈறாக 35 கவிதைகளை இத்தொகுப்பில் காணமுடிகின்றது.

## 16559

**பூந்தேனில் கலந்து (கவிதைப் பூக்கள்).** செ.லோகராஜா. மூதூர்: திருமதி பரமேஸ்வரி லோகராஜா, 64, பாரதி வீதி, முன்னம்போடி வெட்டை, பாலத்தடிச்சேனை, தோப்பூர், 1ஆவது பதிப்பு, கார்த்திகை 2020. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496 A, திருமலை வீதி).

xviii, 50 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-955-43127-8-4.

கவிஞர் கலைமாறன் என இலக்கிய உலகில் பவனிவரும் செல்லத்துரை லோகராஜா, மூதூர் வலயக் கல்வி அலுவலகத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றுபவர். கல்வித் துறையோடு, சோதிடக்கலை, சமயப்பணி, சமூகப்பணி முதலான கடின உழைப்புக்கு மத்தியில் இக்கவிதை நூலைப் பிரசவித்துள்ளார். இந்நூலில்அழகான மலரொன்று கண்டேன், அத்திமரப் பூவும் அச்சப்படுமா?, ஆனந்தப் பூங்காற்றே, இளமையெனும் பூங்காற்று, கையில் வந்த பூந்தோட்டமே, செந்தாளம் பூவினிலே, தாமரையாள் ஏன் சிரித்தாள்?, நான் தேடும் செவ்வந்திப் பூவிது, பூக்களைத் தேடுகின்ற வண்டுகளே, பூந்தேனில் கலந்து, பூமியில் பூப்பூத்ததா?, பூமகளின் தங்கமே, பூவிடம் நீ சொல்லு, பூவிலே உன் வாசத்தை, பூவோடு சேரும் காற்றாக, பொன்னான மலரல்லவோ, மலரே ஏனிந்தக் கோபம், மலரத் தெரிந்த மனமே, மலரே ஒரு வார்த்தை பேசு, மலரே மௌனமா?, மலரோடு உறவாடும் தென்றலே, மாலை வேளை மலர்களே, வாச மலர்க் கொடியே, வாசமில்லா மலரிது, ஜாதி மல்லிப் பூவே ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட கவிதைகள் சங்கமித்துள்ளன.

## 16560

**பூவரசம் தொட்டில்: புதுக் கவிதை.** வசீகரன் சித்திவிநாயகம். முல்லைத்தீவு: செல்லமுத்து வெளியீட்டகம், வள்ளுவர்புரம், விசுவமடு, 1ஆவது பதிப்பு, மே 2017. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

xx, 104 பக்கம், விலை: ரூபா 220., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-955-4096-08-0.

யாழ்ப்பாணம் அல்வாயைச் சேர்ந்த வசீகரன், புலம்பெயர்ந்து சுவிட்சர்லாந்தில் குடும்பத்தினருடன் வாழ்ந்து வருகிறார். இக்கவிதைத் தொகுதியில் இவர் எழுதிய நீங்கள் வேண்டும், கூட்டுத் தாக்குதல், அழகிய வந்தனம், பொங்கல், உயிர்ப்பூ, தவிப்பு, அன்பு, கொடி மல்லிகை, அம்மா, உழவர் திருநாள், ஒற்றையடிப் பாதை, தட்பநிலை, தனிப்பறவை, டெங்குக் காய்ச்சல், நம்பிக்கை, இறங்குதுறை, ஊடல் கற்பூரவாசம், மாணவ மாணவிகள், தூறல், முறிந்த கறுத்தக் காப்பு, ஆட்டுக்குட்டி, தீப்பந்தம், காற்று, வலிய வந்த வலி, சங்கிலித் தோப்பு, கவித் தவிப்பு, இரும்பு மங்கை, தமிழ், பெரிய பிராட்டி, நினைந்திடுவோம், கிறிஸ்மஸ், ஏறு தழுவல், மாசில்லாதவன், அன்பால், காதலி, அங்காடி, தங்கச்சி, இலை உதிர் காலம், மண்ணும் மானமும் இறுதி ஊர்வலம், குழந்தை, வானவில், தமிழ்ப் புதுவருடம், சிட்டுக்குருவி, காடு, யுகம், உருமாற்றம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 47 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

## 16561

**பெரு வெடிப்பு மலைகள்.** எஸ்தர். சென்னை 600040: பூபாளம் புத்தகப் பண்ணை, அண்ணா நகர் மேற்கு, 1ஆவது பதிப்பு, மே 2022. (சென்னை 600 089: ரமணி பிரின்ட் சொல்யூஷன்).

96 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 22.5x15.5 சமீ., ISBN: 978-93-94414-00-6.

எஸ்தர் நுவரெலியா மாவட்டத்தின் அட்டன் -டிக்கோயா பிரதேசத்தில் சாஞ்சிமலை தோட்டத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். பேராதனை (அரசறிவியல் இளமாணிப் பட்டப்படிப்பு), கொழும்பு (பத்திரிகை இதழியல்) ஆகிய பல்கலைக்கழகங்களில் தன் உயர் கல்வியைப் பெற்றவர். “கால்பட்டு உடைந்த வானம்” இவரது முதலாவது கவிதை நூலாகும். எஸ்தரின் கவிதைகளின் ஒரு முக்கிய அம்சம் சமகாலத்தின் அரசியலைக் கவிதைகளில் இணைப்பதாகும். ஆயிரம் ரூபாய் சம்பளம் என்பது கடந்த மூன்று வருடங்களாக அரசியல்வாதிகளின் நிறைவேறாத வாக்குறுதிகளாகத் தொடர்கிறது. ஆயிரம் ரூபாய் சம்பளக் கனவுகள், சிறுத்தை, குளவி போன்றவற்றால் தொழிலாளருக்கு ஏற்படும் அபாயங்கள் என சமகாலப் பிரச்சினைகள் இவரது கவிதைகளில் உள்வாங்கப்பட்டுள்ளன. மொத்தம் 65 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 69955).

## 16562

**பேரன்பின் படிமங்கள்.** வேலணையூர் ரஜிந்தன் (இயற்பெயர்: பாலசுந்தரம் ரஜிந்தன்). நயினாதீவு: பாலசுந்தரம் ரஜிந்தன், ஆசிரியர், யா/நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட மகா வித்தியாலயம், 1ஆவது பதிப்பு, ஜனவரி 2022. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

x, 103 பக்கம், விலை: ரூபா 299., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-624-97399-2-5.

தமிழின் மீது கொண்ட ஆத்மீகப் பற்றுதலும் கவிதை மீது கொண்ட தீராக் காதலும் தனது ஐந்தாவது படைப்பான பேரன்பின் படிமங்கள் கவிதைத் தொகுப்பு

*உருவாகுவதற்கான ஊற்றுக்கண்ணாக அமைந்ததென்கிறார் இக்கவிஞர். "தீரா அன்பின் தேடலும், ஏக்கமும் கொண்டாட்டமும் நிறைந்தவை ரஜிந்தனின் இப்பேரன்பின் படிமங்கள். இவற்றின் நிகழ்கணங்கள் பலவற்றை நீங்கள் வாழ்வில் பலமுறை சந்தித்திருப்பீர்கள். அன்பினைக் காவி வரும் இக்கவிதைகளின் சொற்களுக்கு அலையின் லாவகம்" என்று இந்நூலிற்கான பின்னட்டைக் குறிப்பில் வரைந்திருக்கிறார் வேலணையூர் தாஸ். விசேடக் கல்வி ஆசிரியரான பாலசுந்தரம் ரஜிந்தன், ஈழத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வேலணையில் பிறந்து வேலணையூர் ரஜிந்தன் எனும் பெயரில் கவி படைத்து வருகின்றார். கவி ஆர்வம் கவித்துவம் பல காலமாக தன்னுள் அடைபட்டுக் கிடந்தாலும் கடந்த சில வருடங்களாக கவிதைத் துறையில் கலைஞனாக வலம் வரும் வேலணையூர் ரஜிந்தன் யாழ்.இலக்கிய குவியத்தினூடாக சமூகத்தில் கவிதை நிகழ்ச்சிகளில் அடிக்கடி பங்கெடுப்பதோடு, வேலணை துறையூர் கலை இலக்கிய வட்டத்தின் தலைவராகவும் இருந்து இளைய தலைமுறையினரை ஊக்குவித்தும் வருகின்றார். முகநூல் குழுமங்களில் அதிக கவிதைகளை எழுதி 150 இற்கு மேற்பட்ட பல சான்றிதழ்களும் பல விருதுகளும் பெற்று தனது கவிதைப் பயணத்தினை தீவிரமாகத் தொடர்கின்றார்.*

## 16563

**மகடூஉ 100: நூறு பெண் கவிஞர்களின் கவிதைகள்.** *அருணா சுந்தரராசன் (தொகுப்பாசிரியர்). மானாமதுரை 630-606: வளரி எழுத்துக் கூடம், 32, கீழத்தேர் வீதி, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2022. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*112 பக்கம், விலை: இந்திய ரூபா 125., அளவு: 22x15 சமீ.*

*"மகடூஉ" என்பது பெண்ணைக் குறிக்கும் சங்ககாலத்தில் நிலவிய ஒரு சொல்லாகும். உலகெங்கும் வாழும் பெண் கவிஞர்களின் 100 கவிதைகள் இத்தொகுப்பில் உள்ளன. இவர்களிடையே பின்வரும் இலங்கை எழுத்தாளர்களும் அடங்குகின்றனர். ஆதினி-திருக்கோணமலை (கொற்றவை நீயாகு), அநாமதேய அஞ்சலி (அவளும் அவள் சாயலும்), பாமினி செல்லத்துரை (இன்றைய மகிழ்வு), பா.கோசல்யா-இரக்குவானை (யார் நீ?), பாத்திமா நளீரா-கொழும்பு (புன்னகையின் கனவுகள்), ஜே.ஜே.சுகன்யா-யாழ்ப்பாணம் (தாய்மை), ஹிபானியா பௌசுல்-நேகம (என் பள்ளித்தோழி), எஸ்.யூ.கமர்ஜான் பீபீ (மங்கையர் மகிமை).*

## 16564

**மகரந்தத் தூறல் (ஹைக்கூ).** *ஐயாத்துரை பிரபு. ஆழியவளை: ஐயாத்துரை பிரபு, வேம்படி, உடுத்துறை வடக்கு, 1ஆவது பதிப்பு, ஒகஸ்ட் 2021. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).*

xiv, *76 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 18.5x12.5 சமீ.,* ISBN: *978-624-97770-1-9.*

*"உணர்வுகளின் உந்துதலால் கவி எழுதத் தொடங்கி, என் மனதுக்குப் பிடித்துப் போனதே ஹைக்கூ கவிதைகள். இயற்கையையும் சமூகத்தையும் பாடுபொருளாக அதிகம் கொண்டமைந்த இக்கவிதை வடிவம் மூன்று வரிகளில் பல கருத்துக்களை*

ஆழமாகக் கூறுவதாக அமைந்த எளிமையான வடிவம். அவசர உலகில் நீண்ட கவிதைகளை வாசிக்கும் வாசகர் குறைந்த குறுங்கவிதைகளைப் படித்திடத் துடிக்கும் வாசக இதயங்களுக்காக உருவானதே இந்நூலாகும்" (ஆசிரியர், என்னுரையில்).

## 16565

**மணிக்கவிகள்.** வி.கந்தவனம். கனடா: கவிஞர் வி.கந்தவனம் மணிவிழாக் குழு, ரொறன்ரோ, ஒன்ராரியோ, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 1994. (அச்சக விபரம் தரப்படவில்லை).

16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17x11.5 சமீ.

கவிஞர் வி.கந்தவனம் அவர்களின் மணிவிழா வெளியீட்டு வரிசையில் நான்காவதாக வெளிவரும் பிரசுரம் இது. அர்த்தமுள்ள அறுபது ஆண்டுகளின் நிறைவாக இங்கே அர்த்தமுள்ள அறுபது கவிமணிகள் இடம்பெற்றுள்ளன. உருவகச் சிறப்பில் மாத்திரை போன்ற இவை உள்ளடக்கத்தில் காத்திரம் கொண்டவை. இந்த மணிக் கவிகள் 1993இல் தாயகம் சஞ்சிகையில் வாராவாரம் தொடராக வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாதிரிக்குச் சில மணிக்கவிகள்:

"உள்ளப் பக்குவ உயர்வினை நல்கா
வெள்ளைக் கல்வி வேண்டுவ தார்க்கு". (4)

"பார்மகள் இழந்தாள் பகுத்தறி வற்ற
போர்களின் விளைவால் பூவும் பொட்டும்" (8)

## 16566

**மரபின் விழுதுகள்.** உடுவிலூர் கலா (இயற்பெயர்: ரவீந்திரகலா ஸ்ரீபாஸ்கரன்). யாழ்ப்பாணம்: திருமதி ரவீந்திரகலா ஸ்ரீபாஸ்கரன், 2ஆவது லவ் லேன், உடுவில், மானிப்பாய், 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2022. (யாழ்ப்பாணம்: மெகா பதிப்பகம், 41, றக்கா வீதி, கச்சேரியடி).

xvi, 64 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 20x14 சமீ., ISBN: 978-624-97879-8-8.

சமூகத்தின் பல்வேறு அம்சங்களையும் பிரச்சினைகளையும் இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் தழுவிச் செல்கின்றன. சமூகத்தில் புரையோடிப் போன பிரச்சினைகள் தொடர்பிலும் புதிதாகத் தோன்றிய சமகாலப் பிரச்சினைகளிலும் உடுவிலூர் கலாவுக்குள்ள ஈடுபாடு மரபுக் கவிதை வடிவங்களிலும் மரபு சாரா வடிவங்களிலும் எழுதப்பட்டுள்ள அவரது கவிதைகளில் திறம்பட வெளிப்படுகின்றன. குறள்வெண் செந்துறை (22 கவிதைகள்), நிலைமண்டில ஆசிரியப்பா (1 கவிதை), நேரிசை ஆசிரியப்பா (2 கவிதைகள்), அறுசீர் விருத்தம் (18 கவிதைகள்), எழுசீர் விருத்தம் (1 கவிதை), வஞ்சி விருத்தம் (3 கவிதைகள்), பதினாறு சீர் விருத்தம் (1 கவிதை), கலி விருத்தம் (4 கவிதைகள்), வெண்கலிப்பா (1 கவிதை), சிந்தியல் நேரிசை வெண்பா (2 கவிதைகள்), குறள் வெண்பா (11 கவிதைகள்), இரட்டைக்கிளவி வெண்பா (1 கவிதை), இருகறள் வெண்பா (1 கவிதை), இன்னிசை வெண்பா

(2 கவிதைகள்), பஃறொடை வெண்பா (2 கவிதைகள்), ஒருவிகற்ப இன்னிசை வெண்பா (1 கவிதை), வஞ்சித்துறை வெண்பா (1 கவிதை), குறட்டாழிசை (2 கவிதைகள்), கழிநெடிப்பா (1 கவிதை), கட்டளைக் கலித்துறை (2 கவிதைகள்), கட்டளை வெண்பா (1 கவிதை) என மொத்தம் 80கவிதைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது.

## 16567

**மல்லிகை மொழி கவிதைகள்.** ஆர்த்திகா சுவேந்திரன். யாழ்ப்பாணம்: ஆர்த்திகா சுவேந்திரன், தொல்புரம் கிழக்கு, சுழிபுரம், 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2021. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

xvi, 329 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21x15.5 சமீ., ISBN: 978-624-98245-0-8.

இந்நூலில் கொஞ்சம் வணக்கம் (7 கவிதைகள்), கொஞ்சம் தமிழ் (7 கவிதைகள்), கொஞ்சம் காதல் (21 கவிதைகள்), கொஞ்சம் இயற்கை (21 கவிதைகள்), கொஞ்சம் கணிதம் (2 கவிதைகள்), கொஞ்சம் கவிதை (8 கவிதைகள்), கொஞ்சம் பெண்மை (17 கவிதைகள்), கொஞ்சம் சமூகம் (19 கவிதைகள்), கொஞ்சம் கானல் (12 கவிதைகள்), கொஞ்சம் வலி (40 கவிதைகள்), கொஞ்சம் நம்பிக்கை (17 கவிதைகள்) எனப் பதினொரு பிரிவுகளின் கீழ் 171 கவிதைகளைப் பதிவுசெய்துள்ளார். "ஆர்த்திகா சுவேந்திரன் மொரட்டுவை பல்கலைக்கழக மாணவியாக உயர் கல்வியைக் கற்றுவரும் வேளையில் இக்கவிதைத் தொகுதியை வெளியிட்டுள்ளார். தனது கல்வித்துறைச் செயற்பாடுகளின் வெளிப்பாடாகவும், மனிதத்துவ சமுதாய வாழ்வின் அழியாத கோலங்களாகவும் இந்நூலின் கவித்துளிகளை அழகாக வெளிப்படுத்தியுள்ளார். மனித தத்துவம், அன்பு, தன்னம்பிக்கை, நீதி, சாதனை, நேர்மை, தூய்மை, ஒற்றுமை என்பன வெற்றியடையவும் மானுடத்தின் முழுமையைக் காணத்துடிக்கும் எமது இலக்கியப் பண்பாட்டின் செழுமைக்கும் இந்நூல் வெளியீடு உரமூட்டுகின்றது." (பேராசிரியர் கலாநிதி பா.தனபாலன், பின்னட்டைக் குறிப்பு).

## 16568

**மீட்பின் சுவடுகள்: கவிதைத் தொகுதி.** சூரிய நிலா (இயற்பெயர்: ஆ.ஜென்சன் றொனால்ட்). யாழ்ப்பாணம்: பிஷப் சௌந்தரம் மீடியா சென்டர், 1ஆவது பதிப்பு, மார்கழி 2018. (மிருசுவில்: மாதுளன் பதிப்பகம், உசன் சந்தி).

xv, (14), 195 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x15.5 சமீ.

ஊடகவியலாளராகவும் எழுத்தாளராகவும் அறியப்பெற்ற கவிஞர் சூரியநிலாவின் இக்கவிதைத் தொகுதி மனுமகன் மலர்வு, ஆயத்தம், போதனை, எருசலேமிற்குள், பாடுகள், விண்ணேற்றம் ஆகிய ஆறு பிரிவுகளின் கீழ் (சுவடுகள்) வகுத்துத் தரப்பட்டுள்ளது. இக்கவிதைகளின் முற்பகுதி 2001ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டு வரை "மீட்பின் சுவடுகள்" என்னும் பெயரில் "பாதுகாவலன்" பத்திரிகையில் கவிதை நடையில் அமைந்த இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறாக எழுதப் பட்டது. பல்வேறு காரணங்களால் அக்கவிதைத் தொடர் முற்றுப்பெறாத நிலையில்

அவற்றை தொடர்ந்து எழுதி முழுமைப்படுத்தி தனிநூலாகத் தற்போது வெளியிட்டிருக்கிறார்.

### 16569

**மீண்டுமொரு முறை: கவிதைகள்.** க.அன்பழகன். திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2011. (கொழும்பு 12: நிசான் பிரின்டர்ஸ், 64 N, பீர் சாஹிபு வீதி).

vii, 48 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-53372-6-7.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைப் பட்டதாரியான அன்பழகனின் முதற் தொகுப்பாக வெளிவரும் இந்நூலில் மானிடத்தின் அவலங்களையும் வாழ்க்கை நிகழ்வுகளையும் சித்திரித்துள்ளார். இத்தொகுப்பில் இவர் எழுதிய இன்றும் நினைவில், நகர வாழ்வு, கெட்டுப்போன வாழ்வு, எரிந்துபோன கிராமம், முற்றுகை, என்று மாறும் இந்நிலை, அன்புள்ள அப்பா, அன்பான அண்ணனுக்கு, இன்னுமொரு பிரிவு, இன்றைய இளைஞன், அழகியா?, காதல் என்பது, தாகம், காத்திருப்பேன், கறுப்பு ஜுலை, செத்துப் பிழைக்கும் சமாதானம், மிஞ்சி நிற்பது, பொறுத்திரு, சர்வாதிகாரி, தேவையா இவ்வுலகுக்கு, பொய்மையின் பொய்மை, குஜராத் செய்த குற்றமென்ன?, பூமிக்கொரு வேண்டுகோள், அலையாதே, கனவு மெய்ப்பட்டது, சதி, கானல் கோலம் ஆகிய கவிதைகள் இடம்பெற்றுள்ளன. கவிஞர் கணபதிப்பிள்ளை அன்பழகன் ஆலங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் கலாசார அலுவலராகக் கடமையாற்றுகின்றார்.

### 16570

**மீனும் துள்ள.** ரஜிதா. யாழ்ப்பாணம்: ரஜிதா, குடத்தனை மேற்கு, விளாங்காடு, 1ஆவது பதிப்பு, மே 2022. (நெல்லியடி: பரணி அச்சகம், நெல்லியடி மத்திய கல்லூரி வீதி).

20 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 18x12.5 சமீ.

தலைப்பிடப்படாத 17 கவிதைகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. குடத்தனை மேற்கு விளாங்காட்டைச் சேர்ந்த நூலாசிரியர் மெதடிஸ்ட் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் பயின்றவர். தற்போது இவர் ஒரு இணைய ஊடக நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். இவரது முன்னைய நூலாக "மணற்கும்பி" என்ற கவிதைத் தொகுதி 2019இல் வெளிவந்துள்ளது.

### 16571

**மூச்சுக் காற்றின் முணுமுணுப்பு: கவிதைகள்.** ராணி சீதரன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7 (ப.எ.4), தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2019. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

vi, 93 பக்கம், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 19x13 சமீ.

இந்தக் கவிதைத் தொகுதியில் இன உணர்வும், அது சார்ந்த யுத்த வடுக்களும், சமூக நோக்கும் கலந்த உணர்ச்சி வெளிப்பாடுகள் கவிதைகளாக வடிவம் பெற்றுள்ளன. பொழுதே நீயும் நில்லாயோ?, கிராமத்து நினைவு, போதிமரமும் பொங்கிய பாலும், தாய்மை, ஆசிரியம், கணக்கெடுப்பு, இருந்துவிடு அங்கே, உயிரின் தேடல், பூத்தது புதுவருஷம், எழுந்திடுக, உயிர்ச் சுமை, கனவு, போர், மறுபடி எழுவர், நினைவுகளில் தோய்தல், பாதை திறக்காதோ?, ஓதுவது வேதம், முதுமை, திருவிழா, மழை, சுயம்வரத் தாலி, இசைதல், "ஏ"க்கா ஏக்கம், புலமைப் பரிசில் பரீட்சை, மூச்சுக்காற்றின் முணுமுணுப்பு, வக்கிரப் பூக்கள், படைப்பு, திறவுகோல், வாழ்க்கை, காதல் புத்தகம், புகலிடப் பரீட்சை, ஏதிலியர் கழகம், உறவும் நட்பும், கவிதை, தமிழின் உறவு, பர்தா அணிந்த பாவை, மரணத்தின் வலி, பொழுதும் புலராதோ?, ஏழ்மை, அகால மரணம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 40 கவிதைகள் இத்தொகுப்பில் உள்ளன. எழுத்தாளர் ராணி சீதரன் கல்விப் புலத்தில் ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்து ஆசிரிய ஆலோசகராகவும், தேசிய கல்வி நிறுவகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் கடமையாற்றிய காலங்களில் தமிழ் ஆசிரியர்கள் தமது வகுப்பறைக் கற்பித்தலை மேம்படுத்துவதற்கு சிறந்த வழிகாட்டியாக இருந்துள்ளார்.

## 16572

**மூதன்னையின் பாடல்.** சி.கிருஷ்ணபிரியன். கொழும்பு 6: தேசிய கலை இலக்கியப் பேரவை, 121, ஹம்டன் லேன், வெள்ளவத்தை, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2021. (கொழும்பு: வேர்ள்ட் விஷன் கிராப்பிக்ஸ்).

12+82 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-624-9871-30-4.

மலையக உழைக்கும் மக்களின் விடுதலைக்கான தளத்திலிருந்து தேச விடுதலை, மானுட விடுதலை என விரியும் கவிஞர் சி.கிருஷ்ணபிரியனின் "மூதன்னையின் பாடல்" என்னும் இந்நூல் தேசிய கலை இலக்கியப் பேரவையின் 120 ஆவது நூலாக வெளிவந்துள்ளது. கவிஞர் சி. கிருஷ்ணபிரியன் மலையகத்தில் ஒரு இடதுசாரி குடும்பத்திலிருந்து உதித்தவர். கவிஞருடைய தந்தை தோழர் சிவசூரிய நாராயணசாமி இயற்கை எய்திய ஓராண்டு நினைவாக வெளிவந்த கவிஞரின் "வேரின் பிரசவங்கள்" என்ற முதலாவது கவிதைத் தொகுதி உழைக்கும் வர்க்கத்தின் உணர்வுகளுக்கு மதிப்பூட்டுவதாக அமைந்திருந்தது. அவ்வாறே "மூதன்னையின் பாடல்" கவிதைகளும் அதே உழைக்கும் வர்க்கத்தின் வலி மிகுந்த முன்னேற்றப் பாதைக்கு வழி காட்டுவனவாய் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. கடின உழைப்பை மட்டுமே தம் வாழ்வில் கண்டறிந்திருக்கும் மலையகத்தின் தொழி லாளர் வர்க்கம் எதிர் நோக்குகின்ற சவால்களையும் சஞ்சலங்களையும் இவரது கவிதைகள் உரக்கச் சொல்கின்றன. கவிதைகள் அனைத்தும் சம கால அரசியல், சமூக, பொருளாதார, பெருந்தொற்று நிகழ்வுகளின் சாராம்சமாக அவற்றின் தாக்கங்களை ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாக, அடக்கு முறைக்கெதிராகப் பேசிச் செல்கின்றன. இருந்த போதிலும் பல கவிதைகள் மனித நேயம் சார்ந்தவை யாய் அன்பு, பாசம், காதல், குழந்தைகள் உலகு, போரின் விளைவுகள், போரின் அவலங்கள், அமைதியின் தேவை, ஏகாதிபத்தியங்களின் தான் தோன்றித்தனங்கள்

*எனப் பலதையும் தொட்டுச் செல்வனவாயும் அமைந்திருக்கின்றன. "இக் கவிதைகளில் பெருமளவும் அரசியல் பேசுவன தான். அவை சமகால அரசியல் சமூக பொருளாதார பெருந்தொற்று நிகழ்வுகளின் மீதான எதிர்வினையாக அமைந்துள்ளன. மெல்லுணர்வு சார்ந்த கவிதைகளும் உள்ளன. அவை மனிதனின் அகவெழுச்சி, பிரிவு, நினைவு, வெறுப்பு, காதல், அன்பு போன்ற மெல்லுணர்வு சார்ந்தவை. பெருமளவும் அரசியலைப் பேசுகிற ஒடுக்கப்பட்டவர் பக்கம் நின்று ஒடுக்குமுறைக்கெதிராக பேசுகிற மனம் தான் வாய்க்கப் பெற்றிருக்கிறேன். அரசியல் கவிதைகளில் என்னுடைய அரசியல் சார்பும் வர்க்க நிலைப்பாடும் வெளிப்படுமாறு தான் எழுதியுள்ளேன். நடுநிலைமை எனும் வேடத்தை தரிப்பதில்லை." (சி.கிருஷ்ணபிரியன், பின்னட்டைக் குறிப்பு).*

## 16573

**மூன்றாம் உலக யுத்தம்: சஜாவின் கவிதைகள்.** *என்.எம்.சஜாத். வவுனியா: என்.எம்.சஜாத், அபிவிருத்தி உத்தியோகத்தர், வவுனியா பிரதேசச் செயலகம், 1ஆவது பதிப்பு, 2021. (வவுனியா: ஜீ.எச். அச்சுப் பதிப்பகம், இல.13/1, 1ஆம் ஒழுங்கை, பட்டாணிச்சூர்).*

xxii, *86 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 18.5*x*12.5 சமீ.,* ISBN: *978-624-96952-0-7.*

*உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான யுத்தங்கள் நடைபெற்றபோதும் உலக மகா யுத்தங்கள் என்ற வரையறைக்குள் அடக்கப்பட்டவை 1914-1918இல் நிகழ்ந்த முதலாம் உலக யுத்தமும் 1939-1945 காலகட்டத்தில் நிகழ்ந்த இரண்டாம் உலக யுத்தமுமாகும். இவை இரண்டும் ஐரோப்பாக் கண்டத்தில் உருவானபோதிலும் கடல் கடந்து சகல கண்டங்களும் இந்த யுத்தத்தில் பங்கேற்றதால் உலகயுத்தம் எனப் பெயர் பெற்றன. கடந்த மூன்று தசாப்தங்களாக ஈழத்திலும் உரிமைக்காக நடந்த யுத்தத்தில் உலகம் முழுவதிலும் உள்ள தமிழ்மக்கள் நேரடியாகவும் மறை முகமாகவும் தொடர்புபட்டிருந்தமையாலும் இதற்கு எதிரான யுத்தத்தில் உலக நாடுகள் பலவும் கைகோர்த்து நின்றமையாலும் இதனையும் உலகமகா யுத்தம் எனக்காண்கிறார் இக் கவிஞர். கடந்த 2019லும் கத்தியின்றி இரத்தமின்றி சத்தம் இன்றி அமெரிக்க வல்லரசு உள்ளிட்ட உலக நாடுகளையே அதிரவைத்த கொரோனா என்னும் நுண்ணுயிர் கிருமிகளின் தாக்குதலினால் இலட்சக் கணக்கான உயிர்கள் பலியெடுக்கப்பட அதற்கு எதிரான தற்காப்புப் போரில் உலகமே ஒரு குடையின் கீழ் அணிதிரண்டு நின்றமையால் இதனையும் ஆசிரியர் உலகமகா யுத்தமாகக் காண்கிறார். இந்நூலிலுள்ள கவிதைகள் இவ்விரண்டையும் தொட்டுச் செல்கின்றன. ஏற்கெனவே முகநூலில் பதிவுசெய்யப்பட்ட இக்கவிதைகள் தற்போது நூலுருவிலும் வெளிவந்துள்ளன. "உமைப்பாட மாட்டேனா" என்ற கவிதை தொடங்கி "என்ன நினைத்தாள்" என்ற கவிதை ஈறாக மொத்தம் 35 கவிதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவப் பட்டம் பெற்றவர். வவுனியா பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றுகின்றார்.*

## 16574

**மூன்றாவது இதயம்: கவிதைத் தொகுதி.** நாச்சியாதீவு பர்வீன். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2014. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

xii, 56 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-52526-0-7.

ஜீவநதியின் 36ஆவது வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது. பர்வீனின் படைப்புக்கள் சமூகத்தின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வந்து அவற்றிற்குத் தீர்வுகாணும் வழிவகைகளை கூறுபவைகளாக சமூக நோக்கோடு அமைந்துள்ள படைப்புகளாகும். இவரது படைப்புகளில் நில, மனித நேசிப்பு அதிகமாகக் காணப்படுவது சிறப்பு. கவிதைக்குரிய பண்புகளோடு கவிதைகளைப் படைத்துவரும் இளம்படைப்பாளர்களில் பர்வீன் அதீத கவனத்துக்குரியவர். நாச்சியாதீவு என்ற கிராமத்தில் பிறந்த இவர் தனது படைப்புகளால் அந்தக் கிராமத்துக்கு பெருமை சேர்த்து வருகின்றார். ஆசான்களுக்கு ஒரு அஞ்சல், மீனவனின் ஒரு நாள், நாச்சியா தீவு மான்மியம், செத்துப்போன காதலின் சாகாத நினைவுகள், மனைவி எனும் உயிர், காதலின் கல்வெட்டு, மூத்தம்மா, உம்மா என்னும் தேவதையே, கவலை, சொல்ல மறந்த கதை, கனவு கலைந்து போனதம்மா, அந்த ஒரு நாள், தலைப்பில்லாத என் கவிதை, மூன்றாவது இதயம், அரசமர நிழலில், நதிகளின் மரணம், என் மரணம், முருங்கை மரத்தின் கடைசி நாள், விவசாயி, பழமில்லா மரம், அந்தப் புளியமரம், ஒற்றைப் பனை, ஒற்றை இரவும் ஊமைக் காதலும், பொல்லாத கலகக் காரன், ஒரு துயரத்தின் மொழி, சூரியன் பற்றி, இன்னொரு நிஜம், யதார்த்தத்தின் கோடுகள், குப்பைகள், என் எதிரிகளுக்கு, காசா பள்ளத்தாக்கின் குருதி சிந்தி வாழ்விழக்கும் ஒரு சகோதரனுக்கு ஆகிய கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 16575

**மெய்யெனப் பெய்யும் பொய்.** க.பிரேம்சங்கர். யாழ்ப்பாணம்: க.பிரேம்சங்கர், சுன்னாகம், 1ஆவது பதிப்பு, ஆவணி 2022. (யாழ்ப்பாணம்: ஜெயஸ்ரீ பிறின்டர்ஸ், இல. 34, பிறவுன் வீதி).

xii, 84 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x16 சமீ., ISBN: 978-624-98971-0-6.

"லௌகீக மயக்கத்திலும் அது தந்த விரக்தியில் ஆன்மீகத் தேடலும் நிறைந்த சிக்கலான வாழ்வில் மெய்யென நினைத்ததெல்லாம் பொய்தானோ? என்ற கேள்வியோடு லண்டனில் ஓய்வின்றிய உழைப்போடு ஓடும் புகையிரதம், சமையற்கட்டு, வேலைத்தளம் என்று பல இடங்களில் அவ்வப்போது கிடைக்கும் நேரத்தில் அந்த தேசத்தின் நிசங்களைத் தடவியபடி என்னாட்டு ருசிகளையும் உள்ளடக்கி கவிதையாய் உதிர்ந்து நிறைகிறது இந்தப் புத்தகம்" (என்னுரையில் க.பிரேம்சங்கர்). கவிக்கூத்தன் பிரேம்சங்கர் எழுதிய 83 கவிதைகளின் தொகுப்பாக

இந்நூல் மலர்ந்துள்ளது. சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் புலம்பெயர்ந்து தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வாழ்ந்து வருகிறார்.

## 16576

**மொக்குள்: பாடல், கவிதைத் தொகுப்பு.** மறவன்புலோ செல்லம் அம்பலவாணர். கொழும்பு 15: செ.அம்பலவாணர், 478/28, அளுத்மாவத்தை வீதி, 1ஆவது பதிப்பு, 2021. (கொழும்பு 6: குமரன் பதிப்பகம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

xx, 80 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 22.5x15.5 சமீ., ISBN: 978-955-42626-9-0.

இணையத்தின் வழியாக பன்னாட்டு கவிதைக் குழுமங்களுக்கும், அவர்களால் நடாத்தப்பெற்ற கவிதைப் போட்டிகளுக்கும் சமர்ப்பித்த படைப்பாக்கங்களின் தேர்ந்த தொகுப்பாக ஐம்பது கவிதைகளை உள்ளடக்கி ஆசிரியர் இந்நூலை உருவாக்கியுள்ளார். ஏற்கெனவே "முகை" என்ற பெயரில் 50 கவிதைகளுடன் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவை சபையினரிடம் பதிப்பிற்காக வழங்கப்பட்ட நூல் இன்னமும் பிரசுரமாகாத நிலையில், மலரின் வளர்ச்சிப் பருவத்தின் அடுத்த கட்டமான "மொக்குள்" பருவத்தை முன்நிறுத்தி இந்நூலுக்கு அப்பெயரை ஆசிரியர் வைத்திருக்கிறார். இத்தொகுப்பில் உள்ள கவிதைகள், தமிழன்னை, சமூகம், மெட்டுக்குப் பாட்டு, கவிதையில் கலைச்சொற்கள், கிராமத்துப் பாடல்கள், இணையவழிக் கவியரங்கம் ஆகிய ஆறு பிரிவுகளின் கீழ் ஒழுங்குபடுத்தித் தரப்பட்டுள்ளன.

## 16577

**மௌனத்தின் மீது வேறொருவன் (கவிதைகள்).** கருணாகரன். யாழ்ப்பாணம்: தாயதி வெளியீடு, சமூக செயலூக்கத்துக்கான முன்னோடி, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2021. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(8), 107 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 22.5x14 சமீ., ISBN: 978-81-90789-14-1.

கவிஞர் கருணாகரன் பன்முகத் தளங்களில் இயங்கிவருபவர். இவரைப் போலவே இவருடைய கவிதைகளும் பரவலான அறிமுகத்தைப் பெற்றவை. ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகியிருக்கும் மக்களைக் குறித்து 1980களிலிருந்தே தொடர்ச்சியாக சிந்தித்தும் எழுதியும் வருபவர். தான் வாழும் காலத்தின் குரலாக ஒலித்துக் கொண்டிருப்பவர். அவரது கவிதைகளுடன் தொடர்ச்சியாகப் பயணிக்கும் வாசகர்களால் இதனை கூர்ந்து அவதானிக்க முடியும். தனது சமூகத்தைப் போலவே மற்றச் சமூகங்களின் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக அவர் இருக்கின்றார். தான் வாழும் காலத்தைச் சூழ்ந்திருக்கின்ற அச்சத்தையும் நெருக்கடியையும் தாண்டி கவிஞர் கருணாகரனின் கவிதைகள், அதிகாரங்களை தொடர்ச்சியாக எதிர்த்தே வருகின்றன. அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படும் சமூகங்களின் குரல்கள் அவரது கவிதைகளில் தீவிரமாக ஒலிக்கின்றன. அச்சமூகங்களின் சிதிலங்களை கவிஞர் கருணாகரன், தன் இரத்தத்தின் ஊடுபாய்வாக தன் படைப்புக்களின் வழியாக நகர்த்திக்கொண்டே இருக்கின்றார்.

## 16578

**மௌனம் தின்னும் உடல்.** திலகா அழகு. சென்னை 600093: பூவரசி வெளியீடு, இல. 2, 2வது தளம், முதலாவது குறுக்குத் தெரு, புஷ்பா கொலனி, சாலிக்கிராமம், 1ஆவது பதிப்பு, மார்ச் 2020. (சென்னை 600093: பூவரசி பதிப்பகம், இல. 2, 2ஆவது தளம், முதலாவது குறுக்குத் தெரு, புஷ்பா கொலனி, சாலிக்கிராமம்).

96 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-93-81322-81-8.

வாழ்தலின் மீதான விருப்பமும் சவால்களை எதிர்கொள்ளும் துணிச்சலும் கொண்ட பல பெண்களை அடையாளம் காட்டாது, ஒரே பெண்ணின் பல மாதிரிகளை இக்கவிதைகள் முன்நிறுத்துகின்றன. காதலையும் காமத்தையும் தயக்கமின்றிப் பேசும் திலகா அழகுவின் கவிதைக்குள் இரவுகளும் சாரைப் பாம்புகளும் மௌனத்தின் இரைச்சல்களும் அசைகின்றன. அலைகின்றன. மூச்சிரைத்துத் திரிகின்றன. இவற்றை வாசிக்கும்போது திலகா அழகுவிடம் சொற்கள் லாவகமாக வந்து வரிசை கட்டுவதையும் நீங்கள் உணர்ந்திருக்கக்கூடும். எண்ணிக்கையில் பெரும் அளவினதாக இருக்கும் இவ்விருத்தல் கவிதைகளைத் தாண்டி வேறு பொருண்மைகளைப் பேசும் கவிதைகளும் இருக்கின்றன. குடும்ப உறவுகளின் பாசம் அல்லது இன்மை, சூழலில் இருக்கும் மனிதர்கள் மீதான அன்பு அல்லது கோபம் போன்றனவற்றையும் கவிதை வடிவம் சாத்தியப்பட்ட நிலையில் எழுதிப்பார்த்திருக்கிறார். எதையும் நான்-நீ என்னும் எளிய கவிதை வடிவத்தில் எழுதிக்காட்டும் திலகா அழகுவின் முதல் தொகுப்பு இது. 60 கவிதைகளைக் கொண்டுள்ளது. மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட திலகா அழகு மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் கல்லூரியின் பழைய மாணவி யாவார். (பேராசிரியர் அ.ராமசாமி, கருத்துரையில்).

## 16579

**யசோதரையின் வீடு: றியலாஸ் கவிதைகள்.** றியலாஸ் (இயற்பெயர்: அப்துல் லத்தீப் றியலாஸ்). மருதமுனை: புதுப்புனைவு இலக்கிய வட்டம், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2020. (கொழும்பு: மிலேனியம் கிராப்பிக்ஸ்).

75 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x15.5 சமீ., ISBN: 978-955-7733-05-0.

றியலாஸின் "யசோதரையின் வீடு" கவிதை நிலப்பரப்பில் புது வெளியாய் எதிர்க் கருத்தியலை உருவாக்கும் பிரதி வகைகளில் கவனயீர்ப்பிற்குரியது. வெறுமையான எழுத்தில் மட்டும் தன்னுடைய கருத்துக்களை புதைத்து விட்டு செயற்பாட்டு வெளியில் சோம்பேறிகளாகிவிடுவது கவிதைகளின் தோல்வியாகவேயிருக்கிறது. றியலாஸ் புறவயத்தின் மீது பெரும் பார்வை கொண்டவராகவே காணப்படுகிறார். "யசோதரையின் வீடு சுதந்திரமானது. புனைவுகள் நிரம்பியது. ஒவ்வொரு புனை விலும் பல்வேறு சம்பவங்களுடன் பறவைகள் அமர்ந்திருக்கின்றன. தாம் சொல்லும் சம்பவங்கள் மீது நிகழ்த்தப்படும் வாசிப்புகளுக்கேற்ப அவை பல்திசைகளிலும் தம் இறக்கைகளை விரித்துப் பறக்க ஆரம்பிக்கின்றன. அப்பறத்தல்களின் ஊடாக தம் அரசியல் முகங்களையும் அவை வரைந்து காட்ட முனைகின்றன. இவற்றை

எளிமையாகவும் அழகியலாகவும் சாத்தியப்படுத்துகின்றது கவிஞர் றியலாஸின் மொழி". (ஆபித், பின்னட்டைக் குறிப்பு).

### 16580

**யாருக்கோ பெய்யும் மழை (கவிதைகள்).** தாட்சாயணி (திருமதி பிரேமினி பொன்னம்பலம்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

xii, 160 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-5881-25-3.

இத்தொகுப்பில் "மலர்" என்ற பிரிவில் 38 கவிதைகளும், "முகை" என்ற பிரிவில் 17 கவிதைகளும், "மொட்டு" என்ற பிரிவில் 17 கவிதைகளும், "அரும்பு" என்ற பிரிவில் 22 கவிதைகளுமாக மொத்தம் 94 கவிதைகள் தேர்ந்து தொகுக்கப்பட்டுள்ளன. "கவிதை ஒரு இளவரசி போல நான் அணுக முடியாத் தூரத்தில் எப்போதும் இருப்பதாகவே எனக்குத் தோன்றிக் கொண்டிருந்தது. எழுதிய கவிதைகள் எங்கெங்கோ சிதறிக் கிடந்தன. எனது கவிதைகளை நானே திரும்பிப் பார்க்க வில்லை. வாழ்க்கை ஓய்வொழிச்சலின்றி என்னை எங்கெங்கோ இழுத்துச் சென்று கொண்டிருந்தது. எதிர்பாராத கோவிட் நோய்த்தொற்று பதினான்கு நாள்களுக்கு என்னை நாலு சுவர்களுக்குள் முடங்க வைத்தபோது, கவிதை இளவரசி சாவதானமாய் என்னோடு பேசத் தொடங்கினாள். இதுவரைக்குமான எனது கவிதைகள் எங்கே? மனது பதறத் தேடத் தொடங்கினேன். இதுகாலவரையில் எழுதித் தீர்த்த கவிதைகளை வடிகட்டியெடுத்தேன். எழுத்தின் அலைவரிசையில் எனக்கான முதல் அங்கீகாரம் கவிதையல்லவா? இத்தனை ஆண்டுகளிலும் யாருக்காகவோ பெய்து கொண்டிருந்த மழைத்திவலைகளில் என் கரங்களில் அள்ள முடிந்தவற்றை அள்ளியெடுத்திருக்கிறேன். அவற்றைப் பருகும் போது உங்களுக்கு மழையின் சுவை கிடைப்பின் என்னைப் பாக்கியசாலி என்பேன்" (தாட்சாயணி, பின்னட்டைக் குறிப்பு)

### 16581

**யானைத் தண்ணீர்.** அகமது ஃபைசல். கிருஷ்ணகிரி மாவட்டம்: புது எழுத்து, 2/203, அண்ணா நகர், காவேரிப் பட்டினம் 635112, 1ஆவது பதிப்பு, மார்ச் 2022. (யாழ்ப்பாணம்: ஆகாயம் பதிப்பகம், இமையாணன், உடுப்பிட்டி).

xix, 150 பக்கம், விலை: ரூபா 550., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-624-98971-0-6.

கிழக்கிலங்கையில் பொத்துவில் ஊரில் பிறந்து வாழும் அகமது ஃபைசல், மூன்று தசாம்சங்களாக எழுதி வருகிறார். தமிழில் இதுவரை 5 கவிதைத் தொகுதிகளும் ஒரு சிறுகதைத் தொகுப்பும், ஒரு குறுநாவலும் வெளிவந்துள்ளன. இவரது "ஒரு தேனீர்-ஒரு குவளை" என்ற சிறுகதை நூல் 2021இன் கிழக்கு மாகாண சாகித்திய விருது பெற்றுள்ளது. இது இவரது ஐந்தாவது கவிதை நூலாகும்.

## 16582

**வரிகளில் நழுவும் கடல்.** கே.எல்.நப்லா. தெகிவளை: அ - பதிப்பகம், 05, Middle Way, Off Kawdana Broadway, 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2019. (ராஜகிரிய: டிசைன் டெஸ்க்).

xii, 71 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-624-5139-00-2.

நப்லா இலங்கையில் அட்டாளைச்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மெய்யியல் மற்றும் உளவியல், உளவளத்துணை கலைமாணிப் பட்டதாரி. தற்போது துணை விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இவரது முதலாவது கவிதைத் தொகுப்பு "கவிதை என்றான கிறுக்கல்கள்" 2013இல் வெளிவந்தது. இது இவரது இரண்டாவது தொகுப்பாகும். இத்தொகுப்பில் "முடிவில் ஒரு நிழல்" என்ற கவிதை தொடங்கி "நிழலை வரையத் தெரியும் எனக்கு" என்ற கவிதை ஈறாக நப்லா எழுதிய 52 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

## 16583

**வானும் மண்ணும் நம் வசமே: தன்முனைக் கவிதைகள்.** நஸீரா எஸ்.ஆப்தீன். ஏறாவூர்: புத்தொளி வெளியீடு, பழைய தபாலக வீதி, ஒட்டமாவடி-01, 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2020. (மட்டக்களப்பு: காந்தள் அச்சகம், புதுக்குடியிருப்பு).

xiii, 90 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 300., அளவு: 21x15 சமீ., ISBN: 978-624-96068-1-4.

இலங்கைக் கல்வித்துறையில் ஆசிரியராகவும் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றியவர் நஸீராஆப்தீன். புதிய இலக்கிய வடிவங்களைத் தேடிக் கற்பதிலும் ஆய்வு செய்வதிலும் ஆர்வமுடைய இவர், தமிழில் புதுவரவுப் பாவாக அறியப்பெற்ற ஜப்பானிய ஹைக்கூவைக் கற்று அதுபற்றிய தனது குறிப்புக்களை "ஹைக்கூவில் கரைவோமா?" என்ற நூலாக வெளியிட்டிருந்தவர். தன்முனைக் கவிதைத் தொகுதி யாக வெளிவந்திருக்கும் இந்நூல், "நானிலு" என்ற தெலுங்கு மொழிக் கவிதை வடிவமாகும். நான்கு வரிகள், வரிக்குஅதிக பட்சம் மூன்று சொற்கள், வரிகளில் முதல் இரண்டு வரிகள் ஒருநிகழ்ச்சியை அல்லது காட்சியை புலப்படுத்துவதாக அமைய ஏனைய இரண்டு வரிகளும் முந்திய வரிகளோடு தொடர்புபட்ட சாதக மான விடயத்தையோ அல்லது முரண்பட்ட விடயத்தையோ தருவதாக தன்முனைப் பாக்கள் அமையும். இந்நூல் 175 தன்முனைப் பாக்களோடு மலர்ந்திருக்கின்றது. இந்நூலுக்கானஅணிந்துரையை கா.ந.கல்யாணசுந்தரம் அவர்களும், மகிழ்ந்துரையை ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியநாதன் அவர்களும், வாழ்த்துரையை ஏறாவூர் தாஹீர் அவர்களும் வழங்கி யிருக்கின்றனர். மாதிரிக்கு ஒரு பாடல் "பாடசாலை அதிபர்கள்/ பணப்பை நிறைகிறது/ ஏழைப் பெற்றோரிடம் பெறும்/ அன்பளிப்புப் பணங்களால்."

### 16584

**விண்ணதிர் பரணி.** *டிலோஜினி மோசேஸ். மருதங்கேணி: பிரதேச கலாசாரப் பேரவை, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம், 1ஆவது பதிப்பு, 2020. (யாழ்ப்பாணம்: குரு பிரிண்டர்ஸ், 39/2 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).*

xi, *60 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5*x*14.5 சமீ.*, ISBN: *978-955-42717-1-5.*

*மருதங்கேணி, கட்டைக்காட்டைச் சேர்ந்த சட்டத்துறை மாணவியான டிலோஜினி மோசேஸ் எழுதியுள்ள இக்கவிதைகள் தான் காணும் துயர்களின் வலியை, ஏக்கங்களின் தாகத்தை, ஏமாற்றங்களின் பிரதிபலிப்பை, காலத்தின் கொடுமையை, கனவுகளின் எல்லையை அகவிசாரணைக்கு உட்படுத்துகின்றன. சமூகத்தில் புரையோடிப்போயுள்ள பல விடயங்களை தன் கவிதை வரிகளுக்குள் இக்கவிஞர் கொண்டுவருகின்றார். கவிதைகளில் பரவலாக ஆச்சர்ய முடிச்சுக்களை வைத்து வாசகரை முடிச்சவிழ்க்கவும் வைக்கிறார். குலதெய்வங்கள், ஆத்துமாவின் ஆதங்கம், வாச முத்தம், மதங்களைத் துறத்தல், தொலைந்துயிர்த்தல், சிறைப்புறா, ஆதியிசை, காதலிப்போம், பெருங்காதல், உயிர் ஒளி, ஈரம், இரட்சிப்பு, நினைதல், யாவுமாகி, மனச்சிறை, நேசதேவதை, விடியாத கிழக்கு, கசாப்பு மன்றங்கள், ஆச்சர்யமானவள், அருவருப்பின் பானம், நிர்க்கதி, கேள்வித்தீட்டு, பூத்தலுக்காய், தீவிரவாதி, தேரவாதம், நீயும் வாழலாம், இளவரசி, முதல் காதலன், எனதான சூரியன், ஏன் அழுதாய் என் போல, நட்புப் பிள்ளையார், இராஜகுமாரன், கசங்கல் கவிதை, பச்சைகளின் தேசம், நினைவை கிளறல், இரசிக்காத மழை, வரலாற்றின் நிறம், நேரமில்லை, விண்ணதிர் பரணி, ஆசுவாசமென்பது, சடங்குகள், பியூலா ஆகிய 42 கவிதைகளை இத்தொகுப்பில் காணமுடிகின்றது.*

### 16585

**விமர்சனப் பார்வையில் வாழும் எழில் காவியங்கள்.** *ஜின்னாஹ் ஷரிபுத்தீன். மருதமுனை: அன்னை வெளியீட்டகம், 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2022. (கொழும்பு: அல்ஹாஜ்* T.M.*முனாப் அஸீஸ், பிரின்ட் சிட்டி).*

iv, *190 பக்கம், ஓவியங்கள், விலை: ரூபா 1500., அளவு: 24.5*x*18 சமீ.*, ISBN: *978-624-97389-3-5.*

*காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன், பன்னிரு காவியங்களையும் ஐந்து கவிதைத் தொகுதிகளையும் உள்ளிட்ட பதினையாயிரத்துக்கும் அதிகமான செய்யுள்களை படைத்த பெருமை மிக்கவர். இயல்பாகவே இவர் ஓவியங்களின் மேல் கொண்ட விருப்பின் காரணமாக இந்நூல் உருவாகியுள்ளது. இதில் இந்திய ஓவியர் ரவிவர்மா உள்ளிட்ட தன் கருத்தைக் கவர்ந்த ஓவியர்களின் ஓவியங்களை இணையத்தில் தேடி அவதானித்து அதன் வழி தனக்குத் தோன்றிய அழகான கருத்துக்களை செய்யுள் வடிவில் இங்கே படையலிட்டுள்ளார். இவை முன்னர் இவரால் தனது முகநூல் பக்கங்களில் வெளியிடப்பட்ட வேளையில் வாசகர்களின் சிந்தையை ஆட்கொண்டிருந்தன. இந்நூலுக்கான சாற்று கவிதையை தமிழ்மாமணி அல் அசூமத் வழங்கியுள்ளார். பின்னட்டையில் காப்பியக்கோ பற்றி கவிஞர் சோ.பத்மநாதன் வழங்கிய கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.*

### 16586

**வேலணையூர் சுரேஷின் குறும்புப்பா 100**. *வேலணையூர் சுரேஷ் (இயற்பெயர்: இராமச்சந்திரன் சுரேஷ்). வேலணை: தாய் சக்தி கலைக்கூடம், புளியங்கூடல், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2021. (யாழ்ப்பாணம்: எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).*

*64 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ.,* ISBN: *978-624-98901-0-7.*

"என்னிடம் பா யாப்பறி கவிதை மாணவன். பல்லாயிரம் மனங்களில் இன்றும் எதிரொலித்துக் கொண்டிருக்கும் எழுச்சி கானங்களின் தந்தை. ஈழச் சைவக் கோவில்கள் பலவற்றுக்குப் பக்தி இசைப் பாடல்கள் பாடிப் புண்ணியம் தேடிவரும் புலவன். உள்நாட்டு, வெளிநாட்டுக் கவியரங்குகளில் உரிமைப்பா முழக்கம் செய்து வரும் பாவலரேறு. "தித்திப்பா" சிறுவர் நூலைப் பாடியவன் இன்று குறும்புமயமான குறும்பாக்கள் நூறை சொக்குப்பொடி கலந்த ஓமப்பொடியாக வழங்குகிறான். வாழ்க வளர்க அவனது படைப்பூக்கம்" (பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம்).

### 16587

**ஜின்னாஹ்வின் குறும்பாக்கள் 550**. *ஜின்னாஹ் ஷரிபுத்தீன். மருதமுனை: அன்னை வெளியீட்டகம், 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2022. (கொழும்பு: அல்ஹாஜ் T.M.முனாப் அஸீஸ், பிரின்ட் சிட்டி).*

x, *214 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 1000., அளவு: 21x14.5 சமீ.,* ISBN: *978-624-97389-2-8.*

இதுகாலவரை தொன்மையான மரபுவழியில் பல காவியங்களை எழுதிவந்த கவிக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன், கொரோனா வீடடங்கலை பயன்படுத்தி குறும்பா யாப்பில் இந்நூலை சுவையாக எழுதி வழங்கியுள்ளார். கரு சிதைவுறா திருக்க சிற்சில இடங்களில் மட்டும் சிறிய மாற்றங்களைச் செய்துள்ளதாகக் கூறும் அவர், குறும்பா என்பது குறும்புகளை மையப்படுத்தி வாசகனைச் சிந்திக்கச் செய்வதாக இருத்தல் வேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து சற்றே விலகி, குறும்பா என்பது நல்ல கருத்துகளை வெளிப்படுத்துபவையாக இருக்கவேண்டும் என்னும் எண்ணத்தை வித்தாக்கி இத்தொகுப்பிலுள்ள பெரும்பாலான செய்யுள்களை அதே யாப்புக்குள் படைத்துள்ளார்.

## 894.8 (11) மொழிபெயர்ப்புக் கவிதைகள்

### 16588

**ஆங்கிலக் கவிதைகள் ஒரு நூறு (மொழிபெயர்ப்புக் கவிதைகள்).** செல்லத்தம்பி சிறீக்கந்தராசா (மொழிபெயர்ப்பாளர்). லண்டன்: செல்லத்தம்பி சிறீக்கந்தராசா, Seven King, Illford, Essex, 1ஆவது பதிப்பு, 2021. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

liv, 277 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x14 சமீ., ISBN: 978-955-0210-21-3.

எழுபதுக்கும் மேற்பட்ட ஆங்கிலக் கவிஞர்களின் நூற்றிமூன்று கவிதைகளைத் தேர்ந்து மொழிபெயர்ப்புச் செய்து இந்நூல்வழியாக கவிஞர் செ.சிறீகந்தராசா எமக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். இந்நூலுக்கான முகவுரையை சென்னைப் பேராசிரியர் ப.மருதநாயகமும், நயப்புரையை சிங்கப்பூர் பெரியார் அ.சிவபாத சுந்தரமும் வழங்கியுள்ளனர்.

### 16589

**தேர்ந்தெடுக்கப்பட்ட 19ம் நூற்றாண்டின் பிரஞ்சுக் கவிதைகள்.** க.வாசுதேவன் (தமிழாக்கம்). சென்னை 600042: பாலம் பதிப்பகம், 25, அபிராமி அபார்ட்மென்ட்ஸ், மூன்றாவது பிரதான சாலை, தண்டீஸ்வரர் நகர், வேளச்சேரி, 1ஆவது பதிப்பு, 2013. (சென்னை 600 005: பாரதி அச்சகம்).

140 பக்கம், விலை: 14 இயூரோ, அளவு: 19x12 சமீ., ISBN: 978-93-82708-01-8.

இந்நூலில், இலையுதிர்காலப் பாடல் (சார்ல் போதலயர்), ஆனந்த மரணம் (சார்ல் போதலயர்), தியானம் (சார்ல் போதலயர்), பரிசின் சோகம் (சார்ல் போதலயர்), நேரங்காட்டி (சார்ல் போதலயர்), எதிரி (சார்ல் போதலயர்), உயர்வு (சார்ல் போதலயர்), நிலவின் சோகம் (சார்ல் போதலயர்), கண்ணீர் (ஆர்த்யூர் றாய்ம்போ), பள்ளத்தில் தூங்குபவன் (ஆர்த்யூர் றாய்ம்போ), இலையுதிர்காலப் பாடல் (போள் வேர்லன்), கூரைமேலாய் வானம் (போள் வேர்லன்), வெண்ணிலவு (போள் வேர்லன்), ஏரி (அல்போன்ஸ் து லமார்த்தீன்), ஏகாந்தம் (அல்போன்ஸ் து லமார்த்தீன்), ஞானம் (அல்போன்ஸ் து லமார்த்தீன்), லக்ஸம்பேர்க் ஒழுங்கை (ஜெரார் து நேர்வல்), கல்லறை வாசகம் (ஜெரார் து நேர்வல்), இழந்த சொர்க்கம் (போள் வலேறி), என்னிளமையிருந்து பாடிய பூத்துக் குலுங்கும் மரமென நானிருந்தேன் (சார்ல் சந்த் பேவ்), மழைத்துளி (ஜ்யூல் சுப்பர்வியல்), எல்சாவின் விழிகள் (லூயி அறாகோன்), இரவின் தங்கக் கண்கள் (லூகோந்த து லில்), மர்மக் கிணறு (தெயோபீல் கோத்தியே), அஸ்தமனச் சூரியன்கள் (விக்ரர் ஹியூகோ), இறைவனின் முன் ஓர் உயிர் (அல்பிரட் து மியூசே), கவிதையிடம் விடைபெறுதல் (லூயிஸ் அக்கெர்மான்), ஒரு காதலனின் வார்த்தைகள் (லூயிஸ் அக்கெர்மான்) ஆகிய பிரஞ்சுக் கவிதைகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தொடர்ந்து, சபிக்கப்பட்ட கவிஞன் ஷார்ஸ் போதலயர் (1821-1867), விக்டர் ஹியுகோ (1802-1885), அல்போன்ஸ் து லமார்த்தீன் (1790-1869), அல்பிரட் து மியூசே (1810-1857) ஆகிய கவிஞர்கள் பற்றிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

### 16590

**பல்கேரியக் கவிதைகள்.** கே.கணேஷ் (தமிழாக்கம்). சென்னை 600098: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41-B, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 1984. (சென்னை 600 014: பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 142, ஜானி ஜான் கான் ரோடு).

xvi, 120 பக்கம், விலை: இந்திய ரூபா 10.00, அளவு: 17.5x12 சமீ.

தென்கிழக்கு ஐரோப்பாவில் வடக்கே ருமேனியாவையும், டன்யூப் நதியையும், தெற்கே கிரேக்கத்தையும் துருக்கியையும், கிழக்கே யூகோஸ்லாவியாவையும், மேற்கே கருங்கடலையும் எல்லைகளாகக் கொண்ட சின்னஞ்சிறிய நாடாயினும் பாஸிசத்தின் கொடுங்கரங்களில் சிக்குண்டு நாட்டிற்காக உயிர்நீத்த கவிஞர்கள் பலரைக் கொண்டது பல்கேரியா. ஆழ்ந்த நாட்டுப்பற்றையும் கொடுமைகளை எதிர்க்கும் போக்கையும் கொண்ட கவிதைகள் இவை. நாட்டின் ஒருமைப்பாட்டை வலியுறுத்துபவை. க்ரிஸ்டோ பொடேவ், இவான் வசோவ், பெயோ யாவரோவ், தோரா கபே, எலிசவெதா பக்ரியானா, கியோ மிலேவ், க்ரிஸ்டோ ஸ்மிர்னென்ஸ்கி, நிக்கொலா வப்ஸ்தாரோவ், வெசலின் ஹெஞ்செஃப், கியோர்கி ஜாகரோவ், பென்யோ பென்யேஃப், அண்ட்ரி ஜெர்மனோவ், லுயுபோமிர் செவ்செவ் ஆகிய 13 கவிஞர்களின் 31 கவிதைகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது.

### 16591

**வ்ருத்தோப நிஷத்: முதுமை குறித்த கவிதைகள்.** என்.கோபி (தெலுங்கு மூலம்), ஆ.ஸ்ரீதர், அல்லடி உமா (ஆங்கில மொழிபெயர்ப்பாளர்), சோ.பத்மநாதன் (தமிழாக்கம்). சென்னை 600 092: புலம் வெளியீடு, 178, F, அனுதீப் அபார்ட் மென்ட்ஸ், 3வது பிரதான சாலை, நடேசன் நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2021. (சென்னை 5: ஸ்ரீ துர்க்கா பிரின்டர்ஸ்).

84 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-81-9078-905-9.

**வ்ருத்தோப நிஷத்: முதுமை குறித்த கவிதைகள்.** என்.கோபி (தெலுங்கு மூலம்), ஆ.ஸ்ரீதர், அல்லடி உமா (ஆங்கில மொழிபெயர்ப்பாளர்), சோ.பத்மநாதன் (தமிழாக்கம்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, பெப்ரவரி 2023. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

80 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-5881-79-6.

என்.கோபி அவர்களால் தெலுங்கில் எழுதப்பட்ட இக்கவிதைகள், எம்.ஸ்ரீதர், அல்லடி உமா ஆகியோரால் ஆங்கிலத்திற்கு மொழிமாற்றம் செய்யப்பட்டன. ஆங்கில வழித் தமிழாக்கத்தை சோ.ப. அவர்கள் மேற்கொண்டுள்ளார். முதியவன், நன்றியறிதல், மூத்த குடிமகன், மூன்று உலகங்கள், முதுமையுள் நுழைதல், முதுமையின் பாடல், தனிமை, தண்ணீர், அம்மாவும் மனுஷிதான், மரண வேளை யில், நானுந்தான், நடை என்னும் மரபுரிமை, பாவம் உடம்பு, சாய்வு நாற்காலி,

எழுபது வயது, அவளுந்தான், முதியோர் சகாயம், நாயனம்மா, அறளை, கரந்துறை எழுத்தாளன், பேரன், முதியோர் இல்லம், மருத்துவமனைகளில் கவிதையைக் காணமுடியாது, முன்னைநாள் காதல்கள், பூர்ண கும்பம், இதயத்துக்கு வயதில்லை, தத்துவஞானி, அச்சமில்லாப் பாட்டு, நேருக்குநேர் மரணத்துடன், விரும்பிய வேளை மரணம், மரணமிலா மரணம், கிழவி, கொள்ளுப் பாட்டனும் கொள்ளுப் பேர்த்தியும், அவர் சாக மாட்டார், எஞ்சியிருக்கும் வாழ்க்கை, மூத்தோரின் பிரக்ஞை, ஒரு கட்டம், குன்றுகளை அவதானிக்க வேண்டும், அழியாப் புகழ், கனிவு ஆகிய தலைப்புகளில் இக்கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. இந்நூல் 259ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

மேலும் பார்க்க:

சபரிக் காட்டின் சந்தன வரிகள். 16138

## 894.8(2) தமிழ் நாடகங்கள்

### 16592

**காட்டு நிலா: வானொலி நாடகங்கள்.** நா.யோகேந்திரநாதன். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, ஐப்பசி 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

xviii, 126 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-624-5881-15-4.

இந்நூலில் காட்டு நிலா, முன்னூற்று அறுபத்து மூன்றாவது உயிர், நிறம் மாறிய கிராமம், நெஞ்சாங்கட்டை, காத்திருக்கும் கடற்கரை ஆகிய ஐந்து வானொலி நாடகங்கள் இடம்பெற்றுள்ளன. இலங்கை வானொலியில் "சானா" என்ற சண்முக நாதன் அவர்களுடன்ஆரம்பித்த சாதனைப் பயணம் பல ஒப்பற்ற கலைஞர்களின் பங்களிப்புடன் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. கே.எம்.வாசகரின் காலத்தில் "சுழியோட்டம்" என்ற நாடகத்துடன் தனது வானொலி நாடகக் கலைப் பயணத்தை ஆரம்பித்த நா.யோகேந்திரநாதன் பின்னர் பி.விக்னேஸ்வரன், ஜோர்ஜ் சந்திரசேகரன், காவலூர் ராஜதுரை, பி.எச்.அப்துல் ஹமீத், ராஜேஸ்வரி சண்முகம், லூக்காஸ் திருச்செல்வம், தார்க்கீசன் போன்ற அற்புதமான திறமைசாலிகளுடன் இணைந்து தன்னைப் புடம்போட்டுக் கொண்டவர். அக்கால கட்டத்தில் தான் எழுதிய ஐந்து வானொலி நாடகங்களை இங்கு தொகுத்து வழங்கியுள்ளார்.

### 16593

**குணம் மாறும் எலிகள்: சமூக, அரசியல், பொருளாதார நாடகம்.** உரும்பிராய் வி.ஜெகநாதன் (புனைபெயர்: நக்கீரன்). யாழ்ப்பாணம்: வி.ஜெகநாதன், உரும்பிராய், 1ஆவது பதிப்பு, மார்ச் 2019. (யாழ்ப்பாணம்: சக்தி பிரிண்டர்ஸ், பலாலி வீதி, உரும்பிராய்).

xv, (3), 30 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-43879-1-1.

"இது சிறுவர்களுக்காக சிறுவர்களால் ஆற்றுகை செய்யப்பட்ட நாடகமாயினும், சமூக, அரசியல், பொருளாதார நாடகமாகவும் இதனை வகைப்படுத்த முடிகின்றது. இந்த நாடகத்தைப் பொறுத்த வரையில் பிரச்சினைகள் வெளிப்படையாகவே முன்வைக்கப் படுகின்றன. இதில் சிறுவர்களது மனமகிழ்வுக்கான ஆற்றுப் படுத்தல்கள் - ஒரு சில இடங்களைத் தவிர - இல்லை என்றே தோன்றுகின்றது. இதனை சிறுவர் நாடகம் என்ற அடையாளப்படுத்தலை விடுத்து, சமூக அரசியல் நாடகம் என்ற அரங்க வெளிக்கு எடுத்துச் சென்று மதிப்பீடு செய்தால், இதன் சமூகத் தாக்கங்களும், இந்நாடகம் சமூகத்திலும், நாட்டிலும் உள்ள பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதில் பயன்படுத்திய பாத்திர உருவாக்கமும் உற்றுநோக்கத்தக்கன. முப்பது முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக மக்களினது அவல வாழ்வும், இந்த அவல வாழ்க்கையை அரசியலாக்கிப் பிழைப்பு நடத்தும் அயோக்கியத் தனங்களும், இவற்றுக்கெதிரான விவேகமற்ற உணர்ச்சிவசப்பட்ட போராட்டங்களும் தங்களின் பலத்தை உணராமல் இன்னும் இவைபோன்ற போலியான செயற்பாடுகளுக்குள் அள்ளுண்டு செல்வதும் தமது மீட்சிக்கான பாதையினை வகுத்துக்கொள்ளத் தெரியாத அப்பாவி எலிகளாக வாழ்வதும் மிகக் கச்சிதமாக எடுத்தியம்பப் படுகின்றது" (வ.மோகநாதன், அணிந்துரையில்).

## 16594

**குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடகங்கள் ஐந்து.** குழந்தை ம.சண்முகலிங்கம் (மூலம்), பாக்கியநாதன் அகிலன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: புத்தகக்கூடம், 204 C, பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு நவம்பர் 2021. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 672 B, காங்கேசன்துறை வீதி).

xxii, (8), 245 பக்கம், விலை: ரூபா 1200., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-624-6072-00-1.

குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் எழுதி நெறிப்படுத்திய மண் சுமந்த மேனியர்-1 (1985), மண் சுமந்த மேனியர்-2 (1985), அன்னை இட்ட தீ (1991), வேள்வித்தீ (1994), மனத்தவம் (2002) ஆகிய ஐந்து நாடகங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. குழந்தை ம.சண்முகலிங்கம் ஈழத்தின் அரங்கியல் உலகில் முக்கியமான ஒருவராவார். 15.11.1931 இல் பிறந்த இவர், யாழ்ப்பாணம்-திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆசிரியராக, அதிபராக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாடகத்துறை வருகை விரிவுரையாளராகக் கடமையாற்றியவர். பா.அகிலன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைத் துறையில் கலை வரலாற்று விரிவுரையாளராவார்.

## 16595

**சுமை: வானொலி நாடகங்கள்.** மறவன்புலோ செல்லம் அம்பலவாணர். கொழும்பு 15: செ.அம்பலவாணர், 478/28, அளுத்மாவத்தை வீதி, 1ஆவது பதிப்பு, 2020. (கொழும்பு 6: கே.ஜே. என்டர்பிரைஸஸ், 63, விகாரை ஒழுங்கை, வெள்ளவத்தை).

xx, 144 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21x15.5 சமீ., ISBN: 978-955-42626-7-6.

சுமை, சத்தியம், வந்தாளே மகராசி, பரிசு, தூண்டில், உயர்ந்தவர்கள் ஆகிய ஆறு வானொலி நாடகங்களை இந்நூல் கொண்டுள்ளது. இது 2020ஆம் ஆண்டுக்கான தேசிய சாஹித்திய விருதினை வென்ற வானொலி நாடக நூல். இந்நூலாசிரியர் தானே தன்னை இவ்வாறு அறிமுகப்படுத்துகின்றார். "கலைகள் தவழுமிடத்தில் அமைந்துள்ள யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் விடுதியில் தங்கிப் படித்ததனாலேயே இத்துறையில் ஈர்க்கப்பட்டு, பாடசாலைச் சமூகமும் உந்து சக்தியாக அமைய, கலை ஆர்வமுள்ள பொறியியலாளராக எனது வாழ்க்கைப் பயணம் தலைநகராம் கொழும்புக்கு நகர்ந்தது. இந்தக் கலையார்வமானது பொறியியல்துறையில் மன அழுத்தங்கள் ஏற்படும் பொழுது அவை கிறுக்கல்க ளாகவும், இரைச்சல்களாகவும் வெளிப்பட்டன. இவை இலங்கை வானொலி என்ற குடையின் கீழ் கலைத்துறை ஜாம்பவான்களினால் புடம் போடப்பட்டு கலை உலகிற்கு என்னை அடையாளப்படுத்தின. அதன் மூலம் கிடைத்த விருதுகள் என்னை மேலும் மெருகூட்ட இன்று நான் வானொலி நாடகக் கலைஞராக தொண்ணூறு வரையான நாடகங்களுக்குக் குரல் கொடுத்து நாடகப் பிரதி எழுத்தாளராக ஐம்பது வரையான நாடகப் பிரதிகளையும், நூலாசிரியராக 2018ஆம் ஆண்டின் சிறந்த சுயநாடக நூலுக்கான அரச விருது பெற்ற "மனவைரம்" உட்பட ஏழு நூல்களையும் வெளியிட்டு தொலைக்காட்சித் துறையையும் ஊறுகாய் போல் தொட்டு ஒரு "இலங்கை கலாசாரத் திணைக்களத்தால் அங்கீகரித்து அடையாளப்படுத்தப்பட்ட நாடகக் கலைஞனாக சமூகத்திற்கு அடையாளப்படுத்தி இன்று எட்டாவதான ஆக்கத்தின் மூலம் உங்களைச் சந்திக்கிறேன்"(ஆசிரியர் உரையில்).

### 16596

**சோலர்: தெருவெளி நாடக பிரதிகளின் தொகுப்பு.** எஸ்.ரி.அருள்குமரன். *யாழ்ப்பாணம்:* S.T.T.S.*வெளியீடு, சங்கானை, 1ஆவது பதிப்பு, சித்திரை 2021. (யாழ்ப்பாணம்: சாய்ராம் பிரின்டர்ஸ், பிரதான வீதி, சங்கானை).*

v, *42 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20*x*14 சமீ.,* ISBN: *978-955-3688-04-0.*

சோலர், தொற்றா நோய்கள், மாசு, சிக்கனம், வாழ்வதற்கு, உயிர்வாழ ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட தெருவெளி நாடகப் பிரதிகளை இந்நூல் கொண் டுள்ளது. இலங்கைத் தமிழ் நாடகப் பரப்பினுள் தாக்க வன்மையுள்ள நவீன நாடக அரங்கவியலாளராக எஸ்.ரி.அருள்குமரன் விளங்குகின்றார். நாடகத்துறை சிறப்புப் பட்டதாரியான இவர் நாடகத்துறையின் மீது கொண்ட தேடல் காரண மாகவும், புதிய சிந்தனைத் தளத்தில் நாடகப் படைப்புக்களினை படைப்பாக்கம் செய்து பலரதும் பாராட்டினைப் பெற்றுள்ளார். புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாக இயக்குநராகவும் இவர் பணியாற்றி வருகின்றார். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நாடகத்துறைக்கான ஆசிரியராகவும் நாடக மன்றப் பொறுப்பாசிரிய ராகவும் பணியாற்றி மாணவர்களுக்கான செல்நெறிப் பயிற்சிகளை வழங்கி வருகின்றார். (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 26865).

## 16597

**தாய்மடி தேடிவந்தாள் ஒரு தாமரைக்கொடி (நாடகம்).** கீர்த்தி. (இயற்பெயர்: குமரேஸ்வரன் கீர்த்திசிங்கம்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1ஆவது பதிப்பு, 2015. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

viii, 172 பக்கம், விலை: இந்திய ரூபா 80.00, அளவு: 18x12.5 சமீ.

இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைப் பெற்று சென்னைப் பல்கலைக்கழகம், வடக்கு லண்டன் பல்கலைக்கழகம், கிரினிச் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உயர்கல்விகற்று தற்போது லண்டனில் புலம் பெயர்ந்து வாழ்பவர் கீர்த்தி. காதல் தியாகம் என விரியும் இந்நாடகத்தில் இவர் தான் வாழ்ந்த யாழ்ப்பாணத்தின் வடபுறத்தில் அமைந்துள்ள செம்மண் விவசாய பூமியாகிய இளவாலைக் கிராமத்தையும் அதன் மக்களையும் இந்நாடக பாத்திரங்களாக உலவவிட்டுள்ளார்.

## 16598

**பொதி.** கிக்கோ (இயற்பெயர்: இ.ருஷாந்தன்). மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், இல. 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2007. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

111 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18.5x13 சமீ., ISBN: 978-955-8715-35-2.

இந்நூலில் சமூகப் பிரச்சினைகளைக் கூறும் பொதி, கற்கக் கசடற, குழப்பம் ஆகிய மூன்று நாடகங்களின் எழுத்துப் பிரதிகள் தொகுக்கப்பட்டுள்ளன. 1995-1999 வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விலங்கு வைத்திய கற்கைநெறியை மேற்கொண்ட காலத்தில் பல்கலைக்கழக பீடங்களுக்கிடையே நடைபெற்ற நாடகப் போட்டிகளுக்கென அவர் எழுதிய நாடகங்கள் இவை. முதலாவதாக இடம்பெறும் "குழப்பம்" நாடகத்தில் தமிழர் விடுதலைப் போராட்டத்தினைக் குழப்பத்துடனும், நாடகம் பார்க்கும் மனப்பாங்குடனும் பார்க்கும் தமிழ் மக்களை நமக்குக் காட்டுகிறார். இரண்டாவது நாடகமான "பொதி" மனித உறவுகளை மறந்து பொருளாசையில் சிக்கிக் கொண்ட தமிழரது மனித மனங்களைக் காட்டு கின்றது. மூன்றாவது நாடகமான "கற்க கசடற" வில் சின்னவளாக இருந்து பெரிய வளாக வளரும் போது டாக்டராக, ரீச்சராக, பைலட்டாக வரவேண்டும் என்றெல் லாம் கனவு கண்ட ஒரு இளம் பிஞ்சை அவளின் தந்தை சிறுவர் உழைப்பாளியாக மாற்றிவிடுவதை காட்டுகின்றார். கல்வி உயரிய இலட்சியங்களைப் போதிக்கும் போதிலும் கள யதார்த்தம் சில சமூகங்களில் வேறாக இருப்பதை இந்நாடகத்தின் வழியாக புலப்படுத்துகிறார்.

## 16599

**பொறுப்பது உன் விதியோ.** பு.கணேசராசா. யாழ்ப்பாணம்: மறுமலர்ச்சி மன்றம், காலையடி, பண்டத்தரிப்பு, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2022. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).

xii, 146 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-624-6309-00-8.

நாடகர் புண்ணியமூர்த்தி கணேசராசா எழுதிய நாடகப் பிரதிகளின் தொகுப்பாக வெளிவந்துள்ள இந்நூல் மறுமலர்ச்சி மன்றத்தின் ஐந்தாவது வெளியீடாகும். தேசிய மட்டத்தில் முதல் பரிசில் பெற்ற ஒய்யாரக் கொண்டை, மர்ம முடிச்சு, காப்பு, பொறுப்பது உன் விதியோ?, உயிர்ப்பழி ஆகிய ஐந்து நாடகங்களும் மேலும் போட்டியில் பங்குபற்றிய வெல்க மானிடம், செப்படி வித்தை, அப்பன் நீ அம்மை நீ ஆகிய மூன்று நாடகங்களும் கொண்டமைந்துள்ளது இந்நூல். சிறந்த தொரு நாடக பாட ஆசிரியரான கணேசராசா, குழந்தை ம.சண்முகலிங்கம், சிதம்பரநாதன் ஆகியோருடன் 1994ஆம் ஆண்டு முதல் நாடகக் களப் பயிற்சி களிலும், நாடகத் தயாரிப்புகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றி வந்துள்ளார்.

## 16600

**மகுட பங்கம்: நாடகப் பிரதி.** வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை. கிளிநொச்சி: கலாசாரப் பேரவை, கரைச்சி, 1ஆவது பதிப்பு, மார்ச் 2014. (யாழ்ப்பாணம்: ஆகாயம் பதிப்பகம், இமையாணன், உடுப்பிட்டி).

95 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-41133-0-5.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, மற்றும் இளைஞர் விவகார அமைச்சு 24.10.2015இல் கிளிநொச்சியில் நடாத்திய வடக்கு மாகாண இலக்கியப் பெருவிழாவில், 2014இல் வடக்கு மாகாணத்தில் வெளிவந்த சிறந்த நாடக நூலுக்கான பரிசை வென்ற நூல். இது ஆசிரியரின் முதலாவது நூலாகும். இதில் முருகனின் முதற்போர், நடுகல் பேசும், சங்கிலியன், ஜுலியஸ் சீஸர், மகுட பங்கம், வாய்மை காத்த மன்னன் ஆகிய நாடகங்கள் இடம்பெற்றுள்ளன. பெரும்பாலும் 1991இல் எழுதப்பட்டு மேடையேற்றப்பட்ட நாடகங்கள் இவை. 05.11.1953இல் பிறந்த நூலாசிரியர் வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை, யாழ்ப்பாணம்-மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, மலையாளபுரம் தெற்கை வாழ்விட மாகவும் கொண்டவர். இவரது தந்தையார் சின்னார் வல்லிபுரம், தென்னிந்திய நாடகக் கலைஞரான வேல்நாயக்கரைக் குருவாகக் கொண்டு வளர்ந்து பிரபல்யமான ஒரு நாடகக் கலைஞராவார்.

## 16601

**முதுசொம்: இரு கூத்தும் நாநாடகமும்.** க.இ.கமலநாதன். யாழ்ப்பாணம்: சுபோவி வெளியீட்டகம், 24/5, 2ம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை, 1ஆவது பதிப்பு, ஜுன் 2012. (யாழ்ப்பாணம்: கக்ஸ்டோன் (Caxton) பதிப்பகம், 1/1 நவீன சந்தைக் கட்டிடம், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு).

xi, 109 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 18x12 சமீ.

இந்நூலில் கல்லூரி விழாக்களில் மேடையேற்றிய ஆறு நாடகங்கள் இடம்பிடித்தி ருக்கின்றன. முதுசொம் (சிந்து நடை மெட்டிலமைந்த கூத்துருவாக்கம்), தர்மம் வெல்லும் (கூத்துருவ நாடகம்), பொய்யாய் பழங்கதையாய், உங்கையிற் பிள்ளை,

*நேசமும் வைத்தனையோ, நித்தலும் கைதொழுவேன் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட இரு கூத்துகளும் நான்கு நாடகங்களும் இடம்பெற்றுள்ளன.*

### 16602

**ஜீவபிரயத்தனம்: நாடகங்கள் ஏழு.** *யோ.யோண்சன் ராஜ்குமார். யாழ்ப்பாணம்: கலைச்சோலை, நாவலர் வீதி, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2021. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டேர்ஸ், இல. 10, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).*

xiv, *196 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 20.5*x*15 சமீ.,* ISBN: *978-955-35664-1-6.*

*யோ.யோண்சன் ராஜ்குமார் எழுதிய ஜீவபிரயத்தனம், அகலிகைகள், வலசைப் பறவைகள், மணவிலங்குகள், ஈன்ற பொழுதில், உண்மையின் ஒளி, ஸ்பாட்டக்கஸ் ஆகிய ஏழு நாடகங்களும் அவற்றுக்கான பின்னூட்டங்களும் இந்நூலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. யோ.யோண்சன் ராஜ்குமார் நடிகன், நாடக ஆசிரியன், நெறியாளன் என அரங்கச் செயற்பாடுகளுடன் கடந்த மூன்று தசாப்த காலமாக இயங்கிக் கொண்டிருப்பவர். கூத்து, நவீன நாடகம், கூத்துருவ நாடகம், சிறுவர் நாடகம், திருப்பாடுகளின் நாடகம் எனப் பல வகைமையான நாடக வடிவங்களோடும் ஊடாடி, திருமறைக் கலாமன்றம் மற்றும் பாடசாலை அரங்கத் தளங்களில் செயற்பட்டுத் தனது அரங்கத் திறனை கூர்மைப்படுத்திக்கொண்டிருப்பவர்.*

மேலும் பார்க்க:

இசையுடன் பாட அழகான தமிழ்ப் பாடல்கள். 16473

## 894.8(21) மொழிபெயர்ப்பு நாடகங்கள்

### 16603

**தான் விரும்பாத் தியாகி: குழந்தை ம.சண்முகலிங்கத்தின் மொழிபெயர்ப்பு நாடகங்கள் ஆறு.** *நாகேந்திரம் நவராஜ் (பதிப்பாசிரியர்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, மார்கழி 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).*

viii, *140 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-624-5881-37-6.*

*"இத்தொகுதியில் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் மொழிபெயர்த்த ஆறு நாடகங்கள் வகுத்தும் தொகுத்தும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இவை அவரால் மேற்கொள்ளப்பட்ட தமிழ் மொழிபெயர்ப்பின் மூல எழுத்துருவிற்கு அமைவாக பதிப்பிக்கப்பட்டுள்ளதோடு அவற்றில் உள்ள வேறுபாடுகள், செய்யப்பட்ட மாற்றங்கள், மற்றும் நாடக எழுத்துரு சார்ந்த முக்கியமான விபரங்கள் போன்றன குறிப்புகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இத்தொகுதியில் உள்ள மொழிபெயர்ப்பு நாடகங்கள் எவ்விதமான சிறப்புரிமை கருதியும் ஒன்றாகத் தொகுக்கப்படவில்லை. எனினும், அவற்றுக்கிடையில் ஒரு ஒற்றுமை நிலவுவதனையும் அவதானிக்க முடிகின்றது." (நா.நவராஜ், பதிப்புரையில்). இந்நூலில் இரவலன் அல்லது இறந்துபோன நாய், வார்த்தைகளற்ற நடிப்பு, இந்திரன் தீர்ப்பு, தான் விரும்பாத்*

தியாகி ஒருவர், அந்திமாலைப் பாடலொன்று, துறவி ஆகிய ஆங்கில நாடகங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு இடம்பெற்றுள்ளது. இந்நூல் 209ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

## 894.8(3) தமிழ்க்கவிதை/இசை நாடகங்கள்-காவியங்கள்

### 16604

**கடல்.** அருந்ததி (இயற்பெயர்: அருளானந்தராஜா இரத்தினம்). பிரான்ஸ்: அருளானந்தராஜா இரத்தினம், 1ஆவது பதிப்பு, 2018. (யாழ்ப்பாணம்: ஆதித்யா பிறின்டர்ஸ்).

iv, 122 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-045-08-07.

இக்குறுங்காவியத்தின் ஆரம்பப் பகுதகள் 1999இல் பாரிசில் வெளிவந்த "சுட்டுவிரல்" சஞ்சிகையில் வெளிவந்தது. பின்னர் இச்சஞ்சிகை நின்றுபோக இத் தொடரும் இடைநடுவில் நின்றுபோனது. 16 வருடங்களின் பின்னர் இதனை தொடர்ந்து எழுதிமுடித்து நூலுருவாக வெளியிட்டுள்ளார். "கடல்" ஒரு காவிய முயற்சி. கவிதை எனும் ஓடத்தில் அனுபவ வலைகளை ஏற்றிச் சென்று ஆழங்களில் அமிழ்ந்து போயிருக்கும் உண்மைகளைக் கரையிழுப்பதற்கான ஆசிரியரின் முயற்சியே இக்காவியமாகும். யாழ்ப்பாணக் கடற்கரைக் கிராமமான நாவாந் துறையில் பிறந்த இந்நூலாசிரியர் அங்கு உயர்தர வகுப்பிற்கான அளவையியல் ஆசிரியராகப் பணியாற்றியவர். 1984இல் புலம்பெயர்ந்து பிரான்சில் குடியேறியவர். படைப்பிலக்கியத் தளத்திலும் திரைப்படத்துறையிலும் ஈடுபாடு கொண்டவர்.

### 16605

**கவி கனகசபை பாடிய சதாரம் (ஊஞ்சற் கவிதை).** கவி கனகசபை (மூலம்), அருள் செல்வநாயகம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு: சரஸ்வதி புத்தகசாலை, 175 செட்டியார் தெரு, 1ஆவது பதிப்பு, 1957. (தமிழ்நாடு: கலைமகள் பிரஸ், வடக்கன்குளம், நெல்லை ஜில்லா).

20 பக்கம், விலை: 30 சதம், அளவு: 18.5x10.5 சமீ.

கிழக்கிலங்கைக் கிராம கிராமிய இலக்கியச் செல்வங்கள் தொடரில் வெளிவந்த இரண்டாவது நூல் இதுவாகும். இறை வணக்கம், தேசவிசாரணை, மன்னவன் ஆசை, தந்தையும் தனயனும், கனவு, கனவுக் காரிகையைக் காணலும் திருமண விழாவும், நாடு நகர் இழத்தல், பிழைக்க வழிகாணல், மாயபுரி மன்னன் மயக்கம், தாசியின் சதிவலை, சதாரத்தின் தந்திரம், கணவனைக் காணல், கள்வனும் காரிகையும், கணையாளிப் பந்தயம், கடைக்காரியின் தவிப்பு, பெண்ணணங்கு அரசனாதல், கணவனைக் கண்டுபிடிக்க ஏற்பாடு, கணவனைக் காணல், நீதி வழங்கல் ஆகிய அத்தியாயங்களினூடாக இந்த ஊஞ்சற் கவிதை பாடப்பட்டுள்ளது. இதைப் பாடியவர் கிழக்கிலங்கையின் கழுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த கவி கனகசபை என்பாராவார். வீரகேசரி ஞாயிறு இதழில் தொடராக வெளிவந்தது.

தொகுப்பாசிரியர் மட்டக்களப்பு குருமண்வெளியைச் சேர்ந்தவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் P 2625).

### 16606

**குழல்வாய் மொழி: இரு குறுங்காவியங்கள்.** அ.ச.பாய்வா. மட்டக்களப்பு: மகுடம் பதிப்பகம், இல. 90, பார் வீதி, 1ஆவது பதிப்பு, ஒகஸ்ட் 2021. (மட்டக்களப்பு: எவகிறீன் அச்சகம், 185A, திருமலை வீதி).

vii, 73 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 18.5x13 சமீ., ISBN: 978-624-5849-01-7.

மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஏ.எஸ்.பாய்வா மட்டக்களப்பை வதிவிடமாகக் கொண்டவர். ஒரு சிறந்த சிறுகதைப் படைப்பாளியாகவும் கவிஞராகவும் அறியப் பட்ட இவரின் "ஆத்ம விசாரம்" என்ற கதைத் தொகுதி 2008ஆம் ஆண்டுக்கான தேசிய சாகித்திய மண்டல விருதையும் "தமிழியல்" விருதையும் பெற்றிருந்தது. இந்நூல் 35ஆவது மகுடம் பிரசுரமாக வெளிவந்துள்ளது. "காவிய மரபின் அடி மடி தேடிச்செல்ல வேண்டிய இன்றைய நிலையில் செய்யுள் மரபில் ஊறி, கவிதை இலக்கண வரம்புகளைத் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கும் கவிஞர் பாய்வா, இக்குறுங்காவியத்தை வெளியிடுவது காலத்தின் தேவையாகவுள்ளது. கற்றுணர்ந்த மரபை மீறும் இவரது இக்காவியங்களில், மரபும் புதிதும் கலந்து ஒலிக்கின்றன. சமகாலத்தைப் பேசும் இக்காவியம், கவிதைப் பரப்பில் நிலைத்து நின்று வாழும். மென்மையான சங்கீதம் போல் இழையோடும் கவிச்சரடுகளின் தொகுப்பாகவும் இதனைச் சொல்வேன்" (மகுடம் வி.மைக்கல் கொலின், வெளியீட்டுரையில்).

### 16607

**சந்தனப் பெட்டியும் கிலாபத் கப்பலும்: குறுங்காவியங்கள்.** மருதூர்க் கனி (இயற்பெயர்: யூ.எல்.எம்.ஹனீபா). தெகிவளை: விடுதலை விருட்சம் வெளியீட்டகம், இல. 11, 4ஆவது ஒழுங்கை, கௌடானா புரோட்வே, 1ஆவது பதிப்பு, ஜுன் 2013. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

xxv, (4), 100 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ.

முதற் புள்ளி (மருதூர்க்கனி), மருதூர்க்கனியின் சந்தனப் பெட்டகமும் கிலாபத் கப்பலும் (பேராசிரியர் அமீர் அலி), கவிஞர் மருதூர்க்கனியின் தெளிவான இலட்சிய வெளிப்பாடுகள் (பேராசிரியர் எம்.ஏ.எம்.சுக்ரி), புதல்விகளிடம் இருந்து ஒரு செய்தி (வஜ்னா றபீக், றொஸானா ஷைபுல்லாஹ், அரீஸா நஜிமுன் நியாஸ், லயானா ஆஸிப் நித்றி) ஆகிய அறிமுக உரைகளுடன் கவிஞரின் காவியப் படைப்புகளான திருக்குரானே, பிரகடனம், தங்கப் பேனை, ஐந்தாவது விதி, யாத்திரை, சந்தனப் பெட்டகமும் கிலாபத் கப்பலும் ஆகிய ஆறு ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன.

**16608**

**பிலால் காவியம்.** *எச்.ஏ.எல். க்ரெய்க் (ஆங்கில மூலம்), அல் அஸூமத் (தமிழாக்கம்). வெல்லம்பிட்டிய: அல் அஸூமத், 50, கோத்தமி மாவத்தை, வெலேவத்த, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2020. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*239 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21x14.5 சமீ.,* ISBN: *978-955-52134-8-6.*

*ஆங்கில மொழியில் H.A.L.Creig எழுதி வெளிவந்த Bilal என்ற காவிய நூலின் தமிழாக்கம். மூல நூலாசிரியர் உமர் முக்தார், தி மெசேஜ் ஆகிய திரைப்படங்களின் கதாசிரியராவார். முன்னர் அல் அஸூமத் அவர்களால் இது உரைநடையில் எழுதப்பட்டிருந்தது. இப்பொழுது காவியமாகவே மீண்டும் படைக்கப்பட்டுள்ளது. பிலால், இறைதூதரின் நெருங்கிய தோழர். ஒடுக்குமுறையை அகற்றி நீதத்தை நிலைநாட்டிடும் இறைதூதரின் போராட்டம் மற்றும் வெற்றியின் அரிய தருணங்களை அடிமையாக இருந்து, விடுவிக்கப்பட்டு இஸ்லாமிய வரலாற்றின் நாயகர்களுள் ஒருவராக உயர்ந்த பிலால் அவர்களின் காவியம் இதுவாகும்.*

**16609**

**பெண்ணாய் ஒருமுறை பிறப்பாய் போற்றி: ஆகமக் கடவுளர்களிடம் சில கேள்விகள்.** *உரும்பிராய் வி.ஜெகநாதன் (புனைபெயர்: நக்கீரன்). யாழ்ப்பாணம்: வி.ஜெகநாதன், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய், 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2022. (யாழ்ப்பாணம்: ஜெயஸ்ரீ பிறின்டர்ஸ், இல. 34, பிறவுன் வீதி).*

*136 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21x14 சமீ.,* ISBN: *978-624-99181-4-6.*

*பால் சமத்துவமின்மை, பெண் ஒடுக்குமுறை ஆகியவற்றுக்கு எதிரான கருத்தியலை உட்சரடாகக் கொண்டு இக்காவியம் தொடங்குகின்றது. மதங்கள் எம்மதம் ஆயினும் அவற்றின் சமுதாய நோக்குநிலை பற்றிய கேள்விகளை எழுப்பிச் செல்கின்றது. புனித வேதாகமம் தொடக்கம் இந்து மத பக்தி இலக்கியங்கள் வரை அன்பு கருணை சமூகநீதியை அது தேடுகிறது. ஆன்மீகம் சமூக நோக்குடன் இசைவுபட வேண்டும் என்று கூறுகின்றது. வரலாறு முழுவதும் அடிமைத்தனமும் பஞ்சமும் போருமாக உருண்டு வந்த சரித்திரத்தை கேள்விக்குள்ளாக்குகின்றது. சிறு சிறு தலையங்கங்களுடன் கனதியான புதிய சொற்களுடன் இக்காவியம் எழுதப்பட்டுள்ளது. உரும்பிராய் வி.ஜெகநாதன் தனது பதின்ம வயதுகளிலேயே விவிலியத்தில் இயேசுநாதரின் மானுட முகத்தை தேடியவர். இடையறாது சமூக அனுபவத்துடன் வேதாகமத்தை பயின்றவர். அரங்க ஆற்றுகை, கவிதை, எழுத்து எனச் செயற்பட்டவர். பாதுகாவலன் பத்திரிகையில் பணியாற்றியவர். ஜெயசீலன் அடிகளாரால் முன்னெடுக்கப்பட்ட "மனிதன்" மாத இதழில் அக்கால சமூக அக்கறை கொண்ட இளைஞர்களுடன் இணைந்து சமூக பொருளாதார அரசியல் தேடலில் ஈடுபட்டவர். அந்த அனுபவங்களின் பிழிசாரமாகவே இக்காவியம் எழுதப்பட்டுள்ளது.*

**16610**

**மலரும் வாழ்வு: குறுங்காவியம்.** கண.மகேஸ்வரன். மட்டக்களப்பு: பிலோமினா மகேஸ்வரன், தாரகை வெளியீடு, 21, சுப்பையா ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 1992. (மட்டக்களப்பு: புனித வளனார் கத்தோலிக்க அச்சகம், இல. 10, அட்வகேட் வீதி).

xii, (2), 24 பக்கம், விலை: ரூபா 25.00, அளவு: 18x12 சமீ.

மட்டக்களப்பிலுள்ள சீ-லோம் தனியார் மருத்துவ மனையில் சத்திர சிகிச்சையொன்றினை மேற்கொள்ளும் பொருட்டு அனுமதிக்கப்படவேண்டிய நிலை இக்கவிஞருக்கு ஏற்பட்டது. அவ்வேளையில் தான் பெற்ற அனுபவங்களும் நன்றிப் பெருக்குமே இக்காவியத்தின் உருவாக்கத்திற்குக் காரணமாயின. நோய் தந்த வேதனையும், அதனைச் சூழ்ந்த பயமும், பதற்றமும், தனிமையும், அன்பான உறவுகள், உபசரிப்புகள் என்பன பற்றிய எதிர்பார்ப்பும் எல்லாவற்றிற்கும் மேலாக அவரிடமிருந்த இறைவிசுவாசமும் ஆழ்ந்த யோசனையும், தத்துவத் தேடலும், நகையுணர்வும் மனித நேயமும், வாழ்வின் மீதான எதிர்கால நம்பிக்கையும் மிக்க ஆத்மா ஒன்றிலிருந்து பிரவகித்துப் பாய்ந்த வெள்ளமே இக்குறுங்காவியமாகும். சமூகத்துடன் ஒன்றிய ஒரு கலாபூர்வமான வெளிப்பாடாக இக்காவியம் அமைந்துள்ளது. கவிஞர் கண.மகேஸ்வரன், கிழக்கிலிருந்து வெளிவந்த "தாரகை" சஞ்சிகையின் ஆசிரியராகவும் இயங்கியவர்.

**16611**

**மேகதூதம்.** மகாகவி காளிதாசர் (மூலம்), சுவஸ்திகா ரவிச்சந்திரன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: குரு வெளியீடு, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு, 2019. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

xxx, 100 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-624-95610-1-4.

சம்ஸ்கிருத இலக்கிய மரபில் சிறந்த கவிஞராகவும் நாடக ஆசிரியராகவும் விளங்கிய காளிதாச மகாகவி வட மொழியில் அருளிச்செய்த காப்பியமான "மேகதூதம்", உலகம் போற்றும் உத்தமக் கவிவளம் வாய்ந்ததொரு நூலாகும். சிவபெருமானின் தோழனாகிய குபேரன் இட்ட சாபம் காரணமாகக் கடமையிற் பிழைத்த இயக்கன் ஒருவன் தன் காதல் மனைவியைப் பிரிந்து சித்திரகூட மலைச்சாரலில் எட்டுத் திங்கள் தனித்துவிடப்பட்டான். அங்கு அவன் துயருழந்த நிலையில் அவன் கண்ட வடக்கு நோக்கிச் செல்லும் கார் மேகத்தை தன் மனைவியின்பால் தூதனுப்பியமையே அப்பனுவல் கூறும் பொருளாகும். மனைவியைப் பிரிந்த இயக்கனது ஆறாத காதல் மனநிலையை ஏற்றவகையில் இப்பாடலில் சித்திரித்துள்ளார். இக்காப்பியம் பூர்வமேகம், உத்தர மேகம் ஆகிய இரு பகுதிகளைக் கொண்டது. பூர்வமேகத்தில் 66 ஸ்லோகங்களும், உத்தர மேகத்தில் 55 ஸ்லோகங்களுமாக 121 ஸ்லோகங்களைக் கொண்டது.

### 16612

**யாரோ ஒருத்தியின் டையரி: மஜீத் குறுங்காவியம்: பாகம் 2.** மஜீத். அக்கரைப்பற்று: மஜீத், 1ஆவது பதிப்பு, 2017. (அக்கரைப்பற்று: நியூ செலெக்ஷன் ஒப்செட் பிரின்டர்ஸ்).

(4), 88 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.

தொடராறுமுறையில் எழுதப்பட்ட பொத்துவில் கவிஞர் மஜீதின் குறுங்காவியம். ஏறுவெயில் கவிதைகள், வாழ்வின் மீதான எளிய பாடல்கள், சுள்ளிக்காடும் செம்பொடையனும், ஒரு இலையின் மரணம் (கவிதைகள்), மஜீத் கவிதைகள், கதை ஆண்டி(குறுநாவல்), மஜீதின் உயிர் பிழியும் கவிதைகள், முள்ளிவாய்க்காலும் நிலம் பெருக்கெடுத்த சவக்குழிகளும் ஆகிய நூல்களைத் தொடர்ந்து இவ்வசன காவியம் மூன்று பாகங்களில் எழுதப்பட்டுள்ளது. கவிஞர் மஜித் அவர்கள் நோயினால் பாதிப்படைந்துள்ள நிலையிலும் தொடர்ந்து தான் சொல்லச் சொல்ல தன் மனைவியினதும் மகளினதும் உதவியுடன் நூலாக்கம் செய்யப்பட்டுள்ளது. இது குறுங்காவியத்தின் இரண்டாம் பாகமாகும். 36 குறிப்புகளைக்கொண்டதாக வெளிவந்துள்ளது.

## 894.8(4) தமிழ்ச் சிறுகதைகள்

### 16613

**அக்கினி வளையம்: ஈழத்துக் கண்ணீர்க் கதைகள்.** பூங்கோதை. சென்னை 600 101: எஸ்.அருண்மொழித்தேவன், தேனருவி பதிப்பகம், 211/5, அண்ணா நகர் மேற்கு, 1ஆவது பதிப்பு, ஒகஸ்ட் 1985. (சென்னை 600 024: விசாலம் பிரிண்டிங் ஹவுஸ், 2, 2ஆவது தெரு, டாக்டர் சுப்பராயன் நகர்).

xiv, 191 பக்கம், விலை: இந்திய ரூபா 17.00, அளவு: 18x12.5 சமீ.

இலங்கைத் தமிழ்ப் படைப்பாளியான ஞானப்பூங்கோதை அவர்கள் தமிழகத்தின் "தேவி" இதழ்களில் "கண்ணீர்க் கதைகள்" என்ற தலைப்பில் தொடராக இக்கதைகளை எழுதியிருந்தார். ஓலம், இழப்பு, வாழ்வின் விளிம்பில், அகதிகள் முகாமில் ஒரு குரல், சூறை, பெற்ற வயிறு, சாது-சாது-சாது, தலைகீழ், மலர்ந்த ரோஜாவும் மரணம் எய்தியது, அக்கினி வளையம், மண்ணின் மடியில், விடிந்த பொழுதுக்குள், கண்ணி வைத்து, தேடுதல் வேட்டை, வீட்டுக்கு ஒரு புலி, கொட்டியா அவில்லா கொட்டியா அவில்லா (புலி வந்து விட்டது புலி வந்து விட்டது), நெருப்பு மலர், தமிழனென்று சொல்லடா, தமிழனுக்கு ஒரு கேள்வி, மாறாதோ இக்காலம், உனக்கும் ஒரு நாள், புல்லட்-புல்லட்-புல்லட் ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டிருக்கின்றன.

### 16614

**அசை: சிறுகதைத் தொகுப்பு.** மலரன்னை (இயற்பெயர்: அற்புதராணி காசிலிங்கம்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, பங்குனி 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

iv, 124 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-0958-70-2.

இந்நூலில் ஏன் இந்த மாற்றம், இணையும் கரங்கள், மீண்டும் நாளை வருவான், பங்களிப்பு, பரிவும் பகிர்வும், பருந்தின் பசி, பாதுகாப்பு, சபதம், சரியான பாதை, தளிரின் தாகம், ஈரம், அலைகள் ஓய்வதில்லை, நீ நடந்த பாதையிலே, ஒத்தடம், புதுச்சட்டை, சங்கமம், சுதந்திர தாகம், தெளிவு, புயலாக மாறும் பிஞ்சுகள், விழிப்பு, விண்ணிலிருந்து ஆகிய தலைப்புகளில் மலரன்னை எழுதியிருந்த 21 சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. ஈழத்தமிழர்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கொடுமைகளின் சாட்சியமாக இத்தொகுப்பின் கதைகள் அமைந்துள்ளன. இந்நூல் 185 ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

## 16615

**அதிர்ஸ்டம் (சிறுகதைத் தொகுப்பு).** கே.எம்.எம். இக்பால். கிண்ணியா 4: கே.எம். எம். இக்பால், அப்துல் மஜீத் எம்.பி. வீதி, 1ஆவது பதிப்பு, ஆவணி 2019. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L. 1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

v, 106 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ.

இந்நூலில் இரண்டு லட்சம், தாயின் மேல் ஆணை, மீண்டும் மலர்ந்த மலர், கண்ணீர்த் துளிகள், இரட்டைச் சந்தோசம், கல்யாணப் பரிசு, அறிவுக் கண், நூறு ரூபாய், ஒரு தடவை மட்டும், புத்தாண்டுப் பரிசு, அதிர்ஸ்டம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட பதினொரு கதைகள் இடம்பெற்றுள்ளன. மக்களுக்கு பயன்படக்கூடிய விதத்தில் சிறுகதைகள் அமையவேண்டும் என்றும் சிறுகதையில் உள்ள கரு, மனிதனது வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் கருவியாக அமையவேண்டும் என்றும் ஆசிரியர் கருதுகின்றார். இத்தொகுப்பில் இடம்பெறும் "கண்ணீர்த் துளிகள்", "நூறு ரூபாய்" என்பன வறுமையின் கோர தாண்டவத்தைப் பிரதிபலிக்கின்றன. "கல்யாணப் பரிசு", "அதிர்ஸ்டம்" என்பன அகதி வாழ்வு ஏற்படுத்திய காயங்களை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. "மீண்டும் மலர்ந்த மலர்" என்ற சிறுகதை இன ஒற்றுமையின் அவசியத்தை உள்ளத்தில் ஆழமாகப் பதிய வைக்கின்றது.

## 16616

**அந்தரங்கம்: சிறுகதைகள்.** நோயல் நடேசன். சென்னை 600 092: புலம் வெளியீடு, 178F, அனுதீப் அப்பார்ட்மென்ட்ஸ், 3ஆவது பிரதான சாலை, நடேசன் நகர், இணை வெளியீடு, கிளிநொச்சி: மகிழ், 754 கனகராசா வீதி, திருநகர் வடக்கு, 1ஆவது பதிப்பு, 2021. (சென்னை: ஸ்ரீ துர்க்கா பிரிண்டர்ஸ்).

200 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-9078-882-3.

இந்நூலில் நடேசன் அவ்வப்போது ஊடகங்களில் எழுதியிருந்த 15 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. தான் கடந்துசென்ற அல்லது தான் கேள்விப்பட்ட ஏதோ ஒரு சம்பவத்தின் மன அருட்டலால் உருவானவை இக்கதைகள். ஜுலி, ருத்ரம், அந்த ஆறு மாதங்கள், உயிர்க்கொல்லி பாம்பு, அந்தரங்கம், கரும்புலி, ஒரு தாய்

உறங்குகிறாள், சாபத் நாளில் மட்டும், பதுங்கு குழி, பிரேமலதா, மீண்டும் ஒரு ஆதாம், வெம்பல், சாகுந்தலம், ஆவி எதைத் தேடியது, அலைந்து திரியும் ஆவிகள் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. காதல்-காமம் என்பவற்றை பேசுபொருளாகக் கொண்ட கதைகளும் அரசியல் வன்முறையை கருவாகக் கொண்டவையுமான கதைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

## 16617

**அம்ருதாவின் புதிர் வட்டங்கள்.** சித்தாந்தன் (இயற்பெயர்: சபாபதி உதயணன்). யாழ்ப்பாணம்: தூண்டி இலக்கிய வட்டம், 141, ஆடியபாதம் வீதி, கேணியடி, திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு, மார்கழி 2021. (யாழ்ப்பாணம்: ஆகாயம் பதிப்பகம், இமையாணன், உடுப்பிட்டி).

x, 149 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21.5x13.5 சமீ., ISBN: 978-624-97477-1-5.

“கவிதை மனத்திலிருந்து கிளைத்து விரியும் சொற்களைக் கொண்டுதான் சித்தாந்தன் கதைகளையும் வளர்த்துச் செல்கின்றார். இவரது கதைகள் வெறும் கதைகளாக மட்டுமல்லாத ஒரு சமூக இயங்கியின் கேள்வியாகவும், கோபமாகவும் வெளிப்படு கின்றன. ஈழத்து கதை சொல்லிகளிடமிருந்து தன்னை வேறாக அடையாளப்படுத்தும் மொழியோடு தொடர்ந்து பயணிக்கும் சித்தாந்தன் தனது அனுபவத்தை வாசகனிடத்தில் தொற்றவைப்பதிலும் வெற்றி பெறுகிறார். இவரது மொழி, கதை சொல்லும் பாங்கு, வாசகனின் வாசிப்பனுபவம் விரிவடைந்து புதிய அனுபவ வெளியை திறக்கும் வசியத்தன்மையைக் கொண்டுள்ளன.” (தானா விஷ்ணு, பின்னட்டைக் குறிப்பு). சித்தாந்தன் 90களின் பிற்பகுதியிலிருந்து எழுதி வருகிறார். கோண்டாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஆசிரியராகப் பணிபுரிகிறார். காலத்தின் புன்னகை (2000), துரத்தும் நிழல்களின் யுகம் (2010) ஆகிய கவிதைத் தொகுப்புகளை ஏற்கெனவே வெளியிட்டுள்ளார். இந்நூலின் கதைகள், நூறாயிரம் நுண்துளைகளால் பொறிக்கப்பட்ட பெயர் ஓர் அஞ்சலியுரை, அகங்காரமூர்த்தியின் அலுவலகக் கோப்பு, அம்ருதாவின் புதிர் வட்டங்கள், X,Y மற்றும் கறுப்பு வெள்ளைப் பிரதி, வேட்டையன், அரசனும் குதிரைவீரனும் அழியுங் காலத்தின் சனங்களும், நட்சத்திரங்களை மோகிப்பவன், புத்தரின் கண்ணீர், எழிலரசன் என்கிற சகுனி ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் அர்த்தங்களின் வழி அர்த்தங்களை உருவாக்கும் கதைகள் என்ற தலைப்பில் சி.ரமேஷ் எழுதிய கட்டுரையும் இடம்பெற்றுள்ளது.

## 16618

**அவள் ஒரு பூங்கொத்து.** தேவகி கருணாகரன். சென்னை 600014: சிந்தன் புக்ஸ், 327/1, திவான் சாகிப் தோட்டம், டி.டி.கே. சாலை, இராயப்பேட்டை, 1ஆவது பதிப்பு, 2021. (அச்சக விபரம் தரப்படவில்லை).

145 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-81-95383-02-3.

இந்நூலில் தேவகி கருணாகரனின் 15 சிறுகதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மன்னிப்பு, அவள் ஒரு பூங்கொத்து, மனிதம், காலத்தால் கரையாத நினைவுகள், தெளிவு, திண்டாடும் பண்பாடு, ஒரு மேகலாவின் கதை, இருதலைக் கொள்ளி எறும்பு, நாடோடிகள், அவளா இவள்?, இப்படி ஓர் எதிரொலியா?, சிந்தாமணியின் நினைவுகள், என்றும் என்னவள், வானமே எல்லை, அவன் ஒரு பலியாடு ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட தேவகி (தேவகி துரைசிங்கம்) தன் பதின்ம வயதில் இலங்கை வானொலி யில் "இசையும் கதையும்" நிகழ்ச்சிகளின் வாயிலாக எழுதத் தொடங்கியவர். தனது பேரப்பிள்ளைகளை உச்சி மோர்ந்து களித்தபின் 2003இல் மீண்டும் அவுஸ்திரேலியாவில் இருந்து தேவகி கருணாகரனாக வேகத்துடன் எழுதத் தொடங்கியுள்ளார். இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி "அன்பின் ஆழம்" சிட்னியில் அமரர் எஸ்.பொ. அவர்களால் 2014இல் வெளியிடப்பட்டது. கடந்த ஏழு வருடங்களில் அவர் எழுதிய கதைகளைத் தொகுத்து வெளிவரும் அவரது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு இதுவாகும். இலங்கை, நைஜீரியா, அவுஸ்திரேலியா ஆகிய களங்களும், அங்கு வாழும் மனிதர்களின் உணர்வுகளும் இதில் பேசுபொருளாகியிருக்கின்றன.

## 16619

**அவள் புறப்பட்டு விட்டாள்.** கொ.பாபு (இயற்பெயர்: கொன்ஸன்டைன் சகாயராசா). வவுனியா: கொன்ஸன்டைன் சகாயராசா, 160, 1ஆம் ஒழுங்கை, திருநாவற்குளம், 1ஆவது பதிப்பு, 2019. (வவுனியா: ஜீ.எச்.பிரின்டர்ஸ், இல.165, மன்னார் வீதி, குருமன்காடு).

xvii, 170 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-624-95859-0-4.

இந்நூலில் அவள் புறப்பட்டு விட்டாள், கூடு, போரின் பிரசவங்கள், பாலம், ஈரவரிகள், குட்டி நங்கி, மனச் சூறாவளி, நெஞ்சும் நினைவும், கொழுந்து இலைகள், கோணங்கள், சிறைக் கல்வி, செங்குருதிக் கல்வெட்டு, யூட்டன் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 13 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

## 16620

**ஆனைக்கோட்டரி: ஒன்பது சிறுகதைகள்.** தர்மு பிரசாத். சென்னை 600 005: கருப்புப் பிரதிகள், பி 55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2021. (சென்னை 600005: ஜோதி என்டர்பிரைசஸ்).

128 பக்கம், விலை: இந்திய ரூபா 130.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-943310-7-0.

தர்மு பிரசாத் யாழ்ப்பாணத்தில் ஆவரங்காலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்போது பாரிசில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகிறார். ஆக்காட்டி என்ற சஞ்சிகையின் ஆசிரியராகப் பணியாற்றி 17 இதழ்களை வெளியிட்டுள்ளார். இந்நூல் தர்மு பிரசாத்தின் ஒன்பது சிறுகதைகளை உள்ளடக்குகின்றது. நிலாவரை,

*பித்தளைத் தீர்வுகள், விண்மீன்களின் இரவு,* Rue Albert Camus, *மிக இரகசிய இயக்கம், தனிமையில் நூறு ஆண்டுகள், சிறு துளை, ஆனைக்கோடரி, துண்டு நிலம் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.*

### 16621

**இங்கு வீசியது ஒரு சமாதானக் காற்று: சிறுகதைத் தொகுப்பு.** *சூசை எட்வேட். திருக்கோணமலை: கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 1ஆவது பதிப்பு, 2020. (திருக்கோணமலை: சிறீராம் அச்சகம் (ரிங்கோ பிரிண்டர்ஸ்), 158, தபால் நிலைய வீதி).*

*194 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x15.5 சமீ.,* ISBN: *978-955-4628-74-8.*

*"இவன் தான் மனிதன்" என்ற சிறுகதைத் தொகுதியை 2013இல் வழங்கிய திருக்கோணமலைப் படைப்பாளியான சூசை எட்வேட் வழங்கும் இரண்டாவது சிறுகதைத் தொகுதி இதுவாகும். இத்தொகுதியில் இங்கு வீசியது ஒரு சமாதானக் காற்று, கருத்தில் இருத்துவாரா?, பொற்தாலி போனால், கடவுளைக் காண்கிறார், இவன் நல்ல சேவகன், அம்மாவின் வேண்டுதல், அவரின் மனிதாபிமானம், சுனாமி சுப்பிரமணி, கடலோடு போராடுவார், இழந்தவற்றில் ஒரு புள்ளி, புண்ணிய பூமியில் ஒரு கண்ணியவான், பாயோட ஒட்டவைப்பாங்க, இன்னொரு உலகம், தாராள மனம், நம்ம ஆள், தென்னை சிரித்தது ஆகிய சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.*

### 16622

**இங்கே நிறுத்தக் கூடாது: சிறுகதைகள்.** *அ.முத்துலிங்கம். சென்னை 600077: நற்றிணை பதிப்பகம், பிளாட் எண் 45, சாய் கவின்ஸ் குமரன் அபார்ட்மென்ட்ஸ், ஸ்ரீதேவி கருமாரியம்மன் நகர், கிருஷ்ணா நகர் பிரதான சாலை, நூம்பல், ஐயப்பன் தாங்கல், 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2019. (சென்னை 600005: சாய் தென்றல் பிரிண்டர்ஸ்).*

*(2), 127 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 22.5x15 சமீ.*

*அ.முத்துலிங்கம் எழுதிய செர்ரி மரம், வந்துவிடு டுப்புடு, எக்கேலுவின் கதை, முதல் சம்பளம், குமர்ப்பிள்ளை, இங்கே நிறுத்தக் கூடாது, பிரதாப முதலியார். ச., ஒருமணி நேரம் முன்பு, எங்கேயோ இப்ப மூன்று மணி, என்னைத் திருப்பி எடு, வேதாகமத்தின் முதல் பாவம், உங்களுடன் வந்தவர் ஆகிய சிறுகதைகளும், மாவோவுக்காக ஆடை களைவது, ஓூனாவை எழுப்புவது ஆகிய மொழிபெயர்ப்புச் சிறுகதைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. அ.முத்துலிங்கம் இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொக்குவில் கிராமத்தைச் சேர்ந்தவர். பட்டயக் கணக்காளரான இவர் இலங்கையிலும் ஆப்பிரிக்காவிலும் ஐ.நா.வுக்காகப் பணிபுரிந்தவர். 2000ஆம் ஆண்டில் ஓய்வுபெற்று கனடாவில் வாழ்ந்து வருகிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 68852).*

### 16623

**இரு அறிவியல் நண்பர்கள்: அறிவியல் சிறுகதைத் தொகுப்பு.** பொன்.குலேந்திரன். *கனடா: குவியம் வெளியீடு, 2796,* Keyness Crescent, Mississauga, Ontario, L5N3A1, *1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2020. (மின்நூல் வடிவம்).*

*95 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5*x*15 சமீ.*

*இந்நூலில் பௌதிகவியல் சிறப்புப் பட்டதாரியும், தொலைத் தொடர்பு பொறியியலாளருமான ஆசிரியர் எழுதிய புதுமைப்பெண், காலம், விண்கல், விநோதன், சக்தி மாற்றம், மௌனன் குவின், மலடி, பரம இரகசியம், அறிவின் ஆராய்ச்சி, விளைச்சல், கயிலை மலைக்கு கிரகவாசி வருகை, செந்தூரனின் செவ்வாய் பயணம், புரோக்சிமா அல்பா கிரகவாசி, வானத்தின் மீது மயில் ஆடக் கண்டேன், காலக் காணொளி, சிவலிங்கபுரம், இரு அறிவியல் நண்பர்கள் ஆகிய பதினெட்டு விஞ்ஞான அறிவியல் சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன.*

### 16624

**இருளைக் கிழித்த கோடு.** *கீதா கணேஷ். யாழ்ப்பாணம்: திருமதி கணேஷ் லோக கீதா, சிற்பனை, வேலணை மேற்கு, 1ஆவது பதிப்பு, 2022. (கொழும்பு 13: லங்கா புத்தகசாலை, 529/7, கே.சிறில் சீ. பெரேரா மாவத்தை).*

xi, *95 பக்கம், விலை: ரூபா 375., அளவு: 17*x*11.5 சமீ.,* ISBN: *978-624-5787-08-1.*

*திருமதி லோககீதா கணேஷ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று இளங்கலைமாணிப் பட்டத்தையும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தையும், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வியையும் பயின்றவர். தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ்மொழித்துறை விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார். இந்நூலில் இவர் தான் எழுதிய 10 சிறுகதைகளைத் தொகுத்து வழங்கியுள்ளார். குருத்து, தொலைவு, மொழிகளைத் தாண்டி, வழிநீளம், காத்திருப்பு, நிழல் தேடும் கிளைகள், இருளைக் கிழித்த கோடு, இவரும் இப்படித்தானோ?, சுயமரணம், வெளிச்சக்கூடு ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. எத்தனங்கள் என்ற பெயரில் முன்னர் 2011இல் இவர் வழங்கிய சிறுகதைத் தொகுப்பையடுத்து வெளிவரும் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு இதுவாகும்.*

### 16625

**இன்னும் பெயர் வைக்கல (சிறுகதைத் தொகுப்பு).** *டன்ஸ்டன் மணி. கனடா: டன்ஸ்டன் மணி, கல்கரி நகர், அல்பேர்ட்டா மாகாணம், 1ஆவது பதிப்பு, 2017. (கொழும்பு: டொப் சைன் பிரின்டிங் சேர்விஸ்).*

*232 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN: *978-955-97102-4-0.*

*கொழும்பு 13, ஜெம்பட்டா வீதி 89ஆம் இலக்க தோட்டத்தில் பிறந்த டன்ஸ்டன் மணி, தன் ஆரம்பக் கல்வியை மேட்டுத்தெரு புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரியிலும் மருதானை சென். ஜோசப் கல்லூரியிலும் கற்றவர். வீரகேசரி*

பத்திரிகையின் நிருபராகப் பணியாற்றிய பின் நியூஸ் பெர்ஸ்ட் (News First) ஊடகவியலாளராகப் பணியாற்றி தற்போது கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகிறார். இவரது சிந்தனையில் தோன்றியவையும், சமகால நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டவையுமான 64 குறுங்கதைகளை இத்தொகுப்பில் தொகுத்துத் தந்துள்ளார்.

### 16626

**உயிரி: சிறுகதைத் தொகுதி.** என்.கே.துரைசிங்கம். யாழ்ப்பாணம்: இலக்கியா வெளியீட்டகம், கைதடி, 1ஆவது பதிப்பு, 2014. (யாழ்ப்பாணம்: நோபிள் பிரின்டர்ஸ், 817, ஆஸ்பத்திரி வீதி).

xxii, 82 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-41686-0-2.

ஈழநாடு பத்திரிகையினூடாக வளர்ந்த பத்திரிகையாளர் என்.கே.துரைசிங்கம், பின்னாளில் நல்லதொரு கதைசொல்லியாகவும் தன்னை நிலைநிறுத்திக்கொண்டவர். மிகவும் நெருக்கடி மிக்க யாழ்ப்பாணத்துப் போர்ச் சூழலில் சமூகப் பொறுப்பு மிக்க ஊடகவியலாளனாகப் பணியாற்றியவர். இது வெறும் தொழில்சார் கடமைப் பொறுப்பாக மாத்திரம் கருதிவிட இயலாது. "உயிரி" என்ற இச்சிறுகதைத் தொகுதி துரைசிங்கம் அவர்களுள் உறைந்து உயிர்த்து நிற்கும் மண்வாசனை மிக்க படைப்பாற்றலின் வெளிப்பாடு. இத்தொகுப்பினூடாக அவரது சமூகம் சார்ந்த பார்வையையும் கருத்தியல் வெளிப்பாட்டையும் இலக்கிய நயத்துடன் வாசித்தறிய முடிகின்றது. இத்தொகுப்பில் வெளிச்சத்தை நோக்கி, பொங்கல், குறட்டை, கண்கள், ஆச்சி, உயிரி, ஒன்றுகூடல், கூவாத குயில், நம்பிக்கைக் கரங்கள், மணம் மாறாத பூக்கள், எங்கிருந்தாலும் வாழ்வோம், ஆஸ்பத்திரியும் அந்த ஏழு நாட்களும், துடக்கு, தந்தையின் தாலாட்டு ஆகிய 14 கதைகள் இடம்பெற்றுள்ளன.

### 16627

**உள்ளக் கிடங்கு.** ஆர்த்திகா சுவேந்திரன். திருக்கோணமலை: இலக்சுமி பிரசுராலயம், 91, பாரதி வீதி, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2022. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496 A, திருமலை வீதி).

72 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21.5x16 சமீ., ISBN: 978-624-98245-1-5.

மல்லிகை மொழி என்ற கவிதைத் தொகுப்பின் மூலம் கவிஞராக அறியப்பெற்ற ஆர்த்திகாவின் முதலாவது சிறுகதைத் தொகுதி இதுவாகும். இதில் புரிதல், கோணற்(ப்) பார்வைகள், காதலின் பயணம், ஆழ்மனக் குமுறல், ஆறாவது திருப்பம், வட்டி போட்ட குட்டி, மருந்தில்லா வைரஸ், பாதை தொலைந்த பயணம் ஆகிய எட்டு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இலக்சுமி பிரசுராலயத்தின் வெளியீட்டு வரிசையில் முதலாவது நூலாகவும் இது அமைந்துள்ளது.

## 16628

**உறவுகள்: சிறுகதைத் தொகுப்பு.** சியாமளா யோகேஸ்வரன். சென்னை 600 088: வசந்தா பதிப்பகம், 26, குறுக்குத்தெரு, ஜோசப் காலனி, ஆதம்பாக்கம், 1ஆவது பதிப்பு, 2022. (சென்னை 32: பத்மாவதி ஆப்செட்).

xii, 140 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 21.5x14 சமீ. ISBN: 978-93-9127493-1.

இந்நூலில் நட்பும் ஒரு வரமே, இடைவெளிகள், விழுதென உறவுகள், விடியாத பொழுதுகள், ஊனமிங்கே மனதில் இல்லை, விடியலைத் தேடும் விட்டில்கள், கலையும் மேகங்கள், இறுதி யாத்திரை, விடுதலை நெருப்பில், காகித ஓடங்கள், வாழ்வினிலே வரமானான், காவோலைகள் ஆகிய பன்னிரு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீடப் பட்டதாரியான சியாமளா, அவுஸ்திரேலியாவில் "லக்டாலிஸ்" (Lactalis Australia) பால் தயாரிப்பு நிறுவனத்தில், தர நிர்ணயக் கட்டுப்பாட்டுப் பரிசோதகராகப் பணிபுரிந்து வருகிறார். வார இறுதி நாட்களில் தமிழ்ப் பள்ளி ஆசிரியராகவும் சேவையாற்றுகின்றார். இவரது முதலாவது நாவலான இதய ராகத்தைத் தொடர்ந்து வெளிவரும் முதலாவது சிறுகதைத் தொகுப்பு இது.

## 16629

**ஊமையின் பாஷை.** கெகிறாவ ஸஹானா. கெகிறாவை: கெகிறாவ ஸஹானா, 1வது பதிப்பு, 2014. (அனுராதபுரம்: வடமத்திய மாகாணசபை அச்சகம்).

x, 65 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x16 சமீ., ISBN: 978-955-53260-2-5.

கெகிறாவ ஸஹானா தன் ஆரம்பக் கல்வியை கெகிறாவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை கம்பளை ஸாஹிறாக் கல்லூரியிலும் கற்ற பின்னர், ஆங்கில மொழி ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தி 1991 இல் பதவியேற்று, இருபது வருடங்களுக்கு மேலாக சேவையாற்றியபின் தற்போது சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெற்றிருக்கின்றார். இதில் இவரது 11 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. அங்கும் இங்கும், மீளுதல், ஊமையின் பாஷை, நா ஸ்கொலர்ஷிப் எழுதுகிறேன், ஸ்கூல் பாக், ஏதும் பேசவில்லை, தாயும் தந்தையுமானவர்கள், வாப்பாவுக்கு ஒரு கட்டில், எங்கட பள்ளி எது உம்மா?, குர்பானி, தங்கச் சங்கிலி ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

## 16630

**ஊருக்குத் திரும்பணும்: சிறுகதைத் தொகுப்பு.** கோவிலூர் செல்வராஜன். லண்டன்: லக்கி மீடியா, 146, Cherrywood Lane, Mordon SM4 4HQ, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 11: மெய்கண்டான் அச்சியந்திரசாலை, 161, செட்டியார் தெரு).

ix, 118 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

கோவிலூர் செல்வராஜன், எழுபதுகளில் தாயகத்தில் மெய்கண்டான் நிறுவனத்தின் "கலாவல்லி", "நட்சத்திரமாமா" ஆகிய சஞ்சிகைகளின் உதவி ஆசிரியராகப் பணியாற்றியவர். பின்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பல்துறைக்

*கலைஞராக பணியாற்றியவர். இலங்கை வானொலியில் பல நாடகங்களில் பங்கேற்று நடித்துள்ளார். வானொலிப் பாடகராக இருந்ததோடு, இசையமைப்பா ளராகவும் திகழ்ந்தார். பின்னாளில் இலங்கை வானொலியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், அறிவிப்பாளராகவும் விளங்கினார். தினகரன் பத்திரிகையில் இவரது படகுத்துறை (1975), லாவண்யா ஒரு முற்றுப்புள்ளி (1978), இளமைக் கோவில் ஒன்று (1977) ஆகிய நாடகங்களை எழுதியிருந்தார். சிந்தாமணி, வீரகேசரி, மேகம் (லண்டன்), பறை (நோர்வே), பாரிஸ் - ஈழநாடு, ஈழமுரசு ஆகிய பத்திரிகை களில் இவரது சிறுகதைகள் பிரசுரமாகியுள்ளன. பின்னாளில் புலம்பெயர்ந்து லண்டனில் வாழ்ந்து வருகின்றார். இந்நூலில் கோவிலூர் செல்வராஜனின் அம்மாவின் அசத்தல், தமிழரசி, எல்லைக் கிராமங்களின் தொல்லைகள், கண்ணைத் திறக்கணும் சாமி, கைவிட்டுப் போன கார், ஊருக்குத் திரும்பணும், சந்தையும் சந்திப்புகளும், அப்பா, அச்சங்கள், புதிய தலைமுறை, உயர்ந்த உள்ளங்கள், வீரையடி, ஒரு ஓடலியின் கனவு நனவாகிறது, எங்கே போய் முட்டிக் கிறது, தலைமுறை இடைவெளி ஆகிய பதினைந்து கதைகள் இடம்பெற்றுள்ளன.*

## 16631

**எங்கட கதைகள்: சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற கதைகளின் தொகுப்பு.** *பாலு மகேந்திரா நூலகம். கிளிநொச்சி: பாலு மகேந்திரா நூலகம், முதலாம் மாடி, கூட்டுறவு மண்டபம், பேருந்து தரிப்பிடச் சந்தி, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2022. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

xiv, *233 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21.5*x*14.5 சமீ.*, ISBN: *978-624-97823-4-1.*

*கிளிநொச்சியில் 2020இல் உருவாக்கப்பட்ட பாலுமகேந்திரா நூலகம், 2021இல் கொரோனா பெருந்தொற்று உச்சம் பெற்றிருந்த நேரம் ஈழத்தில் புதிய எழுத்தாளர் களை தோற்றுவிக்கும் நோக்கிலும், எழுத்தாளர்களும் எழுத்தில் ஆர்வமுள்ள வர்களும், கொரொனா பெருந்தொற்று காலத்தை எழுத்தினூடு கடக்கவும் சிறுகதை போட்டி ஒன்றை நடத்தியிருந்தார்கள். இப்போட்டிக்கு தாயகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற 195 கதைகளிலிருந்து தேர்ந்த 13 சிறுகதைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. இதில் சுடு மணலில் சிலை விதைகள் (முதலாம் இடம், ஓ.கே.குணநாதன்), மிதிபடும் காவோலைகள் (இரண்டாம் இடம், நீ.நிலவிந்தன்), 21 வருடங்கள் (மூன்றாம் இடம், சுப்பிரமணியம் மஹின்) ஆகிய முதல் மூன்று பரிசுக்குரிய கதைகளுடன், ஒப்புதல்கள் (மேரின் றேச்சல்), ஒரு மிதிவண்டியின் கதை (தங்கராசா இராஜராஜேஸ்வரி), கன்றுக்குட்டி (கொ.சகாயராசா), சாறம் (இரத்தினம் பிரதீபன்), சிரட்டை (சுரேந்திரன் தர்சித் ராகுல்), நீ நடந்த பாதையிலே (ரேணுகா செயரூபன்), மீளுயிர்ப்பு (நடராசா இராமநாதன்), முன்பாதை (விமலாதேவி பரமநாதன்), யாதுமாகி (கீதாஞ்சலி சிங்கராசா), வெண்ணிலா (சர்மிளா விநோதினி) ஆகிய ஆறுதல் பரிசு பெற்ற 10 கதைகளும் இடம்பெற்றுள்ளன.*

## 16632

**என்னைச் சுற்றி ஓர் உலகம்**. மதுபாரதி (இயற்பெயர்: திருமதி பரமேஸ்வரி இளங்கோ). திருச்சி 620 003: இனிய நந்தவனம் பதிப்பகம், எண் 17, பாய்க்காரத் தெரு, உறையூர், 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2020. (சென்னை: கப்பிட்டல் பிரிண்டர்ஸ்).

*80 பக்கம், விலை: இந்திய ரூபா 100.00, அளவு: 21x14 சமீ., ISBN: 978-81-944044-6-0.*

இத்தொகுதியில் மொட்டவிழும் கணங்கள், என்னைச் சுற்றி ஓர் உலகம், ஒட்டப்படாத விளம்பரங்கள், காதலும் கனியும், பனித்திரை, நெஞ்சு பொறுக்கு தில்லையே, வளர்-மதி, ஸ்ரீ ரஞ்சனி, சொல்லாத கதையொன்றின் சோகம் ஆகிய ஒன்பது கதைகள் இடம்பெற்றுள்ளன. "காதலும் கனியும்", "மொட்டவிழும் கணங்கள்", "ஸ்ரீரஞ்சனி" ஆகிய கதைகள் பெண்களின் மனவுணர்வுகளைத் துல்லியமாகப் பதிவுசெய்கின்றன. பெண்களின் பிரச்சினைகள் சிலவற்றை வெவ்வேறு தளங்களில் நின்று நுணுக்கமாகவும் உணர்வுபூர்வமாகவும் அணுகுகின்றன. "ஒட்டப்படாத விளம்பரங்கள்" என்ற கதை தாம் பெற்ற பிள்ளை களில் மூத்த பிள்ளையை தமது ஏனைய பிள்ளைகளைப் பராமரிப்பதற்காக நேர்ந்துவிடும் பெற்றோரின் சுயநலம், அப்பிள்ளையின் கல்வியை எவ்வாறு பாதிக் கின்றது என்பதையும், அதனால் படிப்பையே பாதியில் நிறுத்தும் அவலம் ஏற்படுவதையும் அழகாகச் சித்திரிக்கின்றது. பெண் கல்வியின் முக்கியத்துவம் இங்கு ஆழமாகப் பதிவுசெய்யப்படுகின்றது. திருமணங்களில் பொருத்தமற்ற இணைவு ஏற்படுத்தும் விபரீதம் பற்றிய கதையாக "நெஞ்சு பொறுக்குதில்லையே" என்ற கதை அமைந்துள்ளது. தலைப்புக் கதையான "என்னைச் சுற்றி ஓர் உலகம்", குடிப் பழக்கத்தினால் குடும்ப உறவுகளிடமிருந்து பிரிந்து தனித்துவிடப்பட்ட ஒருவனின் கதையாகும். "சொல்லாத கதையொன்றின் சோகம்", பெண்கள் தற்காலத்தில் எதிர்கொள்கின்ற நுண்கடன் பிரச்சினையை மையமாகக் கொண்டது. பாமா சண்முகம் என்ற பெயரில் 1970களில் வானொலி எழுத்தாளராகத் தன் எழுத்துலகப் பயணத்தைத் தொடங்கியவர் மதுபாரதி. இவரது 15 கதைகள் அடங்கிய முதலாவது சிறுகதைத் தொகுப்பு "சுவடுகள்" என்ற தலைப்பில் 2016இல் வெளிவந்தது. மட்டக்களப்பில் ஏறாவூர் எல்லை நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பின்னாளில் வத்தளையைத் தன் வசிப்பிடமாக்கிக் கொண்டவர். ஆசிரியராகவும், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் உதவி அணையாளராகவும் கல்குடா கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றியவர்.

## 16633

**ஒரு தோட்டத்தின் கதை**. குப்பிழான் ஐ. சண்முகன். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, மார்கழி 2018. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

x, *70 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-4676-89-3.*

என்ரை, மழை தூறிய ஒரு மாலைப் பொழுது, வாழ்க்கை என்பது, உயிரின் நடனம், கண்டறிதல், எங்கள் வீடு அல்லது இடைப்பிறவரல், ஒரு திவச நாள், ஒரு கதை ஒரு கவிதை அல்லது ஒரு கவிதைக் கதை, ஒரு தோட்டத்தின் கதை, சொற்களுக்குப் பெறுமதி இல்லை ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 10 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. "மொழிக்கும் வடிவத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து அழகியலை முன்னிலைப்படுத்திய படைப்பாளிகளில் ஒருவராக குப்பிழான் ஐ.சண்முகன் இருக்கிறார். தனி மனித உறவுகளையும் உறவுச் சிக்கல்களையும் அக உலகையும் பேசுவதிலும் அதற்கான கவித்துவமான மொழிநடையைக் கையாண்டு அழகியல் ரீதியான ஒரு இலக்கியச் செல்நெறியை உருவாக்கிய முன்னோடிகளில் ஒருவராகவும் திகழ்கிறார்" (அருண்மொழிவர்மன், பின்னட்டையில்). இந்நூல் 116ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

**16634**

**ஒரு பிடி அரிசி.** அலெக்ஸ் பரந்தாமன் (இயற்பெயர்: இராசு தங்கவேல்). மட்டக்களப்பு: மகுடம் பதிப்பகம், இல. 90, பார் வீதி, 2ஆவது பதிப்பு, மார்ச் 2022, 1ஆவது பதிப்பு, 2021. (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

90 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x13.5 சமீ., ISBN: 978-624-5849-17-8.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவர் அலெக்ஸ் பரந்தாமன். எண்பதுகளின் பிற்பகுதியிலிருந்து தன் எழுத்துப்பணியை ஆரம்பித்த இவர் 90களின் ஆரம்பத்தில் ஈழநாதம் பத்திரிகையில் ஒப்புநோக்குப் பணியாளராகப் பணியாற்றியதன் மூலம் ஊடகத்துறையில் கால் பதித்தவர். பின்னர் தினமுரசு, உதயன், காலைக்கதிர், எதிரொலி போன்ற ஊடகங்களில் ஒப்புநோக்குநராக, உதவி ஆசிரியராக, பத்தி எழுத்தாளராக, பிரதேசச் செய்தியாளராக எனப் பல்துறைகளிலும் இயங்கி வந்தவர். 90களின் நடுப்பகுதியில் தீவிரமாக எழுதிவந்த இவர் போரியல் சார்ந்த இலக்கியங்கள், அரசியல் சமூகம் சார்ந்த பத்தி எழுத்துக்கள் நேர்காணல்கள் என்று தன் எழுத்துப் பணியைத் தொடர்ந்தார். "மரண வலிகள்" என்ற கவிதைத் தொகுப்பினை 2014இல் வழங்கிய இவர் தொடர்ந்து அழுகைகள் நிரந்தரமில்லை (2014), தோற்றுப்போனவளின் வாக்குமூலம் (2016) ஆகிய சிறுகதைத் தொகுதிகளையும் ஏற்கெனவே வெளியிட்டுள்ளார். "ஒரு பிடி அரிசி" இவரது மூன்றாவது சிறுகதைத் தொகுப்பாகும். முன்னர் தமிழகத்தில் 2021இல் முதற் பதிப்பைக் கண்ட இந்நூல் தற்போது ஈழத்து வாசகர்களுக்காக தாயகத்தில் இரண்டாம் பதிப்பினைக் கண்டுள்ளது. இத்தொகுப்பில் ஒரு பிடி அரிசி, தண்ணீர், பசி ஒரு கொடுமை, இது போராடும் காலம், துஞ்சிடோம் இனி அஞ்சிடோம், பேராசை, நிவாரண அரசியல், அவள் வாழ வேண்டியவள், மால், மடத்துச் சோறு, நிறக் கவர்ச்சி, மாறிப்போன மனிதர்கள் ஆகிய பன்னிரு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இது மகுடம் பதிப்பகத்தின் 52ஆவது நூலாக வெளிவந்துள்ளது.

## 16635

**ஒரு பிடி சாம்பல்.** மலரன்னை (இயற்பெயர்: அற்புதராணி காசிலிங்கம்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, மார்கழி 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

iv, 104 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-624-5881-26-0.

கணிப்பு, இருதாய் ஒரு சேய், வெண்மதி, பிணைப்பு, கருகிய கனவுப் பூக்கள், பாறாங்கல், இதம், அருமை உடைய செயல், ஒரு பிடி சாம்பல், உளப்பசி, பனித்துகள், மனக்கண், பித்து, நதியோரத்து நாணல்கள், கருமணி, அகக்கனல் ஆகிய 16 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இது மலரன்னையின் ஏழாவது சிறுகதைத் தொகுப்பாகும். மலரன்னையின் கதைகள் இலகுவான வாசிப்புக்கு ஏற்றவை. அதிகளவு வர்ணனைகளோ தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களோ எதுவுமற்ற ஆற்றொழுக்கான நடை இவருடையது. நாம் அன்றாடம் காணும் பாத்திரங்களே அவரின் கதாமாந்தர்களாக வருவதுண்டு. இந்நூல் 213ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

## 16636

**ஒரு பிடி மண்: சிறுகதைத் தொகுப்பு.** மல்லாவிக் கஜன். துணுக்காய்: கலாசாரப் பேரவை, பிரதேசச் செயலகம், 1ஆவது பதிப்பு, மார்ச் 2016. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

xiv, 63 பக்கம், விலை: ரூபா 220., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-42716-0-9.

போர், அது தந்த வலிகள், போருக்குப் பின்னான வாழ்வியல் என யதார்த்தபூர்வமான சம்பவப் பின்னணிகளில் உருவாக்கப்பட்ட கதைகள் இவை. புல்லாங்குழல் ஊமையானது, கூடு, தேர்வு, கனவுடனே, பெற்ற மனம் பித்து, கானல் கனவுகள், இறுதிக் கடன், ஒரு பிடி மண், தொலையாத கனவுகள், தொலைவு ஆகிய 10 கதைகளைச் சுமந்து வந்துள்ள தொகுதி இது.

## 16637

**ஒரு வெள்ளி ரூபாய்.** கலைவாதி கலீல். மன்னார்: மன்னார் வாசகர் வட்டம், 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 1982. (மன்னார்: மன்னார் அச்சியந்திரசாலை, மன்னார்: ஜசிந்தா அச்சகம்).

(3), 80 பக்கம், விலை: ரூபா 9.50, அளவு: 18x12.5 சமீ.

மதாறு முகைதீன்-மீரா உம்மா தம்பதிகளின் மகனாக முஹம்மது கலீல் எனும் கலைவாதி கலீல் 1943 ஒக்டோபர் 13 ஆம் திகதி மன்னாரில் பிறந்தார். நவமணிப் பத்திரிகையில் ஜலதரங்கம் மற்றும் இலக்கியச் சோலை என்பவற்றை தயாரித்து தொகுத்தளித்தவர் இவர். தனது பள்ளிப் பருவ காலத்திலே (1956ஆம் ஆண்டில்) "லட்டு" என்ற மாசிகையில் "மறைந்த இருள்" எனும் மகுடத்தில் இவரது முதல் ஆக்கம் வெளியானது. அன்று முதல் சிற்பக்கலை, கரும்பு, கலைக்கடல், செய்தி, மக்கள், தினகரன், வீரகேசரி, தினக்குரல், மல்லிகை, ஈழநாடு, ஞானம், பாமிஸ்

மாசிகை, தீப்பொறி, தொழிலாளி, தேசாபிமானி, நவமணி ஆகிய பத்திரிகைகளில் கவிதை, சிறுகதை, கட்டுரை, துணுக்கு எனப் பல்வேறு கோணங்களில் தனது எழுத்தாளுமையை பறைசாற்றிக் கொண்டிருக்கிறார். 1958 ஆம் ஆண்டில் "கலைக்கடல்" சஞ்சிகையிலும், 1965இல் "மக்கள்" சஞ்சிகையிலும் பின்னாளில் "நவமணி" பத்திரிகையிலும் ஆசிரியர் பீடத்தில் தடம் பதித்திருப்பவர். பலாலி ஆசிரியர் கலாசாலையில் கல்வி கற்று இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS-II) துறையில் தொழில் தகைமை பெற்ற இவர், 1963 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01ஆம் திகதி திங்கட்கிழமை வில்பத்து-மறிச்சுக்கட்டி அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்றார். அன்று தொட்டு பல பாடசாலைகளில் ஆசிரியராகப் பணிபுரிந்திருக்கிறார். இந்நூலில் கலைவாதி கலீல் எழுதிய ஒரு வெள்ளி ரூபாய் (1967), வண்டு (1967), யாருக்குப் பெருநாள்? (1967), மையித்து (1967), சகோதரத்துவம் (1968), ஓடப்போறேன் (1968), வர்க்கம் (1968), நோன்புக் கஞ்சி (1969), எனக்கு நானே எல்லாம் (1975), இன்னும் மனிதர்கள் இருக்கிறார்களா? (1976), புதிய அலை (1979) ஆகிய பதினொரு கதைகள் இடம்பெற்றுள்ளன.

### 16638

**ஒற்றை யானை: சிறுகதைகள்.** மன்னார் அமுதன். மன்னார்: விழிகள் கலா மன்றம், இல. 12, வயல் வீதி, சின்னக்கடை, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

xiv, 70 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-624-98396-0-1.

இந்நூலில் மன்னார் அமுதன் எழுதிய சாவு வீடு, எஸ்தர், செத்தால் பிணம், கலைஞனின் வீடு, பினா வியாபாரம், மணியக்கா, யாக்கோபு 4:6, மனிதாபிமானிகள், மனமாற்றம், ஒற்றை யானை ஆகிய பத்து சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இவை பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்டவை. காலத்தாலும், களத்தாலும் வேறுபட்டவை. பிரதேச, மாவட்ட மட்டப் போட்டிகளில் பரிசுபெற்றவை. 2009இல் தனது முதலாவது கவிதைத் தொகுதியை (விட்டு விடுதலை காண்) வெளியிட்ட மன்னார் அமுதன், 2011இல் அக்குறோணியையும், 2015இல் அன்னயாவினும் என்ற நூலையும் வெளியிட்டவர். இவரது நான்காவது நூலாகவும் முதலாவது சிறுகதைத் தொகுப்பாகவும் "ஒற்றை யானை" 2021இல் வெளிவந்துள்ளது. மன்னார் அமுதனின் முதலாவது சிறுகதையான "மனிதாபிமானிகள்" ஜீவநதி (கார்த்திகை 2010) இதழில் வெளிவந்தது. தொடர்ந்து இவரது படைப்புகள் மன்னா, மன்னல், தளவாசல், நடு ஆகிய அச்சு, இணைய இலக்கிய இதழ்களில் வெளிவந்திருக்கின்றன.

### 16639

**ஒன்றே வேறே.** ஸ்ரீரஞ்சனி. மட்டக்களப்பு: மகுடம் பதிப்பகம், இல. 90, பார் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2022. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496A, திருமலை வீதி).

156 பக்கம், விலை: ரூபா 850., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-624-5849-30-7.

இத்தொகுப்பில் சேணமற்ற அவசரம், நிழல் ஒன்று, புதர் மண்டியிருந்த மணவீடு, பேசப்படாத மௌனம், சங்கர், இனி, ஒன்றே வேறே, காலநதி, முகிலிருட்டில், யாருளர் என்றில்லை, ஒரு நாள், பயம் தொலைத்த பயணம், நிழலில் நிஜம் தேடி, இவளும் அவளும், மனிதமென்பது, பனையோலை இடுக்கில் ஆகிய 16 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. மகுடம் பதிப்பகத்தினரின் 64ஆவது வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஸ்ரீரஞ்சனி கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றார். அங்கு ஆசிரியராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றிவருகின்றார்.

## 16640

**கடைக்குட்டியன்.** வி.ஜீவகுமாரன். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, மார்கழி 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

xiv, 226 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-624-5881-16-1.

இந்நூலில் ஜீவகுமாரனின் இருபது கதைகளும் அக்கதைகளுக்கான பிற படைப்பாளிகளின் விமர்சனங்களும் இணைந்து காணப்படுகின்றன. மாதுளம் மொட்டுகள் (விமர்சனம்- சண்முகசிவா-மலேசியா), அன்னதானம் (விமர்சனம்-அருந்தவராஜா-சுவிஸ்), அம்மா (விமர்சனம்- இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்-லண்டன்), எங்கெங்கு காணினும் (விமர்சனம்-கே.எஸ்.துரை-டென்மார்க்), அலைகள் (விமர்சனம்-ரூபன் சிவா-பிரான்ஸ்), இலைமறை தாய் (விமர்சனம்-கௌரி சிவபாலன்-ஜேர்மனி), அவனும் அவளும் (விமர்சனம்-லதா உதயன்-சுவிட்சர்லாந்து), முற்பகல் (விமர்சனம்-பொ.கருணாகரமூர்த்தி-பேர்லின்), நகரம் (விமர்சனம்- ஆசி.கந்தராஜா-அவுஸ்திரேலியா), முன்னை இட்ட தீ (விமர்சனம்-மதியுகநாதன்- இங்கிலாந்து), நானும் என் சின்ன மச்சாளும் மருமகனும் (விமர்சனம்- விஷ்ணுவர்த்தினி பரணீதரன்-இலங்கை), கரும்புச்சாறும் வெள்ளிவிழாவும் (விமர்சனம்-நீலகண்டன்- இந்தியா), கடைக்குட்டியன் (விமர்சனம்-புத்திசிகாமணி-ஜேர்மனி), நோ மோர் பீலிங் (விமர்சனம்-வே.சங்கர்-இந்தியா), கிணற்றடி (விமர்சனம்-நிலக்கிளி பாலமனோகரன்-டென்மார்க்), வானுயர்ந்த கோயில்கள் (விமர்சனம்-கனகலதா-சிங்கப்பூர்), தெத்தெரி தெத்தெரி (விமர்சனம்-வவுனியூர் இரா. உதயணன்-இங்கிலாந்து), வி.ஜீவகுமாரனாகிய நான் (விமர்சனம்-நா.மணி-இந்தியா), கமலி அக்காவும் பாலன் அண்ணாவும் (விமர்சனம்-சிவசுப்பிரமணிய ஐயர்-கனடா), மரணப்படுக்கை (விமர்சனம்-கோகிலா மகேந்திரன்-யாழ்ப்பாணம்) ஆகிய சிறுகதைகளுடன் அக்கதைகளுக்கு விமர்சனம் எழுதியவர்களின் விபரத்தையும் அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளேன். இந்நூலாசிரியர் புலம்பெயர்ந்து டென்மார்க்கில் வாழ்ந்தாலும் ஈழத்து உணர்வுகள் கொஞ்சமும் குறையாது உணர்வுபூர்வமான படைப்புகளை மிகச் சிறப்பாக வழங்கி வருபவர். புகலிடத் தமிழர்களின் இரண்டும் கெட்டான் நிலை, உறவுகளிடையே ஏற்படும் உணர்வுச் சிக்கல்கள், உறவுப் பிறழ்வுகள், மேலைத்தேய சமூக நீரோட்டத்திற்குள் தம்மை இணைத்தும் இணைக்கமுடியாத தடுமாற்றங்கள், தலைமுறை இடைவெளியால் ஏற்படுகின்ற கருத்து முரண்பாடுகள் என இவரது

கதைகளின் களங்களும் பின்புலங்களும் சுவாரஸ்யமானவை. இந்நூல் 200ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

### 16641

**கதாஞ்சலி: சிறுகதை நூல்.** சித்திரவேல் அழகேஸ்வரன். கொழும்பு: சிவகாமி பதிப்பகம், 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2022. (கொழும்பு 13: லங்கா புத்தகசாலை, 529/7, கே.சிறில் சீ. பெரேரா மாவத்தை).

v, 45 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-98389-1-8.

இந்நூலில் அந்த நாள் ஞாபகம் வந்தது, கண்ணீர் பயணங்கள், காலமெல்லாம் காத்திருப்பான், உதவாத பணம், மாற்றமில்லா முடிவு, வறுமையின் பொம்மைகள், எப்படியாச்சும் காப்பாத்திடுங்க, காவல் தெய்வம், இரவில் மட்டும் தானா?, சக்கர வண்டிகள், தீர்ப்பு வரை தொடரும் தண்டனை, யார் நீதி வழங்குவார்?, ஒரு கை ஓசை, விழியோரம் வலியோடு, மரங்களின் மனங்கள் ஆகிய பதினைந்து சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

### 16642

**கதைச் சாரல்.** அகணி சுரேஸ் (இயற்பெயர்: சி.அ.சுரேஸ்). கனடா: சி.அ.சுரேஸ், 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2020. (கனடா: சாமந்தி இல்லம், மல்ரிசிமாட் சொலியூசன்ஸ், ஒன்ராரியோ).

77 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ., ISBN: 978-0-9869016-8-3.

இந்நூலில் ஆசிரியரின் ஏழு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. அந்தப் பதினேழு நாட்கள் (தமிழ் மிரர், கனடா), இழப்பு, முதல் தோல்வி, விளையாட்டால் வந்த வினை, கடமையுணர்வு (உதயன், கனடா. 2013), போதனை (கனடா தமிழ் எழுத்தாளர் இணையம். 2016), என்றென்றும் அவளோடு (பதிவுகள் டொட் கொம், கனடா) ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

### 16643

**கருகிய காலத்தின் நாட்குறிப்புகள்.** பிரான்சிஸ் அமல்ராஜ். வத்தளை: யாத்ரா வெளியீடு, இல. 37, ஸ்ரீ சித்தார்த்த மாவத்தை, மாபோல, 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2015. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185 கிராண்ட்பாஸ் வீதி).

(16), 189 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-84480-9-0.

உள்ளத்தின் வடுக்களை எழுத்துக்களால் தொடுத்து வடிவமைக்கப்பட்ட நூல். தான் பெற்ற அனுபவங்களுடன், சிறிது கற்பனையையும் சேர்த்து ஒரு சம்பவத்திற்கு உயிரும் உருவமும் தந்து சிறுகதைகளாக்கியிருக்கிறார். "கருகிய காலத்தின் நாட்குறிப்புகள்" எம் வாழ்வியல் சம்பந்தமானது. எம் ஒவ்வொருவருடைய தெரிந்த தெரியாத வலிகளையும் கண்ணீர்களையும் சுமந்து வருவது. போர்

விட்டுச்சென்ற இரத்த வாடைகளின் நாற்றத்திற்குள் உழன்று கிடக்கும் எம் மக்கள் மீதான வெளிப்படையான பார்வை இந்த நூல். ஆசிரியரின் கண்களும், காதுகளும், உணர்ச்சி நரம்புகளின் வேர்களும் தினம் தினம் அனுபவித்து வந்த அந்த கருகிய நாட்களின் வரிச்சித்திரம். தமிழ்த் தந்தி பத்திரிகையில் 36 வாரங்களாக நீண்ட தொடராக வெளிவந்த கதைகளைத் தொகுத்து ஒரு நூலாக வழங்கியிருக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 62682).

### 16644

**கரும்பனையும் கஸ்தானியனும்: சிறுகதைகளின் தொகுப்பு.** த.சாள்ஸ் குணநாயகம். நெதர்லாந்து: த.சாள்ஸ் குணநாயகம், van wasse anear Straat 19A, 3971 VL Driebergen, 1ஆவது பதிப்பு, 2013. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xiv, 82 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ., ISBN: 978-955-4100-80-0.

தாயக வாழ்விலும், புலம்பெயர் வாழ்விலும் தன்னால் மறக்கமுடியாத நினைவு களையும் அனுபவங்களையும் பன்னிரு கதைகளாக எழுதித் தொகுத்துத் தந்துள்ளார். ஈழத்தில் நெடுந்தீவு, பரந்தன் உள்ளிட்ட கரும்பனைகளின் பிரதேச வாழ்வோடு ஒன்றித்த தன் 29 ஆண்டுக்கால வாழ்வையும், பின்னர் அகதியாகிப் புலம்பெயர்ந்த ஐரோப்பிய நாடான நெதர்லாந்தில் பயன்தரும் பெருவிருட்சமாய் பரந்து வளரும் கஸ்தானியன்களின் பிரதேச வாழ்வையும் இணைத்த மிகுதி வாழ்வின் அடையாளமாய் இச்சிறுகதைத் தொகுதி மலர்ந்துள்ளது. இத்தொகுதியில் ஒரு வீதிக்கு வந்த மனிதன், அச்சமே முகங்களாய், இன்று புதிதாய் பிறந்து.., மலர்க் காடுகளும் முள்முடிகளும், நிலவு தொலைந்த மணல்வீடு, ஆறாவது ஒழுங்கைக் கடைசி வீடு, அடையாளம், வாடையில் எழுந்த அலை, பாலி ஆற்றங் கரைகளைத் தேடி, வாசல் தேடி யுத்தம், எல்லைகள், உறங்குநிலை உண்மைகள் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட கதைகள் அடங்கியுள்ளன.

### 16645

**கரை சேராப் படகுகள்.** திருநகர் நடராசா. பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், இணை வெளியீடு, கரைச்சி கலாசாரப் பேரவை, 1ஆவது பதிப்பு, வைகாசி 2015. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

x, 82 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4676-26-8.

வெளியீட்டுரை (கோ. நாகேஸ்வரன்), என்னுரை (திருநகர் நடராசா) ஆகியவற்றைத் தொடர்ந்து ஆசிரியர் எழுதியுள்ள சமூகம், தெளிவு, மௌனமே பேசு, நீரில் படரும் நிழல்கள், தெளிவு இல்லாத உண்மைகள், இப்படியும் சில மனிதர்கள், கரைசேராப் படகுகள், போரில் புலர்ந்த வாழ்வு, ஈர்ப்பு, குறையும் நிறைவும், மனித நேயம் ஆகிய சிறுகதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இளையதம்பி

நடராசா, கிளிநொச்சியில் திருநகர் கிழக்கை சேர்ந்தவர். பரவிப்பாஞ்சான் கிராமத்தில் பிறந்த இவர் கிளிவெட்டி மத்திய கல்லூரியில் பயின்றவர். 1968இல் தினபதி பத்திரிகையில் "வாடாமல்லிகை" என்ற சிறுகதையுடன் இலக்கிய உலகுக்கு அறிமுகமானவர். திருக்கோணமலை இலக்கிய ஒன்றியத்தின் வெளியீடாக இவரது 30 சிறுகதைகளின் தொகுப்பு "மண்ணின் வேர்கள்" என்ற தலைப்பில் முன்னர் வெளிவந்திருந்தது. இந்நூல் 45ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

**16646**

**கவசங் களைதல்.** எஸ்.நஸீறுதீன். வெல்லம்பிட்டியா: மூன்றாவது மனிதன் வெளியீட்டகம், 617, அவிஸ்ஸவளை வீதி, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2007. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xiv, 122 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-5881-46-8.

வெள்ளை நிறத்திலொரு பூனை, இருக்கும் இடத்தை விட்டு, தொலைந்தவர்கள், அகவெளி தீண்டல், அவளும் இரு குறோட்டன்களும், கண்டுகொண்டேன், என் ஆசிய முத்தே, அதனை ஆராதனை செய் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட எட்டுச் சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு இது. கவசங் களைதல் அவரது நான்காவது சிறுகதைத் தொகுதியாகும். எழுபதுகளிலிருந்து எழுதிவரும் நஸீறுதீன் இலங்கை தமிழ் சிறுகதைப் படைப்புலகில் விசேடமான கணிப்பிற் குள்ளாக்கப்பட வேண்டியவர். நல்லதோர் வீணை செய்தே (1996), பெண்ணே போற்றி (1999), மறைத்தலின் அழகு (2002) என்பன நஸீறுதீனின் முன்னைய சிறுகதைத் தொகுதிகளாகும்.

**16647**

**கற்பாறைகள் கண்ணீர் சிந்துகின்றன.** மண்டைதீவு கலைச்செல்வி. பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2022. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

xiv, 54 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-5881-55-0.

மண்டைதீவு கலைச்செல்வியின் சிறுகதைகள் அடங்கிய இத்தொகுப்பில் ஒரு கண்ணீர்ப் பூ, அவள் துயில் கொள்கிறாள், கல்லானாலும், கரை காணாத கப்பல், நீர்க்குமிழிகள், ரணங்கள், யாருக்காக அழுவான், கற்பாறைகள் கண்ணீர் சிந்துகின்றன, அவளுக்கும் ஒரு வாழ்வு, எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது, எத்தனை காலம் தான் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட பதினொரு கதைகள் அடங்கியுள்ளன. இந்நூல் 235ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

### 16648

**கறி வேப்பிலைகள் (சிறுகதைகள்).** குறிஞ்சித் தங்கம் (இயற்பெயர்: க.தங்கவேலு). சென்னை 600104: மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பிராட்வே, 1ஆவது பதிப்பு, ஜுலை 2021. (சென்னை 21: மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்).

144 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 22.5x15 சமீ.

1970ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையின் தேயிலைத் தோட்டங்களில் வாழ்ந்து, தங்களின் கடும் உழைப்பால் இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக தங்களை வரித்துக்கொண்ட மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கதைகள் அடங்கிய தொகுப்பு இது. இதில் மனம் விழித்தபோது, கறிவேப்பிலை, சின்னக் கங்காணிக்கு அப்படியும் ஒரு ஆசை, யாகாவாராயினும் தன் நிறைகாக்க, உரம், உலகத்திற்கு விடிகிறது, நீர்க்கோலம், நிரந்தர அமைதியைத் தேடி, வாழ்வின் விளிம்பிலே அவள், இவர்களும் திருடர்களே, மனித உருவில் ஆகிய 11 கதைகள் இடம்பெற்றுள்ளன.

### 16649

**கனவிலும் அழியாச் சின்னம்: சிறுகதைகள்.** கிண்ணியா ஹஸன்ஜி (இயற்பெயர்: ஐதுருஸ் அப்துல் ஹஸன்). கிண்ணியா-2: ஜீ.பப்ளிகேஷன், சமூகநல கலைக் கலா மன்றம், பிரதான வீதி, 1ஆவது பதிப்பு, 2013. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

xix, 137 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-4841-01-7.

திருக்கோணமலை மாவட்டத்தில் கிண்ணியாவைச் சேர்ந்த எழுத்தாளர் ஹஸன்ஜியின் 15 சிறுகதைகளைக்கொண்ட தொகுப்பு. நூலுக்கான அணிந்துரையை கலாபூஷணம் திருமலை நவம் அவர்கள் வழங்கியுள்ளார். "வதைகளிற் தேனை வைப்பது தேனி, கதைகளில் அதனை வைப்பது கதை ஞானி" என்ற தலைப்பில் கலாபூஷணம் ஏ.எம்.எம்.அலி அவர்களின் சிறப்புரையும், கலாநிதி கலாபூஷணம் கே.எம்.எம். இக்பால் அவர்களின் பாராட்டுரையும் இடம்பெற்றுள்ளன. இந்நூலில், சங்கமம், கனவிலும் அழியாச் சின்னம் தாஜ்மஹால், ஒரு ரூபாய் நாணயம், துணை ஒன்று கிடைத்தது, அழியாத உண்மைகள், புனிதத் துளிகள், புது வசந்தங்கள், திருந்தாத ஜென்மங்கள், ஒரு நல்ல முடிவு, மௌன கீதங்கள், மனச் சுமைகள், பயணம், தத்துப் பிள்ளை, பசுமை நினைவுகள், காலத்திரை ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன.

### 16650

**காணாமல் போனவன்.** செ.குணரத்தினம். மட்டக்களப்பு: செ.குணரத்தினம், அமிர்தகழி, 1ஆவது பதிப்பு, 2020. (மட்டக்களப்பு: எவகிறீன் அச்சகம், 185A, திருமலை வீதி).

vi, 44 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x16 சமீ., ISBN: 978-955-43203-4-5.

கிழக்கின் முக்கியமான படைப்பாளியான கவிஞர் செ.குணரத்தினம் அவர்களின் சிறுகதைப் படைப்பாக்கங்களைக் கொண்ட இத்தொகுப்பில் மனிதாபிமானம்

(ஞானம் பரிசுக்கதை), அது ஒரு கனாக்காலம் (வீரகேசரி), காணாமல் போனவன் (தினக்குரல் பரிசுக்கதை), நீரடித்து நீர் விலகாது (தினகரன்), தலைமுறைகளைத் தேடி (வீரகேசரி பரிசுக்கதை), வழி பிறந்தது (வீரகேசரி பரிசுக்கதை), கழித்த கல் (தினகரன்) ஆகிய சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இது ஆசிரியரின் மூன்றாவது சிறுகதைத் தொகுப்பாகும். விடிவுகள் அடிவானில், பூபாலி ஆகிய கதைத் தொகுதிகளையடுத்து இத்தொகுப்பு வெளிவருகின்றது. மட்டக்களப்பு பிரதேச கிராம மக்களது வெவ்வேறு காலகட்ட வாழ்வியலைப் பதிவுசெய்துள்ள சிறுகதைகள் இவை. "அது ஒரு கனாக்காலம்" பால்யகாலத்து நினைவுகளை அசைபோட்டுப் பெருமூச்செறிய வைக்கின்றது. "நீரடித்து நீர் விலகாது" ஒரு குடும்பத்திலேற்படும் பிரச்சினைகள் பற்றிய வித்தியாசமானதொரு பார்வையைத் தருகின்றது. "கழித்த கல்" பெற்றோரின் முதுமைக்காலம் பற்றியதாகும். "வழி பிறந்தது" மீனவக் குடும்பமொன்றின் வறுமையை மாத்திரம் காட்டாமல் வறுமையிலிருந்து மீண்டெழும் வழியைச் சொல்வதாக அமைகின்றது. "தலைமுறைகளைத் தேடி" மட்டக்களப்பில் வாழும் யாழ்ப்பாணப் பூர்வீகம் கொண்ட குடும்பத்தின் இளைய தலைமுறையொன்று தன் பூர்வீகம் தேடி யாழ்ப்பாணம் செல்வதாகச் சித்திரிக்கின்றது. "மனிதாபிமானம்" இன்று நீறுபூத்த நெருப்பாகக் கனற்றிருக்கும் மதமாற்றம் பற்றிப் பேசுகின்றது.

### 16651

**காத்திருந்த கண்கள்: இஸ்லாமிய சிறுகதைகள்.** காத்தான்குடி பௌஸ். பாணந்துறை: ஸெய்னி பதிப்பகம், 23/6, ஸைனி மன்ஸில், வத்தல்பொல வீதி, ஹேனமுல்ல, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2007. (Panadura: Far East Enterprise, 68, Yonaka Mawathe, Keselwatta).

xviii, 57 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 21.5x14 சமீ.

மௌலவி காத்தான்குடி பௌஸ் எழுதிய இஸ்லாமியச் சிறுகதைகள். முகவுரை (மொயின் சமீம்), அணிந்துரை (நயீமா சித்தீக்), ஆசிக்கவிதை (கவிஞர் சாந்தி முகைதீன்), சிறப்புரை (சுலைமா சமி இக்பால்), ஆசியுரை (M.H.M இல்யாஸ்), என்னுரை (காத்தான்குடி பௌஸ்) ஆகிய உரைகளைத் தொடர்ந்து, ஹஜ்ஜுக்குப் பயணம், மாமி வீட்டில் பெருநாள், பொறுமையின் பரிசு, மணமேடை கலைகிறது, பெருநாள் பரிசு, போதும் பள்ளித் தொழில், இப்படியும் ஒரு பெண், வீட்டுக்கு வந்த வெளிச்சம், காத்திருந்த கண்கள், சிறகடிக்கும் சிட்டுக்கள், இறைவன் செயல் ஆகிய பதினொரு சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

### 16652

**காப்பு: இலங்கைப்பெண் படைப்பாளர்களின் சிறுகதைகள்.** ஈழவாணி (தொகுப்பாசிரியர்). சென்னை 600093: பூவரசி வெளியீடு, இல.2, 2ஆவது தளம், 1ஆவது குறுக்குத் தெரு, புஷ்பா காலனி, சாலிகிராமம், 2வது பதிப்பு, மார்ச் 2019, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2018. (சென்னை 600093: பூவரசி வெளியீடு, புஷ்பா காலனி, சாலிகிராமம்).

(20), 21-544 பக்கம், விலை: இந்திய ரூபா 600., அளவு: 22.5x15.5 சமீ., ISBN: 978-93-81323-37-6.

இத்தொகுப்பில் ஈழத்துப் பெண் படைப்பாளர்களான யோகேஸ்வரி சிவப்பிரகாசம் (மலை முகடு சரிக்கப்படுகின்றது, அது உடைந்துவிடக் கூடாது), ந.பாலேஸ்வரி (எல்லைக்கோடு), நயீமா சித்தீக் (சாதுக்களும் மிரளும்), அருண் விஜயராணி (ரகசிய ரணங்கள், புதிய பாடம்), அன்னலட்சுமி இராஜதுரை (மண்ணில் வீழ்ந்த..), குந்தவை (யோகம் இருக்கிறது), கோகிலா மகேந்திரன் (மரணிப்பிலும் உயிர்க்கும்), பத்மா சோமகாந்தன் (காற்றில் கலந்த சோகம்), குறமகள் (பிரிவும் இன்பம் தரும், வாழ்க்கையின் திருப்பங்களும் வானத்துக் குழந்தைகளும்), தாமரைச்செல்வி (அடையாளம்), இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் (நாஸர்), கெக்கிறாவ ஸஹானா (ஜென்ம நிழல், தந்தைமார்களும் மகன்மார்களும்), தாட்சாயணி (காணாமல் போனவனுக்கு ஒரு கடிதம்), ஆதிலட்சுமி சிவகுமார் (தாய்), சுலைமா ஏ.சமி (இவர்களும் மனிதர்களே), தமிழ்நதி (தாழம்பூ, மாயக் குதிரைகள்), சுமதி ரூபன் (வடு, ஆதலினால் நாம்), ஆனந்தி (அவன் கேட்ட பாடலுக்கு அவள் சொன்ன வேதம்), லறீனா அப்துல் ஹக் (எருமை மாடும் துளசிச் செடியும்), சந்திரா இரவீந்திரன் (கலையரசி), சாந்தினி வரதராஜன் (றைட்டோ), நிவேதா உதயராயன் (வாழ்வு வதையாகி, ரயில் பயணம்), நெலோமி (கொழு கொம்பு), ஸ்ரீரஞ்சனி (உள்ளங்கால் புல் அழுகை, பச்சை மிளகாய்), ஈழவாணி (வெண்ணிறத் துணி, நிர்வாண முக்தி), பிரமிளா பிரதீபன் (ஒரு இரவு, நான்காம் வகுப்பு), வானமதி (அவளுக்கொரு கண்ணன், மரத்த பிணமல்ல மனுஷி), யாழ். தர்மினி பத்மநாதன் (எண்பது ரூபாய், வாடகை வீடு), தமிழினி ஜெயக்குமரன் (மழைக்கால இரவு), வெற்றிச் செல்வி (குங்கும கேள்வி), தமிழ்க் கவி (ஆளுக்கொரு நீதி), ஆரபி சிவகுகன் (இனிச் சிறகுகள் முளைக்கும்), ப.விஷ்ணுவர்த்தினி (கடலம்மா), ஷாமிலா ஷெரீப் (அபாயா மாலை), ஜெஸீமா ஹமீட் (ரொட்டித் துண்டு), கீதா கணேஷ் (தொலைவு, அவள் அழவேயில்லை), கௌரி அனந்தன் (உயிரற்ற ஜீவன்கள்), சர்மிளா வினோதினி (பூக்களைத் தொலைத்த பூந்தொட்டி, நீங்க போங்கோ ராசா), லக்ஷி குணரட்ணம் (விடியல், பயணம்), ஜெயசுதா பாபியன் (பெண்மை) ஆகியோரது 41 சிறுகதைகளும், புண்யகண்டே விஜேநாயக்க (குரங்குகள்), சுநேத்ரா ராஜகருநாயக்க (எஸ்.எம்.எஸ்.), நிர்மாலி ஹெட்டியாராய்ச்சி (விலை), சீதா குலதுங்க (டீச்சர்), விஜிதா பெர்னாண்டோ (சொந்த மண்) ஆகியோரின் ஐந்து சிங்கள மொழிபெயர்ப்புக் கதைகளுமாக மொத்தம் 46 தேர்ந்த சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

### 16653

**காளிமுத்துவின் பிரஜாவுரிமை, பழையதும் புதியதும்.** அ.செ.முருகானந்தன் (மூல ஆசிரியர்), கருணாகரன் (தொகுப்பாசிரியர்). அக்கரைப்பற்று-2: பேஜஸ் புத்தக இல்லம், 117, பட்டினப்பள்ளி வீதி, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (அக்கரைப்பற்று: நியூ செலெக்ஷன் ஒப்செட் பிரின்டர்ஸ், C.E.B. மின்சார நிலைய வீதி).

32 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x12 சமீ., ISBN: 978-624-6047-03-0.

இலங்கைத் தமிழ் சிறுகதை முன்னோடிகள் என்ற தொடரில் இரண்டாவதாக வெளிவரும் நூல் இது. அ.செ.முருகானந்தன் (1921-1997) இலங்கைத் தமிழ்ச் சிறுகதையின் தொடக்ககால எழுத்தாளர்களில் முக்கியமானவர். யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் பிறந்த இவர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் மாணவராக 1938இல் இருந்தபோதே ஈழகேசரியில் எழுதத் தொடங்கியவர். 1946-1948 இல் வெளிவந்த மறுமலர்ச்சி இதழின் இணையாசிரியராகச் செயற்பட்டவர். "காளிமுத்துவின் பிரஜாவுரிமை" என்ற கதை மலையக மக்களின் மீது திணிக்கப் பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தின் விளைவை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது. "பழையதும் புதியதும்" என்ற கதை, மனித வாழ்க்கையில் பழையதுக்கும் புதியதுக்குமிடையிலான ஊசலாட்டமும் போராட்டமும் எப்போதுமே இருக்கும் என்பதை தன் காலத்தின் நிகழ்வுகளோடு இணைத்து கதையாக்கியிருக்கிறார்.

## 16654

**கிழக்கின் நூறு சிறுகதைகள்.** கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம். திருக்கோணமலை: கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2021. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496A, திருமலை வீதி).

xii, 800 பக்கம், விலை: ரூபா 1450., அளவு: 26x18 சமீ., ISBN: 978-955-4628-78-6.

கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்த, வாழ்கின்ற பிரபலமான எழுத்தாளர்களின் பல காத்திரமான நூல்களைத் தெரிவு செய்து பதிப்பிக்கும், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக வெளியிடப்பட்டுள்ள நூறு சிறுகதைகள் கொண்ட தொகுப்பு நூல். இந்த நூலில் இடம்பெற்றுள்ள சிறு கதைகளைத் தொகுத்து, நூலுருவாக்குவதில் முக்கிய பங்காற்றியவர் எழுத்தாளர் உமா வரதராஜன். இந்த மாகாணத்தின் மூவின மக்களும் வெவ்வேறு வகைகளில் துன்பங்களை எதிர்கொண்டவர்கள் என்ற வகையில் அதன் பிரதிபலிப்புகளை இந்தத் தொகுப்பின் கதைகளில் காணலாம். கற்பனாவாதம், ஜீவனோபாய நெருக்கடிகள், தனிமனித ஆசாபாசம், பாலுணர்வு, மனிதநேயம், இன ஒற்றுமை, இன விரிசல், அரசியல், தத்துவ விசாரம், சமூக சீர்திருத்தம், பெண்மனம், பரீட்சார்த்த எழுத்து முறைகள் என்ற வகைமைகளுக்குள் கொண்டு வரக்கூடிய 100 கதைகளை இந்தத் தொகுப்பு உள்ளடக்கியுள்ளது. கிழக்குக்கேயுரிய சடங்கு சம்பிரதாயங்களையும், விருந்தோம்பல் பண்புகளையும், பலம், பலவீனங்களையும் நம்பிக்கைகளையும், நாட்டுப்புற இசை போன்ற வட்டார வழக்குகளையும், மாற்றமடைந்து வரும் பெண்களின் நோக்கு நிலையையும் இந்தக் கதைகளில் சந்திக்கலாம்.

## 16655

**கிழக்கு இலங்கை சிறுகதைகள்.** பொன்.குலேந்திரன். கனடா: குவியம் வெளியீடு, 2796, Keyness Crescent, Mississauga, Ontario, L5N3A1, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2020. (மின்நூல் வடிவம்).

171 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

*இலங்கையின் கிழக்கு மாகாணத்தை களமாகக் கொண்டு எழுதப்பட்ட 21 சிறுகதைகள் இத்தொகுப்பில் அடங்குகின்றன. இதில் சேருவலை சிறுத்தைகள், குடும்பிமலை புதையல், காத்தான்குடி ஜெசீமா, கஞுவம்மாவின் காதல், பாசிக்குடா பறங்கியர் இசைக்குழு, சம்மாந்துறை சங்கிலி சஹீட், ஆலமரத்து ஆவி, ஏறாவூர் தபால்காரன், முதல் சம்பளம், குமணகுளத்துக் கழுகுகள், யாழ்ப்பாணத்து மாப்பிள்ளை, டாக்சி டிரைவர், பலிக்கடாவான தமிழ் இந்துப் பெண், பொத்துவில் சுல்தான் போடியார், மூதூர் பணிப்பெண் படுகொலை, மருதமுனை மந்திரவாதி, ஆரையம்பதி உலக நாச்சியார், வெல்லாவெளி இரகசியம் ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன.*

## 16656

**கிளை தவறிய இலைகள்.** *பூநகர் பொன். தில்லைநாதன். கிளிநொச்சி: பூநகரி கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், பூநகரி, 1ஆவது பதிப்பு, 2019. (கிளிநொச்சி: வேழன் பதிப்பகம்).*

*60 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ.,* ISBN: *978-955-44465-0-2.*

*நினைவழியா நினைவுகள் (2005), உண்மைகள் ஊமையாவதில்லை (2013) ஆகிய சிறுகதைத் தொகுதிகளைத் தொடர்ந்து வெளிவரும் ஆசிரியரின் மூன்றாவது சிறுகதைத் தொகுதி இதுவாகும். கடந்த ஆறு ஆண்டுகளில் பல்வேறு ஊடகங்களிலும் வெளியான கலாபூசணம் பொன். தில்லைநாதனின் கதைகளின் தொகுப்பு இது. கிளை தவறிய இலைகள், ஊனம் சிறிது தாக்கம் பெரிது, கௌரவம், தீனிப் பேய்கள், என்றோ விதைத்தது, புத்திர பாசம், கொம்பிப் பசு, தாய்க்குத் தாயாக வேண்டும் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட எட்டுக் கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. வயது முதிர்ந்தவர்களின் இன்றைய நிலைமையினையும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களில் ஒருவனாகி அவர்களின் மனக்குமுறல்களை தனது அறிவார்ந்த தேடல் மூலம் கலைச் சுவை கலந்து இன்புற வைப்பதாக இச்சிறுகதைத் தொகுப்பு அமைந்திருக்கின்றது.*

## 16657

**குதிரை இல்லாத ராஜகுமாரன்.** *ராஜாஜி ராஜகோபாலன். நாகர்கோவில் 629 001: சுதர்சன் புக்ஸ், 74, மணிமேடை கீழ்ப்புறம், 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2015. (சென்னை 600 115:* Re Pro India Ltd*).*

*224 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *978-93-83839-06-3.*

*வடமராட்சி புலோலி கிழக்கில் பிறந்து கடந்த மூன்று தசாப்தங்களாக கனடாவில் வசித்துவரும் இப்படைப்பாளியின் 15 தேர்ந்த சிறுகதைகளின் தொகுப்பே இந்நூலாகும். தனது வாழ்வியல் அனுபவங்களைத் தனக்கேயுரிய பாணியில் நகைச்சுவை யாகவும் எளிய உரையாடல்கள் மூலமாகவும் கொண்டுசென்றுள்ளார். வடமராட்சிப் பிரதேசத்துக்கேயுரிய பேச்சு வழக்குச் சொற்பிரயோகங்கள் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. இந்நூலில் மேலும் சில கேள்விகள், பௌருஷம், பத்தியம், விழிப்புகள், கறுத்தக் கொழும்பான், நிழலைத் தேடும் நிழல்கள்,*

தெற்காலை போற ஒழுங்கை, மௌனத்தின் சப்தங்கள், ஆதலினால் காமம் செய்வீர், குதிரை இல்லாத ராஜகுமாரன், செம்பருத்தி, சுபத்திராவுக்கு என்ன நடந்துவிட்டது, கடவுளும் கோபாலபிள்ளையும், அந்த ஒருவனைத் தேடி, ஆசை வெட்கம் அறியும் ஆகிய கதைகள் இடம்பெற்றுள்ளன. எழுபதுகளில் ஈழத்து எழுத்துலகப் பரப்பில் ஆழமாய்த் தடம் பதித்த படைப்பாளிகளில் ஒருவரான ராஜாஜி இராஜகோபாலன் யாழ்ப்பாண மக்களின் வாழ்வியல் கோலங்களை அலாதியான வர்ணனைகளுடனும் நுட்பமான அவதானிப்புகளுடனும் தனக்கேயுரிய தமிழ் நடையிலும் இடையிடையே எள்ளலும் காதலும் கனிவும் ததும்பும் சொற்சித்திரங்களுடனும் கதைமாந்தர்களின் உரையாடல்களில் இயல்பாகவே இடம்பெறும் பிரதேசப் பேச்சு வழக்கில் வாசகர் மனம் கட்டுண்டு வாசிப்புச் சுகத்தை முழுமையாய் நுகரும்படியாகவும் நுட்பமாய்க் கதையை நகர்த்திச் செல்வதில் வெற்றிகண்டுள்ளார்.

### 16658

**குயில் குஞ்சுகள்.** இந்திராணி புஸ்பராஜா. திருக்கோணமலை: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2013. (மட்டக்களப்பு: எவகிறீன் அச்சகம், 185A, திருமலை வீதி).

90 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-4628-07-6.

ஊனமாகும் உறவுகள், ஒரு தாளம் தப்பாகிறது, குயில் குஞ்சுகள், இளமை எனும் புயற்காற்று, பக்கத்து வீட்டு பாலு மாமா, ஒரு தாயின் கனவுகள் கலைகின்றன, நியாயப்படுத்த முடியாத நியாயங்கள், பூக்களைப் பொசுக்காதீர்கள், போலிப் பூக்கள், கருகும் மொட்டுக்கள் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட பத்துச் சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. பெண்களையும் சிறுவர்களையும் சுற்றிப் பின்னப்பட்ட கதைகள் இவை. இருட்டில் வாழும் சிலரை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து அவர்களின் வாழ்வில் ஒளியேற்ற முனையும் ஒரு ஆசிரியரின் சிந்தனைப் போக்கு இக்கதைகளில் ஊடுபரவியுள்ளன.

### 16659

**குறிஞ்சாளினி (சிறுகதைகள்).** வண.ரீ.எஸ்.யோசுவா. கிளிநொச்சி: பச்சையிலை நம்பிக்கை வெளியீடு (Green Hope Pvt. Ltd), 1ஆவது பதிப்பு, 2020. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

viii, 135 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-7825-04-5.

தாட்சாயணியின் அணிந்துரையுடன் கூடிய இச்சிறுகதைத் தொகுப்பில், "மீண்டும் அங்கேயே வந்து நிற்கிறேன்" என்ற ஆசிரியரின் கவியுரையைத் தொடர்ந்து பச்சரிசி, தேனிலை, பாலிலை, குறிஞ்சாளினி, வேலி, உயிரிலை, தங்கத் தவசி, நாவலின் காதலன், ஆடாதோடையும் ஆட்டுக் கல்லும், தேங்காய்ப்பூ ஊர்ப் பறவை ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட பதினொரு கதைகள் இடம்பெற்றுள்ளன.

இவை இயற்கையோடு பின்னிப் பிணைந்த செடி கொடிகளும் மனிதனின் ஆரோக்கியத்தோடு எப்போதும் தொடர்புபட்டவையே என்ற கருத்தை வாசகனுக்குள் பதியம் வைக்கின்றன. கிராமப்புற மக்களின் மத்தியில் இன்னமும் தொலைந்து போகாத சில உணவுப்பழக்க வழக்கங்களை அழிவுறாமல் பேணி எதிர்கால சந்ததிக்குக் கடத்திவிடவேண்டும் என்ற வேணவா கதைகளினூடு வெளிப்படுகின்றது. ஒவ்வொரு கதைக்கு முன்னும் கதவைத் தட்டுகிற கதை சொல்லியின் மூலம் எளிமையான கிராமியத் தமிழில் ஒரு குடுகுடுப்பைக்காரனின் கிலுகிலுப்பைக் குரலையும் கவிவரிகளில் பதிவுசெய்து அக்கதைக்கான முன்னறிவிப்பொன்றையும் பதிந்து வைக்கிறார். நூலின் இறுதியில் "கதை கேட்டவர்கள் பகிர்ந்தவை" என்ற பிரிவில் மேற்படி கதைகளுக்கான வாசகர்களின் பின்னூட்டங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

## 16660

**குறை ஒன்றும் இல்லை.** துறையூரான் எம்.சிவானந்தன். மன்னார்: தழல் இலக்கிய வட்டம், 1ஆவது பதிப்பு, 2015. (மன்னார்: நித்திலம் பதிப்பகம்).

116 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-7716-00-8.

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும், தழல் இலக்கிய வட்டத்தின் முன்னணி செயற்பாட்டாளராகவும் திகழ்ந்துவரும் துறையூரானின் ஒன்பது சிறுகதைகளின் தொகுப்பு. இதில் திருவிழா வியாபாரம், அறுவடை, விடியல், பழைய பாட்டு, சாதி இரண்டொழிய, சங்குப்பிட்டி ஊடாக யாழ்ப்பாணம், மறுபக்கம், யாரொடு நோகேன், குறையொன்றும் இல்லை ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன. "மௌனப் பார்வை" என்ற குறுநாவல் வழியாக ஈழத்து இலக்கிய உலகில் அறிமுகமான துறையூரான் தான் எழுதிய சிறுகதைகளைத் தொகுத்து மீண்டும் மற்றொரு நூலை எமக்களித்துள்ளார்.

## 16661

**கூட்டுக் களவாணி: மலையகச் சிறுகதைகள்.** பெ.லோகேஸ்வரன். சென்னை 600 012: சரஸ்வதி புத்தகாலயம், எண். 28, 2வது சந்து, பிரிக்கிலின் ரோடு, ஓட்டேரி, 1ஆவது பதிப்பு, 2014. (சென்னை 600 094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

viii, 112 பக்கம், விலை: இந்திய ரூபா 60.00, அளவு: 18.5x12.5 சமீ.

மலையகத்தில் மஸ்கெலியா சென். ஜோசப் தமிழ் மகா வித்தியாலய பழைய மாணவரான நூலாசிரியர் நாவலப்பிட்டியை வாழ்விடமாகக் கொண்டவர். இந்நூலில் இவர் எழுதிய குப்பி லாம்பும் குடிலும், கூட்டுக் களவாணி, மாடி வீடு கிடைக்குமா?, பெட்ணி பெருமாள், சட்டைப் பொத்தான், புதிய சந்தா, ஒரு துளிப் பனிக்காதல், சாணி மருதாணி, தொழுவமும் தோஹா கட்டாரும், தெருக்கலைகள் ஏ.சி.மண்டபத்தில், மகா கலைஞன், யூ.எஸ்.ஏ. மாப்பிள்ளையும் பிருந்தாவும், வீடு கட்டப் போய் ஆணி வாங்கி வந்தாள் ஆகிய மலையகப் பின்னணியில் எழுதப்பட்ட பதின்மூன்று சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70498).

**16662**

**சதிவிரதன் சிறுகதைகள்.** குரு அரவிந்தன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1ஆவது பதிப்பு, 2019. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆஃப்செட்).

208 பக்கம், விலை: இந்திய ரூபா 130.00, அளவு: 19x13.5 சமீ.

சதி விரதன் (உதயன்-கனடா), புல்லுக்கு இறைத்த நீர் (ஆனந்த விகடன்), சுமை (C.T.R.வானொலி), ஹரம்பி (ஆனந்த விகடன்), யார் குழந்தை? (உயிர் நிழல்), அட மானிடா நலமா? (கூர்-கனடா), சிந்துமன வெளி (கூர்-கனடா), சௌப்படி (இனிய நந்தவனம்), வித்தாரம் (தூறல்), 401 (உதயன்-கனடா), குட்டித் திமிங்கிலம் (இனிய நந்தவனம்), வர்ணஜாலம் (யுகமாயினி), நங்கூரி (விகடன் தீபாவளி மலர்), சிவப்புப் பாவாடை (கணையாழி), பனிச் சறுக்கல் (உதயன்-கனடா), உறவுகள் தொடர்கதை (அன்புநெறி), ரிலிக்கும் ஒரு கொலையாளியா? (தாய்வீடு-கனடா) ஆகிய 17 சிறுகதைகள் இத்தொகுப்பில் உள்ளடங்குகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70500).

**16663**

**சமம் உருவகக் கதைகள்.** செங்கதிரோன் (இயற்பெயர்: த.கோபாலகிருஷ்ணன்). மட்டக்களப்பு: செங்கதிர் இலக்கிய வட்டம், 607, பார் வீதி, 1ஆவது பதிப்பு, ஜுன் 2022. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496 A, திருமலை வீதி).

x, 70 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 450., அளவு: 21.5x16 சமீ., ISBN: 978-624-6177-03-4.

மட்டக்களப்பில் கலை இலக்கியச் செயற்பாடுகளில் முனைப்புடன் செயற்படு பவர்களில் செங்கதிரோன் கோபாலகிருஷ்ணன் முதன்மையானவர். அம்பாறை மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டாலும், மட்டக்களப்பில் வாழ்ந்து கிழக்கு மாகாணத்திற்கும் அப்பால் தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் தனது தமிழ் ஆக்க இலக்கியப் பணிகளை வியாபித்து வருபவராவார். உருவகக் கதைகள், பிற இலக்கியங்களில் இருந்து வேறுபடும் இலக்கிய உருவாக்கமாகும். அது மாந்தனுக்கு வெளியே உள்ள அனைத்திலும் மாந்தனைக் காண்கின்றது. விலங்குகள், பறவைகள், கற்கள், முட்கள் இவையெல்லாம் உருவகக் கதைகளில் மாந்தரைப் போலவே பேசுகின்றன. மாந்தரை நெறிப்படுத்துகின்றன. சமம், கவனம், அவசரம், தியாகம், வீம்பு, சபலம், பரஸ்பரம், நிறைகுடம், சுயம், தடுப்பு, தாபம், மீறல், வலை, பலவீனம், பரிமாற்றம், தம்பட்டம், தெளிவு, புரிதல், அழகு, தாய்மை, நட்பு, தண்டனை, வலி, இனம், தொண்டு, கைம்மாறு, உழைப்பு, பாடம், அறியாமை, சுபாவம் ஆகிய 30 உருவகக் கதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

## 16664

**சாணையோடு வந்தது: சிறுகதைத் தொகுதி.** யூ.எல்.ஆதம்பாவா. சாய்ந்தமருது-9: யூ.எல்.ஆதம்பாவா, முகாமைத்துவ தொழில்நுட்பக் கல்லூரி, 183, பிரதான வீதி, 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2007. (சாய்ந்தமருது: ரோயல் ஓப்செட் அச்சகம்).

104 பக்கம், விலை: ரூபா 240., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-50411-0-2.

ஆசிரியரின் இரண்டாவது சிறுகதைத் தொகுதி இதுவாகும். இதில் நிலை மாறும் போது, பிராயச்சித்தம், தாடி, அந்த மாணவன், மனிதர்களில் இவன் ஒரு ரகம், திருமணம், நல்ல பிள்ளை, அந்த ஏழு நாட்கள், சாணையோடு வந்தது.. ஆகிய ஒன்பது சிறுகதைகள் அடங்கியுள்ளன. நாடறிந்த சிறுகதை எழுத்தாளரும், கலாபூசணமும், ஓய்வுபெற்ற ஆசிரியருமான யூ.எல்.ஆதம்பாவா சாய்ந்தமருது சாஹிறா கல்லூரியில் நீண்ட காலம் ஆசிரியராகவும், பகுதி தலைவராகவும் கடமையாற்றிவந்தவர். 1961இல் இலக்கியப் பிரவேசம் செய்த இவர், 1999இல் இலங்கை அரசின் கலாபூஷணம் விருதினையும், 2005இல் வடக்கு-கிழக்கு மாகாண சபை ஆளுநர் விருதினையும் பெற்றவர். இவர் 02.06.2020 அன்று காலமானார்.

## 16665

**சாயல்.** நீர்வை பொன்னையன். கொழும்பு 6: இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம், 18, 6/1, கொலிங்வுட் பிளேஸ், 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2019. (கொழும்பு 6: R.S.T.என்டர்பிரைசஸ், 114, டபிள்யூ. ஏ.டீ சில்வா மாவத்தை).

87 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-1810-31-3.

இத்தொகுப்பில் நீர்வை பொன்னையன் எழுதிய மீட்பு, தரிசனம், முனைப்பு, நினைவுகள் அழிவதில்லை, இந்திரா, வந்தனா, சாயல் ஆகிய ஏழு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கதைகள் யாவும்ஆசிரியர் 1950-1957 காலப்பகுதியில் கல்கத்தாவில் வாழ்ந்த வேளையில் அங்கு பெற்ற அனுபவங்களின் வெளிப்பாடாக அமைந்துள்ளன. தலைப்புக் கதையான "சாயல்" ஒரு பெண் டாக்டரின் கண்களுக்கூடாக, கல்லூரிக் காலத்தில் போராட்டக் குணத்தோடு இயங்கிய அவரது சிற்றன்னையை இனம்காணும் வித்தியாசமான கதையாக அமைகின்றது. "வந்தனா"வில் வறுமைப்பட்ட திறமைசாலிக்கு விடுதியில் இடமளித்து பின் ஒரு விலைமகளினால் போஷிக்கப்பட்டு தனது இலக்கை அடைந்து புவியியல் விஞ்ஞான ஆய்வாளனாக வெளிப்படும் ஒருவனைத் தரிசிக்கலாம். கலெக்டரான தன் சகோதரனுக்கு எதிராக அகதிகளுக்கு வாழ்வளிக்கும் வெகுஜன இயக்கப் பிரதிநிதியான இளம்பெண்ணொருத்தி வெற்றிவாகை சூடுவதை "இந்திரா"வில் காணமுடிகின்றது.

## 16666

**சிலங்கிரி (கதைகள்).** மனோ சின்னத்துரை. (இயற்பெயர்: சின்னத்துரை மனோகரன்). சென்னை 600 005: கருப்புப் பிரதிகள், பி 55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2022. (சென்னை 600005: ஜோதி என்டர்பிரைசஸ்).

108 பக்கம், விலை: இந்திய ரூபா 120.00, அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-93-95256-19-3.

பிரான்சில் புலம்பெயர்ந்து வாழும் மனோகரன் முன்னர் "கொரோனா வீட்டுக் கதைகள்" என்ற தொகுப்பின் மூலம் ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் அறிமுகமானவர். இரண்டாவது தொகுப்பான இந்நூலில் யார் மீதும் குற்றமில்லை, கரு, அப்பா பிறந்த நாள், சொந்தக்காரர், குழப்படி, பிரம்பு, சிமிலா, ராமாயி திரும்பி வரவேயில்லை, சரா அண்ணர் ஏன் இப்படி நடந்துகொண்டார்?, அழு, மூளைச்சிறை, பேரப்பிள்ளை, தண்டனை, விஸ்வாவின் கதை, விஸ்வாவின் கதை தொடர்ச்சி, இப்படிக்கு நாங்கள், சிலங்கிரி, ஆகிய 17 கதைகள் இடம் பெற்றுள்ளன.

## 16667

**சிறகு விரிக்காத பறவைகள்.** நாவற்குழி சு.சிவராஜா. யாழ்ப்பாணம்: இலங்கை தேசிய பார்வையற்றோர் சம்மளனம், வட மாகாணக் கிளை, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2011. (யாழ்ப்பாணம்: தெல்லி அச்சகம், கொக்குவில்).

x, 78 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ.

இலங்கை தேசிய பார்வையற்றோர் சம்மேளன அங்கத்தவரான நாவற்குழி நடராஜாவின் சிறுகதைத் தொகுதி இதுவாகும். இத் தொகுதியினூடாக, ஆசிரியர் அங்கக் குறைபாடுகளோடு வாழ்கின்ற சக மனிதர்களின் வாழ்வியல் சூழமைவுகளை உள்ளீர்த்து உணர்வுபூர்வமான சிறுகதைகளாக அவற்றை வெளிப்படுத்தியுள்ளார். மாற்றுத்திறனாளிகள் என்ற தற்கால அடையாளப்படுத்தலுடன் வாழ்ந்துகொண்டிருக்கின்ற சக மனிதர்கள் எதிர்கொள்கின்ற பல்வேறு நாளாந்தப் பிரச்சினைகளையும் உள்வாங்கி, அவற்றைத் தன் நேர்கொண்ட பார்வையில் பிரதிபலிக்கின்ற வகையில் இச் சிறுகதைகளைத் தந்திருக்கிறார். இத்தொகுதியில் ஒரு புதிய தரிசனம், வெள்ளை அறிக்கை, வீசும் காற்றாக வருவாரோ?, கண்ணீர் அட்சதைகள், ஒரு வெண்கட்டி தாலாட்டுப் பாடுகின்றது, அடிடா அடிடா நாக்கு மூக்கா, உன்னைச் சொல்லிக் குற்றம் இல்லை, படுதடிகள் துளிர்ப்பதில்லை, அவனே நெய்வேத்திய மானவன், சாக்கடையில் ஒரு தாமரைப்பூ, புயலுக்குப் பின்னே அமைதி, ஒரு புதிய பயணம், அம்மாவிற்குள் ஆயிரம் இருக்குது ஆகிய 13 கதைகள் இத்தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 16668

**சிறுகதை பயிற்சிப் பட்டறை: தெரிவு செய்யப்பட்ட சிறுகதைத் தொகுப்பு.** கலாசாரப் பேரவை. வாழைச்சேனை: கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், கோறளைப்பற்று, 1ஆவது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (மட்டக்களப்பு: தமிழச்சு-அச்சகமும் பதிப்பகமும், 240, திருமலை வீதி).

32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

இந்நூலில் சிறுகதைப் பயிற்சிப் பட்டறையின் தேவை கருதித் தெரிவுசெய்யப்பட்ட காட்டுப் பூனைகளும் பச்சைக் கிளிகளும் (தி.ஞானசேகரன்), இளவரசி (ஓட்டமாவடி அரபாத்), தாய் (வ.அ.இராசரத்தினம்), குண்டு வெடிப்பு (குமார் மூர்த்தி), படுவான்கரை (சக்கரவர்த்தி), கதையும் சிறுகதையும்: சிங்கமும் கரடியும், போகாமல் வந்தேனே (செ.யோகராசா) ஆகிய சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. பயிற்சிப் பட்டறையின் விரிவுரையாளராக திரு. செ.யோகராசா (தலைவர், மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, செங்கலடி) அவர்கள் பணியாற்றியிருந்தார்.

## 16669

**சுபாவம் (சிறுகதைகள்).** க.சட்டநாதன். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, ஜுன் 2020. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

viii, 98 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-0958-38-2.

யாழ்ப்பாணத் தீவகத்தில் வேலணைக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரான கனகரத்தினம் சட்டநாதன், தமிழகத்தில், சென்னை விவேகாநந்தாக் கல்லூரியில் பயின்று, B.Sc. பட்டம் பெற்றவர். ஆசிரியப் பணியை மேற்கொண்டவர். நவீன கலை இலக்கியத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவர் மார்க்ஸிம் கோர்க்கி, அன்டன்செக்கோவ், புதுமைப்பித்தன், கு. ப. ராஜகோபாலன், தி.ஜானகிராமன், ஜெயகாந்தன் முதலியவர்களின் ஆளுமைகளால் ஈர்க்கப்பட்டவர். இவரது முதற் படைப்பான "நாணயம்" என்ற சிறுகதை 1970ஆம் ஆண்டு வீரகேசரி இதழில் வெளிவந்தது. படைப்பு முயற்சியோடு பத்திரிகைத் துறையிலும் இவர் பணியாற்றியுள்ளார். 1972-74 காலப்பகுதியில் ஈழத்தில் வெளிவந்த "பூரணி" என்ற இலக்கிய இதழின் இணையாசிரியர்களில் ஒருவராகவும் இவர் திகழ்ந்துள்ளார். மனிதநேயம், அதனை அநுபவ முழுமையுடன் வாசகனுக்குத் தொற்ற வைக்கவல்ல சொல்நயம் என்பன இவரின் படைப்பாளுமையின் சிறப்புக் கூறுகள். அகமனப் போராட்டங்களை, குறிப்பாக ஆண்-பெண் உறவுச் சிக்கல்களை சமூகப் பிரச்சினைகளை,எந்தச் சிடுக்குமில்லாமல் எளிமையாக முன்வைப்பதும் வாழ்வின் அனுபவங்கள் கதைகளில் உயிர்பெறுவதும் தனித்துவமாக இவரது கதைகளில் வந்துள்ளன. இத்தொகுதியில் அவர் எழுதிய கனவு மெய்ப்பட வேண்டும், தீர்மானமாய், தடை, சருகு, குற்றமும் தண்டனையும், செல்லும் திசை, சுபாவம், விபத்து, ஆறுதல், கனவும் பொழுதுகள், தனியன்கள் ஆகிய பதினொரு கதைகள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 150ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

## 16670

**சுருட்டு புகைத்துக் கொண்டிருந்தார் தோழர் சேகுவேரா: சிறுகதைகள்.** சக்கரவர்த்தி (இயற்பெயர்: சுதாகர்). யாழ்ப்பாணம்: ஆதிரை வெளியீடு, திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஜனவரி 2022. (அச்சக விபரம் தரப்படவில்லை).

222 பக்கம், விலை: இந்திய ரூபா 220.00, அளவு: 20x13 சமீ., ISBN: 978-624-97325-3-7.

போங்கடா டேய், மாயன், குவெர்னிகா, ஓ Miss சோமாலியா, Lime Ridge, சத்திரியம், உரத்துக் கேட்கும் மௌனம், வெப்பச் சூத்திரம், அலக்ஸான்ட்ரியா, Operation Mongoose ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட சக்கரவர்த்தியின் சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மட்டக்களப்பு, தேத்தாதீவிலிருந்து புலம் பெயர்ந்து கனடாவில் வதியும் சக்கரவர்த்தியின் இயற்பெயர் சுதாகர். இவருடைய "என்ட அல்லாஹ்" என்ற சிறுகதை மிகவும் விரிந்த வாசகர் தளத்தைச் சென்ற டைந்தது. இவரது "யுத்த சன்யாசம்" என்ற கவிதை நூலும், "யுத்தத்தின் இரண்டாம் பாகம்" என்ற சிறுகதைத் தொகுப்பும் இதுவரை வெளியாகியுள்ள நிலையில் இச்சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது.

## 16671

**தவம்.** ராம. சுப்பிரமணியம். அட்டன்: இலக்கிய வட்டம், 1ஆவது பதிப்பு, மே 1968. (அட்டன்: ந.அ.தியாகராசன், மவுண்ட் அச்சகம், டண்பார் வீதி).

(2), 8 பக்கம், விலை: 25 சதம், அளவு: 18x12 சமீ.

"தவம்" என்னும் இச்சிறுகதையை எழுதியுள்ள திரு.ராம.சுப்பிரமணியம் அவர்கள், அனுபவம் மிக்க மலையக எழுத்தாளர். பல சிறுகதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார். வீரகேசரி நடாத்திய சிறுகதைப் போட்டியிலும், இலங்கை வானொலி நடாத்திய நாடக சிறுகதைப் போட்டிகளிலும் பரிசுகள் பெற்றுள்ளார். துடிதுடிப்பும் ஆர்வமும் மிக்க இவ்விளைஞர் கற்பனைக்கும் கருத்துக்கும் எழுத்திலும் பேச்சிலும் வளமூட்டுபவர். இவ்வன்பரின் சிறுகதையை வெளியிடுவதில் மலையக எழுத்தாளர் மன்றத்தின் அட்டன் இலக்கிய வட்டம் பெருமையடைகின்றது. (முன்னுரையில், ந.அ.தியாகராசன். 20.05.1968)

## 16672

**தாலி: சிறுகதைகள்.** யோகேஸ்வரி சிவப்பிரகாசம். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

iv, 100 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-5881-69-2.

இந்நூலில் எண்டாலும் எனக்குப் பயம், தலை இரண்டு, மலைமுகடு சரிக்கப்படு கிறது, தாலி, முறுவலிக்கிறான், வேலி மூலை மூலிகை, காணவில்லை, சரக்க இக்கதவம் திறப்பிம்மினே, இன்றும் இன்னும், மயான காண்டம் ஆகிய பத்து சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. யோகேஸ்வரி சிவப்பிரகாசம் 13.11.1948இல் பிறந்தவர். பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் பாடசாலைக் கல்வியை பூர்த்திசெய்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப்பட்டதாரியானவர். மக்கள் வங்கியின் முகாமையாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். தற்போது லண்டனில் புலம்பெயர்ந்து வாழ்கின்றார். 1996இல் இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு வெளிவந்தது. தாலி இவரது பதின்மூன்றாவது நூலும் ஆறாவது சிறுகதைத் தொகுப்புமாகும். இந்நூல் 183ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

## 16673

**தாவாடிக்காரர்கள் (சிறுகதைகள்).** க.சட்டநாதன். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, ஆனி 2022. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

viii, 93 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-5881-46-8.

க.சட்டநாதன் எழுதிய தாவாடிக்காரர்கள், தாபம், இருமுகம், நினைப்பதெல்லாம், வாழ்தல் என்பது, இனிது இனிது வாழ்க்கை இனிது, அன்பு வழி, நிரந்தரி, வாழ்க்கை வசப்படும், ஏறுமுகம், அவரவர் பார்வையில் ஆகிய பதினொரு சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ஜீவநதியின் 226ஆவது வெளியீடாக இச்சிறுகதைத் தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது. எழுபதுகளில் இலக்கிய உலகில் காலடி வைத்த சட்டநாதன் யாழ்ப்பாணம்- வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஓய்வுபெற்ற ஆசிரியரான இவர் முன்னர் "பூரணி" என்ற கலை இலக்கிய காலாண்டுச் சிற்றிதழின் இணையாசிரிய ராகவும் பணியாற்றியவர்.

## 16674

**திக்கற்றவர்கள்.** சி.சிறீறங்கன். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, சித்திரை 2022. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

x, 76 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-5881-44-4.

சி.சிறீறங்கன் யாழ்ப்பாணம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் வணிகத்துறை ஆசிரியராக கடமையாற்றி வருகிறார். 2019இல் இவரது "சிவப்புக் கோடு" சிறுகதைத் தொகுதி ஜீவநதியின் 130ஆவது பிரசுரமாக வெளிவந்திருந்தது. இந்நூல் 224ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது. இத்தொகுதியில் அப்பாவின் மனசு, காதலாகிக் கசிந்து, தப்புத் தாளங்கள், அவர்கள் அப்படித்தான், அன்பு, புது மாதிரி, திக்கற்றவர்கள், தாயுள்ளம், தாய்மை, கொரோனா தரும் பாடம், காலத்தின் தீர்ப்பு, திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது ஆகிய 12 கதைகள் இடம்பெற்றுள்ளன.

## 16675

**துறவு.** க.தி.சம்பந்தன் (மூலம்). செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், க.முருகதாஸ் (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1ஆவது பதிப்பு, ஜுலை 2004. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

172 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ., ISBN: 955-1013-07-7.

ஈழத்துச் சிறுகதைத்துறையின் வளர்ச்சிக்கு உரமூட்டிய திருமூலர்களுள் சி.வைத்தியலிங்கம், இலங்கையர்கோன் ஆகியோருடன் க.திருஞானசம்பந்தனும் (க.தி.சம்பந்தன்) இணைந்து போற்றப்படுகின்றார். 1913இல் பிறந்த இவர் சம்பந்தன் என்ற பெயரில் படைப்புலகில் தன் 25ஆவது வயதில் அறிமுகமாகியவர்.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் மாணவர். பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணியாற்றியவர். இவர் எழுதிய 16 சிறுகதைகளும் தொகுக்கப்பட்டு இந்நூலுரு வாகியுள்ளது. தேர்ந்தெடுத்த சொற்களை வைத்துக்கொண்டு ஓரிரு கதாமாந்தர்களை நடமாடச்செய்து அற்புதமான கதைகளைப் படைப்பவர் இவர். இத்தொகுப்பில், மகாலக்ஷ்மி, மதம், சலனம், விதி, தூமகேது, இரண்டு ஊர்வலங்கள், அவள், துறவு, சபலம், பிரயாணி, மனிதன், தாராபாய், புத்தரின் கண்கள், கூண்டுக்கிளி, கலாக்ஷேத்திரம், வாழ்வு ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட ஆசிரியரின் கதைகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

### 16676

**தேனகச் சிறுகதைகள்.** த.மலர்ச்செல்வன் (தொகுப்பாசிரியர்). மட்டக்களப்பு: பிரதேச செயலக கலாசாரப் பேரவை, மண்முனை வடக்கு, 1ஆவது பதிப்பு, ஜுலை 2008. (அக்கரைப்பற்று: நியூ செலெக்ஷன் ஒப்செட் பிரின்டர்ஸ், C.E.B. மின்சார நிலைய வீதி).

(6), 139 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை வருடம் தோறும் முத்தமிழ் விழாவினையும் அதையொட்டி தேனக மலரினையும் வெளியிட்டு வருகின்றது. இம்முறை 1994 முதல் 2007 வரையிலான காலப்பகுதிகளில் வெளிவந்த தேனக மலர்களில் இடம்பெற்றிருந்த சிறுகதைகளைத் தொகுத்து தனித் தொகுதியாக வெளியிட்டுள்ளது. இவற்றில் முத்தமிழ் விழாவிற்கான திறந்த மட்டப் போட்டிகளில் முதல் பரிசு பெற்ற கதைகளும், சிறப்புச் சிறுகதைகளும் அடங்குகின்றன. எல்லைகள் தாண்டி, பெரிய எழுத்து, பரிநிர்வாணம், ஒரு நிலவுச் சிறையும் இரண்டு ஆயுட் கைதிகளும், ஆத்மவிசாரம், கறுப்பு நாய், வரம், இறக்கை விரிக்கும் மரம், கொள்ளிவாய்ப் பிசாசுகள், நெஞ்சு பொறுக்குதில்லையே, மண்ணாசை, அரசியின் விருந்து, இது ஒன்றும் புதிய கதை அல்ல, யாருமிங்கு தீர்ப்பிடலாம், அப்பா, ஆசாரங்கள், உரம், நட்பொன்று நாடகமாகிறது ஆகிய 18 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

### 16677

**தைலம்: அவுஸ்திரேலியக் கதைகள்.** எஸ்.கிருஷ்ணமூர்த்தி (தொகுப்பாசிரியர்). சென்னை 600093: வேரல் புக்ஸ் வெளியீடு, 6, 2ஆவது தளம், காவேரி தெரு, சாலிகிராமம், 1ஆவது பதிப்பு, ஜனவரி 2023. (அச்சக விபரம் தரப்படவில்லை).

142 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 22x14 சமீ., ISBN: 978-81-960544-3-4.

இத்தொகுப்பிலுள்ள சிறுகதைகள் அவுஸ்திரேலியச் சூழலையும் அங்குள்ள வாழ்க்கையையும் சாராம்சப் படுத்துகின்றன. இவை வெவ்வேறு கோணங்களில், புதிய கண்ணோட்டத்தில் எழுதப்பட்டவை. தென் துருவத் தேவதை (கன்பரா யோகன்), பொதுச் சுடர் (தெய்வீகன்), தொத்து வியாதிகள் (அருண் விஜயராணி), பனை (அசன்), புதர்க் காடுகளில் (முருகபூபதி), வெளவால்கள் (நடேசன்), ஒரு

வீடு இரு வேறு உலகம் (எஸ்.கிருஸ்ணமூர்த்தி), விளைமீன் (ஜே.கே), பறவைகளின் நண்பன் (தாமரைச் செல்வி), கங்காரு (ஆசி கந்தராஜா), விளக்கின் இருள் (கே.எஸ்.சுதாகர்), அவள் ஒரு பூங்கொத்து (தேவகி கருணாகரன்) ஆகிய பன்னிரு கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சிறுகதை, பத்தியெழுத்து, மற்றும் சினிமா விமர்சனம் என எழுதிவரும் கிருஷ்ணமூர்த்தி, அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்திலும் அங்கம் வகிக்கின்றார். இவரது படைப்புகளின் தொகுப்பாக திரைக்கண் (சினிமா விமர்சனம்), நோ போல் (சிறுகதைகள்), மறுபக்கம் (பத்திகளும் கதைகளும்) ஆகிய மூன்று நூல்கள் முன்னதாக வெளிவந்துள்ளன. யூகலிப்டஸ் மரங்கள் அவுஸ்திரேலியாவில் பரவலாகக் காணப்படும் மரமாகவும் அந்த நாட்டுக்கே பிரத்தியேகமான குவாலா கரடிகளின் வாழ்விடமாகவும் காணப்படுகின்றது. அந்த மரங்களிலிருந்து சாரமாகப் பெறப்படும் தைலத்தைப் போன்று இங்குள்ள மக்களின் வாழ்க்கைச் சாராம்சத்தைப் பிரதிபலிக்கும் வகையில் தொகுக்கப்பட்ட இச் சிறுகதைகளின் தொகுப்பிற்கு "தைலம்" என்று பெயரிட்டுள்ளமை சாலப்பொருந்துகின்றது.

## 16678

**தொல்லையினும் பிறவி (சிறுகதைத் தொகுப்பு).** சு.சிவராசா. யாழ்ப்பாணம்: நல்லூர் இலக்கிய நண்பர்கள், 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2005. (யாழ்ப்பாணம்: போஸ்கோ அச்சகம், 252 பருத்தித்துறை வீதி, நல்லூர்).

vi, 99 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

இந்தப் படைப்பாளி சமூகத்தைப் பார்த்தவாறு எழுதாது, கேட்டுணர்ந்தவாறு படைத்துள்ளார். இவரது புறவொளி மங்கியிருந்தாலும், அகவொளியின் தரிசனங்களாக இத்தொகுதியிலுள்ள சிறுகதைகள் அமைந்துள்ளன. நாவற்குழியைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவராசா 1949இல் பிறந்தவர். கிழக்குப் பல்கலைக் கழகத்தில் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராக, தனது கண்பார்வையை இழக்கும் வரை, 1985 வரை பணியாற்றியுள்ளார். 1995இற்குப் பின்னர் எழுத்துலகில் பிரவேசித்தவர். சஞ்சீவியில் இவரது முதற் சிறுகதை வெளிவந்தது. தொடர்ந்து அமுது, சுந்தரன், ஈழநாதம் முதலான இதழ்களில் இவரது சிறுகதைகள் பிரசுர மாயின. இவரது சிறுகதைத் தொகுதியான "நம்பிக்கை பிறந்தது" 1999 இல் வெளிவந்தது. அதன் பின்னர் "முடிவில்லாத ஆரம்பங்கள்" என்ற குறுநாவல் தொகுதி வெளிவந்தது. "தொல்லையினும் பிறவி" சிவராசாவின் மூன்றாவது நூ லாகவும், இரண்டாவது சிறுகதைத் தொகுப்பாகவும் 2005இல் வெளிவந்துள்ளது. இத்தொகுதியில் நெஞ்சின் நிழல், சீற்றில் இருக்கிறான், மீண்டும் ஒரு அகல்யா, இது ஒரு வம்புக் கதை, வனவாசம், வந்த வழியைப் பார்த்து, மூன்றாம் தரப்பு, எண்ணத்தின் வண்ணம், திரும்பாத ஊருக்குத் திறந்த பாதை, கணபதி கலியாணம், பட்டோலை, ஒரு சோக்கான காதல் கதை, தரை இறங்குகின்ற புறாக்கள், வினை விதைத்தவன், கணிப்பீட்டிற்காகக் காத்திருக்கிறாள், இருட்டில் ஒரு அழகான கதை, புறணி பாடுவார், உறவுப் பாலங்கள், தொல்லையினும் பிறவி, பாரொடு விண்ணாய்ப் பரந்து ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட ஆசிரியரின் கதைகள் இடம்பெற்றுள்ளன.

## 16679

**தொலைதூரத்தில் தொடரும் நினைவுகள் (சிறுகதைத் தொகுப்பு).** இரத்தினம் சூரியகுமாரன். ஐக்கிய அமெரிக்கா: இரத்தினம் சூரியகுமாரன், சான் ஹோசே, 1ஆவது பதிப்பு, 2023. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

x, 146 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 950., அளவு: 21.5x14.5 சமீ.

யாழினி, வன்னியில் பூத்த மலர், வெள்ளவத்தை நாட்கள், மணமகள் தேவை, பொருத்தம், பூரணி என் மருமகள், புது ஆரம்பம், நல்லதோர் வீணை செய்தே, சொல்லாமல் போனவை, காலம் செய்த முடிவு, காதலும் கசந்து போகும், கண்டியில் ஒரு கனாக்காலம், கடிதங்கள், ஒரு தலை ராகங்கள், ஒரு பாவக் கதை, உயர்ந்த மனிதன், உதிர்ந்து விட்ட மலர் ஒன்று, ஆறுதல் பரிசு, அமெரிக்காவில் அம்மா, அப்பாவின் தோட்டம் ஆகிய 20 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. இரத்தினம் சூரியகுமாரன் யாழ்ப்பாண மாவட்டத்தில் புலோலிக் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பின்னர் மேற்படிப்புக்காக அமெரிக்காவுக்குச் சென்றவர். அமெரிக்காவில் இரசாயனத்தில் கலாநிதிப் பட்டம் பெற்று ஒரு கணனி நிறுவனத்தில் முப்பது வருடங்களுக்கு மேல் பணியாற்றி ஓய்வுபெற்றவர்.

## 16680

**நரையன்: சிறுகதைகள்.** தமிழ்க் கவி. பிரான்ஸ்: நடு வெளியீடு, 03, Allee La Boetie, 93270 Sevran, 1ஆவது பதிப்பு, தை 2022. (அச்சக விபரம் தரப்படவில்லை).

128 பக்கம், விலை: ரூபா 400., இந்திய ரூபா 140., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-624-98471-3-2.

இது தமிழ்க்கவியின் முதலாவது சிறுகதைத் தொகுப்பு. கல்லோயா கறுத்தப் போத்தல், நரையன், உயிருக்குப் பின், கற்பெனப் படுவது, போருக்குள், ஒப்பாரி, சாவை நோக்கி, பெண்ணுக்குள் என்ன உண்டு, காணி வைத்தியம், நல்லவர்கள், பாடுபட்ட சிலுவையள், கொடுத்த இன்பம், வேதாளங்கள், மாற்றங்கள், சிவில் பாதுகாப்பு ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட தமிழ்க்கவியின் பதினைந்து சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. நீண்ட பெரும் யுத்தத்தை நாங்கள் கடந்து நின்றாலும் இன்றும் எம்மில் பலர் "நரைத்த சிந்தனைகளை உடையவர்களாகவே இருக்கின்றார்கள்" என்ற யதார்த்தத்தினை இத்தொகுப்பில் உள்ள அனைத்துச் சிறுகதைகளும் அவற்றின் குறுக்குவெட்டு முகத்திற் சொல்லி நிற்கின்றன. தமிழ்க்கவி (19.07.1947) ஈழத்தைச் சேர்ந்த பெண் எழுத்தாளரும் களச்செயற்பட்டாளருமாவார். விடுதலைப்புலிகள் அமைப்பில் சுமார் 18 ஆண்டுகள் கலை - பண்பாட்டு துறையில் பணியாற்றியவர். வீதி மற்றும் மேடை நாடகங்கள், வானொலி - தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், பேச்சு, கவிதை, தொடர் என்று பல களங்களில் இயங்கியவர். இவர் மகப்பேற்று மருத்துவிச்சியாகவும் பல காலம் தாயகத்தில் பணியாற்றியுள்ளார்.

## 16681

**நன்றி சொல்லும் நேரம்.** *திக்குவல்லை கமால். பண்டாரகமை: ஃபரீதா பிரசுரம், 104, அத்துலகம, 1ஆவது பதிப்பு, 2020. (மஹரகம: மில்லெனியம் கிராப்பிக்ஸ், 30/7, ஐந்தாவது ஒழுங்கை, அம்பகஹபுர).*

x, *11-114 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21*x*14 சமீ.,* ISBN: *978-955-7301-01-3.*

*தென்னிலங்கை வாழ் முஸ்லிம் மக்களின் வாழ்வை, பண்பாட்டுக் கோலங்களுடன் பிரதிபலிப்பது திக்கவல்லை கமாலின் கதைகளின் சிறப்பம்சமாகும். அவரது இடைவிடாத முயற்சியின் காரணமாக, இலங்கைத் தமிழ் சிறுகதைப் பரப்பில் தனக்கென ஓரிடத்தைத் தக்க வைத்துள்ளார். இந்நூலின் கதைக் கருக்கள் சமூக-கலாச்சாரப் பின்புலத்தில் தோற்றம் பெற்றாலும், அவை வெளிப்படுத்தும் செய்தி முழு மனித குலத்திற்குமானதாக அமைய வேண்டுமென்பதில் மிகக் கவனமாக இருந்து வருபவர். அதனை "நன்றி சொல்லும் நேரம்" என்ற தனது பத்தாவது சிறுகதை நூல் மூலம் மேலும் ஒரு தடவை உறுதிசெய்துள்ளார். இத் தொகுதியில் கமால் எழுதிய மூக்குக் கண்ணாடி, பேய்கள், வீரத்தாய், நன்றி சொல்லும் நேரம், ஊற்றுக் கண்கள், இறுதி மரியாதை, அத்தர் வாசம், உழைப்பு, வாழை மரங்கள், தகுதிகாண் காலம், தொடரும் சுவடுகள், பொது மனிதன், ஸாலிஹான புள்ள, இரண்டு வரம், பெரியவர்கள் ஆகிய 15 கதைகள் இடம்பெற்றுள்ளன.*

## 16682

**நிம்மதி: சிறுகதைத் தொகுப்பு.** *சிவராசா ஒசாநிதி. பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, ஜனவரி 2023. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).*

x, *86 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21.5*x*14 சமீ.,* ISBN: *978-624-5881-80-2.*

*இது தான் தைப்பொங்கல், இதே இடம் இதே காலம், எங்கே மனிதாபிமானம், கடிதம், தெருவோர ஞானிகள், நிம்மதி, நினைப்பதெல்லாம் நடப்பதில்லை, முகத்திரை, யார் குற்றவாளி, வைரஸ் போர் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட பத்து சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 260ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது. இக்கதைகள் சமூகப் பிரச்சினைகள், உறவுகளின் முக்கியத்துவம் சமீபகால நிகழ்வுகளைப் பதிவுசெய்யும் வகையில் அமைந்துள்ளன. மட்டக்களப்புப் பேச்சு வழக்கு இவரது கதைகளில் விரவிக் காணப்படுகின்றன. சிவராசா ஒசாநிதி கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தில் தமிழ் கற்கைகள் துறையில் தற்காலிக விரிவுரையாளராகக் கடமையாற்றியுள்ளார்.*

## 16683

**நிறமில்லா மனிதர்கள்.** *பூங்கோதை (இயற்பெயர்: கலா ஸ்ரீரஞ்சன்). தமிழ்நாடு: பரிதி பதிப்பகம், 56 சீ/128, பாரத கோயில் அருகில், ஜோலார்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டம் 635 851, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (சென்னை 600 017: மணி ஒப்செட்).*

102 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 22.5x14.5 சமீ., ISBN: 978-93-94187-03-0.

நிறமில்லா மனிதர்கள், வெளிநாட்டு ஐயா, ஊமைக் கனவுகள், மௌனமான யுகங்கள், புன்னகை, கீறல்கள், கிராமத்து மல்லிகை, காதுகளும் கதவுகளும், செவ்வந்தித் தோட்டம், காகிதப் பூக்கள், பெரியவீட்டார் பெண்கள் ஆகிய பதினொரு சிறுகதைகளின் தொகுப்பு. சர்வதேசப் பெருநகர மனிதவாழ்வின் வேககதியிலான அனுபவங்கள் பூங்கோதையின் கதைகளில் வெளிப்படுகின்றன. குரூரமும் சுயநலமும் இவரது கதாமாந்தர்களின் இயல்பாகக் காட்டப்படுகின்றன. மானிட வெறுப்பு மனநிலை கொண்டவனின் (Anthropophobia) கதையான "காதுகளும் கதவுகளும்," குடும்ப வன்முறை பற்றிப் பேசும் "புன்னகை" என்று இவரது கதைக் களங்கள் வித்தியாசமானவை. பூங்கோதையின் மொழிநடை சரளமானது. எள்ளல் கலந்த வசீகரமான ஈழத் தமிழ்மொழி நடையைத் தனது எழுத்தில் கைவரப் பெற்றுள்ளார்.

### 16684

**நிஜங்கள்.** பார்த்திபன். மேற்கு ஜேர்மனி: Sud Asien Buro, Kiefernatr 45, 5600, Wuppertal 2, 1ஆவது பதிப்பு, மார்ச் 1986. (கல்லச்சுப் பிரதி).

40 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x15 சமீ.

இத்தொகுப்பில் நிஜங்கள், குற்றமில்லாத கொலைகள், ஒரே ஒரு ஊரிலே, உயரப் பறக்கும் பறவைகள் ஆகிய கதைகள் இடம்பெற்றுள்ளன. மேற்கு ஜேர்மனியில் வந்து குடியேறிய ஈழத்தமிழர்கள் தமது இலக்கியத் தொடர்பாடல்களுக்கு இத்தகைய வடிவமைப்பிலான கல்லச்சு நூல்களையே தொடக்கத்தில் பயன்படுத்தினர். அவையே ஆரம்ப வழிவகைகளாக இருந்தன. அவ்வகையில் புலம்பெயர் இலக்கிய வரலாறு பற்றிய தேடலை மேற்கொள்பவர்களுக்கு இத்தகைய ஆரம்பகால நூல்கள் முக்கிய வரலாற்றுச் சான்றுகளாகும்.

### 16685

**நேர்த்திக் கடன்.** எஸ்.ஜோன்ராஜன். அக்கரைப்பற்று: தேவ் ஆனந்த் வெளியீட்டகம், விகாரை வீதி, அக்கரைப்பற்று, 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2019. (அக்கரைப்பற்று: நியூ செலெக்ஷன் ஓப்செட் பிரின்டர்ஸ், C.E.B. மின்சார நிலைய வீதி).

vii, 319 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 500., அளவு: 22x15.5 சமீ., ISBN: 978-956-42565-2-1.

மட்டக்களப்பைச் சேர்ந்த ஜோன்ராஜன், தன் கதைகளில் முடிந்தவரை தன் பிரதேசப் பாரம்பரியங்களை, வாழ்வியலை முன்நிறுத்திவந்துள்ளார். இத் தொகுப்பில் அது ஒரு தனியுலகம், நம்பிக்கை, அப்படி என்ன செய்துவிட்டேன்?, இதுவும் ஓர் அடக்குமுறை, ஓர் அஸ்தமனத்தின் உதயம், ஒரு வெற்றிமிக்க தோல்வி, வாழ்நாளெல்லாம் அந்த இறைமகனைத் தேடி, தாபரிப்புப் பணம், நேர்த்திக் கடன், நீ மட்டும் சம்மதித்தால், ஒருவேளைச் சோறு, சாபம், மடியும் மயக்கமும், ஊனம் ஆகிய தலைப்புகளில் அவர் எழுதிய 14 கதைகள் இடம்

பெற்றுள்ளன. அது ஒரு தனியுலகம், ஒரு வெற்றி மிக்க தோல்வி என்பன மாணவர் உலகம் சார்ந்த கதைகள். அப்படி என்ன செய்துவிட்டேன், துறவறத்தினை விமர்சிக்கின்ற ஒரு கதை. அக்கதையின் கதாமாந்தர்கள் இன்றும் எம்மிடையே உலா வருபவர்களே. இதுவும் ஒரு அடக்குமுறை, போதையின் அச்சுறுத்தலால் நாசமாகிப் போய்க்கொண்டிருக்கும் எமது இளம் சமூகத்தினருக்கு பொருத்தமான கதை. சாதாரண சமூகப் பழக்க வழக்கங்கள் நம்மை அடக்குமுறைக்குள் வைத்தி ருப்பதை மிக அற்புதமாக இந்தக் கதைக்குள் பொதிந்து வைத்திருக்கிறார். ஓர் அஸ்தமனத்தில் உதயம், எம்மூர் அரசியல்வாதிகளுக்குப் பாடம் புகட்டும் ஓர் கதை. நேர்த்திக் கடன், வாழ்நாளெல்லாம் அந்த இறைமகனைத் தேடி ஆகிய கதைகள் நேரடியாக சமய விமர்சனங்களைத் தாங்கிய முக்கிய கதைகளாகும். தாபரிப்புப் பணம், நமது குடும்ப அவலங்களை தோலுரித்துக் காட்டுகின்றது. நீ மட்டும் சம்மதித்தால் என்ற கதையும், 1969இல் எழுதப்பட்ட "ஊனம்" என்ற கதையும் சுவாரஸ்யமான அங்கதைச் சுவை மிகுந்த கதைகள். இக்கதைகள் தினகரன், வீரகேசரி, தினக்குரல் ஆகிய ஊடகங்களில் பிரசுரமானவை.

### 16686

**நோ போல்** (No Ball). எஸ்.கிருஷ்ணமூர்த்தி. கிளிநொச்சி: மகிழ் பதிப்பகம், 754, கனகராசா வீதி, திருநகர் வடக்கு, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2022. (அச்சக விபரம் தரப்படவில்லை).

56 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x14 சமீ.

அவுஸ்திரேலியா விக்ரோரியா மாநிலத்தில் மெல்பன் நகரில் வதியும் எஸ். கிருஷ்ணமூர்த்தி, யாழ்ப்பாணம், இடைக்காடு கிராமத்தில் பிறந்தவர். இந்நூலில் ஒரு காரின் கதை, ஒரு வீடு-இரு வேறு உலகம், வேல் அன்பன், சாப்பாடு, நோ போல், உயிர், காந்தியின் கதை, பசி ஆகிய எட்டு கதைகள் இடம் பெற்றுள்ளன. நூலின் இறுதியில் "சின்னஞ் சிறிய சிறுகதை தொகுப்பு" என்ற தலைப்பில் சாம்ராஜ் எழுதிய குறிப்பும் இடம்பெற்றுள்ளது.

### 16687

**பறையொலி: சிறுகதைத் தொகுப்பு.** அலெக்ஸ் பரந்தாமன். திருக்கோணமலை: இலக்சுமி பிரசுரம், 91, பாரதி வீதி, 1ஆவது பதிப்பு, மாசி 2023. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496 A, திருமலை வீதி).

72 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-624-98245-2-2.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவர் அலெக்ஸ் பரந்தாமன் என்று அறியப்பெறும் இராசு தங்கவேல். யாழ்ப்பாண மாவட்டத்தின் அச்சுவேலியில் 13.10.1959 அன்று பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையிலும், பின்னர் எஸ்.எஸ்.சி. (முன்னைய கல்விப் பொதுத் தராதரப் பத்திர வகுப்பு) வரையான இடைநிலைக் கல்வியை அச்சுவேலி மகாவித்தியால யத்திலும் கற்றவர். தன் பாடசாலைக் கல்வியை அச்சுவேலியில் முடித்துவிட்டு தொழில்வாய்ப்பினைப் பெற்று கொழும்புக்குச் சென்றிருந்த இவர், 1983இன் தமிழருக்கு எதிரான இன வன்முறையின் பாதிப்பினால் வன்னிக்குப் புலம்பெயர்ந்து

*முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பில் வாழ்ந்து வருகின்றார். இவரது ஐந்தாவது நூலாக இச்சிறுகதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது. இக்கதைகள் லண்டனிலிருந்து வெளியாகும் சிறுகதை மஞ்சரி மாத இதழில் அவ்வப்போது வெளிவந்தவை. அம்மான்ரை காணி, கறிவேப்பிலைகள், காலந்தின்ற வாழ்வு, சிங்களத்தி, பாரந்தாங்கிகள், குழம்புச் சோறு, காலசூட்சுமம், பறையொலி ஆகிய எட்டுக் கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவை எட்டுவிதமான பிரச்சினைகளை வாசகர்முன் வைக்கின்றன.*

### 16688

**பாசப் பிரவாகம் (சிறுகதைத் தொகுதி).** நீர்வை பொன்னையன். கொழும்பு 6: இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம், 18, 6/1, கொலிங்வுட் பிளேஸ், 1ஆவது பதிப்பு, மார்ச் 2020. (கொழும்பு 5: R.S.T. என்டர்பிரைசஸ், C/3/4, அன்டர்சன் தொடர்மாடி).

*105 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 20.5x15 சமீ.*

*1960களில் இலக்கியத்துறைக்குள் நுழைந்த ஈழத்தின் பிரபல்யமான படைப்பாளி நீர்வை பொன்னையன் தனது 90ஆவது அகவையில் எழுதியுள்ள ஏழு சிறுகதைகளின் தொகுப்பு இதுவாகும். விழிகள், அசைவெட்டு, மரணத்தின் நிழல், தெளிவு, பாசப்பிரவாகம், அடையாளம், உழைப்பாளி ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன. நீர்வை பொன்னையன் (24.03.1930 - 26.3.2020) ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்களில் ஒருவர். சிறுகதை, நாட்டார் கதை, இலக்கியக் கட்டுரைகள் எனப் பலவற்றையும் எழுதியவர். ஐம்பது ஆண்டுகளாக இடதுசாரி அரசியலில் உறுதியாக நின்றவர். தனது வாழ்வின் இறுதிக் காலம் வரை எழுதிக் கொண்டிருந்தவர். இவரது முதலாவது சிறுகதை 1957 ஆம் ஆண்டில் ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்தது. கவிஞர் இ. நாகராஜன் நடத்தி வந்த "தமிழன்" என்ற பத்திரிகையில் பல சிறுகதைகளை ஆரம்பகட்டத்தில் எழுதினார். இவரது முதல் சிறுகதைத் தொகுதி "மேடும் பள்ளமும்" 1961 இல் வெளிவந்தது. இவரது உதயம், மூவர் கதைகள், பாதை, வேட்கை, உலகத்து நாட்டார் கதைகள், முற்போக்கு இலக்கிய முன்னோடிகள், நாம் ஏன் எழுதுகின்றோம்? போன்ற நூல்கள் ஈழத்து முற்போக்கிலக்கியப் பரப்பில் வரவேற்பினை பெற்றிருந்தன. இவருக்கு 2017ஆம் ஆண்டில் இலங்கை அரசின் "சாகித்திய ரத்னா" விருது கிடைத்தது. பாசப்பிரவாகம் சிறுகதைகள் ஏழும் இவரது வாழ்வின் இறுதிக் கட்டங்களில் எழுதப்பெற்றவை.*

### 16689

**பாடுகள்: சிறுகதைகள்.** கே.ஆர்.டேவிட். கொழும்பு 13: கு.வி.அச்சக வெளியீடு, 58, கிறீன் லேன், 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2012. (கொழும்பு 13: கு.வி. அச்சகம், 58, கிறீன் லேன்).

*x, 138 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x15 சமீ.*

*தாய்மையின் விலை, ஆசைச் சாப்பாடு, கண்ணீர் எப்ப முடியும், சுடுகாடு, சூடுகள், மண்வாசனை, பாடுகள், சீறுவாணம், இருள், ஒல்லித் தேங்காய், குறுணிக்*

கல், விபச்சாரங்கள் ஆகிய 12 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இச்சிறுகதைகளில் வறுமை, அரசியல், கல்வி, இடப்பெயர்வு, சிறுவர் வீட்டுப்பணி என்பவற்றால் ஏற்படும் வதைகள் உணர்வுபூர்வமாகச் சொல்லப்படுகின்றன. சில கதைகள் கிறிஸ்தவப் பின்புலத்தில் படைக்கப்பட்டுள்ளன. தலைப்புச் சிறுகதையான பாடுகள், யேசு கிறிஸ்துநாதர் அனுபவித்த அவல வாழ்க்கையை இலங்கையில் 1983 கறுப்பு ஜுலையில் தமிழர் எதிர்கொண்ட பாடுகளோடு ஒப்புநோக்கிப் பார்க்கின்றது. நவம்பர் 2ம் திகதி கிறிஸ்தவர்களின் மரித்தோர் நினைவுகூரலுக்கு ஒதுக்கப்பட்டது. அன்றைய தினம் மரித்தோர் நினைவாக அவர்கள் விரும்பிய உணவுவகைகளை ஏழைகளுக்கு தானமாக வழங்கும் வழமையுண்டு. இதனை ஆசைச் சாப்பாடு என்ற சிறுகதை பதிவுசெய்கின்றது. திருக்கோணமலையின் நிலாவெளியைக் களமாகக் கொண்டு அந்தோணி என்ற பாத்திரத்தின் வாயிலாக கதை சொல்லப்படுகின்றது. கண்ணீர் எப்ப முடியும், இருள் ஆகிய கதைகள் இளமையில் வறுமையை உணர்வுபூர்வமாகப் பதிவு செய்கின்றன.

### 16690

**பாதை தெரியாத பயணங்கள் (சிறுகதைத் தொகுப்பு).** சி.மார்க்கண்டு (புனைபெயர்: மாவன்னா). பருத்தித்துறை: வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவை. 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2016. (நெல்லியடி: ஸ்நேகன் பதிப்பகம்).

xiv, 119 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x13.5 சமீ., ISBN: 978-955-43797-0-1.

மனிதநேயச் சிந்தனை கொண்ட படைப்பாளியான "மாவன்னா"வின் சமூக நீதியையும் சமூக நெறிகளையும் அவாவி நிற்கும் கதைகளைத் தன்னகத்தே கொண்டு வெளிவந்துள்ளது பாதை தெரியாத பயணங்கள் என்ற இச்சிறுகதைத் தொகுப்பு. யாழ்ப்பாணி, கள்ளப் பூனை, வார்ப்பு, பாதை தெரியாத பயணங்கள், வேள்விப் படையல், ஆருக்கு விடுதலை, நூல் விழுங்கிகள், மணப்பாவை, பரிசு தந்த கதை, காணாமல் போன குஞ்சுகள் ஆகிய பத்துக் கதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அனைத்தும் எளிமையான மொழிநடையில் எழுதப்பட்டுள்ளன. இத்தொகுதியில் உள்ளடங்கும் கதைகள் வாழ்வனுபவத்தில் முதிர்ந்த ஒருவர் வாழ்வுக்கான நெறிமுறைகளைப் போதிப்பதில் கொண்ட சமூக அக்கறையை வெளிப்படுத்துவனவாக உள்ளன. ஆசிரியரின் படைப்புலகம் எந்தவிதமான பாசாங்குகளுமற்ற யதார்த்த சிந்தனையின் வெளிப்பாடாக உள்ளது.

### 16691

**பால்வண்ணம் (சிறுகதைகள்).** கே.எஸ்.சுதாகர். சென்னை 600040: எழுத்து பிரசுரம், Zero Degree Publishing, இல.55 (7), R- Block, 6th Avenue, அண்ணா நகர், 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2022. (சென்னை: கிளிக்டோ பிரின்ட்).

156 பக்கம், விலை: இந்திய ரூபா 190.00, அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-93-93882-65-3.

பால்வண்ணம், தூங்கும் பனிநீர், வெந்து தணிந்தது காடு, அம்மாவின் எண்பதாவது பிறந்ததின உரை, கலைந்தது கனவு, ஏன், தலைமுறை தாண்டிய தரிசனங்கள், யாரோ ஒளிந்திருக்கின்றார்கள், பாம்பும் ஏணியும், அனுபவம் புதுமை, கனவு காணும் உலகம், நாமே நமக்கு ஆகிய பன்னிரு கதைகளை இத்தொகுப்பு உள்ளடக்குகின்றது. கே.எஸ்.சுதாகரின் கதைகளில் காணப்படும் குறிப்பிடத்தக்க அம்சம், வடிவ நேர்த்தியாகும். கதைகளைக் கட்டமைப்பதில் அவர் அதிக கவனம் செலுத்தியிருக்கிறார். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக பால்வண்ணம், கலைந்த கனவு, பாம்பும் ஏணியும் ஆகிய கதைகளைக் குறிப்பிடலாம். இவற்றுள் பால்வண்ணம், கலைந்த கனவு ஆகியவை உளவியல் பாங்குடைய கதைகளாகும். தெளிந்த நீரோட்டம் போன்று அநாயாசமாக கதைகளை நகர்த்திச் செல்லும் போக்கும், சிறந்த மொழிநடையும் இக்கதைத் தொகுதியின் சிறப்பாகும். சுதாகர் யாழ்ப்பாணம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல்துறைப் பட்டதாரியான இவர், புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் வசித்து வருகிறார். 1983 முதல் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள் எனப் பல்வேறு பரிமாணங்களிலும் எழுதி வருகின்றார். இவரின் முதல் சிறுகதை "இனி ஒரு விதி செய்வோம்" ஈழநாடு வாரமலரில் வெளியானது.

### 16692

**பிள்ளை கடத்தல்காரன்.** அ.முத்துலிங்கம். நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1ஆவது பதிப்பு, ஜுலை 2015. (சென்னை 600 077: மணி ஓப்செட்).

190 பக்கம், விலை: இந்திய ரூபா 195., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-93-84641-23-8.

"தமிழின் முதன்மையான கதைசொல்லிகளுள் ஒருவர் அ. முத்துலிங்கம். இத்தொகுப்பிலுள்ள 20 சிறுகதைகளில் அநேகமானவை உண்மைச் சம்பவங்களி லிருந்து கலையம்சத்துடன் புனையப்பட்டவை. இவற்றை படைக்கும்போது தனக்கென ஆகிவந்த ஒரு சொல் முறையை கையாண்டு வாசகரை வசியம் செய்துவிடுகிறார். பல்வேறு நிலப்பரப்புகள், மாறுபட்ட மனிதர்கள், பரிச்சயமற்ற கலாச்சாரச் சூழல்களினூடாக நிகழும் இவருடைய கதைகளின் ஆதாரமான உணர்வு அங்கதம். எனினும், அதனடியில் விலக்க முடியாத நிழல்போல மானிட உணர்வுகளின் ஏக்கமும் நெகிழ்வும் துயரமும் கண்ணீரும் அழியாத சித்திரங்களாய் விரவிக் கிடக்கின்றன. உலகத்து மேடையில் மனிதத் தொகையின் விநோதமான வாழ்வியல் சித்திரங்களால் நெய்த அழகிய கம்பளமாக இத்தொகுப்பை உருவகித்துக் கொள்ளலாம்" (பின்னட்டைக் குறிப்பு). முதல் ஆச்சரியம், சூனியக்காரியின் தங்கச்சி, பிள்ளை கடத்தல்காரன், நிலம் எனும் நல்லாள், எலிமூஞ்சி, இலையுதிர் காலம், அது நான் தான், ஆதிப் பண்பு, பதினொரு பேய்கள், சின்னச் சம்பவம், மண்ணெண்ணெய் கார்காரன், ஒன்றைக் கடன்வாங்கு, லூக்கா 22:34, நான்தான் அடுத்த கணவன், ரயில் பெண், கடவுச்சொல், வாடகை வீடு, கடவுளை ஆச்சரியப் படுத்து, உன்னுடைய கால அவகாசம் இப்பொழுது தொடங்குகிறது, வால்காவி

லிருந்து கனடா வரை ஆகிய 20 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. அ.முத்துலிங்கம் யாழ்ப்பாணத்தில் கொக்குவில் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர். அறுபதுகளில் எழுத ஆரம்பித்து இன்றும் இவருடைய பணி தொடர்கின்றது. கனடாவில் குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70075).

## 16693

**பின்னல் பையன்: தேவகாந்தனின் தேர்ந்த கதைகள்.** தேவகாந்தன் (மூலம்), சு.குணேஸ்வரன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: தூண்டி இலக்கிய வட்டம், 141, ஆடியபாதம் வீதி, கேணியடி, திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2022. (யாழ்ப்பாணம்: ஆகாயம் பதிப்பகம், இமையாணன், உடுப்பிட்டி).

207 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 450., அளவு: 21x14 சமீ., ISBN: 978-624-98471-9-4.

அந்தச் சில கணங்கள், இன்னொரு பக்கம், எங்கும் இரண்டாய், எம்மா, என்ன ஆசை இது, கறுப்புப் பூனை, கறை, சொன்னால் சொன்னது தான், தீர்ப்பு, பிரம்மாஸ்திரம், புற்றுச்சாமி, பேரணங்கு, மின்னல் குறித்த ஆவேசங்கள், நீர்மாயம், நெருப்பு, யுத்தம், ஜென்மாவும் உடைந்த விலாவெலும்புகளும், பின்னல் பையன் ஆகிய தலப்புகளில் எழுதப்பட்ட தேவகாந்தனின் தேர்ந்த சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 16694

**புலர் காலையின் வலி.** இயல்வாணன் (இயற்பெயர்: சுப்பிரமணியம் ஸ்ரீகுமரன்). யாழ்ப்பாணம்: தாயதி வெளியீடு, சமூக செயலூக்கத்துக்கான முன்னோடி, 1ஆவது பதிப்பு, ஒகஸ்ட் 2022. (அச்சக விபரம் தரப்படவில்லை).

112 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 21x13.5 சமீ., ISBN: 978-624-98471-6-3.

இந்நூலில் உள்ள இயல்வாணனின் 13 சிறுகதைகள் புலர்காலையின் வலி, இன்னும் அதே, பயிரில் புழு, பந்தயக் குதிரை, தாகம், சரிவு, முடவன் நடை, வெளிக்கும், புகை, முடிந்த ஒரு இரவும் முடியாத ஒரு பகலும், தவிப்பு, தாயினும் நல்ல, கோலம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன. இயல்வாணன் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். பாடசாலை ஆசிரியராக, அதிபராகக் கடமையாற்றி, தற்போது இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியாக கடமை புரிகிறார். 20 வருடங்களுக்கும் மேலாகப் பத்திரிகை யாளனாகவும் செயற்பட்டு வருகின்றார். இவரது "புலர்காலையின் வலி" சிறுகதை "பூபாளராகங்கள்" உலகளாவிய சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றது. இயல்வாணன் படைப்புகள்: ஓர் ஆய்வு என்ற தலைப்பில் செல்வராசா ஜோன்சன் என்ற யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவன் தனது தமிழ் சிறப்பு கலைமாணி பட்டத்துக்காக ஆய்வேட்டினைச் சமர்ப்பித் துள்ளார். ஸ்ரீகுமரனின் சிறுவர் இலக்கிய முயற்சிகள் என்ற தலைப்பில் குகதாசசர்மா சிவகுமார், யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ் முதுமாணி பட்டத்துக்காக ஆய்வேட்டினைச் சமர்ப்பித்துள்ளார்.

### 16695

**பேனாமுனையின் நேசம்: சிறுகதைத் தொகுப்பு.** எஸ்.எப். றினோஸா முக்தார். குருநாகலை: எஸ்.எப். றினோஸா முக்தார், ஆரிஹாமம், அஹதியா நகர், தும்மளசூரிய, 2ஆவது பதிப்பு, 2017, 1ஆவது பதிப்பு, 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).

96 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x15.5 சமீ., ISBN: 978-955-42879-0-7.

குருநாகலை மாவட்டத்தில் முகிழ்ந்துள்ள இளம் படைப்பாளி றினோஸா முக்தார் எழுதிய இச்சிறுகதைத் தொகுப்பில் ஏழைத்தாயின் ஏக்கம், இறைவன் கொடுத்த பரிசு, கல்லக்குள் ஈரம் கசிகிறது, வாழ்க்கை வாழ்வதற்கே, திருப்தி கண்ட உள்ளம், கடமைகள் புறக்கணிக்கப்படும் போது, வேண்டாத உறவுகள், மின்னுவதெல்லாம் பொன்னல்ல, இப்படியும் ஒரு நாள், அனுபவம் பேசுகிறது, ஏனிந்த மாற்றங்கள், புண்ணாகிப் போன சில இதயங்கள், புரட்டப்படாத பக்கங்கள் ஆகிய தலைப்பு களில் எழுதப்பட்ட 13 கதைகள் இடம்பெற்றுள்ளன. தான் வாழும் சுற்றாடலின் இயற்கை வளங்களையும், வாழ்க்கைப் பண்புகளையும் இணைத்து மண்வாசனை வீசும் இலக்கியச் சுவையுடன் இச்சிறுகதைகள் படைக்கப்பட்டுள்ளன.

### 16696

**பொய்யெல்லாம் மெய்யென்று.** மதுபாரதி (இயற்பெயர்: திருமதி பரமேஸ்வரி இளங்கோ). திருக்கோணமலை: கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2021. (திருக்கோணமலை: ஏ.ஆர். டிரேடர்ஸ், 82, திருஞானசம்பந்தர் வீதி).

135 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-624-6135-16-4.

கிழக்கிலங்கையின் ஏறாவூரைச் சேர்ந்த மதுபாரதியின் சிறுகதைத் தொகுப்பாக மலர்ந்துள்ள இந்நூலில் வரமா சாபமா?, களவும் கற்று மற, போதிமர தரிசனங்கள், வானதி எனும் நான், கறுப்பு வெள்ளை கனவு, வம்மிப் பூக்கள், ராணிகள், பொய் யெல்லாம் மெய்யென்று, காலம் கற்றுத்தந்த பாடம், இதுவும் கடந்து போகும், மகளிர் மட்டும், ஆடிய பாதங்கள், கனவும் மெய்ப்படும் ஆகிய தலைப்புகளில் எழுதிய 13 கதைகள் இடம்பெற்றுள்ளன. ஆசிரியரின் நூலுருப்பெறும் நான்காவது படைப்பு இதுவாகும்.

### 16697

**மக்கத்துச் சால்வை, மருமக்கள் தாயம்.** எஸ்.எல்.எம். ஹனீபா (மூலம்), சிராஜ் மஷ்ஹூர் (தொகுப்பாசிரியர்). அக்கரைப்பற்று-2: பேஜஸ் புத்தக இல்லம், 117, பட்டினப்பள்ளி வீதி, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (அக்கரைப்பற்று: நியூ செலெக்ஷன் ஒப்செட் பிரின்டர்ஸ், C.E.B. மின்சார நிலைய வீதி).

32 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x12 சமீ., ISBN: 978-624-6047-03-0.

இலங்கைத் தமிழ் சிறுகதை முன்னோடிகள் என்ற தொடரில் ஐந்தாவதாக வெளி வரும் நூல் இது. இதில் எஸ்.எல்.எம். ஹனீபா அவர்கள் எழுதிப் பிரபல்யமான

இரு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. எஸ்.எல்.எம். ஹனீபா இலங்கை எழுத்தாளர்களில் இஸ்லாமிய வாழ்க்கையின் உள்ளடுக்குகளைச் சொல்லும் சிறந்ததொரு படைப்பாளியாவார். கிழக்கிலங்கையின் தமிழ்-முஸ்லிம் சமூகங்களிடையே உறவுப்பாலமாகத் திகழ்ந்தவர்.

## 16698

**மகிழ்ச்சிப் பேரிகை: சிறுகதைகள்.** திக்குவல்லை கமால் (இயற்பெயர்: முகம்மது ஜெலால்தீன் முகம்மது கமால்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2022. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

80 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-624-5881-51-2.

இந்நூலில் மகிழ்ச்சிப் பேரிகை, உறவுப் போர்வைக்குள், காணிக்கை, தவறான தராசு, வரவேற்பு, தங்க அப்பிள், முலாம் பூசிகள், 24 மணி நேரம், சொர்க்கத்து மாளிகை, காணி நிலம் வேண்டும், தாயின் பிரார்த்தனை, சந்தனம் மணக்கும் சாக்கடை ஆகிய பன்னிரு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 231ஆவது ஜீவநதி வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. திக்குவல்லை கமால். (பிறப்பு: மார்ச் 3, 1950) ஈழத்து தமிழ்க் கலை இலக்கியத் துறையில் பங்காற்றி வரும் தென்னிலங்கை முஸ்லிம் படைப்பாளிகள் வரிசையில் கவனத்திற்குரிய ஒரு படைப்பாளி. இலங்கையின் தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள திக்குவல்லை எனும் ஊரில் பிறந்த கமால், அக்கிராமத்து மக்களின் பேச்சு வழக்கினைக் கொண்ட படைப்புக்களை ஈழத்து படைப்பிலக்கியத்துக்கு வழங்கிய முன்னோடிகளுள் ஒருவராவார். தர்கா நகர் சாகிரா மகா வித்தியாலயம் வெளியிட்ட தட்டெழுத்து கவிதை ஏடான "சுவை" மூலம் இலக்கிய உலகுக்கு அறிமுகமான கமால், பல சிறுகதைகள், புதினங்கள், புதுக்கவிதைகள், வானொலி நாடகங்கள் எனப் பல்வேறு வடிவங்களில் தனது இலக்கிய பங்களிப்பை ஆற்றி இருக்கிறார்.

## 16699

**மல்லிகை இதயங்கள்: சிறுகதைத் தொகுதி.** ஷாறா. கொழும்பு 9: ஷாறா, 26/12, தெமட்டகொட பிளேஸ், 1ஆவது பதிப்பு, மார்ச் 1918. (கொழும்பு 9: இஸ்லாமிய புத்தக இல்லம், I.B.H., இல. 77, தெமட்டகொட வீதி).

xiv, 119 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ.

இத்தொகுதியில் நிறம் மாறிய நிமிஷங்கள், விருந்து, மெழுகுவர்த்தி, குடைநிழலில், திசை மாற்றிய அலை, பனிமூட்டம், தோற்றுப்போன வாழ்க்கை, மௌனமாய் ஒரு, சுவனத்துப் பெருநாள், ஹதியா, அவளுக்கும் தான் புரியவில்லை, நிறம் தெரியாத அத்திபாரங்கள், மல்லிகை இதயம், பெறுமதி, உன்னைச் சொல்லிக் குற்றமில்லை, சுவை, கரையைத் தாண்டும் அலைகள், பாறைப் பூக்கள் ஆகிய பதினெட்டு கதைகள் இடம்பெற்றுள்ளன. இச்சிறுகதைகளில் பதினைந்து கதைகள் முன்னர் "அல்ஹஸனாத்" இதழ்களில் பிரசுரமானவை.

## 16700

**மறுமலர்ச்சி: மறுமலர்ச்சி மன்ற பொன் விழா சிறுகதைப் போட்டி-2022 தேர்ந்த கதைகள் 1972-2022.** *அழ.பகீரதன் (தொகுப்பாசிரியர்), பேரி.வேந்தன் (பதிப்பாசிரியர்). பண்டத்தரிப்பு: மறுமலர்ச்சி மன்றம் நம்பிக்கை நிதியம், காலையடி, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2022. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).*

viii, *216 பக்கம், விலை: ரூபா 800., அளவு: 21.5*x*15 சமீ.,* ISBN: *978-624-6309-01-5.*

*காலையடி மறுமலர்ச்சி மன்றம் 50 ஆண்டுகளை நிறைவுசெய்த வேளையில் அதன் பொன்விழா நினைவாக இச்சிறுகதைத் தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது. இம்மன்றத்தின் கையெழுத்துப் பத்திரிகையான "காலைக்கதிர்" இதழ்களில் எழுதிய ந.இரவீந்திரன், சோ.தேவராஜா உள்ளிட்ட பலர் இன்று பிரபல எழுத்தாளர்களாக மிளிர்கின்றனர். இம்மன்றம் 2022இல் நடத்திய சிறுகதைப் போட்டியில் தேர்ந்த சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கைகேயி (ச.இராகவன்), பள்ளிச் சட்டை (அகமது ஃபைசல்), மீட்பு (இ.ஸ்ரீஞானேஸ்வரன்), முனியாண்டி சாமியின் ரகசிய ஒப்பந்தம் (பதுளை சேனாதிராஜா), நிழற் பாவைகள் (ஸ்ரீலேக்கா பேரின்பகுமார்), கண்ணீருக்குச் சொந்தக்காரி (மு.சிவஞானம்), ஏழ்மையின் சுவை (சி.கிஷோர்த்தனா), முடிந்த கதை (சி.கதிர்காமநாதன்), நிரையும் நிராசையும் (கா.அற்புதராணி), அர்த்தம் புரியாத தமிழ்ச் சொற்கள் இரண்டு (வட வரணி சி.சபா), முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் (நடராஜா கண்ணதாஸ்), இனி அவளுக்கு எறும்பு கடித்தால்? (அம்பிகை கஜேந்திரன்), வரிசை (சிவ சசிகாந்த்), ஆஸிபா (கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்), சிறகுகள் விரிந்தன (பத்மஜா பாஸ்கரக் குருக்கள்), பருவ முதிர் காலம் (ப.வித்யாசாகர்), அவர்களின் பேராசை (இரா.சடகோபன்), தர்மத்தின் வாழ்வுதனை (மாத்தளை பெ.வடிவேலன்), அம்மா எனும் ஆசிரியன் (சிவ. இராஜேந்திரன்), தேயிலைச் செடி அல்ல மரம் (என்.கே.வேணி), மோட்சவாசல் (மல்லிகா செல்வரத்தினம்), தாய்மை (சுகுணராணி சண்முகேந்திரன்), யாதுமாகி நின்றாய் (டேவிட் சுலைஜா ஏஞ்சல்), கோலம் மா(ற்)றும் கண்கள் (தேன்மொழி சபா), ஆலகாலம் (கே.எஸ்.சுதாகர்), பிரியாவும் ஜேம்சும் (தேவகி கருணாகரன்), அன்பு மடல் (கலா ஜெயராசா), வேரோடிய விதை (இ.பிரதீபன்), கலையாத நினைவுகள் (மும்தாஜ் கலீல்) ஆகிய கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

## 16701

**மனதின் வடிவங்கள்.** *சியாமளா யோகேஸ்வரன். திருக்கோணமலை: இலக்சுமி பிரசுராலயம், 91, பாரதி வீதி, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2023. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496* A*, திருமலை வீதி).*

*214 பக்கம், விலை: ரூபா 950., அளவு: 20.5*x*14.5 சமீ.,* ISBN: *978-624-98245-3-9.*

*இலக்சுமி பிரசுராலயத்தின் மூன்றாவது வெளியீடாக இச் சிறுகதைத் தொகுப்பு நூல் வெளிவந்துள்ளது. தாய்மையும் ஒரு சுமையே, அதையும் தாண்டிப் புனித மானது, அந்த ஒரு நொடி, காவல்கார ரோமியோக்கள், மனங்களில் காமாலை,*

நியாயங்கள் நிலையானவை, போதையெனும் புதைகுழி, மதமொன்றும் சிறையில்லை, மனங்களின் வடிவங்கள், மனிதன் நினைப்பதுண்டு, வரமொன்று தாராயோ, தீ மட்டும் சுடுவதில்லை ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட ஆசிரியரின் பன்னிரு கதைகள் இதில் இடம்பெற்றுள்ளன. அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் சியாமளா யோகேஸ்வரன், மனித மனங்களின் காலவோட்டத்தினூ டான மாற்றங்களையும் சீரழிவுகளையும் தெளிவாகவும் மிக மிக நுட்பமாகவும் தன் எழுத்துக்களினால் படம்பிடித்துத் தந்துள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியான சியாமளா லக்டலிஸ் அவுஸ்திரேலியா என்ற பன்னாட்டு நிறுவனத் தில் பணியாற்றி வருகின்றார். இதயராகம், கானல் நீர் ஆகிய நாவல்களையும் உறவுகள் என்ற சிறுகதைத் தொகுப்பையும் ஏற்கெனவே இவர் எழுதியுள்ளார்.

## 16702

**மனுஷி: சிறுகதைகள்.** சண். தவராஜா. திருச்சி 620 003: இனிய நந்தவனம் பதிப்பகம், எண் 17, பாய்க்காரத் தெரு, உறையூர், 1ஆவது பதிப்பு, ஜுலை 2020. (சென்னை: கப்பிட்டல் பிரிண்டர்ஸ்).

ix, 10-80 பக்கம், விலை: இந்திய ரூபா 100.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-944044-7-7.

இத்தொகுப்பில் மனுஷி, நெஞ்சு பொறுக்குதில்லையே, காட்டிக் கொடுப்பு, நோய், இரை, வண்டியும் ஒரு நாள் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட ஆறு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. மனுஷி என்ற கதை புகலிட வாழ்வில் பெண்களின் சமூக நிலையை விபரிப்பதாக அமைகின்றது. எஞ்சிய கதைகள் அனைத்தும் ஈழத்தின் போர்க்கால வாழ்வியலைப் பேசுகின்றன. சமூக செயற்பாட்டாளரான ஊடகவிய லாளர் சண்.தவராஜா சுவிற்சர்லாந்தில் புலம்பெயர்ந்து வாழ்கின்றார். திருச்சி இனிய நந்தவனம் பதிப்பாக வெளியான மனுஷி சிறுகதை நூல் சேலம் தமிழ்ச் சங்கம், கம்பம்- பாரதி கலை இலக்கிய மன்றம் ஆகியவை நடத்திய போட்டிகளில் 2020ஆம் ஆண்டுக்கான சிறந்த நூலுக்கான பரிசுகளை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 16703

**முகிழ்: சிறுகதைத் தொகுப்பு.** த.ஜெப்ரி, க.லக்ஷன். கண்டி: சிறுகதையாற்றுப்படை, தமிழ்த் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2022. (கண்டி: வி.& ஜீ. அச்சகம், 68, கலகா வீதி, பேராதனை).

xviii, 89 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-624-9915-40-4.

டொக்டர், சங்கரனார்க்கு ஏது குலம், வரதன் அண்ணே, இழப்பு, அடுத்த கதை, புதுமைப்பெண், கல்+நெஞ்சம், ஆயிரம் ரூபா கிடைச்சிருச்சி, ஈசல் மனதும் இரும்புக் குழம்பும் ஆகிய ஒன்பது சிறுகதைகளின் தொகுப்பு இது. இக்கதைகள் வடக்கு, கிழக்கு, மலையகம் என ஒவ்வொரு இடத்தையும் பகைப்புலமாகக்கொண்டு விளங்குகின்றது. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை மாணவ மணிகளின் ஆக்கங்களாக இவை வெளிவந்துள்ளன.

### 16704

**முரண்: சிறுகதைத் தொகுப்பு.** கோமகன். தமிழ்நாடு: எதிர் வெளியீடு, 96, நியூ ஸ்கீம் ரோடு, பொள்ளாச்சி 642 002, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2018. (சென்னை: ஜோதி என்டர்பிரைசஸ்).

96 பக்கம், விலை: இந்திய ரூபா 120., அளவு: 21.5x14 சமீ.

எழுத்தாளரும், "நடு" இணைய சிற்றிதழ் ஆசிரியருமான கோமகனின் மூன்றாவது வெளியீடாக "முரண்" சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது. இதில் அகதி, முரண், தகனம், டிலீப் டிடியே, ஏறு தழுவுதல், வெள்ளி, ஆக்காட்டி, வெடிப்பு, மாதுமை, பருப்பு, சுந்தரி ஆகிய 11 கதைகள் இடம்பெற்றுள்ளன. "இத்தொகுப்புச் சிறுகதைகளில் நான் தனிப்பட்ட பல இடங்களில் முரண் பட்டிருக்கின்றேன். ஒரு சில கதைகளில் கதைசொல்லும் உத்திகளில் பரிசோதனை முயற்சிகளை செய்திருக்கின்றேன். எம்மவரிடையே காலங்காலமாகப் பேணப்பட்டு வரும் புனிதப்படுத்தல்களை கேள்விக்குட்படுத்தி உடைத்தெறிந்திருக்கின்றேன். பேசாப் பொருட்களைப் பேசியிருக்கின்றேன். அவற்றில் நான் வெற்றி பெற்றிருக்கின்றேனா என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால் பரிசோதனை முயற்சிகளை செய்திருக்கின்றேன் என்பதை என்னால் உறுதிபடச் சொல்ல முடியும். எனக்கு இலக்கிய ஜாம்பவான்களைப் போல் சொல் கட்டத்தெரியாது. எல்லோருக்கும் வாலிபப்பருவம் அதன் வசந்தத்தையும் ஊர் உறவு நண்பர்கள் என்று அள்ளிக் கொடுக்க, அதே வயதில் நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் உபரி விளைவாக நான் அகதியாக அந்நிய தேசத்துக்குப் புலம் பெயர்ந்ததும் இந்தச் சொல் கட்டுக்குள் வராமைக்கு ஒரு காரணமாகின்றது." (என்னுரை, கோமகன்).

### 16705

**யாழ்ப்பாணத்தான்: 23 சிறுகதைகள்.** பொன்.குலேந்திரன். கனடா: குவியம் வெளியீடு, 2796, Keyness Crescent, Mississauga, Ontario, L5N3A1, 1ஆவது பதிப்பு, ஜுன் 2020. (மின்நூல் வடிவம்).

168 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பின்னணியாக வைத்து எழுதப்பட்ட சிறுகதைகள் இவை. புதுச் சுருட்டு, வேலி, முடிவு, சகுனம், கோவில் பிரவேசம், ஆணாதிக்கம், வேள்வி, குளைக்காட்டான் குஞ்சன், நன்கொடை, சீட்டு, மாற்றுத் திருமணம், விவசாயி, சிவப்பு நாடா, பென்சன், சின்னமேளம் சந்திரவதனி, சந்திக்கடை சங்கரப்பிள்ளை, சண்முகம் சம்மரி (விடுதி), கண்ணம்மா, ஓடிப்போனவள், தையல்நாயகி, முத்து வளவு, குடிமகனின் மகன், என் அப்பு அச்சி ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 23 சிறுகதைகள் இத்தொகுதியில் அடங்கியுள்ளன. இக்கதைகளின் அடிநாதமாக யாழ்ப்பாணத்தின் தேச வளமை உள்ளது. கதை களினூடு அவ்வப் பிரதேசங்களின் புவியியல் வரலாற்றுப் பின்புலங்களையும் ஆசிரியர் ஆங்காங்கே குறிப்பிடுகிறார். யாழ்ப்பாணப் பேச்சு வழக்கையோ, நடைமுறை வாழ்வில் மேற்கொள்ளும் சொல்லாடல்களையோ கதையில் குறிப்பிடும் போது இயன்றவரை விளக்கக் குறிப்பும் தருகிறார்.

**யாழ்ப்பாணத்தான்: 23 சிறுகதைகள்.** பொன்.குலேந்திரன். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2020. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

x, 223 பக்கம், விலை: ரூபா 700., அளவு: 21.5x14.5 சமீ.

இத்தொகுப்பில் பொன்.குலேந்திரனின் 23 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. புதுச் சுருட்டு, வேலி, முடிவு, சகுனம், கோவில் பிரவேசம், ஆணாதிக்கம், வேள்வி, குளைக்காட்டான் குஞ்சன், நன்கொடை, சீட்டு, மாற்றுத் திருமணம், விவசாயி, சிவப்பு நாடா, பென்சன், சின்னமேளம் சந்திரவதனி, சந்திக்கடை சங்கரப்பிள்ளை, சண்முகம் சம்மரி (விடுதி), கண்ணம்மா, ஓடிப்போனவள், தையல் நாயகி, முத்து வளவு, குடிமகனின் மகன், என் அப்பு ஆச்சி ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. இந்நூல் 152ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70056).

### 16706

**ராணியம்மா.** தாட்சாயணி (இயற்பெயர்: திருமதி பிரேமினி பொன்னம்பலம்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

124 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-624-5881-24-6.

இந்நூலில் ஒரு உறவின் வெட்டுமுகம், திருப்தி, சூன்யம், பலி, மழை விட்டும் தூவானம், அடையாளம், காத்திருப்பு, ராணியம்மா, உனக்கு மட்டும் தானா, கருகல், தவிப்பு, குழந்தைகள் தெரு, வலி, பாசி, தொலைந்து போனவை, கனவு களின் கீதம் ஆகிய 16 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. "தாட்சாயணியின் சிறுகதைகளில் பெண்ணியச் சிந்தனைகளும்பெண்மையின் உணர்வுகளும் மேலோங்கி வெளிப்படும். இந்நூலிலும் கூடஅது சாத்தியமாகியுள்ளது. உணர்வுச் சுழிப்புகளின் விபரிப்பினூடாக மனித மனம் படும் துயரங்களையும் பதைப்பு களையும் இச்சிறு கதைகளில் தாட்சாயணி படம்பிடித்துக் காட்டியுள்ளார். போரும் ஆழிப் பேரலையும் மனித வாழ்வில் ஏற்படுத்திய அவலங்களும் காதலின் பிரிவு தரும் வேதனையும் பெண்மையின் ஏக்கமும் இச்சிறுகதைகளில் கருப் பொருள்களாகியுள்ளன." (கலாநிதி த.கலாமணி, பின்னட்டைக் குறிப்பிலிருந்து). இது 207ஆவது ஜீவநதி வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது.

**16707**

**வன்னியாச்சி.** தாமரைச்செல்வி (இயற்பெயர்: ரதிதேவி கந்தசாமி). நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2017. (சென்னை 600077: மணி ஓப்செட்).

(8), 9-335 பக்கம், விலை: இந்திய ரூபா 375., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-86820-15-0.

கொழும்பு மீரா பதிப்பகத்தின் 60ஆவது வெளியீடாக ஆசிரியரின் 10 கதைகளுடன் 2005இல் வன்னியாச்சி என்ற தலைப்பில் 95 பக்கங்களில் ஒரு நூல் வெளி வந்திருந்தது. அதே தலைப்பில் வெளிவந்துள்ள இந்நூல் தாமரைச்செல்வியின் 37 கதைகளுடன் காலச்சுவடு பதிப்பாக 2017இல் வெளிவந்துள்ளது. ஈழத் தமிழர்களின் துன்பங்களையும் பிரச்சினைகளையும் காலத்தின் கண்ணாடியாகத் தன் படைப்புகளில் பிரதிபலிக்கச் செய்பவர் தாமரைச்செல்வி. வன்னியாச்சி சிறுகதைத் தொகுதியிலுள்ள அனைத்துக் கதைகளும் எமது மண்ணின் மக்கள் பற்றியும் போரினால் அவர்கள் படும் துயர் பற்றியும் பேசுகின்றன. ஒவ்வொரு கதையின் மூலமும் ஈழத்தமிழர்களின் போரியல் வரலாற்றை அறியமுடிகின்றது. எந்த ஆண்டு எங்கு சண்டை நடந்தது அதன் விளைவுகள் என்ன என்பவை இவரது கதைகளுக்கூடாகப் பதிவாக்கப்படுகின்றன. 2005இல் இடம்பெற்றிருந்த பார்வை, சுவர், விழிப்பு, காணிக்கை, அம்மா, வன்னியாச்சி, முகமற்றவர்கள், இன்னொரு பக்கம், சில நிமிட மௌனம், தூரத்து மேகங்கள் ஆகிய கதைகளுடன் மேலதிகமாக பாலம், இங்கேயும் சில இழப்புக்கள், அவன்-அவள்-ஒரு சம்பவம், எங்கேயும் எப்போதும், ஒரு யுத்தத்தின் ஆரம்பம், விடை இதுதான், சாம்பல் மேடு, வாழ்க்கை, பசி, ஊனம், ரூனா, ஒரு மழைக்கால இரவு, நாளைய செய்தி, நியாயங்களும் மாறும், பகிர்வு, இடைவெளி, முற்றுகை, அழுவதற்கு நேரமில்லை, உறவு, பாதை, சுயம், பாதணி, ஊர்வலம், அக்கா, ஓட்டம், சிறை நிழல், அடையாளம் ஆகிய மேலதிக கதைகளையும் உள்ளடக்கியதாக இந்நூல் வெளிவந்துள்ளது. தாமரைச்செல்வி கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பரந்தனில் 1953இல் பிறந்தவர். 1973இலிருந்து இலக்கியத்துறையில் பயணித்து வருகின்றார். 200இற்கும் மேற்பட்ட சிறுகதைகளின் ஆசிரியர் இவர். இதைத் தவிர மூன்று குறுநாவல்களையும், ஆறு நாவல்களயும் இதுவரை எழுதியுள்ளார். வடகிழக்கு மாகாணசபை விருது (ஒரு மழைக்கால இரவு), யாழ். இலக்கியப் பேரவையின் பரிசு (விண்ணில் அல்ல விடிவெள்ளி, தாகம், பச்சை வயல் கனவு), இலங்கை அரசின் சாஹித்திய விருது (பச்சை வயல் கனவு), தமிழ்நாடு சின்னப்ப பாரதி அறக்கட்டளை விருது (2010), சுதந்திர இலக்கிய அமைப்பின் விருது (தாகம்), கொழும்பு கலை இலக்கிய கழகத்தின் விருது (2003), வட கிழக்கு மாகாண சபையின் ஆளுநர் விருது (2001) உட்படப் பல விருதுகளையும் பரிசுகளையும் பெற்றவர். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4639).

## 16708

**வனம் திரும்புதல்: சிறுகதைகள்.** பொ.கருணாகரமூர்த்தி. நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2019. (சென்னை 600086: Compu Print Premier Design House).

182 பக்கம், விலை: இந்திய ரூபா 225.00, அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-93-89820-30-0.

பொ.கருணாகரமூர்த்தி, புத்தூரில் பிறந்தவர். 1980இல் பெர்லினுக்குப் புலம்பெயர்ந்து அங்கேயே தனது குடும்பத்தினருடன் வாழ்ந்து வருபவர். வாடகை வண்டிச் சாரதீயத்தின் மூலம் தான் பெற்ற அனுபவங்கள், முது பிரஜைகள் நலன் பேண் அலுவலராகப் பணியாற்றியதில் பெற்ற அனுபவங்கள் ஆகியவற்றைத் தன் படைப்புகளில் பதிவுசெய்து வருகின்றார். 1985இல் கணையாழியில் வெளிவந்த "ஒரு அகதி உருவாகும் நேரம்" குறுநாவல் மூலம் இலக்கிய உலகிற்கு அறிமுக மானவர். காருண்யன், கொன்ஃபூசியஸ், புதுவை நிலவன், அழகு முருகேசு முதலிய பெயர்களில் கவிதைகள் எழுதியுள்ளார். கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2010ஆம் ஆண்டுக்கான சிறந்த சிறுகதைத் தொகுப்பாக இவரது "பதுங்குகுழி" தேர்வுபெற்றது. வனம் திரும்புதல், இவரது சிறுகதைப் படைப்புகளான நிலங்கீழ் வீடு, Donner Wetter, Galle Face Hotel, இராணு வத்தில் சித்தார்த்தன், ஓடுகாலித் தாத்தா, காலச்சிமிழ், தாயுமானவள், மனைமோகம், மாயத் தூண்டில், மேகா அழகிய மனைவி, வடிவான கண்ணுள்ள பெண், வனம் திரும்புதல், ஜிமிக்கி ஸ்பெஷலிஸ்ட், ஸோபிதாவுக்கு பெர்லின் காட்டுதல் ஆகிய படைப் பாக்கங்களை உள்ளடக்குகின்றது. புலம்பெயர் தேசங்களில் அலையும் மனிதர்க ளையும் பொருளாதார, சமூக பாதுகாப்பைக் கோரிநிற்கும் கதாபாத்திரங்களையும் ஆசிரியர் தன் கதைகளில் பாத்திரங்களாக்கியிருக்கிறார். அவை பொது மனதிற்கு அச்சத்தையும் பதற்றத்தையும் உண்டாக்கும் பாத்திரங்களாக உருமாறு கின்றன. குடிவரவாளர்கள், கேட்பாரற்று அநாதரவானவர்கள், மரண நிழலில் இறுதி நாட் களை எண்ணிக்கொண்டிருப்போர், மனப்பிறழ்வடைந்தவர்கள், விதியே என அலைக்கழிபவர்கள் என பன்முகப்பட்டோரிடம் ஆசிரியர் காட்டும் அக்கறையும் கரிசனையும் கொண்ட இத்தொகுப்பிலுள்ள 14 கதைகளும் ஒற்றுமையும் முரண் களும் நிறைந்தவை. மனிதர்களிடம், அரசியலிடம், சில நேரங்களில் மரணத்திடம் கூட அங்கதம் இழைந்த தொனியில் இணக்கத்தை வேண்டுகின்ற கதைகள் இவை.

## 16709

**வாழ்க்கை பயணத்தில் தடம் மாறலும் தடுமாறலும்.** நிவேதா ஜெகநாதன். கொழும்பு 13: நிவேதா ஜெகநாதன், கொட்டாஞ்சேனை, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2020. (கொழும்பு 13: சண் கிராப்பிக் அன்ட் பிரின்டர்ஸ், 340, ஜம்பட்டா வீதி, கொட்டாஞ்சேனை).

x, 109 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x15.5 சமீ., ISBN: 978-624-95090-4-7.

மலையகத்தில் ஹப்புத்தளையை பிறப்பிடமாகக் கொண்டு, கொழும்பை வாழ்விடமாகக் கொண்ட நிவேதா எழுதிய முதலாவது சிறுகதைத் தொகுதி இது. இந்நூலில் நிவேதா ஜெகநாதன் எழுதிய பத்துச் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. பயணங்கள், பூங்காவின் பூரிப்பு, வியர்வையில் வந்த வெள்ளாமை, குளத்து மீனுக்கு ஆசை, ஆலமரமே அழிந்தது, அவன் ஊனமல்ல, முத்தம்மா மொத்தமும் ஆனவள், வனவாசத்தில் ஒரு வனமகன், சித்திரையில் பிறந்தவள், பார்வை மாறிய பருவங்கள் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

### 16710

**வாழ்வதற்குப் போராடு: சிறுகதைத் தொகுப்பு.** நெடுந்தீவு மகேஷ். யாழ்ப்பாணம்: செ.மகேஷ், 249/1, நாயன்மார் வீதி, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2020. (யாழ்ப்பாணம்: யாழ். பதிப்பகம்).

xvii, 117 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 300., அளவு: 21x15 சமீ.

முப்பதாண்டு கால உள்நாட்டு யுத்தத்தினால் சின்னாபின்னமாக்கப்பட்டு சிதைந்து போனதொரு சமூகத்தின் உணர்வுகளையும் அவலங்களையும், அங்கலாய்ப்புகளையும் சமகாலத் தரிசனங்களாக ஒளிவு மறைவின்றி உண்மை இலக்கியங்களாகத் தந்துள்ளார். நெடுந்தீவு மகேஷ். அடிபட்ட மனதின் ஆழப்பதிந்துள்ள வடுக்களின் பிரதிபலிப்புகளாக இத்தொகுதியின் சிறுகதைகள் காணப்படுகின்றன. கூத்து, வாழ்வதற்குப் போராடு, நிஷா அழுகிறாள், பாமாதேவியின் வலம், வாயில்லாப் பிராணி, சாட்சி, மரணமே உன் கூர் எங்கே?, பெற்ற மனங்கள், விளையும் விளைவுகள், ஊமைக் காயங்கள், பிரச்சினை தீர்ந்தது, ஓர் உயிரின் ஓலம், வாழாத வாழ்க்கை, அழுத்தும் துயரங்கள், பாதை மாறும் பயணங்கள், அப்பா, பண்பு தவறிய, இன்னமும் நாட்களாகலாம், ஊமை ஆகிய 19 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

### 16711

**வாழு வாழவிடு: 16 உருவகக் கதைகளின் தொகுப்பு.** பொன்.குலேந்திரன். கனடா: குவியம் வெளியீடு, 2796, Keyness Crescent, Mississauga, Ontario, L5N3A1, 1ஆவது பதிப்பு, மார்ச் 2017. (மின்நூல் வடிவம்).

124 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

இந்நூலில் ஆசிரியர் எழுதிய வாழு வாழவிடு, சோம்பேறியின் சாதனை, தன்னம்பிக்கை, ஒரு சுவரின் கதை, பந்தின் பரிதாபம், சிலை, இரு பனை மரங்கள், பொன்னாடை-பிணப்பெட்டி-மலர் வளையம், காகமும் நாயும், மலையும் மலையேறியும், நதி எங்கே செல்கிறது, ஓடும் மேகங்கள், சந்தன மரமும் சந்தானமும், சுமதாங்கி, மாண்புமிகு மாமரம், தெருநாய் ஆகிய 16 உருவகக் கதைகள் இடம் பெற்றுள்ளன.

### 16712

**விரல்களிலும் வேர் முளைக்கும்.** *யாழ். மருதன் (இயற்பெயர்: அ.வினோத்). யாழ்ப்பாணம்: அ.வினோத், மருதங்கேணி வடக்கு, வடமராட்சி கிழக்கு, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2023. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).*

xiv, *111 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 20.5*x*14.5 சமீ.,* ISBN: *978-624-99861-0-7.*

*இச்சிறுகதைத் தொகுப்பில் யாழ் மருதன் எழுதிய புள்ளினம் ஓலமிடுகிறது, நான் அப்பா, சமூகக் கொலை, கடைசி மீன், பெஸ்ரி, முதற்படி, உப்புக்காடு, ஆண்சிறை, முக்கியத்துவம், சிவப்பி, கூச்சல், பேசத்துணிந்தவர்கள் பேசுங்கள் ஆகிய கதைகள் இடம்பெற்றுள்ளன. வடமராட்சி கிழக்கின் மண்வாசனையில் தவழ்ந்து இலக்கிய உலகில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் அ.வினோத், தொகுத்து வழங்கும் முதலாவது சிறுகதைத் தொகுப்பு இது. இன்றைய சமூகத்தின் போக்கு, மாற்றம் எனும் பெயரால் எதிர்கால சமூகம் சந்திக்கக்கூடிய சவால்கள் மற்றும் சமகால சமூகம் எதிர்பார்த்திருக்கும் வினைத்திறன் மிக்க மாற்றம் முதலான புதிய தேடல்களை இக்கதைகள் சித்திரிக்கின்றன.*

### 16713

**வெண்சுவர்.** *தாட்சாயணி (இயற்பெயர்: திருமதி பிரேமினி பொன்னம்பலம்). சாவகச்சேரி: திருமதி பிரேமினி பொன்னம்பலம், பெரிய அரசடி வீதி, சங்கத்தானை, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (மதுரை: கடல் பதிப்பகம்).*

*114 பக்கம், விலை: இந்திய ரூபா 160., அளவு: 21.5*x*14 சமீ.*

*வெண்சுவர், இருத்தலின் வலி அல்லது இன்னுமொரு பக்கம், அம்மாவின் தோழன், இரண்டு கடிதங்கள், கத்தரிப்பூக் கிழங்கு, சாயம், சுடுவெயில், தனிமைப் படல், தாழமுக்கம், நட்சத்திரங்களாய் ஒளிரும் வகுப்பறை, புளிப்பின் சுவை, பெண்மையின் தவறோ ஆகிய பன்னிரு கதைகள் இத்தொகுப்பில் இடம் பிடித்துள்ளன. இதற்குமுன், ஐந்து தொகுப்புகளை வெளியிட்டிருந்தாலும், தாட்சாயணி இந்தத் தொகுப்பின் மூலமே தமிழகத்தில் அறிமுகமாகிறார். இவரது அநேக கதைகளில் பிரதான பாத்திரங்கள் பெண்கள். தாட்சாயணியின் பெண்கள் அப்பாவிகள், சாத்வீகமானவர்கள். போராளிகளாக இருந்து வந்த பெண்களும் பின்னர் சாந்தமாக மாறுகிறார்கள். பல பெண்கள், மனதுக்குள் சோகத்தையும், இரகசியத்தையும் பதுக்கி வைத்திருக்கிறார்கள். சிலரால் இரகசியங்களைக் காலம்கடந்து சொல்ல முடிகிறது, சிலர் கல்லறைக்கு எடுத்துச் செல்லப்போகிறார்கள். சமகாலப் பிரச்சனையைச் சொல்லும் கொரோனாவின் புறப்பாதிப்புக் கதைகளும் சில தொகுப்பில் உள்ளன. பன்னிரண்டு கதைகளும் எந்தப் புதிய யுத்தியும், திடீர் திருப்பங்களும் இல்லாத, கதையம்சத்தை மட்டுமே நம்பிய, எளிமையான கதைகள். எளிமைக்கேயுரிய பிரத்யேகமான வசீகரம் தாட்சாயணியின் கதைகளிலும் தவறாமல் இருக்கின்றது.*

## 16714

**வெளியில் எல்லாம் பேசலாம்.** தெணியான்(மூலம்), க.மதன் (தொகுப்பாசிரியர்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, தை 2023. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

x, 86 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-624-5881-67-3.

சாஹித்திய ரத்னா தெணியானின் ஆறாவது சிறுகதைத் தொகுதியான இந்நூல் அவரது மறைவின் பின்னர், 81ஆவது அகவை நாளை முன்னிட்டு வெளிவருகின்றது. ஆத்ம பந்தம், மரணத்தின் ஓலம், அணையாச் சுடர், விபசாரன், தோற்ற மயக்கங்கள், நோயாளி, பூவும் பொட்டும், இங்கிலிஸ் வாத்தியார், அறாத வேர், அவள் அல்ல இவள், உறவுகளைத் தேடும் ஆவிகள், வெளியில் எல்லாம் பேசலாம் ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன.

## 16715

**வேப்பமரமும் பவளம் ஆச்சியும்.** விவேகானந்தனூர் சதீஸ். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

viii, 92 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-624-5881-10-9.

புரிந்தும் புரியாமலும் சுதந்திரம் பறிக்கப்பட்டதொரு புதிய வாழ்வுக்குள் தெண்டித் தள்ளப்பட்டு பதினான்கு ஆண்டுகளை சிறையில் கழித்து வருபவர் இந்நூ லாசிரியர். தான் சுற்றத்தில் கண்டு, கேட்டு, பார்த்து, பட்டுணர்ந்த பலதையும் தன் நினைவுச் சேகரத்தில் பொக்கிஷமாகப் பாதுகாத்து வருபவர். அவற்றின் நினைவு மீட்டல்களாக இதிலுள்ள சிறுகதைகளை இவர் எழுதியுள்ளார். இந் நூலில் அப்பா எப்ப வருவாரம்மா?, மின்வெட்டு, குமரனும் நலீமும், மரண வாக்குமூலம், எப்போ வி(மு)டியும், அண்ணே பெண்டாட்டி, காலம் கடந்த கௌரவம், தாரமும் தங்கையும், குயில் குடும்பம், ஐந்தைப் பெற்றும் அநாதையாய், வேப்ப மரமும் பவளம் ஆச்சியும் ஆகிய பதினொரு சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. இது ஜீவநதி வெளியீட்டகத்தின் 197ஆவது நூலாக வெளிவந்துள்ளது.

## 16716

**ஜனனம்.** பார்த்திபன். மேற்கு ஜேர்மனி: Sud Asien Buro, Kiefernatr 45, 5600, Wuppertal 2, 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 1986. (கல்லச்சுப் பிரதி).

40 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x15 சமீ.

ஜனனம், பாதியில் முடிந்த கதை, கற்பு ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட கதைகள். இக்கதைகளுக்கான ஓவியங்களை ஓவியர் ரமணி வரைந்துள்ளார். மேற்கு ஜேர்மனியில் வந்து குடியேறிய ஈழத்தமிழர்கள் தமது இலக்கியத் தொடர் பாடல்களுக்கு இத்தகைய வடிவமைப்பிலான கல்லச்சு நூல்களையே தொடக்கத்தில் பயன்படுத்தினர். அவையே ஆரம்ப வழிவகைகளாக இருந்தன. அவ்வகையில்

புலம்பெயர் இலக்கிய வரலாறு பற்றிய தேடலை மேற்கொள்பவர்களுக்கு இத்தகைய ஆரம்பகால நூல்கள் முக்கிய வரலாற்றுச் சான்றுகளாகும்.

மேலும் பார்க்க:
அம்மா காத்திருக்கக்கூடும்: க(வி)தை தொகுதி. 16463
கிராமத்து மனிதர்கள்:கிராமத்து வாழ்வின் கதைகள். 16270
சிங்களத் தீவினுக்கொரு சிறுகதைப் பாலம் 16983

## 894.8(41) மொழிபெயர்ப்புச் சிறுகதைகள்

### 16717

**ஆஸ்திரேலிய ஆதிவாசிக் கதைகள்.** மாத்தளை சோமு. சென்னை 600 005: தமிழ்க் குரல் பதிப்பகம், 10, புலியோன் பஜார், இரண்டாவது சந்து, திருவல்லிக்கேணி, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2012. (சென்னை 5: கவிக்குயில் அச்சகம்).

(8), 262 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15 சமீ.

“கடவுளை நோக்கி ஒரு பயணம்” என்ற முதலாவது கதையில் தொடங்கி, “கொக்கும் காகமும்” என்ற இறுதிக் கதை வரை, பெரியதும் சிறியதுமான 94 கதைகளை இத்தொகுப்பில் மாத்தளை சோமு சேர்த்திருக்கின்றார். அனைத்தும் எளிமையாகவும் உள்ளடக்கம் சீர்குலையாமலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. விலங்குகளோடு மனிதர் பேசுவதும், பாமர மக்களின் நம்பிக்கைகளும் ஆச்சரியங்களும் கதைகள் முழுதும் பரவிக் கிடக்கின்றன. எமது பாட்டி சொன்ன கதைகள், நீதிக்கதைகளில் உள்ளது போலவே இக்கதைகளிலும் ஏதொவொரு வகையில் நீதிகள் புகட்டப்படுகின்றன.

### 16718

**சுடுமணல்.** கே.சுனில் சாந்த (சிங்கள மூலம்), திக்குவல்லை கமால் (தமிழாக்கம்). பஸ்ஸரை:கே.சுனில் சாந்த, நதாஷா, டீ.எஸ்.சேனநாயக்க மாவத்தை, 1ஆவது பதிப்பு, 2012. (நுகேகொட: நியோ கிராபிக்ஸ், 143, ஸ்டேஷன் ரோட், கங்கொடவில).

xx, 85 பக்கம், விலை: ரூபா 230., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-51221-2-2.

சுடுமணல், புலம்பல், எருமைமாடு, நத்தார் தாத்தா, மலர்ந்தும் மலராத, ஆறுமுகம் தோட்டத்துக் கதாபாத்திரங்கள், புகையிரத நிலையம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட மொழிபெயர்ப்புக் கதைகளின் தொகுப்பு. மூலக்கதைகள் சிங்கள மொழியில் முன்னர் வெளிவந்திருந்தன. அவற்றை அவ்வப்போது திக்குவல்லை கமால் அவர்கள் தமிழாக்கம் செய்து, ஞானம், மல்லிகை இதழ்களில் வெளியிட்டு வந்தார். இன ஐக்கியத்தையும் நல்லுறவையும் வளர்க்கும் கதையம்சம் பொருந்திய அம்மொழிபெயர்ப்புக் கதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது.

### 16719

**தொடரும் உறவுகள் (பவசரண).** *சிட்னி மார்க்கஸ் டயஸ் (சிங்கள மூலம்), திக்குவல்லை கமால் (தமிழாக்கம்). ஆனமடுவ: தோதென்ன வெளியீடு, உஸ்வெவ வீதி, 1ஆவது பதிப்பு, 2009. (கணேமுல்ல: ஜயன் பிரின்ட் கிராப்பிக்ஸ், 52 A/1, கலஹிட்டியாவ).*

vi, *113 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.,* ISBN: *978-955-1848-27-9.*

*தேசிய ரீதியாக தமிழ்-சிங்கள மொழி படைப்பிலக்கியங்களை மொழிபெயர்த்து, பரவலாகப் பயில வேண்டுமென்ற தேவை வெகுவாக உணரப்பட்டுள்ள காலம் இது. மனித உறவுக்கும் புரிந்துணர்வுக்கும் மொழி ஒரு தடையாக அமையாத சூழலில் தான் மனிதநேயம் மலர முடியும். அதுவே தேசத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் வழிவகுக்கும். இந்த உயர் நோக்கத்தோடு செயற்படும் தோதென்ன வெளியீட்டகம் பல்வேறு மொழிபெயர்ப்பு நூல்களைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றது. அந்த வரிசையில் கவனிப்புக்குரிய எழுத்தாளரான சிட்னி மார்க்கஸ் டயஸின் இச் சிறுகதைத் தொகுதியும் வெளிவந்துள்ளது. இதில் இரண்டு அம்மாக்கள், பெரிய சேரின் தேர்தல், லீலாவதி ரீச்சர், தொடரும் உறவுகள், பெரிய சுவாமி அவர்கள், வகுப்பறை வழக்கு, தேசப்பற்றாளன், பூங்கா காவலனின் காதல் கனவு, அர்ப்பணிப்பு, தேவாங்குக் குட்டி ஆகிய பத்து சிறுகதைகள் அடங்கியுள்ளன.*

### 16720

**மறைந்த முகம்: சிங்களச் சிறுகதைகள்.** *திக்குவல்லை கமால் (தமிழாக்கம்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2022. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).*

*84 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21*x*14 சமீ.,* ISBN: *978-624-5881-59-8.*

*இத்தொகுப்பில் ஒன்பது சிங்கள எழுத்தாளர்களின் சிறந்த சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு கதையிலும் அதனதன் ஆசிரியர்களின் தனித்துவம் வெளிப்படுவதை அவதானிக்கலாம். வெவ்வேறு நோக்கு, போக்கு, உத்தி, உருவம் போன்றவற்றால் புது அனுபவச் சுவை தருகின்றன. தயாசேன குணசிங்ஹவின் "பேய்களின் இரவு", விமலதாச முதாகேயின் "படைவீரனும் ரோஸியும்", கீர்த்தி வெலிசரகேயின் "மறைந்த முகம்", யசேந்திர ரணவக்கவின் "புத்திரக் கனவு", டெனிசன் பெரேராவின் "மோப்ப ராகம்", குணசேகர குணசோமவின் "சிநேகம்", லீலானந்த விக்ரமசிங்ஹவின் "மனிதனும் மரமும்", கமல் பெரேராவின் "சுமனக்கா", பியதாஸ வெலிகன்னகேயின் "ஒரு விடிவெள்ளி" ஆகிய கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 238ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.*

### 16721

**ராஜினி வந்து சென்றாள் (ராஜினி அவித் கியா): சிங்களச் சிறுகதைத் தொகுப்பு-2.** திக்குவல்லை கமால், எம்.எச்.எம்.யாக்கூத், எஸ்.ஏ.சீ.எம்.கராமத் (மொழிபெயர்ப்பாளர்கள்). ஆனமடுவ: தோதென்ன வெளியீடு, உஸ்வெவ வீதி, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2008. (கணேமுல்ல: ஜயன்ட் பிரின்ட் கிராப்பிக்ஸ், 52, A/1, கலஹிடியாவ).

viii, 9-248 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-955-1848-21-7.

இந்நூலில் சிங்களப் படைப்பாளிகளின் இருபது சிறுகதைகள் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. எழுச்சி, போட்டிக்கு ஒரு சித்திரம், ராஜினி வந்து சென்றாள், முக்கோணம், மாட்டுக்காரன், உணவுவேளை, பைத்தியக்காரனின் கனவு, டிங்கித்தாவின் செயற்பாடுகள், பிணைப்பு, பிரதிபலிப்பு, இரண்டு அம்மாக்கள், தேசப்பற்றாளன், கைலாச பீடம், கலாசார விடய எழுதுநர், ஆசிரியர் மனதை நோகடித்து, விலங்கு, டோசர், ஒட்டு, தனிமரம், அக்கா ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. இக்கதைகளை கீர்த்தி வெலிசரகே, கமல் பெரேரா, நிஸ்ஸங்க விஜேமான்ன, ஆனமடுவே விஜேசிங்ஹ, அனுலா விஜேரத்ன மெனிக்கே, சிட்னி மார்க்கஸ் டயஸ், எரிக் இளையப்ப ஆரச்சி, ஜயதிலக்க கம்மெல்லவீர, லியனகே அமரகீர்த்தி, சரத் விஜேசூரிய ஆகியோர் எழுதியுள்ளனர்.

## 894.8(5) தமிழ் நாவல்கள், குறுநாவல்கள்

### 16722

**அக்கினிக் குஞ்சுகள்.** லதா உதயன். சென்னை 600093: பூவரசி வெளியீடு, இல.2, 2ஆவது தளம், 1ஆவது குறுக்குத் தெரு, புஷ்பா காலனி, சாலிகிராமம், 1ஆவது பதிப்பு, ஜுலை 2022. (சென்னை 600093: பூவரசி வெளியீடு, புஷ்பா காலனி, சாலிகிராமம்).

208 பக்கம், விலை: ரூபா 800., அளவு: 22x14 சமீ., ISBN: 978-624-5020-04-9.

லதா உதயன் பருத்தித்துறையைப் பூர்வீகமாகக் கொண்டவர். தற்போது சுவிஸ் நாட்டில் 25 ஆண்டுகளாகப் புலம்பெயர்ந்து வாழ்ந்துவருகிறார். இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு "ஒரு நதியின் தேடல்" 2001இல் வெளிவந்தது. "உன்னைச் சரணடைந்தேன்" என்ற நாவல் 2015இல் வெளிவந்தது. "அக்கினிக் குஞ்சுகள்" இவரது இரண்டாவது நாவலாகும். ஈழ விடுதலைப் போராட்ட இலக்கியத்தில் மண்ணுக்காய் மாண்டவர்கள் மீதான பாடல்களும் கவிதைகளும் மிக முக்கிய மானவை. ஒவ்வொரு மாவீரனும் மக்கள் மத்தியில் நாயக பிம்பத்தை தோற்றுவித்த வர்களே. பெரும் வீர தீரங்களை தமது சொந்த மண்ணில் நிகழ்த்திக் காட்டியவர்கள். தமிழ்மண்ணுக்காகவும் தன் இனத்திற்காகவும் இன்னுயிரை ஆகுதியாக்கியவர்கள். அக்கினிக் குஞ்சுகள் நாவலும் கிராமத்தில் உதித்த அந்த மாவீரர்களைப் பற்றிய காவியமாகின்றது. ராசா என்ற முதன்மைக் கதாபாத்திரத்தைச் சுற்றிக் கதை

நகர்கின்றது. பூவரசி வெளியீட்டகத்தின் 228ஆவது பிரசுரமாக இந்நாவல் வெளிவந்துள்ளது.

### 16723

**அகதியின் நாட்குறிப்பு.** குடத்தனை உதயன் (இயற்பெயர்: இராமநாதன் உதயகுமார்). சென்னை 600093: பூவரசி வெளியீடு, இல.2, 2ஆவது தளம், 1ஆவது குறுக்குத் தெரு, புஷ்பா காலனி, சாலிகிராமம், 1ஆவது பதிப்பு, ஜுன் 2022. (சென்னை 600093: பூவரசி வெளியீடு, புஷ்பா காலனி, சாலிகிராமம்).

192 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 22x14 சமீ., ISBN: 978-624-5019-04-9.

இராமநாதன் உதயகுமார் (குடத்தனை உதயன்) வடமராட்சி கிழக்கு, குடத்தனையைப் பூர்வீகமாகக் கொண்டவர். தற்போது சுவிஸ் நாட்டில் 30 ஆண்டுகளாகப் புலம்பெயர்ந்து வாழ்ந்துவருகிறார். இவரது முதலாவது நாவல் "விழியோரத்துக் கனவுகள்" 1988இல் வெளிவந்தது. "விடியலைத் தேடி" என்ற தொடர்கதை பாரிஸ் ஈழமுரசுவில் தொடராக வெளிவந்தது. "இருளுக்குள்ளே ஒரு நம்பிக்கை" மணிமேகலைப் பிரசுரமாக 2016இல் வெளிவந்திருந்தது. புலம்பெயர் வாழ்வு எப்போதுமே இனிமையானதாக இருப்பதில்லை. அந்த வாழ்விலும் சொல்வதற்கு அச்சப்படும் ஒரு மறுபக்கம் உண்டு. அந்த இருள் படர்ந்த வாழ்க்கையை அடுத்த சந்ததிக்கு சொல்லியே ஆகவேண்டும் என்ற உந்துதலில் இந்நாவல் மலர்ந்துள்ளது. சில தவறுகளில் இருந்தும் தான் நாங்கள் பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும். பூவரசி வெளியீட்டகத்தின் 226ஆவது பிரசுரமாக இந்நாவல் வெளிவந்துள்ளது.

### 16724

**அது ஒரு அழகிய நிலாக்காலம்: வன்னியின் மூன்று கிராமங்களின் கதை.** மகாலிங்கம் பத்மநாபன். பரந்தன்: சுப்ரம் பிரசுராலயம், இல. 77 , குமரபுரம், 1ஆவது பதிப்பு, ஆவணி 2022. (யாழ்ப்பாணம்: tg Printers, திருநெல்வேலி).

xviii, 440 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 900., அளவு: 22x14 சமீ., ISBN: 978-624-99402-0-8.

தாயகத்தில் வன்னி பெருநிலப்பரப்பு, விவசாயத்திலும் அரசியலிலும் மிகுந்த முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. காடாக இருந்த அந்தப் பிரதேசத்தை வளம் கொழிக்கும் மண்ணாக மாற்றியவர்களின் கதையே அது ஒரு அழகிய நிலாக்காலம். அவர்கள் காலத்தில் மின்சாரம் இல்லை. சீரான வீதிகள் இல்லை. மருத்துவமனைகள் இல்லை. பாடசாலைகளே இல்லை. இவ்வாறு இல்லை எனத் தொடர்ந்தவற்றை இல்லாமல் ஆக்கிய பெருந்தகைகள் பற்றிய கதைதான் இந்தப்புதினம். மூன்று தலைமுறைகளின் வாழ்வுக்கோலங்களை இந்தப் புதினம் பேசுகிறது. காடு மண்டிக்கிடந்த வன்னி பெருநிலப்பரப்பினை பசுமை பூக்கும் மண்ணாக மாற்றி, உழவுத் தொழிலின் மூலம் மக்களின் பசியை போக்கிய அம்மக்களின் கடும் உழைப்பு இந்நாவலில் விபரிக்கப்படுகின்றது. வன்னியின் மூன்று கிராமங்களின் கதையைப் பேசும் இந்நூல் அங்கு வாழ்ந்த மற்றைய ஜீவராசிகள் பற்றியும் பேசுகிறது. மக்களுக்கும் அவற்றுக்குமிடையே வளரும் உறவும், முரண்பாடும்,

பகையும் கூட வாழ்க்கைக்கான போராட்டத்தின் அம்சங்கள்தான் என்பதை நூலாசிரியர் சொல்லாமல் சொல்கிறார். 1900ஆம் ஆண்டில் தொடங்கும் வன்னி மாந்தரின் கதை, 1982ஆம் ஆண்டு வரையில் நீடிக்கிறது. இடைப்பட்ட காலத்தில் அங்கு நேர்ந்த அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களையும் பண்பாட்டுக் கோலங்களையும் உணவு நாகரீகத்தையும், சிறு தெய்வ வழிபாடு தொடக்கம், ஆலயம் அமைத்து உற்சவம் நடத்தும் காலம் வரையில் மக்களின் மத நம்பிக்கைகள் பற்றியும் பேசுகின்றது. மேலும் அம்மக்களின் அன்றைய காதல், திருமணம், மறுமணம் பற்றியும் தொட்டுச் செல்கின்றது. போர்த்துக்கீஸர், ஒல்லாந்தர், பிரித்தானியரின் வருகை, உள்ளூர் அரசியல்வாதிகளின் பிரவேசம் என்பனவும் கதையோடு நகர்ந்து வரலாற்றுப் புதினம் ஒன்றை வாசிக்கும் அனுபவத்தை ஏற்படுத்துகிறது. ஏற்கனவே "வணக்கம் லண்டன்" இணையத்தளத்தில் தொடர்ச்சியாக வெளிவந்து, பின்னர் லண்டனிலிருந்து வெளிவரும் "ஒரு பேப்பர்" பத்திரிகையில் தொடர்ந்து பிரசுரமானது. பின்னாளில் "சுடரொளி வாரமலர்" இப்புதினத்தின் தலைப்பை "அது ஒரு அழகிய நிலாக்காலம்" என்று மாற்றித் தொடராக வெளியிட்டிருந்தது. மேற்கே கொல்லனாறு, தெற்கே எள்ளுக்காடு, கிழக்கே நீலனாறு, வடக்கே வடக்குக் காடு என்பவற்றிற்கிடையே அமைந்திருந்த காடு, மீசாலையிலிருந்து வந்த தம்பையராலும், அவரது உறவினர்களாலும், தம்பையரின் உறவினர்களும் இணைபிரியாத நண்பர்களாகவுமிருந்த ஆறுமுகம், முத்தர் என்பவர்களாலும் வெட்டப்பட்டு கழனியாக்கப்பட்டு பின்னர் வளம் கொழிக்கும் கிராமம் ஆக மாறிய இடமே பெரிய பரந்தன் ஆகும். தம்பையர், விசாலாட்சி, ஆறுமுகத்தார், கணபதி, மீனாட்சி என கதையின் முக்கிய மாந்தர்களின் அன்றாட வாழ்வுடன், வன்னிமண், எவ்வாறு மாற்றமடைகிறது என்பதை அழகியலுடன் சித்திரிக்கிறார் மகாலிங்கம் பத்மநாபன். ஒவ்வொரு அங்கத்தின் தொடக்கத்திலும் உள்நாட்டு மற்றும் உலக நாடுகளின் வரலாற்றுச்செய்திகளையும் பதிவுசெய்துள்ளார். ஓய்வுநிலை அதிபரான பத்மநாபன், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பெரிய பரந்தனில் பிறந்தவர். மன்னார் பிரதேசத்தில் ஆசிரியராகப் பணியாற்றி, பின்னாளில் கிளிநொச்சி பிரதேசத்தில் பல பாடசாலைகளில் ஆசிரிராகவும் அதிபராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றவர்.

## 16725

**அம்மாவின் பிள்ளைகள்: குறுநாவல்கள்.** குரு அரவிந்தன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7 (ப.எ.4), தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1ஆவது பதிப்பு, 2019. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

xiv, 192 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 125., அளவு: 19x13 சமீ.

இந்நூலில் அந்த பதினெட்டு நாட்கள், தாயுமானவர், குமுதினி, அம்மாவின் பிள்ளைகள் ஆகிய நான்கு குறுநாவல்கள் இடம்பெற்றுள்ளன. இலங்கையில் நடந்த இனப்படுகொலையால் புலம்பெயர்ந்தோர் துயரை மையமாக கொண்டும், 2018ஆம் ஆண்டில் தாய்லாந்து நாட்டில், 18 நாட்கள் இருண்ட குகையில் வெள்ளத்தில் போராடியவர்களை மீட்டு, உலகின் கவனத்தை ஈர்த்த உண்மைச் சம்பவத்தையும் மையமாகக் கொண்டு குறுநாவல்களாக படைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இருந்து வெளிவரும் யுகமாயினி இதழ் நடத்திய அமரர் நகுலன் நினைவு குறுநாவல் போட்டியிலும் ஈழத்தமிழர்களின் சோகக் கதை சொல்லும் குரு அரவிந்தனின் "அம்மாவின் பிள்ளைகள்" என்ற குறுநாவல் பரிசு பெற்றுப் பலரின் பாராட்டையும் பெற்றது. 2011இல் சர்வதேச ரீதியாக நடந்த தமிழகத்தில் இருந்து வெளிவரும் கலைமகள் குறுநாவல் போட்டியில் குரு அரவிந்தனின் "தாயுமானவர்" என்ற குறுநாவல் இரண்டாவது பரிசைப் பெற்றிருக்கின்றது. புலம் பெயர்ந்த தமிழர்களின் பண்பாட்டுச் சின்னங்கள், புலம் பெயர்ந்த தமிழர்களின் மனக் குமுறல்கள் இவற்றை எல்லாம் வெளிப்படுத்தியதற்காக குரு அரவிந்தனின் "தாயுமானவர்" குறுநாவலைத் தேர்வு செய்துள்ளதாக நடுவர்கள் குறிப்பிட்டனர். இந்நூலில் இடமபெற்றுள்ள அனைத்துக் கதைகளும் பரிசுக் கதைகளே.

**16726**

**அமார்க்க வாசம்.** *அல் அஸூமத். வெல்லம்பிட்டிய: அல் அஸூமத், 50, கோத்தமி மாவத்தை, வெலேவத்த, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2020. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*295 பக்கம், விலை: ரூபா 700., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-52134-4-8.*

*1989இல் தினகரன்வார இதழில் சில மாதங்களாக வெளிவந்த தொடர்கதையின் நூல் வடிவம் இது. இலங்கைவாழ் முஸ்லீம்களின் ஒரு பகுதியை, கொழும்பையும் அதன் புறநகர்ப் பகுதியையும் களமாகக் கொண்டு, இங்கே வாழும் சாதாரண முஸ்லிம் மக்களையும் அவர்தம் வாழ்க்கையையும் தெரிந்துகொள்ள இந்நாவல் உதவும். இந்நாவலில் வரும் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் உயிர்த் துடிப்போடு, தத்ரூபமாக நாவலில் இயங்குகின்றன. அமார்க்க வாசத்தில் வரும் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் நாவலாசிரியரின் வீட்டுக் கதவைத் தட்டுவதோடு உள்ளேயும் புகுந்திருக்கின்றன. அல் அஸூமத்தின் வீடும் ஒரு முக்கிய பாத்திரமாகின்றது. இந்த வீடு, அங்குவந்து போவோர், அங்கே அவர்கள் நடந்துகொள்ளும் விதம், அங்கே நடக்கும் சம்பவங்கள் ஆகிய ஒவ்வொன்றும் ரசனை, சந்தோஷம், துக்கம், அவலம், ஆத்திரம், வெறுப்பு, இரக்கம், கருணை, நகைச்சுவை- இப்படிப் பலவித உணர்ச்சிகளையும் சுட்டுகின்றது. இந்நாவலில் வரும் பேச்சு வழக்கு கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதியிலும் வழங்கும் கொழும்புச் சோனகத் தமிழாகும்.*

**16727**

**அர்ஜுன் பரீஷித்.** *ஆத்விகா பொம்மு. மட்டக்களப்பு: மகதீரா பதிப்பகம், திருமலை வீதி, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2020. (மட்டக்களப்பு: எஸ்.ஆர். மினேர்வா கிராப்பிக்ஸ்).*

*152 பக்கம், விலை: ரூபா 170., அளவு: 19.5x13.5 சமீ., ISBN: 978-624-97368-0-1.*

*"இனம்புரியா உறவிதுவோ" என்ற ஆசிரியரின் முன்னைய நாவலின் தொடர்ச்சியே இந்நாவலாகும். முதல் அத்தியாயத்தில் முன்கதைச் சுருக்கம் தரப்பட்டுள்ளது. மருகமணிச் சித்தர் தீயோரிடமிருந்து உலகைக் காக்க ஒரு "சுப்பர்மானை" உருவாக்கும் முயற்சியில் பல மூலிகைகளை பயன்படுத்தி ஆராய்ச்சிகளில்*

ஈடுபட்டுவருகிறார். அத்தகைய ஒருவனை தன் மகளின் கருவில் சுமப்பதை விரும்பி அவளுக்கு நாள்தோறும் மூலிகைகளை உண்ணக்கொடுக்கிறார். அவளுக்குப் பிறக்கும் மகவு பெண்ணாக அமைந்துவிடுகிறது. அவர் மூலிகைக் குறிப்புகளை ஏட்டில் எழுதிவைத்துவிட்டு இறந்துபோகிறார். தலைமுறை தாண்டி ஆண் வாரிசின்றித் தொடரும் புதிய தலைமுறையில் அச்சந்ததி வழியில் மனிஷாவுக்கு சுப்பர்மானை பிரசவிக்கும் சக்தி வந்தடைகின்றது. இவர்களுக்கு வில்லனாக வருகிறான் "பிளாக் சீட்டா". மனிஷாவின் வயிற்றில் காதலன் அபிமன்யுவுடன் கொண்ட உறவால் ஒருவாறாக ஆண்குழந்தை பிறக்கிறது. அவனே அர்ஜுன் பரீக்ஷிட். இந்த நாவலானது உலகை ஆளும் காவலனும் அதீத சக்திகளைக் கொண்டு பிறந்தவனுமான அர்ஜுன் பரீக்ஷிட் உடைய வீரம் மற்றும் பிராமணப் பெண்ணான உத்திராவுடனான அவனது காதல் என அனைத்தும் உள்ளடங்கி விஞ்ஞானமும் சித்தாந்தமும் கலந்து எழுதப்பட்ட நாவலாகின்றது.

## 16728

**அவளுக்கென்று ஒரு மனம்.** சதாவதானி (இயற்பெயர்: அருண் செல்லப்பா). கனடா: அருண் செல்லப்பா, மார்க்கம், 1ஆவது பதிப்பு, 2022. (யாழ்ப்பாணம்: தர்சா தமிழ் அச்சகம், ஆவரங்கால் சந்தி, அச்சுவேலி).

153 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x16 சமீ., ISBN: 978-624-99215-1-1.

ஒரு கிராமத்தின் மாசறு தலைவன் என்று தன்னைக் கருதிக்கொள்ளும் ஒருவர் தனது பெயரும் புகழும் மாசுபடக் கூடாது என்பதற்காகத் தன் குடும்ப உறுப்பினர்களின் வாழ்வியலைப் பணயம் வைக்கும் சம்பவக் கோர்வையை இந்நாவல் படம்பிடித்துக் காட்டுகின்றது. அதர்மம் தர்மத்தை வெல்வது போலத் தோன்றினாலும் இடையிடையே பல இடையூறுகள் நிகழ்ந்தாலும், இறுதியில் தர்மமே வெல்கின்றது. எழுபதுகளில் சமூக ஏற்றத்தாழ்வு மலிந்திருந்த ஒரு காலகட்டத்தில் இக்கதை இடம்பெறுகின்றது.

## 16729

**அன்னக்கிளிக்கு அஞ்சு வயசு (நாவல்).** நிவேதா ஜெகநாதன். கொழும்பு 13: நிவேதா ஜெகநாதன், கொட்டாஞ்சேனை, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2019. (கொழும்பு 13: கே.எஸ்.கே.பிரின்டர்ஸ், 179, பிக்கரிங்ஸ் வீதி, கொட்டாஞ்சேனை).

(12), 131 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 21.5x15.5 சமீ., ISBN: 978-624-95090-1-6.

இந்நாவல் மலையகத்தின் கோப்பிக் காலத்தையும் கோப்பிப் பயிர்ச்செய்கை எதிர்பாராத விதத்தில் பரவிய ஒரு தொற்றுநோயால் அழிந்து போகவும் புதுப் பயிராக அறிமுகமான தேயிலை, மலையகப் பயிராக- பெருந்தோட்ட பொருளாதாரத்தின் மையமாகக் கிளம்பிய வரலாற்றைப் பேச முனைகிறது. இக்கதைக்கான காலத்தில் இவ்விளம் படைப்பாளியோ அவரது பெற்றோரோ வாழ்ந்திருக்கவில்லை. அதனால் செவிவழிக் கதைகளையும், கோப்பிக் கால மலையக வரலாற்று

நூல்களையும் தனது அதீத கற்பனை வளத்தையும் முதலீடாகக் கொண்டு இந்நாவலை வளர்த்துச் சென்றிருக்கிறார். அன்னக்கிளி என்னும் ஐந்தே வயதான சிறுமியை ஒரு பாத்திரமாக்கி இக்கதை நகர்கின்றது. அன்னக்கிளி ஐந்து வயதாயிருந்தபோது தான் மலையகம் கோப்பிப் பயிர்ச் செய்கையிலிருந்து தேயிலைப் பயிர்ச் செய்கைக்குத் தன்னை தயார்படுத்திக் கொள்கின்றது. இந்த நிலைமாறு காலத்திலேயே கதை நடைபெறுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65954).

## 16730

**ஆண்பால் உலகு.** அருந்ததி (இயற்பெயர்: அருளானந்தராஜா இரத்தினம்). சென்னை 600 005: கருப்புப் பிரதிகள், பி 55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2019. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(10), 334 பக்கம், விலை: இந்திய ரூபா 280., அளவு: 21.5x14 சமீ.

யாழ்ப்பாணக் கடற்கரைக் கிராமமான நாவாந்துறையில் பிறந்த இந்நூலாசிரியர் அங்கு உயர்தர வகுப்பிற்கான அளவையியல் ஆசிரியராகப் பணியாற்றியவர். 1984இல் புலம்பெயர்ந்து பிரான்சில் குடியேறியவர். படைப்பிலக்கியத் தளத்திலும் திரைப்படத்துறையிலும் ஈடுபாடு கொண்டவர். ஆண் மையங் கொள்ளாமல் பெண் இருப்பை அதன் வாழ்நிலை அவதியை, யதார்த்தவாத அழகியலின் வசீகரம் குன்றாத மொழியில் பக்கத்திலிருந்து வதியும் மானிட இருப்பை நேர்மையாக புனைவாக்கி நம்முன் வைத்துள்ள இந்த ஆண்பால் உலகு அருந்ததியின் முதல் நாவல்.

## 16731

**ஆதுரசாலை (நாவல்).** சிவ.ஆரூரன். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, மார்கழி 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

iv, 212 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-624-5881-28-4.

எமது மண்ணில் வைத்தியசாலைகள் வைத்தியர்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கும் வேளையில் "நீரேந்துப் பகுதியில் பொழிய வேண்டிய மழை உப்பளத்தில் இரைத்துப் பொழிவது போல" எம் மண்ணின் வைத்திய மைந்தர்கள் பலர் குடி பெயர்ந்து அந்நிய மண்ணில் வைத்தியம் பார்த்துச் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வரும் ஒரு சூழலில், பச்சிலைப்பள்ளியில் முடங்கிக் கிடந்த வைத்தியசாலை ஒன்று புத்தாக்கம் பெற்று இயங்கிய கதை இது. போர்க்காலத்தில் எமது மண்ணின் வைத்தியர்கள் பலர் எந்தவித ஆதாயத்தையும் கருத்தில் கொள்ளாது உயிர் ஒன்றை காப்பாற்றிவிட வேண்டும் என்ற உயரிய நோக்கை மட்டும் கருத்திற்கொண்டு குண்டுவீச்சுக்கு மத்தியிலும் செயற்பட்டு வந்தமையையும் அவர்களது அர்ப்பணிப் பான சேவையையும் கண்ணுற்று வந்த நாம் இன்று எமது பிரதேச வைத்திய சாலைகளில் வைத்தியர் பற்றாக்குறை நிகழ்வதைக் கண்ணுற்று வருந்துகின்றோம். ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது? எமது வைத்தியர்கள் எங்கே? ஏன் எம்மக்களுக்கு

*இந்த வெளிநாட்டு மோகம்? எமது வைத்திய சாலைகள் சில ஏன் மூடப்படுகின்றன என்பதற்கு இந்த நாவல் விடை பகர்கின்றது. சிவ.ஆரூரன் ஈழத்து நாவல் உலகிற்கு கிடைத்த அருமையான படைப்பாளி. சிறைக்கம்பிகளுக்குள் அவரது வாழ்க்கை முடக்கப்பட்டுள்ள போதிலும் சோர்ந்துவிடாது, தொடர்ச்சியாக சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் எழுதி வருகின்றார். எமது மண்ணின் மீதும் மக்களின் மீதும் கொண்ட பற்று அவரது படைப்பாக்கங்களில் சிறப்பாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது. இந்நூல் 210 ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.*

**16732**

**இதய ராகம்**. *சியாமளா யோகேஸ்வரன். யாழ்ப்பாணம்: எங்கட புத்தகங்கள், 906/23, பருத்தித்துறை வீதி, நல்லூர், 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2021. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 681, காங்கேசன்துறை வீதி).*

xix, *217 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 22*x*15 சமீ.,* ISBN: *978-624-97823-2-7.*

*பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியான சியாமளா தற்போது அவுஸ்திரேலி யாவில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றார். மெல்பேர்னில் வெளிவரும் இளவேனில், நந்தவனம் ஆகிய சிற்றிதழ்களில் தன் படைப்பிலக்கியங்களை பகிர்ந்துகொண்ட இவரது முதலாவது நாவலாக இது அமைகின்றது. இந்நாவல் கணவனை இழந்த, உத்தியோகம் பார்க்கும் ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பின்புலமாகக் கொண்டு நகர்த்தப்படுகின்றது. அவளையும் அவளது நான்கு வளர்ந்த பிள்ளைகளையும் சுற்றியே பிரதானமாக கதை நகர்த்தப்படுகின்றது. பின்னர் அவர்களது வீட்டுச் சூழலிலிருந்து தாவி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை பின்னைய கதைக்களமாகத் தேர்ந்துகொள்கின்றது. அங்குள்ள சில மருத்துவர்களையும், தாதிகளையும், சில நோயாளிகளையும் அவர்களது உறவுகளையும் இக்கதைக்களத்தில் நடமாட வைக்கின்றார். இந்நாவலில் மருத்துவ மனைச் சுற்றாடலுடன் இணைத்து இன்றைய பெருந்தொற்றுப் பிரச்சினையான கொரோனாவும் கணிசமான அளவில் கதையுடன் கலந்து பேசப்படுகின்றது. நோயாளியான அம்புஜம் பாட்டியின் கதாபாத்திர வார்ப்பு நாவலின் சிறப்புகளில் ஒன்றாகின்றது. குடும்பச் சிக்கல், காதல், கொரோனா என மாறிமாறி வரும் பிரச்சினைகளும் தீர்வுகளும் நாவலை சுவை குன்றாது நகர்த்திச் செல்கின்றன.*

**16733**

**இது புதிய ஆரம்பம்**. *மு.தயாளன். மட்டக்களப்பு: மகுடம் பதிப்பகம், இல. 90, பார் வீதி, 1ஆவது பதிப்பு, மே 2022. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496*A*, திருமலை வீதி).*

*82 + 50 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 19.5*x*13 சமீ.,* ISBN: *978-624-5849-20-8.*

*மகுடம் பதிப்பகத்தின் 54ஆவது வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது. நாவலின் கதைக்களம் லண்டன் மாநகராகும். புலம்பெயர் நாடுகளில் தமிழ்க் குடும்பங்களில் ஏற்படுகின்ற மிக முக்கியமான பிரச்சினையான வயோதிபர் இல்லத்திற்கு தமது பெற்றோரை அனுப்புதல் தொடர்பாகவும், முதுமையான காலத்தில் அவர்களுக்குத்*

தேவைப்படும் பராமரிப்பு, பாதுகாப்பு, தொடர்பில் விரிவாகவும் மிக யதார்த்த மாகவும் இந்நாவல் பேசுகின்றது. "ஊர் என்ன சொல்லுமோ உறவென்ன பேசுமோ" என்ற மனநிலையில் வாழும் தமிழ் சமூகம் முடிவெடுக்கத் தடுமாறுவதை இந்நாவல் இயல்பாகப் படம்பிடித்துக்காட்டுகின்றது. இந்நாவலின் ஆங்கில வடிவம் இதே நூலில் மறுவளமாக 50 பக்கங்களில் வுாந நேற டீநபடைுைெை என்ற பெயரில் அச்சிடப்பட்டுள்ளது.

## 16734

**இயற்கையும் கடவுளும் (சமூக நாவல்).** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 3(12), மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7ஆவது தெரு, வடபழநி, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2014. (சென்னை: சிவம்ஸ்).

192 பக்கம், விலை: இந்திய ரூபா 90.00, அளவு: 18x12.5 சமீ.

ஆசிரியர் சிவானந்தன் ஓய்வு பெற்றதும் நகருக்குக் குடிபெயர்கிறார். பிள்ளை களையும் உடை, நடை, கல்வியிலும் கண்டிப்பாகவே வளர்க்கிறார். மூத்தவன் சகாதேவன் இஞ்ஜினியராக மதுரையில் பணியாற்றுகிறான். அவன் நோயுற்றவேளை உதவிய எமிலி என்ற தாதிப் பெண்ணால் கவரப்படுகிறான். சகாதேவனின் தங்கை அருந்ததி, கல்லூரி விரிவுரையாளர் சாருமதியின் புதிய கருத்துகளால் ஈர்க்கப்படுகிறாள். பெரும்பான்மைக் கிறிஸ்தவர்கள், கடவுள் பக்திக்குப் பணிந்தி ருப்பினும், சுய பாலின்பத்தை வெளிப்படையாக ஏற்கும் நிலைக்கு வந்துள்ளனர் என்ற கருத்தை ஏற்கிறாள். இயற்கை தந்த பாலுறுப்புகள் இயல்பாக, தாமே இன்பம் தேடும் நோக்கில் படைக்கப்பட்டுள்ளன என்று சாருமதி விளக்குவான். பாடசாலைகளில் பாலியல் கல்வியை பிள்ளைகளுக்கு சிறு வயதிலேயே கற்பிக்கவேண்டும் எனவும் அவன் வலியுறுத்துகிறான். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 56202).

## 16735

**இரத்த வடுக்கள் (சமூக நாவல்).** செ.கணேசலிங்கன். சென்னை 26: குமரன் பதிப்பகம், 12/3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7ஆவது தெரு, வடபழனி, 1ஆவது பதிப்பு, ஜுலை 2013. (சென்னை 26: குமரன் பதிப்பகம், 12/3 மெய்கை விநாயகர் தெரு).

176 பக்கம், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 18x12.5 சமீ.

சாவித்திரியும் சித்திராவும் கல்லூரித் தோழியர். ஆசிரிய பதவியுடன் திருமணமான குழந்தைகளுடன் கிராமத்தில் வாழ்கின்றனர். சாவித்திரி எதிர்பாராது கணவருடன் உயிரச்சப் பயங்கர நிலையில் அகப்பட்டுக் கொண்டனர். விடுதலை பெற்றது சார்ந்த பல்வேறு கதைகள் அவர்களுடையவை. கிராமத்தை விட்டு நகரத்துக்குப் பெயர்கின்றனர். தோழி சித்திரா கடிதங்கள் மூலம் நடந்த உண்மைக் கதையை அறிய முயல்கிறாள். அத்துடன் பெண்ணியக் கருத்துக்களும் ஆராயப்படுகின்றன. கல்லூரியில் கற்ற நடேசனின் கருத்துகள் முதன்மை பெறுகின்றன. பெண்களின் வாழ்வு இன்றைய சமூகத்துடன் பிணைக்கப்பட்டுள்ளதை அவனும் ஏற்கிறான்.

இத்துன்பத்தில் இயற்கை ஓரவஞ்சம் செய்ததா என்ற கருத்தும் ஆராயப்படுகின்றது. நடேசனின் விளக்கம் பரந்த உலகிற்கு விளக்கம் கூறுவதாக இருப்பது அவர்களைத் திணற அடிக்கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 56208).

## 16736

**இருபது வருடங்களின் பின் தாய்நாட்டுக்குத் தப்பிய கைதியின் கதை.** எம். பாலகிருஷ்ணன். கொழும்பு 10: எம்.பாலகிருஷ்ணன், Books Prishanmi, 33B, N.H.S., Sri Dhamma Mawathe, 1ஆவது பதிப்பு, நவம்பர் 1999. (கொழும்பு: ஏ.எஸ். டெஸ்க் டொப் பப்ளிஷிங் சென்டர்).

58 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 30.00, அளவு: 21.5x16 சமீ.

இலங்கையில் நடந்த ஓர் உண்மைக் கதையாகக் குறிப்பிடப்பட்டுள்ள நூல் அதனை பின்னணியாகக் கொண்டு விறுவிறுப்பான நாவலுக்குரிய சுவாரஸ்யத்துடன் எழுதப்பட்டுள்ளது. இலங்கையின் வரலாற்றை எழுதுபவர்களுக்கு தவிர்க்க முடியாத பாத்திரமான ரொபர்ட் நொக்ஸ் இன் கதையே இதுவாகும். இலங்கையைப் பற்றி வெளியான முதலாவது ஆங்கில நூலை எழுதியவர் ரொபர்ட் நொக்ஸ். 1641 பெப்ரவரி 8 அன்று பிறந்த நொக்ஸ் பெரிய தனவந்தரான தனது தகப்பனோடு 14 வயதிலேயே கடற்பிரயாணம் செய்து இந்தியாவில் தங்கியிருந்து வியாபாரங்களை முடித்துக்கொண்டு ஈரான் நோக்கி சென்று கொண்டிருக்கையில் புயலுக்கு அகப் பட்டு கப்பல் சேதமானது. அந்த கப்பலுக்குத் தேவையான மரங்கள் இலங்கையின் கிழக்குப் பகுதியில் கிடைப்பதாக அறிந்து மூதூரிலுள்ள கொட்டியாரக்குடாவுக்கு 19.11.1659இல் வந்து சேர்ந்தார். திருத்தப் பணிகளுக்காக அங்கு தங்கியிருந்த வேளை சிப்பாய்களை அனுப்பி அவர்களை கைது செய்தனர். 16 பேரையும் கைது செய்து விலங்கிட்டு காடுகள் வழியே கண்டிக்கு நடையாக அழைத்துச் சென்றனர். கப்பலில் இருந்த ஏனைய மாலுமிகளை தனித்தனியாக வெவ்வேறு கிராமங்களில் விட்டனர். ரொபர்ட் நொக்ஸ் மற்றும் அவரது தந்தையை ஒன்றாக வாரியபொலவி லுள்ள பண்டார கொஸ்வத்த என்கிற இடத்திலும் தங்க வைத்தார்கள். அவர்களுக்கு மாற்று உடையோ, உறங்க பாய் எதுவும் கொடுக்கப்படவில்லை.அவர்கள் சிறை களில் வைக்கப்படவில்லை. இரண்டு ஆண்டுகளில் மலேரியா நோய்க்கு இலக்காகி நொக்சின் தந்தை கப்டன் நொக்ஸ் 1661 பெப்ரவரியில் கண்டியில் இறந்து போனதும் தனிமை வாழ்க்கைக்கு தள்ளப்பட்டார். இலங்கை தப்புவதற்காக தன்னை தயார்படுத்தி 19 ஆண்டுகளின் பின்னர் இலங்கையிலிருந்து அவர் தப்பியது ஒரு அழகான சாகசக் கதை தான். இந்நாவல் அவரது கதையை புயலில் சிக்கும் கப்பல், கப்பலுக்கு வந்த திடீர் கடிதச் செய்தி, சென்ற மகனை எதிர்பார்த்துத் தந்தை கரையில் காத்திருக்கிறார், தந்தையின் புதைகுழியை மகனே தோண்டும் நிலை, வீடு கட்டுதல், கண்டியில் விடுதலை ஆயினும் மீண்டும் கைதியாகுதல், கண்டி வீதிகளில் பிச்சையெடுக்கும் நிலை, நண்பன் லவ்லேண்டின் மரணம், வடக்கு நோக்கிச் சென்று வியாபாரஞ் செய்தல், வடக்கு நோக்கிய இறுதிப் பயணம், முதற்கட்டமாக அனுராதபுரம் அடைதல், காட்டு வழியே டச்சு எல்லையை அடைதல், அரிப்புக் கோட்டையை வந்தடைதல், மன்னாரில்

ஐரோப்பிய முறையில் விருந்து ஆகிய அத்தியாயத் தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20790).

### 16737

**உயிரோடு நானாக (நாவல்).** கதிர். திருச்செல்வம். மட்டக்களப்பு: மகுடம் பதிப்பகம், இல. 90, பார் வீதி, 1ஆவது பதிப்பு, ஆவணி 2022. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496A, திருமலை வீதி).

xii, 200 பக்கம், விலை: ரூபா 750., அளவு: 20.5x15 சமீ.

ஆசிரியரின் மூன்றாவது எழுத்தாக்கம் இதுவாகும். இந்நெடுங்கதையில் திருக்கோண மலை மாவட்டத்தின் தம்பலகாமம் கிராமத்தின் வாழ்வியலை, அதன் வரலாற்றுத் தகவல்களை, அழிந்துசெல்லும் அக்கிராமத்தின் பாரம்பரிய விவசாய முறைகளை இயன்றவரை பதிவுசெய்கின்றார்.

### 16738

**எறிகணை.** தியா (இயற்பெயர்: இராசையா காண்டீபன்). சென்னை 600 078: டிஸ்கவரி புக் பலஸ், இல. 9, பிளாட் எண்: 1080A, ரோஹிணி பிளாட்ஸ், முனுசாமி சாலை, கே.கே.நகர் மேற்கு, 1ஆவது பதிப்பு, ஜூலை 2021. (சென்னை 600 005: ரமணி பிரின்ட் சொலுஷன்ஸ்).

144 பக்கம், விலை: இந்திய ரூபா 180., அளவு: 21x14 சமீ., ISBN: 978-81-953269-9-0.

ஈழத்து எழுத்தாளரான தியா எழுதி தமிழகத்தின் டிஸ்கவறி பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட ஒரு நாவல் இது. ஈழத்து மக்களின் வலி சுமந்த வாழ்வினை மையப்பொருளாக வைத்து எழுதப்பட்ட ஒரு கதை. ஈழத்தில் போர் ஆரம்பித்த காலத்தில் இருந்து முள்ளிவாய்க்கால்வரை ஒரு குடும்பம் கடந்துவந்த பாதையை தத்ரூபமாக படம் பிடித்து காட்டிய ஒரு நாவல். இயற்கையோடு இணைந்து போகும் கதைக்களம், அழகான சொல்லாடல்கள், ரசிக்கத்தூண்டும் வர்ணனைகள், நம் வாழ்க்கையோடு ஒட்டிய வாழ்க்கைமுறை, கண்ணியமான காதல், வன்னியின் அழகு என வாசிப்போரை கதையுடன் ஒன்றிப்போக வைத்திருக்கும் எழுத்தாளரின் அனுபவம் இந்த கதையை கண்முன் படம்பிடித்து காட்டியுள்ளது. இந்த நாவல் ஒவ்வொரு ஈழத் தமிழரின் அனுபவத்தை, வலிகளை ஆவணமாக்கியுள்ளது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

### 16739

**ஒரு கிராமம் மாறுகிறது (நாவல்).** பொன்.குலேந்திரன். கனடா: குவியம் வெளியீடு, 2796, Keyness Crescent, Mississauga, Ontario, L5N3A1, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (மின்நூல் வடிவம்).

142 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

இந்தக் கதை 1948இற்கு முன் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலும் அதன் பின் 1948இல் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின்னும் யாழ்ப்பாணக் குடாநாட்டின்

வலிகாமம் வடக்கில் உள்ள சுன்னாகம் என்ற கிராமத்தில் நடந்த சமூக, பொருளாதார மாற்றங்களை பின்னணியாகக் கொண்டது. சுன்னாகத்தில் பிறந்து வளர்ந்த ஜீவன் இலங்கையில் வைத்தியராகப் பணியாற்றி இனக்கலவரம் காரணமாக கனடாவுக்குப் புலம்பெயர்ந்து அங்கு ஒருவரைத் திருமணம் புரிந்து இரு குழந்தைகளுக்குத் தந்தையாகிறார். சுமார் 50 வருடங்களுக்குப் பின்னர் தாய்நாட்டுக்குத் திரும்பும் அவர், தான் விட்டுச்சென்ற மண்ணையும் அதன் இன்றைய சூழலையும் ஒப்பிட்டுப் பார்ப்பதாக கதை நகர்கின்றது. ஊரில் தனது பூர்வீக வீட்டில் ஒரு முதியோர் இல்லத்தை உருவாக்க முனையும் ஜீவனின் அனுபவங்கள் கதையை சுவாரஸ்யமாக்குகின்றன. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ், முகாந்திரம் முருகேசு, நல்ல நாச்சியார், குடிமகன்கள், சுன்னாகம் கிராமம், ஊருக்குப் பயணம், வக்கீல் ராஜன், மார்கோசா கிரீன் லொட்ஜ், கண்ணகி கோவில், கிராமத்துச் சுடலை, சுன்னாகச் சந்தை, சந்திப்புகள், செல்லாச்சி, கணித மாஸ்டர் கணபதி, நாடகக் கலைஞர் சிவலிங்கம், ரதிதேவி, ரிப்போர்ட்டர் தில்லைநாதன், ஆசிரியர் சுந்தரலிங்கம், சிவலிங்க சுவாமிகள், ஜீவன் படித்த கல்லூரி, கீரிமலை, உயில், டாக்டர் ரஷீட், கொழும்பு சந்திப்புகள், கனடாப் பயணம் ஆகிய 25 அத்தியாயங்களில் இந்நாவல் எழுதப்பட்டுள்ளது.

## 16740

**ஒரு தேசிய எழுச்சி (சமூக நாவல்).** செ.கணேசலிங்கன். சென்னை 26: குமரன் பதிப்பகம், 12/3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7ஆவது தெரு, வடபழனி, 1ஆவது பதிப்பு, 2019 (சென்னை: சிவம்ஸ்).

136 பக்கம், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 18x12.5 சமீ.

தேசியம், தேசிய எழுச்சி உலகில் எழுந்த காலம் 200 ஆண்டுகளே. முதலாளித்துவம் என்ற சமூக அமைப்பும் எழுந்து இரண்டு நூற்றாண்டுகளே ஆகின்றன. இது பலரையும் வியப்புக்குள்ளாக்கலாம். மக்கள் ஏற்படுத்திய சில சமூக அமைப்புகளே தேசிய உணர்ச்சியையும் புதிய எழுச்சியையும் ஐக்கியப்படுத்தியது எனலாம். சிறப்பாக, பயிர், உணவு உற்பத்தி, உயிர் வாழ முதன்மை பெறுவது, அதற்காக நிலம், நீர் வேண்டுவது, கல்வியும் அறிவு வளர்ச்சியும், மக்கள் தொடர்பு மொழியும் சமய நம்பிக்கையை ஏற்படுத்தும் ஒற்றுமையும் தேசிய எழுச்சிக்கு துணை புரிவதாகும். தாய் மொழி வளர்ச்சி, நவீன அச்சக வளர்ச்சி, பொழுதுபோக்கிற்காகவும், மேம்பட்ட ஆடல், பாடல், விளையாட்டுகள் எனவும் விரியும். இவை ஏற்படுத்தும் ஐக்கியம், ஆர்வம், தேசிய எழுச்சிக்கு உரமாகும். இவற்றை பண்பாடு எனவும் கூறலாம். இவற்றைக் காப்பாற்ற, மேம்படுத்த மக்கள் தமது உயிரைக் கொடுப்பது மட்டுமல்ல, எதிர்ப்பவரின் உயிர்க் கொலைக்கும் தயாராவது வியப்பே. அத்தகைய போராட்டத்தை இந்நூலும் கூற முயல்கிறது.

## 16741

**கற்க கசடற: குறுநாவல்.** வள்ளியம்மை சுப்பிரமணியம். யாழ்ப்பாணம்: அழ. பகீரதன், சத்தியமனை வெளியீடு, சுழிபுரம், 1ஆவது பதிப்பு, ஜனவரி 2022. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).

xii, 108 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14 சமீ.

தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் அவர்களது துணைவியார் வள்ளியம்மை சுப்பிரமணியம் அவர்கள் தங்கள் திருமண நிகழ்வின் 60ஆவது ஆண்டு நிறைவின் நினைவாக ஜனவரி 19இல் வெளியிட்டுள்ள நூல். எண்பது அகவை கடந்து வாழ்ந்துவரும் வள்ளியம்மை சுப்பிரமணியம் தனது வாழ்வின் அனுபவங்களிலிருந்தும் தேறி 21ஆம் நூற்றாண்டின் இளைய தலைமுறையினர் எப்படி பண்பட்டு வாழவேண்டும் என்ற தனது எதிர்பார்ப்புகளை எழுத்துகளாக வடித்து இக்குறுநாவலை தந்திருக்கிறார். வட்டுக்கோட்டைத் தொகுதியில் உள்ள சுழிபுரம் கிராமத்தில் வாழ்ந்த ஒரு விவசாயத் தொழிலாளியின் குடும்பத்தின் கதை இது. விவசாயியின் பிள்ளைகள் வளர்ந்து, தாம் பெற்ற கல்வியினால் செல்வத்தையும் பெற்றுக்கொண்டதோடு மட்டுமல்லாது, "நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பரந்த நோக்கில் வாழ்கின்றர்கள். பெற்றோரை இழந்த தனது பேரப்பிள்ளைகளைச் சிறந்த முறையில் வளர்த்து ஆளாக்கும் அம்மாச்சி தங்கமுத்துதான் இக்கதையின் ஆணிவேராகத் திகழ்கிறார். அந்த வேரைப் பற்றிப் படர்ந்து கிளை பரப்பி, வீட்டுக்கும் நாட்டுக்கும் நிழல் கொடுக்கும் பிள்ளைகளின் வாழ்வியலைப் பேசுவதாகவே இக்கதை அமைந்துள்ளது.

## 16742

**கறுப்பு ராஜா.** ஜி.நேசன் (இயற்பெயர்: ஜி.நேசமணி). கொழும்பு 14: ஜனமித்திரன் வெளியீடு, எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் வீதி, 1ஆவது பதிப்பு, 1975. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் வீதி).

247 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 4.25, அளவு: 17.5x12.5 சமீ.

கொழும்பிலிருந்து வெளிவந்த மித்திரனில் தொடராக வெளிவந்த நாவல். அமெரிக்காவில் அடிமையாக விற்கப்பட்ட ஆபிரிக்க கறுப்பினத்தவனான கறுப்பு ராஜா தன் இன மக்களை அடிமைகளாகக் கொடுமைப்படுத்தும் வெள்ளையரைப் பழிவாங்க முயன்று இறுதியில் தன் காதலி மேரியுடன் சுட்டுக்கொல்லப்படுகிறான்.

## 16743

**கறுப்பும் வெள்ளையும் (சமூக நாவல்).** செ.கணேசலிங்கன். சென்னை 26: குமரன் பதிப்பகம், 12/3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7ஆவது தெரு, வடபழனி, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2017 (சென்னை: சிவம்ஸ்).

176 பக்கம், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 18x12.5 சமீ.

இயற்கையின் படைப்பு விசித்திரமானதும் மர்மமானதுமாகும். கறுப்பு வெள்ளை நிற கண்களே அதனைக் காட்டும். கண்கள் உயிரினங்களின் வாழ்வில் முதன்மை

யானது எனலாம். மொழியில் கறுப்பும் வெள்ளையும் எதிர்ச் சொற்கள். உயிர் வாழ்வின் முன்னோடி. ஆயினும் வெள்ளைத் தோல் நிறமே கவர்ச்சியானது, சிறப்பானது என முதன்மைப்படுத்துவர். தோலின் உள்ளே ஓடும் உயிர் இரத்தம் எப்போதும் சிவப்பு என்பதை மறந்து விடுகின்றனர். நமது நாட்டு கறுத்தவரும் திருமணம் என்றால் தோல் நிறத்தையே பார்ப்பர். அழகும் கவர்ச்சியும் என வெள்ளை நிறப் பெண்ணையே தேடுவர். கலைகளிலும் வெள்ளைத் தோல் நிறமே முதன்மை பெறுகிறது. இந்திய சினிமாவில் கவர்ச்சியான வெள்ளை இளம்பெண்ணே கதாநாயகி. மற்றைய நடிகர் பெரும்பாலும் கறுத்தவர். மேக்-அப் அழகர். வயதானவராகவும் இருக்கலாம். குடும்ப வாழ்வில் நிற வேற்றுமை ஆழ்மன அமைதியைக் கெடுக்கலாம். ஷேக்ஸ்பியரின் "ஒதெல்லோ" நாடகத்தில் வெள்ளை அழகி ராணியை கறுத்த ஒதெல்லோ காதலித்து மணக்கிறான். தாழ்வு நிற மன உளைச்சலின் உச்சத்தில் தன் வெள்ளை அழகுராணி சோரம் போனாள் என்ற சந்தேகத்தில் அவளைக் கொலை செய்கிறான். ஆணாதிக்கமும், மனைவி கொலையும், வெள்ளை வெறுப்பு எனலாம். அதே மன சஞ்சலம் இந்நாவலில் நடைபெறுகிறது. மனைவி சோரம் போனாள் என்ற சந்தேகத்தில் கொலைகளை நாளிதழ்களில் அடிக்கடி காண்கிறோம். இந்நாவலின் கதாநாயகன் சுபத்திரன் தன் நிறத்து கறுத்த பெண்ணைத் தேர்ந்து மணக்கிறான். கறுப்பு வெள்ளைத் தோலின் உள்ளே ஓடுகின்ற சிவப்பு இரத்தமே உயிர் மூச்சு என்பான்.

## 16744

**காம்பராவின் கடனாளிகள் (நாவல்).** நிவேதா ஜெகநாதன். கொழும்பு 13: நிவேதா ஜெகநாதன், கொட்டாஞ்சேனை, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2020. (கொழும்பு 13: சண் கிராப்பிக் அன்ட் பிரின்டர்ஸ், 340, ஜம்பட்டா வீதி, கொட்டாஞ்சேனை).

ix, 125 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x15.5 சமீ., ISBN: 978-624-95090-3-0.

தோட்டத்து மக்களின் வறுமையின் பிடிக்குள் கடன் எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகின்றதென்பதை இந்நாவலில் "கனகா" என்ற பாத்திரத்தின் வாழ்க்கைச் சிக்கலினூடாக எடுத்துக்கூறுகின்றார். வேலைக்கேற்ற ஊதியமின்மை, வரவுக்கு மீறிய அடிப்படைச் செலவினம், எப்போதும் வறுமைக்கோட்டுக்குக் கீழான வாழ்க்கை மலையகத் தாய்மாரை கடன் சுமைக்குள்ளே எப்போதும் தள்ளிக் கொண்டிருப்பதை இந்நாவலில் அழகாக எடுத்துக்கூறுகிறார் நிவேதா. பிள்ளை களின் பாடசாலைச் செலவு, அயலாரின் திருமண, மரணச்சடங்குகளுக்கான சமூக நிதிப் பங்களிப்பு என கௌரவப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் "கடனாளி" கனகாவின் மீண்டெழ முடியாமல் தவிக்கும் அவல வாழ்வை ஆசிரியர் யதார்த்தமாக நகர்த்திச் செல்கின்றார்.

## 16745

**கானல் நீர் (நாவல்).** *சியாமளா யோகேஸ்வரன். யாழ்ப்பாணம்: எங்கட புத்தகங்கள், 906/23, பருத்தித்துறை வீதி, நல்லூர், 1ஆவது பதிப்பு, 2023. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

*xvi, 271 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 950., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-624-97823-5-8.*

*உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டதொரு நாவல். ஆசிரியரின் மூன்றாவது நூல் இது. சுமதி-மாறன் தம்பதியினரின் இரு ஆண் குழந்தைகளுக்குப் பின்னர் செல்லப்பிள்ளையாக அவதரிக்கிறாள் அபிராமி. சுமதி மகளைக் கண்டிப்பதை மாறன் விரும்புவதில்லை. அதனால் பிரச்சினைகள் குடும்பத்தில் வெடிக்கின்றன. பெற்றோரில் ஒருவர் தம் பிள்ளையைக் கண்டிக்க முற்படும்போது மற்றவர் அதனைக் கண்டும் காணாதது போல் இறுக்கமாக நடந்துகொள்வது தான் சிறந்த குழந்தை வளர்ப்பு. இதுவே பிள்ளைகள் தமது தவறை உணர்வதற்கான பாதையைத் திறந்துவிடும். இந்த விடயத்தை ஆசிரியர் நாவலில் பல இடங்களில் வலியுறுத்துகின்றார். சுமதியின் கணவன் அம்னீசியா நோயினால் பாதிக்கப்படுவதும் மனம் தளராது தன் மகளை நன்றாகப்படிக்கவைக்க சுமதி பாடுபடுவதும் கதையை சுவாரஸ்யமாக நகர்த்திச் செல்கின்றது. அபிராமியோ தாயின் கஸ்டத்தைப் புரியா மல் தான்தோன்றித்தனமாக வாழமுற்படுகிறாள். வாழ்வைத் தொலைத்த அவள் இறுதியில் காலம் கடந்து தன் தாயின் மன்னிப்புக்காகவும் அரவணைப்புக்காகவும் ஏங்குகின்றாள். விறுவிறுப்பாக கதை நகர்த்தப்படுகின்றது.*

## 16746

**குற்றங்களும் மன்னிப்பும் (சமூக நாவல்).** *செ.கணேசலிங்கன். சென்னை 26: குமரன் பதிப்பகம், 12/3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7ஆவது தெரு, வடபழனி, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2018 (சென்னை: சிவம்ஸ்).*

*160 பக்கம், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 18x12.5 சமீ.*

*ஆசிரியை செல்லம்மா கிரேக்க ஹாடொசியம் எனும் இன்பக் கோட்பாட்டை மாணவி தவமணிக்கும் கூறுவார். ஆயினும் தவமணி மேலே கற்பதைத் துறந்து தனது தேவாலய பாதிரியாரின் வற்புறுத்தலுடன் தோமஸை மணக்கிறாள். இரண்டு பிள்ளைகளுடன் 15 ஆண்டுகள் கழித்து தன்ஆசிரியை செல்லம்மாவிடம் வருகிறாள். வாழ்வு இன்பமல்ல, அதனால் நான் துன்பப்பட்டேன் என முறையிடு கிறாள். பாதிரியாரிடம் சென்று கணவர் குடி, கூத்தி தொடர்புள்ளவன் என முறையிட்டபோது, இரண்டு பிள்ளைகள் பெற்றாயே, கர்த்தரின் ஆசீர்வாதத்தால் இன்பமும் பெற்றாய் என்பார். தன் ஏமாற்றத்தை செல்லம்மாவிடம் கூறியபோது, பெண்களே இன்ப வழியைத் தீர்மானிக்க வேண்டும் என செல்லம்மா புதிய வழியினை ஏற்பாடு செய்வார். ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்தும் நிலையில் வாரிசு மகப்பேற்றுக்கு மட்டுமே இன்பம் என அவர்களை ஏமாற்றுவர். இது வியப்பல்ல. ரிச்சர்ட் மேல்நிலைக் கல்வியோடு "யேசுவைக் கற்றல்" விவாதத்தில் யேசுவின் சிலுவைக் கொலைத் தண்டனை மர்மமானது என விவாதிப்பான்.*

மேலும், கணநேர காமகோபம் மன்னிக்கப்படவேண்டும் என்றும் இயேசு அறியாமையில் செய்த சிலுவைக் கொலையை மன்னிக்கும்படி தேவனை வேண்டினார் என்றும் கூறுவான். கண நேர காமகோபச் செயல்களும் மன்னிக்கப்பட வேண்டும் என மற்றும் பேராசிரியருடனும் ரிச்சர்ட் விவாதிப்பான்.

## 16747

**குறுந்தொகை பேசாத பெருந்தோகை அழகியே.** இலண்டன் கீர்த்தி (இயற்பெயர்: குமரேஸ்வரன் கீர்த்திசிங்கம்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1ஆவது பதிப்பு, 2021. (சென்னை: ஆதிலட்சுமி கிராபிக்ஸ்).

*210 பக்கம், விலை: இந்திய ரூபா 180.00, அளவு: 23x15 சமீ.*

கணிதவியல், கணக்கியல் பட்டதாரியான கீர்த்தி யாழ்ப்பாண மாவட்டத்தில் இளவாலைக் கிராமத்தைச் சேர்ந்தவர். 2019ஆம் ஆண்டின் இறுதிக் கட்டத்தில் ஆரம்பித்த கொரோனா எனும் கொடிய நோய் உலகையே மிரட்டிக்கொண்டிருந்த வேளை அதன் அனுபவத்தின் துணைகொண்டு இந்நாவலை ஆசிரியர் எழுதி யிருக்கிறார். முழுமையான கற்பனைக் கதையான போதிலும் தன் வாழ்க்கையில் ஆங்காங்கே கண்ட, கேட்ட, அறிந்த சேதிகளுடன் இக்கதையை நகர்த்திச் சென்றுள்ளார். ஒரு காலகட்ட நிகழ்வினை இந்நாவல் காலக்கண்ணாடியாகப் பதிவுசெய்கின்றது.

## 16748

**கொச்சிக்கட vs கும்மிடி பூண்டி (நாவல்).** ஈழவாணி. சென்னை 600093: பூவரசி வெளியீடு, இல.2, 2ஆவது தளம், 1ஆவது குறுக்குத் தெரு, புஷ்பா காலனி, சாலிகிராமம், 1ஆவது பதிப்பு, ஜனவரி 2020. (சென்னை 600093: பூவரசி வெளியீடு, புஷ்பா காலனி, சாலிகிராமம்).

*224 பக்கம், விலை: இந்திய ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-624-5018-03-1.*

ஈழவாணி வவுனியாவில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை வவுனியா றம்பைக்குளம் தேசிய மகளிர் கல்லூரியிலும், உயர் கல்வியை கொழும்பு பல்கலைக் கழகத்திலும், முதுகலை ஊடகக் கல்வியை சென்னை அழகப்பா பல்கலைக் கழகத்திலும் பயின்றவர். பல ஆவணப்படங்களையும் குறும்படங்களையும் விளம்பரப் படங்களையும் தயாரித்து இயக்கியிருக்கிறார். நூலுருவில் வெளிவந்த இவரது முதலாவது நாவல் இது. ஏற்கெனவே மூன்று சிறுகதைத் தொகுப்புகளையும், ஐந்து கவிதைத் தொகுப்புகளையும், மூன்று ஆய்வு நூல்களையும், காப்பு என்ற இலக்கியத் தொகுப்பினையும் வெளியிட்டுள்ளார். இறுதி யுத்தத்துக்கு பின்பு சில ஆண்டுகள் கழித்து இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் ஒரு குழந்தையோடு பயணம் செய்யும் ஒரு பெண்ணின் வழியே முன் பின்னான தமிழ் மக்களின் வாழ்வை இந்த நாவல் வழியே பதிவு செய்கிறார் ஈழ வாணி. இது ஈழத்தின் அகதி வாழ்வு பற்றியும் போரின் எச்சமாகவுள்ள பல்வேறு நிலைமைகள் பற்றியும்

பதிவு செய்கிறது. தமிழகத்தில் ஈழத்தமிழ் அகதிகளின் அவல வாழ்வு புள்ளி விபரங்களுடன் துணிச்சலாகச் சொல்லப்பட்டுள்ளது. கொச்சிக்கட ஈஸ்ரர் தாக்குதலின் பின்னணியில் இந்நாவல் பயணிக்கின்றது. உண்ணாவிரத நாடகம், முத்துக்குமாரின் தியாகம், கதிர்காமத்தில் புத்தர், மடுவின் அகதி வாழ்வு, போரின் முடிவு தமிழரை கடல் வழியாக அவுஸ்திரேலியா நோக்கி நகரத் தூண்டியது எனப் பல்வேறு விடயங்களை இந்நாவலில் காணமுடிகின்றது. கொச்சிக்கடை அந்தோனியார் ஆலய வரலாறும் ஆங்காங்கே பதிவுசெய்யப்பட்டுள்ளமையும் ஆசிரியரின் ஊடகவியல்துறைசார் அனுபவத்தின் வெளிப்பாடாக அமைகின்றது. கதையின் நாயகியான கானவியின் வாழ்க்கையில் நிகழும் பல சம்பவங்களினூடு கதை நகர்கின்றது. பூமணி ஆச்சி, லட்சுமி, யாழி ஆகியோர் நாவலின் பிற முக்கிய பாத்திரங்கள். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 69966).

## 16749

**கோவர்த்தனம்-நாவல்.** ஸ்ரீலேக்கா பேரின்பகுமார். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, ஜூன் 2022. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

iv, 136 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-5881-48-2.

ஸ்ரீலேக்கா தன் கண்கள் படம்பிடித்த மன்னார் பிரதேசத்தின் இயற்கைப் பேரழகை இந்நாவலின் ஊடாக வாசகர்களின் மனங்களில் வர்ணக் கலவைகொண்டு தீட்டிச் செல்கிறார். பல மன்னார்க் கிராமங்களில் பெருந்தொகையிலான மாடுகளை வைத்திருப்போர் வெள்ளாமைக் காலம் தொடங்கி தங்கள் வாழ்வாதாரத்திற்கும், மாடுகளின் மேய்ச்சலுக்காகவும், ஊர்விட்டு ஊர் சென்று பல மாதங்கள் தங்கி யிருந்து மீண்டும் வீடு திரும்பும் வாழ்வியல் பற்றிய பின்னணியில் இந்நாவல் எழுதப்பட்டுள்ளது. அவர்களின் வாழ்க்கை முறையினை அவதானித்து அந்த மேய்ச்சல் தரை வாழ்வில் நிகழும் பல்வேறு சம்பவங்களை இக்கதையில் புகுத்தியிருக்கின்றார். தனக்கு உதவிய குணாசீயஸ், யூலியன் ஆகியோரும் இந்நாவலின் பாத்திரங்களாகின்றனர். காலத்துக்குக் காலம் குறைவடைந்து வரும் மேய்ச்சல் தரைகளினால் ஐந்தறிவு ஜீவன்களான மாடுகள் மாத்திரமல்லாது ஜீவனோபாயத்திற்காக அவற்றை நம்பி வாழும் ஆறறிவு மனிதரின் வாழ்க்கைப் போராட்டம் புதிய பல நிகழ்களங்களை இந்நாவலாசிரியருக்குத் திறந்து விட்டுள்ளது. "ஓர் ஆக்க இலக்கியப் படைப்பாளிக்கு ஏனைய கலைகள் மீதுள்ள ஈடுபாடும் தாடணமும் அவரது இலக்கியப் படைப்புக்களை நேர்த்தியாக செழுமைப்படுத்தும் என்பதை உணர்த்தி நிற்கின்றன ஸ்ரீலேக்காவின் படைப்புகள். இவரிடத்தில் மிகக் கூர்மையான ஒரு பார்வை இருக்கின்றது. சமூகத்தை ஆழ்ந்து நோக்கும் இயல்பு இருக்கின்றது. தான் அனுபவித்தவைகளை நேரிற் கண்டவைகளை சொல்லக் கேட்டவைகளை மிகச் சிறப்பாக நுட்பமாக சித்திரிக்கும் நேர்த்தி இருக்கிறது. மொழியை இலாவகமாகவும் சரளமாகவும் கையாளும் திறமை கைவரப் பெற்றவராக காணப்படுகிறார். நாட்டார் வழக்காறுகள் இவரது படைப்புகளில் தூக்கலாக மேலோங்கி நிற்பதுடன், அந்த வாழ்வுடன் கலந்து

இன்றும் மாறாத நடைமுறை வாழ்வியலையும் கண்டு தெளிந்து சிறப்பாகப் பதிவு செய்திருக்கிறார். ஸ்ரீலேக்கா நாவலாசிரியராகப் பரிணமிக்கத் தகுந்த இலக்கிய அம்சங்கள் இவர் எழுத்துகளில் தென்படுகின்றன. இவர் நாவல் இலக்கியம் படைக்கவேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு" என்று அமரர் தெணியான் இவர் பற்றிக் குறிப்பிட்டுள்ளதை இங்கு மீள்பதிவிடல் பொருத்தமாகும். இந்நூல் 225ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

## 16750

**சரித்திரம் சாகும் நாள்.** சதுரையூர் சரலியா (இயற்பெயர்: அலியார் நௌபர் அலி). *சம்மாந்துறை 4: அலியார் நௌபர் அலி, சல்பியா மன்சில், 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 1989. (கல்லச்சுப் பிரதி).*

*16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.*

*கல்லச்சுப் பிரதியாக வெளியிடப்பட்டுள்ள இந்நூல் "சரித்திரம் சாகும் நாள்" என்ற குறுநாவலை உள்ளடக்கியிருக்கிறது. வாழ்வின் வேதனையும் சோதனையும், வெற்றியும் அவரது கதைக்குள் பட்டுத் தெறிக்கின்றன. இடையிடையே ஆழமான நாசூக்கான சிந்தனை வெளிப்பாடும் தெரிகின்றது. ஒரு அரசாங்க அதிபரான சப்ரி இக்கதையின் நாயகன். பலரும் அவரை கெட்டவராகக் கருதினாலும் அவரது உள்ளம் என்னவோ தூய்மையானதாகவே இருக்கின்றது. நல்வாழ்வுக்கு உடல் ஆரோக்கியம் மாத்திரமல்ல, மன ஆரோக்கியமும் அவசியம் என்பதை இந்நாவல் வலியுறுத்துகின்றது. ஆசிரியரின் கன்னி முயற்சி இதுவாகும். (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12089).*

## 16751

**சித்தன் சரிதம்: நாவல்.** ஐ.சாந்தன். *நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2021. (நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை).*

*368 பக்கம், விலை: இந்திய ரூபா 450., அளவு: 21x13.5 சமீ.,* ISBN: *978-93-91093-41-9.*

*முன்னீடு, பாலன்-விடலை, காளை, முதுமகன் ஆகிய நான்கு பிரிவுகளில் சித்தனின் சரிதமாக இந்நாவல் விரிந்துள்ளது. இன்றைய தலைமுறை அறிந்திராத அழகியல் படிமங்களோடு நகரும் இந்நாவல் ஆறு தலைமுறையின் கதையை மட்டுமல்ல யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாடு, விழுமியம் என்பவற்றிற்கும் மேலாகத் துயர் மிகுந்த வாழ்வியலையும் நுணுக்கமாகப் பதிவுசெய்கிறது. சோழகக் காற்றும் நிலவும் தவிர்க்கமுடியாத கதாபாத்திரங்களாக உடன் வருகின்றன. யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஐயாத்துரை சாந்தன் தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் ஆக்க இலக்கியங்கள் படைப்பவர். இந்திய சாகித்திய அக்கடெமியின் பிரேம்சந்த் ஃபெல்லோஷிப், இலங்கை கலாசாரத் திணைக்களத்தின் "சாகித்ய ரத்னா" விதுதுகளைப் பெற்றவர்.*

### 16752

**சிறையில் ஒரு சிற்றோவியம் (நாவல்).** நிவேதா ஜெகநாதன். கொழும்பு 13: நிவேதா ஜெகநாதன், கொட்டாஞ்சேனை, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (கொழும்பு 13: கே.எஸ்.கே.பிரின்டர்ஸ், 179, பிக்கரிங்ஸ் வீதி, கொட்டாஞ்சேனை).

ix, 129 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x15.5 சமீ., ISBN: 978-624-98637-0-5.

மலையக இளம் படைப்பாளர்களுள் ஒருவரான நிவேதா ஜெகநாதன் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாவார். அத்துடன் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தமிழ்ப் பாடப் பிரிவில் பட்டயக் கல்வி கற்றுவரும் மாணவியுமாவார். ரு.வு.ஏ தொலைக்காட்சியில் செய்திவாசிப்பாளராகப் பணியாற்றுகின்றார். தாய்மையின் உணர்வுகளுக்குப் புத்துயிர் வழங்கும் இந்நாவலில் எமது சமூகத்தில் குழந்தைகள் இல்லாத பெற்றோர் எதிர்கொள்ளும் சிக்கல்களை, அவர்கள் படும் இம்சைகளை தெளிவாகப் பதிவுசெய்திருக்கிறார். மத, இனத் தடைகளைத் தாண்டித் திருமணம் செய்யும் தம்பதியர் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு மேலாக இந்தப் புத்திர பாக்கியமின்மை மற்றுமொரு பிரச்சினைக்கு வித்திடுகின்றது. இறுதியில் குழந்தைப் பாக்கியம் பெறுவதாகக் கதை முடிக்கப்பட்டிருந்தாலும், கதை முழுவதும் அத்தம்பதியர் சந்திக்கும் மன அவலங்களே கதையில் விரிவாகப் பேசப்படுகின்றன.

### 16753

**சுசீலாவின் உயிரச்சம் (சமூக நாவல்).** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 3(12), மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7ஆவது தெரு, வடபழனி, 1ஆவது பதிப்பு, ஜுலை 2015. (சென்னை: சிவம்ஸ்).

192 பக்கம், விலை: இந்திய ரூபா 90.00, அளவு: 18x12.5 சமீ.

கல்லூரிக் காலத்தில் சுசீலா மேல் வேட்கை கொண்ட சக மாணவர் மூவரையும் சுசீலா கைவிட நேருகின்றது. கனடா செல்லும் பெற்றோர் விருப்பிற்கு ஏற்ப வணிகரான மோகனை மணக்கிறாள். எதிர்பாராத மூன்று வருட வாழ்வின் பின்னர் மரணபயம் ஏற்பட்டதும் முன்னைய காதலர்களை நாடுகிறாள். இன்பத் தால் மரண பயத்தை மறக்க, மறைக்க முயல்கிறாள். சக மாணவன் சுந்தரமும் அவன் அறிமுகப்படுத்திய தோழியர் அம்பிகாவும் வைதேகியும் அவளுக்கு உதவுகின்றனர். சமனற்ற இன்ப உணர்வினை பகிரலாம் ஆனால் பங்குபோட முடியாது என சுசீலா தன் துயரத்தைப் பகிர்ந்துகொள்கிறாள். உலகின் மற்றைய பெண்களுக்கேற்படும் மகப்பேற்று நிலையும் அதுவே என்பாள் தோழி. வாழ்க்கை தனக்குப் பயன்பட வேண்டும் அல்லது சமூகத்திற்கு நலன் பயக்க வேண்டும் என்பாள் சுசீலா முடிவாக. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60603).

## 16754

**சூறாவளிகளுக்கு என்ன பெயர் (சமூக நாவல்).** செ.கணேசலிங்கன். சென்னை *600026: குமரன் பப்ளிஷர்ஸ், 3(12), மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7ஆவது தெரு, வடபழநி, 1ஆவது பதிப்பு, 2011. (சென்னை: சிவம்ஸ்).*

*192 பக்கம், விலை: இந்திய ரூபா 90.00, அளவு: 18x12.5 சமீ.*

*கிராமப் புறங்களில் தொழில்நுட்பமாக டிராக்டர், இரசாயன உரம், பூச்சிக் கொல்லி மருந்து என்பன நுழைந்துவிட்டன. கிராமப்புற பாட்டாளிகளின் வேலை யிழப்பு, குறைந்த நாள் வேலை எனக் கூக்குரல்கள் எழுந்துள்ளன. உழைப்பை விற்க பாட்டாளிகள் நகரங்களை நோக்கினர். மேல்நாடுகளிலும் இயந்திர உற்பத்தி களின் புரட்சி, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் இக்கட்டான நிலையைத் தோற்றுவித்துள்ளன. இயந்திர உற்பத்தி தொழில்நுட்பத்துடன் மேம்பட தொழிலாளர் தேவையும் சுருங்கி வருகிறது. அதனால் அவர்களின் அரசியல் போராட்டமும் சுருங்கி வேலையிழப்பு, பாதிநேர வேலை, வேலையின்மை என மோசமடைந்து வருகிறது. பொருளாதார வீழ்ச்சி, தேக்கம் என நிபுணர்களும் அரசியலாளர்களும் கூறி வருகின்றனர். இதிலிருந்து மீட்சி உண்டா என்பதை இந்நாவலின் பாத்திரங்கள் உரையாடித் தீர்க்கின்றனர். மனித உரிமைக் கழகம் சார்ந்த திருமலை என்பவன் இதற்கு புதிய விளக்கம் கூறுகிறான். போராட்டங்கள் புதிய விளக்கம் எடுக்கின்றன என்பான். திருமலையின் தங்கை சரஸ்வதி ஆதிமக்கள் கண்டுபிடித்த வீணைப் பயிற்சியில் ஆர்வம் காட்டுகிறாள். இசை மூலம் ஐம்புலன் இன்பம் பெற முடியும் என்பாள். அவள் நேசிக்கும் பார்த்திபன் உற்பத்திச் சக்திகள் உச்சகட்டத்தை அடைந்த வேளை மூன்று மணிநேர உழைப்பே வாழ்க் கைக்குப் போதும், மேலதிகமான உழைப்பு மூலதனத்தால் அபகரிக்கப்படுகின்றது என்பான். மேலும் பெண்ணியத்துக்குப் புதிய விளக்கமும் நடைமுறையாக இடையிடையே கூறுவான். பாப்லோ நெருடா (1904-1973) சிலி நாட்டில் பிறந்து ஸ்பானிஷ் மொழியில் கவிதைகளைப் படைத்தவர். 1971இல் நோபல் பரிசுபெற்ற இக்கவிஞரின் இறுதிக் கவிதைத் தொகுதி* The Book of Questions *என்பதாகும். அதில் வரும் குறள் போன்ற இருவரிக் கவிதைகளில் ஒன்று "காற்று அசையாது நிலையாக நிற்கையில்/ சூறாவளிக்கு என்ன பெயர்?" என்பதாகும். இக்கவிதையின் இரண்டாவது அடியே இந்நூலின் தலைப்பாகியுள்ளது.*

## 16755

**சொல்லத்தான் நினைக்கிறேன்.** சதாவதானி (இயற்பெயர்: அருண் செல்லப்பா). *கனடா: அருண் செல்லப்பா, மார்க்கம், 1ஆவது பதிப்பு, 2022. (யாழ்ப்பாணம்: மெகா பதிப்பகம், கச்சேரியடி).*

*244 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x16 சமீ.,* ISBN: *978-624-99215-2-8.*

*1975களில் கொழும்புக்குச் செல்லும் ஒரு யாழ்ப்பாணத்து இளைஞனுக்கும் கல்கிசை நகரிலிருந்து வரும் ஒரு பௌத்த சிங்கள யுவதிக்கும் இடையே ஏற்படும் காதலே இக்கதையின் கருவாகும். இந்தத் தேடல் மிகுந்த காதல், இனம் மதம்,*

மொழி பார்த்து வருவதில்லை. ஒருவர் மீது ஈர்ப்பு இருந்துவிட்டால் மட்டும் அது காதலாக மலர்ந்து விடுவதும் இல்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் இருந்த வயது வித்தியாசத்தை மையமாக வைத்துக் காதல் படும் பாட்டை இந் நாவல் சுவையாக விபரிக்கின்றது. மேலும் இதயத்தில் சிறைகொண்ட அவர்களது காதல், தொடர்ந்து வந்த 20 வருடங்களில் இலங்கையில் ஏற்பட்ட இனப்பிரச்சினை, விடுதலைப் போர், என பல்வேறு தடைகளையும் மீறி எவ்வாறு வாழ்கின்றது என்பதை இங்கு கதையாகச் சொல்லியுள்ளார்.

## 16756

**சொல்லுங்கள் நீங்கள் மனிதர்களா?(ஐந்தறிவிகள் புதினம்).** இணுவில் ஆர்.எம். கிருபாகரன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1ஆவது பதிப்பு, 2021. (சென்னை: பாலாஜி புக்ஸ்).

164 பக்கம், விலை: இந்திய ரூபா 120.00, அளவு: 19x13.5 சமீ.

ஐந்தறிவு ஜீவராசிகளை கதாபாத்திரங்களாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல். இதில் மனிதப் பத்திரங்களே கிடையாது. மிருகங்கள், பறவைகள், ஊர்வன மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் என இக்கதாபாத்திரங்கள் தங்களது உள்ளக் குமுறல்களையும் மானிடத்தின் மீதான குற்றச்சாட்டுகளையும் இந்நாவலின் வழியாக வெளிப்படுத்துகின்றன. ஒரு மாநாட்டு அமர்வாக ஐந்து அமர்வுகளில் இந்நாவல் நிறைவுபெறுகின்றது. யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட கிருபாகரன் தனது 17ஆவது வயதில் ஊடகங்களில் எழுத ஆரம்பித்தவர். 35 வருடங்களாக கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகிறார். இது இவரது பத்தாவது நூலாகும். ஏற்கெனவே நீறுக்குள் நெருப்பு (சிறுகதைத் தொகுதி 2007), இவர்கள் எப்போதும் விழுதுகள் (சமூக நாவல், 2009), வசந்தம் வரவேண்டும் (சமூக நாவல், 2013), கல்யாணிபுரத்துக் காவலன் (சரித்திர நாவல், 2014), இந்த மண்ணும் எங்கள் சொந்த மண் தான் (நாவல், 2015), எங்கே போய்விடும் காலம் (நாவல், 2016), நேற்று நான் இன்று நாம் (சமூக நாவல், 2017), கரீபியன் தீவுகளுக்கு இனிய கப்பல் பயணம் (பயணக்கதை, 2018), விழித்துக் கொண்டோம் வழி பிறந்தது (சமூக நாவல், 2020) ஆகிய நூல்களை இவர் வெளியிட்டுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70497).

## 16757

**தலைமுறைகள் (நாவல்).** பொன்.குலேந்திரன். கனடா: குவியம் வெளியீடு, 2796, Keyness Crescent, Mississauga, Ontario, L5N3A1, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2016. (மின்நூல் வடிவம்).

(4), 118 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

இக்கதை 1860இல் ஆரம்பித்து ஐந்து தலைமுறைகள் வரை தொடர்கின்றது. இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப கொத்தடிமைகளாக தமிழ் நாட்டில் இருந்து குறைந்த சம்பளத்தில் மலையகத்திற்குக் கொண்டுவரப்பட்ட "தமிழ்க்கூலிகள்" எனப் பெயர் சூட்டப்பெற்ற அப்பாவித் தமிழர்களின் ஐந்து

தலைமுறை சமூக பொருளாதார வளர்ச்சி 15 அத்தியாயங்களில் இங்கு நாவலாக்கப் பட்டுள்ளது. மண்பாடு வீரசாமி, கண்ணுசாமி (கண்ணன்), இலங்கைப் பயணம், யாழ்ப்பாணத்தில் கண்ணுசாமி, புளும்பீல்ட் தேயிலைத் தோட்டம், செல்லச்சாமி-வள்ளியம்மா, அத்தியடி ராஜேந்திரன், சந்திரன்-தேவி, வேலைக்காரன் வேலுச்சாமி, ஏமானுவேல் பாதிரியார், பட்டதாரி வேலுச்சாமி, தாரகா, "சூரிய உதயம்" திட்டம், இராமசாமி, வேர்களைத் தேடி ஆகிய அத்தியாயத் தலைப்புகளில் இந்நாவல் விரிகின்றது. பொன்.குலேந்திரன் யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ். பரியோவான் கல்லூரியில் ஆரம்பக் கல்வி கற்று, கொழும்பு பல்கலைக்கழகத்தில் பௌதிகத் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர். பல்வேறு அரபு, ஐரோப்பிய நாடுகளில் தொலைத்தொடர்புத் துறையில் பொறியியலாளராகப் பணியாற்றி இறுதியாக கனடாவில் டெலஸ் தொலைத்தொடர்பு தாபனத்தில் சிரேஷ்ட முகாமையாளராகப் பணியாற்றி ஒய்வுபெற்றவர். கனடாவில் குவியம் என்ற இணையத்தளத்தை நடத்துபவர். இதே பெயரில் அறிவியல் சஞ்சிகையொன்றும் இவரால் நடத்தப்பட்டது.

## 16758

**தாத்தாவின் வீடு.** நோயல் நடேசன். சென்னை 600093: வேரல் புக்ஸ் வெளியீடு, 6, 2ஆவது தளம், காவேரி தெரு, சாலிகிராமம், 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2023. (அச்சக விபரம் தரப்படவில்லை).

256 பக்கம், விலை: இந்திய ரூபா 275., அளவு: 22x14 சமீ.

ஆசிரியரின் ஆறாவது நாவல் இது. இந்நாவல் ஆசிரியரின் அனுபவங்களோடு அவரது நுண்ணிய அவதானிப்புகளைச் சரியாகக் கலந்து புதிய சிந்தனையோடு எழுதப்பட்டுள்ளது. தான் பிறந்து வளர்ந்த எழுவைதீவையும் தன்னுடைய இளமைக்கால நிகழ்ச்சிகளையும் நாவலில் சுவையாக முன்வைக்கிறார். நாவல் நிகழும் காலம் கடந்த நூற்றாண்டின் 1960-70 காலப்பகுதி. இந்தச் சிறிய தீவில் வாழ்கின்ற மனிதர்கள், அவர்களுடைய நடத்தைக் கோலங்கள், உறவு நிலை, அங்கே நிகழ்கின்ற சம்பவங்கள், வரலாற்று ஓட்டத்தில் நிகழ்த்தப்படுகின்ற நடவடிக்கைகள், அவற்றின் பின்னணி, அந்தக் காலகட்ட அரச நிர்வாக நடை முறைகள் போன்றவற்றை மையப்படுத்தி விரிகிறது இந்நாவல். அறுபது ஆண்டுகளுக்கு முந்திய எழுவைதீவைக் காட்சிப்படுத்தினாலும் அதற்கு முன் பின்னரான சூழ்நிலைகளும் நிகழ் அரசியலும் சமூக நிலவரங்களும் நாவலில் ஆங்காங்கே விரவி உள்ளன. அவுஸ்திரேலியாவிலிருந்து தன்னுடைய சொந்த ஊரான எழுவைதீவுக்கு மனைவியுடன் வருகின்றான் நட்சத்திரன். எழுவைதீவில் ஓரிரவு தங்கும் நட்சத்திரனுடைய கனவும் நினைவுமாக விரிகின்றது இந்நாவல். இந்த நினைவும் கனவும் தொடர்ந்து ஒரு சிறுவனின் பார்வையில் சொல்லப்படு கின்றது. சிறுவனின் மனதில் பதிகின்ற, பாதிப்பை ஏற்படுத்துகின்ற சம்பவங்கள், மனிதர்கள், அவர்களுடைய குணவியல்புகள் குறித்துப் பேசுகிறது. ஒவ்வொரு மனிதருடைய செயல்களும் நிகழ்வும் சிறுவர்களின் மனதில் எப்படியான தாக்கத்தை உண்டாக்குகிறது? குடும்பங்களில் நிலவுகின்ற வன்முறை அவர்களை எப்படிப் பாதிக்கிறது? சிறுவர்களைக் குறித்து பெரியோர்களிடம் காணப்படுகின்ற

அபிப்பிராயம் என்ன? அவர்கள் எப்படிச் சிறுவர்களுடன், பிள்ளைகளுடன் நடந்து கொள்கின்றனர் என்பன போன்ற பல விடயங்கள் நாவலில் சித்திரிக்கப் படுகிறன.

### 16759

**தாமரை அறிவும் முரண்பாடும் (சமூக நாவல்).** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 3(12), மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7ஆவது தெரு, வடபழநி, 1ஆவது பதிப்பு, 2018. (சென்னை: சிவம்ஸ்).

160 பக்கம், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 18x12.5 சமீ.

சரஸ்வதியும் தாமரையும் சகோதரியர். அரசு கல்லூரியில் இருவரும் கற்கிறார்கள். முகுந்தன் எதிர்பாராத சூழலில் இருவருடனும் நெருங்கிப் பழக நேர்கிறது. இதனால் சகோதரியரிடையே பகைமை தோன்றுகின்றது. மாலதி என்ற தோழி, சகோதரியர் இடையேயான பகைமை உறவை நீக்கியதோடு ஒற்றுமையை ஏற்படுத்துகிறாள். மாலதியின் நண்பன் சுந்தரம் "திருமணத்தின் மூலம் வீட்டில் ஒரு அடிமையை வைத்திருக்க முடியாது" என்பான். மாலதியும் "மணப்பதன் மூலம் வீட்டு அடிமையாக முடியாது" என்று தன் கோட்பாட்டைக் கூறுவாள். இருவருக்குமிடையே புரிந்துணர்வு ஏற்படுகின்றது. நாள்தோறும் எட்டு மணி நேரமல்ல, 16 மணி நேரமும் தொடர்ச்சியாக உழைக்கும் பெண்களைப் பாட்டாளி களாகக் கொள்ளப்படவேண்டும் என்றும், தனிச் சொத்தற்றவர்கள் இருட்டு, புகை, சூட்டில் உழைப்பவர் என்றும், பெண்களுக்கு முதுமையில் கட்டாய ஓய்வு தரப்படவேண்டும் என்றும் மாலதி கூறுகிறாள். அந்தக் கோட்பாட்டில் நூலொன்றை எழுத சுந்தரத்துடன் தான் பூனே செல்ல இருப்பதாகக் கூறுகிறாள். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 64846).

### 16760

**தோழியர் இருவர்: (சமூக நாவல்).** செ.கணேசலிங்கன். சென்னை 26: குமரன் பதிப்பகம், 12/3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7ஆவது தெரு, வடபழனி, 1ஆவது பதிப்பு, 2016 (சென்னை: சிவம்ஸ்).

176 பக்கம், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 18x12.5 சமீ.

ஓய்வுபெறும் தந்தையாரின் மளிகைக் கடையை மகள் அம்பிகா தன் உடன்பிறவா கல்லூரி விடுதித் தோழி மாலதியுடன் சீராக்கி நடத்துகிறாள். மேற்குலகில் தோழியர் இருவர் சட்ட விதிகளுடன் வாழும் உரிமை 37 நாடுகளில் நிலைபெற்று விட்டது. இங்கு இன்றுள்ள குடும்ப அமைப்பு வேலைப் பிரிவுடன் நீளும் வரை பெண் அடிமை நிலை தொடரும் என்று எதிர்வுகூறுகிறாள் தோழி. அதிலிருந்த விடுபட்டு, தோழியர் இருவர் தனித்து வாழும் உரிமை உலக நாடெங்கும் இந்த நூற்றாண்டில் பரவுவது வரவேற்புக்குரியதென்கிறாள். தற்போது கல்வி, சேவைகள், கூலி, உழைப்பு என்பவற்றில் சமநிலை உருவாகி வருகின்றன. மகளிர் மட்டும், மகளிர் விடுதிகள், இங்கு வேகம் பெறுகின்றதைக் காணமுடிகின்றது. அத்தோடு

பெண்ணடிமைத்தனம் ஓரளவு ஒழிந்து வருவதைக் கவனிக்கலாம் எனக் கூறுவாள் அம்பிகா. மேலும் நடைமுறைச் சான்றுகள் இருட்டறையில் உள்ளன. நாம் அது பற்றி வெளியே பேசுவதில்லை என்பாள் அம்பிகா. மகப்பேறு சார்ந்து ஏற்பட்ட வேலைப் பிரிவினையே பெண்ணினத்தை அடிமையாக்கியது என்பார் எங்கெல்ஸ். அடிமை உழைப்போடு தொடர்ந்த கர்ப்பம், குமட்டல், துன்பம், உப்பிய வயிறு சுமந்து, இரத்தம் சிந்தும் உயிரச்சம் கொண்ட மகப்பேறு, பாலூட்டி வளர்த்தல் போன்ற மேலதிக துன்பங்கள். இன்று பெண்கள் வயிற்றையே வெட்ட அனுமதிக்கும் சிசேரியன் வேறு. மேலும் ஆண் வாரிசுக்காகவும் தொடர்ந்து சினைப்படுத்தல் துன்பம். குடித்தொகையை பெண்ணினமே தீர்மானிக்க வேண்டும். மனித இனம் தொடர்ந்து உயிர் வாழ உணவு, வீடு, பாலின்பம் என இயற்கை வழங்கியது. பெண் அடிமை நிலைமை வேலைப்பிரிவுடன் ஆணினமே திணித்தது. இன்றுவரை ஆணாதிக்க சமூகம் மேலதிக உழைப்பான மகப்பேறுக்கு நஷ்ட ஈடு வழங்கவில்லை. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 64897).

### 16761

**நகுலாத்தை.** யதார்த்தன் (இயற்பெயர்: பிரதீப் குணரட்ணம்). கனடா: வடலி வெளியீடு, இல. 35, Long Meadow Road, Brampton, Ontario L6P 2B1, 1ஆவது பதிப்பு, ஆவணி 2022. (அச்சக விபரம் தரப்படவில்லை).

480 பக்கம், விலை: இந்திய ரூபா 750., அளவு: 24.5x16 சமீ., ISBN: 978-1-7779375-3-9.

ஈழ நிலத்தின் போர் திரும்பத் திரும்ப எழுதப்பட்டுக் கொண்டிருந்தாலும், துயர் களைத் தின்று செரித்த நிலத்திடம் சொல்லுவதற்கு இன்னும் ஏராளம் கதைகள் உண்டு. வரலாறு முழுவதும் ஆக்கிரமிப்புகளின் போதெல்லாம் வீழ்வதும் பின் எழுவதுமாயிருக்கும் வன்னிக் கிராமமொன்றின் கதை இது. தொல் தெய்வங்களின் கருணையும் உக்கிரமும் உள்ளுறைந்திருக்கும் கதைகளும் மனிதர்களும் கொண்டு எழுதப்பட்டிருக்கும் யதார்த்தனின் முதல் நாவல். தொன்மத்தின் பாடல்களாலும் நம்பிக்கைகளாலும் பின்னப்பட்டிருக்கும் ஆதி நிலத்தின் நிகழ்கால மனிதர்களின் பாடுகளை, வைராக்கியத்தை, தியாகத்தை, வேட்கையை போர் ஊடறுத்த அன்றாடத்தை, எங்கள் மனமசையச் சொல்லுகின்றன யதார்த்தனின் சொற்கள். யாழ்ப்பாணத்தில், சரசாலைக் கிராமத்தில் 1993இல் பிறந்தவர் யதார்த்தன். எழுத்தாளர், சமூக செயற்பாட்டாளர், வரலாறு, மரபுரிமைகள், சாதியம் மற்றும் சமகாலப் பிரச்சினைகள் தொடர்பாகத் தொடர்ந்து எழுதி வருபவர். மரபுரிமைகள் தொடர்பான "தொன்ம யாத்திரை" இதழின் ஆசிரியர்களில் ஒருவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறையில் தன்னுடைய இளமாணிப் பட்டப்படிப்பினை நிறைவுசெய்துள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல்துறையில் முதுமாணிப் பட்டப்படிப்பினைத் தொடர்ந்து வருகிறார். இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி "மெடூசாவின் கண்களின் முன் நிறுத்தப் பட்ட காலம்" 2017இல் வெளிவந்தது. "நகுலாத்தை" இவரது முதலாவது நாவலாகும்.

## 16762

**நிழல் மனிதன்**. நவம் (இயற்பெயர்: S.ஆறுமுகம்). கொழும்பு: ஜனமித்திரன் வெளியீடு, வீரகேசரி பதிப்பகம், தபால் பெட்டி எண் 160, 1ஆவது பதிப்பு, 1974. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).

129 பக்கம், விலை: ரூபா 4.90, அளவு: 17x12 சமீ.

"நீலவேணி" என்ற பெயரில் சுதந்திரன் பத்திரிகையில் 1953/1954இல் தொடர்கதை யாக முதலில் வெளிவந்த நாவல் இது. டாக்டர் சங்கரன் நிழல்மனிதனாக மாறிப் பல சமூகவிரோதக் கும்பல்களைத் தண்டிக்கிறார். இறுதியில் தான் விரும்பியவாறு காதலியைக் கரம்பற்றுகிறார். நிழல் மனிதன், மர்மக்குரல் மிரட்டியது, காரிருளில் ஓர் உருவம், டாக்டர் சங்கரன் நேர்சிங் ஹோம், சதி உருவாகியது, மல்லிகைத் தோட்ட பங்களாவில் கோரக் கொலை, கதாநாயகி வந்தாள், எதிர்பாராத எச்சரிக்கை, இக்கரை மாட்டுக்கு, அபலையின் பெருமூச்சு, அஜந்தாவின் திகைப்பு, பொறியில் சிக்கிய பறவை, நடுநிசி விஜயம், டுப்ளிக்கேட் நிழல் மனிதன், அழகேசன் வந்தான், வேஷம் கலைந்தது என இன்னோரன்ன விறுவிறுப்பான 37 அத்தியாயத் தலைப்புகளுடனும் வாசகரை கவர்ந்திழுக்கும் பல்வேறு உத்திக ளுடனும் இந்நாவல் எழுதப்பட்டுள்ளது.

## 16763

**நினைத்தாலே இனிக்கும்**. சதாவதானி (இயற்பெயர்: அருண் செல்லப்பா). கனடா: அருண் செல்லப்பா, மார்க்கம், 1ஆவது பதிப்பு, 2022. (யாழ்ப்பாணம்: மெகா பதிப்பகம், கச்சேரியடி).

353 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15.5 சமீ., ISBN: 978-624-99215-0-4.

அச்சுவேலி-மலையகக் கிராமங்களின் வனப்புமிகு காட்சிப் படிமங்களின் பின்னணியில் யாழ்ப்பாணத்தையும் மலையகத்தையும் களங்களாகக் கொண்டு இயற்றப்பட்ட கதை. முகநூலில் 48 அங்கங்களாக வெளிவந்திருந்த தொடரின் நூல்வடிவம். சாதி சமய, வகுப்புவாதக் கட்டமைப்புகளின் பின்னணியில் சிக்கித் தவிக்கும் மூன்று சோடிக் காதலர்களின் வாழ்வை இந்நாவலில் தரிசிக்கலாம். தம்பாலைவாசியான ஏழைப்பெண் பவளம், இந்திய வம்சாவளியான மலையக இளைஞன் மோகன், அவனது தங்கை வள்ளி என்ற வள்ளியம்மை, தோலகட்டி ஜேம்ஸ் செபஸ்டியன், பணக்கார வீட்டுப்பெண் சிட்டுக்குருவி, என கதாபாத்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 70களில் எமது மண்ணில் நிலவிய கலை, கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியம் என்பன காதலுடன் கலந்து இங்கே காட்சிப்படுத்தப் படுகின்றன.

## 16764

**நீலவேணி.** நவம் (இயற்பெயர்: சீனித்தம்பி ஆறுமுகம்). சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 20/2, சக்காரியா காலனி, முதலாவது தெரு, சூளைமேடு, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2012. (சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், சக்காரியா காலனி, சூளைமேடு).

144 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 17.5x11.5 சமீ., ISBN: 978-93-81322-05-5.

வீரகேசரிப் பத்திரிகையில் வெளிவந்த செய்தியொன்றின் கருவில் விளைந்த "நீலவேணி", 37 சிறு தலைப்புகளின்கீழ் விறுவிறுப்பான மர்ம நாவலாக விரிந்துள்ளது. நிழல் மனிதன் என்னும் முதலாம் அத்தியாயத்தில் தொடங்கி பாரிஸ் நகரப்பெண்ணாக வலம்வரும் நாயகி, அவளோடு உறவாடத் துடிக்கும் தணிகாசலம், அவரின் மனைவியின் கொலை மர்மம், கதையைத் தொடரும் நிழல் மனிதன், இவர்களுக்கு மத்தியில் சுற்றிச் சுழலும் நீலவேணி என்னும அழகியின் ஊடாட்டம் என்பன கதையை விறுவிறுப்பாக நகர்த்திச் செல்கின்றன. ஆரையம்பதி நவம் என அறியப்பெற்றவரும், நீலவேணி, குமரி முதல் சென்னை வரை, அழகு சுடும், நந்தாவதி, வாரிசுகள் ஆகிய நூல்களின் ஆசிரியருமான சீனித்தம்பி ஆறுமுகம் (நவம்) அவர்கள் இலங்கையில் பயிற்றப்பட்ட தமிழாசிரிய ராக இரத்தினபுரி, கொழும்பு, கிரான், கல்லடி, ஆரையம்பதி, கிரான்குளம் ஆகிய ஊர்களில் பணியாற்றியவர். பின்னர் புலம்பெயர்ந்து 1990 முதல் 2012 வரை தமிழ்நாட்டிலும் பின்னர் 2013 முதல் 2015 வரை கனடாவிலும் வாழ்ந்தவர். 2015இல் மீண்டும் தன் பிறந்த மண்ணான ஆரையம்பதிக்கு வந்து 12.4.2017இல் மரணிக்கும் வரையில் அம்மண்ணிலேயே வாழ்ந்தவர். இவர் முன்னர் 1974இல் "நிழல் மனிதன்" என்ற பெயரில் வெளியிட்ட நாவல் மித்ர வெளியீடாக தலைப்பு மாற்றப்பட்டு "நீலவேணி" என்ற பெயரில் தமிழகத்தில் மீள்பிரசுரமாகியுள்ளது. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20336).

## 16765

**பண்ணையில் ஒரு மிருகம்: நாவல்.** நோயல் நடேசன். நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1ஆவது பதிப்பு, மே 2022. (சென்னை 600 018: Clicto Print, Jaleel Towers, 42 KB Dasan Road, தேனாம்பேட்டை).

152 பக்கம், விலை: இந்திய ரூபா 190., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-55230-91-1.

தமிழகச் சூழலில் சாதியத்தின் சமூக இயக்கத்தையும் அது கொண்டாடும் சடங்குகள், பழக்கவழக்கங்கள், தீண்டாமை ஆகியவற்றையும் வட்டமிடுகிறது இந்நாவல். எண்பதுகளின் தொடக்கத்தில் தமிழ்நாட்டிற்குப் புலம்பெயர நேர்ந்த பின்னணியில் சாதிய அடுக்கில் நிகழும் ஆணவக் கொலைகளின் ஒரு கீற்றை மட்டும் எடுத்துக்கொண்டு அதைத் தன் போக்கில் உரசிப் பார்க்கிறார் கதைசொல்லி. புதிர்கள் மெல்லமெல்ல அவிழும் புலனாய்வொன்றைப் போல இந்நாவல்

விரிகிறது. தமிழகப் பண்பாட்டுச் சூழல் பற்றித் தமிழ்நாட்டைச் சாராதாரின் நினைவுகளும் கண்ணோட்டங்களும் நவீன இலக்கியங்களில் அவ்வப்போது பதிவு பெற்றிருக்கின்றன. ஆனால் சாதியத்தையும் ஆணவப் படுகொலையையும் முதன்மைப் பிரச்சினைகளாக்கி அயல் சூழலிலிருந்து உருவான புனைவு எனும் பிரிவில் இது முதலானது என்று சொல்லலாம். நாவலின் இன்னோர் இழை அஃறிணைகளின் வாழ்வினூடே பயணிக்கிறது. விலங்குகள், பறவைகள் பற்றிய அருந்தகவல்கள், அவற்றின் உடல், பிறப்பு, இறப்பு, இனச்சேர்க்கை என அவற்றின் வாழ்வு உயர்திணைக்கு உரித்தான அக்கறையுடன் புனையப்படுவது இந்நாவலின் தனிச்சிறப்பு.

## 16766

**பயங்கரவாதி.** தீபச்செல்வன் (இயற்பெயர்: பாலேந்திரன் பிரதீபன்). சென்னை 600 078: டிஸ்கவரி புக் பலஸ், இல. 6, மஹாவீர் கொம்ப்ளெக்ஸ், முனுசாமி சாலை, கே.கே.நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2021. (சென்னை 600 078: டிஸ்கவரி புக் பலஸ், இல. 6, மஹாவீர் கொம்ப்ளெக்ஸ், முனுசாமி சாலை, கே.கே.நகர்).

*320 பக்கம், விலை: இந்திய ரூபா 360., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-91994-31-0.*

ஒரு பல்கலைக்கழக மாணவத் தலைவனின் கல்வியின் தேடலும் காதலும் வீரமும்தான் பயங்கரவாதி நாவலின் கதை. மிகக் கொடிய இனவழிப்பில் சிக்கிச் சிதையும் ஒரு குடும்பத்திலிருந்து மீள்கின்ற ஒரு குழந்தை வாழ்வுக்காக மேற் கொள்ளும் போராட்டமாகவும் வேட்கையாகவும் இந்நாவல் உருவாகியுள்ளது. 2005இல் தொடங்கும் கதை 2009 ஈழ இறுதிப் போர் காலத்துடன் முடிவுறுகின்றது. "மௌனிகளாய் இருப்போருக்காக மாத்திரமின்றி எங்கள் கதைகளை திரிப்போருக்கு எதிராயும் என் புனைவின் குரலைத் தருகிற இப் பயணம் துப்பாக்கியின் குழல்மீதுதான் நிகழ்கிறது. எதிரில் துப்பாக்கி ஏந்திய இராணுவம் கண்காணிக்கும் தருணங்களில்தான் கிளிநொச்சி நகரப் பூங்காவிலிருந்து "பயங்கரவாதி" கதையின் முதல் பக்கங்களை எழுதத் துவங்கினேன். அதே நகரத்தில் அமர்ந்தபடியே இறுதிப் பக்கங்கள்வரை தினமும் எழுதி முடித்தேன். வாழ்வையும் எழுத்தையும் போராட்டமாக்க வேண்டும் என்பதை காலம் கற்றுத் தந்திருக்கிறது. கவிதைகளுக் காகவும் எழுத்துக்களுக்காகவும் தேடப்படும் காலத்தில் எழுத்தை ஒரு சுவாசமாக மாத்திரமின்றி ஆயுதமாகவும் பற்றிக் கொள்ள வேண்டிய நிர்பந்தம் கைகளில் தரப்பட்டிருக்கிறது" என்று இந்நாவல் பற்றிக் கூறும் தீபச்செல்வன் இலங்கையின் வடக்கே கிளிநொச்சி, இரத்தினபுரத்தைச் சேர்ந்தவர். கிளிநொச்சி மத்திய கல்லூ ரியில் உயர்தர கலைப்பிரிவில் பயின்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழில் இளங்கலைச் சிறப்புப் பட்டமும், தமிழகத்தின் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இதழியல் மற்றும் தொடர்பியல் துறையில் முதுகலைப் பட்டமும் (M.A) பெற்றவர்.

## 16767

**பாலை நில ரோஜா.** நிவேதா ஜெகநாதன். கொழும்பு 13: நிவேதா ஜெகநாதன், கொட்டாஞ்சேனை, 1ஆவது பதிப்பு, 2019. (கொழும்பு 13: கே.எஸ்.கே.பிரின்டர்ஸ், 179, பிக்கரிங்ஸ் வீதி, கொட்டாஞ்சேனை).

ix, 283 பக்கம், விலை: ரூபா 490., அளவு: 21.5x15.5 சமீ., ISBN: 978-624-95090-0-9.

மலையக இளம் படைப்பாளர்களுள் ஒருவரான நிவேதா ஜெகநாதன், பதுளை அப்புத்தளை பிட்ரத்மலையில் பிறந்தவர். மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை பட்டதாரியாவார். அத்துடன் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தமிழ்ப் பாடப் பிரிவில் பட்டயக் கல்வி கற்றவருமாவார். U.T.V தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராகப் பணியாற்றுகின்றார். இச்சமூக நாவலில், தான் பிறந்து வளர்ந்த மலையகத்தை அடித்தளமாகக்கொண்டு கதையைக் கட்டியெழுப்பியுள்ளார். தேயிலை மலையில் பிறந்து, வாழ்ந்து, மடிந்து, இறுதியில் அந்தத் தேயிலைகளுக்கே உரமாகிப் போகும் மலையக மக்களின் வாழ்க்கை, பண்பாடு, பாரம்பரியம், பொருளாதாரம், காதல் என்பன கதையை சுவாரஸ்யமாக நகர்த்திச் செல்கின்றன. மதுவுக்கும் கசிப்புக்கும் அடிமைப்பட்டு குடும்பப் பொறுப்பை ஒரு குடும்பத் தலைவன் உதாசீனம் செய்யும்போது, தலைவியின் தலையில் அந்தப் பொறுப்பும் கடன் சுமையும் சுமத்தப்படுகின்றது. அது அக்குடும்பத்தில் எத்தகைய பாதிப்புகளை கொண்டுவருகின்றது என்பதையும் கதையில் காணமுடிகின்றது.

## 16768

**PKM என்கின்ற புகையிரத நிலையம்.** அ.இரவி. தமிழ்நாடு: சுதர்சன் புக்ஸ் அன்ட் க்ராப்ட்ஸ், 15/4, கே.பி.சாலை, நாகர்கோவில் 629 001, 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2021. (சென்னை 600001: Adyar Students Xerox Pvt. Ltd., No.9, Sunkuraman Street, Parrys).

207 பக்கம், விலை: இந்திய ரூபா 295., அளவு: 22x14 சமீ., ISBN: 978-93-83839-16-2.

சிங்களம் மட்டும் சட்டம் (Sinhala Only Act) அல்லது அதிகாரபூர்வமாக 1956 ம் ஆண்டின் 33ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டம் (Official Language Act) என்பது எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க தலைமையிலான இலங்கை அரசாங்கத்தால் 1956 ஆம் ஆண்டு ஜுன் 5 ஆம் நாள் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட "சிங்களம் மட்டுமே இலங்கையின் அரசகரும மொழி" என்ற சட்டத்தைக் குறிக்கும். இச்சட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் இலங்கையின் ஆட்சிமொழியான ஆங்கில மொழி அகற்றப்பட்டு 70% பெரும்பான்மை சிங்கள வர்கள் பேசும் சிங்கள மொழி ஆட்சி மொழியாக்கப்பட்டது. இச்சட்ட மூலத்தின் காரணமாக அரசுப் பணியில் உள்ள தமிழர்களும் சிங்களம் படிக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டார்கள். அதை மறுத்த அரச ஊழியர்கள் தமது அரச ஊழியத்தை இழந்தார்கள். இதன் பின்னணியில் இக்கதை உருவாக்கம் பெறுகின்றது. இது தனி ஒருவரின் கதையல்ல. ஈழத் தமிழ்ச் சமூகத்தின் ஒருவெட்டு

*முகமே இக்கதை. தமிழில் ஐந்தாம் வகுப்பு வரையே படித்த ஒரு தமிழர், சிங்கள மொழியில் தேர்ச்சி பெறாததால் தனது அரசாங்க உத்தியோகத்தை இழக்கிறார். அந்த இழப்பு அவருக்கான வலி மாத்திரமல்ல. ஒரு குடும்பத்திற்கான வலி, ஒரு இனத்திற்கான வலி, ஒரு தேசியத்திற்கான வலி. அந்த வலியினைக் கலாபூர்வமாகச் சொல்ல முயல்கிறது என்பதுதான் இப்படைப்பின் வெற்றி. இந்நாவல் வரலாறு சொல்லமுடியாத வெளிகளில் புகுந்து வாழ்வைச் சொல்கின்றது. யாழ்ப்பாணம் அளவெட்டியில் 1960இல் பிறந்த அ.இரவி, தெல்லிப்பழை, மகாஜனக் கல்லூரியில் கற்றுத் தேர்ந்து 1982இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சென்று, தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்று 1986இல் பட்டதாரியானவர். பின்னர் அதே பல்கலைக் கழகத்தில் 1992இல் அரங்கியலில் முதுகலைமாணிப் பட்டமும் பெற்றார். 1995இல் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் கல்வியியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்று பத்தாண்டுக்காலம் ஆசிரியராகப் பணிபுரிந்தார். புதுசு, சரிநிகர், புலம், ஒரு பேப்பர் ஆகிய இதழ்களின் ஆசிரியர் குழுவில் இவரும் ஒருவர். லண்டனில் வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் பணியாற்றியவர். தனது 20ஆவது வயதில் எழுதத் தொடங்கிய அ.இரவி, பேராசிரியர் கா.சிவத்தம்பியின் பாராட்டையும் பெற்றவர்.*

## 16769

**போக்காளி (நாவல்).** *நவமகன். சென்னை 600 005: கருப்புப் பிரதிகள், பி 55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை, 1ஆவது பதிப்பு, ஜூலை 2022. (சென்னை 600005: ஜோதி என்டர்பிரைசஸ்).*

*680 பக்கம், விலை: இந்திய ரூபா 700.00, அளவு: 22x14.5 சமீ.,* ISBN: *978-93-95256-01-8.*

*ஆயுதப் போராட்டத்தை புற வெளியிலும், பண்பாட்டுப் போராட்டத்தை வதிவிட அக வெளியிலும் நிகழ்த்திப் பார்க்கக்கூடிய ஈழத் தமிழ்ச் சமூகத்தின் மனநலம், இனநலம் சார்ந்த மோதல்களை தர்க்கவெளியில் வைத்து விவாதிக்கும் இந்நாவல், ஈழ-புகலிட-தமிழக வெளிகளில் விடுபட்டிருந்த புதிய உரையாடல்களையும் புரிதல்களையும் கூர்மையாக முன்னெடுக்கின்றது. தெரிந்த வரலாற்றின் திகைப்பான பக்கங்களாய் புலப்பெயர்வு அனுபவங்களும் முப்பது ஆண்டுகளை ஒரு கால இயந்திரமாக* (Time Machine) *கைக்கொண்டும் மிகை நாடாமல் நேர்மை எழுத்தை முன்வைத்து வசீகரிக்கிறது இந்நாவல். சொந்த மண்ணை இழந்து, கடந்த காலக் காயங்களையும், நிகழ்கால வலிகளையும் சுமந்தபடி அந்நிய மண்ணில் எதிர்காலக் கனவுகளுடன் வாழ்வைக் கடத்திக்கொண்டிருக்கும் எம்மவர்களின் வாழ்வில் தான் கேட்ட, அனுபவித்த இன்பமான அன்றித் துன்பமான முடிவுகளைக் கொண்ட புதினங்களைச் சமூகச் செயல்தளத்தின் நடைமுறையோட்டத்துடன் பாத்திரங்களின் அனுபவ உணர்வுகளை காய்தல் உவத்தலின்றி உரைநடையில் விவரிப்பதன் மூலம் இதனை ஒரு சமூக நாவலாக அமைத்திருக்கிறார். அகராதியில் போக்காளி என்பதன் அர்த்தம் இளமையில் இறந்தவர் என்றோ, உதவாதவன் என்றோ குறிப்பிடப்படுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70019).*

## 16770

**மகளிர் மூவர்: (சமூக நாவல்).** செ.கணேசலிங்கன். சென்னை 26: குமரன் பதிப்பகம், 12/3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7ஆவது தெரு, வடபழனி, 1ஆவது பதிப்பு, 2016. (சென்னை: சிவம்ஸ்).

144 பக்கம், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 18x12.5 சமீ.

நில மானிய சமூகத்தில் வேலைப் பிரிவினை காரணமாக பால்நிலை சார்ந்து சமூகம் பிரிக்கப்பட்டது. ஆனாலும் மந்தைகள் அந்த ரீதியில் பிரிக்கப்படவில்லை. வேலைப் பிரிவினையில் ஆணுக்கு வாய்ப்பான குடும்ப அமைப்பு வழங்கப்பட்டது. பெண்ணுக்கு வீட்டுப் பணிகளுக்கு மேலாக கர்ப்பம், மகப்பேறு, குழந்தைக்குப் பாலூட்டி வளர்த்தல் என்பன திணிக்கப்பட்டன. ஏறக்குறைய 40-45 நூற்றாண்டு களாக இத்தகைய பெண் அடிமைத்தனம் நீடித்தது. கழிந்த நூற்றாண்டில் இயந்திர உற்பத்தியோடு மேம்பட்ட முதலாளித்துவ அமைப்பும் ஆணாதிக்க சமூக அமைப்பை அசைக்க விரும்பவில்லை. ஆயினும் முதலாளித்துவ நாடுகளிடையே ஏற்பட்ட பகைமை முரண்பாட்டால் உலக மகா யுத்தம் ஒன்று (1914-1918), உலக மகா யுத்தம் இரண்டு (1939-1945) என்பன நடந்தேறின. போராளிகளின் இழப்பு, பொருள் இழப்பு என்பன எல்லையற்றதாயிருந்தன. கொல்லப்பட்ட ஆண்கள் உழைப்பை ஈடுகட்ட பெண்ணினத்தை மேலதிக உழைப்பில் ஈடுபடுத்தியது. மகளிர் கல்லூரிகள், பல்வேறு சேவைத் துறைகள், மருத்துவம், கல்வி உட்பட மகளிர் விடுதிகள் காலப்போக்கில் பெண்களின் சமத்துவ தனிவாழ்வை விரிவுபடுத்தின. கர்ப்பமுறும் தொல்லைகளை விட்டு, தனித்தும் தாமே சேர்ந்தும் மேலை நாடுகளில் வாழ்வதற்கு சட்ட உரிமைகளும் பெற்று வருகின்றனர். அவற்றின் வளர்ச்சி மூன்றாம் உலக நாடுகளின் பெண்களுக்கும் வழிகாட்டும். சினைப்படுத்துவதில் முன்நிற்பது ஆணாதிக்கமே. இன்று 35 சதவீதம் மக்கள் வறுமைக்கோட்டின் கீழே உள்ளனர். பெண்ணிய தனி ஆட்சியின் போது இக்கோடு மறைந்துவிடும் என்றும் கருப்பை ஆதிக்கமும் தங்களது மடிகளிலேயே வந்துவிடும் என்கிறாள் நீலா. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 60607).

## 16771

**மர்ம கீதங்கள் (மர்ம நாவல்).** வெலிவிட்ட ஏ.சீ.ஜரீனா முஸ்தபா. மாவனல்ல: எக்மி பதிப்பகம், 19, கமந்தெனிய வீதி, கிரிங்கதெனிய, 1ஆவது பதிப்பு, 2017. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

xviii, 84 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-1825-14-0.

வெலிவிட்ட ஏ.சீ.ஜரீனா முஸ்தபா எழுதிய இந்நாவல் இவரது 11ஆவது நூலாகும். சமூகங்களில் நிலைபேறு பெற்றுள்ள ஒழுக்கக் கேடுகளைக் களைந்தெறிய வேண்டும் என்ற உயரிய எண்ணக் கருவுடன் எழுதப்பட்டிருக்கும் விறுவிறுப்பான இந்நாவல், வாசகர்களிடம் விழிப்புணர்வினை ஏற்படுத்தி அவர்களைச் சிந்திக்கவும் செயற்படவும் தூண்டும். சிங்கள மொழிமூலம் தன் பாடசாலைக் கல்வியைப் பெற்றிருந்த இந்தத் தமிழ் இலக்கியவாதி தனது ஆக்க இலக்கியப் படைப்புகளுக்காக தமிழ் இலக்கியப் பரப்பில் பல விருதுகளையும் வென்றவர்.

### 16772

**மன ஊஞ்சல்.** *மலரன்னை (இயற்பெயர்: திருமதி அற்புதராணி காசிலிங்கம்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, மார்கழி 2022. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).*

iv, *184 பக்கம், விலை: ரூபா 800., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-624-5881-57-4.*

*ஆசிரியரின் 13ஆவது நூலாகவும், ஐந்தாவது நாவலாகவும் இந்நூல் வெளிவந்துள்ளது. குயிலினி என்ற பெண்ணின் வாழ்க்கையை மையமாக வைத்து இந்நாவல் புனையப்பட்டுள்ளது. குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிய தந்தை. குடும்பச் சுமையைத் தாங்க முடியாமல் தத்தளிக்கும் தாய். வறுமை நிலையை சகிக்க முடியாத தங்கை என பல்வேறுபட்ட இன்னல்களுக்கு மத்தியில் வாழும் குயிலினியின் (வறுமையிலிருந்து மீண்டெழுந்து தன் குடும்பத்தை உய்ய வைக்கும்) மனப்பக்குவம் இன்றைய இளம் பராயத்தினருக்கு ஒரு முன் உதாரணமாக அமைகின்றது. இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்தாலும், அறியாப் பருவத்தில் அவளது உள்ளத்தில் ஆழ வேரூன்றிய காதல், கற்பனைகளை மட்டும் வளர்த்து விட்டதே தவிர காலம் செய்த கோலம் அவளைத் தனிமரமாக்கிவிட்டது. பணமும் பதவியும் பாசத்தைக் குறுக்கறுத்து பண்பில்லா மனித மனத்தை எப்படியெல்லாம் நேர்மாறாக சிந்தித்துச் செயற்பட வைக்கும் என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. அதன் விளைவுதான் நிறைவேறாத காதலால் எதிர்த்திசையில் பயணித்தாலும் கதாநாயகனால் தனது காதலியின் நெஞ்சத்து ஊஞ்சலில் நிம்மதியாகப் பள்ளிகொள்ள முடிகின்றது. இந்நூல் 237ஆவது ஜீவநதி வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது.*

### 16773

**மனோன்மணி காட்டும் ஊழிக்காலம் (சமூக நாவல்).** செ.கணேசலிங்கன். சென்னை *26:* குமரன் பதிப்பகம், *12/3* மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி *7*ஆவது தெரு, வடபழனி, *1*ஆவது பதிப்பு, *2016.* (சென்னை சிவம்ஸ்).

*176 பக்கம், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 18*x*12.5 சமீ.*

*இந்நூல் வானமண்டலத்தில் தானே நாள்தோறும் தன்னைத் தானே சுற்றும் பூமியும் அங்கு வாழும் மனித உயிரினங்களும் சிறுமையானவையாக எண்ணச் செய்கின்றது. மனோன்மணியும் நேசமலரும் நெருங்கிய தோழியர். மனோன்மணி தன் அக்கா போல, வெளிநாட்டு மாப்பிள்ளை தேடி, தன்னையும் பணயம் வைத்து முயல்கிறாள். அவளது முயற்சி தோல்வியில் முடிகின்றது. நேசமலர், தேசிய இனப் போராட்டத்தில் ஈடுபட தோழி மனோன்மணியையும் இணைக்கிறாள். ஆயுதப் பயிற்சி பெறவும் தமிழ்நாடு செல்கின்றனர். அங்கு பயிற்சியுடன் கல்வியும் பெற வாய்ப்பு ஏற்படுகின்றது. ஓய்வுபெற்ற பேராசிரியர் பொன்னம்பலம் மூலம் முன்னர் கற்ற மானிடவியல் கல்வியில் ஆர்வம் காட்டுகின்றனர். நாட்டில் தேசிய இன விடுதலைப் போராட்டம் தோல்வியடைய, பேராசிரியரின் உதவியுடன் தமிழ் நாட்டிலேயே தமது கல்வியைத் தொடர இருவரும் தீர்மானிக்கின்றனர். உயிரியல் அறிஞர் ஏர்னஸ்ட் மேயர்* (Ernest Mayr) *கூற்றுப்படி நோம் சொம்ஸ்கியின்*

"மேலாதிக்கம் அல்லது உயிர்வாழ்வு" நூலில் மனித இனத்தின் சராசரி வாழ்வுக் காலம் ஒரு லட்சம் வருடங்களாகும். கிறிஸ்டபர் லோயிட் (Christoper Lloyd) முதல் மனித இனமாகக் கூறப்பட்ட ஹோமோ சேப்பியன் தோன்றிய ஆண்டுகள் 50,000 என்பார். அக்கூற்றின்படி மேலும் 50,000 ஆண்டுகளே மனித இனம் வாழ முடியும் என்பதே மனோன்மணியின் கணக்கு. நோம் சொம்ஸ்கி தன் நூலில் "ஆபத்தான காலங்கள்" என அச்சுறுத்திக் கூறும் பகுதியில் வறட்சி, வெள்ளம், சுனாமி, நோய், பூகம்பம் உட்பட அணுகுண்டு மட்டுமல்ல, தொடர்பு சாதனமாக வானில் தொங்கும் சிறு சட்டிலைட் கோள்களாலும் பூமிவாழ் உயிரினங்களுக்கு எக்காலத்திலும் அழிவு ஏற்படலாம் என்பார். பூமியில் வாழும் உயிரினங்கள் அனைத்துக்கும், தனித் தனியாக ஊழிக்காலம் உள்ளது. மனித இனம் உட்பட - என்பாள் மனோன்மணி.

## 16774

**மீனாட்சி கூறும் அழகியல் (சமூக நாவல்).** செ.கணேசலிங்கன். சென்னை 26: குமரன் பதிப்பகம், 12/3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7ஆவது தெரு, வடபழனி, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2017. (சென்னை: சிவம்ஸ்).

*160 பக்கம், விலை: இந்திய ரூபா 80.00, அளவு: 18x12.5 சமீ.*

இந்நூலில் பிறப்பு இயற்கையுடன் தோன்றிய அழகு அனைவராலும் விரும்பப் படுகின்றது என்பதுடன், அதுவே பலராலும் வேண்டப்படுவது என்று ஆசிரியர் கதாபாத்திரங்களின் வழியாக நிறுவுகிறார். ஆடைகள் அலங்காரம் உட்பட எல்லாமே சிறப்பாக அமைவதையே பெண்கள் விரும்புவார்கள். அத்தகையோரே தமது வாழ்வில் அழகாய் காதலரை, கணவரைக் கவர்ந்து சிறப்புறுவர் என்ற நம்பிக்கை எம்மவரிடையே உள்ளது. அதே போல ஆண்களும் வெள்ளை, சிகப்பு நிற கவர்ச்சியான பெண்களை விரும்பலாம் என்றும் ஒரு கருத்து உள்ளது. இயல்பாக, இயற்கையாக எதிர்பாலாரின் கவர்ச்சி, பாலுறவு எழுச்சியைத் தூண்டலாம் எனலாம். மீனாட்சியும் செல்லம்மாவும் மேல்நிலைப் பள்ளித் தோழியர். அன்று வீடு திரும்பும்போது கோயில் சிலைகள் பற்றிய விவாதம். "நீ கறுப்பியடி. எவரும் கலியாணம் கட்ட வரமாட்டார்கள்" அழகியான செல்லம்மா நேரடியாக மீனாட்சியை மனம்வருந்த வைத்துவிட்டாள். மீனாட்சி ஆற்றா நிலையில் மறுநாள் தன் ஆசிரியரிடம் மன ஆறுதல் பெற தன் கவலையைக் கூறினாள். "உன் கல்வித் தரத்தை உயர்த்து. மதிப்பு தானே வரும். அவளது உடலில் ஓடுவதும் உன் சிவப்பு இரத்தமே" என ஆறுதல் வழங்குகிறார். கல்லூ ரி பேராசிரியருடன் சேர்ந்து மேல் நிலைக் கல்வி, அழகியல் கோட்பாடு சார்ந்த ஆய்வில் மீனா ஈடுபடுகிறாள். பேராசிரியருடன் இணைந்து ஜேர்மன் சமூகவியல் சித்தாந்தவாதியான தியடோர் அடனோர் பற்றிய ஆய்வில் பேராசிரியருக்கு உதவுகிறாள். அன்னாரின் அழகியல், சமூகவியல் கோட்பாடுகளை ஆய்வதில் பேராசிரியருடன் ஈடுபட்டு, தன் புதிய அறிவு, ஆய்வு நிலையை மேம்படுத்திக் கொள்கிறார். மேலும், சினிமா உலகில் உதவி டைரக்டர் அம்பி, ஆனந்தன் ஆகியோரின் தொடர்பும் அவளுக்குப் பயன்படு கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 64921).

### 16775

**முதலில் பூத்த முல்லை (நாவல்).** நிவேதா ஜெகநாதன். கொழும்பு 13: நிவேதா ஜெகநாதன், கொட்டாஞ்சேனை, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2020. (கொழும்பு 13: சண் கிராப்பிக் அன்ட் பிரின்டர்ஸ், 340, ஜம்பட்டா வீதி, கொட்டாஞ்சேனை).

xv, 135 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x15.5 சமீ., ISBN: 978-624-95090-2-3.

மலையகத்தில் ஹப்புத்தளையை பிறப்பிடமாகக் கொண்டு, கொழும்பை வாழ்விடமாகக் கொண்ட நிவேதா எழுதிய மூன்றாவது நாவல். இதற்கு முன்னர் இவர் "பாலை நில ரோஜா", "அன்னக்கிளிக்கு அஞ்சு வயசு" ஆகிய இரு நாவல் களை எழுதியிருக்கிறார். இந்தக்கதை பெருந்தோட்ட சமூகத்தில் "முல்லை" என்ற ஒரு பெண்ணைப் பற்றியது. தந்தையை இழந்து, விதவைத் தாய், பாட்டி, அத்தை ஆகியோருடைய அரவணைப்பில் முல்லை வாழ்ந்து வருகிறாள். இந்த மூன்று பெருந்தோட்டப் பெண்களினதும் இலட்சியக் கனவை நிறைவேற்றும் முல்லை கல்வியில் சிறந்து விளங்குகிறாள். உயர் கல்விக்காகத் தோட்டத்தை விட்டு நகரத்துக்குச் செல்லும் அவளை ஊர் மக்கள் ஒன்றுகூடி ஆசீர்வதித்து வழியனுப்பி வைக்கின்றனர். மலையகக் கல்வி வளர்ச்சியில் தோட்ட மக்கள் ஆர்வத்தைக் காட்ட முன்வந்திருப்பதை கதாசிரியர் இங்கு மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்டுகிறார். முல்லை பக்கத்தூரில் வங்கியொன்றில் உயர் அதிகாரியாகப் பதவியேற்று, கம்பீரமாகத் தன் தொழிலை ஆற்றத் தொடங்குவதாகக் கதை நகர் கின்றது. சமூக கலாசார பேதங்களில், பொருளாதாரத் தாழ்வில், ஒடுக்கப்படுகின்ற மக்கள் கூட்டம் உயர்வதற்கான ஒரே துணை கல்வி தான் என்பதை இந்நாவல் தெளிவுபடுத்துகின்றது.

### 16776

**மேகலை கதா (நாவல்).** தேவகாந்தன். கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 202, செட்டியார் தெரு, 1ஆவது பதிப்பு, மார்ச் 2020. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

xiv, 186 பக்கம், விலை: ரூபா 550., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-3491-36-7.

ஆசிரியரின் "கதா காலம்" (2004), "லங்காபுரம்" (2008) ஆகிய நாவல்களுக்குப் பிறகு அதே வழியில் சாத்தனாரின் மணிமேகலை காப்பியத்தை நாவலாக்கும் முயற்சியில் தேவகாந்தன் முனைந்துள்ளார். அதற்காக தன்னை நிறையத் தயார் படுத்தவேண்டி இருந்ததென்கிறார். மறுபடியும் "மணிமேகலை"க்குள் புகுந்து, இந்திரவிழாவும், கண்ணகி- கோவலன் வரலாறும் காண சிலப்பதிகாரத்தின் புனர் வாசிப்பும் இவருக்கு அவசியமாயிற்று. பௌத்த தத்துவங்களை மீளப் படிக்கவும் நேர்ந்துள்ளது. அத்தனை வாசிப்பு, ஆய்வு முயற்சிகளுக்குப் பிறகே மணிமேகலை கதா உருவாகியுள்ளது. இக்கதை அறவாழித் துறவியான மணிமேக லையிலிருந்தல்ல, மணிபல்லவத் தீவகத்து மணிமேகலா தெய்வத்திலிருந்தே கதையைத் துவக்கியிருக்கிறார். பெரும் அறக் காரியங்கள் செய்த மணிமேகலையை விட, அவளை அந்த நெறியில் சாதுர்யமாகப் புகுத்திய அவளது குலதெய்வமான மணிமேகலா தெய்வம் கூடிய முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆசிரியருக்குப்

பட்டிருக்கிறது. சமயக் கருத்தாடல் "மேகலை கதா" நாவலின் சுவை நீட்சியோடு முட்டி மோதிக் கொள்ளாதவாறு புனைவு பின்னப்பட்டிருத்தலும், அதற்கு அனுசரணையான மொழியாடல் இடம்பெற்று இருத்தலும், குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். வளமான மொழிச் செறிவு கதையோட்டத்துடன் கலந்துள்ளது. பௌத்த தத்துவத்தோடு இணைந்த இலக்கியங்கள் தமிழில் பரவலுற்றிருந்தாலும், மணிமேகலை அவற்றுள் மேலோங்கிய படைப்பாக கால நீட்சியில் இருந்துவருகிறது. காவியப் புனைவை நாவல் புனைவாக மாற்றிய, மறுவாசிப்புடன் இணைந்த புத்தாக்கம் இதுவாகும். "மீளச் சொல்லல்" (Retold) என்பது பனுவல்களை அறிமுகப் படுத்தும் இலக்கியச் செயற்பாடாகும். மூலப் பனுவலின் கருவை அடியொற்றிய நாவலாக்கம், ஆக்க மலர்ச்சியுடன் இணைந்த புதிய வடிவத்தைப் பெற்றுக்கொள்ளும். அத்தகைய எழுதுகையை "மேகலை கதா" வெளிப்படுத்துகின்றது.

## 16777

**மோகனாங்கி: தமிழின் முதல் வரலாற்று நாவல்.** *திருகோணமலை த.சரவணமுத்துப் பிள்ளை (மூலம்), கனகசபாபதி சரவணபவன், சற்குணம் சத்யதேவன், முரளிதரன் மயூரன் (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 3ஆவது பதிப்பு, 2023, 1வது பதிப்பு 1895, 2ஆவது பதிப்பு 2018. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

xxxii, *290 பக்கம், விலை: ரூபா 1950., அளவு: 22.5*x*15.5 சமீ.,* ISBN: *978-624-6164-38-3.*

*சென்னை இந்து யூனியன் அச்சகத்தில் 1895இல் அச்சிட்டு வெளியான மோகனாங்கி என்ற நூல், தஞ்சையிலும், திருச்சியிலும் நாயக்க மன்னர்கள் ஆட்சிபுரிந்த காலத்தைப் பகைப்புலமாகக் கொண்டது. இவ்விரு பகுதிகளின் ஆட்சியாளரிடையே நிகழ்ந்து வந்த அரசியல் போட்டிகளைப் பின்னணியாகக் கொண்டு இப் புதினத்தின் நிகழ்வுகள் அமைக்கப்பட்டுள்ளன. சொக்கநாதன், மோகனாங்கி என்னும் இருவருக்கிடையேயான காதல் வாழ்க்கையை எடுத்துக்கூறும் இக்கதையில் இடையிடையே கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. தஞ்சைநாயக்க இளவரசி மோகனாங்கிக்கும் திருச்சிராப்பள்ளி மன்னரான சொக்கநாத நாயக்கருக்கும் இடையே தோன்றிய காதலும் அதனால் மூண்ட போரும் பின்னாளில் இருவரும் இணைவதுமான கதையம்சத்தை இந்நவீனம் கொண்டிருந்தது. 17ஆம் நூற்றாண்டுத் தமிழர்களின் நாயக்கராட்சியின் பகைப்புலத்தில் காதல், வீரம், சூழ்ச்சி என்பன வற்றை சுவையாக இணைத்து கதை விறுவிறுப்பாகக் கொண்டுசெல்லப்படுகின்றது. சரவணமுத்துப்பிள்ளை எல்லா முக்கிய கதாபாத்திரங்களையும் பற்றி விரிவாக ஆய்வு செய்ததுடன், வரலாற்று ரீதியாகத் துல்லியமான நிகழ்வுகளுடன் தனது கதாபாத்திரங்களைக் கவனமாகப் பயன்படுத்தி நாவலுக்குரிய அம்சங்களையும் இணைத்து அற்புதமான காந்தர்வ விவாக காதல்கதையை படைத்துள்ளதால் சிறந்த வாசிப்பு அனுபவத்தை மோகனாங்கி வழங்குகிறது. 1895 இல் வெளிவந்த நூல் என்றாலும், தற்கால நாவல்களைப் போன்றே விறுவிறுப்பும் சுவாரசியமும் குறையாத நாவல் இது. வெறும் வரலாற்றுக் கதைப்புத்தகமாக அல்லாமல், இந்நாவலில் பெண்ணியக் கருத்துக்கள் முதல் அரசியல் விமர்சனங்கள் வரை*

மிகக்கூர்மையாக முன்வைக்கப்படுகின்றன. மோகனாங்கி தமிழில் வெளிவந்த முதல் வரலாற்று நாவல் என்ற பெருமைக்கு அப்பால் வரலாற்றைச் சமூக சீர்திருத்தத்தோடு முன்வைத்திருப்பதே அதன் தனிச் சிறப்பு என்பர் ஆய்வாளர்கள்.

## 16778

**வாழ்வும் கடனும் (சமூக நாவல்).** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 3(12), மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7ஆவது தெரு, வடபழநி, 1ஆவது பதிப்பு, 2012. (சென்னை: சிவம்ஸ்).

192 பக்கம், விலை: இந்திய ரூபா 90.00, அளவு: 18x12.5 சமீ.

சீவகன் தமிழகத்தின் பறவைகள் சரணாலயத்துக்குப் பெயர் பெற்ற "வேடந்தாங்கல்" கிராமத்தவன். அங்கு பிளஸ் 2 முடித்தபின் சித்தப்பாவின் ஏற்பாட்டில் சென்னைக் கல்லூரியில் பொருளாதாரம் கற்க வருகிறான். உலகப் பொருளாதார வீழ்ச்சி பற்றி பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர் கெயின்சின் "கடன் கொள்கையை" அவனது விரிவுரையாளர் விசுவநாதன் எதிர்க்கிறார். மாறிவரும் சைக்கிள் நிகழ்வல்ல-கடன் சுமை என்பது. அது நீண்டகால வீழ்ச்சிச் சுமை என்பான் சீவகன். கல்லூரிக் கருத்தரங்கில், அரசுகள், உலக வங்கிகள், உள்நாட்டு வங்கிகளின் கடன் சுமையில் அகப்படும் மக்களும் கடன்பட்டார் நெஞ்சக் கலக்கத்தில் அகப் படுகின்றனர். மக்களின் ஆத்மா கடனோடு, வங்கிகளோடு, கந்து வட்டிக்காரரோடு பின்னப்படுகின்றனர். அமைதியற்ற வாழ்வு மக்களுக்கு ஏற்படுகின்றது என்றும் சிவன் கூறுவான். மாணவியர் சிவகாமி, வள்ளி தமது பட்டப் படிப்பிற்கு சீவகன் உதவியை வேண்டுவர். அவர்களின் தோழியான அகில் உட்பட யாவரும் பறவை கள் சரணாலயத்திற்கு உதவுகின்றனர். வெள்ளைப் பறவைகளை உவந்து உபசரித்தோம் வெள்ளை மனிதரை விருந்தினராக உள்விட்டோம். அவர்கள் மக்களை அடிமைகளாக்கி ஆட்சி செய்தனர் என்பான் சீவகன். அகிலின்ஆசிரியை மூலம் ஐம்புலன் இன்பத்துக்கு மேலாக அனைவரும் புதுவிளக்கம் பெறுகின்றனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 56205).

## 16779

**விடியாத இரவு (நாவல்).** ஜுனைதா ஷெரீப். திருக்கோணமலை: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2020. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496A, திருமலை வீதி).

xvi, 254 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x16 சமீ., ISBN: 978-955-38432-2-7.

ஆழமான காதலில் கட்டுண்ட வயதான தம்பதியரின் தூய காதல் வாழ்க்கையை இந்நாவல் பேசுகின்றது. ஐம்பது வருடங்களுக்கு மேலாக தாம்பத்திய வாழ்வில் இணைந்து வாழ்ந்து காதல்வயப்பட்டு காதலிலே கட்டுண்டு ஈருடல் ஓருயிராக வாழ்ந்தவர்கள் இத்தம்பதியினர். அவர்களில் ஒருவர் நோய்வாய்ப்படுகிறார். ஓர் உயிர் நோயுற்றபோது மற்ற உயிர் தவிக்கிறது, தளர்கிறது, துவள்கிறது. எந்த எல்லைக்குச் சென்றாவது தனது காதல் நாயகியை காலனின் பிடியிலிருந்து

காப்பாற்றிவிட வேண்டுமென்ற வாழ்க்கைப் போராட்டம் தான் இந்தக் கதை. அமரர் ஜுனைதா ஷெரீப், மொஹமட் ஷெரீப், கச்சி மொஹமட் (15.09.1940 - 03.10.2021) என்ற இயற்பெயரைக் கொண்டவர். அல் நஸார் வித்தியாலயமெனப் பெயர் கொண்ட காத்தான்குடி முதலாம் குறிச்சிப் பாடசாலை, காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்ற இவர், 1958ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆசிரியராக நியமனம் பெற்றார். இவர் மட்டக்களப்பில் இயங்கிய நாடகக் குழுவொன்றில் சேர்ந்து பல மேடை நாடகங்களில் நடித்துள்ளார். இவரது மூன்றாம் முறை, சிதைவுகள், சாட்சிகள் இல்லாத சாமத்தில் ஆகியவை தொடர்கதைகளாகத் தினகரன், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. மேலும் இவரால் காட்டில் எறித்த நிலா, ஒவ்வாமுனைக் கடிதங்கள், இது நம்ம சொத்து, ஒரு கிராமத்தின் துயில் கலைகிறது ஆகிய நாவல்கள் இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபையின் அனுசரனையுடன் எழுதப்பட்டுள்ளன. இவர் தேசிய ரீதியாகவும் மற்றும் வட கிழக்கு மாகாண ரீதியாகவும் நான்கு சாகித்திய விருதுகள், இலங்கை அரசின் கலாபூசண விருது, இலக்கிய வித்தகர் விருது உட்படப் பல விருதுகளைப் பெற்றுள்ளார். 2021இல் மறையும் வேளை இவருக்கு வயது 81.

## 16780

**விழுதல் என்பது எழுகையே.** தமிழ் எழுத்தாளர் இணைய அகம். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, மார்கழி 2020. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

xii, 280 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-0958-65-8.

2014ஆம் ஆண்டு தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, டென்மார்க், கனடா, இலங்கை, நோர்வே, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்து 26 எழுத்தாளர்கள் ஒன்றிணைந்து எழுதிய தொடர் கதை இது. பண்ணாகம் இணையத்தளம் (ஜேர்மனி), அக்கினிக் குஞ்சு இணையத்தளம் (அவுஸ்திரேலியா), யாழ். இணையம், அலைகள் இணையத்தளம் (டென்மார்க்),கோட்டைக்கல்லாறு இணையத்தளம் (இலங்கை) வண்ணை இணையத்தளம் (பிரான்ஸ்) ஆகிய இணையத் தளங்களிலும் தமிழ் எழுத்தாளர் இணைய அகம் என்ற முகநூலிலும் வாரம் ஒரு முறை ஒரு தொடர் என்ற ரீதியில் இத்தொடர்கதை வளர்த்துச் செல்லப்பட்டிருந்தது. அத்தொடர்கதையின் முழுத் தொகுப்பும் தனிநூலாக இங்கு வெளியிடப்பட்டுள்ளது. இத்தொடரை கல்லாறு சதீஸ் (சுவிஸ்) தொடக்கிவைக்க, சுவிஸ்ஸிலிருந்து விக்கி நவரட்ணம், பன்னிருகரம் ஜெயக்கொடி (பொலிகை ஜெயா) ஆகியோரும், ஜேர்மனியிலிருந்து - ஏலையா முருகதாஸ், இ.க.கிருஷ்ணமூர்த்தி, நயினை விஜயன், காசி வி.நாகலிங்கம், மாலினி மாலா ஆகியோரும், பிரித்தானியாவிலிருந்து நிவேதா உதயராயன், பசுபதி சசிகரன் (பசுந்தரா சசி), எம்.என்.எம்.அனஸ் (இளைய அப்துல்லாஹ்) ஆகியோரும், பிரான்ஸிலிருந்து நா.தெய்வேந்திரம் (வண்ணைதெய்வம்), மகேந்திரன் குலராஜா ஆகியோரும், நோர்வேயிலிருந்து திருச்செல்வன் திலீபன் (நோர்வே நக்கீரன்), அவுஸ்திரேலியாவிலிருந்து கே.எஸ்.

சுதாகர், லெ.முருகபூபதி, மகாதேவ ஐயர் (ஜெயராமசர்மா), அருண் விஜயராணி ஆகியோரும், கனடாவிலிருந்து குரு அரவிந்தன், ஸ்ரீரஞ்ஜனி விஜயேந்திரா, டென்மார்க்கிலிருந்து கே.எஸ்.துரை, கனகசபாபதி சக்திதாசன், மதுவதனன் மௌனசாமி, சுபாஜினி ஸ்ரீரஞ்சன் ஆகியோரும், தமிழகத்திலிருந்து தேனம்மை லக்ஷ்மணன், தாயகத்திலிருந்து சகாதேவன் நித்தியானந்தன் ஆகியோரும் ஒவ்வொரு அத்தியாயங்களாகத் தொடர்ந்து தொடரை நிறைவுசெய்துள்ளனர். 177 ஆவது ஜீவநதி வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.

## 16781

**விளிம்பில் உலாவுதல்: இலங்கைக் கதைகள்.** ஐயாத்துரை சாந்தன். சென்னை 600011: அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம், 41, கல்யாணசுந்தரம் தெரு, பெரம்பூர், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2007. (சென்னை 600 033: காருண்யம் கிராப்பிக்ஸ்).

208 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x14.5 சமீ.

ஈழத்துப் படைப்பாளியான ஐ.சாந்தனின் ஐந்து குறுநாவல்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. ஆரைகள், உறவுகள் ஆயிரம், மனிதர்களும் மனிதர் களும், எழுதப்பட்ட அத்தியாயங்கள், அடையாளம் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. ஐயாத்துரை சாந்தன் ஈழத்தின் முக்கியமான எழுத்தாளர்களுள் ஒருவர். மொழிபெயர்ப்பிலும் உலக எழுத்தாளர்களைத் தமிழில் அறிமுகம் செய் வதிலும் குறிப்பிடத்தக்க பங்காற்றி வருகிறார். தமிழிலும் ஆங்கிலத்திலுமாக 27 இற்கும் அதிகமான நூல்களை எழுதியிருக்கிறார். இவரது முதலாவது சிறுகதை 1966 ஆம் ஆண்டு புரட்டாதி "கலைச்செல்வி" இதழில் வெளியானது. மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த போது இவரது "பார்வைகள்" என்ற சிறுகதைத் தொகுப்பு வெளியானது. தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்குப் பங்களிக்கும் பல சிறுகதைகளின் ஆசிரியர். சிறிய சிறுகதைகள், குறுங்கதைகள் என்ற வடிவங்களை வெற்றிகரமாக கையாண்டவர். இனப்பிரச்சனை, போர்க்கால வாழ்வு போன்றவற்றை இரு மொழிகளிலும் கலைப்படைப்புக்களாக்கியவர். (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34572).

## 16782

**வீணையடி நீ எனக்கு (நாவல்).** வி.மைக்கல் கொலின். மட்டக்களப்பு: மகுடம் பதிப்பகம், இல. 90, பார் வீதி, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2021. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496A, திருமலை வீதி).

viii, 162 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x16 சமீ., ISBN: 978-955-4041-01-1.

ஈழத்தில் தமிழ் மாணவர்கள் உயர்கல்வி பயில்கின்ற பல்கலைக்கழகங்கள் பல இருப்பினும் அவற்றைக் களமாகக் கொண்ட நாவல்கள் அரிதாகவே வெளி வந்துள்ளன. பல்கலைக்கழக வரலாற்றுடன் ஒப்பிடும்போது, குறுகிய கால வரலாறு கொண்ட கிழக்குப் பல்கலைக்கழகம் முதன்முதலாக நாவலொன்றின் களமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சற்று முற்பட்ட காலம் வரை முனைப்

புற்றிருந்த அரசியல், தாயக விடுதலைப் போராட்ட நிலவரங்கள் இடம்பெறுவதன் காரணமாக சமகால நாவலுக்குரிய வாடை இந்நாவலில் வீசுவதைத் தவிர்க்க முடியாது. நாவலின் நிகழ்களம் 1992-1998 காலகட்டத்துக்குரியதாகும். இராணுவ கெடுபிடிகளுக்கு மத்தியிலும், சுற்றிவளைப்புகளுக்கு மத்தியிலும் ஒரு மாணவ சமூகம் தமது கல்வியை மேற்கொண்டிருந்த களநிலவரங்களை இந்நாவல் பதிவுசெய்திருக்கிறது. போராட்டமே வாழ்வு என்றிருந்த அக்காலகட்டத்தில் எமது தமிழ் மாணவர்கள் கல்வியையும் போராடித்தான் பெறவேண்டியிருந்தது. மைக்கல் கொலின் 1997களில் தன் பல்கலைக்கழகக் காலங்களில் எழுத ஆரம்பித்து மூன்று அத்தியாயங்களுடன் முடிவுறாமல் இருந்து, பின்னர் முப்பது அத்தியாயங்களையும் தாண்டி விரிந்து, "தினக்கதிர்" வார இதழில் "காதல் வெண்ணிலா கையில் சேருமா?" என்ற தலைப்பில் தொடராக பிரசுரமாகியது. பின்னர் திருக்கோணமலையிலிருந்து கவிஞர் மாயனின் (ஸ்ரீஞானேஸ்வரன்) "மாலைமுரசு" வாரமலரிலும், கனடாவிலிருந்து வெளிவந்த "ஆதவன்" பத்திரிகையிலும் "வீணையடி நீ எனக்கு" என்ற தலைப்புடன் 2015இல் தொடர்கதையாக வெளிவந்திருந்தது. தற்போது இந்நூல் 41ஆவது மகுடம் பிரசுரமாக வெளிவந்துள்ளது.

## 16783

**வெயில் நீர்: குறுநாவல்கள்.** பொ.கருணாகரமூர்த்தி. நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (சென்னை 600018: கிளிக்டோ பிரின்ட், ஜலீல் டவர், 42, K.B.தாசன் வீதி, தேனாம்பேட்டை).

190 பக்கம், விலை: இந்திய ரூபா 240., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-91093-27-3.

இத்தொகுப்பு மூன்று குறுநாவல்களையும் குறுநாவல் (வகைமையின்) சாயல் கொண்ட மூன்று நெடுங்கதைகளையும் உள்ளடக்கியது. சூரியனிலிருந்து வந்தவர்கள், பச்சைத் தேவதையின் கொலுசுகள், வித்தகன், வெயில் நீர், பிறகு மழை பெய்தது, கொட்டுத்தனை ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. இத் தொகுப்பில் உருப்பெறும் மையக் கதாபாத்திரங்கள் பொ. கருணாகரமூர்த்தியின் மென்மையும் அங்கதமுமான எழுத்தில் தனித்தன்மை கொண்டோராகின்றனர். அவர்கள் தோற்றத்திலும் குணநலன்களிலும் மாறுபட்டவர்கள். அரசியல் - சமூக ஒழுங்குகளிலிருந்து தனிமைப்பட்டும் முரண்பட்டும் விலகியவர்கள். காசி, ஜெனிபர், நீலக்கண்களைக் கொண்ட பாலசிங்கம் என்று கதைகளில் திரண்டு நிற்கும் கதாபாத்திரங்களை உயிரோட்டமாக்குவது இந்தத் தனித்தன்மையான குணநலன்களும் மாறுபாடுகளும்தான். வெகுஜனப் போக்குகளுக்கும் மதிப்பீடுகளுக்கும் ஒழுங்குகளுக்கும் அதிர்ச்சியை அளிக்கின்றவர்களாக எழுத்தில் அக் கதாபாத்திரங்கள் உருப்பெறுகின்றனர். வெவ்வேறு நிலப்பகுதிகளைக் கண்டடைந்து புனைவுமொழியில் அமரத்துவமான சாத்தியங்களை உருவாக்கிக் காண்பிக்கிறார் பொ. கருணாகரமூர்த்தி. தனித்துவமான மனிதர்களின் வாழ்வில் அரசியல் பண்பாட்டு விழுமியங்கள் நிகழ்த்தும் அழுத்தங்களும் அதிலிருந்து துண்டுபட்டு

விடுபடும் தருணங்களும் எனச் சிலநேர ஆசுவாசங்களைக் கையளிக்கிறது பொ.க.வின் கதை உலகம். இக்கதைகள் கொடுப்புக்குள் சிரிப்பை வரவழைத்தாலும் அவை தரும் அதிர்வுகள் எளிதில் வெளிவரமுடியாத உணர்வைத் தருகின்றன.

## 16784

**ஜினா.** ஷர்மிளா. (இயற்பெயர்: ஜி.நேசமணி). கொழும்பு: ஜனமித்திரன் வெளியீடு, வீரகேசரி பதிப்பகம், தபால் பெட்டி எண் 160, 1ஆவது பதிப்பு, 1973. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).

*132 பக்கம், விலை: ரூபா 3.60, அளவு: 17.5x12 சமீ.*

*ஜினா என்ற விமானப்பணிப்பெண் பல பயங்கர அனுபவங்களைப்பெற்று மீண்டு அராபிய நாட்டுச் செல்வச் சீமான்களது அந்தப்புரத்துச் சம்பவங்களை அம்பலப் படுத்துகின்றாள். முடிவில் குடும்பவாழ்வில் இணைகிறாள். 20ஆம் நூற்றாண்டுப் பின்பகுதியில் வட ஆபிரிக்க நாடுகளிலும் அரேபிய நாடுகளிலும் செல்வந்தர்களின் பாலியல் வேட்கைகளைக் கூறும் நூல்.*

## 16785

**ஸலாம் அலைக்.** ஷோபாசக்தி. சென்னை 600 005: கருப்புப் பிரதிகள், பி 55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை, 1ஆவது பதிப்பு, மே 2022. (சென்னை 600 005: ஸ்ரீதுர்க்கா பிரின்டர்ஸ்).

*304 பக்கம், விலை: இந்திய ரூபா 350., அளவு: 22.5x15 சமீ.,* ISBN: *979-10-69995-71-0.*

*"அஸ்ஸலாமு அலைக்கும்" -உங்கள் மீது சாந்தி உண்டாவதாக என்று ஒருவர் கூறினால் அதற்கு "வஅலைக்கும் அஸ்ஸலாம்" -உங்கள் மீதும் சாந்தி உண்டாவதாக என்று பதில் வழங்குவது இஸ்லாமிய கலாச்சாரம். ஷோபாசக்தியின் நாவல் ஸ லாம் அலைக் பேசும் செய்திகளில் அடிநாதமாக ஒலித்துக்கொண்டிருப்பதும் இதுவே. ஆதி மனிதன் வேட்டையாடி சாப்பிட்டு உயிர் வாழ்வதற்காக ஆயுதங் களை கண்டுபிடித்தான். ஆனால், நவீன மனிதன் சகமனிதனின் உயிரைக் குடிப்ப தற்காகவும் அயல் நாடுகளை ஆக்கிரமித்து அடிமைப்படுத்தி வைத்திருப்பதற்காகவும் ஆயுதங்களை கண்டுபிடித்தவண்ணமும் உற்பத்திசெய்தவாறும் வாழ்கின்றான். இந்த ஆயுதங்கள் உற்பத்தி செய்தது அகதிகளைத்தான். அவ்வாறு உலகெங்கும் அலைந்துழலும் அகதிகளின் கதைதான் ஷோபா சக்தியின் "ஸலாம் அலைக்". தன்னடையாளம் அழித்து நிற்கும் அருவுருவங்கள் பற்றி நூலின் இருமுனைகளி லிருந்தும் தொடங்கிச் சொல்லப்படும் கதை வளையம் இது. இதன் மேலட்டையின் ஒருபக்கம் நீலம் பின்னட்டை சிவப்பு. நீலப்பக்கத்தில் தொடங்கும் பகுதி 142 ஆவது பக்கத்தில் முடிகிறது. சிவப்பு பக்கத்தில் தொடங்கும் பகுதி 162ஆவது பக்கத்தில் முடிகிறது. புத்தகத்தை இருபுறத்திலிருந்தும் படிக்கவேண்டும். ஆனால், இரு முனைகளிலிருந்தும் தொடங்கும் நாவல் ஒரு புள்ளியில் இணைகிறது. எந்தப்பக்கத்திலிருந்து வாசித்தாலும், முழுமை பெற்ற நாவலின் வடிவமாகவே*

அமைகின்றது. இலங்கை வடபுலத்தில் மண்டை தீவில் நயினாதீவைச்சேர்ந்த ஒரு சாத்திரியாருக்கும் வெளியுலகம் அறியாத ஒரு அப்பாவிப் பெண்ணுக்கும் அக்கா, தங்கை என இரண்டு சகோதரிகளுக்கும் நடுவே பிறந்த ஜெபானந்தனின் கதையே ஸலாம் அலைக். ஆனால், இங்கே ஜெபானந்தனைச் சுற்றி நடக்கும் சம்பவங்கள், அவன் ஊரிலும், இடம்பெயர்ந்து உயிரைப்பாதுகாக்க ஓடி ஒளித்துத் திரியும் கிராமங்களிலும் பற்றைக்காடுகளிலும் இயக்கத்தின் தடுப்பு முகாமிலும், அங்கிருந்து தப்பிவந்து கொழும்பு ஜிந்துப்பிட்டியிலிருந்து தலை மாற்றப்பட்ட கடவுச்சீட்டு மூலம் தாய்லாந்துக்கு தப்பிச்சென்று, அங்கிருந்து பிரான்ஸுக்கு ஓடிய பதின்ம வயது இளைஞனின் அலைந்துழல் வாழ்வே இந்நாவலின் கதை. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70073).

## 894.8 (51) மொழிபெயர்ப்பு நாவல்கள், குறுநாவல்கள்

### 16786

**தேத்தண்ணி (தே கஹட்ட).** உபாலி லீலாரட்ண (சிங்கள மூலம்), இரா.சடகோபன் (தமிழாக்கம்). கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 661/665/675 பி.டி.எஸ். குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1ஆவது பதிப்பு, 2021. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

xx, 21-408 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 1250., அளவு: 23x15 சமீ., ISBN: 978-624-00-1540-0.

"தே கஹட்ட" என்ற பெயரில் உபாலி லீலாரட்ண சிங்களத்தில் எழுதிய நாவலின் தமிழாக்கம் இது. இந்நாவல் 1970களிலான காலப்பகுதியில், மலையகத் தோட்டத் தொழிலாளர்தம் வாழ்க்கைநிலை, அரசியல், தொழில், சமூகம், பொருளாதாரம், பொழுதுபோக்கு எனப் பலதரப்பட்ட விடயங்களையும் கதாபாத்திரங்கள் மூலமாக, சுவையாக விபரித்து, அப்பின்னணியில், கதையை விறுவிறுப்பாகக் கொண்டு செல்வதை அவதானிக்க முடியும். கோபால் என்ற இளம் தொழிற்சங்கப் போராளியின் கதை. மலையகத்தில் பிறந்து வளர்ந்து மலையக மக்களின் உரிமை களுக்காகக் குரல் கொடுத்து போராட்டங்கள் நடத்தி மாண்டுபோன ஒரு தியாகியின் கதையாக "தேத்தண்ணி" அமைந்துள்ளது. வழக்கமான மலையக தோட்டத் தொழிலாளி ஒருவனின் சமூகப் பிரச்சினைகளுக்கப்பால் அவனது தொழிற்சங்க பிரச்சினைகள் யாவை, அரசியல் உரிமைகள் எவை, அவற்றை எவ்வாறு பெற்றுக் கொள்வது, இவர்களுக்கு மத்தியில் இருக்கும் தொழிற்சங்கங்களும், அரசியல் கட்சிகளும், அவற்றின் தலைவர்களும் இவர்களை எவ்வாறு கசக்கிப் பிழிந்து சுரண்டி, வஞ்சித்து தாம் சுகபோகமாக வாழ்கிறார்கள் என்பதை எல்லாம் அம்பலப்படுத்துவதில் இந்த நாவல் மிக முற்போக்கானதாக தனது ஆணித்தரமான கருத்துகளை முன்வைக்கின்றது.

## 894.8(6) பொது இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வு

### 16787

**அங்கையன் கயிலாசநாதன் (கட்டுரைத் தொகுப்பு).** இராசலட்சுமி கயிலாசநாதன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 4: இராசலட்சுமி கயிலாசநாதன், அங்கையன் பதிப்பகம், H ½, அரச தொடர்மாடி, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2010. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர். இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).

xii, 93 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 18x12.5 சமீ.

மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அங்கையன் கயிலாசநாதன் (வை.அ.கயிலாசநாதன் 14.8.1942-5.4.1976) 34 ஆண்டுகளே வாழ்ந்து வாகன விபத்தில் மறைந்துவிட்டபோதிலும், இன்றும் அவரது படைப்புகளால் நினைவுகூரப்படுபவர். பல்வேறு கலை இலக்கியத் துறைகளில் தடம் பதித்தவர். அச்சுக்கலை, பத்திரிகைத் துறை, ஒலிபரப்புத் துறை ஆகியவற்றில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தவர். அவர் சம்பந்தப்பட்ட ஒன்பது கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. கடற்காற்று நாவல் பற்றி, நினைவாஞ்சலிகள் காலத்துக்குக் காலம், அங்கையன் கவிதைகள் பற்றி, அங்கையன் சிறுகதைகள் பற்றி, செந்தணல் நாவல் பற்றி, சிட்டுக்குருவியும் வானம்பாடியும் நாவல் பற்றி, மறைந்து 25 வருங்கள் கழிந்தபின், அங்கையன் கயிலாசநாதன் படைப்புகள் (இலக்கியக் கருத்தரங்கில் கேட்டவை), ஏனைய சில தகவல்கள் ஆகிய ஒன்பது ஆக்கங்கள் இ.நாகராஜன், நவீனன், சில்லையூர் செல்வராசன், ரிஜ்வே திலகரத்ன, கே.எஸ்.நடராசா, என்.சண்முகலிங்கன், அ.சண்முகதாஸ், இ.முருகையன், கே.விஜயன், செ.யோகநாதன், கே.எஸ்.சிவகுமாரன், காவலூர் இராசதுரை, செங்கை ஆழியான், சி.சிவசேகரம், சுபத்ராமணியன், ஆகலைவன், மேமன்கவி, மு.தயாபரன், பத்மா சோமகாந்தன், மா.பாலசிங்கம் போன்ற பல்வேறு இலக்கியவாதிகளால் எழுதப்பட்ட கருத்துரைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

### 16788

**ஆறாம் நிலத்திணை.** குரு.அரவிந்தன். திருச்சி 620 003: இனிய நந்தவனம் பதிப்பகம், எண் 17, பாய்க்காரத் தெரு, உறையூர், 1ஆவது பதிப்பு, 2021. (சென்னை: சாய் தென்றல் பிரிண்டர்ஸ்).

224 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 150.00, அளவு: 22.5x15.5 சமீ., ISBN: 978-81-948821-9-0.

நெய்தலும் மருதமும் (26 அத்தியாயங்கள்), கள்ளிக்காடும் கண்ணீர் நாடும் (4 அத்தியாயங்கள்), ஆறாம் நிலத்திணை (2 அத்தியாயங்கள்) ஆகிய விரிவான மூன்று கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது. குரு அரவிந்தனின் எழுத்து களில் தென்றலின் மென்மையும், புயலின் வன்மையும் கலந்து வீசுகின்றன. நகைச்சுவைச் சிற்றாறும், கோபப் பெருங்கடலும் சங்கமித்து ஓடுகின்றன. இடம், பொருள், நிகழ்ச்சி, பாதிப்பு, மனவெழுச்சி, தன்மானம் என்னும் வழித்தடங்களில் தனது தடம் மாறாது பயணிக்கிறது இவரது எழுதுகோல். மருதம், நெய்தல்,

முல்லை, குறிஞ்சி, பாலை என்று ஐந்து திணை நிலங்களாகத் தமிழர் வாழ்ந்த இடங்களைச் சங்க இலக்கியங்களில் அடையாளப்படுத்தி இருந்தனர். நிலத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு பகுக்கப்பட்ட பாகுபாடுதான் "நிலத்திணை" என்று அழைக்கப்பட்டது. தொடக்கத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு வகை நிலத் திணிவுகளைக் கொண்டதாகத் தமிழ் இலக்கியம் இருந்தது. இடைக்காலச் சங்க காலத்தில் வாழ்ந்த தொல்காப்பியரின் தொல்காப்பி யத்தில் இந்த நான்கு திணைகளும் தான் இடம் பெற்றிருக்கின்றன. பின்னாளில் முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலை என்பதோர் படிமம் கொண்டபோது அது ஐந்தாவது திணையாகத் தமிழ் இலக்கியத்தில் கணிக்கப்பட்டது. காலத்திற்கு ஏற்ற தேவை கருதிச் சங்ககால நான்கு திணைகள் ஐந்தாக மாறும் போது, இன்றைய தேவை கருதி ஆறாக மாறுவதில் தவறில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது. இன்றைய தமிழ் இலக்கியத்தில் ஆறாம் நிலத்திணையாக பனியும் பனி சூழ்ந்த பகுதியும் "பனிப்புலம்" என்று முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இதில் முக்கியமாகப் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் பெருமளவில் வாழும் கனடா நாட்டு "பனியும் பனி சூழ்ந்த நிலமும்" குறிப்பிடத்தக்கது. இப்படைப்பிலக்கியத்தில் கட்டுரையா? புதினமா? என்று வாசிப்பவர் ஐயுறும் வண்ணம் நகர்கின்றன அத்தியாயங்கள். புலம்பெயர்ந்த தமிழரொருவர், தமது தாயகத்தில் நிகழ்ந்தவற்றை மனதில் சுமந்து பாரம் தாங்காமல் புத்தகச் சுமைதாங்கிக் கல்லில் அதை இறக்கி வைத்திருக்கிறார். ஆறாம் நிலத்திணை என்று புத்திலக்கணம் படைக்கிறார். பனியும் பனி சார்ந்த இடமும் பனிப்புலம் என்று இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளுக்கு அடுத்ததாகத் தமிழர்கள் அதிகம் வாழும் கனடா நாட்டினைக் கவனப்படுத்தி இருப்பது புதுமை. இந்நூலின் அடுத்த பகுதியாக "கள்ளிக்காடும் கண்ணீர் நாடும்" என்ற தலைப்பில் கவிப்பேரரசு வைரமுத்துவின் வைர வரிகளோடு, கட்டுரையைத் தொடங்கி, இலங்கையின் பண்புகளைக் கள்ளிக்காட்டு இதிகாசத்தோடு ஒப்புமைப்படுத்தி எழுதியிருக்கிறார்.

## 16789

**இதய தாகமே இலக்கியம் (இலக்கியக் கட்டுரைகள்).** செ.லோகராஜா. மட்டக்களப்பு: திருமதி பரமேஸ்வரி லோகராஜா, 14/3, A-4, கணக்குப்பிள்ளை வீதி, நாவற்குடா, 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2022. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496A, திருமலை வீதி).

xviii, 95 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-955-43127-4-6.

இந்நூலில் தமிழ்மாமணி லோகராஜா, இலக்கியத்தின் சுவையைப் பிளிந்தெடுத்துத் தந்துள்ளார். சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், நந்திக் கலம்பகம், முத்தொள்ளாயிரம், சாகுந்தலம் எனத் தொடரும் செந்நெறி சார்ந்த தமிழ் இலக்கியங்களிலிருந்து சுவை பட வருவனவற்றை எல்லோரும் விளங்கிக் கொள்ளும் வகையில் ஒரு அனுபவத்தின் வெளிப்பாடாய் இந்நூலிலுள்ள முப்பத்தி இரண்டு கட்டுரைகளும் அமைகின்றன.

### 16790

**ஈழத்து தமிழ் இலக்கிய வளம்.** வி.விமலாதித்தன். கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச் சங்கம், இல. 7, சங்கம் ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2021. (அச்சக விபரம் தரப்பட வில்லை).

ix, 154 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 22.5x15.5 சமீ., ISBN: 978-624-6036-00-3.

"இலங்கையின் மரபுவழித் தமிழிலக்கியம்" என்ற தொனிப்பொருளில் கடந்த 2020 நவம்பர் மாதம் 21 முதல் 30 வரை இணையவழியில் நடந்த ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகளின் தொகுப்பு இது. இலங்கைத் தமிழ் இலக்கியச் செல்நெறியில் இல்லற நொண்டி (மார்க்கண்டன் ரூபவதனன்), பஞ்சவன்னத் தூது (வ.மகேஸ்வரன்), கதிரைமலைப் பள்ளு (சோ.பத்மநாதன்), மாவைப் புராணம் (அ.சண்முகதாஸ்), வரத பண்டிதரின் குருநாதசுவாமி கிள்ளைவிடு தூ து: காலமும் கருத்தும் (க.இரகுபரன்), அர்ச்.யாகப்பர் அம்மானை (றூபி வலன்ரீனா பிரான்ஸிஸ்), புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி ஓர் அறிமுகம் (ச.மனோன்மணி), இரகுவம்மிசம்: கவிஞர்-பின்புலம்-காவியம் (ஸ்ரீபிரசாந்தன்) ஆகிய எட்டு ஆய்வுக் கட்டுரைகள் இந்நூலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

### 16791

**ஈழத்துத் தமிழியல் மரபும் மாற்றமும் (இருபதாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது): ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு.** ம.இரகுநாதன், ஈ.குமரன் (பதிப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: தமிழ்த்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு, 2022. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டேர்ஸ், இல. 10, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

xvi, 398 பக்கம், 9 தகடுகள், ஒளிப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18.5 சமீ., ISBN: 978-624-97806-7-5.

இலக்கியம், இலக்கணம், சமயமும் தத்துவமும், கலை, அறிவியல் ஆகிய பிரிவு களின் கீழ் 38 ஆய்வுக் கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. இலக்கியப் பிரிவின் கீழ் ஈழத்துப் பக்தி இலக்கிய மரபில் கல்வளை அந்தாதி: ஒரு நுனித்த பார்வை (துஹாயா பேரானந்தம்), ஈழத்துத் தமிழ் இலக்கிய மரபில் இணுவில் சின்னத்தம்பிப் புலவரின் தலப்பாடல்கள் (தயாளினி குமாரசாமி), இரகுவம்சத்தின் ஆற்றுப்படலம் ஓர் ஆய்வு நோக்கு (ஈஸ்வரநாதபிள்ளை குமரன்), 19ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியங்களில் விநாயகர் சட்டி புராணம் (ச.பத்மநாதன்), ஈழத்துப் பூதன்தேவன் பாடல்கள்: அரிய தரவுகளும் ஆய்வு நிலைப்பட்ட சொற்பதிவுகளும் (சு.சுயா), ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் சீமந்தனி புராணம்: ஓர் அறிமுகம் (கோபாலப்பிள்ளை குகன்), ஆணல்ட் சதாசிவம் பிள்ளை யின் நன்னெறிக் கதா சங்கிரகம்: ஓர் ஆய்வு நோக்கு (தருமராசா அஜந்த குமார்), இளங்கோவின் கண்ணகியும் ஈழத்துக் கண்ணகையும் (ம.இரகுநாதன்), காளி தாசரின் இரகுவம்சமும் அரசகேசரியின் இரகுவம்மிசமும்: ஓர் ஒப்பியல் நோக்கு (சிறிகலா ஜெகநாதன்), அறியப்படாத ஆய்வாளர் சி.த.சரவணமுத்துப்பிள்ளை (செ.யோகராசா), ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளையின் தமிழியற் பணிகள் பற்றிய

நோக்கு (செல்லையா திருநாவுக்கரசு, முருகையா சதீஷ்), ஈழத்து இலக்கிய மரபில் தமிழ்நாட்டு இலக்கியங்களின் செல்வாக்கு (இரா.கனகேஸ்வரி), ஈழத்துத் தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்பு (மனோன்மணி சண்முகதாஸ்), வெருகல் ஸ்ரீ சித்திர வேலாயுதர் காதல் பிரபந்தத்தில் புலப்பாட்டு மரபு (செல்வ அம்பிகை நந்தகுமாரன்) ஆகிய 14 கட்டுரைகளும், இலக்கணப் பிரிவின் கீழ் ஈழத்தவரின் இலக்கணக் கல்வி முயற்சிகள் (இரா.புவனேஸ்வரி), கூழங்கைத் தம்பிரானின் நன்னூல் காண்டிகையுரை (சிவகுமார் செரஞ்சன்) ஆகிய 2 கட்டுரைகளும், சமயமும் தத்துவமும் என்ற பிரிவில் ஆறுமுக நாவலரின் பாலபாடங்கள் காட்டும் விழுமிய சிந்தனைகள் (வ.குணபாலசிங்கம்), ஈழத்துத் திருத்தலங்கள் மீதான தேவாரப் பதிகங்கள் காட்டும் இயற்கையும் சுற்றுச் சூழலும் (மு.கிருஷா), ஈழத்து நாட்டார் வழக்குகள்: மட்டக்களப்புப் பிரதேச ஆகமம் சாரா வழிபாட்டுச் சடங்குகளையும் நம்பிக்கைகளையும் அடிப்படையாகக் கொண்ட ஆய்வு (கிருபைரெத்தினம் சர்வேஸ்வரன்), யோகக் கலை மரபில் பிரசாத ஷட்சுலோகி: சிவசங்கர பண்டிதரின் தமிழுரையை அடிப்படையாகக் கொண்டது (மு.சுவாமிநாத சர்மா), கந்தபுராண இயற்பியல் காட்சிகளை விளக்கும் 19ஆம் நுற்றாண்டு ஈழத்தமிழ் அறிஞர்களது உரைகள் (சி.யமுனானந்தா), சுவாமி ஞானப்பிரகாசரின் சிவஞானசித்தியார் சுவபக்க உரை (பொன்னுத்துரை சந்திரசேகரம்), இந்துப் பண்பாட்டின் விருத்தி நோக்கிலே இலங்கையில் தமிழ்ச் சமணம் (கௌ.சித்தாந்தன்), ஈழத்தில் ஒல்லாந்த கால இலக்கியங்களினூடாகப் புலனாகும் சமய மற்றும் சமூகச் சடங்குகள்-ஓர் ஆய்வு (ரமணியா ஜெயக்குமார்), அஸன்பே சரித்திரத்தில் புலப்படும் இஸ்லாமியப் பண்பாட்டின் பிரதிபலிப்பு (முருகையா சதீஷ்), தமிழர் தர்க்கவியற் செல்நெறியில் நியாய இலக்கணத்தின் வகிபாகம் (தி.செல்வமனோகரன்) ஆகிய 10 கட்டுரைகளும், கலை என்ற பிரிவில் ஈழத்துத் தமிழ் நாட்டுக் கூத்து வளர்ச்சியில் கிறிஸ்தவ சமயத்தின் வகிபாகம் (யே.ஹேரோசினி), ஈழத்தின் உள்ளூர்க் கூத்தரங்குகளும் அதில் ஞாபகங்கள் பெறும் முக்கியத்துவமும்-ஓர் ஆய்வு (து.கௌரீஸ்வரன்), ஈழத்துத் தமிழிசை வளர்ச்சி ஒரு வரலாற்று நோக்கு (ஸ்ரீநாகபூஷணி அரங்கராஜ்), ஈழத்தமிழர் இசை வரலாற்றில் இசைக்கருவிகள் தொன்மையும் தொடர்ச்சியும் (ஐஸ்வரியா கணேசன்), ஈழத்துத் தமிழிசைப் பாடல்களின் வளர்ச்சி நிலை (த.றொபெட் அருட்சேகரன்), ஈழத்தமிழர் தாளக்காவடி ஆடல் (திருமதி.அ.கிருபை ராஜா) ஆகிய 6 கட்டுரைகளும், அறிவியல் என்ற பிரிவில், யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டில் மரபுவழிச் சீர்மியம் (கி.விசாகரூபன்), ஆற்றுப்படுத்தல் நோக்கில் வியாகுலப் பிரசங்கம் (நீ.மரிய நிறோமினி), சைவப் பண்பாட்டில் சோதிடமும் வைத்தியமும்: ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த சோதிட, வைத்திய நூல்களை அடிப்படையாகக் கொண்ட நோக்கு (விக்னேஸ்வரி பவநேசன்), ஈழத்து இந்துப் பண்பாட்டுக்குரிய சித்த மருத்துவப் பாரம்பரியத்தில் அமிர்தசாகரம் பெறும் முக்கியத்துவம் (திருச்செல்வம் கிஷாந்தின்), சித்தர் கூறும் சித்த மருத்துவம் ஈழத்தில் எழுந்த சித்த மருத்துவ நூல்ககளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு (மதுராஜினி சந்திரகுமார்), யாழ்ப்பாணத்தில் மருத்துவர் சாமுவேல் கிரீன் அவர்களின் தமிழ் மருத்துவப் பணி (கணேஸ் ஸ்ரீதரன், அன்புச்செல்வி ஸ்ரீதரன்,

*சபாரட்ணம் கணேசன்), ஆறுமுக நாவலரின் அறிவியல் சிந்தனை (செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்) ஆகிய 7 கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.*

## 16792

**உயிரினங்களின் உடலினுள் ஆவி ஆன்மா என ஒன்றில்லை.** *க.சிவனடியான். வட்டுக்கோட்டை: டாக்டர் க.சிவனடியான், சங்கரத்தை, 1ஆவது பதிப்பு, 2021. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*116 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x15.5 சமீ.*

*நூலாசிரியர் சிவனடியான் முன்னர் 1993இல் என் கையெல்லாம் இரத்தம் என்ற கதைத் தொகுதியையும், 2013இல் நெருப்பாற்றில் ஒரு நீலோற்பலம் என்ற கதைத் தொகுதியையும் எழுதி வெளியிட்டவர். இந்நூல் கடந்த இரண்டாண்டுகளுக்கு மேலாக ஆசிரியர் எழுதிய 26 கட்டுரைகளின் தொகுப்பாக மலர்ந்துள்ளது. உயிரினங்களின் உடலில் ஆவி ஆன்மா என ஒன்றில்லை, மொழிப்பற்று வேண்டாம், தாவர உணவே மோசமான உயிர்க் கொலை, பசு பக்திக்குரியதா பரிதாபத்துக் குரியதா?, மதப்பற்று வேண்டாம், கற்புணர்வின் காரணம் ஒழுக்க உணர்வு மட்டுமல்ல, தம்பதிகள் தாம்பத்தியத்தைத் தவிர்க்கக் கூடாது, தவமாய்த் தவமிருந்து, இருக்குமிடத்தில் இருந்தால்தான், புதுப்புது வெளியீடுகள், ஓரினச் சேர்க்கை ஒரு உடலியற் குறைபாட்டு நோய், உலகில் போர் என்றும் வேண்டாம், குற்றங்களை மறைக்கவா கோயில்கள்?, பிறக்கப்போகும் குழந்தையின் பாலினத்தைத் தீர்மானிப்பது ஆண் மட்டுமே பெண்ணிற்குப் பங்கில்லை, பிரபஞ்சத்திலிருந்து பூமியைப் பாருங்கள், கடவுள் இல்லாத கோவில் வேண்டும், சமயங்களும் சமூக விரோதங்களும், புதுப்புது வடிவில் பலப்பல கடவுள்கள், மனிதன் உருவான வரலாறு, காதலின் பாதையும் அதன் பல்வேறு பரிமாணங்களும் விளைவுகளும், தவறான கருத்துக்களும் முடிவுகளும், இன்றைய உலகில் அரசியல்வாதிகள், தற்காலக் குடும்பங்கள், மனிதனுக்கு முன் கடவுள்கள் சமமில்லை, பெண்மையின் மயானங்கள், காதலும் கடந்துபோகும் சாதல் ஒன்றே காத்திருக்கும் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.*

## 16793

**எழுத்தின் இயங்கியல்.** *ந.மயூரரூபன். வல்வெட்டித்துறை: மீளுகை-2, பழைய பொலிஸ் நிலைய வீதி, வல்வெட்டி, 1ஆவது பதிப்பு, மாசி 2022. (யாழ்ப்பாணம்: ஆகாயம் பதிப்பகம், இமையாணன், உடுப்பிட்டி).*

*(6), 118 பக்கம், விலை: ரூபா 420., அளவு: 21x14 சமீ.,* ISBN: *978-624-99181-3-9.*

*இந்நூல் எழுத்தின் இயங்கியலையும் அது தொடர்பான விமர்சனங்களுக்கான பதிலையும் வெளிப்படுத்துவதோடு விமர்சனம் என்னும் ஒற்றைச் சொல்லின் வழி, எழுத்தை-கலைப்பிரதியின் பல் பரிமாணத்தை விளங்கிக்கொள்ளாது புறங்கையால் தட்டிவிட்டுச் செல்வோருக்கு படைப்பாளியின் உழைப்பை அதன் பெறுமானத்தை வெளிப்படுத்துகின்றது என்கிறார் விரிவுரையாளர் தி.செல்வ மனோகரன். ஒரு பிரதி கொண்டிருக்கும் இயங்கியலை புரிந்துகொள்வதற்கு*

வழிகாட்டியாகவும் இந்நூல் அமைகின்றது. இதில் கருத்துருவமும் பிரக்ஞையும், உளவியல் உருவாக்கம், உடல், மொழி, வரலாறு, இலக்கியத்தன்மை, கோட்பாடு, விமர்சனம், ஆரம்பித்தல், அருவுருவாய் ஆகிய தலைப்புகளில் இதிலுள்ள கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. ந.மயூரரூபன் (1978-) தொன்னூறுகளின் பிற்பகுதியிலிருந்து எழுதி வருகிறார். யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு அம்பனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் வல்வெட்டியில் வசித்து வருகிறார். சிறுகதை, கவிதை, கட்டுரை, நாடகம், விமர்சனம் ஆகிய துறைகளில் இயங்கிவரும் இவர், இதுவரை சமூகப்பிரச்சினைகள்: சில சமூகவியல் குறிப்புகள் (2012), நீயுருட்டும் சொற்கள்-கவிதை (2012), சொற்குறியம்-கட்டுரை (2013), மரத்தில் தொங்கும் பாம்பு-சிறுகதை (2016), புனைவின் நிழல்-சமூகவியல், அமைப்பியல், இலக்கியம் (2018) ஆகிய தொகுப்புகளை வெளியிட்டிருக்கிறார்.

### 16794

**ஒரு புன்னகை போதும்.** வாணமதி. தமிழ்நாடு: ஓவியா பதிப்பகம், 17-13-11, ஸ்ரீராம் கொம்பிளெக்ஸ், காந்தி நகர் பிரதான சாலை, வத்தலகுண்டு 624 202, திண்டுக்கல் மாவட்டம், 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2016. (சென்னை 600 116: ஏ.கே.எல் பிரின்டர்ஸ்).

96 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21x14 சமீ.

ஐரோப்பிய நாடுகளின் வாழ்வியலில் உள்ள நல்ல தன்மைகளை எடுத்துக் கூறி பகுத்தறிவுசார் நம்பிக்கையில் வாழப்பழகுவோம் என்று நம்மை அழைக்கும் வாணமதி இலங்கையில் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பின்னாளில் தமிழகத்தில் வாழ்ந்து கல்வி கற்று, 1999 நவம்பரில் சுவிட்சர்லாந்துக்குப் புலம்பெயர்ந்தவர். 2014 முதல் எழுதத் தொடங்கிய இவரது படைப்பாக்கங்களில் தேர்ந்த 21 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. கனவுகள் இலவசமா?, முகமூடி முகம், புரிந்தும் புரியாமலும், காலத்தின் மதிப்பு, நம்பிக்கையின் அடிப்படை, உறவு என்னும் அமைப்பு, தனிமைச் சிறை, மொழி என்னும் அடையாளம், பெண் எனும் நாணல், நரையும் திரையும், பைத்தியக்காரர்களின் சிந்தனை, இயற்கையின் செயல், ஒரு சிறு புன்னகை, ஒரு கூரையின் கீழ், ஒரு வடிவம் சமைத்து, எது நமது கலாச்சாரம்?, பாலியல் யார் பிழை?, கைகோர்த்திட வா தோழி, நன் என்ற நம்பிக்கை, ஒரு புன்னகை போதும், இரட்டைக் கலாச்சாரம் ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

### 16795

**கட்டுரைச் சாரல்.** அகணி சுரேஸ் (இயற்பெயர்: சி.அ.சுரேஸ்). கனடா: சி.அ.சுரேஸ், 1ஆவது பதிப்பு, ஜுன் 2022. (கனடா: சாமந்தி இல்லம், மல்ரிசிமாட் சொலியூசன்ஸ், ஒன்ராரியோ).

333 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ., ISBN: 978-0-9869016-9-0.

இந்நூலில் ஆன்மீகக் கட்டுரைகள், அறிவியல் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள், விமர்சனக் கட்டுரைகள், நினைவுக் கட்டுரைகள், நேர்காணல்

கட்டுரைகள் என ஆறு பிரிவுகளின்கீழ் வகுக்கப்பட்டு சி.அ.சுரேஷ் எழுதிய 40 படைப்பாக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

**16796**

**கலாச்சாரக் கவனிப்புகள்.** சச்சிதானந்தன் சுகிர்தராஜா. நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2021. (சென்னை 600018: கிளிக்டோ பிரின்ட், Clicto Print, Jaleel Towers, 42, K.B.Dasan Road, Teynampet).

256 பக்கம், விலை: இந்திய ரூபா 300., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-91093-13-6.

இலங்கையில் பிறந்து வளர்ந்த இந்நூலாசிரியர் கடந்த 30 ஆண்டுகளாக இங்கிலாந்தின் கல்விசார் சூழலில் வாழ்கின்றார். பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் விளக்கவியல் பேராசிரியராகப் பணியாற்றிய இவர் பின்காலனித்துவம் பற்றிய அறிவுலக ஆராய்ச்சியினால் அறியப்படுகின்றார். அசாதாரண மனிதன் (2008) என்ற சிறுகதைத் தொகுதி, பண்பாட்டுப் பொற்கனிகள் (2010), நூல்கள் நூலகங்கள் நூலகர்கள் (2021) ஆகிய கட்டுரைத் தொகுதிகள் என மூன்று நூல்கள் காலச்சுவடு பிரசுரமாக முன்னர் வெளிவந்துள்ளன. இது இவரது நான்காவது நூலாகும். இந்நூலில் இங்கிலாந்தும் நானும், இங்கிலாந்தில் மிஸ்டர் இட்லி, நீங்கள் புலியா?, மண்டேலாவும் மைக்ரோவேவும், ஆங்கில ஆஸ்பத்திரி அனுபவங்கள், தினசரிப் பத்திரிகையும் தினசரிப் பழக்கமும், சோதனைக் காலம், ஆங்கில வளாகங்கள்: சில நடப்புகள், மேற்கத்தியப் பல்கலைக்கழகமும் இனவாதமும், சுதந்திரச் சந்தையில் சுவரொட்டிப் பாவை, படிவார்ப்புகள் சிதைந்த கதை, தேவன் உங்களோடு-தத்வமஸி, சாலொமோன் ராஜா நுகர்ந்த இந்திய சந்தனத் தைலம், அக்பருக்காகத் தலைப்பாகை கட்டிய இயேசுநாதர், தேவனின் மகிமை கீழ்த்திசையில், ஐக்கிய இராச்சியத் தேர்தல்: குழப்பமும் சிக்கலும், ஐரோப்பிய வாக்கெடுப்புகள்: சில அவதானிப்புகள், டொனால்ட் டிரம்பும் வின்ட்ரிப்பும், அமெரிக்கத் தேர்தல்: சில அவசரமான அவதானிப்புகள், பயங்கரவாதம்: சுருக்கக் குறிப்புகள், புனிதப் போராளிகள், ஒசாமா பின் லாடன் என்னும் பயனுள்ள பகைவர், எகிப்தியப் புரட்சி: அரபு நாடுகளின் பின்-கருத்தியல் போராட்டம், வகுப்பறைகள் வதைத்தளமாக மாறிய கதை, உதைபந்தாட்ட உலகக் கோப்பை: சில பழைய சம்பவங்கள், சில பதிய சங்கடங்கள், ஒலிம்பிக்ஸின் கதையும் சில துணைக் கதைகளும் சரிசமநிலையற்ற ஐந்து வளைய விளையாட்டுகள், முடிவடைந்த நெடும் பயணம், ஜமைக்காவில் 10 ¾ நாட்கள், பட்டுச் சாலைகள், ஒரு தென்கொரிய நாட்டவருக்கு நான் கொடுத்த சாரம், பறவையைக் கண்டான் விமானம் படைத்தான், தாயிடம் மகன் கேட்க சொல்லத் தவறிய காரியங்கள், பணித்துறைஞரும் கடவுச் சீட்டும், விமானப் பயண உபாதைகள், பண்பாடும் பணித்துறைஞர்களும் ஆகிய 35 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

## 16797

**கலைப்பேச்சு: திரை-நூல்-அரங்கு.** *ரூபன் சிவராஜா. சென்னை 600 042: யாவரும் பப்ளிஷர்ஸ், 24,* Shop No B, S.G.P. Naidu Complex, *தண்டீஸ்வரம் பஸ் தரிப்பு, பாரதியார் பூங்காவுக்கு எதிராக, வேளச்சேரி பிரதான சாலை, 1ஆவது பதிப்பு, மே 2021. (சென்னை 600 042: யாவரும் பதிப்பகம்).*

*262 பக்கம், ஒளிப்படங்கள், விலை: இந்திய ரூபா 310., அளவு: 21.5*x*14 சமீ.,* ISBN: *978-81-953434-5-4.*

*"இக்கட்டுரைகள் நான் வாசித்த நூல்களிலிருந்து சில, பார்த்த அரங்க வெளிப்பாடு களிலிருந்து சில, திரைப்படங்களிலிருந்து சில பற்றிய அறிமுக-விமர்சனப் பார்வைகள். பெரும்பாலானவை 2014-2020 வரையான காலப்பகுதியில் எழுதப் பட்டவை. சில கட்டுரைகள் 2010-2012 காலப்பகுதியில் எழுதப்பட்டவை. காக்கைச் சிறகினிலே, தினக்குரல், பொங்கு தமிழ் இணையம், தமிழர் தளம், தாய்வீடு, புதிய பரிமாணம் இணையம், நடு இணைய சஞ்சிகை ஆகியவற்றில் வெளிவந்தவை. அத்தோடு முகநூலில் எழுதிய சில குறிப்புகளும் உள்ளடக்கப் பட்டுள்ளன" (நூலாசிரியர் முன்னுரையில்).*

## 16798

**காக்கா கொத்திய காயம்.** *உமாஜி (இயற்பெயர்: உமாசுதன் கிருபாகரன்). கொழும்பு:* Yuva Production (Pvt) Ltd, 69/18, Templer's Road, Mount Lavinia, *1ஆவது பதிப்பு, 2018. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*283 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21*x*14 சமீ.,* ISBN: *978-955-35746-0-2.*

*உமாஜி எழுதிய "காக்கா கொத்திய காயம்" ஓர் வாலிபனின் நிலம் மீதான நினைவு களின் தொடர்ச்சி என்று கொள்ளலாம். ஈழப் போரின் இறுதிப் போர் ஆரம்பித்த பின்னர் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் நிகழ்ந்த மக்களின் வாழ்வியலை இந்நூல் பேசுகிறது. ஆழமான நுண்ணுணர்வுகளைத் தொடும் புனைவு வீச்சுடனும், படைப்பாற்றலுடனும் வெளிப்படுத்தப்பட்ட பதிவுகளைக் கொண்ட நூல். ஈழத்து மக்களின் யுத்தகால வாழ்க்கையை, அதற்குள் பிறந்து வளர்ந்து அனுபவித்த ஒருவரின் பார்வையில் புரிந்துகொள்ள வாசகரை அழைத்துச் செல்கிறது இந்நூல். நாம் வாழ்ந்த மண், கடந்துவந்த வாழ்க்கை, பார்த்து வளர்ந்த, தொலை தேசங்களில் பிரிந்துவிட்ட உறவுகள், விலகிச் சென்ற, தொலைந்துபோன நண்பர் கள், நேசித்த, மறக்கமுடியாத மனிதர்கள், மறந்துவிட விரும்பும் துயர்தோய்ந்த பொழுதுகள், கொண்டாட்டமான தருணங்கள் எனப்பேசித் தீராத அனுபவங்களைச் சுமந்துகொண்டே அலையும் வாழ்வில் 2011-2014 காலப்பகுதியில் எழுதப்பட்ட சில பதிவுகளே இந்நூலில் உள்ளன. யாழ்ப்பாணம், மாவிட்டபுரத்தில் பிறந்த நூலாசிரியர் தன் வாழ்க்கையில் கால் நூற்றாண்டை இடப்பெயர்வுகளின் வழி கடந்தவர்.*

## 16799

**தமிழியல்-ஆய்வுகள்-பார்வைகள்.** சிவனேஸ் ரஞ்சிதா. பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, தை 2023. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

*90 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-624-5881-75-8.*

*இந்நூல் பல்வேறு தமிழ் இலக்கிய மாநாடுகளில் ஆசிரியரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாகும். கிளை மொழியியல் நோக்கில் முத்துமீரானின் சிறுகதைகள், தமிழ் பேச்சுவழக்குச் சொற்களில் சிங்களமொழிச் சொற்களின் தாக்கம், செங்கை ஆழியானின் படைப்புகளில் இயற்கை: வாடைக் காற்று நாவலை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு, சங்க இலக்கியங்களி னூடாக வெளிப்படும் சூழலியல் கல்வி: குறுந்தொகையை மையப்படுத்திய ஓர் ஆய்வு, பால்நிலை வேறுபாடும் இலக்கியமும்: சுமைகள் சிறுகதைத் தொகுப்பு, இஸ்லாமிய சமூகப் பண்பாட்டு ஆவணமாக இலக்கியம்: பாலமுனை பாறூக்கின் "தோட்டுப்பாய் மூத்தம்மா" குறுங்காவியத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு மீதான ஒரு நோக்கு, ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் வெளிப்படும் கல்விசார் பிரச்சினைகள்: கொங்காணிச் சிறுகதைத் தொகுப்பு மீதான பார்வை, இலங்கைவாழ் மலையகத் தமிழ்ச் சமூகப் பண்பாட்டு ஆவணமாக இலக்கியம்: கட்டுப்பொல் நாவலை மையப்படுத்திய ஒரு தேடல், பகுப்புமுறைத் திறனாய்வு அடிப்படையில் குரு அரவிந்தனின் சிறுகதைகள்: ஒரு விமர்சன நோக்கு, பழந்தமிழ் இலக்கியங்கள் சுட்டும் பெண்களும் மறுதலிக்கப்படும் பால் சமத்துவமும்: ஔவையின் நல்வழியை முன்னிறுத்திய ஒரு பார்வை, மாத்தளை சோமுவின் நாவல்களில் சமுதாயப் பிரச்சினைகள்: மூலஸ்தானம், அவள் வாழத்தான் போகிறாள்- ஒரு விமர்சனப் பார்வை, ஈழத்துத் தமிழ் இலக்கிய சூழலின் ஓர் ஆளுமையாக மிளிரும் கே.ஆர். டேவிட்டின் பாலைவனப் பயணிகள் ஒரு பார்வை ஆகிய பன்னிரண்டு ஆய்வுக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. இந்நூல் 255ஆவது ஜீவநதி வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. சிவனேஸ் ரஞ்சிதா, கெக்கிறாவையில் ஜெயந்தி நகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்.பல்கலைக் கழகத்தின் தமிழ் சிறப்புக் கலைப் பட்டதாரி. களனிப் பல்கலைக்கழகத்தில் மொழியியல்துறையில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.*

## 16800

**தற்காலிக முகவரியும் நிரந்தர முகவரியும்.** த.அபிநாத். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, மாசி 2022. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

vi, *78 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14 சமீ.,* **ISBN:** *978-624-5881-40-6.*

யாழ். இந்துக் கல்லூரி மாணவன் த.அபிநாத் அவர்களின் கன்னிக் கவிதைத் தொகுப்பு இது. தனது 11ஆவது வயதிலேயே யாழ்ப்பாணத்தில் வெளிவரும் வலம்புரி பத்திரிகைக்கு தனது கவிதையை அனுப்பி அச்சுருவில் கண்டு மகிழ்ந்தவர் இவர். இந்நூலில் அபிநாத் எழுதிய ஆன்மீகக் கட்டுரைகளும், ஈழத்துப் படைப்பாளிகளின் படைப்புகள் பற்றிய நுனிப்புல் மேய்தலாக அமையும் விமர்சனக் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள் எனப் பலதரப்பட்ட பத்தொன்பது ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. நல்லைக் குமரன் மலர், தீம்புனல், தென்னாடு ஆகிய இதழ்களில் இவை முன்னர் பிரசுரமாகியுள்ளன. விக்ரமாதித்தன்-வேதாளம் கதைகளும் மறுவாசிப்பும், காமிக்ஸ் கதைகளின் உலகம், மென்திறன்களைக் கட்டியெழுப்பும் அழகியற் பாடங்கள், குறுந்தொகை காட்டும் சங்ககாலப் பழக்கவழக்கங்கள், ஹைக்கூவின் கிளை வடிவங்கள், சோ.ப. சிறப்பிதழ் சில குறிப்புகள், இலக்கியச் செயற்பாட்டாளர் க.பரணீதரன், தொன்மப் போரியல் நுட்பங்களைப் பேசும் அற்புதமான பொக்கிசம், சித்தாந்தன் கவிதைகளில் நகரம், சி.ரமேஷ் கவிதைகளில் மதத் தொன்மம், தற்காலிக முகவரியும் நிரந்தர முகவரியும், த.ஜெயசீலன் கவிதைகளில் உவமை நயம், திரைப்படப் பாடல்களில் வித்தியாசமான முயற்சிகள், நா.முத்துக்குமாரின் தத்துவ வரிகள், திருப்பாவைப் பாடல்களில் அங்கதச் சுவையூடாய் அறிவுரை கூறும் பாங்கு, ஆர்கொலோ சதுரர், பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி, அறிவியல் தத்துவ நோக்கில் அம்பலத்தாடுவான், விருந்தோம்பல் எனும் ஒப்பற்ற சைவத் தமிழ்ப் பண்பாடு, சிலப்பதிகாரத்தில் சிகிவாகனன் ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. இந்நூல் 220ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

### 16801

**திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகள் தொகுப்பு -2.** அ.சண்முகதாஸ், ச.மனோன்மணி (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், 1ஆவது பதிப்பு, 2021, (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

xiv, 182 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-624-5911-12-7.

இந்நூலில் குறளில் பெருமை சேர்த்த உழவுத் தொழில் (கு.மிகுந்தன்), வள்ளுவர் தந்த திருக்குறளும் தமிழிசை மரபும் (சுகன்யா அரவிந்தன்), திருக்குறளும் மருத்துவமும் (விவியன் சத்தியசீலன்), திருக்குறளில் சமூக முன்னேற்றம் (சண்முகராஜா சிறிகாந்தன்), திருக்குறளில் அகப்பொருள் மரபு பேணல் (றூபி வலன்ரீனா பிரான்சிஸ்), திருக்குறளில் ஆண்மை-ஒரு நோக்கு (ச.மனோன்மணி), திருக்குறள் குறிப்பிடும் நிதிக் கருத்துக்களும் சம்ஸ்கிருத இலக்கியங்களும்- ஒப்பீட்டாய்வு (பாலகைலாசநாத சர்மா), திருவள்ளுவர் பார்வையில் செல்வம் (சு.செல்லத்துரை), திருக்குறளில் காலக்கணிப்பு (சி.ரமணராஜா), மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு (சி.யமுனாநந்தா), திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்புகள் ஒரு

மீள்பார்வை (வீரமங்கை ஸ்ராலினா யோகரத்தினம்) ஆகிய பதினொரு ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

### 16802

**தென் பொதிகைச் சந்தனமே.** செ.லோகராஜா. மட்டக்களப்பு: திருமதி பரமேஸ்வரி லோகராஜா, 14/3, A-4, கணக்குப்பிள்ளை வீதி, நாவற்குடா, 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2016. (திருக்கோணமலை: அஸ்ரா கிராபிக்ஸ்).

144 பக்கம், விலை: ரூபா 225., அளவு: 17.5x12.5 சமீ., ISBN: 978-955-43127-1-5.

இந்நூலில் இலக்கியம், கல்வியியல், சோதிடம், கோவில் வரலாறு ஆகிய விடயப் பரப்புக்குள் அடங்கத்தக்கதாக எழுதப்பட்ட ஆசிரியரின் பன்னிரண்டு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஓசை ஒலியெல்லாம் ஆனாய், தென் பொதிகைச் சந்தனமே, கவிதை காட்டும் மக்கட் பண்பு, கவியரசு கண்ணதாசனின் கவித்துவம், பயனுற வாழ்வதற்கு இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையில் சமூக நோக்கு, அதிபரின் வினைத்திறன் மிக்க முகாமைத்துவம், கல்விப் பணியில் ஆசிரியரின் பங்கு, மாணவர்களின் கற்றலில் ஏற்படும் பிரச்சினைகள், ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்களைச் சித்திபெறச் செய்வதற்குத் திட்டமிடல், ஈழத்துப் புராதன சிவன் கோயில்களும் இந்து சமயக் கோட்பாடுகளும், சோதிடக் கலையின் தாற்பரியம் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

### 16803

**தொன்மச் சிதைவும் கலையாக்க அரசியலும்: இலக்கிய விமர்சன உரையாடல்கள்.** எம்.எம்.ஜெயசீலன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 2வது பதிப்பு, 2023, 1வது பதிப்பு, 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

xxvi, 172 பக்கம், விலை: ரூபா 1900., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-747-9.

இலக்கியங்களை விமர்சனக் கோட்பாடுகளின் பின்னணியில் நோக்குவது இந்நூலின் நோக்கமாகும். நாட்டார் வழக்காறு, காவியம், நாவல், சிறுகதை, தன் வரலாறு, கவிதை ஆகிய வடிவங்கள் மாற்று வரலாறு, எடுத்துரைப்பியல், தொன்மவியல், இனவரைவியல், சமூக வரலாற்று வரைவியல், பெண்ணியம் எனக் கோட்பாடுகள் சார்ந்து நோக்கப்பட்டுள்ளன. இந்த முயற்சியை இருவகைகளில் நோக்கலாம். ஒன்று, கட்டுரையாசிரிருக்கான வாசிப்புத் தளம். இன்றைய இலக்கியச் சூழலில் நிலவும் கோட்பாடுகள் பற்றிய அறிகையை இற்றைப்படுத்தல் என்ற விடயத்தினூடாக அறிய முனைதலும் அதனை வெளிப்படுத்தலும். மற்றையது, அவர் பல்கலைக்கழக விரிவுரையாளர் என்பதால் அறிவைப் பரப்பும் நோக்கில் தமது மாணவர்களை இலக்குக் குழுக்களாக இனங்கண்டு, அவர்களுக்கான புதிய திசைகளைச் சுட்டும் வகையில் அறிமுகக் குறிப்புகளாக எழுதமுற்பட்டமை. அவ்வகையில் இந்நூலில் நாட்டார் வழக்காறும் மாற்று வரலாறும், எடுத்துரைப்பியல் நோக்கில் சிலப்பதிகாரம், தொன்மச் சிதைவும் கலையாக்க

அரசியலும், இனவரைவியலும் நாவலும், ஒப்பந்தப் புலம்பெயர்வும் யுத்தகாலப் புலம்பெயர்வும், தன்வரலாற்று எழுதுகையும் சமூக வரலாற்று உருவாக்கமும், இலங்கைப் பெண் கவிதைகளில் ஆண்களும் அதிகாரமும் ஆகிய ஏழு இலக்கிய விமர்சன ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. கண்டி, ரங்கலையைப் பிறப்பிடமாகக் கொண்ட எம்.எம்.ஜெயசீலன், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் முதுநிலை விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகிறார்.

## 16804

**தோற்றவர் வரலாறு: கட்டுரைகள்.** அ.முத்துலிங்கம். சென்னை 600077: நற்றிணை பதிப்பகம், பிளாட் எண் 45, சாய் கவின்ஸ் குமரன் அபார்ட்மென்ட்ஸ், ஸ்ரீதேவி கருமாரியம்மன் நகர், கிருஷ்ணா நகர் பிரதான சாலை, நூம்பல், ஐயப்பன் தாங்கல், 2ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2019, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2016. (சென்னை 600005: சாய் தென்றல் பிரிண்டர்ஸ்).

120 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 23x15 சமீ.

அ.முத்துலிங்கம் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இது. வாசகர் தேவை, நல்ல சிறுகதை, தமிழுக்கு ஓர் அரியணை, பூக்கள் பறப்பதில்லை, நாயும் தாயும், பழைய சப்பாத்து, எழுத்தாளரும் வாசகரும், ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ் பீடம், இளம் விதவை பெற்றோனியஸ், ராஜவீதி, குரங்குகள் ராச்சியம், ஐந்தாவது கால், வார்த்தைச் சித்தர், திரும்பிப் பார்க்கவில்லை, கிறிஸ்மஸ் தவளை, தோற்றவர் வரலாறு, ஜேசியும் வேசியும் ஆகிய கட்டுரைகளும், சிவாஜியின் குரல், பார்த்ததைச் செய்யும் திறன், வெள்ளைக்காரன், அடுத்த தலைமுறை தமிழ் இலக்கியம் படைக்குமா? ஆகிய நேர்காணல்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 68838).

## 16805

**நூல்கள் நூலகங்கள் நூலகர்கள்.** சச்சிதானந்தன் சுகிர்தராஜா. நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2021. (சென்னை 600018: கிளிக்டோ பிரின்ட், Clicto Print, Jaleel Towers, 42, K.B.Dasan Road, Teynampet).

175 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-91093-19-8.

பிரித்தானியாவில் பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் விளக்கவியல் பேராசிரியராகப் பணியாற்றிய சச்சிதானந்தன் சுகிர்தராஜா பின்காலனித்துவம் பற்றிய அறிவுலக ஆராய்ச்சியினால் அறியப்படுகின்றார். அவரது 23 கட்டுரைகளை உள்ளடக்கியதாக இந்நூல் வெளிவந்துள்ளது. அசோகமித்திரன் தந்த கதைப் புத்தகங்களின் கதை, எழுத்திலும் நேரிலும், நூல்கள்-நூலகங்கள்-நூலகர்கள், ஆறுதல் அணங்குகள், ஆறுதல் அணங்குகள்: அதிகாரம் 2, ஆங்கில அகராதியும் ஒரு வார்த்தைப் பித்தரும், மறைக்கப்பட்ட மறுக்கப்பட்ட பெண் பங்களிப்புகள், சுவடிக் கூடத்தில் சுற்றிய போதில், ஒரு கதாசிரியர் பற்றிய சின்ன நினைவுகள்,

*கடுதாசி நூல்களும் கையொப்பங்களும், ஏதாதிபத்தியங்களின் எழுத்துக்கள்: உலர்ந்த உரைநடை, அபாயகரமான அரசியல், காலஷ்னிக்கோவ் ஏந்திய கரங்கள் எழுதிய கவிதைகள்: தலிபானின் ஆழ்கருத்துச் செய்யுள்கள், இலக்கியங்களும் வசீகர வரிகளும், எச்சரிக்கை: நீங்கள் இங்கே வாசிக்கப்போவது திருடப்பட்டி ருக்கலாம், அன்னா பெர்ன்ஸின் பால்காரன், கறுப்பர்களின் காபந்துக்காரர் (அஞ்சலி: டோனி மோரிசன்), பரிசுத்தவான்கள் பாளையம், 2012இல் வெளிவந்த ஆங்கில நாவல்கள்: ஒரு தற்சார்புடைய தேர்ந்தெடுப்பு, 2013: சில ஆங்கிலப் புத்தகங்கள், 2014: சில மேற்கத்திய நூல்கள், ஐந்து நாவல்களும் ஒரு பரிகாசப் பாடலும், சில ஆங்கில அ-புனைவு நூல்கள், இரு பெண்கள் இரு நாவல்கள் ஆகிய தலைப்புகளில் இவை இடம்பெற்றுள்ளன.*

**16806**

**பாரதியாரின் உரைநடையாக்கத் திரள்: மகாகவி பாரதியார் நினைவு நூற்றாண்டுப் பன்னாட்டு ஆய்வரங்கு.** *இரா.குறிஞ்சிவேந்தன், வானவில் கே.ரவி, ஸ்ரீபிரசாந்தன் (பதிப்பாசிரியர்கள்), ஞா.பழனிவேலு, சுதர்சன் செல்லத்துரை, தெ.வெற்றிச்செல்வன் (துணைப் பதிப்பாசிரியர்கள்). தஞ்சாவூர்: அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், இணை வெளியீடு: பேராதனை: தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், சென்னை: வானவில் பண்பாட்டு மையம், 1ஆவது பதிப்பு, மார்ச் 2022. (தஞ்சாவூர்: மாணிக்கம் பிரிண்டர்ஸ்).*

*(12), 487 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x23 சமீ.*

*ஸ்ரீபிரசாந்தன், மாலன், மு.நித்தியானந்தன், எல் இராமமூர்த்தி, தா.அ.சிரிஷா, வானவில் கே.ரவி, அரங்க இராமலிங்கம், பா.இரவிக்குமார், இரா.குறிஞ்சிவேந்தன், எஸ்.ஆர்.தேவர், செல்லத்துரை சுதர்சன், மோசசு மைக்கேல், ம.இரகுநாதன், சி.தியாகராஜன், செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம், க.சங்கர், உமா அழகிரி, தி.செல்வமனோகரன், பெருமாள் சரவணகுமார், ஜெ.சுடர்விழி, எம்.எம்.ஜெயசீலன், இரா.வெங்கடேசன், ஈஸ்வரநாதபிள்ளை குமரன், ப.கல்பனா, செல்வ அம்பிகை நந்தகுமாரன், ஞா.பழனிவேலு, ஆன்யாழினி சதீஸ்வரன், த.ஆதித்தன், போ. மணிவண்ணன், து.ஜானகி, இ.சர்வேஸ்வரா, இரா.மணிமேகலை, தருமராசா அஜந்தகுமார், செ.கற்பகம், சிவகுமார் செரஞ்சன், தி.கலைஅரசி, வி.விமலாதித்தன், இரா.இந்து, த.ஜீவராசா, சந்திரிகா சுப்ரமண்யம், வேல் கார்த்திகேயன், கஸ்தூரி ரவீந்திரன், கே.கே.எப். நதா, ச.மனோஜா, க.கதிரவன், கோ.இராஜேஸ்வரி, கு.கோபிகா, சொ.அருணன், த.ஜெலானி, ஜெ.கார்த்திக், ம.கலைச்செல்வன், மா.செந்தில்முருகன், க.இலக்கியா, கி.பிருதிவிராஜ், கோ.சிவசங்கர், க.சுகுமார், மருதூரினி பொன்னுத்துரை, இரா.மாதவி, ச.கவிதா, அ.இராஜலட்சுமி, முருகையா சதீஸ், யா.சு.சந்திரா, நீ.மரிய நிறோமினி பாரதி, நா.கவிதா, பவளசங்கரி, கோ. சி.கோலப்பதாஸ், வெ.இராம்ராஜ், செ.த.ஜாக்குலின், கேசவன் சிவகுருநாதன், பா.கண்ணன், கு.விவேக், ப.செந்தில்முருகன், தீ.சி.கே.இராஜசேகர், பால சீனிவாசன், ப.சங்கீதா, க.ஹரிநாத், லெ.புவனேஸ்வரி, ச.ராதா, விஜயலட்சுமி ராஜேஸ்வரி, மா.தட்சணாமூர்த்தி, பொ.சந்திரசேகரன், இரா.சிவக்குமார், கு.சுவாமிநாத சர்மா ஆகிய கலாநிதிகளும், முனைவர்களும், பன்னாட்டுத்*

*தமிழறிஞர்களுமான பங்கேற்பாளர்களின் பாரதி சார்ந்த 83 ஆய்வுக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

## 16807

**பேராசிரியர் க.கைலாசபதியும் திறனாய்வும், பேராசிரியர் வி.செல்வநாயகத்தின் தமிழ் இலக்கிய வரலாறும் தமிழ் உரைநடை வரலாறும்.** *ஈழக்கவி (இயற்பெயர்: ஏ.எச்.எம்.நவாஸ்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, ஆடி 2018. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).*

ii, *38 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 20.5*x*14 சமீ.,* ISBN: *978-955-4676-84-8.*

*"பேராசிரியர் க.கைலாசபதியும் திறனாய்வும்" என்ற கட்டுரையும் "பேராசிரியர் வி.செல்வநாயகத்தின் தமிழ் இலக்கிய வரலாறும் தமிழ் உரைநடை வரலாறும்" என்ற கட்டுரையும் இணைந்த தொகுப்பாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் 106ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.*

## 16808

**மண் அளக்கும் சொல்.** *ஆசி. கந்தராஜா. நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, ஜுலை 2022. (சென்னை 600018:* Clicto Print, Jaleel Towers, 42 KB Dason Road, Teynampet*).*

*184 பக்கம், விலை: இந்திய ரூபா 225., அளவு: 22.5*x*15 சமீ.,* ISBN: *978-93-5523-057-7.*

*சாத்தானின் விரல்கள், முட்டிக் கத்தரிக்காய், வரகு மான்மியம், மரங்களும் நண்பர்களே, வீரசிங்கம் பயணம் போகிறார், ஒட்டுக் கன்றுகள், என்.பி.கே., தம்பித்துரை அண்ணையும் பேரனும் ஆறு ஐமிச்சங்களும், கறுத்தக் கொழும்பான், கற்பக விருட்சம், பூக்களே காதல் செய்யுங்கள், வெடுக்குப் பத்தன், சீன நாட்டு நண்பரும் எருமை மாட்டுப் புல்லும் ஆகிய தலைப்புகளில் ஆ.சி.கந்தராஜா அவ்வப்போது எழுதிய 13 கட்டுரைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இக்கட்டுரைகள் தாவரங்களைப்பற்றிப் பேசுகின்றனவெனப் பொதுவாகக் குறிப்பிட்டாலும் தாவரங்களை நிமித்தமாகக் கொண்டு மனிதர்களின் மெய்யு ரைக்கும் ஒரு நூல் இது என்பதே பொருத்தமானதாகும். மண் தான் தாவரங்களையும் வளர்க்கின்றது. மனிதர்களையும் காக்கின்றது. ஒருவகையில் பார்த்தால், சில கூடுதல் அறிவுடன் மானிடனும் ஒரு இடம்பெயரும் தாவரம் தான். நூலாசிரியர் ஆசி. கந்தராஜா, அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழ்ந்துவருகிறார்.*

## 16809

**மலையக பரிசுக் கட்டுரைகள்.** *இர.சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு. கொழும்பு 8: இர.சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு,* BQ 2/2, *மங்கள வீதி, மனிங் டவுன் வீடமைப்புத் திட்டம், 1ஆவது பதிப்பு, ஜுலை 2000. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48* B, *புளுமெண்டால் வீதி).*

viii, 166 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14 சமீ.

அமரர் இர.சிவலிங்கம் (17.05.1932-09.07.1999) அவர்களின் முதலாவது நினைவு தினத்தையொட்டி நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பரிசுபெற்ற கட்டுரை களின் தொகுப்பு. பெருந்தோட்டத்துறை தமிழ் இளைஞர்: இன்றும் நாளையும் (29.7.2000அன்று கொழும்பில் நடைபெற்ற அமரர் இர.சிவலிங்கத்தின் நினைவாக பேராதனை பல்கலைக்கழக பொருளியல்துறைப் பேராசிரியர் மு.சின்னத்தம்பி அவர்கள் ஆற்றிய நினைவுப் பேருரை), மலையக மக்களின் உரிமைப் போராட் டங்கள் (இரா.ஜெ.ட்ரொஸ்கி), ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் மலையக இலக்கியம் (லெனின் மதிவானம்), ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் மலையக இலக்கியம் (சிவன்செயல் இராஜலட்சுமி), மலையகப் பெண்களும் பெண்ணிலை வாதமும் (த.தர்சினி), குடியுரிமைப் பறிப்பும் மலையக சமுதாயத்தில் அதன் தாக்கமும் (செல்லத்துரை கோகிலவர்த்தினி), இன்றைய மலையக இளைஞர்களும் சமூகப் பொறுப்புணர்வும் (க.தமயந்தி) ஆகிய கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கட்டுரைப் போட்டியில் பங்குபற்றியோர், அமரர் இர. சிவலிங்கம் நினைவுதின கட்டுரைப் போட்டி-2000 தொடர்பான வீரகேசரி பத்திரிகை விளம்பரம், அமரர் இர.சிவலிங்கம் ஞாபகார்த்த குழுவினரின் விபரம் ஆகியன பின்னிணைப்புகளாகத் தரப்பட்டுள்ளன.

### 16810

**மறக்க முடியாத என் இலக்கிய நினைவுகள்.** மருதூர் A. மஜீத். கல்முனை: இஸ்லாமிய நூல்வெளியீட்டுப் பணியகம், 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 1990. (கல்முனை: குட்வின் ஓட்டோ அச்சகம்).

171 பக்கம், விலை: ரூபா 46.00, அளவு: 19.5x13.5 சமீ.

அறையில் ஆடினேன், நடிப்பும் துடிப்பும், கட்டுரையும் கையெழுத்துப் பத்திரி கையும், கல்கண்டும் கரும்பும், ஊருக்கு உழைக்க வெளியூருக்குப் பிரயாணம், கராட்டியும் கண்டியன் டான்சும், அட்டாளைச்சேனையில் ஆசிரிய பயிற்சி, இந்தியப் பயணமும் இலக்கியச் சந்திப்பும், அண்ணலின் அருகிருந்தேன், கலைமுரசும் கலைஞர்களும், அடக்கமான அறிவுத்திரட்டு, கலையும் கலங்கரை விளக்கும், தட்டிக் கனியவைப்பது இனிப்பதில்லை, கதைக்கான கருப்பொருள், சங்கத்துள் ஏற்பட்ட பங்கம், புலவரும் பண்டிதரும், கனவும் கட்டுரையும், பட்டியல் தயாரிப்பும் எழுத்தாளர்களின் பரிதவிப்பும், கார்ல் மார்க்ஸ்-ஏங்கல்ஸ் நட்பிற்கு இலக்கணமான நண்பர்கள், நலிந்துவரும் நாட்டார் பாடல்கள், பட்டமும் படைப்பாளியும், எழுத்தாளர்களும் அவர்களது மனைவியரும், கவியரங்கும் கருத்து வேறுபாடும், நட்பும் நண்பர்களும், நினைத்ததொன்று நடந்ததொன்று, பதியத்தளாவையில் ஒரு பாரூக், புரிந்துணர்வோடு கூடிய புரவலர்கள், பாராட்டும் பழிவாங்கலும், உடுக்கை இழந்தவனுக்கு உதவினேன், கிஸ்ஸாவும் மசாலாவும், அம்பலத்தில் ஆடுகிறோம் ஆகிய 31 தலைப்புகளில் எழுதப்பட்ட இலக்கியக் கட்டுரைகள் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10246).

**16811**

**வானமற்ற வெளி: கவிதை பற்றிய கட்டுரைகள்.** பிரமிள் (மூலம்), கால சுப்ரமணியம் (தொகுப்பாசிரியர்). திருச்சி மாவட்டம்: அடையாளம் வெளியீடு, 1205/1, கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621310, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2004. (சென்னை: மணி ஓப்செற்).

248 பக்கம், விலை: இந்திய ரூபா 105., அளவு: 22x14 சமீ., ISBN: 81-7720-033-x.

புதுக்கவிதையின் முன்னோடிகளுள் ஒருவரான பிரமிள் எழுதிய கவிதை பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு. கவிதைக் கோட்பாடுகள், உத்திகள் முதலியவற்றைப் பேசும் இக் கட்டுரைகள், கவிதை வளம், சுயேச்சா கவிதை, கலைக்கிழவர் பிச்ச மூர்த்தி, பாரதி கலை, வள்ளியும் சாட்டர்லீயும், புதுப்பாதை வகுக்கும் கவிஞன், விடுதலைச் சிறகு, வாழ்வுநெறித் திறவுகோல், புகைக்காளான் அனுபவங்கள், புதுவானம், கவித்வம், கவிதையும் மரபும், பிச்சமூர்த்தியின் இலக்கிய ஸ்தானம், தர்சனம், கண்ணாடியுள்ளிருந்து-ஒரு பதில், வானமற்ற வெளி, குழூவும் காலா வதியும், கவிப்பொருளும் சப்தவாதமும், கைப்பிடியளவு கடல்-முன்னுரை, வேலி மீறிய கிளை-முன்னுரை, Tamil Poetry of the Seventies: The Thematic Background, ஊர்த்வ யாத்ரா-முன்னுரை, தடுக்கி விழுந்த நெடும்பயணம், மேல்நோக்கிய பயணம்-முன்னுரை, மின்னற் பொழுதே தூரம்-முன்னுரை, கருக்களம், உயிர் மீட்சியைத் தொடரும் காற்றின் பாடல், எஸ்ரா பவுண்டின் எதிர்ப்புக் கவிதைகள், லட்சியத்தின் பரிமாணங்கள், உதிரி இலைகள், மர்மப் பாட்டி ஔவை, அதிரடிக் கவிதைகள் - முன்னுரை, மீன்கள் நடுவில் சில நட்சத்திரங்கள், மேலே சில பறவைகள்- முன்னுரை, காளமேகம் ட்ரிப் ஆகிய 35 தலைப்புகளில் எழுதப் பட்டுள்ளன.

**16812**

**விடயம் அறிந்தவர்கள் கணிப்பில் கே.எஸ்.சிவகுமாரன்.** கே.எஸ்.சிவகுமாரன். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2021. (பருத்தித் துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

iv, 56 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x15.5 சமீ., ISBN: 978-624-5881-11-6.

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வெளிவரும் ஜீவநதி சஞ்சிகையின் ஐப்பசி 2011 இதழ், கே.எஸ்.சிவகுமாரனின் 75ஆவது வயது நிறைவினை நினைவுகூரும் வகையில் சிறப்பிதழாக வெளியிடப்பட்டிருந்தது. அவ்விதழில் ஈழத்து இலக்கிய அறிஞர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள் எனப் பலரும் திறனாய்வாளரும், இலக்கியவாதியுமான கே.எஸ்.சிவகுமாரன் அவர்களின் வாழ்வும் பணியும் பற்றி விரிவான கட்டுரைகளை எழுதியிருந்தார்கள். அவர்களின் கணிப்பில் இடம்பெறும் சாரத்தை மாத்திரம் இந்நூலில் கே.எஸ்.சிவகுமாரன் அவர்களே தொகுத்து வழங்கி யுள்ளார். அவ்வகையில் க.பரணீதரன் (ஜீவநதி ஆசிரியர்), த.கலாமணி, மானா மக்கீன், அன்புமணி, க.தங்கேஸ்வரி, அ.யேசுராசா, ஊரெழு அ.கனகசூரியர், ஏ.என்.கிருஷ்ணவேணி, அ.சாந்தன், அந்தனி ஜீவா, மேமன் கவி, வஸீம் அக்ரம்,

மன்னார் அமுதன், நாச்சியாதீவு பர்வீன், எம்.கே.முருகானந்தன், தெணியான், மு.சிவலிங்கம், சண்முகம் சிவலிங்கம், ஏ.இக்பால், வதிரி சி.இரவீந்திரன், புலோலியூர் வேல் நந்தகுமார், வெலிப்பன்னை அத்தாஸ், எஸ்.தில்லைநாதன், எம்.ஏ.நுஃமான், சோ.சந்திரசேகரம், சபா. ஜெயராசா, வ.மகேஸ்வரன், செ.யோக ராசா, இ.இராஜேஸ்கண்ணன், கனகசபாபதி நாகேஸ்வரன், எஸ்.விஸ்வநாதன், தம்பிஐயா தேவதாஸ் ஆகிய 32 பிரமுகர்களின் நோக்குகள் இங்கு பதிவு செய்யப் பட்டுள்ளன. இந்நூல் 192ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

## 16813

**வீட்டு எண் 38/465.** கவிதா லட்சுமி. சென்னை 600 042: யாவரும் பப்ளிஷர்ஸ், 24, Shop No B, S.G.P. Naidu Complex, தண்டீஸ்வரம் பஸ் தரிப்பு, பாரதியார் பூங்காவுக்கு எதிராக, வேளச்சேரி பிரதான சாலை, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2022. (சென்னை 600 042: யாவரும் பதிப்பகம்).

118 பக்கம், ஒளிப்படங்கள், விலை: இந்திய ரூபா 150., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-92876-57-8.

கவிதா லட்சுமி ஈழத்தின் வடபுலத்தில் குரும்பசிட்டியை பிறப்பிடமாகக் கொண் டவர். பன்னிரண்டாவது வயதில் புலம்பெயர்ந்து தற்பொழுது நோர்வே நாட்டில் வசித்துவருகிறார். கவிதை, இலக்கியம், நடனம், மொழிபெயர்ப்பு, அரங்கியல் என்று பல களங்களில் இயங்குபவர். ஆறு கவிதைத் தொகுப்பு, ஒரு சிறுகதைத் தொகுப்பு ஆகியவற்றை இதுவரை வெளியிட்டுள்ள இவரது கட்டுரைகளின் தொகுப்பு இந்த நூல். இதில் கவிதா லட்சுமி காக்கைச் சிறகினிலே (தமிழகம்), தாய்வீடு (கனடா) ஆகிய ஊடகங்களில் எழுதிய பன்னிரு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. "காலனித்துவம் பெண் யானை" (வேலைப்பணிக்கர் ஒப்பாரி: ஈழத்து இலக்கியத்தை முன்வைத்து ஒரு வரலாற்றுப் பார்வை), "நான்கு படைப்பு களும் ஒரு கேள்வியும்" (ஒரு பேசுபொருள் சார்ந்த லட்சுமி குறும்படமும் பிற மூன்று திரைப்படங்களும் - Lakshmi, The Bridges of Madison County, Roman Holiday, Doll's House), "வீட்டு எண் 38/465" (தேவதாசி மரபில் வந்த ஒரு நடனக் கலைஞருட னான சந்திப்பு-வாழ்வும் வலிகளும்), "மரபுக் கவிதை-புதுக்கவிதை-பின்நவீன கவிதை" (தமிழ் மரபுவழிக் கவிதைகளில் இருந்து பின்நவீன கவிதைகள் வரையிலான ஓட்டமும் அதன் இயங்குநிலங்கள் மற்றும் இயங்குநிலைகள் பற்றிய பார்வையும்), "வில்லியம் சோமர்செட் மேஹாம் William Somerset Maugham எழுதிய சிறுகதை" (The Colonel's Lady சிறுகதை கையாண்டிருக்கும் ஆண் பெண் உளவியல்), "The Great Indian Kitchen- இது சமையற் சுமை பற்றியதல்ல" (மலையாளத் திரைப்படம் பற்றிய ஒரு பார்வை), "சிலப்பதிகாரம்: நடனக்கலை மரபும் பதினோராடலின் பரிமாணங்களும்" (சிலப்பதிகாரம் கூறும் நடனக்கலை மரபினை முன்வைத்து பதினோராடலின் பேசுபொருள், ஒழுங்கு, ஆடல் வடிவங்கள், அவற்றின் பரிமாணம், ஒப்பனை முறைமைகள் பற்றிய விபரிப்பு), "ஆடற்கலையும் ஆத்ம தேடலும் சில சிந்தனைகள்" (கலைவடிவம்-கட்டுமானம்-பேசுபொருள்-மனத்தின் தேடல்-வெளிப்பாடு), "போரைப் பேசுதல்: ஒஸ்லோவில் திறந்தவெளிக் கண்காட்சி" (இரண்டாம் உலக யுத்தத்தின் மானுட வலிகளின் கதைகளைப்

பேசுகின்ற ரோஜா அரண்மனை ஓவியங்கள்), "பாரதி மறந்த ஆசைமுகம்" (பாரதியின் ஆசைமுகம் மறந்து போச்சே கவிதையின் உட்பொருளும் பாரதியைப் புரிந்துகொள்ளலும்), "ஊழிக்கூத்து: உணர்ந்தார்க்குப் பேரனுபவம்" (பிரபஞ்சக் கூத்தினை காட்சிகளாகக் கண்ட பாரதியின் பரவசநிலைக் கவிதையை புரிந்து கொள்கின்ற ஒரு முயற்சி), "ஞானரதம்" (வாழ்வின் உன்னத கணமொன்றைத் தேடியலையும் உயிர்! பெரிதினும் பெரிதாய்ப் பிறந்த பெருங்கனவு!!) ஆகிய பன்னிரண்டு கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது.

மேலும் பார்க்க:
ஈழத்துக் கவிதை இலக்கியம். 16979

## 894.8(61) மொழிபெயர்ப்புக் கட்டுரைகள்

### 16814

**ஞாபகம் உதிராப் பூவென: மொழிபெயர்ப்புக் கட்டுரைகள்.** கெகிறாவ ஸுலைஹா. கெகிறாவ: கெகிறாவ ஸுலைஹா, செக்குப்பிட்டிய, 1ஆவது பதிப்பு, 2017. (கொழும்பு 13: தேவி பிரின்டர்ஸ், 41, Brass Founder Street).

144 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-53263-4-6.

கெகிறாவ ஸுலைஹாவின் ஆறாவது படைப்பாக இந்த மொழிபெயர்ப்புக் கட்டுரைத் தொகுதி வெளிவந்துள்ளது. இதில் நிர்க்கதியான மக்களின் காவலரண்: சிலி தேசம் தந்த உன்னதக் கவி பப்லோ நெரூடா, பெரும் புகழ் பிரிந்து போயாயிற்று: மகாத்மாவுக்கான நேருவின் அஞ்சலியுரை, தலித் இலக்கியத்தில் பெண்களின் வகிபாகம், பெண்ணின மற்றும் கறுப்பின மக்களினது குரலாய் ஒலித்த மாயா அஞ்ஜலோ, வில்லியம் வேட்ஸ்வேர்த்தின் "மில்டன்" கவிதையை முன்வைத்து, பதினேழாம் நூற்றாண்டின் மெய்ப்பொருள் கவிஞன் ஜோன் டன் டேவிட் யீடன், பூமி இளையதாயிருக்கையில்: நூலுள் உள்ளம் தொலைத்து, தஜிகிஸ்தானின் மக்கள் கவி ரசூலின் கவிதைகளை நயந்து: "ஞாபகம் உதிராப் பூவென" கஃப்காவின் கடிதங்களுள் ஊடுருவி ஆகிய ஒன்பது மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

### 16815

**தற்கொலையின் திசைபால் பறத்தல்: மொழிபெயர்ப்புக் கட்டுரைகள்.** கெகிறாவ ஸுலைஹா. பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2022. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

120 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-624-5881-70-3.

இந்நூலில் சில்வியா ப்ளாத் (தற்கொலையின் திசைபால் பறத்தல், சில்வியா ப்ளாத் பயன்படுத்திய படிமங்கள், சில்வியா ப்ளாத்தின் "கண்ணாடி"), கறுப்பினக் கவிதைகள் மூன்று ( J.P.Clarkஇன் "இரவு மழை", Nikki Giovanni யின் "என் கவிதை", Gabriel Okaraவின் "பியானோவும் மேளமும்"), செக்கோவ்வும் கோர்க்கியும், ஒரு

காதல் ஜோடியின் இரு கவிதைகள் (Meeting at Night-இரவில் சந்திப்பு-ரொபர்ட் ப்ரௌனிங், How do I Love Thee-என்னென்ன வழிகளில்..-எலிஸபெத் பாரெட் ப்ரௌனிங்), பப்லோ நெருடாவின் எழுதப்படாத கவிதை, டேமன் கல்காட்டின் புக்கர் பரிசு, அப்துல் ரசாக் குர்னாவும் நோபல் பரிசும், வில்லியம் ப்ளேக்-கவிதைகளுக்குள் கவிதைகள் (இலண்டன், அந்த புகைக்கூட்டுத் தொழிலாளிகள், பிணியுற்ற ரோஜா, கைக்குழந்தையின் துயரம்), ஜீன் அரசநாயகம் வாழ்வும் எழுத்தும், தற்கொலையின் திசைபால் பறத்தல், கிரிஸ்டினா ரொசெட்டி-இரு கவிதைகள் (எதிரொலி, ஞாபகங்கொள்), ஜேம்ஸ் ஸ்டீபன்ஸ் - பொறியில் முயல், எமிலி டிக்கின்சன்-மென்நடையில் வந்தது பறவை, பெட்ரிக் ஃபேர்ணான்டோ- மீனவப் பெண்ணின் அழுகை, சை கோபன், மெல் ஃபோரீ- எவருமிலாக் குழந்தை, லோங்ஃபெல்லோ-அடிமையின் கனவு, டி.எஸ்.எலியட்- யன்னலருகே ஒரு காலைப் பொழுது, ஹரிந்திரநாத்- மண் கிண்ணம், பீட்டில் குழுப் பாட்டு-எங்கணுமற்ற மனிதன் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 242ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

## 894.8(62) இலக்கிய வரலாறுகள்

### 16816

**இலங்கைத் தமிழ் நாவல் இலக்கியம் ஒரு வரலாற்று திறனாய்வுநிலை நோக்கு.** தேவகாந்தன். நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1டீவது பதிப்பு, ஒக்டோபர் 2021. (நாகர்கோயில்: பிரின்ட் பொயின்ட் ஓப்செட் பிரின்டர்ஸ்).

207 பக்கம், விலை: இந்திய ரூபா 250., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-91093-25-9.

ஈழத்து தமிழ் நாவலின் 135 ஆண்டு கால வரலாற்றைக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத் தேடி வாசித்து, அதைப் பற்றிய விமர்சனங்களைக் கருத்தரங்குகளில் முன்வைத்து, மாறுபட்ட அபிப்பிராயங்களை எதிர்கொண்டு அவற்றால் தன்னைச் செழுமைப்படுத்திக்கொண்ட ஒருவரிடமிருந்து இந்நூல் உருவாகியுள்ளது. மேற்கில் ஒரு புத்திலக்கிய வடிவத்தின் தோற்றப்பாடு, நாவல் வடிவச் செழுமையும் அர்த்த வியாபகமும் கொள்ளல், புத்திலக்கிய வடிவத்தின் காவியத் திசை நகர்வு, நாவலை வரவேற்க தீவிலிருந்த மரபுத் தடங்கல், முதல் மூன்று இலங்கைத் தமிழ் நாவல்கள், இலங்கைத் தமிழ் நாவல் வரலாற்றின் கால வகைமைப்பாடு, 1895-1925: மத இலக்கியத் தோற்ற காலம், நாவலாக்கத்தின் வீச்சு குறைந்தது, இலங்கை இடதுசாரியச் சிந்தனை, பல்குணிக் காலம் (1956-1983), புலம்பெயர் இலக்கியம் - வரையறை, தமிழ்நாட்டில் இலங்கை அகதிகளின் இலக்கியம், புலம்பெயர்ந்தோர் படைப்புக்கள், புலத்தின் படைப்புக்கள், போரிலக்கியம், பரீட்சார்த்த நாவல்கள், நிறைவுரை ஆகிய இயல்களில் இலங்கைத் தமிழ் நாவல் இலக்கியத்தின் வரலாறு பற்றியதாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட தேவகாந்தன், 1968இல் ஈழநாடு பத்திரிகை ஆசிரியர் குழுவில் இணைந்து

*பணியாற்றியவர். 1984இல் புலம்பெயர்ந்து தமிழகத்தில் வசித்த காலத்தில் "இலக்கு" என்ற சிற்றிதழை நடத்திவந்தார். "கனவுச்சிறை" உள்ளிட்ட பன்னிரு நாவல்களை எழுதியவர். அத்துடன் இரு குறுநாவல் தொகுப்புகளும், ஐந்து சிறுகதைத் தொகுப்புகளும் இன்றளவில் வெளியிடப்பட்டுள்ளன. தற்போது கனடாவில் வாழ்ந்துவருகின்றார்.*

## 894.8(621) இஸ்லாமியத் தமிழ், அரபுத்தமிழ் இலக்கியம்

### 16817

**அறபு இலக்கிய வளர்ச்சி.** *ஜமாலிய்யா ஸய்யித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் (ரலி). திருச்சி 620 009: அவ்னிய்யா பிரிண்டர்ஸ் அன்ட் பப்ளிஷர்ஸ் ட்ரஸ்ட், ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி வளாகம், மணப்பாறை ரோடு, 1ஆவது பதிப்பு, 2015. (திண்டுக்கல் 624 001: ரிப்தா கம்ப்யூட்டர் ஆப்செட், 229/4, மேற்குரத வீதி).*

*86 பக்கம், விலை: இந்திய ரூபா 60.00, அளவு: 17.5x12 சமீ.*

*ஜமாலிய்யா ஸய்யித் யாஸீன் மௌலானா (ரலி)அவர்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் 33ஆம் தலைமுறைப் பேரராக இலங்கையின் திக்குவல்லை என்னும் ஊரில் 29.12.1899 அன்று பிறந்தார்கள். தந்தை அஸ்ஸையித் முஹம்மது ஜமாலிய்யா மௌலானா (ரலி) அவர்கள் பகுதாதிலிருந்து வந்து இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் வாழ்ந்து சம்பைப் பட்டினம் தர்ஹாவில் நல்லடக்கம் பெற்றுள்ளார்கள். குத்புல் பரீத் ஜமாலிய்யா ஸய்யித் யாஸீன் மௌலானா அவர்கள் 1961ஆம் ஆண்டு இலங்கை வானொலியில் "ஹராமும் ஹலாலும்", "அறபு இலக்கிய வளர்ச்சி" ஆகிய தலைப்புகளில் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் எழுத்து வடிவம் இதுவாகும்.*

### 16818

**இறையருள் மாலை.** *ஜின்னாஹ் ஷரிபுத்தீன். மருதமுனை: அன்னை வெளியீட்டகம், 1ஆவது பதிப்பு, 2021. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*55 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 17.5x12.5 சமீ.,* ISBN: *978-624-97389-1-1.*

*ஒரு பொருள் குறித்து பல வகைச் செய்யுள்களை மாற்றி மாற்றிப் பாடுவதை மாலை என்றார்கள். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களை வைத்துப் புனையப் பட்டுள்ள "இறையருள் மாலை" காப்பியக்கோவின் எழுத்தாற்றலின் இன்னொரு வெட்டுமுகமாகும். இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆக்க இலக்கியம் ஆக்குவதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லா ஒருவர் காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்.*

### 16819

**உமர் ரலி புராணம் (முதல் பாகம்).** J.S.K.A.A.H. மௌலானா. இலங்கை: ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை-இலங்கைக் கிளை, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2020. (திருச்சி 620 009: அவ்னிய்யா பிரிண்டர்ஸ் அன்ட் பப்ளிஷர்ஸ் ட்ரஸ்ட், ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி வளாகம், சீத்தப்பட்டி பிரிவு, ஜே.ஜே.பொறியியல் கல்லூரி அருகில், மணப்பாறை ரோடு).

vi, 656 பக்கம், விலை: ரூபா 1650., இந்திய ரூபா 500., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-955-4986-24-4.

இஸ்லாமிய இலக்கியச் சோலையில் சீறாப் புராணத்தின் மரபாக இந்நூல் மலர்ந்துள்ளது. இது இரண்டாம் கலீபா உமர் ரலி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை வண்ணக் கவிதையில் பேசுகின்றது. பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அன்புத் தோழர்களில் இரண்டாம் இடத்தைப் பெற்ற உமர் ஃபாரூக் (ரலி) அவர்கள் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை நிறுவுவதில் முக்கிய இடத்தினை வகித்தவர். இந்நூல் காப்பிய இலக்கணம், காவிய அலங்காரங்களுடன செந்தமிழ் நடையில் இயற்றப்பட்டுள்ளது. காண்டம் -1 (உதய காண்டம்), படலங்கள்-21 (இறை வாழ்த்துப் படலம், நாட்டுப் படலம், நகர்ப் படலம், குலமுறைப் படலம், உதய படலம், நீராடு படலம், அல்லலுறுத்து படலம், ஒட்டை மேய்த்த படலம், இடம்பெயர் படலம், கஉபாச் செலவு படலம், ஹுதைபிய்யா உடன்படிக்கைப் படலம், மணமகட் டேடு படலம், திருமணப் படலம், பதுறுப்போர், உகதிற் போர், அகழ் யுத்தம், ஸவீக் சண்டை, ஹுனைன் போர், தபூக் போர், மக்கா வெற்றிப் படலம், நாயகர்மறைவுப் படலம்) பாடல்கள் 682 இம் முதலாம் பாகத்தில் இடம்பெற்றுள்ளன.

### 16820

**நாயகர் பன்னிரு பாடல்.** J.S.K.A.A.H. மௌலானா. சென்னை 600 017: நேஷனல் பப்ளிஷர்ஸ், 2, வடக்கு உஸ்மான் சாலை, கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில், தியாகராய நகர், 2ஆவது பதிப்பு, மே 2007, 1ஆவது பதிப்பு, 1964. (சென்னை 2: உதயம் ஆப்செட், சிந்தாதிரிப்பேட்டை).

xviii, 78 பக்கம், விலை: ரூபா 30.00, அளவு: 18x12 சமீ.

இந்நூல் 2007-மே 25, 26, 27 சென்னையில் நடைபெற்ற அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஏழாம் மாநாட்டில் துபை (துபாய்) ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையினரால் வெளியிடப்பட்டு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. நூலாசிரியர் பற்றி, மதிப்புரை, முகவுரை, கடவுள் வணக்கம், அவையடக்கம் ஆகிய ஆரம்பப் பக்கங்களைத் தொடர்ந்து, வந்தனர் தூதரன்றே, ஈந்தன ரமுதமன்றே, வளர்ந்தனர் நாளுமன்றே, சீர்த்தனர் வாழ்வுமன்றே, உறுத்தினர் துன்பமன்றே, வென்றவிண் சென்றாரன்றே, சீர்த்தது துணையு மன்றே, வாழ்ந்தனர் வாழ்வுமன்றே, மணந்தனர் தூதரன்றே, உத்தமத் தூதரன்றே, கொள்கையி றூதரன்றே, இறந்தனர் தூதரன்றே ஆகிய தலைப்புகளின் கீழ் பன்னிரு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. தொடர்ந்து அருஞ்சொற்றொடர்ப் பொருட் கோடலும் பா நுண் பொருளும், அருஞ்சொற்கள்,

பிரயோகித்த அரபிச் சொற்களும் பெயர்களும் ஆகியன பின்னிணைப்புகளாக இடம்பெற்றுள்ளன.

### 16821

**பதுறு மவ்லிது: மூலமும் மொழிபெயர்ப்பும்.** அல்லாமா மாப்பிள்ளை லெப்பை ஆலிம் (ரஹ்) (அறபு மூலம்), ஜமாலிய்யா அஸ்ஸயித் கலீல் அவ்ன் அல்ஹாஷிமிய் மௌலானா (தமிழாக்கம்). திருச்சி 620001: ஜமாலிய்யா பதிப்பகம், 35, இரண்டாவது தெரு, செல்வநகர், திண்டுக்கல் ரோடு, 4ஆவது பதிப்பு, 2013, 1ஆவது பதிப்பு, 1998, 2ஆவது பதிப்பு, 2003, 3வது பதிப்பு, 2009. (தமிழ்நாடு: ரிப்தா கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்டர்ஸ், 229/4, மீரா காம்ப்ளெக்ஸ், ஃபயர் சர்வீஸ் எதிரில், மேற்கு ரத வீதி, திண்டுக்கல்).

176 பக்கம், புகைப்படம், தகடுகள், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

இந்நூலை தமிழாக்கம் செய்துள்ள ஜமாலிய்யா அஸ்ஸயித் கலீல் அவ்ன் அல்ஹாஷிமிய் மௌலானா (J.S.K.A.A.H. மௌலானா), சுன்னத் வல்ஜமா அக்கொள்கையை நிலை நிறுத்தவும், மஉரிபா என்னும் மெய்ஞ்ஞானத்தை அழியாமல் காப்பாற்றவும் அயராத பாடுபட்டு வருபவர். அவர்கள் நபிகள் நாயகம் ஸல்லள்ளாஹூ அலைஹி வஸல்லம் அவர்களின் 34ஆவது வாரிசும், முஹிய்யுத்தீன் ஆண்டகை (ரலி) அவர்களின் 21ஆவது பேரரும், காமில்ஷைகுமாவார். சென்னை அங்கப்ப நாயக்கன் தெரு மஸ்ஜிதே மஉமூர் பள்ளியில் அடக்கம் பெற்றுள்ள இறை நேசர் "ஹஸன் மௌலானா (ரலி)" அவர்கள் இவர்களது பாட்டனார்களில் ஒருவர். சீர்காழி வட்டம் திருமுல்லை வாசலில் அடக்கம் பெற்றுள்ள மகாமேதை குத்புல் பரீத் ஜமாலிய்யாஅஸ்ஸய்யித் யாசீன் மௌலானா (ரலி) அவர்களின் அருள் மகவாகத் தோன்றி இலங்கை வலிகாமத்தில் (வலிகம) வாழ்கின்றார்.

### 16822

**பர்ஸன்ஜிய் மவ்லித்: மூலமும் மொழிபெயர்ப்பும்.** ஐஉபருல் பர்ஸன்ஜிய் (அறபு மூலம்), ஜமாலிய்யா அஸ்ஸயித் கலீல் அவ்ன் அல்ஹாஷிமிய் மௌலானா (தமிழாக்கம்). திருச்சி 620001: ஜமாலிய்யா பதிப்பகம், 22/35, இரண்டாவது தெரு, செல்வநகர், திண்டுக்கல் ரோடு, 1வது பதிப்பு, ஜனவரி 2011. (தமிழ்நாடு: ரிப்தா கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்டர்ஸ், 229/4, மீரா காம்ப்ளெக்ஸ், ஃபயர் சர்வீஸ் எதிரில், மேற்கு ரத வீதி, திண்டுக்கல்).

194 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

அறபு நாடுகளிலும் அறபல்லாத மற்றைய நாடுகளிலும் நபிமார்களின் சரிதை களாகவும் வலீமார்களின் சரிதைகளாகவும் ஆரம்ப காலந்தொட்டே பல நூல்கள் அறபு மொழியில் வெளிவந்துள்ளன. அவை சரித நூல்களாக மாத்திர மல்லாது நபிகள் நாயகம் அவர்களைப் புகழ்ந்தேத்தும் புகழ்மாலைகளான சீரிய அறபு இலக்கியங்களாகவும் போற்றப்பட்டு வந்துள்ளன. அவை திருக்குர்ஆன், சிறப்புமிக்க ஹதீஸ்கள், மூலாதாரக் கலைகள் என அறியப்பட்டன. "மவ்லிதுல்

*பர்ஸன்ஜிய்" என்ற இச்சீரிய இலக்கியச் சரிதை நூல் அறபு மொழியில் ஜஉபர் அவர்களால் ஆக்கப்பட்டுள்ளது. ஜமாலிய்யா அஸ்ஸயித் கலீல் அவ்ன் அல்ஹாஷிமிய் மௌலானா (J.S.K.A.A.H. மௌலானா) இதனை தமிழாக்கம் செய்துள்ளார். இடையிடையே அறபுக் கவிதைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.*

மேலும் பார்க்க:

குதுபுகள் திலகம் யாஸீன் மௌலானா அல்-ஹாஷிமிய் 16870

## 894.8(63) சங்க இலக்கியங்கள் தொடர்பானவை

### 16823

**இன்பமுற வாழ்வதற்கு இலக்கியப் புதையல்கள் (பாகம் 1).** *அகணி (இயற்பெயர்: சி.அ.சுரேஸ்). கனடா: சி.அ.சுரேஸ், 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2017. (கனடா: சாமந்தி இல்லம், மல்ரிசிமாட் சொலியூசன்ஸ்).*

*115 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.,* ISBN: *978-0-9869016-5-2.*

*கனடா தமிழ் மிரர் பத்திரிகையில் "இன்பமுற வாழ்வதற்கு இலக்கியப் புதையல்கள்" என்ற கட்டுரைத் தொடரொன்றை எழுதிவரும் அகணி, பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் இருந்து இன்னா நாற்பது, இனியவை நாற்பது ஆகிய இரண்டு செய்யுள் நூல்களை முன்நிறுத்தி அதன் உரைகளை ஆதாரமாகக் கொண்டு அவ்வுரைகளை அலசி ஆராய்ந்து அவை கூறும் கருத்துக்கள் இக்காலத்தக்கு ஏற்புடையனவா அன்றேல் பொருத்தப்பாடற்றனவா என்று ஆராய்ந்து கருத்துரைத்திருக்கிறார். ஏறக்குறைய 1500 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழரிடையே நிலவிய வாழ்க்கை முறைகளை பண்பாடு, அவர்கள் பின்பற்றிய பழக்க வழக்கங்களை இன்றைய தலைமுறைகள் மனக்கண்ணில் கண்டின்புறவும் இறும்பூது எய்தவும் இந்நூல்வழியே வழிவகுத்துள்ளார்.*

### 16824

**ஐங்குறுநூறு வரிசையில் பாலை வனம்.** J.S.K.A.A.H. *மௌலானா. இலங்கை: ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை-இலங்கைக் கிளை, 9/A, பராக் ஒழுங்கை, கொழும்பு 2, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2020. (தமிழ்நாடு: ரிப்தா கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்டர்ஸ், 229/4, மீரா காம்ப்ளெக்ஸ், ஃபயர் சர்வீஸ் எதிரில், மேற்கு ரத வீதி, திண்டுக்கல் 624 001).*

*112 பக்கம், ஓவியங்கள், தகடுகள், விலை: ரூபா 300., இந்திய ரூபா 100., அளவு: 18x12 சமீ.*

*செலவழுங்கிவித்த பத்து, செலவுப் பத்து, இடைச்சுரப் பத்து, தலைவியிரங்கு பத்து, இளவெனிற் பத்து, வரவுரைத்த பத்து, முன்னிலைப் பத்து, மகட் போக்கிய வழித் தாயிரங்கு பத்து, உடன் போக்கின் இடைச் சுரத்துரைத்த பத்து, மறு தரவுப் பத்து ஆகிய தலைப்புகளின் கீழ் சங்க இலக்கியத்தில் பாலைவனச் சுவையை*

சுவைத்துணர்ந்து, வாசகருடன் ஆசிரியர் அதனை இலக்கிய நயம் சொட்ட பகிர்ந்துகொள்கின்றார்.

### 16825

**கலித்தொகை வசனம்.** ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை (மதராஸ்): ஒற்றுமை ஆபீஸ், இல.8, வியாசராவ் தெரு, தியாகராய நகர், 1ஆவது பதிப்பு, 1941. (அச்சக விபரம் தரப்படவில்லை).

vii, 262 பக்கம், விலை: இந்திய ரூபா 1-8-0, அளவு: 19x13 சமீ.

தொகை நூல்கள் தமிழ்ச் சங்கத்தின் இறுதிக் காலத்தில் தொகுக்கப்பட்டனவென்பது ஐதீகம். இந்நூல்களில் சிலவற்றைத் தொகுத்தவர்களின் அல்லது தொகுப்பித்த வர்களின் பெயர்களும் கூறப்படுகின்றன. கலித்தொகை நூலைத் தொகுத்தவர் ஆசிரியர் நல்லந்துவனார் என்று நச்சினார்க்கினியர் கடவுள் வாழ்த்துச் செய்யுள் உரையிற் குறிப்பிட்டுள்ளார். பிற்காலத்தில் காணப்பட்ட ஒரு வெண்பாவை ஆதாரமாகக் கொண்டு பெருங்கடுங்கோன், கபிலர், மருதனிள நாகனார், சோழன் நல்லுத்திரன், நல்லந்துவனார் ஆகியோர் கலித்தொகையின் ஒவ்வொரு பகுதியைச் செய்தனர் என்று வழங்குகின்றது. இவ்வெண்பா பின்னாளில் இடைச்செருகப்பட்ட தென்பாரும் உள்ளனர். இந்தச் சந்தேகத்திற்குக் காரணம் கலித்தொகைப் பாடல் களிற் பல ஒன்றை ஒன்று பார்த்துச் செய்யப்பட்டன போலவும் சொன்னதையே திரும்பச் சொல்வனவாகவும் காணப்படுவதாலாகும். கலித்தொகையில் ஓசை இனிமையும், தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் சிறப்பான அமைப்புகளால் அமைந்த கலிப்பாவினால் சிவனைப் பற்றிய கடவுள் வாழ்த்துப் பாடல் ஒன்று உட்பட பாடப்பட்ட 150 பாடல்கள் உள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 0606).

### 16826

**குறிஞ்சிச் சுவை.** J.S.K.A.A.H. மௌலானா. திருச்சி 620 009: ஜமாலிய்யா பதிப்பகம், மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி வளாகம், சீத்தப்பட்டி பிரிவு, பூலாங்குளத்துப் பட்டி அஞ்சல், ஜே.ஜே.பொறியியல் கல்லூரி அருகில், மணப்பாறை ரோடு, 1ஆவது பதிப்பு, 2013. (தமிழ்நாடு: ரிப்தா கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்டர்ஸ், 229/4, மீரா காம்ப்ளெக்ஸ், ஃபயர் சர்வீஸ் எதிரில், மேற்கு ரத வீதி, திண்டுக்கல் 624 001).

92 பக்கம், ஓவியங்கள், தகடுகள், விலை: ரூபா 200., அளவு: 18.5x12 சமீ.

குறிஞ்சிச் சுவை, அன்னாய் வாழிப் பத்து, அன்னாய்ப் பத்து, அம்ம வாழிப் பத்து, தெய்யோப் பத்து, வெறிப் பத்து, குன்றக் குறவன் பத்து, கேழற் பத்து, குரக்குப் பத்து, கிள்ளைப் பத்து, மஞ்ஞைப் பத்து ஆகிய தலைப்புகளின் கீழ் குறிஞ்சிச் சுவையை சுவைத்துணர்ந்த வாசகருடன் ஆசிரியர் அதனை இலக்கிய நயம் சொட்ட பகிர்ந்துகொள்கின்றார்.

### 16827

**சங்க இலக்கியம்: பதிவும் பார்வையும்.** கி.விசாகரூபன். யாழ்ப்பாணம்: மலர் பதிப்பகம், 56/5, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2008. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 424, காங்கேசன்துறை வீதி).

138 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-50739-05.

சங்க இலக்கியத்தில் முல்லைத் திணை, புறநானூற்றில் மேல் உலகும் கீழ் உலகும், புறநானூற்றில் புலவர்களும் புரவலர்களும்: உறவுநிலை குறித்த சமூகவியல் நோக்கு, தமிழிலக்கிய வரலாற்றில் கலித்தொகையின் கால அடைவு, கலித் தொகையில் கைக்கிளையும் பெருந்திணையும், ஆகிய ஐந்து கட்டுரைகள் இந்நூ லில் இடம்பெற்றுள்ளன. கட்டுரைகள் ஐந்தாயினும் அவை ஐந்தும், முல்லைத்திணை பற்றிய ஒரு தொகுநிலைப் பார்வை, கலித்தொகையின் அமைவு, காலம் பற்றியது, புறநானூறு குறிப்பாக, அது சுட்டும் சமூகப் பின்புலம் பற்றியது என மூன்று விடயப் பொருள்களை உள்ளடக்குகின்றன. கலாநிதி கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றியவர்.

### 16828

**தமிழிலக்கியக் கட்டுரைகள்.** ஹாயத்திரி சண்முகநாதன். யாழ்ப்பாணம்: முத்தமிழ்ச் சங்கம், 110, புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2022. (யாழ்ப்பாணம்: மெகா பதிப்பகம், 41, றக்கா வீதி, கச்சேரியடி).

vii, 107 பக்கம், விலை: ரூபா 700., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-624-98909-2-3. (மேலட்டையில் ISBN: 978-624-99859-1-9)

தமிழக வரலாற்றுக்கான அடிப்படைச் சான்றுகள், சங்கச் சமூகத்தில் பெண்கள், சங்க இலக்கியங்களில் தோழி, வரலாற்று நோக்கில் பரத்தமை, புறநானூற்றில் அறம், பக்தி இலக்கிய வளர்ச்சியில் சங்கமருவிய காலத்தின் முக்கியத்துவம், பல்லவர் கால பக்தி இலக்கியச் சூழல் ஆகிய ஏழு ஆய்வுக் கட்டுரைகள் இந்நூ லில் இடம்பெற்றுள்ளன. ஹாயத்திரி சண்முகநாதன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழை சிறப்புப் பாடமாகப் பயின்றவர். சங்க இலக்கியங்கள் மீதான தனனுடைய ஆர்வத்தினால் அவ்விலக்கியங்களில் உள்ள பல கருத்துகளை எடுத்தாராய்ந்துள்ளார்.

### 16829

**பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை (இரண்டு பாகங்களும்).** சு.அருளம்பலவனார் (மூலம்), அ.சண்முகதாஸ், ச.மனோன்மணி (மீள்பதிப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், 1ஆவது பதிப்பு, 2021, (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

xliii, 1234 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23x15.5 சமீ.

*இந்நூலின் முதலாம் பாகத்தை 1960இல் யாழ்ப்பாணம் ஆனந்தா அச்சகத்தினரும், இரண்டாம் பாகத்தை 1963இல் ஸ்ரீ சண்முகநாத அச்சகத்தினரும் வெளியிட்டிருந்தனர். தற்பொழுது இரண்டு பாகங்களும் இணைந்ததாக இந்நூல் வெளிவந்துள்ளது. பழையவுரை, ஒப்புமைப் பகுதி, பலவகை ஆராய்ச்சிக் குறிப்புகள் முதலியவற்றுடன் மதுரைத் தமிழ்ச்சங்க அங்கத்தவரும் காலி அரசாங்க உயர்தர கலாசாலையின் முன்னைநாள் தலைமையாசிரியருமான பண்டிதர் சு.அருளம்பலவனார் இவ்வாராய்ச்சியுரையை இயற்றியுள்ளார். பண்டைத் தமிழ்சங்க இலக்கியங்களுள் பதிற்றுப்பத்து முக்கியமானது. சேர அரசர் பதின்மர்மீது நல்லிசைப்புலவர் பதின்மரால் பாடப்பெற்ற பப்பத்துப் பாடல்கள் கொண்ட பத்துப் பகுதிகளின் தொகுப்பே பதிற்றுப்பத்தாகும்.*

### 16830

**பதிற்றுப்பத்து வசனம்.** *ந.சி.கந்தையாபிள்ளை. யாழ்ப்பாணம்: ந.சி.கந்தையா, தமிழ் நிலையம், நவாலியூர், 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 1937. (சென்னை (மதராஸ்): ஒற்றுமை ஆபீஸ், இல.8, வியாசராவ் தெரு, தியாகராய நகர்).*

xi, *(4), 76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19*x*13.5 சமீ.*

*சங்கத் தொகை நூல்களுள் ஒன்றாகிய பதிற்றுப் பத்து சேர அரசரின் கீர்த்திப் பிரதாபங்களைக் கூறுகின்றது. சேர அரசர் பலரின் சரித்திரங்களை அறிவதற்கு இந்நூல் துணைபுரிகின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாடு எவ்வகையான நாகரிகம் அடைந்திருந்ததென்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள முடிகின்றது. உள்ளதை உள்ளவாறே கூறும் மெய்ம்மொழிப் புலவர்கள், ஆறு, மலை, சோலை, காடு முதலியவற்றின் வளங்களும், மக்களின் நடை, உடை, பாவனைகளும், வேந்தரின் மாட மாளிகை கூடகோபுரம், நாடு, நகரம், முடி, கொடி, குடை, ஆலவட்டம், தேர், யானை குதிரை, காலாள், போர்க்களம், பாசறை ஆதியனவும் பிறவும் நமது மனக்கண்ணுக்கு இனிதே புலப்படுமாறு தமது பாடல்களாகிய திரையில் அழகுபெறச் சித்திரித்திருக்கின்றனர். பதிற்றுப்பத்தில் பல வழக்கிழந்த சொற்கள் காணப்படுவதால் அந்நூலை எளிதிற் பொருள் விளங்கிப் பயில்தல் அரிதாகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு ஆசிரியர் இவ்வசன நூலை எளிய வடிவில் தந்துள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 0602).*

### 16831

**பன்முக நோக்கில் சங்க இலக்கியம்: தமிழியல் ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு.** *ம.இரகுநாதன், ஈ.குமரன் (பதிப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: இரண்டாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு-2021, தமிழ்த்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு, 2021. (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).*

xvii, *611 பக்கம், 6 புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26*x*19 சமீ.,* ISBN: *978-624-97806-3-7.*

2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16, 17 ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற இரண்டாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டில் வாசிக்கப்பெற்ற 63 கட்டுரைகளின் தொகுப்பு. இவை அகமும் புறமும், அரசும் போரும், சமயம், கலை, பொருளாதாரம், ஏனையவை ஆகிய ஆறு பிரிவுகளின் கீழ் வகுத்துத் தரப்பட்டுள்ளன. "அகமும் புறமும்" என்ற பிரிவில் புறநானூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சமூக நல்வாழ்க்கைக்கான அறவியல் சிந்தனைகள், அகப்பொருள் சித்திரிப்பு- குறுந்தொகையையும் காதாசப்த சதியையும் அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பியலாய்வு, பொருண்மொழிக் காஞ்சித்துறைப் பாடல்கள் கூறும் பொதுவறம், பத்துப் பாட்டில் அகமும் புறமும் இணைந்த பாடல்கள்-ஒரு கவிதையியல் வாசிப்பு, சங்க இலக்கிய அகப்பொருள் மரபும் திருக்குறளும், ஒப்பியல் நோக்கில் இனிமை மிகு பாடல் மற்றும் குறுந்தொகை, புறநானூற்றின் இயல்பும் உயர்வும்: இயன்மொழித்துறைப் பாடல்களின் வழியான கண்டடைதலும் மறுவாசிப்பும், புறநானூற்றுக் கையறு நிலைப் பாடல்கள்: ஒரு சமூக வரலாற்றாய்வு, குறுந்தொகை அகச் செய்யுட்களில் கருவும் உரியும், காஞ்சித்திணை: தொல்காப்பியம்-புறப்பொருள் வெண்பாமாலை, குறுந்தொகையில் தோழி கூற்றுக்கள்: ஓர் ஆய்வு, புறநானூறு பாடாண்திணையில் செவியறிவுறூஉப் பாடல்கள், பட்டினப்பாலை மீள்வாசிப்பு, சங்ககால ஆற்றுப் படை நூல்களின் தோற்றுவாயும் அதன் சிறப்பியல்புகளும் ஓர் ஆய்வு, மருதக் கலிப்பாடல்களில் மகளிர் மாண்பு ஆகிய கட்டுரைகளும், "அரசும் போரும்" என்ற பிரிவில் சங்ககால அரசியலும் மக்கள் வாழ்வும்-ஒரு செவ்வியல் ஆய்வு, சங்க இலக்கியங்களில் ஆண்களின் வீரத்தினை வெளிக்காட்டும் போரும் வீர விளையாட்டுக்களும், சங்க இலக்கியம் கூறும் அரசியல், சங்க இலக்கியத்தில் அரசியல் தொடர்பாடல், மதுரைக் காஞ்சியும் பாண்டியன் நெடுஞ்செழியனும், சங்க இலக்கியங்களில் வெளிப்படும் அரச முறைமைகளும் நல்லாட்சிப் பண்புகளும்: ஓர் ஆய்வு, சங்க இலக்கியங்களில் இழையோடும் தெய்வீக உரிமைக் கோட்பாட்டின் சாயல்கள்: புறநானூற்றை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு, புறநானூற்று மரபில் வேள்பாரி மன்னன்-கபிலரின் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு, ஆதிக்க வெறியும் அறநெறியும்-புறநானூற்று பாடல்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு ஆகிய கட்டுரைகளும், "சமயம்" என்ற பிரிவில் திருமுருகாற்றுப்படையில் முருக வழிபாடும் மேனிலையாக்கமும், சங்கச் சமூக வழிபாட்டு மரபில் பலியிடுதல், வீடுபேறு: திருமுருகாற்றுப்படையை அடிப்படை யாகக் கொண்ட ஓர் ஆய்வு, பொருநராற்றுப்படையில் அறவியல், சங்க-வைதிக இலக்கியங்களில் இந்திரன்: ஓர் ஒப்பீட்டாய்வு, சங்க இலக்கியங்களில் திருமால் குறித்த கருத்தாடல்கள், முல்லைக் கலிப்பாடல்களில் வழிபாட்டுச் செய்திகள் ஆகிய கட்டுரைகளும், "கலை" என்ற பிரிவில், தொல்காப்பியம் கூறும் தமிழரின் அழகியல், சங்க இலக்கியங்களில் அரசர்களும் மறவர்களும் ஆடிய போர்க்கள ஆடல்கள், சங்க காலத்தில் குரவை பெறும் முக்கியத்துவம் பற்றிய ஓர் ஆய்வு, கலித்தொகை பாலைக் கலியில் சிருங்கார ரசத்தின் வகிபங்கும் பதம் என்னும் உருப்படி கட்டமைப்பும், தமிழர் கட்டடக்கலை மரபு-சங்க இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு, சங்ககாலக் கலைகளில் ஓவியமும் அதன்

வெளிப்பாடும் - ஓர் ஆய்வு, சங்ககால பழந்தமிழ் இலக்கியங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்து கலைகளில் ஆடல், சங்க இலக்கியத்தில் யாழ்: அமைப்பும் ஆற்றுகையும், சங்ககால இலக்கியங்களின் ஊடாகப் பாவைக் கூத்தினை அணுகுதலும் அதனூடாகச் சமகால அரங்கை முன்னிறுத்துவதுமான ஓர் ஆய்வு, சங்ககால இலக்கியத்தில் கட்டடக் கலை, அரங்க ஆற்றுப்படுத்தல் நுட்பங்கள்: சங்க இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு, சங்க இலக்கியங்களில் வாழ்வியல் சிற்பக் கலையும் சமகால தமிழர் சிற்பக்கலை மரபில் அவற்றின் பிரதிபலிப்புகளும், சங்க இலக்கியங்களே தமிழர் ஆடலின் கருவூலம் ஆகிய கட்டுரைகளும், "பொருளாதாரம்" என்ற பிரிவில், மதுரைக்காஞ்சி இலக்கியத்தில் மிளிரும் தமிழர்களுடைய வணிக வாழ்க்கை, சங்ககால வணிக முறைக்கும் அர்த்த சாஸ்திர வணிக முறைக்கும் இடையிலான ஓர் ஒப்பியல் ஆய்வு, சங்க இலக்கியங்களில் விவசாயத்தின் மேன்மை, சங்க இலக்கியங்களில் பழந்தமிழரின் கடல் வழி வாணிபம், சங்க இலக்கியங்களில் புலப்படும் பொருளாதார நடவடிக்கைகள் ஆகிய கட்டுரைகளும், "ஏனையவை" என்ற பிரிவில், புறநானூற்றில் புலப்படும் சம்ஸ்கிருதச் சிந்தனைகள், சங்க இலக்கியங்களினூடாக வெளிப்படும் சூழலியல் கல்வி: குறுந்தொகையை மையப்படுத்திய ஓர் ஆய்வு, சங்க இலக்கிய ஒப்பியல் ஆய்வில் ஈழத்துத் தமிழறிஞர்களின் பங்களிப்பு, சங்க இலக்கியங்கள் மொழி பெயர்க்கப்படவேண்டியதன் இன்றியமையாமை, இலக்கிய நோக்கில் கீழடி அகழாய்வுச் சான்றுகள், ஆய்வு நோக்கில் ஈழத்து அறிஞரின் ஐங்குறுநூற்று உரை, சங்ககால இலக்கியங்களில் பெண்ணிய மெய்யியல் சிந்தனைகள்: புறநானூற்றை ஆதாரமாகக் கொண்ட ஆய்வு, உயர்தர வகுப்பு தமிழ்க் கலைத்திட்டத்தில் சங்க இலக்கியங்கள்: மனப்பாங்கு விருத்திக்கான கலைத்திட்ட வகிபாகம், சூழலியல் நோக்கில் சங்க இலக்கியங்கள், இலங்கைப் பாடசாலைக் கலைத்திட்டத்தில் சங்க இலக்கிய வகிபாகம்: ஓர் ஒப்பீட்டு நோக்கு, 20ஆம் நூற்றாண்டு ஈழத்து இலக்கிய முயற்சிகளில் சங்க இலக்கியத் தடங்கள், சங்க இலக்கியத்தில் சுற்றுச் சூழலியல், பெண்மொழி நோக்கில் வெள்ளிவீதியார் கவிதைகள், குறுந்தொகைப் பாடல்களில் உரிச்சொற்களின் பயன்பாடு ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

## 894.8(64) சமகால இலக்கிய ஆய்வுகள், கட்டுரைகள்

### 16832

**இலக்கியத் திறனாய்வு: வாசிக்கப்பட்ட நாவல்களிற் சில 1963-1995**. கே.எஸ். சிவகுமாரன். கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 661/665/675 பி.டி.எஸ். குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1ஆவது பதிப்பு, 2021. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

(13), 14-176 பக்கம், விலை: ரூபா 750., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-624-00-0947-8.

பெனடிக்ட் பாலன் (குட்டி), காவலூர் ராசதுரை (வீடு யாருக்கு), பாலமனோகரன் (நிலக்கிளி), அருள் சுப்பிரமணியம் (அவர்களுக்கு வயது வந்தவிட்டது, அக்கரைகள் பச்சையில்லை, நான் நீதியின் பக்கம்), செ.யோகநாதன் (ஒளி நமக்கு வேண்டும்,

கனவுகள் ஆயிரம், இரவல் தாய் நாடு), எஸ். அகஸ்தியர் (நீ, கோபுரங்கள் சரிகின்றன), சி.சுதந்திரராஜா (மழைக்குறி), எஸ்.பொன்னுத்துரை (சடங்கு), ஏ.ரி. நித்தியகீர்த்தி (மீட்டாத வீணை), ஐ.சாந்தன் (ஒட்டுமா), எம்.பீ.முகம்மது ஜலீல் (ஒரு வெள்ளைப் பூ சிரிக்கிறது, சரித்திரம் தொடர்கிறது), புலோலியூர் க.சதாசிவம் (நாணயம், மூட்டத்தினுள்ளே), செங்கை ஆழியான் (நடந்தாய் வாழி வழுக்கியாறு, அக்கினிக் குஞ்சு, யொகாறா, ஒரு மைய வட்டங்கள், காட்டாறு), கே.டானியல் (பஞ்சமர், பூமரங்கள்), செம்பியன்செல்வன் (நெருப்பு மல்லிகை), அ.ஸ.அப்துஸ் ஸமது (பனி மலர்), கோகிலா மகேந்திரன் (துயிலும் ஒரு நாள் கலையும், தூ வானம் கவனம்), ஜெக்கியா ஜுனைதீன் (ஷர்மிளாவின் இதய ராகம்), மொழிவாணன் (பூலான்தேவி), தெணியான் (பொற்சிறையில் வாடும் புனிதர்கள், கழுகுகள்), சுமதி அற்புதராஜா (புதிய பாதை), செ.குணரத்தினம் (சொந்தம் எப்போதும் தொடர்கதை தான்), செ.கணேசலிங்கன் (இரண்டாவது சாதி), தி.ஞானசேகரன் (லயத்துச் சிறைகள், குருதிமலை), ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் (ஒரு கோடை விடுமுறை) ஆகியோரின் நூல்கள் பற்றிய திறனாய்வுகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மேலும் சில நாவல்கள் பற்றிய சிறு குறிப்புகளும் நூலின் இறுதியில் 11 பக்கங்களில் இடம்பெற்றுள்ளன.

**16833**

**ஈழத்துத் தமிழ் அரசியல் நாவல் 'எரிமலை': ஒரு நுண்ணாய்வு.** *ராஜரட்ணம் ருக்ஷான். ஹப்புத்தளை: நெம்புகோல் பதிப்பகம், நா செவன, வல்ஹப்புதென்ன, ஹல்தும்முல்ல, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2022. (சென்னை 600 117: ஸ்ரீதுர்கா பிரின்டர்ஸ், 4ஏ, பூபதி நகர், கீழ்க்கட்டளை).*

xxii, *232 பக்கம், விலை: ரூபா 1000., இந்திய ரூபா 260., அளவு: 22*x*14.5 சமீ.,* ISBN: *978-624-6336-00-4.*

*தி.ஞானசேகரனின் "எரிமலை" நாவல் எந்தளவு தூரம் இலங்கையின் இன மோதல் வரலாற்றின் அடிப்படைகளை எடுத்துரைக்கிறது என்பதை ஆராய்வதே இந்நூலின் நோக்கமாகும். கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ்ப் பட்டயக் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்வதன் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையின் திருத்திய வடிவம் இதுவாகும். இவ்வாய்வு, தோற்றுவாய், நாவலிலக்கியமும் ஈழத்துத் தமிழ் நாவல்களும்: பொதுவான எண்ணக்கருக்கள், ஈழத்தில் இனமோதுகையின் வரலாற்றுப் பின்புலம், ஈழத்துத் தமிழ் அரசியல் நாவல்களின் தோற்றமும் வளர்ச்சியும், எரிமலை நாவலில் வெளிப்படும் இன மோதல் பற்றிய அரசியற் பிரச்சினைகள், எரிமலை எடுத்துரைக்கும் அரசியற் தீர்வு பற்றிய விவாதங்கள், எரிமலை நாவலின் புனைகதைத் திறன், நிறைவுரை ஆகிய எட்டு இயல்களைக் கொண்டமைந்துள்ளது. பின்னிணைப்பில் இனமோதுகையை அடிப்படையாகக் கொண்டெழுந்த ஈழத்துத் தமிழ் அரசியல் நாவல்கள் சிலவற்றின் பட்டியல் ஒன்றும் தரப்பட்டுள்ளது.*

## 16834

**எதிர்: கவிதைகள் பற்றிய கட்டுரைகள்.** *கருணாகரன். சென்னை 600093: வேரல் புக்ஸ் வெளியீடு, 6, 2ஆவது தளம், காவேரி தெரு, சாலிகிராமம், 1ஆவது பதிப்பு, ஜனவரி 2023. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*322 பக்கம், விலை: இந்திய ரூபா 330., அளவு: 21*x*14 சமீ.,* ISBN: *978-81-960544-2-7.*

*இந்நூலிலுள்ள கட்டுரைகள், 20இற்குப் பின்னர் தமிழ்ச் சூழலில் வந்துள்ள சில கவிதைத் தொகுதிகளைக் குறித்துப் பேசுகின்றன. இதில் இலங்கை, இந்திய, புலம்பெயர் தேசங்களின் தமிழ்க் கவிதைகளோடு சிங்களக் கவிதைகள், அவுஸ்தி ரேலியப் பூர்வ மக்களின் கவிதைகள் குறித்தும் பேசப்பட்டுள்ளது. அலைவின் முகம், பெண்ணுடலைக் கொண்டாடுதல், கட்டற்ற கவிஞன் லார்க், திரைகளை விலக்க ஒரு பயணம்: சிங்கள மொழிபெயர்ப்புக் கவிதைகளைப் பற்றி, றியாஸ் குரானாவின் கற்பனைச் செயல், விடுதலை அரசியலின் உக்கிரம், கீழெது? மேலெது?, வெளி தேடி அலையும் பறவை, புதிதளித்தலையும் பகிர்ந்தளித்தலையும் நிகழ்த்தும் பைசலின் கவிதைகள், யாருக்கும் இல்லாத பாலை, பூவுலகைக் கற்றலும் கேட்டலும் (அவுஸ்திரேலிய ஆதிக்குடிகளின் கவிதைகள்), சுமதியின் கவிதை வழி, தேடிச்செல்லும் வழியில் கண்ட திசை, பரதேசிகளின் பாடல்கள்: முகமற்ற கவிஞர்களின் கவிதைகள், ஒளிரும் ஓசையும் இயல்பின் மொழியுமாய் விரிதல், புதிய உணர்முறையிலான சித்தாந்தன் கவிதைகள், தொன்மத்தின் வழி நிகழ்காலம், தமிழ்நதி கவிதைகள், புதிய சுவடுகளுக்கு ஒளி அதிகம், பதுங்குகுழியின் பாடல்கள், சமனிலையை விரும்பும் கவி, துயர்வெளிக் கவியின் வேரோடிய நிலம், கொந்தளிக்கும் வாழ்க்கையின் நிழல், உண்மையின் தீராத தாகம், உள்ள மைதியும் மேற்சிறகிசைப்பும், துயர்மேடை, நீர்மேட்டில் தழும்பும் இலை, இனி?: நெற்கொழுதாசனின் கவிதைகள், கேள்விகளும் சிந்தனைகளும், முன்னும் பின்னுமாய் காலம், தமயந்தியின் "சூரியப் பூச்சிகள்", உமா மகேஸ்வரியின் கற்பாவை, துரத்தும் நிழல்களின் உக்கிரம், பெண் மொழி-பெண் வழி ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 34 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

## 16835

**சட்டநாதன் கட்டுரைகள்: பலதும் பத்தும்.** *க.சட்டநாதன். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, ஆனி 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).*

vi, *244 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21*x*14 சமீ.,* ISBN: *978-624-5881-05-5.*

*ஈழத்தின் முக்கிய தமிழ் இலக்கியவாதியான க.சட்டநாதன் அவர்கள் எழுதிய சமகால இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இதில் மு.தளையசிங்கம் எனும் வியக்தியும் அவரது சிறுகதைகளும், மு.த.வின் கலிபுராணம், தர்மோ ஜீவராம் பிரமிள் ஒரு படைப்பாளுமை, மோகன் ராகேஷின் அரையும் குறையும், செங்கை ஆழியானின் புனைவும் வாழ்வும்,*

குந்தவையின் யதார்த்தமும் புனைவும், ஊர்வசியும் அனுபவமும் கலையும், உள்மன யாத்திரை ஒரு நோக்கு, சண்முகனின் "ஒரு தோட்டத்தின் கதை"த் தொகுதியும் சிறுகதைகளும், குப்பிழான் ஐ.சண்முகன் அவர்களது அறிமுகங்கள், விமர்சனங்கள், குறிப்புகள், பத்தி எழுத்துகள் திரட்டுப் பற்றிய கருத்துரை, பரணீயின் யதார்த்தமான புனைவுகள், செ.யோகநாதனின் படைப்பு வல்லபம், ஆழத்தை அறியும் பயணம் கடவுளரும் மனிதரும், பரராஜசிங்கத்தின் படைப்புலகம், பதிவுகள் ஓர் அறிமுகம், பொ.கருணாகரமூர்த்தியின் படைப்புவெளி, முரண் சிறுகதைகளின் அகமும் புறமும், அசோகமித்திரனுக்கு விருது, தேவகாந்தனின் படைப்பும் வீச்சும், தேவகாந்தனின் யுத்தத்தின் முதலாம் அதிகாரம்-நாவல், ஆளுமை மிக்க கலைஞன் ஆனந்தமயில், காவல்வேலி கதை நிகழ்களங்கள், ஈழத்து எழுத்துப் பரப்பில் புதியவர்களின் படைப்பு மொழி, சிறுகதை என்னும் புனைவிலக்கியம், சினிமா: சில பதிவுகள், தமிழ் சினிமாவில் சில வித்தியாசமான முயற்சிகள், நவீன தமிழ் இலக்கியம்: புனைகதை ஒரு முன்னுரை, அகாலத்தில் மறைந்த செ.கதிர்காமநாதன், டெரரிஸ்ட்: சினிமா சில பதிவுகள், ஜெயகாந்தன் படைப்புகள்-சிறுகதை, இரு முழுநீளத் திரைப்படங்களும் சில குறும்படங்களும், அம்மா வந்தாள்- பிடித்த புத்தகம், சினிமா-சில பதிவுகள், ஜி.ரி.கேதாரநாதனின் "சினிமாத் தடம்", பூரணி இதழ்- ஆசிரியர் தலையங்கங்கள், தூண்டில் நேர்காணல், ஜீவநதி நேர்காணல் ஆகிய 37 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன இந்நூல் 190 ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

## 16836

**தராசு முனைகள்: பகுதி 1.** சிறீ சிறீஸ்கந்தராசா. யாழ்ப்பாணம்: சிறீ சிறீஸ்கந்தராசா, 419, கொழும்புத்துறை பிரதான வீதி, 1ஆவது பதிப்பு, மார்ச் 2022. (யாழ்ப்பாணம்: மெகா பதிப்பகம், 41, றக்கா வீதி).

xvi, 104 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x15.5 சமீ., ISBN: 978-624-97879-1-9.

இந்நூலில் ஆசிரியரின் இருபது மதிப்பீட்டுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இக்கட்டுரைகள் பெரும்பாலும் லண்டனில் இருந்து வெளியாகும் எழுத்தாளர் முல்லை அமுதனின் "காற்றுவெளி" மின்சஞ்சிகையில் அவ்வப்போது வெளியானவை. இவை கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை என பரந்த துறைகளில் வெளிவந்த நூல்களின் மதிப்பீடுகளாகும். வல்லமை தாராயோ (தர்ஷினி), முற்றத்து மல்லிகை (பொன்-சிவகௌரி), கண்ணீரினூடே தெரியும் வீதி (தேவமுகுந்தன்), கருணை நதி (மிதயா கானவி), அர்த்தமுள்ள மௌனம் (மாலினி மாலா), காதலெனும் சோலையிலே (மலைமகள்), காகம் கலைத்த கனவு (சோலைக்கிளி), இன்னுமோர் இன்பத்துப் பால் (முகில்வாணன்), என்னையே நானறியேன் (சந்திரகௌரி), தடம் தொலைத்த தடயங்கள் (பிரகாசக் கவி), பள்ளத்தாக்கில் சிகரம் (ராஜகவி ராஹில்), அரங்க அலைகள் (சுதாகரி), என்றாவது ஒரு நாள் (கீதா மதிவாணன்), தாயுமானவன் (மணிமேகலை), இரவின் மழையில் (ஈழக்கவி), சிலந்தி பின்னிய பட்டு வலையில் சிக்கிய விண்மீன்கள் (ராஜகவி ராஹில்), ஒரு வழிப்போக்கனின் வாக்குமூலம் (ராஜாஜி ராஜகோபாலன்), மீண்டு

வந்த நாட்கள் (வதிரி சி.ரவீந்திரன்), தமிழே தருவாய் நல்வரம் (திரு.கிரிகாசன்), ஆதிகளின் புதைகுழிகளிலிருந்து (மேமன் கவி) ஆகிய நூல்கள் இங்கு மதிப்பீடு செய்ப்பட்டுள்ளன.

## 16837

**தாயகக் கனவுகள்: பிரதிகளை முன்வைத்து ஓர் உரையாடல்.** அருண்மொழி வர்மன் (இயற்பெயர்: சுதர்சன் ஸ்ரீநிவாசன்). கனடா: வடலி வெளியீடு, இல. 35, Long Meadow Road, Brampton, Ontario L6P 2B1, 1ஆவது பதிப்பு, தை 2022. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xix, 122 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-1-7779375-1-5.

ஈழப்போராட்டம், அது குறித்த நூல்கள், அவற்றின் வாசிப்பு அனுபவங்கள் ஆகிய பரப்புக்களில் அருண்மொழிவர்மன் எழுதிய கட்டுரைகளின் தொகுதி இதுவாகும். அவர் கொண்டிருக்கும் சமூக அரசியல் சார்ந்த கணணோட்டத்தின் அடிப்படையில் அவற்றைத் தெளிவாகவும் தர்க்க நேர்த்தியுடனும் அணுகுபவையாக இக்கட்டுரைகள் அமைந்துள்ளன. தாயகக் கனவுகள், The Cage-ஐ முன்வைத்து ஈழப்போர்: எனது வாசிப்புகளூடான ஒரு பார்வை, எனது பார்வையில் "கொலை நிலம்", "பெயரிடாத நட்சத்திரங்கள்" தொகுப்பை முன்வைத்து ஈழப் போராட்டத்தில் பெண் புலிகள், ஈழப் போராட்டத்தில் எனது பதிவுகள், "நாம் தமிழர் கட்சி ஆவணம்" தொடர்பாக சில கருத்துக்கள், நாம் தமிழர் கட்சி ஆவணம்: ஈழத் தமிழர்கள் எதிர்கொள்ளப்போகும் ஆகப் பெரிய சவால், புஷ்பராணியின் "அகாலம்", "சாம்பல் பறவைகள்" குறுநாவலை முன்வைத்து, அகர முதல்வனின் "சாகாள்": சில குறிப்புகள். வெற்றிச் செல்வியின் "ஒரு போராளியின் காதலி", காத்திருப்பு கதை குறித்து, "நந்திக் கடல் பேசுகிறது" தொகுப்பை முன்வைத்து தமிழ் நதியின் "பார்த்தீனியம்" நாவல், முள்ளிவாய்க்கால்: நினைவுகூர்தலில் இருந்து அரசியல் செயற்பாடு நோக்கி ஆகிய பதினைந்து கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 16838

**தெணியானின் படைப்புகள் மீதான பார்வைகள்.** க.பரணீதரன் (தொகுப்பாசிரியர்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2012. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டேர்ஸ், முத்திரைச் சந்தியடி, நல்லூர்).

viii, 96 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-4676-02-2.

தெணியானின் 50 வருடகால எழுத்துலக வாழ்வை கௌரவிக்கும் வகையில் அவரது நூலுருப்பெற்ற நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைத் தொகுப்புகள் குறுநாவல்கள் என 15 நூல்களைப் பற்றிய ஈழத்தின் படைப்பாளிகளிடம் இருந்து பெறப்பட்ட திறனாய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. மீண்டும் வாசிக்கையில் தெணியானின் "காத்திருப்பு" (எம்.கே.முருகானந்தன்),

"சிதைவுகள்" நுலினூடே தெணியான் பற்றிய எனது தரிசனம் (புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்), பரந்த உரையாடலுக்கு உகந்த களம் தெணியானின் "இன்னொரு புதிய கோணம்" (க.நவம்), தனித்துவப் பதிவாகத் திகழும் "சொத்து" (யோகேஸ்வரி சிவப்பிரகாசம்), தெணியானின் "தவறிப்போனவன் கதை" கடந்து வந்த யதார்த்தத்தின் சாட்சியக் குரல் (மேமன் கவி), தெணியானின் "இன்னும் சொல்லாதவை" (முருகபூபதி), தெணியானின் "விடிவை நோக்கி": சில மனப்பதிவுகள் (அ.பௌநந்தி), ஈழத்துத் தமிழ் நாவல் வரலாற்றில் "மரக்கொக்கு": சில அவதானிப்புகள் (செ.யோகராசா), தெணியானின் "நெஞ்சில் பதிந்துள்ள நினைவுகளில் பேராசிரியர் கா.சிவத்தம்பி" (கி.விசாகரூபன்), தெணியானின் "ஒடுக்கப்பட்டவர்கள்" ஒரு சுருக்கமான விமர்சனக் குறிப்பு (லெனின் மதிவானம்), "கழுகுகள்" மீதான ஒரு பார்வை (தாட்சாயணி), தெணியானின் "கானலின் மான்": ஆளுமை உளவியல் வழியே ஒரு மீள்பார்வை (த.கலாமணி), தெணியானின் "பனையின் நிழல்" (தம்ப சிவா), தெணியானின் "பொற்சிறையில் வாடும் புனிதர்கள்" நாவல் குறித்த மனப்பதிவு (மு.அநாதரட்சகன்), விரியத் துடிக்கும் சமூக, பண்பாட்டு வரலாற்றுப் பதிவுகளாய் தெணியானின் சிறுகதைகள்: "மாத்து வேட்டி" குறித்த ஒரு பார்வை (இ.இராஜேஸ்கண்ணன்) ஆகிய 15 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 19ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

## 16839

**பிரமிள் கவிதைகள் ஒரு நுண்ணிய உசாவல்.** ஈழக்கவி (இயற்பெயர்: ஏ.எச்.எம். நவாஸ்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2022. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

42 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-624-5881-42-0.

வடிவமும் கட்டமைப்பும் நன்கு அமைந்திருக்க, இறுக்கமும் செறிவும் அடர்ந்திருக்க, சொற்சிக்கனம் அமைய, மென் இசை நயம் இழையோட, ஆகர்ஷ தனிக் கவிதை மொழியோடு மரபிலக்கிய சீர்பிரிப்புப் போல வரிகள் கொண்ட பிரமிளின் கவிதைகள் செவ்வியல் தன்மை பெற்றவை. பிரமிளின் கவிதைகளில் தனித்த நுட்பமான சொற்களில் ஒரு ரம்ய மாய உலகம் கட்டப்படுகிறது. படிமங்களின் துணைகொண்டு கவிதைகள் காட்சிரூபத்தில் மாற்றப்படுகின்றன. "பௌதிக யதார்த்தத்தை மீறிய நிதர்சனங்களைப் பற்றிய விசாரமயமான பிரமிப்புகளின் வெளிப்பாடுகளே கவிதைகள்" என்று கூறும் பிரமிள், கவிதையின் இயல்பான தோற்றத்தையும் அதன் மூலசக்தியையும் தன் அழகியல் கவித்துவ தரிசனத்தால் வெளிக்கொணர்ந்தவர் என்பது வெள்ளிடைமலை. அவரது கவிதைகள் பற்றிய ஒரு ஆழமான ஆய்வாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. 222 ஆவது ஜீவநதி வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.

### 16840

**வலியும் வழியுமாக: கவிஞர் சோ.பத்மநாதன் கவிதைகள்.** அ.பௌநந்தி. பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, மார்கழி 2021. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

viii, 86 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-5881-29-1

ஈழத்துத் தமிழ்க் கவிதைப் படைப்பாளிகளில் குறிப்பிடத் தக்கவரான கவிஞர் சோ.பத்மநாதன் (சோ.ப.) கவிதைகளில் ஈழத் தமிழ்மக்களின் ஒரு காலகட்டத்து வாழ்வியலைத் தரிசிக்க முடிகின்றது. இன ஒடுக்குமுறை, அதனால் ஏற்பட்ட போர் பற்றி மட்டுமின்றி அவற்றின் அழிவுகளையும் துயரங்களையும் உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டும் கவிதைகளைப் படைத்துள்ளார். அவரது கவிதைகளில் பாடப்பட்டுள்ள விடயங்கள் மட்டுமின்றி கையாளப்பட்ட உத்திகளும் வாசகர் நெஞ்சைப் படைப்போடு பிணைத்து வைத்திருக்கும் திறம் வாய்ந்தவை. சோ.ப.அவர்களது "வடக்கிருத்தல்" (1998), "நல்லூர் முருகன் காவடிச் சிந்து" (1986) ஆகிய படைப்புகளை முன்வைத்து இந்த ஆய்வுக் கட்டுரை எழுதப் படுகின்றது. விவரண அணுகுமுறையிலும், தேவையான இடங்களில் ஒப்பீட்டு அடிப்படையிலும் அவரது படைப்புகள் பற்றி இவ்வாய்வில் நோக்கப்பட்டுள்ளது. இந்நூல் 215ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

## 894.8 (7) பலவினத் தொகுப்பு

### 16841

**அசையும் நாணல்கள் (அசைவு-1).** வ.ஜசிந்தன் (மலர்க் குழுத் தலைவர்). யாழ்ப்பாணம்: நதியோர நாணல்கள் இலக்கிய மன்றம், நாவற்காடு, வரணி, தென்மராட்சி, 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2018. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

xx, 84 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-7192-00-0.

நதியோர நாணல்கள் இலக்கிய மன்றத்தின் முதலாவது வெளியீடாக இவ்விலக்கியத் தொகுப்பு பல்வேறு படைப்பாளிகளின் ஆக்கங்களுடன் வெளிவந்துள்ளது. மலர்க்குழுத் தலைவராக வ.ஜசிந்தன் அவர்களும், செல்வி க.இராசமலர் (செயலாளர்), செ.கபிரியேல்பிள்ளை (ஆலோசகர்), சி.சபாரத்தினம் (ஆலோசகர்), சி.மகிந்தன் (நிலையப் பொறுப்பதிகாரி) ஆகியோர் அங்கத்தவர்களாகவும் இணைந்து இம்மலரை வெளிக்கொணர்ந்துள்ளனர். கிராமியக் கவிதைகள் (தாவணிக்கால கனவுகள், ஆல விழுது ஊஞ்சல், சதிராடும் மீன்கள்), புதுக்கவிதை தழுவிய புரட்சிக் கவிதைகள் (அன்னைத் தமிழே நீயழகு, வெந்தணல் வீசும் காற்று), மரபுக் கவிதைகள் (வானமழை பெய்துவிட்டால் மாநிலமே குதூகலிக்கும்), கவிச்சமர் (மனவலிமை அதிகமுள்ளவர்கள் ஆண்கள், மனவலிமை அதிக முள்ளவர்கள் பெண்கள்), ஹைக்கூ கவிதைகள், நதியின் ஓசைகள் - புதுக்கவிதைகள் (காதலாகிய கவிதை, முடிவறியாப் பயணம், நதியாகும் மழைத்துளிகள்),

*சிறுகதைகள் (நடமாடும் நடைபிணங்கள், முதல் காதல்), கட்டுரை (போதைப் பொருளும் இளைய தலைமுறையினரும்), பின்னிணைப்பு (நதியோர நாணல்கள் இலக்கிய மன்றம் நடாத்திய இலக்கியப் போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றி பெற்ற படைப்பாளிகளின் விபரம்) ஆகிய பிரிவுகளின் கீழ் ஆக்கங்கள் ஒழுங்குபடுத்தித் தரப்பட்டுள்ளன.*

**16842**

**இளவேனிற் காலத்து உரையாடல்கள் (நேர்காணல்கள்).** *நந்தவனம் சந்திரசேகரன். திருச்சி 620 003: இனிய நந்தவனம் பதிப்பகம், எண் 17, பாய்க்காரத் தெரு, உறையூர், 1ஆவது பதிப்பு, ஜனவரி 2022. (சென்னை: ஏ.கே. பிரிண்டர்ஸ்).*

*104 பக்கம், விலை: இந்திய ரூபா 100.00, அளவு: 19x13 சமீ.,* ISBN: *978-81-953066-1-9.*

*இலங்கையில் வவுனியா-சின்னப்புதுக் குளத்தில் பிறந்து கோவில் புதுக்குளத்தில் வளர்ந்து, 1981ஆம் ஆண்டிலிருந்து தமிழகத்தில் திருச்சியில் நிரந்தரமாக வசித்துவரும் தனவந்தன் சந்திரசேகரன், நந்தவனம் சந்திரசேகரன் என்ற பெயரால் தமிழர் வாழும் பூமியெங்கும் அறியப்பெற்றவர். "இனிய நந்தவனம்" என்ற பெயரில் இவர் திருச்சியிலிருந்து 1997ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் முதல் ஒரு கலை, இலக்கியச் சிற்றிதழை மாதாந்தம் நடத்திவருகிறார். 25 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் "இனிய நந்தவனம்" மாத இதழின் 25ஆம் ஆண்டு விழா 10/01/ 2022 அன்று சிறப்பாக நடைபெற்றது. அவ்வேளை நந்தவனம் சந்திரசேகரனின் நேர்காணல்/கட்டுரைத் தொகுப்பான "இளவேனிற் காலத்து உரையாடல்கள்" என்ற இந்நூலும் வெளியிடப்பட்டது. இதில் அழகிய ஆவணப் புதையல், வரலாற்றுப் பக்கங்களில் எனது அடையாளம், ஈழ மண்ணிலே பிறந்து தமிழ்நாட்டில் புகழ்பரப்பும் நந்தவனம் சந்திரசேகரன், தமிழக ஊடகங்கள் தமிழைச் சிதைக்கின்றன: ஆங்கில மோகம் தமிழரை ஆட்கொண்டுள்ளது, சிற்றி தழ்கள் தரமான இலக்கியங்களால் பதிவுசெய்யப்படவேண்டும், எழுத்தை நம்பி யாரும் இருக்க முடியாது: நந்தவனம் சந்திரசேகரன் பேட்டி, கற்றுக் கொள்பவ னாகவே, வாசகர்கள் வாசிக்கும் பழக்கத்தை விடாமல் தொடரவேண்டும், சிந்திக்க வைத்த சிற்றிதழாளர்களின் ஒன்றுகூடல், நூல் விமர்சனம்: "காகிதப்பூவில் தேன் துளிகள்" நட்டுவைத்திருக்கும் நம்பிக்கை விதைகள், சுவாசிக்கச் சில சிற்றிதழ்கள்-நூல்விமர்சனம், இனிய நந்தவனம்-நூல் விமர்சனம், நண்பன் நூலகம்- நூல் விமர்சனம், இனிய நந்தவனம்-பல்சுவை சிந்தனை இதழ், நண்பன் நூலகம், இனிய நந்தவனம்-உலகத் தமிழர்களின் சஞ்சிகை, இனிய நந்தவனம் பொங்கல் இதழ், நூற்சுவை நுகர்வோம், எனது பார்வையில் இன்றைய யாழ்ப்பாணம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

### 16843

**சாந்தன் படைப்புலகம்: தொகுதி 1.** ஐயாத்துரை சாந்தன் (மூலம்), ஈஸ்வரநாதபிள்ளை குமரன், தக்சாயினி செல்வகுமார் (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், 1ஆவது பதிப்பு, 2021, (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

xxxvi, 940 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x19 சமீ., ISBN: 978-624-5911-08-0.

ஐயாத்துரை சாந்தன் நீண்டகால எழுத்தனுபவமும் ஆளுமையும் கொண்டவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதும் இவரது ஆக்கங்கள் அவ்வப்போது தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. இப்பெருந்தொகுப்பில் அவரது சிறுகதை, குறுங்கதை, நெடுங்கதை, குறுநாவல், நாவல், கட்டுரைகள் என ஆக்க இலக்கியத்துறையின் பல்வேறு பரிமாணங்களிலும் அவர் எழுதிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இப்பெருந்தொகுப்பில் ஐ.சாந்தனின் படைப்பாக்கங்கள் அறிமுகங்கள்(2), நூன்முகங்கள் (பார்வை, கடுகு, ஒரே ஒரு ஊரிலே, ஒட்டுமா, முளைகள், கிருஷ்ணன் தூது, ஆரைகள், ஒளி சிறந்த நாட்டினிலே, இன்னொரு வெண்ணிரவு, காலங்கள், யாழ் இனிது, ஒரு பிடி மண், எழுதப்பட்ட அத்தியாயங்கள், இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம், சாந்தனின் எழுத்துலகம், பூமியின் மையத்திற்கு ஒரு பயணம், விளிம்பில் உலாவுதல், காட்டு வெளியிடை, சிட்டுக் குருவி, என் முதல் வாத்து, கனவெல்லாம் எதுவாகும், கேண்மை, எழுத்தின் மொழி ஆகிய நூல்களின் முன்னுரைகள், ஆசிரியர் குறிப்புகள் என்பன), சிறுகதைகள்(90), குறுங்கதைகள்(37), குறுநாவல்களும் நெடுங்கதைகளும் (17), பயணக் கட்டுரைகள்(3), நாவல் (ஒட்டுமா), கவிதை(சோவியத் நாடு), கட்டுரைகள்(6), புனைவு ஆக்கங்கள்(6), அநுபவம் (எழுத்தில் வாழ்தல்), நேர்காணல்கள்(4), விமர்சனங்கள்(12), பார்வைகள்(10), தடங்கள்(புகைப்படங்கள், புகைப்பட விளக்கங்கள்), பின்னிணைப்புகள் (நூற்பட்டியல், ஆக்கங்கள் இடம்பெற்ற தொகுப்புகள்) ஆகிய பிரிவுகளின்கீழ் பகுத்துத் தரப்பட்டுள்ளன.

### 16844

**சாரங்கனின் புதையல்கள்: அறிவியற் கட்டுரைகள்-கவிதைகள்.** வைத்தீஸ்வரன் சாரங்கன். தெல்லிப்பழை: மாணவர் மன்றம், யாழ்/ மகாஜனக் கல்லூரி, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2011. (மானிப்பாய்: திருச்செல்வி அச்சகம்).

viii, 63 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவரும் யாழ். மருத்துவபீட இறுதியாண்டு மாணவருமான அமரர் வைத்தீஸ்வரன் சாரங்கனின் நினைவாக அவரது நண்பர்கள் குழாம் தேடித் தொகுத்துள்ள சாரங்கனின் படைப்புக்களின் நூல்வடிவம் இதுவாகும். 1999 விஞ்ஞானப் பிரிவில் கல்வி பயின்ற சாரங்கன் மருத்துவ பீட மாணவனாகத் தெரிவுசெய்யப்பட்டவர். அங்கு தன் மருத்துவக்

கல்வியின் இறுதியாண்டைப் பூர்த்தி செய்யாத நிலையில் 20.08.2010 அன்று அகால மரணமடைந்துவிட்டார். பல்கலைக்கழக மாணவராக இருந்த காலத்தில் தன் எழுத்தாற்றலை வளர்த்துக்கொண்ட இவர் பல்வேறு ஊடகங்களிலும் தன் கவிதைகளை வெளியிட்டிருந்தார். "வரை" என்ற மாதாந்த அறிவில் சஞ்சிகையின் துணை ஆசிரியராக இருந்து பல அறிவில் கட்டுரைகளையும் பல்சுவை விடயங் களையும் தொகுத்து வழங்கியிருந்தார். இந்நூல் அப்படைப்பாக்கங்களின் தொகுப்பாகும்.

## 16845

**நிற்பனவும் நிலைப்பனவும் (கவிதை-சிறுகதை-கட்டுரை).** சி.தில்லைநாதன் (மூலம்), கௌ.சித்தாந்தன் (தொகுப்பாசிரியர்). சுன்னாகம்: நூலக மன்றம், யாழ்.ஸ்கந்தவ ரோதயா கல்லூரி, 1ஆவது பதிப்பு, மார்ச் 2022. (அளவெட்டி: நியூ பாரதி பிரிண்டர்ஸ்).

xii, 87 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x13.5 சமீ., ISBN: 978-624-6245-00-9.

இந்நூலில் பேராசிரியர் சி.தில்லைநாதன் அவர்களின் 13 கவிதைகளும் (இன்பத் தமிழ், பாட்டு வேணுமா?, வருத்தம் மறந்திட, கனவாய்ப் போனதே, மலரும் வண்டும், எங்கள் கதை, என் நினைவு, நிலவைப் பிடித்திடுவேன், அறிவெமக்குத் தந்தவையோ, பொங்கும் கவிதை பொலிந்து, உள்ளங்கள் விரியட்டும், வித்தகர் விபுலானந்தர், மானிடத்துக்கு மாவிட்டபுரத்தின் சவால்), இரு சிறுகதைகளும் (மனப்புண், வாழ்க்கைச் சூழலிலே), ஒரு கதையும் (நடமாடும் கதை), மூன்று கட்டுரைகளும் (அறிவினை வளர்த்த ஆசான், ஸ்கந்தவரோதயா எங்கள் கல்லூரி, ஸ்கந்தா: பொற்கால நினைவுகள் சில) தொகுத்துத் தரப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் சுன்னாகத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி நாகம்மா தம்பதிகளின் புதல்வரான பேராசிரியர் தில்லைநாதன் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் வாழ்நாட் பேராசிரியராவார். யாழ்.ஸ்கந்தவரோதயா கல்லூரியில் தனது இடை நிலைக் கல்வியைக் கற்றபின் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று முதல் வகுப்பில் சித்திபெற்றவர். அங்கேயே தனது முதுகலை மாணிப் பட்டத்தினையும் பின்னர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் எம்.லிட். பட்டத்தையும் பெற்றவர். தினகரன், ஒப்சேர்வர் பத்திரிகைகளின் ஆசிரிய பீடத்தில் சிலகாலம் பணியாற்றியபின் வித்தியோதய பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணைந்து அங்கே உதவி விரிவுரையாளராகிப் பின் விரிவுரையாளராகி, 1991 முதல் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். இலங்கை அரசின் "கலாகீர்த்தி" விருதினையும் "இலக்கியச் செம்மல்" பட்டத்தையும் பெற்றவர்.

## 16846

**பறவைகள்.** *மாலினி அரவிந்தன். திருச்சி 620 003: இனிய நந்தவனம் பதிப்பகம், எண் 17, பாய்க்காரத் தெரு, உறையூர், 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2021. (சென்னை: கப்பிட்டல் பிரிண்டர்ஸ்).*

xii, *13-160 பக்கம், விலை: இந்திய ரூபா 150.00, அளவு: 21*x*14 சமீ.,* ISBN: *978-81-953066-6-4.*

*யாழ்ப்பாணத்தில் பிறந்த மாலினி, வேம்படி மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்று கொழும்பில் மகாராஜா இன்வெஸ்ட் மென்ட் நிறுவனத்தில் கணக்காளராகப் பணியாற்றியபின் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து சென்றவர். அங்கு சிற்றி குரூப் நிறுவனத்தில் கணக்காளராகவும், பீல் பிராந்திய கல்விச் சபையில் சர்வதேச மொழித்திட்டத்தின் கீழ் பகுதிநேர ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இவரது இலக்கியப் படைப்புளைத் தொகுத்து சிறுகதைகள் (பறவைகள், எனக்கொரு சினேகிதி, மௌனமே பேசு, சாந்தியாகிய நான், விதியின் வழியே, தாய் மனசு, விலங்கு, முடி துறந்த கதை, சொந்தம் எப்போதும் தொடர்கதைதான், புளிமாங்காய்), சிறுவர் கதைகள் (கனவு நினைவாக வேண்டும், மர்ம மாலை), கட்டுரைகள் (விண்வெளியில் நடைபயிலும் பெண்கள், வானத்தை ஆளும் பெண்கள், புதியன புகுதலும் பழையன கழிதலும், நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம், சமூக வாழ்வில் கனடியத் தமிழ்ப் பெண்களின் முன்னேற்றம், சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற பெண்கள், எழுத்தால் உயர்ந்த ராஜம் கிருஷ்ணன், தற்கால சிறுகதை புதினங்களில் காலத்தின் சுவடுகள், தூறல் இதழில் சிறுவர் பகுதி ஆசிரியர் மாலினி அரவிந்தன் தலையங்கங்கள்) ஆகிய மூன்று பிரிவுகளாகப் பிரித்துத் தந்துள்ளார்.*

## 16847

**வாணர் படைப்புக்கள்.** *தி.பொன்னம்பலவாணர் (மூலம்), நாகேந்திரம் நவராஜ், தனிநாயகம் அமலதாஸ் (பதிப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2021. (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).*

xxiv, *885 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26*x*19 சமீ.,* ISBN: *978-624-5911-15-8.*

*பொன்னாலையூர் பண்டிதர் தி.பொன்னம்பலவாணரின் படைப்புக்களைத் தொகுத்து இப்பெருநூல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூலில் உள்ள படைப் பாக்கங்கள் நூலியல் (காசி காண்டம்), உரையியல் (புட்பவிதி, பறாளை விநாயகர் பள்ளு, தருக்கசங்கிரகத்திற்கான அறிமுகவுரை), பிரசுரவியல் (பிள்ளையார் கதை விளக்கம், சைவ சமயத்தின் சில இனிய சிறப்புகள், திருவாதவூரடிகள் புராண சிந்தனம், முருக விரதம், சனீஸ்வர வழிபாடு, அவசர அவசிய விண்ணப்பம், ஓம் நமசிவாய உலக சுபீட்ச வங்கி), ஈழநாட்டுக் கட்டுரைகள் (வெள்ளிச் சிந்தனைகள்-77 பதிவுகள், சிறப்புக் கட்டுரைகள்-28 கட்டுரைகள், பாலாவிக் கரையினிலே -*

திருக்கேதீச்சரம் தொடர்பான 15 ஆக்கங்கள், அந்தத் தமிழகம் நோக்கி- தமிழகப் பின்னணியில் எழுதப்பட்ட 15 ஆக்கங்கள், புதிய புத்தகம்: நூல் அறிமுகங்கள், ஞானச்சுடர்க் கட்டுரைகள்- 29 ஆக்கங்கள், நல்லைக்குமரன் இதழ்க் கட்டுரைகள்-4 ஆக்கங்கள், சிவதொண்டன் இதழ்க் கட்டுரைகள்- 12 ஆக்கங்கள்), கட்டுரையியல் (தமிழியல்- 9 கட்டுரைகள், சமயவியல்- 19 கட்டுரைகள், திருமுறையியல்- 5 கட்டுரைகள், வழிபாட்டியல்- 18 கட்டுரைகள், விமர்சனவியல்-3 கட்டுரைகள், அணிந்துரையியல் -15 உரைகள் ஆகிய 10 வகுப்புகளின் கீழ் ஆக்கங்கள் வகுத்துத் தரப்பட்டுள்ளன.

## 894.8 (87) அங்கதம்/நகைச்சுவை தொகுப்பு

### 16848

**நினைக்க சிரிக்க சிந்திக்க.** பொ.சண்முகநாதன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1ஆவது பதிப்பு, 2005. (சென்னை 600004: முருகன் ஆஃப்செட் பிரின்டர்ஸ்).

xviii, 218 பக்கம், விலை: இந்திய ரூபா 60.00, அளவு: 17x12.5 சமீ.

இலகு வாசிப்பிற்கான கனதி கலந்த செய்திகளையும் குறிப்புகளையும் சுருக்கமாகத் தந்து அதன் பின்னர் சிந்திக்கத் தக்க கருத்துகளையும் எடுத்துக்கொண்ட பொருளுடன் ஒட்டியதாக ஆசிரியர் வழங்கியுள்ளார். இத்தொகுப்பில் 60 சுவையான கட்டுரைகள் உள்ளன. சங்குவேலியைச் சேர்ந்த பொ.சண்முகநாதன் ஈழத்தின் நகைச்சுவை எழுத்தாளர்களின் குறிப்பிடத்தகுந்தவர். 1961இல் தனது முதலாவது நகைச்சுவைக் கட்டுரையை வீரகேசரியில் எழுதியவர். கலைச்செல்வி உள்ளிட்ட பல சிற்றிதழ்களிலும், பத்திரிகைகளிலும் இவரது பல கட்டுரைகள் பின்னாளில் இடம்பெற்றிருந்தன. 2003-2005 காலப்பகுதியில் உதயன் பத்திரிகையில் சண் அங்கிள் என்ற பெயரில் வாராந்தம் பத்தி எழுத்துக்களையும் எழுதிவந்தார். 2008இல் கலாபூஷணம் விருதுபெற்ற இவர் அதே ஆண்டு வலிகாமம் தெற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் "ஞான ஏந்தல்" விருதினையும் பின்னர் 2009இல் சுன்னாகம் பிரதேச சபையின் பிரதேச இலக்கிய கர்த்தா கௌரவிப்பின் போது "தமிழ்ச்சுடர்" விருதினையும் பெற்றவர். (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25612).

# 900 புவியியல், வரலாறுகள்

## 909 நாகரீகங்கள்

மேலும் பார்க்க:

உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு. 16957

## 910.01 புவியியல் பாடநூல்கள்

### 16849

**பூகோள தர்ப்பணம் (Geography in Verse).** எஸ்.எஸ்.ஜெரேமையா (S.S.Jeremiah). *தெல்லிப்பழை: ஏரெமியா சின்னத்தம்பி, தலைமை ஆசிரியர்,* Training and Industrial School, *2ஆவது பதிப்பு, 1889, 1ஆவது பதிப்பு, 1876. (தெல்லிப்பழை:* Training and Industrial School Press*).*

*(8), 34 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.*

*காலனித்துவ ஆட்சிக் காலத்தில் புவியியல் பாடத்தை பயிற்றுவிக்கும் போது ஊர்களினதும் நாடுகளினதும் பெயர்களை மாணவர்கள் நினைவில் வைத்திருக்கும் வகையில் செய்யுள் வடிவில் இயற்றப்பட்ட நூல் இது. இலங்கையில் புவியியல் அல்லது பூமிசாஸ்திரம் எனப் பின்னாளில் அறியப்பட்ட "பூகோள தர்ப்பணம்" பயிலும் மாணவர்களுக்கென இலங்கையில் வெளியான இத்துறையிலான முதலாவது தமிழ் நூல் என அறியப்பட்டுள்ளது. பூகோளத்தைச் சிற்றுருவாக்கிச் சமீபத்தில் கொண்டுவந்து காட்டும் ஒரு கண்ணாடியாக இந்நூல் பற்றி அந்நாளில் விதந்து கூறப்பட்டுள்ளதாக முகவுரையில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.*

*இந்நூலின் காப்புச் செய்யுள் பின்வருமாறு:*

> "பூகோள மீது பொருந்து மிடப் பெயர்கள்
> வாகான சிந்தை வசப்படுத்தப் - பூகோள
> தர்ப்பணத்தை நற்றமிழ்ச் செயுட்டொடுத் துரைத்திடற்குக்
> கர்த்தனித்த பொற்பதமேகாப்பு."

*மாதிரிக்கொரு செய்யுளாக "வாவிகள்" பற்றிக் குறிப்பிடும் ஏழாவது செய்யுள்*

> "கட்டுக்கரைக்குளம் கந்தளாய் முல்லை கவின் பதுவில்
> கிட்டுந்தனிக் கொக்கிளாயேரி மின்னெரி கீழ்மடுவாம்
> மட்டக்களப்புடன் நீர்கொழும்பும் வெண்வனசமுகை
> வட்டித்தெழுங் கொழும்போடு கண்டிக்குளம் வாவிகளே".

*என அமைந்துள்ளது.*

## 911 பிரயாண நூல்கள், வழிகாட்டிகள்

### 16850

**உடக்கு: பயணக் கதை.** மெலிஞ்சிமுத்தன். சென்னை 600 005: கருப்புப் பிரதிகள், பி 55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2018. (சென்னை 600005: ஜோதி என்டர்பிரைசஸ்).

149 பக்கம், விலை: இந்திய ரூபா 130.00, அளவு: 22.5x15 சமீ.

சொந்த தேசத்தில் பிற ஜாதிகளிடம் புழங்க விரும்பாத மனிதர்கள் ஒரு படகிற் குள்ளோ ஒரு குடிலுக்குள்ளோ நீண்ட பயண வாகனத்திற்குள்ளோ திக்கற்று விரியும் வனாந்திரங்களுள்ளோ தம்முடைய வாழ்வை காப்பாற்றிக் கொள்ளும் முயற்சிகளை அகதியாய் வந்தடைந்த தேசத்திலிருந்து எழுதிக் காட்டும் சித்திரமிது. தேசங்கள் கண்டங்கள் தாண்டி உயிர்வாழ்தலுக்கான எல்லை கடத்தல்களின் அவஸ்தைகள், துயரங்கள் என பல்வேறு தேசத்தவர்களுடனான அனுபவங்களைப் பகிர்ந்தவாறு வாசகனை கூடவே அழைத்துச் செல்கிறது மெலிஞ்சி முத்தனின் எழுத்துக்கள். "புனைவுகளில் அகதி வாழ்வை புனைவது போரிலிருந்து தப்பியோடு தலைப் போன்றே அவதியானது. ஆனால் மனித வாழ்வின் பாடுகளை, நாடுகளை மொழிகளை தேசியங்களை கடந்து இன்னொரு தேசத்தில் வசித்து கொண்டு எப்படித்தான் இன்னொரு மனிதரிடம் தன் அனுபவத்தை கடத்துவது என்கிற போதுதான் இப்படியான தற்புனைவு இலக்கிய வகைமைகள் தன் சாளரத்தை திறக்கின்றன" என்ற நீலகண்டனின் நூல் பற்றிய குறிப்பு இந்த நூலுக்கான சுருக்க அறிமுகமாகும். "மரவர்ணமனிதன்" என அடையாளமிட்டவாறு மெக்சிகோவி லிருந்து தன் இறுதி இலக்கான கனடாவின் எல்லைவரை சென்று இறந்து போகும்வரைக்குமான இடைப்பட்ட காலங்களினதும் தூரங்களினதும் கதையாக நகரும் இந்நூல் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் பிற மனித வாழ்நிலைகள் முக்கியமானவை. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 70076).

### 16851

**காட்டு வெளியிடை: கென்யப் பயணக்கட்டுரை.** ஐயாத்துரை சாந்தன். சென்னை 600011: இருவாட்சி வெளியீடு, (இலக்கியத் துறைமுகம்), 41, கல்யாணசுந்தரம் தெரு, பெரம்பூர், 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2007. (சென்னை 600 005: எம். கே.என்டர்பிரைஸஸ்).

144 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 21.5x14.5 சமீ.

2003இல் கென்யப் பயணமொன்றினை மேற்கொண்டு சாந்தன் ஆபிரிக்கப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். அப்பயண அனுபவங்களை சுவையாக "வெள்ளிநாதம்" இதழ்களில் 29 அத்தியாயங்களில் ஒரு பயணத் தொடராக வெளியிட்டுவந்தார். அத்தொடரின் நூலுரு இதுவாகும். (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34555).

### 16852

**புனித கயிலாச யாத்திரையும் எனது அனுபவங்களும்.** பரமசாமி பஞ்சாட்சரம். அவுஸ்திரேலியா: பரமசாமி பஞ்சாட்சரம், 186A, Harrow Road, Auburn 2144, NSW, 1ஆவது பதிப்பு நவம்பர் 2015. (அவுஸ்திரேலியா: டிப்ஸ் பிரின்ட்ஸ்).

256 பக்கம், ஒளிப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-0-9944910-0-8.

ஆசிரியர் மேற்கொண்ட கயிலாச யாத்திரை பற்றிய அனுபவக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் இந்நூலில் தரப்பட்டுள்ளன. கயிலாச மலை, மானச ரோவர் ஏரி, கயிலை வரலாறும் நாயன்மார்களும் பெரியார்களும், புனித யாத்திரை, பயணக்கையேடு, தெட்சண கைலாசம்-திருக்கோணமலை, திருக்கயிலாசப் புனித யாத்திரையும் அதன் நிறைவும், திருமுறைகளிற் கயிலாசம் ஆகிய பிரதான தலைப்புகளின் கீழ் பல்வேறு சிறு தலைப்புகளாக வகுத்து இந்நூலை நிறைவு செய்துள்ளார். பயணக்கையேடு என்ற பிரிவில் ஆசிரியரின் அன்றாட பயண அனுபவங்கள் பத்தொன்பது நாள்களாக வகுத்து அன்றாட அனுபவங்களை பக்தி சிரத்தையுடன் பகிர்ந்துகொண்டுள்ளார்.

## 920.01 துறைசாரா வாழ்க்கை வரலாறுகள்

### 16853

**அல்லையூரின் அமரஞானி.** ரவீந்திரன் ஜெயபாலினி, ஜோ. மல்லூரி (தொகுப்பாசிரியர்கள்). பிரான்ஸ்: செல்லத்துரை தவவிநாயகம் நினைவுக் குழு, 1ஆவது பதிப்பு, மே 2001. (அச்சக விபரம் தரப்படவில்லை).

478 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

அல்லைப்பிட்டியை பிறப்பிடமாகவும் பிரான்சு நாட்டை வாழ்வின் பிற்பகுதியில் வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் செல்லத்துரை தவவிநாயகம் அவர்கள் (26.05.1923-10.04.2001) மறைந்தமையை நினைவுகூரும் வகையில் தொகுத்து வழங்கப்பட்ட கவித்துவ எழுத்துக்களால் வடிவமைக்கப்பட்ட நினைவிதழ். கிராமத்தின் தலைமைக்காரராக அல்லைப்பிட்டியில் வலம்வந்த இவர், உடையார் பரம்பரையில் வழிவந்த செல்லத்துரை-சொர்ணம்மா தம்பதியினரின் புத்திரனாவார்.

### 16854

**இன்னும் கொஞ்சநேரம் இருந்தால்தான் என்ன: ஓர் இதயத்தின் கதை.** வயிரமுத்து திவ்வியராஜன். யாழ்ப்பாணம்: கலாலயம் பதிப்பகம், இல.68, நீதிமன்ற வீதி, மல்லாகம், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2021. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).

xx, 146 பக்கம், சித்திரம், புகைப்படம், விலை: ரூபா 525., அளவு: 22.5x15.5 சமீ., ISBN: 978-624-5760-01-5.

சத்திர சிகிச்சை செய்த நிலையிலும் பத்துத் தடவைகளுக்கு மேல் கடுமையாகப் பாதிப்புற்ற நிலையிலும் வலுவுடன் இயங்குவேன் என்ற உருக்கு உறுதி மிக்க ஒரு இதயம் பற்றிய கதையைப் பேசுகிற நூல் இது. இந்த உந்துதலுடன் ஓய்வொழிச்சல் இல்லாமல் இயங்குகின்ற திரு. திவ்வியராஜனின் திட மனதுதான் இந்த அறிவியல் வளர்ச்சியை வாழ்வியல் பயன்பாட்டுக்கு உரித்தாக வென்றெடுத்துச் சாதித்துக் காட்டியது. கொழும்பு பல்கலைக்கழக மாணவராக அவர் இருந்த 1970ஆம் ஆண்டுக் காலத்தில் இலங்கையில் சமத்துவச் சமூக மாற்றத்தைக் காண உழைக்கும் தீவிர செயற்பாட்டாளராக இயங்கியவர். அரசியல் சூறாவளியில் தேசிய இன விடுதலைப் போராட்டம் மேலெழுந்தபோது, காணாமலாக்கப்பட்ட தனது தம்பியைத் தேடிக் கண்டறியத் துடித்த அண்ணனாக எண்பதுகளில் அவரை காணமுடிகின்றது. புலம்பெயர்ந்த பின்னர் சென்னைக்கு வந்து குடும்பமாக ஒலிப்பேழை இயக்கத்தைத் தொடர்ந்தவர். தமிழகத்தில்- தன் புதிய வாழிடத்திலும் பாடகராக, பாடலாசிரியராக, கவிஞராக, திரைப்படச் செயற்பாட்டாளராக, படைப்பாளியாக தொலைக்காட்சி ஊடகவியலாளராக என்று பன்முகச் செயற் பாட்டில் ஈடுபட்ட இவரது அனுபவங்களின் பதிவு இது. உயிர் ஓசை, காதல் செய்வீர், தாக்குதல்-1, யார் தந்தது?, உருவும் அசைவும், யாகாவாராயினும், வாழ் நிலம், நல்லாசிரியனாய், தாக்குதல்-2, அச்சம் இல்லை, அமுங்குதல் இல்லை, கோடை கொடும்பனி, துள்ளி எழுந்து, எறித்மியா (Arrhythmia), எண்ணித் துணி, ஐ.சி.டி. (I.C.D.) என் தோழன், தோழனே உன் தோளோடு, தோற்றங்கள் பல, தாக்குதல்-3, இசையால் வசமாகி, எரியட்டும் தீ, இறவாமை, சமுத்திரத்தில் கரைதல், உயிர் உலா, நோயோடு போராடு, வாழ்தல் இனிது, முகநூல் கருத்துக்கள், திவ்வியராஜனின் கலைத் தடங்கள் ஆகிய 28 தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன.

## 16855

**இனி ஒரு விதி செய்வோம்**. ஆண்டி பசுபதி. நெடுந்தீவு: அமரர் ஆண்டி பசுபதி குடும்பத்தினர், 2ஆம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு, 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2021. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

நெடுந்தீவைச் சேர்ந்த அமரர் ஆண்டி பசுபதி அவர்களின் மறைவின் 31ஆம் நாள் நிகழ்வின் போது 22.08.2021 அன்று வெளியிடப்பட்டது. அமரர் பசுபதி பற்றிய இரங்கலுரை, அவரது வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு என்பவற்றுடன், மருத்துவ மாவனம் (க.துவாரகா), ஞாபகங்கள்-கவிதை (க.ஜீவிகா, ஆ.மதுநிதன்), நான் கண்ட பாரதியார் (க.கார்த்திகா), அமரர் (நிலவன்), எங்கள் ஐயாவிற்கு (க.செந்தூரன்), கல் (நிலவன்), இராட்சத மிருகம் (க.யருசிகா), காட்டு தேவதை (குஷன்), இனி ஒரு விதி செய்வோம் (நா.துஷாநந்தி), தாவர பீடை விரட்டிகள் (-), நஞ்சற்ற உணவு நானிலத்தை நலமாக்கும்: தாவர நோய் விரட்டிகள் (-), சேதனம் சேர்த்த மாதவம் செய்வோம் (-) ஆகிய படைப்பாக்கங்களையும் இணைத்து இந்நினைவு மலர் உருவாக்கப்பட்டுள்ளது.

## 16856

**எமது குடும்ப சரிதம்: எண்பது வயது சதாபிஷேகமலர்.** இ.குமாரசாமி சர்மா. யாழ்ப்பாணம்: பிரம்மஸ்ரீ இ.குமாரசாமி சர்மா, ஓய்வுநிலை உதவிப் பணிப்பாளர், 15, B.A. தம்பி லேன், வண்ணார்பண்ணை, 1ஆவது பதிப்பு, 2021. (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

41+34 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x16 சமீ.

எமது குடும்ப சரிதம், எமது வாழ்க்கை, எமது வாழ்வில் திருமணச் சடங்கு நிகழ்வுகள், கல்யாண ஊஞ்சல் பாடல்கள், கல்யாண நலங்கு பாடல்கள், சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் ஆகிய ஏழு இயல்களில் இம்மலர் தொகுத்துத் தரப்பட்டுள்ளது. இதுவரை பேராதனைக் குறிஞ்சிக் குமரன் கோயில், பகவதி மாரியம்மன் கோவில் வரலாறு, நெஞ்சில் நிறைந்தவை, தெய்வீக வாழ்வு, ஞானவைரவர் கோவில் வரலாறு, சங்கீத மகான்களும் எம்மண்ணில் சங்கீதக் கலைஞர்களும், நெஞ்சம் மறப்பதில்லை ஆகிய நூல்களைத் தொடர்ந்து பிரம்மஸ்ரீ இ.குமாரசாமி சர்மா அவர்கள் தன் குடும்ப வாழ்வை முன்வைத்து எழுதிய நூல் இதுவாகும். இந்நூலில் பிரம்மஸ்ரீ இ.குமாரசாமி சர்மா அவர்களின் குடும்ப வரலாறு, திருமணச் சடங்கு நிகழ்வுகள் ஆகியவற்றைத் தொடர்ந்து கல்யாண ஊஞ்சல் பாடல்கள், கல்யாண நலங்கு பாடல்கள் என்பனவும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

## 16857

**கொன்ஸின் சிந்தனையும் எதிர்வினையும்.** எஸ்.ஹரிதரன் (தொகுப்பாசிரியர்). லண்டன்: தம்பிராஜா ஜெயபாலன், லண்டன் குரல், 225, Fullwell Avenue, Clayhall, Ilford IG5 ORB, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (யாழ்ப்பாணம்:எஸ்.எஸ்.ஆர். பிரின்டிங் பிரஸ், இல. 330, பருத்தித்துறை வீதி, நல்லூர்).

72 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14 சமீ.

இந்நூலில் லண்டனில் புகலிட வாழ்வில் நெருங்கிய நண்பர்களாகவும் "தேசம்" சஞ்சிகையிலும், "லண்டன் குரல்" பத்திரிகையிலும் எழுத்தாளர்களாகவும் கிளிநொச்சியில் இயங்கிவரும் "லிட்டில் எயிட்" என்ற சமூக நல அமைப்பின்உருவாக்கத்திலும் நடவடிக்கைகளிலும் பணியாற்றிவந்த தம்பிராஜா ஜெயபாலன் - ரரின் கொன்ஸ்டன்ரைன் ஆகிய இருவரின் பரஸ்பர கருத்துப் பரிமாறல்கள் இவை. இரு தனிநபர்களுக்கு இடையேயான உறவையும், முரண்பாடு களையும் பொதுவெளியில் முன்வைத்து இணையத்தளத்தில் குறிப்பாக முகநூலில் அவ்விருவராலும், மூன்றாம் தரப்பான இத்தொகுப்பாளராலும் எழுதப்பட்ட கடிதங்கள், கட்டுரைகள், விமர்சனங்கள் ஆகியவற்றின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது.

## 16858

**நீங்காத நினைவுகளில்: மலையக மண்ணின் மைந்தர்கள்.** எம்.வாமதேவன். ஹட்டன்: பாக்யா பதிப்பகம், 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (கொழும்பு: GOD கிரியேட்டிவ் லாப்).

xviii, 82 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 22.5x16 சமீ., ISBN: 978-624-5888-02-3.

கல்வி (இர. சிவலிங்கம், எஸ்.திருச்செந்தூரன், டி.வி.மாரிமுத்து, எம்.சின்னத்தம்பி), தொழிற்சங்கம்/அரசியல் (வி.கே.வெள்ளையன், பெ.சந்திரசேகரன், ஓ.ஏ.இராமையா, எம். இராமலிங்கம்), நிர்வாகம் (சி.நவரட்ன, பி.முருகேசு), இலக்கியம் (சி.வி. வேலுப்பிள்ளை, சாரல்நாடன், தமிழோவியன், மல்லிகை சி.குமார்), ஊடகம் (எஸ்.எம்.கார்மேகம், ந.நெடுஞ்செழியன், பொன்.கிருஷ்ணசாமி) ஆகிய ஐந்து துறைகளிலும் தடம்பதித்துச் சென்ற பதினேழு ஆளுமைகள் பற்றிய பதிவாக இந்நூல் அமைந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 69962).

## 16859

**மூதூரின் முதுசங்கள்: பகுதி 1.** ஜுவைரியா ஷெரிப் (இயற்பெயர்: எம்.சீ.எம். ஷெரிப்). மூதூர்: கலை இலக்கிய ஒன்றியம், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

xxxvi, 552 பக்கம், விலை: ரூபா 800., அளவு: 22x15 சமீ., ISBN: 978-624-98937-0-2.

ஜுவைரியா ஷெரிப் அவர்கள், ஏப்ரல் 2011 தொடக்கம் மூதூர், "துலாம்பரம்" பத்திரிகையில் "மூதூரின் முதலாவது" என்ற தலைப்பிலும், "நீத்தார் பெருமை" என்னும் தலைப்பிலும் பல்வேறு ஆளுமைகள் பற்றித் தொடராக எழுதிவந்தார். மார்ச் 2013இல் துலாம்பரம் தனது இருபது இதழ்களோடு நின்றுபோனது. அதன் பின்னும் ஜுவைரியா ஷெரிப் தொடர்ந்து "மூதூரின் முதுசங்கள்" என்ற தலைப்பில் ஜனவரி 2020 முதல் தனது முகநூல் பக்கப் பதிவுகளாக இத் தொடரை வெளியிட்டு வந்தார். இவை அனைத்தினதும் திரட்டிய தொகுப்பாக இந்நூலின் முதலாம் பாகம் வெளிவந்துள்ளது. இந்நூலில் மூதூருக்கு வளம் சேர்த்த 170 பிரமுகர்கள் பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

## 16860

**வாமனம்: பெருவெளி ஒன்றைத் தேடி அலையும் நினைவுகள்.** இ.இராஜேஸ்கண்ணன். யாழ்ப்பாணம்: இ.இராஜேஸ்கண்ணன், சாத்வீக பிரஸ்தம் இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி, 1ஆவது பதிப்பு, மார்ச் 2021. (யாழ்ப்பாணம்: ஆகாயம் பதிப்பகம், இமையாணன், உடுப்பிட்டி).

24 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x14 சமீ.

தனது பத்தாவது அகவையில் மறைந்த இராஜேஸ்கண்ணன் வாமனன் (22.11.2010-17.2.2021) அவர்களின் மறைவின் நினைவு மலர். யாழ்ப்பாணம் வதிரியில் 22-01-1973இல் பிறந்த இராஜேஸ்கண்ணன் தற்போது இமையாணன் கிழக்கில் வசித்து வருகிறார். தனது ஆரம்பக் கல்வியை கரவெட்டி தேவரையாளி இந்துக்

கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை விக்னேஸ்வராக் கல்லூரியிலும் பெற்ற இவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பட்டதாரி ஆவார். பின்னர் காமராஜர் பல்கலைக்கழகத்தில் முதுமாணி பட்டம் பெற்றவர். ஆரம்பத்தில் கரவெட்டி பிரதேச செயலகத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிய இராஜேஸ் கண்ணன் 2001 முதல் மூன்று வருடங்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறை விரிவுரையாளராகவும் பின்னர் மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியில் பட்டதாரி ஆசிரியப் பயிற்சியாளராகவும் பணியாற்றினார். அதன் பின்னர் மூன்று ஆண்டுகளாக யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்பித்தார். தற்போது நிரந்தரமாக யாழ் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறை விரிவுரையாளராகப் பணிபுரிந்து வருகின்றார். இவரது முதலாவது சிறுகதைத் தொகுதியான முதுசொமாக 2002இல் வெளியாகியது. "போர்வைக்குள் வாழ்வு" என்ற கவிதைத் தொகுதியினை 2008இல் வெளியிட்டுள்ளார். இந்நினைவு மலரில் இராஜேஸ்கண்ணன் தன் மகனின் இழப்பின் வலியை உணர்வுபூர்வமானதொரு நினைவுப்பதிகை இலக்கியமாகப் பதிவு செய்திருக்கிறார்.

## 920.1 ஊடகவியலாளர், நூலகர்கள், ஒலிபரப்புத்துறையினர்

### 16861

**அமரர் ரோகிணி பரராஜசிங்கம் அவர்களின் சிவபதப்பேறு குறித்த 31ஆம் நாள் நினைவு மலர்.** குடும்பத்தினர். பருத்தித்துறை: அமரர் ரோகிணி பரராஜசிங்கம் குடும்பத்தினர், 1ஆவது பதிப்பு, மே 2022. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

56 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

அமரர் ரோகிணி பரராஜசிங்கம் அவர்களின் (30.07.1940-27.04.2022) சிவபதப்பேறு குறித்த 31ஆம் நாள் (27.5.2022) நினைவு மலர். இம்மலரில் தோத்திரப்பாடல், உலக நீதி ஆகிய தொகுப்பைத் தொடர்ந்து சில படைப்பாக்கங்கள் இடம் பெற்றுள்ளன. இவை நான் கடவுளின் சிவசொரூபமே (சுவாமி யோகேஸ்வரானந்தா), ஆத்மீக வாழ்வின் இரகசியம் (சுவாமி யோகேஸ்வரானந்தா), தன்னலம் கருதா சேவையாளர் (கல்பனா சந்திரசேகர்), திருமதி ரோகிணி பரராஜசிங்கம் (என். செல்வராஜா), Tribute to Mrs Rohini Pararajasingam (யேசுதாசன் கலைச்செல்வன்), நூலகத்தாயே உன்னை சிரந்தாழ்த்தி வணங்குகின்றேன் (கு.நர்மதா), என் நீங்கா நினைவுகளில் ரோகிணி பரராஜசிங்கம் முன்னாள் நூலகர் (இரா.மகேஸ்வரன்), திருமதி ரோகிணி பரராஜசிங்கத்துடனான சில நினைவுக் குறிப்புகள் (கருணானந்தராஜா), என் நினைவின் பதிவுகளில் (கவிதை-கந்தையா ஸ்ரீமேனன்) ஆகிய பதிவுகளுடன் அமரர் ரோகிணி பரராஜசிங்கம் எழுதியிருந்த Significance of Library Function in the present context, Code of Conduct and Ethos of Library Professionals ஆகிய இரு கட்டுரைகளும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

## 16862

**இலங்கை-மலையக 'கானக நிலா" கல்லிடைக்குறிச்சியார்.** மானா மக்கீன் (இயற்பெயர்: எம்.எம்.மக்கீன்). சென்னை 600015: தாழையான் பதிப்பகம், 1ஆவது தளம், 26/1, மசூதி பள்ளம், 1ஆவது தெரு, மேற்கு சைதாப்பேட்டை, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2019. (சென்னை 14: யுனிவர்சல் பிரின்ட்ஸ்).

35 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 20.00, அளவு: 22x14 சமீ.

தமிழகத்தின் கல்லிடைக்குறிச்சியைச் சேர்ந்த டி.எம்.பீர்முகம்மது 1949-1962 காலகட்டத்தில் இலங்கையில் வாழ்ந்து பதித்த தடங்களைத் தேடி ஆராய்ந்து பதிவுசெய்யும் புதியதொரு முயற்சியை தமிழ்மணி மானா மக்கின் அவர்கள் இந்நூலில் மேற்கொண்டிருக்கிறார். "டியெம்பி" என்ற பெயரில் டி.எம்.பீர்முகம்மது தொழிற்சங்கவாதியாகவும், நவஜீவன் -வார இதழிலும், நணபன் என்ற வார இதழிலும் ஆசிரியராகப் பணியாற்றிய வகையில் ஓர் இதழாளராகவும் நாவல் இலக்கியங்களை வழங்கிய வகையில் எழுத்தாளராகவும், இலங்கையில் அறியப்பெற்றவர். "டியெம்பி"யின் குரல் இலங்கை-மலையகத்தின் தோட்டத் தொழிலாளர்களுக்காக மாத்திரம் ஒலிக்கவில்லை. சமுதாய மறுமலர்ச்சிக்காகவும் அவர் குரல்கொடுத்தார். அவரது "கங்காணி மகள்" எனும் நாவல் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியலையும், "சதியில் சிக்கிய சலீமா" எனும் நாவல் முஸ்லிம்களின் வாழ்வியலையும் பிரதிபலித்திருந்தன. அவரது பதினான்கு ஆண்டக்கால இலங்கை வாழ்வை மானா மக்கீன் அவர்கள் இந்நூலில் மேடைகளில் முழங்கிய பீரங்கி, இலங்கையில் நவஜீவனாகவும் நணபனாகவும் திகழ்ந்த கல்லிடைக்குறிச்சியார், கல்லிடைக்குறிச்சியாரின் கங்காணி மகளும் சதியில் சிக்கிய சலீமாவும் ஆகிய மூன்று கட்டுரைகளின் வாயிலாக பதிவு செய்திருக்கிறார். இவை முன்னர் தினக்குரல் வாரமலர், வீரகேசரி வாரவெளியீடு, சங்கமம் ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்திருந்தன.

## 16863

**ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள்: கட்டுரைகள்.** சண். தவராஜா (தொகுப்பாசிரியர்). மட்டக்களப்பு: சிவராம் ஞாபகார்த்த மன்றம்-சுவிஸ் கிளை, ஊடகவியலாளர் ஒன்றியம், 1ஆவது பதிப்பு, 2021. (அச்சக விபரம் தரப்படவில்லை).

ix, 274 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ.

சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18ஆவது ஞாபகார்த்த நிகழ்வினையொட்டி வெளியிடப்பட்ட கட்டுரைத் தொகுப்பு. மட்டக்களப்பில் 2004ஆம் ஆண்டு சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட ஊடகவிலாளர் அமரர். நடேசனுடனான மலரும் நினைவுகளை அவருடன் சமகாலத்தில் வாழ்ந்த நண்பர்களால் நினைவுகூரப்பெற்று இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. 2004ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் நாள் மட்டக்களப்பில் தனது வீட்டில் இருந்து காலை பணிக்குச் சென்றுகொண்டிருந்தபோது நடேசன் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். இந்நூலில் ஞா.குகநாதன் (ஊடகத் துறையில் ஓர் ஆளுமை), இரா.துரைரத்தினம்

*(மட்டக்களப்பின் வெகுஜன ஊடகத்துறையும் நடேசனின் காலமும்), இ.தயாபரன் (தமிழ்த் தேசியப் பற்றாளராக), பா.அரியநேத்திரன் (அது மகிழ்வானதொரு காலம்), ச.சந்திரபிரகாஷ் (நடேசன் படுகொலையின் நிழற்படச் சாட்சி), பிரசன்னா இந்திரகுமார் (அழியா நினைவில்), சீவகன் பூபாலரட்ணம் (மனிதனாக வாழ்ந்த செய்தியாளன்), அ.சுகுமாரன் (நல்லாட்சியும் உள்ளூர் சுயாட்சியுமே ஜனநாயகத்தின் முதகெலும்பு), எம்.பி.ரவிச்சந்திரா (தமிழ் வரலாற்றுக்குள் வாழ்ந்து வரலாறாகிப் போனவர்), ச.நவநீதன் (நடேசன் இன்னும் வாழ்கிறான்), எஸ்.கே.ராஜென் (ஐ.பீ. சீ. தமிழ் ஊடாக மக்கள் மனம் கவர்ந்த ஊடகர்), கனகரவி (ஊடகத்துறையில் தடம் பதித்த நடேசன்), வி.தேவராஜ் (தமிழ் ஊடகத் துறையினரே நாம் ஒன்றி ணைந்தால் எழுவோம். அன்றேல் வீழ்வோம்), அ.நிக்சன் (ஊடகத் தொழிற் தகுதியும் யூ டியூப் தமிழ்த் தொலைக் காட்சிகளும்), சோமிதரன் சிறிதரன் (படுகொலைக் கலாச்சாரத்தின் தொடர்ச்சியாய்), மானுடப்பித்தன் (உலகம் உள்ளவரை), திருமலை நவம் (நடேசன் எனும் நட்பு விருட்சம்), தெய்வீகன் (நடேசன்: கொலைநதி தின்ற ஊடகத் தலைமகன்), வே.தவராஜா (ஊடகம் வாழ உயிர்கொடுத்த ஊடகவியலாளன்), இ.பாக்கியராஜா (நெஞ்சுரம் கொண்ட நெல்லை நடேசன்), கோ.கருணாகரம் (நிறைவேறா ஆசையுடன் பறிபோன உயிர்), அகதித் தமிழன் (மானுட விடுதலைக்கான பாதையில் ஊடகங்கள்), கந்தையா தவராஜா (ஒரு யுகபுருஷன்), பரா பிரபா (நடேசன் அண்ணை), வி.மைக்கல் கொலின் (எக்காலத்திலும் பூர்த்தி செய்யப்பட முடியாத வெற்றிடம்), சிவம் பாக்கியநாதன் (ஊடக உலகில் ஒழியா நாமம்), வி.ரி.சகாதேவராஜா (நடேசன் என்றொரு ஊடக ஆளுமை), சீ.ஜெயந்திரகுமார் (நெஞ்சமெல்லாம் நிறைந்த நெல்லை நடேசன்), ஏ.எல்.எம்.சலீம் (உரத்துச் சொன்ன ஊடக நண்பன் நடேசன்), கோ.ரூசாங்கன் (தமிழ் ஊடகவியல் வளர்ச்சிக்கு அவசியமான தொழில்முறைப் பயிற்சியும் தேர்ச்சியும்), எல்.தேவஅதிரன் (நிரப்பப்படமுடியாத வெற்றிடம்), சண் தவராஜா (தன்னை நேசித்தவனை மறந்த மண்) ஆகியோரின் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.*

## 16864

**நான்கண்ட ஈழத்து நூலக ஆளுமைகள்.** *என்.செல்வராஜா. ஐக்கிய இராச்சியம்: அயோத்தி நூலக சேவைகள், இணை வெளியீட்டாளர், கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2022. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

xvi, *115 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 680., அளவு: 22*x*14.5 சமீ.,* ISBN: *978-624-6164-29-4.*

*எம்மிடையே வாழ்ந்து மறைந்த, இப்போதும் வாழ்கின்ற மதிப்பிற்குரிய சில நூலகர்களின் வாழ்வும் பணிகளும் பற்றிய தகவல்களை இன்றைய நூலகர்களும், நூலகத்துறை மாணவர்களும் அறிந்துகொள்வதால் அவர்கள் தமது நூலகத்துறை சார் வாழ்வையும் நம்பிக்கையுடன் முன்னெடுத்துச் செல்லமுடியும் என்ற நம்பிக்கையில் நூலாசிரியர் அறிந்த, தனது நூலக வாழ்வுடன் தொடர்புபட்டிருந்த 13 நூலகர்களின் வாழ்வும் பணியும் பற்றிய தகவல்களை முடிந்தவரை தேடித்*

*தொகுத்து, அவர்களுடனான தனது உறவையும் மீள்நினைவேற்றி, தனித்தனிக் கட்டுரைகளாக இத்தொகுப்பில் வழங்கியுள்ளார். இவை அவ்வப்போது அரங்கம் (லண்டன்), தாய்வீடு (கனடா), தேசம் (லண்டன்) மற்றும் சில புகலிட இதழ்களில் பிரசுரமாகியிருந்தன. தமிழறிஞர் மர்ஹூம் எஸ்.எம்.கமால்தீன்: வாழ்வும் பணிகளும், அமரர் செல்லத்துரை ரூபசிங்கம், கலாநிதி. வே. இ. பாக்கியநாதன்: ஈழத்து நூலகவியல்துறையில் எங்கள் குருநாதர், ரெஜினால்ட் செபரட்ணம் தம்பையா: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் நூலகர், ஏழாலை மண்தந்த நூலகர்: அமரர் சிற்றம்பலம் முருகவேள், திருமதி ரோகிணி பரராஜசிங்கம், யாழ். பல்கலைக்கழக நூலகர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம்,* M.B.M. *பைரூஸ்: ஈழத்து நூலகவியலில் ஒரு மும்மொழிச் சாதனையாளர், சாமுவேல் ஜோன் செல்வராஜா, யாழ். மத்திய கல்லூரி நூலகர் "மாணிக்ஸ்" என்கின்ற கா.மாணிக்கவாசகர், அரியாலையூர் தந்த நூலகர் சபாரத்தினம் தனபாலசிங்கம், அனலைதீவு திரு. கணேசஐயர் சௌந்தரராஜன் ஆகிய தலைப்புகளில் கட்டுரைகள் பதிவாகியுள்ளன. பின்னிணைப்பாக வேதநாயகம் தபேந்திரன் எழுதிய "எழுத்தாளர்களை உருவாக்கிய நூலகர் பொன்னையா இராசரத்தினம்" என்ற கட்டுரையும் இடம் பெற்றுள்ளது.*

### 16865

**புத்த(க)ன்: சிதம்பரப்பிள்ளை சிவகுமார் நினைவுக் குறிப்புகள்.** வாசுகி சிவகுமாரன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு: திருமதி வாசுகி சிவகுமார், 1ஆவது பதிப்பு, ஜனவரி 2023. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*229 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN: *978-624-99840-0-4.*

*யாழ். உடுத்துறையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட அமரர் சிதம்பரப்பிள்ளை சிவகுமார் (25.1.1962- 13.01.2022) இலங்கை வானொலி யிலும், சக்தி வானொலி-தொலைக்காட்சி முதலானவற்றிலும் காத்திரமான பங்களிப்பினை வழங்கிவந்தவர். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த தினமுரசு பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். அவரது காலத்தில் ஈழத்து எழுத்தாளர்களினதும் புகலிட படைப்பாளிகளினதும் ஆக்கங்களுக்கும் தினமுரசுவில் களம் வழங்கியிருந்தார். விடுதலைப் போராட்ட காலத்தில் தோழர் அமீன் எனவும் அறியப்பட்டவர். இவரது மறைவின் ஓராண்டு நிறைவில் இவர் பற்றிய பல்வேறு நண்பர்களின் நாற்பத்தியேழு மனப்பதிவுகளுடன் இந்நூல் வெளிவந்துள்ளது.*

### 16866

**புதினம்: இளமை இருபது 1996-2016.** ஈ.கே.இராஜகோபால் (ஆசிரியர்). லண்டன்: புதினம் வெளியீட்டாளர்கள், 38, Moffat Road, London SW17 7EZ, 1ஆவது பதிப்பு 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*184 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26*x*19 சமீ.*

இலண்டனிலிருந்து 20 ஆண்டுகளாக (1996-2016) தொடர்ந்து "புதினம்" இதழ் வெளிவருவதைக் குறிக்கும் முகமாக 29.10.2016 அன்று லண்டனில் (Richard Challoner, Menor Drive North, New Malden, Surrey KT3 5PE) நடந்தேறிய புதினம் 20ஆவது ஆண்டு விழாவில் வெளியிடப்பட்ட சிறப்பிதழ் இதுவாகும். இம்மலரில் நினைவுகளின் பாதையில் (ஈ.கே.இராஜகோபால்), புலம்பெயர் தமிழரின் ஊடகத் தமிழ்நெறி (எஸ்.திருச்செல்வம்), புதினத்தோடு பதினெட்டு ஆண்டுகள் (சிவ. தியாகராஜா), விண் மட்டும் தெய்வமன்று (இ.ஜெயராஜ்), உலகத் தலைநகரில் புதினம் (பொன்.பாலசுந்தரம்), வரலாற்றில் அழிக்கமுடியாத பக்கங்கள் (இரத்தினம் கந்தசாமி), தனி மனிதனின் உழைப்பின் வெளிப்பாடு (நாக சிறீகெங்காதரன்), ஈழகேசரி ராஜகோபாலும் நானும் (மாத்தளை சோமு), துள்ளித்திரிந்த இளமைக் காலம் (விமல் சொக்கநாதன்), ராஜகோபால் ஒரு தொடர்கதை (நவஜோதி யோகரட்ணம்), ஒரு சாதனையாளர்: புதினமும் மனிதமும் (கல்லாறு சதீஷ்), லண்டனில் விநாயக மிஷன்ஸ் புகழ்பாடும் புதினம் (ஏ.எஸ்.கணேசன் வேந்தன்), நெஞ்சை நெகிழவைக்கும் புதினம் நினைவுகள் (லண்டன் பாபா), புதினத்தில் ஒரு புதுமை (பொ.சண்முகநாதன்), மொட்டு விரியும் இதயம் மலரும் (இணுவை ச.சிறிரங்கன்), அறிஞர்களின் வித்துக்களை விருட்சமாக்கும் பூமி புதினம் (சிவதணிகாசலம்), மண்ணை நேசிப்பவர் (எஸ்.வேலாயுதம்), புதினம் ஒரு வரப்பிரசாதம் (எஸ்.நவரத்தினம்), நினைவில் நிற்கும் நிஜங்கள் (சரோஜினி சந்திரகோபால்), அந்நிய நாடுகளில் பத்திரிகைத்துறை (ஏ.ஜே.ஞானேந்திரன்), தமிழ் சினிமா நகைச்சுவை வரலாறு (மோகன் வி.ராமன்), தாயெனும் கோயில் (எஸ்.பத்மநாதன்), புரிதலும் புதினமும் (என்.சிவானந்தசோதி), நம்பமுடியவில்லை (கந்தசாமி மனோகரன்), மனித நேயமுள்ள பத்திரிகையாளர் (வவுனியூர் இரா. உதயணன்), புதினத்தில் என் சங்கதி (ப.வை.ஜெயபாலன்), தமிழ் சிறுவர் இலக்கிய வளர்ச்சி (குரு அரவிந்தன்), மனம் பேசுகிறது (வண்ணை தெய்வம்), பயணங்கள் முடிவதில்லை (லண்டன் ராஜாத்தி), குருவாக வந்தவர் (ஆர். தியாகராஜன்), ஊடகவியலாளர் ராஜகோபால் (செல்லத்தம்பி சிறீக்கந்தராஜா), தாய் -பரிசுக்கதை (கே.ஆர். டேவிட்), எழுத வைத்து உற்சாகப்படுத்தியவர் (உடுவை தில்லை நடராஜா), எங்கள் அண்ணா (பவானி இரவீந்திரன்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

### 16867

**வானலைகளில் ஒரு வழிப்போக்கன்.** பீ.எச்.அப்துல் ஹமீட். சென்னை 600 033: தரு மீடியா (பி) லிட், 10/55, ராஜு தெரு, மேற்கு மாம்பலம், 1ஆவது பதிப்பு, மே 2022. (சென்னை 600 014: ரத்னா ஆப்செட் பிரிண்டர்ஸ்).

316 பக்கம், ஒளிப்படங்கள், விலை: இந்திய ரூபா 1000., அளவு: 21x13.5 சமீ., ISBN: 978-624-96005-0-8.

ஒலிபரப்புத் துறையில் மட்டுமன்றி, தொலைக்காட்சித்துறை, திரைப்படத்துறை எனப் பல்வேறு தளங்களிலும் 54 ஆண்டுகளுக்குமேல் அழுத்தமான தடம் பதித்த ஒரு வானொலி அறிவிப்பாளரின் அரைநூற்றாண்டு அனுபவப் பதிவுகளாக இந்நூல் வெளிவந்துள்ளது. தனது ஊடக வாழ்க்கை அனுபவங்களை இலங்கை

வானொலியில் மிக இளவயதிலேயே அறிவிப்பாளராகிப் பெற்றுக்கொண்ட இவர், வானொலியின் பல்வேறு துறைகளிலும் அளப்பரிய பங்களிப்புகளை நல்கியுள்ளார். இவரைப்பற்றி பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிடுகையில் "தமிழின் முதல் நிகழ்ச்சி அளிக்கையாளர் பி.எச்.அப்துல் ஹமீத். மற்றெந்த வானொலிக் கலைஞரையும்விட, முதலாவதாகவும், மிகச் சிறப்பாகவும், இதைச் செய்திருப்பவர் பி.எச்.அப்துல் ஹமீத். உண்மையில் இவர் தோற்றுவித்த நியமங்கள் தான் நிகழ்ச்சி அளிக்கைகளுக்கு மிக முக்கியமாக அமைகின்றன." என்று விதந்து கூறியிருக்கிறார்.

## 922 சமயத் தலைவர், சிந்தனையாளர்

### 16868

**ஈழத்தின் புகழ்பூத்த பூசுரர்கள்: தமிழரசர் காலம் முதல் கி.பி. 2020 வரை.** ப.சிவானந்த சர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், ஸ்ரீ நகரம், அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம், 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2022. (சுன்னாகம்: கஜானந்த பிரின்டர்ஸ், மானிப்பாய் வீதி, இணுவில்).

xxviii, 276 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 1500., அளவு: 26.5x18.5 சமீ.

தமிழரசர் காலம் முதல் 2020 வரை வாழ்ந்து மறைந்த ஈழத்து அந்தணப் பெரியார்களின் வாழ்க்கை வரலாற்றுத் தொகுப்பு இதுவாகும். 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த போசராச பண்டிதரிலிருந்து 2010இல் லண்டனில் மறைந்த சா.சுந்தரேசக் குருக்கள் வரையிலான 176 பெரியார்கள் பற்றி இந்நூல் விரிவான தகவல்களைத் தருகின்றது. புத்தூர் ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டப உரிமையாளர் திரு. சிவசுந்தரம், லண்டன் குரொய்டன் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய குருக்கள் சிவஸ்ரீ சிவ.கோகுலநாதக் குருக்கள் (கோபி சிவம்) ஆகிய இருவரும் இந்நூல் வெளியீட்டுக்கான அனுசரணையை ஆசிரியருக்கு வழங்கியுள்ளனர்.

### 16869

**ஈழத்துச் சித்தர்கள் (அமரர் தம்பிப்பிள்ளை ஈஸ்வரலிங்கம் அவர்களின் சிவபதப்பேறு குறித்த ஈஸ்வர தீபம்).** நா.முத்தையா. கொழும்பு 6: ஆலயம் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, மார்ச் 2023. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

ii, xiii, 129 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-0881-16-1.

கடந்த காலங்களில் ஈழத்தில் வாழ்ந்த பதினாறு ஈழத்துச் சித்தர்களை இந்நூல் அறிமுகப்படுத்துகின்றது. கடையிற் சுவாமிகள், பரமகுரு சுவாமிகள், குழந்தைவேற் சுவாமிகள், அருளம்பல சுவாமிகள், யோகர் சுவாமிகள், நவநாத சித்தர், பெரியா னைக்குட்டி சுவாமிகள், சித்தானைக்குட்டி சுவாமிகள், சடைவரத சுவாமிகள், ஆனந்த சடாட்சர குரு, செல்லாச்சி அம்மையார், தாளையான் சுவாமிகள், மகாதேவ சுவாமிகள், சடையம்மா, நாகநாத சித்தர், நயினாதீவுச் சுவாமிகள்

ஆகிய 16 சித்தர்கள் பற்றிய விரிவான வாழ்க்கை வரலாறுகள் கட்டுரைவடிவில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 1980ஆம் ஆண்டுக்குரிய சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது. (இது முன்னர் ஜுன் 1994இல் சென்னை குமரன் பதிப்பகத்தினரால் முதற்பதிப்பாக வெளியிடப்பட்டது. 2017 இல் வெளியிடப்பட்ட இரண்டாம் பதிப்பினை அமரர் தம்பிப்பிள்ளை ஈஸ்வரலிங்கம் அவர்களின் சிவபதப்பேறு குறித்த ஈஸ்வர தீபம் நினைவுமலராக 26.03.2023 அன்று மீள்பதிப்பு செய்யப்பட்டுள்ளது).

### 16870

**குதுபுகள் திலகம் யாஸீன் மௌலானா அல்-ஹாஷிமிய் (ரலி).** J.S.K.A.A.H. மௌலானா. சென்னை 600 033: அவ்னியா பதிப்பகம், F/4, கதவு இலக்கம் 5, வேலு தெரு, மேற்கு மாம்பலம், 1ஆவது பதிப்பு, 2008. (சென்னை 600 033: அவ்னியா பதிப்பகம், F/4, கதவு இலக்கம் 5, வேலு தெரு, மேற்கு மாம்பலம்).

36 பக்கம், விலை: ரூபா 50.00, அளவு: 21.5x14 சமீ.

குதுபுகள் திலகம் யாஸீன் மௌலானா அல்-ஹாஷிமிய் (ரலி) அவர்களை வாழ்த்திப் பாடிய 108 செய்யுள்களில் அமைந்த பாமாலை.

### 16871

**குதுபுகள் திலகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி).** J.S.K.A.A.H. மௌலானா. இலங்கை: ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை-இலங்கைக் கிளை, 63/A, புஹாரி மஸ்ஜித் வீதி, கல்பொக்க, வெலிகம, 2ஆவது பதிப்பு, ஜுலை 2018, 1ஆவது பதிப்பு, மே 2002. (திருச்சி 620 009: அவ்னிய்யா பிரிண்டர்ஸ் அன்ட் பப்ளிஷர்ஸ் ட்ரஸ்ட், மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி வளாகம், சீத்தப்பட்டி பிரிவு, ஜே.ஜே.பொறியியல் கல்லூரி அருகில், மணப்பாறை ரோடு).

129 பக்கம், புகைப்படம், தகடுகள், விலை: ரூபா 250., அளவு: 21.5x15 சமீ.

குதுபுகள் திலகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் முதல் இரு பாகங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. முதற்பாகத்தில் தோற்றம், தந்தை, மௌலவி சுஜப் அவர்கள் தாம் எழுதிய ஆங்கில நூலில் ஜமாலிய்யா மௌலானா அவர்களைப் பற்றி எழுதிய பிழையான கருத்துக்கு கண்டனை, ஜமாலிய்யா மௌலானா அவர்களின் பிள்ளைகள், தாய், பகுதாதிலிருந்து முதன்முதல் வெலிகாமம் வெலிப்பிட்டிக்கு வந்த முஹம்மத் மௌலானா அவர்களின் சந்ததிகள், பாலியம், கல்வி, திருமணம், அஸ்ஸய்யித் முஹம்மத் மௌலானா அவர்களின் இன்னொரு பாரம்பரியம், சேவைகள், மறைவு ஆகிய 12 அத்தியாயங்களில் வரலாற்றின் முதற் பகுதி (பக்கங்கள் 1-64) இடம்பெற்றுள்ளது. நூலின் இரண்டாம் பாகத்தில் (பக்கங்கள் 65-129) ஞானம், ஞானக் கேள்வி, ஞானத்தை நாடிச் செல்வோர்- கீமியாயே ஸஆதா, சிறு வயதிலே தாம் பெற்ற பேரின்பம், யவானிஉ, புகழாரங்கள், கண்டனம், அறப்போதனைகளும் எழிற் கருத்துகளும், சில சிறப்பு மிக்க கனவுகள், பிறவற்றில் ஹக்கை அறிதலும்

பொதுவான போதனைகளும், தெளி தேன்கள், ஞான அமுதங்கள், ஒரு கனவும் அதன் தாற்பரியமும் ஆகிய 12 அத்தியாயங்கள் இடம்பெற்றுள்ளன.

### 16872

**குதுபுகள் திலகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) (மூன்றாம் பாகம்).** J.S.K.A.A.H. மௌலானா. இலங்கை: ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை-இலங்கைக் கிளை, 63/A, புஹாரி மஸ்ஜித் வீதி, கல்பொக்க, வெலிகம, 2ஆவது பதிப்பு, மே 2018, 1ஆவது பதிப்பு, மே 2002. (திருச்சி 620 009: அவ்னிய்யா பிரிண்டர்ஸ் அன்ட் பப்ளிஷர்ஸ் ட்ரஸ்ட், மதுரஸ துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி வளாகம், சீத்தப்பட்டி பிரிவு, ஜே.ஜே.பொறியியல் கல்லூரி அருகில், மணப்பாறை ரோடு).

140 பக்கம், புகைப்படம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.

குதுபுகள் திலகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் மூன்றாவது பாகம் இது. அவரது படைப்பாக்கங்கள் பற்றியும், அவர் பங்கேற்ற இஸ்லாமிய நிகழ்வுகள் பற்றிய செய்திகளும், துண்டுப் பிரசுரங்களும், புகைப்படங்களும் இப்பாகத்தில் இடம்பெற்றுள்ளன.

### 16873

**சிவயோக சுவாமிகள் காட்டிய வழி.** மு.க.மாசிலாமணி. கொழும்பு: சிவயோக சுவாமிகள் நம்பிக்கை நிதியம், 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2006. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).

(4), 27 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x12.5 சமீ.

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட சிவயோக சுவாமிகளின் (1872-1964) ஆத்மீக சிந்தனைகளையும், அருமை பெருமைகளையும் சுருக்கமாக இந்நூல் விளக்குகின்றது. சிவயோக சுவாமிகள் எவ்வாறு சைவத்தமிழ் உலகத்தை வாழ்வாங்கு வாழ வழிகாட்டினார் என்பதை இளந்தலைமுறையினருக்குத் தெளிவுபடுத்துவதாக இந்நூல் அமைகின்றது. யோகர் சுவாமிகள் சித்துக்கள் நிகழ்த்தும் ஆற்றல் படைத்திருந்தாலும் அது பற்றிப் பெரிதுபடுத்தி உரைக்காது, தன்னை அறிந்து மெய்ப்பொருளைக் காண விழைந்தார் என்பதும் தெய்வீக ஞானம் மிக்க இந்த மறைஞானி யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி மட்டக்களப்பிலும், கொழும்பிலும், மலையகத்திலும் நடமாடிச் சைவர்களை வழிநடத்தியுள்ளார் என்பதும் நூல் தரும் செய்தியாகும்.

### 16874

**பிலால்: ஒரு கறுப்பின அடிமையின் விடுதலை வரலாறு.** எச்.ஏ.எல். க்ரெய்க் (ஆங்கில மூலம்), அல் அஸுமத் (தமிழாக்கம்). சென்னை 600 001: மெல்லினம், 2ஆவது மாடி, ரோயல் பலஸ், 2/117, ஆர்மேனியன் வீதி, மண்ணடி, மீள்பதிப்பு, 2010, 1ஆவது பதிப்பு, மே 2020. (சென்னை5: கிராப்பிக் பார்க்).

136 பக்கம், விலை: இந்திய ரூபா 60.00, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 81-902954-8-9.

பிலால், இறைதூதரின் நெருங்கிய தோழர். ஒடுக்குமுறையை அகற்றி நீதத்தை நிலைநாட்டிடும் இறைதூதரின் போராட்டம் மற்றும் வெற்றியின் அரிய தருணங்களை அடிமையாக இருந்து, விடுவிக்கப்பட்டு இஸ்லாமிய வரலாற்றின் நாயகர்களுள் ஒருவராக உயர்ந்த பிலால் தன் குரலிலேயே கூறினால் எப்படி இருக்கும்? என்பதை எச்.ஏ.எல். க்ரெய்க் இந்நூல் வழியாக எம்மை அனுபவிக்க வைத்திருக்கிறார். அடிமையாய், மக்காவில் ஒரு புதுமை மனிதர், எஜமானை எதிர்த்து, மரணத்தின் வாயிலில், இறப்பும் உயிர்ப்பும், மீண்டும் பிலால் விற்பனை, இறைத் தூதருடன், அபூபக்ருடன், இறைத்தூதரின் இளமைப் பருவம், திருமணம், தூதுத்துவம், இறைச் செய்திகள், மக்கத்து எதிர்ப்பு, பரிகாசத்தின் முடிவு, அபிஸீனியா நோக்கி, ஹம்ஸாவும் உமரும், துயர ஆண்டு, யத்ரிப், மதீனா நோக்கி, இறைத்தூதரின் புலப்பெயர்வு, ஒட்டகையின் தேர்வு, பள்ளிவாசல், முதல் அழைப்பு, நீதி தருநராய் நபிகளார், போர் முனைகளில், உஹத், பொய்மை, அபூஸுப்யானின் சரண், கஅபாவின் மீது, பிரிவு, நினைவுச் சுழலில் ஆகிய அத்தியாயத் தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 16875

**யோக சுவாமி: எங்கள் கடவுளின் அவதாரம் (அப்பு).** கந்தையா சிவயோகஈஸ்வரன். ஐக்கிய இராச்சியம்: டாக்டர் கந்தையா சிவயோகநாதன், நொட்டிங்ஹாம், இங்கிலாந்து, 1ஆவது பதிப்பு, 2022. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

viii, 107 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x22 சமீ.

இந்நூல் Yogaswamy-The Divine Reincarnation of Our God (APPU) என்ற நூலின் தமிழாக்கமாகும். நூலாசிரியர் ஈஸ்வரன், தான் யோகர் சுவாமிகளோடும், அவரது சீடர்களுள் ஒருவரான சந்த சுவாமிகள் என்று அழைக்கப்படும் ஜேம்ஸ் ராம்ஸ் போத்தம் (James Ramsbotham) ஆகியோருடன் கொண்ட தொடர்புகளால் பெற்ற அனுபவங்களைப் பற்றி இந்நூலில் எழுதியுள்ளார். அறிமுகம், யோக சுவாமி, செங்கலடி சிவதொண்டனும் சந்தசுவாமியும், அற்புதங்கள், பின்னிணைப்பு (மார்க்கண்டு சுவாமிகள், சுப்ரமுனிய சுவாமிகள், சந்த சுவாமிகள், சந்த சுவாமி கடிதம் - சிவதொண்டன் பண்ணை, சேர். பீட்டர் ராம்ஸ்போத்தம் உடைய அஞ்சலி 23-12-2004, எங்கள் சந்த சுவாமிகளுக்கு அஞ்சலி 23-12-2004), குறிப்புகள், நூற்பட்டியல், முடிவுரை ஆகிய ஏழு அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது.

**16876**

**யோகர் சுவாமிகள் வாழ்க்கை வரலாறும் நற்சிந்தனையும்.** தி.விசுவலிங்கம் (தொகுப்பாசிரியர்). கனடா: சைவ சித்தாந்த மன்றம், 1008-50 Elm Drive East, Mississauga, Ontario, L5A 3X2, 2ஆவது பதிப்பு, ஆவணி 1997, 1ஆவது பதிப்பு, பங்குனி 1996. (கனடா: பாரதி பதிப்பகம்).

24 பக்கம், விலை: கனேடிய டொலர் 2.00, அளவு: 21.5x14 சமீ.

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட சிவயோக சுவாமிகளின் (1872-1964) ஆத்மீக சிந்தனைகளையும், அருமை பெருமைகளையும் இந்நூல் தொகுத்துத் தருகின்றது. யோகர் சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு சுருக்கமாக முதல் மூன்று பக்கங்களிலும் காணப்படுகின்றது. தொடர்ந்து அவரது நற்சிந்தனைகள் சிவ சிவ ஓம் ஓம், எங்கள் குருநாதன், சொல்லு சிவமே, வேண்டில் வேண்டாமை வேண்டிட வேண்டுமே, வீரமாமயில் ஏறும் வேலவ, நமச்சி வாயவென நாம் வாழ்குவமே, சிவனடிக் கன்பு செய் அனைத்துஞ் சிவமே, போற்றி போற்றி சிவசிவ போற்றி, எக்காலம், சிவநாமஞ் சொல்லுவோமே, நல்லூரான் திருவடி, நல்ல மருந்து, ஈசனே நல்லை வாசனே, நமச்சிவாயப் பத்து, முத்தி நல்குமே, ஆசான் அருள், சிவசிவ என்னச் சிவகதியாமே, சிவனடி துணை, திருவடி துணை, சமயங் கடந்த சங்கரா வடைக்கலம், சிவசிவ என்றிடத் தீரும் பாவம், மங்களம் ஜெய மங்களம் ஆகிய பக்தி இலக்கியச் சிந்தனைகள் செய்யுள் வடிவிலும், சிவதொண்டு, ஒழுக்கமுடைமை, நான் யார்?, அஞ்சேல் ஆகிய உரைநடை நற்சிந்தனைகளையும் இச்சிறு நூல் கொண்டுள்ளது.

**16877**

**யோகர் சுவாமியும் அவரின் சில விசித்திர சீடர்களும்.** கந்தையா மகேந்திரன். யாழ்ப்பாணம்: கந்தையா மகேந்திரன், கோவளம், காரைநகர், 1ஆவது பதிப்பு, 2022. (சென்னை 600 018: மல்ட்டி கிராப்ட்ஸ், 39, இளங்கோ சாலை, தேனாம்பேட்டை).

152 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.

ஆசிரியரின் பெரிய தகப்பனாரும், காரைநகர் அறுகம்புலம், ஆலடியைச் சேர்ந்தவரும், நொச்சியாகம முன்னைநாள் வர்த்தகரும், சமூக-சமய செயற்பாட்டாளருமான முருகேசு பொன்னுத்துரை அவர்களின் ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்டுள்ள நூல். இந்நூலில் சிவயோக சுவாமிகளின் சீடர்களான திருமதி இரத்னாமா நவரத்தினம், சுசுநாகா வீரப்பெருமா, சிவாய சுப்ரமுனிய சுவாமி, ஜேர்மன் சுவாமி, நரிக்குட்டி சுவாமி, கந்தசுவாமி, சாம் விக்கிரமசிங்கே, ஜேம்ஸ் ஜோர்ஜ்-கனடா நாட்டுத் தூதுவர், பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன், மாணிக் சந்திரசாகரா ஆகியோரின் யோகர் சுவாமிகளுடனான உறவு பற்றி தனித்தனிக் கட்டுரைகளாக எழுதப்பட்டுள்ளது. இறுதிப் பகுதியில் "குட்டிக் கூட்டம்-வரலாறு", "இலங்கைப் பிரச்சினையில் யோகரின் தீர்க்கதரிசனம்" ஆகிய இரு கட்டுரைகளும் உசாத்துணை நூற் பட்டியல் ஒன்றும் இடம்பெற்றுள்ளன.

**16878**

**லண்டன் தமிழர் தகவல்: ஆறு திருமுருகனின் 50ஆவது அகவை பொன்விழா மலர்.** குலமணி (ஆசிரியர்), நா.சிவானந்தசோதி (பதிப்பாசிரியர்). கென்ட், பிரித்தானியா: நா.சிவானந்தசோதி, திருமுருகன் அறிவகம், 41, Haddington Road, Bromley,Kent BR1 5RG, 1ஆவது பதிப்பு, மே 2011. (லண்டன்: அச்சக விபரம் தரப்படவில்லை).

72 பக்கம், புகைப்படங்கள், விலை: ஸ்டேர்லிங் பவுண் 5.00, அளவு: 25x18.5 சமீ.

தனது ஒன்பதாவது ஆண்டை நோக்கி நகரும் லண்டன் தமிழர் தகவல் சஞ்சிகையின் மே 2011 இதழ் ஆறு திருமுருகன் அவர்களின் 50ஆவதுஅகவை பொன்விழா சிறப்பிதழாக வெளியிடப்பட்டுள்ளது. ஆறு திருமுருகன் அவர்களின் வாழ்வினைப் பதிவுசெய்யும் ஏராளமான வண்ணப் புகைப்படங்களுடனும், பல்வேறு பிரமுகர்களின் வாழ்த்துரைகளுடனும், ஆறு திருமுருகன் பற்றிய பல்வேறு சமூக ஆர்வலர்களின் மலரும் நினைவுகளுடன் இவ்விதழ் வெளிவந்துள்ளது. செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராகவும், சிவபூமி என்ற சிறுவர் மன வளர்ச்சிப் பாடசாலைகள், சிவ பூமி முதியோர் இல்லம், கீரிமலைச் சிவபூமி யாத்திரிகர் மடம், நாவற்குழியில் திருவாசக அரண்மனை, ஆதரவற்ற நாய்களைப் பேணும் காப்பகம் போன்ற அற நிலையங்களை நிறுவி அவற்றைக் கொண்டு நடத்துபவராகவும் இயங்கி வருகிறார்.

**16879**

**வைத்தீசுவரர் மலர்.** தி.விசுவலிங்கம் (தொகுப்பாசிரியர்). கனடா: சைவ சித்தாந்த மன்றம், 1008-50 Elm Drive East, Mississauga, Ontario, L5A 3X2, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2001. (கனடா: பாரதி பதிப்பகம்).

(4), 68 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17 சமீ.

சிவத்தமிழ் வித்தகர், மூதறிஞர், பண்டிதமணி சிவத்திரு க.வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள் அகவை 85 நிறைவெய்துவதை முன்னிட்டு அவர்களின் பணிகளை நினைவுகூரும் பாராட்டு மலர். மலரின் தொகுப்பாசிரியர் தி.விசுவலிங்கம் அவர்கள் கனடா சைவ சித்தாந்த மன்றத் தலைவராகவும், "அன்பு நெறி" சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியராகவும் பணியாற்றுகின்றார். இம்மலர் 22.09.2001 அன்று வெளியிட்டுவைக்கப்பட்டது. இம்மலரில் பன்னிரு திருமுறைப் பாடல்கள், சிவத்தமிழ் வித்தகர், மூதறிஞர், பண்டிதர், க.வைத்தீசுவரக் குருக்கள் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள் (செல்வி சாவித்திரி வைத்தீசுவரர்), முன்னுரை (தி. விசுவலிங்கம்) ஆகியவற்றைத் தொடர்ந்து வாழ்த்துரைகளும், ஈழத்துச் சிதம்பரம் (சிவஸ்ரீ சி.குஞ்சிதபாதக் குருக்கள்), பண்டிதமணி சிவத்திரு க.வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள் (க.முருகேசு), காரைநகர் தந்த சைவச் சான்றோன் (ப.கோபால கிருஷ்ண ஐயர்), காரைநகர் கண்ட பண்டிதமணி (ப.சிவானந்த சர்மா), சிவத்திரு. க.வைத்தீஸ்வரக் குருக்களுடன் நான் (வி.சா.குருசாமி), நான் அறிந்த குருக்கள்

ஐயா (அ.ஆறுமுகம்), கற்கண்டுக் குருக்கள் (ந.கணேசமூர்த்தி), புலவர் மணியும் பொன்மனச் செம்மலும் (பா.சோ.பாரதி), சிவத்திரு வைத்தீசுவரக் குருக்கள் (சோ. குகானந்தசர்மா), காலமென்ற தீயில் கருகாத தங்கம் (நா.தர்மையா, து.நாகேந்திரன்), சிவத்திரு க.வைத்தீசுவரக் குருக்கள் (அதி.வண.கலாநிதி எஸ்.ஜெபநேசன்), சிவத்திரு க.வைத்தீசுவரக் குருக்கள் (நயினை க.நாகேஸ்வரன்), எங்கள் வைத்தீசுவரக் குருக்கள் ஐயா (திருமதி செல்லம்மா சிற்றம்பலம்), சிவத்திரு க.வைத்தீசுவரக் குருக்கள் (மு.ஆறுமுகம்), இல்லற ஞானி (ஆ.அம்பலவி முருகன், திரு.மு.சுந்தர லிங்கம்), அணுக்கத் தொண்டர் (சி.சிவசரவணபவன்), ஈழத்துக் காரை வைத்தீசுவரர் ஐயா அவர்கள் (நாகலிங்கம் குஞ்சிதபாதம்), சிவத்திரு க.வைத்தீசுவரக் குருக்கள் (திருமதி.ச.சின்னராசா), சைவமும் தமிழும் தழைக்கச் செய்த சான்றோன் (ஸ்ரீபதி சர்மா கிருஷ்ணானந்த சர்மா), எங்களை வாழ்விக்க வந்த தெய்வம் (கே.கே. சுப்பிரமணியம்), ஈழத்தில் பிறக்க வேண்டும் (இரா.செல்வக்கணபதி), மனிதருள் மாணிக்கம் (திருமதி வசந்தா வைத்தியநாதன்), யாம் இருவேம்.... (வட்டுக் கோட்டையூர் க.மயில்வாகனனார்), ஆண்டிகேணியான் துணை (வே.இராசநாயகம்), மூதறிஞர் சிவத்திரு.க.வைத்தீசுவரக் குருக்கள் வாழ்வும் பணியும் (ஐ.தி.சம்பந்தன்), மானிடம் வென்றதம்மா.... சில நினைவுகள் (யோகலட்சுமி சோமசுந்தரம்), சிவத்தமிழ் வித்தகர், மூதறிஞர், பண்டிதமணி, சிவத்திரு க.வைத்தீசுவரக்குருக்கள் (தி.விசுவலிங்கம்), சிவஸ்ரீ ச.கணபதீசுவரக் குருக்கள் (F.X.C.நடராசா), காரைநகர் மணிவாசகர் சபை அமைக்கவிருக்கும் கணபதீஸ்வரக் குருக்கள் நூலகம், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் வழங்கிய சான்றிதழ், புலவர்மணி சோ.இளமுருகனார் அவர்கள் சிவத்திரு க.வைத்தீசுவரக்குருக்கள் அவர்களுக்கு எழுதிய திருமுகம், ஈழத்துச் சிதம்பர புராண பதிப்பாசிரியரது ஆர்வம் (நவாலியூர் சோ.நடராசன்), ஈழத்துச் சிதம்பர புராணம், காரைநகர் கார்த்திகேயப் புலவரின் திக்கைத் திரிபந்தாதி: மூலமும் - உரையும் (நா.சுப்பிரமணியன்), திண்ணபுர அந்தாதி - ஒரு கண்ணோட்டம் (சுருக்கம்) (கா.கைலாசநாதக் குருக்கள்), மார்கழி மாதம் பீடையானது என்பது தவறு அது பெரும் பீடு கொண்ட மாதம் திருவாதிரை அபிஷேகம் சிறப்பு அம்சம் (சிவத்திரு க.வைத்தீசுவரக்குருக்கள்) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும் பார்க்க:
காந்தியும் விவேகானந்தரும். 16981

## 923 சமூகவியல்துறை சார்ந்தோர்

### 16880

**ஆசிரிய சிகரம் பிலிப் இராமையா: சிகரம் குறித்த சாரல் துளிகள்.** எம்.விஸ்வநாதன், சை.கிங்ஸ்லி கோமஸ் (மலராசிரியர்கள்). நுவரெலியா: எஸ்.தாயுமானவன், இல. 14, செபல் (Chappel) வீதி, 1ஆவது பதிப்பு, மார்ச் 2023. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xiv, 333 பக்கம், ஒளிப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18 சமீ.

இராகலையைப் பிறப்பிடமாகக் கொண்டு கந்தப்பொல மெதடிஸ்ட் தமிழ் மகா வித்தியாலயம் மற்றும் இராகலை தமிழ் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் தனது பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்த திரு. பிலிப் இராமையா அவர்கள் தனது ஆசிரிய மற்றும் சமூகப் பணிக் காலத்தின் பெரும் பகுதியை அப்பிரதேச மாணவர் களதும் சமூகத்தினதும் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புச் செய்துள்ளார். இவர் 23.03.2023 அன்று தனது தொன்னூறாவது அகவையில் காலெடுத்து வைப்பதையும் அவர் மலையகச் சமூகத்திற்கு ஆற்றிய சேவையை கௌரவிக்கும் முகமாகவும் அவர்தம் நண்பர்கள் மற்றும் மாணவர்களின் பெருமுயற்சியினால் இப்பாராட்டு விழா மலர் வெளியிடப்பட்டுள்ளது. மாணவர் நினைவுகளில், திரு. பிலிப் இராமை யாவோடு நேர்காணல், நண்பர்களின் நெஞ்சங்களில், கட்டுரைகள் ஆகிய நான்கு பிரிவுகளில் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. கட்டுரைப் பிரிவில் கல்வி, இலக்கியம், சமூகம், அரசியல் ஆகிய நான்கு பிரிவுகளின் கீழ் பல்வேறு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. "கல்விப் பிரிவில்" மலையகமும் மூன்றாம் நிலைக் கல்வியும் (தை.தனராஜ்), புதிய கல்வி நிருவாக மறுசீரமைப்புகளும் மலையகக் கல்வியும் (பொன்.இராமதாஸ்), வெளிநாட்டுக் கற்கைச் சுற்றுலா அனுபவங்களும் யதார்த்தங்களும் (எம்.விஸ்வநாதன்) ஆகிய கட்டுரைகளும், "இலக்கியப் பிரிவில்", காணி நிலம் (கு.அழகிரிசாமி), மலையகத் தமிழர் நாட்டார் பாடல்கள் காட்டும் வாழ்க்கைக் கோலங்கள் (பீ.மரியதாஸ்), தமிழ் உரைநடையும் பாரதியாரும் (எஸ்.தாயுமானவன்), மலையகப் படைப்பாளிகளுடனான பேராசிரியர் க.கைலாசபதியின் ஊடாட்டங்களும் படைப்பிலக்கியப் பயணங்களும் (வ.செல்வராஜ்), பண்டாரவளை சி.முத்துசங்கரனின் கவிதைகள்- சில குறிப்புகள் (மொழிவரதன்), ஆய்வு முயற்சிகளில் தெளிவத்தை ஜோசப் (அ.லெட்சுமணன்), சமூக அசைவியக்கமும் மலையகச் சிறுகதை இலக்கியமும் (சுகந்தினி புவியரசன்), குறிஞ்சித் தென்னவன் கவிதைகளில் சமுதாய நோக்கு (எம்.விஸ்வநாதன்) ஆகிய கட்டுரைகளும், "சமூகப் பிரிவில்", நான் கண்ட பாரதி இராமசாமி (பழனிமுத்து ஆறுமுகம்), செலவுக் கடை முறை என்பது வரமா? சாபமா? (விஜயகௌரி பழனியப்பன்), மலையகமும் பெண்களும் (இரா.சிவலிங்கம்), போதைப்பொருள் பாவனையும் சமூகப் பிரச்சினைகளும் (சந்திரலேகா கிங்ஸ்லி), மலையகத்தில் மேம்படுத்தப்படவேண்டிய சிறுவர் நலன் (ஆ.புவியரசன்) ஆகிய கட்டுரைகளும், அரசியல் பிரிவில், நுவரெலியா மாவட்டத்துக்கு மேலதிக பிரதேச செயலகங்கள் அமுல்படுத்தப்படாமை ஒரு அப்பட்டமான மனித உரிமை மீறல் (சிவலிங்கம் சிவகுமாரன்), மலையக மக்களின் போராட்ட வரலாறு (சிவ.இராஜேந்திரன்), பெருந்தோட்டத்துறை சமூகத்தின் வீடு மற்றும் காணி உரிமை (ஏ.சீ.ஆர்.ஜோன்), மலையகம்- நேற்று இன்று நாளை: ஒரு வரலாற்று அரசியல் சமூக நோக்கு (எம். வாமதேவன்), வீட்டு உரிமையும் காணி உரிமையும் பெருந்தோட்ட தொழி லாளர்களுக்கு மறுக்கப்படுவது ஏன்? (ஏ.எஸ்.சந்திரபோஸ்), இலங்கையின் இனத்துவக் கட்சிகள்: மலையகத் தமிழ்க் கட்சிகள் பற்றிய ஒரு கண்ணோட்டம் (எஸ்.கருணாகரன்), மலையகத் தமிழர் இனத்துவ அடையாளமும் அரசியல் தீர்வும் (சிவம் பிரபாகரன்), 1971ஆம் ஆண்டு போராட்டங்களும் இன்றைய

"அரகலய"வும்: ஒரு பார்வை - சிங்கள போராட்டக் கட்டமைப்பில் சாதியப் பின்னணி (சை.கிங்ஸ்லி கோமஸ்) ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

### 16881

**கணபதிப்பிள்ளை சிவராஜா: வாழ்வும் தடமும்.** நூலாக்கக் குழு. நோர்வே: மகா சிற்றம்பலம், ஒஸ்லோ, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2021. (அச்சக விபரம் தரப்படவில்லை).

146 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15.5 சமீ.

நோர்வேயில் புலம்பெயர்ந்து வாழ்ந்த மூத்த சமூக அரசியல் செயற்பாட்டாளரான அமரர் கணபதிப்பிள்ளை சிவராஜா (06.09.1944-06.12.2020) அவர்களின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் தொகுப்பு. தாயகத்தில் தும்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பருத்தித்துறை ஹார்ட்லி கல்லூரியின் பழைய மாணவர். 1972இல் தனது 27ஆவது வயதில் நோர்வேயில் தொழில் வாய்ப்பினைப் பெற்று "துரொம்சோ" நகருக்குப் புலம்பெயர்ந்தவர். இத்தொகுப்பில் அவரது வாழ்வையும் அவர் இயங்கிய தளங்களினூடாக அவரது சமூக வகிபாகத்தையும் ஆவணப்படுத்தியுள்ளனர். இம்மலரின் நூலாக்கக் குழுவில் ரூபன் சிவராஜா, பாலசிங்கம் யோகராஜா, மகா சிற்றம்பலம், ராஜன் செல்லையா, நிர்மலநாதன் காசிநாதன், சிற்றம்பலம் சுபேந்திரன், உமைபாலன் சின்னத்துரை ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.

### 16882

**சுடரொளி சம்பந்தன் 1935-2022.** குடும்பத்தினர். லண்டன் E7 8PQ: சுடரொளி வெளியீட்டுக்கழகம், 15, Rutland Road, 1ஆவது பதிப்பு, ஜுன் 2022. (இலண்டன்: ஜே.ஆர். பிரின்ட், 59-61, Hoe Street, London E17 4QR).

90 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5x19 சமீ.

அமரர் ஐ.தி.சம்பந்தன் (26.06.1935- 03.04.2022) அவர்களின் நினைவாக அன்னாரின் அந்தியேட்டி நிகழ்வின்போது வெளியிடப்பட்ட நினைவு மலர். குடும்பத்தவர்களினதும் சமூகப் பிரமுகர்களினதும் அஞ்சலிக் கட்டுரைகளுடனும் வெளிவந்துள்ளது. ஈழத்தமிழர்களின் சமூக, அரசியல், தொழிற்சங்க வரலாற்றுச் சுவடுகளைத் தேடிச் செல்லும் ஒரு ஆய்வாளனின் பார்வையில் ஐ.தி.சம்பந்தன் என்ற பெயர் இடைக்கிடையே சிக்கிக்கொள்ளும். தமிழரசுக் கட்சியின் அரசியல் களமாகட்டும், ஈழத்தமிழரின் தொழிற்சங்க போராட்டங்களாகட்டும், இனக் கலவரம் தொடர்பான சன்சோனி கமிஷன், மற்றும் இனப்பிரச்சினை தொடர்பான பல்வேறு ஆணைக் குழுக்களின் அறிக்கைகளாகட்டும், எரிந்துபோன யாழ்ப்பாணப் பொது நூலகத்தை மீளக்கட்டியெழுப்பும் நோக்கில் தொடக்கப்பட்ட கொடித்தினப் பணிகளாகட்டும், ஆறுமுக நாவலர் நினைவெழுச்சிப் பணிகளாகட்டும், அவரது பங்கு குறிப்பிடத்தக்கது. "தமிழ் தந்த தாதாக்கள்" என்ற தலைப்பில் தமிழறிஞர் க.சி.குலரத்தினம் அவர்களது நூலொன்றை திரு சம்பந்தர் யாழ்ப்பாணத்திலிருந்த போது, தனது சுடரொளி வெளியீட்டுக்கழக வெளியீடாக 1987இல் வெளியிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து க.சி.குலரத்தினம் அவர்களின் மற்றொரு நூலான

"செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்" என்ற நூலின் முதலாம் பாகத்தை 1989இல் வெளியிட்டுவைத்தார். "தமிழ் அகதிகளின் சோக வரலாறு" என்ற நூலை ஜுன் 1996இல் வெளியிட்டிருந்தார். மறைந்த தலைவர் சா.ஜே.வே.செல்வநாயகம் அவர்களின் வாழ்வும் பணியும் பற்றிய பல்வேறு அரசியல் ஆர்வலர்களின் மலரும் நினைவுகளைத் தொகுத்து "ஒப்பற்ற தலைவர் தந்தை செல்வா" என்ற தலைப்பில் ஒரு நூலை, ஜேர்மனியில் புலம்பெயர்ந்து வாழும் வெ.செ.குணரத்தினம் அவர்களின் உதவியுடன் 2004இல் வெளியிட்டிருந்தார். "புதுயுகத் தமிழர்" என்ற தலைப்பில் உலகத்தமிழர்களிடையே கவிதைப் போட்டி ஒன்றை மில்லெனியம் ஆண்டை யொட்டி நடத்தியதுடன் அதற்காகப் பெறப்பட்ட கவிதைகளின் தேர்ந்த தொகுப்பாக "புதுயுகத் தமிழர்" என்ற கவிதைத் தொகுப்பினை திரு. பொன் பாலசுந்தரம் அவர்களின் துணையுடன் 2005இல் வெளியிட்டிருந்தார். இலங்கைத் தமிழ் அரசியல்வாதி தி.மகேஸ்வரன் அவர்களின் அரசியல் சமூக வாழ்வை வரலாற்றுப் பதிவாக்கும் முயற்சியில், தான் முன்னர் பிரத்தியேக செயலாளராகச் சிலகாலம் அவருடன் பணியாற்றிய நினைவுகளை அடியொற்றி ஒரு ஆவண நூலாக "மகேஸ்வரன்-அரசியல்வாழ்வும் தமிழர் பிரச்சினையும்" என்ற பெயரில் வெளியிட்டு அமரர் மகேஸ்வரனின் அறியப்படாத சில பக்கங்களை 2008இல் ஆவணமாக்கியிருந்தார். "கறுப்பு யூலை '83-குற்றச்சாட்டு: கறுப்பு யூலை '83 நினைவுகள் வரலாற்றுப் பதிவுகள்" என்ற தலைப்பில் 2009இல் ஒரு பாரிய தொகுப்பினை பேராசிரியர் கோபன் மகாதேவா அவர்களின் உதவியுடன் உருவாக்கி வழங்கியிருந்தார். 2011இல் "சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்வியற் பணிகள்" என்ற நூலையும் வெளியிட்டிருந்தார். யாழ்ப்பாணத்திலும் பின்னர் லண்டனிலும் "சுடரொளி" என்ற சஞ்சிகையை நீண்டகாலம் தொடர்ந்து வெளியிட்டு வந்தார். இவரது நூல்வெளியீட்டுப் பணியும் ஆவணவாக்கல் பணியும் குறிப்பிடத்தகுந்தது.

## 16883

**தொலைநோக்கு: நடராசா சச்சிதானந்தன் 75.** நாக. கெங்காதரன் (பதிப்பாசிரியர்). ஐக்கிய இராச்சியம்: நடராசா சச்சிதானந்தன் பவள விழாக் குழுவினர், 13, Arcus Road, Bromley BR1 4NN, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2018. (சென்னை 600005: ஸ்ரீ ராகவேந்திரா லேசர் பிரின்டர்ஸ், 15/8, சுவாமி ஆச்சாரி வீதி, இராயப்பேட்டை).

190 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ., ISBN: 981-1-64440-754-7.

லண்டனில் வாழும் சமூக ஆர்வலர் நடராசா சச்சிதானந்தன் அவர்களின் பவள விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள இந்நூல் வாழ்வும் பணியும் (நாக சிறிகெங்காதரன்), ஆசியுரைகள், வாழ்த்துரைகள் ஆகியவற்றுடன் சமூக நாயகன் (மு.நித்தியானந்தன்), தமிழ்ச் சங்கமும் சச்சியும் (சூ.க.சுப்பிரமணியன்), வாய்ச் சொல்லில் வீரரடி (பதஞ்சலி நவேந்திரன்), அர்ப்பணிப்போடு உழைப்பவர் (புதினம் ராஜகோபால்), சமாதானத் தூதுவன் (எஸ்.எஸ்.எம்.பசீர்), தனி மனித தீர்க்க தரிசனம் (சிவ. பரிமேலழகர்), மீண்டும் ஒரு இராமநாதன் (பாடசாலைச் சமூகம்), புலம்பெயர் வாழ்வின் அடையாளம் (வி.சிவலிங்கம்) ஆகிய கட்டுரை

களையும் தனிப்பதிவாக நடராசா சச்சிதானந்தன் அவர்கள் எழுதிய "திரும்பிப் பார்க்கிறேன்" என்ற கட்டுரையையும் உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது.

### 16884

**நாத்து.** சுபா குருபரன் (இயற்பெயர்: சுபாஷினி குருபரநாதன்). பிரான்ஸ்: சுபாஷினி குருபரநாதன், பாரிஸ், 1ஆவது பதிப்பு, 2023. (அச்சக விபரம் தரப்படவில்லை).

164 பக்கம், புகைப்படங்கள், விலை: 9 இயூரோ, அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-10-699-9488-1.

"நாத்து என்னும் இப்பதிவு தனியே என் சுயசரிதையோ, வரலாற்றுப் பதிவோ, அரசியல் ஆய்வோ அல்ல. எல்லாம் ஒன்றடங்கிய ஒரு தொகுப்பு. பன்னிரண்டு வயதில் நான் பிரான்ஸ் நாட்டிற்கு வந்தது முதல் இன்றுவரை நான் கடந்து வந்த பாதைகளையும் பட்ட அனுபவங்களையும் உங்களுடன் பகிர்ந்துகொள்ள முயல் கிறேன். அத்துடன் என் பாதையில் நான் சந்தித்த பலதரப்பட்ட மக்கள் பற்றியும் குறிப்பாக எனது தாய்மண்ணான ஈழத்தில் இருந்து அகதிகளாக புலம்பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகள் பற்றியும், அவர்களுடன் நான் பல வருடங்களாக இணைந்து புரிந்த சமூகப் பணிகள் பற்றியும் மீட்டுப்பார்க்கிறேன். எமது இளைய தலைமுறையினரும் படித்து அறிந்து கொள்ளவேண்டும் என்ற காரணத்தாலும், அவர்களுக்கு நிச்சயம் எங்கள் வாழ்வியலைத் தெரியப்படுத்த வேண்டும் என்ற கடமை உணர்வாலும், பிரஞ்சு, ஆங்கில மொழிகளிலும் இந்நூல் வெளிவருகின்றது. இது எனது முதல் நூல். கன்னி முயற்சி." (நூலாசிரியர் என்னுரையில்)

### 16885

**மனமே.** முருகர் குணசிங்கம். வவுனியா: எம்.வி. பப்ளிகேஷன், தங்கம்மா முதியோர் இல்லம், புதுக்குளம், கனகராயன் குளம், 1ஆவது பதிப்பு, 2022. (அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை).

xv, 418 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.

"யாரொடு நோகேன்" என்று தொடங்கி, "திடீர் லண்டன் பயணம்" என்பது ஈறாக 75 அத்தியாயங்களில் ஆசிரியர் தனது வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கிறார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையில் பட்டம்பெற்ற முருகர் குணசிங்கம் அதே பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகவும் பின்னர் உதவி நூலகராகவும் பணியாற்றியவர். உயர்கல்விக்காக இந்தியாவுக்குச் சென்றவர் அங்கு பறோடா பல்கலைக்கழகத்தில் சிலகாலம் பயின்ற பின்னர் லண்டனுக்குச் சென்று அங்கிருந்து அவுஸ்திரேலியாவுக்குச் சென்று நீண்டகாலம் வாழ்ந்தவர். தான் பிறந்த இடமான புதுக்குளம் என்னும் கிராமத்தில் ஒரு முதியோர் இல்லத்தையும், பாடசாலை ஒன்றையும் உருவாக்கி 2017முதல் சேவையாற்றி வருகிறார்.

**16886**

**வாழ்வியல் அனுபவங்கள் - எனது சரிதை.** *கா.வைத்தீஸ்வரன் (மூலம்), க.இறைவன் (பதிப்பாசிரியர்). கொழும்பு: சுகவாழ்க்கைப் பேரவை, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2023. (கொழும்பு 13: கீதா பப்ளிக்கேஷன்ஸ்).*

*104 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5x16 சமீ.*

*பொதுச் சுகாதாரப் பரிசோதகராக (PHI), சுகநலக் கல்வியாளராக, உளவள ஆலோசகராக எம்மிடையே வாழ்ந்து மறைந்த கலாபூஷணம் இணுவை கா.வைத்தீஸ்வரன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது. எனது சரிதை, என் ஆரம்ப வாழ்க்கை தொடர்பான பின்னணி, பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கம், எனது முதல் நியமனம் (பிட்டிகல, எல்பிட்டிய), இரண்டாவதாக கடமையாற்றிய பகுதி திருக்கோவில் (மட்டக்களப்பு மாவட்டம்), பொத்துவில் பிரதேசம் - பொதுச் சுகாதாரப் பரிசோதகர் 1964-1965, கோப்பாய்ப் பகுதி - பொதுச் சுகாதாரப் பரிசோதகர் 1967-1968, சுகாதாரக் கல்வி யாளன் பயிற்சி நெறி - யாழ் மாவட்ட நியமனம், வன்னி நிலப்பரப்பில் சுகாதாரக் கல்வியாளனாகச் சேவை 1971-1974, உலக சுகாதார ஸ்தாபனத்தின் புலமைப்பரிசில்-1974, யாழ். பிராந்திய சுகாதாரக் கல்வியாளனாகச் செயற்பாடுகள், சமூகத்துடனான என் வாழ்வியல் அனுபவம், தென்கிழக்காசிய பிராந்தியத்தில் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு தொடர்பான உலக சுகாதார ஸ்தாபன புலமைப் பரிசில் 1983-1984, உளவள ஆலோசகரின் வாழ்வியல் அனுபவங்கள், எனது இல்வாழ்க்கை தொடர்பான அனுபவங்கள், கொழும்புத் தமிழ்ச் சங்கத்துடனான சேவை, எனது நூலாக்கப் பணிகள், சுகவாழ்க்கைப் பேரவை, ஓம் கிரியா பாபாஜி யோக ஆரண்யம்-என் வாழ்வியல் அனுபவம் ஆகிய 19 இயல்களில் இச்சுயசரிதை எழுதப்பட்டுள்ளது.*

மேலும் பார்க்க:
சமுதாய சிற்பிகள். 16982

## 923.2 அரசியல் துறையினர்

**16887**

**இறவாப் புகழுடையோன்.** *மலர்க் குழு. திருக்கோணமலை: ஏற்பாட்டுக் குழு, கிளிவெட்டி மேம்பாட்டு ஒன்றியம், 1ஆவது பதிப்பு, 2022. (திருக்கோணமலை: பென் விஷன் (Ben Vision) அச்சகம்).*

*xi, 280 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.*

*இலங்கையின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் அருணாசலம் தங்கதுரை அவர்களின் மறைவின் 25ஆவது ஆண்டு நினைவு மலர். அருணாசலம் தங்கத்துரை (17.01.1937-05.07.1997) இலங்கையின் தமிழ் அரசியல்வாதியும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாவார். 1936ஆம் ஆண்டில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மூதூரில் கிளிவெட்டி என்ற ஊரில் பிறந்த அருணாசலம்*

தங்கத்துரை தனது கல்வியை கிளிவெட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்திலும், பின்னர் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரியிலும் கற்றார். பள்ளிப் படிப்பை முடித்த பின்னர் 1979ஆம் ஆண்டில் கொழும்பு சட்டக் கல்லூரியில் இணைந்து 1980இல் சட்டத்தரணியானார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு 1970 முதல் 1977 வரை மூதூர் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். பின்னர் 1994ஆம் ஆண்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவர் 1997, ஜுலை 5 ஆம் திகதி திருகோணமலையில் வைத்து இனந்தெரியாதோரால் படுகொலை செய்யப்பட்டார். திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற புதிய கட்டடத் திறப்பு விழாவில் பங்குபற்றிய போது இவருடன் கல்லூரி அதிபர், உட்பட ஐவர் உயிரிழந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகளே இத்தாக்குதலை நடத்தியதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியது.

## 16888

**ஏழைப் பாலகர்களின் தோழன்.** தெனகம சிரிவர்த்தன (சிங்கள மூலம்), மடுளுகிரியே விஜேரத்ன (தமிழாக்கம்). கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 661/665/675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1ஆவது பதிப்பு, 2013. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

(x), 11-160 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 350., அளவு: 22.5x15.5 சமீ., ISBN: 978-955-30-4778-6.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் இளமைக்கால சுயசரிதை சிறுபராயக் கதைகளாக எழுதப்பட்டுள்ளன. தெனகம சிரிவர்த்தன இதனை முன்னர் "துப்பத் தருவன்கே மிதுறா" என்ற பெயரில் சிங்கள மொழியில் எழுதியிருந்தார். பிறந்தகத்தின் போராளி/ ஏழைப் பாலகர்களின் தோழன்/ அது தான் சரியான செயல்/ வெள்ளையர்கள் இருந்திருந்தால் நானும் அவர்களுடன் சண்டை பிடிப்பேன்/ ஒரு சுதந்திரத்தைப் பார்/ ஒரு விவசாயி பாராளுமன்ற உறுப்பினரானது எப்படி?/ பாராளுமன்றத்தில் மாடு இருப்பதா?/ அவ்வாறான வேலைகளை இனி செய்யமாட்டேன் அம்மா/ பயங்கரமான விளையாட்டு/ தந்தை காட்டிய முன்மாதிரி/ நாமும் அவர்களைப்போல ஆகுவோம்/ நாம் மகாராணியைப் பார்க்க ஏன் வந்தோம்?/ பிரித்/ மாங்காய் அடி/ மீனவர்கள் ஏன் ஏழை?/ கிராமத்து நோயாளிகளைத் தேடி/ ஆசிரியரின் மனதைப் புண்படுத்தாமல்/ பொலிஸ் அதிகாரியின் மகனுக்கு நல்லதொரு பாடம்/ ஏழை மாணவனைப் பாதுகாத்தல்/ குறும்புவேலைகள் செய்தால் பரவாயில்லை ஆனால் கீழ்த்தரமான வேலைகள் செய்யவேண்டாம்/ மகனே ஆண் கதாபாத்திரத்தில் நடித்தாலும் பெண் பாத்திரத்தில் நடிக்கப் போக வேண்டாம்/ அந்தச் சட்டத்தால் பயனில்லை/ அப்பாவுக்கும் டிக்கற் விற்பனை/ தமிழ் மாணவர்களின் பாதுகாவலன்/ இந்தப் பேருந்து மக்களுக்குச் சொந்தம்/ கிராமத்தில் நானும் விவசாயி/ பொம்மை/ தந்தைமார் உருவாக்கிய கட்சியை விட்டுப் போக வேண்டாம்/ எஜமானுக்கும்

ஒரு படிப்பினை/ தொழிலும் போராட்டமும்/ தந்தையிடமிருந்து ஒரு கடிதம்/ 18 வயது ஊழியர் சங்கத் தலைவர்/ பணம் நிறைந்த அலுமாரி ஒன்றை வேண்டாம் என மறுத்த தந்தை/ மரணத்துக்குப் பயப்படாத மனிதன்/ கடனிலிருந்து மீள்வதில் உள்ள மகிழ்ச்சி/ உத்தம தந்தையொருவர் உலகத்திலிருந்து விடைபெறுகிறார்/ பெலியத்தைக்கு கட்சி அமைப்பாளராக நியமனம்/ தம்பராவே தேரரின் கொலைக்குக் கண்டனம்/ எந்தக் கேள்விக்கும் பதில் உண்டு/ ஜனநாயகம் இதுவா?/ மஹிந்த பாராளுமன்றம் செல்கின்றார் ஆகிய 41 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 16889

**காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் சாகிப்: நூற்றாண்டு விழா சிறப்பு மலர்.** கம்பளைதாசன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு: இலங்கை இஸ்லாமிய பேரவை, 1ஆவது பதிப்பு, 1996. (அச்சக விபரம் தரப்படவில்லை).

48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5x18.5 சமீ.

காயிதே மில்லத் என்று போற்றப்படும் முகம்மது இஸ்மாயில் சாகிபு (05.06.1896-05.04.1972) இந்தியாவின் பெரும் முஸ்லிம் தலைவர்களுள் ஒருவராவார். காயிதே மில்லத் என்ற உருதுச் சொல்லுக்கு வழிகாட்டும் தலைவர் என்று பொருள். தமிழகத்தின் திருநெல்வேலியைச் சார்ந்த ஊராகிய பேட்டையில் பிறந்தவர். தனது பி. ஏ. பொதுத் தேர்வை எழுதாமல் மகாத்மா காந்தியின் ஒத்துழையாமைப் போராட்டத்தில் பங்கு கொண்டு இந்திய விடுதலைப் போராட்டத்தில் இவர் ஈடுபடத் தொடங்கினார். இந்தியாவில் முஸ்லிம் மக்களுக்காக 1906-இல் நவாப் சலீம் முல்லாகான் அகில இந்திய முஸ்லிம் லீக் என்ற கட்சியை ஆரம்பித்தார். அவருக்குப் பின்னர் முகமது அலி ஜின்னா, அதனை நடத்தி வந்தார். ஜின்னாவுக்கும் இந்தியப் பிரிவினைக்கும் முஸ்லிம் லீக்கின் பெரும் தலைவர்களுள் ஒன்றாக இருந்து இவர், ஆற்றிய உதவி அளப்பரிது. பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர், காயிதே மில்லத் இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் தலைவரானார். இந்திய அரசியலமைப்பை உருவாக்கிய இந்திய அரசியலமைப்பு நிர்ணய மன்றத்தின் உறுப்பினராகவும் பணியாற்றினார். இந்திரா காந்தி, லால்பகதூர் சாஸ்திரி, ஜாகீர் உசேன், ஈ.வெ.ரா. பெரியார், ராஜாஜி, காமராஜர், அண்ணா, கருணாநிதி ஆகியோருடன் கட்சிப் பாகுபாடின்றி நட்புறவு கொண்டிருந்தார். 1945ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில், தமிழ்நாடு முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் ஆனார். 1948ஆம் ஆண்டு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1946 முதல் 52 ஆம் ஆண்டு வரை பழைய சென்னை மாகாண சட்ட சபை உறுப்பினராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்தார். 1952 ஆம் ஆண்டு முதல் 58 ஆம் ஆண்டு வரை டெல்லி மேல் சபை உறுப்பினராகப் பதவி வகித்தார். 1962, 1967, 1971 தேர்தல்களில் கேரளா, மஞ்சேரி மக்களவைத் தொகுதியில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குச் சென்றார். 1967இல் நடைபெற்ற சென்னை மாநில சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியைக் கைப்பற்ற முக்கியப் பங்காற்றினார். காயிதே மில்லத்தில் மறைவுக்குப்பின் தமிழக அரசு நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு "காயிதே மில்லத் நாகைப்பட்டினம்

மாவட்டம்" என்று பெயர் சூட்டியது. 2003ஆம் ஆண்டு அவர் நினைவாக தமிழக அரசு ஒரு மணிமண்டபத்தைக் கட்டியுள்ளது. காயிதே மில்லத் நினைவாக சென்னையில் காயிதே மில்லத் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பெருந்தலைவரின் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு இலங்கையில் இந்த சிறப்பு மலர் பல்வேறு வர்த்தக விளம்பரங்களுக்கிடையே காயிதே மில்லத் தொடர்பான செய்திகள், சிறு கட்டுரைகள், நினைவுக் குறிப்புகள் ஆகியவற்றுடன் வெளியிடப்பட்டுள்ளது.

### 16890

**மாமனிதர் குமார் பொன்னம்பலம் (ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஜுனியர்) முதலாம் ஆண்டு நினைவு மலர்.** ஞாபகார்த்த மலர்க் குழு. கனடா: மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தக் குழு, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2001. (அச்சக விபரம் தரப்படவில்லை).

98 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5x18.5 சமீ.

அமரர் குமார் பொன்னம்பலம் (12.08.1938-5.1.2000) அவர்களது மறைவின் முதலாம் ஆண்டு நினைவு தினம் 5.1.2001 அன்று நினைவு கூரப்பட்ட வேளையில் கனடாவில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர். மாமனிதர் மறைவு பிரபாகரன் இரங்கல், செந்தியின் முயற்சி மாமனிதருக்கு கௌரவம், முத்திரை விற்பனையில் சாதனை, தமிழீழ மருத்துவ நிதியத்துக்கு உதவி, புகலிடத் தமிழரின் முன்மாதிரி, கனடிய அரசின் தாராளம், கூட்டு முயற்சிக்கு வெற்றி அனைத்து ஊடகங்களுக்கும் நன்றி, குமாரதுங்கவுக்கு ஒரு பகிரங்கக் கடிதம், முதலாம் ஆண்டு நினைவு தினம், மாமனிதர் குமார் பொன்னம்பலம் சுவர்ணவாஹினி தொலைக்காட்சியில் 16.11.1998ஆம் திகதி தமிழ் மக்களை பாதிக்கும் பிரச்சினை பற்றியும், L.T.T.E.யின் நிலை பற்றியும் சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்துமுகமாக சிங்களத்தில் அளித்த நேர்காணல், புலிகளின் சிறைகூடத்தில் மனித நேயம் உண்டு களுத்துறை சிறையில் அது துளியும் இல்லை, "லக்கி" கதிர்காமர் அவர்களுக்கு ஒரு பகிரங்கக் கடிதம், உண்மையுரை மாமனிதர் குமார் பொன்னம்பலம், மரணமே நீ மாமனிதரைக் கொன்றாயோ, தமிழ் மக்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்த மாமனிதர் திரு. குமார் பொன்னம்பலம், அஞ்சலிச் செய்தி, அமரர் திரு.குமார் பொன்னம்பலம் அவர்களின் மறைவின் முதல் வருட நினைவு, மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களுக்கு இதய அஞ்சலி, 12.8.2000 நடைபெற்ற மாமனிதர் குமார் பொன்னம் பலத்தின் நினைவாஞ்சலிக் கூட்டத்தில் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.வி.ரி.தமிழ்மாறன் அவர்கள் ஆற்றிய உரை, இனிய நண்பர் குமார் மறைவு- பழ.நெடுமாறன், சிங்கத்தின் குகைக்குள் அஞ்சா நெஞ்சத்தவர் மாமனிதர் குமார் பொன்னம்பலம், அமரர் குமார் பொன்னம்பலம் (பொ.பாலசுந்தரம்பிள்ளை), அமரர் திரு.ஜீஜீ. குமார் (சி.கனகரத்தினம்), மாமனிதன் என்கின்ற ஈழவன் (தனபாலசிங்கம் ஜனகன்), பகைவர்களின் கோழைத்தனத்திற்கு பலியானவர்: குமார் பொன்னம்பலத்திற்கு "மாமனிதர்" விருது விடுதலைப்புலிகள் இயக்க தலைவர் பிரபாகரன் அறிவிப்பு, ஈழத் தமிழ் மக்களுக்காக ஒலித்த குரல் புத்தாயிரமாம் ஆண்டு ஆரம்பத்திலேயே ஓய்ந்தது, மாமனிதர் குமார் பொன்னம்பலம் தமிழரின் தன்மானச் சின்னம் (சுமந்திரன்), மறைந்த மாமனிதருக்கு

நமது கடமை (T.K.பரமேஸ்), வணங்காத் தமிழனின் அகால மறைவு தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குப் பேரிழப்பாகும், தமிழீழத் தேசாபிமானி குமார் பொன்னம்பலத்தின் மறைவு தமிழ் சமூகத்திற்குப் பேரிழப்பாகும், துணிகரமிக்க மறத்தமிழன் ஒருவனை இன்று தமிழ் மக்கள் இழந்து விட்டனர் (பரராசசிங்கம் எம்.பி), அப்பன் புகழ் காத்த அரும் புதல்வன் (மு.திருநாவுக்கரசு), சொல்லத்தான் வேண்டும் (நம்நாடன் குறிப்புக்கள்), தலைநகர் தனில் வாழ்ந்த தமிழ்க் குமரா, எந்நாளும் ஒருமுகம் ஓர் உள்ளம் கொண்டான் (சொக்கன் M.A.), தமிழினத்தின் உரிமைக் குரலாக ஒலித்த இன உணர்வின் குரல் ஓய்ந்ததோ.... (குறமகள்), இமயம் இன்று சாய்ந்ததுவோ (திக்கம் குலா), வீரவணக்கம் விளங்கினால் சரி (சிவா சின்னத்தம்பி), குமார் கொலை குறித்து விசாரிக்க ஆணைக்குழு நியமிக்க கோரிக்கை, தமிழருக்காக குரல் கொடுத்த குமார் சுட்டுக் கொல்லப்பட்டது யாரால்?, கனடாவில் குமாரின் கடைசி நாட்கள், KUMAR PONNAMBALAM BESTOWED BESTOWED WITH THE 'MOST EMINET PERSON' AWARD, Posthumous honour from the LTTE, 53rd Session of the United Nations Commission on Human Rights Geneva - 10th March to 18th April 1997 Statement by G.G.Ponnambalam Esqr.On Behalf of the Humanitarian Law Project, 55rd Session of the United Nations Commission on Human Rights Geneva - 22th March to 30th April 1999 Statement by G.G.Ponnambalam Esqr. On Behalf of the International Association of Democratic Lawyers, The Last Letter, Speech made by Mr.Lasantha Wickrematunge, Speech made by Mr.Desmond Fernando, Speech made on 12-03-2000 at memorial meeting for kumar by Dr.Wickremabahu Karunratne, Let us translate Kumar's dreams and ideas into reality - by V.Thangavelu, 'The future of the Tamil people lies in the youth - Kumar Ponnambalam, Kumar Ponnambalam's 1st Year Memorium, KUMAR PONNAMBALAM, He lived according to his conscience - By Dr.T.C.Rajaratnam, KUMAR PONNAMBALAM, Forces of Darkness have put out a flickering light of reason - M.K.EELAVENTHAN, GENEVA REMEMBERS KUMAR, Who killed kumar ponnambalam - by Victor lvan, The Tiger that roared in the Lion's den silenced by State Terror, THE PATH TO HAPPINESS AND PROSPERITY ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

### 16891

**ஸ்ரீமாவோ: உலகின் முதலாவது பெண் பிரதமரைக் கௌரவித்தல்.** திஸ்ஸ ஜயதிலக்க (ஆங்கில மூலம்), எஸ்.துரைராஜா, எஸ்.சிவகுருநாதன் (தமிழாக்கம்). கொழும்பு 7: பண்டாரநாயக்க அரும்பொருட் காட்சியகக் குழு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம், பௌத்தாலோக்க மாவத்த, 1ஆவது பதிப்பு, 2016. (ஒறுகொடவத்தை: குணரத்ன ஓப்செட் லிமிட்டெட், 235/10, அவிசாவளை வீதி).

352 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 1500., அளவு: 25x17.5 சமீ., ISBN: 978-955-0537-00-6.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் வெளிநாட்டுக் கொள்கை (ஜயந்த தனபால), 1970ஆம் ஆண்டில் ஐக்கிய முன்னணி ஆட்சிக் குழுவும் இலங்கையில் குடியேற்ற வாத ஆட்சிக்குப் பிந்திய இலங்கை அரசும் (ஜயதேவ உயங்கொட), இலங்கையில் 1960களிலும் 1970களிலுமான கல்வியின் கருத்துக் கூறுகள் (சுவர்ணா ஜயவீர),

1972-பின்னோக்கிய பார்வை (ஜயம்பதி விக்ரமரத்ன), ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவும் லங்கா மஹிலா சமித்தியும் (ரம்யா சாமலி ஜிரசிங்க), திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவை நினைவு கூருதல் (லக்ஷ்மன் கதிர்காமர்), பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க: ஒரு தனிப்பட்ட நினைவுக் குறிப்பு (எம்.டீ.டீ.பீரிஸ்), ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க: பொருளாதார விவகாரங்களில் அவர் வகித்த பாத்திரம் (லீலானந்த டி சில்வா), பாராளுமன்றத்தில் திருமதி பண்டாரநாயக்க (சாம் விஜேசிங்க), உலகின் முதலாவது பெண் பிரதமர்-ஒரு புகழாரம் (பிராட்மன் வீரக்கோன்), இந்தியாவிலிருந்து ஒரு புகழாரம் (கோபாலகிருஷ்ண காந்தி), ஒரு சிவில் ஊழியரின் கருத்துரை (திலக் ஈ.குணரத்ன), ஸ்ரீமாவோ ஆர்.டீ. பண்டாரநாயக்க அம்மையார் (மானெல் அபேசேகர), திருமதி பண்டாரநாயக்கவும் சிறுபான்மை இனங்களும் (ஏ.ஜாவிட் யூசுப்) ஆகிய படைப்பாக்கங்களை இந்நூல் கொண்டுள்ளது.

மேலும் பார்க்க:
அரசியல் அறம் A.R.M. 16464

## 923.4 சட்ட அறிஞர்கள்

### 16892

**கௌரி நீதிக்கான குரல்.** கே.வி.தவராசா (தொகுப்பாசிரியர்). வாகனேரி: செய்ஹ் இஸ்மாயில் ஞாபகார்த்த பதிப்பகம், SIM Publications, River Bank Road, காவத்தமுனை, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2022. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48B, புளுமெண்டால் வீதி).

liii, 394 பக்கம், 20 தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5x19 சமீ., ISBN: 978-955-1447-25-0.

அமரர் திருமதி கௌரிசங்கரி தவராசா (1955-2021) அவர்களின் மறைவின் முதலாமாண்டு நிறைவின்போது வெளியிடப்பட்ட நினைவுமலர். இம்மலர் மூன்று முக்கிய பிரிவுகளில் ஏராளமான ஆக்கங்களைக் கொண்டுள்ளது. முதலாவது பிரிவு, மறைந்த சிரேஷ்ட சட்டத்தரணி அமரர் கௌரி சங்கரி தவராசாவின் நினைவுகளைச் சுமந்திருக்கும் 72 அனுதாபச் செய்திகளைக் கொண்டுள்ளது. இரண்டாவது பிரிவு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பற்றிய தெளிவைப் பதிவு செய்யும் வகையில் எழுதப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் 1979-2022, ஆயுதப் போராட்டமும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் சிங்கள தலைமைத்துவங்களும், அவசரகாலச் சட்டத்தின் தோற்றம், கைதுகளும் வழக்குகளும் 1981-2022, 1981ஆம் ஆண்டு இனக்கலவரம் (Central Camp), 1983ஆம் ஆண்டின் இனவழிப்பு, அரசியல் கைதிகளின் வழக்கில் ஆஜராகும் சட்டத்தரணிகள் துரோகிகள் ஆகிய 8 கட்டுரைகளைக் கொண்டுள்ளது. மூன்றாவது பிரிவு 1981ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டு வரையிலான முக்கிய 40 வழக்குகள் பற்றிய விரிவான தகவல்களை ஒளிப்படங்களுடன் தனித் தனி கட்டுரைகளாகத் தருகின்றன. இம்மூன்று பிரிவுகளும் மிகவும் பெறுமதியான உசாத்துணை ஆவணங்களாக அமைகின்றன.

## 923.6 சமூக சேவகர்கள்

### 16893

**திருமுகம் 60: மணிவிழா மலர் 2021.** சிவமலர் அனந்தசயனன், பரமநாதன் சேயோன், விஜயரகுநாதன் ஸ்ரீவிசாகன். யாழ்ப்பாணம்: செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் பிறந்தநாள் அறநிதியச் சபை, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை, 1ஆவது பதிப்பு, மே 2021. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

lxii, (9), 198+31 பக்கம், 31 புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x26.5 சமீ.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் அறுபதாவது பிறந்த நாள் நினைவாக இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் காலரீதியான முக்கிய நிகழ்வுகள், சொற்பொழிவுச் சாதனைகள், சிவபூமி அறக்கட்டளையின் வாழ்வும் பணியும் ஆறு திருமுருகனின் அர்ப்பணிப்பும், அவர் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபைத் தலைவர் பணியை ஏற்றபின் ஆற்றிய திருப்பணிகள் என 90 கட்டுரைகளும், புகைப்படங்களும் இம்மலரை அலங்கரித்துள்ளன. செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராகவும், சிவபூமி என்ற சிறுவர் மன வளர்ச்சிப் பாடசாலைகள், சிவ பூமி முதியோர் இல்லம், கீரிமலைச் சிவபூமி யாத்திரிகர் மடம், நாவற்குழியில் திருவாசக அரண்மனை, ஆதரவற்ற நாய்களைப் பேணும் காப்பகம் போன்ற பல்வேறு அற நிலையங்களை நிறுவி அவற்றைக் கொண்டு நடத்துபவராகவும் இயங்கி வருகிறார். தன் வாழ்வைச் சைவத்துக்கும் அறப் பணிகளுக்காகவும் அர்ப்பணித்துச் செயற்படுகின்றார்.

## 923.61 விடுதலைப் போராளிகள்/இராணுவ வீரர்கள்

### 16894

**எக்ஸைல்.** நோயல் நடேசன். கிளிநொச்சி: மகிழ் பதிப்பகம், 754, கனகராசா வீதி, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2019. (தெகிவளை: T.G. பதிப்பகம்).

xiv, 155 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 22.5x15 சமீ.

ஈழத்துக்கான ஆயுதப் போராட்டம் அதன் ஆரம்ப எத்தனிப்புகளுடன் தீவிரமடைந்த 80களின் முற்பகுதியில் வெவ்வேறு தமிழ் விடுதலை இயக்கங்களின் ஒத்துழைப்பின் மூலமாகத் தமிழ்நாட்டிலே உருவாகிய தமிழர் மருத்துவ நிலையத்திலே தான் பணிபுரிந்த நாட்களிலே இடம்பெற்ற சம்பவங்களினதும், அந்த நாட்களிலே தான் பெற்றுக்கொண்ட அனுபவங்களினதும் அடிப்படையில் எழுதப்பட்ட நினைவு மீட்டலாக இந்நூல் அமைகிறது. இயக்கங்களினது ஜனநாயக மறுப்பு அரசியல் காரணமாக அவற்றுடன் பொது நோக்கங்களுக்காகவும், சமூக மாற்றத்துக் காகவும், அரசியல் விடுதலையின் பொருட்டும் இணைந்து செயற்பட்ட ஒருவருக்கு ஏற்பட்ட நம்பிக்கையீனத்தினையும், விரக்தியினையும் இந்த நூல் உணர்வு

பூர்வமாக வெளிக்கொண்டு வருகிறது. இது சிவில் யுத்தம் தொடர்பாகத் தமிழர் தரப்பின் மத்தியில் பெரிதும் பேசப்படாத சில பக்கங்களைப் பேசும் ஒரு நூல். செய்திப் பத்திரிகைகளிலும், தமிழ்த் தேசிய கருத்துருவாக்கிகளின் பத்திகளிலும் வெளிவராத சில உண்மைகளையும், நினைவுகளையும், சம்பவங்களையும் இந்தப் புத்தகத்தில் இருந்து நாம் வாசித்தறியக் கூடியதாக இருந்தது. ஆயுதப் போராட்ட காலங்களில் நாடு கடந்த நிலையில் இடம்பெற்ற வன்முறைகள் பற்றி இந்த நூல் பல செய்திகளையும், குறிப்புக்களையும் தாங்கியதாக உள்ளது. தமிழ்த் தேசத்தினை மையமாகக் கொண்ட வன்முறைக்குத் தேசங்கடந்த ஒரு பரிமாணமும் இருக்கிறது என்பதனைச் சொல்லும் ஒரு நூலாக எக்ஸைல் அமைகிறது. எக்ஸைல் 84, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, இலங்கை-இந்தியத் தமிழரை இணைக்கும் சங்கிலி, மகனின் பிறந்தநாள்: மனைவியின் துணிச்சல், சிக்னல் பற்பசை தலையிடி மருந்தாகியது, தமிழக அமைச்சருடன் சந்திப்பு, நாளையை நாளை பார்ப்போம், இந்திரா காந்தியற்ற ஈழ விடுதலை, தமிழர் மருத்துவ நிலையம், உண்மைகள் இரண்டு, வெளிநாட்டுத் தமிழர்களின் உதவிகள், தமிழீழக் கனவுடன் இறுதிவரை வாழ்ந்து மறைந்த டேவிட் ஐயா, அப்பாவிகளைக் கொல்லும் பயங்கரவாதம், இரத்தக் கறை படிந்த அங்கிகள், அந்த மூன்று நாட்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழகம்-தோற்றம், டொக்டர் பிரமோத்கரன் சேத்தி நினைவுகள், கெடுகுடி சொற்கேளாது, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் பிடிபட்ட ஆயுதங்கள், மீண்டும் வெளியேறுதல் ஆகிய அத்தியாயத் தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**16895**

**நினைவழியா நாட்கள்.** *செ.இளமாறன் (புனைபெயர்: குலம்). சுவிட்சர்லாந்து: செ.இளமாறன், 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2022. (சுவிட்சர்லாந்து: தமிழ் அச்சகம்,* Rosengarten str 10, 8037 Zurich*).*

*(5), 179 பக்கம், ஒளிப்படங்கள், தகடுகள், விலை: இயூரோ 20.00, அளவு: 21.5x15.5 சமீ.,* ISBN: *978-3-906963-01-3.*

தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பொறுப்பாளராக இருந்த திரு. குலம் அவர்கள் எழுதிய விடுதலைப் புலிகளின் ஆரம்பகால வரலாறு கூறும் நூல். எழுபதுகளின் ஆரம்பகாலம், அரசியல் இயக்கங்களின் தோற்றமும் தம்பியின் (பிரபாகரன்) போராட்டப் பயணமும், தம்பியின் முதல் தமிழ்நாட்டுப் பயணம், தமிழீழம் திரும்பிய தம்பி, துரையப்பா மீதான நடவடிக்கை, தம்பியுடனான எனது நேரடி அறிமுகம், இயக்கத்தின் விவசாயப் பண்ணைகள், புலிகளின் உள்ளமைப்பு விதிகளும் ஆட்சேகரிப்பும், தம்பியுடனான மிதிவண்டிப் பயணங்கள், தம்பியின் கொழும்புச் சந்திப்புகள்-இயக்க விரிவாக்கம்-பாலஸ்தீனப் பயிற்சி, புலிகள் அமைப்பின் உரிமைகோரலும் தமிழரசுக் கட்சியுடனான தொடர்புகளும், அவ்ரோ விமானத் தகர்ப்பும் பஸ்தியாம்பிள்ளை குழு மீதான தாக்குதலும், இயக்கத்தில் ஏற்பட்ட பிளவு, நாராந்தனை சமாதான முயற்சி, இயக்கப் பிளவுக்குப் பிந்திய காலம், எனது மூத்த சகோதரியின் செய்தி, பின்னுரை ஆகிய அத்தியாயங் களில் இந்நூல் ஒரு சுயவரலாற்றுப் பாணியில் எழுதப்பட்டுள்ளது.

## 16896

**வாழ்வின் பின்நோக்கிய பயணமிது.** *சிவகாமி, யாழினி. யாழ்ப்பாணம்: மறுயுகம் பதிப்பகம், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2019. (யாழ்ப்பாணம்: ஜெயஸ்ரீ பிறின்டர்ஸ், இல. 34, பிறவுன் வீதி).*

*(9), 48 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.,* ISBN: *978-955-7286-04-4.*

சிவகாமியும் யாழினியும் தம் மக்களின் விடுதலைக்காக போராடப் புறப்பட்ட இரு பெண்கள். சக போராளிகளையே எதிரியாகக் கண்டு திகைத்துப் போனார்கள். அநீதிக்கு எதிராகத் துணிந்து நின்று போராடும் குணத்தினாலும், புத்திசாலித்தனத்தி னாலும், அங்கிருந்தும் போராடி விடுதலை பெற்றார்கள். அவர்கள் தமது அனுபவங் களை எவ்வித மிகைப்படுத்தலுமின்றி உள்ளது உள்ளபடி இந்நூலில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஈழத்தமிழின விடுதலைப் போராட்டத்தில் நூற்றுக்கணக் கான பெண் போராளிகளுக்கு ஏற்பட்ட துன்பங்கள் பேரினவாத ஒடுக்குமுறையால் மட்டுமல்ல சொந்த போராட்ட இயக்கங்களினாலும் சொந்த சமூகத்தாலும் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன என்பதை இந்நூல் புரியவைக்கின்றது.

## 16897

**வின்னி மண்டேலாவின் வாக்குமூலம்.** *மு.தயாளன் (இயற்பெயர்: மு.நற்குணதயாளன்). மட்டக்களப்பு: மகுடம் பதிப்பகம், இல. 90, பார் வீதி, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2021. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496A, திருமலை வீதி).*

*120 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 19x13 சமீ.,* ISBN: *978-624-5849-12-3.*

ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்பது வெறும் வார்த்தையல்ல. அது வரலாறு. தென்னாபிரிக்காவில் 27 வருடகாலம் போத்தா நிறவெறி அரசின் அடக்குமுறையால் சிறைவாசம் அனுபவித்த தென்னா பிரிக்க மண்ணின் விடுதலைவீரன் நெல்சன் மண்டேலாவின் வெற்றிக்கும், விடுதலைக்கும் பின்னால் அவரது துணைவி வின்னி மண்டேலாவின் அர்ப்பணிப்பு மிக்க செயற்பாடுகள் மிகக் காத்திரமான பங்களிப்பை நல்கியிருக்கின்றன. முதலாளித்துவ அரசுகளும் அவர்களது ஊடகங்களும் எவ்வாறு தமக்கு எதிரானவர்களை அப்புறப்படுத்தி முக்கியம் இழக்கச் செய்கின்றன என்பதற்கு வின்னி மண்டேலாவின் கதை நமக்கொரு பாடமாகும். இந்தப் போராட்டத்தில் வின்னி மண்டேலாவின் வகிபாகத்தை வெளிக்கொண்டு வருவதே இந்நூலின் நோக்கமாகும். அதனை ஒரு சுயசரிதைப் பாங்கில் ஆசிரியர் வழங்கியுள்ளார்.

மேலும் பார்க்க:

அற்றைத் திங்கள்: ஆ.இரகுபதி பாலஸ்ரீதரனின் வாழ்க்கை அனுபவங்கள். 16926

## 923.7 கல்வியியலாளர்கள்

### 16898

**அருள் கலசம் 60.** ஞான. திருக்கேதீஸ்வரன். இணுவில்: அருள் மணிவிழாச் சபை, 1ஆவது பதிப்பு, 2018. (யாழ்ப்பாணம்: அன்றா பிறிண்டேர்ஸ், இல. 379, கஸ்தூரியார் வீதி).

88 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17 சமீ.

தனியார் கல்வி நிறுவனச் சேவையின் 40 வருடங்களை பூர்த்தி செய்த (மாணிக்க விழா) ஆசிரியர் இராசரத்தினம் அருட்செல்வம் (அதிபர் A.T.C. கல்வி நிறுவனம்-இணுவில்) அவர்களின் சேவை நயப்பு மலராக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் ஆசிரியர் இரா அருட்செல்வம் பற்றிய 46 நினைவுப்பதிகைகள் இடம் பெற்றுள்ளன.

### 16899

**கல்வியாளர் ஹக் சேர்: மனித நேயமிக்க ஓர் ஆளுமை.** தமிழ் நேசன் அடிகளார் (தொகுப்பாசிரியர்). மன்னார்: அருட்திரு தமிழ்நேசன் அடிகள், கலையருவி, 1ஆவது பதிப்பு, 2020. (மன்னார்: ட்ரான்சென்ட் பிரின்டர்ஸ்).

x, 106 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ., ISBN: 978-624-96766-0-2.

மன்னார் மண்ணில் கடினமான ஒரு காலப் பகுதியில் பயங்கரமான ஒரு யுத்த கால கட்டத்தில் சிறப்பாக கல்விப் பணியாற்றிய ஒரு கல்விமான் முன்னை நாள் மன்னார் பிராந்திய கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஏ.சி.அப்துல் ஹக் அவர்களாவார். அவரது மறைவின் பத்தாவது ஆண்டின் நினைவாக 11.03.2022 அன்று இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. ஜனாப் ஏ.சி.அப்துல் ஹக் அவர்களின் பல்வேறு கல்விப் பணிகள் பற்றிய நினைவுகூரல்களாக இதிலுள்ள கட்டுரைகள் அமைந்துள்ளன.

### 16900

**காலத்தை வென்ற கமலம்: கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் மணிவிழா மலர் 2007.** மலர்க்குழு. யாழ்ப்பாணம்: கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் மணிவிழா அமைப்பு, தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய், 1ஆவது பதிப்பு, ஜனவரி 2007. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 424, காங்கேசன்துறை வீதி).

ix, 264 பக்கம், ஒளிப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5x18.5 சமீ.

எஸ்.கே.யோகநாதன், அ.சண்முகதாஸ், ஆறு திருமுருகன், பா.தனபாலன், திருமதி ஞா.கணேசநாதன் ஆகியோரை உள்ளடக்கிய மலர்க்குழுவினரால் தொகுக்கப்பட்ட இம்மலர் நான்கு இயல்களைக் கொண்டுள்ளது. முதலாவது இயலில் வாழ்த்துச் செய்திகளும் இரண்டாவது இயலில் கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்

அவர்களின் வாழ்வும் பணியும் தொடர்பான ஆய்வுப் பிரதிபலிப்புக் கட்டுரைகளும், மூன்றாவது இயலில் யாழ்ப்பாணத் தேசிய கல்வியியற் கல்லூரிக் கல்வியியலா ளர்களின் ஆசிரியத்துவம் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளும் நான்காவது இயலில் கலாநிதி தி.கமலநாதன் அவர்களைப் பற்றிப் பல்வேறு தரப்பினரின் இயல்பும் ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. மூன்றாவது இயலில் காணப்படும் கட்டுரைகள் பின்வருமாறு: வகுப்பறைக் கற்றல், கற்பித்தலை வினைத்திறனாக்கும் ஆசிரிய முகாமைத்துவ நுட்பங்கள் (S. K. யோகநாதன்), பாடசாலைகளிற் கல்வி ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தலும் பிரயோகங்களும் (பாலசுப்பிரமணியம் தனபாலன்), கல்வித் தொழிநுட்பமும் ஆசிரியரும் (க. கமலாநதன்), மனிதத்துவத்தை விருத்தியாக்கும் அழகியல் கல்வியின் கோட்பாடுகளும் செயலாற்றுகைகளும் தொடர்பான ஆய்வியல் நோக்கு (திருமதி ஞானசக்தி கணேசநாதன்), வினைத் திறனான கற்றல், கற்பித்தல் செயலொழுங்கில் ஆசிரியர் மாணவர் இடைவினை உறவின் பங்களிப்பு (திருமதி ஜெயமலர் தியாகலிங்கம்), ஆசிரிய வாண்மையில் கல்வி வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் பயன்பாடுகளும் பிரயோகங்களும் (திருமதி கௌரி சுரேசன்), மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் இணை பாட விதான கலைத்திட்ட நடைமுறைகள் (செல்வி கிரிஜா கந்தசாமி), கல்வி உளவியலில் கற்றல் கொள்கைப் பிரயோகங்கள் (திருமதி சுகந்தினி அன்ரனி தவச்செல்வம்), தூண்டல் துலங்கற் கற்றற் கொள்கைகள்-நடத்தைவாதக் கற்றற் கொள்கைகள், அறிவுசார் கற்றற் கொள்கைகள் (கள அறிகைக் கற்றற் கொள்கைகள்), இருபதாம் நூற்றாண்டில் ஈழத்தின் கர்நாடக இசைத்துறை வளர்ச்சியில் யாழ்ப்பாண மாவட்டத்து இசை நிறுவனங்களின் பங்களிப்பு (திருமதி விக்னேஸ்வரி நரேந்திரா), செவிச் செல்வமும் அதனைப் பேணிக்கொள்வதற்கான சிறப்பார்ந்த வழிமுறைகளும் (செல்வி. இந்திரா செல்வநாயகம்), விசேட தேவையுடையோர் எதிர்கொள்ளும் நெருக்கீடுகள் (திரு. த. சிவகுமார்), பிள்ளை நேயப் பாடசாலை அர்த்தப்படுத்தலில் ஆசிரியர் பங்கு (செல்வி N. நல்லையா), எண்ணக்கரு மாதிரியுரு அண்மை விருத்திக்கான வலயம் அற்ற நிலை, ஈழத் தமிழர் ஓவியக் கலையின் பின்னடை விற்கான ஏதுக்களும் சாதகமான மாற்றுக்களும் (திருமதி பப்சி. மரியதாசன்), பரதநாட்டியக் கலையின் பண்பாட்டுப் பல்பரிமாணங்கள் ஒரு நோக்கு (திருமதி புவனா வேல்நிதி), கணிப்பீடும் மதிப்பீடும் அண்மைக்காலப் போக்குகள் (கி. கிருஸ்ணயோகன்), G.C.E (O/L) Examination 1999-2003 ஆற்றுகைக் கணிப்பீட்டின் வினைத்திறன் மிக்க கணிப்பீட்டுக் கருவியாக மாணவர் செயலடைவுக் கோவை (திருமதி ஜெ. உதயகுமார்), அழகியலின் அனுகூலங்களும் அவற்றின் கற்றல் தளங்களும் (க. ரட்ணேஸ்வரன்), ஆரம்பக் கல்வி கற்பித்தற் செயற்பாட்டில் நாடகம் (க. இ. கமலநாதன்), இசைத்துறையில் ஆர்வத்தினை ஏற்படுத்துவதில் கற்பித்தல் நுட்ப முறைகளின் பங்கு (திருமதி சி.வை. குகநேசன்), நாடகப் படைப் பாக்க செல் நெறிகள் (க. திலகநாதன்), Teaching Learning Mathematical Problem Solving (K. Baskaran), Budgetary Techniques in Library Management (Mrs. R. Pararajasingam), The Emotional, Behavioral Problems and Their impact on Children (T. Mohan), Teaching English through Audio Visual Aids (S. Mugunthan). அடைப்புக்குறிக்குள் ஆய்வாளர்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

**16901**

**நாவலர் மாநாடு விழா மலர் 1969**. *மலர் ஆலோசனைக் குழு. கொழும்பு: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, 1ஆவது பதிப்பு, 1969. (கொழும்பு: மெய்கண்டான் அச்சகம் லிமிட்டெட், 161, செட்டியார் தெரு).*

*(28), 367 பக்கம், தகடுகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x19.5 சமீ.*

*வாழ்த்துக் கவிதைகள், முன்னுரை (ஆறுமுக நாவலர் சபை), ஆசியுரை என்பன வற்றுடன் நாவலரும் புராண படனமும் (பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை), ஞானஞாயிறு நாவலர் பெருமான் (ச.தண்டபாணி தேசிகர்), தற்கால உரைநடையின் தந்தை (பேராசிரியர் வி.செல்வநாயகம்), நாவலர் வகுத்த புதுப்பாதை (கலாநிதி க.கைலாசபதி), தமிழ் இலக்கியத்துக்கு நாவலர் புரிந்தபணி (கலாநிதி பொ. பூலோலசிங்கம்), நாவலரும் தமிழ்மொழியும் (வித்துவான் சொ.சிங்காரவேலன்), நாவலரும் நற்றமிழும் (பேராசிரியர் சி.நயினார் முகமது), நாவலர் பெருமை (பண்டிதர் இ.நமசிவாய தேசிகர்), நாவலர் புகழை நானோ சொல்லவல்லேன் (திரு.க.சரவணமுத்துப்பிள்ளை), ஆறுமுக நாவல சற்குரு (திரு.ம.க.வேற்பிள்ளைப் புலவர்), அச்சகமும் பதிப்பீடும் (நாரா நாச்சியப்பன்), தமிழகத்தை ஈழநாட்டுக்குக் கடமைப்படுத்திய பேருபகாரி (எஸ்.சோமசுந்தர பாரதி), நாவலர் கல்விப் பணி (ச.அம்பிகைபாகன்), நாம் நாவலருக்குச் செய்யும் கைம்மாறுகள் (சுத்தானந்த பாரதியார்), கல்வித் துறையில் தீர்க்க தரிசனம் (கி.லக்ஷ்மணன்), நாவலர் சைவக் காவலர் (கவியோகி சுத்தானந்த பாரதியார்), உசாத் துணை (அ.வி.ம.), நாவலரும் பதிப்பாசிரியப் பண்பும் (வித்துவான் டாலூர் கண்ணப்ப முதலியார்), தமிழ் உரைநடையின் தந்தை (சோமலெ), பத்திரிகையில் நாவலரின் எழுத்து நடை (க.சதாமகேசன்), ஏற்ற வழிகாட்டி (தி.செல்வக்கேசவராய முதலியார்), நாவலரது இலக்கணப் பணி (செ.வேலாயுதபிள்ளை), மறைவளர்த்த நாவலரும் முஸ்லிம் நேசன் ஆசிரியரும் (எஸ்.எம்.கமாலுத்தீன்), நாவலர் காலம் (ச.தனஞ்சயராசசிங்கம்), ஆறுமுக நாவலரின் ஆளுமை (செவ்வேள்), ஒப்புயர்வில்லா நாவலன் (கு.அம்பலவாணபிள்ளை), தமிழிலே குறியீட்டிலக்கணம் புகுத்தியவர் (வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார்), தமிழ் செய்த தவம் (பண்டிதர் வி.சீ.கந்தையா), கந்த புராணங் காக்கும் கலாசாரம் (பண்டிதை த.வேதநாயகி), நாவலர் எழுப்பும் முதல் வினா (செ.தனபாலசிங்கன்), நாங்களும் மெச்சுகின்றோம் (நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்), நாவலருக்கு என்ன தெரியும்? (குல.சபாநாதன்), நாவலர் பெருமான் (சம்பந்தன்), நாவலர் வழிவந்த சமுதாயம் (வித்துவான் பொன். முத்துக்குமாரன்), நாவலரும் முஸ்லிம்களும் (மு.முகம்மது உவைஸ்), தமிழிலக்கண அறிவு பரவுவதற்கு உதவியவர் நாவலர் பெருமானே (மறைமலை அடிகள்), தமிழகத்தை ஈழ நாட்டுக்குக் கடமைப்படுத்திய பேருபகாரி நாவலர் (கலாநிதி. சு.வித்தியானந்தன்), நாவலரும் மதிப்பும் பணியும் (தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை), அச்சாளர் ஆறுமுக நாவலர் (நா.இரத்தினசபாபதி),* Arumuga Navalar (Dr.H.W.TAMBIAH), Pioneering HERO ( A.M.A.AZEEZ), Prince of Tamil Scholars (C.S.NAVARATNAM), *திருநின்ற செம்மையே செம்மை (புலவர்*

பாண்டியனார்), தமிழர் தவப்பயன் (புலவர் மு.நல்லதம்பி), சிவநெறி (திருமுருக கிருபானந்த வாரியார்), அகப்பொருளில் அருட்பொருள் (முருகவேள்), நாவலர் காலத்து புலவர்கள் (வித்துவான் க.கி.நடராஜன்), வசன நடை கைவந்த வல்லாளர் (எம்.ஆர்.அடைக்கலசாமி), நாவலருக்குப் பின் ஈழத்து உரையாசிரியர்கள் (கு.பூரணானந்தா), மனிதாபிமான மாண்பாளர்கள் (சாலை இளந்திரையன்), மாதோட்டம் (மகேஸ்வரி மகாதேவா), ஈழமும் சிதம்பரமும் (அருள்.தியாகராசா), முந்தியும் இருந்த சிந்துகள் (முருகையன்), ஈழத்தில் தமிழ் நாடகங்கள் (கலையரசு. க.சொர்ணலிங்கம்), தமிழில் விஞ்ஞானமும் இலங்கை நாட்டின் பணியும் (பெ.நா.அப்புஸ்வாமி), Bharata Natyam and Ceylon (S.Sivanayagam) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. கவிதைப் பகுதியில் நல்லூர் ஆறுமுக நாவலனார் (விபுலானந்த அடிகள்), நாவலன் சீரடிகள் வாழி (நவாலியூர் திரு.க. சோமசுந்தரப்புலவர்), நாவலர் தாள் இறைஞ்சுதும் (பண்டிதர் கா.பொ.இரத்தினம்), கனிதமிழ் ஈழத்தோங்கக் கலங்கரை விளக்கம் ஆனோன் (தான்தோன்றிக் கவிராயர்) ஆகிய கவிதைகள் இடம்பெற்றுள்ளன. தொடர்ந்து, நாவலர் வாழ்க்கைத் திகதிகள், ஆறுமுக நாவலரின் வரலாற்றுடன் தொடர்புடையோர், நாவலர் காலத்தில் வாழ்ந்த பெரியோர்கள், நாவலர் காலத்தில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க சம்பவங்கள் சில, ஆசிரியர் மாணாக்கர் பரம்பரை -1: கூழங்கைத்தம்பிரான் (? - 1795), ஆசிரியர் மாணாக்கர் பரம்பரை -2: நல்லூர் மனப்புலி முதலியார் மகன் சரவணமுத்துப் புலவர் (1802 - 1845), ஆசிரியர் மாணாக்கர் பரம்பரை -3: நல்லூர் க.ஆறுமுக நாவலர் (1822 - 1879), நாவலர் நூல்கள், நாவலரைப் பற்றிய நூல்கள் ஆகிய அவணக் குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. மலர்க் குழுவில் கி.லட்சுமணன் தலைவராகவும், நா.சோமகாந்தன் அமைப்பாளராகவும், புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை, செ.வேலாயுதபிள்ளை, முதலியார் குல சபாநாதன், க.செ.நடராசா ஆகியோர் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 8789).

### 16902

**நான் கண்ட பேராசிரியர் சோ.சந்திரசேகரம்: வாழ்வும் பணியும்.** துரைசாமி நடராஜா. கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு 2022. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xiv, 302 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 1500., அளவு: 22.5x15.5 சமீ., ISBN: 978-624-6164-22-5.

நான் கண்ட பேராசிரியர், பூர்வீகம், பாடசாலைக் கல்வி, பேராதனை பல்கலைக் கழக வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, தொழிற்றுறை நகர்வுகள், அரசியல் தொழிற்சங்க ஈடுபாடு, ஜப்பானில் பெற்ற உயர்கல்வி, வெளிநாட்டு அனுபவங்கள், எழுத்தும் பேச்சும், சமூகம் சார்ந்த செயற்பாடுகள், கலை இலக்கிய ஈடுபாடு, நெஞ்சில் நிற்கும் நினைவுகள், பேராசிரியர் பெற்றுக்கொண்ட விருதுகள், பேராசிரி யரைப் பற்றி ஏனையோர் உள்ளத்திலிருந்து, பேராசிரியரின் நூற்பட்டியல் ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. உதவிக் கல்விப் பணிப்பாளராகக்

கடமையாற்றும் நூலாசிரியர், நீண்டகாலமாக ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றியவர். புசல்லாவை இந்து தேசியக் கல்லூரியில் கல்வி பயின்ற இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 69988).

### 16903

**ரவீந்திரம்**. கா.சிவஞானசுந்தரம் (இதழாசிரியர்). யாழ்ப்பாணம்: விழாக் குழுவினர், கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம், கல்வயல், 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).

56 பக்கம், ஒளிப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

36 ஆண்டுகால கல்விச் சேவையில் 19.07.2002 முதல் 06.02.2016 வரையிலான 13 ஆண்டுகள் தான் முன்னர் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற, யா/கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலயத்திலேயே அதிபராகக் கடமையாற்றிய "பிரதீபா பிரபா" இராசரத்தினம் ரவீந்திரன் (பிறப்பு: 07.02.1956) அவர்கள் அகவை அறுபதை நிறைவுசெய்து ஓய்வுபெற்றுச் செல்வதையிட்டு வெளியிடப்பட்ட மணிவிழாச் சிறப்புமலர். இம்மலர் 07.02.2016 அன்று வெளியிடப்பட்டது. இம்மலர் ஆசிச் செய்திகளையும் வாழ்த்துச் செய்திகளையும், திரு. ந.சர்வேஸ்வரன் அவர்கள் தொகுத்திருந்த கல்வயல் கிராமத்தின் வரலாறு, யாழ். கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலயத்தின் வரலாறு ஆகியவற்றையும் உள்ளடக்குகின்றது. நல் அதிபர்களுக்கான "பிரதீபா பிரபா" விருதினை இவர் 2015இல் ஜனாதிபதியிடமிருந்து பெற்றிருந்தார்.

## 923.8 வர்த்தகர்கள்

### 16904

**எஸ்.ரி.ஆர். நினைத்ததை முடித்தவர்: திருப்பணித் தவமணி சி.தியாகராஜா-சாமானியர் ஒருவரின் சாதனைப் பயணம்**. சி.தியாகராஜா (மூலம்), விஜிதா கேதீஸ்வரநாதன், பொ.ஐங்கரநேசன் (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: திருமதி விஜிதா கேதீஸ்வரநாதன், 1ஆவது பதிப்பு, ஜனவரி 2023. (யாழ்ப்பாணம்: மிக்கி பிரின்டிங் ஸ்பெஷலிஸ்ட், தபாற்பெட்டிச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி).

146 பக்கம், ஒளிப்படங்கள், 8 தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18 சமீ.

யாழ்ப்பாணம் ராஜா தியேட்டரின் உரிமையாளர் எஸ்.ரி.ஆர். அவர்களின் மறைவின் முதலாம் ஆண்டு நினைவாக, தமிழக, ஈழத்துத் தமிழ்ப் பிரமுகர்களின் மலரும் நினைவுகளின் தொகுப்பாக அமையும் இந்நூல் சி.தியாகராஜா அவர்கள் எழுதிய "எண்ணம் போல் வாழ்வு" என்ற சுயசரிதையையும் உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது. வெற்றிகரமாக தன் வர்த்தக உலகத்தின் சிருஷ்டியான யாழ்ப்பாணத்து வர்த்தகப் பிரமுகர் என்ற வகையில் இந்நூல் முக்கியத்துவம் பெறுகின்றது. எந்தையும் தாயும், துள்ளித் திரிந்த பள்ளிப் பருவம், கற்றுத் தந்த

ராஜா கூல்பார், ஆளாக்கிய ராஜா ஸ்னோ ஹவுஸ், ராணி சினிமாவின் தோற்றம், வாங்கிய முதலாவது கார், இசை விழாக் காண மெட்ராஸ் பயணம், இல்லாள் சரஸ்வதி, எனது திரையரங்குகள், யாழ்ப்பாணம் ராஜா, மட்டக்களப்பு சாந்தி, திருகோணமலை சரஸ்வதி, வவுனியா வசந்தி, ராஜா சினிமா-2, சுகந்தி சினிமா 3D, அமுதா சினிமா 3D, எஸ்.ரி.ஆர். பிலிம்ஸ், எம்.ஜி.ஆரும் நானும், எனது அரசியல் ஈடுபாடு, சந்தித்த ஞானிகள், மேற்கொண்ட திருப்பணிகள், மேற்கொண்ட இசைப் பணிகள், நினைப்பது தான் நடக்கும் ஆகிய 16 அத்தியாயங்களில் இவரது சுயசரிதை எழுதப்பட்டுள்ளது.

### 16905

**சிவாலயம்: அமரர் திரு. துரை. சுப்பிரமணியசிவம் அவர்களின் நினைவு மலர்.** மலர்க் குழு. கொழும்பு 6: அமரர் துரைராசா சுப்பிரமணியசிவம் நினைவுக் குழு, இல 8, 2/3 A, ஹம்டன் ஒழுங்கை, வெள்ளவத்தை, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2014. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

219 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17 சமீ.

கொழும்பு ரெஸ்ரோரன்ட், எஸ்மார்ட், சிவாஸ்கோ யாழ்ப்பாணம் ஆகிய வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளரான அமரர் துரைராசா சுப்பிரமணியசிவம் அவர்களின் மறைவின் நினைவிதழாக வெளிவந்துள்ளது. பஞ்சபுராணம், திருமுறை அர்ச்சனைப் பாடல்கள், சிவபுராணம், லிங்காஷ்டகம், கந்தசஷ்டி கவசம், சண்முக கவசம், கந்தர் அநுபூதி, ஸ்ரீ குமரஸ்தவம், ஸ்ரீசுப்பிரமணிய புஜங்கம், அபிராமி அந்தாதி, அம்பாள் பாதாதிகேச நமஸ்காரம், லலிதா ஸஹஸ்நாமம், ஸ்ரீ மஹிஷாஸுர மர்தினி ஸ்தோத்திரம், ஸ்ரீ கனகதாரா ஸ்தோத்திரம், சௌந்தர்ய லஹரி, திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி, திருப்பொற் சுண்ணம், விஷ்ணு சஹஸ்நாமம், ஆதித்ய ஹ்ருதயம் ஸ்லோகம், ஹனுமான் சாளிசா, பகவான் ஸ்ரீ சத்யசாயி சுப்ரபாதம், கோளறு திருப்பதிகம், திருமந்திரம், பட்டினத்துப் பிள்ளையார் பாடல்கள் ஆகிய பக்தி இலக்கியங்களுடன் அமரர் துரைராசா சுப்பிரமணியசிவம் அவர்களின் வாழ்க்கை வரலாறும், அஞ்சலிச் செய்திகளும் புகைப்படத் தொகுப்பும் இடம்பெற்றுள்ளன.

## 923.9 நாட்டாரியல் அறிஞர்கள்

### 16906

**கூத்தருவி: அமரர் அண்ணாவியார் அ.பேக்மன் ஜெயராஜா அவர்களின் முதலாமாண்டு நினைவுமலர்.** யோ.யோண்சன் ராஜ்குமார் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: பேக்மன் ஜெயராசா குடும்பத்தினர், கொழும்புத்துறை, 1ஆவது பதிப்பு, மே 2022. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டேர்ஸ், இல. 10, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

vi, 92 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

பேக்மன் ஜெயராசா (21.10.1945- 28.5. 2021) ஈழத்து நாட்டுக்கூத்துக் கலைஞர். இவரது மறைவின் ஓராண்டு நிறைவில் அவரைப்பற்றிய மனப்பதிவுகளுடன் இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. நாட்டுக்கூத்து நாடகங்கள் மற்றும் இசை நாடகங்கள் பலவற்றில் இவர் நடித்துள்ளார். பல நாட்டுக்கூத்துக்கள் பழக்கியுள்ளார். தன் குரல் வளத்திற்காக மக்களால் பெரிதும் ரசிக்கப்பட்டவர். யாழ்ப்பாணம் பறங்கித் தெருவில் 21.10.1945-ல் ஜெயராசா அருளப்புவின் மகனாகப் பிறந்தார். 1975-லிருந்து கொழும்புத்துறையில் வசித்துவந்தார். கொழும்புத்துறை புனித ஜோசப் பாடசாலையில் கல்வி கற்றார். தொலைத்தொடர்பு திணைக்களத்தில் (Telecommunication Department) பணி புரிந்தார். பெரிய தகப்பனார் நாவாந்துறையைச் சேர்ந்த மரிசலினும் சிறிய தந்தை சூசை மரியானும் அண்ணாவியார்களாவர். ஜெயராசா எட்டாம் வகுப்பில் யுவானியார் நாடகத்தில் "ஏரோலியான்" என்ற பாத்திரத்தில் முதன்முதலில் நடித்தார். இவரின் குரல்வளத்திற்காக நாட்டுக்கூத்து மன்னன் பூந்தான் யோசேப் தனது நாடகங்களில் சேர்த்துக் கொண்டார். தொடர்ந்து "சகுந்தலை", "ஏரோதன்" போன்ற பல நாட்டுக்கூத்து இசை நாடகங்களில் இவர் நடித்தார். நாவாந்துறை, பாசையூர், கொய்யாத்தோட்டம், குருநகர், ஊர்காவற்றுறை, கரம்பன், சில்லாலை, இளவாலை, மயிலிட்டி, ஊரணி, அச்சுவேலி, தாளையடி, கொழும்பு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய பிரதேசங்களில் இவர் நடித்த நாடகங்கள் பலவும் மேடையேற்றப்பட்டன. ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றும் பேக்மன் ஜெயராசா நடித்தார்.

மேலும் பார்க்க:
தென் யாழ்ப்பாணம்: இம்மண்ணில் ஆடப்பெற்ற கூத்துக்களும் செயற்பட்ட கலைஞர்களும். 16280

## 924 மொழியியலாளர்கள்

### 16907

**அகத்தியர்**. ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை-1: ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 1ஆவது பதிப்பு, மார்ச் 1948. (மெட்ராஸ்: Progressive Printers).

(4), 44 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12 சமீ.

அகத்தியரின் வரலாற்றைக் குறித்துப் பலரும் ஆராய்ந்துள்ளனர். சிலர் அகத்தியர் தமிழ்நாட்டில் இருந்தவரல்ல எனக் கூறினர். சிலர் அவர் வட நாட்டினின்றும் வந்து தென்னாட்டை ஆரியமயமாக்கியவர் எனக் கூறினர். வேறு சிலர் வேறு பலவாறு கூறினர். அவற்றை ஆராய்ந்து, புராணக்கதைகளை விரித்தாராயாது, தனக்கு அறிவுபூர்வமானதாகத் தோன்றிய கருத்துக்களை இந்நூலில் விபரித்துள்ளார். முன்னுரை, தோற்றுவாய் ஆகியவற்றுடன் இந்நூலில் அகத்தியர், கம்போதியாவில் அகத்தியர், மலாய தீவுகளில் அகத்தியர், அகத்தியர் பலர், சிற்றகத்தியமும் பேரகத்தி யமும், சின்ன ஆசியாவில் அகத்தியர், பழைய தமிழ் நூல்களில் அகத்தியரைத் தமிழோடு தொடர்பு படுத்திக் கூறும் பகுதிகள் ஆகிய தனித்தனி இயல்களாக எழுதப்பட்டுள்ளன. பல்வேறு தமிழ், ஆங்கில நூல்களின் தகவல்களை

சுவாரஸ்யமாகத் திரட்டித் தமிழில் எமக்களித்துள்ள ந.சி.கந்தையாபிள்ளை அவர்கள் யாழ்ப்பாணம் நவாலியைச் சேர்ந்தவர், மலேசியாவிலும் தமிழகத்திலும் நீண்டகாலம் பணியாற்றி தன் வாழ்வின் இறுதிக்காலத்தில் கந்தரோடையில் வாழ்ந்து மறைந்தவர். அறுபதிற்கும் அதிகமான நூல்களை தமிழில் எமக்களித்தவர்.

## 16908

**சுவாமி ஞானப்பிரகாசர் நினைவுநாள் சிறப்புமலர்: 1875-1980.** கிறிஸ்தவ தமிழ்ப் பண்பாட்டுப் பேரவை. கொழும்பு 5: கிறிஸ்தவ தமிழ்ப் பண்பாட்டுப் பேரவை, எண் 97, ரொரிங்டன் தொடர்மாடி, 1ஆவது பதிப்பு, நவம்பர் 1980. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், 360, பிரதான வீதி).

(16), 40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5x18.5 சமீ.

கொழும்பு, வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் 01.11.1980இல் நடைபெற்ற சுவாமி ஞானப்பிரகாசர் நினைவுநாள் முத்தமிழ் விழாவின்போது வெளியிடப்பெற்றது. அருளுரை (யாழ். ஆயர்), ஆசியுரை (தனிநாயகம் அடிகளார்), வாழ்த்துரை (சு.வித்தியானந்தன்), வாழ்த்துகிறேன் வரலாற்று நாயகர்களை (சா.ம.செல்வரட்ணம்), நெஞ்சார நினைக்கிறோம் (சென்பியர் டேமியன்), எமது எண்ணத்திலிருந்து (ப.யே.தேவராசா), சுவாமி ஞானப்பிரகாசரின் நினைவுப்பா (பண்டிதர் ஆசிநாதர்), நினைவில் இருக்கும் நிழல் (சாலை இளந்திரையன்), மறைமலையடிகளின் மடல், பேரறிஞர் ஞானப்பிரகாசரின் பெருந்தமிழ்ப்பணி (பா.வளன் அரசு), முருக வழிபாடு பற்றி நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் (வ.அந்தனிஜான் அழகரசன் அடிகள்), ஞானப்பிரகாச மாமணியே (க.த.ஞானப்பிரகாசம்), வீரமாமுனிவர் பிறந்த மூன்றாம் நூற்றாண்டு (தனிநாயகம் அடிகள்), தேமதுரத் தமிழோசை தரணியிற் பரப்பிய தமிழ்த் தூதுவர் தனிநாயக அடிகள் (சு.வித்தியானந்தன்), மொழி மத வளர்ச்சியில் சுவாமி ஞானப்பிரகாசரின் பங்கு (B.P.நியூட்டன்), சுவாமி ஞானப்பிரகாசர் செய்தது தமிழ்த் தொண்டா சமயத் தொண்டா? (எஸ்.ஏ.ஐ.மத்தியூ), தனிநாயகம் என்றும் ஒரு தமிழ்ப் பூங்காற்று (சாலை இளந்திரையன்), சுவாமி ஞானப்பிரகாசர் நினைவுநாள் போட்டி முடிவுகள், மரபுவழி நின்று மாண்புடன் நவில்கிறோம் ஆகிய ஆக்கங்களை இந்நூல் கொண்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 63560).

## 16909

**தும்பளை தாவீது அடிகளின் 100ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியிடப்படும் நினைவுமலர்.** கலாநிதி ஹ.சி.தாவீது அடிகளின் நினைவுக்குழு. பருத்தித்துறை: கலாநிதி ஹ.சி.தாவீது அடிகளின் நினைவுக்குழு, தும்பளை, 1ஆவது பதிப்பு, ஜுன் 2007. (பருத்தித்துறை: புதிய எஸ்.பி.எம். (S.P.M.) ஓப்செட் அச்சகம், வீ.எம். வீதி).

vii, 63 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

தும்பளையில் 28.06.1907இல் பிறந்தவர் கலாநிதி தாவீது அடிகளார். இவர் கல்வியில் சிறந்து விளங்கி, பிற்காலத்தில் பன்மொழி வல்லுநரும் சொற்பிறப்பியல்

ஆய்வாளனும் பல்துறை அறிஞரும் ஆகினார். 1981இல் மறைந்த கலாநிதி தாவீது அடிகள் பிறந்த நூறு ஆண்டுகள் நிறைவை 2007இல் நினைவுகூர்ந்த வேளை அவரது இல்லத்தில் அவரது திருவுருவப் படம் திரைநீக்கம் செய்து வைக்கப்படுகின்ற நிகழ்வில் இம்மலர் கலாநிதி தாவீது அடிகள் நினைவுக் குழுவால் 28.06.2007 அன்று வெளியிடப்பட்டது. தாவீது அடிகள் பற்றிய பல்வேறு செய்திகளும், அஞ்சலிக் கடிதங்களும் இடம்பெற்றுள்ளன.

**16910**

**மொழியியற் பேராசிரியர் ஆறுமுகம் சதாசிவம் அவர்களின் ஆய்வுகளும் புலமைத் திறன்களும்.** இளையதம்பி பாலசுந்தரம். கனடா: சுவாமி விபுலாநந்தர் தமிழியல் ஆய்வு மையம், ரொறன்ரோ, 1ஆவது பதிப்பு, 2022. (ரொறன்ரோ: A Fast Print).

xvi, 136 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-0-9731932-5-1.

இந்நூலின் முதலாவது இயலில் பேராசிரியர் ஆ.சதாசிவம் அவர்களின் கல்விப் புலமை பற்றிப் பேசப்படுகின்றது. இரண்டாவது இயலில் பேராசிரியர் ஆ.சதாசிவம் அவர்களின் மொழியியல் ஆய்வுகளும் ஆய்வு நூல்களும் பற்றி விளக்கப்பட்டுள்ளது. இந்த இயலில் 1. Sumerian-A dravidian Language -1965, 2. Porto-Sumerio-Dravidian: The Common Origin of Sumerian and Dravidian - 2017, 3. தமிழ்ச் சொற்களின் பிறப்பு நெறி - 2006, 4. மொழியியலும் தமிழ்மொழி வரலாறும் -2021, 5. சங்க நூல்களில் ஒலிக்குறிப்பு, 6. அசை மொழிக் காலத் தமிழ்நாடு ஆகிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. மூன்றாவது இயலில் பேராசிரியர் ஆ.சதாசிவம் அவர்களின் இலக்கிய ஆய்வும் ஆய்வு நூல்களும் பற்றி விளக்கப் பட்டுள்ளது. இதில் 1. ஞானப்பள்ளு (திருத்திய பதிப்பு 1968) இரண்டாம் பதிப்பு: 2018, 2. ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்-1966, 3. ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் முறை, 1963, 2020. 4. கருத்துரைக் கோவை-1959 ஆகிய படைப்புகள் பற்றிய திறனாய்வுகள் இடம்பெற்றுள்ளன. நான்காவது இயலில் சைவ நெறிமுறை களை மக்களுக்கு உணர்த்திய சைவப் பெரியார் என்ற தலைப்பில் 1. சமயங்களும் உலக சமாதானமும் என்ற கட்டுரை பற்றி விளக்கப்பட்டுள்ளது. இயல் ஐந்தில் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியரின் வினைத்திறன்கள் என்ற கட்டுரையும், இயல் ஆறில் இலக்கிய மரபுசார் இயக்கமும் பேராசிரியரின் செயல்திறன்களும், இலக்கிய மரபு பேணலிற் பேராசிரியரின் பங்களிப்பு ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும் பார்க்க:
தீந்தமிழ் வளர்த்த திருமறைக் காவலர்கள் (ஞானக் களஞ்சியம் -2). 16541

## 925 விஞ்ஞானிகள்

### 16911

**அணுவைத் துளைத்து... இலங்கைத் தமிழ் அணுவிஞ்ஞானியின் சுயசரிதம்.** வேலுப் பிள்ளை இலகுப்பிள்ளை. கனடா: வேலுப்பிள்ளை இலகுப்பிள்ளை, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2022. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xxxiv, 284 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 2000., அளவு: 22x15 சமீ., ISBN: 978-624-99622-0-0.

குடும்ப வரலாறு, பாடசாலை நாட்கள், இலங்கையில் உயர் கல்வி, கனடாவில் உயர் கல்வி, காதல் திருமணமும் குடும்ப வாழ்க்கையும், பேராசிரியராக, அணு விஞ்ஞானியாக, கனடாவில் வாழ்க்கையும் சமூக சேவையும், மருந்துசார் துறையில் நாட்டம், கனேடிய அரசியலில் ஈடுபாடு, ஈழமண்ணில் ஈர்ப்பும் மக்கள் சேவையும், பிள்ளைகளின் வாழ்க்கைச் சுவடுகள், நீங்காத குடும்ப நினைவுகள், கமத்தொழிலில் நாட்டம், நிறைவுரை ஆகிய அத்தியாயத் தலைப்புகளில் இச்சுயசரிதை விரிந்துள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள ஆவரங்கால் என்ற விவசாயக் கிராமத்தில் பிறந்து தனது விடா முயற்சியாலும், தளரா நம்பிக்கையாலும் உலகம் போற்றும் அணு விஞ்ஞானி யாக உயர்ந்த கலாநிதி இலகுப்பிள்ளையின் உண்மைக்கதை இது.

மேலும் பார்க்க:

நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -01- (1901-1910). 16987
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -02 (1911-1923). 16988
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -03 (1924-1935). 16989
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -04 (1936-1949). 16990
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -05 (1950-1957). 16991
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -06 (1958-1964). 16992
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -07 (1964-1972). 16993
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -08 (1973-1978). 16994
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -09 (1978-1983). 16995
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -10 (1983-1988). 16996
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -11 (1989-1994). 16997
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -12 (1995-1999). 16998
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -13 (1999-2002). 16999
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -14 (2003-2006). 17000

## 926 பிரயோக விஞ்ஞானிகள், மருத்துவர்கள்

### 16912

**தும்பளை மேற்கு சந்திரப் பரமானந்தர் வம்சம்: சித்த ஆயுர்வேத வைத்தியம், சோதிடம், வானியல் நிபுணத்துவ பரம்பரையினர்.** *பா.இரகுவரன். பருத்தித்துறை: தேடல் வெளியீடு, பிராமண வீதி, தும்பளை, 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2022. (பருத்தித்துறை: விநாயகர் ஓப்செட் அச்சகம்).*

xvi, *135 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 20.5*x*14.5 சமீ.,* ISBN: *978-624-97601-0-3.*

*பருத்தித்துறை நகரத்தின் தென்கிழக்காக அரை கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள தும்பளை மேற்கு-கலட்டி என்ற கிராமத்தில் பல நூற்றாண்டுகள் பாரம்பரியமாகத் தொடர்ந்துவரும் சித்த ஆயுர்வேத வைத்தியம், சோதிடம், வானியல் நிபுணத்துவ மரபினர் பற்றி உலகத்திற்கு அறியவைக்க வேண்டிய தேவையின் காரணமாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்த மரபுகள் இன்றும் தொடர்கின்றன. இந்த மரபினரும் உறவினர்களும் சந்திரபரமானந்தர் வம்சம் என அழைக்கப்படுகிறார்கள். மேற்படி மரபினர் பற்றிய விபரங்களை முழுமையாக அறிய முடியாமல் விட்டாலும் கிடைத்த தகவல்களை இந்நூலில் ஆசிரியர் பதிவுசெய்துள்ளார். இந்நூலில் 24 சித்த ஆயுர்வேத மரபினர் பற்றியும் 11 சோதிட மரபினர் பற்றியும், வே.கணபதிப் பிள்ளை, பண்டிதர் க.சச்சிதானந்தன் ஆகிய இரு வானியல் நிபுணர்கள் பற்றியும், வரலாற்றுத் தகவல்கள் இடம்பெற்றுள்ளன. நூலின் இறுதியில் அனுபந்தமாக திரு. ப.திருஞானசம்பந்தர், திரு. மு.மாணிக்கவாசகர் ஆகியோர் கூறிய மேலதிக தகவல்களும், சித்த ஆயுர்வேத மரபுரிமைப் பொருட்கள் சில பற்றிய குறிப்புகளும், பிரம்மஸ்ரீ ச.சுப்பிரமணிய சாஸ்திரிகள் பற்றிய குறிப்பும் இடம்பெற்றுள்ளன.*

மேலும் பார்க்க:
எம் முன்னோரின் வாழ்வாதாரமும் மருத்துவமும். 16179

## 927 கலைஞர்கள்

### 16913

**காலமதாய் ஆகிவிட்ட கலைத்தவசி.** *மலர்க்குழு. மன்னார்: முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம், முருங்கன், 1ஆவது பதிப்பு, 2023. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*136 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22*x*15 சமீ.,* ISBN: *978-955-4609-20-4.*

*அ.ம.தி.அடிகள் செ.அன்புராசா அவர்களின் தந்தையாரான செபஸ்தியான் செப மாலை (தம்பிராசா மாஸ்டர்) "குழந்தை" என்ற புனைபெயரிலும் அறியப்பட்டவர். குழந்தை செபமாலை ஆசிரியர் பாடல்கள் பாடுவதிலும், நாடகம் எழுதுவதிலும், நடிப்பதிலும், நெறியாழ்கை செய்வதிலும் பிரபல்யமானவர். "கலைத்தவசி" என்ற இவரின் பணிநயப்பு மலர் 2014இல் முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தினரால் இவர் வாழும் காலத்திலேயே வெளியிடப்பட்டிருந்தது. தற்போது வெளியிடப்*

பட்டுள்ள இந்நினைவு மலரில் இவரது மறைவையொட்டி வழங்கப்பட்ட அஞ்சலி உரைகளும், நினைவுக் குறிப்புகளும், சுவரொட்டிகளும், துண்டுப் பிரசுரங்களும், ஏனைய சில பதிவுகளும், புகைப்படங்களும் இடம்பெற்றுள்ளன. (செபஸ்தியான் செபமாலை 08.03.1940-08.01.2022)

## 16914

**தவமலர்கள்: கலைஞர் குழந்தை செபமாலை றோஸ்மேரி தம்பதிகளின் பொன்விழா மலர்.** மலர்க் குழு. மன்னார்: முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம், முருங்கன், 1ஆவது பதிப்பு, 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை).

46 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

குழந்தை செபமாலை, கலையுலகில் மிக நீண்ட காலமாக பேசப்படுகின்ற ஓர் உயர்ந்த கலைப் படைப்பாளி. இவர் 1940ஆம் ஆண்டு பங்குனி 08ஆம் திகதி முருங்கனில் பிறந்தவர். 1958, 1959 ஆகிய ஆண்டுகளில் கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆசிரியர் கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பயிற்சி பெற்றவர். அல்லைப்பிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்றார். தொடர்ந்து மன்னார்/அடம்பன், கண்டி, மன்னார்/ பொன்தீவு கண்டல், மன்னார்/ அரிப்பு, மன்னார்/ முருங்கன், மன்னார் இசைமாலைத்தாழ்வு, மன்னார்/ பெரியமுறிப்பு, மன்னார்/ கற்கடந்தகுளம் ஆகிய கடினப் பிரதேசங்களில் ஆசிரியப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர் ரோஸ்மேரி என்பவரை 1963 ஆவணி 17ஆம் நாள் திருமணம் செய்தார். தம்பதியர் இணைந்து தமது பொன்விழாவை 2013இல் கண்ட வேளையில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இதுவாகும். மலர்க் குழுவில் திரு.ப.சந்தியோகு (அதிபர், மன்னார்/ முருங்கன் மகா வித்தியாலயம்), அருள்திரு பா.கிறிஸ்து நேசரட்ணம் (தமிழ்நேசன் அடிகள், "மன்னா" ஆசிரியர்), அருள்திரு செபமாலை அன்புராசா, அ.ம.தி. (அதிபர், புனித வளனார் குருமடம், கொழும்புத்துறை) ஆகிய மூவரும் இடம்பெற்றிருக்கின்றனர்.

## 16915

**மரியசேவியம்: கலைத்தூது அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளாரின் முதலாம் ஆண்டு நினைவு மலர்.** கி.செல்மர் எமில் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2022. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். கிராப்பிக்ஸ், 54, இராஜேந்திரா வீதி).

vii, 186 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

கலைத்தூது அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளாரின் (03.12.1939- 01.04.2021) முதலாம் ஆண்டு நினைவு தினம் 01.04.2022 அன்று அனுஷ்டிக்கப்பட்டபோது வெளியிடப்பட்ட நினைவுமலர் இதுவாகும். அடிகளார் பற்றிய பல்வேறு சமூக, கலை இலக்கியத்துறை பிரமுகர்களின் நினைவுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன. இந்நூலில் உள்ள விடயங்கள் கட்டுரைகள், அஞ்சலிக் குறிப்புகள், கவிதைகள், அரங்க நிறுவனங்களின் அஞ்சலிகள், பொது நிறுவனங்களின் அஞ்சலிகள், அரசியல் பிரமுகர்களின் அஞ்சலிகள், பிரசுரங்கள் என்ற ஒழுங்கில் தரப்பட்டுள்ளன.

## 16916

**மன்னார் மாதோட்டப் புலவர்கள்-கலைஞர்கள்: ஐம்பது ஆளுமைகளின் வாழ்வும் வரலாறும் படைப்புகளும்.** தமிழ் நேசன் அடிகளார் (இயற்பெயர்: பாவிலு கிறிஸ்து நேசரட்ணம்). யாழ்ப்பாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், 2ஆவது பதிப்பு, 2021, 1ஆவது பதிப்பு, 1994. (யாழ்ப்பாணம்: அன்ரா பிரின்டர்ஸ், 379 கஸ்தூரியார் வீதி).

xlvi, 505 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-624-5911-16-5.

புலவர்கள், கலைஞர்கள் ஆகிய இரு பிரிவுகளின் கீழ் இந்நூலில் மன்னார் மாதோட்டப் பிரதேசத்தில் வாழ்ந்து மறைந்தவர்களும், இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுமான ஐம்பது புலவர்களினதும், கலைஞர்களினதும் வாழ்வும் பணிகளும் பற்றிய கட்டுரைகள் இந்நூலில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. "புலவர்கள்" என்ற பிரிவில் முதலில் 19ஆம் நூற்றாண்டில் பள்ளிமுனையில் வாழ்ந்த புலவர் லோப்பர் றோச் பற்றிய கட்டுரையும், அதனைத் தொடர்ந்து அந்தோனி செபஸ்தியான், கிறிஸ்தோப்பு மரியாம்பிள்ளை, மீரா முஹைதீன் ஆலிம், அந்தோனி கபிரியேற்பிள்ளை, கபிரியேற்பிள்ளை மரிசால்பிள்ளை, கயித்தான் இசக்கியேல் மொத்தம், முகம்மது காசிம் ஆலிம், சமியேல் பிரகாசம், அவுறான் செபஸ்தியான் குரூஸ், சுவாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை, விசுவாசம் சந்தியோகு, பிலிப்பு அந்தோனி சக்கரவர்த்தி, சந்தான் பாவிலு, செபமாலை மொத்தம் போல், அந்தோனி செபமாலை குரூஸ், மரிசால் லோரன்ஸ் மொத்தம், முகம்மது அப்துல் ரகுமான், அந்தோனி சீமான், சேசு மொத்தம் பிரான்சிஸ், சந்தான் ஆரோக்கியம் சில்வா, கபிரியேல் இம்மானுவேல், பிரகாசம் சந்தியோகு, சவிரி சீமான்பிள்ளை, அருளானந்தம் செபமாலை, செபமாலை பிலிப்பு சிங்கராஜா ஆகிய 25 புலவர்கள் பற்றிய வரலாற்றுத் தகவல்களும் இடம்பெற்றுள்ளன. கலைஞர்கள் என்ற பிரிவில் அக்காஸ் லூரயிஸ் குரூஸ், தொபியாஸ் மக்சிமஸ் லெம்பேட், அம்பலவாணர் செல்லத்துரை, பிரான்சிஸ் சவேரியான் லெம்பேட், அபியாஸ் அதிரியான் சோசை, சந்தியா அந்தோனி மிராண்டா, சீமான்பிள்ளை இம்மானுவல், செபஸ்தியான் செபமாலை, அடைக்கலம் அந்தோனிமுத்து, லூரயிஸ் கிறிஸ்தோப்பர் லெம்பேட், பேதுருப்பிள்ளை அந்தானிப்பிள்ளை, கலைவாதி கலீல், இராஜம் புஷ்பவனம், தம்பிப்பிள்ளை பறுநாந்து பீரிஸ், பெரியசாமி முத்துக்கறுப்பன், மருசலீன் சூசைநாயகம் (நாவண்ணன்), செபஸ்தியான் மாசிலாமணி, டொனால்ட் தேவதாசன் அல்மேடா, சீமான் பத்திநாதன் பெர்ணாண்டோ, சந்தான் ஞானசீலன், சவிரியான் பற்றிக் லெம்பேட், சந்தாம்பிள்ளை கோமேதகம், பிலிப்புப்பிள்ளை விமலநாதன், எஸ்.ஏ.உதயன் ஆகிய 24 கலைஞர்கள், எழுத்தாளர்கள் பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

## 927.8 இசைக்கலைஞர்கள்

### 16917

**அமரர் திரு.க.ப.சின்னராசா அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பட்ட நினைவுமலர்.** ஜெயலட்சுமி சுதர்சன். சுன்னாகம்: அமரர் க.ப.சின்னராசா குடும்பத்தினர், இணுவில், 1ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 2022. (சுன்னாகம்: அஸ்வின் அச்சகம்).

70 பக்கம், ஒளிப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

9.8.2022இல் இடம்பெற்ற அமரர் க.ப.சின்னராசா அவர்களின் சிவபதப்பேறு குறித்த நிகழ்வில் இந்நினைவுமலர் வெளியிடப்பட்டது. மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சின்னராசா, சிறந்ததொரு மிருதங்க வித்துவானாவார். க.ப சின்னராசா அவர்கள் மிருதங்கத்தின் ஊடாக பரதநாட்டியத்திற்கு ஆற்றிய பணிகள் முதன்மையானதும் தனித்துவமானதுமாகும். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மூத்த கலைஞர்களுள் ஒருவரான இவர் மிகச்சிறந்த மிருதங்க வித்துவான் என்பதுடன் இசை, நடனக் கச்சேரிகளுக்கு பக்க வாத்தியமாக மிருதங்கம் வாசித்தல், இசை நடன பாடலாக்கம், ஜதிக்கோர்வைகள் என்பவற்றையும் உருவாக்கியுள்ளார்.

### 16918

**ஜென்ம நட்சத்திரம்.** எம்.எஸ்.ஸ்ரீதயாளன். கொழும்பு: எம்.எஸ்.ஸ்ரீதயாளன், 1ஆவது பதிப்பு, மார்ச் 2023. (அச்சக விபரம் தரப்படவில்லை).

88 பக்கம், ஒளிப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

கொழும்புத் தமிழ்ச் சங்க இலக்கியக் கள நிகழ்ச்சிகளுக்காக கல்வி, கலை, இலக்கிய, சமயத் தேடல்கள் மற்றும் சமூகப் பணிகள் தொடர்பான தனது அனுபவங்களை இந்நூலில் ஆசிரியர் பதிவுசெய்துள்ளார். குறிப்பாக இலங்கையில் தூர்ந்துபோயுள்ளதாக இவர் கருதும் இசைக் கதாப்பிரசங்கக் கலை எழுச்சிபெற வேண்டுமென்ற ஆதங்கத்தில் இசைக் கதாப்பிரசங்கம் பற்றிய விளக்கம், வரலாறு என்பவற்றோடு தன் அனுபவங்களையும் விபரிப்பதாகவும், தனது பவளவிழா நினைவாக இந்நூலை வெளியிட்டுள்ளார்.

மேலும் பார்க்க:

தமிழர் செவ்வியல் இசைப்பா வடிவங்கள். 16363

## 927.91 நாட்டியக் கலைஞர்கள்

### 16919

**நமது முதுநிலை ஆடலாசான், ஆற்றுகையாளர், கலைஞர் வேல் ஆனந்தன் அவர்களது கலைப் பயணப் பதிவுகள்.** மொன்ட்ரியல் திருமுருகன் ஆலயம். யாழ்ப்பாணம்: முனைவர் அருட்பணி அமிர்த ஜெயசேகரம், பணிப்பாளர், தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆய்வு மன்றம், 17/3, கச்சேரி-நல்லூர் வீதி, சுண்டிக்குளி, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2018. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். கிராப்பிக்ஸ், 54, இராஜேந்திரா வீதி).

8 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15.5 சமீ.

12.02.1941 அன்று நெடுந்தீவில் பிறந்த ஆடற்கலைஞர் வேல் ஆனந்தனின் இயற்பெயர் வேலாயுதபிள்ளை அருளானந்தம் என்பதாகும். ஆரம்பக்கல்வியை நெடுந்தீவு புனித சவேரியார் பாடசாலையிலும் யாழ்.புனித சம்பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார். 1953 முதல் 1957 வரை நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று எஸ்.எஸ். சி. சித்தியடைந்த போதுதான் ஆசிரியர் ஏரம்பு சுப்பையாவின் வழிகாட்டலுடன் சக மாணவ, மாணவிகளுடன் நடனக் கல்வி ஆரம்பிக்கப்பட்டது. 1959ஆம் ஆண்டு புதுடில்லி, கேரள கலாகேந்திராவில் இணைந்துகொண்டார். அங்கு கதகளி, பரதநாட்டியம் ஆகிய பயிற்சிகளை ஆசிரியப் பெருந்தகைகள் கலாநிதி கோபிநாத், பந்தணை நல்லூரி சுப்பராயபிள்ளை ஆகியோரிடமும் கற்றுத்தேர்ந்தார். தொடர்ந்து திருவனந்தபுரத்திலுள்ள புகழ்பெற்ற விஸ்வகலா கேந்திராவிலும் கேரளாவிலுள்ள சுவாதித்திருநாள் அரச நுண்கலைக்கல்லூரியின் இணை நிறுவகத்திலும் சேர்ந்து கதகளி, கீழைத்தேய ஆடற்கலை ஆகியவற்றை முறைப்படி கற்று விற்பன்னரானார். இலங்கை திரும்பிய "கலைச்செம்மல்" வேல் ஆனந்தன் 1967ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் "கலைக்கோவில்" நடனக் கல்லூரியை ஆரம்பித்தார். ஆடற்கலை நாயகனாகவும் ஆசிரியனாகவும் இருந்து பல்வேறு கலை நிகழ்வுகளைத் தாமும் மாணவச்செல்வங்களும் நாட்டின் பல பகுதிகளில் வெற்றிகரமாக நடத்தினார். கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையின் ஆடல்கல்வி விரிவுரையாளராக 1970ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். இப்பணி 1979 மார்கழி மாதம் வரை நீடித்தது. 1970ஆம் ஆண்டு குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் இரசிகமணி கனக. செந்தில்நாதன் முன்னிலையில் "தாண்டவச் செல்வன்" விருது வேல் ஆனந்தனுக்கு வழங்கப்பட்டது.

மேலும் பார்க்க:

யாழ்ப்பாணம் இணுவில் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயரின் ஆக்கங்கள்-தொகுதி 1 16369

## 927.92 நாடகக் கலைஞர்கள்

### 16920

**ஓர் ஒப்பனை இல்லாத முகம்.** ஏ.ரகுநாதன் (மூலம்), எஸ்.கே.காசிலிங்கம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 340, செட்டியார் தெரு, 1ஆவது பதிப்பு, 2022. (யாழ்ப்பாணம்: ஜே.ஆர். இன்டஸ்ட்ரீஸ், இல. 7, உடுவில் மகளிர் கல்லூரி மேற்குத் தெரு, உடுவில்).

234 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-624-6077-01-3.

ஈழத்துக் கலைவானில் ஆறு தசாப்தங்கள் பயணித்துவந்த "நிர்மலா" ஏ.ரகுநாதன் தான் வாழும் காலத்தில் தமிழன் பத்திரிகையில் தொடராக எழுதியிருந்த "ஓர் ஒப்பனை இல்லாத முகம்" என்ற சுயசரிதைத் தொடரை பிரதானமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்நூல், அமரர் ரகுநாதன் அவர்கள் தொடர்பான மேலதிக தகவல்களும் தொகுக்கப்பெற்று அவரது வாழ்வும் கலைப் பணியும் பற்றிய ஒரு நினைவு ஆவணமாக வெளியிடப்பட்டுள்ளது. அமரர் ஏ.ரகுநாதன் அவர்களின் வாழ்வையும் அவர் ஆற்றிய பணிகளையும் தம்முடனான மனிதநேய உறவுகள் பற்றியும் சக கலைஞர்களும் ஊடகவியலாளர்களுமான ஏ.சீ.தாசீசியஸ், பி.எச். அப்துல் ஹமீட், சி.மௌனகுரு, க.பாலேந்திரா, எஸ்.எஸ்.குகநாதன், கலைஞர் பரா, ஸ்ரீதரசிங் பூபாலசிங்கம், பொன்ராசா அன்ரன், நாச்சிமார் கோவிலடி இராஜன், உடுவை தில்லை நடராஜா, கி.செ.துரை, வி.ரி.இளங்கோவன், எம். என்.சிவராம், கலாபுவன், இரா.குணபாலன், சலனம் முகுந்தன், எம்.பி.பரமேஸ், ரதி ருத்திரா, குணபதி கந்தசாமி, கதி செல்வகுமார், விக்ரர், ஈழன் இளங்கோ, மனோ, குணா ஆறுமுகராஜா, பிரபாலினி பிரபாகரன், எம்.பாஸ்கி, முருகபூபதி, துருபன் சிவசுப்ரமணியம், தி.சாம்சன், தம்பையா தயாநிதி, எஸ்.கே.ராஜென், எஸ்.கே.காசிலிங்கம் ஆகியோர் தமது மனப்பதிவுகளாகவே இடம்பெறச் செய்துள்ளனர். நூலின் இறுதிப்பகுதியில் 157-235 ஆம் பக்கங்களில் "ஓர் ஒப்பனை இல்லாத முகம்" என்ற சுயசரிதை 25 அத்தியாயங்களில் இடம்பெற்றுள்ளது.

### 16921

**கலைவாரிதி: அரியாலையூர் உருத்திரேஸ்வரன்அவர்களின் ஓராண்டு நினைவுமலர்.** சண்முகசர்மா ஜெயப்பிரகாஷ். யாழ்ப்பாணம்: திருமதி விஜயராணி உருத்தி ரேஸ்வரன், அரியாலை, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

x, 230 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x17.5 சமீ.

அரியாலையூர் உருத்திரேஸ்வரன் (28.05.1947-23.12.2020) அவர்களின் மறைவின் ஓராண்டு நினைவு நாளின் போது 23.12.2021 அன்று வெளியிடப்பட்ட நினைவு மலர் இது. இத் தொகுப்பில் குருமார்களின் அஞ்சலி உரைகள், அமரர் உருத்தி ரேஸ்வரன் பற்றி ஏனைய ஆளுமைகளின் கருத்துக்கள், அவரைப் பற்றிய கட்டுரைகள், அவருடைய நேர்காணல்கள் அவர் எழுதிய கட்டுரைகள், அத்துடன்

அவர் இதுவரை காலமும் சேமித்து வைத்திருந்த நாடகம்சார் ஆவணங்களும் அவருக்குக் கிடைத்த கௌரவங்களும் என்று அவரைப் பற்றிய முழுமையான தொகுப்பாக இந்நூல் அமைகின்றது.

### 16922

**சிங்கள நாடகக் கலை ஆளுமைகள் (முதலாம் பாகம்).** சாமிநாதன் விமல், பராக்கிரம கிரியெல்ல. ராஜகிரிய: மக்கள் களரி வெளியீடு, 238 ஏ, ராஜகிரிய வீதி, 1வது பதிப்பு, 2013. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

266 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1837-04-4.

இந்நூல் சிங்கள நாடகக் கலையை அதன் வரலாற்றினை நோக்கிய பார்வையுடன் அறிமுகப்படுத்த எடுக்கும் முயற்சியின் முதல் நடவடிக்கையாக அமைந்துள்ளது. இந்நூலில் 13 இயல்களில் பன்னிரு நாடகக் கலை ஆளுமைகள் பற்றிய வாழ்வும் பணியும் பற்றிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. "மனமே நாடகத்திற்கு முந்திய சிங்கள நாடக நடைமுறைகள்" என்ற அறிமுகக் கட்டுரை முதலாவதாகவும், தொடர்ந்து பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திர, தம்ம ஜாகொட, எஸ்.கருணாரத்ன, சந்திரசேன தஸநாயக்க, ஹென்றி ஜயசேன, தயாநந்த குணவர்த்தன, குணசேன கலப்பத்தி, சுகதபால டி சில்வா, ஆர்.ஆர்.சமரகோன், பேராசிரியர் சுனந்த மஹேந்திர, காமினி ஹத்தொடுவேகம, பந்துல ஜயவர்த்தன ஆகிய பன்னிரு ஆளுமைகள் பற்றி தனித்தனி இயல்களாகவும் வழங்கப்பட்டுள்ளன.

## 927.94 விளையாட்டு வீரர்கள், பிரமுகர்கள்

### 16923

**உலகப் புகழ்பெற்ற பத்து உதைபந்தாட்ட வீரர்கள்.** கி.செ.துரை (இயற்பெயர்: கி.செல்லத்துரை). யாழ்ப்பாணம்: டியூப் தமிழ், இல. 712, நாவலர் வீதி, 2ஆவது பதிப்பு, நவம்பர் 2018, 1ஆவது பதிப்பு, ஒகஸ்ட் 2018. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ மாருதி பிரிண்டேர்ஸ், இல. 555, நாவலர் வீதி).

160 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-87-970470-1-9.

இந்நூலில் உலகப் புகழ்பெற்ற பத்து உதைபந்தாட்ட வீரர்களின் வாழ்வும் பணிகளும் விரிவாகவும் விறுவிறுப்பாகவும் எழுதப்பட்டுள்ளன. தங்கப்பந்தை வென்ற பத்து உதைபந்தாட்ட மேதைகளான கிறிஸ்டியானோ றொனால்டோ (Cristiano Ronaldo), லியோனஸ் மெஸ்ஸி (Lionel Messi), டியகோ மரடோனா (Diego Maradona), ]pld; (Zidane), பெரிய றொனால்டோ-பிரேசில் (Ronaldo), பயாலோ மெல்டினி (Paola Maldini), பீலே (Pele), லெவி யாஸ்கின் (Lev Yashin), றொனால்டின்கோ (Ronaldinho), அலன் சிமொன்சன் (Allan Simonsen) ஆகியோரின் வரலாறு இது. சிறந்த ஊடகவியலாளருக்கான ஐ.பீ.சீ.யின் வாழ்நாள் சாதனையாளர் விருது

பெற்ற சர்வதேச செய்தியாளரும் டென்மார்க் நாட்டில் புலம்பெயர்ந்து வாழ்ப வருமான கி.செ.துரையின் 35ஆவது நூல் இது.

## 928 இலக்கிய அறிஞர்கள், புலவர்கள்

### 16924

**அருளானந்தம் கேணிப்பித்தன்: வாழும்போதே வாழ்த்துவோம்.** பால.சுகுமார். மட்டக்களப்பு: மகுடம் பதிப்பகம், இல. 90, பார் வீதி, இணை வெளியீடு, மட்டக்களப்பு: அனாமிகா வெளியீட்டகம், இல. 48, பெய்லி முதலாம் குறுக்குத் தெரு, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2021. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496A, திருமலை வீதி).

vii, 40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x16 சமீ.

திருக்கோணமலை மண்ணின் அடையாளங்களில் ஒருவரான கவிஞர் கேணிப் பித்தன் (ச.அருளானந்தம்) அவர்களை வாழும்போதே வாழ்த்தும் முயற்சியாக இந்நூல் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. சண்முகம் அருளானந்தம் (கேணிப்பித்தன்) அவர்களின் சொந்த இடம் திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள ஆலங்கேணி என்பதாகும். இவரது முதற் படைப்பு "இராவணன் கண்ணீர்" என்ற தலைப்பில் சுதந்திரன் பத்திரிகையில் 1964இல் வெளிவந்திருந்தது. முதலாவது கவிதையும் "ஏனோ இப்பிறவி" என்ற பெயரில் சிந்தாமணி (1964) யில் இடம் பெற்றுள்ளது. சிறுவர் இலக்கியம், கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, விமர்சனம், பத்தியெழுத்து என்பன இவர் ஈடுபாடு கொண்டுள்ள இலக்கியத் துறைகளாகும். இதுவரை 30இற்கும் அதிகமான நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

### 16925

**அல்வாயூர்க் கவிஞர் அமரர்மு.செல்லையா அவர்களின் நினைவு மலரும் மாணவர் வெளியீடும்-மீள்பதிப்பு.** வே.த.தணிகாசலம் (தொகுப்பாசிரியர்). அல்வாய்: அல்வாயூர்க் கவிஞர் மு.செல்லையா நிறுவனம், 1ஆவது பதிப்பு, மார்ச் 2019. (உடுப்பிட்டி: ஆகாயம் பதிப்பகம், இமையாணன்).

(9),53 + (6), 24 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

அல்வாயூர்க் கவிஞர் அமரர் மு.செல்லையா (07.10.1906-09.12.1966) அவர்கள் ஒரு பண்டிதரும், பிரபல எழுத்தாளருமாவார். இவர் வளர்பிறை, வண்டு விடு தூது ஆகிய நூல்களின் ஆசிரியர். தேவரையாளி சைவ வித்தியாசாலையின் முன்னாள் தலைமை ஆசிரியராகவும், அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையை உருவாக்கி அதன் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றியவர். அவர் மறைந்த வேளையில் அவரது 31ஆம் நாள் அந்தியேட்டி நிகழ்வின்போது 08.01.1967 அன்று அவரை நினைவுகூரும் வகையில் வெளியிடப்பட்ட இரண்டு நினைவிதழ்களை அவருடைய 52ஆவது நினைவு தினத்தில் அவரது குடும்பத்திரும் அவரது மாணவர்களும் இணைந்து மீள்பதிப்புச் செய்துள்ளனர். குடும்பத்தினரின் நினைவு

மலரை அதிபர் வே.த.தணிகாசலம் அவர்களும், மாணவர்களின் வெளியீட்டினை கோ.தர்மகுலசிங்கம் (சமரக்கொடி), க.திருநாவுக்கரசு (காந்தி), தே.ஷேவியர் (நந்தினி சேவியர்) ஆகியோரும் 1967இல் இணைந்து தொகுத்திருந்தனர். இரண்டு நினைவுமலர்களின் வாயிலாகவும் அமரர் மு.செல்லையா அவர்களின் வாழ்வும் பணிகளும் மீளவும் நினைவுகூரப்பட்டுள்ளன.

### 16926

**அற்றைத் திங்கள்: ஆ.இரகுபதி பாலஸ்ரீதரனின் வாழ்க்கை அனுபவங்கள்.** ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன். கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச் சங்கம், இல. 7, சங்கம் ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2022. (அச்சக விபரம் தரப்படவில்லை).

48 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23x16 சமீ.

சைவத் தமிழ்ப் பண்பாட்டின் ஓர் அடையாளமாக விளங்கும் கோவில் சூழ் இணுவில் கிராமத்தில் பிறந்தவர் இரகுபதி பாலஸ்ரீதரன். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் 11.11.2022 அன்று இடம்பெற்ற "அற்றைத் திங்கள்" நிகழ்வில் கலாபூஷ ணம் ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன் ஆற்றிய உரையின் நூலுரு இதுவாகும். பிறப்பும் கல்வியும், அரசியல் தொடர்பு, தொழில் வாழ்க்கை, ஆன்மீகம், குடும்ப வாழ்க்கை, வெளிநாட்டுப் பயணங்கள், எழுத்துப் பணிகள், தமிழ்ச் சங்கப் பணிகள், வெளி நாட்டுரைகள், அங்கம் வகிக்கும் அமைப்புகள் ஆகிய அத்தியாயத் தலைப்புகளின் கீழ் இந்த சுயவரலாற்றுரை இடம்பெற்றுள்ளது.

### 16927

**அற்றைத் திங்கள்: தி.ஞானசேகரனின் வாழ்க்கை அனுபவங்கள்.** தி.ஞானசேகரன். கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச் சங்கம், இல.7, 57ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2022. (கொழும்பு: அச்சக விபரம் தரப்படவில்லை).

90 பக்கம், ஒளிப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15.5 சமீ.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் முன்னெடுத்துவரும் இலக்கியப் பணிகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றாக அமைந்திருப்பது "அற்றைத் திங்கள்" என்னும் கருத்தாடல் நிகழ்ச்சியாகும். தமிழின் மூத்த படைப்பாளிகளும் தகைசான்ற ஆளுமைகளும் தமது வாழ்வியல் அனுபவங்கள், கலை இலக்கிய நட்பு எழுகைகள், பண்பாட்டுத் தாக்கங்கள், படைப்பு முயற்சிகள் முதலியவற்றைப் பகிர்ந்துகொள்ளும் தனித்துவமான இலக்கிய நிகழ்ச்சியாகும். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் 10.09.2022 அன்று இடம்பெற்ற அற்றைத் திங்கள் நிகழ்வில் ஞானம் சஞ்சிகை ஆசிரியர் டாக்டர் தி.ஞானசேகரன் ஆற்றிய உரையின் எழுத்துவடிவம் இது. குடும்பப் பாரம்பரியம், எனது பெற்றோர், பாடசாலை நாட்கள், மருத்துவக் கல்லூரி வாழ்க்கை, தொழில் வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, நான் எழுதிய சிறுகதைகள், நான் எழுதிய நாவல்கள், எனது பயண இலக்கியங்கள், ஞானம் சஞ்சிகை, நான் பங்குபற்றிய இலக்கிய மாநாடுகள், பல்கலைக் கழகங்களில் நான் ஆற்றிய உரைகள், நான் தரிசித்த சித்தர்கள், நிறைவாக ஆகிய 14 இயல்களில் இச்சுயசரிதை அமைந்துள்ளது.

## 16928

**இலக்கிய வெளி: தி.ஜானகிராமன் 1921-2021: நூற்றாண்டுச் சிறப்பிதழ்.** அகில் (இயற்பெயர்: அகிலேஸ்வரன் சாம்பசிவம்). கனடா: இலக்கிய வெளி, 607-550, Scarborough Golf Club Road, Scarborough, Ontario M1G 1H6, 1ஆவது பதிப்பு, ஜுலை-டிசம்பர் 2021. (தமிழ்நாடு: அச்சக விபரம் தரப்படவில்லை).

228 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 24x17.5 சமீ., ISSN: 2564-2421.

இலக்கியவெளி சஞ்சிகையின் சிறப்பிதழாக வெளிவந்துள்ள இவ்விதழில் அப்பாவை மறுபடியும் கண்டறிகிறேன் (உமா சங்கரி), அன்பென்றால் அம்மணி (வானதி), உணர்ச்சிக்கு வடிகால் தேடும் பெண்கள்: தி.ஜா. நாவல்கள் சிலவற்றை முன்வைத்து (இராம குருநாதன்), செம்பருத்-தீ (கங்காதர்சினி அகிலேஸ்வரன்), தன் சமூக மாற்றங்களை முன்னிறுத்தித் தனக்கான அழகியலை வடிவமைத்துக் கொண்டவர் தி.ஜா. (க.பஞ்சாங்கம்), தி.ஜானகிராமனின் பெண்ணுலகு-ஓர் அலசல் (இரா.பிரேமா), மனக் குதிரையின் பயணம்: தி.ஜா. "மனிதாபிமானம்" சிறுகதைத் தொகுப்பினை முன்வைத்து (ப. சரவணன்), தி.ஜானகிராமனின் ஒரு பாத்திரம் (அண்டனூர் சுரா), தி.ஜானகிராமன் நாவல்களில் பெண்கள்-ஒரு காலத்தின் பதிவு (மனோன்மணி சண்முகதாஸ்), அம்மா வந்தாள்: முரண்களின் கதை (பாஸ்கரன் சுமன்), தி.ஜானகிராமனுடன் ஒரு நெடும் பயணம்: அணையா விளக்கின் ஒளிச் சிதறல்கள் (கல்யாணராமன்), மரப்பசு: பாலியல் சுதந்திரத்தின் நுண்ணரசியல் (பா.இரவிக்குமார்), மோகமுள் (கிறிஸ்டினா அருள்மொழி), தி.ஜானகிராமனின் "பாயசம்"(மைதிலி தயாநிதி), தி.ஜானகிராமனின் "இசைப் பயிற்சி": ஓர் ஆய்வு (செல்வநாயகி ஸ்ரீதாஸ்), மாயமாகும் எழுத்துக்கள் (கேபிள் பீ. சங்கர்), என் பார்வையில் "அம்மா வந்தாள்" (அ.கோவிந்தராஜு), தி.ஜானகிராமன் - அபூர்வராகம் (தி.பரமேசுவரி), தி.ஜா படைப்புகளில் பெண் நோக்கு (பெண்ணியம் செல்வகுமாரி), மூன்று பெண்கள் (எம்.ஏ.சுசீலா), அதிர்வு (சாந்தன்), அது வேறு உலகம் (நவஜோதி ஜோகரட்ணம்), ஆறாம் நிலத்திணைக் காதலர் (குரு அரவிந்தன்), காலநதி (ஸ்ரீரஞ்சனி), சிலிர்ப்பு (தி.ஜானகிராமன்), தூங்கும் பனி நீர் (கே.எஸ். சுதாகர்), போகும் வழியில் நிற்பவர் (சுதாராஜ்), அது (அகிலா) ஆகிய சிறப்பு ஆக்கங்கள், வழமையான மற்றைய இலக்கியப் பதிவுகளுடன் மேலதிகமாக இடம்பெற்றுள்ளன.

## 16929

**இலக்கியத் தொடுவானை நோக்கி: மு.பொ.பற்றிய ஆவணத்திரட்டு.** மு.பொன்னம்பலம். கொழும்பு 6: மு.பொன்னம்பலம், 36-3/2, ஐ.பீ.சீ.வீதி (சர்வதேச பௌத்த நிலைய I.B.C. வீதி), 1ஆவது பதிப்பு, 2021. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

xi, 153 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 900., அளவு: 22x15.5 சமீ., ISBN: 978-955-97257-5-6.

இருபதுக்கும் அதிகமான நூல்களை எழுதிய மூத்த எழுத்தாளர் மு.பொன்னம்பலம் அவர்களின் படைப்பிலக்கியத்திற்கான ஓர் பருந்துப் பார்வையாக இந்நூல்

அமைகின்றது. பொறியில் அகப்பட்ட தேசம், அது, கவிதையில் துடிக்கும் காலம், குந்திசேத்திரத்தின் குரல், காலி லீலை ஆகிய கவிதை நூல்களுக்கும், கடலும் கரையும், முடிந்துபோன தசையாடல் பற்றிய கதை, உருமாறும் உலகமும் கருமாறும் காலமும் ஆகிய சிறுகதை நூல்களுக்கும், நோயில் இருத்தல், சங்கிலியன் தரை, ஆகிய நாவல்களுக்கும், காட்டிக் கொடுத்தவன் என்ற நாடக நூலுக்கும், திறனாய்வின் புதிய திசைகள், யதார்த்தமும் ஆத்மார்த்தமும், விசாரம், வாசிப்பதும் வாசிக்கப்படுவதும் ஆகிய இலக்கிய நூல்களுக்கும் சிறுவர் இலக்கியங்களுக்கும் மொழிபெயர்ப்பு நூல்களுக்கும் கிடைக்கப்பெற்ற பாராட்டுக்களை உள்ளடக்கிய துடன் இலக்கியப் பயணத்தில் கிடைக்கப் பெற்ற விருதுகள், பாராட்டுக் கடிதங்கள், சான்றிதழ்கள் ஆகியவற்றை புகைப்படங்களுடன் உள்ளடக்கிய ஆவணத் திரட்டாக அமைகின்றது.

## 16930

**என்றென்றும் கைலாசபதி: கட்டுரைகள்.** பாலு. சுகுமார் (தொகுப்பாசிரியர்). மட்டக்களப்பு: அனாமிகா வெளியீட்டகம், இல. 48, பெய்லி முதலாம் குறுக்குத் தெரு, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2022. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496A, திருமலை வீதி).

150 பக்கம், விலை: ரூபா 1100., அளவு: 22x16 சமீ.

பேராசிரியர் கைலாசபதி அவர்கள் இறந்து நாற்பதாண்டுகள் நிறைவடையும் நிலையில் முன்னோடி முயற்சியாக இத்தொகுப்பு வெளிவந்துள்ளது. இத்தொகுப்பில், என்னுள் வந்த பேராசிரியர் கைலாசபதி (பாலு.சுகுமார்), குரு தட்சணை: பேராசிரியர் கைலாசபதி நினைவுகள் (சி.மௌனகுரு), பேராசிரியர் க. கைலாசபதியின் படைப்புகள்: ஒரு பார்வை (தம்பு சிவசுப்பிரமணியம்), பேராசிரியர் கைலாசபதியின் பத்திரிகை துறைசார்ந்த பங்களிப்பு (லெனின் மதிவானம்), பேராசிரியர் கைலாசபதி: தமிழ் அறிஞர்களை உருவாக்கிய வித்தகர் (லெனின் மதிவானம்), செ.பொ.கோபிநாத் அவர்களின் இணையப் பக்கத்திலிருந்து, பேராசிரியர் கைலாசபதி: ஒரு மானுட ஆவணம் (பாரதி தீட்சண்யா), தேடிப் படித்த நூல்கள், பேராசிரியர் கைலாசபதியின் நிர்வாகத் திறன் (முருகபூபதி, அவுஸ்திரேலியா), இலங்கைப் பேராசிரியர் க.கைலாசபதி (மு.இளங்கோவன்), பேராசிரியர் கைலாசபதியும் சமூகவியலும் (லஸி குணரத்தினம்), க.கைலாசபதியின் "பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்" ஒரு நோக்கு (கி.பார்த்திபராஜா), பாரதியியலில் கைலாசபதி (ந.இரவீந்திரன்), பாரதியம்: ஆன்மீக நாத்திகம், பேராசிரியர் க.கைலாசபதி நினைவாக (மணியம் சண்முகம்), முற்போக்கு இலக்கிய இயக்கத்தை கடைசிவரை பாதுகாத்த பேராசிரியர் க.கைலாசபதி (மணியம் சண்முகம்) ஆகிய பதினாறு கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

## 16931

**ஓ தோழனே... நந்தினி.** பால. சுகுமார் (தொகுப்பாசிரியர்). மட்டக்களப்பு: அனாமிகா வெளியீட்டகம், இல. 48, பெய்லி முதலாம் குறுக்குத் தெரு, 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 2022. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496A, திருமலை வீதி).

iv, 68 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x16 சமீ.

அனாமிகா பதிப்பகம் நம் மத்தியில் வாழ்ந்த கலை இலக்கியவாதிகளுக்கு மதிப்பளிக்கும் முகமாக அவர்கள் பற்றிய நினைவுத் தொகுப்புக்களை வெளியிட்டு வருகின்றது. அந்த வகையில் மிகக் காத்திரமாக முற்போக்கு கலை இலக்கியம் என தொழிற்பட்ட நந்தினி சேவியர் பற்றிய நினைவுகளைச் சுமந்து நிற்கின்றது இந்நூல். தே. சேவியர் என்ற இயற்பெயர் கொண்ட நந்தினி சேவியர் (25.05.1949-16.09.2021) ஈழத்துப் படைப்பாளிகளில் ஒருவர். கவிதை, சிறுகதை, நாவல், பத்தி, விமர்சனக்கட்டுரை ஆகிய துறைகளில் தமது ஆளுமையைச் செலுத்தியவர். தனது பாடசாலைக் கல்வியை மட்டுவில் கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலை, மட்டுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, வதிரி திருஇருதயக் கல்லூரி ஆகியவற்றில் கற்றார். பின்னர் யாழ் தொழில்நுட்பக் கல்லூரியிலும் பயின்றார். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சீனச் சார்பு) வாலிப சங்க இயக்கத்தில் இணைந்து செயற்பட்டவர். இலக்கியச் செயற்பாடுகளுடன் சமூகச்செயற்பாடுகளிலும் முன்நின்று உழைத்தவர். நந்தினி சேவியர் இறந்தபோது முகநூலில் பதிவிட்ட 51பேரின் உணர்வுப் பெருக்காய் இந்த நூல் அமைகின்றது. நம் சமூக அமைப்பின்மீது அதன் சாதிய வன்மம் பற்றி உரக்க குரல் எழுப்பியவர் தோழர் நந்தினி சேவியர். சாதி எதிர்ப்பு போராட்ட களத்தில் ஒரு போராளியாய் களம் கண்டவர். மார்க்சியத்தை அதன் ஆழ அகலத்தை புரிந்து கொண்டவர் இவர். எதிர்காலம் மார்க்சியத்துக்கானது என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்ட மார்க்சியர். போலித்தனங்கள் அற்ற மார்க்சிய கலை இலக்கிய அரசியலாளர்.

## 16932

**கல்கி பிறந்தார்.** இராஜ அரியரெத்தினம். சென்னை 17: பாரதி பதிப்பகம், தியாகராய நகரம், 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 1955. (சென்னை 17: எவரெடி அச்சகம், 85-B, பாண்டி பஜார், தியாகராய நகர்).

60 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18x12 சமீ.

1945இல் "வயலுக்குப் போட்டார்" என்ற சிறுகதையுடன் ஈழகேசரி வாயிலாக ஈழத்து படைப்பிலக்கியத்துறைக்குள் நுழைந்தவர் ஈழகேசரி ஆசிரியர் பீடத்தை அலங்கரித்த இராஜ அரியரெத்தினம் அவர்கள். தமிழகத்தின் படைப்பாளியான கல்கியின் (கிருஷ்ணமூர்த்தி) படைப்புக்களின் பேரில் அதீத ஈடுபாடு கொண்டவர். பின்னாளில் பத்திரிகையாளராகப் பெரிதும் அறியப்பட்டவர். அவர் கல்கி பற்றி, அவரது எழுத்தாற்றல் பற்றி, இந்நூலில் விரிவாக எழுதியிருக்கிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 268105).

### 16933

**கலாபூஷணம் ஆ.மு.சி. வேலழகன்: ஓர் அறிமுகம்.** ப.குணசேகரன். களுதாவளை: ப.குணசேகரன், செயற்குழு உறுப்பினர், மட்டக்களப்பு தமிழ்ச் சங்கம், 1ஆவது பதிப்பு, மார்ச் 2021. (அச்சக விபரம் தரப்படவில்லை).

8 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15.5 சமீ.

ஆ.மு.சி. வேலழகன் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக எழுதிவரும் ஒரு எழுத்தாளர். கவிஞராக, நாவலாசிரியராக, பண்பட்ட இலக்கியவாதியாக எனக்கு இருபதாண்டுகளுக்கு முன்னர் அறிமுகமானவர் இவர். ஆதிநாராயணன், முத்து, சின்னத்தம்பி, ஆ.மு.சி.வேலழகன் ஆகிய பல்வேறு புனை பெயர்களிலும் எழுதிவருகின்றார். இருப்பினும் "ஆ.மு.சி.வேலழகன்" என்ற பெயரே இலக்கிய உலகில் இவரைக் குறிக்கும்படியாக நிலைபெற்றுவிட்டது. 1939ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் திகதி திருப்பழுகாமத்தில் ஆதிமுத்து சின்னத்தம்பி, வேலாயுதர் வள்ளியம்மை தம்பதியினரின் 5ஆவது பிள்ளையாகப் பிறந்தவர் தான் வேல்முருகு. 1952 காலப்பகுதிகளில் தந்தை ஈ.வெ.ரா., ப.ஜீவானந்தம், சிங்காரவேலர், பேரறிஞர் அண்ணாதுரை போன்றோரின் சமூக சீர்த்திருத்தக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு, அவற்றைத் தன் வாழ்வில் பின்பற்றிவந்துள்ளார். திருமலை மாவட்டத்தில் திருக்கோணமலை என புலம்பெயர்ந்து பல இன்னல் இடர்களை அடைந்து மட்டக்களப்பு அமிர்தகழியிலே நிரந்தரமாக வாழ்வமைத்துக் கொண்டிருந்தவரை காலச்சூழ்நிலை ஒரு கட்டத்தில் சிறையிலும் தள்ளியது. அங்கிருந்து சிறை வாழ்க்கையை முடித்துக் கொண்ட கையோடு இ.போ.ச.சபையில் பல சிரமங்களுக்கு மத்தியில் ஓர் பஸ் சாரதியாக இணைந்து பொறளை, தலங்கமை, பதுளை, மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை, வாழைச்சேனையென 32 வருடங்கள் சேவை செய்து இளைப்பாறினார். இந்நூலில் ப.குணசேகரன், கவிஞர் ஆ.மு.சி. வேலழகன் பற்றிய ஓர் அறிமுகத்தை வழங்கியுள்ளார்.

### 16934

**கவிஞர் செல்லையா நாகேந்திரன்: மலர்ந்ததும் உதிர்ந்ததும்.** ஐ.தி.சம்பந்தன் (தொகுப்பாசிரியர்). லண்டன் E7 8PQ: சுடரொளி வெளியீட்டுக் கழகம், 15, Rutland Road, 1ஆவது பதிப்பு, ஜுலை 2004. (லண்டன்: ஜே.ஆர். பிரின்ட், இல. 61, Hoe Street, Walthamstow, London E17 4QR).

40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

இறைபக்தியும் வாழ்க்கையும் கலந்த இலக்கியப் படைப்புக்களை மையமாக வைத்து கவிதை இயற்றி இலண்டன் வாழ் ஈழத்துக் கவிஞர்களிடையே தனக்கென வோர் இடம்பிடித்திருந்தவர் அமரர் கவிஞர் செல்லையா நாகேந்திரன் (4.6.1946-5.6.2004). யாழ்ப்பாணம், நாவற்குழியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் புலம் பெயர்ந்து இலண்டனில் வாழ்ந்து வந்தவர். அவரது படைப்புக்கள் இடம்பெறாத பத்திரிகைகள், சஞ்சிகைகள், சிறப்புமலர்கள், நினைவஞ்சலி மலர்கள் எதுவுமே இல்லை என்ற அளவுக்கு படைப்புலகத்துறையில், குறிப்பாகத் தமிழ்க் கவிதைத் துறையில் ஆழத்தடம் பதித்தவர். சுடரொளி வெளியீட்டுக்கழகத்தின் நீண்டகால

அங்கத்தவராக இருந்துவந்துள்ள அமரர் நாகேந்திரன் அவர்கள், "வருக தமிழர் பொற்காலம்" என்ற தலைப்பில் அவ்வமைப்பினால் ஏற்பாடு செய்திருந்த மில்லெனிய கவிதைப் போட்டியான முதலாவது உலகத் தமிழ் கவிதைப்போட்டியின் அமைப்பாளர்களில் ஒருவராகப் பணியாற்றியவர். இவரின் கவிதைத் திறனைப் பாராட்டி இவரது மறைவுக்குச் சிலகாலத்திற்கு முன்னர் மாமதுரைக் கவிஞர் பேரவை, "கவியருவி" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்திருந்தது. அன்னாரின் மறைவின் 31ஆம் நினைவுதினத்தின் போது பல்வேறு பிரமுகர்களின் அஞ்சலி உரைகளுடன் இம்மலர் வெளியிடப்பட்டது.

## 16935

**செ.கணேசலிங்கன் நினைவுகள்.** க.இரகுபரன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1ஆவது பதிப்பு, 2023. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

x, 162 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-624-6164-36-2.

செ.கணேசலிங்கன் அவர்கள் மறைந்த பின்னர் வெளிவரும் இம்மலரில் செ.க. பற்றிய முன்னைய மலர்களின் வெளிவராததும், அவர் பற்றி பன்னாட்டு அறிஞர்களாலும் எழுதப்பட்டதுமான கட்டுரைகளை தேடித் தொகுத்து இந்நூலில் பதிவுசெய்துள்ளார்கள். "செ.க. பற்றி" (லறீனா ஏ ஹக், விஜிதா சிவபாலன்), "செ.க. பற்றிப் படைப்பாளிகள்" (இன்குலாப், எஸ்.என்.நாகராஜன், பாலு மகேந்திரா, டொமினிக் ஜீவா, எஸ்.பொன்னுத்துரை, முருகபூபதி, நீர்வை பொன்னையன், தேவகாந்தன், அகிலன் கண்ணன், அந்தனி ஜீவா, நந்தி, கே.எஸ். சிவகுமாரன், அ.முகம்மது சமீம், சிலோன் விஜயேந்திரன்), "செ.க. பற்றி நண்பர்கள்" (என்.ராம், சி.தில்லைநாதன், ந.தெய்வசுந்தரம், ந.அரணமுறுவல், தம்பையா கயிலாயர், வெ.தங்கவேல்சாமி), "செ.க. மறைந்தபோது" (மு.நித்தியானந்தன், T.இராமகிருஷ்ணன், தி.ஞானசேகரன், தெளிவத்தை ஜோசப், உங்கள் நூலகம், அமிர்தலிங்கம் பௌநந்தி, தினகரன், வீ.பா.கணேசன், ஆசிரியர் தலையங்கம்-தினகரன், கி.வே.பொன்னையன், அக்னிபுத்திரன், ஆர்.விஜயசங்கர், பாவெல் தர்மபுரி, தேசிய விடுதலை இயக்கம், வி.ரி.இளங்கோவன், கல்லாறு சதீஷ், இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான், ஆ.பத்மாவதி, என்.ரமேஷ், ஆர்.கே.ராதாகிருஷ்ணன், T.இராமகிருஷ்ணன்) ஆகிய நான்கு பிரிவுகளில் வகைப்படுத்தித் தந்துள்ளார். இந்நூல் குமரன் புத்தக இல்லத்தினரின் ஆயிரமாவது வெளியீடாக வெளிவந்துள்ளது.

## 16936

**செங்கை ஆழியானின் படைப்புலகம்.** என்.செல்வராஜா. யாழ்ப்பாணம்: எங்கட புத்தகங்கள், 906/23, பருத்தித்துறை வீதி, நல்லூர், 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2022. (யாழ்ப்பாணம்: மிக்கி பிரின்டிங் ஸ்பெஷலிஸ்ட், தபாற்பெட்டிச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி).

x, 105 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-624-97823-3-4.

செங்கை ஆழியான் என்ற புனைபெயரால் பரவலாக அறியப்படும் அமரர் க. குணராசா ஒரு பன்னூலாசிரியராவார். சமூக நாவல்கள், குறுநாவல்கள், வரலாற்று நாவல்கள், சிறுகதைகள், பல்துறைக் கட்டுரை நூல்கள், சிறுவர் இலக்கியங்கள், புவியியல்சார் அறிவியல் நூல்கள், வரலாற்று ஆய்வுகள், தொகுப்பு முயற்சிகள் மற்றும் பதிப்புத்துறை எனப் பல துறைகளிலும் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். இந்நூலில் செங்கை ஆழியானின் படைப்பிலக்கிய வாழ்வினை அவரது படைப்புகளின் மூலமாகத் தரிசிக்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. இவ்வாய்வுக் கையேட்டில் செங்கை ஆழியானின் படைப்புக்கள் ஆண்டுவாரியாக 1962 முதல் 2016 வரை பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவரது நூல்களில் பல மீள்பதிப்புகளாக பின்னைய காலங்களில் வெளியிடப்பட்டிருந்த போதிலும் முதற் பதிப்பு வெளிவந்த ஆண்டின் கீழேயே அவையும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு படைப்பின் கீழும் அந்நூல் பற்றிய சிறு குறிப்பொன்றும் தரப்பட்டுள்ளது. இந்நூலில் பிரதான பதிவையடுத்து, அவரது நூல்களை வகைப்படுத்தும் முயற்சி ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. செங்கை ஆழியானின் நூல்கள் அனைத்தையும் நாவல்கள்/குறுநாவல்கள், வரலாற்று நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள், பல்துறைக் கட்டுரை நூல்கள், சிறுவர் இலக்கியங்கள், திரைப்படப் பிரதிகள், அறிவியல் நூல்கள்: புவியியல், பொது அறிவு, பொது உளச்சார்பு, வரலாற்று நூல்கள், செங்கை ஆழியான் தொகுத்த நூல்கள், செங்கை ஆழியான் பற்றிய நூல்கள் ஆகிய பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தித் தரப்பட்டுள்ளன. மூன்றாவது பிரிவில் நூல்களின் தலைப்புகள் அகரவரிசைப்படுத்தித் தரப்பட்டுள்ளன. அடைப்புக்குறிக்குள் வெளியிட்ட ஆண்டும் தரப்பட்டுள்ளது. அகர வரிசையில் ஒரு நூலை பிரதான பதிவின் கீழ் தேட முனையும் ஆய்வாளருக்கு இது உதவியாகவும், நேரத்தை மீதப்படுத்தவும் உதவும்.

## 16937

**தமிழொளி: வன்னியூர்க் கவிராயர் சிலை திறப்புவிழா மலர்.** கனகரவி (மலராசிரியர்). வவுனியா: வன்னியூர்க் கவிராயர் கலை இலக்கியப் பேரவை, 1ஆவது பதிப்பு, 2015. (வவுனியா: லேற்றஸ் பிறின்டர்ஸ், வைரவபுளியங்குளம்).

xvi, 105 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x20சமீ., ISBN: 978-955-7821-01-6.

வவுனியா மாவட்டத்தின் வெண்கலச்செட்டிகுளம் கிழக்குப் பிரதேசத்தில் இலுப்பைக் குளம் என்ற கிராமத்தைத் தாயகமாகக் கொண்ட "வன்னியூர்க் கவிராயர்" என்று பரவலாக அறியப்பட்ட அமரர் எஸ்.எல்.சவுந்தரநாயகம் அவர்கள், எஸ்.எல்.சவுந்தரநாயகம், வன்னியூர்க் கவிராயர், எஸ்.எல்.எஸ்., பாவேந்தன், மனோகரி, வன்னியூர் நாயகம் ஆகிய பல்வேறு புனைபெயர்களில் 1953 முதல் 1978வரை அவர் தீவிரமாக எழுதிவந்துள்ளார். ஆயுர்வேத வைத்தியரான இவர் ஓலைச்சுவடிகளிலும் சித்த மருத்துவத்துறை சார்ந்த ஆக்கங்களை எழுதியுள்ளார் என அறியமுடிகின்றது. மேலும் சித்திரக் கவிகள், கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் என்பன இவரால் எழுதப்பட்டுள்ளன. இச்சிறப்பு மலரில் வன்னியூர்க் கவிராயர் (பிறப்பு: 04.04.1921 மறைவு: 1978) பற்றிய பல்வேறு

தகவல்கள் சிறு கட்டுரைகளின் வடிவில் தரப்பட்டுள்ளன. கவிஞரின் சில ஆக்கங்களும் தேடித் தொகுக்கப்பட்டுள்ளன. அவர் பிறந்த கிராமத்திலேயே அவருக்குச் சிலை வைக்கப்பட்டவேளை 20.06.2015 அன்று இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது.

### 16938

**நெடுவாழ்வின் எழுதித் தீரா நினைவு: டொமினிக் ஜீவா.** இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி-பிரான்ஸ். ஹட்டன்: பாக்யா பதிப்பகம், இல. 4A, ஸ்டார் சதுக்கம், 1ஆவது பதிப்பு, ஜுன் 2021. (கொழும்பு 13: GOD Creative Lab).

x, 210 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-624-5888-00-9.

இலக்கிய வழிவந்த அரசியல் சமூக ஆளுமையான டொமினிக் ஜீவா மறைந்ததை அடுத்து வரும் அவரது பிறந்த நாளில் அவருக்கான அஞ்சலியாக, அவரை நினைவுறுத்துவதாக, அவரை கௌரவிப்பதாக இச்சிறப்பு மலர் வெளிவந்துள்ளது. பிரான்ஸில் இருந்து இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணியும், இலங்கை-மலையகத்திலிருந்து பாக்யா பதிப்பகத்தின் அதிபர் மல்லியப்புசந்தி திலகரும் இணைந்து இம்மலரை மலரும் நினைவுகளுடன் வெற்றிகரமாக வெளியிட்டுள்ளனர். டொமினிக் ஜீவா (27.06.1927- 28.01.2021) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர், இதழாசிரியர். இவரது தந்தை ஆவுறம்பிள்ளை தாய் யோசப் மரியம்மா. இவர் மல்லிகை என்னும் சஞ்சிகையின் ஆசிரியராவார். புரட்சிமோகன் என்ற புனை பெயரில் ஆக்கங்களைப் படைத்துள்ளார். இவர் தண்ணீரும் கண்ணீரும், பாதுகை, சாலையின் திருப்பம், வாழ்வின் தரிசனங்கள், டொமினிக் ஜீவா சிறுகதைகள் ஆகிய சிறுகதைத் தொகுப்புக்களையும் அனுபவ முத்திரைகள், எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம், அச்சுத்தாளினூடாக ஓர் அனுபவ பயணம், நெஞ்சில் நிலைத்திருக்கும் சில இதழ்கள், முப்பெரும் தலைநகரங்களில் 30 நாட்கள் ஆகிய கட்டுரைத் தொகுப்புக்களையும் Undrawn Portrait for Unwritten Poetry என்ற மொழிபெயர்ப்பு நூலையும் எழுதியுள்ளார்.

### 16939

**பூங்குயில் 70.** பாகீரதி கணேசதுரை, சிவமலர் சுந்தரபாரதி (தொகுப்பாசிரியர்கள்). தெல்லிப்பழை: சோலைக்குயில் அவைக்காற்றுக் களம், 1ஆவது பதிப்பு, நவம்பர் 2020. (யாழ்ப்பாணம்: அம்மா அச்சகம், இணுவில்).

viii, 167 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 700., அளவு: 25x19 சமீ., ISBN: 978-624-5407-00-2.

சோலைக்குயில் அவைக்காற்றுக் களத் தலைவர் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களின் அகவை எழுபது நிறைவு மலர். இம்மலரில் திருமதி கோகிலா மகேந்திரன் தொடர்பான எழுத்தாளர்களின் தொடர்பாடல்கள், அவருடைய மாணவர்களின் கருத்துக்கள், அவரது ஆக்கங்கள் தொடர்பான விமர்சனங்கள், பாடசாலைச் சம்பவப் பதிவேட்டுக் குறிப்பு, நாடக எழுத்தாக்கம், உளவியற் சிறுகதை, தொடர் நவீனம், சிறுவர் கதை, கவிதை, இசைப்பாடல், டயறித் தொகுப்பு, உறவினர் பற்றிய நினைவாடல், கட்டுரைகள், திருமதி கோகிலா

மகேந்திரன் எழுதிய விமர்சனங்கள், விருந்தினர் உரைச் சுருக்கம், அதிபராகப் பரிசளிப்பு விழாவின் அறிக்கை, 2015இல்அகவை அறுபத்தைந்து நிறைவு மலரான விழிசைக் குயிலிலும், 2010 அகவை அறுபது நிறைவு மலரான சோலைக் குயிலிலும் வெளிவராத அவரின் நிறைவான செயற்பாடுகள் என்பவற்றைத் தொகுத்து ஆவணப்படுத்தியுள்ளார்கள்.

### 16940

**பூச்சியம் பூச்சியமல்ல: இலக்கிய அனுபவங்கள்.** தெணியான். சென்னை 600098: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41-B, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 2013. (சென்னை 600014: பாவை பிரின்டர்ஸ், 16(142), ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை).

vi, 210 பக்கம், விலை: இந்திய ரூபா 160., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-81-2342-462-0.

தெணியானின் வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதியாகக் கணிக்கத்தக்க அனுபவப் பதிவுகள் இவை. 1960 முதல் தான் பேணிவந்த தினக்குறிப்புகளின் உதவியுடன் ஒவ்வொரு நிகழ்வினையும் திகதிவாரியாகக் குறிப்பிட்டுள்ளார். தான் சமூக ஒடுக்குமுறைகளுக்குள்ளான அனுபவங்கள், அந்த ஒடுக்குமுறைகளுக்கு முகம் கொடுத்து நின்று பெற்ற அனுபவங்கள், அவற்றுக்கு எதிராகப் போராடிப் பெற்ற அனுபவங்கள் எனப் பல அனுபவங்கள் இங்கு பகிர்ந்துகொள்ளப்பட்டுள்ளன. சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடும் மனப்பாங்கு தன்னுள்ளே வளர்ந்து வருவதற்குக் காரணமாக அமைந்த தனது குடும்ப, வாழ்வியல் பின்புலத்தையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

### 16941

**மன்னார் மாதோட்ட தமிழ்ப் புலவர் சரித்திரம்.** பெஞ்சமின் செல்வம். யாழ்ப்பாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், 2ஆவது பதிப்பு, 2020, 1ஆவது பதிப்பு, 1978. (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

xxxviii, 86 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-7331-25-6.

திரு. பெஞ்சமின் செல்வம் (02.12.1906-22.01.1982) அவர்கள் 1978ஆம் ஆண்டு இந்நூலை முதலில் எழுதியிருந்தார். 1769 தொடக்கம்1976 வரையான 207 ஆண்டுக் காலப் பகுதியில்வாழ்ந்த மன்னார் மாதோட்டத்தைச் சேர்ந்த 51 புலவர்களின் வரலாற்றை இந்நூலில் அவர் பதிவுசெய்துள்ளார். இதில் 43 தமிழ் புலவர்களும் 8 இஸ்லாமியப் புலவர்களும் இடம்பெற்றுள்ளனர். லோறஞ்சுப்பிள்ளை, காலிங் கராயர், சந்தியோகுப் புலவர், கவிரிகேற் புலவர், ஆதித்த நாடார் பிலீப்பு சந்தான், மரியானுப் புலவர், குருகுல நாட்டுத் தேவர், வெள்ளைப் புலவர், மனுவேற்பிள்ளை உடையார், மரியாம்பிள்ளை விதானையார், கீத்தாம்பிள்ளைப் புலவர், குமாரசிங்க

முதலியார், நீக்கிலாப்பிள்ளை, லோறஞ்சுப் புலவர், வெலிச்சோர்ப்பிள்ளை அதிகாரம், வருணகுலசிங்கம் தொன்சுவாம் அந்தோனிப் புலவர், அந்தோனி பிலிப்பு நேரிசு, மனுவேல் மொறாயஸ், ஆனுப்பிள்ளை, மரிசாற்பிள்ளை, சீனிப்புலவர், சூசைப்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை, செபமாலைப் புலவர், மரிசாற் புலவர், ஆரோக்கியம் டயஸ், அந்தோனிப் புலவர், கவிரிகேற் புலவர், சந்தான் புலவர், நிக்கிலான் புலவர், மரிசால் சூசைப் புலவர், அந்தோனி கிறிஸ்தோகுப் புலவர், பேதிரு மிகேல் பிறஞ்சி, சூசை மனுவேற் புலவர், அந்தோனி கிறிஸ்தோகுப் புலவர், பிலீப்பு சக்கரவர்த்தி, செவஸ்தியாம்பிள்ளை, சூசைப் புலவர், அந்தோனிப் புலவர், சந்தான புலவர், ஆரோக்கியம் றோச், சதக்குத் தம்பிப் புலவர், முகம்மது சரீபு, பிறஞ்சிக்குடிப் புலவர், விதானைப் புலவர், பக்கீர்ப் புலவர், நெயினா முகம்மது புலவர், முகையதீன் சாஹிபுப் புலவர், கிதிரு முகம்மது மரைக்காயம் புலவர், முகம்மது சமாலுத்தீன் புலவர், கவுரியேற் புலவர் ஆகிய புலவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளும் அவர்களது பாடல்கள் சிலவும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

## 16942

**மாமி சொன்ன கதைகள்: அனுபவப் பகிர்வு.** சந்திரா இரவீந்திரன் (இயற்பெயர்: சந்திரகுமாரி இரவீந்திரகுமாரன்). நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2022. (நாகர்கோயில்: பிரின்ட் பொயின்ட் ஒப்செட் பிரின்டர்ஸ்).

*120 பக்கம், ஒளிப்படங்கள், விலை: இந்திய ரூபா 150., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-5523-262-5.*

பருத்தித்துறை-ஆத்தியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட எழுத்தாளரான சந்திரா இரவீந்திரன் எண்பதுகளிலிருந்து இலக்கிய உலகில் இயங்கி வருபவர். பலராலும் அறியப்பட்ட தனித்துவமான மொழிநடை கொண்ட பல சிறந்த சிறுகதைகளைத் தந்தவர். 1991 முதல் பிரித்தானியாவில் வாழ்ந்து வருகிறார். தனது மாமியின் அனுபவங்களை, அவருக்குள் இருந்த உணர்வுகள் சிறிதும் குறையாமல் இங்கே இலக்கியமாக்கியிருக்கிறார். நானும் மாமியும், மாமி சொன்னவை பால்யம், பள்ளிக்காலப் புதினங்கள், கற்பித்தலுக்குக் கைகொடுத்தல், ஊரும் கொண்டாட் டமும், வாழ்வில் திடீர் மாற்றங்கள், மேலும் படிக்க ஆசை, ஐயா போன பின்னர், அது ஒரு காலம், எனது ஆசைகளும் என் அம்மாவும், பருவப் பெண்ணும் பள்ளிக்கூடமும், வீடும் நானும், மீண்டும் படிப்பு, காதலும் வாழ்வும், சிங்களத் தனிச்சட்டமும் வாழ்வின் மாற்றங்களும், கணவர் இல்லாத வாழ்வு, நாடும் சூழலும், நானும் வெளிநாடும், புலம்பெயர்ந்த வாழ்வு, மாமியைப் பற்றி மற்றவர்கள் ஆகிய 20 இயல்களில் இவரது வாழ்க்கைப் பயணத்தின் ஒரு கட்டம் இந்நூலில் நினைவுப் பதிகையாக சுவையாக படைக்கப்பட்டுள்ளது.

## 16943

**வரகவி நயினை நாகமணிப் புலவரின் படைப்பாற்றல்.** கனகசபை உருத்திரகுமாரன். யாழ்ப்பாணம்: உருத்திரகுமாரன் கௌரிசங்கர், 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2015. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 681, காங்கேசன்துறை வீதி).

116 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.

வடபுலத்து சப்ததீவுகளில் ஒன்றான நயினாதீவில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெரும்புகழுடன் வாழ்ந்தவர் நாகமணிப் புலவர் (10.12.1880-20.07.1933). இவர் தனது ஐந்தாவது வயதில் நயினை வீரகத்திப்பிள்ளை ஆசிரியரால் நடத்தப்பட்ட திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தனது ஆரம்பக் கல்வியை பெற்றுக்கொண்டார். அக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட தில்லையம்பல வித்தியாசாலை என்ற சைவப் பாடசாலையில் இணைந்து சோமசுந்தர ஐயரிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். வளர்ந்ததும் யாழ்ப்பாணத்தில் சில வணிகர்களுக்கு கணக் கெழுதும் தொழிலை செய்து வந்தார். பின்னர் அத்தொழிலை விடுத்து தமது பிறந்த ஊரான நயினாதீவுக்கு வந்து ஐந்து ஆண்டுகள் கிராமச் சங்கத் தலைவராக பணியாற்றியுமுள்ளார். இவர் படைத்த நயினை மான்மியம், நயினை நீரோட்ட யமகவந்தாதி, வழிநடைச் சிந்து ஆகிய ஆக்கங்கள் இதுவரை நூலுருவில் வெளி வந்துள்ள போதிலும் எராளமான படைப்புக்கள் இவரது வாழ்நாட்காலத்தில் அச்சுவாகன மேறவில்லை. புலவரவர்களின் வாழ்வின் பெரும்பகுதியை கவிதை புனைவதில் செலவிட்டார். யமகம், அந்தாதி, மான்மியம், சிலேடை, வெண்பா என்பவற்றில் இவரது புலமை மிக ஆழமானது. வரகவி நயினை நாகமணிப் புலவரவர்களின் படைப்பாற்றல் பற்றி இந்நூல் விரிவாகக் கூறுகின்றது.

## 16944

**வாழ்நாள் சாதனையாளர்: சாஹித்ய ரத்னா செங்கை ஆழியான்.** கமலா குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10யு, பிரவுண் வீதி, நீராவியடி, 1ஆவது பதிப்பு, 2018. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).

x, 786 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 2000., அளவு: 25.5x17.5 சமீ., ISBN: 978-955-0210-11-4.

செங்கை ஆழியான் (க.குணராசா, 25.01.1941-28.02.2016) பற்றிய இவ்வாவணத் தொகுப்பு அவரது துணைவியார் திருமதி கமலா குணராசாவின் மூலம் தொகுக்கப் பெற்றுள்ளது. இத்தொகுப்பு கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ்திரட்டித் தரப்பட் டுள்ளது. செங்கை ஆழியானின் வாழ்க்கைப் பாதை, நாவல்கள், சிறுகதைகள், செங்கை ஆழியான் பற்றிய ஆய்வுகள், சிறுகதைத் தொகுதிகள், பல்சுவை நூல்கள், செங்கை ஆழியானால் தொகுக்கப்பட்ட ஏனைய படைப்பாளிகளின் சிறுகதைத் தொகுதிகள், வரலாற்று நூல்கள், பாட நூல்கள், செங்கை ஆழியானின் ஏனைய துறைகள், நேர்காணல், செங்கை ஆழியான் பெற்ற பரிசுகள், விமர்சனங்கள், செங்கை ஆழியான் பற்றிய ஏனையோரின் கூற்றுகள், செங்கை ஆழியானை வாழ்த்திய வாழ்த்துப் பாக்கள், எனது இலக்கியத் தொகுப்புகள்- செங்கை

ஆழியான், செங்கை ஆழியானின் இலக்கியம், அறிவியல், புவியியல், வரலாற்றுக் கட்டுரைகள், செங்கை ஆழியானின் சமய சமூகப் பணிகள், சாதனையாளனின் பட்டங்களும் விருதுகளும், செங்கை ஆழியானுக்கு கிடைக்கப்பெற்ற சான்றிதழ்கள், சுயசரிதை, செங்கை ஆழியான் நூல்களின் அட்டைப் படங்கள், செங்கை ஆழியான் மறைவுக்குப் பின்னர் வெளிவந்தவை, பிற்சேர்க்கைகள், செங்கை ஆழியானின் சுயவிபரக்கோவை, கலாநிதி கந்தையா குணராசா அவர்கள் பெற்றுக் கொண்ட விருதுகள், கலாநிதி கந்தையா குணராசா அவர்களின் நிழற்படங்கள்.

## 16945

**ஜீவநதி: மலரன்னை சிறப்பிதழ்: இதழ் 160, கார்த்திகை 2021.** க.பரணீதரன் (ஆசிரியர்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, கார்த்திகை 2021. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டேர்ஸ், இல. 10, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

48 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 29x20.5 சமீ.

மலரன்னை ஈழத்தின் மூத்த புகழ் பெற்ற எழுத்தாளரான அமரர் கச்சாயில் இரத்தினத்தின் மகள். இவரது இருநூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் பல்வேறு பத்திரிகைகள், வானொலிகள், சஞ்சிகைகளில் இலங்கை மற்றும் பிற நாடுகளில் பிரசுரமாகியுள்ளன. நாற்பதிற்கும் மேற்பட்ட இவரது வானொலி நாடகங்கள் ஒலிபரப்பாகி மிகுந்த வரவேற்பு பெற்றுள்ளன. "கனவுகள் நனவாகும்" என்ற தொடர் நாடகம் நாற்பத்தி மூன்று அங்கங்களில் ஒலிபரப்பாகி மிகுந்த வரவேற்பை பெற்றிருந்தது. பல வானொலி நிகழ்ச்சிகளையும் இவர் எழுதியிருக்கிறார். இவர் எழுதிய பத்து ஆங்கிலக் கவிதைகள் Hot spring என்ற ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரமாகியிருக்கின்றன. இவரது நாற்பதிற்கும் மேற்பட்ட ஆக்கங்கள் பல்வேறு போட்டிகளில் பரிசு பெற்றிருக்கின்றன. நான்கு முறை சர்வதேச அளவில் நடை பெற்ற இலக்கிய போட்டிகளில் சிறுகதை, நாடக எழுத்துருவுக்காக பரிசு பெற்றுள்ளார். சிரித்திரன், மல்லிகை சிறுகதைப் போட்டிகளிலும் அகில இலங்கை ரீதியில் பரிசு பெற்றுள்ளார். "பாலைவனத்துப் புஸ்பங்கள்" என்ற நாவல் தேசிய கலாச்சாரப் பேரவையின் தேர்வில் இரண்டாம் பரிசுபெற்றது. இலக்கியப் பங்களிப்புக்காக கலைமாமணி, கலைஞானச்சுடர் விருதுகளை பெற்றுள்ளார். இத்தகைய சிறப்புமிக்க ஈழத்துப் படைப்பாளியை கௌரவிக்கும் வகையில் சிறப்புற உருவாக்கப்பட்டுள்ள ஜீவநதியின் "மலரன்னை சிறப்பிதழில்", மலரன்னை ஒரு மனிதநேயப் படைப்பாளி (தாமரைச் செல்வி), மலரன்னையின் புனைவும் அதன் இயங்குதளமும் (சி.ரமேஷ்), எளிமையின் எழுநயமாய் மலரன்னையின் "அப்பாவின் தேட்டம்" (இ.சு.முரளிதரன்), தெளிந்த வெண்மை நோக்குள்ள அறம்சார் படைப்பாக்க வெளிப்பாடாக மலரன்னையின் "மலைச்சாரலின் தூவல்" (இ.இராஜேஸ்கண்ணன்), மலரன்னையின் சிறுகதைகள்: "கீறல்" தொகுதியை முன்வைத்து (தருமராசா அஜந்தகுமார்), ஊடுருவி ஒளியூட்டும் மலரன்னையின் படைப்புகள் பற்றிய என் குறிப்பு (ஆதிலட்சுமி சிவகுமார்), மலரன்னையின் எழுத்துகளை முன்வைத்து (தாட்சாயணி), சமுதாய யதார்த்தத்தின்

பிரதிபலிப்பாய் மலரன்னையின் "காகிதப் படகு" (ஜெயப்பிரசாந்தி ஜெயபால சேகரம்), "உயிர் சுமந்த கூடு" கதைகள் பற்றி (ஈழக் கவி), மனத்துயரின் வடுக்களைப் பேசும் மலரன்னையின் "அனலிடைப் புழு" சிறுகதைத் தொகுதி குறித்த பார்வைகள் (புலோலியூர் வேல்நந்தன்), புத்தொளி வீசுகின்ற "மறையாத சூரியன்" (செ. யோகராசா). தனயனின் பணிதொடரும் அன்னை (வே.கண்ணன்), "வேர் பதிக்கும் விழுதுகள்" சிறுகதைத் தொகுப்பு குறித்தான வாசகர் குறிப்பு (திருஞானசம்பந்தன் லலிதகோபன்), ஒரு போராளியின் தாயின் குரல் (தீபச்செல்வன்), யதார்த்த வாழ்வியலைப் பேசும் படைப்பாக "மௌனத்தின் சிறகுகள்"(மா.சிவசோதி), மலரவன் (கா.சுஜந்தன்) ஆகிய படைப்பாக்கங்கள் இச்சிறப்பிதழை அழகுபடுத்துகின்றன.

மேலும் பார்க்க:
அகத்தியர். 16907
அங்கையன் கயிலாசநாதன் (கட்டுரைத் தொகுப்பு). 16787
மின்னும் தாரகைகள்: 16198
அகிலம்: வருடாந்தச் சிறப்பு மலர் (தெளிவத்தை ஜோசப் சிறப்பிதழ்): 16019
இலங்கை-மலையக 'கானக நிலா" கல்லிடைக்குறிச்சியார். 16862
விடயம் அறிந்தவர்கள் கணிப்பில் கே.எஸ்.சிவகுமாரன். 16812

## 940 ஐரோப்பிய வரலாறு

### 16946

**ஐரோப்பிய வரலாறு: நாகரிக காலம் முதல் கைத்தொழில் புரட்சி வரை- பாகம் 1.** சி.சூரியதாஸன். கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, 1ஆவது பதிப்பு, 2011, (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L. 1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர)

vi, 278 பக்கம், விலை: ரூபா 550., அளவு: 24.5x17 சமீ.

க.பொ.த. உயர்தர, பல்கலைக்கழக மாணவர்களுக்கானது. இந்நூலில் பாடங்கள் கிரேக்க நாகரீகம், உரோம நாகரீகம், கிறீஸ்தவ நாகரீகம், இஸ்லாமிய நாகரீகம், மத்தியகால ஐரோப்பா, மடாலயங்கள், இடைக்கால பல்கலைக்கழகங்கள், மானிய முறை, சிலுவை யுத்தம், மறுமலர்ச்சி, நாடுகாண் பயணம், தேசிய அரசு, கிறீஸ்தவ சமய சீர்திருத்தம், முப்பதாண்டுகால யுத்தம், பிரித்தானியப் பாராளுமன்ற வளர்ச்சி, கைத்தொழிற் புரட்சி, பின்னிணைப்பு என 17 அலகுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. சி.சூரியதாசன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2007-2011 காலகட்டத்தில் வரலாற்றுத் துறையில் பயின்றவர். பல்கலைக்கழகத்தின் தொல்லியல் ஆய்வு வட்டத்தின் தலைவராகவும் பணியாற்றியவர். தற்போது அரச சேவையில் இணைந்து பணியாற்றுகின்றார். (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27300).

## 944 பிரான்ஸ் தேச வரலாறு

### 16947

**பிரஞ்சுப் புரட்சி.** க.வாசுதேவன். கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 202, 340, செட்டியார் தெரு, 2ஆவது பதிப்பு, 2017, 1ஆவது பதிப்பு, 2013. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).

545 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 700., அளவு: 19x11.5 சமீ., ISBN: 978-955-9396-85-7.

ஒரு இனம் தன் அடையாளம், தன் தனித்துவம் மற்றும் தனது இறைமை மீதான அறிவியல்ரீதியான பிரக்ஞை கொண்டதால் வெடித்தது தான் பிரஞ்சுப் புரட்சியாகும். யார் வென்றார்கள்? யார் தோற்றார்கள்? எனும் கேள்விகளுக்கப்பால், இப்புரட்சி மானிட வரலாற்றின் அரசியல் அத்திவாரமான ஒரு நிகழ்வென்பது எவரும் மறக்கமுடியாத ஒன்றாகும். 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் தோற்றம்பெற்ற அனைத்து அரசியற் கோட்பாடுகளினதும் தாய்நிலம் பிரஞ்சுப் புரட்சியே என்றால் அது மிகையாகாது. எழுத்தாளர் வாசுதேவன் இந்நூலில் பிரஞ்சுப் புரட்சியின் வரலாற்றை இரண்டு பாகங்களாக வகுத்திருக்கிறார். மூன்றாவதாக ஒரு பின்னிணைப்பும் சேர்க்கப்பட்டுள்ளது. முதலாவது பகுதியில் புரட்சியின் ஆரம்பச் சூழ்நிலைகள் மற்றும் அதன் தோற்றம் பற்றியும் விபரித்து அரசனின் தப்பியோடல் வரைக்குமான விடயங்களைப் பதிவுசெய்கின்றார். இரண்டாவது பகுதியில் குடியரசின் உருவாக்கம் தொடங்கியதையும் பின்னர் அது உறுதிப் படுத்தப்படுவதற்கான புரட்சியின் பல்வேறுபட்ட அசைவுகளையும் அதன் இடர்களையும் விபரித்துள்ளார். மூன்றாவதாக றொபெஸ்பியரின் வீழ்ச்சியையடுத்த பரட்சியின் தளர்வு நிலையையும் பிற்போக்குவாத அரசியற் செயற்பாடுகளையும் அதையடுத்த அரசியற் சம்பவங்களையும் இந்நூலின் இறுதிப் பகுதியில் பதிவுசெய்துள்ளார்.

## 954 இந்திய வரலாறு

### 16948

**நவீன இந்திய வரலாறு 1707-1919.** கந்தையா அருந்தவராஜா. யாழ்ப்பாணம்: அஞ்சு வெளியீட்டகம், நல்லூர், 1ஆவது பதிப்பு, 2011. (யாழ்ப்பாணம்: அபி பதிப்பகம், கல்வியங்காடு, நல்லூர்).

(6), 276 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-955-53561-1-4.

இந்நூல் காந்தியின் முழுமையான இந்திய விடுதலைப் போராட்ட இணைவுக்கு முன்னதான இந்திய வரலாற்றினைக் குறிக்கின்ற வகையில் எழுதப்பட்டுள்ளது. இந்தியாவில் ஐரோப்பியர்கள், கர்நாடகப் போர்கள், வங்காளத்தில் ஆங்கிலேயர்களின் ஆதிக்க எழுச்சி, வரன்ஹேஸ்ரிங்ஸ் (1772-1785), பிற் இந்தியச் சட்டம், கரன்வாலிஸ் பிரபு (1786-1793), மைசூர் போர்கள், ஜோன் ஷோர் (1793-1798), வெல்லஸ்லி பிரபு (1798-1805), மராட்டியப் போர்கள், மின்ரோ பிரபு (1807-1813), ஹேஸ்ரிங்ஸ் பிரபு (1813-1823), அமெர்ஸ்ட் பிரபு (1823-1828), வில்லியம் பென்ரிங் பிரபு (1828-1835), இராஜா இரஞ்சித் சிங், சீக்கியப் போர்கள், பர்மியப் போர்கள்,

ஒக்லன்ட் பிரபு (1836-1842) எல்லன்பரோ பிரபு (1842-1844), ஹார்டிஞ்ச் பிரபு (1844-1848), டல்ஹௌசி (1848-1856), 1857இன் கிளர்ச்சி, சமுதாயச் சமய சீர்திருத்த இயக்கங்கள், 1773 பாராளுமன்ற ஒழுங்குமுறைச் சட்டம், பட்டயச் சட்டம் 1793, பட்டயச் சட்டம் 1813, பட்டயச் சட்டம் 1833, பட்டயச் சட்டம் 1853, 1858ஆம் ஆண்டின் சட்டம், மகாராணியின் அறிவிப்புப் பிரகடனம் 1858, கனிங் பிரபு (1856-1862), லோரன்ஸ் பிரபு (1864-1869), மேயோ பிரபு (1869-1872), நோர்த்புஷ்க் பிரபு (1782-1876), லிட்டன் பிரபு (1876-1880), ரிப்பன் பிரபு (1880-1884), டவ்ரின் பிரபு (1884-1888), லோரன்ஸ் டௌன் பிரபு (1888-1894), இரண்டாம் எல்ஜின் பிரபு (1894-1899), கேர்சன் பிரபு (1889-1905), இந்தியக் கவுன்சில் சட்டம் 1861, இந்தியக் கவுன்சில் சட்டம் 1892, இந்தியத் தேசிய இயக்கம், இந்தியத் தேசிய காங்கிரசின் தோற்றம், இரண்டாம் மின்ரோ (1905-1910), இரண்டாம் ஹர்டிஞ்ச் (1910-1916), மின்ரோ-மோர்லி சீர்திருத்தங்கள் (1909), மொண்டேகு-செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்கள் ஆகிய 48 அத்தியாயங்களில் இந்நூல் நவீன இந்திய வரலாற்றை விளக்குகின்றது.

### 16949

**முன்வரலாற்றுக் காலத் தமிழ்நாடு: பேராசிரியர் க.கைலாசபதி நினைவு நூல்.** கா.இந்திரபாலா (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, 1ஆவது பதிப்பு, 2020. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xiv, 264 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 850., அளவு: 23x16 சமீ., ISBN: 978-955-659-655-7.

பதினோர் ஆண்டுகளுக்கு முன் பேராசிரியர் க.கைலாசபதியின் நினைவு நூலாக Early Historic Tamil Nadu என்ற நூல் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது. அதில் அடங்கிய கட்டுரைகள் மொழிபெயர்க்கப்பட்டு (சிலவற்றில் புதிய தகவல்களுடன்) இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அத்துடன் சில புதிய கட்டுரைகளும் சேர்க்கப் பட்டுள்ளன. தற்பொழுது கீழடியில் நடைபெறும் அகழ்வாய்வின் தரவுகள் இந்நூ லுக்கு மிகவும் முக்கியமானவை. எனினும் அகழ்வாய்வு முற்றுப்பெறுமுன் அவற்றை இங்கே சேர்ப்பது முறையாகாது என்பதால் இந்நூலில் அவை சேர்க்கப் படவில்லை. முன்னுரை, பேராசிரியர் க.கைலாசபதி வாழ்க்கைக் குறிப்பு, ஆகிய வற்றுடன் ஆய்வுக் கட்டுரைகளாக பின்வரும் ஒன்பது ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளன. அடைப்புக்குறிக்குள் ஆய்வாளரின் பெயர் தரப்பட்டுள்ளது. அறிமுக உரை (கா.இந்திரபாலா), பாணர் தந்த பாடல்கள்: இலக்கிய மூலங்கள் (க.கைலாசபதி), அமணர் அளித்த அருஞ்செல்வம்: கல்வெட்டு மூலங்கள் (கா.இந்திரபாலா), தமிழ் பிராமி எழுத்து (கா.ராஜன்), தமிழ் பிராமி எழுத்துப் பொறிப்புகளில் உள்ள ஆட்பெயர்களும் தமிழகத்தின் தொடக்க வரலாறும் (எ.சுப்பராயலு), மக்களும் மொழியும் (கா.இந்திரபாலா), சமுதாய உருவாக்கம்: வெளிப்படும் தோற்றங்கள் (ராதா சம்பகலட்சுமி), சமூகமும் பொருளாதாரமும்: ஒரு மாற்று நோக்கு (கேசவன் வெளுத்தாட்டு), பிராமணரும் யாகங்களும் (வி.சிவசாமி), பிற்சேர்க்கை.

## 954.93(2) இலங்கை இனப்பிரச்சினை வரலாறு

### 16950

**அன்புள்ள ஆரியசிங்க.** செ.அன்புராசா. மன்னார்: முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2022. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).

xlii, 146 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 500., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4609-15-0.

அருட்தந்தை அன்புராசா அவர்களின் மும்மொழிகளிலும் எழுதப்பட்ட இந்த நூல் 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆரம்பமாகி இலங்கையின் தென்பகுதியை பரபரப்பாக்கிய "அரகலய" வெகுஜனப் போராட்டத்தின் பின்னணியில் தென்னிலங் கையின் ஒரு போராட்டக்கார நண்பனுக்கு எழுதப்பட்ட கடிதங்களின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளதுடன் தமிழர்களின் நியாயமான உரிமைப் போராட்டத்தை தென்னிலங்கை மக்களுக்கு மட்டுமல்லாது முழு உலகிற்கும் எடுத்துச் சொல்வ தாகவும் இந்நூல் அமைந்துள்ளது. விருதுபெற்ற ஒரு எழுத்தாளராகத் தன்னை வளர்த்துக்கொண்ட அருட்தந்தை செபமாலை அன்புராசா அவர்கள் ஈழத்தமிழ் மக்கள் பல ஆண்டுகளாகச் சிந்திய இரத்தம், வடித்த கண்ணீர், பயத்தில் உறைந்து போயிருந்த இரவுகள், பசியோடும் பட்டினியோடும் கிடந்த நாட்கள், உடலாலும் உள்ளத்தாலும் பட்ட சித்திரவதைகள், வன்புணர்வுகளாலும் வதைக்கப்பட்டதாலும் அடைந்த வலிகள்-அவமானங்கள், இழப்புகளில் தோய்ந்திருந்த தசாப்தப் பொழுதுகள் போன்றவையெல்லாம் இனியொரு பொழுதும் எவருக்கும் எத்தரப்பின ருக்கும் ஏற்படுவதற்குக் காரணமாக நம்மில் யாரும் இருந்துவிடக் கூடாது என்பதும் இதிலுள்ள முப்பது கடிதங்களையும் ஆசிரியர் எழுதுவதற்கான பிரதானமான நோக்கமாகவுள்ளது.

### 16951

**1981மே 31-ஜுன் 1 யாழ்ப்பாணத்தில் நடந்தவை- அதன் தொடர்ச்சி.** தங்க முகுந்தன். யாழ்ப்பாணம்: தங்க. முகுந்தன், 1ஆவது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).

28 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

யாழ்ப்பாண நூலக எரிப்பையொட்டிய சம்பவங்களை பதிவுசெய்யும் வகையில் ஆசிரியரால் "யாழ்ப்பாண பொதுசன நூலகம்: எரிக்கப்பட்டு 34 ஆண்டுகள் 01.06.2015: உண்மை நிகழ்வுகளின் தொகுப்பு" என்ற நூல் எழுதப்பட்டு 2015இல் வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாகக் கருதப்படும் இந்நூல் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வெ.யோகேஸ்வரன் அவர்களதும் அவரது துணைவி யாரினதும் அரசியல் கொலைகள் பற்றியும் அது தொடர்பான சில பின்னணிச் சம்பவங்கள் பற்றியும் சுருக்கமாக பதிவுசெய்கின்றது.

### 16952

**இலங்கையில் இரு மொழிகள்**. இளங்கீரன். சென்னை 17: லக்ஷ்மி பதிப்பகம், தியாகராய நகர், 1ஆவது பதிப்பு, 1950. (சென்னை 1: சுதந்திரா அச்சகம்).

viii, 72 பக்கம், விலை: இந்திய ரூபா 1.25, அளவு: 18x12 சமீ.

மொழி பிறந்த கதை, மொழியின் முக்கியத்துவம், தமிழ் மொழி, சிங்கள மொழி, இலங்கையின் இரு மொழிகள், தனிச்சிங்களச் சட்டமும் சம அந்தஸ்தும், எந்தப் பாதை? ஆகிய அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ள நூல். இந்நூலின் நோக்கம், அரசியல் மொழி சம்பந்தமாக ஏற்பட்டுள்ள பிரச்சினையை மட்டும் ஆராய்ந்து, இதற்குத் தீர்வு காண முயல்வதாகும். சுபைர் இளங்கீரன் (04.01.1927- 12.09.1996) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர் 1948 இல் எழுத்துலகில் பிரவேசித்தவர். சிறுகதை ஆசிரியர், நாடகாசிரியர், திறனாய்வாளர் எனப் பல முகங்களைக் கொண்டவர். மலேசியாவில் தினமணிப் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்த இவர் பின்னர் இலங்கையில் தொழிலாளி, ஜனவேகம் ஆகிய அரசியல் ஏடுகளின் பிரதம ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இவர் 1960களின் முற்பகுதிகளில் இலங்கையில் மரகதம் என்னும் கலை இலக்கியச் சஞ்சிகையை வெளியிட்டார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை ஸ்தாபித்தவர்களில் இவரும் ஒருவராவார். இவரது திறமைக்காக 1992 இல் முஸ்லிம் சமய கலாச்சார ராஜாங்க அமைச்சினால் விருதும், "தாஜீல் அதீப்" என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப் பட்டார்.

### 16953

**இலங்கைவாழ் தமிழ் மக்களின் வரலாறும் வாழ்வியலும்**. கா.தவபாலன் (இயற்பெயர்: காசிப்பிள்ளை தவபாலச்சந்திரன்). பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1ஆவது பதிப்பு, ஜூன் 2016. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

xiv, 66 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-43867-0-9.

மூன்று பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ள இந்நூலின் "இலங்கைவாழ் தமிழர்களின் வாழ்வியல்" என்ற முதலாவது பகுதியில், யாழ்ப்பாண மாவட்டம், மலையகம், கிழக்கு மாகாணம், வன்னியும் கிளிநொச்சியும், வன்னியின் பொருளாதாரம், வன்னியின் சமய நம்பிக்கைகள், வன்னியிற் கிராமிய வழிபாட்டு முறைகள், வன்னிப் பிரதேசக் கல்வி நிலை, வன்னிப் பிரதேசத்தின் நீர்வளம், வைத்திய வசதிகளும் வசதியீனங்களும், மன்னார் மாவட்டம் ஆகிய 11 அத்தியாயங்களில் இலங்கைத் தமிழர்களின் வாழ்வியலும் வரலாறும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. "இலங்கைவாழ் தமிழர் தொடர்பான அரசியல் நிகழ்வுகளின் சுருக்கம் 1948 தொடக்கம் இன்று வரை" என்ற இரண்டாவது பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றுதலும் சிங்களம் மட்டும் அரச கரும மொழியாதலும், டட்லி-செல்வா ஒப்பந்தம், 1972அரசியல் யாப்பும் 1977இல் பொதுத் தேர்தலும், 1978 அரசியல் யாப்பு, 1987 இலங்கை இந்திய ஒப்பந்தமும் மாகாணசபை

ஆட்சிமுறையும், திரு.விஜயதுங்க ஜனாதிபதியாதல், திருமதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறல், 2005ஆம் ஆண்டில் திரு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி ஏற்றல், 2015இல் தேசிய அரசாங்கம் அமைக்கப் பட்டு திரு. மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஜனாதிபதியாகவும் திரு றணில் விக்கிரமசிங்க அவர்கள் பிரதம அமைச்சராகவும் பதவி ஏற்றல் ஆகிய 9 அத்தியாயங் களில் இலங்கையின் அரசியல் நிகழ்வுகள் விளக்கப்பட்டுள்ளன. "வெவ்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளும் ஆட்சி முறைகளும்" என்ற மூன்றாவது பகுதியில் இந்தியா, அமெரிக்கா, முன்னாள் சோவியத் யூனியன், சுவிட்சர்லாந்து ஆகிய நான்கு நாடுகளின் அரசியலமைப்புகளும் ஆட்சி முறைகளும் விளக்கப்பட் டுள்ளன. இந்நூல் 59ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

## 16954

**தமிழா உன்னைத்தான்.** காசி. ஆனந்தன் (இயற்பெயர்: காத்தமுத்து சிவானந்தன்). கொழும்பு: படைஞர் பாசறை, 1ஆவது பதிப்பு, மார்ச் 1970. (கொழும்பு 2: அருளொளி அச்சகம்).

*(4), 24 பக்கம், விலை: 50 சதம், அளவு: 18x12 சமீ.*

படைஞர் பாசறையின் கன்னித் தமிழ் வெளியீடாக உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் உரைத் தொகுப்பு வெளிவந்துள்ளது. தமிழகத்திலும் ஈழத்திலும் கவிஞர் காசி ஆனந்தன் ஆற்றிய சொற்பொழிவுகளில் இருந்து தமிழர் எழுச்சிக்குப் பயன்படும் வகையில் அமைந்த கருத்துக்களைத் திரட்டி இந்நூல் வெளியிடப் பட்டுள்ளது. தமிழா உன்னைத்தான் விழி! எழு!, தமிழ்விழா தழல்விழா ஆகுக, தமிழ் எங்கே தமிழா?, கிளித் தமிழன், மாணவர்களே விழித்தெழுவீர்!, தமிழே தமிழே, முதுகெலும்பில்லாத கணவர், தூங்கடா தூங்கு, குடும்பக் கட்டுப்பாடு தமிழர் குலத்துக்கே கேடு, தவிக்குது பார் தமிழச் சாதியே, சொந்த அரசு தேவை, பழைய பானையை விட இழிவானதா தமிழ்?, ஒரே தமிழரா? தமிழ் அழிகிறது! தடுப்போம் வாரீர், கடலினைத் திடல் செய்வோம், தேய்ந்த தமிழா திருந்த மாட்டாயா?, காந்தி அடிகள் பாவம் கடவுளே! மொழி ஒரு கருவியா?, இஸ்லாமிய நண்பர்களே, சிங்களவருக்காகவே போராடுகிறேன், மனைவியும் வேலைக்காரியும், பொதுவுடைமைவாதிகள், போராடு ஆகிய தலைப்புகளில் இவ்வுணர்வுரைகள் இடம்பெற்றுள்ளன.

## 16955

**பன்னாட்டுக் குற்றங்கள்.** இராமநாதன் நாகமணி ஸ்ரீ ஞானேஸ்வரன். திருக்கோண மலை: ஸ்ரீராம் பதிப்பகம், 159 A, கடல்முக வீதி, 1ஆவது பதிப்பு, ஜூலை 2022. (திருக்கோணமலை: ஸ்ரீராம் பிரிண்டர்ஸ், 159A, கடல்முக வீதி).

*287 பக்கம், விலை: ரூபா 950., அளவு: 22x14.5 சமீ.*

தமிழினத்தின் நீண்டகால விடுதலைப் போராட்டம் சர்வதேச, பிராந்திய வல்லரசு களின் துணையுடன் மிக நுட்பமாக முடக்கப்பெற்றுள்ள நிலையில், போருக்குரிய ஒழுக்கவிதிகளையும் அறக் கோட்பாடுகளையும் புறந்தள்ளி, வேதனைகளும்

வலிகளும் நிரம்பிய, முறை தவறி முன்னெடுக்கப்பட்ட அந்தக் கொடூர யுத்தத்திற்கு எதிரான நியாயக் குரலை அறிவுசார்ந்து மக்கள் விழிப்புணர்விற்கு முன்வைப்பதாக இந்த நூலாக்கம் வெளிவந்திருக்கிறது. இயலுமான வகையில் விளக்கங்களுடன், எளிமையான மொழிநடையில் மக்களால் மிக இலகுவாக உள்வாங்கக்கூடிய இலக்குடன் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த ஆவணம், இனப்படுகொலைதான் நடைபெற்றது என்பதை நிருபணம் செய்வதற்காக நீதி தேடும் மக்கள் குரலை இன்னமும் புரிதலுடன் முன்னகர்த்த உதவுகின்றது. இதில் பன்னாட்டுக் குற்றங்கள் (மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க் குற்றங்கள், இனப்படுகொலை, ஆக்கிரமிப்பு), பன்னாட்டு நீதிமன்றங்களும் தீர்ப்பாயங்களும் (பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம், நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றம், நீதிக்கான பன்னாட்டு நிரந்தர நீதிமன்றம், கலப்பு நீதிமன்றங்கள், பன்னாட்டுத் தீர்ப்பாயங்கள், உசாத்துணை: விசேடமானது), நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள் (ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபை தீர்மானங்கள் (தீர்மானம் 46/1-23 மார்ச் 2021, தீர்மானம் 34/1-23 மார்ச் 2017, தீர்மானம் 30/1-01 ஒக்டோபர் 2015, தீர்மானம் S 11/1-27 மே 2009), கனடா - ஒன்ராறியோ மாகாணத்தில் நிறைவேற்றப்பட்ட தமிழினப் படுகொலை அறிவூட்டல் வார முன்மொழிவு, நிரந்தர மக்கள் தீர்ப்பாயம், இந்தியா-தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலைத் தீர்மானம், நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் 3ஆவது அமர்வு முகவுரை) ஆகிய அறிக்கைகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது.

### 16956

**மனோ இராஜசிங்கம் நினைவுரை 2012: இலங்கை நெருக்கடியில் சர்வதேசத் தலையீடுகளும் தமிழர் அரசியலின் எதிர்காலமும்.** வீ.தனபாலசிங்கம். கொழும்பு: மனோ இராஜசிங்கம் நினைவுக் குழு, 1ஆவது பதிப்பு, 2012. (அச்சக விபரம் தரப்படவில்லை).

20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

தினக்குரல் பிரதம ஆசிரியர் திரு.வீ.தனபாலசிங்கம் அவர்கள் நிகழ்த்திய நினைவுரை. மனோரஞ்சன் இராஜசிங்கம் 1950களில் பிறந்த முற்போக்குத் தீவிரவாத சந்ததியைச் சேர்ந்தவர். கொழும்பு வெஸ்லி கல்லூரியில் உயர் கல்வி பெற்று பின்னர் பிரித்தானியாவில் சசெக்ஸ் பல்கலைக் கழகத்தில் பொறியியல் துறையில் இளமாணிப் பட்டத்தையும் அபிவிருத்தியியல் துறையில் முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றவர். இங்கிலாந்தில் திரு இரத்தினசபாபதி அவர்களின் தலைமையில் 1970களில் ஈரோஸ் அமைப்பு உருவாக்கப்பட்ட வேளை அவ்வமைப்பில் இணைந்து செயற்பட்டவர். பின்னர் General Union of Eelam Students (GUES) என்ற மாணவர் அமைப்பினை உருவாக்குவதில் பங்களித்திருந்தார். ஈழமாணவர்களினால் நடத்தப்பட்ட முதலாவது பத்திரிகை எனக் கருதப்படும் Progressive Voice என்ற அரசியல் பத்திரிகையிலும் தீவிரமாக ஈடுபட்டுவந்தார். 1981இல் இலங்கை திரும்பியதும் EPRLF என்ற அமைப்பில் இணைந்து செயற்பட்டார். அதிலிருந்து 1985இல் கொள்கை முரண்பாடு காரணமாக வெளியேற்றப்பட்டார். அதன்பின்னர்

தீவிர போராட்ட அரசியலிலிருந்து விலகிய அவர் 1989இல் "மன்று" என்ற நிறுவனத்தை மட்டக்களப்பு மாவட்டத்தில் நிறுவி ஆய்வுகள், சூழல் பாதுகாப்பு விடயங்கள், உள்ளூர் அமைப்புகளின் ஆற்றல் மேம்பாட்டுக்கான திட்டங்கள் எனப் பல்வேறு சமூக நலத்திட்டங்களில் ஈடுபட்டு வந்தார். 1995இல் "விடிவானம்" என்ற வாரப் பத்திரிகையைத் தொடங்கிய இவர் பின்னர் "தினக்கதிர்" என்ற பெயரில் தினசரியாக அதனைக் கொண்டு நடத்திவந்தார். 2002இல் விடுதலைப் புலிகளால் தடைசெய்து மூடப்படும் வரை அப்பத்திரிகையை நடத்திவந்தார்.

மேலும் பார்க்க:
Through the Fire Zones: Photographs of Amarathaas in Sri Lanka's War Zones. 16352

## 954.93(3) இனங்கள், மக்கள் குழுமங்கள், இன உறவுகள்

### 16957

**உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு.** ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை-1: பகுத்தறிவுப் பாசறை, பவளக்காரத் தெரு, 1ஆவது பதிப்பு, 1948. (மெட்ராஸ்: Free Printers).

54 பக்கம், விலை: ரூபா 0-8-0., அளவு: 19.5x12 சமீ.

"கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் 14ஆம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டில் பெரிய மாறுதல்கள் உருவாகின. அக்காலத்துத் தமிழர்களது சமயமும் கொள்கைகளும் பெரிதும் ஆரியச் சார்பு அடைந்தன. இதற்குக் காரணம் தமிழர் கோயில்களை மேற்பார்த்து வந்தவர்களாகிய பார்ப்பார் எனப்பட்ட தமிழ் மக்கள் பிராமண மதத்தைத் தழுவி, சமஸ்கிருத மொழியைத் தமது சமய மொழியெனக் கொண்டமையாகும். இது இன்று கிறிஸ்துவ கத்தோலிக்கராக மாறிய தமிழர் இலத்தீன் மொழியைச் சமய மொழியாகக் கொள்வது போல்வது. பிற்காலத்தில் தமிழ் மக்கள் சிறிது சிறிதாக விழிப்படைந்தமையால் பற்பலர் பொல்லாத ஆரியக் கொள்கைகளை எதிர்க்கத் தொடங்கி வந்தனர். பேராசிரியர் சுந்தரம்பிள்ளை காலம் முதல் தமிழைப் பற்றியும் தமிழ் மொழியைப் பற்றியும் அறிவுசார்ந்து முறையான ஆராய்ச்சி தலையெடுத்தது. அக்காலம் முதல் பல அறிஞர்கள் தமிழர் வரலாற்றுண்மைகளை விளக்கிப் பல கட்டுரைகளை ஆங்கில மொழிகளில் எழுதித் திங்கள் வெளியீடுகளிலும் பிற வெளியீடுகளிலும் வெளியிட்டார்கள். அவைகளைத் தக்கமுறையில் தமிழிற்றிருப்பிப் பொது மக்கள் படிப்பதற்கு எவருமுதவவில்லை. அவற்றில் மறைந்து கிடக்கும் அறிஞரின் ஆராய்ச்சி உரைகளை இயன்றவரையில் தமிழ்ப்படுத்தி எமது நூல்களை வெளியிட்டுள்ளோம். "உலக நாகரிகத்தில் தமிழ்" என்னும் இச் சிறிய நூல் இலங்கையில் சிறந்த ஆராய்ச்சியாளராயுள்ள திரு. க.பாலசிங்கம் அவர்கள் பல ஆண்டுகளின் முன் ஆசிரியர் கலாசாலை மாணவர் முன்னிலையில் செய்த ஒரு சொற்பொழிவின் சுருக்கமாகும். இக்கட்டுரை இக்கால ஆராய்ச்சி முடிவுகளை மிகத் திருத்தமாகத் தருதல் எவருக்கும் மகிழ்ச்சி அளிக்கத்தக்கது" (ஆசிரியர் முன்னுரையில்). (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 0600).

### 16958

**எஸ்.பொன்னுத்துரை: முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும்.** *ஏ.பீர் முகம்மது. அக்கரைப்பற்று-2: பேஜஸ் புத்தக இல்லம், 117, பட்டினப்பள்ளி வீதி, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (அக்கரைப்பற்று: நியூ செலெக்ஷன் ஒப்செட் பிரின்டர்ஸ்,* C.E.B. *மின்சார நிலைய வீதி).*

*137 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN: *978-624-6047-01-6.*

*அமரர் எஸ்.பொ. அவர்களின் வாழ்வியலில் எம்மவர்களால் அதிகம் பேசப்படாத பக்கமொன்றை வெளிச்சம் போட்டுக் காட்டும் முயற்சியாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இனங்களுக்கிடையே விசுவாசமும் ஒற்றுமையும் வேண்டி நிற்கின்ற இன்றைய சமூக அரசியல் சூழலில் அவரது வாழ்வை ஆசிரியர் முன்னிலைப்படுத்தி எடுத்துக் கூறுவதற்கு முன்வந்துள்ளார். "மனித நேயமே எனது மதம்" என்ற குரலை உரத்து எழுப்பிய எஸ்.பொவின் தனித்துவ முழுமையில் முஸ்லிம் நேசிப்பின் பெரும் பின்னமொன்றைப் பேச விழைகிறது இந்நூல். பிறப்பும் திறப்பும், வழியும் மொழியும், மலையும் பனையும், படிப்பும் நடிப்பும், இருப்பும் ஒளிப்பும், பொலிவும் பொழிவும், அயலும் புயலும், உலாவும் விழாவும், பறப்பும் கறுப்பும், விழைந்ததும் விளைந்ததும், விதியும் கதியும், மனமும் மணமும், பிறையும் நிறையும், சுவையும் சூடும், களிப்பும் கழிப்பும், கட்சியும் காட்சியும், உறைப்பும் முடிப்பும் ஆகிய 17 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

### 16959

**கனடாவில் இலங்கைத் தமிழரின் வாழ்வும் வரலாறும்: ஒரு வரலாற்றுப் பதிகை.** *இளையதம்பி பாலசுந்தரம். கனடா: சுவாமி விபுலாநந்தர் தமிழியல் ஆய்வு மையம், ரொறன்ரோ, 1ஆவது பதிப்பு, 2017. (கனடா: விவேகா அச்சகம், 60,* Barbados Blvd, #6, Scarborough, Toronto*).*

*517 பக்கம், விலை: கனேடிய டொலர் 20.00, அளவு: 21.5*x*14 சமீ.,* ISBN: *978-0-9731932-3-7.*

*கனடாத் தமிழர் வருகை ஒரு வரலாற்று நோக்கு, கனடாவிற் புதிய குடிவரவாளருக்கான கல்வி வசதிகள், கனடாவிலே தமிழ்மொழியின் நிலை, கனடாவிலே தமிழ்ப் பண்பாடும் பண்பாட்டுப் பேணலும், கனடாத் தமிழ் இலக்கியமும் தமிழியல் ஆய்வுகளும், கனடாத் தமிழர் அறிவியல் பொருண்மிய மேம்பாடு, கனடாத் தமிழ் ஊடகங்களின் இயங்குநிலை, கனடாத் தமிழர் அரசியற் செயற்பாடுகள், முதியோர் வாழ்வியலும் தலைமுறை இடைவெளியும், கனடாவிற் கலை இலக்கிய பண்பாட்டு மன்றங்கள், நிறைவுரை ஆகிய பதினொரு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்புகளாக, கனடாவிலுள்ள சைவக் கோயில்கள், கத்தோலிக்கத் தமிழ் ஆராதனைத் தலங்கள், ஒன்ராரியோவில் இயங்கும் தமிழ் வானொலிகள், கனடாவில் வெளிவந்த தமிழ்ப் பத்திரிகைகள், கனடாவில் வெளிவந்த தமிழ் இதழ்கள், தமிழ் ஊடகங்கள் வெளியிட்ட நூல்கள், கனடாத் தமிழ் இணையத் தளங்கள், கனடாவில் வெளிவந்த திரைப்படங்கள்,* Mayor, Regional Counsellor, Municipal Councillor, and School Trustee Elections – Tamil Candidates *ஆகிய ஒன்பது பயனுள்ள பட்டியல்கள் இணைக்கப்பட்டுள்ளன.*

## 16960

**பண்டைக் குமரியும் பழங்குடித் தமிழரும் (தமிழர் வரலாற்று நூல்).** வீ.பரந்தாமன். *யாழ்ப்பாணம்: பண்டிதர் வீ.பரந்தாமன், 1ஆவது பதிப்பு, 1997. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(10), 26 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 20x14.5 சமீ.*

குமரிக்கண்டம் (kumari Kandam) என்பது இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள இந்தியாவின் தெற்கே இருந்ததாகக் கருதப்படும் ஒரு புராண இழந்த கண்டத்தைக் குறிக்கிறது. இது பண்டைய தமிழர் நாகரிகத்துடன் தொடர் புடைய ஒரு முக்கியமான நிலப்பகுதியாகவும் கருதப்படுகிறது. குமரிக்கண்டம், குமரி நாடு என்ற வேறு பெயர்களாலும் இப்பகுதி அழைக்கப்பட்டது. 19-ஆம் நூற்றாண்டில், ஐரோப்பிய மற்றும் அமெரிக்க அறிஞர்களின் ஒரு பகுதியினர் இலெமூரியா என்று அழைக்கப்படும் ஒரு மூழ்கிய கண்டம் இருந்திருக்கலாம் என்று ஊகித்தனர். ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா மற்றும் மடகாஸ்கர் நாடுகளுக்கு இடையே காணப்படும் புவியியல் மற்றும் பிற ஒற்றுமைகளை தொடர்பு படுத்தி விளக்க முயன்றபோது அவர்களுக்கு இச்சிந்தனை தோன்றியது. தமிழ் மறுமலர்ச்சி ஆதரவாளர்களின் ஒரு பகுதியினர் இக்கோட்பாட்டை ஏற்றுக் கொண்டனர். பண்டைய தமிழ் இலக்கியங்களில் விவரிக்கப்பட்டுள்ளபடி தங்கள் நிலப்பகுதிகளில் உலாவிய பாண்டியர்களின் புராணக்கதைகளுடன் அவர்கள் இதை இணைத்துக் கொண்டனர். பண்டைய தமிழர் நாகரிகம் இலெமுரியா கண்டத்தில் இருந்தது. அக்கண்டம் ஒரு பேரழிவு நிகழ்ந்து கடலுக்குள் சென்றது என்று இந்த எழுத்தாளர்கள் கூறுகின்றனர். 20-ஆம் நூற்றாண்டில் தமிழ் எழுத்தாளர்கள் இந்த மூழ்கிய இலெமூரியா கண்டத்தைப் பற்றி விவரித்துக் கூற “குமரிக் கண்டம்” என்ற பெயரை பயன்படுத்தினர். இவ்வறிஞர்களின் கருத்துப்படி இலெமூரியாவில் ஆட்சிசெய்த பாண்டியர்களின் காலத்தில் தமிழ் இலக்கிய கல்வியாளர்கள் உருவாக்கிய இரண்டு சங்கங்கள் இங்கு இருந்ததாக கருதப்படுகிறது. தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தின் பழங்காலத்தை நிரூபிக்க உதவும் குமரி கண்டம் தமிழர்கள் நாகரிகத்தின் தொட்டில் என அவர்கள் கூறுகின்றனர். *(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27088).*

## 16961

**பாதை கூறும் வெள்ளித்தாரகைகள்.** இலங்கை தேசிய சமாதானப் பேரவை. *கொழும்பு 6: இலங்கை தேசிய சமாதானப் பேரவை, 12/14, பலபொகுண விகாரை வீதி, 1ஆவது பதிப்பு, 2020. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

xii, *728 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15.5 சமீ.,* ISBN: *978-955-1274-96-2.*

“ஆனமடுவ அம்மம்மா” முதல் “குமாரோதய” ஈறாக எழுதப்பட்ட 107 அனுபவக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ஒரு சொட்டு இரத்தமும்

சிந்தாமல் சுதந்திரத்தினை வென்றெடுத்த இலங்கையின் தேசபக்தர்களுக்கு ஆங்கிலேயர்கள் நன்கொடையாக விட்டுச் சென்றது தெற்காசியாவிலேயே சிறந்த பொருளாதாரங்களில் ஒன்றையும் நிறைந்த பொன் இருப்பினைக்கொண்ட மாபெரும் களஞ்சியத்தினையுமே. அன்றிலிருந்து 72 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று இந்த நாடும் அதன் மக்களும் உலகத்திற்கு செலுத்திமுடிக்க முடியாத கடன் வலையில் சிக்கியுள்ளனர். இந்த இடைப்பட்ட காலத்திற்குள் சிங்களவர்களுக்கு எதிரான இரண்டு நீண்ட சிங்களவர்களின் கிளர்ச்சிகளும் சிங்களவர்களுக்கு எதிரான 30 ஆண்டுக்கால தமிழர்களின் கிளர்ச்சியும் உருவாகி, ஒரு பெரிய தேசம் அவரவர்களால் கொல்லப்பட்டது. இந்த யுத்தத்தில் இடம்பெற்ற கதைகளை விளக்குவதே அந்த சோகமான மனிதர்களின் அனுபவங்களின் இத் தொகுப்பாகும். இவை அனைத்து இனப்பிரிவுகளுக்கும் உரித்தான பல்வேறு சமூக பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அனுபவங்களாகும். "மா உருண்டை கருத்தடை மாத்திரையாகிச் செய்த கொடுமை", "காட்டு யானைகளின் தொல்லைகளும் சமய கோஷங்களும்", "நல்லிணக்கத்திற்கு முன்மாதிரியாக கிராமத்திற்கு அழைத்து வரப்பட்ட என்னுடைய தமிழ் அண்ணி", "நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாகிய சாதிக்கின் மாமா" என்பவை எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடத்தக்க சில கதைகளாகும். இத்தொகுப்புக்குக் கைகொடுத்த கதாசிரியர்கள் மத்தியில் அனைத்து இனப்பிரிவு களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மதத் தலைவர்கள், ஆசிரியர்கள், உட்பட ஆண்கள், பெண்கள் மற்றும் பல்வேறு தொழில்முனைவோரும் அடங்குகின்றனர். அவர்கள் முகம்கொடுத்த பாரிய அழிவுகள் துயரங்கள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில், எதிர்காலத்தில் இத்தகைய அழிவுகளும் துயரங்களும் ஏற்படாமல் தடுப்பதற்கு செய்யவேண்டியவை தொடர்பான பரிந்துரைகளை வழங்குவதுடன் அது தொடர்பாக சமூகம் எவ்வாறு மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதையும் அவர்கள் விவாதிக்கின்றனர்.

### 16962

**வெந்து தணியாத பூமி**. வரதன் கிருஷ்ணா. கனடா: சமாதானத்திற்கான கனேடியர்கள்-சிறீலங்கா சார்பு, 1ஆவது பதிப்பு, 2021. (யாழ்ப்பாணம்: ஜெயஸ்ரீ பிறின்டர்ஸ், பிரவுண் வீதி).

xviii, 122 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 20x14 சமீ., ISBN: 978-624-5814-00-8.

தற்போது கனடாவில் வாழும் மலையகப் பத்திரிகையாளர் வரதராஜன் அவர்கள் தான் வாழ்ந்த மண்ணையும் அங்கே நிகழ்ந்த நீண்டகால உரிமைப் போராட்டத்தையும் மறக்காது அவை தொடர்பான ஒரு முக்கிய பதிவை மேற்கொள்ளும் நோக்கில் இந்நூலை 83 அத்தியாயங்களில் எழுதியுள்ளார். நீதிக்கும் சமத்துவத்திற்குமான மலையக மக்களின் உரிமைப் போராட்டம், அதன் வரலாறு, போராட்டத்தை நியாயப்படுத்தும் வரலாற்று அரசியல் சமூகவியல் காரணிகள் என ஒரு முக்கிய பரிமாணத்தை இந்நூலின் தொனிப்பொருளாகக் கொண்டுள்ளார். அக்காலத்தில் மலையக இளைஞர்கள் போராட்டங்களில் எவ்வாறாக ஈர்க்கப்பட்டார்கள்? அவர்களது பங்களிப்பு என்ன? எத்தகைய இடர்களையும் சவால்களையும் அவர்கள் எதிர்நோக்கினார்கள்?அவர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்கள்

எவை? என்பன போன்ற பல வினாக்களுக்கு சொந்த அனுபவங்களின் வாயிலாகவும் தான் பெற்ற, அனுபவித்த வரலாற்றறிவின் தேடல் மூலமும் உண்மை நிலையை ஆவணப்படுத்தியிருக்கிறார்.

மேலும் பார்க்க:
இலங்கையில் சிங்களவர். 16977
பண்டாரம்-வன்னியனார் (கி.பி.1783-1811) வரலாறு. 16969

## 954.93(4) பிரதேச வரலாறு

### 16963

**ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளையின் யாழ்ப்பாண வைபவ கௌமுதி.** *க.வேலுப்பிள்ளை (மூலம்), ம.இரகுநாதன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: தமிழ்த்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1ஆவது பதிப்பு, 2022. (யாழ்ப்பாணம்: அன்றா பிறிண்டேர்ஸ், இல. 356A, கஸ்தூரியார் வீதி).*

*xix, 634 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-624-97806-6-8.*

*ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை (1860-1944) அவர்கள் யாழ்ப்பாணத்தில் வசாவிளான் சிற்றூரில் பிறந்தவர். "சுதேச நாட்டியம்" என்ற பத்திரிகையை 40 ஆண்டுகள் நடத்தியவர். சமூகத்தில் தான் கண்ட குறைபாடுகளையெல்லாம் துணிந்து கண்டித்து வந்தமையால் "கண்டனங் கீறக் கல்லடியான்" என்றும் "கண்டனப் புலி" என்றும் சிறப்புப் பெயர்களையும் பெற்றவர். யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்ற சரித்திர ஆராய்ச்சி நூல் 1918இல் வண.சா.ஞானப்பிரகாசர், சீ.டீ.வேலுப்பிள்ளை போதகர், ச.குமாரசுவாமி ஆகியோரின் உதவியுடன் ஜயஸ்ரீ சாரதா பீடேந்திரசாலையில் முதற்பதிப்பாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டிருந்தது. இந்நூலில் புராதன காலம் முதல் ஆங்கிலேயர் காலம் வரையிலான யாழ்ப்பாணத்தின் வரலாற்றையும், அதன் பின்னணியையும் அன்று வாழ்ந்த பெரியோர்களின் வாழ்க்கைக் குறிப்புகளையும் காணமுடிகின்றது. நூலின் பிற்பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள இடப்பெயர்கள் தொடர்பான விரிவான ஆய்வும் இடம் பெற்றுள்ளது.*

### 16964

**இடைக்காடு எம் தாயகம்: வரலாறும் வளர்ச்சியும்.** *நாராயணபிள்ளை இடைக்காடர் ஈஸ்வரன். யாழ்ப்பாணம்: வே.இளங்கோ, செயற்பாட்டாளர், இடைக்காடு இணையம், 1ஆவது பதிப்பு, 2022. (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).*

*90 பக்கம், 24 புகைப்படத் தகடுகள், வரைபடம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x18.5 சமீ.*

*யாழ்ப்பாண மாவட்டத்தில் அச்சுவேலிப் பிரதேசத்தில் உள்ள இடைக்காடு கிராமத்தின் வரலாறும் அங்கு குடியேறிய மக்களின் வாழ்வியலும் பிரதேச*

அபிவிருத்தியும் பற்றி சுவையான பல தகவல்கள் கொண்ட 58 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. வரைபடம், இடைக்காடு-எம் தாயகம், அமைவிடம், வரலாறு, வாவெட்டிமலை, Brief Biography of Late Mr. Saravanamuththu, இடைக்காட்டில் குடியமர்ந்த காலம், வையாபாடல், மாணிக்க இடைக்காடர், இடைக்காடு கிராம உருவாக்கம், அரசின் நிர்வாக நடைமுறைகளின் தோற்றம், தமிழ்நாடும் (இந்தியா) இடைக்காடும், இடைக்காட்டுடன் தொடர்புடைய ஆலயங்கள், தொழில்கள், விவசாயம், கால்நடை வளர்ப்பு, வளர்ச்சிப் பணிகள், ஆலயங்கள், புவனேஸ்வரி அம்மன் ஆலயம், மாணிக்கப் பிள்ளையார் ஆலயம், காசி விஸ்வநாதர் ஆலயம், சோதி வைரவர் ஆலயம், காளிதேவி ஆலயம், பெரியதம்பிரான் ஆலயம், கொட்டடி வைரவர் ஆலயம், பெரியநாச்சியார் ஆலயம், இந்திக்கலட்டி வைரவர் ஆலயம், கோணாவளை அன்னமார் நாச்சியார் ஆலயம், புதுச் சந்நிதி ஆலயம், கல்வி-இடைக்காடு மகாவித்தியாலயம், கலை இலக்கிய மன்றம், மாதர் சங்கமும் புவனேஸ்வரி அம்மன் முன்பள்ளியும், இடைக்காடு மக்கள் நலன்புரிச் சங்கம், இளையோர் வாழ்வியல்- சனசமூக நிலையங்கள், கலைமகள் சனசமூக நிலையம், மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையம், அரச சேவை, அஞ்சல் அலுவலகம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சந்தை, கிராமச் செயலகம்-பொதுநோக்கு மண்டபம், மடங்கள், மயானம், இயற்கைக் கிணறு, இடைக்காடு இந்துநெறிக் கழகம், கைலாயர் ஆச்சிரமம், தொல்பொருள் சான்றுகள், மரச்செக்கு, வெதுப்பகம், தனியார் அரிசி ஆலை, அருகிவரும் எம் கலாச்சார விழுமியங்கள், இடப்பெயர்வும் நாம் இழந்தவையும், நூல்களும் அதனை வெளியிட்டவர்களும், தனியார் அரைக்கும் ஆலைகள், தனியார் வர்த்தக நிலையங்கள், விவசாய இடுபொருள் நிலையங்கள், கல்வியால் உயர்ந்தோர், முதல் வாகன உரிமையாளர், சேவைகள்-வாகனங்கள் ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**16965**

**ஒரு கிராமத்தின் பக்திநெறிப் பயணம்.** எஸ்.பாலா (இயற்பெயர்: எஸ்.பாலசிங்கம்). இணுவில்: கிராமத்துச் சூரியன் வெளியீட்டகம், தியேட்டர் ஒழுங்கை, இணுவில் கிழக்கு, 1ஆவது பதிப்பு, 2021. (யாழ்ப்பாணம்: Focus அச்சகம்).

170 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 24.5x17.5 சமீ., ISBN: 978-624-98369-0-7.

கிராமத்துச் சூரியன் வெளியீட்டகத்தின் முதலாவது பிரசுரமாக இந்நூல் வெளி வந்துள்ளது. இந்நூல் கோப்பாய் தெற்கு உதயதாரகை சனசமூக நிலையத்தை அண்டிய கிராமத்தினதும் அந்தக் கிராமத்து மக்களினதும் 1848 இலிருந்து 1970கள் வரையிலான வரலாற்றைப் பதிவுசெய்ய முற்பட்டுள்ளது. இற்றைக்கு 150 வருடங்க ளுக்கு முன் அந்தக் கிராமத்தினது தொழில்வளம், கலாச்சாரப் பண்பாட்டு வாழ்வியல், அந்த வாழ்வின் அடிப்படையிலான இறை நம்பிக்கை என அக்கிரா மத்தின் ஒன்றரை நூற்றாண்டுக்கால வரலாறு இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. பதிப்புரை, ஆசியுரை, வாழ்த்துரை, அணிந்துரை, முன்னுரை, என்னுரை ஆகிய வற்றுடன் ஒரு நாட்டின் இதயம் கிராமங்கள், எனக்குள் இந்த நூல், ஆகிய அறிமுகப் பகுதிகளையடுத்து இந்நூலின் அத்தியாயங்கள் ஸ்தல வரலாறு பற்றி, எமது கிராமம், எமது கிராமத்தின் அன்றைய சாதனையாளர்கள், குடிப்பரம்பல்,

எமது கிராமத்து மக்களின் அன்றைய நிலப்பிரச்சினை, அன்றைய எமது கிராமத்தின் பண்பாட்டு வாழ்வு, எமது மக்களின் பக்தி நெறிப் பயணத்தில் திரு. கணபதி அவர்களும் திரு. கதிரன் அவர்களும், பக்தி நெறிப் பயணத்தில் திரு. கந்தர் அவர்களும் திரு. சோலையர் அவர்களும், தொடரும் பக்தி நெறிப் பயணத்தில் திரு. கந்தர் அவர்களும் திரு. சின்னத்தம்பி அவர்களும், திரு. இராசதுரை அவர்களின் காலம், வைரவர் ஆலயத்தில் திரு. பரராசசிங்கத்தின் (பேபி) வருகை, பரிபாலன சபையின் பராமரிப்பில் வைரவர் ஆலயம், எமது கிராமத்தின் பக்தி நெறிப் பயணத்தில் உருவான இன்றைய தனித் திறனாளர், முடிவுரை என்றவாறாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

## 16966

**கொட்டியாரப்பற்று வன்னிபங்கள்: கட்டுரைத் தொகுப்பு.** த.ஜீவராஜ். திருக்கோணமலை: கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 1வது பதிப்பு, 2021. (திருக்கோணமலை: ஏ.ஆர்.டிரேடர்ஸ், 82, திருஞானசம்பந்தர் வீதி).

174 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-624-6135-10-2.

திருக்கோணமலை மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு காலப் பகுதிகளுக்குரிய 22 கல்வெட்டுகளின் வாசகங்களை உள்ளடக்கியிருக்கும் இந்நூல் "கொட்டியாரப் பற்று வன்னிபங்கள்" என்ற தலைப்புடன் ஆசிரியரின் முதலாவது நூலாக வெளி வந்துள்ளது. மிக நீண்ட பாரம்பரிய வரலாற்றைக் கொண்ட திருக்கோணமலையினை சிற்றரசர்களாக ஆட்சிசெய்த வன்னிபங்கள், திருக்கோணமலையில் நிலவிய சோழராட்சி தொடர்பான தகவல்கள் மற்றும் தேவரடியார்கள், அண்ணாவிமார்கள், திருக்கோணேச்சரம் போன்ற வரலாற்று அம்சங்கள் இந்நூலில் பதிவுசெய்யப் பட்டுள்ளன. அத்துடன் அண்மையில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு களான கழனிமலைக் கல்வெட்டு, மூதூர் பட்டித்திடல் கல்வெட்டு என்பன பற்றியும் கந்தளாயில் கிடைத்த அபூர்வ துளை கொண்ட பானை பற்றியும் விபரிக் கின்ற கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்கியிருக்கிறது. திருஞான சம்பந்தரின் திருக்கோணேச்சர தேவாரப் பதிகம் தொடர்பான ஆய்வுடன் இந்நூல் நிறைவுபெறு கின்றது. இருமரபுந்துய்ய எதிர்வீரசிங்க நல்ல பூபால வன்னிபத்தின் உயில், கொட்டியாபுரத்து வன்னிபங்கள், திருக்கோணமலையில் சோழர், நங்கை சானியும் ஏழு தேவரடியார்களும், தம்பலகாமத்து அண்ணாவிமார்கள் பற்றிய ஒரு ஞாபகமீட்டல், கழனிமலைக் கல்வெட்டுகள், மூதூர் பட்டித்திடலில் நவீனயுகக் கல்லாவணங்கள், துளைகொண்ட அபூர்வ பானை கந்தளாயில் இலங்கைத் தமிழர் வரலாறு-கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும், கி.பி.1600 ஆண்டுகளில் திருக்கோணேச்சர ஆலய தரிசனம், திருஞானசம்பந்தரின் தமிழ் பக்தி இயக்கத்தில் திருக்கோணேச்சரம் ஆகிய 10 ஆக்கங்கள் வழியாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 16967

**சுவடுகள்-பாகம்1.** ஜுவைரியா ஷெரீப் (இயற்பெயர்: எம்.சி.எம்.ஷெரீப்). மூதூர்-1: அக்கரைச்சேனை கிராம அபிவிருத்திச் சங்கம், புதிய இறங்குதுறை வீதி, இணை வெளியீடு, மூதூர் 4: எம்.எம்.கே. முகம்மது பௌண்டேஷன், நொக்ஸ் வீதி,

*1ஆவது பதிப்பு, ஜுன் 2011. (திருக்கோணமலை: அஸ்ட்ரா பிரிண்டர்ஸ், 43, திருஞானசம்பந்தர் வீதி).*

*441 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 400., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-955-52948-0-5.*

*வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகப் பணியாற்றிய எம்.சி.எம்.ஷெரீப் அவர்களின் பாதச் சுவடுகள் பதிந்த அவர் பிறந்த ஊர், கற்ற பாடசாலை, பல்கலைக் கழகம், பணிபுரிந்த இடங்கள் என அவரது நினைவுத் தடங்கள் பதிந்த அனைத்தையும் இந்நூலில் ஆவணப்படுத்தியிருக்கிறார். சுமார் 50 ஆண்டுக்காலமாக அவரைச் சுற்றி இடம்பெற்ற நிகழ்வுகளின் புகைப்படங்கள் குறிப்புகளுடன் நேர்த்தியாகப் பதிவுசெய்திருக்கிறார். இலங்கையின் பாராளுமன்றம், மாகாணசபை, அரசியல் நிலைமைகளையும் வடக்கு-கிழக்கு மாகாணசபை தொடர்பாக பல அரிய தகவல்களையும் இந்நூலில் பொதிந்துவைக்கத் தவறவில்லை. நொக்ஸ் மரம் பற்றிய விளக்கம், பிறந்த மண், அக்கரைச் சேனையின் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தோற்றமும் கேணிக்காட்டில் ஒரு பள்ளிக்கூடத்தின் உதயமும், கேணிக்காட்டுப் பாடசாலை-வரலாற்றுக் குறிப்பு, அரசாங்கப் பாடசாலையாக அதன் வளர்ச்சி, அல்-ஹிலால் அதிபர்கள் பட்டியல், கேணிக்காடு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை, தி/மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரி-ஒரு வரலாற்றுக் குறிப்பு, எம்மை வளர்த்த ஆசான்கள், அல்-ஹிலாலின் பழைய மாணவர்கள், மர்ஹூம் நெ.முகம்மது காசிம், மர்ஹூமா கா.ஆமினா உம்மா, மூதூர் மத்திய கல்லூரி-ஒரு வரலாற்றுக் குறிப்பு, மூதூர் முஸ்லிம்களின் உயர் கல்வி ஒரு நோக்கு, பேராதனைப் பல்கலைக்கழகம்- வரலாறு, மூதூரின் மூத்த உலமாக்களும் நத்வதுல் உலமா அரபுக் கல்லூரியும், மூதூர்ப் பிரதேசப் பாடசாலைகளில் 1966களில் பணியாற்றிய தலைமை ஆசிரியர்களும், உதவி ஆசிரியர்களும், மர்ஹூம் எம்.ஐ.எம். நளீம் ஹாஜியார், மூதூர் பிரதேச சபையும் அதன் தலைவர்களும், மூதூர் கல்வி வட்டாரத்தின் கல்வி அதிகாரிகள், மூதூர் பிரதேச செயலகமும் அங்கு கடமை யாற்றிய அதிகாரிகளும், கலாநிதி ஏ.எம்.ஏ.அஸீஸ் - இலங்கையின் முதலாவது முஸ்லிம் சிவில் சேவையாளர், திருக்கோணமலைக் கச்சேரியும் அங்கு பணியாற்றிய அரசாங்க அதிபர்களும், வடக்குக் கிழக்கு மாகாணசபை-ஓர் அறிமுகம், கிழக்கு மாகாணசபை- ஓர் அறிமுகம், இலங்கையின் பாராளுமன்றம்- ஓர் அறிமுகம், திருக்கோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்- ஓர் அறிமுகம், இலங்கையின் பிரதம மந்திரிகள்- ஓர் அறிமுகம், இலங்கையின் ஜனாதிபதிகள்- ஓர் அறிமுகம், நான் கண்ட காத்தான்குடி, வாழ்த்துரைகள் சில ஆகிய விடயங்களை 40 அத்தியாயங்களுக்குள் உள்ளடக்கியுள்ளார்.*

### 16968

**நன்னீர் நந்திக்கடல்: வரலாற்றுப்பார்வை.** அருணா செல்லத்துரை. வவுனியா: அருணா வெளியீட்டகம், இல. 68, வைரவர் கோவில் வீதி, வைரவர் புளியங்குளம், 1ஆவது பதிப்பு, நவம்பர் 2021. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

82 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 600., அளவு: 25x18.5 சமீ., ISBN: 978-624-98397-0-0.

அறிமுகம், பெருநிலப் பரப்பு அமைப்பும் நன்னீர் ஆறுகளும், நன்னீர் நந்திக் கடலின் மேற்குக் கரை, மரங்களும் தாவரங்களும், நந்திக்கடலின் கிழக்குக் கரை, சுதேசிகளும் பல்லின மக்கள் குடியேற்றமும், வழிபாடுகள், வரலாற்றுக் காலத்தில் நந்திக்கடல், ஆங்கிலேயருடைய குறிப்புகளில் வட்டுவாகல், கரையோரப் போக்கு வரத்தும் நகர அமைப்பும், அண்மைக்கால மாற்றங்கள், நந்திக்கடல் இயற்கை ஒதுக்கிடம், முல்லைத்தீவு நகரமயமாக்கலும் நந்திக்கடலும், எதிர்பார்ப்புகள் ஆகிய 14 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 16969

**பண்டாரம்-வன்னியனார் (கி.பி.1783-1811) வரலாறு.** அருணா செல்லத்துரை. வவுனியா: அருணா வெளியீட்டகம், 68, வைரவர் கோவில் வீதி, வைரவர் புளியங் குளம், 1ஆவது பதிப்பு, 2020. (வவுனியா: கலைமகள் அச்சகம்).

vii, 96 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 400., அளவு: 22.5x15.5 சமீ., ISBN: 978-955-1347-25-3.

இன்று வன்னிப் பெருநிலப்பரப்பு எனப் பெருமையுடன் பேசப்படும், அடங்காப் பற்று-வன்னிப் பிரதேசத்தில் வன்னியனாராக கடமையாற்றிய பண்டாரம் என்பவரது வரலாறு முக்கியமானதாகும். எதிர்கால சமூகத்தின் நன்மை கருதி அவருடைய வரலாற்றை சுருக்கமாக எழுதவேண்டும் என பண்டாரம் வன்னியனார் ஆர்வலர்கள் பலர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த வரலாற்றுச் சுருக்கத்தை நூலாக ஆசிரியர் வழங்கியுள்ளார். இந்நூலில் வரலாற்றில் குறிக்கப்படும் பெயர்களின் விளக்கங்கள், அறிமுகம், அந்நியர் ஆட்சி, பண்டாரம்-வன்னியனார், உசாத்துணைகளும் ஆசிரியரின் ஏனைய நூல்களும் என ஐந்து அத்தியாயங்களாக வகுத்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 16970

**பிறந்த மண்ணில் பெற்ற சுகந்தம் பாகம் 3: மீசாலை.** செல்லையா யோகரத்தினம் (தொகுப்பாசிரியர்). கனடா: ஆதவன் வெளியீட்டகம், 771, பிரிம்லி வீதி, ஸ்காபரோ, ஒன்ராரியோ M1J 1C7, 1வது பதிப்பு, ஒகஸ்ட் 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை)

xiv, 393 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 750., இந்திய ரூபா 300., அளவு: 24x19 சமீ.

மீசாலை யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரிவில், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஒரு ஊராகும். இவ்வூரின் வடக்கு எல்லையில்

சரசாலை, மந்துவில் ஆகிய ஊர்களும், கிழக்கு எல்லையில் அல்லாரையும், தெற்கில் சங்கத்தானையும், மேற்கில் மட்டுவில், சரசாலை, கல்வயல் ஆகிய ஊர்களும் உள்ளன. கனடாவில் வாழ்ந்த அமரர் அ.பொ.செல்லையா அவர்களால் சேகரிக்கப்பட்ட மீசாலைக்கிராமம் பற்றிய பல்வேறு தகவல்களையும் அவரது மறைவின் பின்னர் துணைவியார் செல்லையா யோகரத்தினம் அவர்கள் தொகுத்துப் பதிவுசெய்து பிரதேச வரலாற்றாவணமாகத் தந்துள்ளார். எம்முடைய பொற்காலம், கோவில்கள், பாடசாலைகள், ஆதிகாலம், தமிழரசர் காலம், போர்த்துக்கேயர் (பறங்கியர்) காலம், ஒல்லாந்தர் காலம், ஆங்கிலேயர் காலம், ஈழவிடுதலைப் போராட்ட காலம், எமது எதிர்காலம், வழக்காறுகள் ஆகிய 11 அங்கங்களில் இந்நூலிலுள்ள 70 ஆக்கங்களும் பிரித்துத் தரப்பட்டுள்ளன. பின்னிணைப்பாக மீசாலையில் சூரிய வம்சத்தினர், கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல் சரிப்பட்டு வருமா? ஆகிய இரு ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. 237ஆம் பக்கத்திலிருந்து 393ஆம் பக்கம் வரை இந்நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு ‘English Version of the Naan Kanda Meesalai Sweet Memories of Mrs. Chelliah Yogaratnam” என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ளது.

## 16971

**மட்டுநகரின் இன்னுமொரு பக்கம்: தகவல் ஆவணக் கட்டுரைகள்.** அரங்கம் இரா. தவராஜா. மட்டக்களப்பு: ஆரூஷ்கர் பதிப்பகம், இல. 60, லொயிட்ஸ் அவென்யூ, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2020. (மட்டக்களப்பு: ஷெரோனி அச்சகமும் வெளியீட்டாளரும் 101 A, புதிய எல்லை வீதி).

84 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-624-96509-0-9.

மட்டக்களப்பில் மிக நீண்ட காலமாக இலக்கியம் கலை எழுத்துத்துறையில் ஈடுபட்டு, பல நூல்களையும் கட்டுரைகளையும் “அரங்கம்” எனும் சஞ்சிகை மூலமாகத் தனது எழுத்து ஆக்கங்களையும் தனது முயற்சியினால் மட்டக்களப்பில் வெளியிட்டுவந்தவர் கலாபூசணம் அரங்கம் இரா.தவராஜா அவர்கள். கலை இலக்கியத் துறையிலும் ஈடுபாடுடைய இவர் மட்டக்களப்பில் 1950ஆம் ஆண்டுகளில் மட்டக்களப்பு எவ்வாறு இருந்துள்ளது என்பதை அக்காலங்களில் காணப்பட்ட மக்களின் வாழ்க்கை முறைகள், அந்த மக்களின் தேவை என்ன என்பது தொடர்பான விடயங்களை எல்லாம் இந்த நூல்வழியாக இன்றைய தலைமுறையினருக்கு பிரதிபலித்துக் காட்டுகின்றார். ஒரு வகையில் காலக் கண்ணாடியாக இந் நூல் அமைந்துள்ளது. மட்டக்களப்பு மக்களுக்காகப் பாடுபட்ட பாதர் (Father) வெபர், ஓவியங்களும் ஓவியர்களும் (ஜனாப் எம்.ஏ.அஸீஸ் உள்ளிட்ட மண்ணின் மைந்தர்கள் பற்றி), மட்டுநகரில் கிறிஸ்தவத்தின் வளர்ச்சி, கிழக்கில் வீசிய சூறாவளி எனப் பல்வேறு விடயங்கள் இந்நூலில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

### 16972

**மாவையூர்**. *கு.கோபிராஜ். மாவிட்டபுரம்: மாவை இந்து பொதுச் சேவைக் கழகம், 1வது பதிப்பு, 2020. (யாழ்ப்பாணம்: யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை அச்சகம், இல. 38, காங்கேசன்துறை வீதி).*

xii, *134 பக்கம், விலை: ரூபா 800., அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN: *978-624-95405-0-7.*

*யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட பிரதேசமான மாவிட்டபுரத்தைச் சேர்ந்த குணரத்தினம் கோபிராஜ் எழுதிய சமூக பண்பாட்டு பிரதேச வரலாற்று நூல் இது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்த முதுமாணி கற்கை நெறியினை பூர்த்தி செய்தவர் இந்நூலாசிரியர். புனர்வாழ்வு உதவியாளராக யாழ்ப்பாண மாவட்டத்தில் பனிபுரிந்து வந்த இவர், ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக பணியாற்றி வருகிறார். மாவிட்டபுரம்- ஓர் அறிமுகம், மாவிட்டபுர கல்வி மரபு, மாவிட்டபுரத்து இந்து ஆலயங்கள் (விநாயகர் ஆலயங்கள், அம்பாள் ஆலயங்கள், வைரவர் ஆலயங்கள், ஏனைய ஆலயங்கள்), மாவிட்டபுர பிரதேச கைத்தொழில்கள்), மாவிட்டபுர பண்பாட்டுக் கோலங்கள், மாவிட்டபுரத்து ஆளுமைகள், வலிகாமம் வடக்கு பகுதிகளின் பறவைகளின் பல்வகைமையும் பண்பாடும், வலிகாமம் வடக்கின் இடப்பெயர்வு ஆகிய எட்டு பிரதான அத்தியாயங்களையும் இறுதியாக பின்னிணைப்புகளையும் கொண்டு இந்நூல் வெளிவந்துள்ளது.*

### 16973

**யாழ்ப்பாணம் பாரீர்**. *செங்கை ஆழியான் (இயற்பெயர்: க.குணராசா). யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10*A*, பிரவுண் வீதி, நீராவியடி, 1ஆவது பதிப்பு, 2015. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48* B*, புளூமெண்டால் வீதி).*

viii, *84 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 21*x*15 சமீ.,* ISBN: *978-955-1624-12-5.*

*யாழ்ப்பாணம் பற்றிய பல்வேறு தகவல்களை இந்நூலில் தொகுத்து வழங்கியிருக்கிறார். யாழ்ப்பாணம் பற்றிய வரலாற்று அறிமுகத்துடன் தொடங்கும் இந்நூலில் யாழ்ப்பாண தேசத்தின் தோற்றம், யாழ்ப்பாண வளைவு, யாழ்ப்பாணக் கோட்டை, பொதுசன நூல் நிலையம், துரையப்பா விளையாட்டரங்கு, முற்றவெளி றீகல் தியேட்டர், நினைவுக் கற்கள், வீரசிங்கம் மண்டபம், முற்றவெளி முனியப்பர் கோயில், தபாற் கந்தோர், பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், மணிக்கூட்டுக் கோபுரம், செல்வா நினைவுக்கோபுரம், பழைய மாநகர சபைக் கட்டடம், கங்காசத்திரம், சொக்கட்டான் சந்தைகள், நவீன சந்தைகளும் ஏனையனவும், யாழ்ப்பாணம் கச்சேரி, யாழ்ப்பாணம் கச்சேரி குடுக்காய் மரம், குருநகர்த் தண்ணீர்த் தாங்கி, நல்லூர்க் கந்தசுவாமி பெருங் கோயில், நல்லூர்ச் சுற்றுக் கோயில்கள், நல்லூர்ப் பூதத்தம்பி வளைவு, நல்லூர் மந்திரி மனை, யமுனா ஏரி, யாழ்ப்பாண நுண்காட்சியகம், வில்லூன்றி, யாழ்ப்பாண வீதித் தர்மம், தெரு மூடிமடம், சங்கடப் படலை, கைதடி பனை அபிவிருத்திச்சபை, கைதடி சாந்தி நிலையம், தெருவோரத்*

தெய்வங்கள், வல்லை முனியப்பர், சுட்டிபுரம் அம்மன் கோவில், மணல் காடு, புனித அந்தோணியார் தேவாலயம், வல்லிபுரக் கோயில், பல்கிளைப் பனைமரம், வெளிச்ச வீடு, மயிலியதனைக் கிடங்கு, நிலாவரைக் கிணறு, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை, நகுலேஸ்வரம், சன்னதி முருகன் கோயில், தொண்டைமானாறு, கிறிஸ்தவ தேவாலயங்கள், கந்தரோடை வரலாற்று எச்சங்கள், துர்க்கையம்மன் கோயில், வழுக்கியாறு, பறாளை விநாயகர், களைத்தோடிக் கண்ணகை, மானிப்பாய் இடிகுண்டு, காரைநகர் சிவன் கோயிலும் கசூர்னா கடற்கரையும், காரைநகர் கடற்கோட்டை, ஊருண்டி துறைமுகம் கோட்டை (ஜரில்), நயினை நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு நாகவிகாரை, அனலைதீவு ஐயனார் கோயில், அனலைதீவு நாகேஸ்வரர், நெடுந்தீவு போர்த்துகேயர் கோட்டை, நெடுந்தீவு பாவோபாப் மரம், நெடுந்தீவு குயிண்டாக் கோபுரம், நெடுந்தீவு (குதிரைகள்) காட்டுக் குதிரைகள், நெடுந்தீவு சாராப்பிட்டி ஆகிய தலைப்புகளில் பிரதேச வரலாற்றுக் குறிப்புகள் புகைப்படங்களுடன் சிறு கட்டுரை களாகத் தரப்பட்டுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 24126).

## 16974

**வட மாகாண வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்: தொகுதி 1.** பண்பாட்ட லுவல்கள் திணைக்களம் (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: பண்பாட்டலு வல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், 1ஆவது பதிப்பு, 2018, (யாழ்ப்பாணம்: எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

viii, 166 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x37 சமீ., ISBN: 978-955-7331-17-1.

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள், வடக்கு மாகாண கலாசார உத்தியோகத்தர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சியில் இத்தொகுதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்துக் கோயில்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், விகாரைகள், பள்ளிவாசல்கள், மரபுரிமையும் வரலாற்றுத் தடங்களும் ஆகிய ஐந்து பிரிவுகளாக வகுக்கப்பட்டு தேவையான தகவல்கள் சுருக்கமாகவும் வண்ணப் புகைப்படங்களுடனும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. கையடக்கப் பதிப்பாக வெளிவருமிடத்து வடபகுதிக்கு வரும் உல்லாசப் பிரயாணி களுக்கும், தாயகத்தை நாடி விடுமுறைகளில் வரும் புகலிடத் தமிழர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருந்திருக்கும். ஆயின் இந்நூல் கையடக்கப் பிரதியாகவன்றி ஏ-3 அளவில் (பெரிய அளவில்) தயாரிக்கப்பட்டுள்ளது.

## 16975

**வரலாற்று உலா.** ஆ.சி.நடராசா (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சிவத்தமிழ் மானிட விடியற் கழகம், 1ஆவது பதிப்பு, 2010. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(4), 116 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

இந்நூலில் பேராசிரியர் பரமு புஷ்பரத்தினம் எழுதிய, யாழ்ப்பாணத்தின் தொல்மரபுரிமைச் சின்னங்கள்: சில குறிப்புகள், "ஆனைக்கோட்டை" யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது பூர்வீக குடியிருப்பு மையம், வலிகாமம் - யாழ்ப்பாணத்தின் தொடக்ககால வரலாற்று மையங்கள், யாழ்ப்பாணக் கோட்டைக்குள் புராதன இந்து ஆலயங்களின் அழிபாடுகள் கண்டுபிடிப்பு, வேலணை சாட்டியில் பெருங்கற்காலப் பண்பாடு, நெடுந்தீவில் சுற்றுலாவுக்குரிய தொல்லியற் சின்னங்கள் ஆகிய கட்டுரைகளும், திருமதி சாந்தினி அருளானந்தம் எழுதிய, தமிழரது பண்பாடு பாரம்பரியத்தின் சின்னமாக விளங்கும் நல்லூர்க் கந்தன் ஆலயம், நல்லூர் நாற்றிசைக்கோயில்கள் - தமிழரின் இராசதானியை நினைவு படுத்தும் சின்னங்கள் ஆகிய கட்டுரைகளும், சசிதா குமாரதேவன் எழுதிய, ஜமுனா ஏரி - யாழ்ப்பாண அரசுகால நினைவுச்சின்னம், மந்திரிமனை - யாழ்ப்பாண அரசின் ஒர் நினைவுச்சின்னம், நல்லூர் இராசதானியின் நினைவுச் சின்னமாக கோப்பாயில் அமைந்திருந்த சங்கிலியன் கோட்டை, இயற்றாலையில் அழிவுண்டு காணப்படும் சங்கிலி மன்னன் காலக்கோட்டை, சுண்டிக்குளம் - மறக்கப்பட்டு வரும் ஒரு புராதன தொல்லியற் சுற்றுலா மையம், நல்லூர் இராசதானிக் காலத்தை நினைவுபடுத்தும் சங்கிலியன் தோப்பு, வரலாற்று நோக்கில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், யாழ்ப்பாணத்தில் அரச மரபு தோன்றி வளர்ந்த வரலாற்றைக் கலைவடிவமாகக் கூறும் நகுலேஸ்வரர் ஆலயம் ஆகிய கட்டுரைகளும், ரேணுகா சின்னராஜா எழுதிய கந்தரோடை - புராதன தொல்லியல் மையங்களுள் ஒன்று, யாழ்ப்பாணத்தில் பூர்வீக மக்கள் பயன்படுத்திய சுடுமண் கிணறுகள், ஐரோப்பியரது நினைவுச் சின்னங்களுள் ஒன்றாக அமைந்துள்ள ஊர்காவற்றுறைக் கோட்டை, வரலாற்று சுற்றுலாவிற்கான முக்கிய தொல்லியல் மையம் வல்லிபுரம் ஆகிய கட்டுரைகளும், அன்பரசி இரட்ணசிங்கம் எழுதிய, கச்சாய் துறைமுகம் வெளிச்சத்திற்கு வராத ஒரு தொல்லியல் மையம், யாழ்ப்பாண நகரின் தென்புறத்தில் அமைந்துள்ள ஒல்லாந்தர் கோட்டை ஆகிய கட்டுரைகளும், கர்ணிகா பாஸ்கர ஐயர் எழுதிய யாழ் கோட்டை முனியப்பர் ஆலயம் என்ற கட்டுரையும் உள்ளடக்கிய 23 கட்டுரைகளைக் கொண்டது. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70947).

மேலும் பார்க்க:
சேனையூர் கலம்பகம். 16538
தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு. 16271
மன்னார் சிவபூமி 16090
வரலாற்றின் பேசுபொருளாகிய நல்லூரான் செம்மணி வளைவு. 16091

### 954.93(41) ஊர்ச் சங்கங்களின் சிறப்பு மலர்கள்/ஆண்டு மலர்கள்

### 16976

**கலங்கரை விளக்கம்.** *மலர்க் குழு. ஐக்கிய இராச்சியம்: வி.சு.சாந்தமூர்த்தி, செயலாளர், நெடுந்தீவு ஒன்றியம், 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2006. (லண்டன்: பிரின்ட் டோன் அச்சகம்).*

*60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.*

*ஐக்கிய இராச்சியத்தில் இயங்கிவரும் நெடுந்தீவு ஒன்றியத்தின் வருடாந்த ஒன்றுகூடல் வெம்பிளி, புனித மைக்கல் தேவாலய மண்டபத்தில் 21.10.2006 அன்று இடம்பெற்ற வேளையில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர். வாழ்த்துரைகள், கவிதாமலர்கள், இளையோர் ஆக்கங்கள், விளம்பரங்கள் ஆகியவற்றின் மத்தியில் "நெடுந்தீவின் செழுமையைக் குலைத்த ஒல்லாந்தர் ஆட்சி" (வி.சுப்பிரமணியம், வீரகேசரி 13.3.1994) என்ற கட்டுரையும் இடம்பெற்றுள்ளது.*

# 999 இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப் படைப்புகள்

### 999 பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள்

### 16977

**இலங்கையில் சிங்களவர்.** *பக்தவத்சல பாரதி. திருச்சி மாவட்டம்: அடையாளம் வெளியீடு, 1205/1, கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621310, 1ஆவது பதிப்பு, 2016. (திருச்சி: த பாப்பிரஸ், அடையாளம் பிரஸ்).*

xviii, *189 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 160., அளவு: 22.5x15.5 சமீ.,* ISBN: *978-81-7720-244-1.*

*சிங்களம் ஸ்ரீலங்கா: உள்ளீடும் கருத்தினங்களை விளங்கிக்கொள்ளுதலும், சிங்கள இனத்துவம்: தேசமும் தேசிய இன உருவாக்கமும், சிங்களச் சாதிமுறை: இந்தியச் சாதிமுறையின் மறுபிரதியாக்கமும் இன்றைய தொடர்ச்சியும், சிங்கள உறவுமுறை: திராவிட உறவுமுறையின் நேர்த் தொடர்ச்சியும் தென்னிந்திய மரபின் தாக்கமும், சிங்களத் திருமணம்: ஆரிய மணமுறைகள் அற்றுப் போதலும் திராவிட மணமுறைகள் நிலைபேறாக்கமும், சிங்களக் கண்ணகி (பத்தினி தெய்யோ): தமிழ்ப் பௌத்தத்தின் பரவலும் சிங்கள பௌத்தவயமாக்கலும், சிங்கள முருகன் (கத்தரகம தெய்யோ): தமிழ் மரபின் தாக்கமும் சிங்கள மரபின் விரிவாக்கமும், சிங்கள மொழி: இந்தோ ஆரியமும் திராவிடமும் ஒத்திசைதல், பின்னுரை-மரபுகளின் ஊடுபரவலும் பன்மியத்தை விளங்கிக் கொள்ளுதலும் ஆகிய ஒன்பது இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70290).*

## 16978

**ஈழத்தின் அரங்க அரசியல்: பேராசிரியர் சி.மௌனகுருவை முன்வைத்து.** கி.பார்த்திபராஜா. திருப்பத்தூர் மாவட்டம் 635 851: பரிதி பதிப்பகம், 56சீ, 128, பாரத கோயில் அருகில், ஜோலார்பேட்டை, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2022. (சென்னை: துர்க்கா பிரின்டர்ஸ்).

76 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 22x15 சமீ.

பேராசிரியர் சி.மௌனகுருவை முன்வைத்து "ஈழத்தின் அரங்க அரசியலை" பேசும் சிறு முயற்சியே இந்நூல். அரை நூற்றாண்டுக்கும் மேலாக ஈழத்தின் அரங்க அசைவியக்கமாகத் திகழும் பேராசிரியர் மௌனகுரு அவர்களின் கூத்து, நாடகம், கலை இலக்கிய நோக்கு யாவற்றினும் ஊடாகக் குறுக்கும் நெடுக்குமாகப் பயணப்பட்ட தமிழ்நாட்டு இளைய நாடகக் காரனின் குறிப்புகள் இவை. மௌனகுரு அவர்களை அறிவது என்பது ஈழத்து அரங்கப் போக்கின் உயிர்த்துடிப்பு மிக்க பகுதியை அறிவதுமாகும். இதில் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களுடனான ஒரு நேர்காணல், "கூத்த யாத்திரை நான் கொண்டதும் கொடுத்ததும்" என்ற மௌனகுருவின் அரங்கியல் அனுபவம் பற்றிய நூல் குறித்த நூலாசிரியரின் மனப்பதிவுகள், பேராசிரியரின் "அரங்கியல்" என்னும் நூல் பற்றிய திறனாய்வு ஆகிய மூன்று ஆக்கங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. தமிழ்ப் பேராசிரியர்/ நாடகவியலாளரான கி.பார்த்திபராஜா, கலை இலக்கியம் அரசியல் எனப் பல தளங்களில் 40இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். தான் பணிபுரியும் திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில் "மாற்று நாடக இயக்கம்" என்னும் அமைப்பைத் தோற்றுவித்து நாடகப் பணிகளைச் செய்து வருகிறார்.

## 16979

**ஈழத்துக் கவிதை இலக்கியம்.** தெ.திருஞானமூர்த்தி. புதுக்கோட்டை மாவட்டம்: தனலட்சுமி வெளியீடு, 125/100, தாயகம், தேனப்பர் வீதி, மேலைச் சிவபுரி 622 403, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2000. (சிவகாசி 626123: சூரியா பிரின்ட் சொலூஷன்ஸ், 15/2, பி.எஸ்.ஆர். சாலை).

112 பக்கம், விலை: இந்திய ரூபா 50.00, அளவு: 22x14 சமீ.

இந்நூல் ஈழத்து நவீன கவிஞர்கள், விடுதலைக்கவி காசி ஆனந்தன், வ.ஐ.ச. ஜெயபாலனின் கவிதைகளில் கூட்டுக் குரல், எரியும் ஈழத்தில் கண்ணீரும் கனலு மாய்ச் சேரன் கவிதைகள், புரட்சிக் கவிஞர் புதுவை இரத்தினதுரை, ஈழத்துப் பெண் கவிஞர்கள், புகலிடக் கவிதைகளும் ஈழத் தமிழர்களும் ஆகிய ஏழு இயல் களில் எழுதப்பட்டுள்ளது. சமகால ஈழத்துத் தமிழ்க் கவிஞர்கள் சமூகப் பிரக்ஞை நிலையிலும், உலக நோக்கிலும் பல திறப்பட்டு நிற்கின்றனர். அத்தகைய கவிஞர் களுள் மஹாகவி முதல் சோலைக்கிளி ஈறாகவுள்ள இருபதுக்கு மேற்பட்ட கவிஞர்களின் படைப்புகளினூடாகப் பயணித்து அவர்தம் கவிதைகளில் புதைந்து கிடக்கும் பொருளாழத்தையும் நடைச் சிறப்பையும் தனித்துவத்தையும் நூலாசிரியர் இனம்கண்டு காட்டியிருக்கிறார். தமிழகத்துக்கு அயலகத் தமிழ்க் கவிதைப் போக்கை ஆழ்ந்த அக்கறையுடன் அறிமுகப்படுத்துவதன் மூலம் எரிந்து

கொண்டிருக்கும் ஈழக்களத்தில் எழுந்த கவிதைகளைத் தம் ஆய்வுக் கண்களால் அணுகிப் பார்த்திருக்கிறார். நூலாசிரியர் முனைவர் தெ.திருஞானமூர்த்தி, மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியின் இணைப்பேராசிரியராவார்.

### 16980

**ஈழம் அரங்கு-மௌனகுரு (கட்டுரைகளும் நேர்காணல்களும்).** கி.பார்த்திபராஜா (தொகுப்பாசிரியர்). திருப்பத்தூர் மாவட்டம் 635 851: பரிதி பதிப்பகம், 56சீ, 128, பாரத கோயில் அருகில், ஜோலார்பேட்டை, 1ஆவது பதிப்பு, ஜனவரி 2022. (சென்னை: துர்க்கா பிரின்டர்ஸ்).

68 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 22x15 சமீ.

பேராசிரியர் சி.மௌனகுரு ஈழத்து நாடக இயக்கத்தின் மிக முக்கியமான அசை வியக்கம். கூத்து, நாடகம், ஆய்வு, உரையாடல் எனத் தொடர்ந்து இயங்கிவரும் பேராசிரியரைக் குறித்த எழுத்தாக்கங்களைத் தொகுத்து நோக்கும் முயற்சிகளில் ஒரு பகுதியே இத்தொகுப்பு நூல். கா.சிவத்தம்பி அவர்களின் “1950 முதல் நடந்தேறியுள்ள ஈழத்துத் தமிழ் அரங்கின் வரலாற்றுப் பெருமை மிக்க வளர்ச்சியும் அந்த வரலாற்றில் மௌனகுருவுக்குள்ள இடமும்” என்ற கட்டுரையும், சமுத்திரன் என்னும் புனைபெயரில் பேராசிரியர் சண்முகரத்தினம் எழுதிய “மௌனகுருவின் கூத்த யாத்திரை கொண்டதும் கொடுத்ததும் நூல் விமர்சனம்” என்ற விமர்சனக் கட்டுரையும் முனைவர் ஞா. கோபி அவர்கள் நெறிப்படுத்திய மௌனகுரு அவர்களின் நேர்காணலும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கூத்து நாடகம், அரங்கம், மீளுருவாக்கம் ஆகிய வெளிகளில் பயணப்படும் இவ்வெழுத்தாக்கங்கள் மிகவும் கனதி மிக்கவை.

### 16981

**காந்தியும் விவேகானந்தரும்.** வெ.சாமிநாதசர்மா. கொழும்பு 11: சேமமடு பொத்தக சாலை, U.G.50, People's Park, 1வது பதிப்பு, 2018. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

v, 74 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x16 சமீ., ISBN: 978-955-685-113-7.

ஓய்வறியா உழைப்பாளியும் கர்மயோகியுமான மஹாத்மா காந்தியையும், துறவாடை அணிந்த துறவியும் ஞானவீரருமான சுவாமி விவேகானந்தரையும் ஒப்பிட்டு எழுதப்பட்ட இந்நூலில் தமிழகத்து நூலாசிரியர் வெ.சாமிநாதசர்மா தனக்கேயுரிய அழகிய தமிழ் மொழிநடையில் ஐம்பது வருஷங்களுக்கு முன், இளமையில் இருவரும், இருவரும் மகான்கள், விவேகானந்தர் ஏன் அமெரிக்கா சென்றார்?, காந்தி ஏன் ஒரு விவசாயி?, இரண்டு சக்திகள், மனிதனாயிரு, தொண்டு செய் ஆகிய எட்டு இயல்களில் ஒப்பீடு செய்திருக்கிறார். வெங்களத்தூர் சாமிநாதசர்மா 1895இல் பிறந்தவர். திரு வி.க.வின் நவசக்தி, தேசபக்தன் இதழ்களில்உதவி ஆசிரியராகப் பணியாற்றியவர். ஹிட்லர், முசொலினி, மகாத்மா காந்தி, போன்ற பிரமுகர்களின் வரலாறுகளை தமிழில் பாமர மக்களும் படித்தறியும் வகையில் எளிய நடையில் மொழிபெயர்த்து எழுதி வெளியிட்டார். இவ்வாறு சுமார் 75

நூல்கள் வரை இவர் எழுதி இன்றும் நூலகங்களில் இடம்பெற்றுவருகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70198).

## 16982

**சமுதாய சிற்பிகள்.** வெ.சாமிநாதசர்மா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1ஆவது பதிப்பு, 2018. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

(6), 74 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x16 சமீ., ISBN: 978-955-685-112-0.

இந்நூலில் ஸாக்ரட்டீஸ் (கி.மு.470-399), பிளேட்டோ (கி.மு.427-347), அரிஸ்ட் டாட்டல் (கி.மு.384-322), கன்பூஷியஸ் (கி.மு.551-479), மார்க்கஸ் அரேலியஸ் (கி.பி.121-180), அசோகன் (கி.மு.304-232) ஆகிய அறுவரின் வாழ்வும் பணிகளும் பற்றிய அறிமுகக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 69975).

## 16983

**சிங்களத் தீவினுக்கொரு சிறுகதைப் பாலம் (இலங்கைக் கதைகள்).** A.A.H.K.கோரி. சென்னை 600011: இருவாட்சி (இலக்கியத் துறைமுகம்), 41, கல்யாணசுந்தரம் தெரு, பெரம்பூர், 1வது பதிப்பு, ஏப்ரல் 2022. (சென்னை: கிளாஸிக் பிரின்டர்ஸ்).

146 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 22x14.5 சமீ.

இலங்கைப் பின்னணியில் ஆசிரியர் எழுதிய இனச்சேர்க்கை, யாழ் இனிது! யார் சொன்னது?, சின்னஞ் சிறிய தீவு ஒண்டு, சங்கம் சரணம் கச்சாமி, பத்தாயிரத்தில் ஒருவன், சிங்களத் தீவு, அம்மா எண்டால் அன்பு, ஜெய்ஹோ, மலையகத்துப் பிள்ளை, மனச் சிலிர்ப்பும் மழலைச் சிரிப்பும், புத்தம் சரணம் கச்சாமி, ஏப்ரல் இருவத்தொண்டு, சுகமானதொரு சுமை ஆகிய 13 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 70055).

## 16984

**சொல்லப்படாத சினிமா.** ப.திருநாவுக்கரசு (தொகுப்பாசிரியர்). சென்னை 600 078: நிழல், 31/48 இராணி அண்ணா நகர், கே.கே.நகர், 1ஆவது பதிப்பு, டிசம்பர் 2004. (சென்னை 05: மணிஆப்செட்).

352 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 200., அளவு: 24x18.5 சமீ.

உலக ஆவணப் படங்கள் மற்றும் 500 இந்திய தமிழ் குறும்பட ஆவணப்படங்கள் பற்றிய குறிப்புகளைக் கொண்ட இந்நூல் 300 புகைப்படங்களுடன் கூடியதொரு வரலாற்றுப் பதிவாகும். ஆவணப்படம்-அறிமுகம், உலக ஆவணப்பட வரலாறு, இந்திய ஆவணப்பட வரலாறு, இந்திய ஆவணப்பட முன்னோடிகளும் படங்களும், இந்திய கலாசார விளக்கப்படங்கள், நீதிக்காக போராடும் படங்கள், சினிமாக் காரர்களின் ஆவணப் படங்கள், ஆவணப்படத்துறையில் பெண்கள், தமிழ்

ஆவணப்படம் மற்றும் குறும்பட வரலாற்றின் தொடக்கம், தமிழக ஆவணப்படம் மற்றும் குறும்பட இயக்குநர்களும் படங்களும், குறிப்பிடத்தக்க தமிழ் குறும்பட ஆவணப்படங்கள், பிறமொழியாளர்கள் எடுத்த தமிழ்நாட்டைப் பற்றிய படங்கள், இலங்கைத் தமிழ்க் குறும்படங்கள், புலம்பெயர்ந்தோர் எடுத்த தமிழ்க் குறும்படங் கள், தமிழ் ஆவணப்படம் மற்றும் குறும்பட விழாக்கள், நியு ஜேர்சி தமிழ்க் கலைப்பட விழா குறிப்புகள், டொரண்டோ சர்வதேச குறுந்திரைப்பட விழா, விம்பம் நடத்திய லண்டன் குறும்பட விழா, இறுதியாய் சில வார்த்தைகள் ஆகிய 18 பிரிவுகளின்கீழ் இந்நூல் உலக சினிமாவின் சொல்லப்படாத பக்கங்களை பதிவுசெய்திருக்கின்றது.

## 16985

**தமிழ் மறுமலர்ச்சிச் சிந்தனையாளர்கள்.** செந்துறைமுத்து. சென்னை 600014: விசாலாட்சி நிலையம், 62/1, முத்து முதலி தெரு, இராயப்பேட்டை, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 1998. (சென்னை 14: வெற்றி அச்சகம், 91, டாக்டர் பெசன்ட் சாலை, இராயப்பேட்டை).

284 பக்கம், விலை: இந்திய ரூபா 63.00, அளவு: 18x12.5 சமீ.

தமிழகத்தைச் சேர்ந்த புலவர் செந்துறைமுத்து அவர்கள் எழுதியுள்ள இந்நூலில் மறைமலை அடிகள், ஞா.தேவநேயப் பாவாணர், கா.அப்பாத்துரையார், பாரதி தாசன், உ.வே.சாமிநாதையர், ச.சோமசுந்தரபாரதி, ந.மு.வேங்கடசாமி நாட்டார், மீனாட்சி சுந்தரம்பிள்ளை, மு.கதிரேசச் செட்டியார், திரு.வி.கலியாணசுந்தரனார், ரா.பி.சேதுப்பிள்ளை, பாண்டித்துரைத் தேவர், கா.சுப்பிரமணியபிள்ளை, வ.சுப.மாணிக்கனார், சி.என்.அண்ணாதுரை, சி.இலக்குவனார், கி.ஆ.பெ.விசுவ நாதம், வ.உ.சிதம்பரனார் ஆகியோருடன் ஈழத்தவர்களான யாழ் நூல் வித்தகர் விபுலானந்த அடிகள், பேச்சிலக்கியத் தந்தை ஆறுமுக நாவலர் ஆகியோர் பற்றிய வாழ்வும் பணிகளும் பற்றிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

## 16986

**தீயில் ஒரு தீவு.** கி.சு.கிருஷ்ணசாமி. சென்னை 600 010: சுருளி பதிப்பகம், 777, பூந்தமல்லி நெடுஞ்சாலை, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 1983. (சென்னை14: மூவேந்தர் அச்சகம்).

32 பக்கம், விலை: இந்திய ரூபா 2.00, அளவு: 19x12 சமீ.

1983 ஜுலையில் இலங்கையில் நடந்தேறிய தமிழ் இனவழிப்பின் இலக்கிய சாட்சியாக இக்கவிதைகள் அமைகின்றன. ஈழத்தமிழர்களின் துயர்கேட்டு இக்கவிஞர் தாய்த் தமிழகத்திலிருந்து வடித்த கண்ணீர்க் கவிதைகள் இவை. மாநில, மத்திய அரசுகளும் தலைவர்களும் ஒன்றுசேர்ந்து ஆற்றவேண்டிய பணிகளுக்குச் சில யோசனைகளாகவும் சில கவிதைகள் அமைந்துள்ளன. இந்நூலாசிரியரின் முதலாவது நூல் இது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 0563).

## 16987

**நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -01 (1901-1910).** நா.சு.சிதம்பரம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1ஆவது பதிப்பு, 2018. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

80 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 280., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-685-081-3.

இந்நூலாசிரியர் ஓய்வுபெற்ற இயற்பியல் ஆசிரியர். வட சென்னையில் டாக்டர் குருசாமி முதலியார் தொ.து.வே. மேல்நிலைப்பள்ளியில் 22 ஆண்டுகளாக அறிவியல், இயற்பியல் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். "அறிவியல் ஒளி" இதழில் அறிவியல் அறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறார். அவற்றிலிருந்து நோபல் பரிசுபெற்ற அறிஞர்களின் வரலாற்றை 14 தொகுதிகளில் இலங்கையில் வெளியிட்டுள்ளார். இத் தொகுதியில் வில்ஹெல்ம் கார்னாட் ராண்ட்ஜன், ஹென்ட்ரிக் ஆன்டூன் லாரன்ட்ஸ், பைடர் சீமன், ஆன்டாய்ன் ஹென்றி பெக்குரல், மரியா ஸ்க்வோடோன்ஸ்கி என்ற மேரி கியூரி, பியர் கியூரி, ஜான் ஸ்ட்ரட்- 3வது பரன் ராலே, பிலிப் எட்வர்ட் ஆன்டன் லெனார்ட், ஜோசப் ஜான் தாம்சன், ஆல்பர்ட் அப்ரஹாம் மைக்கல்சன், கேப்ரியல் லிப்மன், குஸ்ஸெல்மோ மார்க்கோனி, கார்ல் பெர்டினான்ட் பிரவுன், ஜோகன்ஸ் டிடெரிக் வான்டெர்வால்ஸ் ஆகிய 14 அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு இடம் பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70207).

## 16988

**நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -02 (1911-1923).** நா.சு.சிதம்பரம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1ஆவது பதிப்பு, 2018. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

80 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 260., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-685-081-9.

இத் தொகுதியில் வில்ஹெல்ம் கார்ல் வெர்னர் ஆட்டோ பிரிட்ஜ் பிரான்ஜ் வியன், நில்ஸ் குஸ்டாஃப் டேலன், ஹெய்க் காமர்லிங்க் ஆன்ஸ், மேக்ஸ் தியோடர் ஃபெலிஸ் வேன் லாவ், சர். வில்லியம் ஹென்றி பிராக், வில்லியம் லாரன்ஸ் பிராக், சார்லஸ் குளோவர் பர்க்லா, கார்ல் எர்னஸ்ட் லுட்விக் மார்க்ஸ் பிளாங்க், ஜோஹன்ஸ் ஸ்டார்க், சார்லஸ் எடௌவர்ட் குயில்லௌம், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், நீல்ஸ் ஹென்ட்ரிக் டேவிட் போர், இராபர்ட்ஆண்ட்ரூஸ் மில்லிகன் ஆகிய 13 அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு இடம்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70208).

### 16989

**நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -03 (1924-1935).** நா.சு.சிதம்பரம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1ஆவது பதிப்பு, 2018. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

80 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 280., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-685-082-6.

இத் தொகுதியில் கார்ல் மன்னே ஜார்ஜ் சைக்பான், ஜேம்ஸ்பிராங்க், குஸ்டாவ் லுட்விக் ஹெர்ட்ஸ், ஜீன் பாப்டிஸ்ட் பெர்ரின், ஆர்தர் ஹாலி காம்ப்டன், சார்லஸ் தாம்சன் ரீஸ் வில்சன், ஓவென் வில்லியம்ஸ் ரிச்சர்ட்சன், லூயிஸ் விக்டர் பியர் ரேமண்ட் ட்யூக் டி பிராலி, சர் சந்திரசேகர வெங்கடராமன், வெர்னர் ஹெய்சன்பர்க், எர்வின் ருடால்ஃப் ஜோசெஃப் அலெக்சாண்டர் ஸ்க்ரோடிஞ்சர், பால் அட்ரியென் மௌரிஸ் டைராக், சர் ஜேம்ஸ் சாட்விக் ஆகிய 13 அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு இடம்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70209).

### 16990

**நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -04 (1936-1949).** நா.சு.சிதம்பரம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1ஆவது பதிப்பு, 2018. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

80 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 280., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-685-083-3.

இத் தொகுதியில் விக்டர் பிரான்சிஸ் ஹெஸ், கார்ல் டி.ஆண்டெர்சன், கிளின்டன் டேவிசன், ஜார்ஜ் பேஜட் தாம்சன், என்ரிகோ பெர்மி, எர்னஸ்ட் அர்லாண்டோ லாரன்ஸ், ஓட்டோ ஸ்டெர்ன், இசிடார் ஐசக் ரபி, உல்ஃப்காங் எர்ன்ஸ்ட் பாலி, பெர்சி வில்லியம்ஸ் பிரிட்க்மென், எட்வர்ட் விக்டர் ஆப்பிள்டன், பேட்ரிக் மேநார்ட் ஸ்டுவர்ட் பிளாக்கெட், ஹிடெகி யுகாவா ஆகிய 13 அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு இடம்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70210).

### 16991

**நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -05 (1950-1957).** நா.சு.சிதம்பரம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1ஆவது பதிப்பு, 2018. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

80 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 280., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-685-084-0.

இத் தொகுதியில் செசில் ஃப்ராங்க் பவல், ஜான் டக்ளஸ் காக்கிராஃப்ட், ஏர்னஸ்ட் தாமஸ் சின்டன் வால்டன், பெலிக்ஸ் பிளாக், எட்வர்ட் மில்ஸ் பர்செல், ஃபிரிட்ஸ் செர்னைக், மேக்ஸ் பார்ன், வால்தெர் வில்ஹெல்ம் ஜியார்க் பொதே, வில்லிஸ் யூகின் லேம்ப், பாலிகார்ப் குஸ்ச், வில்லியம் ப்ராட்போர்ட் ஷாக்லே, ஜான்

பார்டீன், வால்டர் ஹௌசன் பிராட்டெய்ன், சென் நிங் ப்ராங்க்ளின் யங், சுங் டௌ லீ ஆகிய 15 அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு இடம்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70211).

## 16992

**நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -06 (1958-1964).** நா.சு.சிதம்பரம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1வது பதிப்பு, 2018. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

80 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 280., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-685-085-7.

இத் தொகுதியில் பவெல் அலெக்செயவிக் செரென்கோவ், இல்யா மிகய்லோவிக் ஃபிராங்க், இகார்ஈகௌவிக் டாம், எமிலியோ செக்ரே, ஓவென் சேம்பர்லெய்ன், டொனால்ட் ஆர்தர் கிளேசெர், இராபெர்ட் ஹோஃப்ஸ்டாடெர், ருடால்ப் லுட்விக் மோஸ்பௌர், லெவ் டேவிடோவிக் லேன்டௌ, யூகின் பால் வைனர், மரியா கோயெப்பர்ட் மேயெர், ஜோஹன்ஸ் ஹேன்ஸ் டேனியல் ஜென்சன், சார்லஸ் ஹார்ட் டௌன்ஸ், நிகோலே ஜென்னடியேவிக் பேசோவ் ஆகிய 14 அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு இடம்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70212).

## 16993

**நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -07 (1964-1972).** நா.சு.சிதம்பரம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1ஆவது பதிப்பு, 2018. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

80 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 280., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-685-086-4.

இத் தொகுதியில் அலெக்சாண்டர் மிகைலோவிக் புரொகோரோவ், சின் இடிரோ டெமோனக, ஜுலியன் ஸ்க்விங்கர், ரிச்சர்ட் பிலிப்ஸ் பெய்ன்மென், ஆல்ஃப்ரெட் காஸ்ட்லெர், ஹான்ஸ் ஆல்ப்ரெட் பெதே, லூயிஸ் வால்டர் அல்வரெஸ், முர்ரே ஜெல்-மன், ஹேன்ஸ் ஒலொஃப் கோஸ்டா அல்ஃப்வென், லூயிஸ் நீல், டென்னிஸ் கேபர், லியான் நீல் கூப்பர், இராபர்ட் ஸ்கைஃபர் ஆகிய 13 அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு இடம்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70213).

## 16994

**நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் - 08 (1973-1978).** நா.சு.சிதம்பரம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1ஆவது பதிப்பு, 2018. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

80 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 280., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-685-087-1.

இத் தொகுதியில் லியோ இஸக்கி, ஐவார் கியெவெர், பிரயன் டி.ஜோசப்சன், மார்ட்டின் ரைல், அந்தோனி ஹெவிஷ், ஆகே நீல்ஸ் போர், பென்ராய் மாட் டெல்சன், லியோ ஜேம்ஸ் ரெயின் வாட்டர், பர்ட்டன் ரிட்டர், சாமுவேல் சௌ சுங் டிங், பிலிப் வாரன் ஆண்டெர்சன், சர் நெவில் பிரான்சிஸ் மோட், ஜான் ஹேஸ்ப்ரௌக் வான்வ்ளெக், பியோட்ர் லியோனி டோவிக் கபீட்சா ஆகிய 14 அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு இடம்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70214).

### 16995

**நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -09 (1978-1983).** நா.சு.சிதம்பரம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1ஆவது பதிப்பு, 2018. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

80 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 280., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-685-088-8.

இத் தொகுதியில் அர்னோ அல்லன் பென்சியாஸ், இராபர்ட் உட்ரோ வில்சன், ஷெல்டன் க்ளேஷோ, அப்துஸ் சலாம், ஸ்டீவன் வெயின்பெர்க், ஜேம்ஸ் க்ரோனின், வால் ஃபிட்ச், நிகோலாஸ் ப்ளோயெம்பெர்கென், ஆர்தர் லெனார்ட் ஸ்காவ்லோவ், கை மேன்னே பார்ஜி சைக்பான், கென்னெத் கெட்ஸ் வில்சன், சுப்பிரமணியம் சந்திரசேகர் ஆகிய 12 அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு இடம்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70215).

### 16996

**நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -10 (1983-1988).** நா.சு.சிதம்பரம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1ஆவது பதிப்பு, 2018. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

80 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 280., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-685-089-5.

இத் தொகுதியில் வில்லியம் ஆல் ஃப்ரெட் பௌலர், கார்லோ ரப்பியா, சைமன் வேன் டெர் மீர், கிளௌஸ் வான் கிளிட்சிங், எர்னஸ்ட் ஆகஸ்ட் ஃப்ரைட்ரிக் ரஸ்கா, ஜெர்ட் பின்னிக், ஹெய்ன்ரிச் ரோரெர், ஜியார்க் பெட்நார்ஸ், கார்ல் அலெக்சாண்டர் முல்லர், லியான் மேக்ஸ் லெடெர்மன், மெல்வின் ஸ்க்வார்ட்ஸ், ஜேக் ஸ்டெயின் பெர்கெர் ஆகிய 12 அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு இடம் பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70215).

**16997**

**நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -11 (1989-1994).** நா.சு.சிதம்பரம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1ஆவது பதிப்பு, 2018. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

80 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 280., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-685-090-1.

இத் தொகுதியில் நார்மன் பாஸ்டர் ராம்சே ஜுனியர், ஹேன்ஸ் ஜியார்ஜ் டெமெல்ட், உல்ஃப் காங் பால், ஜெரூம் ஐசக் ஃப்ரைட்மன், ஹென்றி வே கென்டல், ரிச்சர்ட் எட்வர்ட் டெய்லர், பியெர் கில்லெஸ் டி ஜென்னெஸ், ஜியார்ஜெஸ் சர்பாக், ரஸ்ஸெல் ஆலன் ஹல்ஸ், ஜோசெப் ஹுடன் டெய்லர் ஜுனியர், பெர்ட்ரம் நெவில்லே பிராக்ஹவுஸ், கிளிப்போர்ட் கிளென்வுட்ஷல் ஆகிய 12 அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு இடம்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70217).

**16998**

**நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -12 (1995-1999).** நா.சு.சிதம்பரம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1ஆவது பதிப்பு, 2018. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

80 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 280., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-685-091-8.

இத் தொகுதியில் மார்ட்டின் லூயிஸ் பெர்ல், பிரெடெரிக் ரெயின்ஸ், டேவிட் மோரிஸ் லீ, டக்ளஸ் டீன் ஒஷெரஃப், இராபர்ட் கோல்மன் ரிச்சர்ட்சன், ஸ்டீவன் சூ, கிளௌட் கோஹென் டன்னௌட்ஜி, வில்லியம் டேனியல் பிலிப்ஸ், இராபர்ட் பெட்ஸ் லாப்லின், ஹார்ஸ்ட் லுட்விக் ஸ்டார்மர், டேனியல் சீ ஸ்வை, ஜெரார்டஸ்ட் ஹுப்ட் ஆகிய 12 அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு இடம்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70218).

**16999**

**நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -13 (1999-2002).** நா.சு.சிதம்பரம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1ஆவது பதிப்பு, 2018. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

80 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 280., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-685-092-5.

இத் தொகுதியில் மார்ட்டினஸ் ஜஸ்டினஸ் கோடஃப்ரைடஸ் வெல்ட்மன், ஜோர்ஸ் ஜவனோவிக் அல்பெரோவ், ஹேர்பர்ட் க்ரொமெர், ஜாக் செயின்ட் க்ளெய்ர் கில்பி, எரிக் அல்லின் கார்னெல், உலஃப் காங் கெட்டெர்லே, கார்ல் எட்வின் வைமன், ரேமண்ட் டேவிஸ் ஜுனியர், மசடோஷி கோஷிபா, ரிக்கார்டோ கயக்கோனி ஆகிய 10 அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு இடம்பெற்றுள்ளது.

*(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70219).*

### 17000

**நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் - 14 (2003-2006).** நா.சு.சிதம்பரம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1ஆவது பதிப்பு, 2018. (கொழும்பு 11: சேமமடு அச்சகம், 180/1/48, Gaswork Street).

*80 பக்கம், ஒளிப்படங்கள், விலை: ரூபா 280., அளவு: 21.5x15 சமீ.,* ISBN: *978-955-685-093-2.*

*இத் தொகுதியில் அலெக்செய் அலெக்சைவிக் அப்ரிகோசோவ், விட்டலை லாசெரெவிக் கின்ஸ்பர்க், அந்தோனி ஜேம்ஸ் லெக்கெட், டேவிட் ஜோனதான் கிராஸ், ஹக் டேவிட் பொலிட்சர், ஃப்ராங்க் வைல்செக், ராய்ஜே கிளௌபர், ஜான் லூரயிஸ் ஹால், தியோடார் உல்ஃப்காங் ஹான்ஸ், ஜான் கிராம்வெல் மேதெர், ஜார்ஜ் பிட்செரால்ட் ஸ்மூட்-3 ஆகிய 11 அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு இடம்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 70220).*

மேலும் பார்க்க:

சொல்லப்படாத சினிமா. 16984

உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாடு சிங்கப்பூர் அக்டோபர் 2011: மாநாட்டு மலர். 16448

பதினேழாம் தொகுதி முற்றிற்று

# தலைப்பு வழிகாட்டி

அக்கரைப் பச்சை. 16453
அக்காவும் தங்கையும். 16435
அக்கினி வளையம்: ஈழத்துக் கண்ணீர்க் கதைகள். 16613
அக்கினிக் குஞ்சுகள் (கவிதைகள்). 16454
அக்கினிக் குஞ்சுகள் (நாவல்). 16722
அக்கினிச் சிறகாய். 16455
அகத்தி. 16456
அகத்திய மூலம் திருமந்திரம். 16125
அகத்தியர். 16907
அகதியின் நாட்குறிப்பு. 16723
அகம் புறம். 16457
அகரம் எனது சிகரம். 16458
அகல்விழி-தரம் 1: முதலாம் தவணை. 16268
அகவைப் பா. 16459
அகஸ்தியர் இரண வைத்தியம். 16331
அகஸ்தியர் புஷ்ப ஆரூடம். 16066
அகாலத்தின் நித்தியக் கடல். 16460
அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா-தேசத்திற்கான பணியில் ஒன்பது தசாப்தங்கள். 16165
அகிலம்: வருடாந்தச் சிறப்பு மலர் (தெளிவத்தை ஜோசப் சிறப்பிதழ்) 16019
அங்குமிங்குமாய். 16032
அங்கையன் கயிலாசநாதன் (கட்டுரைத் தொகுப்பு). 16787
அசை: சிறுகதைத் தொகுப்பு. 16614
அசையும் நாணல்கள் (அசைவு-1). 16841
அண்ணல் நபிகள் அற்புத அகிலநாதர். 16166
அண்ணன் ஆமையும் தம்பி முயலும். 16431
அணுவைத் துளைத்து... 16911
அதிர்வுகள்-3. 16178
அதிர்ஸ்டம் (சிறுகதைத் தொகுப்பு). 16615
அது ஒரு அழகிய நிலாக்காலம் 16724
அந்த இசையை மட்டும் நிறுத்தாதே. 16461
அந்தரங்கம்: சிறுகதைகள். 16616
அந்நியத் தாவரங்களும் ஆக்கிரமிப்புத் தாவரங்களும். 16315
அந்நியத்தின் விலாசம். 16462
அம்மா காத்திருக்கக்கூடும்: க(வி)தை தொகுதி. 16463
அம்மாவின் பிள்ளைகள்: குறுநாவல்கள். 16725
அம்ருதாவின் புதிர் வட்டங்கள். 16617
அமரர் திரு.க.ப.சின்னராசா அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப் பட்ட நினைவுமலர். 16917
அமரர் ரோகிணி பரராஜசிங்கம் அவர்களின் சிவபதப்பேறு குறித்த 31ஆம் நாள் நினைவு மலர். 16861
அமார்க்க வாசம். 16726
அர்ஜுன் பரீக்ஷித். 16727
அரசியல் அறம் A.R.M. 16464
அரபு வசந்தம். 16206
அரிக்கன் லாம்பு: ஒரு திருநங்கையின் வாழ்க்கைப் பயணம். 16202
அரிமா நோக்கு: புதுக்கவிதை. 16465
அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்: திருக்கோபுர மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்-10.09.2021. 16109
அருஞ்சொற் களஞ்சியம். 16291
அருணகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த கந்தர்அநுபூதி மூலமும் உரையும். 16126

அருள் கலசம் 60. 16898
அருள் பொழியும் நிழல் தரும் பாதைகள். 16044
அருளப்பட்ட மீன்: கவிதைத் தொகுப்பு. 16466
அருளானந்தம் கேணிப்பித்தன்: வாழும் போதே வாழ்த்துவோம். 16924
அருளின் ஆழியான்: பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா. 16127
அரூப நிழல்கள்.16467
அல்லையூரின் அமரஞானி. 16853
அல்வாய் மனோகராக் கவிஞர்கள் கவிதைகள். 16468
அல்வாயூர்க் கவிஞர் அமரர்மு.செல்லையா அவர்களின் நினைவு மலரும் மாணவர் வெளியீடும்-மீள்பதிப்பு. 16925
அவந்திக்காவின் பள்ளிநாள். 16409
அவள் ஒரு பூங்கொத்து. 16618
அவள் புறப்பட்டு விட்டாள். 16619
அவளுக்கென்று ஒரு மனம். 16728
அழகிய உலகம். 16396
அழகியற் கல்வி அறிமுகம்: கனவாகிப்போன இசைத் தமிழ்-ஆடல் தமிழ் இலக்கு. 16367
அளவை அலம்-3: தேசிய வாசிப்பு மாத சிறப்பு மலர் 2022. 16020
அற்றைத் திங்கள்: ஆ.இரகுபதி பால ஸ்ரீதரனின் வாழ்க்கை அனுபவங்கள். 16926
அற்றைத் திங்கள்: கூத்துருவ நாடகம். 16276
அற்றைத் திங்கள்: தி.ஞானசேகரனின் வாழ்க்கை அனுபவங்கள். 16927
அறபு இலக்கிய வளர்ச்சி. 16817
அறிவாராய்ச்சி நோக்கில் இயக்கவியல் மெய்யியல் பகுப்பாய்வு முறை. 16037
அறிவியல் கதிர் 1985-1986. 16251
அறிவியல் கதைகள். 16410
அறிவுலக நிர்மாணிகள்: ஆசிரியரும் சமூகமும். 16242
அன்பின் திசைகள்: காலத்தின் ஒளியும் நிழலும் படிந்த பதிவுகள். 16033
அன்பின் விலாசம். 16469
அன்புடைய நெஞ்சம் (கவிதை நெஞ்சங்கள்). 16470
அன்புநெறி சிறப்பு இதழ்: சற்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி நினைவு மலர். 16110
அன்புள்ள ஆரியசிங்க. 16950
அன்பே சிவம்: திருமந்திரமும் திருவாசகமும் கூறும் குறுங்கதைகள். 16128
அன்னக்கிளிக்கு அஞ்சு வயசு. 16729
அனர்த்தங்களும் மனித விலங்கு நடத்தைகளும். 16314
ஆகாரமே ஆதாரம்: உணவில் சித்த மருத்துவமும் நவீன அறிவியலும்: அறிமுகம். 16333
ஆங்கிலக் கவிதைகள் ஒரு நூறு (மொழி பெயர்ப்புக் கவிதைகள்). 16588
ஆச்சியின் கொண்டையூசிகள். 16471
ஆசிரிய சிகரம் பிலிப் இராமையா: சிகரம் குறித்த சாரல் துளிகள். 16880
ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளையின் யாழ்ப்பாண வைபவ கௌமுதி. 16963
ஆண் நிற வெயில். 16472
ஆண்பால் உலகு. 16730
ஆதி மயிலிட்டி திருவருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம் மஹா கும்பாபிஷேகமலர்- 2022. 16111
ஆதுரசாலை. 16731
1675இல் மட்டக்களப்பு டச்சுக்காரரை எதிர்த்த இளஞ்சிங்கன் 16277
1981மே 31-ஜுன் 1 யாழ்ப்பாணத்தில் நடந்தவை- அதன் தொடர்ச்சி. 16951

ஆரம்பக் கல்வியில் பல்மட்டக் கற்பித்தல் பரிகாரக் கற்பித்தல் செயல்நிலை ஆய்வு. 16243

ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் முறை. 16003

ஆரோக்கிய ஆரம்: சித்த ஆயுள்வேத கட்டுரைகள். 16334

ஆவணமாக்கலும் அதன் சமூகப் பெறு மானமும். 16013

ஆளுடைய அடிகள் அருளிய திருவெம் பாவை. 16129

ஆற்றுகை 8-நாடக அரங்கியலுக்கான இதழ்: ஏப்ரல்-செப்டெம்பர் 1997. 16370

ஆற்றுகை 8-நாடக அரங்கியலுக்கான இதழ்: களம் 7, காட்சி 8, ஆனி 1999-பங்குனி 2000. 16371

ஆற்றுகை 9-நாடக அரங்கியலுக்கான இதழ்: களம் 7, காட்சி 9, ஜுலை-செப்டெம்பர் 2001. 16372

ஆற்றுகை 10-நாடக அரங்கியலுக்கான இதழ்: களம் 8, காட்சி 10, டிசம்பர் 2002. 16373

ஆற்றுகை 11-நாடக அரங்கியலுக்கான இதழ்: களம் 9, காட்சி 11, செப்டெம்பர் 2003. 16374

ஆற்றுகை 12-நாடக அரங்கியலுக்கான இதழ்: களம் 10, காட்சி 12, டிசம்பர் 2004. 16375

ஆற்றுகை 13-நாடக அரங்கியலுக்கான இதழ்: களம் 11, காட்சி 13, டிசம்பர் 2005. 16376

ஆற்றுகை 14-நாடக அரங்கியலுக்கான இதழ்: களம் 11, காட்சி 14, ஜுன் 2006. 16377

ஆற்றுகை 17-நாடக அரங்கியலுக்கான இதழ்: காட்சி 17, டிசம்பர் 2009. 16378

ஆற்றுகை 18-நாடக அரங்கியலுக்கான இதழ்: காட்சி 18, டிசம்பர் 2010. 16379

ஆற்றுகைக் கலைகளுக்கான ஆய்வு முறை யியல். 16004

ஆறாம் நிலத்திணை. 16788

ஆன்மீகத் தேடல். 16072

ஆனைக்கோடரி: ஒன்பது சிறுகதைகள். 16620

ஆஸ்திரேலிய ஆதிவாசிக் கதைகள். 16717

இங்கு வீசியது ஒரு சமாதானக் காற்று. 16621

இங்கே நிறுத்தக் கூடாது: சிறுகதைகள். 16622

இசைப்பேழை (பாகம் 01): நாதம்-சுருதி-தாளம். 16353

இசைப்பேழை (பாகம் 02): நாதம்-சுருதி-தாளம். 16354

இசையின் சமூகவியல்: ஆய்வுக்கட்டுரைகள். 16355

இசையுடன் பாட அழகான தமிழ்ப் பாடல்கள். 16473

இசையும் ஆசிரியத்துவமும். 16356

இடைக்காடு எம் தாயகம்: வரலாறும் வளர்ச்சியும். 16964

இணுவில்அருள்மிகு சிவகாமி அம்பாள் ஆலய வரலாற்றுப் பதிவுகள். 16081

இணுவில்-கோண்டாவில் காரைக்கால் சிவாலய வரலாற்றுப் பதிவுகள். 16082

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் பிள்ளைத் தமிழ். 16130

இதய தாகமே இலக்கியம். 16789

இதய ராகம். 16732

இது புதிய ஆரம்பம். 16733

இந்து ஒளி: நல்லைக் கந்தன் மகோற்சவச் சிறப்பிதழ் 2010. 16112

இந்து திருக்கோவிற் கலை. 16350

இந்து நாகரிகம்: ஓர் அறிமுகம். 16060

இந்து நாகரிகம்: பாகம் 2. 16059

இந்து மதத்தின் பரிணாமச் சிந்தனைகள். 16075

இந்துக் கற்கைகளை வளமூட்டிய மேலைத் தேசத்து ஆளுமைகளும் ஆய்வுகளும். 16061

இந்துவின் தமிழ்த்தீபம் 1999. 16252
இந்துவின் தமிழ்த்தீபம் 2001. 16253
இப் பிறவிச் சாலை. 16474
இப்போது சொல் எப்போது வந்த கவிதை நீ. 16475
இயற்கை வழி. 16338
இயற்கையும் கடவுளும். 16734
இரசாயனவியல்1001 பல்தேர்வு வினாக்கள் விடைகளுடன். 16310
இரண்டாம் மொழி தமிழ்: தரம் 6. 16301
இரண்டாம் மொழி தமிழ்: தரம் 9. 16302
இரத்த வடுக்கள். 16735
இரவின் மழையில்: ஈழக்கவி கவிதைகள். 16476
இராம ஒளி: இதழ் 7: 2022. 16257
இராமகிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் 125ஆவது ஆண்டுவிழா மலர் (1897-2022). 16254
இராமகிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி திருக்கோணமலை: வரலாறும் வளர்ச்சியும் (1897-2022). 16258
இராமலிங்கம் கவிதைகள். 16477
இரு அறிவியல் நண்பர்கள். 16623
21ம் நூற்றாண்டில் மலையகப் பெண்கள்: சவால்களும் சந்தர்ப்பங்களும். 16194
இருபது வருடங்களின் பின் தாய்நாட்டுக்குத் தப்பிய கைதியின் கதை. 16736
இருளைக் கிழித்த கோடு. 16624
இல்லற நொண்டி. 16478
இலக்கிய வெளி: தி.ஜானகிராமன் 1921-2021: நூற்றாண்டுச் சிறப்பிதழ். 16928
இலக்கியத் திறனாய்வு: வாசிக்கப்பட்ட நாவல்களிற் சில 1963-1995. 16832
இலக்கியத் தொடுவானை நோக்கி. 16929
இலக்கியம்: விசேட மலர் 2022. 16447
இலங்கை அரசியல் திட்ட வரலாறு. 16236
இலங்கை நெருக்கடியில் சர்வதேசத் தலையீடுகளும் தமிழர் அரசியலின் எதிர் காலமும். 16956
இலங்கை-மலையக "கானக நிலா" கல்லிடைக் குறிச்சியார். 16862
இலங்கைச் சமூகத்தையும் பண்பாட்டையும் வாசித்தல்: 3ஆவது தொகுதி 2000-2005. 16186
இலங்கைத் தமிழ் நாவல் இலக்கியம் ஒரு வரலாற்று திறனாய்வுநிலை நோக்கு. 16816
இலங்கைத் தமிழர் இசை வரலாறு: ஓர் அறிமுகம். 16357
இலங்கைத் தமிழர்களின் புலம்பெயர்வும் வாழ்வியலும். 16218
இலங்கைத் திணை அரசியலில் வர்க்கப் போராட்டம். 16207
இலங்கையில் இரு மொழிகள். 16952
இலங்கையில் சிங்களவர். 16977
இலங்கையின் அரசியல் முறைமை. 16205
இலங்கையின் கண்டல் காடுகள்: பிரயோசனங்களும் பிரச்சினைகளும். 16316
இலங்கையின் கிழக்குப் பிரதேச காலநிலை நீர்ச்சமநிலை. 16312
இலங்கையின் பொருளாதார நெருக்கடி: 2021/2022 வெளிப்பாடுகள், மூலங்கள் மற்றும் மீட்சி. 16232
இலங்கைவாழ் தமிழ் மக்களின் வரலாறும் வாழ்வியலும். 16953
இலண்டன் சைவ மாநாடு (பதினைந்தாவது) சிறப்புமலர். 16113
இலண்டன் சைவ மாநாடு (பதினாறாவது) சிறப்புமலர். 16114
இலண்டன் திருவருள்மிகு ஸ்ரீ சிவன் திருக்கோயில் குடமுழுக்குப் பெருவிழா சிறப்பு மலர் 2011. 16115
இலண்டனில் தமிழர் திருமணங்கள். 16273

இலை மறை காய்கள்: கவிதைத் தொகுப்பு. 16479
இவனைச் சிலுவையில் அறையுங்கள். 16480
இளஞ்சைவ மாணவ மன்றம்: பொன்விழா மலர் 2018. 16116
இளம் வளர்ந்தோர் இலக்கியம். 16395
இளவேனிற் காலத்து உரையாடல்கள். 16842
இறவாப் புகழுடையோன். 16887
இறை வலிய் ஸெய்யித் முஹம்மத் மௌலானா. 16167
இறையருள் மாலை. 16818
இறையும் இசையும். 16358
இன்பமுற வாழ்வதற்கு இலக்கியப் புதை யல்கள் (பாகம் 1). 16823
இன்னும் கொஞ்சநேரம் இருந்தால்தான் என்ன. 16854
இன்னும் பெயர் வைக்கல. 16625
இனி ஒரு விதி செய்வோம். 16855
இனி வரும் நாட்களெல்லாம். 16481
இஸ்லாமிய பத்வாக்கள் தொகுதி -2 16173
இஸ்லாமிய நாகரிகத்தின் மூலங்கள். 16168
ஈழத்தமிழ் மக்கள் போராட்டங்கள்: மார்க்சியப் பார்வை. 16208
ஈழத்தமிழர் பண்பாட்டு ஆய்வுகள். 16191
ஈழத்தில் மாட்டுவண்டிச் சவாரியும் தமிழர் மரபும். 16272
ஈழத்தின் அரங்க அரசியல். 16978
ஈழத்தின் புகழ்பூத்த பூசுரர்கள்: தமிழரசர் காலம் முதல் கி.பி. 2020 வரை. 16868
ஈழத்து ஆலயங்கள்: யாழ். மாவட்ட திருத்தலங்கள் (பாகம் 1). 16083
ஈழத்து தமிழ் இலக்கிய வளம். 16790
ஈழத்துக் கவிதை இலக்கியம். 16979
ஈழத்துச் சித்தர்கள். 16869
ஈழத்துத் தமிழ் அரசியல் நாவல் “எரிமலை”: ஒரு நுண்ணாய்வு. 16833
ஈழத்துத் தமிழ் நாடக நிறுவனங்கள். 16380
ஈழத்துத் தமிழ் வழக்கு அகராதி (தமிழ்-தமிழ்ஆங்கிலம்). 16292
ஈழத்துத் தமிழியல் மரபும் மாற்றமும். 16791
ஈழநாட்டிற் புராணபடனச் செல்வாக்கு: ஓர் ஆய்வு. 16131
ஈழம் அரங்கு-மௌனகுரு. 16980
ஈழவள நாட்டிற் பயிர் பெருக்க வாரீர். 16482
உடக்கு: பயணக் கதை. 16850
உதிரிப் பூக்கள்: கவிதைத் தொகுப்பு. 16483
உதைபந்தாட்டப் பிரச்சினைகள். 16392
உமர் ரலி புராணம் (முதல் பாகம்). 16819
உமாபதி தேவர் அருளிச்செய்த திருவருட்பயன். 16062
உயர்கல்விச் சிந்தனையை வெகுஜனமய மாக்கல். 16244
உயிர் சுமந்த சுமை. 16484
உயிரி: சிறுகதைத் தொகுதி. 16626
உயிரினங்களின் உடலினுள் ஆவி ஆன்மா என ஒன்றில்லை. 16792
உயிரோடு நானாக. 16737
உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு. 16957
உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாடு சிங்கப்பூர் அக்டோபர் 2011: மாநாட்டு மலர். 16448
உலகப் புகழ்பெற்ற பத்து உதைபந்தாட்ட வீரர்கள். 16923
உலகமயமாதல்: சில அவதானிப்புகள். 16233
உள்ளக் கிடங்கு. 16627
உள்ளக வெளியில் அரங்கு. 16381
உளக் குவிப்பும் கற்றலும். 16050
உளவியற் பாங்குகள். 16266
உளறல்கள்.16485
உறவுகள். 16628
உறுதிகொண்ட நெஞ்சினாள். 16195
உன் மொழியில் தழைக்கிறேன். 16486
ஊசல்: ஒரு தேடல். 16487

ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள்: கட்டுரைகள். 16863
ஊமையின் பாஷை. 16629
ஊருக்குத் திரும்பணும்: சிறுகதைத் தொகுப்பு. 16630
ஊற்றெடுத்த உணர்வுகள்: கவிதைகள். 16488
எக்ஸைல். 16894
எங்கட கதைகள். 16631
எங்கள் மண்ணும் இந்த நாட்களும்: ஒரு கவிதா நிகழ்வு. 16489
எஞ்சியிருக்கும் சிறகுகளால் பறத்தல். 16490
எண்ணம் போல் வாழ்க்கை. 16237
எதிர்: கவிதைகள் பற்றிய கட்டுரைகள். 16834
எதிர்ப்பரசியல். 16209
எதுவாயிருப்பினும். 16491
எம் முன்னோரின் வாழ்வாதாரமும் மருத்துவமும். 16179
எமது குடும்ப சரிதம். 16856
எழுத்தின் இயங்கியல். 16793
எழுதிக் கடக்கின்ற தூரம். 16492
எழுதித் தீராப் பிரியங்கள்: புதுக்கவிதை. 16493
எழுந்து முன்னேற முடியாமல் இறுகிப் போயிருக்கும் இலங்கையின் பொருளாதாரம். 16234
எழுவோம் நிமிர்வோம் திரள்வோம். 16204
எறிகணை. 16738
என் இனிய பட்டாம்பூச்சிக்கு. 16494
என் உடல் என்னுடையதே. 16432
என் எல்லா நரம்புகளிலும். 16495
என் சுவாசக் காற்று: தன்முனைக் கவிதைகள். 16496
என் சுவாசமே: சுகாதார மேம்பாட்டு ஏடு. 16321
என் புழுதி ரசம். 16497
என்றென்றும் கைலாசபதி. 16930
என்னைச் சுற்றி ஓர் உலகம். 16632
எனக்குப் பறவை நிழல். 16498
எனக்குள் நகரும் நதி: பத்திரிகைப் பத்திகள். 16034
எனக்கென்றிருந்த இடங்களில். 16499
எஸ்.பொன்னுத்துரை: முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும். 16958
எஸ்.ரி.ஆர். நினைத்ததை முடித்தவர். 16904
ஏர்: கவிதைத் தொகுப்பு. 16500
ஏர்முனை: ஏரோவியம்: 2022ம் ஆண்டு விவசாயச் சஞ்சிகை. 16339
ஏழிசை கீதமே. 16359
ஏழு ஸ்வரங்கள்: பாகம் 1. 16360
ஏழு ஸ்வரங்கள்: பாகம் 2. 16361
ஏழைப் பாலகர்களின் தோழன். 16888
ஐங்குறுநூறு வரிசையில் பாலை வனம். 16824
ஐரோப்பிய வரலாறு: நாகரிக காலம் முதல் கைத்தொழில் புரட்சி வரை- பாகம் 1. 16946
ஓசோன்: உயிர்க் கோளத்தைக் காக்கும் வளிமண்டலப் படை. 16223
ஒப்புரவின்றி எதிர்காலம் இல்லை 16073
ஒரு கிராமத்தின் பக்திநெறிப் பயணம். 16965
ஒரு கிராமம் மாறுகிறது. 16739
ஒரு கூடை குறும்பூ (குறும்பாக்கள்). 16501
ஒரு திராட்சைக் கொடி தேம்பி அழுகிறது. 16502
ஒரு துண்டு வானம் நிறைய நிலா: வடிவழகையன் கவிதைகள். 16503
ஒரு தேசிய எழுச்சி. 16740
ஒரு தோட்டத்தின் கதை. 16633
ஒரு நானும் இன்னும் ஒரு நானும். 16504
ஒரு பிடி அரிசி. 16634
ஒரு பிடி சாம்பல் (கவிதை). 16505
ஒரு பிடி சாம்பல் (சிறுகதைகள்). 16635
ஒரு பிடி மண். 16636
ஒரு புன்னகை போதும். 16794

ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாள்கள். 16506
ஒரு வெள்ளி ரூபாய். 16637
ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு தீர்வு. 16043
ஒற்றை யானை. 16638
ஒன்றே வேறே. 16639
ஓ தோழனே ... நந்தினி. 16931
ஓர் ஒப்பனை இல்லாத முகம். 16920
ஔவையார் அருளிச்செய்த வாக்குண்டாம். 16053
ஔவையார் அருளிய கொன்றை வேந்தன் உரையுடன். 16054
ஔவையார் அருளிய கொன்றை வேந்தன்- மூலம், பதவுரை, கருத்துரை, விளக்க வுரை. 16055
ஔன் நாயகரின் அருள்மொழிக் கோவை. 16169
கங்கைக்கரைக் காடு: சிறுவர் நாவல். 16436
கட்டுரைச் சாரல். 16795
கடல். 16604
கடல் அட்டை வளர்ப்பும் யாழ்ப்பாண தீவக கடல்களின் அரசியலும் சூழலியலும். 16231
கடலோர கவிதைகள். 16507
கடவுள் என்பது துரோகியாயிருத்தல். 16508
கடைக்குட்டியன். 16640
கடையில் பூத்த கவிதைகள். 16509
கண்கவரும் சொர்க்கம். 16170
கண்ணகி வழிபாடும் இராஜராஜேஸ்வரி வழிபாடும். 16132
கண்ணனும் தாத்தாவும். 16440
கண்ணீர் பூக்கள்: வேரற்கேணியன் கவிதைகள். 16510
கண்ணீரில் கரைகிறது காலம். 16511
கணபதி பூஜா மந்த்ர கோஷம். 16076
கணபதிப்பிள்ளை சிவராஜா: வாழ்வும் தடமும். 16881
கதாஞ்சலி: சிறுகதை நூல். 16641
கதிர் ஒளி: சோ.க.ஐயம்பிள்ளை கதிர்காமு அவர்களின் ஞாபகார்த்த வெளியீடு. 16133
கதை நேரம் கதைகள்: திரைக் கதைகள் (பாகம் 2). 16387
கதை மரம்: சிறுவர் கதைகள். 16411
கதைச் சாரல். 16642
கந்தர் அநுபூதி (எளிய நடையிலான உரையுடன் கூடியது). 16134
கருகிய காலத்தின் நாட்குறிப்புகள். 16643
கரும்பனையும் கஸ்தானியனும். 16644
கரை சேராப் படகுகள். 16645
கரைக்கு வராத அலைகள். 16512
கல்கி பிறந்தார். 16932
கல்வி மீதான நம்பிக்கைகளும் புதிய இலக்குகளும். 16245
கல்வியாளர் ஹக் சேர்: மனித நேயமிக்க ஓர் ஆளுமை. 16899
கலங்கரை-2020. 16014
கலங்கரை-2021. 16015
கலங்கரை விளக்கம். 16976
கலாச்சாரக் கவனிப்புகள். 16796
கலாபூஷணம் ஆ.மு.சி. வேலழகன்: ஓர் அறிமுகம். 16933
கலித்தொகை வசனம். 16825
கலை நிலம் 2016-2017.16449
கலை வரலாறு: முதலாவது இதழ்(தை-ஆனி 2020). 16347
கலை வரலாறு: இரண்டாவது இதழ் (ஆடி-மார்கழி 2020). 16348
கலை வாரிதி: அரியாலையூர் உருத்தி ரேஸ்வரன் அவர்களின் ஓராண்டு நினைவுமலர். 16921

கலைச்சொற் களஞ்சியம்: வணிகம், முகாமைத்துவம், கணக்கீடு, நிதி. 16346
கலைந்த தேனீக்கள். 16513
கலைப்பாரதி க.சின்னராஜன் கவிதைகள். 16514
கலைப்பேச்சு: திரை-நூல்-அரங்கு. 16797
கலையிலிருந்து வாண்மை வடிவமாக இசைக் கலை: இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டினடியான பார்வை. 16362
கவசங் களைதல். 16646
கவி கனகசபை பாடிய சதாரம் (ஊஞ்சற் கவிதை). 16605
கவி மலர். 16515
கவிஞர் செல்லையா நாகேந்திரன்: மலர்ந்ததும் உதிர்ந்ததும். 16934
கழுதை சுமந்த கவிதைகள். 16516
களிகம்பு: இலங்கை முஸ்லிம்களின் பாரம்பரிய ஆடற்கலை. 16365
கற்க கசடற: குறுநாவல். 16741
கற்பாறைகள் கண்ணீர் சிந்துகின்றன. 16647
கறி வேப்பிலைகள். 16648
கறுத்த பெண்: நான் தவறுகள் செய்ய மறுக்கப்பட்டவள். 16517
கறுப்பு ராஜா. 16742
கறுப்பும் வெள்ளையும். 16743
கனகரவியின் சிறார் பாடல்கள். 16397
கனடாவில் இலங்கைத் தமிழரின் வாழ்வும் வரலாறும். 16959
கனலி 2020 16029
கனவிலும் அழியாச் சின்னம். 16649
காக்கா கொத்திய காயம். 16798
காகிதங்கள் பேசுதடி. 16518
காட்டு நிலா: வானொலி நாடகங்கள். 16592
காட்டு வெளியிடை: கென்யப் பயணக் கட்டுரை. 16851
காணாமல் போனவன். 16650
காத்திருந்த கண்கள்: இஸ்லாமிய சிறுகதைகள். 16651
காந்தியும் விவேகானந்தரும். 16981
காப்பு: இலங்கைப்பெண் படைப்பாளர்களின் சிறுகதைகள். 16652
காம்பராவின் கடனாளிகள். 16744
காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் சாகிப்: நூற்றாண்டு விழா சிறப்பு மலர். 16889
காரை ஒளி: ஈழத்துச் சிதம்பர குடமுழுக்கு விழா மலர்: 10.07.1970. 16117
காலத்தை வென்ற கமலம். 16900
காலத்தைக் கடந்துவந்த கதைகள். 16412
காலநதி: கவிதைத் தொகுப்பு. 16519
காலமதாய் ஆகிவிட்ட கலைத்தவசி. 16913
காலனிய ஊர்காவற்றுறையின் கட்டடக் கலை. 16351
காலாறப் போனவள். 16520
காலிமுகம் 22. 16521
காளிமுத்துவின் பிரஜாவுரிமை, பழையதும் புதியதும். 16653
காற்றின் மொழி: கவிதைகள். 16522
காற்றுவெளி-கவிதைச் சிறப்பிதழ். 16450
கானல் நீர். 16745
கிராமத்து மனிதர்கள்: கிராமத்து வாழ்வின் கதைகள். 16270
கிராமத்துக் குதூகலம். 16523
கிராமப்புறச் சமையல் கலையின் நுட்பங்கள்: பகுதி 1. 16342
கிராமிய சிறுவர் அபிவிருத்தி குழுக்களுக் கான தேசிய வழிகாட்டல்கள் மற்றும் சிறுவர் உரிமைகளை மேம்படுத்துதல். 16215
கிராமிய சிறுவர் அபிவிருத்தி குழுக்களுக் கான வழிகாட்டி: வடமாகாணம். 16216
கிராமிய நடனப் பாடல்கள். 16278

கிராமிய மண்ணில் முருகன் ஆலயங்கள் மூன்று. 16084
கிராமிய விளையாட்டுக்கள். 16393
கிழக்கின் நூறு சிறுகதைகள். 16654
கிழக்கு இலங்கை சிறுகதைகள். 16655
கிளை தவறிய இலைகள். 16656
கிறுக்கிப் போட்ட காகிதங்கள். 16524
குணம் மாறும் எலிகள்: சமூக,அரசியல், பொருளாதார நாடகம். 16593
குதிரை இல்லாத ராஜகுமாரன். 16657
குதுபுகள் திலகம் யாஸீன் மௌலானா அல்-ஹாஷிமிய் (ரலி). 16870
குதுபுகள் திலகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி). 16871
குதுபுகள் திலகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) (மூன்றாம் பாகம்). 16872
குயில் குஞ்சுகள். 16658
குருநாக்கற்பதி ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானார் மீது தோத்திரப் பதிகம். 16135
குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடகங்கள் ஐந்து. 16594
குழந்தையின்மை: விளக்கங்களும் தீர்வுகளும். 16328
குழல்வாய் மொழி: இரு குறுங்காவியங்கள். 16606
குற்றங்களும் மன்னிப்பும். 16746
குறளில் உணர்ச்சி வளம்: முதற் புத்தகம். 16056
குறளின் குரல். 16525
குறிஞ்சாளினி. 16659
குறிஞ்சிச் சுவை. 16826
குறுந்தொகை பேசாத பெருந்தோகை அழகியே. 16747
குறும்பா கொஞ்சம் குறும்பா: வடிவழகையன் கவிதைகள். 16526
குறை ஒன்றும் இல்லை. 16660
கூட்டுக் களவாணி: மலையகச் சிறுகதைகள். 16661
கூத்தருவி. 16906
கெடுவாய் மனனே கதிகேள்: உளவியல்சார் கட்டுரைகள். 16038
கேக் கலையின் நுட்பங்கள். 16341
கேதீச்சர தேனமுதம்: திருக்கேதீச்சர ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா மலர். 16118
கைலைப் புராணம். 16136
கொச்சிக்கட vs கும்மிடி பூண்டி. 16748
கொட்டியாரப்பற்று வன்னிபங்கள். 16966
கொரோனா ஊரடங்கு: நானும் என்னூர் நாய்களும். 16180
கொல்லப்பட்ட எங்களது வாக்குமூலம். 16527
கொழும்புத் தமிழ்ச் சங்கம் புதிய உசாத்துணை (சட்ட) நூலகப் பிரிவின் திறப்பு விழாவின் நிகழ்ச்சித் தொகுப்பு. 16006
கொன்ஸின் சிந்தனையும் எதிர்வினையும். 16857
கோபுர தரிசனம் கோடி புண்ணியம்: ஈழத்துக் கோயில்களின் தரிசனம். 16085
கோவர்த்தனம். 16749
கோவிட் -19: பேரிடர் காலத்தில் இளையோரின் கல்வி-சவால்களும் சாத்தியங்களும். 16246
கௌரி நீதிக்கான குரல். 16892
சகல போட்டிப் பரீட்சைகளுக்குமான பொது நுண்ணறிவும் உளச்சார்பும். 16001
சங்க இலக்கியம்: பதிவும் பார்வையும். 16827

சங்கடங்களை அகற்றி மனச்சாந்தியளிக்கும் துதிப்பாடல்களும் மந்திரங்களும். 16137
சட்டநாதன் கட்டுரைகள்: பலதும் பத்தும். 16835
சதிவிரதன் சிறுகதைகள். 16662
சந்தனப் பெட்டியும் கிலாபத் கப்பலும்: குறுங்காவியங்கள். 16607
சந்தொம்மையார் வாசாப்பு: தென்மோடி நாட்டுக் கூத்து. 16279
சந்தோஷ ராகங்கள். 16240
சபரிக் காட்டின் சந்தன வரிகள். 16138
சம்ஸ்கிருதத்தில் புராதன இந்திய அறுவைச் சிகிச்சை மருத்துவம். 16332
சமம் உருவகக் கதைகள். 16663
சமுதாய சிற்பிகள். 16982
சமூகக் கல்வியும் வரலாறும்: ஆண்டு 6. 16183
சமூகக் கல்வியும் வரலாறும்: ஆண்டு 7. 16184
சமூகக் கல்வியும் வரலாறும்: ஆண்டு 8. 16185
சமூகவியல். 16181
சரித்திரம் சாகும் நாள். 16750
சனி பகவான் தோத்திரம். 16139
சாணையோடு வந்தது. 16664
சாந்தன் படைப்புலகம்: தொகுதி 1. 16843
சாயப்பட்ட விரல்கள். 16528
சாயல். 16665
சாரங்கனின் புதையல்கள். 16844
சிக்மண்ட் பிராய்டின் உளவியல் ஆய்வுகளும் போர் பற்றிய அவதானிப்புகளும். 16039
சிக்மன் பிராய்டின் கனவுகளின் விளக்கம். 16042
சிங்கள நாடகக் கலை ஆளுமைகள் (முதலாம் பாகம்). 16922
சிங்களத் தீவினுக்கொரு சிறுகதைப் பாலம். 16983
சித்த மருத்துவத்தில் சரீர அமைப்பு. 16335
சித்த வைத்தியம்: பகுதி 1. 16336
சித்தன் சரிதம். 16751
சித்திராபுத்திர நாயனார் கதை. 16140
சிதையும் வேர்கள்: கவிதை நூல். 16529
சிந்தனை செய்: சிறுவர் கதைகள். 16413
சிந்தனை-சொல்-செயல். 16259
சிந்தனைப் பூக்கள் பாகம் 4. 16045
சிந்துவின் தைப்பொங்கல். 16433
சிலங்கிரி (கதைகள்). 16666
சிவசேகரம் கவிதைகள் 1973-2020. 16530
சிவஞானபோதச் சிற்றுரை. 16063
சிவபூசை முறைகளிற் சித்தாந்த விளக்கம்: ஆன்மார்த்தம். 16077
சிவபெருமானலங்காரம் (மூலம்). 16141
சிவயோக சுவாமிகள் காட்டிய வழி. 16873
சிவயோக சுவாமிகளின் அவதார 150ஆவது ஆண்டு மலர். 16119
சிவாலயம். 16905
சிற்றினப் பொருளியல்: நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர் நடத்தை. 16221
சிறகு முளைத்து எழு.16531
சிறகு விரிக்காத பறவைகள். 16667
சிறகை விரித்துப் பறப்போம். 16414
சிறுகதை பயிற்சிப் பட்டறை: தெரிவு செய்யப்பட்ட சிறுகதைத் தொகுப்பு. 16668
சிறுவர் உரிமைகள். 16217
சிறுவர் எழுதிய சிறுவர் கதைகள். 16415
சிறுவர் கதை மலர்: இதழ்2. 16416
சிறுவர் கதைகள். 16417
சிறுவர் கதைகள்: தொகுதி 4. 16418
சிறுவர் கவிச் சோலை. 16398
சிறுவர் பா ஏடு. 16399

சிறுவர் பாடல் மலர். 16400
சிறுவர்களுக்கான சின்னஞ்சிறு கதைகள். 16419
சிறுவரின் சிந்தனைக்கு: இருபத்தியேழு சிறுகதைகள். 16420
சிறையில் ஒரு சிற்றோவியம். 16752
சீர்மியத்தில் சிறப்பு முறைகள்: உளவியல் சிகிச்சைகள். 16052
சுகவிழி-பொது சுகாதார மேம்பாட்டு ஏடு. 16322
சுசீலாவின் உயிரச்சம். 16753
சுட்ட பொன். 16532
சுடரொளி சம்பந்தன் 1935-2022. 16882
சுடுமணல். 16718
சுதந்திரக் காற்று: கவிதைகள்.16533
சுதேசிய சமூக உருவாக்கம்: பத்திரிகைகளின் பங்களிப்பு குறித்த ஓர் உசாவல். 16030
சுபாவம் (சிறுகதைகள்). 16669
சும்மா இரு. 16046
சுமை: வானொலி நாடகங்கள். 16595
சுயநிலைக்கு மீளுதல். 16051
சுருட்டு புகைத்துக் கொண்டிருந்தார் தோழர் சேகுவேரா. 16670
சுவடுகள்-பாகம் 1. 16967
சுவடுகள் 95. 16260
சுவடுகள்: புதுக்கவிதைத் தொகுதி. 16534
சுவாசித்துக் கொண்டிருக்கிறேன். 16535
சுவாமி ஞானப்பிரகாசர் நினைவுநாள் சிறப்புமலர்: 1875-1980. 16908
சூரியனுக்குக் கலியாணம்: சிறுவர்களுக்கான சின்னஞ்சிறு கதைகள். 16421
சூரியனைத் தின்றவர்கள். 16536
சூறாவளிகளுக்கு என்ன பெயர். 16754
செ.கணேசலிங்கன் நினைவுகள். 16935
செங்கை ஆழியானின் படைப்புலகம். 16936
செந்தமிழாய் வந்தவளே: கவிதைகள். 16537
செயா உலக நீதிக் கதைகள்: முதலாம் பாகம். 16422
செவ்வானச் சித்திரம்: தாலாட்டுப் பாடல்கள்-சிறுவர் இலக்கியம். 16288
சேதன முறையில் வீட்டுத்தோட்டம் செய்திடுவோம்: தொற்றா நோய்களிலிருந்து எம்மை பாதுகாப்போம். 16340
சேனையூர் கலம்பகம். 16538
சைவத் திருநெறித்தோத்திரத் திரட்டு. 16142
சைவப்பிரகாசிகை. 16079
சைவப்பிரகாசிகை: 3ம் புத்தகம். 16080
சொல்லத்தான் நினைக்கிறேன். 16755
சொல்லப்படாத சினிமா. 16984
சொல்லுங்கள் நீங்கள் மனிதர்களா? 16756
சொற்காடு: கவிதைகள். 16539
சொற்பொருள் விளக்கம் எனும் தமிழகராதி. 16293
சோதிடக் களஞ்சியம்: முதலாம் பாகம். 16067
சோதிடக் களஞ்சியம்: இரண்டாம் பாகம். 16068
சோலர்: தெருவெளி நாடக பிரதிகளின் தொகுப்பு. 16596
ஞாபகம் உதிராப் பூவென: மொழிபெயர்ப்புக் கட்டுரைகள். 16814
ஞானவேல். 16120
டாக்குத்தரின் தொணதொணப்பு (கட்டுரைகள்). 16317
டெங்கு காய்ச்சல்: டெங்கு காய்ச்சல் மற்றும் டெங்கு நோய் காவியும் அதனைக் கட்டுப்படுத்தும் முறைகளும். 16325
தகவல் ஒழுங்கமைப்பில் சுட்டியாக்கம். 16007
தகிப்பின் வாழ்வு: போரும் இடப்பெயர்வும். 16220
தங்கக்குடம். 16437
தண்ணீருக்குள் எத்தனை கண்கள். 16540

தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு. 16271
தமிழ் ஆண்டு 5. 16303
தமிழ் இலக்கண விளக்கம். 16299
தமிழ் இலக்கியம் 10-11ஆம் ஆண்டு. 16442
தமிழ்-ஓர் அறிமுகம். 16294
தமிழ் பாட்டு: சிறுவர் பாடல் தொகுப்பு. 16401
தமிழ் மறுமலர்ச்சிச் சிந்தனையாளர்கள். 16985
தமிழ் மொழியும் இலக்கியமும்-தரம் 9. 16443
தமிழ்ச் சொற்களின் பிறப்பு நெறி. 16295
தமிழ்ச் சோலை: ஊரி தமிழ் வித்தியாலய ஆண்டு விழா மலர். 16255
தமிழ்த் திரையுலகு: பிரதான போக்குகளும் மாற்று முயற்சிகளும். 16388
தமிழர் செவ்வியல் இசைப்பா வடிவங்கள். 16363
தமிழர் தகவல் 2022. 30ஆவது ஆண்டு மலர்: இளமகிழ் சுவடு. 16021
தமிழர் நாட்டுப்புற இயல் களஞ்சியம். 16275
தமிழா உன்னைத்தான். 16954
தமிழியல்-ஆய்வுகள்-பார்வைகள். 16799
தமிழிலக்கணச் சாரம்: பரீட்சை நோக்கிய இலக்கு, தரம்10-11 16300
தமிழிலக்கியக் கட்டுரைகள். 16828
தமிழீழப் புரட்டு. 16210
தமிழொளி: வன்னியூர்க் கவிராயர் சிலை திறப்புவிழா மலர். 16937
தயாளம் தரும் திருவருட் தகவல்கள்: பாகம் 1. 16078
தர்ஜுமதுல் குர்ஆன் மஅத் தஃப்ஸீரி வத் தப்ஸீர் (முதல் ஜுஸ்வு). 16171
தராசு முனைகள்: பகுதி 1. 16836
தலைமுறைகள். 16757
தவம். 16671
தவமலர்கள். 16914
தளத் திரிகோண கணித உயர்நூல். 16309
தற்காலிக முகவரியும் நிரந்தர முகவரியும். 16800
தற்கொலையின் திசைபால் பறத்தல். 16815
தனுஜா: ஈழத் திருநங்கையின் பயணமும் போராட்டமும். 16203
தாகி பிரபம். 16172
தாத்தாவின் வீடு. 16758
தாமரை அறிவும் முரண்பாடும். 16759
தாய்மடி தேடிவந்தாள் ஒரு தாமரைக்கொடி (நாடகம்). 16597
தாயகக் கனவுகள்: பிரதிகளை முன்வைத்து ஓர் உரையாடல். 16837
தாயாகிய தனித்தவம்: பெண் நோயியல் மற்றும் மகப்பேற்றியல்சார் மருத்துவக் கட்டுரைகள். 16329
தாலி: சிறுகதைகள். 16672
தாவாடிக்காரர்கள். 16673
தான் விரும்பாத் தியாகி. 16603
திக்கற்றவர்கள். 16674
திராவிடப் பிரகாசிகை. 16296
திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகள் தொகுப்பு -2. 16801
திருக்குறள் டெனிஸ் மொழிபெயர்ப்பு. 16057
திருக்கேதீச்சரம்: ஆவணப் பெட்டகம். 16086
திருக்கோணேஸ்வரம். 16087
திருநல்லூர்த் திருப்புகழ். 16143
திருமந்திர விருந்து-1. 16058
திருமறையின் வரலாற்றில் இடம்பிடித்த பெண்கள். 16070
திருமுகம் 60: மணிவிழா மலர் 2021. 16893
திரைக்கண்: சில படங்கள் சில பார்வைகள். 16389
தீந்தமிழ் வளர்த்த திருமறைக் காவலர்கள் (ஞானக் களஞ்சியம் -2). 16541
தீயில் ஒரு தீவு. 16986

தும்பளை தாவீது அடிகளின் 100ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியிடப்படும் நினைவுமலர். 16909
தும்பளை மேற்கு சந்திரப் பரமானந்தர் வம்சம். 16912
துர்க்காபுரம் மகளிர் இல்லம்: சைவ ஆன்மீக மகளிர் விடுதிச்சாலை: 40ஆவது ஆண்டு விழா சிறப்பு மலர் 2022. 16121
துலங்கல் 1: 1989-1990. 16256
துளி அல்லது துகள்: கவிதை. 16542
துறவு. 16675
துன்பத்தின் வித்து விடுதலை. 16144
தெணியானின் படைப்புகள் மீதான பார்வைகள். 16838
தெய்வத் தமிழ் தோத்திரத் திரட்டு: பன்னிரு மாத பஞ்சபுராண பாராயணத் தொகுப்பு. 16145
தெல்லித் தென்றல்-2: தேசிய வாசிப்பு மாதம் சிறப்பு மலர். 16022
தென் பொதிகைச் சந்தனமே. 16802
தென் யாழ்ப்பாணம்: இம்மண்ணில் ஆடப்பெற்ற கூத்துக்களும் செயற்பட்ட கலைஞர்களும்-ஆய்வு நூல். 16280
தேத்தண்ணி (தே கஹட்ட). 16786
தேர்ந்தெடுக்கப்பட்ட 19ம் நூற்றாண்டின் பிரஞ்சுக் கவிதைகள். 16589
தேனகச் சிறுகதைகள். 16676
தைலம்: அவுஸ்திரேலியக் கதைகள். 16677
தொடரும் உறவுகள் (பவசரண). 16719
தொல்லை தரும் தொற்றுநோய்கள். 16326
தொல்லையினும் பிறவி. 16678
தொலைதூரத்தில் தொடரும் நினைவுகள். 16679
தொலைநோக்கு: நடராசா சச்சிதானந்தன் 75. 16883
தொன்மச் சிதைவும் கலையாக்க அரசியலும் 16803
தோட்டத் தொழிலாளர் வீரப் போராட்டம். 16222
தோழியர் இருவர். 16760
தோற்றவர் வரலாறு. 16804
நக்கீரம் 2003. 16092
நக்கீரம் 2006-2007 (கணை 8). 16093
நக்கீரம் 2010 (பொறி 11). 16094
நகுலாத்தை. 16761
நஞ்சு மனிதர்: பனுவலும் ஆற்றுகையும். 16382
நடராஜப் பத்து-சிவ நாமாவழியுடன். 16146
நடிகர் திலகம் சிவாஜியும் தமிழ் சினிமாவும். 16390
நம்பிக்கையின் பாதையில்: ஒளிப்படங்களில் சுநாமி. 16311
நம்பினோர் கெடுவதில்லை: சிறுவர் சிறுகதைகள். 16423
நமக்கென்றொரு பெட்டகம்- நூல் அறிமுகமும் "கிராமிய நூலகங்களும் அவற்றின் சமகாலத் தேவைகளும்" உரையாடலும். 16008
நமது முதுநிலை ஆடலாசான், ஆற்றுகையாளர், கலைஞர் வேல் ஆனந்தன் அவர்களது கலைப் பயணப் பதிவுகள். 16919
நரி சொன்ன "யுரேகா": சிறுவர் எழுதிய சிறுவர் கதைகள். 16424
நரையன்: சிறுகதைகள். 16680
நல்லதொரு பயணம்: சிறுவர் கதைகள். 16425
நல்லூர் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ். 16147
நல்லைக்குமரன் மலர் 1993. 16095
நல்லைக்குமரன் மலர் 1994. 16096
நல்லைக்குமரன் மலர் 1995. 16097
நல்லைக்குமரன் மலர் 1996. 16098
நல்லைக்குமரன் மலர் 2000. 16099

*நல்லைக்குமரன் மலர் 2001. 16100*
*நல்லைக்குமரன் மலர் 2010. 16101*
*நல்லைக்குமரன் மலர் 2012. 16102*
*நல்லைக்குமரன் மலர் 2013. 16103*
*நல்லைக்குமரன் மலர் 2014. 16104*
*நல்லைக்குமரன் மலர் 2015. 16105*
*நல்லைக்குமரன் மலர் 2019. 16106*
*நல்லைக்குமரன் மலர் 2020. 16107*
*நல்லைக்குமரன் மலர் 2022. 16108*
*நலமுடன் வாழ்வோம். 16318*
*நவீன இந்திய வரலாறு 1707-1919. 16948*
*நவீன சர்வதேசக் கல்விச் சிந்தனைகள். 16247*
*நன்றி சொல்லும் நேரம். 16681*
*நன்னீர் நந்திக்கடல்: வரலாற்றுப்பார்வை. 16968*
*நாங்கூழ்: கவிதைகள். 16543*
*நாடகப் பள்ளியின் அரங்கியல்: உரையாடல். 16383*
*நாத்து. 16884*
*நாம் எவ்வண்ணம் வாழ்ந்தாக வேண்டும். 16047*
*நாம்: முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம்: பொன்விழா சிறப்பு மலர் 1964-2014. 16366*
*நாயகர் பன்னிரு பாடல். 16820*
*நால்வர் நெறியில் நாற்பது ஆண்டுகள்: சைவ முன்னேற்றச் சங்கம் 40ஆவது ஆண்டு நிறைவு விழா மலர் 2017. 16122*
*நாவலர் மாநாடு விழா மலர் 1969. 16901*
*நாளைய நான். 16544*
*நான் ஓர் எழுத்தாளன்: கவிதை நூல். 16545*
*நான்கண்ட ஈழத்து நூலக ஆளுமைகள். 16864*
*நான் கண்ட பேராசிரியர் சோ.சந்திரசேகரம்: வாழ்வும் பணியும். 16902*
*நிம்மதி. 16682*
*நிலவில் நீந்தும் படகு. 16546*
*நிலவே முகம் காட்டு. 16547*
*நிலாச்சோறு. 16548*
*நிலுக்கின் நண்பர்கள். 16438*
*நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளும் சவால்களும். 16235*
*நிலைமாறுகின்ற வாழ்க்கை. 16196*
*நிவேதினி: இதழ் 17 (2017). 16199*
*நிவேதினி: இதழ் 18 (2018-2019). 16200*
*நிவேதினி: இதழ் 19 (2020-2021). 16201*
*நிழல் மனிதன். 16762*
*நிற்பனவும் நிலைப்பனவும். 16845*
*நிறமில்லா மனிதர்கள். 16683*
*நிறுவனங்களில் தலைமைத்துவம். 16345*
*நினைக்க சிரிக்க சிந்திக்க. 16848*
*நினைத்தாலே இனிக்கும். 16763*
*நினைவழியா நாட்கள். 16895*
*நினைவின் இறுதிநாள். 16549*
*நினைவுக் காப்பகம்: எழுபது வருடகால சுதந்திரத்தை மீள்பார்வையிடல். 16028*
*நினைவுகளில் தொங்கும் நீர் ஊஞ்சல். 16035*
*நினைவுச் சாரலில் எட்வேர்ட் செய்த். 16211*
*நிஜங்கள். 16684*
*நீ விளையாடுவாய் தானே நான் பொம்மை யாகின்றேன். 16550*
*நீங்காத நினைவுகளில்: மலையக மண்ணின் மைந்தர்கள். 16858*
*நீர்வேலி பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும்: வைரவிழா மலர் 1956-2016. 16267*
*நீரிழிவு கைநூல். 16327*
*நீரோவின் இசைக் குறிப்புகள். 16551*
*நீலவேணி. 16764*
*நூல்கள் நூலகங்கள் நூலகர்கள். 16805*
*நூல்தேட்டம் தொகுதி 16. 16005*
*நூலக முகாமைத்துவம். 16009*

நூலகப் பகுப்பாக்கத் திட்டங்களும் எண்கட்டுமானப் படிமுறைகளும். *16010*
நூலகப் பட்டியலாக்கம்: மரபும் மாற்றமும். *16011*
நூலகவியல் பெருந்தொகுப்பு: தொகுதி 1-7 *16012*
நெட்டிலைப்பாயான் எழில்: கோண்டாவில் திருவருள்மிகு நெட்டிலைப்பாய் பிள்ளையார் திருக்கோயில் புனராவர்த்தன மஹாகும்பாபிஷேக மலர். *16123*
நெடுப்பமாய் இழுத்த பந்தல். *16552*
நெடுவாழ்வின் எழுதித் தீரா நினைவு: டொமினிக் ஜீவா. *16938*
நேர்த்திக் கடன். *16685*
நொண்டி நாடகம்: தென்மோடிக் கூத்து. *16281*
நோ போல் (No Ball). *16686*
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -01 (1901-1910). *16987*
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -02 (1911-1923). *16988*
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -03 (1924-1935). *16989*
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -04 (1936-1949). *16990*
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -05 (1950-1957). *16991*
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -06 (1958-1964). *16992*
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -07 (1964-1972). *16993*
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -08 (1973-1978). *16994*
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -09 (1978-1983). *16995*
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -10 (1983-1988). *16996*
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -11 (1989-1994). *16997*
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -12 (1995-1999). *16998*
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -13 (1999-2002). *16999*
நோபல்பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் -14 (2003-2006). *17000*
நோய்கட்கு சித்தப்பரிகாரம். *16337*
நோன்பு தெளிவுகளும் வழிகாட்டல்களும் (இஸ்லாமிய பத்வாக்கள் தொகுதி -2). *16173*
ப்ரயோக சம்ஸ்கிருதம் அல்லது பேச்சு சம்ஸ்கிருதம். *16290*
பக்திப் பாசுரங்கள். *16148*
பக்திப் பாமாலை. *16174*
பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி அண்ணாமலையார் மீது பொழிந்த அருட்பாடல்கள். *16149*
பசுமை அமைதி விருதுகள்: சூழல் பொது அறிவுப் பரீட்சை. *16241*
பஞ்சநதிகள்: சிறுவர் நாடகங்கள் ஐந்து. *16407*
பஞ்சபுராணத் திரட்டு. *16150*
பட்டதாரி ஆசிரியர் மற்றும் கல்வித்துறை சார் போட்டிப் பரீட்சைகளுக்கான வழிகாட்டி நூல். *16248*
படி கட. *16553*
படைவீட்டுப் பதிகங்கள். *16151*
பண்டாரம்-வன்னியனார் (கி.பி.1783-1811) வரலாறு. *16969*
பண்டைக் குமரியும் பழங்குடித் தமிழரும். *16960*
பண்ணையில் ஒரு மிருகம். *16765*
பண்பட்ட எண்ணங்கள்: பண்பாடுசார் கட்டுரைகள். *16192*
பண்பாட்டு மேம்பாட்டிற்கான கலைகள். *16349*

பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை.16829
பதிற்றுப்பத்து வசனம். 16830
13ம் திருத்தச் சட்டம் தீர்வல்ல: தமிழ் சொலிடாரிட்டியின் அரசியல் நிலைப்பாடு. 16212
பதுறு மவ்லிது: மூலமும் மொழிபெயர்ப்பும். 16821
பயங்கரவாதி. 16766
பயன் அறிந்து உண்க. 16343
பயிலுந்தமிழ்: உயர்தர வகுப்புகளுக்குஉரியது: முதலாம் பாகம். 16304
பர்ஸன்ஜிய் மவ்லித்: மூலமும் மொழி பெயர்ப்பும். 16822
பரத நாட்டியம். 16368
பரமேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு விழா மலர். 16261
பரி.யோவான் பொழுதுகள். 16262
பல்கேரியக் கவிதைகள். 16590
பல்லிகள் இல்லா சுவரில் மேயும் வண்ணத்துப் பூச்சிகள். 16554
பழனி: திருஆவினன்குடி-சித்தன் வாழ்வு-பொதினி-சிவகிரி. 16088
பறவைகள். 16846
பறவைகளுக்குத் திசைகள் தெரியாது. 16555
பறையொலி. 16687
பன்முக நோக்கில் சங்க இலக்கியம். 16831
பன்னாட்டுக் குற்றங்கள். 16955
பன்னிரு திருமுறை: வரலாறும் விபரமும். 16152
பன்னிரு திருமுறைத் திரட்டு. 16153
பனிக்குடம். 16556
பாசப் பிரவாகம். 16688
பாட்டி சொன்ன இலங்கையின் மரபுக் கதைகள். 16282
பாட்டுக்கூத்து. 16408
பாடசாலை நிதி முகாமைத்துவம். 16249
பாடுகள்: சிறுகதைகள். 16689
பாத்திமா நாயகியார் மாலை. 16175
பாதை கூறும் வெள்ளித்தாரகைகள். 16961
பாதை தெரியாத பயணங்கள். 16690
பாரதியாரின் உரைநடையாக்கத் திரள். 16806
பாரம்பரிய உணவுக் கலாச்சாரம். 16344
பால்வண்ணம். 16691
பாலபாடம்: முதலாம் புத்தகம், இரண்டாம் புத்தகம், மூன்றாம் புத்தகம், நான்காம் புத்தகம். 16305
பாலபாடம்: மூன்றாம் புத்தகம். 16306
பாலர் பாட்டு தொகுதி 1. 16402
பாலர் பாட்டு தொகுதி 2. 16403
பாலியலும் பாலியல் பிறழ்வுகளும். 16320
பாலேந்திராவின் அரங்கக் கட்டுரைகள். 16384
பாலை நில ரோஜா. 16767
பாஷோவின் அறையில். 16557
PKM என்கின்ற புகையிரத நிலையம். 16768
பிரஞ்சுப் புரட்சி. 16947
பிரமிள் கவிதைகள் ஒரு நுண்ணிய உசாவல். 16839
பிலால்: ஒரு கறுப்பின அடிமையின் விடுதலை வரலாறு. 16874
பிலால் காவியம். 16608
பிள்ளை கடத்தல்காரன். 16692
பிள்ளைப் பா-பூக்கள். 16404
பிறந்த மண்ணில் பெற்ற சுகந்தம் பாகம் 3: மீசாலை. 16970
பிறெயில் முறையியல்: பாகம்-1. 16289
பின் தொடரும் குரல். 16048
பின்னல் பையன்: தேவகாந்தனின் தேர்ந்த கதைகள். 16693
புத்த(க)ன்: சிதம்பரப்பிள்ளை சிவகுமார் நினைவுக் குறிப்புகள். 16865
புதிய அறிவுச் சாகரம்: புலமைப் பரிசில் வழிகாட்டி. 16002
புதிய ஈசாப் கதைகள்-1. 16429

புதிய ஈசாப் கதைகள்-2. 16430
புதினம்: இளமை இருபது 1996-2016. 16866
புதுவை நாதம் (இதழ் 1). 16023
புதுவை நாதம் (இதழ் 2). 16024
புலச்சிதறல் நெஞ்சம். 16219
புலர் காலையின் வலி. 16694
புலோலி பர்வதவர்த்தனிசமேத பசுபதீஸ்வரர் இலக்கியத் தொகுப்பு மற்றும் சமயம் சார்ந்த சில பொருள்களின் சுருக்கமான திரட்டு. 16154
புனித கயிலாச யாத்திரையும் எனது அனுபவங்களும். 16852
பூக்காலம். 16558
பூகோள தர்ப்பணம். 16849
பூங்குயில் 70. 16939
பூச்சியம் பூச்சியமல்ல: இலக்கிய அனுபவங்கள். 16940
பூந்தேனில் கலந்து (கவிதைப் பூக்கள்). 16559
பூவரசம் தொட்டில்: புதுக் கவிதை. 16560
பெண்ணாய் ஒருமுறை பிறப்பாய் போற்றி. 16609
பெரு வெடிப்பு மலைகள். 16561
பேரன்பின் படிமங்கள். 16562
பேராசிரியர் க.கைலாசபதியும் திறனாய்வும், பேராசிரியர் வி.செல்வநாயகத்தின் தமிழ் இலக்கிய வரலாறும் தமிழ் உரைநடை வரலாறும். 16807
பேரின்பப் பாதை. 16176
பேனாமுனையின் நேசம். 16695
பொதி. 16598
பொய்யெல்லாம் மெய்யென்று. 16696
பொருளாதார-சூழலியல் சிக்கல்கள். 16224
பொறுப்பது உன் விதியோ. 16599
போக்காளி. 16769
பௌத்தம் சிறந்த வினா-சிறந்த விடை. 16074
ம.க.வேற்பிள்ளைப் புலவர் இயற்றிய சந்திரமௌலீசர் சதகம் என்னும் ஈழமண்டல சதகம். 16155
மக்கத்துச் சால்வை, மருமக்கள் தாயம். 16697
மக்கள் களரி. 16385
மக்கள் மேன்மையடைய தினசரி ஒரு நற்சிந்தனை. 16049
மகடூஉ 100: நூறு பெண் கவிஞர்களின் கவிதைகள். 16563
மகரந்தத் தூறல் (ஹைக்கூ). 16564
மகளிர் மூவர். 16770
மகாபாரதக் கதைகள்: கண்ணன் விடு தூது. 16434
மகாபாரதம் ஆரணிய பருவம்: அருச்சுனன் றவநிலைச்சருக்கம். 16444
மகிடிக்கூத்து. 16283
மகிழ்ச்சிப் பேரிகை. 16698
மகிழ்ச்சியை நோக்கி. 16071
மகுட பங்கம்: நாடகப் பிரதி. 16600
மட்டுநகரின் இன்னுமொரு பக்கம். 16971
மண் அளக்கும் சொல். 16808
மண்டைதீவு கலைவாரிதி வில்லியம் கஸ்பார் அவர்களின் தர்மசீலி தென்மோடி நாட்டுக்கூத்து. 16284
மணிக்கவிகள். 16565
மணிவாசகர் அருளிய சிவபுராணம். 16156
மர்ம கீதங்கள். 16771
மரபின் விழுதுகள். 16566
மரியசேவியம். 16915
மருத முகிழ் 2022 (இதழ்10). 16451
மருந்தென வேண்டாவாம்: நோயற்ற வாழ்வுக்கு உணவே மருந்தாக, மருந்தே உணவாக. 16323
மல்லிகை இதயங்கள். 16699
மல்லிகை மொழி கவிதைகள். 16567
மலரும் வாழ்வு: குறுங்காவியம். 16610

மலையக சமூக மேம்பாட்டில் ஆங்கில மொழி மற்றும் மூன்றாம் நிலை கல்வியின் முக்கியத்துவம். 16250
மலையக பரிசுக் கட்டுரைகள். 16809
மலையகத் தமிழ் மக்களும் நிலத் தொடர் பற்ற- பிரதேசம் சாராத அதிகாரப் பகிர்வும். 16213
மற்றும் பலர் நடித்த. 16391
மறக்க முடியாத என் இலக்கிய நினைவுகள். 16810
மறுமலர்ச்சி: மறுமலர்ச்சி மன்ற பொன் விழா சிறுகதைப் போட்டி-2022 தேர்ந்த கதைகள் 1972-2022. 16700
மறைந்த முகம்: சிங்களச் சிறுகதைகள். 16720
மன்னன் குறிச்சி நெல்லிக் கிணற்றடி தான் தோன்றி கந்தசுவாமி கோவில். 16089
மன்னார் சிவபூமி. 16090
மன்னார் மாதோட்ட தமிழ்ப் புலவர் சரித்திரம். 16941
மன்னார் மாதோட்ட வாசகப்பா, நாடக மெட்டுக்கள் (பாகம் 1). 16285
மன்னார் மாதோட்டப் புலவர்கள்-கலைஞர்கள். 16916
மன ஊஞ்சல். 16772
மனச் சோலை. 16182
மனதின் வடிவங்கள். 16701
மனமே. 16885
மனித உரிமைகள்கோட்பாடும் நடைமுறையும். 16214
மனிதா!. 16177
மனுஷி: சிறுகதைகள். 16702
மனையடி சாஸ்திரமும் வாஸ்து நிலையும். 16069
மனோ இராஜசிங்கம் நினைவுரை 2012. 16956
மனோன்மணி காட்டும் ஊழிக்காலம்.16773
மாணிக்கவாசகர் புராணம் (வசனம்). 16157
மாதாவின் மந்திரம். 16158
மாமனிதர் குமார் பொன்னம்பலம் (ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஜுனியர்) முதலாம் ஆண்டு நினைவு மலர். 16890
மாமி சொன்ன கதைகள்: அனுபவப் பகிர்வு. 16942
மார்க்சும் ஏங்கல்சும் 1848இல் வெளியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை. 16230
மாவைக் கந்தன் பாமலர்த் திரட்டு. 16159
மாவையூர். 16972
மாற்றங்களின் முகப்புகள்: இலங்கையில் பெண்கள் 1986-1995. 16197
மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள். 16238
மான்குட்டி: சிறுவர் பாடல். 16405
மான்விழிக்குக் கடிதங்கள். 16229
மின்னும் தாரகைகள்: இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய ஆய்வு. 16198
மீட்பின் சுவடுகள். 16568
மீண்டுமொரு முறை. 16569
மீராவின் தம்பி & வேறு சில கதைகள். 16426
மீனாட்சி கூறும் அழகியல்.16774
மீனும் துள்ள. 16570
முகிழ். 16703
முத்தமிழ் விழா 2012: சிறப்பு மலர். 16263
முதலில் பூத்த முல்லை. 16775
முதுசொம்: இரு கூத்தும் நாநாடகமும். 16601
முதுமை என்னும் பொக்கிஷம். 16330
முரண். 16704
முருகன் துணை. 16160
முருகும் முருகனும். 16161
முன்வரலாற்றுக் காலத் தமிழ்நாடு. 16949
முனிராஜன் கதைகள்: சிறுவர் கதைகள். 16427
மூச்சுக் காற்றின் முணுமுணுப்பு. 16571
மூதன்னையின் பாடல். 16572

மூதூரின் முதுசங்கள்: பகுதி 1. 16859
மூல விருட்சம். 16162
மூன்றாம் உலக யுத்தம்: சஜாவின் கவிதைகள். 16573
மூன்றாவது இதயம். 16574
மூன்றாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு: சிறப்பு மலர்1985. 16187
மெய்கண்ட சாத்திரம். 16064
மெய்ப்பாடு: அரங்கச் சஞ்சிகை 2008/2009. 16386
மெய்யெனப் பெய்யும் பொய் 16575
மேகதூதம். 16611
மேகலை கதா. 16776
மேடையிலே பேசுவோம்: சிறுவர்களுக்கான மேடைப்பேச்சுகள். 16441
மேருபுரம் ஸ்ரீமஹா பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம் கம்பன் விழா 2008 ஸ்ரீவித்யாபூஷன் விருது. 16452
மொக்குள்: பாடல், கவிதைத் தொகுப்பு. 16576
மொழி மணிகள். 16307
மொழிக் கலசம்-பாகம் 1. 16308
மொழிதல்:ஆய்விதழ் 8: எண் 1. 16188
மொழியியலும் தமிழ் மொழி வரலாறும். 16297
மொழியியற் பேராசிரியர் ஆறுமுகம் சதாசிவம் அவர்களின் ஆய்வுகளும் புலமைத் திறன்களும். 16910
மோகனாங்கி. 16777
மௌன அலைகள். 16040
மௌனத்தின் மீது வேறொருவன். 16577
மௌனம் தின்னும் உடல். 16578
யசோதரையின் வீடு: றியலாஸ் கவிதைகள். 16579
யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்: நூற்றாண்டு நிறைவு மலர் 1908-2008. 16264
யாருக்கோ பெய்யும் மழை (கவிதைகள்). 16580
யாரோ ஒருத்தியின் டையரி: மஜீத் குறுங்காவியம்: பாகம் 2. 16612
யாவரும் கேளிர்: பத்தி எழுத்துகள். 16036
யாழ்ப்பாண அரசர் காலத்தில் வாழ்ந்த விகடப் புலவர் கதைகள். 16428
யாழ்ப்பாணத்தான்: 23 சிறுகதைகள். 16705
யாழ்ப்பாணப் பள்ளிக்கூடம். 16439
யாழ்ப்பாணம் இணுவில் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயரின் ஆக்கங்கள்-தொகுதி 1. 16369
யாழ்ப்பாணம்-நல்லூர் நாயன்மார்கட்டு அருள்மிகு இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் அந்தாதிக் கீர்த்தனைகள். 16163
யாழ்ப்பாணம் நல்லூர் நாயன்மார்கட்டு அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்மன் திருக்கோவில் பஞ்சதள இராஜகோபுரம் திருக்குட முழுக்கு சிறப்பு மலர் 2020. 16124
யாழ்ப்பாணம் பாரீர். 16973
யானைகள். 16225
யானைத் தண்ணீர். 16581
யுத்தத்தின் விலை. 16193
யோக சுவாமி: எங்கள் கடவுளின் அவதாரம் (அப்பு). 16875
யோக வாழ்வு (ஆத்மா 1, வாழ்வு 3). 16319
யோகமும் இயற்கையும் 16065
யோகர் சுவாமிகள் வாழ்க்கை வரலாறும் நற்சிந்தனையும். 16876
யோகர் சுவாமியும் அவரின் சில விசித்திர சீடர்களும். 16877
ரவீந்திரம். 16903
ராணியம்மா. 16706
ராஜினி வந்து சென்றாள். 16721

லண்டன் தமிழர் தகவல்: ஆறு திருமுருகனின் 50ஆவது அகவை பொன்விழா மலர். 16878

லிற்றில் பேர்ட்ஸ் (இதழ் 1-2022). 16016

வ்ருத்தோப நிஷத்: முதுமை குறித்த கவிதைகள். 16591

வட மாகாண சஞ்சிகைகள் ஓர் அறிமுகம். 16017

வட மாகாண வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்: தொகுதி 1. 16974

வடந்தை 2021. 16189

வடந்தை 2022. 16190

வணிகத்துளிர் 2006. 16269

வரகவி நயினை நாகமணிப் புலவரின் படைப்பாற்றல். 16943

வரலாற்றின் பேசுபொருளாகிய நல்லூரான் செம்மணி வளைவு. 16091

வரலாற்று உலா. 16975

வரிகளில் நழுவும் கடல். 16582

வலியும் வழியுமாக: கவிஞர் சோ.பத்மநாதன் கவிதைகள். 16840

வலுவிழந்தோரின் வாழ்வை வளமாக்கு வோம். 16239

வலைப்பந்தாட்டம். 16394

வழித்தடம்-1. 16018

வளையாபதி: தென்மோடி நாட்டுக்கூத்து. 16286

வன்னிப் பிராந்தியத் தமிழாராய்ச்சி மகாநாட்டு ஆய்வுத் தொகுதி.16298

வன்னியாச்சி. 16707

வனம் திரும்புதல்: சிறுகதைகள். 16708

வாஞ்சை 2018: தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வெளியிடப்படும் சஞ்சிகை. 16025

வாணர் படைப்புக்கள். 16847

வாமனம்: பெருவெளி ஒன்றைத் தேடி அலையும் நினைவுகள். 16860

வாயு மாசடையாத எமது உலகம். 16226

வாழ்க்கை பயணத்தில் தடம் மாறலும் தடுமாறலும். 16709

வாழ்நாள் சாதனையாளர்: சாஹித்ய ரத்னா செங்கை ஆழியான். 16944

வாழ்வதற்குப் போராடு. 16710

வாழ்வியல் அனுபவங்கள்- எனது சரிதை. 16886

வாழ்வின் பின்நோக்கிய பயணமிது. 16896

வாழ்வும் கடனும். 16778

வாழு வாழவிடு: 16 உருவகக் கதைகளின் தொகுப்பு. 16711

வானமற்ற வெளி: கவிதை பற்றிய கட்டுரைகள். 16811

வானலைகளில் ஒரு வழிப்போக்கன். 16867

வானிலை அவதானிப்பும் காலநிலையும்: இலங்கையின் கிழக்குப் பிரதேசம். 16313

வானும் மண்ணும் நம் வசமே: தன்முனைக் கவிதைகள். 16583

விடயம் அறிந்தவர்கள் கணிப்பில் கே.எஸ். சிவகுமாரன். 16812

விடியாத இரவு. 16779

விடுகதைகள் ஆயிரம் 16287

விண்ணதிர் பரணி. 16584

விதைப் பந்துகள். 16227

விமர்சனப் பார்வையில் வாழும் எழில் காவியங்கள். 16585

விரல்களிலும் வேர் முளைக்கும். 16712

வில்லி பாரதம்: வாரணாவதச் சருக்கம். 16445

விழுதல் என்பது எழுகையே. 16780

விளிம்பில் உலாவுதல்: இலங்கைக் கதைகள். 16781

வின்னி மண்டேலாவின் வாக்குமூலம். 16897

வீட்டு எண் 38/465. 16813

வீணையடி நீ எனக்கு. 16782

வீதிப் பசுமையாக்கமும் பசுமையாக்கம் எதிர்கொள்ளும் சவால்களும். *16228*

வீரகேசரியின் பதிப்புலகம். *16031*

வெகுளாமை (Calm). *16041*

வெண்சுவர். *16713*

வெந்து தணியாத பூமி. *16962*

வெயில் நீர்: குறுநாவல்கள். *16783*

வெருளி மாமா: சிறுவர் பாடல். *16406*

வெள்ளி மலை இதழ் 16 (2021). *16026*

வெளியில் எல்லாம் பேசலாம். *16714*

வெற்றிமுரசு பாடல்கள் (தமிழீழ எழுச்சிப் பாடல்கள்). *16364*

வேப்பமரமும் பவளம் ஆச்சியும். *16715*

வேலணையூர் சுரேஷின் குறும்புப்பா 100. *16586*

வைத்தீசுவரர் மலர். *16879*

வைதீக மற்றும் தமிழர் திருமண முறைகள். *16274*

ஜனனம். *16716*

ஜின்னாஹ்வின் குறும்பாக்கள் 550. *16587*

ஜினா. *16784*

ஜீவநதி ஈழத்து இலக்கியச் சிற்றிதழ்கள் சிறப்பிதழ். *16027*

ஜீவநதி: மலரன்னை சிறப்பிதழ்: இதழ் 160, கார்த்திகை 2021. *16945*

ஜீவபிரயத்தனம்: நாடகங்கள் ஏழு. *16602*

ஜென்ம நட்சத்திரம். *16918*

ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாமஸ் தோத்திரம்.*16164*

ஸ்ரீ வில்லி பாரதம்: புட்ப யாத்திரைச் சருக்கம்- மூலமும் உரைக்குறிப்புகளும். *16446*

ஸ்ரீமாவோ: உலகின் முதலாவது பெண் பிரதமரைக் கௌரவித்தல். *16891*

ஸலாம் அலைக். *16785*

ஹாட்லியின் சுவடுகள்: 175ஆவது ஆண்டு நிறைவு மலர் 1838-2013. *16265*

ஹிஜாமா எனப்படும் இரத்தம் குத்தியெடுக்கும் மருத்துவம் (அத்திப் புன்நபவீ-நபி வழி மருத்துவம்). *16324*

Through the Fire Zones: Photographs of Amarathaas in Sri Lanka's War Zones. *16352*

# ஆசிரியர் வழிகாட்டி


அகணி 16041, 16823
அகணி சுரேஸ் 16642, 16795
அகஸ்தியர் 16066, 16331
அகில் 16928
அகில இலங்கை இந்து மாமன்றம் 16112
அகில இலங்கை சைவ மகாசபை 16145
அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா 16165
அகிலன், பவானி 16394
அகிலன், பாக்கியநாதன் 16489, 16594
அத்தபத்து, பத்மா 16196
அதீக், உதுமாலெவ்வை முகம்மது **பார்க்க** சோலைக்கிளி
அப்றிட், அபு 16546
அபிநாத், த. 16800
அம்பலவாணர், மறவன்புலோ செல்லம் 16576, 16595
அம்பிகைபாகன், வித்யா 16093
அம்ரிதா ஏயெம் **பார்க்க** அஹமட், ஏ.எம்.றியாஸ்
அமரசிரி, ஷியாமா 16435
அமரதாஸ் 16352
அமரர் துரைராசா சுப்பிரமணியசிவம் நினைவுக் குழு 16905
அமரர் ரோகிணி பரராஜசிங்கம் நினைவுக் குழு 16861
அமல்ராஜ், பிரான்சிஸ் 16643
அமலதாஸ், தனிநாயகம் 16847
அரவிந்தன், குரு 16662, 16725, 16788
அரவிந்தன், சுகன்யா 16004, 16355-357, 16362
அரவிந்தன், மாலினி 16846
அரிச்சந்திரன், ரஜிதா 16148, 16344, 16393, 16455, 16548
அரியரத்தினம், தம்பையா 16218
அரியரெத்தினம், இராஜ 16932
அரியரெத்தினம், ச. **பார்க்க** வாகரைவாணன்
அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோவில் பரிபாலன சபை 16109
அருண்மொழி வர்மன் 16837
அருணாசலம், சே. 16044
அருந்ததி 16604, 16730
அருந்தவராஜா, கந்தையா 16948
அருள்குமரன், எஸ்.ரி. 16596
அருள்சந்திரன், பிறைஷினி 16308
அருளம்பலவனார், சு. 16156, 16829
அருளானந்தம், கே. 16265
அருளானந்தம், ச. 16427
அருளானந்தம், சோ. 16454
அல் அஸுமத் 16608, 16726, 16874
அல்ரோய், எம்.மார்க் 16071
அலறி 16542
அலி, அலியார் நௌபர் 16750
அலி, இக்பால் 16425
அலி, எம்.ஐ.லியாகத் 16169
அலி, ஏ.எம்.எம். 16502
அலெக்ஸ் பரந்தாமன் 16634, 16687
அழகராஜா, செ.அ. 16286

அழகேஸ்வரன், சித்திரவேல் 16641
அன்பழகன், க. 16569
அன்புராசா, செபமாலை 16178, 16180, 16285, 16311, 16366, 16431
அனந்தசயனன், சிவமலர் 16893
அனுசன், க. 16192
அனுராதா 16474
அஸீஸ், ஆதம்பாவா 16509
அஸீஸ், பீ.ரீ. 16288
அஷ்ரப், சாய்ந்தமருது M.I.M. 16523
அஹமட், ஏ.எம்.றியாஸ் 16018, 16224-225, 16227-228, 16231, 16314-316
ஆசீர்வாதம், மு.வி. 16304
ஆண்டி பசுபதி 16855
ஆண்டியப்பன், நா. 16448
ஆதம்பாவா, யூ.எல். 16664
ஆப்தீன், நஸீரா எஸ். 16583
ஆர்த்திகா, அ. 16338
ஆரூரன், சிவ. 16731
ஆலன், ஜேம்ஸ் 16044
ஆலிம் (ரஹ்), அல்லாமா மாப்பிள்ளை லெப்பை 16821
ஆறு திருமுருகன் 16086, 16261
ஆறுமுக நாவலர் 16053, 16305
ஆறுமுகம், எஸ். 16158
ஆறுமுகம், சீனித்தம்பி 16762, 16764
ஆனந்தன், காசி. 16954
இக்பால், கே.எம்.எம். 16615
இந்திரபாலா, கா. 16949
இந்திரன், சுஜாதா 16515
இந்திரை, சு. 16111
இயல்வாணன் 16369, 16694
இர.சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு 16809
இரகுநாதன், ம. 16791, 16831, 16963
இரகுபரன், க. 16935
இரகுவரன், பா. 16912
இரத்தினசபாபதி, நா. 16134
இரத்தினம், அருளானந்தராஜா **பார்க்க** அருந்ததி
இரவி, அ. 16768
இரவீந்திரகுமாரன், சந்திரகுமாரி **பார்க்க** இரவீந்திரன், சந்திரா
இரவீந்திரன், சந்திரா 16942
இரவீந்திரன், ந. 16207
இராசரத்தினம், க. 16089
இராசலிங்கம், சி. 16512
இராசலிங்கம், தீவகம் வே. 16459
இராசேந்திரம், சரணிகா 16544
இராமசாமி, கே.வி. 16019
இராமலிங்கம், தா. 16477
இராஜகோபால், ஈ.கே. 16866
இராஜதுரை, எஸ். 16250
இராஜவேல், துரைராசா 16334
இராஜேந்திரம், க. 16312-313
இராஜேஸ்கண்ணன், இ. 16246,16270, 16860
இலகுப்பிள்ளை, வேலுப்பிள்ளை 16911
இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி-பிரான்ஸ் 16938
இலங்கை தேசிய சமாதானப் பேரவை 16193, 16961
இளங்கீரன் 16952
இளங்கோ, பரமேஸ்வரி **பார்க்க** மதுபாரதி
இளஞ்சேய், வேந்தனார் 16261
இளமாறன், செ. 16895
இறைவன், கந்தப்பு 16319, 16886
இஹ்ஸான் (ரஷாதி), மௌலவி 16170
ஈசாக், மரியன்ன ஸ்டீன் 16057
ஈழக்கவி 16039, 16476, 16807, 16839
ஈழத்துப் பூராடனார் 16277
ஈழநிலா 16202

ஈழவாணி 16652, 16748
ஈஸ்வரன், நாராயணபிள்ளை இடைக்காடர் 16964
உடுவிலூர் கலா 16496, 16566
உதயகுமார், இராமநாதன் **பார்க்க** உதயன், குடத்தனை
உதயகுமாரன், காஞ்சனமாலா 16023-024
உதயசூரியன், தி. 16233
உதயணன், சபாபதி **பார்க்க** சித்தாந்தன்
உதயன், குடத்தனை 16723
உதயன், லதா 16722
உமாசங்கர், P. 16001, 16248
உமாசுதன், எஸ். 16252
உமாபதி சர்மா, சபா. 16350
உமாஜி **பார்க்க** கிருபாகரன், உமாசுதன்
உருத்திரகுமார், பௌசிகா 16330
உருத்திரகுமாரன், கனகசபை 16943
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் 16187
எட்வின், பி. 16299
எட்வேட், சூசை 16621
எமில், கி.செல்மர் 16915
எஸ்தர் 16561
ஏழுமலைப்பிள்ளை, வல்லிபுரம் 16600
ஐங்கரநேசன், பொ. 16904
ஐங்கரன், கௌரி சந்திரன் 16353-354
ஐயாத்துரை, அரச. 16412
ஒசாநிதி, சிவராசா 16682
ஒமேகா கணித விஞ்ஞான வளநிலையம் 16287, 16434
ஓட்டமாவடி அறபாத். 16035
ஔவையார் 16053-055
க்ரெய்க். எச்.ஏ.எல். 16608, 16874
கண்ணம்மா 16439
கண்ணராசன், கண்ணன் 16524
கணபதிப்பிள்ளை, வ. 16157
கணாதீபன், ஞா. 16252
கணேசதுரை, பாகீரதி 16159, 16939
கணேசபிள்ளை, வைகுந்தம் 16130, 16278
கணேசர், கார்த்திகா 16075
கணேசராசா, பு. 16599
கணேசலிங்கம், அ. 16152
கணேசலிங்கன், செ. 16042, 16229-230, 16734-735, 16740, 16743, 16746, 16753-754, 16759-760, 16770, 16773-774, 16778
கணேசன், கஸ்வினி 16409
கணேசன், செ. 16468
கணேசன், சௌந்தரி 16456
கணேசன், யோகராணி 16409
கணேஷ், கீதா 16443, 16624
கணேஷ், கே. 16590
கதிரவேல், கா. 16135
கந்தசாமி, ஆழ்வாப்பிள்ளை16363
கந்தசாமி, சுபா ஷாமினி 16363
கந்தசாமி, ரதிதேவி **பார்க்க** தாமரைச்செல்வி
கந்தராஜா, ஆசி. 16808
கந்தவனம், வி. 16565
கந்தையா, ஆறுமுகம் 16140
கந்தையாபிள்ளை, ந.சி. 16825, 16830, 16907, 16957
கபாலினி 16335
கம்பளைதாசன் 16889
கமலநாதன், க.இ. 16601
கமலநாதன், திருநாவுக்கரசு 16050,16259
கமலநாதன், வே. 16318
கமலினி கதிர் 16240, 16419
கமால், முகம்மது ஜெலால்தீன் முகம்மது **பார்க்க** திக்குவல்லை கமால்
கமுதர் **பார்க்க** தர்மராசா, க.மு.
கயிலாசநாதன், இராசலட்சுமி 16787
கராமத், எஸ்.ஏ.சீ.எம். 16721

கருணாகரமூர்த்தி, பொ. 16708, 16783
கருணாகரன் 16018, 16033, 16466, 16508, 16549, 16577, 16653, 16834
கருணாகரன், தேவகி 16618
கருணாநிதி, மகாதேவன் 16346
கல்வி வெளியீட்டுத் திணைக்களம் 16301-302, 16442
கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் மணிவிழா அமைப்பு 16900
கலாநிதி ஹ.சி.தாவீது அடிகளின் நினைவுக்குழு 16909
கலைச்செல்வி, மண்டைதீவு 16647
கலைவாதி கலீல் 16637
கவிகூத்தன் 16138, 16516, 16575
கவிதா 16517
கவிதா லட்சுமி 16517, 16813
கனகசபை, கவி 16605
கனகரத்தினம், இரா. வை. 16131
கனகரவி 16255, 16397, 16401, 16937
கனடா சோ.க.ஐயம்பிள்ளை கதிர்காமு குடும்பத்தினர் 16133
கஜவிந்தன், க. 16320
கஜேந்திரன், நாகலிங்கம் 16057
கஸ்பார், வில்லியம் 16284
காசி ஆனந்தன் **பார்க்க** ஆனந்தன், காசி.
காசிலிங்கம், அற்புதராணி **பார்க்க** மலரன்னை
காசிலிங்கம், எஸ்.கே. 16920
காண்டீபன், இராசையா 16738
காயத்ரி வெளியீட்டாளர் 16268
காளிதாசர் 16611
கிக்கோ **பார்க்க** ருஷாந்தன், இ.
கிண்ணியா ஹஸன்ஜி **பார்க்க** ஹஸன், ஐதுருஸ் அப்துல்
கிரியெல்ல, பராக்கிரம 16922
கிரிலோஜன், ஜெ. 16111
கிருபாகரன், இணுவில் ஆர்.எம். 16756
கிருபாகரன், உமாசுதன் 16798
கிருபாலினி, ஸ்ரீபன் 16347-348
கிருஷ்ணசாமி, கி.சு. 16986
கிருஷ்ணபிரியன், சி. 16572
கிருஷ்ணமூர்த்தி, எஸ். 16389, 16677, 16686
கிருஷ்ணவேணி 16484
கிருஷ்ணன், எஸ்.பி. **பார்க்க** வேரற்கேணியன்
கிருஷ்ணா, வரதன் 16962
கிருஷன், இ. 16253
கிருஷாந்தன், க. 16330
கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 16654
கிளிநொச்சி சமூகக் கல்வி மன்றம்-வன்னி 16183-185
கிளிவெட்டி மேம்பாட்டு ஒன்றியம் 16887
கிறிஸ்தவ தமிழ்ப் பண்பாட்டுப் பேரவை 16908
கீர்த்தி 16473, 16597, 16747
கீர்த்தி (கீர்த்தனா) 16531
கீர்த்திசிங்கம், குமரேஸ்வரன் **பார்க்க** கீர்த்தி.
குகநேசன், குகநிதி 16196
குகபரன், நவரட்ணம் 16292
குணசிங்கம், முருகர் 16885
குணசேகரன், ப. 16933
குணநாயகம், த.சாள்ஸ் 16644
குணரட்ணம், பிரதீப் **பார்க்க** யதார்த்தன்
குணரத்தினம், செ. 16650
குணராசா, கமலா 16944
குணேஸ்வரன், சு. 16192, 16693
குத்தூஸ், அக்கரையூர் அப்துல் 16491
குப்பையப் புலவர் **பார்க்க** மிறால், மரிசால்
குமரன், ஈஸ்வரநாதபிள்ளை 16791, 16831, 16843

குமரன், சு. 16330
குமாரசாமி, சி. 16054
குமாரசாமி சர்மா, இ. 16856
குமாரவேல், இ. 16269
குமுதரஞ்சன், திலகேஸ்வரி 16336-337
குருபரநாதன், சுபாஷினி **பார்க்க** குருபரன், சுபா
குருபரன், கந்தையா 16329
குருபரன், சுபா 16884
குலசிங்கம், பிரிந்தா 16351
குலம் **பார்க்க** இளமாறன், செ.
குலமணி 16878
குலரத்தினம், க.சி. 16139
குலேந்திரன், பொன். 16085, 16282, 16420, 16623, 16655, 16705, 16711, 16739, 16757
குறிஞ்சித் தங்கம் 16648
குறிஞ்சிவேந்தன், இரா. 16806
கெங்காதரன், நாக. 16883
கேசவன், சாந்தி 16060
கேணிப்பித்தன் **பார்க்க** அருளானந்தம், ச.
கேதீசன், இரா. 16111
கேதீஸ்வரநாதன், விஜிதா 16904
கொலின், வி.மைக்கல் 16480, 16493-494, 16782
கொழும்பு-காரை அபிவிருத்தி சபை 16117
கொழும்பு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை 16901
கோகனன், மு. 16415
கோகுலவாசினி 16335
கோகுலன், ஆ. 16253
கோட்டேகொட, சேபாலி 16196
கோப்பாய் சிவம் **பார்க்க** சிவானந்த சர்மா,ப.
கோபாலகிருஷ்ணன், த. **பார்க்க** செங்கதிரோன்
கோபி, என். 16591
கோபிராஜ், கு. 16972
கோமகன் 16704
கோமஸ், சை.கிங்ஸ்லி 16880
கோரி, A.A.H.K. 16983
கோல்ட்ஸ்ரெயின், ஜோசப் 16051
கௌசி 16556
கௌசிகன், ஆர். 16438
கௌசிதீசன், கிருஷ்ணமூர்த்தி 16507
சக்கரவர்த்தி 16670
சகாயராசா, கொன்ஸன்டைன் **பார்க்க** பாபு, கொ.
சங்கர், எஸ். 16339
சச்சிதானந்தன், மறவன்புலவு க. 16090
சஞ்ஜீவன், தனபாலசிங்கம் 16469
சட்டநாதன், க. 16669, 16673, 16835
சடகோபன், இரா. 16786
சண்முகதாசன், ச. 16009
சண்முகதாஸ், அ. 16190, 16801, 16829
சண்முகநாதன், பொ. 16848
சண்முகநாதன், யாழினி 16330
சண்முகநாதன், வேலுப்பிள்ளை **பார்க்க** முகில்வண்ணன்
சண்முகநாதன், ஹாயத்திரி 16828
சண்முகராஜா, கே.ரி. **பார்க்க** வீணைமைந்தன்
சண்முகலிங்கம், குழந்தை ம. 16594
சண்முகலிங்கன், என். 16189, 16296
சண்முகன், குப்பிழான் ஐ. 16633
சத்தியசீலன், பா. 16408
சத்தியசீலன், பிருந்தா 16257
சத்தியதேவன், சற்குணம் 16777
சத்தியபாமா, க. 16399
சதாசிவம், ஆ. 16003, 16292, 16295, 16297
சதாசிவம், திருஞானேஸ்வரி 16003
சதாசிவம்பிள்ளை, அ. 16478

சதாசிவம்பிள்ளை, ஆர்னால்ட் **பார்க்க** சதாசிவம்பிள்ளை, அ.
சதாவதானி **பார்க்க** செல்லப்பா, அருண்
சதுரையூர் சரலியா **பார்க்க** அலி, அலியார் நௌபர்
சந்திரகுமார், சு. 16382
சந்திரகுமாரி, கா. 16251
சந்திரசேகர், கல்பனா 16010
சந்திரசேகரம், சி. 16188
சந்திரசேகரம், செ. 16232
சந்திரசேகரம், சோ. 16244, 16247
சந்திரசேகரன், நந்தவனம் 16842
சந்திரசேகரன், நல்லையா 16528
சந்திரா, எட்வேட் 16277
சந்திரா, த. 16386
சப்தகரன், தி. 16251
சபாபதி நாவலர், வடகோவை 16296
சபாபதிப்பிள்ளை, ந. 16155
சம்பந்தன், ஐ.தி. 16934
சம்பந்தன், க.தி. 16675
சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறை 16340
சரவணபவன், கனகசபாபதி 16777
சரவணமுத்துப் பிள்ளை, திருகோணமலை த. 16777
சவுந்தரா, எட்வின் 16311
சற்குணசிங்கம், சி.க. **பார்க்க** சிவசத்தர்
சற்குணசெல்வம், பவானி 16182
சனாதனன், தாமோதரம்பிள்ளை 16186, 16347-348
சஜா, ஏ.எம்.அஸ்லம் 16235
சஜாத், என்.எம். 16573
சஷாந்தன், சுதந்தரி 16147, 16151
சாந்த, சுனில் கே. 16718
சாந்தகுமார், த. 16263
சாந்தன், ஐ. 16751, 16781, 16843, 16851
சாந்தினி, சி. 16190
சாம்பசிவம், அகிலேஸ்வரன் **பார்க்க** அகில்
சாமிநாத சர்மா, வெ. 16981-982,
சாயி சசி 16127
சாரங்கன், வைத்தீஸ்வரன் 16844
சித்தாந்தன் 16555, 16617
சித்தாந்தன், கௌ. 16845
சித்திவிநாயகம், வசீகரன் 16560
சித்தீக், முஹம்மத் 16437
சிதம்பரம், நா.சு. 16987-17000
சிமியோன், புளொரிடா 16194
சியாமளா, க. 16269
சிரிவர்த்தன, தெனகம 16888
சிவகடாட்சம், பால. 16343
சிவகணேசன், சங்கரி 16467
சிவகாமி 16433, 16896
சிவகுமாரன், கே.எஸ். 16812, 16832
சிவகுமாரன், வாசுகி 16865
சிவகுருநாதன், எஸ். 16891
சிவசத்தர் 16136
சிவசேகரம், சி. 16471, 16530
சிவசேகரன் 16462, 16501
சிவசேகரன், சிவலிங்கம் **பார்க்க** சிவசேகரன்
சிவஞானசீலன், அ. 16260
சிவஞானசுந்தரம், இ.க. 16305
சிவஞானசுந்தரம், கா. 16903
சிவதாசன், சிவநாமம் 16280
சிவதாஸ், மாவடியார் சூ.16339
சிவநேசன், எஸ். 16447
சிவப்பிரகாசம், தம்பிப்பிள்ளை 16046
சிவப்பிரகாசம், யோகேஸ்வரி 16672
சிவபாதசுந்தரம், சு. 16062
சிவபாதம், செல்லையா 16126

சிவபாலன், சந்திரகௌரி **பார்க்க** கௌசி
சிவபாலன், பா. 16525
சிவபாலு, தங்கராசா 16274
சிவயோகஈஸ்வரன், கந்தையா 16875
சிவயோகநாதன், பாரதி 16368
சிவராசா, சு. 16678
சிவராஜா, ந. 16239
சிவராஜா, நாவற்குழி சு. 16667
சிவராஜா, நிவேதா 16237
சிவராஜா, மலையரசி 16239
சிவராஜா, ரூபன் 16209, 16492, 16797
சிவரெத்தினம், சு. 16283
சிவலிங்கம், அனுஷா 16432
சிவலிங்கம், மூ 16081-082, 16084, 16179
சிவலிங்கராஜா, சி. 16155, 16189, 16441
சிவனடியான், க. 16792
சிவஜோதி, ஹம்சகௌரி 16195
சிவானந்த சர்மா, பிரம்மஸ்ரீ ப. 16076, 16290, 16369, 16868,
சிவானந்தசோதி, நா. 16878
சிவானந்தன், காத்தமுத்து **பார்க்க** ஆனந்தன், காசி.
சிவானந்தன், துறையூரான் எம். 16660
சிற்பரன், எஸ். 16265
சிற்றம்பலம், மகா 16881
சிறிகாந்தன், சண்முகராஜா 16191
சிறீக்கந்தராசா, செல்லத்தம்பி 16588
சிறீறங்கன், சி. 16674
சிறீஸ்கந்தராசா, சிறீ 16836
சின்னத்தம்பி, ஏரெமியா 16849
சின்னத்தம்பி, க. 16266
சின்னராஜன், க. 16514
சிஹாப்தீன், அஷ்ரப் 16034
சீதரன், ராணி 16571
சுகந்தன், சரவணையூர் 16534
சுகந்தன், ந. 16325
சுகன்யா, சி. 16269
சுகிர்தராஜா, சச்சிதானந்தன் 16796, 16805
சுகுணன், தி. 16074
சுகுணன், துஷ்யந்தி 16369
சுட்சுய், யொரிகோ 16435
சுடரொளி வெளியீட்டுக் கழகம் 16882
சுதர்சன், அருளானந்தம் 16398
சுதர்சன், செல்லத்துரை 16521
சுதர்மன், தியாகராஜா 16128, 16333
சுதாகர் **பார்க்க** சக்கரவர்த்தி
சுதாகர், கே.எஸ். 16691
சுதுசிங்ஹ, சந்தரசி 16439
சுதேஸ்வரன், கவிதாமலர் 16014-015
சுந்தரபாரதி, சிவமலர் 16939
சுந்தரராசன், அருணா 16563
சுந்தரேசன், K.T. 16323
சுப்பிரமணிய சாஸ்திரிகள், ச. 16293
சுப்பிரமணியம், சிவா 16197
சுப்பிரமணியம், ராம. 16671
சுப்பிரமணியம், வள்ளியம்மை 16458, 16741
சுப்ரமணியம், கால 16811
சுரேஸ், சி.அ. **பார்க்க** அகணி, அகணி சுரேஸ்
சுரேஷ், இராமச்சந்திரன் **பார்க்க** வேலணையூர் சுரேஷ்
சுரேஷ்குமார், பார்வதி 16154
சுவேந்திரன், ஆர்த்திகா 16567, 16627
சூரியகுமாரன், இரத்தினம் 16679
சூரியதாஸன், சி. 16946
சூரியநிலா 16321-322, 16568
செங்கதிரோன் 16663
செங்கை ஆழியான் 16675, 16973
செந்துறைமுத்து 16985
செம்பியன் செல்வன் 16675

செல்லத்துரை, அருணா 16968-969
செல்லத்துரை, கி. **பார்க்க** துரை, கி.செ.
செல்லத்துரை, சு. 16058, 16064, 16162
செல்லப்பா, அருண் 16728, 16755, 16763
செல்லையா, வ. 16422
செல்வக்குமார் 16487
செல்வகுமார், தக்சாயினி 16843
செல்வநாதன், நிருஷ்யா 16093
செல்வநாயகம், அருள் 16605
செல்வம், பெஞ்சமின் 16941
செல்வமனோகரன், தி. 16013, 16293,
செல்வரத்தினம், வி. 16049, 16137
செல்வராஜன், கோவிலூர் 16630
செல்வராஜா, அரியாலையூர் மிஷாந்தி 16518
செல்வராஜா, எம்.ரி. 16488
செல்வராஜா, என். 16005, 16008, 16012, 16031, 16864, 16936
சேயோன், பரமநாதன் 16893
சேனாநாயக்க, சோமவீர 16436
சொக்கலிங்கம், க. 16059
சொர்ணலிங்கம், செ. 16077
சோதிடவிலாச புத்தகசாலை 16146
சோமசேகரன், வை. 16083
சோலைக்கிளி 16540, 16552
ஞானசேகரம், கொக்குவில் செ. 16144
ஞானசேகரன், தி. 16036, 16927
ஞானப்பிரகாசம், க.த. 16541
ஞானப்பிரகாசம், சிபில் தேவகி 16070
டயஸ், சிட்னி மார்க்கஸ் 16719
டி அல்விஸ், மாலதி 16028
டேவிட், கே.ஆர். 16689
தங்க முகுந்தன் 16951
தங்கவேல், இராசு **பார்க்க** அலெக்ஸ் பரந்தாமன்
தங்கவேலு, க. **பார்க்க** குறிஞ்சித் தங்கம்
தண்டாயுதபாணி, சிங்காரவேலு 16258
தணிகாசலம், வே.த. 16925
தம்பையா, கா. 16446
தம்மிக்க, குரு எஸ். 16074
தமயந்தி 16536
தமிழ் உதயா 16460, 16472, 16498, 16551, 16557
தமிழ் எழுத்தாளர் இணைய அகம். 16780
தமிழ் சொலிடாரிட்டி 16212
தமிழ்க் கவி. 16680
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் 16241
தமிழ்நேசன் 16285, 16366, 16899, 16916
தமிழ்மாறன், கீர்த்தனா **பார்க்க** கீர்த்தி (கீர்த்தனா)
தயாளன் **பார்க்க** திருவருட்செல்வம், த.
தயாளன், மு. 16733, 16897
தயாளினி 16335
தர்மதாசன், வடிவேல்முருகன் 16346
தர்மராசா, க.மு. 16006
தருமலிங்கம், ந. **பார்க்க** நீர்கொழும்பு தர்மலிங்கம்
தவபாலச்சந்திரன், காசிப்பிள்ளை **பார்க்க** தவபாலன், கா.
தவபாலன், கா. 16511, 16533, 16953
தவராசா, கே.வி. 16892
தவராஜா, அரங்கம் இரா. 16971
தவராஜா, சண். 16702, 16863
தனபாலசிங்கம், வீ. 16956
தனபாலசிங்கம், ஜனகன் 16092
தனபாலன், பாலசுப்பிரமணியம் 16243
தனராஜ், தை. 16194
தனுசாந்த், எஸ். 16447
தனுஜா சிங்கம் 16203
தனேந்திரா, வி.பி. 16073
தஜேந்திரன், தவ. 16143

தாட்சாயணி 16580, 16706, 16713

தாமரைச்செல்வி 16707

திக்குவல்லை கமால் 16436, 16681, 16698, 16718-721

தியா **பார்க்க** காண்டீபன், இராசையா

தியாகராசா, பழனிவேல் **பார்க்க** ப. தியான்

தியாகராஜா, சி. 16904

திருக்கேதீஸ்வரன், ஞான. 16898

திருச்சந்திரன், செல்வி 16199-201

திருச்செந்தூரன், ஆர். 16252

திருச்செல்வம், அ. 16072

திருச்செல்வம், எஸ். 16021

திருச்செல்வம், கதிர். 16737

திருஞானசம்பந்தபிள்ளை, ம.வே. 16445

திருஞானமூர்த்தி. தெ. 16979

திருநாவுக்கரசு, ப. 16984

திருமறைக் கலாமன்றம் 16370-379

திருமுருகன், ஆறுமுகம் **பார்க்க** ஆறு திருமுருகன்

திருவருட்செல்வம், த. 16078

திருஷி, மு. 16125

தில்லைநாதன், எஸ். 16310

தில்லைநாதன், சி. 16845

தில்லைநாதன், பூநகர் பொன். 16656

திலகா அழகு 16578

திவ்வியராஜன், வயிரமுத்து 16854

திஸ்னுகன், S.T. 16485

தீபச்செல்வன் 16766

துர்க்காபுரம் மகளிர் இல்லம் 16121

துரை, கி.செ. 16923

துரைச்செல்வி 16499

துரைசிங்கம், என்.கே. 16626

துரைசிங்கம், த. 16055, 16402-403

துரைசிங்கம், தம்பிராசா 16418

துரைராஜா, எஸ். 16891

துரைராஜா, அருந்ததி 16341-342

துஷ்யந்தன், புனிதா 16407

துஷ்யந்தன், வெற்றி 16468

தெணியான் 16714, 16940

தேசஇலங்கை மன்னன், தா. 16217

தேவகாந்தன் 16693, 16776, 16816

தேவராஜா, சுபாஜினி 16094

தொட்டவத்த, நுவன் 16432

நக்கீரன் **பார்க்க** ஜெகநாதன், உரும்பிராய் வி.

நடராசா, ஆ.சி. 16975

நடராசா, செல்லப்பா 16123

நடராசா, திருநகர் 16645

நடராசா, தெல்லியூர் செ. 16095-098

நடராசா, மட்டுவில் ஆ. 16063

நடராஜா, துரைசாமி 16902

நடேசன், நோயல் 16616, 16758, 16765, 16894

நப்லா, கே.எல். 16582

நபீல், M.Z.M. 16168

நர்மதா, சி. 16120

நரேந்திரா, ரஜனி 16369, 16449

நவம் **பார்க்க** ஆறுமுகம், சீனித்தம்பி

நவமகன் 16769

நவரத்தினம், இரத்தினம் 16056

நவராஜ், நாகேந்திரம் 16038, 16329, 16381, 16603, 16847

நவாஸ், ஏ.எச்.எம். **பார்க்க** ஈழக்கவி

நளீம், எஸ். 16554

நளீமுதீன், எஸ். 16464

நற்குணதயாளன், மு. **பார்க்க** தயாளன், மு.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் 16215-216

நஜ்முத்தீன், எஸ்.காஜா 16169

நஸ்ரா, என்.எஸ். 16300

நஸீறுதீன், எஸ். 16646

நாகநாதர், செ.16327

நாகராசா, தி. 16154

நாகலிங்கம், புண்ணியேஸ்வரி 16051

நாகேஸ்வரன், கனகசபாபதி 16132

நிசாந்தன், யோகலிங்கம் 16347-348

நிசார், உ. 16406

நிசார், எச்.எல்.எம். **பார்க்க** நிசார், உ.

நித்தியானந்தன், இரத்தினம் 16088, 16161

நித்தியானந்தன், மாவை **பார்க்க** மாவை நித்தியானந்தன்.

நிருஷ்ணி 16335

நிரோஷன், பாக்கியநாதன் 16380, 16383

நீர்கொழும்பு தர்மலிங்கம் 16404

நெடுந்தீவு ஒன்றியம் 16976

நேசமணி, ஜி. **பார்க்க** நேசன், ஜி.

நேசமணி, ஜி. **பார்க்க** ஷர்மிளா

நேசரட்ணம், பாவிலு கிறிஸ்து **பார்க்க** தமிழ் நேசன்

நேசன், ஜி. 16742

நைஸார், எம்.ஐ. 16365

நோர்வே விஜேந்திரன் 16040

ப. தியான் 16539

பக்தவத்சல பாரதி, 16977

பகீரதன், அழ. 16700

பஞ்சகல்யாணி, எஸ். 16396, 16411, 16413

பஞ்சாட்சரம், பரமசாமி 16067-068, 16852

பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 16349, 16974

பத்தினாதன், தொ. 16220

பத்மநாதன், எஸ். 16045

பத்மநாதன், சி. 16087, 16298

பத்மநாதன், சோ. 16591

பத்மநாதன், நெப்போலியன் 16071

பத்மநாபன், மகாலிங்கம் 16724

பர்வீன், நாச்சியாதீவு 16574

பர்ஸன்ஜிய், ஜஉபருல் 16822

பரணீதரன், க. 16017, 16027, 16424, 16468, 16838, 16945

பரந்தாமன், வீ. 16960

பாக்கியநாதன், ந. 16505

பாபு, கொ. 16619

பாய்வா, அ.ச. 16606

பார்த்திபராஜா, கி. 16978, 16980

பார்த்திபன் 16684, 16716

பார்த்திபன், ந. 16242

பாரதிநாதன், சண். 16254

பாலகிருஷ்ணன், எம். 16736

பாலகோபி, பா. 16328

பாலசிங்கம், எஸ். 16965

பாலசுகுமார் 16272, 16538, 16924, 16930-931

பாலசுந்தரம், இளையதம்பி 16275, 16297, 16910, 16959

பாலசுந்தரம், பொன். 16273

பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் 16267

பாலஸ்ரீதரன், ஆ.இரகுபதி 16926

பாலா, எஸ். **பார்க்க** பாலசிங்கம், எஸ்.

பாலு மகேந்திரா 16387

பாலு மகேந்திரா நூலகம் 16631

பாலேந்திரா, க. 16384

பிரகாஷ், ஜுட் 16262

பிரசாத், சி. 16206

பிரசாத், தர்மு 16620

பிரதீபன், பாலேந்திரன் **பார்க்க** தீபச்செல்வன்

பிரதீபன், வீரசிங்கம் 16451

பிரதீபன், ஜெனிதா 16181

பிரபாகரன், கருப்பையா 16236

பிரபு, ஐயாத்துரை 16465, 16564

பிரமிள் 16811

பிரான்சிஸ், மாசில் 16416

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் 16113-114
பிரேம்சங்கர், க. **பார்க்க** கவிகூத்தன்
பிரோஸ்கான், ஜே.16495
பீர்முகம்மது, ஏ. 16958
பீரிஸ், ஏ.ஈ. 16479
புதுவை அன்பன் 16364
புயல் 16545
புவனேஸ்வரன், திருச்செல்வி 16529
புவிராஜ், வே. 16500
புஸ்பராசா, ந. 16214
புஷ்பராஜா, இந்திராணி 16483, 16658
பூங்கோதை 16613, 16683
பெர்ணாண்டோ, ரோசி 16438
பெரியசாமி, பி.ஆர். 16222
பெரேரா, சசங்க 16186
பெரேரா, சுமிக்கா 16196
பேரின்பகுமார், ஸ்ரீலேக்கா 16749
ஃபைசல், அகமது 16581
பொம்மு, ஆத்விகா 16727
பொலிகையூர்க் கோகிலா 16522
பொன்னம்பலபிள்ளை. 16306
பொன்னம்பலம், பிரேமினி **பார்க்க** தாட்சாயணி
பொன்னம்பலம், மு. 16929
பொன்னம்பலவாணர், தி. 16847
பொன்னையன், நீர்வை 16665, 16688
போல் சுரேஸ், தனேஸ்வரி 16020
பௌநந்தி, அ. 16840
பௌஸ், காத்தான்குடி 16651
மக்கீன், எம்.எம். **பார்க்க** மானா மக்கீன்
மகேந்திரன், கந்தையா 16877
மகேந்திரன், கோகிலா 16052, 16219, 16410
மகேஸ்வரன், கண. 16610
மகேஸ்வரன், மா. 16256
மகேஷ், நெடுந்தீவு 16710
மட்டக்களப்பு இளஞ் சைவ மாணவ மன்றம் 16116
மணி, டன்ஸ்டன் 16625
மதன், க. 16714
மதிவதனி 16043
மதுபாரதி 16632, 16696
மதூசன், பரமலிங்கம் 16091
மயூரரூபன், ந. 16793
மயூரன், முரளிதரன் 16777
மருதமுனை ஹரீஷா 16486
மருதூர்க் கனி 16607
மல்லாவிக் கஜன் 16636
மல்லியப்பூ சந்தி திலகர் 16018
மல்லூரி. ஜோ. 16853
மலர்ச்செல்வன், த. 16676
மலரன்னை 16614, 16635, 16772
மன்சூர், எஸ்.எல். 16245
மன்னார் அமுதன் 16638
மனுப்பிரிய, ரங்க 16385
மனோ சின்னத்துரை 16666
மனோகரன், சாரதாஞ்சலி 16223
மனோகரன், சின்னத்துரை **பார்க்க** மனோ சின்னத்துரை
மனோகரன், தவமணி 16440
மனோன்மணி, ச. 16801, 16829
மஜீத் 16612
மஜீத், மருதூர் A. 16810
மஷ்ஹுர், சிராஜ் 16018, 16211, 16365, 16697
மாசிலாமணி, மு.க. 16873
மாட்டீன், சி.மே. 16392
மாணிக்கவாசகம், பி. 16238
மாணிக்கவாசகர் சுவாமிகள். 16150, 16156
மாத்தளை சோமு 16717

மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தக் குழு 16890
மார்க்கண்டு, ச. 16477
மார்க்கண்டு, சி. 16690
மாவன்னா **பார்க்க** மார்க்கண்டு, சி.
மாவை நித்தியானந்தன். 16421
மான்ன், சாந்தி விக்ரர் **பார்க்க** கிருஷ்ண வேணி
மானா மக்கீன் 16862
மாஹிர், ஏ.எம். 16249
மிறால், மரிசால் 16279
மின்ஹா 16543
முக்தார். எஸ்.எப். ரினோஸா 16695
முகில்வண்ணன் 16423
முகிலன், நெடுந்தீவு 16550
முகுந்தன், ச. 16061
முத்து **பார்க்க** மனோகரன், தவமணி
முத்துக்குமாரசாமிக் குருக்கள், ம. 16141
முத்துக்குமாரசுவாமி, த. 16118
முத்துலிங்கம், அ. 16622, 16692, 16804
முத்தையா, நா. 16153, 16869
முரளிதரன், இ.சு. 16391, 16424
முரளிதரன், சு. 16447
முரளீதரன், நவரத்தினம் 16319
முரளீஸ்வரன், இரா. 16506
முருகதாஸ், க. 16675
முருகதாஸ், கோமதி 16007
முருகானந்தன், அ.செ. 16653
முருகானந்தன், எம்.கே. 16317
முருகானந்தன், ச. 16326
முருகேசு, ஆறுமுகம் 16358
முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம் 16913-914
முல்லை அமுதன் 16450
முல்லை திவ்வியன், ஆ. 16463
முல்லை முஸ்ரிபா 16490
முனுசாமி, சிறுமணவூர் 16146
முஸ்தபா, வெலிவிட்ட ஏ.சீ.ஜரீனா 16771
மெலிஞ்சிமுத்தன் 16850
மேதினிகா, மு. 16415
மேரா 16527
மைக்கல் கொலின் **பார்க்க** கொலின், வி. மைக்கல்
மொன்ட்ரியல் திருமுருகன் ஆலயம் 16919
மோசேஸ், டிலோஜினி 16584
மௌலானா, J.S.K.A.A.H. 16166-167, 16169, 16171-172, 16174-177, 16482, 16817, 16819-822, 16824, 16826, 16870-872
யதார்த்தன் 16761
யாக்கூத், எம்.எச்.எம். 16721
யாழ். மருதன் 16712
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் 16107-108
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 16029
யாழ்ப்பாணம் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலயப் பரிபாலன சபை 16124
யாழினி 16896
யுகபாலசிங்கம், வேலுப்பிள்ளை 16037
யேசுராசா, அத்தனாஸ் 16032, 16388
யோகரத்தினம், செல்லையா 16970
யோகராஜா, ஏ.ஜீ. 16204
யோகேந்திரநாதன், நா. 16592
யோகேஸ்வரன், சியாமளா 16628, 16701, 16732, 16745
யோசுவா, ரீ.எஸ். 16659
ரகுநாதன், ஏ. 16920
ரகுராமன், சி. 16328
ரஞ்சிதா, சிவனேஸ் 16799
ரதிதரன், கதிரேசு 16381
ரபீக், வெலிமடை 16504, 16558

ரமணராஜா, சி. 16293
ரமீஸ், எம்.ஏ.எம். 16030
ரவி, வானவில் கே. 16806
ரவிச்சந்திரன், சுவஸ்திகா 16332, 16611
ரவீந்திரகுமாரன், நவரத்தினம் 16221
ரவீந்திரகுமாரன், கலைச்செல்வி 16221
ரவீந்திரன், கனகரட்ணம் 16255
ரவீந்திரன், தனேஸ்வரி 16345
ரஜிதா 16570
ரஜிந்தன், பாலசுந்தரம் **பார்க்க** வேலணையூர் ரஜிந்தன்
ரஜீந்திரன், வாசஸ்பதி 16360-361
ரஸீன்-மழாஹிரி, முஹம்மது 16324, 16437
ராஜ்குமார், யோ.யோண்சன் 16190, 16276, 16281, 16602, 16906,
ராஜ்பிரகாஷ், சுவஸ்திகா 16553
ராஜகோபாலன், ராஜாஜி 16657
ராஜசேகரம், செந்தமிழ்ச் செல்வி 16160
ராஜன், வீ.ஏ.ரி. 16331
ரிஸ்னா, தியத்தலாவ H.F. 16405
ருக்ஷான், ராஜரட்ணம் 16833
ருஷாந்தன், இ. 16598
லக்ஷன், க. 16703
லண்டன் சிவன் கோயில் அறக்கட்டளை 16115
லண்டன் சைவ முன்னேற்றச் சங்கம் 16122
லலிதகோபன், திருஞானசம்பந்தன் 16520
லிங்கசுரேஷ் குருக்கள் 16452
லிங்கரமேஷ் குருக்கள் 16452
லிங்கரெட்ணம், தம்பிஐயா 16457
லிட்டில் எய்ட்ஸ். 16016
லினாஷ்குமார், ம. 16264
லீலாரட்ண, உபாலி 16786
லோகராஜா, செ. 16069, 16470, 16537, 16547, 16559, 16789, 16802
லோகேஸ்வரன், பெ. 16661
லோறன்ஸ், அ. 16213
வட்டக்கச்சி வினோத் **பார்க்க** வினோத், வட்டக்கச்சி
வடிவழகையன், வ. 16503, 16526
வரதகுமார், சுப்பிரமணியம் **பார்க்க** வரதன், சு.
வரதராஜா பெருமாள், அ. 16234
வரதன், சு. 16513
வாகரைவாணன் 16532
வாசுகி பி. வாசு 16400
வாசுகிதேவி, குகராஜசெல்வம் **பார்க்க** வாசுகி பி. வாசு
வாசுதேவன் 16497
வாசுதேவன், க. 16461, 16589, 16947
வாணமதி 16794
வாமதேவன், எம். 16858
வாயு வள முகாமைத்துவ மத்திய நிலையம் 16226
வாழைச்சேனை கலாசாரப் பேரவை 16668
விக்கிரமசிங்க, எச்.எச். 16222
விசாகரூபன், கி. 16827
விசாகரூபன், மைதிலி 16011
விசுவலிங்கம், தி. 16110, 16876, 16879
விசுவலிங்கம், வ. 16110
விண்மணி 16385
விமல், சாமிநாதன் 16922
விமலன், சின்னராஜா 16359
விமலாதித்தன், வி. 16065, 16790
விவேகானந்தராஜா, பசுபதி உதயகுமாரி **பார்க்க** தமிழ் உதயா
விவேகானந்தனூர் சதீஸ் 16715
வினாசித்தம்பி, எஸ். 16119
வினோத், அ. **பார்க்க** யாழ். மருதன்
வினோத், வட்டக்கச்சி 16519

விஜயசுந்தரம், நல்லையா 16098-106
விஜயலட்சுமி, இ. 16022
விஜேந்திரா, ஸ்ரீரஞ்சனி 16048, 16294, 16414, 16426, 16433
விஜேரத்ன, மடுளுகிரியே 16888
விஸ்வநாதன், எம். 16880
விஷ்ணுகரன், வி. 16289
வீணைமைந்தன் 16390
வீரமணி ஐயர், சுசிலாதேவி 16369
வீரமணி ஐயர், மா.த.ந. 16163, 16369
வேணுகோபன், கு. 16253
வேதநாயகம், ரொபேர்ட் 16196
வேந்தன், பேரி. 16700
வேரற்கேணியன் 16510
வேல்ஆனந்தன். 16367
வேல்முருகு, வி. 16154
வேலணையூர் சுரேஷ் 16586
வேலணையூர் ரஜிந்தன் 16562
வேலுப்பிள்ளை, க. 16963
வேற்பிள்ளை, ம.க. 16155
வைத்தியலிங்க பிள்ளை, க. 16135
வைத்தீஸ்வரன், கா. 16886
றகுமான், ஏ.சீ.அப்துல் 16453
றயீசுத்தீன், முகுசீன் 16205
றிபாஸ், அப்துல் லத்தீப் முஹம்மட் **பார்க்க** அலறி
றியலாஸ், அப்துல் லத்தீப் 16579
றொனால்ட், ஆ.ஜென்சன் **பார்க்க** சூரிய நிலா
ஜசிந்தன், வ. 16841
ஜமாலிய்யா அஸ்ஸயித் கலீல் அவ்ன் அல்ஹாஷிமிய் மௌலானா **பார்க்க** மௌலானா, J.S.K.A.A.H.
ஜயசுந்தர, ரமணி 16196
ஜயசூரிய, சிறிதுங்க 16208
ஜயதிலக்க, திஸ்ஸ 16891
ஜயவர்த்தன, ஷானி 16028
ஜனன், ம. 16252
ஜீவகுமாரன், வி. 16640
ஜீவராஜ், த. 16271, 16966
ஜீவா, எஸ்.எம். 16291, 16307
ஜெக்கி **பார்க்க** ஜெகநாதன், ம.
ஜெகநாதன், உரும்பிராய் வி. 16593, 16609
ஜெகநாதன், நிவேதா 16709, 16729, 16744, 16752, 16767, 16775
ஜெகநாதன், ம. 16417
ஜெகானந்தகுரு, இராஜேஸ்வரி 16047
ஜெப்ரி, த. 16703
ஜெயச்சந்திரன், சுப்பிரமணியம் 16266
ஜெயசீலன், எம்.எம். 16803
ஜெயசீலன், மா. 16065
ஜெயப்பிரகாஷ், சண்முகசர்மா 16921
ஜெயபாலன், ரமணி 16025
ஜெயபாலினி, ரவீந்திரன் 16853
ஜெயராசா, சபா 16395, 16428
ஜெயலக்சுமி, சுதர்சன் 16026, 16917
ஜெயவாணி, க. 16475
ஜெயா புக் சென்டர் 16303
ஜெரேமையா, எஸ்.எஸ். 16849
ஜோன்ராஜன், எஸ். 16685
ஜௌபர், ஏ.எஸ். 16002
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் 16164
ஸ்ரீ பிரசாந்தன் 16447, 16806
ஸ்ரீ ரமண மகரிஷி 16149
ஸ்ரீ வில்லிபுத்தூராழ்வார். 16444-445
ஸ்ரீ ஸக்தி சுமனன், அகஸ்திய குலபதி 16065
ஸ்ரீகந்தநேசன், பெ. **பார்க்க** புயல்
ஸ்ரீகுமரன், சுப்பிரமணியம் **பார்க்க** இயல்வாணன்

ஸ்ரீஞானேஸ்வரன், இராமநாதன் நாகமணி 16955
ஸ்ரீதயாளன், எம்.எஸ். 16129, 16918
ஸ்ரீதரன், தயாநந்தி 16010
ஸ்ரீநிவாசன், சுதர்சன் **பார்க்க** அருண்மொழி வர்மன்
ஸ்ரீபாஸ்கரன், ரவீந்திரகலா **பார்க்க** உடுவிலூர் கலா
ஸ்ரீரஞ்சன், கலா **பார்க்க** பூங்கோதை
ஸ்ரீரஞ்சனி 16639
ஸ்ரீரஞ்சனி மேலும் **பார்க்க** விஜேந்திரா, ஸ்ரீரஞ்சனி
ஸ்ரீவிசாகன், விஜயரகுநாதன் 16893
ஸ்ராலின், எம்.ஆர். 16210
ஸ்ரீபன், அருட்பணி அ. 16073
ஸஹானா, கெகிறாவ 16629
ஸியாப் (நளீமி), எம்.எஸ்.எம். 16173
ஸுபா, அப்துல் றஊப் பாத்திமா 16535
ஸுலைஹா, கெகிறாவ 16814-815
ஷர்மிளா 16784
ஷரிபுத்தீன், ஜின்னாஹ் 16585, 16587, 16818
ஷாறா 16699
ஷெரிப், எம்.சீ.எம். **பார்க்க** ஷெரிப், ஜுவைரியா
ஷெரிப், ஜுவைரியா 16859, 16967
ஷெரீப், ஜுனைதா 16779
ஷோபா 16450
ஷோபாசக்தி 16203, 16785
ஹப்புத்தந்திரி, ஹசினி 16028
ஹபீசன், ஜெயேந்திரா 16091
ஹமீட், பீ.எச்.அப்துல் 16867
ஹரிதரன், எஸ். 16857
ஹரீஷா, எம்.ஏ.சி **பார்க்க** மருதமுனை ஹரீஷா
ஹனீபா, எஸ்.எல்.எம். 16697
ஹனீபா, யூ.எல்.எம். **பார்க்க** மருதூர்க் கனி
ஹஸன், ஐதுருஸ் அப்துல் 16649
ஹுசைன், என்.நஜ்முல் 16481
ஹுசைன், நூருல் அயின் நஜ்முல் 16198
ஹொப்சன், E.W. 16309

நூல்தேட்டம் தொகுதிகளில் உங்கள் நூல்களையோ,
பிற ஈழத்துப் படைப்பாளர்களின் நூல்களையோ பதிவுசெய்து
அவற்றை ஆவணப்படுத்துவதற்கு உதவிசெய்ய விரும்புகின்றீர்களா?
நூல்களின் பிரதிகளை கீழ்க்கண்ட எனது முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.
ஒவ்வொரு பிரதியிலும் தலைப்புப் பக்கத்தில்
**நூல்தேட்டம் பதிவுக்காக என்.செல்வராஜாவுக்கு வழங்கப்பட்டது**
என்ற குறிப்பினை எழுதத் தவறாதீர்கள்.


**N.Selvarajah**
**14, Walsingham Close, Luton, LU2 9BH**
**United Kingdom**

எனது மின்னஞ்சல் முகவரி: Noolthettam.ns@gmail.com
எனது தொலைபேசி இலக்கம்: (0044)78 1740 2704


நேரில் அனுப்பிவைப்பதில் சிரமங்களை எதிர்நோக்குபவர்கள் நூல்களின் பிரதிகளை இலங்கையிலும் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். காலக்கிரமத்தில் இவை என்னிடம் கையளிக்கப்படும்.

### யாழ்ப்பாணம்

**Dr. Mrs.Kalpana Sandrasekar**
**180/4, Sir P.Ramanathan Road, Thirunelveli,**
**Jaffna**

### மட்டக்களப்பு

**Mrs. Sunthari Krishnapillai**
**Boundary Road, Eravur 4, Chenkallady,**
**Batticaloa**

### திருக்கோணமலை

**Mr. T.Sanjeevan**
**338 A, Veerapaththirar Lane, Anbuvalipuram**
**Trincomalee**

### கொழும்பு

**G.Kumaran**
**Kumaran Book House, 39, 36th Lane,**
**Colombo 6**

# நூல் தேட்டம் 17

## என். செல்வராஜா

இந்நூல் பற்றி: ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான நூல் விபரப்பட்டியலான நூல்தேட்டத்தின் முதலாவது தொகுதி 2002இல் வெளிவந்தது. இடையறாத தனது 22 ஆண்டு பயணத்தின் முடிவில் 17ஆவது தொகுதியை மேலும் 1000 ஈழத்துத் தமிழ் நூற்பதிவுகளுடன் உங்களிடம் நூலகவியலாளர் என்.செல்வராஜா அவர்கள் சேர்ப்பித்துள்ளார். தொடரும் அவரது ஓயாத பயணத்தில் மேலும் பல தொகுதிகள் எமது கைகளை வந்தடையும். நூல்தேட்டம் தொகுதிகளில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களினதும், வெளியீட்டாளர்களினதும் ஆயிரம் நூல்கள் பற்றிய அடிப்படை நூலியல் குறிப்புகளும் அதனையடுத்து நூல் பற்றிய சிறு அறிமுகக் குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. பதிவுகளுக்கான தொடர் இலக்கங்கள் முதலாவது தொகுதியிலிருந்து தொடர்ச்சியாக வழங்கப்பட்டுள்ளன. அவ்வகையில் 17ஆவது தொகுதியில் இடம்பெறும் நூல் பதிவுகளுக்கு 16001 இலிருந்து 17000 வரை தொடரிலக்கம் வழங்கப்பட்டுள்ளது.



என்.செல்வராஜா: ஈழத்தின் நூலகவியல் துறையிலும் வெளியீட்டுத் துறையிலும் நன்கறியப்பெற்ற நூலியலாளர். என். செல்வராஜா, சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் தனது நூலகப் பணியை ஆரம்பித்தவர். பின்னர் யாழ்ப்பாண மாவட்ட சர்வோதய மத்திய நூலகம், இவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவன நூலகம், இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையத்தின் கொழும்புக் கிளையின் நூலகம் ஆகியவற்றில் பணியாற்றியவர். அயோத்தி நூலக சேவைகள் நிறுவனம், ஐரோப்பிய தமிழ் ஆவணக் காப்பகம் மற்றும் ஆய்வு நிறுவனம் ஆகியவற்றின் தாபகரான இவர், இதுவரை 60க்கும் மேலான நூல்களை நூலியல், நூலகவியல் துறைகளில் வெளியிட்டுள்ளதுடன் 'நூலகவியல்', 'நூல்தேட்டம்' ஆகிய இரு சஞ்சிகைகளின் ஆசிரியராகவும், 'எங்கட புத்தகங்கள்', 'அச்சாண்டி' உள்ளிட்ட பல ஈழத்துச் சஞ்சிகைகளின் ஆலோசகராகவும் இயங்கி வந்துள்ளார். நூல்களை வாசகனுக்கு வழங்குகின்ற அடிப்படைச் செயற்பாட்டுடன் இயங்கும் இவர், சர்வதேச அளவில் பிரித்தானிய **Books Abroad** நிறுவனத்தின் ஆசிய பிராந்தியத்திற்குப் பொறுப்பாகவிருந்து ஆயிரக்கணக்கில் சிறுவர், இளையோருக்கான ஆங்கில நூல்களைத் தருவித்து, இலங்கை முழுவதிலுமுள்ள பாடசாலை, பொது சனசமூக நிலைய நூலகங்கள் மற்றும் கிராமிய நூலகங்களுக்கு வழங்கிவருகிறார். நூலக நடவடிக்கைக்கு அப்பால் ஒரு எழுத்தாளராக, எழுத வைப்பவராக, ஒரு வெளியீட்டாளராக, ஒரு விநியோகஸ்தராக, ஊடகங்களில் நூல்களை அறிமுகப்படுத்துபவராக, ஆவணக் காப்பாளராக, வாசகராக, விமர்சகராக ஒரு நூல் உருவாக்கப்பட்டு வாசகனிடம் சேர்க்கப்படும் வரையான அனைத்துச் செயற்பாட்டிலும் இவரது பார்வை இருக்கும்.

அயோத்தி நூலக சேவைகள் &
குமரன் புத்தக இல்லம்

விடயம்: நூலகவியல்

ISBN 978-624-6164-70-6

விலை ரூபா 6000.00

#1034